Y211,32 N78
N79-15331
121963

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

## FIFTY-FOURTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME CLIII (Nos. 1 to 6).

*9th and 11th to 15th September* 1978.

TABLE OF CONTENTS.


| | Pages |
|---|---|
| *Saturday, 9th September* 1978. | |
| Personnel of the Government of Tamil Nadu ... | i—iv |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council ... ... ... ... ... | v |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their constituencies ... ... | vii—x |
| 1. Questions and Answers ... ... ... | 1—22 |
| 2. Privilege Issue *re*— | |
| Affidavit filed by Thiru G. Vasantha Pai in the High Court ... ... ... ... | 23—41 |
| 3. Announcement *re*— | |
| Election of three members to the Senate of the Madras University ... ... ... | 41—42 |
| 4. Call-Attention Notices— | |
| (1) Non-payment of compensation to all the communities alike during the communal clashes at Villupuram ... ... ... ... | 43 |
| (2) Non-availability of text-books to all school students including Higher Secondary Schools. | 43—47 |
| 5. Discussion on the Supplementary Statement of Expenditure for 1978-79 (First) ... ... | 47—95 |
| 6. Papers laid on the table of the House | 97 |

# INDEX TO
# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

**FIFTY-FOURTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA**

*9th and 11th to 15th September 1978*

**VOLUME No. CLIII (Nos. 1 to 6)**

©
GOVERNMENT OF TAMIL NADU
1979

*Legislative Council Department*
*Fort St. George, Madras-600 009*

PRICE : 1 *Rupee]*

PAGES.

*Monday, 11th September* 1978.

1. Questions and Answers ... ... ... 99—134

2. Information *re*—

Taking up of Call-Attention Notice *re* College Teachers agitation ... ... ... 135—136

3. Call Attention Notices—

(1) Non-regularisation of services of Secondary Grade Teachers of Government Schools appointed after 1st April 1970 from the date of appointment ... ... ... ... ... 136—138

(2) Death of school students on account of the boat accident at Ennore on 26th August 1978. 138—140

4. Information *re*—

Reply to debate on Governor's Address ... 140—142

5. Private Member's Resolution *re*—

Election of Vice-Chancellor to the Madras and Madurai Kamaraj Universities by proportional representation ... ... ... ... 142—172

6. Papers laid on the table of the House ... 173

*Tuesday, 12th September* 1978.

1. Questions and Answers ... ... ... 175—202

2. Information *re*—

(1) Declaration of holiday for the Periyar Centenary Celebrations ... ... ... ... 202—203

(2) Taking up of adjournment motion regarding non-plying of buses in Ramanathapuram District. 203—204



PAGES.

*Tuesday, 12th September* 1978—cont.

3. Privilege Issue *re*—

Statement of non-receipt of notice from the High Court in a Writ Petition by Thiru K. S. Abdul Wahab ... ... ... ... ... 204—207

4. Announcement *re*—

Message from the Assembly ... ... 207

5. Statement under Rule 82 of the Council Rules *re* College Teachers' demands ... ... 208—214

6. Call-Attention Notices—

(1) Non-regularisation of services of I Grade Tamil Pandits from the date of promotion .. .. 214—216

(2) Pollution of ground water due to the chemical effluents of R.C. Plant, Mettur, Salem district. 216—218

7. Resolutions—

(1) Increase of limit of guarantee for Medium Term Conversion advances in respect of Central Co-operative Banks ... ... ... 218—219

(2) Approval of amendments to the Cotton Transport Rules ... ... ... ... 219—221

8. Government Bills—

(1) The Tamil Nadu Agricultural Produce Markets (Amendment and Special Provisions) Bill, 1978 (L.A. Bill No. 27|1978) ... ... 221—246

(2) The Madurai City Municipal Corporation (Third Amendment) Bill, 1978 (L.A. Bill No. 28|1978) .. .. .. .. .. 246—266

(3) The Madras City Municipal Corporation and the Madurai City Municipal Corporation (Amendment) Bill, 1978 (L.A. Bill No. 29|1978) .. .. .. .. .. 266—267

PAGES

*Wednesday, 13th September* 1978.


1. Questions and Answers ... ... ... .. 277—306

2. Announcements—

(1) Election of Members to the Senate of the Kamaraj University ... ... ... ... 307

(2) Message from the Governor .. .. .. 321

2. Announcements—*cont.*

(3) Message from the Assembly ... ... ... 321

(4) Election of Members to the House Committee for the financial year 1978-79 ... ... ... 380

3. Statement under rule 82 of the Council Rules *re* plying of Transport Buses in Ramanathapuram district .. .. .. .. .. .. 301—308

4. Call-Attention Notices—

(1) Fast unto death before Kuralagam by the Tamil Nadu Private School Teachers Security of Service Agitation Committee .. .. 308—313

(2) Lay-off in Plastic Resins Company at Arumuganeri, Tirunelveli district ... ... ... 314—316

5. Government Motions—

(1) Election of Members to the Public Accounts Committee and the Estimates Committee .. 317—318

(2) Election of Members to the Public Undertakings Committee ... ... ... ... 319

(3) Election of Members to the Committee on Delegated Legislation ... ... ... 320

6. Discussion on the Governor's Address ... ... 320




PAGES

*Wednesday, 13th September* 1978—cont.


7. Government Bills—

(1) The Tamil Nadu Appropriation (No. 5) Bill, 1978 (L.A. Bill No. 35|1978) .. .. 322

(2) The Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officers) Amendment Bill, 1978 (L.A. Bill No. 33|1978) ... ... 323—339

(3) The Madurai University (Amendment and Special Provisions) Bill, 1978 (L.A. Bill No. 32|1978) ... ... ... ... 339—379

8. Papers laid on the table of the House ... ... 381


*Thursday, 14th September* 1978.


1. Questions and Answers—Unstarred Questions .. 389—391

2. Government Motion *re* suspension of Question Hour 391—392

3. Privilege Issue—

(1) Decision on the Privilege Issues raised by Thiruvalargal K. S. Abdul Wahab and G. Vasantha Pai ... ... ... ... 392

(2) Alleged wrong information in regard to the allotment of funds to Wakf Board ... ... 392—396

4. Adjournment Motion *re*—

(1) Admission to Medical Colleges .. .. 397—399

(2) Attack by Police on the students' procession from Kuralagam to stage Satyagraha near the Reserve Bank of India ... ... ... 399—404

(3) Strike in the Salem Steel Plant ... ... 404—406

5. Announcements—

(1) Message from the Assembly ... ... ... 406

(2) Election of nine Members to the Committee on privileges for the financial year 1978—1979 ... 475

PAGES.

*Thursday, 14th September* 1978—cont.


6. Call-Attention Notices—

(1) Satyagraha by Kanyakumari district Temple Employees in front of the Collectorate ... 407—409

(2) Death of students in the Panchayat Union School at Vengamedu due to the collapse of the building ... ... ... ... ... 409—411

(3) Closure of the Southern Switchgear Limited, Ambattur ... .. .. .. .. 411—412

(4) Closure of the Co-operative Sugar Mill in Mohanur, Salem district ... ... ... 413

7. Information *re*—

(1) Definition of 'Parliamentary Secretaries' ... 413—414

(2) Non-receipt of copies of Bills in advance by the Members ... ... ... ... 414—415

8. Presentation of the Report of the Committee on Government Assurances ... ... ... ... 415

9. Change in the order of business ... ... ... 415

10. Discussion on the Governor's Address—*cont.* ... 415—474

11. Government Bill—

The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1978 (L.A. Bill No. 31|1978) ... ... ... ... 476—494

12. Papers laid on the table of the House ... ... 495—498


*Friday, 15th September* 1978.


1. Announcement ... ... ... ... 515

2. Change in the order of business ... ... ... 515




*Friday, 15th September* 1978—cont.


3. Government Bills—

(1) The Tamil Nadu Revision of Tariff Rates on Supply of Electricity Energy Bill, 1978 (L.A. Bill No. 39|1978) ... ... ... ... 515—552

(2) The Tamil Nadu Debt Relief Bill, 1978 (L.A. Bill No. 41|1978) ... ... ... ... 552—556

(3) The Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1978 (L.A. Bill No. 36|1978) ... ... 556—573

(4) The Tamil Nadu Cultivating Tenants (Protection from Eviction) Second Amendment Bill, 1978 (L.A. Bill No. 38|1978) ... ... 573—579

(5) The Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent) Bill, 1978 (L.A. Bill No. 37|1978) ... ... ... ... 579—580

(6) The Tamil Nadu General Sales Tax (Second Amendment) Bill, 1978 (L.A. Bill No. 30|1978) ... ... ... ... 580—597

**Index** 635—681

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## *GOVERNOR OF TAMIL NADU*

THIRU PRABHUDAS PATWARI

*Members of the Council of Ministers.*

1. The Hon. Thiru M. G. RAMACHANDRAN, Chief Minister in-charge of Public, General Administration, Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Passport, Prohibition, Prevention of Corruption, Large Scale Industries, Mines and Minerals.

2. The Hon. Thiru K. MANOHARAN, Minister in-charge of Finance, Planning, Legislature, Public Works (Buildings), and Establishment Works relating to Public Works Department.

3. The Hon. Thiru S. RAMACHANDRAN, Minister in-charge of Electricity, Iron and Steel Control.

4. The Hon. Thiru K. A. KRISHNASWAMY, Minister in-charge of Co-operation and Registration.

5. The Hon. Thiru S. D. SOMASUNDARAM, Minister in-charge of Revenue, Commercial Taxes and Excise.

6. The Hon. Thiru G. R. EDMUND, Minister in-charge of Food, Fisheries, Youth Service Corps, Backward Classes, Elections and Ex-Servicemen, Price control.

7. The Hon. Thiru R. M. VEERAPPAN, Minister in-charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona.

8. The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR, Minister in-charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Money Lending, Legislation on Chits and Registration of Companies.

9. The Hon. Thiru C. ARANGANAYAGAM, Minister in-charge of Education including Technical Education, Official Language and Employment and Training.

PAGES

*Saturday, 1st April 1978*—cont.

4. Government Bill—

The Madras Metropolitan Water Supply and Sewerage Bill, 1978 (L.A. Bill No. 11/1978) ... ... ... ... 424–461

5. Papers laid on the table of the House ... 461

*Monday, 3rd April 1978.*

1. Questions and Answers ... ... ... 525–530

2. Announcement *re* Message from the Assembly 530–531

3. Adjournment Motion *re* setting fire to houses of Harijans in Pandhi village, Kumbakonam Division, Thanjavur District ... ... ... 531–532

4. Calling attention to the unrest among workers of Vasu Deva Textiles Mills at Karapadi, Pollachi taluk due to managements' wrong approach ... ... ... ... ... 532–533

5. Government Bills—

(1) The Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1978 (L.A. Bill No. 12/1978) ... ... ... 533–544

(2) The Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1978 (L.A. Bill No. 13/1978) ... ... ... ... 544–560

(3) The Tamil Nadu District Municipalities (Amendment) Bill, 1978 (L.A. Bill No. 9/1978) ... ... ... ... 550–581

6. Papers laid on the table of the House ... ... 582

Index ... ... ... ... ... ... 597–620

10. The Hon. Thiru K. KALIMUTHU, Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions, Rural Indebtedness and Bhoodan and Gramdan.

11. The Hon. Thiru S. RAGHAVANANDAM, Minister in-charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. The Hon. Thiru P. SOUNDARAPANDIAN, Minister in-charge of Harijan Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour.

13. The Hon. Thiru C. PONNAIYAN, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Highways and Ports.

14. The Hon. Thiru P. KOLANDAIVELU, Minister in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Agro-Engineering.

15. The Hon. Thiru K. RAJA MOHAMMED, Minister in-charge of Rural Industries including Village, Cottage and Small Industries, Milk and Dairy Development, Wakfs.

16. The Hon. Thiru P. SOUNDARARAJAN, Minister in-charge of Health.

17. The Hon. Selvi P. T. SARASWATHI, Minister in-charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggar's Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

18. The Hon. Thirumathi SUBBULAKSHMI JEGADEESAN Minister in-charge of Handlooms, Khadi, Textiles and Yarn.



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. பிரபுதாஸ் பட்வாரி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், பயண இசைவுச் சீட்டு, மதுவிலக்கு, இலஞ்ச ஒழிப்பு, தொழில் நிறுவனங்கள், சுரங்கம்-கனிவளம்.

2. மாண்புமிகு திரு. கி. மனோகரன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நிதி, திட்டம், சட்டமன்றம், பொதுப்பணி (கட்டிடங்

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்சார அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகி

மின்சாரம், இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (கூட்டுற அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பா

கூட்டுறவு, ஆவணப் பதிவுத் துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவ துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறு வகிப்பார் :—

வருவாய், வணிக வரிகள், ஆயத் துறை.

6. மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் (உணவு அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

உணவு, மீன்வளம், இளைஞர் அணி, பிற்பட்ட வகுப்பினர், தேர்தல்கள், முன்னாள் இராணுவத்தினர், விலைக் கட்டுப்பாடு.

7. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி, அறநிலைய அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத்துறை, சிங்கோனா உட்பட வனங்கள்.

8. மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் (சட்டத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள் அளவைகள், சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல், சீட்டு நிதிச் சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு.

9. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும், பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 1 அப்துல் வகாப், திரு. கே. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 2 அறிவழகன், திரு. க., எம்.ஏ. .. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 3 ஆறுமுகம், திரு. சி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 4 ஆற்காடு வீராசாமி, திரு. நா. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5 இரத்தின பாலகுருசாமி, திரு. | நியமனம். |
| 6 இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 7 இராமகிருஷ்ணத்தேவர், திரு. எஸ். | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 8 இராசா முகமது, திரு. க. (கிராமத் தொழில் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 9 இராமமூர்த்தி, திரு. க. .. | மாநிலச் சட்டமன்றப பேரவை. |
| 10 இளம்பரிதி, திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 11 எல்லமந்தா, திரு. பி., எம்.ஏ. | மாநிலச் சட்டமன்றப பேரவை. |
| 12 கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. எம்.ஏ., பி.எல். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 13 சங்கரலிங்கம், திரு. எம்., எம்.ஏ. | திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 14 சந்தோஷம், திரு. டி., எம்.ஏ., பி.எல். | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி |
| 15 சிவஞானம், திரு. ம. பொ. (மாண்புமிகு தலைவர்). | நியமனம். |
| 16 சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி | நியமனம். |
| 17 சுந்தரேசத் தேவர், திரு. என். | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

10. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நகராட்சிகள், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊரகக் கடன்கள், பூமிதானம், கிராமதானம்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு ..கிப்பார்:—

port, N. அரிசன நலம், எழுது பொருள், அச்சுத் துறை, அரசு ..ம், அச்சுக் காகிதம் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடி

14. Th..பிணைத் தொழிலாளர்.

Agriculture, மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்குவரத்துத் Agro-Service ..மச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப் gation and

..பாக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்கு

15. The இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

of Rural

Milk an..4. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மை பாசனத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப்

16. ..றுப்பு வகிப்பார் :—

Healt.. வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியல் பிரிவு, வேளாண்மைப் பணி கூட்டுறவுச் சங்கங்கள், ..று பாசனம் உள்ளிட்ட பாசனம், ஆக்ரோ பொறியியல் பிரிவு.

S 15. மாண்புமிகு திரு. க. இராசா முகமது (கிராமத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கிராம குடிசை மற்றும் சிறு தொழில்கள், பால், பால்வள நிறுவனம், வக்ப்.

16. மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் (நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நல்வாழ்வு.

17. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

18. மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் (கைத்தறி துறைத் அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கைத்தறி, கதர், நெசவு, நூல்.

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

**மேலவைத் தலைவர்**

மாண்புமிகு திரு. ம. பொ. சிவஞானம்.

**மேலவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு திரு. ஜி. சுவாமிநாதன்.

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல் :**

1. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்
2. திரு. க. இராமமூர்த்தி.
3. திரு. கே. எஸ். அப்துல் வகாப்.
4. திருமதி சி. தமிழரசி.

**மேலவைச் செயலாளர் :**

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

**உதவிச் செயலாளர் :**

திரு. த. ப. டில்லிதுரை, பி.எஸ்ஸி., பி.எல்.

**விவாதப் பதிப்பாளர் :**

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

**தலைமை நிருபர் :**

திரு. எஸ். நடராஜன்.

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
| --- | --- |
| (1) | (2) |
| 18 சுவாமிநாதன், திரு. ஜி., பி. பார்ம். (மாண்புமிகு துணைத் தலைவர்). | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 19 டிமாண்டி, திரு. டி.வி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 20 தங்கப்பாண்டியன், திரு. வே., பி.ஏ., பி.டி. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 21 தங்கவேலு, திரு.ஏ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 22 தமிழரசி, திருமதி சி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 23 தாமஸ், திரு. பி.ஆர். .. | மதுரை— இராமநாதபுரம் பட்டதாரிகள் தொகுதி. |
| 24 தாமோதரன், திரு.ஏ ஆர்., பி.எஸ்ஸி. (ஆனர்ஸ்) | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 25 வெற்றிடம் .. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 26 திராவிடமணி, திரு.ஆ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 27 நல்லசிவம், திரு. ஆ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 28 நாராயணசாமி முதலியார், திரு. கே. (சட்டத்துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 29 நீலநாராயணன், திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 30 பாலசுப்பிரமணியம், திரு. கு.மா. | நியமனம். |
| 31 பாலசுப்ரமணியம், திரு. ஆ. | சேலம் — தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 32 புலவர் புலமைப்பித்தன் .. | நியமனம். |
| 33 பெரியண்ணன், திரு.வி.ஆர். .. | சேலம் — தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 34 மணி, திரு. கோ. சி. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |



| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
| --- | --- |
| (1) | (2) |
| 35 மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி. | நியமனம். |
| 36 மாணிக்கம், திரு.பி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 37 மியாகான், திரு.ஜே.எம். .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 38 மீனாட்சிசுந்தரம், திரு. க. .. | தஞ்சாவூர் — திருச்சிராப்பள்ளி — புதுக்கோட்டை ஆசிரியர்கள். |
| 39 முத்துசாமி, திரு. செ. .. | சேலம்— தர்மபுரி— கோயம்புத்தூர்—நீலகிரி ஆசிரியர்கள். |
| 40 முருகேசன், திரு. எச். எல். | நியமனம். |
| 41 ராமலிங்கம், திரு. சி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 42 வசந்த பை, திரு. ஜி. .. | சென்னை பட்டதாரிகள் தொகுதி. |
| 43 லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வட ஆற்காடு— தென் ஆற்காடு ஆசிரியர்கள். |
| 44 வில்வம், திரு. ஏ. கே. .. | நியமனம். |
| 45 வீரப்பன், திரு. ஆர். எம். (செய்தி அறநிலைய அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 46 வெங்கடேசன், திரு. ஈ. எஸ். | நியமனம். |
| 47 ஹண்டே, டாக்டர், எச். வி. | சென்னை பட்டதாரிகள் தொகுதி. |
| 48 வெற்றிடம் .. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 49 வெற்றிடம் .. .. | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 வெற்றிடம் .. .. | செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51 வெற்றிடம் .. .. | கோயம்புத்தூர் — நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 52 வெற்றிடம் .. .. | கோயம்புத்தூர்— நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 53 வெற்றிடம் .. .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54 வெற்றிடம் .. .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 55 வெற்றிடம் .. .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56 வெற்றிடம் .. .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 57 வெற்றிடம் .. .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 வெற்றிடம் .. .. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59 வெற்றிடம் .. .. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 வெற்றிடம் .. .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61 வெற்றிடம் .. .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 வெற்றிடம் .. .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 63 வெற்றிடம் .. .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

சனிக்கிழமை, 1978 செப்டம்பர் 9.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4-00 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் [திரு. ம. பொ. சிவஞானம்] அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Department of Cultural Affairs.*

* 51 Q.—THIRU ARCOT N. VEERASAMI (on behalf of THIRU M. SANKARALINGAM): Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state—

(a) whether there is any proposal with the Government to set up a separate Department called the Department of Cultural Affairs; and

(b) if so, the stage at which it now stands?

கலாச்சாரத் துறை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. எம். சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) கலாச்சாரத் துறை என்று தனியே ஒரு துறை உருவாக்குவது பற்றி செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இருக்கிறதா?

(இ) ஆமெனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) & (இ) செய்தி, மக்கள்-தொடர்புத் துறையுடன், திரைப்படத் தொழில், சுற்றுலா, இயல் இசை நாடக மன்றம், மற்றும் நுண்கலைக் குழு ஆகியவற்றை இணைத்து கலாச்சாரத்திற்கு என்று ஒரு தனி இலாகா அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் இருந்து வருகிறது.

*திரு. ஆற்காடு நா. வீராசாமி* : செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதென்று சொன்னார்கள். அப்படிப்பட்ட ஒரு துறை உருவாக்கப்படும் போது, இதில் அதிக அனுபவம் வாய்ந்த ஒருவரைத் தலைவராக்கி, வாரியம் போன்று, தனியாக அமைக்க முயற்சி செய்யப்படுகிறதா அல்லது அதிகாரிகளை வைத்து இந்தத் துறை உருவாக்கப்பட இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அதிகாரிகளை வைத்து உருவாக்கப்பட்டால், எந்த நோக்கத்திற்காக இந்த அமைப்பை உருவாக்க நினைக்கிறோமோ அந்த நோக்கம் ஈடேறாமல் போய்விடும். எனவே இந்தத் துறையிலே அனுபவம் வாய்ந்த ஒருவரைப் பொறுப்பாளராக நியமிக்க அரசு தீர்மானித்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** : இதற்கென செக்ரடேரியட்டில் ஒரு துறை தனியாக இல்லை. அதாவது Department of Cultural Affairs என்ற துறையை உருவாக்குவதற்கு யோசனை இருக்கிறது. தனியாகக் கார்ப்பரேஷன் போன்று, வாரியம் போன்று அமைப்பதற்கு யோசனை இல்லை.

*திரு. க. அறிவழகன்* : கலாச்சாரத் துறை உருவாக்குவதற்கான செயற் குறிப்பு இருக்கிறதென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதிலே மகிழ்ச்சி தருவது என்னவென்றால், அதே அமைச்சரவர்கள் இந்து அறநிலையத் துறைக்கும் அமைச்சராக இருக்கிறார்கள். ஆலயங்கள்தான் இந்த நாட்டுக் கலாச்சாரத்தை, சிறப்பை எடுத்துக் காட்டுகின்றன. அங்கேதான் சிற்பங்களும், வரலாற்று அமைப்புகளும் இருக்கின்றன. உலக மக்களும் இப்படிப்பட்ட பழம்பெரும் சிற்பங்களைப் பாதுகாப்பதுதான் கலாச்சாரத்தைப் பாதுகாப்பதென்று சொல்கிறார்கள். அமைச்சரவர்கள் இன்னின்ன துறைகளை இணைக்கலாமென்று சொன்னார்கள். அதோடு இந்து அறநிலையத் துறையையும் இணைத்தால், கலாச்சாரத் துறை சிறப்பாக இருக்கும். அதையும் இணைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** : இப்போது ஒரு துறை அமைய வேண்டுமென்று அறநிலையத் துறை அமைச்சருடைய பொறுப்பிலுள்ள துறையிலிருந்து செயற்குறிப்பு உருப்பெற்றிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு துறை இந்த அமைச்சரின்கீழ் வருமானால், மாண்புமிகு உறுப்பினரவர்கள் விரும்புகிற அறநிலையத் துறையும் அவர் பொறுப்பில் இருப்பதால், ஒன்றாக இணையும் என்பதிலே சந்தேகமில்லை.

*திரு. ஆ. திராவிடமணி* : சிறந்த திரைப்படங்களுக்குப் பரிசு கொடுப்பது போல, சிறந்த நாடக நடிகர்கள் நடிக்கும் நாடகங்களுக்கும் பரிசு வழங்க அரசு முன்வருமா ?



**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** : இது பரிசீலிக்கப்பட வேண்டிய ஒரு கருத்து என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. ஈ. எஸ். வெங்கடேசன்* : தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் எந்தத் துறையின்கீழ் செயல்படுகிறது ? அந்த மன்றம் நடத்தும் விழாக்களுக்கு சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு அனுப்பப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** : தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் இப்போது கல்வித் துறையின்கீழ் இயங்குகிறது. அந்த இயல் இசை நாடக மன்றப் பொறுப்பிலே நடைபெறும் விழாக்களுக்கு, சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பிதழ் அனுப்பப்பட்டு வருகிறது.

THIRU G. VASANTHA PAI : Sir, I think the Nataka Mandram referred to is the * one whose President is Thiru D. V. Narayanaswami. Is it connected with the Government or is it an independent organisation ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** : அது ஒரு தனி உரிமை பெற்ற நிறுவனம். (autonomous)

THIRU G. VASANTHA PAI : I would like to bring to the notice of the Hon. Minister that when the Russian Ballet as well as the Bulgarian Ballet came here, we found there was a lot of difficulty in getting tickets by standing in the queue in the University building, because persons who were black-marketeers in such tickets were coming early and standing in the queue and taking all the tickets away. Will the Government look into this and remove such a difficulty ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : கேள்வி, கலாச்சாரத் துறை உருவாக்கப் படுவது பற்றியதாகும். இயல், இசை, நாடக மன்றத்தைப் பொறுத்து அல்ல. டிக்கட் விற்பது பற்றியும் அல்ல.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, the Hon. Minister himself has referred to the Nataka Mandram and that is why I referred to that. This question I have now asked is connected with the first question. viz., Cultural Affairs.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அவர் நாடக மன்றத்தைப் பக்கத்தில் இழுத்தார். நீங்கள் இன்னும் கொஞ்சம் இழுக்கிறீர்கள்.

*திரு. ஜி. வசந்த பை* : மினிஸ்டரே சொன்னார். நாடக மன்றம் என்று சொன்னார். அதனால்தான் கேட்டேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: தமிழ் வாழ்க! தமிழில் கேட்கலாம். கேளுங்கள்.

THIRU G. VASANTHA PAI: May I ask the Hon. Minister whether the Government will consider, when these foreign cultural delegations come to this place, the making of proper arrangements for the purpose of giving chance to everybody to see them and not allowing some black-marketeers to harbour all the tickets ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: கேள்வி, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வி. இயல் இசை நாடக மன்றம் நாம் உருவாக்க இருக்கிற கலாச்சார அமைப்பின்கீழ் வர இருக்கிறதென்று பதில் அளித்ததை வைத்து, அந்தப் பெயர் காதிலே விழுந்ததாலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதன் தொடர்பான கேள்விகளைக் கேட்கிறார்கள். அது கல்வித் துறையின்கீழ் உள்ள அமைப்பு என்று சொல்லியிருக்கிறேன். என்றாலும், நானும் தொடர்பு கொண்டுள்ள காரணத்தாலே சொல்கிறேன். வெளி நாட்டுக் கலாச்சாரக் குழுக்கள், கலைக் குழுக்கள் வரும்போது, ஒரு குறிப்பிட்டவர்கள் தான் பார்க்க வசதியிருக்கிறது. அது தவறு. நாட்டிலே இருக்கும் பெரும்பான்மை மக்கள் அந்த வாய்ப்புக்களைப் பெற வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே ஒரு முறை தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவிக்கின்ற குறைகள் இனிமேல் நடைபெறுமல் கவனித்துக் கொள்ளப்படுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: அமைச்சரவர்கள் பதில் அளிக்கின்றபோது அமைவதற்கான பரிசீலனையில் இருக்கும் கலாச்சாரத் துறை, இந்து அறநிலையப் பாதுகாப்புத் துறையையும் உள்ளடக்கியதாக இருக்குமென்று அறிவித்தார்கள். இந்து அறநிலையப் பாதுகாப்புத் துறை வெறும் கலாச்சாரத் துறையாக மட்டும் பயன்படுத்துகின்ற ஒரு துறையல்ல. இந்து அறநிலையப் பாதுகாப்புத் துறை வேறு பல மத சம்பந்தமான நோக்கங்களையும் இணைத்து இருப்பதால், அதை மற்ற துறைகளோடு அல்லது இது போன்ற வாரியங்களோடு அல்லது அமைய இருக்கிற கலாச்சாரத் துறையோடு இணைத்து விடுவதன் மூலம் இந்து அறநிலையங்களின் நோக்கங்களுக்கு, இந்துக் கோவில்களின் நோக்கங்களுக்கு எதிராக அமைய இடமேற்படுமென்று அமைச்சரவர்கள் உணருகிறார்களா? அதைக் கருத்திலே கொண்டுதான் பதில் அளித்தார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தாம்பட்ட விடையை மாண்புமிகு உறுப்பினரவர்கள் கொஞ்சம் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார்களென்று கருதுகிறேன். மூலக் கேள்வி, கலாச்சாரத் துறை என்று தனியே ஒரு துறை



உருவாக்குவது பற்றியது. அந்த இலாக்கா உருவாக்கப்படுவது பரிசீலனையிலே இருக்கிறதென்று பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. அதோடு எந்தெந்த அமைப்புகள் அந்த இலாகாவிற்குள்ளே வருமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன் தொடர்பான துணைக் கேள்வியில், இந்து அறநிலையங்கள் கலாச்சாரத்தை ஒட்டியதாக இருப்பதால் அந்தத் துறையும் இணைக்கப்படுமா என்று கேட்டார்கள். நான் பதில் சொல்லியிருக்கிறேன். ஒரே அமைச்சகத்திற்குள்ளேயே இந்தத் துறை வருவதால், ஏற்கெனவே அந்த அமைச்சரின் கீழேயே இந்து அறநிலையத் துறையும் இருப்பதால், ஒரே அமைச்சரின்கீழ் வருமென்று தெரிவித்தேன். இந்தத் துறைக்குள்ளே வருமென்று சொல்லவில்லை. அதற்கென தனியாகத் துறை ஏற்கெனவே இயங்கிக்கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 4-10)

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: அரசாங்க ஆதரவு பெற்ற கலாச்சார சங்கங்கள் அல்லது நிர்வாகங்கள் தமிழகத்திலே எத்தனை இடங்களில் இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அதற்கான விவரம் இப்போது இல்லை. கேட்கப்பட்ட மூலக் கேள்வி, கலாச்சாரத்திற்கென்று தனியாக இலாக்கா உருவாக்க இருக்கிறதா என்பது. அதற்குத்தான் பதில் அளித்துக் கொண்டிருக்கிறேன்.

திரு. க. அறிவழகன்: மத்திய அரசின் Ministry of Education and Department of Cultural Affairs என்ற துறையின்கீழ் பிரகதீஸ்வரர் ஆலயமும், கங்கை கொண்ட சோழபுரம் ஆலயமும் இருக்கின்றன. ஆலயங்களும் கலாச்சாரத் துறையில் இணைந்தால்தான் சிறப்புப் பெறும் என்பதால், ஆலயங்களையும் சேர்த்து கலாச்சாரத் துறையை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மத்திய அரசில் கல்விக்கென்றும், கலாச்சாரத்திற்கென்றும் அமைச்சர்கள் இருக்கிறார்கள். இது போன்ற பழங்கால ஆலயங்கள் எல்லாம் தொல்பொருள் ஆய்வுத் துறையில் வருகிறது. அதற்கு யார் அமைச்சர் என்று தெரியவில்லை. இப்போது தமிழகத்திலேகூட இதுபோன்ற பழைய ஆலயங்கள் எல்லாம் நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரை, ஆர்க்கியாலஜி டிப்பார்ட்மெண்டிலே இருக்கிறது. அந்தத் துறை இப்போது கல்வித் துறையோடு இணைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : இஸ்லாமிய கலாச்சாரம் என்பது ஏனைய கலாச்சாரத்திற்குச் சிறிது மாறுபட்டது. அதுவும் இந்தத் துறையில் இணைக்கப்படுமா? அல்லது அதற்கு வேறு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : எந்த கலாச்சாரமானாலும், அதினுடைய தனித் தன்மையைப் பாதுகாக்கிற முறையிலே ஒரு கலாச்சாரத் துறை அமைக்கப்படும்.

திரு. எம். சங்கரலிங்கம் : தமிழ் நாட்டினுடைய, தமிழர் பண்பாடு, கலாச்சாரம், உலக கலாச்சாரங்களிலே முதன்மையான ஒன்று. இதை உலக மக்களும் அறிகிற நிலையில், நம்முடைய சமயங்கள், பழக்க வழக்கங்கள், பண்பாடுகள் ஆகியவைகளையெல்லாம் உலக மக்களுக்கும், நம்முடைய தமிழ் மக்களுக்கும் தெரிவிக்கிற சூழ்நிலையில் கலாச்சாரத்திற்கென்று தனித் துறையை விரைவில் அமைத்து, இந்தத் துறையில் மற்ற துறையை இணைக்காமல் தனித் துறையாகச் செயல்பட ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டுதான், இதற்கு ஒரு முக்கியத்துவம் தர வேண்டுமென்ற அடிப்படையைக் கருத்திலே கொண்டுதான் இந்த கருத்து இப்போது அரசின் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கேள்விகள் 52, 53 ஒத்திப்போடப்படுகின்றன.

## *Technical Teacher's Course in Tailoring.*

* 54 Q.—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that Technical Teachers' Course in Tailoring is not conducted by the Government: and

(b) if so, the reasons therefor?

தையல் தொழிலில் தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சி.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தையற் தொழிலில் தொழில் நுட்ப ஆசிரியர்கள் பயிற்சி அரசால் நடத்தப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) தற்போதுள்ள மாற்றப்பட்டுள்ள புதிய பாடத் திட்டத்தின்படி தமிழ் நாட்டிலுள்ள இடைநிலைப் பள்ளிகளில் தையல் பாடம், ஒரு துணைக் கைத்தொழிலாக மட்டுமே பயிற்றுவிக்கப்படுகிறது. துணைக் கைத்தொழில்கள் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியருக்கு தொழில் நுட்ப ஆசிரியர் தகுதிச் சான்றிதழ் தேவையில்லை. ஆதலால் தையல் பாடத்திற்காக அரசு தொழில் நுட்ப ஆசிரியருக்கான தகுதிச்சான்றிதழ் வகுப்பை நடத்துவதில்லை.

திரு. பி. ஆர். தாமஸ் : இந்தத் தையல் தொழில் ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சி இல்லாத காரணத்தால், அவர்கள் ஊதியம் பெறுவதற்குத் தகுதி இல்லாதவர்கள் என்று ஆணை இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு முழு ஊதியமும் வழங்கப்படுவதில்லை. எனவே இந்தச் சிறப்புப் பயிற்சி தேவையில்லையென்றால், தற்போது பணியிலுள்ள தையல் தொழில் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்குவதிலே உள்ள தடையை நீக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தையல் தொழிலுக்கு டி.டி.சி. பயிற்சி தேவையில்லையென்று அரசே சொல்லியிருக்கிறது. அப்படி பயிற்சி தேவையில்லையென்று சொன்னதற்குப் பின்னாலே, அந்த ஆசிரியர்களை முழு நேர ஆசிரியர்களாக ஏற்க தடை விதித்தது சரியல்ல. பயிற்சி அளிக்காதது அரசினுடைய குறையே தவிர, ஆசிரியர்களுடைய தவறு அல்ல. ஆகவே, அந்த ஆசிரியர்களையும் முழு நேர கைத்தொழில் ஆசிரியர்களாக ஏற்றுக்கொண்டு, ஊதியம் அளிக்க அரசு முன்வருமா? மேலும் அந்த ஆசிரியர்களுக்கு, உயர்நிலைப் பள்ளியிலே பணியாற்றினால், சம்பளம் ரூபாய் 210-ம், நடுநிலை தனியார் பள்ளிகளில் பணியாற்றினால் ரூபாய் 150-ம், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணியாற்றினால் ரூபாய் 140-ம் வழங்கப்படுகிறது. இந்த வேறுபாடும் களையப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சம்பளத்தைப் பொறுத்தவரையில், ஊதிய நிர்ணயக் குழுவின் அறிக்கை வந்ததற்குப் பிறகு, பேசிக் கொள்ளலாம். ஆனால், தொழில் நுட்ப ஆசிரியராகத் தகுதிச் சான்றிதழ் தேவையில்லை என்று சொன்னதற்குக் காரணம், தையல் தொழில் துணைத் தொழில் பாடமாக

போதிக்கப்படுகிறது என்பதுதான். இதுபோலச் செய்வதுதான் அல்லாமல் இது போல வேறு சில பாடங்களையும் துணைத் தொழில் பாடங்களாகப் போதிக் கிறோம். [illegible] ஒயர்மேன் வேலை, [illegible] பொம்மை செய்தல், கையுறு திரித்தல், பாய் முடைதல் போன்றவை இப்படி துணைத் தொழில்களாகப் போதிக்கப்பட்டு வருகின்றன. இப்படி ஒரே முறைதான் பின்பற்றி வருகி றோம். சம்பளத்தைப் பொறுத்த வரையில், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்து பரிசீலிக்கப்படும்.

திரு. எம். சங்கரலிங்கம்: தையல் ஆசிரியர்களுக்கு, ஆசிரியர் பயிற்சி தேவையில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கினார்கள். அரசு ஆணையும் அதைச் சொல்லுகிறது. இருப்பினும் சில இடங்களில், தனிப் பாக அருப்புக்கோட்டையில், தையல் ஆசிரியர்களுக்கு இந்தப் பயிற்சி இல்லை யென்ற காரணத்தைக் காட்டி, அவர்களுக்கு கல்வித் தகுதிக்கேற்ற சம்பளத்தை ஃபிக்ஸ் பண்ணாமல், லம்ப்சம்மாக ரூபாய் 140, ரூபாய் 150 என்று கொடுக் கிறார்கள். அதைப்பற்றி ஐந்து பேர் அரசுக்குத் தனித் தனியாகவும், தையல் தொழில் ஆசிரியர்களுடைய சங்கத்தின் வழியாகவும் முறையீடு செய்திருக் கிறார்கள். அதைப் பரிசீலனை செய்து, அவர்களையும் ஸ்கேலில் ஃபிக்ஸ் பண்ண அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: சம்பளத்தைப் பொறுத்தமட்டில், ஊதிய நிர்ணயக் குழு அறிக்கைக்குப் பிறகு அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

### *Teaching Staff in Aided Colleges.*

*55 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government have fixed any ceiling for the total number of teaching staff for each cadre for aided colleges;

(b) if so, whether on account of this ceiling, some of them have to be reverted and some retrenched; and

(c) if so, the number of such cases cader-wise, affected in the aided colleges in Madurai and Ramanathapuram districts?





### மானியம்பெறும் கல்லூரிகளில் ஆசிரியர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மானியம் பெறும் கல்லூரிகளில், ஒவ்வொரு தரத்திலும் ஆசிரியர் களின் மொத்த எண்ணிக்கைக்கு அரசு ஏதாவது உச்சவரம்பை நிர்ணயித் துள்ளதா?

(இ) ஆம் எனில், இந்த உச்சவரம்பு காரணமாக, சிலர் பதவி இறக்கமும், சிலர் பதவி நீக்கமும் செய்யப்பட வேண்டி வந்ததா?

(உ) ஆம் எனில், மதுரை, இராமநாதபுர மாவட்டங்களில் மானியம் பெறும் கல்லூரிகளில், பாதிக்கப்பட்டவர்களின் தரம் வாரியான எண்ணிக்கை என்ன?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: (அ) இல்லை. தனியார் கல்லூரி களில் ஒவ்வொரு பகுதிக்கும் பல்கலைக்கழகங்களின் வேலை பளுவை ஆதார மாகக்கொண்டு ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்படு கின்றது.

(இ) இவ்வினாவிற்கு பதில் எழவில்லை.

(உ) இவ்வினாவிற்கு பதில் எழவில்லை.

திரு. பி. ஆர். தாமஸ்: அரசாணை எண் 871-ன்படி 31—3—1977-இல் இருந்து எந்த ஆசிரியரையும் கல்லூரியிலிருந்து பணி நீக்கம் செய்யக் கூடாது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், பல ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருப்பதாகவும், பதவி இறக்கம் செய்யப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படியிருக்குமானால், மேற்குறிப்பிட்ட அரசாணை யின்படி பதவி இறக்கம் செய்யப்பட்டவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கவும், பணியிலிருந்து நீக்கப்பட்டவர்களை மீண்டும் பணியில் அமர்த்தவும் அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நாங்கள் கொடுத்த உறுதி மொழியைக் காப்பாற்றுகிற வகையிலே நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சி. ஈ. லெட்சுமிகாந்தன்: மானியங்களைப் பெற்றுக்கொண்டு தனியார் கல்லூரி நிர்வாகங்கள் இப்படி ஆசிரியர்களுக்குத் தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டு வருகிற காட்சி இன்று நடைமுறைக் காட்சியாகிவிட்டது. அண்மை

யில் தனியார் பள்ளிகளுக்கு அனுப்பிய அரசாணையின் பலன்களை தனியார் கல்லூரி நிர்வாகங்களுக்கும் விரிவுபடுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படியொரு நடவடிக்கை கல்லூரிகளைப் பொறுத்தும் எடுக்கப்படும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தனியார் கல்லூரிகளிலே மாணவர்கள் எத்தனை பேர் சேருகிறார்கள் என்ற கணக்கை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். கூடுதலாக மாணவர்கள் சேர்ந்து விட்டால், கூடுதலான ஆசிரியர்களைச் சேர்க்க வசதியிருக்கிறது. மாணவர்கள் குறையக் கூடிய கட்டங்களிலே சில ஆசிரியர்களை நீக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இதைத் தவிர்க்க அரசு என்ன வழியை வகுக்கப்போகிறது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது தனியார் கல்லூரிகளுக்கு ஏறக்குறைய நூறு சதவீதம் அளவுக்கு மானியம் தந்து கொண்டிருக்கிறோம். தனியார் நிர்வாகங்களுக்கு, ஆசிரியர் சம்பளத்தைப் பொறுத்தவரையில், பணப் பொறுப்பு கிடையாது. அரசாங்கம் அவர்களை வேலையிலே வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லும்போது, தனியார் நிறுவனங்கள் அதை மதித்து ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. அறிவழகன் : மானியம் பெறும் கல்லூரிகளில் வேலை பார்க்கிற ஆசிரியர்களின் எண்ணிக்கைக்கு உச்சவரம்பு நிர்ணயித்த சூழ்நிலையில், அவர்கள் இன்றையதினம் முழு மானியத்தையும் பெறக்கூடிய சூழ்நிலையைப் புதிதாக உருவாக்கியிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் உறுதிமொழியைத் தந்தார்கள். கல்லூரிகளிலே தவறாக வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிற முறையில் அவர்கள் தவறாக வேலையிலிருந்து நீக்கப்பட்டிருந்தால், அவர்களுக்கு வேலையில்லாத நாட்களில் சம்பளம் கொடுக்கிற புதிய முறையைக் கொண்டுவருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்பொழுது அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு கொடுப்பது என்ற முறையில் நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். அந்தப் பணிப் பாதுகாப்பு நடைமுறைக்கு வந்த பிறகு, உறுப்பினர் சொல்வது பற்றிப் பரிசீலிக்கலாம்.



திரு. க. மீனாட்சிசுந்தரம் : தனியார் கல்லூரிகளிலிருந்து வெளியேற்றப்படுகிறவர்களுக்கு வேலை தர அரசு முன்வந்திருப்பதற்கு உள்ளபடியே அரசுக்கு என் நன்றியை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அரசாங்கத்திலிருந்து எந்த ஆணை பிறப்பிக்கப்பட்டாலும், சிறுபான்மையினர் என்று சொல்லக்கூடிய நிர்வாகத்தினர் அதற்குச் சரியாக மதிப்பு அளிப்பது கிடையாது. அவர்கள் "தலையிட முடியாது" என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். சிறுபான்மையினர் நடத்துகின்ற ஸ்தாபனங்களில்கூட இப்படிப்பட்ட வேலைப் பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி அளிக்க ஒத்துவராத நிர்வாகத்திற்கு அரசு அளிக்கும் மானியத் தொகையை நிறுத்தக்கூடிய அளவுக்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சிறுபான்மையினர் கல்லூரிகளும், பள்ளிகளும் "அரசு தலையிட முடியாது" என்ற முறையில்தான் இதுவரை செயல்பட்டுக் கொண்டு வந்தன. அரசும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முடியாத நிலை இருந்து வந்தது. இப்பொழுது அப்படி நடவடிக்கை எடுக்க நமக்கு உரிமை இருக்கிறது. அரசு ஆணையை ஒத்துக்கொள்ள வேண்டும்; இல்லையென்றால் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற முறையில் இப்பொழுது ஒரு ஆணையைப் பிறப்பித்திருப்பது அரசுக்குக் கிடைத்திருக்கக்கூடிய ஒரு வரப்பிரசாதமாகும்.

திரு. ஆ. நல்லசிவம் : தனியார் ஸ்தாபனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டால், அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு அரசு அளிக்கும் வகையில் நடவடிக்கை எடுத்து ஆணை பிறப்பித்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது அரசுக் கல்லூரிகளில் வேலை பார்த்துக்கொண்டிருந்த 124 ஆசிரியர்கள் நீக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள். இதுபற்றி அமைச்சர் அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசுக் கல்லூரிகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்படுகிறவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் 10 (ஏ) (1) என்ற விதியின்கீழ் தற்காலிக இடங்களுக்கு நியமிக்கப்படுகிறார்கள். இந்த இடத்தில் தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள் வந்ததும், இவர்கள் வெளியேற்றப்படுவார்கள். இது சம்பந்தமாக முன்பு நடந்த பேச்சுவார்த்தையின் வாக்குறுதியின் அடிப்படையில் இப்பொழுது நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அதற்கேற்ப அந்தத் தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ரெகுலர் ஆசிரியர்கள் வரும்வரை, அந்த இடம்

திரு. சி. சா. லெட்சுமிகாந்தன் : வேலை தேடித் தரும் நிலையங்களில் பெயர்களை முறையாகப் பதிவு செய்திருப்பவர்களுக்கு வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை கொடுக்கும்போது, அவர்கள் எந்த ஆண்டில் பதிவு செய்தார்களோ அந்த ஆண்டு வரிசைப்படி, சீனியாரிட்டிபடிதான் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று முன்பு ஒரு விதிமுறை" இருந்தது. அதன்படி செய்து வந்தார்கள். ஆனால் இப்பொழுது அந்த விதிமுறை எடுக்கப்பட்டதாக அறிகிறேன். அதன் காரணமாக பல ஆண்டுகளுக்கு முன்பே பதிவு செய்து விட்டு வேலையில்லாமல் தவிப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாத நிலையும் அதே நேரத்தில் ஒருசில ஆண்டுகளுக்கு முன்பு பதிவு செய்தவர்களுக்கு அவர்கள் செல்வாக்கு உள்ளவர்களாக இருக்கின்ற ஒரே காரணத்தால்—வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய ஒரு நிலைமை இன்றையதினம் இருக்கிறது. இதில் பல குறைபாடுகள் இருக்கின்றன. சம வாய்ப்பு இதன் மூலம் பறிக்கப்படுகிறது. எந்த ஆண்டு பதிவு செய்தார்களோ அந்த வரிசைக் கிரமப்படி, சீனியாரிட்டிபடி அவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான் நியாயம் என்ற முறையில் ஒரு பொதுவான ஆணையை அனைத்துத் துறைகளுக்கும் அரசு பிறப்பிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தேதி அடிப்படையில், வரிசைக் கிரமப்படி, சீனியாரிட்டி அடிப்படையில் இப்பொழுது வேலை தரப்படுவதில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் பல ஆண்டுகளுக்கு முன்பு பதிவு செய்து கொண்டிருப்பவர்களின் சீனியாரிட்டியை மட்டுமே அடிப்படையாக வைத்துப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அதைத் தவிர வேறு சில அம்சங்களும் இருக்கின்றன. அதையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஜாதியைப் பார்க்க வேண்டியிருக்கிறது, கல்வித் தகுதியைப் பார்க்க வேண்டியிருக்கிறது, மேலும் வயதையும் பார்க்க வேண்டியிருக்கிறது. இவற்றையெல்லாம் பார்த்துத்தான் முடிவு செய்யப்படுகிறது.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்றபோது, 7 ஆண்டுகள் 8 ஆண்டுகள் வரை பதிவு செய்தும் வேலையில்லாதவர்களுக்கு வயது வரம்பைத் தளர்த்தியிருப்பதாகச் சொன்னார்கள். பிற்பட்ட வகுப்பினருக்கு அப்படிப்பட்ட வயது வரம்பு ஏதாவது தளர்த்தப்பட்டிருக்கிறதா ? எவ்வளவு தளர்த்தப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 30 வயதை 35 ஆக்கியிருக்கிறோம்.

திரு. சி. இராமலிங்கம் : ஒரு கம்பெனியிலோ, நிர்வாகத்திலோ, தொழிற்சாலையிலோ தொடர்ந்து வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் வேலை தேடித் தரும் நிலையத்திலும் அவர்களுடைய பெயர் பதிவு செய்யப்பட்



டிருக்கிறது. அரசாங்கத்திலோ, அரசு சார்பு நிறுவனங்களிலோ அவ்வாறு வேலை பார்த்துக்கொண்டிருப்பவர்களுடைய பெயரை வேலை தேடித் தரும் நிலையப் பதிவேட்டிலிருந்து நீக்கிவிடுகிறார்கள். ஆகவே கம்பெனியிலோ, நிர்வாகத்திலோ, தொழிற்சாலையிலோ வேலை செய்து கொண்டிருப்பவர்களுடைய பெயரைப் பதிவேட்டிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வேலை கிடைத்தவர்களுடைய பெயரை வேலை தேடித் தரும் நிலையத்திலுள்ள பதிவேட்டிலிருந்து எடுத்து விடுவது தான் நியாயம். அதுபற்றி வேலை தேடித் தரும் நிலயத்துக்குத் தகவல் கொடுத்தால் நீக்கிவிடுவார்கள்.

திரு. எம். சங்காலிங்கம் : வேலை தேடித் தரும் நிலையங்களில் பெயர்களைப் பதிவு செய்துள்ள நபர்களுக்குப் பொதுவாக அரசுத் துறைகளிலோ, அரசு சார்பு நிறுவனங்களிலோ வேலை தேடித் தரும் நிலையம் வழியாக வேலை தருகிறார்கள். அரசு மானியம், உதவி பெறும் ஸ்தாபனங்களில் எல்லாம் அவர்கள் எம்பிளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சைக் கன்சல்ட் பண்ணுடமல் தாங்களாகவே தங்கள் இஷ்டப்படி வேலைக்கு ஆட்களை எடுக்கிறார்கள். அவ்வாறு எடுப்பதைத் தடை செய்து எல்லோரும் வேலை தேடித் தரும் நிலையம் மூலம் தான் ஆட்களை எடுக்க வேண்டுமென்ற முறையிலும் அதை மீறினால் மானியம் வழங்கப்பட மாட்டாது என்ற முறையிலும் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : பல ஆண்டுகள் பதிவு செய்து காத்துக்கொண்டிருந்தும் வேலை தேடித் தர முடியவில்லை. வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு உதவித் தொகை தரவும் அரசுக்கு உத்தேசமில்லை. பிளாக் மார்க்கெட், சினிமா பிளாக் டிக்கெட், பிக் பாக்கெட், கள்ளச் சாராயம் போன்றவை செய்து பிழைத்தாலும், அது குற்றம் என்று சட்டம் வைத்துக்கொண்டிருக்கிறோம். தற்கொலை செய்துகொண்டால், அதுவும் குற்றம். பின் எப்படித்தான் அவர்கள் பிழைப்பது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : எப்படி இருந்தாலும், பிளாக் மார்க்கெட், சினிமா பிளாக் டிக்கெட், பிக் பாக்கெட், கள்ளச்சாராயம், திருடுவது போன்ற குற்றங்களை அரசு ஒத்துக்கொள்ளாது.

திரு. பி. ஆர். தாமஸ் : வசதி படைத்தவர்களிடமிருந்தும், வேலை பார்ப்பவர்களிடமிருந்தும் கணிசமான தொகையினை சில மாநிலங்களில் வாங்கி வேலையில்லாமல் கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவித் தொகையாகக் கொடுப்பதாக நான் அறிகிறேன். அதே போல அனைத்துப் பிரிவினரிடமிருந்தும் கணிசமான

களில் பணியாற்றுகின்ற 10 (ஏ) (1) ஆசிரியர்கள் இருக்கட்டும் என்ற வகையில் அவர்கள் வேலையில் தொடர்ந்து இருப்பதற்கு உறுதியளிக்கப்பட்டு, மார்ச் மாதத்திலேயே வெளியேற்றப்படவேண்டிய அவர்களும் தொடர்ந்து பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆக, அரசு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கிறது. இந்த விஷயத்தில் தேர்வாணைக் குழுவினரை மீறி அரசு நடவடிக்கை எடுக்க முடியாது.

திரு. ஆ. நல்லசிவம் : அரசு ஆணை 871, நாள் 31—3—1977-ன்படி, தனியார் கல்லூரிகளைப் பொறுத்தவரை ஆசிரியர்கள் தொடர்ந்து வேலை செய்ய உரிமை இருக்கிறது. ஆனால் அரசுக் கல்லூரிகளில் 10 (ஏ) (1)-ன்படி நியமிக்கப்படுகிறவர்களும் அப்படித் தொடர்ந்து வேலை செய்ய உரிமை உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனியார் கல்லூரிகளில் நியமிக்கப்படுகிறவர்களுக்கு மட்டுமே அந்த உரிமை இருக்கிறது.

திரு. க. அறிவழகன் : தனியார் கல்லூரிகளைப்பற்றி, சிறுபான்மையினர் நடத்துகின்ற கல்லூரிகளைப்பற்றியெல்லாம் பேசினார்கள். சிறுபான்மையினர் கல்லூரிகளைப்பற்றி—உதாரணத்திற்கு புதுக் கல்லூரி—ஊழல் போன்ற குற்றச்சாட்டுகள் வருமானால், அதை விசாரிக்கலாமென்று உச்ச நீதிமன்றமே அனுமதி வழங்கியிருக்கிறது. சிறுபான்மையினர் பள்ளிக்கூடத்தில் ஊழல் ஏதாவது நடந்ததாக அரசுக்குப் புகார் வந்தால், உடனே அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இதற்கான பதிலை மாண்புமிகு அமைச்சர் முன்னாலேயே சொன்னார்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுமாதிரி சிறுபான்மையினர் பள்ளிக்கூடங்களில் ஊழல் நடந்ததாகக் குற்றச்சாட்டு வந்தால், எப்பொழுதும் நடவடிக்கை எடுப்பது உண்டு.

*Candidates registered their names in Employment Exchanges.*

* 56 Q.—THIRU E. S. VENKATESAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is any scheme under the consideration of the Government to give monthly allowance to those who have duly registered their names in Employment Exchanges and could not secure any job even after five years; and

(b) if not, whether any steps would be taken to implement such a scheme ?



*வேலை தேடித் தரும் நிலையங்களில் பெயர்களைப் பதிவு செய்துள்ள நபர்கள்.*

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) வேலை தேடித் தரும் நிலையங்களில் முறையாகப் பதிவு செய்யப்பட்டு, ஐந்து வருடங்களுக்கு மேலாகியும் வேலை கிடைக்கப் பெறாதவர்களுக்கு, மாதந்தோறும் உதவித் தொகை அளிக்கும் திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையிலிருக்கிறதா ?

(இ) இல்லையெனில், அப்படிப்பட்ட திட்டமொன்றை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) உத்தேசமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : வேலை தேடித் தரும் நிலையங்களில் பெயர்களைப் பதிவு செய்துள்ள வேலையில்லாத நபர்களுக்கு, வேலையில்லாத பட்டதாரிகளுக்கு, குறிப்பாக மேற்கு வங்காளத்திலும், கேரளத்திலும் மாதந்தோறும் உதவித் தொகை அளிக்கப்படுவதாகச் செய்தி ஏடுகளில் படித்தேன். அப்படிப்பட்ட புரட்சிகரமான திட்டத்தை நம்முடைய அரசு செயல்படுத்த இதுவரை செயற்குறிப்பு ஏதும் இல்லையென்றாலும்கூட, இனிமேலாவது அப்படிப்பட்ட புரட்சித் திட்டத்தை ஏற்றுக்கொண்டு செயல்படுத்த அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்பொழுது அப்படி உத்தேசம் எதுவும் இல்லை. மேற்கு வங்கம், கேரளா அல்லது எந்த மாநிலமானாலும் சரி, தமிழ் நாட்டில் உள்ளதுபோல் இலவசக் கல்வி வேறு எந்த மாநிலத்திலும் இல்லை என்பது கவனிக்கத்தக்கது.

திருமதி சி. தமிழரசி : வேலை தேடித் தரும் நிலையங்களில் பெயர்களை முறையாகப் பதிவு செய்தும், ஏழு ஆண்டுகள் எட்டு ஆண்டுகள் வரை வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு வயது அதிகமாகி விடுகின்ற காரணத்தால், வயது வரம்பைத் தளர்த்துதல் அல்லது அது போன்ற வேறு சலுகைகளை அரசு வழங்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்டவர்களுக்கு அண்மையில் வயது வரம்பைத் தளர்த்தியிருக்கின்றோம்.

தொகையைப் பெற்று வேலை தேடித் தரும் நிலையங்களில் முறையாகப் பெயர்களைப் பதிவு செய்தும் பல ஆண்டுகள் வேலையில்லாமல் வாடுகின்றவர்களுக்கு அந்தத் தொகையை வழங்குகின்ற செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இருக்கிறதா? அப்படி இல்லையெனில் முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இதை ஒரு நல்ல யோசனையாக ஏற்றுக்கொள்கிறேன்.

புலவர் புலமைப்பித்தன்: நெருக்கடி காலத்தில் வேலைவாய்ப்பு நிலையம் கிட்டத்தட்ட ஓராண்டு காலம் வேலையில்லாமல் சும்மா இருந்ததாகக் கேள்விப் படுகிறேன். அந்தக் காலத்தில் வேலை தேடித் தரும் நிலையங்களில் பெயர்களை முறையாகப் பதிவு செய்தும் கூட, முன் உரிமைகளை இந்நிலையத்தின் மூலம் பெறுவதற்குத் தவறியிருக்கிறார்கள். இதற்கு ஒரு மாற்று வழி ஏதாவது அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்பொழுது இருக்கின்ற விதி முறைகளின்படி வேலை வாய்ப்புகளுக்குப் பரிந்துரைகள் செய்யப்படுகின்றன.

(பிற்பகல் 4-30)

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சில் பதிவு செய்து நான்கைந்து ஆண்டுகள் வேலை கிடைக்காத காரணத்தால் நம்பிக்கை இழந்து இடையே ரினியூ செய்யாமல் விட்டுவிடுகிறார்கள். மறுபடி வாய்ப்புக் கிடைக்கும்போது, மறுபடியும் ரிஜிஸ்டர் செய்ய விரும்புபோது, அவர்கள் புதிதாகப் பதிவு செய்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். சீனியாரிட்டி போய் விடுகிறது. ஏதோ ஒரு தடவை விட்டுவிட்டதால், இப்பெரிய தண்டனை கொடுப்பது நல்லதல்ல. இதை மாற்றி அவர்களுக்குப் பழைய சீனியாரிடி கிடைக்கும்படி ரினியூ செய்ய வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: வேலை வாய்ப்பு தேடித்தரும் இத்தகைய ஸ்தாபனங்களின் விதிகளை மத்திய அரசு போடுகிற சில விதிகளை ஒட்டித்தான் போட வேண்டியிருக்கிறது. வேலையில்லாதவர்கள் புதுப்பிக்கக் கூடிய அந்த வேலையைக் கூட செய்ய முடியவில்லை என்பது பரிதாபத்திற்குரிய ஒன்று.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: இந்த வேலை தேடித் தரும் நிலையத்தில் பதிவு செய்கிற மாணவர்கள் இந்த மாநிலத்திலே பிறந்து வளர்ந்தவர்களாக படித்தவர்களாகத்தான் இருக்க வேண்டும் அல்லது இந்த மாநிலத்திற்கு அவர்கள் பெற்றோர்கள் மாற்றப்பட்டு பதவியில் உள்ளவர்களாக இருக்க



வேண்டும் என்ற முறையில் இருக்கிறது. எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சில் பதிவு செய்யலாம் என்ற விதி இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றிய விவரம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால், பதில் சொல்லலாம்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: வேலை கிடைக்கும் வரையில் ரினியூ செய்ய வேண்டியதில்லை என்ற உத்தரவு போடப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தேவையில்லாத வேலையை அந்த ஸ்தாபனம் செய்து கொண்டிருக்க வேண்டி வரும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: கல்வி அமைச்சர் அவர்களிடம் நான் மிக முக்கியமான ஒரு கருத்தை முன்பு சொன்னேன். இப்படி முன்னுரிமை கொடுக்காததன் காரணமாக பலர் இந்த ஆண்டு சென்று தேர்ச்சி பெற்றவர்கள் கூட பதிவு செய்து அலுவலகத்தில் உள்ளவர்களிடம் ரூ. 20 அல்லது ரூ. 25 கொடுத்து வேலைக்கான நேர்முக தேர்வுப் பட்டியலில் தங்கள் பெயரைச் சேர்க்கும் காட்சி நடந்துகொண்டிருக்கிறது. அதனால்தான் வரிசைக் கிரமமாக அவை அனுப்பப்பட வேண்டுமென்ற ஆணையை அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: உறுப்பினர் கூறுகிற குற்றச்சாட்டு பயங்கரமானது. விட்டுவிட முடியாத குற்றச்சாட்டு. அப்படித் தவறாக நடக்கும் அதிகாரிகள்பற்றித் தகவல் தந்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக இதைச் சொல்கிறேன். இளநிலை, இடைநிலை என்ற பிரிவு ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இதில் இளநிலை ஆசிரியர்கள் தேர்வுக்கு எடுக்கப்படுவதில்லை. அப்படிப்பட்டவர்கள் இதில் பதிவு செய்து வைக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு வேறு இடங்களில் வேலை கிடைத்துவிடுகிறது. அதற்குப் பின்னாலும் கூட, தன்னுடைய பதிவை ரத்து செய்யாமல் அப்படியே விட்டுவிடுகிறார்கள். அதற்குக் காரணம் அவர்கள் விரும்புகிற பகுதிக்குப் போக முடியவில்லை என்பது. அதனால் பதிவேடுகளில் அவர்கள் பெயர் இருக்கிறதால், இளநிலை ஆசிரியர்கள் வேலையற்றோர் இத்தனை என்ற புள்ளி விவரம் வந்துகொண்டிருக்கும். இடைநிலை ஆசிரியர்களுக்கு போஸ்டிங்

**திரு. பி. ஆர். தாமஸ் :** ஆசிரியர்கள் பலவிதமான விடுப்பு சலுகைகளை அனுபவிக்கிறார்கள். அதே அடிப்படையில் "லீவ் ஆன் பிரைவேட் அஃபையர்ஸ்" என்று ஆறுமாத காலத்திற்கு அரை ஊதியம் பெற வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இந்தச் சலுகையை ஊராட்சி ஒன்றியத்தில் பணி புரியும் ஆசிரியர்கள் பெற முடியாமல் இருக்கிறார்கள். அது குறித்துத்தான் கேள்வி கேட்கிறேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சலுகையை ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் வழங்க முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, இந்தச் சலுகை அவர்களுக்கு இருக்கிறது என்பதைத்தான் நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** சலுகை சட்டத்தில் இருக்கிறது. அங்குள்ள நிர்வாகிகள் அதைத் தர மறுக்கிறார்கள். அரசே தந்திருக்கிற சலுகைகள் எந்தக் காரணத்தைக் கொண்டும் மறுக்கப்படக் கூடாது என்ற குறிப்பை அரசு ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்கு அனுப்புமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** சட்டம் போடுவதே அதைப் பின் பற்ற வேண்டுமென்பதற்காகத்தான். யாராவது அப்படிச் செயல்படவில்லை என்றால், உரிய நடவடிக்கையை நிச்சயமாக அரசு எடுக்கும்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** அநேக ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் அதை மறுக்கிறார்கள், ஆசிரியர்கள் மனு கொடுக்கும்போது. அப்படி மறுக்கப் பட்ட மனுக்களைப் பற்றிய புகாரை உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், தக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** நிச்சயமாக எடுக்கப்படும்.

## *Government Dental Wing.*

*59 Q.—THIRU A. BALASUBRAMANIAM : Will the Hon the Minister for Health be pleased to state—

(a) whether any enquiry was conducted on the complaint given by an Ex-Member of Parliament on the Chief of the Government Dental Wing, Madras; and

(b) if so, the decision taken thereon ?





## அரசினர் பல் மருத்துவமனை.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, அரசினர் பல் மருத்துவமனை தலைமை அதிகாரி பற்றி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொடுத்த புகார் மீது ஏதேனும் விசாரணை மேற்கொள்ளப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் முடிவு யாது ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** (அ) ஆம்.

(இ) சென்னை மருத்துவக் கல்லூரியின் பல் அறுவை சிகிச்சை மருத்துவப் பேராசிரியர் மீதான குற்றச் சாட்டுகள், விசாரணை செய்யப்பட்டு, குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாததால், மேல் நடவடிக்கை தேவையில்லை என்று அரசு முடிவு எடுத்தது.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** அந்த அதிகாரி எங்கே பணிபுரிகிறார் ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** அவர் இப்போது பதவி யிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** என்ன புகார் அவர் பேரில் வந்தது ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** அவர் மீது ஏழு புகார்களை திரு. மாரிசாமி கொடுத்திருந்தார். முதல் புகாரை மட்டும் குறிப்பாக விசாரிக்க வேண்டுமென்று அவர் தெரிவித்திருந்தார். விசாரித்து அவர் மீது குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்பதால் விடப்பட்டது.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** என்ன புகார் என்பதைச் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** முதல் குற்றச்சாட்டு டாக்டர் ராமச்சந்திரன் மிசா கைதிகளுக்கு மிகுந்த தொல்லை கொடுத்தார் என்பது.

[1978 செப்டம்பர்

*Seats for Anglo-Indian Community in Medical Colleges.*

* 60 Q.—THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU D. V. D'MONTE): Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government have received any representation regarding reservation of seats for the M.B.B.S. Degree Course in Medical Colleges, for candidates belonging to the Anglo-Indian Community; and

(*b*) if so, the action taken thereon ?

**ஆங்கிலோ-இந்திய வகுப்பினருக்கு மருத்துவக் கல்லூரிகளில் இடங்கள்.**

**திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. டி. வி. டி. மாண்டி சார்பில்) :** மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆங்கிலோ-இந்திய வகுப்பைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்காக மருத்துவக் கல்லூரிகளில் எம். பி. பி. எஸ். பட்டப் படிப்புக்கு இடங்களை ஒதுக்குவது தொடர்பாக முறையீடு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** (அ) ஆம்.

(இ) நம் மாநிலத்திலுள்ள 8 மருத்துவக் கல்லூரிகளில் முதல் வருட எம்.பி.பி.எஸ்., பட்டப்படிப்பு படிப்பதெற்கென 1,015 இடங்கள் இருக்கின்றன. அவைகளில் 31 சதவிகிதம் பிற்பட்ட வகுப்பினருக்கும், 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மலை வாழ் வகுப்பினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 50 சதவிகிதத்திற்கு மேல் ஒதுக்கீடு செய்வது இந்திய அரசியல் அமைப்புச் சட்ட 15(4) விதிக்குப் புறம்பானது ஆகும். ஆகவே ஆங்கிலோ-இந்தியர் உட்பட மற்ற இனத்தவருக்கு மருத்துவக் கல்லூரிகளில் இடம் ஒதுக்குவது என்பது இயலாது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(பிற்பகல் 4.40)



1978 செப்டம்பர் 9]

## 2. உரிமைப் பிரச்சினை.

திரு. ஜி. வசந்த பை அவர்கள் கோர்ட்டில் கொடுத்துள்ள அஃபிடவிட் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் திரு. கே. எஸ். அப்துல் வகாப் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினை தந்திருக்கிறார்கள். அது எந்த வகையில் மேலவை விதிகளின் கீழ் வருகின்றது என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி அவரை அழைக்கிறேன்.

* **திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதி 157-ன் கீழ், கீழ்க்காணும் உரிமைப் பிரச்சினைக்கு நான் முன் அறிவிப்பு கொடுத்திருக்கிறேன் :

> " 26—4வ;-1974 அன்று இராஜமன்னார் ரிப்போர்ட்டின்மீது மேலவையில் நான் பேசாத கருத்தைப் பேசியதாக நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை அவர்கள் 'அதாவது மத்திய அரசு அதிக அதிகாரம் மாநில அரசுக்குக் கொடுக்க மறுத்தால், மாநில முதலமைச்சர் முஜிபிர் ரஹ்மானாக மாற வேண்டும்' என்று பேசியதாகக் கோர்ட்டில் அபிடவிட்டு போட்டதுடன் பரவலாக பத்திரிகைகளுக்கும் விளம்பரம் கொடுத்து இருக்கிறார். "

அந்தப் பேச்சில் நான் நாட்டுப் பிரிவினை இராஜமன்னார் ரிப்போர்ட்டில் கேட்கப்படாததால், இந்த ரிப்போர்ட்டை ஆதரிக்கிறேன் என்று பேசியிருக்க, அந்தக் கருத்துக்கு நேர் மாறான, உண்மைக்குப் புறம்பான கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளம்பரப்படுத்தி, என்னுடைய உரிமையைப் பறித்திருக்கிறார்கள். ஆகவே இந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவுக்கு அனுப்பி எனக்கு நியாயம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் அன்றையதினம் சட்டமன்ற மேலவையில் என்ன பேசினேன்; என்ன கருத்தில் பேசினேன் என்பதை இங்கே படித்தால் பொருத்தமாக இருக்கும் என்ற காரணத்தால், அதைப் படிக்க எனக்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமது அன்றைய முழுப் பேச்சையும் படிக்கப்போவதில்லையே ? பகுதிகளைத் தானே படிக்கப் போகிறார் ?

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : பகுதிகளைத்தான் படிக்கப் போகிறேன். முழுப் பேச்சையும் படிப்பது சரியில்லை. அதோடு நேரமுமில்லை. இந்தக் கருத்துக்கு மாறுபட்ட கருத்துக்களைத்தான் சொல்லியிருக்கிறேன் என்பதைச் சுட்டிக்காட்டும் பகுதிகளை மட்டுமே படிக்க விரும்புகிறேன்.

இராஜமன்னார் குழுவின் அறிக்கையின்மீது அன்று விவாதம் நடை பெற்றது. அந்த விவாதத்தில் நான் பேசிய பகுதிகளில் சிலவற்றைப் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

". . . . முஸ்லீம் லீக்கைப் பொறுத்தமட்டில், முன்பு நாட்டைப் பிரிவினை செய்தவர்கள் என்ற குற்றச் சாட்டு எங்கள் மீது சுமத்தப் படுகிறது. இந்த மாநில சுயாட்சி என்ற தீர்மானத்தை ஆதரிக்கும்போது இதிலே பிரிவினை நோக்கம் இல்லை. அதிக அதிகாரம் வேண்டுமென்பதை நிச்சயமாக நாங்கள் தெரிந்துகொண்டு மனப்பூர்வமாக இதற்கு முழு ஆதரவைக் கொடுக்க முன்வந்திருக்கிறோம். முன்பு பேசிய எனது நண்பர் திரு. ராஜமாணிக்கம் அவர்கள் முஸ்லீம் லீக்கர்கள் பிரிவினை கேட்கவில்லை. அதிக சலுகைகளைக் கேட்டார்கள் என்றார்கள். நான் சொல்வேன். அப்படிச் சலுகைகள் கிடைத்திருந்தால் நாடு பிரிந்தே இருக்காது. . . "

அடுத்தது, என்னென்ன அதிகாரங்கள் மத்திய அரசுக்கு இருக்க வேண்டும், இங்கே உள்ள அரசுக்கு என்னென்ன அதிகாரங்கள் இருக்க வேண்டும் என்பது பற்றிய விளக்கம் அது.

". . . .இராஜமன்னார் குழு அறிக்கையைப் படித்த சந்தர்ப்பத்திலே நான் பார்த்தேன். மாநில சுயாட்சி என்று நண்பர்கள் சொல்லுகிறார்கள். தற்காப்பு மத்திய அரசிடத்தில் இருக்க வேண்டுமென்று அந்த அறிக்கையிலே சொல்கிறார்கள். "ஃபாரின் அபேர்ஸ்" மத்திய அரசிடத்தில் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். "இண்டர் ஸ்டேட் டிரான்ஸ் போர்ட்" மத்திய அரசிடத்தில் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். கம்யூனிகேஷன்ஸ், கரன்சி போன்று இப்படி 5 அடிப்படை அம்சங்கள் மத்திய அரசிடத்தில் இருக்க வேண்டுமென்று அந்த அறிக்கையில் சொல்கிறார்கள். இந்த ஐந்து அம்சங்களிலே, நான்கு அம்சங்களை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஐந்தாவது அம்சத்தில் எனக்கு ஏற்பு இல்லை. கரன்சியைப் பொறுத்தவரையில், நாம் மத்திய அரசுக்கு விட்டுக் கொடுக்கக்கூடாதென்பது என்னுடைய ஆணித்தரமான கருத்தாகும். . . "

இதை நான் சொல்லும்போது திரு. ராஜாராம் அவர்கள் குறுக்கிட்டுக் கேட்டார்கள்.



". . . 20 மாநிலங்களும் தனித் தனியாக அச்சடித்துக் கொள்ள வேண்டுமா ?" என்று கேட்டார்கள். அதற்கு நான் பதில் சொன்னேன்.

கே. எஸ். அப்துல் வகாப் : ஆமாம். ஆமாம். புதுக்கோட்டை சண்டைக் காய் ஸ்டேட், அங்கே நாணயம் அடித்தார்கள்.

திரு. கே. ராஜாராம் : அம்மன் காசுதான் அடித்தார்கள். சில்லரைக் காசுதான் அடித்தார்கள்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : அந்த உரிமையைக் கொடுப்பதால் பிரிந்து போகும் நிலைமை வராது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நல்ல வேளை இப்போது அந்த ஸ்டேட் இல்லை.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக ஒரு கருத்தை அப்போது நான் பேச மறந்துவிட்டேன். அப்போது சொல்வதற்குத் தவறிவிட்டேன். அதாவது நைஜாம் ஸ்டேட்டில் ரூபாய் அச்சடிக்க உரிமை கொடுத்திருந்தார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் அப்போது என்ன சொல்லத் தவறிவிட்டார்கள் என்பதல்ல பிரச்சினை, என்ன சொன்னார்கள் என்பதுதான் பிரச்சினை.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : அடுத்தது ". . . நேற்று இங்கே பேசிய அருமை நண்பர் திரு. இராம சுப்பையா அவர்கள் மாநில சுயாட்சி என்றால் பிரிவினை இல்லை, அதிக அதிகாரங்கள் கோருவதுதான் என்று எடுத்துச் சொன்னார்கள், எத்தனை முறைகள், எத்தனை கோணங்களில் விளக்கினாலும் புரிந்து கொள்ளாமல் இருக்கின்றார்களே என்று வியப்பு தெரிவித்துப் பேசினார்கள். நாம் தலைகீழாக நின்று விளக்கங்கள் சொன்னாலும், அவர்களுக்குப் புரியாது. புரியாது என்பதல்ல, அவர்களுக்குப் புரிந்து கொள்ள விருப்பமில்லை. தூங்குகின்றவர்களை எழுப்பலாம், ஆனால் தூங்குவது போன்று பாசாங்கு செய்கின்றவர்களை எழுப்ப முடியாது. அவர்களுக்குப் புரிந்து கொள்ள மனமில்லை என்றுதான் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். இது பிரிவினைக் கோரிக்கை அல்ல, அதிக அதிகாரங்கள் கோருவது தான் என்று விளக்கப்பட்டுவிட்டது. . . "

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இதோடு போதுமே.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : இன்னும் ஒன்றை மட்டும் படித்துவிட்டு முடித்துக்கொள்கிறேன்.

(திரு. கே. எஸ். அப்துல் வகாப்) [1978 செப்டம்பர் 9

"... மாநில சுயாட்சி என்றால், நாங்கள் பயப்படவில்லை என்று சொன்னார்கள். . . . மாநில சுயாட்சி என்பது பயப்பட வேண்டிய வார்த்தையும் அல்ல, அலர்ஜி உண்டாக்கக்கூடிய வார்த்தையும் அல்ல. மத்திய அரசுக்குட்பட்ட வகையில், அதிக அதிகாரம் கொண்ட மாநில சுயாட்சி என்று கூறுவதை விட பொருத்தமான வார்த்தையே கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவ்வளவு நல்ல வார்த்தை, பொருத்தமான வார்த்தை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். இந்த வார்த்தைக்குப் பதிலாக தேசிய சுயாட்சி என்ற கோரிக்கை வந்து, அதை ஆட்சேபித்திருந்தால் அர்த்தம் இருக்கும். . . "

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தாங்கள் பிரிவினையை ஆதரித்துப் பேசவில்லை என்பதுதான் தங்களுடைய கருத்தின் சாராம்சம். எனவே சொன்னது போதும் என்று கருதுகிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : நான் விரைவில் முடித்துக்கொள்ளப் போகிறேன்.

"... அதை ஆட்சேபித்திருந்தால் அர்த்தம் இருக்கும். . " "தமிழக சுயாட்சி என்ற கோரிக்கை இருந்தால், அந்த வார்த்தையை உபயோகப்படுத்தியிருந்தால், அதை எதிர்ப்பதில் அர்த்தம் இருக்கும், வார்த்தைகளைக் கொண்டு, பெயர்களைக் கொண்டு எதிர்ப்பு தெரிவிப்பது பொருத்தமற்றது. ஷேக்ஸ்பியர் சொல்கிறார் "

(திரு. ஜி. வசந்த பை அவர்கள் திரு. கே. எஸ். அப்துல் வகாப் அவர்களிடமிருந்து அவர் படித்த புத்தகத்தைத் தரும்படி கேட்கிறார்.)

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : நான் கொடுக்க முடியாது. (சிரிப்பு.)

(சில உறுப்பினர்கள் தம் இருக்கையிலிருந்து எழுகின்றனர்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தயவுசெய்து ஒன்றை உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இதில் யாரையும் பேச நான் அனுமதிக்கப் போவதில்லை. ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். திரு. வசந்த பை அவர்கள் பேசுவதற்கு முன்பாக ஒன்றை திரு. அப்துல் வகாப் அவர்கள் தெரிவிக்க வேண்டும். முதலமைச்சர் முஜிபிர் ரஹ்மானாக மாற வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்களா இல்லையா என்பதுதான். அதை தெளிவுப் படுத்த வேண்டும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : முஜிபிர் ரஹ்மானாக மாறவேண்டும் என்று நான் கூறவில்லை. அப்படி நான் இங்கே பேசவே இல்லை.



1978 செப்டம்பர் 9]

* THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, I want the Proceedings of 26th April 1974 which he has got from the Assembly Library, for my perusal. Please give me the Proceedings of 26th April 1974. I would show to you that I have not stated anything in the Affidavit which is not contained in his speech and in my speech on that occasion.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் தமது கருத்தை மட்டும் சொல்லிவிட்டால், பிறகு நானே பார்த்து அந்தப் பேச்சில் அது இருக்கிறதா இல்லையா என்பதை முடிவு செய்துவிடுவேன்.

THIRU G. VASANTHA PAI : I want to read it. Because he has read it I want to read his portions which he has not referred to. He cannot read portions and tell the House that he did not speak like that.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அந்தப் புத்தகத்திலிருந்து படித்துக் காட்ட வேண்டுமென்றால், உங்களுக்கு அந்த உரிமை உண்டு. மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வகாப் அவர்களின் கையிலேயே அந்தப் புத்தகம் இருக்கிறது, வாங்கிக் கொள்ளுங்கள். கோர்ட்டில் எதிர்க் கட்சிக்காரரிடம் இப்படிப் புத்தகத்தை வாங்கிக்கொள்கிறீர்கள் அல்லவா?

திரு. ஜி. வசந்த பை : இந்தப் புத்தகம் லைப்ரரி புத்தகம், அவருடைய சொந்தப் புத்தகம் அல்ல.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதில் தமிழில் அல்லவா இருக்கிறது?

திரு. ஜி. வசந்த பை : அவர் தமிழில் பேசியிருக்கிறார். நான் இங்கிலிஷில் பேசியிருக்கிறேன்.

He said " Hero of the Pakistan Party is Jinnah ". He also said that Jinnah would not have asked for Pakistan, if he had been given more powers. Then he quotes Maulana Abul Kalam Azad from " India Wins Freedom " and says that Congress was responsible for the separation and that Maulana Abul Kalam Azad had agreed to this. Then, at page 127, he misquoted it. I immediately called for the book " India Wins Freedom " and quoted the passage and said " You are misquoting it with a mischievous motive ". That is what I have said in my speech. Then he referred to " 14 points of Jinnah " at that time and

said if Jinnah had been conceded separate electorates, Baluchistan would not have been severed from India and that Sind would not have been separated from India.

(பிற்பகல் 4.50)

*மாண்புமிகு மேலவைத் தலைவர்* : மாண்புமிகு அங்கத்தினர் திரு. வசந்த பை அவர்கள் கொஞ்சம் கேட்டுக்கொள்ளவேண்டும். இங்கு அதற்கு என்ன வியாக்கியானம் என்பதல்ல இப்போதுள்ள பிரச்சினை. அது சம்பந்தமான விவரங்கள் என்ன என்பதை மட்டும் சொல்லுங்கள்.

*திரு. ஜி. வசந்த பை* : சொல்கிறேன்.

At page 127, in lines 5 to 20, he refers to "India Wins Freedom" and "14 Points of Jinnah". Then, on page 129 he says that if the 14 points of Jinnah had been conceded and the 12 points of Mujibhur Rahman had been conceded, Bangla Desh would not have ceased to be a part of Pakistan and Pakistan would not have ceased to be a part of India. So, he says that this was the reason. Then he continues further and asks for the demands made by him including currency in the "Sundakkai State". He goes further and says "there will be rebellion if these demands are not conceded today" I immediately objected and in my speech at page 150, I mentioned:

"My hon. Friend Thiru Wahab referred to the fact that in the year 1946, Mr. Jinnah was responsible for an agitation for powers for the States, while the Congress was against it and gave up the earlier resolution on Linguistic Provinces. I would like to clear Thiru Wahab of the conception which he has got about what his leader has said. I would like to quote the statement of Thiru Maulana Abul Kalam Azad about the activities of the Muslim League in those days. The Muslim League evidently and apparently was a non-political organisation, for all apparent purposes and for all transient purposes; but it was really helping the British Government to create and continue India as a slave country."

Thiru Wahab rose. I said "I am not yielding" and I went on reading from "India Wins Freedom":

"The Muslim League entered into the second phase of its activities when it found that the Government was compelled to introduce various reforms as a result of Congress pressure. It was somewhat disturbed when it saw the Congress achieving its objects step by step. The League still remained aloof from the political struggle, but as soon as an advance was made, it put in a claim on behalf of the Muslim community."



Then, I said,

"Thiru Wahab told this House something as if to defend Mr. Jinnah. I think that Mr. Jinnah was responsible for the destruction of unity; he was the person who was responsible for the bifurcation of this country."

Thiru Wahab rose. I said,

"Sir, I am not yielding. I am not yielding the floor to the hon. Member. Let him give his views after I finish my point.

I am referring to the fact that Thiru Wahab referred to two things which are very ominous and which even this Government have not referred to."

This is very important, Sir.

"One thing is that Mr. Jinnah's separation of the country and the establishment of Pakistan arose because powers were not given to the States. The second thing which he referred to was the fact that Mr. Mujibur Rahman fought against Pakistan because provincial autonomy was not conceded. So, this is a warning to this House which is discussing the very important Resolution which says that India is a vast country with people of different languages, civilisations and cultures and hence the State should have freedom of action and sufficient powers to secure its progress without impairing the unity of the country. While moving this Resolution, the Hon. the Chief Minister has correctly stated that the integrity and unity of this country are the prime concern. When such is the case, was the hon. Member Thiru Wahab pointing out that if autonomy was not conceded, it would result in what Mr. Jinnah did or what Mr. Mujibur Rahman did recently? In that respect, his speech was absolutely mischievous. I would like to say that I differ from him and he should not have made such a speech."

Sir, here comes the cat out of the bag and I am referring to what Thiru Wahab said. He spoke in English and not in Tamil.

" I have got a right to refer to what I feel. If oppression is caused, rebellion will be the result. Oppression leads to rebellion. Such conditions should not prevail. That was what I was trying to press."

He was trying, Sir, to press that if Mujibhur Rahman's demands had been accepted Bangla Desh would not have gone.

*மாண்புமிகு மேலவைத் தலைவர் :* நான் சொல்கிறேன். கொஞ்சம் உட்காருங்கள். இப்போது பிரச்சினை தெளிவாக இருக்கிறது. ஏற்கெனவே கோர்ட்டுக்குப் போயிருந்த விஷயம். கோர்ட்டுக்குப் போய் இன்னும் பூராவும் விசாரணை முடிந்துவிட்டதா என்பது தெரியவில்லை. இந்த நிலைமைகளில் அவர் சொல்லாததை, இல்லாததை நீங்கள் கோர்ட்டிலே சொன்னதாக அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதைப்பற்றி அதற்கு மேலேயும் நீங்கள் அபிப்பிராயங்களைச் சொல்லிப் பேசிக்கொண்டே போகவேண்டிய அவசியமில்லை.

*திரு. ஜி. வசந்த பை :* நான் இப்போது எடுத்துக்காட்டுகின்றதைத் தான் பண்ணிக்கொண்டிருக்கிறேன்.

I am only saying what has been done. I have got Thiru Wahab's speech :

" I have got a right to refer to what I feel. If oppression is caused, rebellion will be the result. Oppression leads to rebellion. Such conditions should not prevail. That was what I was trying to press. The reasonable request of the Government is the giving of more powers to the State. If it is conceded, there will be no question of separation. Why should this request for more powers be rejected ?"

Then, I said :

" Now, Sir, the whole cat has come out of the bag. The hon. Member said that rebellion would come about if the request was rejected. That is not what the Government have stated. With great respect to our Chief Minister, the Government have not stated that . . ."

Later, I said :

" I do not want to allow unnecessary interruptions in my speech. I must have my say, because the hon. Member had his say. The Resolution speaks of integrity of India."



I also said :

" Here there is no question of the integrity of India being affected. So, the suggestion of my hon. Friend Thiru Wahab is totally out of place and actually it is absolutely mischievous. It has no place here and has no reference to this Resolution at all, because I must clear the D.M.K. Government from any such charge that might be made after the speech of Thiru Abdul Wahab that they are attempting to have a rebellion and that if the request for State autonomy is not granted, they are going to secede from India."

I have said it and this I have said in one sentence.

Sir, I want to point out to you that Thiru Wahab is a party in the Court. He entered defence through the Government Pleader and * * signed a common affidavit in which he did not contradict this. He did not appeal against that Judgment and knowing about * * having gone up on appeal, he did not file any appeal against that Judgment which was against him. He cannot now come to this House and try to urge something about my affidavit which he has not contradicted there and he cannot be heard to say that here.

*மாண்புமிகு மேலவைத் தலைவர் :* அவர் கேட்பதெல்லாம், நீங்கள் கொடுத்த அபிடவிட்டிலே தன்னைப் பற்றியும், தான் சொல்லாததைச் சொன்னதாகச் சொல்வதையும் பற்றித்தான் கேட்கிறார். மற்றபடி ** அவர்கள் பற்றியோ அல்லது இந்த கேஸ் பற்றியோ இங்கே வாதிட முடியாது. அதைப்பற்றி வாதிடவும் வேண்டாம்.

*திரு. ஜி. வசந்த பை :* அது கோர்ட்டிலே கொடுக்கப்பட்ட சமாசாரம். இங்கே விவாதிக்க முடியுமா என்றால், அது முடியாது. அதனால்தான் சொல்கிறேன். கோர்ட்டிலே கொடுக்கப்பட்ட விஷயம். அங்கே ஒப்புவிக்கப்பட்டது. அதை ' அடாப்ட் ' பண்ணியிருக்கிறார்கள்.

*மாண்புமிகு மேலவைத் தலைவர் :* தாங்கள் ஆங்கிலத்திலேயே பேசலாம்.

*திரு. ஜி. வசந்த பை :* ஆகவேதான் இதைப்பற்றிப் பேசுவது நியாயமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

---

** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[1978 செப்டம்பர் 9

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நான் ஒன்று சொல்கின்றேன். பிரச்சினை இங்கே ரொம்பத் தெளிவாக இருக்கிறது. திரு. வகாப் அவர்கள் பேசாததைப் பேசியதாக நீங்கள் அபிடவிட்டில் கொடுத்திருக்கிறீர்கள் என்று அவர் சொல்லிவிட்டு, தான் பேசினதை முழுவதையும் படிக்க முடியாது என்று சொல்லி, நானும் முழுவதையும் படிக்க வேண்டாம் என்று சொன்னேன், அதிலே சில பகுதிகளை மட்டும் படித்தார்கள். திரு. வகாப் அவர்கள் படிக்காத பகுதிகள் என்று சொல்லிவிட்டு. அதுபோலவே திரு. வசந்த பை அவர்களும் சில பகுதிகளைப் படித்தார்கள். நாம் ஒரு முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது. இதிலே கோர்ட்டு விஷயத்தைச் சம்பந்தப்படுத்த முடியாது. ஒரு மெம்பர் தான் சொல்லாததைச் சொன்னதாகச் சொல்லும் போது, அது நீங்கள் சம்பந்தப்பட்ட கேசாக இருக்கட்டும் அல்லது வேறு எந்த கேசிலே அப்படி சொல்லியிருந்தாலும்கூட, அதை ஆட்சேபிக்க அவருக்கு உரிமை இருக்கிறது. சொல்லாததைச் சொன்னதாகச் சொல்வதை ஆட்சேபிக்க, மறுக்க உறுப்பினருக்கு உரிமை இருக்கிறது. நீங்கள் மெம்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது, 'ஓத்' எடுப்பது பற்றிச் சொல்வது என்பதல்ல இப்போதுள்ள பிரச்சினை. அது அல்ல. நீங்கள் அவர் சொல்லாததை மீட்டிங்கிலே சொல்லியிருந்தாலும்கூட, இந்த சபையிலே நடந்த ஒரு விஷயம் ஆனதால், ஒரு பப்ளிக் மீட்டிங்கிலே சொல்லியிருந்தாலும் கூட, அதை பிளீட் பண்ணுவதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது. அதுதான் உண்மையான நிலை. நீங்கள் அதை மறுத்துச் சொல்ல வேண்டும். அவர் இப்போது கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார். நீங்களும் இப்போது சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் எல்லாம் சொல்லிவிட்டீர்கள் என்று நினைக்கிறேன். இனி தான்தான் சொல்ல வேண்டும். அதுதான் இப்போது என் வேலை.

(பிற்பகல் 5-00)

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** நண்பரவர்கள் பதில் சொல்லும் வகையிலே சில வாசகங்களைப் படித்தார்கள். ஒருவர் ஒரு கருத்தைச் சொன்னால், அந்தக் கருத்தை ஒரே கோணத்தில் எல்லோரும் புரிந்துகொள்வதில்லை. (ஒரு காகிதத்தைக் காண்பித்து) இந்தக் காகிதம் வெள்ளை. நான் காட்டுவது வெள்ளைக் காகிதம். எல்லோருக்கும் இது வெள்ளையாகத் தெரியாது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நன்றாகத் தெரிகிறது வெள்ளையாக.



1978 செப்டம்பர் 9] (திரு. கே. எஸ். அப்துல் வகாப்)

**திரு கே. எஸ். அப்துல் வகாப் :** பச்சைக் கண்ணாடி போட்டவர்களுக்குப் பச்சையாகத் தெரியும். சிவப்புக் கண்ணாடி போட்டவர்களுக்குச் சிவப்பாகத் தெரியும், வெள்ளைக் காகிதம். அந்த மாதிரி, ஒருவர் ஒரு கருத்தைச் சொல்லும் போது, பலருக்குப் பலவிதமாகப் புரியும். நான் எந்தக் கருத்தில் சொன்னேன் என்பதற்கு, பிரிவினைக் கேட்டு நான் பேசவில்லை என்பதற்கு ஆதாரமாகப் பல வாசங்களைப் படித்துக் காட்டினேன். முஜிபர் ரஹ்மானை முதல்வர் மாற வேண்டுமென்று சொன்னதாக அவர் படித்துக் காட்டினார்.. ஆணித்தரமாகச் சொல்கிறேன். நான் எந்த கருத்துச் சொன்னேனோ, அதற்கு நேர் மாறான கருத்தை, பச்சைக் கண்ணாடி போட்டுப் புரிந்து கொண்டு சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தயவுசெய்து விவாதம் வேண்டாம். நீங்கள் உரிமைப் பிரச்சினை எழுப்பியிருக்கிறீர்கள். இரண்டு பேருடைய கருத்தும் தெரிந்துவிட்டது. இப்போது எதிர்க் கட்சித் தலைவரவர்களைக் கருத்து தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** இப்போது நமது அவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வகாப் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய உரிமைப் பிரச்சினைமீது தாங்கள் தீர்ப்புக் கூறுவதற்கு முன்னால், அவையில் இருக்கிற கட்சிகளுடைய தலைவர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்வது மரபு என்ற முறையிலே, எனது கட்சியின் சார்பிலே நான் எனது கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.. திரு. வகாப் அவர்கள் இந்த அவையிலே எதையும் பேசுவதற்கு உரிமை பெற்றவர்கள். ஒவ்வொரு உறுப்பினருக்கு இந்த அவையின் உள்ளே, எந்தப் பிரச்சினை பற்றிப் பேசுவதற்கும் உரிமை இருக்கிறது. அதைக் கேட்பதற்கு இந்த மாநிலத்திலே எந்த சக்திக்கும் உரிமை கிடையாது. நீதி மன்றங்களுக்கும் உரிமையில்லை என்று பல இடங்களிலே உணர்த்தப்பட்டிருக்கிறதென்பதை யாரும் மறுக்க முடியாது. அவர்கள் பிரிவினை வேண்டுமென்று சொல்லவும் உரிமை இருக்கிறது. அவர் அப்படிப் பேசவில்லை. இப்போது இலங்கைப் பாராளுமன்றத்தில் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் பிரிவினை வேண்டுமென்று பேசுகிறார். அதனால் அந்த அங்கத்தினர் உரிமை இழந்துவிட முடியாது. அவருக்கு அந்த உரிமையுண்டு. இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. ஆனால், இங்குள்ள பிரச்சினை அதுவல்ல. அவர் பேசாததைப் பேசிவிட்டதாக நீதிமன்றத்திலே சொல்லி, தனக்கு ஒரு வருத்தம் வருகிற நிலையும், இழுக்கு வருகிற நிலையும், ஏற்பட்டிருக்கிறதென்று திரு. வகாப் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இது விவாதத்திற்குரிய பிரச்சினையில்லை. பேசியது குறிப்பேட்டிலே இருக்கிறது. அவர்கள் பேசினார்களா, இல்லையா என்பதைப்பற்றி அறிய உரிமைக் குழுவிற்கு

அனுப்புவதற்குத் தகுதியான காரணங்கள் இருந்தால் அனுப்புவது, இல்லையென்றால் தாங்கள் வழங்கும் தீர்ப்பை இந்த அவை ஏற்றுக்கொள்ளும். இந்த விவாதம் நடக்கும்போது நானும் இருந்தேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நானும் இருந்தேன்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** என்னைப் பொறுத்த அளவில், அந்த விவாதத்தைக் கட்சித் தலைவராக இருந்து கேட்கவில்லை. இந்த அவையிலே ஓர் உறுப்பினராக இருந்து கேட்டேன். திரு. வகாப் அவர்கள் எந்த இடத்திலும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முதல்வர் முஜிபீர் ரஹ்மான் ஆகவேண்டுமென்றோ அல்லது பிரிவினையை வற்புறுத்தியோ சொன்னதாகக் கேட்கவில்லை. மிகத் தெளிவாகச் சொன்னார்கள். நாங்கள் ஆதரிப்பதற்குக் காரணம், இது பிரிவினையைச் சொல்லவில்லை, பிரிவினையைப் பற்றி பேசவில்லை. என்னுடைய கட்சியான முஸ்லீம் லீக் இந்தியாவைப் பிரித்துவிட்டதென்று பழி சுமத்தினார்கள். ஆனால், இதை ஆதரிப்பதற்குக் காரணம், பிரிவினை இல்லாததுதான் என்று சொல்லி, நியாயமான கோரிக்கைகள் கேட்கப்படாது போனால், அது மோசமான விளைவை ஏற்படுத்துமென்பதற்கு இரண்டு, மூன்று உதாரணங்களை எடுத்துச் சொன்னார்கள். பாகிஸ்தான் பிரிவினையைப் பற்றிச் சொன்னார்கள். பங்களா தேஷ் பிரிவினையைப் பற்றிச் சொன்னார்கள். இதைச் சொல்வதற்கு இந்த அவையிலே உரிமை கிடையாதென்று இன்னொரு உறுப்பினர் நினைப்பது தவறு.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இங்கே சபையிலே நீங்கள் சொல்லும் தீர்மானம் முன்மொழியப்படவில்லை. சபையிலே கிளப்பியதை கோர்ட்டிலே எழுப்பியது தப்பு என்று சொல்லியிருந்தால், நீங்கள் சொல்வது சரி. சொல்லாததைச் சொல்லியிருக்கிறார் என்பதுதான் தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கிறது.

**திரு. எம். சங்கரலிங்கம் :** அவர் சொல்லாததைத்தான் சொல்லியிருக்கிறார். அதனால் அது அங்கத்தினருடைய உரிமையை மீறிய மிக முக்கியமான பிரச்சினையாகும். இப்படி நடந்தால், மற்ற அங்கத்தினர்கள் பேசுவதற்கே உரிமை இழக்கும் நிலை ஏற்படுமென்று நான் கருதுகிறேன்.

THIRU G. VASANTHA PAI: I want to clarify one point which the Hon. the Leader of the Opposition has said. What I have stated in the affidavit is that I would not like to take my oath before a person who advocated that if more powers are not conceded to the States there should be a separation, citing the example of Mujibhur Rehman.





**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொல்வது அதுமட்டுமல்ல. நீங்கள் இந்தச் சபையிலே நடந்த நடவடிக்கைகளைப்பற்றி பெட்டிஷனிலே சொல்லியது தப்பு.

**திரு. ஜி. வசந்த பை :** அபிப்பிராயம்தான் சொல்லியிருக்கிறேன். நான் அவர் முன்னாலே 'ஓத்' எடுக்க முடியாதென்று சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள். திரு. க. இராமமூர்த்தி அவர்களைப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு தலைவரவர்களே, இங்கே எழுப்பப்பட்டிருக்கிற உரிமைப் பிரச்சினை மிக முக்கியமானது என்பதோடு, இந்த அவையினுடைய உரிமையை, கௌரவத்தைக் காக்கின்ற மிகப் பெரிய நடவடிக்கையாக அமையுமென்று கருதுகிறேன். நீதிமன்றத்திற்கு இது சென்றிருந்தாலும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியதைப்போல, இந்த அவையிலே உறுப்பினராக இருக்கின்றவர்கள் அவர்களுடைய கருத்துக்களைத் தெளிவாக, எந்தவித அச்சத்திற்கும் ஆளாகாமல் சொல்வதற்கு, பேசுவதற்கு பரிபூரண உரிமை பெற்றிருக்கிறார்கள். அந்தப் பேச்சு அவை நடவடிக்கைகளுக்கோ அல்லது நாட்டினுடைய நடப்புகளுக்கோ குந்தகம் விளைவிக்குமென்ற கருத்து அவையிலே உள்ளவர்களுக்கோ, தலைவருக்கோ ஏற்பட்டால், அந்த உரையை மாற்றுவதற்கு அல்லது நீக்குவதற்கு இந்த அவைக்கும், தலைவருக்கும் உரிமையிருக்கிறது. ஆனால், இந்த அவையில் ஏற்றுப்பட்டுவிட்ட ஒரு கருத்து, இந்த அவையில் அனுமதிக்கப்பட்ட ஒரு கருத்து, மீண்டும் பிரச்சினைக்கு ஆளாகவேண்டாம். அந்தக் கருத்து தவறு என்ற அடிப்படையிலே மீண்டும் நடவடிக்கை எடுப்பது முறையல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினை நீதிமன்றத்திலே இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த அவைக்கு அதைப் பற்றி விவாதம் செய்ய உரிமை இருக்கிறதா அல்லது அதனால் நீதி மன்றத்தின் நடவடிக்கைகள் பாதிக்கப்படுமா என்ற நிலைகளையெல்லாம் சொன்னார்கள். நம்முடைய எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னதைப்போல், இந்த அவையை நீதி மன்றம்கூட புறக்கணித்துவிட முடியாது. இந்த அவை யாருக்கும் கட்டுப்பட்டதல்ல. இந்த அவை யாருக்கும் அடங்கியதல்ல. இந்த அவையிலே கூறப்படும் கருத்துக்கள் முழுமையானவை, கொஞ்சம் கூட அச்சத்திற்கு ஆளாகாமல் சொல்லப்பட வேண்டியவை என்று அறிவிக்க விரும்புகிறேன். இரண்டாவதாக, ஓர் அங்கத்தினர் பேசிய பேச்சிலே இடம் பெறாத ஒன்று, வேறொரு இடத்திலே இடம் பெற்றிருக்கிறது என்ற அளவிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. வகாப் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அது

(திரு. க. இராமமூர்த்தி) [1978 செப்டம்பர் 9

உண்மையாக இருக்குமானால், நீதிமன்றத்திற்குச் சென்று பெருமளவிற்கு விளம்பரம் வந்துவிட்ட பிறகு, உறுப்பினர் அதை மறுப்பதற்கு அல்லது தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்கு வாய்ப்பு இல்லாத நிலை ஏற்படுகிறது. ஆகவே, இந்த உரிமை மீறல் பிரச்சினையைப் பொறுத்த வரையில், இந்த அவை காலம் கடத்தத் தேவையில்லை. உடனடியாக அதற்கு முடிவெடுத்து, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று என்னுடைய கட்சியின் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் இத்தகைய ஒரு நிகழ்ச்சி இதுவரை நடைபெற்றதில்லை. நான் இந்த மன்றத்திலே உறுப்பினராக இருக்கும் கடந்த 4 ஆண்டுகளிலே இப்படி நடைபெற்றதில்லை. இருப்பினும் ஓர் உறுப்பினர் சுயேச்சையாக, ஸ்வாதீனமாக தன்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு உரிமையிருக்கிறது. ஆனால், ஒரு உறுப்பினருடைய உரிமை மீறப்பட்டு, பாதிக்கப்பட்டுள்ளேன் என்று தலைவரிடம் முறையிடுவதும், இன்னொரு உறுப்பினர் அவ்வாறு உரிமை பறிக்கப் படவில்லை என்று வாதிடுவதும் சிக்கலான சூழ்நிலையை உருவாக்கியிருப்பதை அறிகிறேன். இருந்தாலும், பதிவு ஏடுகளில் பேசிய பேச்சு பதியப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையிலே மாண்புமிகு தலைவரவர்களே, இதில் நியாயம், நீதி எது என்று பார்த்து, நல்லதொரு தீர்ப்பை வழங்கலாமென்று கூறி, முடிக்கிறேன்.

* Thiru A. R. DAMODARAN : Sir, on matters connected with privilege, the Members of the House have every reason to be very guarded for the protection of the privileges of the hon. Members. But the point at issue is not whether Thiru Wahab was entitled to express his views about Mujibhur Rehman and Mohamed Ali Jinnah or whether Thiru Vasantha Pai is entitled to his views. Every Member of this House has the right to express his views within the rules and regulations as permitted by you, Sir. If any Member desires to differ from another hon. Member, he is entitled to do so in his speech. The question at issue and which Thiru Wahab has raised is that he has been misquoted by Thiru Vasantha Pai in the Court of the land. Thiru Vasantha Pai insists on saying that Thiru Wahab has stated what he has quoted in Court. The issue is very simple. It can be resolved by going through the entire speech. I am afraid I was not in the House on that day when the speech was made and I have not gone through the records. It is a clear



1978 செப்டம்பர் 9] [Thiru A. R. Damodaran]

case for you to decide by going through the records and finding out whether there is any factual difference between what Thiru Wahab has stated and what Thiru Pai has stated. The question at issue is not whether Thiru Wahab does not have a right to express his views on any matter for which he makes himself responsible. The House may not agree; none may agree, people might not agree; but that is his political responsibility. The point at issue is to be decided by you. This may not even go to the Committee. It is a simple question of going through the transcript of the speeches that were made by Thiru Wahab and Thiru Vasantha Pai and finding out whether there has been any factual inaccuracy. This is a charge that has been made by one hon. Member against another hon. Member and I leave it to your judgment, Sir.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திரு. மாணிக்கம், திரு. அப்துல் வகாப் அவர்களே இதிலே ஒரு கட்சிக்காரராக இருப்பதால், அவரை அழைக்கவில்லை.

(பிற்பகல் 5-10)

திரு. பி. மாணிக்கம் : தலைவர் அவர்களே, நான் சிறிது தாமதமாக வந்ததால் பிற்பகுதி கருத்துக்களைத்தான் கேட்க முடிந்தது. இருப்பினும் பக்கத்திலே உள்ள உறுப்பினர்களோடு விவரங்களைச் சேகரித்துக் கொண்ட அடிப்படையிலே என்னுடைய கருத்து இதில் பல விவரங்களைப் பற்றிச் சரி பார்க்க வேண்டியிருப்பதால், உரிமைக் குழுவிற்கு அனுப்பலாம் என்பது.

* திரு. ஆ. நல்லசிவம் : தலைவர் அவர்களே, திரு. தாமோதரன் அவர்கள் கூறியதைப் போல உறுப்பினர், இச்சபையில் இவ்விதம் பேசலாமா அல்லது கூடாதா என்பதல்ல திரு. வகாப் அவர்கள் கேட்டது. திரு. அப்துல் வகாப் அவர்கள் பேசியதை, திரு. வசந்த பை அவர்கள் 'மிஸ்கோட்' பண்ணியிருக்கிறார்களா என்பதுதான் இங்குள்ள பிரச்சினை. இதுதான் இங்கு உரிமைப் பிரச்சினையாக வந்திருக்கிறது.

திரு. வசந்த பை அவர்களும், திரு. வகாப் அவர்களும் படித்துக் காட்டியதிலிருந்து, "முன்னாள் முதலமைச்சர், முஜிபூர் ரஹ்மானாக மாற வேண்டும்" என்றோ, "பிரிவினை" என்றோ, "மாநில சுயாட்சி தராவிட்டால் பிரிந்து போவோம்" என்றோ வார்த்தைகளை திரு. வகாப் அவர்கள் பேசவில்லை என்பது தெரிகிறது. ஆனால் அவர் சொன்னதிலிருந்து நான் புரிந்து கொள்ளுவது, "மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்படாவிட்

டால், ஒற்றுமையாக இருக்க வேண்டிய நாடு பிரிந்து போகிற ஆபத்து ஏற்படும்" என்று பேசியதாக எடுத்துக்கொள்ளலாம். "மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தராததால், ஒன்றுபட்டு இருக்க வேண்டிய நம் நாடு, பாகிஸ்தான் என்றும், பங்களா தேஷ் என்றும் இரண்டாகப் பிரிய வேண்டிய நிலைக்குப் போய்விட்டதே" என்று திரு. வகாப் அவர்கள் சொன்னதாக எடுத்துக்கொள்ளலாம் என்று அவர்கள் பேசிய பேச்சிலிருந்து தெரிகிறது. அதற்கு மேலும் வார்த்தை அளவிலே, "முஜ்பூர் ரஹ்மானாக மாற வேண்டும்" என்று சொல்லவில்லை; பிரிவினை வேண்டும் என்று கேட்கவில்லை என்ற முடிவுக்குத்தான் நாங்கள் வர முடிகிறது. திரு. வசந்த பை அவர்கள் கூறியதுபோன்ற கருத்துக்கு இடம் இருக்குமா என்பதை தலைவர் அவர்களே முழுவதுமாகப் படித்துப் பார்த்து முடிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசா முகமது:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை அவர்கள், தற்காலிகத் தலைவருக்கு முன்னால் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ள மறுத்ததைத் தொடர்ந்து வழக்கு மன்றம் சென்று, என்ன காரணத்திற்காக தான் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளவில்லை என்ற விஷயங்களைச் சொன்னபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வகாப் அவர்கள் முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களை முஜ்பூர் ரஹ்மானோடு ஒப்பிட்டுப் பேசினார், பிரிவினை வாதத்தைத் தூண்டினார், எனவே அவர் முன்னால் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ளவில்லை என்பதைக் காரணம் காட்டி, வழக்கு மன்றத்திலே அந்தக் காரணங்களைச் சொல்லியிருப்பதாகக் கூறி, "நான் அப்படிப் பேசவில்லை, நான் பேசாத ஒன்றைச் சொல்லி நான் பேசியதாக வெளியே விளம்பரம் செய்து என்னுடைய அரசியல் ஒற்றுமை உணர்வுக்குக் களங்கம் கற்பிக்கிற வகையில் திரித்துக் கூறியிருக்கிறார்" என்றும், அவையிலே பேசாத ஒன்றை அவையிலே பேசியதாகக் குறிப்பிட்டதை இந்த அவையினுடைய உரிமையை மீறிய செயலாக சொல்லி உங்களிடத்திலே நியாயம் கேட்டிருக்கிறார்.

இங்கே பேசிய எதிர்க் கட்சித் தலைவரும், மற்ற கட்சித் தலைவர்களும் ஒவ்வொரு கோணத்திலே இதைத் தெளிவாக்கியிருக்கிறார்கள். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் இது குறித்து மிக விளக்கமாக, தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே நாம் கவனிக்க வேண்டியது ஒன்று. இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த நோக்கத்தின் அடிப்படையிலே பேசினார், அவர் அப்படிப் பேசலாமா, அதற்கு உரிமை இருக்கிறதா என்பதைப்பற்றி விஷயம் இங்கே வரவில்லை.



அதை நாம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. அதை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டு முடிவுக்கு வந்தால், கோர்ட்டின் தீர்ப்பு எப்படியிருக்குமென்று சொல்ல முடியாது. விஷயம் அதுவல்ல.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வகாப் அவர்கள், முன்னாள் முதல்வர் கலைஞரை முஜ்பூர் ரஹ்மானோடு ஒப்பிட்டுப் பேசினாரா, இல்லையா என்பதைப் பற்றி இரண்டு தரப்பினரும் தங்களுக்கு ஆதாரவாக ஒவ்வொரு புத்தகத்தை வைத்துக்கொண்டு பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வகாப் அவர்களுடைய புத்தகத்தை திரு. வசந்த பை அவர்கள் கேட்க, அவர் அதைத் தர மறுக்க, ஒரு நல்ல சூழ்நிலையில் இந்த விவாதம் நடைபெற்றது. அந்தப் புத்தகத்திலே அப்படி என்ன இருக்கிறது என்பது தெரியவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஒரே புத்தகம்தான்.

**மாண்புமிகு திரு. க. இராசா முகமது:** ஒரே புத்தகம்தான். ஆனால் ஒன்று புரிகிறது. அவரவருக்குச் சௌகரியமான பகுதியை வாசித்தார்கள் என்பது. இரண்டு பேரும் என்ன பேசினார்கள் என்பதை முழுவதையும் படித்துப் பார்த்து நாம் அதிலே தீர்ப்புக்கு வருவது சிறந்ததாக இருக்குமென்று கருதுகிறேன். எனவேதான் நீங்கள் குறிப்புகளில் உள்ள விஷயங்களைத் திரும்ப ஒரு முறை படித்துப் பார்த்து மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வகாப் அவர்கள் உள்ளபடியே "முஜ்பூர் ரஹ்மானோடு முன்னாள் முதல்வர் கலைஞரை ஒப்பிட்டுப் பேசினாரா இல்லையா" என்பதைக் கருப்பொருளாக எடுத்து வைத்துக்கொண்டு தீர்ப்பளிப்பது சரியாக இருக்குமென்று கருதுகிறேன். எனவே தாங்கள் காலத்தை எடுத்துக்கொண்டு அந்த வாதங்களைத் திரும்ப முழுவதுமாகப் படித்துப் பார்த்து, இதன் மீது தீர்ப்பு வழங்க வேண்டுமென்று என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**THIRU G. VASANTHA PAI:** The leaders of all the political parties have spoken in this matter. I only want to submit one thing. I would like you to note that what I have stated in the affidavit has not been contradicted by Thiru Wahab who was a part in the Court. I want the Hon. Chairman to note what I have stated in the affidavit.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** கோர்ட் பற்றி இங்கே பேச வேண்டியதில்லை. அங்கே இதைப்பற்றிக் குறிப்பிடவில்லை என்பதால், இங்கே பேசக் கூடாது என்பதல்ல.

Thiru G. VASANTHA PAI: The question is whether I have stated something in my affidavit in Court. You are asked to sit in judgment over a proceeding in Court. If what I have stated in the affidavit in Court has not been contradicted by Thiru Wahab who was a party, he is not entitled to bring this as a resolution or motion here. It is being stated that what I have stated in the affidavit is wrong. You are virtually sitting in judgment and you are asked to sit in judgment over some proceedings which have taken place in the Court. When the matter is *sub judice*, you are asked to sit in judgment over it.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இதுவே ஒரு கோர்ட்.

Thiru G. VASANTHA PAI: Sir, I am raising my point of objection. You may kindly give your decision on this also.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே விசாரணையில் இருக்கிறது என்ற காரணத்தாலே இங்கே அதைப்பற்றி விவாதிக்கக் கூடாது என்ற நிலைமை இருக்குமானால், நீதிமன்றம் இந்தப் பேச்சு நடைபெற்றதா என்பதைக் கேட்டிருக்க வேண்டும். இந்த அவையின் நடவடிக்கைக்கும், நீதிமன்றத்தின் நடவடிக்கைக்கும் சம்பந்தமில்லை. இரண்டையும் தொடர்பு படுத்திப் பேசுவது சரியல்ல.

(திரு. வசந்த பை எழுந்தார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். உங்களுக்கு இரண்டு தடவை வாய்ப்புத் தரலாம். அவ்வளவுதான்.

Thiru G. VASANTHA PAI: I would inform my learned Friend that the hon. Member who raises the objection here and * * * both of them were parties.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தயவு செய்து இதிலே ஆபீசரை அழைக்கக்கூடாது. நீங்கள் உட்காருங்கள்.

(பிற்பகல் 5-20)

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : கோர்ட்டுக்கு நான் ஆஜராகவில்லை என்று சொல்லுகிறார்கள். எனக்கு நோட்டீசு நேரடியாக வரவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இந்த விவாதத்தில் அது பிரச்சினையே இல்லை. மேலும் தீர்ப்புக்கு அது காரணமாக அமையாது. விளக்கமும் அவசியமில்லை. நீங்கள் உட்காருங்கள்.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



உறுப்பினர் திரு. அப்துல் வகாப் அவர்கள் எழுப்பியுள்ள உரிமைப் பிரச்சினை தான் சொல்லாததை திரு. வசந்த பை அவர்கள் நீதிமன்றத்தில் அவர் சொன்னதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்பதுதான். அவர்கள் எடுத்துப் படித்துக் காட்டுகிறபோது, அவர்கள் கொடுத்த உவமானங்களை எல்லாம் எடுத்து அதைச் சொல்லியிருப்பதாக அவர் அநுமானிக்கிறார். அவர் கொடுத்தது உவமானமா அல்லது உவமேயமா என்பது தீர்ப்பிற்குரிய பிரச்சினை. திரு. அப்துல் வகாப் அவர்கள் பேசியதிலே இவர்கள் குறிப்பிடுவதை உவமானமாக எடுத்துச் சொன்னாரா அல்லது உவமேயமாக எடுத்துச் சொன்னாரா என்பதை நிர்ணயிக்க அவர் பேசியதை விரிவாக எடுத்துப் படிக்க வேண்டும். கோர்ட்டுக்கு அவர் என்ன கொடுத்தார் என்பதையும் பார்க்க வேண்டும். ஒருவேளை கோர்ட் தீர்ப்புக்கு அதுவே காரணமாக இருந்திருக்கிறதா என்பதைக்கூட நான் கவனிக்க வேண்டியிருந்தால் கவனிக்கிறேன். கட்சித் தலைவர்கள் எல்லாம் ஒவ்வொருவரும் அபிப்பிராயம் சொன்னதையும் கவனத்தில் வைத்துக்கொள்கிறேன். ஒன்று மட்டும் நிச்சயமாக இங்கே புரிகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்ன மாதிரி, தஸ்தாவேஜுகளைக் கொண்டு வந்து பார்த்து, நாம் முடிவு கட்ட வேண்டியிருக்கிறது. இதில் கவலைப்படுவதற்கோ, ஆத்திரப்படுவதற்கோ ஒன்றும் அவசியமில்லை. இதுபற்றி இந்தத் தொடர் கூட்டம் முடிவதற்குள்ளாக என்னுடைய தீர்ப்பைத் தெரிவிக்கிறேன்.

## 3. அறிவிப்பு

### சென்னைப் பல்கலைக் கழக பேரவைக் குழுவிற்கு மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சென்னை பல்கலைக் கழக பேரவைக்குழுவின் தேர்தலுக்கு திருவாளர்கள் க. அறிவழகன், கே. இராமமூர்த்தி ஆகியோர் மட்டுமே போட்டியிட்டதால், உரிய முறைப்படி, அவர்கள் இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதனை இம்மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. சக்திமோகன் அவர்கள் மேலவை உறுப்பினர் என்ற வகையில் பதவிக் காலம் முடிந்துவிட்டதாலும், திருமதி தமிழரசி அவர்களின் பதவிக் காலம் காமராஜ் பல்கலைக் கழக பேரவைக் குழுவில் 28-10-1978 அன்று முடிவடைய இருப்பதாலும் ஏற்படும் காலியிடங்களை நிரப்ப வேண்டி, தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களால் விகிதாச்சார பிரதிநிதித்துவக் கோட்பாட்டிற்கிணங்க ஒற்றை மாற்று வாக்கு முறை மூலம் அப்பல்கலைக் கழக பொதுக்

குழுவிற்கு இரு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படவேண்டும். கீழ்க்கண்ட நாட்களை நேரடி வாக்குப் பதிவு மூலம் தேர்தல் நடைபெறும் நாட்களென நிர்ணயிக்கிறேன்.

| | |
|---|---|
| வேட்பு மனுக்கள் பெற்றுக் கொள்வதற்கான கடைசி நாளும் நேரமும் | 11—9—1978 பிற்பகல் 5 மணி. |
| வேட்பு மனுக்கள் ஆய்வு செய்வதற்கான கடைசி நாளும் நேரமும் | 11—9—1978 பிற்பகல் 6 மணி. |
| வேட்பு மனுக்கள் திரும்பப் பெறுவதற்கான கடைசி நாளும் நேரமும் | 12—9—1978 பிற்பகல் 5 மணி. |
| தேவை ஏற்படின் வாக்குப்பதிவு நடைபெறும் நாளும் நேரமும் | 14—8—1978 4 மணி முதல் 6 மணி வரை. |

வேட்புத் தாளை செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

### 4. கவன ஈர்ப்பு.

(1) விழுப்புரத்தில் நடந்த வகுப்புக் கலவரத்தில் அரசு கொடுத்த நஷ்ட ஈடு எல்லா சமூகத்தினருக்கும் கொடுக்கப்படவில்லை என்பது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திரு. கே. எஸ். அப்துல் வகாப் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பின், தேவைப்பட்டால், உறுப்பினர் கேள்விகள் கேட்டு, மேலும் விளக்கம் பெறலாம்.

THIRU K. S. ABDUL WAHAB : Under rule 42 of the Legislative Council Rules I wish to call the attention of the Hon. the Minister for Revenue to the following matter of urgent public importance, namely,

"Muslims have lost properties worth about Rs. 7 lakhs in the recent communal clashes at Villupuram but the compensation sanctioned by the Government has not been paid to all the communities alike."

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவரவர்களே, 25-7-1978 முதல் 28-7-1978 வரை விழுப்புரத்தில் நடந்த கலவரத்தில் பாதிக்கப்பட்ட ஏழை குடும்பங்களுக்கு உடனடியாக 10 கிலோ அரிசியும் 8 லிட்டர் மண்ணெண்ணெயும் கொடுக்க அரசு உத்தரவிட்டது. இது தவிர நிவாரணப் பணிகளை சரிவரக் கவனிக்க, சிறப்பாக ஒரு துணை ஆட்சியரும்



அவருக்குத் தேவையான பணியாளர்களும் அமர்த்தப்பட்டனர். முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 1,86,400 வழங்கி குடிசையிழந்த 286 குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்துக்கு ரூபாய் 400 கொடுக்கப்பட்டது. அதே போல இக் கலவரத்தில் இறந்தவர்களின் 12 குடும்பத்தினருக்கு ரூபாய் 6,000 வீதம் கொடுக்க அரசு ஆணையிட்டது. இவ்வாறு நிவாரணத்தொகை மத பாகுபாடின்றி பாதிக்கப்பட்ட எல்லோருக்கும் கொடுக்கப்பட்டது என்பதை அரசின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : கொடுக்கப்பட்ட நிவாரணத்தை அரிஜன்களுக்கு மட்டும் கொடுத்தால்தான், இந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்தேன் இறந்துபோன 12 பேருடைய குடும்பங்களுக்கு 6,000 ரூபாய் வீதம் கொடுத்திருப்பதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். இதற்கு முன்பு இதுமாதிரிக் கலவரங்களின்போது, இறந்து போனவர்களுடைய குடும்பங்களுக்கு இது மாதிரிக் கொடுத்தது கிடையாது. நான் முன்பு இதுபற்றிக் கேட்டபோது, அப்படிக் கொடுப்பது சம்பிரதாயமில்லை என்று சொன்னார்கள். விழுப்புரம் சம்பவத்திற்கு மட்டும் எப்படி இது சம்பிரதாயமாகக் கருதப்பட்டது? இது மாதிரிக் கொடுக்க வேண்டியதுதான். இதுமாதிரி எங்காவது நடந்தால் அரசு கொடுக்க வேண்டுமென்று கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நிவாரணம் என்று கொடுக்கிறபோது ஜாதி, மதம், சமயம் என்று பார்க்காமல், யார் நிவாரணம் பெற தகுதியுடையவர்களோ அவர்களுக்கெல்லாம் கொடுக்கப்படுகிறது. அதைப் போல இதுவும் கொடுக்கப்பட்டது. இது தொடர்ந்து எதிர்காலத்திலும் கொடுக்கப்படுமா என்பதைப்பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது.

திரு. செ. முத்துசாமி: எதிர்காலத்தில் இம்மாதிரி தமிழ்நாட்டில் எங்கும் நடைபெறக் கூடாது.

(2) மேல் நிலைப் பள்ளிகள் உட்பட அனைத்துப் பள்ளி மாணவர்களுக்கும் பாட நூல்கள் கிடைக்காதது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர். திருவாளர்கள் வே. தங்கப்பாண்டியன் மற்றும் ஆ. நல்லசிவம் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். ஒருவர் முன்மொழிந்தால் போதுமானது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பின், தேவைப்பட்டால், உறுப்பினர்கள் ஒவ்வொருவராக கேள்வி கேட்டு மேலும் விளக்கம் பெறலாம்.

[1978 செப்டம்பர் 9

**திரு. எம். சங்கரலிங்கம்** : மாண்புமிகு தலைவரவர்களே, 42-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன் :—

"மேல்நிலைப் பள்ளிகள் உட்பட அனைத்துப்பள்ளி
மாணவர்களுக்கும் பாட நூல்கள் கிடைக்காததாலும்
மேல்நிலைப்பள்ளிகளில் தொழிற்கல்வி ஆசிரியர்கள் உட்பட மற்ற
ஆசிரியர்களை நியமனம் செய்யாததாலும், மாணவர்களுக்கும்,
ஆசிரியர்களுக்கும் ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்து".

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்குப் பாடநூல்கள் காலத் தாழ்வின்றிக் கிடைக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்துள்ளது. மேல்நிலைப் பள்ளி வகுப்புகளுக்கு, மொழிப் பாடல்களுக்கும், பொதுப் பாடங்களுக்கும் சேர்த்து மொத்தம் 120 பாட நூல்கள் தேவை, அவற்றில் 41 பாடங்களுக்கு அரசுப் பாட நூல்களை அச்சிட்டு வெளியிடும் பொறுப்பு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்திடம் அளிக்கப்பட்டது. அவற்றுள் சில பாடநூல்களின் கையெழுத்துப் பிரதிகள் சற்றுக் காலம் தாழ்ந்து பாடநூல் நிறுவனத்திற்குக் கிடைத்தது. அச்சிடுவதற்கான தாளை வெளி மார்க்கெட்டில் வாங்க நேரிட்டது. இத்தகைய இடர்பாடுகள் இருந்தபோதிலும் பாடநூல் நிறுவனம் தான் வெளியிடவேண்டிய பாடநூல்களில் மொழிப் பாடநூல்களை ஜூலைத் திங்களிலேயே வெளியிட்டு விற்பனைக்குக் கிடைக்கச் செய்து விட்டது. கலை, அறிவியல் போன்ற பாடங்களுக்கு அந்நிறுவனம் வெளியிட வேண்டியிருந்த புத்தகங்களுள்ளும், புவியியல் தவிர மற்றவை அனைத்தும் 1978 ஆகஸ்ட் முடிவதற்குள் விற்பனைக்கு வந்து விட்டன. புவியியல் நூல் மட்டும் தற்போது வெளியிடப்பட்டது. ஆக, இப்பொழுது மேல்நிலைப் பள்ளிகளுக்கு பாடநூல் நிறுவனம் வெளியிட்டுள்ள அரசுப் பாட நூல்கள் அனைத்தும் இராமநாதபுரம் மாவட்டம் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் எளிதில் கிடைக்கும். தமிழ்நாட்டுப் படாநூல் நிறுவனம் அரசுப் பாட நூல்களை வெளியிடாத மற்ற 79 பாடங்களைப் பொறுத்தவரை, எந்தெந்தத் தனியார் பாடநூல்களைப் பயன்படுத்தலாமென்பது குறித்து 21—6—1978 நாளிட்ட அரசிதழிலேயே முழு விவரங்களும் அறிவிக்கப்பட்டன. அப்புத்தகங்கள் கடைகளில் விற்பனைக்குக் கிடைக்கின்றன என்று பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவித்துள்ளார். தொழிற் பாடங்களைப் பொறுத்தவரை அவற்றுக்குப் பாட நூல்கள் வெளியிடப்படவில்லை. எந்தெந்த கருவி நூல்களை பார்த்து அப்பாடங்களைக் கற்றுத் தரவேண்டுமென்பது ஏற்கெனவே



1978 செப்டம்பர் 9] (திரு. செ. அரங்கநாயகம்)

அறிவிக்கப்பட்டுள்ளது. அப்பாடங்களுக்கு முக்கியமாக ஆசிரியர்களின் உபயோகத்திற்காக கைப்புத்தகங்கள் வெளியிட பள்ளிக் கல்வி இயக்குநர் நடவடிக்கை எடுத்து வருகிறார். கைப்பிரதிகள் தயாராகிவிட்டன. இன்னும் சில வாரங்களுக்குள் அவற்றை ரோடா பிரின்ட் செய்து அனைத்துப் பள்ளிகளுக்கும் அனுப்பி வைக்கப்படும். மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் நியமனத்திலும், தவிர்க்கத் தக்க காலத்தாழ்வு எதுவும் இல்லை. மேல்நிலைப் பள்ளிகளில் பொதுப் பாடங்களை கற்றுத் தரும் ஆசிரியர்களுக்கான தகுதிகளை வரையறுத்து 15—6—1978 அன்றே ஆணை வெளியிடப்பட்டது. பெரும்பாலான ஆசிரியர்கள் உயர்நிலைப் பள்ளிகளிலிருந்தே தேர்வு செய்து, மேல்நிலைப் பள்ளிகளில் நியமிக்க வகை செய்து அவ்வாறே நியமனங்களும் செய்யப்பட்டுள்ளன. அவவாறு நியமிக்கப்பட்டவர்கள் போக மீதி என்னென்ன பாடங்களுக்கு வெளி மார்க்கெட்டிலிருந்து தெரிந்து எடுத்து நியமிக்க வேண்டுமென்பதும், அதற்காகப் பல்வேறு பாடங்களுக்கு எத்தனை கூடுதல் ஆசிரியர் பதவிகளை புதிதாக ஏற்படுத்த வேண்டுமென்பதும் பற்றிய இறுதி புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. மாணவர்களை மேல்நிலைப் பள்ளி வகுப்புகளுக்கு 31—8—1978 வரை சேர்க்கலாம் என்று இருந்ததால் இறுதிப்புள்ளி விவரங்கள் ஆகஸ்ட் மாத இறுதியில் தான் கிட்டுவனவாகும். அப்புள்ளி விவரங்களின் அடிப்படையில் பொதுப் பாடங்களுக்குத் தேவையான கூடுதல் ஆசிரியர் பதவிகளை ஏற்படுத்த அரசு அதிவிரைவில் ஏற்பளிக்கும். தொழில் சார்ந்த மேல்நிலைப் பள்ளிப் பாடங்களைப் பொறுத்தவரையில் எத்தனை பாடங்களில் மாணவர்கள் சேர்ந்துள்ளனர். அவற்றுள் எவ்வெவற்றை ஏற்கெனவே பணியிலிருந்து இருமுனைப் பாட ஆசிரியர்களைக் கொண்டு நடத்துவிக்கலாம், எவ்வெவற்றுக்கு புதிதாக, ஆசிரியர்கள் தேவைப்படும் என்பது பற்றிய இறுதி விவரங்கள் ஆகஸ்ட் மாத இறுதியில் உள்ள நிலைமைப்படி சேகரிக்கப்பட்டு விட்டன. புதிய ஆசிரியர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய இன்னும் சில நாட்களில் ஆணை வெளியிடப்படும். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை, இவ்விஷயத்தில் தனிக் கவனம் செலுத்த வேண்டிய பிரச்சினைகள் எவையும் இல்லை.

(பிற்பகல் 5-30)

**திரு. எம். சங்கரலிங்கம்** : தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகளுக்கான நூல்கள் இன்னும் பல வரவேண்டியிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிக்கையிலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். அச்சடிக்கப்பட்டு விரைவில் கொடுக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். பெரு நகரங்களில் நாகர்கோவில், திருநெல்வேலி போன்ற இடங்களில்கூட அந்தப் புத்தகங்கள் இது வரையில் கிடைக்கவில்லை. எனது தம்பி மகனுக்காக மூன்று புத்தகங்கள்

(திரு. எம். சங்கரலிங்கம்) [1978 செப்டம்ப 9

வாங்குவதற்கு சென்னைக்குச் சொல்லி அனுப்பினேன். கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆகையால் அவை அச்சிடப்பட்டு இதுவரையில் வெளியிடப் படவில்லை என்றால், விரைவில் வெளிவர தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், தொழிற் பிரிவு இருக்கிறது. அதற்கான பாடத் திட்டங்களை நடத்த ஆசிரியர்களைப் பயன்படுத்துவோம் என்று சொல்லப்பட்டது. சரியான பாடப் புத்தகங்கள் இல்லாத நிலையில் அவர்கள் எப்படி பாடங்களை நடத்துவார்கள்? பல பள்ளிகளில் ஆசிரியர்களே அதற்கு நியமிக்கப்படவில்லை. 'ரெஃபரன்ஸ் புக்' என்பவைகூட நூலகங்களில் கிடைக்காமல் இருக்கின்றன. ஒரு பள்ளிக்கு இரண்டு அல்லது மூன்று பிரதிகள் அந்த ரெஃபரன்ஸ் புத்தகங்கள் கிடைக்கிற அளவில் காலதாமதம் இல்லாமல் ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** விரைவாக அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** கல்வி அமைச்சர் அவர்கள் மேல்நிலைப் பள்ளிகளுக்கான புத்தகங்கள் அச்சிடப்பட்டு எல்லா மாவட்டங்களுக்கும் வினியோகிக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். என்னுடைய கேள்வி மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள மாணவர்கள் அத்தனை பேருக்கும் தேவையான புத்தகங்கள் அச்சிடப்பட்டனவா, அவை அவர்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறதா என்பது. நான்கில் ஒரு பங்கு மாணவர்களுக்குக்கூட போதுமான புத்தகங்கள் இல்லாமல் இருக்கிறது. பாதி அளவுக்குத்தான் புத்தகங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். பெரு நகரங்களில் புத்தகங்கள் கிடைக்கவில்லை. அருப்புக்கோட்டை தாலுகாவில் மேல்நிலைப் பள்ளிப் புத்தகங்கள் கிடைக்கவில்லை என்ற குறை இருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் தேவைப்படும் மாணவர்களுக்குத் தேவையான புத்தகங்கள் வினியோகிக்கப்படுமா? ஆசிரியர்கள் மாவட்டக் கல்வி அதிகாரிகளால் மாற்றப்பட்டு வந்தார்கள். இந்த மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், அது டைரக்டரிடம் போகவேண்டியிருப்பதால், காலதாமதம் ஏற்படுகிறது. ஆகையால் இந்தப் புத்தகங்கள் விரைவில் கிடைக்கவும் ஆசிரியர்கள் மாறுதலுக்கும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா? கால் ஆண்டுப் பரிட்சை வந்துவிட்டதால், விரைவான நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** புத்தகங்கள் கிடைப்பதற்கும் ஆசிரியர்கள் நியமனத்திற்கும் விரைவான நடவடிக்கை எடுக்கப்படும். காலாண்டுத் தேர்வு என்பது அந்தந்தப் பள்ளிகளின் பிரச்சினை. அவர்கள் நடத்த வேண்டிய பாடங்களில் பரிட்சை வைப்பார்கள்.



1978 செப்டம்பர் 9]

**திரு. ஆ. நல்லசிவம்:** சென்ற ஆண்டும் இதே மாதிரி புத்தகங்கள் அச்சிட்டு வெளியிடுவதில் காலதாமதம் ஏற்பட்டது. இந்த ஆண்டாவது அதைத் தவிர்க்க அரசு முன் முயற்சி எடுத்ததா? ஏற்கெனவே பள்ளிப் படிப்பு மூன்று மாதங்கள் முடிந்துவிட்டன. இனிமேல் என்னதான் சொல்லிக் கொடுத்தாலும், இந்த அகாடமிக் வருஷத்திற்குள் பாடத்தை முடிக்க முடியாது. அதனால் பரிட்சையில் வால்யுவேஷன் லிபரலாக இருக்க ஆசிரியர்களுக்கு அரசு அறிவிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** 11-வது வகுப்புக்குப் பொதுப் பரிட்சை இல்லை. ஆகவே இந்தப் பிரச்சினை எழ இடமில்லை.

## 5. 1978-79 ஆம் ஆண்டு முதல் துணை விவர அறிக்கையின் மீது விவாதம்.

* **திருமதி சி. தமிழரசி:** தலைவர் அவர்களே, துணை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். முதலாவதாக சிறைச்சாலை மேம்பாட்டுக்காக, இந்தத் துணை மானியத்தில் ரூபாய் 12,68,460 ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது குறித்து நான் இங்கே ஒரு சில வேண்டுகோள்களை விடுக்கக் கடமைப்பட்டுள்ளேன். மத்திய சிறைச்சாலையானாலும், துணை சிறைச்சாலையானாலும், மிகவும் மோசமான நிலைமையில் இன்றையதினம் இருக்கின்றன. அதிலும் நான் புதிதாக ஒன்றையும் சொல்லவில்லை, அனைவரும் அறிந்திருக்கிற ஒரு உண்மையைத்தான் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். இப்போது பல தரப்புகளிலிருந்து போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. பெண்கள் அதிகமாகக் கைது செய்யப்படுகிறார்கள். இந்த நிலையில் நான் பெண்களுக்காகவே பெண் கைதிகளுக்காக ஒரு சில வேண்டுகோள்களை விடுக்கக் கடமைப்பட்டுள்ளேன். நானும் மதுரையில் சிறையில் இருந்த போது, ஒருசில அனுபவங்கள் நடைபெற்ற காரணத்தால் அதைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் இருந்த நேரத்தில், 73 பெண் கைதிகள் அங்கே இருந்தோம். அவர்களுக்கு அங்கே ஃப்ளஷ்அவுட் லெட்ரின் நான்கு தான் இருந்தன. இரவு முழுவதும் பூட்டி வைக்கப்பட்டு காலையிலே ஐந்தேமுக்கால் மணிக்கு திறந்துவிடப்படுகிறபோது, அவ்வளவு பேரும் வேகம் வேகமாக அங்கே ஓடுவார்கள். அப்படிப் போகிற நேரத்தில், அந்த நான்கு லெட்ரின்களில் தண்ணீர் வசதி கிடையாது. தண்ணீர் வசதி இல்லாதபொழுது, கொஞ்சம் பக்கத்திலுள்ள பாத்ரூமிலிருந்து குவளையில் தண்ணீர் எடுத்துக் கொண்டு வர வேண்டும். அப்படி வரும்போது, லெட்ரினில் இன்னொருவர் போகிற நிலைமை இருக்கிறது என்றால், அதை இதற்கு மேல் இங்கே விவரிக்க இயலாது. அந்த அளவுக்கு சிறைகளில் பெண்களுக்கு நிலைமைகள் இருக்கின்றன என்பதை வருத்தத்தோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் குவளையில்தான் லெட்ரினுக்குத் தண்ணீர் எடுத்துச் செல்ல வேண்டும். அதில்

(திருமதி சி. தமிழரசி) [1978 செப்டம்பர் 9

தான் குளிக்க வேண்டும். அந்தக் குவளையில்தான் குடிக்கவும் தண்ணீர் எடுக்க வேண்டும். எனவே அந்த லெட்ரின் வசதியைப் பெருக்க வேண்டும். இந்த அறிக்கையில் லெட்ரின் அமைக்கவும் மின் இணைப்பு கொடுக்கவும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. முக்கியமான இந்த வசதியை பெண்கள் பகுதிக்கு அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு செல்லில் எத்தனை பேரை வைப்பது என்ற நியதி இல்லாமல், பெரிய சண்டை ஏற்படத்தக்க அளவில், இரவு முழுவதும் சத்தமாக பக்கத்திற்குப் பக்கம் பெண்கள் நெறுக்கிக் கொண்டு படுக்கின்ற பரிதாபமான நிலைமை அங்கே இருக்கிறது. நான் இருந்த அந்த ஜெயிலில் அந்த நிலையைக் கண்டேன். மத்திய சிறையை விட சப்-ஜெயிலில் ரொம்ப மோசமாக இருக்கிறது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். எனவே இவற்றையெல்லாம் சிறை மேம்பாட்டிற்கு ஒதுக்கியுள்ள தொகையில் செய்யவேண்டும், மேம்படுத்த வேண்டும்.

சாலைப் போக்குவரத்திற்காக இந்தத் துணை மானியத்தில் ரூபாய் 5 லட்சம் சேர்க்கப்பட்டிருக்கிறது. சாலைப் போக்குவரத்துபற்றி ஒருசில கருத்துக்களை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சின்னச் சின்ன கிராமங்களுக்குச் சாலை அமைத்து அவற்றிற்குப் பக்கத்திலுள்ள சாலையோடு இணைத்து விட்டால், ஓரளவுக்கு கிராம மக்களுக்கு வசதியாக இருக்கும். மாட்டு வண்டிகளிலே அவர்கள் சாலைகள் சரியாக* இல்லாமல் அவதிப்படுவதைப் பார்க்கும்போது, கஷ்டமாக இருக்கிறது. அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போக்குவரத்து அமைச்சர் அவர்களுக்கு அவர்கள் எடுக்கிற முயற்சிகளுக்குப் பாராட்டு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சமீபத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் கண்ணங்குடி யூனியன் கப்பலூர்-ஏம்பல் சாலையிலிருந்து குடிக்காடு கிராமத்திற்கு சாலை அமைக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தேன். உடனடியாக போக்குவரத்து அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்து, அளந்து பார்க்கிற வேலைகள் எல்லாம் நடைபெற்று, இப்போது பணம் ஒதுக்குகிற அளவுக்கு நிலைமை முன்னேறியிருக்கிறது. அதையும் அவர்களிடம் எடுத்துச் சொன்னேன். உடனடியாக அவர் என் எதிரிலேயே அதற்கான உத்தரவுகளைச் சொன்னார்கள். அந்த அளவுக்குப் பெரு முயற்சி எடுத்திருக்கிறார்கள். அவரை நான் மனமாரப் பாராட்ட வேண்டுமென்பதால் அதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. ஈ. எஸ். வெங்கடேசன் தலைமை.)

(பிற்பகல் 5-40)

அதே நேரத்தில் மற்றொரு வேண்டுகோளையும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு விடுத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இராமநாதபுரம் மாவட்டம் கன்னங்குடி யூனியன் கப்பலூர்-ஏம்பல்



1978 செப்டம்பர் 9] [திருமதி சி. தமிழரசி]

வரை இப்போது மினி பஸ் விடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. எனவே நான் இங்கே முன்னே குறிப்பிட்ட ரோடு முடிவடைந்தவுடனே, அந்த ரோட்டிலும் இந்த மினி பஸ்ஸை விடுவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அங்கேயிருந்து ஐந்து கிலோமீட்டர் தொலைவில்தான் இந்த ரோடு இருக்கிறது. எனவே இந்தச் சாலை வேலை முடிந்தவுடன் இந்த வேண்டுகோளையும் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, விரைவாக முயற்சிகளை மேற்கொண்ட போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டி நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கை விவாதத்தில் கல்வி என்ற தலைப்பில் ஒரு சில கருத்துக்களை இங்கே சொல்ல விழைகிறேன்.

இந்த அவையிலே ஆசிரியர்களின் பிரதிநிதிகள் ஆறு பேர் இருக்கிறார்கள். ஆசிரியர்களின் பிரதிநிதிகளே இந்த அவையை ஆக்கிரமித்துக்கொள்வதாகக் கூட சில நண்பர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆசிரியர்களின் பிரதிநிதிகளாகிய நாங்கள் சொல்லுகிற கருத்துக்களைக் கேட்பதற்கு என்ன காரணத்தாலோ மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பொதுவாக இங்கே இருப்பதில்லை. கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே இருந்தால், நாங்கள் ஆசிரியர்களுடைய பிரச்சினைகளை நேருக்கு நேர் பார்த்துப் பேசுகிறபோது, சற்று உணர்வு பூர்வமாக அமைச்சர் அவர்கள் அவைகளை உணர முடியும் என்ற காரணத்தால், நாங்கள் அவையிலே பேசுகிறபோது, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அவையிலே இருக்க வேண்டும் என்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், அண்மையில் தனியார் பள்ளி ஆசிரியர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டார்கள். அப்படி வேலைநீக்கம் செய்யப்பட்ட தனியார் பள்ளி ஆசிரியர்களுடைய பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்து வைக்க வேண்டுமென்று 31—8—1978 அன்று நான் ஓர் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை இந்த அவையிலே கொடுத்திருந்தேன். அதோடு இல்லாமல் 2—9—1978 அன்று போராட்டம் செய்து கொண்டிருந்த ஆசிரிய நண்பர்களை அழைத்து வந்து கல்வி அமைச்சர் அவர்களிடம் தானே முன்னின்று பேச்சுவார்த்தை நடத்தினேன். அப்போது அந்தப் பிரச்சினை குறித்து கல்வி இயக்குநர், மற்றும் கல்வி இலாக்கா காரியதரிசி போன்றவர்களைக் கலந்து அதற்கு மறுநாள் ஆணை பிறப்பிப்பதாக அமைச்சர் அவர்கள் எங்களிடம் சொன்னார்கள். ஆனால் அதற்குப் பிறகு கவன ஈர்ப்புத் தீர்மானம் இங்கே எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதற்குரிய

பரிகாரத்தினை கல்வி அமைச்சர் அவர்கள் ஆசிரியர்கள் தின விழாவில் கலந்து கொண்டு அங்கே போய் அறிவித்திருக்கிறார்கள். அவ்வாறு ஆசிரியர்கள் தின விழாவிலே அறிவித்த பிறகு, அது எங்களுடைய கவனத்திற்கு வராத அளவில் அரசினுடைய ஆணைகள் பத்திரிகைகளுக்குக் கிடைத்தும், இங்கே இருக்கிற உறுப்பினர்களுக்குக் கிடைக்காத நிலையில், அதற்கு உரிய நேரத்தில் அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக்கூட முடியவில்லை. அதாவது இந்தப் பிரச்சினையில் மிகுந்த அக்கறை காட்டி, இந்தப் பிரச்சினையின் தீர்வுக்காக முயன்ற நானே நன்றி தெரிவிக்க முடியவில்லை. ஆனால் வெளியே இருப்பவர்கள் நன்றி தெரிவித்து அது வானொலியில் பறைசாற்றப்படுகிறது. வெளியே இருந்தவர்கள் முந்திக்கொண்டார்கள். நான் கேட்டுக் கொள்ள விரும்புவதெல்லாம், உறுப்பினர்களாகிய நாங்கள் பேசுகிற கருத்துக்களை, கொண்டு வருகிற பிரச்சினைகளைப்பற்றிய எந்த அறிவிப்பையும் அமைச்சர் அவர்கள் இங்கேயே அறிவித்திருந்தால், நாங்கள் அமைச்சர் அவர்களுக்கு நேரடியாக நன்றி தெரிவித்துக்கொள்ள வாய்ப்பாக இருக்கும் என்பதோடு, நாங்கள் மேற்கொண்டிருக்கிற செயல் இருட்டடிப்பு செய்யப்படுவதற்கும் காரணமாக இருக்காது என்பதையும் இந்த நேரத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோளாக விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிறப்பிக்கப்பட்ட அரசாணையின்படி வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை மீண்டும் வேலையில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கல்வி இலாக்கா ஓர் உத்தரவிட்டால், அந்த உத்தரவை தனியார் பள்ளி நிர்வாகங்கள் நிறைவேற்றுவதில்லை என்றால், அந்தப் பள்ளிக்கான மானியத்தையும் அந்தப் பதவியையும் எடுத்து வேறு ஒரு பள்ளிக்குத் தரப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படித் தரப்படுவதாலேயே அந்த ஆசிரியர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வார்கள் என்றோ, உடனடியாக வேலை கிடைக்கும் என்றோ எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை. ஆகவே இப்படிப்பட்ட ஆணை பிறப்பிப்பதாலே எந்தப் பயனுமில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு அந்த ஆசிரியர்கள் தங்களுக்கு அரசாங்கத்திலிருந்து நேரடியாக ஊதியம் தரப்பட வேண்டுமென்று கேட்டார்கள். நேரடி ஊதியம் நிர்வாகத்தைச் சேர்ந்த மானேஜர் மூலமாக இல்லாமல் தலைமை ஆசிரியர் மூலமாக இனி வழங்கப்படும் என்று அரசு இப்போது ஆணை பிறப்பித்திருக்கிறது. தலைமையாசிரியர் என்பவர் ஏதோ நிருவாகத்திற்குச் சம்பந்தப்படாதவர் அல்ல. ஒரு பள்ளியின் நிருவாகியாகக் கணவன் இருக்கிறார். அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியாக அவருடைய மனைவியே இருக்கிறார். எனவே எல்லாப் பள்ளிகளிலுமே நிருவாகத்திற்குத் தலைமையாசிரியர் அடக்கம்தான்.





ஆகவே, இது ஒரு மாற்று ஏற்பாடு அல்ல. இது ஒரு பெரிய புரட்சிகரமான மாற்றுத் திட்டமல்ல. எனவேதான் ஆசிரியர்களுக்கு நேரடியாக ஊதியம் கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் ஆசிரியர்களின் மேல் முறையீடுகளை உரிய காலத்தில் தீர்த்து வைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கரூரை அடுத்த வெங்கமேட்டில் ஒரு பள்ளிக் கட்டிடம் இடிந்து விழுந்த காரணத்தால், அங்கே இருந்த மூன்று குழந்தைகள் இறந்துவிட்டன. 27 குழந்தைகள் காயம் அடைந்தார்கள். இரண்டு குழந்தைகள் மிகவும் அதிகமான காயம்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில் அதைப்பற்றி ஓர் கவனஈர்ப்புத் தீர்மானத்தை இந்த அவையிலே நான் தந்திருந்தேன். அந்தத் தீர்மானம் இங்கே எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆசிரியர்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியப் பிரதிநிதிகளாகிய எங்களுடைய முயற்சி வெளி உலகத்திற்குத் தெரியவில்லை. ஆனால் சட்ட மன்றப் பேரவையில் 8—9—1978-ல் அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் இந்தப் பள்ளியில் ஏற்பட்ட விபத்தைப்பற்றி. எனவே பேரவையில் அளிக்கப்பட்ட தகவல் இங்கும் ஒரே நேரத்தில் தரப்படாத காரணத்தால், ஆசிரியர்களாலேயே வாக்களிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த அவைக்கு வந்திருக்கிற நாங்கள் ஆசிரியர்களின் பிரச்சினைகளைக் கவனிக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகும் நிலை ஏற்படுகிறது. இந்த அவை மதிக்கத்தக்கது அல்லவா? சட்டப் பேரவை மட்டும் தான் மதிக்கத்தக்க அவையா? மேலவை என்பது அலட்சியப்படுத்தத் தக்கதா? அமைச்சர் அவர்கள் வேண்டுமென்றே தராமல் இருக்கிறாரா அல்லது இந்தக் காலதாமதத்திற்கு என்ன காரணம் என்று எனக்குப் புரியவில்லை. எனவேதான் இந்த வேண்டுகோளை இந்த நேரத்திலே விடுத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உதவித் தொகை அளிப்பதிலேகூட பாரபட்சம் காட்டப்பட்டிருக்கிறது. எண்ணூர் படகு விபத்தில் இறந்த குழந்தைகளைப் பொறுத்தவரையில், அவர்களுடைய பெற்றோர்களுக்கு ரூபாய் 5,000 தரப்பட்டிருக்கிறது. அதுவுமில்லாமல் அகில இந்திய அண்ணா தி.மு.க. நிதியிலிருந்தும் உதவித் தொகை அளித்திருக்கிறார்கள். ஆனால் கரூருக்குப் பக்கத்திலே உள்ள வெங்கமேட்டில் இறந்த மூன்று குழந்தைகளின் குடும்பத்திற்கு ரூபாய் 2,000 தான் தந்திருக்கிறார்கள். எனவே எண்ணூரில் வழங்கப்பட்டதைப்போல் அந்தத் தொகையை வெங்கமேட்டில் உயிரிழந்த குழந்தைகளின் குடும்பத்தினருக்கும் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே

நேரத்தில் காயப்பட்டவர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த விபத்திற்கு யாரும் காரணமில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே புயல் அடிக்கவில்லை, சூராவளி வீசவில்லை, மழை பொழியவில்லை என்றெல்லாம் சொல்லப்படுகிறது. இந்தக் கட்டிடம் இடிந்ததற்கு என்னதான் காரணம்? நடுவில் ஒரு தூண்கூட இல்லாமல் அந்தக் கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. அது கட்டப்பட்டு மூன்று மாதம்தான் ஆகிறது. அதற்குப் பொறுப்பான எஞ்சினீயர் இருக்கிறார், ஆணையர் இருக்கிறார். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் எண்ணூர் படகு விபத்துபற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றை 28—8—1978 அன்று கொடுத்தேன். அது எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆனால் அதே தீர்மானத்திற்கு 7—9—1978 அன்று பேரவையில் விளக்கமளிக்கப்பட்டிருக்கிறது. இதிலேகூட மேலவை புறக்கணிக்கப்பட வேண்டுமா என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கிடைக்கும் செய்தியை ஒரே நேரத்தில் இரண்டு அவைகளிலும் சொல்லிவிட்டால் நன்றாக இருக்கும். அப்போதுதான் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தவர்கள் யாரென்றும், வாக்களித்தவர்களுக்கு அவர்கள் பயன்பட்டிருக்கிறார்களா இல்லையா என்பதைப்பற்றி அறியவும் ஒரு வாய்ப்பாக இருக்கும். ஆனால் அமைச்சர் அவர்கள் அதைக்கூடச் செய்யவில்லையே என்பதை இங்கே வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தற்போது கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம்கூட கொடுத்திருக்கிறேன். அதனடிப்படையில் கல்வி அமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையை அளித்தார்கள். அந்த அறிக்கையின் இறுதியில் 'அரசு கல்லூரி ஆசிரியர்களின் கோரிக்கைகளை அனுதாபத்துடன் பரிசீலித்து வருவதால் ஆசிரியர்கள் தங்கள் கிளர்ச்சிகளைக் கைவிடுவார்கள் என அரசு நம்புகிறது' என்று குறிப்பிட்டார்கள். நாங்கள்கூட அப்படித்தான் விரும்பினோம். ஆனாலும் போராடுகிற ஆசிரியர்களை அழைத்து வைத்து, அவர்கள் ஏன் போராட்டத்தைக் கைவிட மறுக்கிறார்கள் என்பதை பேசித் தீர்த்திருக்க வேண்டும். முதல்நாள் 25 பேர்கள் போராட்டத்தில் கலந்துகொண்டு கைதானார்கள். அடுத்த நாளும் கைதானார்கள். இன்றையதினம் அது மாவட்டங்களிலும் பரவியிருக்கிறது. மாணவர்கள் இதிலே கலந்துகொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். இதன் காரணமாக அந்தந்தப் பகுதிகளில் உள்ள கல்லூரிகள் மூடப்படுகின்றன, எனவே





அவர்களை அழைத்து வைத்து ஏன் போராட்டத்தை நிறுத்த மறுக்கிறீர்கள் என்று கல்வி அமைச்சர் அவர்கள் அவர்களோடு பேசித் தீர்க்க முயற்சி எடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். அந்த அறிக்கையை அவர்கள் ஏற்றுக்கொள்ளாததற்குக் காரணம் அதில் சொல்லப்பட்டிருப்பதெல்லாம் 'எதிர்பார்க்கப்படுகிறது' என்பதுதான். திட்டவட்டமாக அந்த அறிக்கையிலே ஒன்றும் சொல்லப்படவில்லை. எந்தக் கோரிக்கையும் நிறைவேற்றப்படும் என்று திட்டவட்டமாகச் சொல்லப்படவில்லை.

'ஆசிரியர்களுக்கான ஊதிய விகிதங்கள் 31—12—1978 தேதிக்குள் நிர்ணயிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது' என்று சொல்லியிருக்கிறார்கள். பிராந்திய அலுவலகங்கள் திறக்க வேண்டும் என்ற கருத்து 'பரிசீலிக்கப்படுகிறது' என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். ஒரு வகுப்புக்கு 20 மாணவர்கள் இருக்க வேண்டும், 31—3—1977-ல் பணியிலிருந்த ஆசிரியர்களைப் பாதிக்காது என்றெல்லாம் ஹேஷ்யம் சொல்லுகிறார்களே தவிர, நிச்சயமாக ஒன்றும் சொல்லப்படவில்லை. 'ஏற்பது கடினம்' என்று ஒரு கோரிக்கை புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. இயக்குநருடன் கலந்து பேசி ஆவன செய்யப்படும் என்று அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்களே தவிர, கோரிக்கையை ஏற்றுக்கொள்வதாக ஒரு இடத்திலும் சொல்லப்படவில்லை. இதன் காரணமாகத்தான் ஆசிரியர்கள் இன்னும் போராடிக்கொண்டிருக்கிறார்கள். எனவே ஆசிரியர்களின் கோரிக்கையை எந்த அளவுக்கு அரசு ஏற்க முடியுமோ அதைப் பரிசீலித்து அவர்களை அழைத்து வைத்துப் பேசி, ஒரு உடன்பாட்டுக்கு கல்வி அமைச்சர் அவர்கள் வந்து, கல்வி நிலையங்களை உடனடியாகத் திறப்பதற்கு உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குக்கூட தந்தி வந்திருக்கிறது. பயனீர் குமாரசாமி கல்லூரியில் 15 ஆண்டுகளாகப் பணியாற்றிய பேராசிரியர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அந்தக் கல்லூரி ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை. கல்லூரி மூடப்பட்டிருக்கிறது. இப்படித் தந்தி வந்திருக்கிறது. எனவேதான் மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன், ஆசிரியர்களை அழைத்துப் பேசி உடனடியாக ஒரு முடிவெடுக்க வேண்டும். அதேபோல மேலவைக்கு கல்வி அமைச்சர் அவர்கள் மதிப்புத் தந்து, இங்கே எங்கள் பிரச்சினைகளுக்கு பதிலளித்து நாங்கள் எப்படிப் பணியாற்றுகிறோம் என்பது வெளி உலகத்திற்குத் தெரிவதற்கு உதவியாக இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

(திரு. க. மீனாட்சிசுந்தரம்) [1978 செப்டம்பர் 9

இறுதியாக, ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஊதியக் குழுவின் முடிவுகள் பற்றித் தெளிவாக அறிவிக்கபபடவில்லை. ஊதியக் குழுவின் அறிக்கை எப்படி இருக்கும் என்று அவரவருடைய கற்பனை வளத்திற்கு ஏற்றவாறு வதந்திகள் பரப்பி விடப்படுகின்றன. இதனால் பல ஐயப்பாடுகள் உண்டாகின்றன. எனவே ஐயப்பாடுகளைக் களையும் வண்ணம் உடனடியாக தேதி நிர்ணயித்து ஊதியக் குழுவின் அறிக்கை மீதான முடிவுகளை அரசாங்கம் அறிவிக்க வேண்டும். அதே நேரத்தில் ஆசிரியர் சங்கப பிரதிநிதிகளை அழைத்து வைத்து, அறிவிப்பதற்கு முன்னாலே அழைத்துப் பேசி பிற்காலத்தில் போராட்டம் செய்ய வழி இல்லாத முறைகளில் அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-50)

ஒன்றே ஒன்று சொல்லி முடித்துக்கொள்கிறேன். நாங்கள் எல்லாம் ஆசிரியர்களின் பிரதிநிதிகள். ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். மேலவையில் உறுப்பினர்களாகப் பொறுப்பேற்றுக்கொண்டிருப்புவர்கள். சுயேச்சையாக வந்திருப்பவர்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. முத்துசாமி அவர்களும் சுயேச்சையாக நின்று தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருப்பவர் தான். நான் ஆசிரியர்களின் பிரதிநிதி என்ற முறையில், நமது கல்லூரிக் கல்வி இயக்குநர் திருமதி. ஸ்டெல்லா சௌந்தரராஜன் அவர்களிடம் பேசினேன். அவர், "நீங்கள் எல்லாம் அரசியல்வாதிகள்" என்று என்னிடத்திலே சொல்கிறார்கள். "நான் ஆசிரியர்களுடைய பிரதிநிதியாகத்தான், சுயேச்சையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுத்தான் வந்திருக்கிறேன் என்று சொன்னேன். நான் அரசியலிலே இல்லை. நீங்கள் இப்படியெல்லாம் எங்களைச் சொல்லக்கூடாது" என்று சொன்னேன். அதற்குப் பின் "அந்தப் பிரச்சினைக்குரிய ஆசிரியர் உங்களுக்கு எவ்வளவு செலவுக்குப் பணம் கொடுத்து அனுப்பினார்?" என்று அந்த அதிகாரி கேட்கிறார். ஒரு மேலவை உறுப்பினரை அவமதிக்கின்ற வகையிலே அவர்கள் பேசுகின்றார்கள்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் மிகவும் வேகமாகப் பேசிக்கொண்டே போகிறார்கள். அவர்கள் ஒரு அதிகாரியைச் சந்தித்ததாகவும், அந்த அதிகாரி சில வாசகங்களைச் சொன்னதாகவும் இங்கே சொல்கின்றார்கள். ஆனால் அந்த அதிகாரி அந்த வார்த்தைகளைச் சொன்னாரா சொல்லவில்லையா என்பதற்கு அந்த அதிகாரி இந்த மன்றத்திற்கு வந்து சொல்ல முடியாது. அவர் வந்து தான் என்ன சொன்னேன் என்று சொல்லி விளக்குகின்ற நிலைமைகள் அவருக்கு இல்லை. எனவே நமது அவையிலே அப்படிச் சொல்வதை அனுமதிப்பதற்கு நம்முடைய சட்ட மன்ற விதி முறைகளில் விதிகள் இருக்கின்றனவா என்று கேட்டுக்கொள்கிறேன்.



1978 செப்டம்பர் 9]

**திரு. எம். சங்கரலிங்கம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே இருக்கின்ற அங்கத்தினர்கள் பொறுப்பேற்றுக்கொண்டு, பொறுப்புணர்வோடு தான் பேசுவார்கள். அவர் ஒரு அதிகாரியைப்பற்றிச் சொல்கிறார்கள் என்று தான் கொள்ளவேண்டும். ஏனென்றால் ஒரு அதிகாரி இந்த மேலவையில் ஒரு அங்கத்தினராகச் செயல்படுகின்ற முறையையே ஒரு கேள்விக் குறியாக்க் கொண்டு பேசியிருக்கிறார்கள். அந்த அதிகாரி சொல்கின்ற வாசகங்களைப்பற்றிக் கேட்பதானால், அதன்படி உண்மையிலேயே அந்த அதிகாரி மீது ஒரு உரிமைப் பிரச்சினையைக்கூட இங்கு கொண்டு வரலாம் என்ற நிலைமைதான் இருக்கிறது என்று நினைக்கிறேன். இதற்குள்ள மரபு என்ன? முன்பு திரு. கோசல்ராம் அவர்கள் எம்.எல்.ஏ. ஆக இருந்தபோது, திரு. சுந்தரவடிவேலு அவர்கள்பற்றி 1½ மணி நேரம் பேசியிருக்கிறார்கள். ஆகவே விமர்சிக்கப்படக்கூடிய நிலை இருக்கக் கூடாது என்று நான் சொல்லவில்லை. அது உறுப்பினர் அவர்களைச் சம்பந்தப்பட்டதாக இருந்தால், அது அவைக் குறிப்பேட்டிலே இருப்பதுதான் முறை என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்):** திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் அதற்கு விளக்கம் தர வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல. இது சம்பந்தமாக ஒரு உரிமைப் பிரச்சினையைக்கூட எழுப்ப தட்டச்சு செய்து கொடுக்க இருந்தேன். அவர்களிடம் நான் ஒரு ஆசிரியர் பிரதிநிதியாகத்தான் சென்றேன். அந்த ஆசிரியர் அவர்கள் "நீங்கள் இந்தப் பிரச்சினையை அவர்களிடம் எடுத்துச் சென்றால், நான் பாதிக்கப்படுவேன்" என்றுகூட சொன்னார்கள். எனவே, அவ்வாசிரியருக்குப் பாதுகாப்பு அரசு தர வேண்டும்.

**மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்):** அங்கத்தினர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்வதாக இருந்தால், தொடர்ந்து பேசலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** அந்த மாதிரியான அதிகாரிகள் மீது, நாங்கள் அரசியல்வாதிகள் என்று சொல்பவர்கள் மீது, மேலவை உறுப்பினர்களை அவமதிக்கின்ற வகையிலே பேசுகின்றவர்கள் மீது, இந்த நிலைமைகளைத் தடுக்கின்ற அளவுக்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே போராட்டங்கள் எழுவதற்குக் காரணம் இந்தமாதிரியான அதிகாரிகளாகத்தான் இருக்க வேண்டும். போராட்டங்கள் நடத்தப்

(திரு. க. மீனாட்சிசுந்தரம்) [1978 செப்டம்பர்

படுகின்ற நோக்கிலே ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதிகளை அழைத்து வைத்துப் பேசுவதற்குப் பதிலாக, கீழ் பதவிகளில் உள்ளவர்களைக் காட்டி, அவர்களைப் போய்ப் பாருங்கள், இவர்களைப் போய் பாருங்கள் என்று கைகாட்டி விடுகிறார்கள். தலைமைப் பீடத்திலே இருக்கின்ற அதிகாரிகள் சங்கப் பிரதிநிதிகளை அழைத்து வைத்துப் பேசவில்லை. அதனால்தான் போராட்டங்கள் வருகின்றன. அதிகாரிகள் தகுந்த முறையில் நடந்துகொள்ள வேண்டும். பிரதிநிதிகளைக் கலந்து ஆலோசனை செய்ய வேண்டும். அது வேண்டிய சங்கமாக இருந்தாலும் சரி, வேண்டாத சங்கமாக இருந்தாலும் சரி, இந்த சங்கப் பிரதிநிதிகளை வைத்துப் பேச வேண்டும். அவர்களுக்கு வேண்டிய மதிப்பை அளிக்க வேண்டும். சட்ட மன்ற அங்கத்தினர்களும் எதையும் நீதிக்குப் புறம்பாகச் சொன்னால், செய்ய வேண்டாம். பிரதிநிதிகளை விரட்டுகின்ற அளவுக்கு அதிகாரிகள் இன்றைக்கு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதையெல்லாம் தடுத்தால்தான், அரசு மிகச் சிறந்த முறையிலே நடக்க முடியும். நாமும் நல்ல முறையில் வளர முடியும். அதற்கு ஏற்ற நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் துணை மதிப்பீட்டின்மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

* திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: தலைவர் அவர்களே, இந்த உபமான்ய கோரிக்கையிலே எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக மிக்க மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது இங்கே இரண்டு அமைச்சர்கள்தான் இருக்கிறார்கள். பொதுவாக நான் வரும்போது எண்ணியிருந்ததெல்லாம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்க வேண்டும் என்பதுதான். அதுதான் என்னுடைய கோரிக்கை. இப்போது சொல்வதெல்லாம் கட்சி உயர்வு தாழ்வு என்ற முறையிலே அல்ல. அந்த முறையிலே நான் பேச விரும்பவில்லை. உண்மையிலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிடக்கூடிய வார்த்தைகள் மக்களுக்கு ரொம்ப ஆதரவானதாக, நன்மை பயப்பதாகத்தான் இருக்கின்றன. அது எல்லாம் நடைமுறையிலே நடக்கிறதா என்றால், சுத்தமாக நடைபெறவில்லை.

திரு. வி. அர். பெரியண்ணன்: சுத்தமாக என்றால் என்ன பொருள்?

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: சுத்தமாக இல்லை. அதாவது ஒன்றும் செய்யவில்லை என்ற பொருளில் சொன்னேன். ஏன் அப்படிச் சொல்கிறேன் என்றால், இந்த அமைச்சர்களிடம், என் அனுபவத்தில் தெரிந்ததைச் சொல்லுகிறேன். இப்போது இருக்கின்ற அமைச்சர்கள் எந்தத் தவறுக்கும் ஆளா



1978 செப்டம்பர் 9] (திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்)

னார்கள் என்று நான் சொல்வதற்கில்லை. ஆனால் காரியம் ஒன்றும் நடக்கவில்லை என்பதுதான் என்னுடைய வருத்தம். எங்கே பார்த்தாலும், எந்த நிலையை எடுத்துக்கொண்டாலும், அங்கு லஞ்சம் இருக்கிறது. எங்கே பார்த்தாலும் லஞ்சம். இங்கேகூட பேச்சு வந்தது. அங்கத்தினர் ஒருவர் அதிகாரியைப்பற்றிப் பேசினது பிரச்சினையாகிவிட்டது. அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி வருத்தப்பட்டுக்கொண்டு பேசினார்கள். அது சகஜமாகிவிட்டது. உங்களை எல்லாம் நான் குறை சொல்லவில்லை. உங்களுடைய நிர்வாகத்திலே இப்படி எல்லாம் நடக்கிறதே என்று தான் கூறுகிறேன். உங்கள் நிர்வாகத்தில் அதிகாரிகள் இப்படி நடக்கிறார்கள். எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நல்ல முறையில் நடந்துகொள்கிறார்கள். அவர் ஒருவர் மட்டும் அப்படி நடந்தால், என்ன பயன்? லஞ்சம் வாங்குபவர்களைப் பிடித்துக் கொடுங்கள் என்று சொல்கிறார்கள். எத்தனையோ நடக்கின்றன. பிடித்துக் கொடுக்கிறார்கள். அவர்களைப் பிடித்துக் கொடுப்பதற்கு அதிகாரிகளிடம் செல்ல வேண்டும். அவர்களைப் பிடித்துக் கொடுப்பது என்று வரும்போது, மைல் கணக்கில் செல்ல வேண்டியதாகி விடுகிறது. அவ்வளவு செய்தும் கேஸ் பெயிலும் ஆகிவிடும். இந்த மாதிரியான இடைஞ்சல்கள் எல்லாம் இருக்கின்றன. நான் உண்மையில் நடப்பதைத்தான் சொல்கின்றேன். நான் தவறாகச் சொல்கிறேன் என்றால், நீங்கள் அதைப்பற்றி ஆராய்ந்தறிந்து கொள்ள வேண்டும். தாலுகா ஆபீஸ்களில், பஞ்சாயத்து யூனியன் ஆபீஸ்களில் முறை தப்பியெல்லாம் நடக்கிறார்கள். நிர்வாகத்திற்கு கட்டடங்கள் கட்டவேண்டியவைகளைக்கூட கட்டியிருக்கிறார்களா என்பதுகூட சந்தேகத்திற்குரியதாக இருக்கின்றன. அந்த மாதிரி எல்லாம் தவறாக நடந்துகொண்டிருக்கிறார்கள். உங்கள் ஆட்சிக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்று நான் பேசவில்லை. உண்மையில் நடந்ததைத் தான் சொல்கிறேன்.

அடுத்து, மதுவிலக்கைப்பற்றி எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இப்போது மதுவிலக்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இந்த மதுவிலக்கைக் கொண்டு வந்து விட்டு ஏன் இவ்வளவு கெட்ட பெயரை வாங்கிக்கொள்ள வேண்டும்? அதிகாரிகளில் உத்தமமான அதிகாரிகளும் இருக்கிறார்கள். சுத்தமான அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களைக் குடிகாரர்கள் நேர்மையாக நடக்க விடுவதில்லை. உண்மையில் தேவகோட்டை முனிசிபாலிட்டி நகரம், அங்கே போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர், எட் கான்ஸ்டேபிள் இருக்கிறார்கள். நமது சர்க்கார் எவ்வளவு அக்கறையோடு எடுத்துக் கொண்டு இதைச் செய்கிறார்கள்! ஆனால் இப்படி நடக்கிறது. அங்கே நடந்ததைச் சொன்னால், நம் மீது சந்தேகப்படுகிறார்கள். ஒரு நிகழ்ச்சியைத் தெரிவிக்கிறேன். குடித்தவர் ஒருவர் முன்னாலே போய்க்கொண்டிருந்தார். போலீஸ்காரர் ஒருவர் அவர் பின் போய்க்கொண்டிருந்தார். உண்மையில் நடந்தது. அதை நான் சொல்

(திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்) [1978 செப்டம்பர் 9

கிறேன். கற்பனை பண்ணி நான் சொல்வதாகக் கருத வேண்டாம். ஹெட்

(பிற்பகல் 6-00)

கான்ஸ்டேபிள் சொல்லிக் காண்பிக்கிறார். நான் முன்னாலே போனேன், அவர் பின்னாலே வந்தார். அவர் குடிபோதையில் இருக்கிறார், இரண்டு பட்டனைக் கழட்டினார் . . . .

(ஓர் உறுப்பினர் : அதையெல்லாம் சொல்ல வேண்டாம்). இந்த அளவிலே நாங்கள் என்ன நிர்வாகம் பண்ண முடியும்; நாங்கள் ஒருகால் பிடித்து அடைத்திருந்தால், இங்கே படிக்கும் பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு வேறு ஊருக்குப் போகும் நிலைமை ஏற்படுமென்று சொன்னார். அப்படி ஆட்கள் இருக்கிறார்கள். எங்கே பார்த்தாலும் மது இருக்கிறது. என்னுடைய ஏரியாவன ஆர். எஸ். மங்கலம், திருப்பாலைக்குடி போன்ற இடங்களிலும் இருக்கிறது. அங்கே இரண்டு போலீஸ் ஸ்டேஷன்கள் நல்லா இருந்தால் போதுமா? தொண்டி, திருவாடானை, தேவக்கோட்டை பகுதிகளில் மிக மோசமான அளவுக்கு நடந்துகொண்டிருக்கிறது. போலீஸ்காரர்களே போய் பலவந்தப்படுத்தி சாராயம் காய்ச்சச் சொல்கிறார்கள். அதற்கு மாமூல் வைத்திருக்கிறார்கள். இந்த மாதிரி இருந்தால், அரசு எடுக்கின்ற முயற்சிகள் தோல்விதான் அடையும். கிராமங்களில் இருக்கிறவர்கள், என்னமோ சட்ட சபையில் பேசுகிறார்கள், என்னத்தைப் பேசுவது, இங்கேயெல்லாம் நன்றாகச் சாராய வியாபாரம் நடக்கிறது என்று பேசுகிறார்கள். ரெவின்யூ இலாக்கா, பஞ்சாயத்து யூனியன் எல்லா இடங்களிலும் இப்படித்தான் இருக்கிறது.

சும்மா இருக்காமல் ஏதாவது ஒன்றைப் பிரகடனப்படுத்துகிறார்கள். ஊருக்கு ஊர் கடை வைக்கிறோமென்று சொல்கிறார்கள். நியாய விலைக் கடை என்று சொல்கிறார்கள். அது உண்மையிலேயே நல்ல திட்டம், அருமையான திட்டம். இன்று அந்தக் கடைகளில் ஒன்றுமில்லை. வெறும் கடையில் உட்கார்ந்துகொண்டு, 150 ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு சாமான் கிடையாது அங்கே. சும்மா இருக்கிற சங்கை ஊதிக் கெடுத்தானாம் என்பது மாதிரி இருக்கிறது. நாங்கள் வைக்கப் போகிறோமென்று சொன்னார்கள். எதைக் கடையில் வைப்பது? இந்த மாதிரி நிர்வாகக் கோளாறு எங்கே பார்த்தாலும் இருக்கிறது. எந்த இடத்தை எடுத்துக்கொண்டாலும், நிர்வாகக் கோளாறு இருக்கிறது. இதையெல்லாம் நீக்க என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். இதற்காகத்தான் முதலமைச்சரவர்கள் அவையில் இருக்க வேண்டுமென்று விரும்பினேன். மது விலக்கிலே வெற்றி அடைந்துவிட்டோம், இன்னும் இரண்டு மாதங்களிலே, மூன்று மாதங்களிலே சரிப்படுத்தி விடுவோமென்பது நடக்காத காரியம்.



1978 செப்டம்பர் 9] (திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்)

கடந்த மாதம் 28 ஆம் தேதி டிஸ்ட்ரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சில் மீட்டிங்கிற்குச் சென்றிருந்தோம். அன்று நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் தேவகோட்டைக்கு வந்தார்களாம். (மாற்றுத் தலைவர் மணியடித்தார்). சீக்கிரம் முடித்து விடுகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) : பல பேர்கள் பேச வேண்டும். இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்து விடுங்கள்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : நல் வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் அங்கே வந்தவுடன், ஆஸ்பத்திரியைப் போய் பார்த்து, அங்கே நடந்த தப்புகளைக் கண்டுபிடித்து, நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். திடீரென்று போனதால்தான் தெரிகிறது. அதற்கு முன்னால் 150 காகிதங்கள் எழுதியிருக்கிறோம். ஏதோ அவர் மனதில் பட்டது. வந்தார். அவர் எப்படிப் போனாலும், நல்ல காரியம் செய்திருக்கிறார்கள். நேற்று பத்திரிகையில் பார்த்தேன். உறுப்பினர் திருமதி தமிழரசி அவர்கள் பேசியது நூற்றுக்கு நூறு உண்மை. ஆறு பிள்ளைகளோடு அவன் தெருவிலே நிற்கிறான். அந்த ஆறு பிள்ளைகளையும் எப்படிப் பெத்தானோ தெரியவில்லை. எல்லாம் வரிசையாக இருக்கின்றன. என் வீட்டிற்கு அழைத்து வந்தான். ஒரு கடையிலே வைத்து, அழைத்து வந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே என்று சொன்னேன். எனவே தக்க நடவடிக்கை எடுத்து, அவன் பெண்டாட்டியைக் கொன்ற டாக்டரிடமிருந்து நஷ்ட ஈடு பெற்றுக் கொடுக்கும் நிலைமையை ஏற்படுத்த வேண்டாமா?

தேவகோட்டையிலே புயல் எப்போது வந்தது? வீடு இடிந்து விழுந்து, ஒருவனின் பெண்டாட்டி, பிள்ளைகள் செத்து விட்டார்கள். அவன் கை வண்டிக்காரன். அவனுக்குக் கால் ஒடிந்துவிட்டது. எல்லா அதிகாரிகளையும் போய்ப் பார்த்து, பணம் கொடுக்க சிபாரிசு செய்கிறோமென்று சொன்னார்கள். இங்கே ஒரு மனு எழுதிக்கொடுத்தேன் நிதி அமைச்சரிடம். ஊருக்குப் போவதற்குள் 2,000 ரூபாய் கிடைக்குமென்று சொன்னார்கள். பத்திரிகைக்காரர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அதைப் போட்டார்கள் பத்திரிகையில். கடைசியாக என்ன செய்தி வந்தது தெரியுமா? அங்கே ஒன்றும் நடக்கவில்லை. டி.டி.சி. கூட்டத்தில் சொன்னேன். கலெக்டர் அவர்கள், நியாயமாகக் கொடுக்க வேண்டும், சிக்கல் எங்கேயிருக்கிறதென்பது தெரியவில்லை என்று சொன்னார்கள். எப்படியும் கொடுக்க ஏற்பாடு செய்கிறோமென்று சொன்னார்கள். சப்-கலெக்டர் அம்மையாரைக் கூப்பிட்டுக் கேட்டார்கள், 'என்ன சங்கதி என்று?' குடும்பத் தலைவன் இறந்தால்தான் கொடுக்க வேண்டுமென்றும், மற்றவர்கள் இறந்தால் இல்லை என்றும் ஜி.ஓ. இருக்கிற

(திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்) [1978 செப்டம்பர் 9

தென்று சொன்னார்கள். அங்கே குடும்பத் தலைவன் இறந்திருந்தால், குடும்பத்திலே ஆளேயில்லை கேட்பதற்கு. இந்த மாதிரி நிலைமைகளை உண்டு பண்ணினால், அரசு மேலே எப்ப நம்பிக்கை ஏற்படும்? இப்போது நம்பிக்கையோடு இருக்கிறோம். நம்பிக்கையை அறுத்துக்கொண்டு போங்கள் என்று சொல்லுவதா? நாங்கள் என்ன செய்ய முடியும்?

அடுத்து, விழுப்புரம் சங்கதி. கடந்த 15 வருடங்களாக இப்படி இருக்கிறது. அதற்கு முந்தி எப்படியோ தெரியவில்லை. சரியான கண்காணிப்பு பண்ணியிருந்தால் இப்படி வருமா? மூன்று நாட்கள் நடந்திருக்கிறது. அரசு நிர்வாகம் என்ன செய்தது? வேண்டுமென்றே குறைத்துப் பேசவில்லை. அரசு நிர்வாகத்தைக் குறைத்துப் பேச வேண்டுமென்று பேசவில்லை. உண்மையிலே சரியாக நடக்கவில்லை என்பதை அரசினர் ஒப்புக்கொள்கிறார்களா என்பதும் புரியவில்லை. சரியான முறையில் நிர்வாகம் நடந்திருந்தால், இத்தனை கலகங்களும், இத்தனை தீ வைப்புகளும் நடந்திருக்குமா? இறந்துவிட்டவர்களுக்கு 2,000 ரூபாய், 5,000 ரூபாய் என்று கொடுக்கிறோம். அதற்காகவா அரசு இருக்கிறது. ஆட்களை எண்ணி, அதற்கு நஷ்ட ஈடு கொடுத்துக்கொண்டே இருப்பதா? இந்த மாதிரி சம்பவங்கள் நிறைய நடக்கின்றன. அரசு மேலே தவறு இருப்பதாகத் தெரியவில்லை. லஞ்சம் வாங்குகிறவர்களைப் பிடித்து ஜெயிலில் அடைப்பதில்லை. நீங்கள் பிடித்துக் கொண்டு வாருங்களென்று சொல்கிறார்கள். நாங்களும் பிடித்துக் கொடுக்கிறோம். ஒன்று சொல்கிறேன். 100, 100 ரூபாய் நோட்டாக 10,0000 ரூபாயைக் கொடுத்து, ஜீப், பெட்ரோலையும் கொடுங்கள். 10 நாட்களுக்குள் 100 பேர்களைக் கொண்டு வந்து விட்டுவிடுகிறேன். என்ன செய்வது? பெரிய அதிகாரிகள் வாங்குகிறார்களென்றால், அவர்களிடம் போகப் பயம். நான் தவறு செய்தால், பின்னாலே இருக்கிறவர்கள் என்னைப் பிடித்துக் கொடுக்கலாம். இதையெல்லாம் சீக்கிரத்தில் களைய வேண்டும். சீக்கிரத்திலே அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) மணி அடித்தார்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: முடித்துவிடுகிறேன், ஐயா. சட்டசபையிலே இருப்பவர்களுக்கு 200 ரூபாய் மேற்கொண்டு தாருங்கள் என்று யார் கேட்டார்கள்? அதைப் போலத்தான் இரயில்வே கூப்பனும். இங்கே சொல்லுகிறார்கள். ஆனால் அது சரியாக நடப்பதில்லை. அந்த 200 ரூபாயை நம்பி சிலர் கைமாற்று கூட வாங்கியிருப்பார்கள். ஆனால் இன்னும் தரவில்லை. இது நியாயமா? இதை யார் கேட்டார்கள்? சும்மா இருக்காமல் தருகிறோம் என்று சொல்லிவிட்டு, தராமலிருந்தால் எப்படி?



1978 செப்டம்பர் 9] (திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்)

அதைப் போலவே ஊதியக் குழு அறிக்கையும். அதற்காக சிலர் உண்ணாவிரதம் எல்லாம் இருக்கிறார்கள். சிலர் தப்பு தண்டா செய்கிறார்கள். அவர்களுக்கும் தீபாவளிக்குள்ளாவது அந்த அறிக்கையை வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த மாதிரி நல்ல காரியங்களையெல்லாம் சீக்கிரமாகச் செய்து முடிக்க வேண்டும்.

இந்தக் கூப்பன்களையெல்லாம் என்னிடம் கொடுத்துவிட்டுப் பிறகு வாங்கிக் கொண்டார்கள். அமைச்சர்களுக்கு உள்ள சௌகரியத்தையெல்லாம் இரண்டு நாளைக்கு எடுத்துக்கொண்டால் எவ்வளவு கஷ்டம் ஏற்படும்? அமைச்சர்களிடம் கார்கள் இருக்கின்றன. டிரைவர்கள் இருக்கிறார்கள். அவர்களைக் கூப்பிட்டு இரண்டு நாளைக்கு வேலை செய்யாமல் இருங்கள் என்று சொன்னால் அமைச்சர்களுக்கு என்ன சங்கடங்கள் வரும்? (சிரிப்பு) அதுமாதிரிதான் எங்களுக்கும் சங்கடங்கள் வரும்.

(பிற்பகல் 6-10)

"ஊதியக் குழுவை நாங்கள் என்ன காரணத்தாலோ போட்டுவிட்டோம். இப்போது நிதி வசதி கஷ்டமாக இருக்கிறது. ஆகவே முடியாது" என்றாவது சொல்லிவிடுங்கள். வருகிறது, வருகிறது என்று சொல்லிக் கொண்டே இருந்தால் எப்படி? கூப்பன்களைக் கேட்டால், இந்தக் கூட்டம் முடிவதற்குள் கொடுத்துவிடுவார்கள் என்று சொல்லுகிறார்கள்.

திரு. ஏ. ஆர். தாமோதரன்: தலைவர் அவர்களே, லெஜிஸ்லேட்டார் சேலரி பற்றிப் பேசுகிறாரா? 'பே கமிஷன்' பற்றிப் பேசுகிறாரா?

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: என்னுடைய நோக்கம் எல்லாம் நிர்வாகம் நல்லபடியாக நடக்க வேண்டும். எங்களுடைய ஒத்துழைப்பு இந்த அரசாங்கத்திற்கு உண்டு. எந்த அதிகாரிகள் தப்புப் பண்ணினாலும், அது உண்மையா, தவறா என்பதை உடனடியாகக் கண்டறிய வேண்டும். ஒரு ஜில்லாவில் எட்டு, பத்து தாலுக்காக்கள்தான் இருக்கின்றன. ஆகவே இதைக் கண்டுபிடிப்பதில் சிரமம் ஒன்றுமில்லை. நல்ல காரியங்கள் செய்ய வேண்டும். அதுவும் சீக்கிரம் செய்ய வேண்டும். 'பே கமிஷன்' ரிப்போர்ட்டை தீபாவளிக்குள்ளாவது அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்): இனிமேல் பேச அழைக்கப்படுபவர்கள், தயவு செய்து சுருக்கமாகப் பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாற்றுத் தலைவர் அவர்களே, துணை மதிப்பீடுகள் மீதான விவாதத்தில் பங்குகொள்வதற்கு வாய்ப்பு கிடைத்ததற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். அதிலே இருநூறு ரூபாய்க்கும் குறைவாக ஊதியம் பெறுகிற அரசு ஊழியர்களின் பிள்ளைகளுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்குவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்காக 40 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருப்பதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். இத்தகைய இலவசப் பாடப் புத்தகங்கள், கிட்டத்தட்ட நான்கு மாதங்கள், ஆறு மாதங்களுக்குப் பிறகுதான் மாணவர்களுடைய கையில் வந்து சேர்கின்றன. பின் தங்கிய வகுப்பு மாணவர்களுக்கும், அரிசன வகுப்பு மாணவர்களுக்கும் இவ்வாறு புத்தகங்கள் வழங்கும்போது ஐந்து மாதங்கள், ஆறு மாதங்கள் ஆகிவிடுகின்றன. அவற்றின் பயனை மாணவர்கள் பெற முடியவில்லை. இத்தகைய நல்ல திட்டத்தைச் செயல்படுத்தும்போது, பள்ளிகள் துவங்கும் ஜூன் மாதத்திலேயே மாணவர்களுக்குப் புத்தகங்கள் கிடைக்கும்படி விரைந்து நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தத் துணை மதிப்பீட்டில் சிதம்பரம் வட்டத்தில், கிள்ளையிலே உப்பு நீர் மீன் பண்ணையை ஏற்படுத்த 13 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். கிள்ளைக்குப் பக்கத்திலே இருக்கிற பிச்சாவரம் என்ற காட்டைப்பற்றி இந்துப் பத்திரிக்கையிலேகூட "It is a Paradise" என்று எழுதியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நல்ல இடத்தை ஒரு சிறந்த உல்லாசப் பயணத் தலமாக மாற்ற பல முறை வாக்குறுதிகள் தரப்பட்டிருந்தாலும், நடைமுறையில் செயல்படுத்த இந்தத் துணை மதிப்பீட்டில் நிதி ஒதுக்கப்படவில்லை. இதை உல்லாசப் பயணத் தலமாக ஆக்கினால், அதனால் அரசுக்கும் வருமானம் கிடைக்கும், அங்குள்ளவர்களுக்கும் வியாபாரத்தின் மூலமாகவும் வேறு சில தொழில்களின் மூலமாகவும் வருமானம் கிடைக்கும். ஆகவே பிச்சாவரத்தை உல்லாசப் பயணத் தலமாக மாற்ற முயற்சிகளை உடனடியாக விரைந்து எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தென்னாற்காடு மாவட்டம் வீராணம் ஏரி மாநிலத்திலேயே இரண்டாவது நீளமான ஏரியாகக் கருதப்படுகிறது. வீராணம் ஏரியினுடைய இரு கரைகளிலும் பூங்காக்கள் அமைத்து, உல்லாசப் படகுகளை விடக்கூடிய அளவுக்கு மாற்றியமைக்க நிதி ஒதுக்கீடுகளைச் செய்தால், அங்குள்ளவர்களும் பொருளாதார வளர்ச்சியைப் பெறுவார்கள், அதே சமயத்தில் சுற்றுலாத் தொழில் வளர்ச்சி அடைவதற்கும், அரசினுடைய நிதி உயர்வதற்கும் நல்ல வாய்ப்பை அளிக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதற்கான குறிப்புகள் இந்தத் துணை மதிப்பீட்டில் இல்லாதது குறித்து வருத்தப்படுகிறேன்.





அடுத்து, முக்கியமான ஒரு பிரச்சினையைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். விடுதிகளில் தங்கியுள்ள அரிசன, பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு உணவுச் செலவிற்காக மாதம் ஒன்றுக்கு 40 ரூபாயாக இருந்தது 45 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதற்காக ரூபாய் 21,56 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். ஆனால் ஒரு வேதனைப்படத்தக்க செய்தியை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த ஆண்டு விடுமுறைச் சமயத்திலே ஊட்டியிலே அரிசன நல அதிகாரிகள் மாநாட்டைக் கூட்டி அங்கே ஒரு அபூர்வமான முடிவை எடுத்தார்கள். இந்த விடுதிகளிலே இருக்கிற டியூட்டர்-கம்-வார்டன்களை (Tutor-cum-Warden) மாற்றிவிட்டு அதற்குப் பதிலாக அரிசன, பின்தங்கியோர் துறைகள் நடத்தும் உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றிய ஆசிரியர்களைப் போடுவது என்று முடிவை எடுத்தார்கள். அதைப்பற்றிக் கேட்டபோது, "டியூட்டர்-கம்-வார்டன்கள் மீது பொய்க் கணக்குகள் எழுதிய ஒழுங்கீனங்கள், குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. ஆகவே மாற்றுவதாக ஊட்டி மாநாட்டிலே முடிவை எடுத்திருக்கிறார்கள்" என்று சொன்னார்கள். அவர்கள் மீது குற்றச்சாட்டு என்றால், உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, பழுத்த அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களை மாற்றுவதன் மூலமாக அவர்களும் பொய்க் கணக்கை எழுத பயிற்சி அளிக்கப் போகிறீர்களா என்று அதிகாரிகளைக் கேட்டோம். திறமையான ஆசிரியர்கள் இப்போது மாற்றப்பட்டு, டியூட்டர்-கம்-வார்டன்களாகப் போடப்பட்டிருக்கிறார்கள். பொய்க் கணக்கு எழுதப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏன் இந்த வேடிக்கையான முடிவு? இது நல்ல முடிவல்ல. இது உண்மையிலேயே குற்றங்களைப் போக்குவதற்கான நல்ல முடிவு அல்ல என்பதை மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இப்படிப்பட்ட முடிவுகளை இனி எடுக்க வேண்டாம் என்று அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதை மாற்றும்படியும் கேட்டுக்கொள்ளுகிறேன். தவறு செய்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடிய முறைகளைக் கையாளுங்கள். புதிதாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் சொன்னார்கள், அதைக் கேட்க உண்மையிலேயே வேதனையாக இருக்கிறது. "நேர்மையான உள்ளங்களைப் பாழ் படுத்துகிற வகையில் தவறுகளைச் செய்வதற்குத் தூண்டும்படியான சூழ்நிலையை எங்களுக்கு மேலே உள்ள அதிகாரிகள் ஆக்கிவிட்டிருக்கிறார்கள்" என்று சொன்னார்கள். அவர்களுக்கும் இப்போது இலஞ்சம் வாங்க, தவறு செய்ய பயிற்சி கொடுக்கப்படுகிறது. இது சரியான கொள்கையல்ல என்பதை மிகவும் பணிவன்போடு இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

(திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்) [1978 செப்டம்பர் 9

சேலத்திலே பொருட்காட்சிக்காக நான்கு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதற்காக இந்த அரசைப் பாராட்டுகிறேன். இதன் மூலமாக மக்களுக்கும் கல்விப் பயன் கிடைக்கிறது, அரசுக்கும் வருவாய் பெருகுகிறது. இவ்வாறு ஒவ்வொரு மாவட்டத்திலும் பொருட்காட்சிகளை அமைத்து மக்களுக்குக் கல்விப் பயனை அளிக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு குறிப்பை இந்தத் துணை மதிப்பீட்டில் எதிர்பார்த்தேன். ஆனால் அது இல்லாதது கண்டு ஏமாற்றம் அடைகிறேன். ஆகவே எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும், இப்படிப்பட்ட வாய்ப்புகளை ஏற்படுத்தினால், மக்களுக்கும் நல்லது, அரசுக்கும் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 6-20)

அடுத்தபடியாக, மதிப்பிற்குரிய பெரும் தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாள் விழாவின்போது, இரண்டு வாரங்களுக்கு 10 சதவிகிதம் கதர், கைத்தறி போன்ற துணிகளுக்கு ரிபேட் கொடுக்கப்படும் என்ற ஒரு செய்தி குறிப்பிடப்பட்டிருக்கிறது. 5½ லட்சம் ரூபாய் இந்த வகைக்கென்று கூடுதலாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். பெரும் தலைவர் காமராஜர் அவர்களுடைய சேவையை, பணியை, தியாகத்தை மதிக்கும் வகையில் 25 சதவிகிதம் சிறப்புத் தள்ளுபடியை அவர் பிறந்த வாரத்திலே அவருடைய தியாகத்திற்கும், சேவைக்கும் மதிப்பளிக்கும் வகையில் கட்டாயம் அளிக்க வேண்டுமென்று பணிவன்புடன் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இரண்டு வார காலத்திற்கு கதர் மற்றும் கைத்தறித் துணிகளுக்கு 25 சதவிகிதம் தள்ளுபடி என்பது அவர் செய்த தியாகத்தை எண்ணிப் பார்த்தால் மிக மிகச் சாதாரண விஷயம். அதைக் கட்டாயம் கொடுக்க வேண்டும். அவருடைய நினைவாக மக்கள், ஏழை மக்கள் துணி வாங்குவார்கள். அவருடைய நினைவுக்குச் சிறந்த மதிப்பளிக்கும் வகையில் இதைச் செய்ய வேண்டும்.

(மாற்றுத் தலைவர் திரு. ஈ. எல். வெங்கடேசன் மணி அடித்தார்.)

அடுத்தபடியாக, ஊதியக் குழு தன்னுடைய முடிவை அரசுக்குச் சமர்ப்பித்து விட்டது. அறிக்கை வெளியிடப்படுவதில் தான் காலதாமதம் ஆகிறது. இது குறித்து உண்மையிலேயே வருந்துகிறேன். "டிலே ஈஸ் டேஞ்சரஸ்" (Delay is dangerous) என்று சொல்லுவார்கள். இந்தக் காரியத்தைப் பொறுத்தவரை, அரசு ஊழியர்களுக்கு தீபாவளிக்கு முன்பாக ஊதியக் குழுவின் பலன் கிடைக்கக் கூடிய வகையில் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அடுத்தபடியாக, ஒரு எச்சரிக்கையை அரசின் கவனத்திற்குக்



1978 செப்டம்பர் 9] (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்)

கொண்டு வருகிறேன். ஊதியக் குழுவின் அறிக்கையை அறிவிக்கும்போது, அது அமுலாக்கும்பொழுது விலைவாசி உயரும். ஊதிய உயர்வின் பலனை ஊழியர்கள் பெறுமல் மறுபடியும் வருமானப் பிரச்சினை, ஊதியப் பிரச்சினை வருகிறது. ஒவ்வொரு முறையும் இப்படி நடைபெற்றிருக்கிறது. இந்த முறை அரசு முன்எச்சரிக்கையாக ஊதியக் குழுவின் முடிவை அறிவிப்பதற்கு முன்பாக விலைவாசிகளை முன்கூட்டியே கட்டுப்படுத்துவதற்கான ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்க வேண்டும். ஊதிய குழுவின் முடிவை அறிவிப்பதற்கு முன்பாக அதனை முனைந்து செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இறுதியாக ஒன்றை மட்டும் தெரிவித்து முடித்து விடுகிறேன். ஊராட்சி ஒன்றிய மாணவர்களுக்காக மேற்படிப்பு படிக்க தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதுபோல, மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு அந்தச் சலுகை வழங்கப்படவில்லை. துணை மதிப்பீட்டறிக்கையில் "இடைநிலைப் பள்ளி" என்று தான் இருக்கிறது. "இடை நிலைப் பள்ளி' என்பது வேறு, "மேல்நிலைப் பள்ளி" என்பது வேறு. இப்படி இருப்பதனால், மேல்நிலைப் பள்ளியில் இருப்பவர்களுக்கு ஒருவேளை அந்தப் பலன் கிடைக்காமல் போய்விடும் என்ற காரணத்தினால், இச்சலுகை மேல்நிலைப் பள்ளிக்கும் பொருந்தும் என்ற வகையில் ஒரு திருத்தத்தை அதில் ஏற்படுத்த வேண்டும். அதற்காக நடவடிக்கையை உடனே எடுக்க வேண்டும் என்று கூறி இந்த விவாதத்திலே பங்கு கொள்ள வாய்ப்புக் கொடுத்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. செ. முத்துசாமி : மாற்றுத் தலைவரவர்களே, துணை மதிப்பீட்டின் மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆசிரியர் பெருமக்களுடைய குழந்தைகளுக்குக் கல்விச் சலுகை வழங்குவதற்காக, ஸ்காலர்ஷிப் வழங்குவதற்காக ஊதிய வரம்பை நிர்ணயிக்கும்போது, பஞ்சப்படிகளைக் கூட்டக் கூடாது என்று தெளிவாக உத்தரவிட்டிருக்கிறார்கள். அப்படித் தெளிவான உத்தரவு இருந்தும் கூட, பிற்பட்ட இயக்குநர் அலுவலகத்தில் அந்தப் பஞ்சப்படியையும் சேர்த்துக் கணக்கிடுகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் ராஜேந்திரன் என்ற மாணவனுக்கு அந்த வகையில் ஸ்காலர்ஷிப் மறுக்கப்பட்டிருக்கிறது. சென்ற தடவை பேசும்போதுகூட, நான் இதைப்பற்றித் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். ஆக உத்தரவை அந்தத் துறை சரியாக அமுல்படுத்துவதில்லை. 6,000 ரூபாய் வருமான வரம்பு என்ற முறையிலே, இப்படிப்பட்ட தவறுகளை இனிமேல் செய்யாத வகையில் ஸ்காலர்ஷிப் முறையாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையிலே மூன்று சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். என்.ஜி.ஜி.ஓ.க்களுக்கு இலவசக் கண்ணாடி, இலவசக் காது கேட்கும் கருவி மற்றும் 200 ரூபாய்க்குக் குறைவாக மாதந்தோறும் வருவாய் உள்ளவர்களின் குழந்தைகளுக்கு இலவசப் புத்தகங்கள் என்று சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. எப்போது பார்த்தாலும், அரசு பதிவிலா ஊழியர்கள் சமுதாயத்தில் உயர்ந்தவர்களாகவும் ஆசிரியப் பெருமக்கள் மட்டும் சமுதாயத்தில் இரண்டாவது குடி மக்களாகவும் அரசு வெளியிடுகின்ற ஆணைகளின் மூலம் ஆக்கப்படுகிறார்கள். 31 ஆண்டு சுதந்திரத்திற்குப் பிறகும் இதுமாதிரி நிலைமைகள் இருப்பது தர்மமா, நீதியா? இந்த ஆணை வெளியிடப்படும்போது, ஆசிரியர்களுக்கு என்று தனியாக உத்தரவு வெளியிடப்படும் என்று அதில் போட்டிருக்கிறார்கள். பல முறை இதைப்பற்றி எடுத்துக் கூறிவிட்டேன். நியாயம் கிடைக்கவில்லை. ஆசிரியப் பெருமக்கள் அரசின் கவனத்திற்கு இதைக் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட வேண்டுமா? இதை அப்படிக் கொண்டுவரும் அளவுக்கு விடமாட்டார்கள் என்று கருதுகிறேன். ஆகவே உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். நிதித் துறையிலிருந்து ஆணைகள் வெளியிடப்படும்போது, அரசு பதிவிலா ஊழியர்களுக்கு என்று ஆணைகள் வெளியிடப்படும்போது, ஆசிரியர்களுக்கு மட்டும் தனியாக உத்தரவிடப்படும் என்று போடுகிறார்கள். நிதித் துறை என்பது எங்களுக்கும் சம்பந்தப்பட்டதுதான். நாங்களும் இந்த நாட்டிலே வாழப் பிறந்தவர்கள் தான். எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்று இருக்கிறது. ஆனால் போடப்படும் உத்தரவுகளில் எல்லாம் அவர்களுக்கு இடம் தருவதில்லை. அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். இன்னும் சொல்லப்போனால், அவர்களுக்கு முதலிடம் அந்த ஆணைகளில் தரப்பட வேண்டும். அதுதான் தரப்படுவதில்லை. குறைந்தபட்சம் மற்றவர்களுக்குப் பொருந்துமென்று சொல்லுகின்ற சலுகைகளையாவது ஆசிரியப் பெருமக்களுக்கும் பொருந்தும் என்று போட வேண்டாமா? ஏன் அதை மறுக்க வேண்டும்? மேலே நான் குறிப்பிட்ட மூன்று சலுகைகளும் ஆசிரியப் பெருமக்களுக்கும் உண்டு என்று துணை மானியத்திற்குப் பதிலளிக்கும்போது தயவுசெய்து அமைச்சரவர்கள் அறிவிப்பு வெளியிட வேண்டும். இதற்கு மேலாக என்னால் கேட்டுக்கொள்ள முடியவில்லை. தமிழில் உள்ள எல்லா வார்த்தைகளாலும் நான் கேட்டாகிவிட்டது.

தனியார் கல்லூரியான புதுக் கல்லூரி சென்னையிலே இருக்கிறது. அதே போல ஹோலி கிராஸ் கல்லூரி திருச்சியில் இருக்கிறது. இன்றையதினம் ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டது தவறு என்று அரசு சொல்லியிருக்கிறது. அப்படி அரசு சொல்லியும், அரசாங்கத்திலிருந்து இடப்பட்ட உத்தரவை இன்றைய





தினம் அவர்கள் மீறுவோம் என்று சொல்லுகிறார்கள். யார் தவறு செய்தாலும் இந்த நாட்டிலே அவரைத் தண்டிக்க சட்டம் இருக்கிறது. தவறு செய்பவர்கள் வரம்பை மீறினால் தண்டிக்கப்படுகிறார்கள். இன்னும் வரம்பை மீறினால் சுட்டுத் தள்ளப்படுகிறார்கள். 'லா அண்ட் ஆர்டர்' என்றெல்லாம் நாட்டிலே இருக்கிறது. பெரிய காரியங்களாக இருக்குமானால், அதை அடக்க மிலிட்டரி இருக்கிறது. இப்படியெல்லாம் இருக்கும்போது, கல்வித் துறையிலே இருக்கிறவர்கள் மட்டும் தவறுகளைச் செய்து கொண்டேயிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய தவறுகளை நீக்க முடியவில்லை. அதற்கு ஒரு வழிவகை காண வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் இன்றையதினம் இந்த நாட்டிலே கல்வித் துறையிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிற அநியாயங்களைப்பற்றித்தான் சொல்கிறேன். அநியாயங்களைப்பற்றிச் சொல்லும்போது அமைச்சர் பெருமக்கள் கொஞ்சம் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்றையதினம் ஆசிரியர்கள் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். அரசின் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். 10(ஏ)(1) ஆசிரியர்கள் பணியை வரன்முறைப்படுத்த ஸ்பெஷல் சர்வீஸ் கமிஷன் பரிட்சை வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். தனிப் பரீட்சை இவர்களுக்கு வைத்தால், மற்ற துறைகளில் இருப்பவர்கள் எல்லாம் தங்களுக்கும் அப்படிக் கேட்பார்கள் என்று சொல்லுகிறார்கள். மற்ற துறைகளில் இருப்பவர்களைப்பற்றி நமக்குக் கவலையில்லை. கல்வி அமைச்சர் அவர்களுடைய துறையைப் பார்த்துக் கேட்கிறேன். பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஸ்பெஷல் சர்வீஸ் கமிஷன் பரீட்சை உண்டு என்று நேற்றையதினம் அறிவித்தார்கள். பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஒரு நீதி, கல்லூரி ஆசிரியர்களுக்கு ஒரு நீதியா? மற்ற துறையில் இருப்பவர்கள் கேட்பார்களே என்று கவலைப்படாமல் இந்தத் துறையில் உள்ள அனைவருக்கும் இந்தச் சலுகை உண்டு என்று அறிவிக்க வேண்டும், ஏற்க வேண்டும். உடனடியாகக் காலம் தாழ்த்தாமல் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலிக்க வேண்டும். அன்றையதினம் மாண்புமிகு நாவலர் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்தார். அவர் இந்த அவையில் இருந்த போது, எப்போதும் ஆசிரியர் பிரச்சினைகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருப்பார். பொறுமையோடு பிரச்சினைகளைக் கேட்டுக்கொண்டிருப்பார்கள். அமைதியாகப் பதில் சொல்லுவார்கள். இரண்டாவது முறையாக மீண்டும் கேட்கிறேன்....

**மாண்புமிகு திரு. க. இராசா முகமது:** மாண்புமிகு அமைச்சர் பெருமக்களைப்பற்றி உறுப்பினர் பேசும்போது, கல்வி அமைச்சர் அவர்கள் இந்த நேரத்தில் இந்த அவையில் இல்லாததை ஒரு பெரிய குறையாகச் சொல்லுகிறார்கள். இந்த அவையின் நிகழ்ச்சிகள்பற்றிப் பார்க்கும்போது, கேள்வி நேரத்தின்போது ஆசிரியர் பிரச்சினைபற்றிப் பேசும்போது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களே தினமும் அரை மணி நேரம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். திரும்பவும் அதே ஆசிரியர் பிரச்சினைகள்பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாக பதில் சொல்லிக்கொண்டிருப்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இப்போதுகூட ஆசிரியர் பிரச்சினை சம்பந்தமாக கான்பரன்ஸ் ஹாலில் அதிகாரிகளுடன் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இதை உறுப்பினர் தெரிந்து வைத்திருந்தும் நோக்கம் கற்பிக்கும் வகையில் கல்வி அமைச்சர் அவையில் இல்லாத வேளையில் இதைப்பற்றிப் பேச வேண்டாம். அப்படி ஒரு அமைச்சர் அவையில் இல்லாவிட்டாலும்கூட, பிரச்சினைகள்பற்றி அனுசரிப்பதற்கு அமைச்சரவைக்குக் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது. எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், இந்த அரசு பிரச்சினைகளை அலட்சியப்படுத்தாது என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை உறுப்பினருடைய தகவலுக்காகச் சொல்கிறேனே அல்லாமல் வேறொன்றுமில்லை.

(திரு. மீனாட்சிசுந்தரம் பேச எழுந்தார்.)

**மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்):** நீங்கள் பேச வேண்டாம். உட்காருங்கள். உங்களுடைய 'டர்ன்' வரும்போது நீங்கள் பேசலாம்.

**திரு. செ. முத்துசாமி:** தெரிந்தே நான் பேசியதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது உண்மையல்ல. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூட்டம் நடைபெறும் மண்டபத்திற்குப் போயிருப்பது எனக்கு உள்ளபடியே தெரியாது. தெரிந்து ஒரு தவறான தகவலைச் சொல்லும் பழக்கம் எனக்கு என்றைக்குமே கிடையாது. அமைச்சர் அவர்கள் அவையிலிருந்து நாங்கள் சொல்லுகின்ற பிரச்சினைகளைக் கேட்க வேண்டுமென்ற ஆர்வத்தைக் கருதி நான் அப்படிச் சொன்னேனே தவிர, நோக்கம் கற்பிக்க வேண்டுமென்பது என் விருப்பமல்ல.

அடுத்தபடியாக, ஹையர் செகண்டரி கல்வி கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஒரு மௌனப் புரட்சியே நடந்துகொண்டிருக்கிறது என்று கல்வி அமைச்சர் அறிவித்தார். பதவி உயர்வுகள் வழங்கும்போது, பாடங்களைத் தேர்ந்தெடுத்திருக்கக்கூடிய சப்ஜெக்ட் வாரியாக மாநில ரீதியாக ஒரு வரிசைக் கிரமப்படி சீனியாரிட்டி அடிப்படையில் ஒரு லிஸ்ட் வெளியிடப்பட வேண்டுமென்ற





கோரிக்கையை நான் பதிவுத் தபாலில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் அதிகாரிக்கும் அனுப்பியிருந்தேன். இன்னும் அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கவில்லை. சீனியாராக இருப்பவர்களுக்கு புரமோஷன் கொடுப்பதில்லை. ஜூனியருக்குத்தான் புரமோஷன் கொடுக்கப்படுகிறது. சேலம், கோயம்புத்தூர் போன்ற பகுதிகளில் இம்மாதிரி நடந்து, பிறகு தெரிந்து, கண்டுபிடித்து, அதன் பிறகுதான் இதைப்பற்றி வெளியே தெரிய வருகிறது. ஆகவே, உடனடியாக மாநில ரீதியாக ஆசிரியர்களுடைய சீனியாரிட்டி லிஸ்ட் ஒன்றை ஏற்படுத்தும் நடவடிக்கையில் அரசு ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்

(பிற்பகல் 6-30)

கிறேன். இந்த மேல்நிலைக் கல்வி எங்கே இருக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்லும்போது, ஒரு தலைமை ஆசிரியர் தனது கருத்தைப் பத்திரிகையில் எழுதினார். ஜூனியர் காலேஜ் என்ற முறையில் இருக்க வேண்டுமென்று அவர் எழுதிய கட்டுரை தினமணி பத்திரிகையில் மூன்று நாட்கள் வெளி வந்தது. உடனே டைரக்டர் அலுவலகத்திலிருந்து சேலம் டி.இ.ஓ.-விற்கு டி.ஓ. போகிறது. "எப்படி அந்தத் தலைமை ஆசிரியரை எழுத விட்டாய்? அவரை எழுத விட்டுக் கொண்டு நீ எங்கே இருக்கிறாய்?" என்று கேட்கப்படுகிறது. இது ஜனநாயக நாடு. இங்கே சுதந்திரமாகக் கருத்து வெளியிட ஒரு ஆசிரியருக்கு உரிமை கிடையாதா? புதிய கல்வி முறையைச் சிறந்த முறையில் கற்பித்ததற்காக சிறந்த பள்ளிகள் என்று அறிவிக்கப்பட்ட பத்து பள்ளிகளில் ஒன்றின் தலைமை ஆசிரியர் அவர். அப்படிப்பட்ட ஒரு பள்ளியின் தலைமை ஆசிரியர் இந்த மேல் நிலைக் கல்வி குறித்து அது எங்கே இருக்க வேண்டுமென்று சுதந்திரமாகக் கருத்து சொல்லி அது தினமணியில் வந்திருக்கிறது என்பதற்காக அந்த டி.இ.ஓ. அங்கே ஓடுகிறார். ஏன் இப்படிச் செய்தீர்கள், என்னுடைய புரமோஷன் போய்விடும் போல் இருக்கிறதே என்று சொல்கிறார். அதற்கு அந்தத் தலைமை ஆசிரியர் சிறப்பான பள்ளி என்று அறிவிக்கப்பட்ட பள்ளிகளில் ஒன்று தனது பள்ளி என்று சொன்னதும், அதைப்பற்றி டி.இ.ஓ. எழுதுகிறார். உடனே அந்தச் சிறந்த பத்துப் பள்ளிகளில் ஒன்று என்று இருந்த அந்தப் பள்ளி அந்தப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு உத்தரவு வருகிறது. பிளாக் லிஸ்டில் சேர்க்கப்படுகிறது. சுதந்திரம் எங்கே இருக்கிறது? ப்ளஸ் 2 எங்கே இருக்க வேண்டுமென்று ஆசிரியர்களிடம் கருத்து அறிய வேண்டாமா? முடிவு எடுக்கப்பட்ட பிறகுதான், அறிவிக்கப்பட்டதே தவிர, அதற்கு முன்னாலே ஆசிரியர்களிடம் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டதா? பஞ்சாயத்துக்கு ஒன்றாக ஜூனியர் காலேஜாக வைத்தால் நன்றாக இருந்திருக்கும் என்ற கருத்து நிலவியது. அது கேட்கப்பட்டதா? 916 பள்ளிகளைத் திறந்திருப்பதாகச் சொல்கிறார்கள்;

பஞ்சாயத்துக்கு ஒன்றாக இதை அமைத்திருந்தால், இன்னும் அதிகமாகத் துவங்கியிருக்க முடியும். அதிக வசதிகளைச் செய்திருக்க முடியும். ஆந்திராவில் இண்டர்மீடியட் என்றும், கர்நாடகாவில் ஜூனியர் காலேஜ் என்றும், கேரளாவில் ஜூனியர் கல்லூரி என்றும் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த 916 பள்ளிகளும் கிராமங்களுக்கு வந்திருக்கின்றன என்பதற்காக அதை வரவேற்றேனே தவிர வேறல்ல. இது எப்படி நடக்கிறது என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டுமென்று திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் அழகாகச் சொன்னார்கள்.

வொகேஷனல் எஜுகேஷன் என்று சொல்வதால், அவர்கள் வெளி வந்தவுடனே உத்தியோகத்திற்குத் தயாராவார்கள் என்று சொல்லப்படுகிறது. எந்த அளவிற்கு அவர்கள் தயாராவார்கள் என்பதைப் பொறுத்துப் பார்க்க வேண்டும். இந்த மேல்நிலைப் பள்ளி உருவாக்கப்பட்டதும், சேலத்தில், தர்மபுரியில் மாறுதல்கள் ஏற்பட்டன. முதலமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் சம அந்தஸ்து அளிக்க வேண்டுமென்ற கருத்தில் துடிப்பான உணர்வுகளைக் கொண்டிருக்கிறார்கள். கல்வித் துறையில் ஒரு சிலருக்கு விருப்பு வெறுப்பு அடிப்படையில் காரியங்கள் நடைபெறுகின்றன. கல்வித் துறையில் செகண்டரி எஜுகேஷன் போர்டில் அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு சங்கம் இருக்கின்றது. பட்டதாரி ஆசிரியர்களுக்கு பல சங்கங்கள் இருக்கின்றன. தமிழாசிரியர்களுக்கு நீண்ட காலமாக சங்கம் இருக்கிறது. அதற்கு இடமில்லை. பட்டதாரி சங்கங்கள் இரண்டு இருக்கின்றன. அதில் ஒரு சங்கம் இடம் பெற்றிருக்கிறது. தொடக்கப் பள்ளி சம்பந்தமாக மூன்று சங்கங்கள் இருக்கின்றன. அதில் ஒரு சங்கம் . . . .

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்): இன்னும் இரண்டு நிமிஷங்களில் முடிக்க வேண்டும். பேசவேண்டியவர்கள் பலர் இருக்கிறார்கள்.

திரு. செ. முத்துசாமி: கல்வித் துறையில் உள்ள ஒரு சார்பாக நடக்கிற தன்மையை உடனடியாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாறுதலைப் பொறுத்தவரையில், கல்வி அமைச்சர் சொல்கிறார்கள் என்று அங்குள்ள சி.இ.ஓ. அலுவலகத்தில் பல மாறுதல்கள் நடக்கின்றன. எம்.ஏ. படித்துவிட்டு பதவி உயர்வு பெற்று உயர் பள்ளிக்குச் சென்ற ஒரு பி.டி. ஆசிரியர் மாற்றப்படுகிறார். சேலம் மாவட்டத்தில் ஐந்து பள்ளிகள் திறக்கப்பட்டன. அதற்காக மீண்டும் ஐந்து ஆசிரியர்கள் சேலத்திற்கு மாற்றப்படுகிறார்கள். அவ்வாறு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாறுதல் செய்திருக்கிறார்கள். அதைத் தவறாகச் சொல்லவில்லை. கன்னியாகுமரியிலிருந்தவர்களை சேலத்திற்கு மாற்றி,



மதுரையில் திருச்சியில் இருந்து சேலத்திற்கு மாற்றியிருக்கிறார்கள். இப்படி ஒரு ஐந்து பேருக்கு மட்டும் தனி நீதி வழங்கியிருக்கிறது, கல்வித் துறை. தர்மபுரியிலிருந்து மாற்றப்பட்டிருக்கும் ஆசிரியர் புதிய ஹையர் செகண்டரி வகுப்பிற்கு மாற்றப்பட்டிருந்தால், ஆட்சேபணை இல்லை. பி.டி. ஆசிரியர், எம்.ஏ. தமிழ் படித்துவிட்டு ஏற்கெனவே புரமோஷனாகி தங்கள் குழந்தைகளை நாமக்கல் கல்லூரியில் சேர்த்துவிட்ட பிறகு, அவர்களை வேறு இடத்திற்கு மாற்றி, அங்குள்ள ஆசிரியரை 15 மைலுக்கு அப்பாலுள்ள பள்ளிக்கு மாற்றியிருக்கிறார்கள். இதுபற்றி சி.இ.ஓ.-விடம் கேட்டால், கல்வி அமைச்சரிடம் தான் இதுபற்றிக் கேட்க வேண்டும் என்கிறார்கள். அதனால் கல்வி அமைச்சருக்கு எழுதியிருக்கிறார்கள். மாறுதலில் கணவன் மனைவி ஒன்றாக வைக்கப்பட வேண்டுமென்று சொல்கிறோம். கல்வித் துறையில் உள்ள அதிகாரிகளுக்கு வேண்டிய கணவன் மனைவியர்களுக்குத்தான் இந்த விதிமுறையா? எல்லா ஆசிரியர்களுக்கும் இது பொருந்தவில்லையா? சமூகத்தில் பணம், அந்தஸ்து உள்ளவர்கள் மாறுதல் உத்தரவு வந்தாலும் போகாமல் ஐயாயிரம், பத்தாயிரம் கொடுத்து லீவு போட்டுவிட்டு செல்வாக்குடன் இருக்கிறார்கள். சாதாரண மாணவர்கள் தூக்கியெறியப்பட்டால், எங்கே வேண்டுமானாலும், போக வேண்டியவர்களாக இருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் ஒரு சீரான சம நீதி வழங்கப்பட வேண்டும். மாறுதல்களில் அநியாயங்கள் நடக்கின்றன. கணவன் மனைவி 20 மைல்களுக்கு அப்பால் ராசிபுரம், கண்ணங்குறிச்சி பகுதிக்கு மாறுதல் செய்யப்படுகிறார்கள். இந்த அரசு சொன்னதை யெல்லாம் செய்ய வேண்டாமா? இதுபற்றிப் பலமுறை முறையிட்டு செய்திருக்கிறோம். சேலம் சி.இ.ஓ.-வைப் பொறுத்தவரையில், அங்கே ஆபீஸ் சூப்பிரண்டுதான் சி.இ.ஓ.-வாக இருக்கிறார். சூப்பிரண்டு வைத்ததுதான், சொல்வதுதான் நடக்கிறது. அவரிடம் இரவில் சந்தித்து சிலர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். மறுநாள் ஆர்டர் வருகிறது பாருங்கள் என்று சொல்லிக்கொண்டே வருகிறார்கள். அவர்கள் பின்னாலேயே ஆர்டரும் வருகிறது. ஆகையால் அங்கே சி.இ.ஓ. செயல்படும்படியாகச் செய்ய வேண்டும். சிலர் சென்னைக்கு வருகிறார்கள். இங்கே வரும்போது, இன்னொருவரை அழைத்து வருகிறார்கள். இவ்வளவு கொண்டுவா என்கிறார் அவர். மேல் மட்டத்தில் நாணயமாக நடைபெறுகிறது. ஒப்புக்கொள்கிறேன். அதைப் பயன்படுத்திக்கொண்டு, கீழே உள்ளவர்கள், சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பல காரியங்களைச் செய்கிறார்கள். இங்கேயிருந்து போன் போகிறது. மாற்றல் உத்தரவுகள் போடப்படுகின்றன. ஒரு ஆசிரியர் மாறுதல் செய்யப்படாமலேயே போடப்பட்ட உத்தரவு ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு என்னிடம் ஆதாரம் இருக்கிறது மீண்டும் மாறுதல் செய்யப்பட்டது. அது ரத்தாகிறது. இப்படி இந்த நிர்வாகம் இருப்பதைப்பற்றி, சேலம் சி.இ.ஓ. நடந்துகொள்வதைப்பற்றி

(திரு. செ. முத்துசாமி) [1978 செப்டம்ப 9

ஒரு என்குயரி கல்வித் துறை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுவரை கல்வித் துறை மீது இத்தகைய குற்றச்சாட்டை நான் சாட்டிய தில்லை. இன்றைக்கு நடைமுறை மிகவும் கவலை தரும் விதத்தில் சரியில்லாத முறையில் நடந்து வருவதால், விருப்பு வெறுப்பு அடிப்படையில் காரியங்கள் செய்யப்படுவதால், ஒரு என்குயரி அவசியம் வைக்கப்பட வேண்டும். இன்னும் இதுபற்றித் தெளிவாகச் சொல்ல வேண்டியதில்லை. நேரடியாகச் சொல்ல வேண்டுமென்றால், நாம் இந்த நாட்டில் ஒழிக்கப்பட வேண்டுமென்று சொல்கிற சம்பவங்கள் அங்கே நடக்கின்றன. இதை முத்துசாமி சொல்கிறேன் என்ப தற்காக விட்டுவிடாமல் உண்மையிருக்கிறதா என்பதைக் கண்டு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். ஆசிரியப் பெருமக்கள் பல முறையீடு களைச் செய்திருக்கிறார்கள். அமைச்சரவையில் உள்ளவர்கள் அவற்றைக் குறித்து வைத்து அவைபற்றி என்குயரி செய்தாக வேண்டும். அதைச் செய்தால், அங்குள்ள அநியாயத்தைப்பற்றிப் புரிந்து கொள்ள முடியும். எந்தத் தேதியில் அழைத்தாலும் வந்து ஆதாரங்களைத் தரத் தயாராக இருக் கிறோம். ஆசிரியர்கள் வெதும்பி நிற்கிறார்கள்.

**மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்):** அதிகநேரம் பேசி விட்டீர்கள். இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்து விடுங்கள். அதற்கு மேல் நேரம் ஒதுக்கமாட்டேன்.

(பிற்பகல் 6-40)

**திரு. செ. முத்துசாமி:** தலைவர் அவர்கள் என்னை அனுமதித்ததற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக இந்தப் பிரச்சினை கொஞ்சம் வேகமாக மாவட்டம் முழுவதும் பரவியிருக்கிறது.

**மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** மற்றவர்கள் பேச வேண்டும் என்பதால், உறுப்பினர் அவர்கள் இரண்டு நிமிடங்களில் முடித்துக் கொள்ள வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி:** சென்றமுறைகூட அனுமதித்த நேரத்திற் குள்ளாகவே நான் எனது பேச்சை முடித்துக்கொண்டிருக்கிறேன். ஆனால் இந்தப் பிரச்சினை ஒரு முக்கியமான பிரச்சினை. சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், நிகழ்ந்துள்ள விஷயங்களைப்பற்றி ஒரு என்குயரியே வைக்க வேண்டும். அதன்மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நான் சொல்வதில் உண்மை இருந் தால், நடவடிக்கை எடுங்கள், அது போதும். உண்மை இருக்கிறதா இல்லையா என்று கண்டுபிடிப்பதற்கே வழியில்லாமல், இன்றையதினம் கல்வி இலாகா



1978 செப்டம்பர் 9] (திரு. செ. முத்துசாமி)

செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. என்னைப் போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மேலவை உறுப்பினர் ஒரு விஷயத்தைப்பற்றிக் குறை சொன்னால், இங்கே இருக்கிற ஒரு அதிகாரியை அனுப்பி, சி.ஈ.ஓ. மீது விசாரணை செய்யச் சொல் கிறார்கள். அந்த அதிகாரி புகார் சொல்லும் என்னைக்கூட சந்திப்பதில்லை, விசாரிப்பதில்லை, அங்கே சென்று வந்து புகாருக்கு ஆதாரம் இல்லை என்று ஒரு ரிப்போர்ட் அனுப்பிவிடுகிறார். இந்த முறைகள் மாற்றப்பட வேண்டும். ஆசிரியர்களின் மாறுதலில் நடைபெற்றுள்ள பல்வேறு அநியாயங்களைப்பற்றி உடனடியாக விசாரணை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன்.

ஆசிரியர்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள் இருந்தாலும், ஊதியக் கமிஷன் சிபாரிசுகளைப் பொறுத்தவரையில், அவைகள் உடனடியாகச் செயல்படுத்தப் பட வேண்டும். கேரளத்தைப் பொறுத்தவரையில், நான்காவது ஊதியக் குழுவின் அறிக்கை மீதான முடிவுகள் ஓணம் பண்டிகைக்கு முன் தரப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நமது மாநிலத்தில் அது இன்னும் பரிசிலனையிலேயே இருக்கிறது. விரைவில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் வருகிறது. அண்ணா அவர்களின் வழியைப் பின்பற்றுவதாகச் சொல்லும் இந்த அரசு அவருடைய பிறந்தநாள் விழாவிலாவது இந்த ஊதியக் குழு அறிக்கை மீதான முடிவுகளை வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளின்போதுகூட சொல்லப்படும் என்று எதிர்பார்த்தார்கள். எனவே அண்ணா அவர்களின் பிறந்த நாளின்போதாவது இதனை வெளியிட வேண்டும். ஏனென்றால் கடந்த காலத்தில் இருந்த ஆட்சி அக்டோபர் 2-ம் தேதியிலிருந்து அதை அமுல் படுத்தும் என்று தேர்தலுக்கு முன்னாலே அறிவிப்பு வெளியிட்டிருந்தது. எனவே இந்தக் கூட்டத் தொடர் முடிவதற்கு முன்பாக இதன் கடைசி நாளிலோ, அண்ணா அவர்கள் பிறந்த நாளிலோ இதனை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதில் நாங்கள் அவசரப்படுவதாக தயவு செய்து கருதக்கூடாது. அதோடு, இதை அறிவிக்கும்போது, நிலுவைப் பணத்தை ரொக்கமாகக் கொடுப்பதற்கு வழி செய்ய வேண்டும். அதைச் செய்யாமல் பிராவிடண்ட் பண்டில் சேர்த்துவிடக்கூடாது. ஏனென்றால் இதை நம்பி பல்வேறு ஆசிரியர்கள் ஏற்கெனவே கடன் வாங்கி வைத்திருக்கிறார்கள். எனவே இதில் விரைவாக அரசாங்கம் செயல்பட வேண்டும் என்று கூறி, வாய்ப்புத் தந்த தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[1978 செப்டம்பர் 9

திரு. வி. ஆர். பெரியண்ணன் : மாற்றுத் தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கையின்மீது ஒரு சில கருத்துக்களை ஐந்து நிமிட நேரத்திற்குள் சொல்லிக்கொள்ள முன்வருகிறேன். இந்த அவையிலே ஏற்கனவே நான் எடுத்துச் சொன்ன காரியங்கள் இதுவரையிலும் நடைபெறாமல் இருப்பதை நினைவூட்டும் வகையிலேயே என் பேச்சு அமைந்திருக்கும்.

கடந்த ஆண்டு ஏற்பட்ட புயல் வெள்ளத்தின்போது பாதிக்கப்பட்ட சாலைகளைப் பழுது பார்த்து அவைகளைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்காக சில லட்ச ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக துணை மானியக் கோரிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. நான் முன்பு புயல் வெள்ள நிவாரண அறிக்கைமீது பேசுகிறபோது, சில கருத்துக்களை இந்த அவையிலேயே பேசினேன். அடுத்து, நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகிறபோதும் அந்தக் காரியங்களையெல்லாம் அரசாங்கம் செய்யவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினேன். இப்போதும் அதையே சொல்ல விரும்புகிறேன்.

புயல் அடிக்க பகுதியாக சேலம் மாவட்டம் சேந்தமங்கலம் யூனியன் பகுதி அறிவிக்கப்பட்டது. ஆனால் இதுவரையில் அந்த ஒன்றியத்தில் ஒரு ரோடுகூட பழுது பார்க்கப்படவில்லை. அந்தப் பாதைகளை இப்போதே சரியாக ரிப்பேர் செய்யாவிட்டால், மீண்டும் மழை பொழிகிற போது, அதனால் அதிகமான பாதிப்பு ஏற்பட்டு, அதைச் சீர் செய்யும் செலவும் அதிகமாக ஆகும் என்று நிதி நிலை அறிக்கையின்போதே பேசினேன். எனவே அப்படிப் பழுதடைந்து இன்னும் சீரமைக்கப்படாத அந்த ரோடுகளை உடனடியாக வேலைக்கு எடுத்துக் கொண்டு இப்போது ஒதுக்கியிருக்கும் தொகையிலிருந்தாவது செலவு செய்து அவற்றைச் சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேந்தமங்கலம் ஒன்றியத்தில் புதுக்குளம் ஏரிக்குத் தண்ணீர் வரும் கரை பழுதடைந்துள்ளது. அது ரோடாகவும் பயன்படுகிறது; ஏரியின் கரையாகவும் பயன்படுகிறது. புயல் அடித்தபோது, அது உடைந்துவிட்டது. ஆனால் இப்போதுங்கூட அது ரிப்பேர் செய்யப்படவில்லை. கொல்லி மலையிலிருந்து பெய்கிற மழைத் தண்ணீர் இந்தக் குளத்துக்குப் போகாமல் வேறு ஒருவருடைய காட்டுக்குச் சென்று வீணாகிறது.

எங்கள் ஒன்றியத்திற்கு கடந்த ஆண்டு இரிகேஷன் கிராண்ட் என்ற அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட தொகை ஒதுக்கியிருந்தார்கள். அதில் செலவு செய்தது போக பாக்கி ரூபாய் 18,000 ஒன்றியத்தின் கையில் இருக்கிறது. அந்தப் பணத்தை 'சரண்டர்' செய்ய வேண்டுமென்று அரசாங்கம் ஆணை பிறப்பித்திருக்கிறது. அந்தப் பணத்தை இந்தப் பழுதுபார்க்கும் வேலைக்குப்



(திரு. வி. ஆர். பெரியண்ணன்) 1978 செப்டம்பர் 9]

பயன்படுத்திக்கொள்ள அனுமதி வேண்டும் என்று எங்கள் ஒன்றிய ஆணையர் அவர்கள் அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார். எனவே இந்தப் பணம் 18,000 ரூபாயை பாதைகளைப் பழுதுபார்க்க உபயோகித்துக்கொள்ள உரிய அனுமதியை இலாக்கா வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நடமாடும் மருத்துவக் குழுக்கள் அமைத்திருப்பதை நான் வரவேற்கிறேன். 100 ஒன்றியங்களில் செயல்பட்டுக்கொண்டிருப்பதற்கான வகையில் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். ஒரு திட்டத்தை அறிவிக்கும்போதே, அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தால்தான் நல்லது. கடந்த 7 ஆம் தேதியிலிருந்து நடமாடும் மருத்துவக் குழுக்களை செயல் முறைக்குக் கொண்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. பல சுகாதார நிலையங்களில் டாக்டர்களே நியமிக்கப்படவில்லை. இருக்கிற டாக்டர்கள் வண்டியை எடுத்துக் கொண்டு கிராமங்களுக்குப் போய்விடுகிறார்கள். எனவே இப்படிப்பட்ட திட்டங்களை அறிவிக்கும்போதே, தேவையான வசதிகளை அவர்களுக்குச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்திலே அரசாங்கத்தின் மூலமாகப் பொருட்காட்சி நடத்த ஏற்பாடாகியிருக்கிறது. அரசாங்கம் இந்தப் பொருட்காட்சிக்கு நான்கு லட்சம் ரூபாய் செலவழிப்பதால் என்ன பலன் ஏற்படுகிறது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டபோதுதான் முனிசிபாலிடிகளோ கார்ப்பரேஷன்களோ தங்கள் செலவில் பொருட்காட்சி நடத்துவது கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது. அதன் காரணமாக அங்கேயிருக்கிற முனிசிபல் அலுவலர்கள் ஒரு மாதம் முதல் ஒன்றரை மாதம் வரை தங்களுடைய அலுவல்களைக் கவனிக்க முடியாமல் போவதுடன், நகரத்திற்குத் தேவைப்படும் சுகாதார வேலைகள், மற்ற அத்தியாவசியமான வேலைகளைக் கூடக் கவனிக்க முடியாமல் போய்விடுகிறது. மேலும் அலுவலக வேலைகளும் பாதிக்கப்படுகின்றன என்பது எடுத்துக்காட்டப்பட்டு, இது கைவிடப்பட்டது. முனிசிபாலிடிக்கு வருவாய் தேவை என்றால், அதற்கு தனிப்பட்டவர்களுக்கு லீஸ்விட்டு பொருட்காட்சிகளை நடத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டது. நான்கு லட்சம் ரூபாய்க்கு ஒரு தனியாருக்கு லீஸ் விட்டால், அந்தப் பணம் முழுவதும் முனிசிபாலிடிக்கு வருகிறது. தனிப்பட்டவர்கள் பொருட்காட்சிகளை நடத்தினால், அங்கே சூதாட்டம்தான் நடைபெறுகிறது என்றும், மக்களுக்குத் தேவையில்லாத காரியங்கள் பல அங்கே நடைபெறுகின்றன என்றும் காரணம் காட்டி, இப்போது அந்தப் பொருட்காட்சியை அரசு சார்பில் நடத்தலாம் என்று முடிவு

(திரு. வி. ஆர். பெரியண்ணன்) [1978 செப்டம்பர் 9

மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பொருட்காட்சிகளில் தவறான காரியங்கள் நடைபெற்றால், அதைத் தடுப்பதற்கு அரசாங்கத்திடம் அதிகாரம் இருக்கிறது. தவறு செய்பவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் அரசாங்கத்திற்கு இருக்கும்போது, அரசாங்கம் போய் ஏன் இதில் ஈடுபட வேண்டும் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. நான்கு லட்ச ரூபாய் முனிசிபாலிடிக்கு லீஸ் தொகையாக வந்தால், அதை வைத்துக்கொண்டு நகரத்திற்குத் தேவையான வேலைகளைச் செய்துகொள்ளலாம். அது மட்டுமல்ல. அரசாங்கம் நடத்தும்போதும் சரி, தனிப்பட்டவர்கள் நடத்தும்போதும் சரி, அரசாங்கத்தின் சார்பில் ஸ்டால் வைக்கிறோம். அரசாங்கமே பொருட்காட்சி நடத்தும்போது, பொதுவாக அது ஆளுகிற கட்சிக்கு விளம்பரமாக அமைந்துவிடுகிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். அங்கே உள்ள பொருட்காட்சிச் சாலையின் நுழைவு வாயிலில் இரட்டை இலைச் சின்னத்தைப் போட்டு, அதற்கு மின்விளக்கு அலங்காரம் செய்து விளம்பரப்படுத்துகிறார்கள். இதற்கு அரசாங்கப் பணம் செலவழிக்கப்படுகிறது. அரசாங்கத்தின் சார்பில் கட்சி விளம்பரம் செய்யப்படுகிறது. அரசின் சாதனைகளை விளம்பரப்படுத்தினால் பரவாயில்லை, ஒப்புக்கொள்ளலாம். அதோடு அமைச்சர்கள் படங்களை அதிகமாகப் போடுகிறார்கள், கேட்டால் அவர்கள் ஆளுகிற பொறுப்பில் இருக்கிறார்கள் என்று சொல்லலாம், ஒப்புக்கொள்கிறேன். ஆனால் விளம்பரமே பிடிக்காது என்று சொல்லக்கூடியவரின் தலைமையில் உள்ள ஆட்சியில் கட்சி சார்பான விளம்பரம் அரசாங்கத்தின் செலவில் செய்யப்படுகிறது என்றால், என்ன பொருள்? அதுவும் ஆளுகிற கட்சியான அண்ணா தி.மு.க. வின் தேர்தல் சின்னமான இரட்டை இலை நுழை வாயிலில் பெரிதாகப் போடப்பட்டு, அரசாங்கப் பணத்தைச் செலவழிக்க வேண்டுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன். இது ஊழல் இல்லையா?

அது மட்டுமல்ல. நான் ஒரு ஊராட்சி மன்றத்தின் தலைவன். திடீரென்று மழை பெய்து ஊரில் ஒரு செலவு ஏற்பட்டது அல்லது ஓவர்ஹெட் டேங்கில் ஒரு ரிப்பேர் செய்ய வேண்டும் என்றால், நான் ஒரு 'செக்' போட்டு பணம் எடுத்துக் கொள்ள முடியாது. நான் தீர்மானம் போட வேண்டும், யூனியன் ஓவர்சியர் வந்து பார்த்து அனுமதி பெற்ற பிறகுதான், நான் பணம் வாங்க முடியும். ஆனால் ஸ்டால் அமைப்பதற்காக என்று ஒவ்வொரு பஞ்சாயத்திலிருந்தும் ரூபாய் 100 வாங்கியிருக்கிறார்கள். இது ஊழல் இல்லையா? ஒரு ஈ.ஓ.பி. பஞ்சாயத்துக்களுக்குச் சென்று ஒவ்வொரு பஞ்சாயத்திலிருந்தும் ரூபாய் 100 வாங்கி வந்திருக்கிறார். இது சேலம் மாவட்டத்திலே நடைபெற்றிருக்கிறது. இது ஊழல் இல்லையா என்றுதான் கேட்க ஆசைப்படுகிறேன். அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையால் எங்கள் மாவட்டத்தில் சேலம் முனிசிபாலிடிக்கு நட்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1978 செப்டம்பர் 9] (திரு. வி. ஆர். பெரியண்ணன்)

அடுத்து, ஊட்டிப் பகுதியில் பல சாலைகள் அமைக்க பணம் ஒதுக்கீடு செய்வதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கொல்லிமலையைப்பற்றி ஒவ்வொரு முறையும் நான் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறேன். கொல்லிமலையில் பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சார்ந்த 16 நாடுகள் இருக்கின்றன. 1959-ல் ஆரம்பிக்கப்பட்ட நேரத்திலே இருந்து அவர்களுக்குச் சரியான பாதை வசதி செய்து தரப்படவில்லை. அந்த 16 நாடுகளும் ஒன்றியத்தோடு இணைக்கப்படவில்லை. ஒன்றியத் தலைமையிடத்திலேதான் ஆஸ்பத்திரி இருக்கிறது, போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. 20, 30 மைல்களுக்குப் பரவியிருக்கிற இந்த 16 நாடுகளைச் சார்ந்த ஊராட்சித் தலைவர்கள் இங்கே வரவேண்டுமென்றால்கூட, சரியான வண்டிப்பாதைகூட கிடையாது. எனவே கொல்லி மலையைப்பற்றிக் கவனம் செலுத்தி, இந்த 16 நாடுகளையும் இணைக்கக் கூடிய அளவுக்கு சாலைகள் அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-50)

அடுத்து, ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கக்கூடிய ஜீப்புகள் தேவைப்படுமானால், சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களுக்குத்தான் கொடுக்கிறார்கள். விதியிலே அசெம்பிளி என்றுதான் இருக்கிறது என்று சொல்கின்றார்கள். கவுன்சில் என்ற வார்த்தையே இல்லை என்று ஆணையாளர் சொல்கிறார். கவுன்சில் உறுப்பினர்களுக்கும் இந்த உரிமையை வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுவிலக்குத் திட்டம்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நாமக்கல் பகுதியிலே மதுவிலக்கு மிக மோசமாக இருக்கிறது. அரசாங்கத்தோடு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்கின்றார்கள். ஒரு கிராமத்தில் சாராயம் காய்ச்சுபவர்கள்பற்றி டி.எஸ்.பி. அவர்களுக்குச் சிலர் மகஜர் அனுப்பியிருக்கிறார்கள். அதைப்பற்றி ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லை. இது மர்மமாக நடந்துகொண்டுதான் இருக்கிறது. அந்த கிராமத்தில் சாராயம் காய்ச்சுபவர்கள் கைகளை வெட்டிவிடவேண்டும். அந்த அளவுக்கு அவர்கள் இருக்கின்றார்கள். அந்த மாதிரியான நிலைமைகள் இருக்கின்றன. சாராயம் காய்ச்சுபவர்களைப் பிடித்துக்கொள்வார்கள் என்று எண்ணி அவர்களைப் பற்றி, நேரடியாக டி.எஸ்.பி.க்கு போன் செய்து சொன்னாலும்கூட, அவர்கள் நடவடிக்கை எடுக்காமலிருப்பதற்குக் காரணம் என்ன? அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சேலம் பொருட்காட்சிபற்றிப் பேசுகிற போது, அரசாங்கம் நான்கு லட்சம் ரூபாய் முதலீடு செய்திருக்கிறது. அது நஷ்டம்தானே என்று இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அது ஒரு தவறான தகவல். சேலம் முனிசிபாலிட்டி கடந்த ஆண்டுகளில் தனியாருக்குக் குத்தகைக்கு விட்டு எந்த வருமானத்தைப் பெற்றிருக்கிறதோ, அதற்குக் குறையாத அளவிலே இந்தப் பொருட்காட்சியிலேயே வருமானம் வர இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஏதோ இரட்டை இலைக்கு விளம்பரம் தேடியிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். சேலத்திலே பொருட்காட்சி என்றவுடன், அதற்கான ஒரு அடையாளத்தைக் காட்டுவதற்கு, அந்தப் பகுதியிலே உள்ள பொருளின் அடையாளத்தை பொருட்காட்சியின் சின்னமாக வைத்தார்கள். அதற்கும் அரசுக்கும் எந்தவித சம்பந்தமும் பொறுப்பும் இல்லை. சேலம் மாவட்டம் என்றால், மாம்பழத்திற்கு பேர் பெற்றது. அந்த மாம்பழத்தைச் சின்னமாக வைத்தார்கள். தனியாக இருந்தால், சரியாகத் தெரியாது என்பதற்காக இரண்டு இலைகளையும் சேர்த்துப் போட்டிருக்கிறார்கள். அங்கத்தினர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால், சூரியனையே பார்க்கக்கூடாது என்று சொல்வார்கள் போலிருக்கிறது. ஏர் உழவனைப் போட்டால் அது ஜனதா கட்சி, கை அடையாளம் போட்டால் அது இந்திரா கட்சிச் சின்னம் என்று சொல்வார்கள் போலிருக்கிறது. அண்ணா தி.மு.க. தனது சின்னத்தை விளம்பரப்படுத்தவேண்டிய அவசியத்தில் இல்லை. ஆகவே நல்ல நோக்கத்தோடு செய்கின்ற நல்ல காரியங்களை, நாட்டு மக்கள் அனைவராலும் பாராட்டப்படுகின்ற காரியங்களை, மறைத்திட முடியாது. பொருட்காட்சி நடத்துவது ஒரு நல்ல காரியம். அதற்கும் நீங்கள் அரசியல் சாயம் பூசவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** நாங்கள் அரசியல் சாயம் பூச விரும்பவில்லை. நீங்கள் வந்த பிறகுதான், அதைச் செய்கிறீர்கள். அந்த நிலைமை முனிசிபாலிட்டி அதிகாரிகள் மற்ற அதிகாரிகள் மத்தியிலேயே இருக்கிறது. மாங்காயை இலைகளோடு போடவேண்டிய அவசியமில்லை. மாங்காயை மட்டும் தனியாகப் போட்டிருக்கலாம்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கையிலே 22 கோடி ரூபாய்க்கு அதிகமான செலவுக்கு இந்த அவையினுடைய ஒப்புதலைக் கேட்டு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. 1977-78-க்கு மிஞ்சிச் செய்த செலவினங்களுக்கு அனுமதி கோரப்படுகிறது.





உண்மையில் நாட்டுக்குத் தேவையான நல்ல காரியங்களைச் செம்மையாகச் செயல்படுத்துவது முக்கியமாகும். துணை மதிப்பீடுகளில் அதிகமான பணம் ஒதுக்கி அதைச் செய்ய வேண்டும். அதிலும் முக்கியமான பிரச்சினைகளுக்கு இன்னும் கொஞ்சம் கூடுதலாகவே பணம் ஒதுக்கி செலவு செய்ய வேண்டுமென்ற கருத்தையுடையவர்கள்தான் நாங்கள். நமது மாநிலத்திலுள்ள மிக முக்கியமான பிரச்சினைபற்றிப் பேச விரும்புகிறேன். இன்றைய, நேற்றைய, நாளைய பிரச்சினைகளைப்பற்றித் தொடர்ந்து சொல்லி நான் அமைய விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய நமது மாண்புமிகு அங்கத்தினர்கள் ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருந்தாலும்கூட, அந்தப் பிரச்சினைகளுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து நானும் திரும்பவும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது கல்லூரி ஆசிரியர்கள் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் ஒரு அமைதியான சூழ்நிலை இருக்க வேண்டுமென்றுதான் எண்ணுகிறோம். அனைவரும் அதற்குத் தீர்வு காண வேண்டியது இன்றியமையாததாகிவிட்டதனால், அதற்குக்கூட மிக அதிகமான தொகையை இந்தத் துணை மதிப்பீட்டில் ஒதுக்கிக் கொடுக்கலாம். இந்த அவையைப் பொறுத்தவரை, அப்படி ஒதுக்க மகிழ்ச்சியோடுதான் இருக்கும். நம் மாநிலத்திலே அவர்கள் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். கல்லூரி ஆசிரியர்கள் சங்கம் அரசுக்கு வேண்டுகோள் விடுத்தது. அதைப்பற்றி விரிவான ஒரு அறிக்கையை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் விதி 82-ன் கீழ் அளித்தார்கள். முந்தாநாள் 29 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். நேற்று 35 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்று 100 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. நான்கு பேர்கள் உண்ணாவிரதம் என்று அறிவித்திருக்கிறார்கள் என்றும் தெரிய வருகிறது. கல்லூரி ஆசிரியர்களுக்காக மாணவர்கள் அனுதாபம் தெரிவித்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அறிக்கை வெளியிட்டதற்குப் பிறகு, ஆங்காங்கே ஆசிரியர்கள் வெளியேறுவோம் என்று சொல்கிறார்கள். திருச்சியிலே 11 மணிக்கு ஆசிரியர்கள் வெளியேறுவதாக விஷயம் தெரியவருகிறது. இது மாநிலம் தழுவிய பிரச்சினை. அமைச்சர் அவர்கள் கான்பரன்ஸ் ஹாலிலே கூடி அதிகாரிகளுடன் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருப்பது ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி. இன்றே இது முடிவடைய வேண்டும். அவர்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில்தான் அந்த 11 கோரிக்கைகளை அவர்கள் வைத்திருக்கிறார்கள். அவைகளைப்பற்றி நமது அமைச்சர் அவர்களும் அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அவர்கள் கோரிக்கைகளில் என்னென்ன சொல்லப்பட்டிருக்கிறது? மிகவும் முக்கியமாக அவர்கள் கேட்பது பணிப் பாதுகாப்பு. போராட்டத்தில் ஆசிரியர்கள் இறங்குவதற்கு முக்கியகாரணம் பணிப் பாதுகாப்புத்தான். திருச்சி

(திரு. எம். சங்கரலிங்கம்) [1978 செப்டம்பர் 9

யில் ஹோலி கிராஸ் கல்லூரி, நாகர்கோவில் ஹோலி கிராஸ் கல்லூரி, பயோனீர் குமாரசாமி கல்லூரி இவைகளிலிருந்து பல ஆசிரியர்கள் வெளி யேற்றப்பட்டிருக்கிறார்கள். இதெல்லாம் நமக்கு மிக்க வேதனையை அளிக் கிறது. 31—3—1977-ல் யார் யார் எல்லாம் பணியில் இருக்கிறார்களோ, அது அரசுக் கல்லூரியாக இருந்தாலும் சரி, தனியார் கல்லூரியாக இருந்தாலும் சரி, அவர்கள் பணி பாதுகாக்கப்படும் என்ற பிறகு அரசு இப்படி இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு இவ்வளவு ஆசிரியர்கள் வெளியேற்றப்பட் டிருக்கிறார்கள். அறிவித்தபடி செய்யாததன் காரணமாகத்தான் போராட் டத்தில் அவர்கள் இறங்கியிருக்கிறார்கள். அரசு அதை உணர்ந்து அதைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் கல்லூரிகளிலே ஆசிரியர்களை வெளியேற்றுகிறார்கள். தனியர் கல்லூரியிலே ஆசிரியர்களை வெளியேற்றாமலிருக்க, பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்கிறது. ஆனால் அரசு அரசுக் கல்லூரிகளிலே உள்ள ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு அளிக்கவில்லை. அரசுக் கல்லூரிகளில் ஆசிரியர்களை வெளியேற்றுகிறார்கள் என்று தனியார் கல்லூரியினர் குற்றச்சாட்டுக்கள் சொல்கின்றனர். அதற்கு அரசினர் உயர் கல்வி இலாக்கா இயக்குநர் அவர்கள் தருகின்ற பதில் என்ன?

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை.)

இந்த ஆசிரியர்கள் எல்லாம் 10 (ஏ) (1) விதியின்கீழ் நியமிக்கப்பட்டவர்கள் என்று சொல்கின்றார்கள். 10 வருடகாலம்கூட ஆகியிருக்கிறது. வெளி யேற்றுகிறோம் என்கிறார்கள். அது விவாதத்திற்குச் சொல்கின்ற பதிலாக இருக்கலாமே தவிர, இந்த அரசில் இரண்டாண்டுகள் தொடர்ந்து பணி யாற்றினால், அவர்களை மூன்றாவது ஆண்டில் பணியில் உறுதிப்படுத்த வேண்டும். அப்படிச் செய்வதில்லை. மூன்றாவது வருடமானதும் அவர்களை 'கன்பர்ம்' செய்வதற்கான உத்தரவுகளை வழங்கிட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பது என் எண்ணம். எப்போதுமே அவர்களை டெம்பரரியாகவே வேலைக்கு வைத்துக்கொண்டிருக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. இதை மாற்ற வேண்டும். தனியார் கல்லூரிகளுக்கு என்னென்ன சொல்கிறோமோ அதை அரசுக் கல்லூரிகளும் நடத்திக் காட்ட வேண்டும். இதற்கு அவர்கள் காட்டும் காரணம் 10 (ஏ) (1) விதி என்பதுதான். 10 (ஏ) (1) என்பது வெள்ளைக் காரர்கள் ஆட்சிக் காலத்திலே இருந்தது.

(பிற்பகல் 7-00)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவையின் காலவரையறை நீட்டிக்கப் படுகிறது.



1978 செப்டம்பர் 9]

**திரு. எம். சங்கரலிங்கம் :** வெள்ளைக்காரர்கள் ஆட்சிக் காலத்தில் ஒவ்வொரு பதவிக்கும் ஒரு குறிப்பிட்ட கல்வித் தகுதி ஏற்படுத்திவிட்டு, அந்தக் கல்வித் தகுதியுள்ளவர்கள் கிடைக்காத நேரத்தில், அந்த அளவுக்குப் படித்தவர்கள் கிடைக்காத நேரத்தில், ஆள் இல்லாமல் நிர்வாகம் நின்றுவிடக் கூடாது என்ப தற்காகத்தான் அந்தக் குறைந்த கல்வித் தகுதியுள்ள ஆட்களை டெம்பரரியாக நியமிப்பதற்கு அந்த விதி போடப்பட்டது. இப்போது எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள் பியூன் வேலைக்குக்கூட வருவதாகச் சொல்கிறார்கள். அந்தமாதிரி யான நிலைமைகள் இருக்கின்றன. குறைந்த கல்வித் தகுதி உள்ளவர்கள் 10 (ஏ) (1) விதியின்கீழ் நியமிக்கப்பட வேண்டிய அவசியம் இந்தக் காலத் தில் கிடையாது. தேர்வாணைக் குழு எத்தனை ஆசிரியர்கள் தேவை என்பதைப் பற்றிக் கண்டறிய முடியும். 100 பேர்களுக்குத் தேவை என்றால், 200 பேர் களுக்குப் பட்டியல் தயாரித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

கேரளாவிலே டிரான்ஸ்போர்ட் கண்டக்டர் வேலைக்கு, டிரான்ஸ்போர்ட் டிரைவர் வேலைக்குக்கூட தேர்வாணைக் குழு மூலமாகத்தான் தேர்ந்தெடுக் கிறார்கள். தேர்வாணைக் குழு மூன்று வருடங்களுக்கு பட்டியல் தயாரித்துக் கொள்கிறது. அந்தப் பட்டியல் மூன்று வருடங்கள் ஆன பிறகு, 'லேப்ஸ்' ஆகிறது. அந்த மாதிரித்தான் அங்கே நியமனங்கள் நடந்து கொண்டிருக் கின்றன.

இந்த ஆண்டுகூட 10 (ஏ) (1)-ல் ஏன் நியமிக்க வேண்டும்? இந்த ஆண்டு அப்படி நியமிக்கப்பட்டிருக்கிறது. ஏழு, எட்டு ஆண்டுகள் அப்படி இருக் கிறார்கள். அவர்கள் தேர்வாணைக் குழுவிற்கு இன்டர்வியூவிற்கு அனுப்பப் பட்டு, செலக்ஷன் ஆகவில்லை. அதுமட்டுமல்ல. அவர்கள் தேர்வாணைக் குழுவின் மூலம்தான் வர வேண்டும்; அவர்கள் மாவட்டக் கல்வி அதிகாரி களாகவும், டெபுடி டைரக்டர்களாகவும் வரலாம்; எனவே தேர்வாணைக் குழு மூலமாகத்தான் வர வேண்டுமென்று சொல்லி, அதை பப்ளிக் சர்விசஸ் டிபார்ட்மென்டும் 'அப்ரூவ்' செய்துவிட்டது. சட்டம் சரிதான். ஆனால் போட்ட சட்டத்தை யார் மாற்றுவது? எல்லாத் துறைகளிலுமுள்ள 10 (ஏ) (1) ஊழியர்களை, போதிய கல்வித் தகுதியுடையவர்களை, சிறப்புத் தேர்வாணைக் குழு என்று வைத்து, அதன்மூலம் அவர்களையெல்லாம் நியமித்து விட்டு, இனி, இன்றுமுதற்கொண்டு, 10 (ஏ) (1) நியமனம் கிடையாதென்று முடிவு செய்ய வேண்டும். எந்த அதிகாரியானாலும்—செக்ரட்டரி, டைரக்டர், ஜாயின்ட் டைரக்டர்—யாராக இருந்தாலும், 10 (ஏ) (1) விதிப்படி நியமிக்க அதிகாரம் கிடையாது. அவர்கள் பப்ளிக் சர்விஸ் கமிஷன் லிஸ்டிலிருந்து தான் போட வேண்டும். அட்வான்ஸாக லிஸ்ட் வாங்கி வைக்க வேண்டும். அப்படி அவர்கள் லிஸ்ட் வாங்கி வைக்கவில்லை என்றால், அவர்கள் அதிகாரி

(திரு. எம். சங்கரலிங்கம்) [1978 செப்டம்பர் 9

வேலைக்கு லாயக்கில்லை என்று முடிவெடுக்க வேண்டும். கல்லூரி ஆசிரியர்கள் பிரச்சினைகள் அனைத்திற்கும் உடனடியாகத் தீர்வு காணாவிட்டாலும், இந்த ஒரு பிரச்சினையைத் தீர்க்க அரசு முடிவெடுத்து, உடனடியாக அறிவிக்க வேண்டும். "நாளை முதல் வேலை செய்கிறார்கள், சம்பளம் பெறுகிறார்கள், அந்தக் கல்லூரியில் வேலையில்லாமல் இருந்தால், வேறு கல்லூரிகளுக்கு மாற்றப்படுவார்கள்" என்று அரசு தெளிவுபடுத்தினால், அந்தப் போராட்டம் உடனே நிற்குமென்று நான் நம்புகிறேன்.

அடுத்தாற்போல், கன்னியாகுமரி மாவட்டத்திலே, நாகர்கோவிலில் கலெக்டர் அலுவலகத்திற்கு முன்னாலே, அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியர்கள், கெஜடட் பதவிக்கு வரக்கூடிய நிலையில் இருக்கிறவர்கள் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஏழு நாட்களாகப் போராட்டம் நடைபெறுகிறது. முக்கியமான பிரச்சினை இது. டெபுடி இன்ஸ்பெக்டர்கள் அங்கே உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். எம்.ஏ., பி.டி. பட்டம் பெற்ற தலைமையாசிரியர்கள் அங்கே உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். பொறுப்பான பதவியில் இருக்கிறவர்கள் போராட்டத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறார்களென்றால், அதற்குக் காரணமென்ன? நாம் ஏதாவது ஒரு காரணம் சொன்னால், அது நாட்டிலே நிற்காது. இன்று அவர்கள் நாம் சொல்வதைக் கேட்காமல் போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள். மேல்நிலைப் பள்ளிகள் வந்த பிறகு, அதிலே ப்ரமோஷன் கொடுக்கும் முறையிலும், உயர்நிலைப் பள்ளிகளிலே ப்ரமோஷன் கொடுக்கும் முறையிலும் ஏற்பட்ட பெரும் சிக்கல் காரணமாக இன்று அரசு 'ஏ' விங் பள்ளிகளிலுள்ள பட்டதாரி ஆசிரியர்கள், தலைமையாசிரியர்கள் அங்கே போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள். அதே சமயத்தில் 'பி' விங் ஆசிரியர்கள் திருச்சியிலே போராட்டத்தைத் துவக்கியிருக்கிறார்கள். இரண்டு பிரிவு ஆசிரியர்களும் நூற்றுக்கு நூறு அதிருப்தி, நூற்றுக்கு நூறு வெறுப்பு காரணமாக போராட்டத்தில் இறங்குகிறார்கள். இதற்கு ஒரே காணம் 'ஏ' விங், 'பி' விங் என்று இரண்டாகப் பிரித்து, அதற்குத் தனி ஜி. ஓ. போட்டிருப்பது. 'ஏ' விங், 'பி' விங் இன்டகிரேஷன் செய்ய வேண்டுமென்று இந்த மன்றத்திலே பல முறை வற்புறுத்திச் சொல்லியிருக்கிறோம். வேண்டுமென்றால் எங்களை அழைத்து வைத்து, அவர்களையும் அழைத்து, தனி கான்பரன்ஸ் நடத்தி, ஒரு முடிவெடுத்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல், இணைப்பு இல்லாமல், அவர்களுக்குப் போஸ்டிங்ஸ் போடுகிறார்கள். 'ஏ' விங் ஆசிரியரை 'பி' விங் பள்ளியிலே போட்டு, 'பி' விங் ஆசிரியரை 'ஏ' விங் பள்ளியில் போடுகிறார்கள். ஆதலால் அவர்கள் அதிருப்தியடைகிறார்கள்.



1978 செப்டம்பர் 9] (திரு. எம். சங்கரலிங்கம்)

திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளம் அரசு 'பி' விங் பள்ளித் தலைமையாசிரியரை 'ஏ' விங் பள்ளிக்கு மாற்றினார்கள். அதற்குப் பிறகு ராணிப்பேட்டைக்கோ, வேலூருக்கோ மாற்றினார்கள். ஏழாவது ஆர்டர் கடைசியில் வந்திருக்கிறது. ஒரே ஆளுக்கு ஜூலை மாதத்திலிருந்து ஏழு ஆர்டர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஜாயினிங் டைம் ஏழு நாட்கள் கழிவதற்குள், அடுத்து ஒரு ஆர்டர் வருகிறது. இப்படியே ஏழு ஆர்டர்கள். கடைசியில் ராணிப்பேட்டையில் 'ஜாயின்' பண்ணிவிட்டு, லீவ் போட்டுவிட்டு வந்திருக்கிறார். அதுமாதிரி 'ஏ' விங் பள்ளிகளிலும் இருக்கிறது. இதுசம்பந்தமாக முடிவெடுக்காமல் நாள் கடத்துவதால், சிக்கல்கள் பெருகுகின்றன. இதைப் பற்றித் தெளிவாகப் பேசித் தீர்க்க வேண்டும். இந்த அவையிலே இருக்கக்கூடிய எனக்கு மிகுந்த வருத்தம் என்னவென்றால், இங்கே ஆசிரியப் பிரதிநிதிகள் ஆறு பேர்கள் இருக்கிறோம், ஆறு பேரும் பேசுகிறோம் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆறு பேரும் அதிகமாகப் பேசுகிறீர்கள்.

திரு. எம். சங்கரலிங்கம் : இருந்தாலும் எங்கள் பிரச்சினைகள் அதிகமாக இருக்கின்றன. நான்கூட நமது மாண்புமிகு அமைச்சரவர்களிடம் சொன்னேன். இந்தப் பிரச்சினையைப்பற்றி அவர்களெல்லாம் பேசினார்கள்; நான் இந்தப் பிரச்சினையை விட்டுவிட்டுப் பேசலாமென்று நினைத்திருந்தேன். ஆனால் இந்தப் பிரச்சினை மேலும் சிக்கலாகி, போராட்ட நிலையில் இருக்கிறது. கல்லூரி ஆசிரியர்கள் போராட்டத்தை நிறுத்துவதற்கு ஒரு வழி சொன்னேன். 'ஏ' விங், 'பி' விங் இணைப்பைப் பொறுத்து ஒரு வழி சொல்கிறேன். உடனடியாக இரு சாராரையும் அழைத்து வைத்து, 'இணைப்பு ஜி.ஓ. போடுகிறோம், அதுவரை பொறுத்துக்கொள்ளுங்கள், உங்கள் யாரையும் பாதிக்காது' என்று சொல்ல வேண்டும். 1971-லேயே சொல்லியிருக்கிறேன், 1972 தேர்தலுக்கு முன்பு. நான் இரண்டு சாராரிடமும் வோட் வாங்கினவன். திருநெல்வேலி மாவட்டத்தில் 'பி' விங் பள்ளி ஆசிரியர்களிடமிருந்தும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 'ஏ' விங் பள்ளி ஆசிரியர்களிடமிருந்தும் வோட் வாங்கியிருக்கிறேன். அங்கே தலை, வால் என்றிருந்தால், அடுத்த தடவை வோட் வாங்க முடியாது. 'ஏ' விங், 'பி' விங் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்கள் இணைப்பைப் பொறுத்தவரையில், date of entry into service -ஐ வைத்து, State-wide seniority list எடுத்து, அதை எல்லோருக்கும் கொடுத்து, இன்னாருக்குக் கீழே, இன்னாருக்கு மேலே என்று தெரிவித்து, அப்ஜெக்ஷன் இருந்தால் தெரிவிக்க நாள் குறிப்பிட்டு, அதற்குப் பிறகு Non-gazetted Headmaster வேலைக்கு District Cadre -ம், Gazetted Headmaster -க்கு State Cadre என்றும், promotion வேண்டுமென்றால் State list -க்குப் போ, இல்லையென்றால் District list -ல் இரு என்று சொல்லி, option

(திரு. எம். சங்கரலிங்கம்) [1978 செப்டம்பர் 9

கேட்க வேண்டும். இதைத் தவிர வேறு வழியேயில்லை. பல மாவட்டத்துக் காரர்கள் அதை ஒத்துக்கொள்ள மாட்டார்கள். சில மாவட்டங்களில் ஐந்து வருடங்களில் தலைமையாசிரியர்களாகி விடுகிறார்கள். சில மாவட்டங்களில் 20 வருடங்களுக்குப் பிறகும் தலைமையாசிரியராக ஆவதில்லை. அவர்களுக்குப் pay protection கொடுக்கலாம். தலைமையாசிரியராக இருப்பவர் தலைமையாசிரியாகவே இருக்கட்டும். ஐந்து வருஷம் சர்வீஸ் ஆனவர் லிஸ்டில் 200 ஆம் நம்பராக இருப்பார். ஆனால் திருநெல்வேலி மாவட்டத்துக்காரர், 18 வருஷம் சர்வீஸ் ஆனவர் லிஸ்டில் 120 ஆம் நம்பராக இருப்பார். ப்ரமோஷன் வரும்போது, அவர் அடுத்த போஸ்டுக்குப் போகிறார். Service Rule -ஐ நுணுகி, ஆராய்ந்தால் இதைத் தவிர வேறு வழி செய்ய முடியாது. இதைத் தவிர எந்த வழியைச் செய்தாலும், அதை நீதி மன்றம் ஏற்றுக் கொள்ளாது. எல்லோரும் ஏற்றுக்கொள்வார்களென்று எதையும் செய்ய முடியாது. அப்படி ஒருக்காலும் நடக்காது. எல்லோரையும் கேட்டுக் கொண்டு, நீதி எதுவோ, அதை அரசு அறிவிக்க வேண்டுமென்று, அவை மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினை சின்னச் சின்னப் போராட்டமாகி, அது தொடர்ந்துகொண்டிருக்கிறது. ஆசிரியர்களுக்குப் பின்னாலே யார் இருக்கிறார்களென்பது தெரியும். கல்லூரிகள் திறந்துள்ள நேரம். இந்தப் பிரச்சினையை ரொம்ப நாள் நீடிக்காதீர்கள். அரசின் நன்மைக்காக, நாட்டின் நன்மைக்காக, ஆசிரியர்களின் நன்மைக்காகத்தான் சொல்கிறேன்.

நான் இன்னும் அதிக நேரம் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. ஒரே ஒரு விஷயத்தைச் சொல்கிறேன். இந்த ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் 77,000 ஏக்கர் பயிர் செய்யப்பட வேண்டிய, இரண்டு போக நிலங்களில், 37,000 ஏக்கர் நிலங்களில்தான் பயிர் செய்யப்பட்டிருக்கிறது. 40,000 ஏக்கர்கள் பயிர் செய்யப்படவில்லை. காரணம், பருவ மழை தவறிவிட்டது. தென் மேற்குப் பருவ மழை கன்னியாகுமரி மாவட்டத்தில் மிகக் குறைவாகி, அணைகளில் குறைந்த அளவுக்குத்தான் தண்ணீர் இருக்கிறது. பேச்சிப்பாறை அணையில் 41 அடி தண்ணீருக்குப் பதிலாக ஐந்து அடி தண்ணீர்தான் இருக்கிறது. 37,000 ஏக்கர்கள்தான் பயிர் செய்யப்பட்டிருக்கிறது. அங்குள்ள விவசாயிகள் எவ்வளவு இக்கட்டான நிலையில் இருக்கிறார்களென்பதைப் பார்த்து, தக்க உதவிகளைச் செய்ய, இந்தத் துணை மானியக் கோரிக்கையில் நிதி ஒதுக்காவிட்டாலும், இப்போது செலவு செய்துவிட்டு, அடுத்த துணை மானியக் கோரிக்கை கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





1978 செப்டம்பர் 9] (திரு. எம். சங்கரலிங்கம்)

(பிற்பகல் 7-10)

அந்த மாவட்டத்திற்கு மட்டுமல்ல, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டத்தில் கூட இப்போது வடகிழக்குப் பருவ மழை தொடங்கி மணிலா பயிர் பயிரிட ஆரம்பித்திருக்க வேண்டும். ஆனால் அங்கும் மழை பெய்ய வில்லை. இங்கு தென்மேற்கு, வடகிழக்குப் பருவக் காற்று மழை இல்லாமல் நாம் கஷ்டப்படுகிறோம். ஆனால் வட இந்தியாவில் மழை அவர்களை அழித்துக்கொண்டிருக்கிறது. வெள்ளம் பெருக்கெடுத்து நிறையச் சேதத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. ஆகவே இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி, கங்கை-காவிரி இணைப்பைப்பற்றி நாம் முயற்சி செய்ய வேண்டும். இதிலே வட நாட்டிற்கும், தென்னாட்டிற்கும் ஒருமைப்பாடு ஏற்பட வாய்ப்பு உண்டு.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இதிலே மட்டும் ஒருமைப்பாடுதானா?

**திரு. எம். சங்கரலிங்கம்:** அது அவர்கள் உணர வேண்டிய ஒன்று. அங்கே வெள்ளத்தின் காரணமாக பல ஆயிரம் பேர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே கங்கை-காவிரியை இணைப்பதன் மூலம் அவர்களுக்கும் நஷ்டம் இல்லை, நமக்கும் செழிப்பு ஏற்படும். ஒருமைப்பாடும் நம்மை விட்டு நீங்காமல் இருக்கும். இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு இந்த அரசாங்கம் அதைச் செய்ய வேண்டும். கங்கையிலே தண்ணீர் வழிந்து வாரணாசியிலே, டில்லியிலே இன்னும் மற்ற பல பகுதிகளிலும் ஆபத்து நேரிட்டிருக்கிறது. ஆனால் இங்கே காவேரியிலே தண்ணீர் இல்லை. ஆகவே ஒரு 500 கோடி ரூபாய் அளவில் ஒரு பெரிய திட்டத்தை மைய அரசு தீட்டி அதிலே நாமும் நம்முடைய பங்கைச் செலுத்தி அத்திட்டத்தை நிறைவேற்றினால் நல்லது என்று சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1978-79ஆம் ஆண்டின் முதல் துணை மதிப்பீட்டின் மீது இவ்வவையைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும், செய்த செலவு போதாது என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்களே தவிர, எந்தெந்த செலவே ஆகியிருக்கிற செலவைக் குறை கூறவில்லை என்பதைக் காண்கிற போது, மகிழ்ச்சி அடைவது மட்டுமல்லாமல், அவர்களுக்கு நன்றி தெரிவிக்கவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் அவர்கள் செலவை அதிகப்படுத்துங்கள், அதிகப்படுத்துங்கள் என்று சொல்லுகிறபோது, அதிலே எங்களுக்குச் சங்கடம் இருக்கிறது. செலவை அதிகப்படுத்தச் சொல்லியிருக்கிறார்களே தவிர, அதைச் சரிக்கட்ட வருமானத்தை எப்படிப் பெறுவது என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லவில்லையே என்று எண்ணுகிறபோது, செலவைத் தொடர்ந்து செய்தால், அதுவே ஒரு சிக்கலாக ஆகிவிடுமோ என்று நிச்சயமாக அஞ்ச வேண்டியிருக்கிறது.

ஆனாலும் சுமார் 700 கோடி ரூபாய் வரவு செலவுத் திட்டத்திலே, வருவாய்க் கணக்குகளில் 15.89 கோடி ரூபாயும், மூலதனக் கடன் கணக்குகளில் 6.63 கோடி ரூபாயும், ஆகமொத்தம் 22.52 கோடி ரூபாய்க்கு நாம் அதிகமாகச் செலவிட்டிருப்பது மூன்று சதவீதம் கூட அல்ல என்பதைப் பார்க்கிறபோது, இது வழக்கமாக ஏற்படுகிற செலவினுடைய உயர்வே தவிர, வேறு அல்ல என்பதை நன்றாகப் புரிந்துகொள்ள முடியும்.

இந்த விவாதத்தைத் துவக்குகிறபோது, சிறைச்சாலையிலே ஆரம்பித்து, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் முடிக்கிறபோது, போராட்டத்திலே முடித்தார்கள்.

திரு. க. அறிவழகன் : வெள்ளத்திலே முடித்திருக்கிறார்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆகவே இரண்டையும் நோக்கும்போது, கொள்கை அளவிலே பல்வேறு பிரச்சினைகள் குறித்து பல்வேறு கோணங்களிலிருந்து இந்தக் குறுகிய காலத்திலே பேசப்பட்டிருக்கிறது என்பது சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி தமிழரசி அவர்கள் பேசுகிறபோது, சிறைச்சாலைகள் இன்னும் சீராக்கப்பட வேண்டுமென்று அவர்கள் தெரிவித்த கருத்து, உண்மையிலேயே அவர்களுக்கு எவ்வளவு ஆவல் இருக்கிறது என்பதைக் காட்டுகிறது என்றாலும், தாய்மார்கள் சிறைச் சாலைக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டுமென்ற கருத்தை இந்த அரசின் சார்பிலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் மேலும் பேசுகிறபோது, போக்குவரத்துத் துறையைப்பற்றிக் குறிப்பிட்டு, சாலைகள் எல்லாம் போடவேண்டுமென்று தெரிவித்ததுடன், அப்படி சாலைகள் போடப்பட்டும் வருகின்றன என்பதையும் குறிப்பிட்டு, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டினார்கள். திருமதி தமிழரசி அவர்கள் பாராட்டுகிறார்களே என்று எண்ணியபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அவர்கள் எழுந்து, " நான் பல தடவை சொல்லிப் பார்த்துவிட்டேன்,





வெள்ள நிவாரணப் பணிகள் என்னுடைய பகுதியிலே நடைபெறவில்லை" என்பதைச் சுட்டிக்காட்டி, திருமதி தமிழரசி அவர்களுடைய கருத்தை அவர் ஏன் ஏற்றுக்கொள்ள மறுத்தார் என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. ஒருவேளை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதால், பாராட்டினால் அது தகாது போய்விடும் என்று கருதினாரோ என்னவோ! ஆகவே அவர் பாராட்டவில்லை போலும். ஆனால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். வெள்ள நிவாரணப் பணிகள் ஏற்கெனவே நடைபெற்று வருவதோடு மட்டுமல்லாமல், இன்றும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் நிச்சயமாக அரசினுடைய கவனத்திற்குச் செல்லும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் பெரும்பாலோர் ஆசிரியர்களைப்பற்றிப் பேச வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார்கள் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே கூட, இதிலே திரும்பத் திரும்பப் பேச வேண்டியிருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள். பிரச்சினைகள் அந்த அளவுக்கு வந்திருக்கின்றன, அதனாலேதான் பேசுகிறேன் என்று அவர்களே குறிப்பிட்டார்கள். ஆசிரியர்கள் எப்போதும் ஆசிரியர்கள் பிரச்சினைபற்றி அடிக்கடி இந்த மன்றத்திலே பேசுவதுபற்றி, நம்முடைய அவையின் முன்னவர் மாண்புமிகு திரு. இராஜா முகமது அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த மன்ற நடவடிக்கைகளிலே கலந்துகொள்ளுகிற வாய்ப்பை நானும் பலமுறை பெற்றிருக்கிறேன். நானே கூட ஆச்சரியப்படுவதுண்டு. இந்த மன்றத்திற்குக் கல்வி அமைச்சர் மட்டும் வந்தாலே போதும், மற்ற அமைச்சர்கள் வர வேண்டிய அவசியம் கூட இல்லை என்று எண்ணுவதுண்டு. மாண்புமிகு திரு. நாவலர், கல்வியமைச்சராக இருந்த காலத்திலிருந்து பெரும்பாலான நாட்களில் ஆசிரியர்கள்பற்றியும், அவர்களுக்கு என்ன ஜி. ஓக்கள் வெளியிடப்பட்டுள்ளன என்பதைப்பற்றியும், அது பிறப்பிக்கப்பட்ட தேதி பற்றியும், அதனுடைய எண்பற்றியும் பேசப்படுவதைக் கேட்டுப் பழக்கப்பட்டவன் என்கிற காரணத்தாலேதான், ஒருவேளை கல்வியமைச்சர் மட்டும் இருந்தாலே போதும் என்று நினைப்பதுண்டு. இங்கே மேலவை உறுப்பினர்கள், ஆசிரியர்களின் சார்பிலே எதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்தினார்களோ அந்தப் பிரச்சினைதான் மாண்புமிகு கல்வியமைச்சரையும் இழுத்துச் சென்றிருக்கிறது என்பதை அறிகிறபோது, அது உண்மையிலேயே இந்த அரசு பிரச்சினைகளைத் தீர்ப்பதில் எவ்வளவு அக்கறை எடுத்துக்

கொண்டிருக்கிறது என்பதைக் காட்டுகிறது. இங்கே மேலவை நடைபெறும்போது கூட மேலவையிலே இருக்கிற உறுப்பினர்கள் எவ்வளவு கவலையை அடைகிறார்களோ அதே அளவுக்கு அரசாங்கத்திற்கும் கவலையுண்டு. அதைத் தீர்க்க வேண்டும் என்பதிலே அக்கறை எடுத்துக்கொண்டதன் விளைவாகத்தான் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் பிரச்சினைகளின் தன்மையைப்பற்றிப் பேசுகிறார். ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சில யோசனைகளைச் சொன்னார்கள். அவர்கள் நான்காவது முறையாக ஆசிரியர்கள் மத்தியிலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார் என்ற மகிழ்ச்சிக்குரிய செய்தியைச் சொல்லி, "பாம்புக்குத் தலையும், மீனுக்கு வாலையும் காட்டிப் பழக்கமில்லை" என்று குறிப்பிட்டு, 'ஏ'-வின், 'பி'-வின் ஆகிய இரண்டு ஆசிரியர்களிடத்திலேயும் வாக்குறுதிகளைப் பெற்றேன் என்று சொன்னார்கள். அனுபவமிக்க அவர்களுடைய யோசனைகளை நிச்சயமாக அரசாங்கம் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலே கூட, தற்காலிகமாக 10(ஏ)(1) அடிப்படையில் பல ஆண்டு காலமாகப் பணிபுரிகிற பலரும், தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வருகிற நேரத்தில், வெளியே அனுப்பப்படுகிறார்கள் என்ற நிலைமையைத் தீவிரமாகச் சிந்தித்து வருகிறோம். இதற்கு முடிவு காணப்பட வேண்டும் என்பதில் அரசாங்கம் அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, கேரளாவிலும் இதுபற்றி ஏற்கெனவே ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள் என்பதையும் நாங்கள் அறிவோம். இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஆசிரியர்கள் துறையிலே மட்டுமல்ல, தலைமைச் செயலகத்திலும் அப்படித்தான், பொதுப் பணித் துறையில் இன்ஜினியர்களுடைய நிலைமையும் அப்படித்தான் இருக்கிறது. பல்வேறு துறைகளிலும் தற்காலிகமாக நியமனம் பெறுகிறவர்கள், தற்காலிகமாகவே பணிபுரிகிற நிலைமையும், தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வருகிற சூழ்நிலையில், அவர்கள் வெளியே செல்ல வேண்டிய நிலையும், அப்போது அவர்கள் வயது அதிகமாகி, வேலையில் இருந்த காரணத்தால் திருமணமும் ஆகி, அதோடு மட்டுமல்லாமல் குழந்தைகளும் பெற்று, அதற்குப் பிறகு வேலையிலிருந்து நீக்கம் என்று வருகிறபோது, அவதிக்குள்ளாகிறார்கள் என்பதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே உணர்ந்து, அது சம்பந்தமாக அக்கறை எடுத்துக்கொண்டு, இதை விரைவில் தீர்க்க வேண்டும் என்று ஆராய்ந்து வருகிறோம் என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், 'ஏ' வின், 'பி' வின் ஆசிரியர்களுடைய பிரச்சினை நீண்ட காலமாகத் தாமதம் செய்யப்பட்டு வருகிறது என்று சுட்டிக் காட்டினார்கள். இது நீண்டகாலப் பிரச்சினை என்பது அவர்களுக்கும் தெரியும், எங்களுக்கும் நன்றாகத் தெரியும். இந்த மன்றத்திலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்களும் நன்றாக அறிவார்கள். ரொம்ப நாளாகப் புரியாமல் இருந்தது. ஆனால் திரும்பத் திரும்ப எடுத்துச் சொன்ன பிறகு, இன்றைக்கு 'ஏ' வின் 'பி' வின் ஆசிரியர்கள் நிலைமையைக் குறித்து முடிவு எடுக்க வேண்டுமென்று சொன்ன கருத்தை நிச்சயமாக அரசு பரிசீலிக்கும் என்பதை நான் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 7-20)

அடுத்தபடியாக, சேலத்திலே நடைபெற்ற பொருட்காட்சியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி நல்லதொரு விளக்கத்தை மாண்புமிகு அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பொருட்காட்சி நடைபெற்று, அதிலிருந்து வருமானம் வர ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே, நஷ்டம் தான் வரும் என்ற முறையில் உறுப்பினர் திரு. பெரியண்ணன் அவர்கள் பேசினார்கள். ஒரு குழந்தை பிறந்தால் கூட நீ வளர்ந்து நல்லவன் ஆக வேண்டுமென்று தான் வாழ்த்துவார்களே தவிர, நீ வளர்ந்து பிக்பாக்கெட்காரனாக வர வேண்டுமென்று யாருமே வாழ்த்த மாட்டார்கள். அதைப் போல இது உறுப்பினர் வாழ்த்தியிருக்க வேண்டிய ஒன்று. தனியாரிடம் அதனுடைய வருமானம் போவதை விட அரசாங்கத்திற்கு அல்லது அரசு சார்பாக நடைபெறக் கூடிய உள்ளாட்சி மன்றங்கள் போன்றவற்றுக்கு வந்தால், அந்தப் பணத்தைக் கொண்டு பொது மக்களுக்கு ஒட்டுமொத்தமாக வளர்ச்சிப் பணி போன்ற நன்மைகளைச் செய்ய முடியும். அடுத்தபடியாக, அங்கு இரண்டு இலை, மாம்பழத்தில் இடம் பெற்றிருக்கலாமா என்று கேட்டார்கள். இரட்டை இலையைப் பார்த்து இவ்வளவு எரிச்சல் மாண்புமிகு உறுப்பினருக்கு வரும் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை. பொதுவாக இலையைப் பார்த்துத்தான் என்ன பழம் என்று தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. இலை இருப்பதால் குழப்பங்கள், சிக்கல்கள் வருகின்றன என்று சொன்னார்கள். அது என்ன என்பதைச் சரியாக அடையாளம் காட்டுவதற்காகத் தான் இரட்டை இலை அதில் இடம் பெறுகிறதே தவிர மாண்புமிகு அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் சொன்னதைப் போல,

இரட்டை இலையை மாம்பழத்துடன் காட்டித் தான் விளம்பரம் தேட வேண்டுமென்ற அவசியம் நிச்சயமாக இந்த அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** எங்களுக்கு எரிச்சல் ஒன்றும் கிடையாது. இலையைப் பார்த்துத்தான் மாம்பழம் என்று புரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. இயற்கையாக அப்படி 3 பல்லை பார்க்கும்போது, அப்படிப்பட்ட ஒரு சங்கடமான நிலையை ஏன் தோற்றுவிக்க வேண்டும் என்பது தான் என்னுடைய கேள்வி. மற்றபடி நீங்கள் ஆயிரம் இலையைப் போடுங்கள், எங்களுக்கு அதைப்பற்றிக் கவலையில்லை.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** உறுப்பினர் திரு. பெரியண்ணன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், மதுரையிலே நடத்திய சித்திரைப் பொருட்காட்சியிலே இரட்டை இலையைப் போடவில்லை. கோபுரத்தைப் போட்டோம். அதேபோல சென்னையில் நடைபெற்ற பொருட்காட்சியில் மாமல்லபுரத்தைப் போட்டோம். இரட்டை இலை மேற்கண்ட பொருட்காட்சிகளில் இடம்பெறவில்லை என்பதை உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** நான் சொல்வதெல்லாம் இரட்டை இலைக்கு பதிலாக கொல்லிமலை, ஏற்காடு போன்றவற்றை போட்டிருந்தால், மிகச் சிறப்பாக இருந்திருக்கும் என்பது தான்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாம்பழத்திற்கு சேலம் தான் பெயர் பெற்றது. அதே போல பலாப் பழத்துக்கு பண்ருட்டி தான் பெயர் பெற்றது என்பதையும் உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையால் அந்தப் பெருமையையெல்லாம் இழக்கக் கூடாது என்பதற்காகத் தான் அது இடம் பெற்றது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, உறுப்பினர்கள் பேசும்போது மற்றொரு கருத்தைச் சொன்னார்கள். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் என்று நினைக்கிறேன். ஊதியக் குழுவினுடைய அறிக்கையின் மீது உடனடியாக ஏதாவது முடிவை அரசு அறிவிக்க வேண்டுமென்று குறிப்பிட்டு "டிலேசல் டேஞ்சரஸ்" என்று குறிப்பிட்டார்கள். அதே ஆங்கிலத்தில் "ஹேஸ்ட் மேக்ஸ் வேஸ்ட்" என்றும் இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவசரம் கேடு விளைவிக்கக்கூடியது. அண்ணா பிறந்தநாளையொட்டி முடிவு அறிவிக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களே நிதானத்துக்குப் பெயர் போனவர். சட்டமன்றத்தில்



உறுப்பினராக இருந்த காலஞ்சென்ற உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் இன்ன காரியத்தை அவசரமாகச் செய்யவில்லையே என்று அறிஞர் அண்ணா அவர்களைப் பார்த்துப் பேசி, Your days are numbered என்று குறிப்பிட்டார்கள். அதற்கு அண்ணா அவர்கள் But my steps are measured என்று சொன்னார்கள். அண்ணா அவர்களுடைய வழியில் அடி எடுத்து வைத்து ஆட்சி செய்கின்ற புரட்சித் தலைவர் அவர்கள் நிச்சயமாக நிதானமாக முடிவெடுக்க வேண்டுமென்பதை அறிந்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக அது அரசின் தீவிர பரிசீலனையில் இருக்கிறது என்பதையும், தக்க நேரத்தில், தக்க முடிவெடுத்து, தக்கவர்களுக்கு அறிவிக்கப்படும் என்பதையும் நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

இங்கே மற்றொரு கருத்து கூட வலியுறுத்தப்பட்டது. சட்டமன்றப் பேரவையிலே உறுப்பினர்கள் எழுப்புகிற பிரச்சினைகளுக்கு உடனே பதில் கிடைக்கிறது. மேலவையிலே அப்படிக் கிடைக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் குறைபட்டுக்கொண்டார். அதோடு மட்டுமல்லாமல் "இங்கே நாங்கள் கேள்வி கேட்டு பிரச்சினையாக்கிய தனியார் கல்லூரிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களுடைய பணிப் பாதுகாப்பு பற்றி ஆசிரியர் தினத்தில் அறிவிக்கலாமா ? அப்படி அறிவித்தால் எங்கள் நிலை என்ன ஆகும்" என்று வருத்தப்பட்டார்கள். அந்த முடிவு எந்த நாளில் அறிவிக்கப்பட்டது என்பதைப் பார்க்க வேண்டும். ஆசிரியர் தினத்தில் அறிவிக்கப்பட்டது குறித்து ஆசிரியர் பிரதிநிதிகள் என்ற முறையில் அவர்கள் பெருமையாக அதைக் கருதுவார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். மற்றவர்கள் தான் அதைக் குறைவாகச் சொல்ல வேண்டும், குறை காண வேண்டுமே தவிர, ஆசிரியர் பிரதிநிதியாக வந்திருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் அவ்வாறு கூறியிருப்பது எங்களுக்கு ஏமாற்றத்தைத் தருகிறது. அவ்வாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களால் ஆசிரியர் தினத்தன்று அறிவிக்கப்பட்ட அறிவிப்பைக் கூட உங்களைப் போன்றவர்களுடைய ஆலோசனையால் என்று எடுத்துக்கொள்ளலாம், தூண்டுதலால் என்று அதை எடுத்துக் கொள்ளலாம், நல்ல முயற்சிகளால் எடுத்துக்கொள்ளப்பட்ட முடிவு என்று எடுத்துக் கொள்ளலாம். நிச்சயம் அதை சந்தேகத்தோடு எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் இந்த அரசாங்கம் நல்லபடியாக நடைபெற வேண்டும் என்பதில் மிகவும் அக்கறை கொண்டவர், ஆர்வம் கொண்டவர். அவர் பேசும்போது மிகவும்

சுவையாகப் பேசுவார். சில நேரங்களில் குறைகள் இருந்தால், சுட்டிக் காட்டிப் பேசுவார்கள். இந்த அரசு எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்கிறது. ஆனால் நடைமுறையில் பார்க்கும்போது வேதனையாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஒரு நிர்வாகத்தை முழுமையாகச் சீர்திருத்துவது என்பது அவ்வளவு சுலபமாக முடியக் கூடிய காரியமல்ல. ஓரே ஆண்டில் செய்து விட முடியாது. படிப்படியாகத் தான் சீர்திருத்த வேண்டியிருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. ஓராண்டிலே முடியவில்லை என்பதாலே அதற்கான முயற்சிகளைத் தளர விட முடியாது என்பதையும் நான் எடுத்துச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன், அவர் இன்னொரு முக்கியமான கருத்தைச் சொன்னார். அதற்காக அவருக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்களைப் பொறுத்தவரை, அவர்கள் நன்றாகத்தான் இருக்கிறார்கள். கீழே உள்ள அதிகாரிகள் மட்டத்தில்தான் தவறுகள் செய்கிறார்கள் என்று சுட்டிக்காட்டினார்கள். அதற்காக அவருக்கு நன்றி. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் சொன்ன ஒரு கருத்தை நான் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசியல்வாதிகள் மட்டத்தில் நாம் ஓரளவுக்கு, ஏன் பெருமளவுக்கு இன்றைக்கு லஞ்ச ஊழல் நடமாட்டத்தைத் தவிர்த்திருக்கின்றோம். ஆனால் அதிகாரிகள் மட்டத்தில் மட்டும் சில இடங்களில் அதுமாதிரி இன்றைக்கும் இருக்கலாம். இல்லையென்று மறுப்பதற்குத் தயாராயில்லை. நாம் யாராவது குற்றங்கள் செய்தால், அதைப் பற்றிச் சொல்வதற்கு, விசாரிப்பதற்கு, தண்டிப்பதற்கு என்றைக்கு நம்மை நாமே தயாராக்கி விட்டோமோ அன்றைக்கே அந்தத் தீமை கீழ்மட்டத்திலும் மறைய ஆரம்பமாகி விட்டது என்று கொள்ளலாம். ஆனால் அதற்குக் கால தாமதமாகும். கால வெள்ளத்தில் அது நிச்சயமாக முழுமை பெறும் என்பதை மட்டும் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். சான்றாக ஒன்றை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். மின்சார வாரியத்தைப் பொறுத்தவரை, முன்பெல்லாம் மின் இணைப்புக் கேட்டு விவசாயிகள் மனுச் செய்தால், சீனியாரிட்டி அடிப்படையில், வரிசைக் கிரமப்படி கொடுப்பதில்லை. அவர்கள் இஷ்டப்படி கொடுத்து வந்தார்கள். ஆனால் சமீபத்தில் எந்தத் தேதியிலிருந்து மின்சாரத்திற்கு விவசாயிகள் மனுப் போடுகிறார்களோ, அந்த மனுக்களின் தேதியின் அடிப்படையில் ஸ்டிரிக்ட் ஆக வரிசைக் கிரம, சீனியாரிட்டி அடிப்படையில் மின் இணைப்பு வழங்கப்பட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறோம். இந்த உத்தரவின் மூலம் விவசாயிகளை ஆட்டிப் படைத்துக்கொண்டிருந்த ஒரு பெரும் சுமை அகற்றப்பட்டு விட்டது என்பதற்கு இது ஒரு சான்று. அதில் நடைபெற்றுக்கொண்டிருந்த காப்ஷன்



அகற்றப்பட்டது. அப்படி ஒவ்வொரு நிலையிலும் இந்தக் காரியங்களை ஆராய்ந்து நான் செய்ய வேண்டியிருக்கிறது. நாம் நம்முடைய நிர்வாகம் நூற்றுக்கு நூறு தூய்மையாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கலாம். அது பொருத்தமாகக் கூட இருக்கலாம். ஆனால் நடைமுறையில் உலக நாடுகளில் கூட இன்றையதினம் ஏதோ ஒன்று அல்லது இரண்டு நாடு என்ற அளவில் தான் அந்த நிலைமை இருக்கின்றது. அவர்கள் எடுத்துக் காட்டிய அந்த நல்ல உணர்வுகளுக்கு உள்ளபடியே நான் நன்றி செலுத்துகின்றேன். இங்கே அவர்கள் மேலும் பேசுகிறபொழுது, விழுப்புரம் சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி அதிகமாகப் பேசுவது சரியாக இருக்காது. காரணம் அதைப் பற்றி விசாரிப்பதற்கு ஒரு முன்னாள் நீதிபதி அவர்கள் நியமிக்கப்பட்டு விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. அந்த மாவட்டத்திலிருந்து நானும் வருகிறவன் என்பது மற்றொரு காரணம். எனவே அதைப் பற்றி இந்த சமயத்தில் அதிகமாகப் பேசாதிருப்பது சிறந்தது என்று கருதுகின்றேன். ஆனால் நம்முடைய நாட்டில் அத்தகைய சம்பவங்கள் ஏற்படாமல், உயிர் இழப்புகள், உடைமை சேதங்கள் போன்றவை ஏற்படாமல் தவிர்க்கப்பட வேண்டும். அதை ஒரு கட்சி தான் அல்லது ஆட்சியாளர்கள் தான் செய்ய வேண்டும் என்பது அல்ல. அரசு தான் செய்ய வேண்டும் என்பது அல்ல. பொதுத் தொண்டில் ஈடுபட்டிருக்கக் கூடிய நாம் அனைவரும் இணைந்து தொடர்ந்து அத்தகைய போக்குகள் ஏற்படாமல் நீக்குவதற்குப் பாடுபட வேண்டும் என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் டியூட்டர்-கம்-வார்டன் நியமனம் பற்றிச் சொன்னார்கள். ஏற்கனவே டியூட்டர்-கம்-வார்டன்களாக இருந்தவர்கள் தவறு செய்தார்கள் என்பதற்காக அவர்களை ஆசிரியர்களாக நியமித்து விட்டார்கள், ஆசிரியர்களாக இருந்தவர்களை டியூட்டர்-கம்-வார்டன்களாக நியமித்து விட்டார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் குறை பட்டுக்கொண்டார். எனக்கு உள்ளபடியே அந்த இடம் அப்படியா அல்லது நியமிக்கப்பட்ட ஆட்கள் அப்படியா என்ற சந்தேகம் வந்தது. அத்தகைய போக்கு எங்காவது இருந்தால், நிச்சயம் கல்வித் துறை அவற்றைச் சீர் செய்து நடவடிக்கை எடுக்கும்.

(பிற்பகல் 7-30)

பெருந்தலைவர் காமராஜ் பிறந்த நாளை ஒட்டி இந்த 10 சத விகிதம் கிரேட் தந்தார்கள். அது 25 சத விகிதம் ஆக இருக்க வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். காமராஜ் அவர்களுடைய புகழுக்கு ஏற்ற வகையில், பெருமைக்கு ஏற்ற வகையில் சத விகிதம் உயர வேண்டுமென்று சொன்னார்கள். அது

ஒரு புதிய ஃபார்முலா என்று கருதுகிறேன். இதுவரையில் அத்தகைய முறை கையாளப்படவில்லை. ஒரு தலைவருக்குத் தகுந்தபடி சதவிகிதத்தை ஏற்ற வேண்டுமென்றால் நூற்றுக்கு நூறு இனமாகக் கொடுக்க வேண்டுமென்ற நிலைமை கூட வரலாம். பத்து சதவிகிதம் விலையில் குறைத்து விற்கிறார்கள் என்றால், நல்ல நேரமாகப் பார்த்து, அந்த நேரத்தில் விற்பனையை அதிகரிக்க வேண்டுமென்பதற்காக செய்யப்படுகிறதே தவிர, தலைவர் பெருமையை அளப்பதற்காகப் போடுவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. முத்துசாமி அவர்கள் உணர்ச்சி வசமாகி பலவற்றைக் குறிப்பிட்டார்கள். என்.ஜி.ஓ. வுக்குச் சமமாக ஆசிரியர்களை நடத்தக் கூடாதா; முதலாவதாக நடத்தப்படவில்லை என்றாலும், சமமாக நடத்தப்படக் கூடாதா என்று உணர்ச்சி மிகுதியில் பேசினார்கள். அவர்களுக்குச் சொல்ல விரும்புவது, இதில் மூக்குக் கண்ணாடி அளிப்பது என்பது நலிவுற்ற பிரிவினருக்கு என்ற அடிப்படையில் அரசாங்கம் செய்கிறது. வேறு ஒரு நோக்கமும் அதில் இல்லை. அதில் ஆசிரியர்களுக்கு என்ற நிலைமைபற்றி நிச்சயமாக தற்போது குறிப்பில் இல்லை என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆசிரியர்களுக்கு மூக்குக் கண்ணாடிதானா கேட்க வேண்டும்? வேறு எவ்வளவோ இருக்கின்றன. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியதைப் போல, பிரச்சினைகள் அதிகமாக இருக்கின்றன. இதை ஒத்தி வைக்கலாம். அதில் திரு. முத்துசாமிக்கு எந்தவிதமான கஷ்டமும் இருக்காது என்பது தெரியும்.

ஆசிரியர்கள் மாறுதல்களைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். என்னுடைய அனுபவத்தை வைத்துக் குறிப்பிடுவது என்றால், ஆசிரியர்கள் மாற்றம் இப்போது எங்களாலேயே கூட செய்ய முடியவில்லை. இதுதான் உண்மை. அந்த அளவுக்கு இலாகா பூர்வமாகக் காரியங்கள் நடக்கிற நிலைமையைப் பார்க்கிறோம். இலாகாவில் உள்ளவர்கள் தவறு செய்தால், திரு. முத்துசாமி சுட்டிக் காட்டியதைப் போல, அவரிடம் அதற்கான ஆதாரங்கள் இருந்தால், நிச்சயமாகக் கல்வி அமைச்சரிடம் தரலாம். அதைக் கல்வி அமைச்சர் அவர்கள் முடிந்த அளவுக்குச் செய்து சீர்திருத்தத் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிர்வாகத்தில் எந்த அளவுக்குத் தலையிடாமல் இருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு இருக்க வேண்டுமென்று கடந்த ஓராண்டாக தமிழகத்தில் ஆட்சி நடக்கிறது. மற்ற மாநிலங்களுக்குச் செல்லும்போதும், மத்திய அரசிடம் பேசும்போதும் தமிழக அரசைப் பொறுத்தவரையில், ஒரு நல்ல எண்ணம் வந்திருக்கிறது, ஒரு மரியாதை கிடைத்திருக்கிறது என்பதை என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும். இதை உளப் பூர்வமாக மற்ற மாநிலத்தில் உள்ளவர்கள், மத்தியில் உள்ள





வர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். அது தமிழகத்திற்குக் கிடைத்திருக்கின்ற பெருமை என்று சுட்டிக் காட்டி, என் உரையை இந்த அளவோடு முடித்துக் கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: தலையீடு என்பது ஒன்று. முறையீடு என்பது ஒன்று. தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற நாங்கள் அதிகாரிகளிடம் முறையீடு செய்கிறோம். தலையீடு கூடாது என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. முறையீடுகள் கவனிக்கப்படுவதில்லை. அதிகாரிகள் தங்களுடைய போக்கில் தன்னிச்சையாக நடந்து கொள்கிறார்கள். அவற்றை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். அதற்கு என்குயரி போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அநியாயம் நடக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முடிந்த விவாதத்தை மீண்டும் ஏன் கிளப்புகிறீர்கள்? விவாதம் முடிந்து அமைச்சர் பதில் சொன்ன பிறகு, மறுபடியும் அதைத் தொடர்வது பார்லிமெண்ட் முறைக்கு முரணானது. தொடர்ந்து மறுபடியும் பேசினால் என்ன அர்த்தம்?

திரு. செ. முத்துசாமி: அவைத் தலைவர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவைத் தலைவருக்கு அது தெரியும் என்பதை அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: அடக்கத்தோடும் பணிவோடும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: எப்போதும் ஒரே விஷயத்தைத்தான் மீண்டும் மீண்டும் பேசுகிறீர்கள்.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்கள் இப்படி நாங்கள் பேசும்போது அப்படி அப்படியே வெட்டிவிட்டால், எங்களுடைய உரிமை என்னாவது? ஒரே விஷயத்தைத்தான் சொல்கிறோம் என்றால், அதை அரசு கேட்க வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறோம். நலிவுற்ற சமுதாயம்—தொடக்கப் பள்ளி ஆசிரியர் சமுதாயம். 80 ஆயிரம் பேர் இருக்கிறோம். உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்கள் ஹையர் கிரேடு ஆசிரியர்கள் ரூ. 150 அடிப்படைச் சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கவனத்திற்குக் கொண்டு வந்து அவர்களுக்கு அநியாயம் நடத்தப்படுகிறது என்பதைத்தான் நான்

குறிப்பிடுகிறேன். பல பிரச்சினைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதை இந்தக் கூட்டத் தொடரிலேயே செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தமிழ் நாட்டில் ரூ. 40-க்கும் குறைந்த வருமானம் உள்ளவர்கள் இருக்கிறார்கள். அவர்களையும் நாம் கவனிக்க வேண்டுமென்பதை சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தலையீடு முறையீடு என்பதல்ல பிரச்சினை. யாருக்கேனும் அநீதி இழைக்கப்பட்டிருந்தால், அதைத் திருத்துவது என்பது வேறு. ஆதாயத்திற்காகப் போவது என்பது வேறு. அதைத்தான் நான் எடுத்துச் சொன்னேன்.

தலைவர் அவர்களே, நம்முடைய பெரியவர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் கூப்பன்பற்றிச் சொல்லாமல் போகிறீர்களே என்று கேட்கிறார்கள். உண்மையிலேயே அதைச் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். எப்படியோ மறந்து விட்டது. ஏற்கனவே சட்டமன்றப் பேரவை மேலவை உறுப்பினர்களுக்கு என்னென்ன சலுகைகள் வழங்க வேண்டுமென்று அரசின் சார்பில் உத்தரவாதம் அளிக்கப்பட்டதோ அவையெல்லாம் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டியிருக்கிறது. அவை திருத்தமாக வர வேண்டியிருக்கிறது. சட்டத் திருத்த மசோதாவை இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வந்து நிறைவேற்றி உறுப்பினர்கள் போகிறபொழுது மன நிறைவோடு செல்கிற அளவுக்கு நீங்கள் அதை ஆதரித்து நிறைவேற்றித் தருவீர்கள் என்ற நம்பிக்கையோடு கொண்டுவர இருக்கிறோம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் 11-9-78 திங்கட்கிழமை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

[பிற்பகல் 7.37]





## 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

86. The Tamil Nadu Government's review on the working of the Tamil Nadu State Farms Corporation Limited, Madras for the year ended 1974–76 together with First Annual Report and Statement of Accounts. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

### B. *Reports, Notifications and other papers.*

20. Return of Assets of Thiru V. K. Konthandaraman, M.L.A., and Thiru M.A. Latheef, M.L.A., as on 31st March 1978, placed on the Table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislative Assembly on the 27th August 1969.

21. Report of the Committee on Public Accounts on the Report of the Comptroller and Auditor General of India for the year 1973–74 (Revenue Receipts) (Tamil).

நக்கின்றது. உரிமங்கள் வழங்குதல், வர்த்தகக் தனியார் ஏஜெகள், கையிருப்புக்கு உச்சவரம்பு நிர்ணயித்தல் கட்டுப்பாடிக்கைகளின் மூலமாகத்தான், மத்திய மாநில போன்ற வாசிகள் நிலைமையை கண்காணிக்க இப்போது வழி அரசுகள்ணெய் வகைகள், பருப்பு வகைகள் ஆகியவற்றில் உள்ளன கையிருப்புக்கு உச்சவரம்புகள் நிர்ணயித்து, மத்திய வர்த்னகள் வெளியிட்டுள்ளது. இவை மாநில அரசினால் அமுல்படுத்தப்படுகின்றன. இது போலவே மக்கள் அன்றாடம் தெ பொருட்களைப் பொறுத்தவரையில் கையிருப்பு உள்ளதா, வன விலை என்ன என்பதைப் பொது மக்களுக்கு அறிவிக்கும் ்ககளை ஒவ்வொரு கடைகளிலும் வைத்திருக்க வேண்டும் று மாநில அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மத்திய அரசின் ுவான கொள்கை வரம்புகளுக்கு உட்பட்டும், மாநில அதிகார வரம்புக்கு உட்பட்டும், விலைவாசிப் பிரச்சினையில் ன்னிப்பாகக் கவனம் செலுத்தி வருகிறது. நுகர்வோர் நலனைப் பாதுகாத்துக்கொள்ள விழிப்பாக இருப்பதும் ஏற்றத்தைத் தடுப்பதில் முக்கியமான ஓர் அம்சம். மையாப் பொருட்களுக்கு வர்த்தகர்களே சுய கட்டுப் மேற்கொள்வதற்காக, ஆலோசனை கூற பண்டக்குழுக்கள் d ties Board) நியமக்கும் யோசனையையும் வர்த்தகர்கள் க்கவேண்டுமென்று, உணவு அமைச்சர் என்ற முறையில் அழைப்பு விடுத்துள்ளேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அறிவிப்பு ஏறக்குறைய எல்லா இன்றியமையாப் பொருள்களுக்கும் பொருந்தும் என்றும், மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து கவனமாக இருந்து செயல்படுவதாகவும் அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அண்மையில் 'சிமெண்ட்' தனியார் வியாபாரிகளால் மிகவும் அதிகமாக விலை உயர்த்தப்பட்டு விற்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் மத்திய அரசும் மாநில அரசும் இதில் கண்காணிப்பு முயற்சிகளை மேற்கொண்டு சிமெண்ட்டின் விலையைக் கட்டுப்படுத்தி அது தாராளமாகக் கிடைக்கும் வகையில் என்னென்ன வழிமுறைகளைப் பின்பற்றியிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.க.உரொ.எட்மண்ட்: சிமெண்ட்டின் விலையை கட்டுப்படுத்துவது என்பது உணவு வழங்குத்துறையின் அதிகாரத்தில் இல்லை. அது இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்ட்டைப் பொறுத்தது.

திரு. வே. தங்கப்பாண்டியன்: அப்படியென்றால் இன்றியமையாப் பொருள்களின் கீழ் சிமெண்ட் எடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: இன்றியமையாப் பொருள்கள் பட்டியலின்கீழ் 'சிமெண்ட்' எடுக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்ற விவரம் என்னிடம் இல்லை. சிமெண்ட்டினுடைய



விலையைக் கண்காணிக்கிற அதிகாரம் உணவு வழங்குத்துறைக்கு இல்லை என்றாலும், தொழில் துறைச் செயலாளரோடு இதுபற்றிக் கலந்து பேசி இதன் விலையைக் கண்காணிக்க வேண்டும் என்றும் இதன் விலையைக் கட்டுப்பாடாக வைத்திருக்க வேண்டிய அனைத்து முயற்சிகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் ஏற்கெனவே கேட்டுக்கொண்டுள்ளேன்.

N79-15331

திரு.எம்.சங்கரலிங்கம்: இன்றியமையாப் பொருள்களின் விலையை கட்டுப்படுத்துகிற வகையில் அரசு எடுக்கிற முறைகளை, பாங்கினை உணவு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இன்றியமையாப் பொருள்களில் மிகவும் தேவைப்படுகிற விறகின் விலை இப்போது டன் ஒன்றுக்குப் ரூ.200 அளவுக்கு உயர்ந்துவிட்டது. அரசுக் காடுகளிலிருந்து கூப்பாக ஏலம் விடும்போது, சென்ற ஆண்டில் என்ன விலைக்கு ஏலம் விடப்பட்டதோ அதைவிட அதிகமான தொகைக்கு இந்த ஆண்டு விடவேண்டும் என்ற அடிப்படையில் அதை அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே விறகின் விலை உயராமலிருக்க அரசு என்ன கட்டுப்பாடு ஏற்பாடுகளைச் செய்ய இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: கடந்த ஆண்டு தமிழகத்தில் புயல் வெள்ளம் வீசிய நேரத்தில் பொதுமக்களால் உபயோகப்படுத்தப்படும் விறகின் விலை அதிகமாக ஏறுகிறது என்ற புகார் அரசாங்கத்திற்கு வந்த நேரத்தில், அப்போது வனத்துறைப் பொறுப்பில் நான் அமைச்சராக இருந்த காரணத்தால், தமிழக வனத்துறையின் மூலமாக விறகை நேரடியாக நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் கொண்டு சென்று விற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ததன் மூலமாக, விறகு விலை கட்டுப்படுத்தப்பட்டது. இன்றையதினம் வனத்துறையின் அமைச்சராக மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் அவர்கள் இருக்கிறார்கள் என்றாலும், அவர்களோடு நான் பேசி அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று அவரிடம் கேட்டுக்கொள்ள இருக்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, the recent floods in the North have caused great havoc and it is expected that we are likely to have very severe shortages of pulses, grams, edible oils, etc. May I know whether the Tamil Nadu Government have considered this matter and whether they have enough buffer stocks of certain essential commodities for fulfilling the commitments of our Civil Supplies shops in Tamil Nadu at present?

மாண்புமிகு திரு.க.உரொ. எட்மண்ட்: [illegible] வகைகளைப் பொறுத்தவரையில், அவ்வளவு பயப்பட[illegible]வேண்டிய சூழ்நிலை இல்லை என்றுதான் நான் கருதுகிறேன். [illegible] மாநிலத்தைப் பொறுத்தவரையில், அதிகமான அளவுக்கு[illegible]எண்ணெயை குஜராத் மாநிலத்திலிருந்துதான் வாங்கிக்கொண்டிருக்கிறோம்.

மாநிலம் வெள்ளத்தால் தற்போது பாதிக்கப்படவில்லை. மேலும் தமிழகத்தைப் பொறுத்தமட்டில் எண்ணெய் நிலைமை மிகவும் திருப்திகரமாக இருக்கிறது. அதைப் போலவே சில அத்தியாவசியப் பண்டங்களின் தேவையைப் பொறுத்த வகையிலும் நாம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாநிலங்களிலிருந்து அதிகமாக வாங்குவது இல்லை. ஆகவே இதைப்பற்றியும் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை என்றே கருதுகிறேன். மேலும் அரசு ஆரம்பித்திருக்கிற நியாய விலைக் கடைகளின் மூலம் இப்படிப்பட்ட அத்தியாவசியமான பண்டங்களின் விற்பனைக்காகத் தேவைப்படும் பொருள்களும் விற்பனை செய்வதற்குத் தேவையான அளவு அரசின் கையிருப்பில் இருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி: இன்றியமையாத பொருள்களின் விலையைக் குறைப்பதைப் பொறுத்தவரையில், தமிழக அரசின் உணவுத்துறை இதனை வாங்குவோர் கோணத்திலிருந்து அணுகுகிறதா அல்லது பொருள்களை உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலை கிடைக்க வேண்டும் என்று அவர்களுடைய கோணத்திலிருந்து அணுகுகிறதா என்று அறிய விரும்புகிறேன். உதாரணமாக மணிலாவைப் பொறுத்தவரையில், சமீபகாலத்தில் அதன் விலை மிக வேகமாகக் குறைந்து வருகிறது. இதன் விளைவாக விவசாயிகளுக்குத் தேவைப்படும் மற்ற பொருள்களின் விலைகள் குறையாத நிலையில் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள் மட்டும் விலை குறையும் நிலையில் மிகுந்த சங்கடத்திற்கு உள்ளாகிறார்கள். அதோடு ஏற்கனவே இருக்கிற பிரச்சினைகளே தீராத நிலையில், இப்படிப்பட்ட பிரச்சினைகள் உண்டாகும்போது மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, அவர்கள் கோணத்திலிருந்து அணுகி விவசாயிகளினுடைய உற்பத்திப் பொருள்களுக்கு விலை குறைவு ஏற்படாத அளவுக்கு, முடிந்த அளவுக்கு கூடுதலான விலை கிடைக்கத் தக்க வகையில் நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: இரண்டு குழப்பமான கேள்விகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எழுப்பியிருக்கிறார்கள். குறைந்த விலையில் அத்தியாவசியப் பண்டங்கள் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படவேண்டும் என்று அரசு விரும்புகிறது. அதற்கு வாங்குகிறவர்களுடைய பக்கத்திலேயிருந்து தான் கண்காணிக்க வேண்டுமே தவிர, உற்பத்தி செய்பவர்களின் பக்கம் இருந்துகொண்டு கண்காணிக்க முடியாது. அவ்வாறு செய்தால், விலையைப்பற்றி நாம் கவலைப்பட முடியாது. பொருள் உற்பத்தியாளர்களுக்கு மட்டும் நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்ற முடிவுக்கு மட்டும் அரசு வந்தால் உற்பத்தியாளர்களுக்குக் கூடுதலாக விலை கிடைக்கும். ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரையில், அத்தியாவசியப் பண்டங்களைக் குறைந்த விலையில் தரவேண்டும் என்பது தான் எங்கள் நோக்கம் என்று தெளிவாகச் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறேன். நாம் விவசாயிகளிடமிருந்து கட்டாயக் கொள்முதல் அல்லது சாதாரண



கொள்முதல் செய்வது என்று முடிவு எடுத்தது, தமிழகத்தைப் பொறுத்தவரையில், நெல் மற்றும் அரிசி மட்டும்தான். இவைகளுக்கான விலையை நாம் நிர்ணயம் செய்திருக்கிறோம். அப்படிக் கொள்முதல் செய்யும்போது, முழுமையான மனநிறைவு கொள்ளும் அளவுக்கு விலை இல்லை என்றால், குறைகூறாத அளவுக்காவது இருக்கும். அவர்களிடம் வாங்கிய விளைபொருளை பங்கிட்டுக் கொடுக்கிற நேரத்தில், வாங்கி உண்பவர்களும் ஓரளவுக்கு நியாயமான விலை கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் திட்டம் வகுத்துச் செயல்படுத்தி வருகிறோம். மற்ற அத்தியாவசியப் பண்டங்களைப் பொறுத்த மட்டில், நாம் அவற்றையெல்லாம் வேறு மாநிலங்களிலிருந்துதான் வாங்கி இந்த மாநிலத்தில் விநியோகம் செய்கிறோம். நம்முடைய மாநிலத்தில் இருக்கும் விவசாயிகளிடமிருந்து அவர்கள் உற்பத்தி செய்யும் அத்தியாவசியப் பண்டங்களைக் கொள்முதல் செய்வதில்லை என்பதை உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மணிலாவைப் பொறுத்த மட்டில், விலை குறைந்துகொண்டு இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் விலை குறைந்துகொண்டிருந்தாலும், அவர்களுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்றுதான், இன்றைய தினம் மணிலாப் பயிரைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டைப் விட்டு வெளி மாநிலங்களுக்கு அதைக் கொண்டு சென்று விற்பதற்கான அனுமதியை இந்த அரசு வழங்கியிருக்கிறது.

THIRU G. VASANTHA PAI: Will the Hon. Minister be pleased to note that cement which is in short supply is left to the charge of a Department or Association for distribution and allocation opposite Palmgrove Hotel where people get some permits and go and collect the cement in quantities of one tonne or two tonnes or whatever it is? Now, many complaints are there from contractors as well as from persons building the houses that they have to go to the blackmarket and get cement and that very often this cement is sold at Rs. 35 per bag and is mixed with ash. Will the Government do something to stop this adulteration even of cement?

[பிற்பகல் 4·10]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு அங்கத்தினர் திரு. வசந்த பை இந்தக் கேள்வியை எழுப்பியதற்கு நான் அரசின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பேர்ப்பட்ட நிலைமைகள்தான் இருக்கின்றன. அரசு அவருடைய கருத்துக்களைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, இப்பேர்ப்பட்ட நிலைமைகளைத் தடுத்து நியாயமான விலையில் சிமெண்ட் கிடைக்க நிச்சயமாக முயற்சி எடுத்துக்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்

[1978 செப்டம்பர் 11

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னபடி முன்பு கிடைத்ததுபோல விறகு கிடைப்பதில்லை. விறகினுடைய விலை விஷம்போல் ஏறுகிறது. இந்தச் சூழ்நிலையில் விறகுக்கு மாற்றாக இன்றையதினம் சென்னை போன்ற நகரங்களில் இந்தியன் கேஸ் சிலிண்டர்கள் பயன்படுத்தப் படுகின்ற நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த சிலிண்டர் தனியார் ஏஜெண்டுகள் மூலமாகக் கிடைக்கக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அதனால் இந்த கிராக்கி ஏற்பட்டிருக் கிறது. இந்த அரசு மத்திய அரசுடன் பேசி உணவுத்துறை மூலமாக இந்தியன் கேஸ் சிலிண்டர்கள் தமிழக மக்களுக்கு மலிவாக, சுலபமாகக் கிடைக்க வழி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.க.உரொ.எட்மண்ட்: மூலக் கேள்வியை விட்டு துணைக் கேள்விகள் வேறு எங்கோ போய்க்கொண்டிருக்கின்றன. இந்தியன் கேஸ் சிலிண்டர்கள் அத்தியாவசியப் பண்டங்களின் பட்டியலிலே இல்லை என்பது மாண்புமிகு அங்கத்தினர் அவர் களுக்குத் தெரியும். விறகு விலையினுடைய ஏற்றத்தை மனத்திலே கொண்டு, நாட்டு மக்கள் பயன் கருதி, மத்திய அரசாங்கத்தோடு இதுபற்றித் தொடர்புகொண்டு இந்தியன் கேஸ் மக்களுக்குக் கிடைக்க இந்த அரசு முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.கே.எஸ்.அப்துல் வகாப்: அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக ஒருவருட காலத்தில் எண்ணெய், பருப்பு போன்ற பொருள்களுடைய விலைகள் குறைந்திருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வேறு எந்தெந்த அத்தியா வசியமான பொருள்களுடைய விலைகள் கணிசமாகக் குறைந்திருக் கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மற்றொன்று, விலைப் பட்டியல்களைக் கடைகளில் போடும் வழக்கம் கொஞ்சகாலமாக இருந்து வருகிறது. எமர்ஜென்சி காலத்தில் கடைகளில் தவறாமல் போர்டுகள் இருந்தன. இப்போது இல்லை. சமீப காலத்தில் எத்தனை பேர்கள் போடவில்லை, எத்தனை பேர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று உத்தேசமாகச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு.க.உரொ.எட்மண்ட்: எந்த எந்த அத்தியா வசியமான பண்டங்களின் விலைகள் கணிசமாக குறைந்திருக்கின்றன என்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இங்கே கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். அத்தியாவசியப் பண்டங்களின் விலை குறைந்திருக்கிறது என்பதை அரசு ஒத்துக்கொள்கிறது. கணிசமான அளவுக்குக் குறைந்திருக்கிறது என்று சொல்வது சரிவராது. அரசு அது மனநிறைவு அளிப்பதாக ஒத்துக்கொள்ளத் தயாராக இல்லை. காரணம் இதைவிட விலை குறைய வேண்டும் என்பதற்காக அரசு



1978 செப்டம்பர் 11]

முயற்சிக்கிறது. ஓர் ஆண்டுக் காலமாக விலைகள் மேலும் ஏற்றம் அடையாமல் இருப்பதற்கு விலைகளைக் கட்டுப்படுத்தியிருக்கிறது. இன்னும் அத்தியாவசியப் பண்டங்களின் விலையை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைப்பதற்குண்டான முயற்சியை இந்த அரசு எடுத்துக் கொள்ளும். ஓரளவுக்குத் தான் குறைந்திருக்கிறது. ஆனால் முழுமையான அளவுக்கு, திருப்தி கொள்ளக்கூடிய அளவுக்கு விலைகள் குறைக்கப்பட வில்லை.

இன்னொரு கேள்வியும் கேட்டார்கள். விலைவாசிப் பட்டியல், கையிருப்பு விவரங்கள் வைக்க வேண்டுமென்றும், எத்தனை கடை களில் இருக்கிறது என்றும், எத்தனை கடைகள் இந்த விதியைக் கடைப்பிடிக்கின்றன என்றும், தண்டனை அடைந்தவர்கள் எத்தனை பேர்கள் என்றும் கேட்டார்கள். விலைப் பட்டியல், கையிருப்புப் பட்டியல் எல்லாக் கடைகளிலும் வைக்க வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டம் இப்போதும் அமுலில் இருக்கிறது. எத்தனை பேர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்று கேட்டார்கள். அப்படி வைக்காதவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கேட்ட கேள்விக்கான புள்ளிவிவரம் இல்லை. எந்த ஒரு குறிப்பிட்ட கடையில் பட்டியல் வைக்கப்படவில்லை என்று மாண்புமிகு அங்கத்தினர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். அதைக் கவனிக்க வேண்டியது அதிகாரிகள் கடமை. அப்படிச் செய்யப்படாமல் இருக்குமானால், அதைத் தெரிவிக்க வேண்டியது அங்கத்தினர் அவர்களின் கடமையுமாகும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: விலைவாசிகள் கணிச மாகக் குறையாவிட்டாலும் அதிகமாக ஏறாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த விதிமுறைகள் கொண்டுவரப்பட்டன என்று சொன்னார்கள். இந்தச் சட்டம் ஏட்டிலே இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாட்டிலே பெரும் பாலும் நடைமுறையிலே இல்லை. பல கடைகளில் பட்டியல் வைப்பதைக் குறைத்து விட்டார்கள், சிலர் நிறுத்தி விட்டார்கள். யாராவது தகவல் கொடுத்தால்தான் நடவடிக்கை எடுப்பது என்பதற்குப் பதிலாக, அரசாங்கமே வற்புறுத்தி அந்தப் பட்டியலை வைப்பதற்கு ஏற்பாடு செய்யுமா? அதன் மூலம் மக்களை, வியாபாரிகள் ஏமாற்றுவதைத் தடுக்க முயற்சிக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: இந்தச் சட்டம் ஏட்டிலே மட்டும் இருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த அரசு சட்டங்களை இயற்றவில்லை. சட்டம் இயற்றப்படுகிறது என்றால், அந்தச் சட்டங்கள் நாட்டிலே நிறைவேற்றப்படுவதற்

காகத்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சில நேரங்களில் அதிகாரிகள் அமுல்படுத்தாமல் இருக்கலாம். அந்த அமுல் படுத்தவேண்டிய பொறுப்பு அதிகாரியிடம்தான் இருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இந்தச் சட்டம் ஏட்டளவிலே தான் இருக்கிறது, உண்மையிலே நடைமுறையில் அமுல்படுத்தப் படவில்லை என்று இன்றையதினம் மன்றத்திலே எழுப்பிய குற்றச் சாட்டு நாளையதினம் பத்திரிகையிலே வரும். அப்போது அதிகாரிகள் விழிப்பாக இருந்து, இந்தச் சட்டத்தை நல்ல முறையில் அமுல்படுத்துவார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். அப்படி அமுல் படுத்தவில்லை என்றால், அரசு தக்க நடவடிக்கை எடுக்கத் தயங்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ராமலிங்கம் : தேங்காய் நாளுக்குநாள் விலை ஏறிக் கொண்டே போகிறது. திருச்சியிலே, தஞ்சையிலே இருக்கக்கூடிய வியாபாரிகள் கிட்டத்தட்ட 80 லட்சம் தேங்காய்கள், இன்னொருவர் 60 லட்சம் தேங்காய்கள் என்று முடக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : தமிழக மக்களுக்குத் தேங்காய் அவசியமான பண்டமாகும். அன்றாட உணவிலே அதை நாம் பயன்படுத்துகிறோம். காலையிலேயிருந்து இரவுவரைக்கும் நமது உணவில் தேங்காய் பங்கு பெறுகிறது, அந்தந்தப் பகுதிகளில் உபயோகிக்கப்படும் முக்கியத்துவத்தைப் பொறுத்து, அந்தந்தப் பண்டங்களை அத்தியாவசியப் பண்டங்களாக மத்திய அரசு பட்டியலில் சேர்க்கிறது. இப்போது தமிழகத்தில் தேங்காய் விலை ஏற்றம் இருக்கிறது. ஒரு ரூபாய் என்று இருந்தது ரூ.1.20, ரூ.1·30 என்று கூட விற்றுக்கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் தமிழகத்திலே திடீரென்று தேங்காய்க்குப் பற்றாக்குறை வந்து விட்டது. போதுமான தேங்காய்கள் இப்போது உற்பத்தியாகின்றன. சில மாதங்களில் தேங்காய் மொத்த வியாபாரிகள் லட்சக் கணக்கான தேங்காய்களைச் சேமித்து வைத்து தேங்காய்க்கு ஒரு ஸ்கேர்சிடி, பற்றாக்குறையை உருவாக்குவதன் மூலம் விலையை ஏற்றிக்கொண்டிருக்கிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்னால்கூட திருச்சி, தஞ்சை, வட ஆற்காடு, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தேங்காய் வியாபாரிகள் பதுக்கல் செய்தால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றுபேசியிருக்கிறேன். மத்திய அரசு தேங்காயை அத்தியாவசியப் பொருள்களில் ஒன்றாகக் கொண்டுவந்தால், விலைக் கட்டுப்பாட்டைக் கொண்டுவருவது சுலபம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. பாலசுப்பிரமணியம் : தமிழ் நாட்டிலே கடலை எண்ணெய்விலைக் கட்டுப்பாட்டுக்குக் காரணம் வெளிநாட்டிலிருந்து பாம் ஆயில் என்று இறக்குமதி செய்ததால் என்று சொல்



கின்றார்கள். அது ஒருவிதமான பனை மரத்திலிருந்து தயாரிப்பதாகச் சொல்லுகின்றார்கள். அந்தப் பனை போன்ற மரத்தை உற்பத்தி செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, புதிய ரக மரம் இன்னொன்றை தமிழகத்திலே உற்பத்தி செய்வதைவிட மணிலாப் பயிரை நல்ல முறையில் உற்பத்தி செய்வதில் விவசாயத் துறை முயற்சிக்கலாம். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ஒரு யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். அதை அரசு மனதில் கொண்டு முயற்சி செய்யலாம்.

திரு. ஆ. நல்லசிவம் : விலைவாசிகள் ஏறிக்கொண்டே இருப்பதற்கு சிலசமயங்களில் மாநில அரசுதான் காரணம் என்றும், சிலசமயம் மத்திய அரசுதான் காரணம் என்றும் சொல்கிறார்கள். இதில் மத்திய அரசுக்குத்தான் பொறுப்பு அதிகம் என்று நான் கருதுகிறேன். விலை ஏறும்போது மத்திய அரசும், இறங்கும்போது மாநில அரசும் பொறுப்பு என்று தமிழக அரசு கூறினால், பொருத்தமாக இருக்காது. இதில் யாருக்குப் பொறுப்பு என்று தெளிவாகக் கூறுமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4.20.)

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்
பினரவர்கள் ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்டிருக்கிறார்
களென்று நினைக்கிறேன், விலைவாசிகள் ஏறும்போது மத்திய
அரசை ஒரு மாநில அரசு குறை சொல்வதற்கு உண்டான
காரணங்களைச் சொல்ல விரும்புகிறேன். அத்தியாவசியப் பண்டங்
களின் விலையை நிர்ணயிக்க மத்திய அரசுக்குத்தான் பொறுப்பு
இருக்கிறது. அந்தப் பண்டங்களின் விலை ஏறுகிறதென்றால், முழுப்
பொறுப்பும் மத்திய அரசுதான் ஏற்றுக்கொள்ள வேண்டும்.
அதற்கு ஒரு மாநில அரசு பொறுப்பு ஏற்றுக்கொள்ள முடியாது.
தமிழகத்தில் பயன்படும் பெரும்பாலான அத்தியாவசியப்
பொருள்கள் வெளி மாநிலங்களிலிருந்து தருவிக்கப்பட்டு,
அவைகள் பொது மக்களுக்கு விநியோகிக்கப் படுகின்றன. அதனால்
சில பொருள்களின் விலை அதிகரிக்கிறதென்றால், மத்திய அரசு
அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். இன்றைக்கு,
தென் மாநிலங்கள் ஒரே உணவு மண்டலமாக இருந்தது மாற்றப்
பட்டு, இந்தியா பூராவும் ஒரே உணவு மண்டலம் என்று
ஆக்கப்பட்டிருக்கிறது. எனவே தமிழகத்திலிருந்து வெளி மாநிலங்
களுக்கு அரிசியை எடுத்துச் செல்ல சட்டப்படி அனுமதிக்கப்படு
கிறது. இப்போது அரிசியின் விலை ஏறுகிறதென்றால், அதற்கு
மத்திய அரசுதான் பொறுப்பு என்று சொல்ல முடியும். ஒரு
பண்டத்தினுடைய விலை அதிகமான அளவிற்கு ஏறுகிறதென்றால்,
முழுப் பொறுப்பபையும் மத்திய அரசுதான் ஏற்றுக்கொள்ள

[1978 செப்டம்பர் 11

வேண்டும். மத்திய அரசினுடைய விதி முறைகள் எப்படி இருந்தாலும், ஒரு மாநில அரசு எடுக்கும் நடவடிக்கைகளின் மூலமாகத்தான் விலைவாசிகளைக் குறைக்க முடியும். ஆகவே விலைவாசிகளைக் குறைப்பதில் மாநில அரசுக்கு ஓரளவுக்குக் கடமையிருக்கிறது, முழுப் பொறுப்பும் மாநில அரசிடம் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: அமைச்சரவர்களுடைய பதிலிலிருந்து ஒரு வருத்தத்திற்குரிய உண்மை வெளியாகியது. அமைச்சரவர்கள் சொல்லுகின்றபோது, அத்தியாவசியப் பொருள்கள் எவை என்பதை முடிவு செய்யக்கூடிய அதிகாரம் அல்லது பொறுப்பு நம்மைச் சார்ந்ததல்ல, அந்த நாட்டைச் சேர்ந்தவர்களுடையதென்று சொன்னார்கள். ஒரு வேளை வட மாநிலங்களைக் குறிப்பிடுகிறார்களென்று கருதுகிறேன். அந்த நிலை இருக்குமானால், வட மாநிலங்களிலே இருக்கும் நிலையை வைத்து, அத்தியாவசியப் பொருள்கள் எவை என்பதை நிர்ணயிக்கும் பொறுப்பை அப்படியே விட்டுவிடுவது, தென் மாநிலங்களுக்கு ஊறு விளைவிக்கின்ற ஒன்றாக அமைந்துவிடுமென்பதால், நம்முடைய மாநிலத்திலிருந்து அத்தியாவசியப் பொருள்கள் எவை என்பதை நிர்ணயிக்கும் நிலையை உருவாக்க உணவுத் துறையும், நமது அரசும் வலியுறுத்துமா? அப்படி அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: அத்தியாவசியப் பண்டங்களுடைய பட்டியலை வெளியிடுவது மத்திய அரசுதான். அந்த அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை. இருந்தாலும் இந்த மாநில அரசு எவையெவை அத்தியாவசியப் பண்டங்கள் என்பதை அடிக்கடி மத்திய அரசுக்குத் தெரிவித்துக்கொண்டிருக்கிறது.

### *Government Servants in Revenue Department, Kanyakumari district.*

*62. *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether all those persons selected by the Tamil Nadu Public Service Commission and working as Government Servants in the Revenue Department in Kanyakumari district, who were ousted from service due to the change in the Food Policy of the Revenue Department have since been re-instated;

(*b*) if not, the number of persons who have not been re-instated as on 10th May 1978; and

(*c*) the action taken by the Government to re-instate them?



1978 செப்டம்பர் 11]

### கன்னியாகுமரி மாவட்ட வருவாய்த் துறை அரசுப் பணியாளர்கள்.

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்ண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில், வருவாய்த் துறையில், அரசுப் பணியாளர்களாகப் பணி புரிந்தவர்களில் வருவாய்த் துறையின் உணவுக் கொள்கை மாற்றத்தால், வேலை இழந்தோர் அனைவருக்கும் மீண்டும் வேலை கொடுக்கப்பட்டு விட்டதா?

(இ) இல்லையெனில், அவ்வாறு வேலை கொடுக்கப்படாதவர்கள், 10-5-1978 அன்றுள்ளவாறு எத்தனை பேர்?

(உ) அவர்களுக்கும் மீண்டும் வேலை கொடுக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: (அ) & (இ) தமிழ்நாடு பணியாளர் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் வருவாய்த்துறையில் பணி புரிந்தோரில் உணவுக் கொள்கை மாற்றம் காரணமாக 91 இளநிலை உதவியாளர்களும், 8 தட்டச்சர்களும் பதவியிழந்தனர். அவர்களில் 10-5-78 அன்றுள்ளவாறு 66 இளநிலை உதவியாளர்களும் ஒரு தட்டச்சரும் வேலை கொடுக்கப்படாமல் இருந்தார்கள். தமிழ்நாடு பணியாளர் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு பணி புரிந்தோரில் உணவுக் கொள்கை காரணமாக பதவியிழந்த அனைவருக்கும் மீண்டும் வேலை தரவேண்டும் என்ற அரசின் ஆணைகளுக்கொப்ப வருவாய் வாரியம் அவர்களை பல்வேறு துறைகளில் உள்ள காலியிடங்களில் அமர்த்தி ஆணைகள் பிறப்பித்துள்ளது.

(உ) உணவுக்கொள்கை மாற்றம் காரணமாக பதவியிழந்தவர்களுக்கு மீண்டும் வேலை தரவேண்டும் என்பது அரசின் கருத்து. அக்கருத்தின்படி தற்காலிக அலுவலர்களின் பட்டியல் ஒன்று மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்றும், பல்வேறு துறைகளில் காலியாகும் பணிகளை, இவ்வாறு பதவி இழந்த அலுவலர்களுக்கே தரவேண்டும் என்றும் அரசு ஆணையிட்டது. இப்பட்டியலிலுள்ளவர்கள் அனைவருக்கும் வேலை கிடைக்கும்வரை புதிதாக நியமனம் செய்யக்கூடாது என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு உணவுக் கொள்கை மாற்றம் காரணமாக பதவி இழந்தவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளும் பொருட்டு வருவாய் வாரியத்தில் ஒரு பட்டியல் தயாரித்து மாநிலத்தில்

[1978 செப்டம்பர் 11

உள்ள துறைகள் அனைத்திலும் தற்காலிக வேலையிடங்களில் வேலை வாய்ப்பளிக்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வாணைகளுக்கு ஏற்ப, வேலை இழந்தவர்கள் அனைவரையும் பல்வேறு துறைகளில் உள்ள காலியிடங்களில் அமர்த்தி வருவாய் வாரியம் ஆணைகள் பிறப்பித்துள்ளது.

திரு. எம். சங்கரலிங்கம் : மாற்றுத் தலைவரவர்களே, வேலை இழந்தவர்கள் அனைவருக்கும் தற்போது வேலை கொடுக்கப்பட்டு விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன். ஆணை பிறப்பித்திருந்தாலும், அதில் இன்னும் சிலருக்கு வேலை கிடைக்கவில்லை என்ற புகார் வந்து கொண்டிருக்கிறது. அவர்களுக்கு வேலை கொடுத்தாகி விட்டதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : வேலை இழந்த அனைவருக்கும் வேலை கொடுத்தாகி விட்டதென்று சொல்லவில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : உணவுக் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டதன் காரணமாக வேலை இழக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டதாக அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். அரசு, எந்தக் கொள்கை மாற்றம் செய்வதற்கு விரும்பினாலும், அதற்கு முன்னதாக அந்தத் துறையிலே பணியாற்றுகின்ற அலுவலர்கள் பாதிக்கப்படாத வகையிலே, அவர்களுக்கு வழி வகை செய்துவிட்டு, கொள்கையிலே மாற்றம் செய்யும் நடைமுறையை இனி மேல் பின்பற்றுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் தவறான எண்ணத்தோடு கேள்வி கேட்டிருக்கிறார்களென்று இந்த அவையிலே சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இது மாநில அரசு எடுத்த மாற்றத்தால் எற்பட்ட விளைவல்ல. மத்திய அரசு உணவுக் கொள்கையைப் பொறுத்த மட்டில், ஒரு திருப்பமான முடிவை எடுத்ததால்தான், இந்த வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டிருக்கிறது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : ஒரு அரசினுடைய கொள்கை மாற்றத்தாலே இப்படிப்பட்ட வேலை இழப்புகள் ஏற்படுகிற நேரத்தில், தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தால், அவர்களை வீட்டிற்கு அனுப்பாமல், தமிழ்நாட்டில் 10 (ஏ) (1) விதியின் கீழ், எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் மூலமாக எங்கெங்கே நியமிக்கப்பட்டிருக்கிறார்களோ, அவர்களை அனுப்பி விட்டு டி. என். பி. எஸ். சி தேறியவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க ஆணைகள் பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : அப்படிப்பட்ட ஆலோசனைகள் எதுவும் இப்போது அரசிடம் இல்லை.



1978 செப்டம்பர் 11]

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அமைச்சரவர்கள் கேள்வியை அநேகமாகக் கூர்ந்து கவனிக்கவில்லை என்று நினைக் கிறேன். பொதுவாக அரசாங்க ஊழியர்கள் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் களுக்கு முன்னுரிமை உண்டு. ஆனால், இன்றைய சூழ்நிலையில் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 10 (ஏ) (1) விதியின்கீழ் வேலை செய்கிறவர்கள் இருக்கிறார்கள். ஆனால் டி. என். பி. எஸ். சி. மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 'ஹவுஸ்ட்' செய்யப்பட்டிருக்கிறார்கள். அது தவறு. எனவே டி. என். பி. எஸ். சி. தேர்ச்சி பெற்றவர்களுக்கு முதலிடம் கொடுத்து, எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் மூலம் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களைத் தற்காலிகமாக வீட்டிற்கு அனுப்பி, அந்த இடங் களில் இவர்களை நியமிக்க வேண்டும். பிறகு எதிர்காலத்தில் வேலை வாய்ப்புகள் உருவாகும்போது, அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கும் அளவுக்கு விதி முறைகளைப் பின்பற்றினால் சாதகமாக இருக்கும். அதை அரசு பின்பற்றுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒரு நியாயமான வாதத்தைக் கேள்வி மூலம் எடுத்து வைத்திருக்கிறார்கள். அரசினுடைய உணவு மாற்றக் கொள்கை காரணமாக வேலை இழந்தவர்கள் சர்வீஸ் கமிஷன்—தமிழ்நாடு தேர்வாணைக் குழு மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வது போல, தற்காலிகமாக வேலையில் நியமிக்கப்பட்டவர்கள் வேலையிலிருந்து கொண்டு, தேர்வாணைக் குழு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டால், அதுபற்றி நிச்சயமாக, உடனடியாகப் பரிசீலனை செய்து, இனிமேல் அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொள்ளலாம்.

திரு. பி. மாணிக்கம் : தஞ்சை மாவட்டத்தில் சிவில் சப்ளைஸ் இலாகாவில் வேலை பார்த்த 304 பேர்கள், 7 ஆண்டுகள் வேலை பார்த்த பல பட்டதாரிகள், சந்தியில் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களைப்பற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள நிலைமைகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். காரணம் தஞ்சை மாவட்டத்திலேதான் அதிகமானவர்கள் வேலை இழக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. காரணம் தஞ்சை மாவட்டத்திலேதான் அதிகமான நெல் வாங்கும் நிலையங்கள் இருந்தன. மத்திய அரசு உணவுக் கொள்கையாலே, இந்த நிலையங்களை அப்புறப்படுத்தும் சூழ்நிலை ஏற்பட்டதால், அங்கே அதிகமானவர்கள் வேலை இழக்கும் நிலை ஏற்பட்டது என்றாலும் அவற்றைப் பற்றியெல்லாம் அரசு பரிசீலித்து, அவர்களுக்கும் எவ்வளவு விரைவில் வேலை கொடுக்க முடியுமோ, அதற்கான ஏற்பாடுகளை அரசு செய்து கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 4.30)

திரு. எம். சங்கரலிங்கம் : தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் முதலில் வருவாய்த் துறையில் எழுத்தர்களாகவும், மற்ற ஏனையப் பணியாளர்களாகவும் பணியாற்றிக் கொண்டிருந்தபோது. மாநில அரசு செக்போஸ்ட்டுகளைக் கூடுதலாக்கிய நேரத்தில், அவர்களை அந்தத் துறையில் எடுத்துக் கொண்டார்கள். அவர்கள் வேறு துறைகளுக்குப் போயிருந்தால், இந்த நிலை அவர்களுக்கு வந்திருக்காது. இது அவர்களுடைய தவறல்ல. அரசினுடைய கொள்கை மாற்றத்தால், அவர்கள் வேலையை இழந்திருக்கிறார்கள். இந்தச் சட்டமன்றத் தொடரிலேயே இதுபற்றி வினா எழுப்பியபோது. கவனிக்கப்படும் என்று சொல்லி, வேலை இழந்த 91 பேரிலே 66 பேர் கவனிக்கப்படாமல் ஆணை பிறப்பிக்கப்பட்டதாகச் சொல்லும் சூழ்நிலையில் இருக்கிறார்கள். எனவே அரசு உடனடியாக தக்க நடவடிக்கை எடுத்து, இன்னும் இரண்டு வாரங்களுக்குள்ளாக ஒரு நல்ல முடிவை ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, 91 பேர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். அவர்களில் 66 பேர்கள் இன்னும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அதற்கான ஏற்பாடுகளை நிச்சயமாக இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இங்கே நான் வினாவை எழுப்பியபோது, தவறாகப் புரிந்து கொண்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். "அரசினுடைய உணவுக் கொள்கை மாற்றத்தினால்" என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதாலே, மத்திய அரசு அல்லது மாநில அரசு என்று விளக்கம் அளிக்காததாலே தான் நான் அப்படிக் கேட்டேன். ஆகவே மத்திய அரசினுடைய கொள்கையால் என்று சொன்னாலும்கூட, உணவுக் கொள்கையை வகுக்கிறபோது, இத்தகைய இடர்ப்பாடுகள் ஏற்படாத வகையில் கொள்கையை வகுக்க வேண்டுமென்ற கருத்தை மத்திய அரசுக்கு மாநில அரசு அனுப்பி வைக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : மேலவையிலே உறுப்பினராக இருக்கிற காரணத்தால், பத்திரிகைகளைத் தொடர்ந்து படித்துக்கொண்டிருப்பார்கள் என்று எண்ணிச் சொன்னேன். மத்திய அரசிலே ஏற்பட்ட உணவுக் கொள்கை மாற்றத்தினை இதுவரையில் தெரிந்து கொள்ளாமல். இருந்து கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசினுடைய உணவுக் கொள்கையில்



மாற்றம் செய்யப்பட்ட காரணத்தால், இப்படிப்பட்ட கொள்முதல் நிலையங்களை அப்புறப்படுத்த வேண்டியிருக்கிறது. ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு நெல்லை தாராளமாக எடுத்துச்செல்லலாம் என்ற விதிமுறைகளை வகுத்துக் கொண்ட காரணத்தால். நம்முடைய மாநிலத்திலுள்ள அத்தனை சோதனைச் சாவடிகளையும் அப்புறப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால்தான் வேலை இழப்பு ஏற்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம் : மத்திய அரசினுடைய கொள்கையால் இந்த வேலை இழப்பு ஏற்பட்டதால், இதில் 50 சதவீதத்தினரை தபால் தந்தித் துறை, இரயில்வே துறை போன்ற மத்திய அரசுத் துறைகளில் நியமிக்க மாநில அரசு, மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்ய நடவடிககை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : மத்திய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு செய்வதிலே எந்தவிதமான சிக்கலும் இல்லை. இந்த சிபாரிசை அவர்கள் எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்வார்கள் என்பதிலேதான் பிரச்சினை இருக்கிறது.

## *Procurement of Foodgrains.*

* 63. Q.—Thiru K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Food be pleased to state the districts and villages in which the foodgrains procuring agencies are functioning to procure foodgrains, as per the prices declared by the Government?

## உணவு தானியங்கள் கொள்முதல்

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

அரசு அறிவித்துள்ள விலைப்படி, உணவு தானியங்கள் கொள்முதல் செய்வதற்கான அமைப்புகள் எந்தெந்த மாவட்டங்களில், எந்தெந்த ஊர்களில் இயங்குகின்றன ?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : 1—2—1978 முதல், அரசு அறிவித்த விலைகளில், வெளிச்சந்தை வணிக அடிப்படையில், விவசாயிகள் அளிக்கும் நெல்லை வாங்க, தேவைக்கேற்ப மாநிலம் முழுமையிலும், 400 இடங்களில் நெல்வாங்கும் மையங்கள் திறக்கப்பட்டு இயங்கிவந்தன. நெல் வரத்து குறைந்ததால், தொடர்ந்து நெல் வரத்து இல்லாத மையங்கள் மூடப்பட்டு, ஜூன் மாத இறுதியில் 130 மையங்கள் இயங்கி வந்தன.

[திரு. க. உரோ. எட்மண்ட்] [1978 செப்டம்பர் 11

15—7—1978-ல் நெல் வரத்து நின்றுவிட்ட காரணத்தால், இவைகளும் மூடப்பட்டன. 400 மையங்களில், 106 மையங்கள் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் இயங்கிவந்தன. இவற்றில் மொத்தமாக 1—2—1978 முதல் 15—7—78 வரை 1,03,877 அரிசி டன்கள் நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அமைச்சருடைய பதில், புள்ளிவிவர அளவிலே சரியாக இருந்தாலும் கூட, இன்றைக்கு அரசு நிர்ணயித்திருக்கிற விலையைவிட வெளிச்சந்தையிலே குறைவாக விற்கக்கூடிய கட்டாயத்திற்கு விவசாயிகள் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில், விவசாயிகள் குறைந்தபட்சம் அரசு நிர்ணயித்திருக்கிற விலையில் விற்கிற வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிற வகையில், நெல்லை வாங்கும் நிலையங்களை மீண்டும் எல்லா நகரங்களிலும் திறக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : இந்த நெல்லை வாங்குகிற புரகியூர்மென்ட் சென்டர்களை எல்லாப் பகுதிகளிலும் ஆரம்பிப்பது என்பது, அரசினுடைய அனுபவ ரீதியாகப் பார்த்தால், முடியாத காரியம். காரணம், இந்த வாங்குகிற நிலையம் ஒன்றைத் திறக்க வேண்டுமென்றால், அதற்கு எவ்வளவு செலவாகிறது என்ற கணக்கைப் பார்க்க வேண்டியிருக்கிறது, ஆகவே எங்கெங்கே அறுவடை அதிகமாக இருக்கிறதோ, எங்கெல்லாம் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை என்ற குறைபாடு இருக்கிறதோ, அந்தப் பகுதிகளில் எல்லாம் இப்பேர்ப்பட்ட வாங்குகிற நிலையங்களை ஆரம்பிப்பது என்று அரசு முடிவெடுத்து அதன்படி செயல்பட்டது. என்றாலும் சில பகுதிகளில் விவசாயிகள் நெல்லைத் தருவதாக இல்லை, அப்பேர்ப்பட்ட நிலையில், கட்டுபடியாகாத சூழ்நிலையில் அந்த நிலையங்கள் மூடப்பட்டன.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தமிழகத்திலே 400 கொள்முதல் நிலையங்கள் ஏற்படுததப்பட்டு, இன்று 106 கொள்முதல் நிலையங்கள்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தஞ்சையிலே 15—7—78 அன்றோடு அதுவும் முடிந்துவிட்டது என்று சொன்னார்கள். இதன் விளைவாக தஞ்சை மாவட்டத்திலே குறுவை பயிரிட்டுச் சாகுபடி செய்து அறுவடை செய்கிற நேரத்திலே, இந்நிலையங்கள் இல்லாமல் விவசாயிகள் பாதிப்புக்கு உள்ளாவார்கள். தஞ்சைக்கு அடுத்தபடியாக வட ஆற்காடு மாவட்டத்தில், அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, அதிகமான நெல்லும் உற்பத்தியாகிறது, ஆனால், நியாயமான விலை கிடைக்கவில்லை என்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தால், அதுவும் இப்போது குறுவை பயிரிடப்பட்டு அறுவடையாக இருப்பதால், மறுபடியும் கொள்முதல் நிலையங்களைத் திறந்து அரசு நிர்ணயித்த விலையில் நெல்லை வாங்க அரசாங்கம் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



1978 செப்டம்பர் 11]

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: குறுவை அறுவடை கொள்முதலைப் பொறுத்த வரையில், இதுவரை இந்த அரசு எந்த முடிவும் எடுக்கவில்லை. அதைப் பரிசீலனை செய்து உரிய நேரத்தில் அதனுடைய முடிவை நிச்சயமாக அறிவிக்கும். ஆனால் தமிழகத்திலே விளைகிற நெல்லை வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்கிற முழு உரிமையும் விவசாயிகளுக்கும். உற்பத்தியாளர்களுக்கும் இருக்கிறது. அண்டை மாநிலத்தில் அதிகமான விலை கிடைக்கிற நேரத்தில், இங்கேயிருந்து அங்கே கொண்டு போய் விற்று, அதிக விலையைப் பெறுவதற்கான வாய்ப்புகள் உண்டு என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : நெல்லை வாங்குகிற நிலையங்களைப் பொறுத்த வரையில், விவசாயிகளுடைய கோணத்திலிருந்து அணுக வேண்டியது அவசியம் என்பதை உணவுத் துறை உணர்ந்திருக்கும் என்று கருதுகிறேன். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, இதற்கான கொள்முதல் நிலையங்களை நடத்துவதிலே அதற்காகிற செலவு கட்டுபடியாகுமா என்ற கணக்கைப் பார்க்க வேண்டிய நிலை இருப்பதாகச் சொன்னார்கள், நெல் வரத்துக் குறைந்து போகிறது என்றும் அறிவித்தார்கள். ஆகவே நிரந்தரமாக புரக்யூர்மென்ட் சென்டர்கள் ஏற்படுத்தினால், விவசாயிகள் வெளிச் சந்தையில் விலை ஏறினாலும், குறைந்தாலும், பாதிப்புக்கு ஆளாகாத நிலையில் நியாய விலையைப் பெறுகிற வாய்ப்பு ஏற்படும் என்பதை அரசு உணருகிறதா ?

இரண்டாவதாக, வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லுகிற வாய்ப்பைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த மன்றமும், இந்த அரசாங்கமும் நன்றாக அறிந்திருக்குமென்று கருதுகிறேன். விவசாயிகளுக்கு வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்யக்கூடிய அளவுக்கு வசதிகள் இல்லை. அந்த அளவுக்கு நில உச்சவரம்புச் சட்டம் நிலம் படைத்தவர்களை விட்டுவைக்கவில்லை. ஒருவேளை இருந்தாலும் இது நிலம் படைத்தவர்களுக்குச் சாதகமாக அமையுமே தவிர, சிறு விவசாயிகளுக்குச் சாதகமாக அமையாது. வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லுவது என்பது வியாபாரிகளுக்கு மகிழ்ச்சி தருவதாக, ஆதாயம் தருவதாக அமையும். விவசாயிகளைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு நஷ்டம்தான் ஏற்படும். ஆகவே கொள்முதல் நிலையங்களை உருவாக்கி அமுல்படுத்துவதன் மூலமாக விவசாயிகளுக்குக் குறைந்தபட்ச விலைக்கு உத்தரவாதம் அளிக்கிற வாய்ப்பு ஏற்படும். அதை அரசு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-40)

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : அதைத்தான் என்னுடைய பதிலில் ஏற்கனவே சொன்னேன். உணவு தானியங்கள் கொள்முதல் நிலையங்களை பல்வேறு சூழ்நிலைகளின் அடிப்

படையில் ஆரம்பிக்கிறோம். தமிழ் நாட்டிலே விளைகின்ற எல்லா நெல்லையும் அரிசியையும் கொள்முதல் செய்வதில்லை, பொது வினியோகத்தின் மூலம் மக்களுக்குக் கொடுப்பதற்கு எவ்வளவு அரிசி தேவையோ அவ்வளவுதான் வாங்குகிறோம், 6 லட்சம் அல்லது 8 லட்சம் டன் வரை அரிசிக்குத் தேவையான நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் நிலையங்கள் மூலம் வாங்குகிறோம். அது முதற் காரணம். இரண்டாவதாக, கட்டாயக் கொள்முதல் இப்பொழுது கிடையாது. அப்படி வைத்துக் கொண்டால், எல்லா விவசாயிகளும் கொள்முதல் நிலையங்களில் அளந்தது போக மீதியைத்தான் வெளியிலே விற்க வேண்டுமென்று வைத்துக்கொண்டால், உறுப்பினர் சொல்வது மாதிரி நிறைய கொள்முதல் நிலையங்கள் தேவைப்படும். விவசாயிகள் குறைந்த விலைக்கு விற்று சங்கடப்படக் கூடாது என்ற நல்ல எண்ணத்தில் தான் இப்படிப்பட்ட கொள்முதல் நிலையங்களைத் திறக்கிறோம். அப்படித் திறக்கும்போது கூட நாம் எதிர்பார்க்கிற அளவுக்கு விவசாயிகள் நெல்லைக் கொண்டு வராத காரணத்தால், இப்படிப் பட்ட கொள்முதல் நிலையங்களை நாம் நடத்துவது நஷ்டம் என்ற அடிப்படையில், சில சந்தர்ப்பங்களில் அவற்றை மூட வேண்டிய நிலை கூட ஏற்படுகிறது.

<u>திரு. எம். சங்கரலிங்கம் :</u> நமது மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு உணவு தானியங்கள் கொண்டுபோக எந்தவிதத் தடையும் இல்லை என்று மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து கேரளாவுக்கு உணவு தானியங்கள் கொண்டுபோவது தடை செய்யப்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா? தமிழ் நாடு கேரளா பார்டர் களியிக்காவிளை என்பதாகும். அந்தக் களியிக் காவிளைக்கு 5 மைலுக்கு இந்தப் பக்கத்திலேயே உணவுத் துறையைச் சேர்ந்த ஜீப்புகள் நெல், அரிசி போன்ற உணவு தானியங்களை, தலையில் வைத்துக்கொண்டு போனால், பிடித்து வழக்குப் பதிவு செய்யாமலேயே அதை எடுத்துச் செல்கிறார்கள். வழக்குப் பதிவு செய்தால்தான், பிடித்ததாக ரெக்கார்ட் கூட இருக்கும். உணவு தானியங்கள் நடமாட்டத்திற்குக் கட்டுப்பாடு கிடையாது என்று ஏட்டளவிலே இருக்கக்கூடிய இது செயலளவில் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அல்லது அரசுக்குத் தெரியாமல் இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றனவா ?

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :</u> நாம் இங்கேயிருந்து கேரளா மாநிலத்திற்கு உணவு தானியங்கள் கொண்டுபோவதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்வது போல் ஒன்றும் தடை செய்யவில்லை. 50 சதவிகிதம் அவர்கள் லெவி கொடுத்துவிட்டு, எவ்வளவு மீதி இருந்தாலும், கேரளாவிற்கு எடுத்துச் செல்லலாம். அதற்குரிய வகையில் மத்திய அரசு அனுமதி வழங்கியிருக்கிறது.





அதற்குக் காரணம் கேரளம் அண்டை மாநிலமாகவும் அதே நேரத்தில் பற்றாக்குறை மாநிலமாகவும் இருப்பதுதான். இங்கேயிருந்து கேரளாவிற்கு அரிசி, நெல் போன்ற உணவு தானியங்கள் கொண்டு போக ஒரு கட்டுப்பாடு நாம் வைத்துக்கொள்ளவில்லையென்றால், இங்கேயுள்ள உணவு தானியங்கள் பெரும்பாலும் அங்கே எடுத்துச் செல்லப்படலாம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இங்கே விலைகள் கூடலாம். அதனால் தான் இப்படிப்பட்ட விளைவுகள் ஏற்படாமலிருக்கும் வண்ணம், 50 சதவிகிதம் லெவி கொடுத்துவிட்டு, மீதியைக் கொண்டு போகலாம் என்று விதி வைத்துக்கொண்டிருக்கிறோம்.

<u>திரு. ஆ. பாலசுப்ரமணியம்:</u> கொள்முதல் வெறும் நெல்லுக்கு மட்டும் தானா அல்லது சோளம், கம்பு போன்ற உணவு தானியங்களுக்கும் உண்டா? அடுத்தபடியாக, சேலம், தர்மபுரி போன்ற மாவட்டங்களிலே இத்தகைய கொள்முதல் செய்வதற்கான அமைப்புகளை ஏற்படுத்தி அதன்மூலம் நல்ல விலை கொடுக்க அரசு முன்வருமா?

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :</u> கொள்முதல் நிலையங்களின் மூலம் இப்பொழுது நெல் மட்டும்தான் வாங்கப் படுகிறது. சோளம், கம்பு போன்றவற்றை இப்பொழுது வாங்குவது கிடையாது.

THIRU A. BALASUBRAMANIAM: Sir, is there any proposal in future?

THE HON. THIRU G. R. EDMUND: There is no such proposal in the near future.

### *Stipend for B. T. Assistants.*

* 64. *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that the B.T. Assistants have sent any representation to the Government to enhance the stipend from Rs. 150 paid to them to Rs. 300 per mensem, as given to the trainees coming from the Health Department for attending training courses conducted by Health Education—Teacher Training Unit; and

(*b*) if so, the action proposed to be taken by the Government thereon?

[1978 செப்டம்பர் 11

## பி. டி. ஆசிரியர்களுக்கு உதவித் தொகை

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) பி. டி. ஆசிரியர்கள், சுகாதாரக் கல்வி— ஆசிரியர் பயிற்சிப் பிரிவு நடத்துகின்ற பயிற்சிப் பாடமுறையில் பயிலுகின்ற, மக்கள் நல்வாழ்வுத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு அளிப்பது போன்றே, திங்கள் ஒன்றுக்கு, அவர்களுக்கு அளிக்கப்படுகின்ற உதவித்தொகையை ரூ. 150-ல் இருந்து ரூ. 300-ஆக உயர்த்தக் கோரி, அரசுக்கு முறையீடு ஏதும் செய்துள்ளார்களா?

(இ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) விண்ணப்பம் ஒன்றும் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. ஆர். தாமஸ்: அரசுக்கு அனுப்பிய விண்ணப்பத்தின் நகலை எனக்கு அனுப்பியிருந்தார்கள். எனவே தான் கேள்வி போட்டேன். பி. டி. ஆசிரியர்கள் பயிற்சிக்கு சென்னைக்கு வந்தார்கள். மக்கள் நல்வாழ்வுத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு பயிற்சியின்போது நாள் ஒன்றுக்கு 12 ரூபாய் வீதம் படி வழங்கியிருக்கிறார்கள். ஆனால் பி. டி. ஆசிரியர்களுக்கு நாள் ஒன்றுக்கு 5 ரூபாய் மட்டுமே வழங்கியிருக்கிறார்கள். அந்த விண்ணப்பத்தை மீண்டும் அரசுக்குத் தெரிவித்தால், மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏதாவது செய்வார்களா? அல்லது அரசாங்கமே மக்கள் நல்வாழ்வுத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு அந்தத் துறை வழங்குவது போல இவர்களுக்கும் ரூபாய் 12 வழங்க முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆசிரியர் பயிற்சி பெறுகிறவர்களுக்கு மாதந்தோறும் 70 ரூபாயும் அப்போதைக்கப் போது உள்ள அகவிலைப்படியும் கொடுக்கப்படுகிறது. அவர்களை ஊக்குவிப்பதற்காகத்தான் பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இன்றைய தினம் 5,000 பேருக்கு மேற்பட்ட பி. டி. படித்தவர்கள் வேலை வாய்ப்பின்றி இருப்பதால், இதை அதிகரிக்க இது சமயமல்ல என்று அரசு கருதுகிறது.

திரு. சி. ரா. லெட்சுமி காந்தன்: பயிற்சிக்குச் செல்லும் ஆசிரியர்கள் பயிற்சியை வெற்றிகரமாக முடித்து வந்த பிறகு, தாங்கள் பெற்ற பயிற்சியின் அனுபவங்களை பள்ளிகளில் எந்த முறையில் பயன்படுத்துகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தெரிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பு எனக்கு இல்லை.



1978 செப்டம்பர் 11[

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இவ்வாறு பயிற்சி பெற்று வந்த பிறகு, அவர்களுடைய பயிற்சியினுடைய பலன்களைப் பள்ளிக்கூடங்களில் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வதில்லை என்ற குறைபாடு இன்றையதினம் தமிழ்நாடு முழுவதும் காணப் படுகிறது. மக்களுடைய வரிப்பணத்திலிருந்து பயிற்சிக்காக பல ஆயிரக்கணக்கான ரூபாயை ஒதுக்கிச் செலவழித்த பிறகு, அப்படிப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுடைய பணியை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள கல்வி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவாரா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பயிற்சியினுடைய பயனைப் பெற அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. பி. ஆர். தாமஸ்: பயிற்சி பெறுகின்ற பள்ளிகளில் அவர்களுக்கு என்று நல்ல சுகாதார வசதியை ஏற்படுத்த வேண்டுமென்று இத்தகைய பயிற்சியை நடத்தினார்கள். பல ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். மக்கள் நல்வாழ்வுத்துறையில் சேனிட்டரி இன்ஸ்பெக்டர்களுக்கு பயிற்சிபெறும்போது, நாள் ஒன்றுக்கு 12 ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்கப்பட்டது. இந்தத் தொகையானது சிட்டியைப் பொறுத்தவரை, சிட்டி அலவன்சைவிட 1 1/2மடங்கு. ஆனால் பி. டி. ஆசிரியர்கள் சென்னையிலே பயிற்சி பெறும் நாள் ஒன்றுக்கு 5 ரூபாய்தான் வழங்கியிருக்கிறார்கள். இரண்டு பிரிவுக்கும் மாறுபாடு இருக்கிறது. சானிட்டரி இன்ஸ்பெக்டர்களுக்கு நாள் ஒன்றுக்கு 12 ரூபாயும் பி. டி. ஆசிரியர்களுக்கு நான் ஒன்றுக்கு 5 ரூபாயும் கொடுத்திருக்கிறார்கள். பி. டி. ஆசிரியர்களுக்கு 5 ரூபாய் என்று இருப்பதை இனியாவது மாற்றியமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

## *Janaki Anni High School, Alathambadi.*

* 65. Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether, as per G.O. Ms. No. 562, Education, dated 25th March 1976, Janaki Anni High School, Alathambadi, Thanjavur district, was taken over by the Government from the Academic Year 1976-77; and

(b) if so, whether all the privileges enjoyed by teachers in Government Schools, such as Selection Grade, Increments, Festival Advance, Leave Benefits, etc., have been extended to the teachers in the said school?

[1978 செப்டம்பர் 11

## ஜானகி அண்ணி உயர்நிலைப் பள்ளி, ஆலதம்பாடி

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஆலதம்பாடி, ஜானகி அண்ணி உயர்நிலைப்பள்ளி, கல்வித் துறையின் 25-3-1976-ஆம் நாளிட்ட 562-ஆம் எண் அரசு ஆணையின்படி 1976-77-ஆம் கல்வியாண்டிலிருந்து அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அரசுப் பள்ளிகளின் ஆசிரியர்கள் அனுபவித்துவரும் சிறப்புரிமைகளான தேர்வுநிலை, ஊதிய உயர்வுகள், பண்டிகை முன்பணம், விடுப்பு ஆதாயங்கள் முதலியவை மேற்சொன்ன பள்ளியில் உள்ள ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளனவா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம், அரசாணை நிலை எண் 562, கல்வித்துறை: நாள் 25-3-76ன்படி ஜானகி அண்ணி உயர்நிலைப்பள்ளி, ஆலதம்பாடி, தஞ்சாவூர் மாவட்டம், அரசினால் கல்வி ஆண்டு 1976-77ல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(இ) மேற்கூறிய உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களின் சார்பாக சம்பந்தப்பட்ட விதிகளைத் தளர்த்தி அவர்களை நிரந்தரமாக அரசுப் பணியில் ஏற்றுக்கொள்ளும் அரசாணை வெளியிடப்பட்ட பின்னரே அவர்களுக்கு தெரிவுநிலை, ஊதிய உயர்வு, பண்டிகை முன்பணம், ஊதியத்தோடு கூடிய விடுப்பு ஆகிய வசதிகள் வழங்கப்படும். இருப்பினும் இவர்களுக்கு உதவி பெறும் பள்ளியில் இறுதியாக அளிக்கப்பட்ட ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. பி. ஆர். தாமஸ் : இந்த ஜானகி அண்ணி உயர்நிலைப் பள்ளியை அரசினர் மேற்கொண்டிருக்கிற காரணத்தால், அரசு ஆசிரியர்களுக்கு உள்ளது போல் பணி வரன்முறைப்படுத்தல், தேர்வுநிலை வழங்கல் போன்ற சலுகைகளை வழங்குவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவர்களுடைய பணியை வரன்முறைப்படுத்தும்போது, இவற்றையெல்லாம் கொண்டு வரலாம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தனியார் பள்ளியை அரசு ஏற்பது என்று முடிவெடுத்த பிறகு, அதன் அடிப்படையில் அரசு ஆணை பிறப்பித்து, அதன்படி ஏற்கப்பட்டும் விட்டது. அப்படி முடிவெடுக்கும்போது அவர்களுக்கும் அரசுப் பள்ளிக்கூடங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குரிய சலுகைகளைப்போல அளிக்கும் வகையில் இதுவரை செய்யாமற்போனாலும்கூட, இனி மேலாவது அளிப்பதற்கு ஆணையிடப்படுமா ?



1978 செப்டம்பர் 11]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி: ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள பள்ளிகள் அல்லது தனியார் நிர்வாகத்திலுள்ள பள்ளிகளை அரசு எடுத்துக்கொண்டால் அந்த ஆசிரியர்கள் கடைசியாக என்ன சம்பளம் பெற்றுக்கொண்டிருந்தார்களோ அதுதான் வழங்கப்படுகிறது. அதற்குப் பின்னால் வழங்கப்படக்கூடிய சலுகைகளை அதாவது பணி வரன்முறைப்படுத்தப்படுதல் போன்ற சலுகைகளை வழங்க ஒரு சரியான உத்தரவை வழங்கி நியாயம் வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது அரசு ஏற்றுக் கொண்டிருக்கின்ற பள்ளியிலே இருக்கின்ற ஆசிரியர்களுக்கு உடனடியாக இந்தச் சலுகைகளை அவர்களுக்குரிய உரிமைகளை வழங்குவது இல்லை என்பதுதான் இங்கே கேள்வி. அது இதுவரை இருந்து வந்த நிலைமையை எடுத்துக் காட்டுகிறது. அத்தகைய தாமதங்களைத் தவிர்க்க அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

[பிற்பகல் 4—50]

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இவ்வாறு தனியார் பள்ளிகளை அரசு மேற்கொள்ளும்போது, அங்குள்ள ஆசிரியர்கள் அந்தப் பள்ளிகளில் பணியாற்றிய காலத்தை, சீனியாரிட்டிக்கு கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை என்று சொல்லப்படுவது உண்மையா ? இது உண்மையானால், அந்தப் பணிக் காலத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்ள அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; அரசுப் பணியில் அத்தகைய ஆசிரியர்களை ஏற்றுக் கொள்ளுகிறபோதே, அந்த விதிகளுக்கு ஏற்பதான் பணியில் அமர்த்திக் கொள்கிறோம் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

## *M.Ed. Training for School Teachers.*

* 66. *Q.*—THIRU V. R. PERIANNAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the year from which the scheme of sending school teachers for M.Ed. Training at Government expenditure has been started;

(*b*) the annual expenditure incurred thereon by the Government; and

(*c*) the period for which teachers trained under this scheme, are working in the Training Centres?

[1978 செப்டம்பர் 11

## பள்ளி ஆசிரியர்களுக்கு எம். எட். பயிற்சி

திரு. வி. ஆர். பெரியண்ணன் : மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) பள்ளி ஆசிரியர்களை அரசாங்கச் செலவில் எம்.எட். (M.Ed.) பயிற்சிக்கு அனுப்பும் திட்டம் எந்த ஆண்டில் இருந்து நடைமுறையில் உள்ளது ?

(இ) ஆண்டு ஒன்றுக்கு இதனால் அரசுக்கு ஆகும் செலவு எவ்வளவு?

(உ) இத்திட்டத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் எவ்வளவு காலம் பயிற்சி நிலையங்களில் வேலை செய்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) அரசு உயர் நிலைப்பள்ளிகளில் (ஏ பிரிவு) பணி புரியும் ஆசிரியர்களை எம்.எட். பயிற்சிக்கு அரசாங்கச் செலவில் அனுப்பும் திட்டம் 1970-71ம் கல்வி ஆண்டிலிருந்து தொடர்ந்து நடைமுறையில் உள்ளது.

(இ) 20 பள்ளி ஆசிரியர்களை எம். எட். பயிற்சிக்கு அனுப்புவதில் ஆண்டொன்றுக்கு அரசுக்கு ஆகும் செலவு ரூ. 98,000/.

(உ) 1971-72-ல் இருந்து பயிற்சி பெற்ற ஒரு சிலர் பயிற்சிப் பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்டனர். 1970-71-ம் ஆண்டிலிருந்து 100 ஆசிரியர்கள் அரசுச் செலவில் எம். எட். பயிற்சிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். எல்லா உதவியாசிரியர்களையும் பயிற்சிப் பள்ளிகளில் நியமனம் செய்ய போதிய பணியிடங்கள் பயிற்சிப் பள்ளிகளில் இல்லாத காரணத்தால், பயிற்சி பெற்ற எல்லா ஆசிரியர்களையும், அரசு பயிற்சிப் பள்ளிகளில் நியமனம் செய்ய இயலாமல் போகிறது. அவர்களது பணியினை S.C.E.R.T. E.L.T. (English Language Teaching) மையங்களில், மாதிரிப் பள்ளிகள் போன்றவற்றிலும் பயன்படுத்தப்படுகிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : இவ்வாறு வேறு போஸ்ட் கிராஜுவேட் பட்டம் பெற்றவர்கள் அரசாங்கச் செலவில் இந்தப் பயிற்சிக்கு அனுப்பப்படுவதில்லை. மாஸ்டர் ஆப் எஜுகேஷன் பட்டம் பெற்றவர்கள் மட்டுமே அரசாங்கச் செலவில் அனுப்பப்படுவதற்கு என்ன காரணம்? வேறு போஸ்ட்-கிராஜுவேட்ஸ் யாராவது அனுப்பப்படுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்போது இருந்த தேவையின் காரணமாக அதைச் செய்திருக்கிறார்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இவ்வாறு அரசாங்கச் செலவில் ஆசிரியர்களைப் பயிற்சிக்கு அனுப்பியபோதே, ஒரு குறிப்பிட்ட ஆண்டில் மட்டும் 'பி' பிரிவு பள்ளிகளைச் சேர்ந்த



1978 செப்டம்பர் 11]

ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் 'ஏ' பிரிவு ஆசிரியர்களை மட்டும்தான் அரசாங்கச் செலவில் இந்தப் பயிற்சிக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. அப்படியானால் அந்தச் சலுகை ஏன் 'பி பிரிவு ஆசிரியர்களுக்கு வழங்கப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஏ-பிரிவுகளில் பணியாற்றும் ஆசிரியர்கள்தான் அனுப்பப்படுகிறார்கள் என்று இங்கே விவரம் தரப்பட்டிருக்கிறது. பி-பிரிவுகளில் பணி செய்யும் ஆசிரியர்கள் அனுப்பப்படுவதில்லை என்பது உண்மை. அனுப்பாமலிருப்பதற்கு விதிகள்தான் காரணம். அந்தக் குறையைப் போக்கத்தான் ஏ-பி ஆகிய இரு பிரிவுகளையும் இணைக்கிற முயற்சியில் தற்போது ஈடுபட்டிருக்கிறோம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : S.C.E.R.T பயிற்சி பற்றியும் அமைச்சர் அவர்கள் தம் விடையில் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். S.C.E.R.T., N.C.E.R.T. போன்ற பயிற்சிகளுக்குக் கடந்த காலத்தில் ஆசிரியர்களைப் பொறுக்கும்போது, ஒரு குறிப்பிட்ட அமைப்பைச் சார்ந்தவர்களாகவே, அந்த அமைப்பிலிருந்து பட்டியல் பெற்று அனுப்பியிருக்கிறார்கள். இதை எதிர்த்து நாங்கள் எத்தனையோ முறை முறையிட்டும் ஒன்றும் நடக்கவில்லை. எனவே இத்தகைய பாகுபாடுகள் ஏதுமில்லாமல் அனைத்துத் தரப்பு ஆசிரியர்களையும் மேற்சொன்ன பயிற்சிகளுக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்த வினா S.C.E.R.T. பற்றியதாக இருக்கிறது. தனியாகக் கேள்வி கேட்டால், அது பற்றி விவரம் தரலாம். நான் இங்கே குறிப்பிட்டது M.Ed. பயிற்சி பெற்ற ஆசிரியர்களை அரசு பயிற்சிப்பள்ளிகளில் நியமனம் செய்ய இயலாமல் போவதால் அவர்களது பணியினை S.C.E.R.T, E.L.T. போன்ற மையங்களில், மாதிரிப்பள்ளிகள் போன்றவற்றிலும் பயன் படுத்தப்படுகிறது என்பதுதான்.

திரு. பி. ஆர். தாமஸ்: ஏ பிரிவுப் பள்ளிகளைச் சார்ந்த ஆசிரியர்களும் பி. பிரிவு பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்களும் இந்தப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இவ்வாறு தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் இந்தப் பயிற்சிக்கு அனுப்பி வைக்கப்படுவார்களா அவ்வாறு அனுப்ப வாய்ப்பு இல்லாவிட்டால், அவர்களாக பயிற்சிக்குச் செல்லும் காலங்களில் அவர்களுக்கு ஊதியத்தை வழங்கி பயிற்சிக்கான செலவை ஆசிரியப் பெருமக்களே ஏற்றுக் கொள்ள வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1978 செப்டம்பர் 11

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசாங்கம்தான் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி E.R.T. போன்ற நிறுவனங்களை நடத்தி வருகிறது.. அவர்களுக்குத்தான் இப்படிப்பட்ட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தேவையாக இருக்கிறார்கள். ஆகவேதான் இந்தப் பயிற்சிக்கு அரசாங்கப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை மட்டும் அனுப்புகிறோம். தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை அனுப்பி அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கம் நமக்கு இல்லை என்பதால் இந்தப் பிரச்சினைக்கே இடமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் ; ஒரு பிரிவு பள்ளிகளைச் சார்ந்த ஆசிரியர்கள்தான் இந்தப் பயிற்சிக்கு அனுப்பப்படுகிறார்கள் என்ற தவறான செய்தி அமைச்சருக்குத் தரப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர .விரும்புகிறேன். எனது மாவட்டமான தென்னாற்காடு மாவட்டத்திலும் வடாற்காடு மாவட்டத்திலும் 'பி' பிரிவு பள்ளியைச் சார்ந்த ஆசிரியர்கள் அப்பயிற்சிக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாற்றுத்தலைவர் (திரு ஈ. எஸ். வெங்கடேசன்) ; உறுப்பினர் அவர்கள் சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ,அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் Winter-cum summer Course' என்ற ஒன்று நடத்தப்படுகிறது. அதற்கு ஆசிரியர்கள் செல்லும்போது அவர்களுக்குப் பதிலாக substitute ஆசிரியர்கள் போடப்படாததால இதன் காரணமாகப் பணச் செலவு இல்லாததால் ஆசிரியர்கள் படிக்கச் செல்லும் அந்தக் காலத்தை 'on duty', என்று கருத அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: இரண்டாவது சொன்ன கருத்தைப் பரிசிலனை செய்யலாம். அடுத்து ஏ-விங் ஆசிரியர்களை மட்டும் அனுப்புவது தவறு என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது தவறு அல்ல. பி-விங் ஆசிரியர்களை இத்தகைய பயிற்சிக்கு அனுப்பியதுதான் தவறு.

*Price of Note-Books.*

*67. *Q.*—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any representation has been received by the Government from the Note-book Manufacturers Association that there will be increase in the price of Note-books in the coming academic year 1978-79, as the Central Government have not so far undertaken the distribution of printing white paper through the State Government; and

(*b*) if so, the action taken thereon?



1978 செப்டம்பர் 11]

குறிப்பேடுகளின் விலை

திரு. வே தங்கப்பாண்டியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) மத்திய அரசு, மாநில அரசு மூலம் அச்சிடும் வெள்ளைக் காகிதத்தின் விநியோகத்தை இதுவரை செய்யாததால் வரும் 1978–79 கல்வி ஆண்டில் நோட்டுப் புத்தகங்களின் விலை உயரும் என்று நோட்டுப் புத்தக உற்பத்தியாளர் சங்கத்திடமிருந்து முறையீடு ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை. (இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு வே. தங்கப்பாண்டியன்: இந்த ஆண்டு மதுரையில் நோட்டுப்புத்தக உற்டத்தியாளர்கள் அரசாங்கத்திடம் தங்களுக்கு வேண்டிய காகிதத் தேவை பற்றிய கோட்டாவைக் கேட்டும், அது கிடைக்காமல் போனதால், இந்த ஆண்டு மதுரைப் பகுதிகளில் நோட்டுப் புத்தகங்கள் கிடைக்கவில்லை, நியாயமான விலையில் கிடைக்கவில்லை என்ற குறைபாடு வந்திருக்கிறதா? அதோடு கேரளத்திற்குத் தேவையான நோட்டுப் புத்தகங்களை இங்கேயிருந்து அதிகமாக வாங்கிச் சென்றிருக்கிறார்கள் என்ற உண்மை அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கேரளத்திற்கு இங்கேயிருந்து நோட்டுப் புத்தகங்கள் வாங்கிப் போனதாகத் தகவல் இல்லை. அவர்களிடமிருந்து குறிப்பிட்ட புகார்கள் வரவில்லை என்கிற பதிலைத்தான் முதலில் நான் சொன்னேன்.

திரு கே. எஸ். அப்துல் வகாப் : மத்திய அரசாங்கத்திலிருந்து நமது மாநில அரசுக்கு ஆண்டுக்கு எத்தனை டன் மலிவு விலை வெள்ளைத்தாள்கள் தருகிறார்கள்? சென்ற ஆண்டு எவ்வளவு தந்தார்கள்? அதற்கு முந்தைய ஆண்டு எவ்வளவு தந்தார்கள்? இந்த ஆண்டு எவ்வளவு கொடுத்தார்கள் என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தருவாரா?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: இங்கே எனக்குத்தரப் பட்டிருக்கிற விவரப்படி, 1978 ஆம் ஆண்டு ஜனவரி—மார்ச்சு காலாண்டிற்கு மைய அரசிடம் இந்த அரசு கேட்ட காகிதம் 5,489 டன்களாகும். ஆனால் மைய அரசு நமக்குக் கொடுத்தது 2,050 டன்கள்தான். இதை முன்னிட்டு நோட்டுப் புத்தகத் தயாரிப்பாளர்களிடமிருந்து பல முறையீடுகள் வந்ததால், இந்த அரசு இந்தக் காலாண்டுக்கு மேலும் அதிகமாக காகிதம் ஒதுக்க வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

திரு க. மீனாட்சிசுந்தரம் : நோட்டுப்புத்தக வியாபாரிகள் நோட்டுகளின் மீது 200, 300. 400 என்று எண்ணிக்கையைக் குறிப்பிடுகிறார்கள். அந்த எண்ணிக்கை நோட்டுப் புத்தகத்தில் உள்ள பக்கத்தைக் குறிப்பிடுவதைப் போல, ஒரு மாயத்தோற்றத்தைத் தருகிறது. நோட்டுப் புத்தகத்தை வாங்கிப் பார்த்தால், 200, 300, 400 என்று போடப் பட்டிருக்கிறதே தவிர, அதற்கு இணங்க பக்கங்களின் எண்ணிக்கை சரியாக இல்லை. இப்படி வியாபாரிகள் மாணவர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : இத்தகைய புகார்கள் குறிப்பிட்ட இடங்களிலிருந்து வருமானால், அது குறித்து இந்த அரசு பரிசீலிக்கும் என்று கூறிக்கொள்கிறேன்,

திரு ஆ. பாலசுப்ரமணியம் : சென்ற ஆண்டு நோட்டுப் புத்தகங்களின் விலை என்ன? இந்த ஆண்டு நோட்டுப் புத்தகங்களின் விலை என்ன? அப்படி இந்த ஆண்டு விலை உயர்ந்திருந்தால், அதற்குக் காரணம் என்ன என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : நோட்டுப்புத்தகங்களின் விலைகள் பற்றிய விவரம் இங்கே என்னிடம் இல்லை. ஆனாலும் நமக்குத் தேவையான மலிவு விலைக் காகிதங்கள் கிடைக்கவில்லை. நாம் கேட்ட அளவுக்கு மைய அரசாங்கத்தால் நமக்குத் தர முடியவில்லை. ஆகவே நோட்டுப் புத்தக உற்பத்தியாளர்கள் வெளி மார்க்கெட்டில் காகிதங்களை வாங்கி நோட்டுப் புத்தகங்களைத் தயாரித்திருக்கிறார்கள். அதன் காரணமாக விலை கூடுதலாகத்தான் இருக்கும்,

திரு பி. ஆர். தாமஸ் : மாணவர்களுக்குத் தேவையான நோட்டுப்புத்தகங்கள் நியாயமான விலையில் கிடைக்கும்படி அரசே தமிழகப் பாடப் புத்தக நிறுவனத்தின் மூலமாக நோட்டுப் புத்தகங்களையும் தயாரித்துக் கொடுக்கலாம் அல்லவா? அதுபற்றி அரசின் கருத்து என்ன?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : இப்போதுள்ள நிலையில் மாணவர்களுக்குத் தேவையான பாடப் புத்தகங்களையே முறையாக இந்த நிறுவனம் தரவில்லை என்று உறுப்பினர்கள் குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இருக்கிற நிலைமைகளைச் சீர் செய்துவிட்டு, பிறகு இந்த யோசனையைப் பற்றி எண்ணலாம்.





திரு செ. முத்துசாமி : நாட்டில் அவசர கால நிலைமை இருந்தபோது, இந்த நாட்டிலே உள்ள பேப்பர் கம்பெனிகளால் ஒழுங்காகப் பள்ளிப் பிள்ளைகளுக்குத் தேவைப்படும் பேப்பரைச் சப்ளை செய்ய முடிந்தது. அப்படிச் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் இன்று சுதந்திரம் வழங்கிவிட்ட நிலையில், பேப்பர் கம்பெனிகள் தங்கள் இச்சைப்படி நடந்து கொண்டு மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நோட்டுப் புத்தகங்களுக்கான பேப்பரை வழங்காமல் இருக்கின்றனவே. இது மத்திய அரசாங்கத்திற்குத் தெரியாதா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : அதுதான் அவசர காலத்தினுடைய நன்மை.

*Express and District Routes of Pallavan Transport Corporation.*

* 68. *Q.*—THIRU V. R. PERIANNAN: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(*a*) whether there is any proposal with the Government to revive the State Transport Department and bring the Express and District Routes of Pallavan Transport Corporation under its control; and

(*b*) if so, the stage at which it now stands ?

பல்லவன் போக்குவரத்துக் கழக விரைவு மற்றும் மாவட்டக் தடங்கள்

திரு வி. ஆர். பெரியண்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழக விரைவு மற்றும் மாவட்டத் தடங்களை மட்டும், மீண்டும் அரசு போக்குவரத்து (State Transport) ஆக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : (அ) இல்லை, (இ) கேள்விக்கு இடமில்லை.

(பிற்பகல் 5-00)

திரு வி. ஆர். பெரியண்ணன் : அந்த எக்ஸ்பிரஸ் பஸ்கள், முதலிலே அரசு பஸ்களாக இருந்தன. அது கார்ப்பரேஷனுக்கு மாற்றப்பட்ட பிறகு அரசு பஸ்ஸாக இருந்த நேரத்திலே அரசு ஊழியர்களாகவும், பிறகு கார்ப்பரேஷன் ஊழியர்களாகவும் இருக்கின்ற நிலைமைகள் ஏற்பட்டன. அரசு ஊழியர்களுக்குக் கொடுத்த சலுகைகள் இப்போது கொடுக்கப்படவில்லை என்ற புகார் வந்ததா என்று கேட்டுக் கொள்கிறேன்.

[1978 செப்டம்பர் 11

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன்</u>; அப்படிப்பட்ட புகார்கள் வந்தன. அதன் அடிப்படையிலே தான் பேச்சு வார்த்தைகள் நடந்து ஒரு உடன்பாடும் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு கே. எஸ். அப்துல் வகாப்</u> : சென்னை நகரில் ஓடிக்கொண்டிருக்கும் டவுன் பஸ்கள் பல்லவன் டிரான்ஸ்போர்ட் என்ற பெயரில் இருக்கின்றன. துரித பிரயாணத்திற்கு ஒதுக்கியுள்ள பஸ்கள் பல்லவன் என்ற பெயரிலேயே ஓடிக்கொண்டிருக்கின்றன. இதைப் புரிந்துகொள்வது கஷ்டமாக இருக்கிறது. நான் போன் செய்து கேட்கும்போது, குழப்பிக்கொண்டு பதில் சொல்கிறார்கள். இந்தக் குழப்பத்தை நிவர்த்திக்க வழிவகை செய்ய வேண்டும்.

<u>மாண்புமிகு திரு சி. பொன்னையன்</u> : பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும், சாதாரண பிரயாணத்திற்கு என்றும் விரைவுப் போக்குவரத்துக்கு என்றும் தனித்தனிப் பிரிவாக வைக்கப்பட்டு, தனித்தனி தொலைபேசி எண்களும் கொடுக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தொடர்பு கொள்ள தனி போன் வசதி இருக்கிறது. இதுபற்றிச் சிக்கல் இருப்பதாக அரசினுடைய கவனத்திற்கு வரவில்லை.

<u>திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்</u> : மாண்புமிகு அங்கத்தினர் திரு வகாப் அவர்கள் சொன்ன இந்த சிக்கலை தீர்க்க மூன்று பிரிவுகளுக்கும் மூன்று பெரிய தலைவர்களுடைய பெயர்கள் வைத்து மாற்றுவதற்கு ஏதாவது பரிசீலனையில் இருக்கிறதா?

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன்</u> : அப்படி மாற்றுவதாக எதுவும் பரிசீலனையில் இல்லை. ஆனாலும் பல்லவன் போக்குவரத்தையும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தையும் இணைத்து பெரியார் போக்குவரத்துக் கழகம் என்று வைக்கலாமா என்று எண்ணி வருகிறோம்.

*Lands affected by Rains and Flood.*

* 69. *Q.*—THIRU A. BALASUBRAMANIAM: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state:

(*a*) whether the lands in Senthamangalam, Erumapatti and Mohanoor Panchayat Unions in Salem district, sand casted due to heavy rains and flood in Tamil Nadu during 1977 were reclamated; and

(*b*) if not, when action will be taken?



1978 செப்டம்பர் 11]

<u>மழை, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நிலங்கள்.</u>

\+ <u>திரு. ஆ. பாலசுப்ரமணியம்</u> : மாண்புமிகு வேளாண்மை நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) தமிழ்நாட்டில் 1977-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரு மழை, வெள்ளத்தின் காரணமாக சேலம் மாவட்டத்தில் சேந்தமங்களம், எருமப்பட்டி, மோகனூர் ஆகிய ஒன்றியங்களில் மணலால் தூர்ந்துபோன நிலங்கள் சீர்திருத்தப்பட்டு விட்டனவா?

(இ) இல்லையெனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u> : (அ) & (இ): 1977-ம் ஆண்டில் பெருமழை, வெள்ளத்தின் காரணமாக சேலம் மாவட்டத்தில் சேந்தமங்கலம், எருமப்பட்டி, மற்றும் மோகனூர் பஞ்சாயத்து ஒன்றியங்களில் மொத்தம் 250·04 ஏக்கர் நிலங்கள் மண் மேடிட்டு விட்டன. அவைகளில் விவசாயிகளே பெரும்பாலும் மணல் அகற்றும் பணியினை மேற்கொண்டனர். 28.36 ஏக்கர் நிலங்கள் வேளாண்மைத் துறையின் பொறியியல் பிரிவின் மூலம் முழுவதும் சீர்திருத்தப்பட்டது.

<u>திரு. ஆ. பாலசுப்ரமணியம்</u>: அப்படி தூர் எடுக்கப்படுவதற்கு அரசு ஏற்றுக்கொண்ட செலவு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்,

<u>மாண்புமிகு திரு. ப குழந்தைவேலு</u> : அதற்கான செலவு ரூ. 27,285.

<u>திரு. ஆ. பாலசுப்ரமணியம்</u>: அப்படி தூர் எடுக்கப்படுவது, மணல் மூடியதை எடுப்பது, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் இலவசமாகச் செய்யப்பட்டதா? அதற்கு விவசாயிகள் தொகை ஏதாவது அரசுக்குச் செலுத்த வேண்டுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u>: ஏற்கனவே இதைப் பற்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது. வெள்ளத்தால், புயலால் மணல் மேடிட்டிருப்பதைத் தூர் எடுப்பதற்கு ஆன செலவுகளை அரசு ஏற்றுள்ளது. அது சிறு விவசாயிகளுக்கு இலவசமாகச் செய்யப்பட்டது. பெரிய விவசாயிகளுக்கு 50 சதவிகிதம் இலவசமாகச் செய்துகொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. வி. ஆர். பெரியண்ணன்</u>: இன்னும் சில பகுதிகளிலே அப்படி மணல் மேடிட்ட நிலத்தின் விவசாயிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு மனுச் செய்திருக்கிறார்கள். அதற்கு எந்த விதமான பலனும் கிடைக்கவில்லை. எந்த உதவியும் கிடைக்காத

[1978 செப்டம்பர் 11

காரணத்தினாலே விவசாயிகளே கடன் வாங்கிச் செலவு செய்திருக்கிறார்கள். இந்தச் சிறு விவசாயிகள் மனுச் செய்தால். அந்தத் தொகையை அவர்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இதற்காக என்று காலக் கெடு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அந்தக் காலக் கெடுவிற்குள்ளாக யார் யார் மனுச் செய்திருந்தார்களோ, அவர்களுக்கு விவசாய இலாகா பொறியாளர் மூலமாக அந்த வேலைகள் நடந்தன. அவர்கள் மண் மேடிட்ட இடங்களிலிருந்து மண்ணை எடுத்திருக்கிறார்கள். சீர் திருத்தம் செய்திருக்கிறார்கள். தமிழகத்தில் வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்பட்ட நிலம் 14,261.48 ஏக்கர். இதிலே இதுவரையில் வேளாண்மைத் துறையால் சீர்திருத்தம் செய்யப்பட்டது 10,105.49 ஏக்கர். சிறிய விவசாயிகள் சீர்திருத்திக்கொண்டது 3,785.84 ஏக்கர். சிறிய விவசாயிகள் மேற்கொண்டு சீர்திருத்திக்கொள்ளக்கூடியது 7.15 ஏக்கர். வேளாண்மைத் துறையால் சீர்திருத்திக் கொடுக்க வேண்டிய பரப்பு 363.01 ஏக்கர். இதற்காக ரூ. 90,89,889.60 வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : சிறு விவசாயிகளுக்கு இலவசமாகச் செய்து கொடுக்கப்பட்டது. பெரிய விவசாயிகளுக்கு பாதிப் பங்கு இலவசமாகச் செய்து கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். எந்த அளவு நிலத்தை வைத்து சிறிய விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்று கணக்குப் பார்க்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஏற்கனவே சிறிய விவசாயிகள், பெரிய விவசாயிகள் பற்றி 'டெபனிஷன்' அறிவிக்கப்பட்டிருக்கிறது. சிறிய விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சிறு விவசாயிகள் என்று சொல்லப்படுபவர்கள் 2½ ஏக்கர் நன்செய் நிலம் வைத்திருப்பவர்கள் அல்லது 5 ஏக்கர் புன்செய் நிலம் வைத்திருப்பவர்கள் என்று இருக்கிறது. அதற்கும் மேற்பட்டு நிலம் வைத்திருப்பவர்கள் எல்லாம் பெரிய விவசாயிகள் என்று பொருள் கூறப்பட்டுள்ளது.

திரு. க. இராமமூர்த்தி: இந்த நிலைமைகளைப் பார்க்கும் போது, சிறு விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்ற பாகுபாடு ஏன் ? இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட விளைவுகள்தான் இவைகள். சிறிய விவசாயிகளும் நிலத் தீர்வை, நீர்த் தீர்வை செலுத்தி வருகிறார்கள். பெரிய விவசாயிகளும் இவற்றைச் செலுத்துகிறார்கள். இந்த விளைவுகள் எதிர்பாராதது. அவர்களுடைய தவறு காரணமாக அல்ல. நஷ்டங்கள் ஏற்படுகின்ற போது, சிறு விவசாயிகளுக்குச் சலுகைகள் கொடுக்கப்பட்டன. இதுபோல விவசாயிகள் அனைவருக்கும் இனமாகச் செய்துதர அரசு முன்வருமா?



1978 செப்டம்பர் 11]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இது ஏற்கனவே முடிந்துவிட்ட விஷயம். மீண்டும் இதுபோன்ற இயற்கைக் கோளாறுகள் ஏற்படாமல் இருக்கவேண்டுமென்றுதான் எண்ணிக் கொண்டிருக்கிறோம். அப்படி இயற்கைக் கோளாறுகள் இல்லாமல் போய்விட்டால், இதைப்பற்றிச் சிந்திக்கவேண்டிய சூழ்நிலையே இல்லாமல் போய்விடும். இனி மீண்டும் அப்படி ஏதாவது ஏற்பட்டால், அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Select Seeds.*

* 70 Q.—Thiru K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state:—

(a) whether 'Select Seeds' are produced in the State Agricultural Seed Farms, exclusively for the use of the small farmers; and

(b) if so, the name of the agency through which the seeds are sold?

## பொறுக்கு விதைகள்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மை நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) நம் மாநிலத்தில் உள்ள விவசாய விதைப் பண்ணைகளில் சிறு விவசாயிகளுக்கு என, பொறுக்கு விதைகள் தயாரிக்கப்படுகின்றனவா?

(இ) ஆம் எனில், இவை எந்த அமைப்பின் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) சிறு விவசாயிகளுக்கென தனியாக பொறுக்கு வித்துக்கள் இம்மாநில விவசாயப் பண்ணைகளில் தயாரிக்கப்படுவதில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. இராமமூர்த்தி : இந்த விவசாய விதைப் பண்ணைகளுக்குப் புதிய ரகத்தில் அல்லது அதிகப்படியான விளைச்சலைத் தருகின்ற எண்ணெய் வித்துக்களை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்காக இவைகள் உற்பத்தி செய்யப்பட்டிருந்தால் காலப்போக்கில் அது விவசாயிகள் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும். ஆரம்பத்திலே இதை விளைவித்தால்கூட, முன் மாதிரியாகச் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். சிறு விவசாயிகளை மனதிலே கொண்டு விவசாயத்தைச் செய்ய அரசு முன்வருமா?

[1978 செப்டம்பர் 11

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> மூலக் கேள்வி நமது மாநிலத்தில் உள்ள விவசாய விதைப் பண்ணைகள் சிறு விவசாயிகளுக்கான பொறுக்கு விதைகளை உற்பத்தி செய்யுமா என்பது பற்றியதாகும். இங்கே சிறு விவசாயி, பெரிய விவசாயி என்று மாநில விதைப் பண்ணையில் அல்லது விதை மையங்களில் பாகுபாடு இல்லை. பொதுவாக எல்லா விவசாயிகளுக்கும் ஒட்டு மொத்தமாகத் தான் விதைகளைத் தயாரித்துக் கொடுக்கப்படுகிறது, நெல், கேழ்வரகு, வீரிய வித்துக்கள். மக்காச்சோளம் போன்றவைகளை எடுத்துக்கொண்டாலும், அதற்கென தனியாக விழுக்காடு வைத்துக்கொண்டு நாம் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, தமிழகத்தைப் பொறுத்தவரையில், நெல்லுக்கு மொத்த சாகுபடி பரப்பில் 7 சதம், கேழ்வரகு வீரிய ஒட்டு விதைகள், மக்காச்சோளம், கம்பு, கேழ்வரகு, சோளம், 30 சதவிகிதம் என்று நாம் உற்பத்திசெய்து கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.

<u>திரு. எம். சங்கரலிங்கம் :</u> விவசாயப் பண்ணைகளில் உற்பத்தியாகின்ற பொறுக்கு விதைகள் சிறிய விவசாயிகளுக்குச் சலுகையுடன் அளிக்கப்படுகின்றன. பொறுக்கு விதைகளைத்தான் அவர்கள் பயன்படுத்த வேண்டும். ஒரே விதையை மூன்று முறை பயன்படுத்தினால், அதனுடைய நெல் உற்பத்தித் தரம் குறைந்து விடும். மீண்டும் அந்தத் தரம் உயர வேண்டுமென்பதற்கு, பொறுக்கு விதையைத்தான் பயன்படுத்த வேண்டுமென்று விவசாயிகளுக்கு ஆலோசனை சொல்லப்பட்டதா? இந்த பொறுக்கு விதையைப் பயன்படுத்தும் நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:</u> பொறுக்கு விதைகள் வழங்குவதில் பெரிய விவசாயி என்று கொண்டாலும் சிறிய விவசாயி என்று கொண்டாலும் அவர்களுக்குத் தனிப் பாகுபாடு, புதுச் சலுகைகள் இல்லை. வெளி மார்க்கெட்டிலே விற்கின்ற விலைக்கு மேல் 25 பைசா அதிகமாக வைத்து விற்றுக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஏறத்தாழ விதைகளைப் பங்கிட்டு உற்பத்தி செய்ய கொடுக்கிறார்கள். இதை இந்த அரசு விவசாயத் துறை மூலமாகக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. மேலும் ஏறத்தாழ வருடா வருடம் விவசாயிகளுக்கு புதிது புதிதாக விதைகள் கண்டு பிடித்துக் கொடுக்கப்படுவதால், மீண்டும் 3, 4 தடவைகள் ஒரு தர விதைகளை உபயோகிக்கும் நிலை ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 5-10)

<u>திரு. ஆ. பாலசுப்ரமணியம்:</u> பொறுக்கு விதைகள் அரசுப் பண்ணைகளில் மட்டும் விளைவிக்கப்படுகின்றனவா அல்லது தனியார் பண்ணைகளிலும் விளைவிக்கப்படுகின்றனவா? அப்படி தனியார் பண்ணைகளில் விளைவிக்கப்படுமானால், அதை எந்த அடிப்படையிலே அரசு மேற்கொள்கிறது?



1978 செப்டம்பர் 11]

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> பொறுக்கு விதைகள் தனியார் பண்ணைகளிலும், அரசுப் பண்ணைகளிலும் விளைவிக்கப்படுகின்றன. அரசுத் துறையில் 49 விதைப் பண்ணைகள் இருக்கின்றன. 6 விதை மையங்கள் தமிழக விவசாயத் துறையால் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் தனியார் பண்ணைகள் மூலமாகவும் நாம் விதைகளைக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அந்த விதைகளெல்லாம், 'சீட் (Seed) சர்டிபிகேட்', அதாவது விதைச் சான்றிதழ் பெற்றுத்தான் விற்கப்படுகின்றன. இதற்காகத் தனியாக அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தனியார் நிறுவனமாக இருந்தாலும், அரசுத் துறை நிறுவனமாக இருந்தாலும், விதைகளை விற்கும்போது ''சீட் சர்ட்டிபிகேட்'' பெற்றால்தான், விற்க முடியுமென்று சட்ட விதி முறைகள் இருக்கின்றன. அந்த முறையில் விதை விற்பனை நடந்து வருகிறது.

<u>திரு. பி. மாணிக்கம்:</u> பருத்தி விதைப் பண்ணைகள் மாநிலத்தில் எத்தனை? அவை எந்த அளவுக்கு விவசாயிகளுக்குப் பொறுக்கு விதைகளை அளித்து வருகின்றன?

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> பருத்தி விதைப் பண்ணைகளென்று தனியாக எவ்வளவு இருக்கிறதென்பதற்குப் புள்ளி விவரம் இல்லை. குறிப்பாக 'வைகை சீட் பார்ம்' என்று மதுரையிலே இருக்கிறது, அது குறிப்பாகப் பருத்தியில் அதிகமான வீரிய விதைகளை உற்பத்தி செய்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. க. இராமமூர்த்தி :</u> அமைச்சரவர்கள் பதில் அளிக்கின்றபோது, விவசாய விதைப் பண்ணைகளில் சிறு விவசாயிகளுக்கென தனியாகப் பொறுக்கு விதைகள் உற்பத்தி செய்யப்படுவதில்லை என்று சொன்னார்கள். சங்கடமே அதில்தான் வருகிறது, விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகளிலும் மற்ற பண்ணைகளிலும் பொறுக்கு விதைகள் தயாரிக்கப்படுகின்றபோது, பெரும்பாலும் அவை பெரும் விவசாயிகளுக்கு அல்லது யாருக்குச் செல்வாக்கு இருக்கிறதோ அவர்களுக்கு மட்டும் கிடைக்கும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அந்தக் காரணத்தாலே மிகச் சாதாரண சிறு விவசாயிகளுக்கு, இதனுடைய பலன் கொஞ்சம்கூட கிடைக்காத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், என்னுடைய பகுதியிலே இருக்கிற மணிலா ஆராய்ச்சிப் பண்ணையைப் பொறுத்த வரையிலும், மிகுந்த தரமான விதைகள் அங்கே தயாரிக்கப்படுகின்றன. ஆனால் எங்கள் பகுதியிலுள்ள சிறு விவசாயிகளுக்கு அதனுடைய பலன் மிகக் குறைந்த அளவிலேதான் கிடைக்கிறதென்ற நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. காரணம், எப்போது கேட்டாலும் கிடைப்பதில்லை அல்லது சிலர் கேட்டால் தான் கிடைக்கும் என்ற நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே இது போன்ற நிலைகளை அகற்றி, சிறிய விவசாயிகளுக்குப் பொறுக்கு விதைகள் கிடைக்கும் வாய்ப்புகளை அரசாங்கம்

ஏற்படுத்துமா? மணிலா மட்டுமல்ல. எள், சோளம் போன்ற பல விதைகளுக்கு விவசாயிகளிடமிருந்து கோரிக்கைகள் நிறைய இருக்கின்றன. எனவே அவர்களுக்குக் கிடைக்காத சூழ்நிலையை அகற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:—விதைகளைப் பொறுத்த அளவில், அரசு விதைப் பண்ணைகளிலே வேண்டிய அளவிற்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஏதோ செல்வந்தர்கள், செல்வாக்கு படைத்தவர்கள் ஆகியவர்களுக்குத்தான் இந்த விதைகள் கிடைக்கிறதென்ற சூழ்நிலை இல்லாமல், சிறிய விவசாயிகள் என்று சொன்னாலும், அவர்களுக்கும் கிடைக்கும் சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. குறிப்பாக திண்டிவனத்தைப் பொறுத்தவரையில், அதற்கு என்று பெருமையுண்டு. டி. எம். சி. 1, 2, டி. எம். ஈ. 7 என்ற மணிலாப் பயிர்கள் எல்லாம் பிரசித்தி பெற்றவையாக இருக்கின்றன. அங்கேயிருந்து வந்த திரு. இராமமூர்த்தி அவர்களும் பிரசித்தி பெற்றவர்கள், அவர்கள் சிறு விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில், இன்றைய தினம் வேண்டிய விதைகளை, வீரிய விதைகளை, வேண்டிய அளவிற்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. தட்டுப்பாடு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) : வினாக்கள்-விடைகள் முடிந்தன.

(குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுகுறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

Thiru G. VASANTHA PAI: * * *

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்): * * *

Thiru G. VASANTHA PAI: * * *

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்): * * *

Thiru G. VASANTHA PAI: * * *

மாண்புமிகு திரு. க. இராசா முகமது: * * *

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்): * * *

மாண்புமிகு திரு. க. இராசா முகமது: * * *

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்): * * *

Thiru G. VASANTHA PAI: * * *

Vice-Chairman (Thiru E. S. VENKATESAN): * * *

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



Thiru G. VASANTHA PAI: * * *

Vice-Chairman (Thiru E. S. VENKATESAN): * * *

Thiru G. VASANTHA PAI: * * *

Vice-Chairman (Thiru E. S. VENKATESAN): * * *

Thiru G. VASANTHA PAI: * * *

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்): * * *

Thiru G. VASANTHA PAI: * * *

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்): * * *

Thiru G. VASANTHA PAI: * * *

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்): * * *

Thiru G. VASANTHA PAI: * * *

VICE-CHAIRMAN: * * * இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்): இந்தப் பிரச்சினையை இத்தோடு முடித்து விடலாம்.

## 2. தகவல் கோரல்.

திரு. க. மீனாட்சி சுந்தரம்: மாற்றுத் தலைவரவர்களே, கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் பற்றி நான் 28-8-1978-லே கவன ஈர்ப்புத் தீர்மானம் தந்திருந்தேன். அது இன்றைய வரையிலே எடுத்துக்கொள்ளப்படவில்லை. கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் இன்றைக்கு தீவிரமாக நடந்துகொண்டிருக்கிறது. பஸ்களை வழி மறிக்கிறார்கள். நான் வந்த பஸ்கூட அது போக வேண்டிய வழித் தடத்தில் போகாமல், வேறு வழியில் திருப்பிவிடப்பட்டது. அந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் இதுவரை எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று கூறி, அதை உடனடியாக எடுத்துக்கொள்ள ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு, ஈ. எஸ். வெங்கடேசன்): தினமும் இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கொடுத்த தீர்மானத்திற்கு அமைச்சரின் அறிக்கை இன்றுதான் வந்திருக்கிறது. நாளை அல்லது நாளை மறு நாள் எடுத்துக்கொள்ளப்படும்.

Thiru G. VASANTHA PAI: * * *

Vice-Chairman (Thiru E. S. VENKATESAN): * * *

மாண்புமிகு திரு. க. இராசா முகமது: * * *

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[1978 செப்டம்பர் 11

[பிற்பகல் 5-20]

Thiru G. VASANTHA PAI: * * *

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்): * * *

மாண்புமிகு திரு. க. இராசா முகமது: * * *

Thiru G. VASANTHA PAI: * * *

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்): * * *

Thiru G. VASANTHA PAI: * * *

VICE-CHAIRMAN (Thiru E. S. VENKATESAN): * * *

மாண்புமிகு உறுப்பினருடைய பேச்சு எல்லாம் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும்.

## 3. கவன ஈர்ப்புத் தீர்மானங்கள்.

(1) அரசுப் பள்ளிகளில் 1-4-1970-க்குப் பின் நியமிக்கப்பட்ட இடை நிலை ஆசிரியர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணி வரன்முறைப் படுத்தப்படாதது குறித்து.

திரு. எம். சங்கரலிங்கம்: மாற்றுத் தலைவர் அவர்களே, "அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்களில் 1-4-1970-க்குப் பின் நியமிக்கப்பட்டவர்கள், பணியில் அவர்கள் சேர்ந்த நாள் முதல் பணி வரன் முறைப்படுத்தப்பட்டு, வருட ஊதிய உயர்வு வழங்கப்படாமல் 1-4-1974-லிருந்து பணி வரன் முறை செய்யப்பட்டு ஊதிய உயர்வு வழங்கப்படுவதால், பாதிக்கப்பட்டுள்ள நிலை குறித்து'' கல்வி அமைச்சரின் அவசர கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அரசாணை எண். 428, கல்வி, நாள் 21-3-1974-ல் 1-4-70-க்குப் பின் அரசு கழக உயர்நிலைப் பள்ளிகளில் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு 21-3-1974-ல் ஒரு வருட பணிக்காலம் நிரம்பப் பெற்று தமிழ் நாடு கல்வி சார்புப் பணி விதிகளின்படி கல்வித் தகுதி பெற்ற அனைத்து இடைநிலை ஆசிரியர்கள், இரண்டாம் நிலை தமிழ் வித்வான்கள் மற்றும் தனித் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் அனைவரின் பணியையும் உடனடியாக வரன்முறைப்படுத்த ஆணையிடப்பட்டது. மேற்கூறிய ஆசிரியர்களின் நியமனம் தமிழ் நாடு கல்வி சார்புப் பணி விதிகளின்படியோ அல்லது மாவட்டக் கழகச் சட்டம் 1920-ன்படி தொகுக்கப்பட்ட சட்ட விதிகளின்படியோ செய்யப்பட்டது. ஆனால் அரசாணை எண். 761, கல்வி, நாள் 16-5-70-ன்படி 1-4-70-க்குப் பின் செய்யப்படும் நியமனங்கள் அனைத்தும் தமிழ் நாடு கல்வி சார்புப் பணி விதிகளின்படிதான் செய்யப்பட வேண்டும். அதற்கு மாறாக சில

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



1978 செப்டம்பர் 11] [மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்]

முதன்மைக் கல்வி அலுவலர்கள் மாவட்டக் கழக விதிகளின்படியே எல்லா நியமனங்களையும் செய்து வந்தனர். மாவட்டக் கழக சட்ட விதிகளிலும் தமிழ்நாடு கல்வி சார்புப் பணி விதிகளிலும் கூறப்படும் கல்வித் தகுதிகளில் சிறிது வேறுபாடு உண்டு. மாவட்டக் கழக விதிகளின்படி நியமனத்திற்கு வயது வரம்பு கிடையாது. தமிழ் நாடு கல்வி சார்புப் பணி விதிகளின்படி நியமனங்களுக்கு வயது வரம்பு உண்டு. எனவே 1-4-70க்குப்பின் மாவட்டக் கழக விதிகளின்படி நியமனம் செய்யப்பட்டவர்களின் விஷயத்தில் கல்வித் தகுதி மற்றும் வயது வரம்பு சம்பந்தப்பட்ட விதிகளைத் தளர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனவே பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரைக்கேற்ப அரசாணை எண். 428, கல்வி, நாள் 21-3-74-க்கு சில திருத்தங்கள் செய்யும் வகையில் அரசாணை நிலை எண். 765, கல்வி, நாள் 16-5-74-ல் அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் 1-4-70-க்குப்பின் நியமனம் செய்யப்பட்டு 21-3-74-ல் ஒரு வருட பணிக்காலம் நிரம்பப் பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் மற்றும் தனித் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் அனைவரின் சார்பாக தமிழ்நாடு கல்விச் சார்பு பணி விதிகள் ஆறு, ஏழினை (வயது வரம்பு மற்றும் கல்வித் தகுதி பற்றியது) தளர்த்தி இவர்களின் பணியை 21-3-74 முதல் வரன்முறைப்படுத்த ஆணையிடப்பட்டது.

எனவே ஆசிரியர்களின் பணியை வரன்முறைப்படுத்துவதில் கல்வி மற்றும் வயதுவரம்பு சம்பந்தப்பட்ட விதிகளைத் தளர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் அவர்களின் பணியை, நியமனம் செய்யப்பட்ட தேதி முதல் வரன்முறைப்படுத்த இயலவில்லை. எனவேதான் 21-3-74 முதற்கொண்டு பணி வரன்முறை செய்யப்பட அரசு ஆணையிட்டது. இதன் காரணமாக அப்படிப்பட்டவர்கள் 21-3-74-க்கு முந்தைய தேதிவரை எந்தவிதமான ஊதிய நிலுவையும் பெறத் தகுதியுடையவர்கள் ஆகமாட்டார்கள்.

திரு. எம். சங்கரலிங்கம்: மாற்றுத்தலைவர் அவர்களே, 1-4—1970க்குப் பின் நியமிக்கப்பட்டவர்கள் பணி 21-3-1974 லிருந்து வரன்முறை செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு அமைச்சர் அவர்கள் சொன்ன காரணம் 1-4-1970 லேயே அவர்கள் கழகப் பள்ளிகளில், கழக விதிகளின்படி நியமிக்கப்பட்டார்கள் என்றும், அரசு சார்பு விதிகளுக்கு அது மாறுபட்டது என்றும் குறிப்பிட்டார்கள். அது அப்படியல்ல. கல்வித் தகுதியைப் பொறுத்த வரையில், இந்த இரண்டு விதிகளுக்குமிடையே எந்தவிதமான மாறுபாடும் கிடையாது. செகன்டரி கிரேட் ஆசிரியர் என்று சொன்னால், எஸ். எஸ். எல். சி. மற்றும் இரண்டு வருடம் பயிற்சி: தமிழாசிரியர் என்று சொன்னால் எஸ். எஸ். எல். சி., வித்துவான், பண்டிட் பயிற்சிதான் பெற்றிருக்க வேண்டும் இரண்டு விதிகளிலும். வயது வரம்பிலே

[திரு. எம். சங்கரலிங்கம்] [1978 செப்டம்பர் 11

சில கழகப் பள்ளி ஆசிரியர்கள் 30 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்கலாம். இப்படியுள்ள ஒரு சிலரை வைத்துக்கொண்டு 1974 வரை பணி வரன்முறை செய்யப்படாமல் இருக்கிறது. அரசு சார்பு விதிகளின்படி விதிகளுக்கு இணங்கி நியமிக்கப்பட்டவர் களுக்குக்கூட 1974 முதல் பணி வரன்முறை செய்யப்படும் என்று உத்தரவு வெளியிடப்பட்டிருக்கிறது. எனவே இந்த அறிக்கையிலே அவர்கள் எந்தவிதமான முன்னுரிமையும் பெறுவ தற்கு உரிமையில்லை என்று சொன்னாலும் கூட, 1-4-1970-ல் அரசு சார்பு விதிகளின்படி கல்வித் தகுதியும், வயது வரம்புக்கும் உட்பட்டவர்கள் அனைவருக்குமாவது 1-4-1970 முதல் பணியை வரன்முறை செய்ய அரசு பரிசீலனை செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாற்றுத் தலைவர் அவர்களே, அரசு அதைப் பரிசீலனை செய்யும்.

(மாற்றுத் தலைவர் திரு. க. இராமமூர்த்தி தலைமை)

(2) 26-8-1978 அன்று எண்ணூரில் படகு விபத்தில்
பள்ளி மாணவர்கள் இறந்தது குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாற்றுத் தலைவர் அவர்களே, "26-8-78 அன்று எண்ணூரில் ஏற்பட்ட படகு விபத்தில் பள்ளி மாணவர்கள் 15 பேர் இறந்தது குறித்து" கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாற்றுத் தலைவர் அவர்களே, சென்னை வண்ணாரப்பேட்டை பி. ஏ. கே. பழனிச்சாமி நாடார் உயர்நிலைப் பள்ளி மாணவர்களில், சாரணப்பிரிவைச் சேர்ந்த 64 மாணவர்கள் திரு. சீனிவாசம் என்னும் தமிழாசிரியர் தலைமையில் (சாரணர் பிரிவுத் தலைவர்) 26-8-78 அன்று எண்ணூர் அருகே உள்ள தாழங்குப்பம் என்னு மிடத்திற்குச் சுற்றுலாச் சென்றனர். இவர்கள் காலை வழியாக கத்தியவாக்கம் என்னுமிடத்தை 26-8-78 அன்று காலை 10-00 மணியளவில் சென்றடைந்தனர். அங்கிருந்து முத்துவாரிக்குப்பம் என்னும் தீவிற்குச் செல்லும் பொருட்டு சாரணர் பிரிவின் தலைவர் இரண்டு மீன் பிடிக்கும் படகுகளை போக்கு வரத்துக் கூலி ரூ. 30-க்கு அமர்த்திக் கொண்டார். அப்படகு கள் ஆட்களை ஏற்றிச் செல்வதற்கு உரிமம் வழங்கப்பட்டவை அல்ல. படகொன்றிற்கு 32 மாணவர்கள் வீதம் ஏற்றிக் கொண்டு 11-00 மணியளவில் இரு படகுகளும் புறப்பட்டன. முதல் படகில் சாரணர் பிரிவுத் தலைவர் ஏறிக்கொண்டார்.



1978 செப்டம்பர் 11] [திரு. செ. அரங்கநாயகம்]

படகுகள் சென்று கொண்டு இருக்கையில் சுமார் 11-30 மணி யளவில் முத்துவாரிக்குப்பத்திற்கு அருகில் ஒரு படகு கவிழ்ந்து விட்டதாக சைதாப்பேட்டை கோட்ட ஆட்சியாளர் தெரிவித் துள்ளார். கவிழ்ந்த படகில் ஏற்கனவே ஓரளவு நீர் கசிந்து கொண்டிருந்ததால், அதிலிருந்து மாணவச் சாரணர்கள் குரல் எழுப்பினர் எனக் கூறப்படுகிறது. படகு கவிழ்ந்ததால் மூழ்கிய 32 மாணவர்களில், 7 மாணவர்கள் உடனே மீட்கப்பட்டுவிட்டனர். 13 மாணவர்கள் பின் மீட்கப்பட்டு சென்னை ஸ்டேன்லி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். அங்கு 3 பேர் இறந்துவிட்டனர்; மீதி 12 பேர் மூழ்கி இறந்துவிட்டனர். மற்றொரு படகில் சென்ற 32 மாணவர்களும் அதிலிருந்த சாரணர் பிரிவுத் தலைவரும் உடனே நலமாக கத்தியவாக்கம் திரும்பிவிட்டனர். விபத்து நடந்த இடம் முகத்துவாரத்திலிருந்து 2 பர்லாங் தூரத்திலுள்ள தாகவும் அங்கு நீரின் ஆழம் சுமார் 20 அடி உள்ளது எனவும் சைதாப்பேட்டை கோட்டாட்சியாளர் தெரிவித்துள்ளார்.

இத்துயரச் சம்பவம் குறித்து காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். விசாரணை முடிவுக்குப் பின்னர், குற்றவாளிகள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். தற்பொழுது படகு விபத்து நடந்த பகுதியில் பதட்டநிலை ஏதுமில்லை.

பதினைந்து மாணவர்களின் உயிரிழப்புக்கு இவ்வரசு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டதோடு, அவர்கள் குடும்பத்தினருக்கு மனிதாபிமானத்தின் அடிப்படையில் மக்கள்பால் நல்லெண்ணமும் தூய்மை உணர்வும் கொண்டு, பேரிழப்புக்கு ஆளான ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ. 5,000- (ரூபாய் ஐயாயிரம்) வீதம் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கிட 30-8-78 அன்று ஆணை பிறப்பித்துள்ளது.

மாணவர்கள் எந்த ஒரு சுற்றுலாப் பயணத்தையும் மேற் கொள்ளுமுன், போதிய தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைத் திட்ட வட்டமாகச் செய்து முடித்த பின்னர்தான், அப்பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற நிலையான உத்தரவினை 12-6-1950 நாளன்று கல்வி இயக்குநர் பிறப்பித்துள்ளார். அது இன்னும் அமுலில் இருந்து வருகிறது. அவ்வுத்தரவினை படகு விபத்துக் குள்ளான சாரணப் பிரிவின் தலைவரும், பள்ளி நிர்வாகத்தினரும் கடைப்பிடித்தனரா என்பது விசாரணையில் கண்டறியப்பட்டு தவறிழைத்தவர்கள் மீது கடுமையான துறை நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும். இது போன்ற துயரம் மிக்க விபத்துக்கள் இனிமேலும் நிகழாமல் தடுக்கும் வகையில் அரசு கல்வி இயக்குநரைக் கலந்தாலோசித்துத் தகுந்த உத்தரவினை பிறப்பிக்கும்.

ப

[1978 செப்டம்பர் 11

(பிற்பகல் 5-30)

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாற்றுத் தலைவரவர்களே, விபத்துக்கு ஆளான, இறந்துபோன மாணவர்களுடைய குடும்பத்திற்கு 5 ஆயிரம் ரூபாய் வீதம் உதவித் தொகை அளித்திருப்பதாக மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தத் தொகையினை ரூபாய் 10,000 ஆக உயர்த்த அரசு முயற்சி செய்யுமா? அதோடு இந்த உடற் பயிற்சிக் கல்விப் பாடத் திட்டத்திலே நீச்சல் பயிற்சியையும் இனி ஒரு பாடமாகச் சேர்த்து பள்ளிகளிலே அதைப் பயிற்சியாக அளிக்கத் தக்க ஒரு ஏற்பாட்டை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஐயாயிரம் ரூபாயை பத்தாயிரம் ரூபாயாகக் கூட்டும் உத்தேசம் அரசுக்கு இல்லை. ஒவ்வொரு மாணவருக்கும் நீச்சல் தெரிந்திருப்பது நலம் என்று அரசு கருதுகிறது. அதற்கு போதுமான வசதிகள் கூட இப்பொழுது சென்னையில் செய்யப்பட்டுள்ளன. அதற்கு என்று தனியாக ஒரு கோச் கூட இருக்கிறார். மாணவர்களாகவே வந்து பயிற்சி பெற வேண்டும். யாரையும் கட்டாயப்படுத்துவதற்கில்லை.

திரு. ஆ. நல்லசிவம்: அந்த ஆசிரியர் சாரணர்களை முத்துவாரிக்குப்பம் தீவிற்கு அழைத்துச் செல்வது சம்பந்தமாக முன்பே திட்டமிடப்பட்டிருந்ததா? 64 சாரணர்களுக்கு ஒரே ஒரு ஆசிரியர் துணையாகப்போயிருக்கிறார். 64 சாரணர்களுக்கும் இரண்டு படகுகளில் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 6 பேர் செல்லக் கூடிய படகில் 32 பேர் செல்லும் நிலை எதனால் ஏற்பட்டது? போலீஸ் விசாரணை மட்டுமல்லாமல், நீதி விசாரணை ஏற்படுத்துவதுகூட நல்லது. அப்படிச்செய்து தமிழ் நாட்டிலுள்ள அனைத்து சாரணர்களுக்கும் இது ஒரு படிப்பினையாக இருக்கத் தக்க வகையில் இதற்கு என்று ஒரு ஏற்பாட்டை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: சட்டம் மீறப்பட்டிருக்கிறதா இல்லையா என்று போலீசார் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் இலாகாபூர்வமாக கல்வித் துறை வேறு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. அதன் அடிப்படையில் பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

4. தகவல் கோரல்.

ஆளுநர் உரை விவாதத்திற்கு பதிலுரை குறித்து.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: 'பாயின்ட் ஆப் ஆர்டர்' செயலாளர் அவர்கள் உறுப்பினர்களுக்கு இந்த கூட்டத் தொடரிலே நடைபெற இருக்கின்ற அலுவல்கள் குறித்து ஒரு





நிகழ்ச்சி விபரம் அடங்கிய தகவலை அச்சடித்துக் கொடுத்திருக்கிறார்கள். ஜனவரி மாதத்தில் நிகழ்த்தப்பட வேண்டிய ஆளுநர் உரை ஆகஸ்ட் 30 ஆம் நாள் நிகழ்த்தப்பட்டுள்ளது. விவாதம் செப்டம்பர் மாதம் நடந்தது. 8-ஆம் தேதி ஆளுநர் உரை விவாதத்திற்கு பதில் உரை என்று அச்சடித்துக் கொடுக்கப்பட்டது. 8 ஆம் தேதி முதலமைச்சர் அவர்கள் வேறு தவிர்க்க முடியாத அவசர வேலை காரணமாக வர முடியாத காரணத்தால், 11 ஆம் தேதி பதிலுரை என்று அவை முன்னவர் சொல்லி, அதன் பிறகு இன்றைக்கு அது இருக்கிறதா இல்லையா என்பது தெரியவில்லை, மேலும் நடப்புக் கூட்டத் தொடரில் ஆளுநர் உரை மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலுரை இருக்கிறதா இல்லையா என்பதுகூடத் தெரியவில்லை. இந்தக் கூட்டத்தொடரில் இல்லையானாலும் கூட, அடுத்த கூட்டத்தொடரிலாவது இருக்கும் என்று அறிவித்தால் உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள ஏதுவாக இருக்கும்.

மாண்புமிகு திரு. க. இராசா முகமது: மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் தகவல் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக, அவர்களுக்குத் தெரிந்த தகவலை வைத்துக்கொண்டு, இங்கே கேள்வி கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே கட்சித் தலைவர்கள் எல்லாம் உட்கார்ந்து 12 ஆம் தேதி மாலை எடுத்துக் கொள்ளலாம் என்று பேசினோம். ஆனால் 12 ஆம் தேதி பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை சொல்ல முன் வந்து இருப்பதால் மேலவையில் மறுநாள் எடுத்துக் கொள்ளலாம் என்று கட்சித் தலைவர்கள் எல்லாம் பேசிக்கொண்டிருக்கிறோம். இந்தக் கூட்டத் தொடரிலேயே நிச்சயமாகப் பதில் கிடைக்கும். (சிரிப்பு) சந்தேகம் வேண்டாம். வேண்டுமென்று காலம் கடத்துவதாகக் கருத வேண்டாம். அண்மையில் எதிர்பாராமல் ஒன்றிரண்டு நிகழ்ச்சிகள் நடந்தன. எதிர்பாராத விதத்தில் திரு. சின்னப்பாத் தேவர் அவர்கள் மரணமடைந்ததால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் கோவைக்குச் சென்று வந்தார். பேரவையிலே இருக்கக்கூடிய எதிர்க் கட்சித் தலைவர்கூட சம்மதித்து ஏற்றுக்கொண்டு, அதன் அடிப்படையில் முதல்வர் அவர்கள் நாளை பதில் சொல்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதை அவருடைய தொண்டர்கள் ஆட்சேபிக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: அந்த அவையில் என்ன நடக்கிறது என்று தெரிந்துகொள்ள வாய்ப்பு இல்லை. இந்த அவையிலுள்ள உறுப்பினர்களுக்கு இதைப்பற்றித் தெரிந்து கொள்ள உரிமை இருக்கிறது. இதை நீங்கள் முன்னாலேயே அறிவித்திருந்தால், இந்தப் பிரச்சினையே வந்திருக்காது. அவை முன்னவர் இதை முன்னாலேயே சொல்லியிருக்கலாம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் பேசியபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 12 ஆம் தேதி மாலை மேலவையிலே பதிலுரை சொல்வதாக இருந்தது. 12 ஆம் தேதி காலை பேரவையிலே பதிலுரை ஆற்றுவதாக இப்பொழுது அறிவிப்பு பார்த்தேன். பேரவையிலே கூட்டம் காலையில் தான் நடைபெறுகிறது. 12 ஆம் தேதி காலையில் பேரவையில் பதிலுரை ஆற்றிய பிறகு மாலையிலே மேலவையில் சொல்லலாம். அப்படி இல்லாமல் மறுநாள் என்று சொல்ல என்ன காரணம்?

மாண்புமிகு திரு. க. இராசா முகமது: சட்ட முன்வடிவுகளை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. காலையில் அந்த நிகழ்ச்சிகள் பாதிக்கப்படக் கூடாது, ஏற்கெனவே கொண்டு வர எண்ணியிருந்த அரசினர் சட்ட முன் வடிவுகளை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. மாலையில் முதலமைச்சர் பதிலுரையை ஆற்றுவதாக ஏற்பாடாகி ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தச் செய்தி இப்பொழுதுதான் கிடைத்திருக்கிறது. கட்சித் தலைவர்களுடன் பேசி மாலையிலா அல்லது காலையிலா என்பதை முடிவு செய்து தலைவர் அவர்கள் மூலமாக அறிவிப்பேன்.

## 5. தனி உறுப்பினர் தீர்மானம்.

### சென்னை மற்றும் காமராஜ் பல்கலைக் கழகங்களுக்கு துணை வேந்தரைத் தேர்ந்தெடுத்தல்.

மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி): தனி நபர் தீர்மானங்கள். திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசலாம்.

* THIRU A. R. DAMODARAN: Mr. Vice-Chairman, I have pleasure in moving the following resolution for the consideration of this House:—

"That this House recommends to the Government of Tamil Nadu to amend the Madras and Kamaraj University Acts to provide for the election of the Vice-Chancellor by proportional representation in secret ballot at a special meeting held for the purpose, by an electoral college, composed of the elected and ex-officio members of the Senate and Academic Council of such Universities, no member of such bodies being allowed to exercise his or her franchise in more than one capacity. This House further recommends that this system of election of the Vice-Chancellor be followed in future in all Universities established by law by the State of Tamil Nadu."



திரு. செ. முத்துசாமி: மாற்றுத் தலைவர் அவர்களே, நான் இந்தத் தீர்மானத்தை வழிமொழிகிறேன்,

மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி): முன்மொழியப்பட்ட தீர்மானம்..

"That this House recommends to the Government of Tamil Nadu to amend the Madras and Kamaraj University Acts to provide for the election of the Vice-Chancellor by proportional representation in secret ballot at a special meeting held for the purpose, by an electoral college composed of the elected and ex-officio members of the Senate and Academic Council of such Universities, no member of such bodies being allowed to exercise his or her franchise in more than one capacity. This House further recommends that this system of election of the Vice-Chancellor, be followed in future in all Universities established by law by the State of Tamil Nadu."

THIRU A. R. DAMODARAN: Sir, before I explain the purpose of this resolution to the members of the House for their acceptance, I would like to point out that in 1965 when the Madurai University Act was passed by the Houses of the Legislature and in 1966 when the Madras University Act was amended, a new system of selection of Vice-Chancellors was introduced.

Section 11 of the Act reads as follows:—

"Every appointment of the Vice-Chancellor shall be made by the Chancellor from out of a panel of three names recommended by the Committee referred to in sub-section (2) and such panel shall not contain the name of any member of the said committee." The procedure outlined by the Act was that there should be a selection panel for suggesting three names for the post of Vice-Chancellor. This selection panel will have one nominee of the Senate, one nominee of the Syndicate and one nominee of the Chancellor. This selection panel would suggest three names out of which the Chancellor of the University was expected to select one member as Vice-Chancellor. A similar procedure has been outlined in the Act relating to Madurai University which is now known as Kamaraj University. In the Annamalai University, the procedure is different because the founder is the person who suggests three names. In the Arignar Anna Technological University which has been newly formed, a similar procedure has been adopted as in the case of Madurai and Madras Universities. Sir, we have had 12 years of experience of this type of selection of the Vice-Chancellor. The old system was that the Senate of the respective universities would suggest a panel of three names and one of the three names suggested by the Senate would be selected by the Chancellor.

[Thiru A. R. Damodaran] 1978 செப்டம்பர் 11

[பிற்பகல் 5·40]

In 1965 and 1966 it was felt by the Government then in power that a change was necessary in the University Acts and this new procedure has been outlined for the Chancellor to select the Vice-Chancellor. Between 1966 and 1977—while I am not aware of the inner working of the Cabinet system, not having been a Minister of the Government or having had the privilege of participating in the Cabinets—it was generally understood that by the word 'Chancellor' it was expected that Government's recommendations would also be taken into account by the Chancellor, although strictly according to law, the Government do not have a voice in the selection of the Vice-Chancellor and it is only the Chancellor who is expected to select one of these three names. Sir, we have had in the recent past certain unavoidable delays in the selection of Vice-Chancellors both to the Madurai University and to the Madras University. Five or six months ago, when this House met during the Budget Session, I had the opportunity of raising this question when it was found that in the Madurai University, although the selection panel had submitted a panel of three names, there was considerable delay and the public did not know the reasons for this delay. But it was explained that there was some idea of constituting a second selection panel to submit a fresh panel of names. Secondly, even in Madras University recently, we have had the very unfortunate delay in the selection of the Vice-Chancellor and various Press Notes have been issued from the Chancellor's Office. One of the Press Notes that was first issued was about two weeks ago when it was mentioned that due to certain procedural delays the selection of the Vice-Chancellor was being delayed. There was a wild surmise in the market whether these procedural delays were due to the system and whether there was any real difficulty for the choice to be made. One week later, about five days ago, the Press Note issued by the Chancellor reads as follows and I would like to take the Members of the House into confidence in this matter. Such a Press Note, was, in my opinion, totally unnecessary because it brought to light the procedures which were followed by the Chancellor in selecting the Vice-Chancellor. The Vice-Chancellor's position is a unique position. We always used to consider, at least in the olden days, that next to the Chief Justice of Madras and of course the dignitaries of Government, the Vice-Chancellor had a unique position where dignity and respect should be maintained. The Press Note that was issued says, and I read from the Note:



1978 செப்டம்பர் 11 [Thiru A. R. Damodaran]

"The delay in the appointment was only due to certain procedural obstacles in the way of ensuring that the incumbent becomes in fact and in law a whole-time officer of the University as required by section 11 (5) of the Madras University Act of 1923. The Selection Committee gave a panel of three names. The name of Dr. Nayudamma was considered first. As he did not desire completely to dissociate himself from the CSIR, the name of Prof. Damodaran came to be considered next".

It is not A. R. Damodaran but Thiru G. R. Damodaran.

"He was an M.L.C. and Dean of the Post-Graduate Faculty of P.S.G. College of Technology, Coimbatore. He was informed that he should relieve himself of these offices before he became eligible to be the whole-time Vice-Chancellor. Now he has done this and this took some days and this accounts for the delay in making the announcement".

Sir, section 5 of the Madras University Act has prescribed certain disqualifications for members who desire to stand for election to the University authorities. These disqualifications are generally classed and are embodied in every Act. Perhaps, the Members of the House may be interested in knowing what these disqualifications are:

"No person shall be qualified for election as member of the authorities of the University if on the date of nomination or election—

(1) he is of unsound mind, a deaf-mute, or suffering from leprosy;

(2) he has been adjudged insolvent or an undischarged insolvent;

(3) he has been sentenced by a criminal court to imprisonment for any offence involving moral turpitude."

These are the three disqualifications that had been prescribed for persons who desire to stand for election to any University bodies. Further, we have the Representation of the People Act which mentions the disqualifications of Members of the Legislatures. Amongst the disqualifications that have been prescribed, the position of a Member of a Legislature has never been prescribed as a disqualification to hold the post of a Vice-Chancellor. We in this House would particularly remember that not only did we have a Vice-Chancellor as a Member of this House for over 25 years but the Vice-Chancellor was also the Leader of the Opposition in the Legislative Council. My grouse is that the privileges of this House will be badly affected if the Govern-

[Thiru A. R. Damodaran] [1978 செப்டம்பர் 11

ment had accepted the contention that no Member of this House can be a Vice-Chancellor of any University. Not only would it deprive the Members of this House of the opportunities of becoming Vice-Chancellors but there is also the obvious obverse which will be true, namely, that no Vice-Chancellor can sit as a Member of this House. I think we are going beyond the Representation of the People Act, we are going beyond the established laws, we are also going beyond the established conventions in our own State when, unfortunately, we have virtually decided that a Member of this Council could not be the Vice-Chancellor of a University. I would like to know the Government's position in this matter because this is not merely a moral question. It is necessary for the Government to clearly state whether, according to the laws of the land—I do not rely upon conventions at the present moment—it is absolutely necessary that a person should resign his membership of this House for becoming Vice-Chancellor because this is a strictly legal position and if necessary, I would like the Government to obtain the opinion of the Advocate-General on this issue. I deliberately did not want to raise a privilege motion on this matter because the Chancellor is involved and I did not want to cause any embarrassment to the person occupying this position. But I felt that there was need for clarification because these informal conventions which are adumbrated by the Chancellor are, in my opinion, totaly incompatible with the legal position on this issue.

Sir, I do not want to refer, of course, to the other ugly reports that have appeared in the newspapers about the prospective Vice-Chancellors facing the necessity of taking an alcoholic breath analyser test. This is a very odd position and I am sorry that our prospective Vice-Chancellors have been subjected to such tests and persons are disqualified on the ground of their being holders of liquor permit. In fact, it is very embarrassing to a Vice-Chancellor if, before he is selected, he has to undergo these tests. I do not know whether they were considered by the Government or not. But the very fact that so much publicity has been given has damaged the reputation of our Vice-Chancellor in the eyes of the student-world. I do not think I have to tell the Hon. Minister the harmful effects of the same because today our Vice-Chancellors have to face the hostile students on some issue or other and on those occasions, the type of slogans that are likely to be raised against these Vice-Chancellors are not likely to be of a very pleasing nature, especially in view of what has appeared in the newspapers.



1978 செப்டம்பர் 11] [Thiru A. R. Damodaran]

[பிற்பகல் 5-50]

Sir, I believe that this system of selection of Vice-Chancellors requires change. We are all elected representatives—from the Speaker of the Lok Sabha, Chairman of the Rajya Sabha, Speaker of the Assembly, Chairman of the Legislative Council, Ministers, Members of Legislatures—and we have accepted the democratic principle that we should have a system of election of representative-Members. I do not know why in so far as the University is concerned, we should fight shy of the fact that the Vice-Chancellor is a person who should be elected by his own colleagues and peers in the University and that there could be no better representative body than the Professors and Deans of the Departments of the University, the Members of the Senate and the Academic Council and the academicians in the University who exercise their role and elect the Vice-Chancellor by proportional representation and necessarily by secret ballot at a meeting specially held for this purpose. In other Universities in the world, this procedure is being followed. While I realise that Members may feel that the Vice-Chancellor should not subject himself to intense electioneering activity, may I point out that even today, under the existing system of selection panels, there has been an unfortunate trend for intense canvassing to be carried on by prospective Vice-Chancellors which is denigrating the position of a Vice-Chancellor and bringing the very position of an academic authority into disrespect and a total lack of awareness of the great responsibilities of this high office? I realise that Vice-Chancellors, like High Court Judges, should be above suspicion in many matters. We have adopted the principle of appointment of High Court Judges by the Courts by following the procedure in the Constitution. The question arises whether a Vice-Chancellor should also be similarly appointed by Government. There is one difficulty and that is whereas the High Court Judges form a career service, excepting for those Judges who may be recruited directly from the Bar, in the case of a Vice-Chancellor, we do not necessarily have a career of administrators who will contribute to the position of Vice-Chancellors and we select eminent non-officials and retired Government administrators who have adequate knowledge and experience of University administration and University education. Therefore, the feeling has crept in that more and more there has been some sort of a political pressurisation in such matters and I for one feel that the University should be kept comparatively free from the atmosphere of pressurisation which works to the detriment of the working of the University and the free liberal administration that should exist in a University. The world

has witnessed many changes between 1945 and 1971. In the United Kingdom, the number of Universities has grown to more than 200 or 250 and the grants that are being given by the Government have increased from 30 million pounds to 314 million pounds—which in terms of crores of rupees means that grants of Rs. 450 crores are being given by the U.G.C. in U.K.—and many of these institutions are allowed to function with a large measure of autonomy. In my opinion, although Governments do have a direct responsibility in maintaining adequate grants for Universities, it does not necessarily mean that Vice-Chancellors should be nominees either of Governments or even of Chancellors. The democratic procedure of electing these Vice-Chancellors would free our Universities from many of the pressures to which they are subjected today. I would like this to happen particularly in the oldtr Universities which have even celebrated their centenaries like the Madras University and the Madurai University which was previously a part of Madras University. These Acts were all framed a long time ago. Although they were amended in a piecemeal fashion in 1966, I would recommend to the Hon. the Education Minister a thorough review of all these Acts in our State, to keep in tune with modern conditions. Different Acts have been framed for the Madras University. For example, out of 17 Members of the Syndicate, 5 Members are nominated and we have 12 elected Members. In Madurai University, out of 12 Members of the Syndicate, we have four nominated members. In Arignar Anna Technological University, we have 8 nominated members out of 14 members of the Syndicate. My whole point is this. Why should the Government want so many nominees in the Syndicate? If the Government want to have an entirely nominated Syndicate, then the Government cannot have autonomous bodies in the University. If the Government want to run the University as one of their Departments, let us be honest about it. The Government's argument proceeds on conventional lines: "We are giving 1½ crores, 2 crores or 3 crores of rupees. Therefore, we do not think that the University should have any autonomy in such matters. We will run it as a department of the Government and we will nominate the entire Syndicate." I wish that the Government of Tamil Nadu will bestow a fresh look on the University Acts because we are now going to have Universities at Coimbatore and Tiruchirappalli, provided the requisite permission comes from the U.G.C. Since we are going to form a number of Universities in the State, I think proper conventions should be established so that the persons who may be selected as Vice-Chancellors are elected as Vice-Chancellors by their own peers in the academic world, the professors, the deans who constitute the Senate and



the Academic Council and they will have an opportunity to select one of their own academicians as Vice-Chancellor. I commend this proposal for the acceptance of the House. Thank you.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: மாற்றுத் தலைவர் அவர்
களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நண்பர் திரு ஏ. ஆர்.
தாமோதரன் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய தீர்மானத்தினை
ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல முற்படுகிறேன்.
அவர்களுடைய தீர்மானத்தினுடைய மையமான கருத்து, இது
வரை சர்வகலாசாலையினுடைய துணைவேந்தர் நியமிக்கப்பட்டு
வந்தார். இனிமேல் அந்த நியமன முறைமாறி தேர்தல் முறையிலே
அவர் நியமிக்கப்பட வேண்டும் என்பது, அதை அவர்கள் விளக்கி
யும் பேசினார்கள். இன்றைய காலப் போக்கில் ஜனநாயக அடிப்
படையிலே எது ஒன்றும் நடக்கின்றது. ஆகையால் இது ஜன
நாயகத்தை வலியுறுத்தக்கூடிய கருத்தாக இருப்பதனால், இதை
யாரும் மறுக்க முடியாத நிலைமை இருக்கின்றது என்பது
என்னுடைய அபிப்பிராயம். அவர்கள் இப்போது இருக்கக்கூடிய
சட்டதிட்ட முறைகள் பற்றியும் சொன்னார்கள். செனட்டிலே
இருந்து ஒரு பேனல் உறுப்பினர், சிண்டிகேட்டிலே இருந்து ஒரு
பேனல் உறுப்பினர், கவர்னர் நியமன முறையில் ஒரு பேனல்
உறுப்பினர் என்று மூன்று உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள்.
அவர்கள் பரிந்துரைக்கும் மூன்று பேரில் ஒருவரை கவர்னர்
அவர்கள் தேர்ந்தெடுப்பார்கள் என்று அவர்கள் சொன்னார்கள்.
இதிலே சிறு மாற்றம் உண்டு. இந்த 3 பேர்கள் வேறு 3
பேர்களைச் சிபாரிசு செய்வார்கள். அந்த மூன்று பேர்களிலே
ஒருவரைத் தான் கவர்னர் அவர்கள் நியமிப்பார்கள். இது
தான் சட்டம் என்று நான் படித்ததாக ஞாபகம். இந்த முறை
மாறி, நண்பர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தின்படி
ஜனநாயக முறை வந்தால் நான் மகிழ்ச்சி அடைவேன் என்று
சொல்கிறேன். அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை ஏற்கும்
வகையிலே இருக்கிறது என்றால், இருக்கக்கூடிய நடைமுறையைப்
பற்றி நான் ஒன்று சொல்லுகிறேன். இதில் நியமிக்கும் அதிகாரம்
கவர்னர் அவர்களிடம் தான் இருக்கிறது. பேனலில் வரும் பெயர்
களில் அவர் விரும்பக்கூடிய ஒரு பெயரைத் தேர்ந்தெடுக்கக்கூடிய
நிலையிலிருப்பதால், செனட்டோ, சிண்டிகேட்டோ நியமிப்பதில்
அர்த்தமேயில்லை. இந்த முறையே இல்லாமல், கவர்னர் நிய
மிக்கும் முறை இருக்கிறது. இதை மாற்றியமைக்க வேண்டும்.
கவர்னர் சொல்கின்ற ஒரு நபரை நியமிக்கும் முறையை மாற்றி
யமைக்க வேண்டும். நம்முடைய நண்பர் அவர்களுடைய
தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், தேர்தல் முறைப்படி ஒருவர்
வைஸ் சான்சலராக ஆகிவிடுவார். தேர்தல் முறை என்றால், அது
நேர்மையான தேர்தலாகவும் இருக்கும், தப்பான தேர்தலாகவும்
இருக்கும். தகுதி படைத்தவர்களும் வரலாம், தகுதி இல்லாத
ஒருவரும் வந்துவிடலாம். அதற்குப் பொருத்தம் இல்லாத ஒருவர்
வந்துவிட்டால், இன்புளுயன்ஸ் செய்தோ பணம் செலவு செய்

[திரு கே.எஸ். அப்துல் வகாப்] [1978 செப்டம்பர் 11

தோ சர்வகலாசாலை துணை வேந்தராக ஒருவர் வந்துவிட்டால், சர்வகலாசாலையினுடைய வேலையெல்லாம் கெட்டுப்போகும், ரொம்பவும் பாதிக்கப்படும்.

(பிற்பகல் 6.00)

தேர்தல் முறையை நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில் வேட்பாளராக நிற்கக்கூடியவர்களுக்குச் சில தகுதிகள் நிர்ணயிக்கப்பட வேண்டும். கண்டவர்கள் வர முடியாமல், அந்தத் துறையிலே தகுதி, பொருத்தமுடையவர்கள்தான் வேட்பாளர்களாக நிற்கக்கூடிய நிர்பந்தத்தையும், நிபந்தனையையும் வைக்க வேண்டும். போஸ்ட் கிராஜுவேட் அல்லது பி.எச்டி. படித்தவர்களாக இருக்க வேண்டும்; கல்வித் துறையிலோ வேறு எந்தத் துறையிலோ செயல்பட்டு, அனுபவம் பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்று நிபந்தனை போட்டு, இந்த நிபந்தனையின்பேரில் தான் துணைத் தலைவர் தேர்தலுக்கு வேட்பாளர்கள் நிற்க முடியுமென்று சட்டத்திலே நிபந்தனை போட வேண்டுமென்ற கருத்தையும் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நண்பரவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். சர்வகலாசாலை என்றால் சட்டத்திலே 'ஆடானமஸ் பாடி' என்றிருக்கிறது என்று சொன்னார்கள். எனக்கு நன்றாகத் தெரியும். உண்மையிலேயே சர்வகலாசாலை ஆடானமஸ் பாடி என்று சொல்லப்படுகிறது. நடைமுறையைப் பார்க்கும் போது, அது ஆடானமஸ் பாடிதானா என்ற கேள்விக்கு இடமிருக்கிறது, சர்வகலாசாலைகள் தீர்மானிக்கக்கூடிய சில தீர்மானங்களை அரசு ஏற்க மறுத்து விடுகிறது. அவர்களை மதிக்காமலேயே அரசு சில உத்தரவுகளைப் போடுகிறது. அங்கே செனட் அல்லது சிண்டிகேட்டில் உள்ளவர்கள், இவர்கள் என்ன எங்களுக்குச் சொல்வது என்று பேசுவதை என் காதால் கேட்டிருக்கிறேன். அரசு சொல்வதை மறுக்க வேண்டுமென்று அவர்கள் கூறியதையும் நான் கேட்டிருக்கிறேன். இந்த மாதிரி ஒருவருக்கொருவர் மோதக்கூடிய நிலை மாற வேண்டும். நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அடிக்கடி குறுக்கீடுகள் கூடாது. ஆடானமஸ் பாடி என்று சொல்லும்போது, அதனுடைய நிர்வாகத்திலே எல்லாம் அரசின் குறுக்கீடுகள் கூடாது. அல்லது சட்டத்தைத் திருத்தி, 'ஆடானமஸ்' என்ற வார்த்தையை எடுத்து விடுங்கள். இந்த இரண்டிலே எதைச் செய்தாலும் மறுப்பு சொல்வதற்கில்லை. நான் சர்வகலாசாலையின் சட்டதிட்டங்களை — கான்ஸ்டிடியூஷன் — முழுக்க முழுக்கப் படித்துப் பார்த்தேன். அப்போது எனக்கே ஆச்சரியம் ஏற்பட்டது. துணை வேந்தருக்கு ஒரு டிக்டேடர் அளவுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் ஆச்சரியப்பட்டேன், ஒரு மனிதருக்கு இந்த அளவிற்கு அதிகாரமா என்று. அந்த அதிகாரங்கள் குறைக்கப்படவேண்டும், அந்த அதிகாரத்தைக் குறைத்து, பாதி அளவு அதிகாரத்தை சிண்டிகேட்டிற்குக் கொடுத்தால் நல்லதென்று கருத்து சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.



1978 செப்டம்பர் 11]

திரு. க. அறிவழகன்: மாற்றுத் தலைவரவர்களே, சென்னை மற்றும் காமராஜ் பல்கலைக் கழகங்களினுடைய துணை வேந்தர்கள் நியமிக்கப்படுவது குறித்து நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று, இன்று நேற்றல்ல, பல ஆண்டுகளாக இந்த மன்றத்தில் உறுப்பினர்கள் பலரும் பேசியிருக்கிறார்கள். நாட்டில் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், பல்கலைக் கழகத் துணை வேந்தர் எவ்வாறு நியமிக்கப்பட வேண்டுமென்பது குறித்து பல்வேறுவிதமான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இன்றையதினம் நம்முடைய நாட்டுப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் நடத்துகின்ற போராட்டத்தின்போதுகூட துணை வேந்தர்கள் எப்படி அமைய வேண்டுமென்பது பற்றி அவர்கள் தங்களுடைய கூட்டங்களிலே கருத்து தெரிவித்திருக்கிறார்கள். நான் அப்படிப்பட்ட கூட்டங்கள் பலவற்றுக்குப் போயிருக்கிறேன். அங்கு மாணவர்கள் பேசியபோதும், ஆசிரியர்கள் பேசியபோதும் நான் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தேன். ஆனால் துணை வேந்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் சரி, நியமிக்கப்பட்டாலும் சரி, அந்தத் துணை வேந்தர்கள் ஜனநாயக மனப்பான்மையோடு நடக்கின்றவர்களாக இருந்தால் மிக்க மகிழ்ச்சியான நிலைமை அமையக்கூடும். ஆனால் ஜனநாயக அமைப்புள்ள ஒரு நாட்டில், எத்தகைய கல்வித் துறைப் பணியாக இருந்தாலும், அந்தப் பணியிலே அமர்ந்து கொள்கிறவர்கள் தாங்கள் சர்வாதிகாரிகள் என்ற தோற்றத்துடன் நடந்துகொள்வார்களென்றால் அவர்கள் பல நேரங்களில் எப்படிப்பட்ட நிலைமைகளுக்கு ஆளாக்கப்படுவார்களென்பது, சமீபத்தில் பம்பாய் சர்வகலாசாலையில் மாணவர்கள் துணை வேந்தரின் இடத்தை அலங்கரித்ததையும், துணை வேந்தர் உள்ளே செல்ல முடியாமல் செய்ததையும் கண்டு அறியலாம். இது போன்று இந்தியத் துணைக் கண்டத்தில் பல்வேறு பல்கலைக் கழகங்களில் நடைபெற்றதை அறிவோம். நான் இங்கிலாந்து நாட்டிற்குச் சென்றபோது, ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழக கல்வித் துறைப் பேராசிரியர்களைச் சந்தித்துப் பேசினேன். அப்போது உங்களுடைய துணை வேந்தர் யார் என்று அவர்களைக் கேட்டேன். அவர்களில் பல பேர், துணை வேந்தர் பெயரைச் சொல்வதற்கு நேரம் எடுத்துக்கொண்டார்கள். உங்களுடைய முன்னாள் பிரதமர் மேக்மில்லன் அவர்கள் பல்கலைக் கழகத் துணை வேந்தர் தேர்தலில் நின்றாரே, நான் பத்திரிகையில் பார்த்தேனே என்று நான் சொன்னேன். அதற்குப் பிறகு அவர்கள் ஆமாம் என்று சொன்னார்கள். அது குறித்து நான் மகிழ்ச்சியடைந்தேன். ஒரு பல்கலைக் கழகத்திலே பணியாற்றுகிற பேராசிரியர்கள், துணை வேந்தரைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. துணை வேந்தர், பல்கலைக் கழகப் பேராசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்வுகளில் இருப்பதில்லை

என்பதையும் தெரிந்து கொண்டேன். அங்கே அந்தப் பணி, ஒரு அழகுப் பணியாக, சேன்சலர் பணி போன்று இருக்கிறது. அன்றாடப் பிரச்சினைகளில் தலையிடுகிற வேலை ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்திலும், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலும் துணை வேந்தருக்கில்லை. அப்படியிருக்கிற காரணத்தாலே, அவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் சூழ்நிலை வரும்போது, அந்த நாட்டுப் பிரதமராக இருக்கிறவரேகூட தேர்தலுக்கும் நிற்கிற காட்சி இருக்கிறது. தேர்தல் பற்றி பல்வேறு செய்திகளைச் சொன்னார்கள். மேக்மில்லன் அவர்கள் அந்தத் தேர்தலில் நிற்கும்போது. வாக்கு வாங்க அலையவில்லை என்று சொன்னார்கள். இது ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் நடந்த செய்தி. நம்முடைய பல்கலைக் கழகத்தில், யுனஸ்கோவில் - துணை நெறியாளராக இருந்தவர், துணை வேந்தராக இருந்தார். உலகப் புகழ் பெற்ற, மருத்துவத் துறை வல்லுநராக இருந்த டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் பல்லாண்டுக் காலம் துணை வேந்தராக இருந்தார். இங்கே அதிகாரியாக இருந்து, ஆசிரியராக இருந்து, கார்ப்பரேஷன் அதிகாரியாக இருந்து, கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து அதற்குப் பிறகு கல்வித் துறை பெரிய அதிகாரியாகி, துணை வேந்தரானவர்களும் இருக்கிறார்கள். அத்தனை பேரையும் நேரடியாகச் சந்தித்திருக்கிறேன். சில பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டும் இருக்கிறார்கள். டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் ஒருவிதமான தேர்வு முறையில் வந்தார்களென்று சொல்வதை திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் ஒப்புக்கொள்வார்களென்று கருதுகிறேன். அவர்கள் தேர்தல் முறையிலே வருகின்ற நிலை இருந்தது, அதற்குப் பிறகு வந்தவர்கள் நியமன முறையில் வந்தார்கள். அவர்கள் செயல்பற்றிக் கற்பனை செய்து பார்த்த நேரத்தில், அவர்கள் இந்தச் சமுதாயத்திற்கு மிகப் பெரும் காரியங்களைச் செய்ய இருக்கிறார்களென்று நோக்கம் இருந்தது; எதிர்பார்ப்புகளும் நிறைய இருந்தன. ஆனால் எல்லாத் துணை வேந்தர்களும் 3 ஆண்டுக் காலம் அல்லது 6 ஆண்டுக் காலம் இருந்த பிறகு, பல்கலைக் கழகத்திலே பணியாற்றுகிற பேராசிரியர் களிடத்தில் பேசிக் கொண்டிருக்கும்போது, அவர்கள் துணை வேந்தர்களைப்பற்றி, மகிழ்ச்சிகரமான வார்த்தைகளைச் சொல்ல வில்லை. காரணம் அங்கே பணியாற்றுகிற பேராசிரியர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, அங்கே வளர்ந்துவருகிற மாணவர் களின் உணர்ச்சிகளைப் புரிந்துகொண்டு துணை வேந்தர்கள் பணி யாற்றவில்லை என்ற நிலை இருக்கிறது. திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் எந்தக் கருத்தைச் சொன்னாலும், மிகுந்த கனிவோடும் பணிவோடும் வரவேற்கும் நான், இன்றைய தினம் அவர் ஜன நாயக முறையில் துணைவேந்தர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டு மென்று சொல்லும் கருத்தில் மாறுபட வேண்டியவனாக இருக்கி றேன். அதற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. பல்கலைக் கழக அமைப்புகள் ஜனநாயக முறையில் இல்லை. அதைக் குறிப் பாக திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.





சிண்டிகேட்டிற்கு நாமினேஷன் மூலமாக வருகிறவர்கள் 4, 5 பேர்கள்தான். இருந்தாலும் மற்றவர்களெல்லாம் பரம்பரையாக வருகிறார்கள்.

(பிற்பகல் 6-10)

(மாற்றுத் தலைவர் திரு. கே. எஸ். அப்துல் வகாப் தலைமை)

எப்படி பரம்பரையாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்று தெரியவில்லை. 25 ஆண்டுக் காலமாக ஒருவர் சிண்டிகேட்டுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்றால், கல்வித் துறையிலே ஆதிக்கம் செலுத்துகிற இடத்திலே இருக்கிறார் என்று பொருள் ஆகும். கல்வித் துறையினுடைய மிகப் பெரும் பிரச்சினைகளைப்பற்றிப் பேசுகிற நம்முடைய உயர்திரு ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் அந்தத் தேர்தலில் நின்றதில்லை. நின்றால் அந்த சிரமங்கள் அவருக்குத் தெரிந்திருக்கும். நம்முடைய ஆசிரியர் பிரதிநிதிகள், பட்டதாரி பிரதிநிதிகள் அந்தத் தேர்தலில் நின்றதில்லை. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்கூட நின்றதில்லை. ஆனால் சிண்டிகேட்டிலே அவர்கள் இருந்தார்கள். தேர்தலில் நின்றாலே அதிலே சிரமங்கள் அதிகமாக இருக்கும். இந்த மன்றத்தில் ஆசிரியர்கள் பிரதிநிதிகளாக உள்ளவர்கள், பட்டதாரிகள் பிரதிநிதியாக இருக்கிற திரு. ஏ. ஆர். தாமோதரன் போன்றவர்களுக்கெல்லாம் கிடைக்கிற வாக்குகளுக்குக் காரணம் ஒரு பரந்த வாக்காளர்கள் தொகுதியில், பத்தாயிரம், முப்பதாயிரம் என்று சொல்லத்தக்கவர்கள் இடையில் தேர்ந்தெடுக்கப்படுவது, அப்படியில்லாமல் பத்துப் பேர், ஐம்பது பேர், எண்பது பேர் தேர்ந்தெடுக்கலாம் என்று சொன்னால், ஆதிக்கக்காரர்கள்தான் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். கல்வித் துறையிலே அவர்கள் நிபுணர்களாக இருக்கலாம். ஆனால் கல்வித் துறையில் ஆதிக்கம் செலுத்துகிற நிலையில் இருக்கிறார்கள்.

உத்தரப் பிரதேசத்திலுள்ள கல்வி நிறுவனங்களைப்பற்றிக் குறிப்பிடும் போது, "கல்வித் துறையல்லாத, ஜமீன்தார்கள் நடத்துகிற கல்லூரிகள், பள்ளிகள்" என்று அங்குள்ளவர்கள் குறிப்பிடுகிறார்கள். சுதந்திரத்திற்குப் பிறகு காங்கிரஸ்காரர்கள்—திரு. இராமமூர்த்தி அவர்கள் மன்னிக்க வேண்டும். பழைய காங்கிரஸ்காரர்கள் என்று அவர் தன்னுடைய பேச்சிலே சொன்ன அப்போதே பழைய காங்கிரஸ்காரர்கள் இல்லையென்று சொன்னேன் — பழைய காங்கிரஸ்காரர்கள் தங்களுடைய அரசியல் இலாப வேட்டைக்கு மிக நன்றாகப் பயன்படுகின்றன என்று கருதி கல்லூரிகளை நடத்துகிறார்கள். "கல்லூரிகளை ஆரம்பிப்பதன்மூலம் தங்களுடைய அரசியல் செல்வாக்கை, பொருளாதார செல்வாக்கை வளர்க்கிற சூழ்நிலையைப் பெறுகிறார்கள் என்ற முறையில் உத்தரப் பிரதேசத்தில் கல்லூரிகள் நடைபெறுகின்றன" என்று அங்குள்ள கல்வி முறையைப் பற்றிய ஆய்வுக் குறிப்புகள் எடுத்துச் சொல்லுகின்றன.

இந்தச் சூழ்நிலை தமிழ்நாட்டில் இல்லை. அந்த அளவுக்கு முழு ஆதிக்கம் இருக்கிறது என்று சொல்ல முடியா விட்டாலும், சிலர் சில பல காரணங்களால், சில பல கல்லூரிகளில், கல்லூரி நிர்வாகங்களில் தங்களுடைய ஆதிக்கத்தை வைத்துக்கொண்டு, அதன் மூலமாகப் பல்கலைக் கழகங்களைப் பிடித்து ஆட்டிப் படைக்கிறார்கள். நான் இதை ஆசிரியர்கள் பிரதிநிதி என்ற முறையில் சொல்லவில்லை. இந்த நாட்டுப் பல்கலைக் கழக ஆசிரியர்கள், பொருளாதார ஆசிரியர்கள், வணிகத் துறை ஆசிரியர்கள் ஆகியோர் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள். அதற்கு முன்னால் கிருத்துவக் கல்லூரியின் தலைமைப் பேராசிரியராக இருந்த உயர் திரு. சுவாமிநாதன் அவர்கள் அசோசியேஷன் ஆஃப் யூனிவர்சிட்டி டீச்சர்ஸ் தலைவராக இருந்தார்கள். அதற்குப் பின்னால் எனக்கு ஆசிரியராக இருந்த உயர்திரு எம். கே. சண்முகம் அவர்கள் தலைவராக இருந்தார். பிறகு திரு. பஷீர்அகமது சாகிப் அவர்கள் கூட அசோசியேஷன் ஆஃப் யூனிவர்சிட்டி டீச்சர்ஸ் தலைவராக இருந்தார். இப்படிப்பட்டவர்கள் எல்லாம் தலைவராக இருந்திருக்கிறார்கள். இப்படித் தலைவராக இருந்த இந்தப் பெரும் பகுதியினர் இன்றைய தினம் பல்கலைக் கழக ஆசிரியர்கள் என்று அழைக்கப்படுகிறவர்கள், ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைப் பற்றி, ''இந்தப் பல்கலைக் கழகம் எங்களுடைய கருத்தைப் பிரதிபலிக்கவில்லை'' என்கிறார்கள். தாங்கள் துணை வேந்தராகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்ற கருத்திலே சொல்லவில்லை. 'சிண்டிகேட்' ஆசிரியர்கள் பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக அமையவில்லை என்று சொல்லுகிறார்கள். நான் இந்த சிண்டிகேட்டிற்கு 20 ஆண்டுகளுக்கு முன்னாலே, டாக்டர் ஏ. இலட்சுமணசுவாமி முதலியார் அவர்கள் துணை வேந்தராக இருந்த போது, விஷயம் தெரியாமல் தேர்தலில் நின்று மாட்டிக்கொண்டேன். அப்போது ஆங்கில வல்லுநர் உருது வல்லுநர், திரு. புகாரி சாகிப் அவர்கள் என்னை எதிர்த்து நின்றார்கள், அல்லது அவரை எதிர்த்து நான் நின்றேன். அவர்களுக்கும் டாக்டர் ஏ. இலட்சுமணசுவாமி முதலியார் அவர்களுக்கும், ஆங்கிலத்தில் பேசும் ஒற்றுமை உண்டு. அவர்களுக்கிடையில் ஒரு அன்பு, காதல் உண்டு. அவரை எதிர்த்து நான் ஜெயிக்க முடியுமா ? அவர்கள் தான் ஜெயித்தார்கள்.

இன்றையதினம் கூட பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கங்களின் தலைவர்களில் பல பேர் இந்தத் தேர்தலில் நின்று பார்த்தார்கள். அதன் தலைவராக இருந்த ஒருவர் சமீபத்தில் சிண்டிகேட் தேர்தலில் நின்று தோற்றுப் போனார். ஆகவே திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னதைப் போல இங்கொன்றும், அங்கொன்றுமாகச் சீர்திருத்தங்களைச் செய்வதில் பலன் இல்லை. முழுவதுமாகச் சீர்திருத்தம் செய்ய வேண்டும்.





மாற்றுத் தலைவர் அவர்களே, திராவிடக் கழகத்தில் இருந்த போது, கம்ப இராமாயணத்தை எரிக்க வேண்டும் என்று உணர்ச்சி வசப்பட்டுப் பேசுவதைப் போல் இப்போது பேச வேண்டுமென்றால், சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களுடைய சட்டங்களை எரிக்க வேண்டும் என்று சொல்ல வேண்டும். ஆனால் இன்று நான் பண்பட்டு வளர்ந்திருப்பதாலும், அறிவுத் துறையில் வளர்ந்திருப்பதாலும், சமுதாயத்தில் பெருமதிப்பைப் பெற்றிருப்பதாலும் அவ்வாறு சொல்ல மாட்டேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படிச் சொல்லும் போது, திராவிடக் கழகத்தில் இருந்த போது பண்பு, நாகரீகம் இல்லாதது போல ஒரு கருத்தைச் சொல்லுகிறார்கள். இன்றையதினம் ஏதோ பண்பட்டு வளர்ந்திருப்பதாகவும் சொல்லுகிறார். இப்படி தனிப்பட்ட இயக்கத்திற்கு மாசு கற்பிக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. க. அறிவழகன் : நண்பர் திரு. வீராசாமி அவர்களுடைய அறிவுரையை ஏற்றுக் கொள்வதில் எனக்கு ஒன்றும் வெட்கமில்லை. நான் அந்த வார்த்தைகளை மிக அளந்து பேசியிருக்கிறேன். நண்பர் திரு. வீராசாமி அவர்களுக்கு எந்த அளவுக்கு அளந்து பேசத் தெரியுமோ அந்த அளவுக்கு நானும் அளந்து பேசியிருக்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அளவுக்கு எனக்கு அளந்து பேசத்தெரியாது.

திரு. க. அறிவழகன் : மனம் அப்போதும் பண்பட்டிருந்தது. ஆனால் அப்போது உணர்ச்சி வேகத்திலே சொன்னோம். இன்றைய தினம் கம்ப இராமாயணத்தை எரித்தாக வேண்டுமா என்று கேட்டால் நான் சொல்லுவேன்; கம்ப இராமாயணத்திற்கு இருந்த புராண மதிப்பு, ஆண்டவனுக்கு இருந்த மதிப்பு, அதாவது இராமனுக்குக் கொடுக்கப்பட்ட மதிப்பு பொதுவாக மக்களால் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதல்ல. ஆனால் கம்ப இராமாயணத்தினுடைய இலக்கிய உணர்வு ஏற்றுக் கொள்ளப்படத்தக்கது.

Thiru A. R. DAMODARAN : Sir, I suggest that we come back to the University from the Ramayana.

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் இராமாயணத்திலே ஊறிப் போனவர்.

Thiru A. R. DAMODARAN : I do not deny it, Sir. I am only requesting the hon. Member to come back, because he should not side-track the issue.

மாற்றுத் தலைவர் (திரு. கே. எஸ். அப்துல் வகாப்) : இராமாயணம், மகாபாரதம், மத சம்பந்தமானவை. அவற்றை அவமரியாதை செய்கிற பாணியில் பேச வேண்டாம்.

திரு. க. அறிவழகன் : நல்ல காலமாக திரு. வசந்த பை அவர்கள் எழுந்திருக்கவில்லை. இலக்கியத்தைப்பற்றிப் பேசுவதற்காகவே எடுத்துக் காட்டுகிறேன். அன்றைய தினம் கூட ஒரு மயக்கம் இருந்தது.

Thiru G. VASANTHA PAI : On a point of order, Sir. I do not know why a reference was made to me.

VICE-CHAIRMAN (Thiru K. S. Abdul Wahab) : To the extent that the hon. Member did not understand, it is well and good.

Thiru G. VASANTHA PAI : Sir, I am not a religious fanatic.

திரு. க. அறிவழகன் : அன்றைய தினம் கம்ப இராமாயணம் பற்றி ஒரு மயக்கம் இருந்தது. கம்ப இராமாயணம் மீது கோபம் எழுந்த போது ......

புலவர் புலமைப்பித்தன் : கம்ப இராமாயணத்தின் மீது இருந்த கருத்து மயக்கமான கருத்து அல்ல, தெளிவான கருத்துதான்.

திரு. க. அறிவழகன் : அதை எதிர்ப்பவர்கள் யார் என்ற கருத்து எழுந்தபோது, உயர்திரு ஏ. ஆர். தாமோதரன் போன்றவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எதிர்க்கிறார்கள் என்ற மயக்கம் அன்றையதினம் இருந்தது. அது மயக்கம் அல்ல, உண்மை என்பதை திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களே, இதிலே தலையிட்டுச் சொல்லுகிறார்கள்.



பல்கலைக் கழகம் வளர வேண்டுமென்றால், பல்வேறு பிரச்சினைகளைப்பற்றிச் சிந்தித்தாக வேண்டும். இங்கேயுள்ள மேலவை உறுப்பினர்களுக்கு என்னென்ன உரிமைகள் தரப்பட்டிருக்கின்றனவோ அந்த உரிமைகளை நாங்கள் செனெட்டில் பெற முடியவில்லை. செனெட்டிலே கவுன்சில் சார்பிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற பெருமையைப் பெற்றிருக்கிறேன். ஆனால் அங்கே பணியாற்ற முடியும் என்ற பெருமையில்லை. நான் செனெட் செல்ல வேண்டுமென்று சொல்லிய நேரத்தில், ''அங்கே போய் பணியாற்றுவது என்பது இயலாத காரியம்'' என்று சொன்னார்கள். அதற்குக் காரணம் செனெட் கூட்டத்தை 6 மாதங்களுக்கு அல்லது 4 மாதங்களுக்கு ஒரு முறைதான் கூட்டுகிறார்கள். அதிகமாகக் கூடுவதற்கு அதற்கு பிரச்சினைகள் இல்லையா என்றால், மாதம் ஒரு முறை கூடிப் பேச வேண்டிய அளவுக்குப் பிரச்சினைகள் ஏராளமாக இருக்கின்றன. மாதம் ஒரு முறை கூடுகிற அமைப்பு முறை இல்லாமல், வருடத்திற்கு 3 முறை அல்லது இரண்டு முறைதான் கூடுகிறார்கள். இன்றைக்கும், தலைவர் அவர்களே, நீங்கள் அங்கே எவ்வாறு எந்தக் கட்சியோடும் சேராமல் அமர்ந்திருக்கிறீர்களோ, அது போல் அங்கே இல்லாமல் யார் பல்கலைக் கழகத்தை நடத்துகிறார்களோ, அதாவது அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஹெட்டாக இருக்கிறார்களோ, அவர்கள் அக்கூட்டத்திற்குத் தலைமை வகிக்கிறார்கள். இதனால் ஒரு செனெட் உறுப்பினர் துணை வேந்தரைப் பார்த்துச் சொன்னார், அவர் பல்கலைக் கழகப் பேராசிரியராக இருந்தவர் - ''தலைவர் அவர்களே, நீங்கள் தலைமை வகிப்பதன் காரணமாக நாங்கள் எங்களுடைய பிரச்சினைகளை எடுத்துச் சொல்ல முடியவில்லை. நீங்கள் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஹெட்டாக இருப்பவர். ஆகவே நீங்களே தலைமை வகித்தால், குற்றச்சாட்டுக்களை எங்களால் எடுத்துச் சொல்ல முடியவில்லை'' என்று.

[பிற்பகல் 6-20]

அப்படிச் சொன்ன பிறகு, அவர் பல்வேறு சிரமத்துக்கு ஆளானார். காரணம் அவர் பல்கலைக் கழகத்தில் ஆசிரியராக இருந்தார். இப்பொழுது இப்படிப்பட்ட பல்வேறு சீரியஸ் அறிக்கைகள் தந்திருக்கிறீர்கள். மேலும் அறிக்கைகள் தேவைப்பட்டால், செயலாளர் அவர்கள் மூலமாக உங்களால் தர முடியும். மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. அரங்கநாயகம் அவர்கள் கவனத்தை நாங்கள் ஈர்க்கிற நேரங்களில் மட்டுமல்லாமல், கவனத்தை ஈர்த்துவிடுவோமோ என்று நினைத்து, எப்போது பார்த்தாலும் கவனமாகத்தான் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட எந்தச் செயலையும் அங்கே இருக்கின்ற அவர்களால் செய்து விட முடியாது, செய்யவும் இல்லை. 25 ஆண்டுக்காலத்தில் தனிப்

[திரு க. அறிவழகன்] [1978 செப்டம்பர் 11

பட்ட உறுப்பினர்கள் கொடுத்த தீர்மானங்கள் எதுவும் இது வரை செயல் படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆயிரக் கணக்கான தீர்மானங்களைச் சொல்லியிருக்கிறார்கள். கடைசி வார்த்தை அல்லது முதல் வார்த்தை உங்கள் தீர்மானத்தில் சரியில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இது ஒரு வேண்டுகோள் அல்லது யோசனையாதலால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லுவார்கள். ஆட்சிக் குழு அல்லது சிண்டிகேட் தான் சொல்ல வேண்டும். ஆகவே ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி பல்லாயிரக்கணக்கான தீர்மானங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இதைப்பார்த்துப் பார்த்து, சகிக்காமல் அதிலேயிருக்கிற சில உறுப்பினர்கள் நம்முடைய நாட்டிலே உள்ள நீதிமன்றத்திற்குப் போனார்கள். பல்கலைக்கழகத்தில் சிண்டிகேட்டிலே உறுப்பினர்கள் கொண்டு வருகிற தீர்மானங்களை இப்படிப்பட்ட தவறான காரணங்களைக் காட்டி வரக் கூடாது, ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லுகிறார்கள்; ஆகவே இதற்கு வழி நல்குங்கள் என்று நீதிமன்றத்திலே சொன்னார்கள். நல்லவேளை ஒரு நீதிபதி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தீர்ப்பளித்தார். நீதிமன்ற தீர்ப்புப்படி அடுத்து கூடிய சிண்டிகேட்டில் அதை எடுத்துக் கொண்டார்கள். ஆனால் அதைப் பற்றிப் பேசுவதற்கு உறுப்பினர்களுக்குச் சரியாக நேரம் ஒதுக்கப்படவில்லை. அவர்கள் சரியான பதிலையும் சொல்லவில்லை.

(மாற்றுத் தலைவர் திரு. கே. எஸ். அப்துல் வகாப் மணியடித்தார்)

<u>மாற்றுத் தலைவர் (திரு. கே. எஸ். அப்துல் வகாப்)</u> : 5, 6 பேர் இன்னும் பேச வேண்டும். ஒரு நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

<u>திரு. க. அறிவழகன்</u> : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் இந்தத் தீர்மானத்தின் ஒரு பகுதியில் சொன்னது போல, துணை வேந்தரைத் தேர்தல் மூலம் கொண்டு வர வேண்டும் என்பது போதாது. நிச்சயமாக அதிலே இருக்கின்ற அத்தனை அமைப்புகளுக்கும் ஒழுங்காகத் தேர்தல் முறை கொண்டுவரப்பட வேண்டும். இன்னும் சொல்லப் போனால், நம்முடைய மேலவையில் இத்தனை ஆசிரியப் பிரதிநிதிகள் இருக்கிறார்கள், பட்டதாரிப் பிரதிநிதிகள் இருக்கிறார்கள், பேராசிரியப் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். இங்கு உள்ளவர்களில் குறைந்த பட்சம் 8 பேர்களாவது போய் அங்கே உட்கார வேண்டும் : 2 பேர் மட்டும் இருப்பதால்,



1978 செப்டம்பர் 11] [திரு. க. அறிவழகன்]

100 அல்லது 120 பேர் உட்கார்ந்திருக்கக் கூடிய இடத்திலே கருத்துக்களை எடுத்துக் கூற முடிவதில்லை. சென்னைப் பல்கலைக் கழகத்தின் சட்ட முன்வடிவு 1966 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. அது கொண்டு வரப்பட்ட போது, நான் உறுப்பினராக இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் அப்பொழுது உறுப்பினராக இருந் தார். அப்பொழுது அவர்கள் இருந்த சூழ்நிலையில் இதை அதிகமாக எதிர்த்துப் பேசியிருக்க மாட்டார்கள் என்று கருது கிறேன். ஏனென்றால் அன்றைய தினம் எதிர்க் கட்சித் தலைவராக டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் இருந்தார் கள். அன்றையதினம் அவர்கள் அழுத்தந்திருத்தமாகச் சொல்ல முடியாத கருத்துக்களை இன்றையதினம் அழுத்தந் திருத்தமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அன்றைய தினம் எனக்கும் அவருக்கும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டதுண்டு. நானும் ஒருவேளை சில கருத்துக்களை வற்புறுத்தாமல் போனேனோ என்று கூட நான் கருதியதுண்டு.

THIRU G. VASANTHA PAI: On a point of order Sir. My hon. Friend is imputing that because Dr. A. L. Mudaliar was there, my learned Friend did not talk. That is not correct.

<u>திரு. க. அறிவழகன்</u> : மதிப்பிற்குரிய டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்களைப் பற்றி நான் மதிப்போடுதான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் அதை ஏற்றுக்கொள்வதிலே மகிழ்ச்சி அடைவார் என்று கருதுகிறேன். திரு. வசந்த பை அவர்கள் எல்லா நேரத்திலும் வெற்றி பெற்றுவிட முடியாது என்பதற்கு இது ஓர் உதாரணம். பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக சட்ட முன் வடிவு வந்தபோது, எனக்கு அப்போதிருந்த துணை வேந்தர் மேல் இருந்த கோபத்தால்தான் அந்தக் கருத்தைப் பற்றி மட்டும் பேசினேனே தவிர, மற்ற எல்லாக் கருத்துக்களையும் பற்றிப் பேசவில்லை. கோபம் வந்தால் என்னென்னவோ பேசுகிறோம். பிறகு சிந்தித்துப் பார்த்தால்தான், என்ன பேசிவிட்டோம் என்பது எல்லோருக்கும் தெரியும்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அரசாங்கத்தின் சார்பில் 8 பேர் சிண்டிகேட்டில் இருப்பதாக அன்றையதினம் பேசினார்கள். நான் அதை அன்றையதினம் சுட்டிக்காட்டவில்லை என்று நினைக்கிறேன்.

<u>மாற்றுத் தலைவர் : (திரு. கே. எஸ். அப்துல் வகாப்)</u> : 8 பேர் சிண்டிகேட்டிலா அல்லது செனட்டிலா?

<u>திரு. க. அறிவழகன்</u> : மாற்றுத் தலைவரவர்களே, சிண்டிகேட்டில்தான். மாற்றுத் தலைவரவர்களுக்கும் கோபம் வருகிறது.

மாற்றுத் தலைவர் (திரு. கே. எஸ். அப்துல் வகாப்): கோபப்படவில்லை.

திரு. க. அறிவழகன்: சிண்டிகேட்டில் 8 பேர் இருப்பதைக் கேட்ட மாற்றுத் தலைவர் அவர்களுக்குக் கோபம் வருகிறது.

THIRU G. VASANTHA PAI: It will only be a shock for you.

திரு. க. அறிவழகன்: தலைவர் அவர்களைப் பார்க்கிறேன். அவருக்கு எந்தவித ஷாக்கும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை மறுபடியும் தோல்வி அடைந்திருக்கிறார். அப்படி அரசாங்கத்தில் பிரதிநிதிகளைப் போடுவது என்பது ஏதோ இன்றைக்கு இருக்கிற அரசியல் நிலைமைகளுக்கு ஒத்து வரலாம். எதிர்காலத்தில் எல்லோரும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாக சிண்டிகேட்டில், செனட்டில் வர வேண்டும். அதேபோல அக்காடமிக் கவுன்சிலில் 1966 ஆம் ஆண்டுக்கு முன்பு கல்லூரிப் பேராசிரியர்கள், துணைப் பேராசிரியர்கள் நிறைய பேர் அதில் கலந்துகொள்ள வாய்ப்பு இருந்தது. 1966 ஆம் ஆண்டு இந்தப் புதிய சட்டம் வந்ததனால் நான்தான் முதன் முதலில் பாதிக்கப்பட்டேன். அப்போது நான் விரிவுரையாளராக இருந்தேன். 1966 ஆம் ஆண்டில் செனட் உறுப்பினராகவும் அக்காடமிக் கவுன்சிலில் உறுப்பினராகவும் இருந்தேன். பிறகு அக்காடமிக் கவுன்சிலுக்கு விரிவுரையாளர் வர முடியாது என்று சொன்னார்கள். அக்காடமிக் கவுன்சில் என்று அழைக்கப்படுகிற அமைப்பிலும் ஒரு பரவலான பிரதிநிதித்துவ முறை இல்லை.

திரு. பி. மாணிக்கம்: மாற்றுத் தலைவரவர்களே, மற்ற உறுப்பினர்கள் பேச வாய்ப்பளிக்கப்படுமா?

மாற்றுத் தலைவர் (திரு. கே. எஸ். அப்துல் வகாப்): ஒரு நிமிடத்துக்குள் சொல்ல வேண்டியவற்றைச் சொல்லி விடுங்கள்.

திரு. க. அறிவழகன்: ஆக, பரவலான பிரதிநிதித்துவ முறை இல்லை. அக்காடமிக் கவுன்சில் என்று அழைக்கப்படுகிற அமைப்பிலும் இல்லை. அந்த அமைப்பு இப்பொழுது கிடையாது எடுக்கப்பட்டு விட்டது. முதலில் சென்னைப் பல்கலைக் கழகச் சட்டத்தைப் பார்த்து மதுரைப் பல்கலைக் கழகம், பின்னால் மதுரைப் பல்கலைக் கழகத்தைப் பார்த்து அறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் என்று வந்திருக்கிறது.



இந்தப் பல்கலைக் கழகச் சட்டங்கள் இந்த அவையிலே நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும், அது அமுலுக்கு வந்திருந்தாலும் மேலும் புதிய பல்கலைக் கழகங்கள் துவக்க இருப்பதால் அத்தனை சட்டங்களையும் எடுத்து வைத்து, நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் முன் வருவதாக இருந்தால் அதைப்பற்றி ஒரு முழு ஆய்வு நடத்துவது அவசியம். வளர்ச்சி மிக்க நல்ல கருத்துகளைச் சொல்லக்கூடிய, பொதுவுடைமைக் கருத்துக்களை சொல்லக் கூடிய உறுப்பினர்கள் பேச இருப்பதால் நானும் அதைக் கேட்க விரும்புகிற காரணத்தால், இந்த அளவில் என் பேச்சை முடித்து அமர்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் முன்மொழிந்துள்ள தீர்மானம் எந்த அளவிற்கு இன்றைய நிலைகளுக்கு ஒரு பரிகாரமாக அமைந்திருக்கிறது என்பதை மட்டுமல்ல, மிக அவசியமான முறையில் கல்வித் துறையின் சிந்தனையையும் திருப்பியிருக்கிறது என்பதை வலியுறுத்துகிறேன். மிகத் தெளிவான கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். எந்தச் சூழ்நிலையில் இந்தத் தீர்மானத்தை முன்மொழிய வேண்டிய அவசியம் வந்தது என்பதை விளக்குகின்றபோது, மிகப் பெரிய அளவில் உலகப்புகழ் பெற்றிருக்கின்ற நம்முடைய சென்னைப் பல்கலைக் கழகம் கடந்த சில ஆண்டுகளிலே, மாதங்களிலே எந்த அளவிற்கு தன்னுடைய பெருமையைக் குறைத்துக் கொண்டு வந்திருக்கிறது என்பதையும், மக்கள் மத்தியிலே, மாணவர்கள் மத்தியிலே மதிப்பு இழந்து வருகிறது என்பதையும் சுட்டிக்காட்டினார்கள். இதை மறைத்தாலும், வெளியிலே இது தவிர்க்க முடியாத அளவில வந்திருக்கிறது. அதோடு மட்டுமல்ல, அதனுடைய நிர்வாகப் பொறுப்பினை, ஆட்சிப் பொறுப்பினை ஏற்கிறவர்கள் எந்தச் சூழ்நிலையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதையும், எப்படிப்பட்டவர்கள் அங்கு வருகிறார்கள் என்கின்ற நிலையையும் தெரிந்த பிறகு, இன்றைக்குப் புதிதாக சிந்தனை உருவாகியிருக்கிறது. என்னுடைய அருமை நண்பர் திரு. அறிவழகன் அவர்கள் பேசுகிறபோது, மிக வன்மையாக இந்தத் தீர்மானத்தை எதிர்ப்பார்கள் என்று மிக ஆவலோடு எதிர்பார்த்தேன். அவர்கள் இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு இல்லை என்ற அளவிலேதான்

[திரு. க. இராமமூர்த்தி] [1978 செப்டம்பர் 11

பேசினார்கள். ஆனால், அடிப்படையான கருத்துக்களுக்கு அவர்கள் மாறுபாடான கருத்துக் கொண்டிருக்கவில்லை. எந்தச் சூழ்நிலையில் இது கொண்டு வரப்பட்டிருக்கிறதோ .அதற்கான ஆதாரங்களை அவர்கள் அடுக்கடுக்காக எடுத்துரைத்தார்கள்.

(பிற்பகல் 6-30)

உறுப்பினர்கள் அவர்கள் தங்களுடைய கடந்த கால அனுபவத்தைச் சொல்லி இன்றைக்கு இருக்கிற அனுபவத்தைப் பார்க்கிறபோது, கடந்த காலத்தைவிட இதுவே மேல் என்ற வகையில் குறிப்பிட்டார்கள். ஆனால், நான் உரிமையோடு ஒரு கருத்தைச் சொல்ல முடியும். கடந்த காலத்தைப் பொறுத்த வரையில், சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் திரு. ஏ. எல். முதலியார் இருந்தபோது, அன்றைக்கிருந்த நிலைமையை மிகவும் பெருமிதத்தோடு இன்றைக்கும் மாணவர்கள் எண்ணிப் பார்க்கிறார்கள், அவர்களுடைய ஆட்சிக் காலத்தை, அவர்களுடைய நிர்வாகத்தைப் பாராட்டுவதோடு, அவர்கள் கையெழுத்துப் போட்டுத் தந்த 'டிகிரி சர்டிபிகேட்டுகளை' எல்லாம் இன்றைக்கு மிகுந்த மரியாதையோடு பாதுகாத்து வைத்திருக்கிறார்கள் என்பதை என்னால் எண்ணிப் பார்க்க முடிகிறது. டாக்டர் முதலியார் அவர்களோடு வேறு ஒரு வகையில் கருத்து வேறுபாடு இருந்ததுண்டு. அவர்களைப் பொறுத்தவரையில், பல்கலைக் கழகத்தினுடைய பயிற்று மொழியாக எது இருக்க வேண்டுமென்பதில் அவர்கள் ஒரு மாறுபாடான கருத்தைக் கொண்டிருந்தார்கள். அந்த அடிப்படையில் அவருக்குப் பரவலான எதிர்ப்போ ஆதரவோ வந்ததே தவிர, 'அவருடைய ஆட்சித் திறமையைப்பற்றி நிர்வாகத் திறமையைப்பற்றி யாருக்கும் எந்தவிதமான ஐயப்பாடும் வந்ததில்லை. ஆனால், அதைப்போல பின்தொடர்ந்த ஆண்டுகளிலே நிலைமை தொடர்ந்து வந்திருக்கிறதா என்று பார்க்கிறபோது, வேதனைக்குரிய வகையில் நான் வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்—தயவு செய்து தவறாகப் பொருள் கொள்ளவில்லை என்றால், இதைச் சொல்ல விரும்புகிறேன்—இன்றைக்கு துணை வேந்தர் பதவி என்பது ஆளும் கட்சியினர் யாராக இருந்தாலும், எப்படி அவர்களை அடியொற்றி நடப்பது என்கிற அளவில், ஆட்சியாளர்களோடு ஒன்றிப் போக வேண்டும் என்கிற அளவுக்கு ஆளாகி இருக்கிறது. அப்படிப்பட்டவர்கள்தான் அந்தப பதவிக்கு முயற்சி செய்ய முடியும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுடைய தகுதிகள் எப்படி நிர்ணயிக்கப்படுகின்றன என்பதைப்பற்றித் தீர்மானத்தை முன்மொழிந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் இங்கே விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். எந்த அடிப்படையில் அவர்களுடைய குதிகள் அணுகப்படுகின்றன என்பதையும் சொன்னார்கள். நான் மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்பு



1978 செப்டம்பர் 11] [திரு. க. இராமமூர்த்தி]

கிறேன். இந்த அடிப்படையில் ஒரு தேர்வு நடக்கிறது என்றால், அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவருக்கு அல்லது நியமிக்கப் பட்டவருக்கு எப்படி இந்தச் சமுதாயத்திலாகட்டும், ஆட்சித் துறையிலாகட்டும் அல்லது மாணவர்கள் மத்தியிலாகட்டும் மரியாதை இருக்க முடியும்? அவர்கள் பதவிக்கு வருவதற்கு இப்படி ஒவ்வொருவரையும் கெஞ்ச வேண்டியிருக்கிறது. அவர்கள் எதிர்க் கட்சியில் இருப்பவர்களைக் கெஞ்ச வேண்டியிருக்கிறது. ஆளும் கட்சியில் இருப்பவர்களைக் கெஞ்ச வேண்டியிருக்கிறது. அமைச்சர்களைக் கெஞ்ச வேண்டியிருக்கிறது. அமைச்சர்களுக்கு வேண்டியவர்களைக் கெஞ்ச வேண்டியிருக்கிறது. அல்லது மற்றவர்கள் இடையூறாக வராமல் தடுக்க வேண்டுமே என்று சிலரைப் பார்த்துக் கெஞ்ச வேண்டியிருக்கிறது. இந்த நிலைமைக்குத்தான் அவர்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால், இந்த முறை பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பதவியைப் பொறுத்தவரையில், அது எப்போதும் இல்லாத அளவுக்கு ஒரு மாதத்திற்கும் அதிகமான காலத்திற்குப் பல பேர்களால் பகிர்ந்து கொள்ளப்பட்டது. இதற்கான பொறுப்பினை ஏற்க வேண்டியது பல்கலைக் கழகத்தின் வேந்தரா அல்லது ஆட்சியா என்பதல்ல கேள்வி. ஆனால் அதனுடைய விளைவுகள் தமிழகத்தினுடைய சென்னைப் பல்கலைக் கழகத்தின் கல்வித் தரத்தின் மீது பிரதிபலித்திருக்கிறது. கல்வித் துறையின் நிர்வாகத்தின் மீது பிரதிபலித்திருக்கிறது, அது மட்டுமல்ல. கல்லூரிகளைப் பொறுத்த வரையிலும் இங்கே இருக்கிற நிலைமைகள் வேறு, வெளிநாடுகளில் இருக்கும் நிலைமைகள் வேறு. என்னுடைய அருமை நண்பர் மாண்புமிகு திரு. க. அறிவழகன் அவர்களைப் போன்று வெளிநாடுகளைச் சுற்றிப் பார்த்து வந்த அனுபவம் எனக்கில்லை. இருந்தாலும் வெளிநாடுகளைச் சுற்றிப் பார்த்த அனுபவம் மிக்க நண்பர்கள் சொல்லக் கேட்டுள்ளேன். பல்கலைக் கழகங்கள் அயல்நாடுகளில் செயல்படுவதற்கும் இந்த நாட்டிலே செயல்படுவதற்கும் மிகுந்த வித்தியாசம் இருக்கிறது. இங்கே ஒரு பல்கலைக் கழகத்திற்கு 100, 200 கல்லூரிகள் இணைக்கப்பட்டுள்ளதைப்போல் அயல் நாடுகளில் இல்லை. பொதுவாக 3, 4 கல்லூரிகள்தான் ஒரு பல்கலைக் கழகத்தின் ஆளுகைக்குட்படுகின்றன. அப்படிப் பார்க்கிறபோது, நம்முடைய பல்கலைக் கழகங்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பது நமக்குப் புரியும். எந்த அளவுக்கு நம்முடைய தமிழகத்தின் கல்வித் தரத்தை, மாணவர்களுடைய நிலையை உயர்த்த, தங்களை அர்ப்பணித்துக்கொண்டவர்கள் இப்படிப்பட்ட பல்கலைக் கழகங்களுக்குத் துணைவேந்தர்களாக வர வேண்டும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த வகையில் பார்க்கும்போது, நமது நாட்டு நிலைமையை மற்ற அயல்நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்க முடியாது என்பது மட்டுமல்ல, இங்கே ஒரு தனி நிலையிலிருந்து நாம் செயல்பட்டாக

வேண்டும் என்பதை நாம் உணர முடியும். கல்லூரிகள் தோன்றும்போதே ஆதிக்க சக்திகள் தலைதூக்கி ஆடுகின்றன என்று உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஆட்சியாளர்களையும், கட்சிக்காரர்களையும் திருப்திப்படுத்த வேண்டும் என்று சில நிலைமைகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் தம்மை ஆட்படுத்திக் கொள்கிறார்கள். அதில் காங்கிரஸ் கட்சியை இணைக்க நான் தயாராக இல்லை. அது ஒரு கட்சிக்கு மட்டும்தான் என்பதில்லை. சில நிலைமைகள் ஏற்படும்போது, எவ்வளவு ஜனநாயகம் பேசுகிறவர்களாக இருந்தாலும், அவர்கள்தான் மிகுந்த ஆதிக்க சக்தியாகத் தங்களை ஆக்கிக் கொண்டு பொது மக்களின் கருத்துக்களை மனதிலே கொள்ளாது செயல்படுகிற நிலை வந்துவிடுகிறது என்பதை கடந்த கால நிகழ்ச்சிகள் பல நமக்குத் தெளிவு படுத்திக் கொண்டிருக்கின்றன.

மிகச் சாதாரணமான கல்லூரிகளுடைய டிரஸ்ட் போர்டு களுக்குக் கூட என்னென்ன காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எப்படிப்பட்டவர்களை அந்த டிரஸ்ட் போர்டுகளுக்குக் கொண்டு வருகிறோம், எந்தக் காரணங்களினாலே அவர்களுடைய தகுதிகளை நிர்ணயிக்கிறோம். எதனாலே அவர்கள் தான் தகுதி படைத்தவர்கள் என்று கருதுகிறோம், எந்தப் பின்னணியிலே வரவேண்டுமென்று முயற்சிக்கிறோம் என்பதை யெல்லாம் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் அந்தப் பதவிக்கு வருவதற்கு அடிப்படை கல்வித் தகுதியா அல்லது வேறு தகுதியா? ஆதிக்க உணர்வுகள்தான் என்பதைத் தவிர, வேறு எதன் அடிப்படையிலே அப்படிப் பட்டவர்களுக்கு ஆதரவு தரப்படுகிறது அல்லது அப்படிப் பட்டவர்கள் பதவிக்கு வர முடிகிறது என்பதை எண்ணிப் பார்க்க முடிகிறது. அப்படி எண்ணிப்பார்க்கிறபோது, பொது வாகக் கல்வி என்கிற ஒரே ஒரு தகுதியின் அடிப்படையிலே இல்லாமல் கல்வியைத் தங்களுடைய சொந்த அதிகார வரம்பிற்குள் கொண்டுவர வேண்டும் என்கின்ற எண்ணம் ஆட்சியாளர்களுக்கு இருக்கும் வரை, இந்த நிலைமைகள் நீடித்தே இருக்கும். இதைத் தடுப்பதற்கோ, தவிர்ப்பதற்கோ, ஒரு முயற்சி இருக்குமானால், அது பல்கலைக்கழகத்தினுடைய துணை வேந்தரால்தான் செய்ய முடியும். அப்படி அவரால் முடியும் என்றால், அப்படிப்பட்ட துணை வேந்தர் அதிகாரத்தில் இருப்பவர் களுக்கு கொஞ்சம் கூட சளைத்தவராக இல்லாமல் மரியாதை குறைந்தவராக இல்லாமல், அதிகாரத்தைக் கொண்டிருக் கிறவர்களைக் கண்டு நடுங்குகிறவராக இல்லாமல் இருக்கவேண்டும். ஆட்சியாளர்களுக்குத் துணை வேந்தரைக் காண்கிறபோது, நம்முடைய அதிகாரம் எதுவாக இருந்தாலும் அவருடைய ஆற்றலை அறிவை, திறமையை, பொறுப்பை, பாராட்டுகிற





அளவுக்கு அந்தப் பதவிக்குப் பெருமையைத் தேடித் தருகிறவர்கள் துணை வேந்தர் பதவிக்கு வரவேண்டும். ஆனால் ஆதிக்க சக்திகள் அப்படிப்பட்டவர்களைப் பதவிக்கு வரவிடுவதில்லை. பதவிக்கு வரவிடுவதில்லை என்பது மட்டுமல்ல, ஜனநாயகத்தின் பெயரால் கால மாற்றத்தின் பெயரால், அல்லது வேறு வார்த்தை ஜாலங்களால் விளக்கம் கொடுத்துக்கொண்டு தாங்கள் சொன்னதையே மற்றவர்கள் ஏற்பார்கள் என்ற கருத்தைக் கொண்டு தாங்கள் செல்லுகிற இடங்களில் எல்லாம் இவர்களைப் போல அறிவாளிகள் உண்டா என்று பேசுகிற மனிதர்களையே துணை வேந்தர்களாகத் தேர்ந்தெடுக்கிற நிலைமை இருந்து வருகிறது. இது கல்வித் துறைக்கே நல்லதல்ல. அது மட்டுமல்ல, பல்கலைக் கழகத்திற்கும் நல்லதல்ல, தமிழகத்திற்குப் நல்லதல்ல என்பதை நான் இந்த அவையிலே வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் தீர்மானத்தைப் பொறுத்த வரையில், துணை வேந்தர் பதவிக்கான தேர்தல் முறை எந்த வகையிலே அமைய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சில குறிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த முறைகள்தான் தேவையானவை என்பதல்ல. மெத்தப் பணிவோடு ஆட்சி யாளருக்கு ஒரு வேண்டுகோளாகச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். இந்த முறையிலே மாற்றங்கள் தேவையென்றால், அதற்காக ஒரு மசோதாவையே வேண்டுமானால் கொண்டு வாருங்கள். ஆனால் அடிப்படையிலே ஒரு மாற்றம் தேவை என்கிற நிலை உருவாகியிருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். இன்றைய தினம் துணைவேந்தர் பதவி என்பது யாரோ ரிட்டையர் ஆகிறவர்களைத் திருப்திப் படுத்துவதற்காக அளிக்கப்படுகிற பதவியாக அமைந்துவிடக் கூடாது. அல்லது கல்வித் துறையிலே படிப்படியாகப் பதவி உயர்வு பெற்று வருகிறபோது கடைசியாக "Dir:ctor of Public Instruction" என்ற பதவிக்கு மேலே வேறு ஒரு பதவி இல்லை. எனவே, அந்த "Direct›r of Public Instruction" பதவிக்கு மேலே யூனிவர்சிட்டியிலே அவரை ஒரு V.ce-chanc llor ஆக அனுப்பிவிடலாம் என்ற நிலைக்கு ஆளாக்கி விடக் கூடாது. அப்படி ஒருவர் அந்தப் பதவிக்கு வர முடியும் என்ற நிலை இருந்துவிட்டால், இனி அவர்கள் D. P. I. வேலையைப் பார்க்கவே முடியாது. D. P. I. அலுவலகத்திலே உட்கார்ந்து கொண்டு அரசாங்கத்திற்கு ஆள் பிடிக்கிற நிலைமைகள் தான் உருவாகும். ஏறத்தாழ இது போன்ற நிலைமைகள் உருவானதை நாம் கடந்த காலத்திலே பார்த்திருக்கிறோம்.

(பிற்பகல் 6-40)

இந்தமாதிரியான நிலைமைகள் சொல்லுவதற்கே நா கூசுகின்ற அள வுக்கு வளர்ந்துகொண்டிருக்கின்றன. இந்த பயங்கரமான நிலைமை களையெல்லாம் தீர்மானத்தின் மூலமாக வடித்துக் கொடுத்திருக்

கிறார்கள். இப்படி வடித்துள்ள நல்ல வழிமுறைகளை ஆராய்ந்து பார்க்கவேண்டும். இந்தத் தீர்மானம் அரசினுடைய சிந்தனையை ஒருமுகப்படுத்தும் என்று நம்புகிறேன். அவர்கள் இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையிலும் சென்னை பல்கலைக் கழகத்திற்கும், காமராஜ் பல்கலைக்கழகத்திற்கும் ஏற்றவாறு கொடுத்திருக்கிறார்கள். என்றாலும்கூட, நான் கருதுவதெல்லாம் இவற்றுடன் மற்ற பல்கலைக்கழகங்களையும் கொண்டு வந்தாக வேண்டும். எங்கள் மாவட்டத்தில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் இந்தத் தீர்மானத்தை செயல்படுத்த வேண்டும். அங்கே சட்டமே இல்லை என்ற நிலைதான் இருக்கிறது. அதுவும் தனிப்பட்ட ராஜ்யமாக நடந்து கொண்டிருக்கிறது. தேர்ந்தெடுக்கின்ற முறைகள் வேறு மாதிரியாக இருக்கின்றன. மாணவர்களைச் சேர்க்கின்ற முறைகளும் யாருக்கும் புரியாத அளவுக்கு இருக்கின்றன. யாரும் யாரையும் திருப்திப்படுத்திக் கொண்டு மட்டும் நடத்திச் சென்றால் போதும் என்ற நிலைமையிலே அது நடந்துகொண்டிருக்கிறது. அத்தனை பல்கலைக்கழகங்களையும் ஒரு முகப்படுத்தும் மசோதாவை துணிந்து கொண்டுவர வேண்டுமென்று வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பெரு மதிப்பிற்குரிய மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் முன் மொழிந்துள்ள இந்தத் தீர்மானத்தின் மீது ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்தத் தீர்மானத்தை ஏன் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்? இந்தத் தீர்மானத்தைக் கொடுத்தால், எங்கே ஒரு தனி உறுப்பினர் தீர்மானத்திற்கு ஆதரவு இங்கே கிடைக்கப்போகிறது, இந்தத் தீர்மானம் அரசினரால் ஏற்றுக்கொள்ளப்படுமா என்னும் சிந்தனைகள் எல்லாம் இருந்தாலும், அவருடைய உயர்ந்த உள்ளம், உணர்வு எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. அது என்னவென்றால். நம்முடைய பல்கலைக் கழகங்களில் ஓரளவுக்கு புரட்சிகரமான மாற்றங்கள் செய்தால்தான், அவை சிறந்த முறையிலே தமிழகத்திற்குப் பயன்பட முடியும் என்பதுதான். பல்கலைக் கழகங்கள் என்று எடுத்துக்கொண்டால், காமராஜ் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகம், காந்தி கிராமத்திலுள்ள பல்கலைக் கழகம், தொழில் நுட்பப் பல்கலைக் கழகம், விவசாயப் பல்கலைக் கழகம் ஆகிய அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் ஒருமித்த முறையாக ஒரு தேர்வு முறையை அமைத்தால், அது சிறப்பாக இருக்கும். அது முழுக்க முழுக்க உடனே வெற்றி பெறுமா என்பது சற்று சிந்தனைக்குரியதாக இருக்கிறது. காரணம் என்னவென்றால், பல மாநிலங்களில் பல்கலைக் கழகங்களில் நடைமுறையில் உள்ள தேர்தல் முறைகள் மாறுபடுகின்றன. பொதுவாக பொதுக் குழுவிற்கு நடைபெறும் தேர்தல், கல்வி மன்றங்களுக்கு நடைபெறும் தேர்தல், அலுவலக முறைக்கு



நடைபெறும் தேர்தல், யார் யார் வாக்காளர் பெருமக்களாக இருக்கத் தகுதி பெற்றவர்கள், வாக்காளராக யார் யார் பதிவு செய்கிறார்கள், பதிவு செய்யக்கூடிய சக்தி யாரிடம் இருக்கிறது, எத்தனை ஆண்டு பட்டதாரியாக இருந்தால் வாக்குரிமை பெறலாம் என்பதெல்லாம் தெரிய வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன்னால் மதுரை பல்கலைக் கழகத்தில்—அது இப்போது காமராஜ் பல்கலைக் கழகமாக இருக்கிறது— தபால் முறையில்தான் வாக்காளர்கள் வாக்களித்தார்கள். கடந்த சில மாதங்களுக்கு முன் தேர்தல் நடந்தது. வோட்டுச் சாவடி முறை பயன்படுத்தப்பட்டது. வோட்டுச் சாவடியை எப்படிப் பயன்படுத்துவது என்பதும் தெரிய வேண்டும். இந்த நிலைமைகளில் வேட்பாளர்கள் எந்த அளவுக்கு சக்தி வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும், வாக்காளர்களை சேகரித்து, வாக்குச் சாவடிக்கு வாக்காளர்களை அழைத்துச் செல்ல வேண்டும். இதையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது யார் அடுத்த மன்றத்திற்கு, கல்வி மன்றத்திற்கு உறுப்பினர் ஆகக்கூடிய தகுதி பெறமுடியும். இது பற்றி நான் கருதுவது என்னவென்றால் இந்த வாக்காளர் பட்டியலைத் தயார் செய்யும்போது, ஒரு பல்கலைக் கழகத்திலே பயின்றவர், பட்டம் பெற்றவர் எத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு அந்த வாக்குரிமையைப் பெறுகிறார்கள் என்று பார்க்கும்போது, சில பல்கலைக் கழகங்களில் 3 ஆண்டு காலம் என்றும், சில பல்கலைக் கழகங்களில் 5 ஆண்டுகள் என்றும் வைத்திருக்கிறார்கள். பல்கலைக் கழகத்திலே படித்து பட்டம் பெற்று முடிந்தவுடனே அவர்களுக்கு வாக்காளர் உரிமையை வழங்க வேண்டும். அப்படி உரிமை வழங்கப்படாவிட்டால், அந்த உரிமையைப் பெறுவதற்கு சிலர், பணம் படைத்தவர்கள் அவர்களுக்காக பணத்தைக் கட்டி அவர்களாகவே தபால் மூலம் ஆட்கள் வைத்து எல்லா வாக்குகளையும் பெற்றுவிடுகிறார்கள். ஒருவேளை அத்தகைய சக்தி படைத்தவர்கள்தான் வேட்பாளராகி, துணைவேந்தராக வர முடியும் என்ற நிலை இருக்கிறது. இதிலே மாற்றம் செய்ய வேண்டும். ஒருவேளை அரசே துணை நின்று சில குறிப்பிட்ட பகுதிகளிலே இவர்களே சென்று வாக்குகள் சேகரிக்கும் நிலைமைகளை உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்காவிட்டால், தனிப்பட்டவர்கள், பணம் படைத்தவர்கள்தான், அதிகமான வோட்டுக்கள் பெற்று ஆதிக்கம் பெறும் நிலைமைகள் இருக்கின்றன. எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் நடைமுறை படுத்தாது நாம் ஒரு பல்கலைக் கழகத்தை எடுத்துக்காட்டாகக் கொண்டு அதன் அடிப்படையில் மற்ற அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் அதை ஏற்ற முறையாக திருத்தி நடைமுறைப்படுத்த வேணடும். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கருத்தை ஒட்டியோ ஒரு சில மாற்றங்களைச் செய்தோ அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும். அதைப் பற்றி நன்கு ஆராய்ந்து முடிவுக்கு வரவேண்டும். இந்தத் தீர்மானம் ஒரு தனி நபர் கொடுத்த தீர்மானம் என்ற

காரணத்தினால், அதை நல்ல முறையிலே ஆராயாது, நிராகரித்து விடாது, நம் மாநிலத்திற்கு ஏற்றபடி ஒரு திட்டத்தை வகுத்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. பி. மாணிக்கம்: மாற்றுத் தலைவர் அவர்களே' மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்தத் தீர்மானம் ஒரு முக்கியமான கருத்தினைக் கொண்டிருக்கிறது. துணை வேந்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றால், இரண்டு மையங்கள், சென்னைப் பல்கலைக் கழகம், காமராஜ் பல்கலைக் கழகம் ஆகியவற்றிலும் அடுத்து தமிழகத்தில் சட்டபூர்வமாக ஏற்படுத்தப்பட்ட மற்ற பல்கலைகழகங்களிலும் ஒரே தேர்தல் முறை இருக்க வேண்டும். அதற்கேற்ற தேர்தல் முறையினை, ஒரு கருத்தினை, ''கற்றனைத் தூறும் அறிவு'' என்கின்ற அளவில், ஒரு கோட்பாட்டினைக் கூறியிருக்கிறார்கள். இந்தத் தீர்மானம் சிறிது காலம் தாழ்த்தி வந்த போதிலும். நல்ல கருத்துள்ள தீர்மானம், சொல்லப் போனால், உருளாமல் கிடந்த டந்தை உருட்டிவிட்டிருக்கிறார். எனவே அரசு அந்தப் பந்தை உருட்டி ஒரு நல்ல வெற்றியைத் தேடிக் கொள்ள வேண்டுமென்பதுதான் என் முதல் வேண்டுகோள். தமிழகத்திலே நல்ல கல்வி வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. கல்வி வளர்ச்சியிலே கீழ் மட்டத்திலே உள்ள பரவலான கல்வி, அடுத்து இடைத்தட்டிலுள்ள உயர்நிலைக் கல்வி, அடுத்து, கட்டுக்கோப்பாக அமைந்திருக்கக்கூடிய பல்கலைக் கழகக் கல்வி இருக்கிறது. அதிலே பல மாற்றங்கள் ஏற்படுத்தியிருந்த போதிலும், தமிழகம் மற்ற மாநிலங்களில், டெல்லி, பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக்கழகங்களோடு நிலையாகப் போட்டிப் போடுவதிலே சற்றுப்பின் வாங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்குக் காரணம் நம்முடைய பல்கலைக் கழகங்கள் பல துறைகளில் விரிவுபடுத்த வேண்டிய நிலையில் இருக்கின்றன. ஆராய்ச்சித் துறையை மீண்டும் புதுப்பிக்கவேண்டும். பல துறைகளில் நடைமுறைகள் சரியில்லை என்று அறிஞர் மத்தியிலே குறைபாடு சொல்லப் படுகிறது. பல்கலைக்கழகங்கள் நல்ல முன்னேற்றம் காணவேண்டுமென்றால். பல்கலைக்கழகங்களினுடைய நிர்வாகம் மட்டும் அல்ல, அந்த நிர்வாகத்தோடு இணைந்த கல்வி முறைகளும் நன்கு அமைய வேண்டும். பிற நாடுகளில் உள்ள முன்னேற்றத்தைக் கணக்கில் கொண்டு, அந்த முறையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

அப்படி அமைய வேண்டுமென்றால் தலைமைப் பொறுப்பில் உள்ள துணை வேந்தர் அவர்கள் தெளிவான சிந்தனையுடன் செயல்பட வேண்டும். அவர் கல்வித் துறையில் நல்ல முறையில் ஈடுபட வேண்டும் என்றால், அவருக்குக் கிடைக்கக்கூடிய துணிவு,





வாய்ப்பு, செயல்படுத்துகின்ற சுதந்திரம் எல்லாம், ஒரு ஜனநாயக் முறையில் தேர்வு நடக்குமானால்தான் கிடைக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்குள்ள சூழ்நிலைக்கான காரணங்களை எல்லாம் எனக்கு முன்னால் பேசியவர்கள், கூறினார்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. அறிவழகன் அவர்கள் பல்வேறு கடந்தகால அனுபவங்களையெல்லாம் கூறினார்கள். இராமாயணத்தை எடுத்துக்கொண்டு சொன்னார்கள். இருப்பினும் நான் ஒரு உண்மையைச் சொல்லித்தான் ஆகவேண்டும். கடந்த காலத்தில் உள்ள அனுபவங்களில் நல்ல அனுபவங்களும் உண்டு, கெட்ட அனுபவங்களும் உண்டு அவைகளில் நல்ல அனுபவங்களைத் தான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

(பிற்பகல் 6-50)

வரக்கூடிய காலத்தில் தேவை என்ன என்று பார்க்க வேண்டும். இன்றைய நேரத்தில், 1978 ஆம் வருடம் மாத்திரமல்ல, இந்த கால கட்டத்தில் நவீன விஞ்ஞான வளர்ச்சி பல துறைகளில் வந்துகொண்டிருக்கிறது. இந்த வளர்ச்சி சிறப்பாக நடைபெற வேண்டுமென்றால். பல்கலைக் கழகங்கள் சிறப்பாக நடைபெற வேண்டும். அதற்கு முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கை துணை வேந்தர்களைத் தேர்வு முறையில் தேர்ந்தெடுப்பதுதான். தேர்வு முறை இப்படித்தான் அமைய வேண்டுமென்று தீர்மானத்தில் சொல்லப்படவில்லை. என்ன அடிப்படையில் அமையலாமென்பதற்கு வழி சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் விரிவாக அமைக்கப்படலாம். அரசு, இப்படிப்பட்ட தேர்வு முறை என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டு, அதற்கான சட்ட முன்வடிவைத் தயாரிக்குமானால், அப்போது அதை விரிவாக எடுத்துக் கொள்ளலாம். இப்போது அந்த அம்சங்களை எடுத்துக் கொள்வதைவிட, இந்தத் தேர்வு முறை அவசியமா என்று அரசு பார்க்க வேண்டும். நிச்சயமாக இது தேவை என்பது மட்டுமல்ல. பல அனுபவங்களைப் பார்க்கும் போது— ஐரோப்பா நாட்டின் அனுபவங்களையும், அமெரிக்க நாட்டின் அனுபவங்களையும், சோஷலிஸ்ட் நாடுகளின் அனுபவங்களையும் எடுத்துக்கொண்டு பார்க்கும்போது இப்படிப்பட்ட தேர்வு முறை வேண்டுமென்பது தெரிகிறது. இன்றைக்குள்ள முறையைத் தொடர்ந்து நாம் கையாண்டு வருகிறோம். அதனால் ஏற்பட்ட பலனைப் பார்த்திருக்கிறோம். பலனே இல்லை என்று நான் கூறவில்லை, கிடைக்க வேண்டிய அளவுக்குப் பலன் கிடைக்கவில்லை. ஆகவே செய்கின்ற காரியத்தில் எவ்வளவு பலன் கிடைக்க வேண்டுமென்று பார்க்க வேண்டும். தமிழகத்திலே இரண்டு பல்கலைக் கழகங்களில் மட்டுமல்ல, மற்ற பல்கலைக் கழகங்களிலும் இந்தத் தேர்வு முறை வேண்டுமென்று கூறப்படுகிறது. அரசு இதில் கவனம் செலுத்தி, இந்தத் தீர்மானத்தை ஏற்கும், ஏற்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : மாற்றுத் தலைவரவர்களே, திரு. தாமோதரன் அவர்களுடைய தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன் இதை ஆதரித்து இந்தச் சபையிலே அதைப்பற்றிப் பேசினாலும், அரசாங்கம் அதை அமல் நடத்துமென்ற நம்பிக்கையில்லை. இருந்தாலும் திரு. தாமோதரன் அவர்களுடைய தீர்மானம் சிந்தனையைத் தூண்டிவிடுகிறதென்ற முறையிலே இதை வரவேற்கிறேன். பல்கலைக் கழகங்களுக்குள்ளே ஜனநாயகக் காற்று வீசுவதற்கு சாளரங்களை ஓரளவிற்குத் திறந்து வைக்க இந்தத் தீர்மானம் பயன்படுகிறதென்ற முறையிலேதான் இதை நான் வரவேற்கிறேன். திரு. தாமோதரன் அவர்கள் கூறினார்கள். துணை வேந்தர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது என்பது மட்டுமல்ல, சிண்டிகேட்டிலுள்ள நாமினேட்டட் பெர்சன்ஸ், நாமினேஷன் செய்யும் முறை ஒழிய வேண்டுமென்று சொன்னார்கள். ''ஒழிய வேண்டுமென்று'' அவர்கள் சொல்லவில்லை. போகவேண்டுமென்று சொன்னார்கள். நான்தான் கொஞ்சம் கடினமாகச் சொல்கிறேன். இந்தப் பிரச்சினையை இப்போது கொண்டுவருவதன் காரணத்தை அவர்கள் சொன்னார்கள். அதாவது இப்போது சென்னைப் பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தரை நியமிப்பதற்கான ஏற்பாட்டிலே, துணை வேந்தராக நியமிக்கப்படுபவர் இந்த மன்றத்திலே உறுப்பினராக இருக்கலாமா, கூடாதா என்பதால் ஏற்பட்ட தாமதத்தையொட்டி, ஒரு உறுப்பினருக்கு இருக்கக் கூடிய ஜனநாயக உரிமைகள் பாதிக்கப்படுவதையொட்டி, துணை வேந்தர் ஜனநாயகபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற பிரச்சினை முன்னுக்கு வந்திருக்கிறது. துணை வேந்தரை ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொல்லுவது காலங் கடந்த பிரச்சினை என்று திரு. மாணிக்கம் அவர்கள் கூறியதை நானும் வலியுறுத்துகிறேன். ஏற்கெனவே, ''லாங் ஓவர்டியூ'', நல்ல வேளை, காக்காய் உட்கார பனம் பழம் விழுந்த கதையாக துணை வேந்தர் நியமிக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டதால், இந்தப் பிரச்சினை முன்னுக்கு வந்திருக்கிறது. ஜனநாயக முறையிலே துணை வேந்தரைத் தேர்ந்தெடுப்பதால் மட்டும் பிரச்சினைகள் பூர்த்தி அடையுமென்று நான் நினைக்கவில்லை. சிண்டிகேட்டிற்கு நாமினேஷன் முறையில் உறுப்பினர்களை நியமிப்பது மாற வேண்டுமென்பது ஒன்று. அடுத்தபடியாக, திரு. அறிவழகன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ''நீங்கள் இப்படிச் செய்தாலும்கூட, கல்லூரிகளிலே சில 'வெஸ்டட் இன்ட்டரஸ்ட்' ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதைத் தடுக்க முடியுமா ?'' என்று கேட்டார்கள். ஏன் தடுக்க முடியாது ? கல்வியிலே வியாபாரம் பண்ண ஆரம்பித்தால், எப்படித் தடுக்க முடியும் ? கல்வியிலே இன்வெஸ்ட் பண்ணுகிறார்கள். அப்படிச் செய்ய கல்வி என்ன வியாபாரமா ? கல்வியிலே தனியார் துறை வியாபாரம் பண்ண ஆரம்பித்தால், அந்த விளைவு வரத்தான் செய்யும். கல்வித் துறையிலே ஜனநாயகம் ஏற்பட வேண்டுமென்றால், கல்வியை முழுமைப்படுத்த வேண்டுமென்றால்,





நான் கூறுவேன், சிண்டிகேட்டுக்கு நாமினேஷன் முறையை ஒழிப்பதோடு மட்டுமல்ல, ஆசிரியர்களுக்குப் போதிய 'பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்பதோடு மட்டுமல்ல, மாணவர்களுக்கும் சிண்டிகேட்டில் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும். ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்கிறார்கள், மாணவர்கள் படிக்கிறார்கள். படிக்கிற மாணவர்களுக்கு இதெல்லாம் தெரியுமா என்று கேட்கலாம். பி. யூ. சி. படிக்கிற பையனுக்குத் தெரியாமல் இருக்கலாம், எஸ். எஸ். எல். சி. படிக்கிற பையனுக்குத் தெரியாமல் இருக்கலாம். டிகிரியில் மூன்றாம் ஆண்டு படிக்கும் பையன் கன்டெஸ்ட் பண்ணலாமென்று விதி போடுங்கள், டிகிரியில் இரண்டாம் ஆண்டு படிக்கும் பையன் கன்டெஸ்ட் பண்ணலாமென்று விதி போடுங்கள். மாணவர்களையும் செனட்டில் மெம்பர்களாகச் சேருங்கள். ஆசிரியர்களை மெம்பர்களாகச் சேருங்கள். இப்படிச் செய்து, கல்வியை அரசுடைமை ஆக்கிவிட்டால், இப்போது கல்வியிலே பல பேர்கள் ஆதிக்கம் பண்ணி வருகிறார்களே, அது இல்லாமல் இருக்கும். அதாவது, செனட்டிலும் சிண்டிகேட்டிலும் ஆதிக்கம் செலுத்தினால் எங்கு கல்லூரி திறக்கலாம், எப்படி கிரான்ட் வாங்கலாம், யாரை அப்பாயின்ட் செய்யலாம், எந்தக் கமிட்டியில் போகலாமென்று ஆதிக்கம் செலுத்துவதற்கு வழியில்லாமல் போகும். கல்வி சம்பந்தப்பட்ட எதுவும் தெரியாதவர்கள், பணம் இருக்கிற காரணத்தாலே, அதை இன்வெஸ்ட் பண்ண சக்தியிருப்பதால் வருகிறார்கள். இந்த விஷயத்தை ஏன் தொடமாட்டேன் என்கிறார்கள். புரபசர்களுக்கு இது தெரியாதா ? இதுதானே ரூட்காஸ்.

(மாற்றுத் தலைவர் மணியடித்தார்)

எனக்கு மட்டும் தலைவரவர்கள் மணியடிக்கிறார்கள்.

மாற்றுத் தலைவர் (திரு. கே. எஸ். அப்துல் வகாப்); அவைக்கு ஓர் அறிவிப்பு. 13—9—1978 அன்று காலை 10-30 மணிக்கு மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் தொடர்ந்து நடைபெறும். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பேசியபின், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பதிலளிப்பார்கள்.

திரு. ஆ. நல்லசிவன் : ஆகவே, நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் தொடங்கியிருக்கக்கூடிய ஜனநாயகக் காற்று வீசும் சாளரம் முழுமையாகத்' திறக்கப்பட வேண்டுமென்றால், கல்வி அரசுடைமை ஆக்கப்பட வேண்டுமென்பது மட்டுமல்ல, நம்முடைய தாய்மொழியிலேயே பல்கலைக் கழகத்தினுடைய பயிற்சியும் இருக்க வேண்டும். மேலும் நான் கூறுவது என்னவென்றால்,

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

செவ்வாய்க் கிழமை, 1978 செப்டம்பர் 12.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### Thirukkural Research

* 71 Q.—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state—

(a) whether there is any proposal with the Government to conduct research on Thirukkural, with Valluvar Kottam as its headquarters; and

(b) if so, the action taken thereon so far by the Government?

### திருக்குறள் ஆராய்ச்சி

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு செய்தி, இந்து அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வள்ளுவர் கோட்டத்தைத் தலைமைப் பீடமாகக் கொண்டு திருக்குறள் ஆராய்ச்சி நடத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், இதன் தொடர்பாக அரசு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) இல்லை.

(இ) எழவில்லை.

திரு. க. இராமமூர்த்தி: மிகப் பெரிய அளவிலே வள்ளுவர் கோட்டம் ஒரு கலைக்கூடமாக விளங்கிக் கொண்டிருப்பதால் தமிழகத்தினுடைய பல பகுதிகளிலிருந்தும், இந்தியாவிலிருந்து

கல்வியில் சம்பந்தப்பட்ட மாணவர்களும், கல்வியில் சம்பந்தப் பட்டிருக்கக் கூடிய ஆசிரியர்களும் ஜனநாயக பூர்வமாகத் தங்களுடைய கடமையை, நிர்வாகத்தைச் செய்ய அனுமதித்தால் நண்பர் திரு. வகாப் அவர்கள் சொல்லிய மாதிரி, பயப்பட வேண்டிய அவசியம்கூட இல்லை. ஏனென்றால் தவறான ஆட்களைத் தேர்ந்தெடுத்தால். அதனுடைய பலனை அவர்களே அனுபவிப் பார்கள். தவறான ஆட்களைத் தலைமையாக்கினால், சிண்டிகேட்டும், செனட்டும்தான் அவஸ்தைப்படும். ஆனால் திரு. வகாப் சொல்கிற படி, குவாலிபிகேஷன்ஸ் இருக்க வேண்டும். சில சமயங்களில் தவறானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் போடும் தவறான உத்தரவுகள் காரணமாகக் கல்வி பாதிக்கப்பட்டால், செனட், சிண்டிகேட்டில் உள்ளவர்கள் தமிழ் நாட்டிலுள்ள மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கும். அகடமிக் கவுன் சிலில் இருக்கிறவர்களுககுப புத்தி இருக்கிறதா என்று கிராமங் களில் இருக்கிறவர்கள், தெருவில் போகிறவர்கள் எல்லாம் கேட்பார்கள். அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். 5, 6 பேர்கள் குண்டு சட்டியில் குதிரை ஓட்ட வேண்டாம். கல்வி பரவலான சமாச்சாரம். ''மாஸ்'' சம்பந்தப்பட்ட சமாச்சாரம். எனவே சம்பந்தப்பட்ட அனைவரையும் அதில் ஈடுபடுத்த வேண்டு மென்று கோருகிறேன். இது நல்ல முறையில் நடக்க வேண்டு மென்றால், கல்வி அரசுடைமையாக்கப்பட வேண்டும். தாய்மொழி பயிற்சி மொழியாக்கப்பட வேண்டும். அந்த அடிப்படையிலே, இன்று ஆரம்பிக்கிற ஜனநாயக முயற்சி தொடர்ந்தால், பூர்த்தி செய்யப்படுமானால், அதுதான் தமிழ் நாட்டு மக்களுடைய ஒட்டுமொத்தமான கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யும் நன்னாள். அந்த ஜனநாயக முயற்சியைத் துவக்கி வைக்கக் கூடிய தமிழ் நாட்டு மக்களுடைய சிந்தனையைத் தூண்டிவிடக் கூடிய அளவுக்கு, அதுவும் டாக்டர் ஏ. லட்சுமணசுவாமி முதலியார் குடும்பத்தில் வந்துள்ள திரு. தாமோதரன் போன்ற வர்கள் பல்கலைக் கழகங்களிலே ஜனநாயகக் காற்று வீசுவதற்கு சாளரங்களைக் கொஞ்சம் திறந்து விடுங்கள் என்று சொல்ல ஆரம்பித்திருக்கிற இந்த நடைமுறையை, ஆதரித்து, தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்களில் சாளரங்களை நன்றாகத் திறந்து விட வேண்டுமென்ற முறையிலே, இதை வரவேற்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. கே. எஸ். அப்துல் வகாப்): இத்துடன் மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்று, அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 7.00)



### 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

#### *A. Statutory Rules and Orders.*

87. Notification issued with G.O. Ms. No. 1387, Home, dated the 17th June 1978 in regard to an amendment to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960. [Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937)].

88. Notification issued with G.O. Ms. No. 819, Commercial Taxes and Religious Endowments, dated the 23rd June 1978 in regard to an amendment to the Revenue Department Notification III No. 333 of 1971, dated the 30th November 1971, published at page 1887 of the *Tamil Nadu Government Gazette*, dated the 22nd December 1971. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

#### *B. Reports, Notifications and other Papers.*

22. Second Report of the Committee on Public Undertakings on the Report of the Comptroller and Auditor-General of India for the year 1971-72. (Civil) (Tamil).

23. Third Report of the Committee on Public Undertakings on the Report of the Comptroller and Auditor-General of India for the year 1972-73 (Civil) (Tamil).

24. Fourth Report of the Committee on Public Undertakings on the Report of the Comptroller and Auditor-General of India for the year 1972-73. (Commercial) (Tamil).

பல பகுதிகளிலிருந்தும் பலர் வந்து காண்கிற முக்கியத்துவம் வாய்ந்ததாக, அது அமைந்திருக்கிறது. கலாச்சார முக்கியத்துவம் படைத்த அந்த இடத்தில் வள்ளுவர் பெயரால் குறள் ஆராய்ச்சியை, ஆராய்ச்சி வகுப்புகளை நடத்துகிற பீடத்தை அமைக்க அரசு இனியாவது சிந்திக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இப்போது தமிழ் நாட்டிலே மூன்று பல்கலைக் கழகங்களில் திருக்குறள் ஆராய்ச்சிக்கென்று பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு நடைபெற்று வருகின்றன. இதற்கு மேலும் ஒரு பொதுத் தன்மை வாய்ந்த ஆராய்ச்சி அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டுமா என்பதைப்பற்றி அரசு பரிசீலிக்கும். மேலும் வள்ளுவர் கோட்டத்திலே அப்படி அமைக்க வேண்டுமானால், அதற்காக பல்வேறு செலவுகள் ஏற்படும். அவைகளையெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொண்டு, அரசு இந்தப் பிரச்சினையை மேற்கொள்ளும்.

திரு. க. இராமமூர்த்தி : பல்கலைக் கழகங்களிலே இந்த ஆராய்ச்சி நடத்தப்படுகிறது என்றாலும், இந்தத் துறையில் வல்லமை பெற்றிருக்கிற, பட்டம் பெறாத அறிஞர்கள் இதிலே ஈடுபட இயலாமல் போகிறது. உதாரணமாக, வள்ளுவனையும், குறளையும் மிகத் தெளிவாக நாட்டு மக்களில் பாமரர்களுக்கும் புரிகிற வகையிலே எடுத்துச் சொல்லி வருகிற திருக்குறள் முனுசாமி, வாரியார் போன்றவர்கள், மக்களுடைய எண்ணத்திலிருந்து, மக்களுடைய போக்கிலேயே ஆராய்ச்சி செய்யும் நிலை இருக்கிறது. ஆகவே பல்கலைக் கழகங்களில் நடைபெறுகிற ஆராய்ச்சி இன்றி, இவர்களும் தனியாக ஆராய்ச்சி செய்ய ஒரு வழி வகுத்தால், முறையாக இருக்குமென்று கருதி, இதை அரசு ஏற்குமா என்று அறிய விரும்புகிறேன்.

பல இடங்களில், ஆலயங்களிலும் மற்ற இடங்களிலும் பல்வேறு துறைகளுக்காகத் தனியாக ஆராய்ச்சிக் கூடங்கள் இருக்கின்றன. அதுபோல வள்ளுவர் கோட்டத்தையும், செலவு அதிகமாக இருந்தாலும் கூட, அதை நடத்துவதன் மூலமாக அதனுடைய பலன்களைப் பல பேர் பெறுகிற வாய்ப்பு இருக்கிற காரணத்தால், செலவைப்பற்றிக் கருதாமல் அரசு இதை ஏற்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அரசு செலவைக் கருதி ஏற்கலாமா என்ற ஆராய்ச்சியிலே இல்லை. வள்ளுவர் கோட்டம் அமைக்கப்பட்டதையொட்டி அதற்கான அடிப்படைச் செலவுகளில் இன்னும் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் தீர்க்கப்பட்டதற்குப் பிறகு, வள்ளுவர் கோட்டத்தை மேலும்





சிறப்பாக அமைத்து, அதிலே இது போன்ற புகழ்பெற்ற, நாட்டுக்குத் தேவையான அமைப்புகள் நடைபெறச் செய்யும் முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. க. அறிவழகன் : இந்த வள்ளுவர் கோட்டத்தின் ஒரு பகுதி திருக்குறள் ஆராய்ச்சிக்காக ஒதுக்கப்பட வேண்டும் என்பதற்காக அங்கே ஒரு சிறு மண்டபம் கூட இருக்கிறது. தலைவர் அவர்களே, நீங்கள் கபாலீஸ்வரர் கோயிலுக்குச் செல்லுகிற நேரத்தில், அங்கே மற்ற மதச் சார்புடைய நூல்களைப்பற்றி விளக்க உரைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதைக் கண்டிருப்பீர்கள். உண்மையிலேயே வள்ளுவர் கோட்டத்திலேயும் ஆண்டு பூராவும் இல்லையாயினும், 133 நாட்களாவது—133 அதிகாரங்களைக் கொண்டிருப்பதால் சொல்லுகிறேன்—வள்ளுவருடைய பெருமையை ஒவ்வொரு நாளும் ஒரு புலவர் மாலை நேரத்தில் விளக்கலாம். அதற்கேற்ப அங்கே கூட்டம் வருகிறது, கட்டணமும் கிடைக்கிறது. அக்கட்டணம் அதிகம் என்று சொல்ல முடியாது. ஏதோ நடைமுறைச் செலவுக்குத்தான் போதும். அந்த முறையில் இதற்கென்று பெரிய நிதிச் செலவுகள் இல்லாமல், வள்ளுவர் கோட்டத்தில் வரும் வருமானத்தில் சிறிது செலவழித்து அந்த இடத்திலே இதைச் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இது போன்ற பல்வேறு யோசனைகள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. சமீபத்தில் கூட திருக்குறளில் மிகப் புலமை வாய்ந்த சதாவதானி என்றபெரும் புலவர் அவரிடம் ஒரு திருக்குறளின் எண்ணைச் சொன்னால், அந்தத் திருக்குறள் என்ன, அதற்குப் பொருள் என்ன என்றும், அதையே மாற்றி குறளைச் சொன்னால் அந்தக் குறளின் எண் என்ன என்றும் சொல்லுகிறார்கள்—திறமை வாய்ந்த பெரும் புலவர், நமது முதல்வர் அவர்களைச் சந்தித்தார்கள். அப்படிப்பட்டவர்களையெல்லாம் வள்ளுவர் கோட்டத்திலே அமர வைத்து, வருகிற பெருமக்கள் காட்சிப் பொருளாக மாத்திரம் காணாமல், வள்ளுவரின் பெருமையையும், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல, குறளின் பெருமையையும் உணரக் கூடிய வகையில் நடைமுறையிலே கேட்பதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் ; வள்ளுவர் கோட்டம் தமிழகத்தினுடைய தலைநகரான சென்னைக்குக் கீர்த்தியை உருவாக்கியிருக்கிறது என்பதிலே இரண்டுபட்ட கருத்துக் கிடையாது என்று அரசு ஒத்துக்கொள்கிறது. அதைப் போலவே தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் கம்பனுக்கு ஒரு கோட்டம் அமைத்துத் தமிழை வளர்க்க வேண்டும் என்று வேண்டுகோள் வந்திருக்கிறதா? அதைப் பரிசிலனை செய்து செயற்குறிப்பைத் தயாரித்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வி. ஆகவே தனியாகக் கேள்வியைக் கேட்டால், சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் அள்ப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : வள்ளுவர் கோட்டம் உருவாக்கப் பட்ட நேரத்தில், அங்கே ஒரு ஆராய்ச்சிக் கூடம் அமைக்க வேண்டுமென்ற நோக்கத்திலே ஆராய்ச்சிக் கூடம் அங்கே அமைக்கப்படுவதற்குரிய பகுதி ஒதுக்கப்பட்டிருந்தது. அது இப்போது நிர்வாக அலுவலமாகச் செயல்படுவதாகத் தெரிகிறது. உண்மையிலேயே தொடக்கக் காலத்திலே எந்த எண்ணத்தில் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த எண்ணத்தை நிறைவேற்றும் அளவுக்கு அதைச் செயல்படுத்த இந்த அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு ஆர். எம், வீரப்பன்: வள்ளுவர் கோட்டத்தை உருவாக்குகிறபோது, எந்தெந்த நோக்கத்தில் அவைகள் எல்லாம் திட்டமிட்டு உருவாக்கப்பட்டன என்பதிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால் ஆராய்ச்சிக் கூடம் என்ற ஒரு பகுதி இருப்பது, இன்றைக்குள்ள அமைப்பிலேயிருந்து தெரிகிறது. நான் முன்னாலேயே சொன்னதைப் போல! பல பிரச்சினைகள் இதை உருவாக்கியபோது எழுந்த காரணத்தால், அவைகள் எல்லாம் முறையாக முடிக்கப்பட்டதற்குப் பிறகு, மேலும் முயற்சிகள் மேற் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. இராமலிங்கம் : திருவள்ளுவர் கைத்தறித் தொழிலைச் செய்தவர் என்று தெரிகிறது. ''செய்யும் தொழில் எல்லாம் சீர் தூக்கிப் பார்க்குங்கால், நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை'' என்ற சிறப்பான தொழிலைச் செய்த வள்ளுவர் அவர்களின் நினைவாக உள்ள வள்ளுவர் கோட்டத்தில் கைத்தறிச் சின்னத்தை வைத்து கைத்தறியின் பெருமையை மக்கள் உணரும் வகையில் செய்தால்' கைத்தறி விற்பனைக்குக் கூட விளம்பரமாக இருக்கும். அடுத்து, இதற்குத் தொடர்பில்லாத மேலும் ஒரு கேள்வி. சேலத்திலே....

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தொடர்பு இல்லாத கேள்வி என்று விளம்பரப்படுத்தி கேள்வியைக் கேட்கிறீர்களே!

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : வள்ளுவர் எத்தப் பிரிவைச் சேர்ந்தவர் என்பதிலே பெரும் புலவர்களிடத்திலேயே ஆராய்ச்சித் தகராறு நடைபெற்று வருகிறது. அப்படிப்பட்ட



விவாதத்திற்கு உரியதாக நல்ல புனிதமான இடமாக உள்ள வள்ளுவர் கோட்டத்தை ஆக்குவது வள்ளுவருக்கும் சிறந்ததல்ல, நமக்கும் நன்மையல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

[பிற்பகல் 4.10]

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : வள்ளுவர் கோட்டத்திற்கு முன்னால் பேரறிஞர் அண்ணாவின் சிலை உள்ளது. சிலையின் பீடத்தில் வள்ளுவர் கோட்டத்தை உருவாக்கியவர் டாக்டர் கலைஞர் கருணாநிதி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது உண்மையா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : சிலையின் பீடத்திலே அப்படி வாசகம் இருக்கிறது என்று உறுப்பினர் தெரிவித்த பிறகு, நாங்கள் போய்ப் பார்த்தால் தான் அது உண்மையா இல்லையா என்பது தெரியும். ஒருவேளை அப்படி இருந்தால், நான் என்ன பதில் தர முடியும் என்பதையும் உறுப்பினருடைய முடிவுக்கே விட்டு விடுகிறேன்.

புலவர் புலமைப்பித்தன் : வள்ளுவர் கோட்டத்தைத் தலைமைப் பீடமாகக் கொண்டு, திருக்குறள் ஆராய்ச்சி நடத்தும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லையென்று மாண்புமிகு அமைச்சரவர் கள் தெரிவித்தார்கள். அப்படி ஆராய்ச்சி நடத்தாவிட்டாலும் கூட விவிலியர் பிரச்சாரம் நடத்தியது போல, வள்ளுவர் கோட்டத்துக்கு முன்னால் திருக்குறளைப் பற்றிப் பிரச்சாரம் செய்ய அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஒரு நாள் அல்ல, ஆண்டு முழுவதும் அப்படிச் செய்வதாக இருந்தாலும் கூட, எவ்வளவு நாள் ஆனாலும் கூட பரவாயில்லை, அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

*Craft Teachers.*

*72 Q.—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the special pay of rupees five paid to the Craft Teachers, who have acquired Secondary Grade qualification has been stopped for those who have been awarded Selection Grade Scales of Pay in Ramanathapuram District;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the number of teachers affected?

## கைவினைப் பயிற்சி ஆசிரியர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இடைநிலைத் தர தகுதியடைந்த கைவினைப் பயிற்சி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஐந்து ரூபாய் சிறப்புச் சம்பளம், இராமநாதபுரம் மாவட்டத்தில் தேர்வு நிலை சம்பள வீதங்கள் வழங்கப்பட்டுள்ள அத்தகைய ஆசிரியர்களுக்கு, நிறுத்தப் பட்டுவிட்டது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) இதனால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை எத்தனை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) கைத்தொழிலாசிரியராக பணியாற்றியவர்கள் தேர்வு நிலை ஆசிரியர்களாக பதவி உயர்வு பெறும்போது தேர்வு நிலை சம்பள விகிதம் பெறுவதால் அவர்களுக்கு ஏற்கெனவே பெற்ற சிறப்பூதியம் ரூ. 5/ தொடர்ந்து கொடுக்க முடியாது என அரசு ஆணையிட்டுள்ளது.

(உ) எட்டு பேர் மட்டும்.

திரு. பி. ஆர். தாமஸ்: கைவினைப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இடைநிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற உடனே அவர்களுக்குச் சிறப்பூதியம் வழங்கப்படுகிறது. தேர்வு நிலை என்பது 10 ஆண்டு பணி முடித்தவர்களுக்கு மட்டும் வழங்கப்படுகிறது. இடைநிலை ஆசிரியர்களுடைய ஊதிய விகிதமும் கைவினைப் பயிற்சி ஆசிரியர்களுடைய ஊதிய விகிதமும் சமம். அந்தக் கைவினைப் பயிற்சி ஆசிரியர்கள் சிறப்பு ஊதியம் பெறக்கூடிய வகையில் மீண்டும் இதை மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் மறு பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இவர்கள் உயர்ந்த விகிதத்தில் ஊதியம் பெற்றுக்கொண்டிருப்பதால், சிறப்பூதியம் கொடுப்பதற்கில்லை..

## *H. K. R. H. College, Uthamapalayam*

* 73 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the teachers of H.K.R.H. College, Uthamapalayam, Madurai district, have not been paid their salary arrears from December 1976 to May 1977;





(*b*) whether it is also a fact that the management of the said college has misappropriated the college funds;

(c) whether the Madurai University Teachers Association has made any appeal to appoint an interim Administrator in the place of the Management Committee; and

(*d*) if so, the action taken thereon?

## எச். கே. ஆர். எச். கல்லூரி, உத்தமபாளையம்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்டம், உத்தமபாளையம், எச். கே. ஆர். எச். கல்லூரியின் ஆசிரியர்களுக்கு 1976 டிசம்பர் முதல் 1977 மே வரையிலான கால அளவிற்குரிய சம்பள நிலுவை கொடுக்கப்பட வில்லை என்பது உண்மையா?

(இ) மேற்சொன்ன கல்லூரியின் நிர்வாகம் கல்லூரி நிதிகளை கையாடல் செய்துள்ளது என்பதும் உண்மையா?

(உ) நிர்வாகக் குழுவுக்குப் பதிலாக தற்காலிகமாக நிர்வாகி ஒருவரை நியமிக்குமாறு மதுரைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கம் முறையீடு ஏதேனும் செய்துள்ளதா?

(எ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) ஆம்.

(எ) இக்கல்லூரியை ''வக்ப் போர்டு'' ஏற்று நடத்தும்படி அரசு உத்தரவிட்டது. கல்லூரிக்கு புதிய நிர்வாகக்குழு ஒன்றை 'வக்ப் போர்டு'' அமைத்து அது கல்லூரியை நடத்தி வருகிறது.

திரு. பி. ஆர். தாமஸ்: இந்தப் புதிய நிர்வாகக் குழுவானது நிர்வாகத்தை ஏற்றுக்கொண்ட பிறகு, கடந்த கால 6 மாத கால ஊதியத்தை ஆசிரியர்களுக்கு வழங்கியிருக்கிறதா? அதற்கு மேலாக அந்த ஆசிரியர்களுக்கு அரசே முழு ஊதியத்தையும் வழங்கும் என்று பொறுப்பேற்றுக்கொண்ட காரணத்தால், அதை அரசே வழங்குவதற்கு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கடந்த கால பாக்கியைத் தர வேண்டியது கடந்த கால நிர்வாகம்தான். அவர்கள் தர வேண்டியதை அரசு சார்பில் தருவதற்கு விதியில் இடம் இல்லை. ஆனால் அந்த பாக்கியை அந்த நிர்வாகத்திடமிருந்து பெற்றுத் தர அரசு எல்லா முயற்சிகளையும் செய்யும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: இந்தக் கல்லூரியை வக்ஃப் போர்டு மேற்கொண்ட பிறகும் பிராதுகள், புகார்கள் வந்து கொண்டிருப்பது மாண்புமிகு கல்வி அமைச்சருக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட புகார்கள் ஏதும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : கல்லூரி நிர்வாகம் கல்லூரியிலுள்ள ஆசிரியர் நல நிதி, ஆசிரியர் ஊதியம் போன்றவற்றிலிருந்து பணத்தைக் கையாடல் செய்வதாகச் சொல்லப்படுகிறது. அப்படிப் பட்ட நிர்வாகிகளைக் கண்டுபிடித்து அவர்களுக்குக் கடுமையான தண்டனையை வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

### *Short Term B.Ed., Training Classes*

74 Q.—Thiru M. SANKARALINGAM, Thiru K. MEENAKSHISUNDARAM and Thiru D. SANTOSHAM: Will the Hon. the Minister for Education be pleased to state with reference to the answer given to Question No. 13 on 31st December 1977 on the floor of the Legislative Council:

(*a*) whether there is any proposal with the Government to resume the Short Term B.Ed., Training Classes;

(*b*) whether any representation has been received by the Government in this regard; and

(*c*) if so, the action taken thereon?

குறுகிய கால பி. எட். பயிற்சி வகுப்புகள்.

திரு. எம். சங்கரலிங்கம், திரு. க. மீனாட்சிசுந்தரம், திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சட்டமன்ற மேலவையில் 31-12-1977 ஆம் நாளன்று வினா எண் 13-க்கு



அளித்த விடையினையொட்டி, கீழ்க்கண்டக் வினாக்களுக்குப்பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) குறுகிய கால பி. எட். (B. Ed.) பயிற்சி வகுப்புகளை மீண்டும் நடத்துவது பற்றி அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) இதுபற்றி அரசுக்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) குறுகிய கால பி. எட். பயிற்சி வகுப்புகளை மீண்டும் நடத்துவது பற்றி செயற் குறிப்பு ஏதும் இல்லை.

(இ) இல்லை.

(உ) வினா 'இ' வில் கண்ட பதிலின் காரணமாக இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : குறுகிய கால பி. எட். பயிற்சி வகுப்புகளை தமிழ் நாட்டிலே எடுத்துவிட்ட காரணத்தால், தமிழ் நாட்டிலுள்ள ஆசிரியர்கள் கருநாடக மாநிலத்திற்குச் சென்று, அந்தப் பயிற்சியைப் பெற வேண்டிய நிலையில் இருப்பதால், பண இழப்பு, நேர இழப்பு இன்னும் இது போன்ற பல இழப்புக்கு ஆளாகின்றார்கள். மீண்டும் குறுகிய கால பி. எட். பயிற்சி வகுப்புகளை திறப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தக் குறுகிய கால பி. எட். பயிற்சி வகுப்புகளை நாம் நிறுத்தி விட்டதற்குக் காரணம் 8 ஆயிரத்திற்கு மேற்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் இன்றைய தினம் வேலையில்லாமல் இருப்பது. அந்த அடிப்படையில்தான் அது எடுக்கப் பட்டிருக்கிறது. மைசூரில் இருக்கிற அந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில்கூட தமிழ்நாடு, கர்நாடகம் ஆகிய தென் மாநிலங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு என்று ஒரு பொதுவான பயிற்சியைத்தான் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. பி. ஆர். தாமஸ்: தமிழ் நாட்டிலே பல்கலைக் கழகங்களில் கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸ் என்று நடத்துவது மாதிரி இந்தப் படிப்பினைப் புகுத்தலாம் அல்லவா? அப்படிப் புகுத்தினால், ஆசிரியப் பெருமக்கள் கற்றுக் கொள்ள வாய்ப்பும் ஏற்படும், செலவும் அதிக மாகாது. இந்த முறையைப் புகுத்தி ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மைசூரிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இருக்கின்ற வாய்ப்பை இவர்கள் பயன் படுத்திக்கொள்ளலாம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: பி. எட். படிப்புக்காக விண்டர் கம் சம்மர் கோர்ஸ் நவம்பர் மாதம் முதல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் துவக்க இருப்பதாகச் சொல்கிறார்கள். அதற்கு அரசின் அனுமதி கேட்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது பற்றிய விவரம் இல்லை. தனியாகக் கேட்கவும்.

*Secondary Grade Teachers and Specialist Teachers*

* 75 Q.—THIRU K. MEENAKSHISUNDARAM, THIRU S. MUTHUSWAMY and THIRU C. R. LAKSHMIKANTHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to regularise the services of Secondary Grade Teachers and Specialist Teachers, appointed on or after 1st April 1970, from the date of their joining duty as had been done in the case of Graduate Teachers, sanction increments and pay the arrears; and

(*b*) if so, when it will be implemented?

இடைநிலை ஆசிரியர்கள், சிறப்பாசிரியர்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம், திரு. செ. முத்துசாமி, திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் 1-4-1970 அன்றும் அதற்குப் பின்பும் பணியில் சேர்ந்த இடைநிலை ஆசிரியர்கள், சிறப்பாசிரியர்கள் ஆகியோருக்கும், பட்டதாரி ஆசிரியர்களுக்கு அளிக்கப் பட்டதைப் போல அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதலே பணி வரன்முறை செய்து, ஊதிய உயர்வு அனுமதித்து நிலுவைத் தொகையை வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது அமுல்படுத்தப்படும்?





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) இப்பொருள் பற்றிய கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: ஒரு பிரிவு ஆசிரியர்களுக்கு அளிக்கப் படுகின்ற சலுகைகள் அதே ஆசிரிய சமுதாயத்திலுள்ள மற்றொரு பிரிவு ஆசிரியர்களுக்கு அளிக்கப்படாத நடைமுறைச் சிக்கல்கள் இன்றைய தினம் இருப்பதால், இனிமேலாவது பிறப்பிக்கப்படும் ஆணைகள் எல்லாம் ஆசிரிய சமுதாயத்திலுள்ள அனைத்துப் பிரிவின ருக்கும் பொருந்துகின்ற வகையில் வெளியிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றி நேற்றே நான் பதில் சொல்லும்போது, இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்ற காரணத்தையும் சொன்னேன். அந்த அடிப்படையில் இதுவும் பரிசீலிக்கப்படும்.

*Part-final withdrawals from Provident Fund Amounts.*

* 76 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether, as per G.O. Ms. No. 1189, Finance (Funds), dated 4th September 1974, teachers are eligible for sanction of Part-final withdrawals from their Provident Fund amounts; and

(*b*) if so, the reasons for not extending this concession to the Local Body employees?

வருங்கால வைப்பு நிதியிலிருந்து பகுதி இறுதிக் கணக்காகத் தொகை வழங்குதல்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நிதித் துறையின் (நிதிகள்) 4-9-1974 ஆம் நாளிட்ட 1189 ஆம் எண் அரசாணையின்படி ஆசிரியர்கள், தங்கள் வருங்கால வைப்பு நிதியிலிருந்து பகுதி இறுதிக் கணக்காகத் தொகை வழங்கப் படுவதற்கு தகுதியுடையவர்களாவார்களா?

(இ) ஆமெனில், இச்சலுகையை உள்ளாட்சி மன்றப் பணி யாளர்களுக்கும் நீட்டிக்காததற்கு காரணம் யாது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) & (இ) ஆம். அரசு அலுவலர்கட்கு மட்டுமே பொருந்துவதாக உள்ள இந்த ஆணையை உள்ளாட்சி அலுவலர்களுக்கும் பொருந்தும் வகையில் 7-3-78ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதன்படி 15 ஆண்டுகள் பணிக்காலம் முடிந்த ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் தங்கள் வைப்புத்தொகை இருப்பிலிருந்து பகுதி இறுதிக் கணக்காக பணத்தை எடுக்க அனுமதிக்கப்படுவர்.

திரு. க. அறிவழகன்: வருங்கால வைப்பு நிதியிலிருந்து கடனாக எத்தனை சதவீதம் அவர்கள் எடுத்துக்கொள்ள முடியும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அதற்கு என்று தனியாக விதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்த விதிகளின்படி அவர்கள் பணம் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: வருங்கால வைப்பு நிதியிலிருந்து பகுதி அல்லது இறுதிக் கணக்காகத் தொகை பெறுவதற்கு என்று சில விதிகள் இருக்கின்றன என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள். திருமணம், வீடு கட்டுதல் அல்லது புதுப்பித்தல் போன்ற காரணங்களைக் காட்டினால் தான் பணம் பெற முடியும் என்று அந்த விதிகளில் கூறப்பட்டிருக்கிறது. இப்படி இந்த விதியில் இருப்பதால், சிலர் பொய்யான காரணங்களைச் சொல்லிக்கூட பணத்தைப் பெற வேண்டிய நிலைகளுக்கு ஆளாகிறார்கள். இவ்வாறு விதிகளிலுள்ள குறைபாடுகளைப் போக்கும் வகையில் ஆசிரியர்கள் உண்மையான காரணத்தைக் காட்டி வைப்பு நிதியிலிருந்து பணத்தைப் பெறலாம் என்ற வகையில் அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: விதிகள் என்பது மிகவும் அவசியம் தேவை. ஆசிரியர்களுடைய பிற்கால நல்வாழ்வுக்கு என்று தான் அந்தத் தொகை பிடிக்கப்படுகிறது. அந்த விதிகளை அவர்கள் பின்பற்ற வேண்டும்.

திரு. க. அறிவழகன்: விதிகள் இருக்கின்றன என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த விதியில் காதணி விழாவுக்குக் கடன் பெற்றுக்கொள்ளலாம் என்று இருக்கிறது. சுயமரியாதை இயக்க காலத்திற்குப் பிறகு, இப்போது அது பழக்கத்தில் அதிகமாக இல்லை. நியாயமான காரணங்கள் எவையெவையோ அவையெல்லாம் அந்த விதிகளில் இடம் பெற்றிருக்க வேண்டும். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் தலை ஆட்டுகிறார்கள் (உறுப்பினர்கள் அனைவரும் சிரிப்பு). இன்னும் காதணி விழாக்களைச் சில பேர் செய்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிறார்கள். பல பேர் செய்யாத



வர்களாக இருக்கிறார்கள் என்பது தான் என் கருத்து. என்ன காரணத்தினால் 30 ஆண்டுகளுக்கு முன்னால் அக்கவுண்ட்ஸ் துறையில் இருந்தவர்கள் நினைத்தார்களோ அப்படி எழுதி வைத்திருக்கிறார்கள். புதிதாக விதி மாற்றியமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: எந்த விழாக்களுக்கு எல்லாம் வைப்பு நிதியிலிருந்து பணம் தேவை என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தால், அவைகளை விதிகளில் சேர்த்துக்கொள்ளலாம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: வைப்பு நிதியிலிருந்து ஆசிரியர்கள் பணம் கேட்டால், "கருத்தடை செய்ய ஆள் கொண்டு வா, அப்படிக் கொண்டு வந்தால்தான் சேங்ஷன் செய்வோம்" என்று சொல்லுகிறார்கள். வருங்கால வைப்பு நிதியிலிருந்து பகுதி அல்லது இறுதிக் கணக்குத் தொகை கேட்டு விண்ணப்பித்தால், இப்படிப் பட்ட வேலைகளை ஆசிரியர்களிடம் சொல்லக் கூடாது என்ற வகையில் அரசு கண்டிப்பாக உத்தரவு பிறப்பிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அதுமாதிரி எங்காவது வற்புறுத்துவதாக புகார் வந்தால், நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: அந்தந்தப் பள்ளிக் கூடங்களிலேயே வருங்கால வைப்பு நிதியிலிருந்து கடன் தொகையை ஆசிரியர்கள் பெறத்தக்க வகையில் தலைமையாசிரியர்களுக்கு அதிகாரங்கள் வழங்க மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: ஊராட்சி ஒன்றியங்கள் தான் அதுபற்றிப் பரிசீலிக்க வேண்டும்.

### *Labour Welfare Officers*

*77 Q.—Thiru V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether there is any proposal with the Government to designate all the Labour Welfare Officers working in the factories in Tamil Nadu as Government Officers; and

(b) if so, the number of such officers who will be designated under this scheme?

## தொழிலாளர் நல அதிகாரிகள்

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் எல்லா தொழிலாளர் நல அதிகாரிகளையும் (Labour Welfare Officers) அரசு அலுவலர்களாக மாற்ற, அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(இ) ஆம் எனில், இந்தத் திட்டத்தின் அடிப்படையில் எத்தனை பேர் மாற்றப்படுவார்கள்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்-500க்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ள தொழிற்சாலைகளில் அரசு தொழிலாளர் நலத்துறையிலிருந்து தொழிலாளர் நல அதிகாரிகளை முகமையில் எடுத்துக்கொள்வதற்காக, 1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் 49ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவினை திருத்தம் செய்வதற்காக இந்திய அரசின் இசைவை இம் மாநில அரசு கோரியது. இதற்கு இந்திய அரசு இசைவு தர மறுத்து விட்டது.

(இ) சுமார் 200 தொழிலாளர் நல அதிகாரிகள் இத்திட்டத்தின் உள் வந்திருக்கக்கூடும்,

(பிற்பகல் 4—20)

திரு. வே. தங்கப்பாண்டியன்: இந்த நல்ல திட்டத்தை மத்திய அரசு தற்போது மறுத்துவிட்டாலும் கூட, இதனை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்தி, 500-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றும் தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர் நல அதிகாரிகள் அனைவரையும் அரசு அலுவலர்களாக மாற்றும் திட்டத்தை நடைமுறைப்படுத்த இந்த அரசு முன்வருமா என்று அறிய விருபுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தரும் ஆதரவுக்கு மெத்த நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய அரசுடன் இது குறித்து நமது மாநில அரசைச் சேர்ந்த தொழிலாளர் நலம் மற்றும் வேலைவாய்ப்புத் துறை செயலாளர் அவர்கள் மறுபடியும் டெல்லி செல்லும்போது நேரடிப் பேச்சுவார்த்தை நடத்துவார். நானும் இந்தப் பிரச்சினையை அவ்வளவு சுலபமாக விட்டுவிடுவதாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. ஆ. நல்லசிவம்: அனைத்துத் தொழிலாளர் நலத்துறை அமைச்சர்கள் கூடுகிற கூட்டத்திலோ, மாநாட்டிலோ இந்தப் 'பிரச்சினையை விவாதிப்பதற்கு உரிய வகையில் 'அஜென்டாவில்' ஒரு 'சப்ஜெக்ட்டாக' இதனை வைத்து விவாதிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்திய அரசை வற்புறுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அதற்கு முன்னதாகவே இந்த அரசின் சார்பில் மத்திய அரசிடம் இதனுடைய நிலைமைகளை எடுத்துச் சொல்லி அதற்குரிய அனுமதியைப் பெறுவதாக இந்த அரசு இருக்கிறது. அதற்குப் பின்னாலும் இது தேவையானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஆலோசனைப்படி நடக்கலாம்.

திரு. க. அறிவழகன்: தொழிலாளர் நல அதிகாரிகள் என்பவர்கள் தொழில் நிறுவனங்களிலேயே பணியாற்றுகிற காரணத்தால், தொழிலாளர்களுடைய முழு நலத்தைக் கவனிக்க முடியாமல் இருக்கிறது. அது மட்டுல்லாமல், அரசுத் தொழிலாளர் நல அதிகாரிகள்கூட பல்வேறு வகையான முதலாளிகளினுடைய 'பிரஷருக்கும்', அவர்களுடைய தொல்லைகளுக்கும் ஆட்படுகிற காரணத்தால் தொழிலாளர்களுடைய நலத்தை முழுவதுமாக கவனிக்க முடியாது இருக்கிறார்கள், ஆகவே இன்றையதினம் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர் நல அதிகாரிகளை அரசே எடுத்துக்கொள்வதன் மூலமாக, என்னென்ன நன்மைகளை அதிகாரிகளும், தொழிலாளர்களும் பெற முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இன்றையதினம் இருக்கக்கூடிய தொழிலாளர் நல அதிகாரிகள் (Labour Welfare officers) எந்த நிறுவனத்தில் வேலை செய்கிறார்களோ அந்த நிறுவனத்தாலேயே அந்தப் பணியில் நியமிக்கப்பட்டு, அவர்களிடம் ஊதியம் பெற்று வருகிறார்கள். அவர்களை வேலையை விட்டு நீக்கினால், லேபர் கமிஷனர் அவர்களுக்கு அப்பீல் செய்யலாம் என்று அவர்களுக்காக இயற்றப்பட்ட Tamil N du Factories' Welfare Officers, Rules' 1953 என்ற விதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிலாளர் நல அதிகாரிகள் இந்த நிறுவனத்தின் முதலாளிகளிடம் ஊதியம் பெறுவதால், தொழிலாளர்களுடைய 'வெல்பேர்' வேலையைச் செய்யாமல் முதலாளிகளுக்குச் சாதகமான காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று தொழிலாளர்களுக்காக பன்னெடுங்காலமாகப் பாடுபட்டு வரும் தொழிற்சங்கத் தலைவர்கள் முறையீடு செய்துகொண்டு, இந்த அரசும் அது நியாயம் என்று ஏற்றுக்கொண்டதால், அந்தச் சட்டத்தைத் திருத்தி அமைக்க மத்திய அரசைக் கோரியது.

அரசினுடைய அலுவலளர்கள் 'on deputation' என்ற அடிப்படையில் முகமையில் அனுப்பப்பட்டு தொழிற்சாலைகளில் பணியாற்றுவார்களானால், தொழிலாளர்களுடைய நலன்களுக்காகப் பாடுபடுவார்கள். அங்கே உள்ள தொழில் அதிபர்களுக்குப் பயன்பட வேண்டிய தேவையில்லை, பாரபட்சம் இல்லாமல் அவர்கள் பணியாற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*Arignar Anna Government Hospital of Indian Medicine, Madras*

* 78 *Q*.—THIRU K. MEENAKSHISUNDARAM (on behalf of Thiru S. Muthuswamy): Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that there is no special ward in Arignar Anna Government Hospital of Indian Medicine, Madras; and

(*b*) if so, whether there is any proposal to open such a ward?

அறிஞர் அண்ணா இந்திய முறை அரசு மருத்துவமனை, சென்னை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் (திரு. செ. முத்துசாமி சார்பில்) மாண்புமிகு நலவாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, அறிஞர் அண்ணா இந்திய முறை அரசு மருத்துவமனையில் தனி வார்டு ஏதுமில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அத்தகைய தனி வார்டு ஒன்றைத் திறக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்: (அ) ஆம்.

(இ) தனிப் பகுதி திறப்பது சம்பந்தமான கருத்து 1978-83 ஆண்டுகளுக்கான திட்டங்களுள் சேர்ப்பது பற்றி பரிசீலிக்கப் படுகிறது.

திரு. க. அறிவழகன்: சென்னையில் உள்ள அறிஞர் அண்ணா இந்திய முறை அரசு மருத்துவமனையில் தனி வார்டு துவக்கப் படவேண்டும் என்பது கேள்வியாகும். அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது. அதுபற்றிய செயற்குறிப்புகள் இருக்கின்றன என்றார்கள். எத்தனை படுக்கைகள் அமைக்கப்படும் என்றும், அது எவ்வளவு விரைவாக பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பெருமை தரத்தக்க வகையில் திறக்கப்பட இருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்:— இரண்டு படுக்கைகள் கொண்ட ஏ-பிரிவு, 2 படுக்கைகள் கொண்ட பி-பிரிவு, 16 படுக்கைகள் கொண்ட சி-பிரிவு, 5 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவு முதலியவை திறப்பதுபற்றி ஆய்வு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

திரு. க. மீனாட்சிசுந்தரம்: சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலவச மருத்துவச் சலுகை இருப்பதாக நான் அறிகிறேன். தற்போதைய வினாவிற்கு இப்போது நான் கேட்கவிருக்கும் வினா தொடர்புடையது அல்ல என்றாலும், மாண்புமிகு மக்கள் நலத் துறை அமைச்சர் அவர்கள்தான் இதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்பதால், தயவு செய்து இதற்கு விடையளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னைப் போன்று ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறவர்களின் ஆசிரியக் குடும்பங்களுக்கெல்லாம் இலவச மருத்துவச் சலுகைகள் உண்டு. ஆனால் நான் சட்டமன்ற மேலவை உறுப்பினராக ஆகிவிட்டதையடுத்து எனக்கு மட்டும்தான் அந்தச் சலுகை உண்டு என்றும் எனது குடும்பத்தினருக்கு அந்தச் சலுகை இல்லை என்றும் சொல்லப்படுகிறது. எனவே உறுப்பினர்களின் குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவச் சலுகை அளிக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்: இதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

---

*Examination held in Tirunelveli Medical College.*

* 79 *Q*.—THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU M. Sankaralingam): Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that 71 Medical College students were affected due to the wrong distribution of question papers in the examination held at Tirunelveli Medical College during April, 1978; and

(*b*) if so, the alternative arrangements made to rectify the same?

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் நடந்த தேர்வு.

திரு. வே. தங்கப்பாண்டியன்: (திரு எம். சங்கரலிங்கம் சார்பில்) மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் நடந்த தேர்வில் வினாத்தாள்களை

மாற்றிக் கொடுத்ததால் 71 மருத்துவக் கல்லூரி மாணவர்கள் பாதிக்கப்பட்டனர் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கு என்ன மாற்று ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்: (அ) மாணவர்கள் யாரும் பாதிக்கப்படவில்லை.

(இ) ஏப்ரல் 24-ம் தேதி நடக்கவிருந்த தேர்வை நடத்தாமல் ஒத்திவைத்து, அந்த ஆண்டு ஆங்கிலப் பாடத்தில் வினாக்கள் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்று 28-4-78-அன்று தேர்வு நடத்தி வைக்கப் பெற்றுள்ளது.

## *Export of Handloom Cloth.*

* 80 Q.—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Handlooms be pleased to state—

(*a*) whether the Government have any proposal to establish an Agency which would help the export of handloom cloth; and

(*b*) if so, when this will be established?

## கைத்தறித் துணி ஏற்றுமதி.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கைத்தறித் துணி ஏற்றுமதிக்கு உதவுகின்ற அமைப்பு ஒன்றினை நிறுவும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போழுது நிறுவப்படும்?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்: (அ) வினாவில் குறிப்பிட்டுள்ள அமைப்பு நிறுவும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. க. இராமமூர்த்தி: கைத்தறித் துணி ஏற்றுமதியைப் பொறுத்தவரையில், பெருமளவுக்குத் தமிழகம்தான் முன்னணியில் நிற்கிறது. என்றாலும்கூட இந்த ஏற்றுமதி குறித்த முழு அதிகாரம், முழுப் பயன் ஆகியவைகளை மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், அகில இந்திய அடிப்படையில் செல்வாக்கைப் பெற்று, முன்னணியில் அனுபவித்து வருகிறார்கள். அதன் விளைவாக மில்களில் தயாரிக்கப்படும் துணிகள் எல்லாம் கைத்தறித் துணிகள்



என்கிற பெயரால் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதன் காரணமாக தமிழகத்தின் கைத்தறித் தொழில் வெகுவாகப் பாதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 'எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சில்' என்கிற அகில இந்திய அமைப்புகூட சென்னையிலே இயங்கினாலும், அந்த அமைப்பை ஆட்டிப் படைப்பவர்கள் தமிழகத்திலே மிகக் குறைவாக இருக்கிறார்கள் என்ற நிலையில், குஜராத் மற்றும் மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக இருக்கிற காரணத்தால், தமிழகம் பாதிக்கப்படுகிறது. இந்த நிலைமையைப் போக்க தமிழகத்திற்கு என்று தனியாக ஒரு ஏற்றுமதி கவுன்சில் அமைக்க அரசு முன் வருமா என்றும், அப்படிச் செய்வதன் மூலம் கைத்தறித் தொழிலுக்கான பாதுகாப்புத் தருவதை விரைவுபடுத்துமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்: மத்திய கைத்தறிக் கமிஷனரைத் தலைவராகக் கொண்டு இயங்கி வரும் கைத்தறி ஏற்றுமதி அபிவிருத்திக் குழு, கைத்தறித் துணி ஏற்றுமதிக்குப் பெருமளவு உதவி வருகிறது. இந்நிறுவனத்தின் குழுவில் கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் உறுப்பினராக உள்ளார். இக்குழு கைத்தறி இலாக்காவினுடன் ஒருங்கிணைந்து இயங்கி வருகிறது. ஆகவே மாநில அளவில் கைத்தறி ஏற்றுமதிக்கு உதவ ஒரு அமைப்பு தனியாக நிறுவ வேண்டிய அவசியம் தற்போது இல்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனையும் பரிசீலிக்கப்படும்.

திரு. க. இராமமூர்த்தி: அமைச்சர் அவர்கள் என்னுடைய யோசனையைப் பரிசீலிப்பதாகச் சொன்னதற்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஹாண்ட்லூம் எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சிலின் ஊழியர்களின் தலைவனாக இருந்தவன் என்ற முறையில் எனக்கு நிலைமைகள் நன்றாகத் தெரியும். கைத்தறித் துணி ஏற்றுமதியைப் பொறுத்தவரையில், வடக்கே இருக்கிற வியாபாரிகளும், மில் முதலாளிகளும்தான் அதனுடைய முழுப்பயனை அனுபவிக்கும் வகையில் அமைந்திருக்கிறது. இங்கே இயங்குகிற மற்ற அமைப்புகள் மூலமாகவோ மற்றும் கைத்தறியைக் கூட்டுறவுத் துறையில் தயாரிப்பவர்களோ இதன் பலனைப் பெறவில்லை. கைத்தறியை மொத்த வியாபாரமாகக் கொண்டு தயாரிப்பவர்களும் அதில் ஈடுபட்டுள்ள பெரும் முதலாளிகளும்தான் இதன் பலனை முழுமையாகப் பெறுகிறார்கள். ஏற்றுமதியில் ஈடுபட்டிருக்கிற கூட்டுறவுச் சங்கங்களும் மிகக் குறைவு என்ற நிலையில், இதனுடைய அவசியம் கருதி, மாநில அளவில் ஒரு அமைப்பை ஏற்படுத்துவதன் மூலம் தமிழகத்

தினுடைய கைத்தறித் தொழிலாளர்களுக்கும், கூட்டுறவுத் துறையில் ஈடுபட்டுள்ள கைத்தறித் தொழிலாளர்களுக்கும் உதவியாக இருக்கும் அளவில் அரசு விரைவாக நடவடிக்கை மேற் கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்:</u> மத்திய ஏற்று மதி அபிவிருத்திக் குழுதான் ஏற்றுமதித் துறையில் ஈடுபட்டு இருந்தாலும் கூட, கோ-ஆப்டெக்ஸ் மூலம், ஆஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு கைத்தறித் துணி ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. இதை இன்னும் விரிவுபடுத்தி, கைத் தறியில் உற்பத்தியாகும் துணியை பல்வேறு அயல் நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யும் திட்டம் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

<u>திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:</u> கைத்தறித் தொழில் வளர்ச்சிக்காக மறைந்த மூதறிஞர் ராஜாஜி அவர்கள் குறிப் பிட்டதைப் போல், ஒரு சில குறிப்பிட்ட ரகங்களை கைத்தறித் துறையின் உற்பத்திக்கு என்று ஒதுக்க வேண்டும் என்று மத்திய அரசிடம் தமிழக அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்பு கிறேன்.

<u>மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்:</u> ஏற்கனவே கைத்தறிக்கும், விசைத் தறிக்கும் ஏற்பட்டுள்ள போட்டி மனப் பான்மை காரணமாக, மத்திய அரசு சில ரகங்களைக் கைத்தறித் துறைக்கு ஒதுக்கியிருக்கிறது. அந்த ரகங்கள் விசைத் தறியால் உற்பத்தி செய்யப்படக்கூடாது என்று தடை இருந்தாலும் சில விசைத்தறியாளர்கள் இதை உற்பத்தி செய்து வருவதாக அரசுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. ஆனால் அதைக் கட்டுப் படுத்தும் அதிகாரம் மத்திய அரசிடம் இருக்கிற காரணத்தால், இப்போது கைத்தறிக்கு ஒதுக்கப்பட்டு ஆனால் விசைத்தறியால் தயாரிக்கப்பட்ட ரகங்களை அதிகமாகத் தடுக்க முடியாத நிலையில் இவ்வரசு இருக்கிறது. எனவே இந்த அதிகாரத்தை மாநில அரசுக்கே கொடுக்க வேண்டும் என்று இம் மாநிலக் கைத்தறித் துறை மத்திய அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

(பிற்பகல் 4-30)

<u>திரு. பி. மாணிக்கம்:</u> இந்தியாவிலேயே அதிக கைத்தறி ரகம் உற்பத்தி செய்வது தமிழகம்தான். இந்த முறையிலே நமக்கு வெளிநாட்டு விற்பனைக்கு வாய்ப்புகள் என்ன இருக் கின்றன என்பதைக் கண்டறிய நம் மாநில அரசு ஒரு தூது கோஷ்டியை அனுப்ப முயற்சிக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.





<u>மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்:</u> இந்த முயற்சி யின் அடிப்படையில்தான் ரஷ்யாவில் நடைபெற்ற சிறு தொழில் வர்த்தகக் கண்காட்சியில், கைத்தறி ஒன்று அங்கு அனுப்பப்பட்டு, அந்தத் தறியிலேயே உற்பத்தி செய்யப்பட்ட துணிகளை அங்கேயே கண்காட்சியில் வைத்துக் காட்டப்பட்டது. இது போல பல்வேறு திட்டங்களை இந்த அரசு பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

<u>திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:</u> தற்போது கைத்தறி வளர்ச்சிக்காக நம்முடைய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பாராட்டுகிறேன். தமிழகத்திலே கண்டறியப்பட்ட அம்பர் சர்க்காவின் நூலுக்கும் துணிக்கும் இந்த அரசு எந்த அளவுக்கு ஆதரவு தருகிறது என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்:</u> மூலக் கேள் விக்கும் இந்த துணைக் கேள்விக்கும் சம்பந்தமில்லை என்றாலும், மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் அந்த அம்பர் சர்க்கா நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு, அதில் நூல் உற்பத்தி, துணி உற்பத்தி செய்கின்ற தொழில் நல்ல முறையில் நடந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

<u>திரு. வே. தங்கப்பாண்டியன்:</u> தமிழகத்தினுடைய கைத்தறித் துணிக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வண்ணம், மத்திய அரசு விசைத் தறிக்குச் சலுகைகள் கொடுத்து வளர்த்துக் கொண்டிருப்பது தெரியுமா? அதனால் கைத்தறி வளர்ச்சி பாதிக்கப்படும். அது பற்றி அரசுக்குத் தெரியுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்:</u> தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, அது சரியில்லை என்ற அளவில், மத்திய அரசுக்கு நாம் கடிதம் மூலமாகத் தொடர்பு கொண்டிருக்கிறோம் மேற்கொண்டு விசைத் தறிகள் காரணமாக கைத்தறி பாதிக்கப் படாமலிருக்க இந்த அரசு தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்:</u> ஏற்கெனவே ஒத்தி வைக்கப் பட்ட வினாக்கள் 52, 53 இப்போது எடுத்துக் கொள்ளப்படு கின்றன.

*Bench of High Court of Madras at Madurai*

*52 *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Law be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to set up a Bench of the Madras High Court as a Camp Court in Madurai, in the near future; and

(*b*) if so, the stage at which the matter now stands?

மதுரையில் உயர்நீதிமன்ற நீதிபதிகள் குழு.

திரு. டி. சந்தோஷம்: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) சென்னை, உயர்நீதிமன்ற நீதிபதிகள்குழு ஒன்றை முகாம் நீதிமன்றமாக விரைவில் மதுரையில் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், இப்போது அது எந்த நிலையில் உள்ளது?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: (*a*) and (*b*) There is a proposal for the setting up of a Bench of the High Court of Madras at Madurai. It involves parliamentary legislation. Therefore, the Government of India have been addressed to take action on it. They have requested this Government to obtain and forward the views of the present Chief Justice on the proposal. The views of the present Chief Justice received from the High Court are under consideration of Government for being forwarded to the Government of India.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மதுரையிலே ஹைக்கோர்ட் பெஞ்ச் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஆர்வம் கொண்டிருந்தாலும் கூட, உயர் நீதிமன்ற நீதிபதிகள் அங்கே தொடங்குவதில் தயக்கம் காட்டுவதாகவும், தடைப்படுத்துவதாகவும் பத்திரிகையில் செய்திகள் வந்துள்ளனவே, அவை சரியா? அரசாங்கம் அதை மறு பரிசீலனை செய்யுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: Certainly the Government are not bound by the views of the High Court. This Government are bound to express their independent





views, even opposed to the views of the High Court. Ultimately the Parliamentary Legislation has got to be undertaken by the Union Government for the establishment of the Madurai Bench of the Madras High Court.

THIRU E. S. VENKATESAN: Was the Tamil Nadu Bar Council consulted in this matter and if so, what was the view expressed by the Tamil Nadu Bar Council?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: If the hon. Member is pleased to put a separate question, that question will be answered because there is no material before me to give the answer.

THIRU K. S. ABDUL WAHAB: There was a proposal to start a Branch High Court at Tiruchirappalli. What happened to that?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: I wish every district does not come forward with its parochial or local claims. At this rate, if four or five districts start quarrelling, I think no district may have the prospect of getting it. I expect a certain amount of unanimity at least from the four or five Southern districts on the demand for the establishment of the Madurai Bench of the Madras High Court.

THIRU A. R. DAMODARAN: What is the Constitutional position in regard to the starting of High Court in our State? Does it require the concurrence of the High Court also or does it require only the concurrence of the Tamil Nadu Government and the Central Government?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: I think Article 247 of the Constitution will clinch the issue. May I seek the indulgence of the House because I cannot read it off from my memory? Article 247 reads:

"Power of Parliament to provide for the establishment of certain additional courts: Notwithstanding anything in this Chapter, Parliament may by law provide for the establishment of any additional courts for the better administration of laws made by Parliament or of any existing laws with respect to a matter enumerated in the Union List."

[1978 செப்டம்பர் 12

The establishment of Courts is under List I, the Union List.

THIRU G. VASANTHA PAI: It does not relate to this. It applies where Parliament has its own Courts in different parts of the country, following the Federal Courts of America. It does not mean Courts for the administration of justice inside the State.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: I thought the question related to Madurai Bench.

THIRU G. VASANTHA PAI: Article 247 does not relate to that.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்:</u> அங்கத்தினர் திரு. வசந்த பை அவர்கள் தலைவரைப் பார்த்துப் பேச வேண்டும்.

THIRU A. R. DAMODARAN: I clearly wish to know this. In the establishment of High Courts in States, if the Government's view will ultimately prevail, where was the necessity to call again for an opinion from the Chief Justice of the Madras High Court? If the Constitutional position is such that the Government can recommend ......

(மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் கேள்வி கேட்கும் நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நின்றிருந்தார்கள்)

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்:</u> இரண்டு பேரும் ஏக காலத்தில் அவையில் நின்று கொண்டிருக்கக்கூடாது.

(மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமர்ந்தார்கள்)

THIRU A. R. DAMODARAN: If the Constitutional position is such that the Government's view should prevail in the establishment of a High Court, where was the necessity to obtain again the opinion of the Hon. the Chief Justice in this matter? I am only seeking information about the Constitutional provision.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: The Union Law Minister wanted to have views of the High Court. They wanted to hear that view also. Therefore, they have consulted the Chief Justice. The Chief Justice has expressed his views and forwarded them to the Government of Tamil Nadu. The



1978 செப்டம்பர் 12]

Government of Tamil Nadu, in their turn, will consider the views, express their views and forward them to the Union Government.

THIRU A. R. DAMODARAN: What is the view of the Government of Tamil Nadu in this regard?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: We have time and again expressed categorically support to the idea of establishment of the Madurai Bench of the Madras High Court.

<u>திரு. க. இராமமூர்த்தி:</u> மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கின்றபோது அரசு மதுரையிலே உயர் நீதிமன்றத்தினுடைய பிரிவை அமைப்பதற்கு எவ்வளவு ஆர்வமாக இருக்கிறது என்று தெளிவுபடுத்தினார்கள். ஆனால் கேள்வியில் முகாம் நீதிமன்றம் அமைப்பது பற்றியும், அது சில நாட்களுக்கு இயங்குவது பற்றியும்தான் கேட்டிருக்கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் நிரந்தரமான உயர் நீதிமன்றத்தினுடைய பெஞ்ச் ஒன்று அங்கே அமைப்பதுபற்றி பதில் கூறுகிறார்கள் என்று கருதுகிறேன். அந்த உணர்வு வரவேற்கக்கூடியது. அது வரவேற்கின்ற பதில் என்றாலும்கூட, மதுரை நீதிமன்றத்திலே இப்போது வழக்கறிஞர்களுக்குப் போதுமான சேம்பர்கள் இல்லை, மேலும் உயர் நீதிமன்றத்தினுடைய பிரிவு அங்கே வந்தால், மேலும் சேம்பர்கள் போதுமான அளவுக்கு இருக்காது என்பதற்காக நிறைவேற்ற முடியவில்லை என்றும், அதற்காக நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா என்று கேட்கப்பட்டது. அப்போது அமைச்சர் அவர்கள் அதை இப்போது செய்வதற்குத் தயாராக இல்லை என்றார்கள். அந்தக் கருத்தை மாற்றிக்கொண்டு நிச்சயமாக அந்த நீதிமன்றம் அமைய இருக்கிறது என்ற அளவில் அரசு பிரச்சினையை அணுகி, வழக்கறிஞர்களுக்கு சேம்பர்கள் அதிகமாக அமைக்க நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: I am afraid this long, long question does not arise from the main question.

(பிற்பகல் 4—40).

<u>திரு. பி. ஆர். தாமஸ்:</u> உயர் நீதிமன்றத்தினுடைய கிளையை மதுரையில் ஆரம்பிப்பதற்கு மத்திய அரசினுடைய அனுமதி தேவை என்று தெரிய வருகிறது. ஆனால் உயர் நீதிமன்றக் குழு (கேம்ப்) அமைக்க மத்திய அரசின் அனுமதி தேவையா? சமீபத்திலே மதுரை சட்டக் கல்லூரி மாணவர்களும்

வழக்குரைஞர்களும் அங்கு ஒரு போராட்டம் நடத்தியதாகத் தெரிகிறது. இதையெல்லாம் மத்திய அரசிடம் எடுத்துக் கூறி, விரைவிலே உயர்நீதிமன்றக் கிளையை ஆரம்பிக்க அரசு முன்வருமா

THE HON. THIRU. K. NARAYANASWAMY MUDALIYAR : I do not think there is a concept of a Camp Court so far obtaining in India. So far as my knowledge goes, there has been the Ranchi Bench of the Patna High Court, the Nagpur Bench of the Bombay High Court and Lucknow Bench of the Allahabad High Court, but not Camp Courts so far as High Courts are concerned.

திரு. க. அறிவழகன்: மதுரையிலே உயர் நீதிமன்றத்தினுடைய நீதிபதிகள் அமைந்திருக்கிற சிறு அமைப்பை உருவாக்குவதற்கு பாராளுமன்றத்தின் அனுமதி வேண்டும்; நம்முடைய நீதி மன்றத்தினுடைய உயர் நீதிபதியின் அபிப்பிராயம் வேண்டும்; நம்முடைய மாநில அரசு முடிவெடுக்க வேண்டும்; நம்முடைய அரசியல் சட்டத்தின் நுணுக்கம் தெரிய வேண்டுமென்று குறிப்பிடப்படுவதால் எவ்வளவு நாட்களில், எவ்வளவு மாதங்களில் இந்த உயர் நீதிமன்றம் அமைக்கப்படும்.

திரு. க. இராமமூர்த்தி ; எவ்வளவு வருஷங்களில் என்று கேளுங்கள்.

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் இந்தக் கேள்வியில் அதிகமான பிரச்சினைகளைச் சேர்த்திருக்கிறார். அதனால் எவ்வளவு வருடங்களில் என்று கேட்கிறார். எவ்வளவு நாட்கள் அல்லது எவ்வளவு மாதங்களில் மதுரையில் நீதிமன்றம் அமைக்கப் படுமென்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR : I am not an astrologer.

Thiru K. ARIVAZHAGAN : Sir, fortunately he is Minister for Law.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR : I repeat that prophesy is not my domain of life and, therefore, I can not know by what time they are going to undertaking the necessary legislation.

திரு. க. இராமமூர்த்தி : மிகப் பெரிய பிரச்சினை, மதுரையிலே நீதி மன்றத்தினுடைய பிரிவு அமைப்பதிலே அமைச்சரவைக்கும், குறிப்பாக சம்பந்தப்பட்ட அமைச்சரவர்களுக்கும் உறுதியான நம்பிக்கையும், ஆர்வமும் இருக்க வேண்டும். பதிலைப் பார்க்கும் போது, அமைச்சரவர்களுக்கு ஆர்வமும், நம்பிக்கையும் அதிகப்படி





யாக இருப்பதாகத் தெரியவில்லையே. எனவே தலைவரவர்கள். அந்த ஆர்வத்தை உருவாக்க முன்வருவார்களா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR : I refuse the allegation with all the force at my command or it is totall baseless. I may now reveal that I was the draftsman of the resolution for the establishment of the Madurai Bench of the Madras High Court so far as the AIADMK is concerned. I drafted the resolution at the Party level and that translated into Tamil at the highest level by the Leader of the Assembly and by the Chief Minister. Although I am not having masters of Tamil, all the three of us put our heads together and it has been passed by the AIADMK General Council unanimously.

## *Judicial Services.*

*53 Q.—THIRU E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Law be pleased to state with reference to the answer given to Legislative Council Starred Question No. 195 on the floor of the Legislative Council on 28th March 1978—

(*a*) whether the orders issued in G.O. Ms. No. 202, Home, dated 31st January 1976, upgrading the posts of all Judicial Second Class Magistrates as Judicial First Class Magistrates and directing that the upgraded posts be integrated with the cadre of District Munsifs, have since been implemented ; and

(b) if not, the action taken for early implementation of the orders ?

## நீதித்துறைப் பணிகள்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள், சட்டமன்ற மேலவையில் 28-3-1978 அன்று சட்டமன்ற மேலவை உடுக்குறியிட்ட வினா எண் 195-க்கு அளிக்கப்பட்ட விடையினையொட்டி, கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நீதித் துறை இரண்டாவது வகுப்பு மாஜிஸ்டிரேட்டு பதவிகள் அனைத்தையும் நீதித் துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு பதவிகளாக தரம் உயர்த்தி, அவ்வாறு தரம் உயர்த்திய பதவிகளை மாவட்ட முனிசிப் பதவித் தரத்துடன் ஒருங்கிணைக்குமாறு கட்டளையிட்டு உள்துறையின் 31-1-1976ஆம் நாளிட்ட 202ஆம் எண் அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் செயல் படுத்தப்பட்டுள்ளனவா?

[1978 செப்டம்பர் 12

(இ) இல்லையெனில், அந்த ஆணைகளை விரைவில் செயல்படுத்துவதற்கு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR : (*a*) No.

(*b*) Draft amendments to the Tamil Nadu State Judicial Service Rules have been received from the High Court, for approval. They are under the consideration of the Government.

திரு. க. அறிவழகன் : நீதித் துறையில் இரண்டாவது வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் சில இடங்களில் இருக்கிறார்கள். சில இடங்களில் சிவில் வழக்குகளும், கிரிமினல் வழக்குகளும் இருக்கின்றன. ஆனால் இவர்கள் சிவில் வழக்குகளை மாத்திரம் எடுத்துக் கொள்ளும் நிலையும், கிரிமினல் வழக்குகளை எடுத்துக்கொள்ள முடியாத நிலையும் இருக்கிறது. அதனால் பொது மக்கள் கிரிமினல் வழக்குகள் காரணமாக திருப்பத்தூரிலிருந்து வேலூருக்கும், பல்வேறு ஊர்களிலிருந்து வேறு ஊர்களுக்கும் செல்லும் நிலையில் இருக்கிறார்கள். எனவே எல்லா மாஜிஸ்டிரேட்டுகளும் சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகளை விசாரிப்பதற்கான யோசனை அரசிடம் இருக்கிறதா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: No such matter is under the consideration of the Government.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

(1) பெரியார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை ஒட்டி அரசு விடுமுறை குறித்து.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவரவர்களே, நம்முடைய அரசாங்கம் பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாட இருக்கிற சூழ்நிலையில் சென்னை மாவட்டத்திற்கும், கோவை மாவட்டத்திற்கும் 18ஆம் தேதி அரசு விடுமுறை என்று அறிவித்திருக்கிறது. பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்கள் தமிழ்நாடு முழுவதற்கும் சொந்தக்காரர்.



1978 செப்டம்பர் 12] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

எனவே இந்த இரண்டு மாவட்டங்களுக்கு மட்டும் விடுமுறை என்று விடுவதைவிட, மாநில அளவிலே விடுமுறை விட அரசு முடிவெடுத்து, அந்த அறிவிப்பை வெளியிடுமா?

*மாண்புமிகு திரு. க. இராசா முகமது : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களுடைய நூற்றாண்டு விழா ஆரம்ப நிகழ்ச்சியையொட்டி தமிழக அரசு கோவை மாவட்டத்திற்கும், சென்னைக்கும் விடுமுறை விட்டிருக்கிறது. அதுபோலத் தமிழகம் பூராவும் விடுமுறை விடவேண்டுமென்று கேட்கிறார்கள். அதற்கு அவர் தந்த காரணம், பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்கள் தமிழகம் முழுவதற்கும் சொந்தமானவர் என்பதுதான். பகுத்தறிவு உலகத்தைப் பொறுத்தவரையில், தந்தை பெரியார் அவர்கள் உலகம் முழுவதற்கும் சொந்தமானவர்; இந்தியா முழுவதற்கும் சொந்தமானவர். அவருடைய நூற்றாண்டு விழா ஆரம்பத்தையொட்டி அவர் பிறந்த இடத்திலும், அவர் இருந்து அரசியல் செய்த இடத்திலும் விடுமுறை விடப்பட்டிருக்கிறது. இந்த நூற்றாண்டு விழா அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதம் முடிவடையும் போது, தமிழகம் முழுவதற்கும் விடுமுறை விட வேண்டுமென்று அரசு எண்ணுகிறது.

(2) இராமநாதபுரம் மாவட்டத்தில் பஸ்கள் ஓடாதது குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் குறித்து.

திரு. வே. தங்கப்பாண்டியன்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இப்படி பிரச்சினைகளைக் கிளப்புவதற்கு முன் தலைவரைக் கலந்து கொள்ள வேண்டும். உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் முதலிலே என்னிடம் அனுமதி வாங்கிக்கொண்டார்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, அந்தப் பிரச்சினையில்லை. பேரவையில் கவர்னர் உரை மீதான விவாதம் முடிந்து, ஒத்தி வைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்கிறார்கள். நான் கொடுத்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை 42-வது விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானமாக மாற்றி அமைக்கலாமென்று சொன்னார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் 15 நாட்களாக பஸ்கள் ஓடவில்லை. தாங்கள் கூட எட்டையாபுரத்திற்கு

காரியாப்பட்டி மூலமாகப் போயிருக்க முடியாது. ஒத்தி வைப்புத் தீர்மானமாகவும் எடுத்துக்கொள்ளவில்லை. அதைக் கவன ஈர்ப்புத் தீர்மானமாகவும் மாற்றவில்லை. அரசிடமிருந்து பதில் கிடைத்தால நல்லது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதைப் பார்த்து ஆவன செய்கிறேன்.

## 3. உரிமைப் பிரச்சினை.

### உறுப்பினர் திரு. கே. எஸ். அப்துல் வகாப் தனக்கு ரிட் மனுவில் உயர்நீதி மன்றத்திடமிருந்து முன்னறிவிப்பு வரவில்லை என்று சொன்ன கூற்று குறித்து.

* THIRU G. VASANTHA PAI : Sir, I beg to move this privilege motion against Thiru K. S. Abdul Wahab. On 9th September 1978, Thiru Abdul Wahab moved a Privilege Motion against me together with a brief statement of facts relied on by him. This motion, which was seen by me only yesterday in the House was not given to me even when I was called upon to speak but was only read out by Thiru Wahab. This motion accuses me of having given publicity in the press and also accuses me of having used words which I have not used in the affidavit in Court. It also states that Thiru Wahab has not stated in his speech that there should be separation if demands are not conceded. I state his speech throughout was for justifying separation if autonomy was not conceded and even rebellion, contrary to the resolution brought in by the then Chief Minister. Though I brought it to the notice of Thiru Wahab and to the House that Thiru Wahab was a party in the High Court proceedings W.P. 1574 of 1978 wherein my affidavit was filed and if there was any wrong statement in the affidavit, he could have objected to the same and not having done so in the High Court is now coming to this House to correct his omissions.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உரிமைப் பிரச்சினையைச் சொல்லுங்கள். சம்பிரதாயமாக அதைப்படிக்காதீர்கள். உரிமைப் பிரச்சினையை மாத்திரம் சொல்லுங்கள் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

[பிற்பகல் 4-50]

THIRU G. VASANTHA PAI : Thiru Wahab said something else. When I said that he was a party to the High Court proceedings and that he had entered appearance there and he was a party there, Thiru Wahab told this House, "I have not come to the High Court.



Nor has notice been served on me." That statement is incorrect for the simple reason which I am stating now. I am giving the various steps which were taken in the matter.

The Writ Petition 1574 of 1978 was filed on 1st May 1978. It came up for admission that week either on 2nd or 3rd May 1978. The Court ordered notice to the respondents to acquaint itself of the respondents' contentions. Both the respondents took notice from the Court through the Government Pleader, who entered appearance for them and the Government Pleader argued the matter for both of them. The Government Pleader filed appearance in June 1978 for which he had received instructions, prior to 8th May 1978. The Government Pleader filed a common affidavit on 12th June 1978 of 1st respondent on behalf of both the respondents. The Advocate-General appeared for the Government Pleader. The case was argued on 20th, 21st, 23rd, 26th, 27th, 28th and 29th June 1978. The judgment was delivered on 5th July 1978 by the Single Bench. Copy of the judgment was sent to Thiru Abdul Wahib, M.L.A. Hostel, Government Estate, Madras-2 with a Writ of declaration, without payment of a single pie as charges. The copy was received by Thiru Wahab. Thiru Wahab did not appeal but met his counsel on 14th August 1978 one week before the hearing of the Appeal No. 365 of 1978 between 11-30 and 12-15 p.m. in the chambers of the Advocate-General. In the circumstances, his statement in the House that the High Court did not send him notice after the Government Pleader had received notice on his behalf and entered appearance for him and Advocate-General had argued on his behalf also is incorrect and is a deliberately false statement made to mislead this House, to make it believe that he had no opportunity to contradict my statements in Court which he has incorrectly represented in his privilege motion. He has committed a grave breach of privilege and I request that I may be permitted to raise a motion of privilege against him. I have also enclosed with my notice a certified true copy of the memorandum of appearance filed by the Government Pleader on his behalf.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திரு. அப்துல் வகாப் என்ன சொல்கிறார்?

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நண்பர், மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறார்கள். அவர்கள் வழக்கறிஞர். வழக்கறிஞர்

களுக்குப் பழக்கமான பாணியிலே அவர்கள் பேசுவதை நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். முன்பே அவர்கள் உண்மைக்குப் புறம்பாக தப்பாக திரித்துக் கருத்து வெளியிட்டதற்காக நான் ஒரு உரிமைப் பிரச்சினையை இந்த சபையிலே கிளப்பியிருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதனால்தான் இதுவும் வந்தது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : அதற்குரிய முடிவைத் தாங்கள் சொல்லவிருக்கிறீர்கள். இந்த நிலையிலே, இன்றைக்கு அவர் மறுபடியும் ஒரு குழப்பம் ஏற்படுத்தக் கூடிய கருத்தை, உண்மைக்குப் புறம்பான கருத்தைச் சொல்கிறார். அவருக்குத் தமிழ் தெரியாது. அவருக்கு சரியாகத் தமிழ் பேசத் தெரியாது. அவரால் தமிழைப் புரிந்து கொள்ளவும் முடியாது என்பதை என்றால் புரிந்து கொள்ள முடிகிறது. இங்கே பெரும்பாலோர் தமிழில்தான் பேசுகிறார்கள். மற்றவர்கள் சொல்லுவதைத் தவறாகப் புரிந்துகொண்டு, அவர் ஒன்றைச் சொல்லிவிட்டு எல்லோரையும் குழப்பத்தில் ஆழ்த்துகிறார் என்பதை அவருடைய பேச்சிலிருந்து தெரிந்து கொண்டேன். நான் பேசியபோது, தெளிவாகச் சொன்னேன். ''ஹைகோர்ட்டுக்கு நான் வரவில்லை'' என்று சொன்ன போது, கேஸ் ஆரம்பித்த சமயம் எனக்கு நோட்டீஸ் நேரடியாக வரவில்லை' என்று நான்கு நாட்களுக்கு முன்பே தெளிவாகச் சொன்னேன். இன்றைக்கும் அதையேதான் திட்டவட்டமாக தெளிவாகச் சொல்லுகிறேன். அந்த நோட்டீஸ் எனக்கு நேரடியாக வரவில்லை. எனக்கு நேராக வந்தது என்னவென்றால், கேஸ் முடிந்த பிறகு ஜட்ஜ்மெண்ட் காப்பிதான். மாண்புமிகு உறுப்பினர், எம். எல். ஏ. ஹாஸ்டலுக்கு வந்தது என்று சொன்னார். அதுவும் தப்பு. என்னுடைய வீட்டுக்கு வந்தது. வந்தது ரிஜிஸ்ட்டர்ட் காப்பியாகையால், அதை கையெழுத்துப் போட்டு வாங்கினேன். அது ஜட்ஜ்மெண்ட் காப்பி. இதுதான் உண்மை. அதற்குள்ளாக ''நோட்டீஸ் வரவில்லை'' என்று நான் சொன்னது தப்பு என்று அவர் சொல்லுகிறார். அதற்காக அவர் மீது இன்னொரு உரிமைப் பிரச்சினையைக் கொடுக்கக் கூடிய நிலை கூட இருக்கிறது. நான் கேட்கிறேன், முதலிலே எனக்கு நேராக நோட்டீஸ் அனுப்பப்பட்டிருந்தால், அதற்கான அக்னாலட்ஜ்மெண்டை' அவரால் காட்ட முடியுமா?

THIRU G. VASANTHA PAI : Sir, I want to say that the Government Pleader, on his behalf has received the notice and he has entered appearance for him and Advocate-General argued the case for both the Respondents. This is the certified copy of the memorandum of appearance, a true copy of which I have produced before you ; and this he cannot deny.



மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவர் கொடுத்திருக்கிறார். பார்த்துக் கொள்ளுகிறேன். ஏற்கனவே நான் தீர்ப்பை ஒத்தி வைத்திருக்கிற பிரச்சினையோடு சேர்ந்ததுதான் அது. அடுத்து அறிவிப்பு...,

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : நான்கு நாட்களுக்கு முன் சொன்னேன், ''நோட்டீஸ் நேரடியாக வரவில்லை'' என்று. அதைப் பற்றி ஒன்றும் சொல்லக் காணோம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அது சம்பந்தமான தஸ்தாவேஜிகளைக் கொடுத்திருக்கிறார். ஏற்கெனவே ஒத்தி வைத்திருக்கிற தீர்ப்போடு சேர்ந்து தான். இந்தக் கூட்டத் தொடர் முடிவதற்குள் தீர்ப்பைச் சொல்லிவிடுகிறேன்.

Thiru G. Vasantha Pai : I want to mention that Thiru Wahab has quoted from the affidavit which I have filed in Court wrong statements. I want to read the portions relevant to the matter from my affidavit, only the relevant portions of the affidavit which I have filed in Court, since he has made a wrong quotation.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதைப் படிக்கத் தேவையில்லை. அதை எனக்கு அனுப்பினால் போதும்.

## 4. அறிவிப்பு.

### பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றிருக்கிறேன் :—

(1) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, வேளாண்மை விளைபொருள் விற்பனை (திருத்தம், தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1978).

(2) 1978ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1978).

(3) 1978ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1978).

## 5. மேலவை விதி 82-ன் கீழ் விவர அறிக்கை.

## கல்லூரி ஆசிரியர்கள் கோரிக்கைகள் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் விதி 82-ன் கீழ், கல்லூரி ஆசிரியர்கள் குறித்து ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கல்லூரி ஆசிரியர்கள் கூட்டு நடவடிக்கைக் குழுவின் பிரதிநிதிகள் மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களைச் சந்தித்து செப்டம்பர் 9, 10 தேதிகளில் கோரிக்கைப் பட்டியலை அளித்தனர். எல்லா கோரிக்கைகள் குறித்தும் விரிவான பேச்சு வார்த்தைகள் நடந்து இறுதியாக கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

### 1. வேலைப்பாதுகாப்பு.

(அ) 1979-80 ஆம் ஆண்டு முதல் கல்லூரிகளில் புகுமுக வகுப்பு நீக்கப்படுவதன் காரணமாக அரசு கல்லூரிகளில் பணியாற்றிவரும் நிலையான ஆசிரியர்கள் (ரெகுலர் டீச்சர்ஸ்) பணி நீக்கம் செய்யப்படமாட்டார்கள் என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஆ) குறைந்த அளவு மாணவர் எண்ணிக்கை இல்லாத காரணத்துக்காக தனியார் கல்லூரிகளில் ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்படுவதைத் தவிர்க்க, எந்த ஒரு பாடத்துறையிலும் மானியம் பெறும் தகுதி கிடைக்க குறைந்தது இருபது மாணவர்களேனும் இருக்க வேண்டுமெனும் விதி தளர்த்தப்படும் என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(இ) அரசு ஆணை நிலை எண் 871-தேதி 12-5-1978-ன் படி ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இருந்த போதிலும், 31-3-1977-ல் பணியிலிருந்த ஆசிரியர்கள், பல தனியார் கல்லூரி நிர்வாகத்தினர்களால் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று முறையிடப்பட்டது.

மேற் கூறியவாறு வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை மீண்டும் பணியில் அமர்த்துமாறு கோரி அரசு உத்தரவிட, அங்ஙனம் பணி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் பற்றிய விவரங்களைத் தருமாறு கூட்டு நடவடிக்கைக் குழு கேட்டுக் கொள்ளப்பட்டது.

31-3-1977-க்குப் பின், நிரந்தரமான பதவியிடங்களில் நியமனம் செய்யப்பட்டு பின் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை மீண்டும் பணியில் அமர்த்துவது குறித்தும் அரசு கவனிக்கும்.



(ஈ) தனியார் கல்லூரி நிர்வாகத்தினர் ஆசிரியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் விதி முறைகளைத் தொகுக்க, தமிழ்நாடு தனியார் கல்லூரி ஒழுங்காற்றுச் சட்டத்தைத் திருத்த ஆலோசனைகள் தருவதற்கு நியமிக்கப்பட்டுள்ள குழு பரிந்துரைகள் செய்யலாம்.

### 2. விதி 10(ஏ) (1) படி நியமனம் பெற்ற அரசு கல்லூரி ஆசிரியர்கள்.

தமிழ்நாடு பொதுப் பணிக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களைப் பணியில் அமர்த்தும்போது, விதி 10 (ஏ) (1) கீழ் அரசு கல்லூரிகளில் பணியாற்றி வரும் தற்காலிக ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்படுகின்றனர். விதி 10 (ஏ) (1) கீழ் பணியாற்றும் ஆசிரியர்களில் சிலர் தமிழ்நாடு பொதுப் பணிக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; சிலர் தேர்ந்தெடுக்கப்படவில்லை. தேர்ந்தெடுக்கப்படாத காரணத்தால் பணி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கும் காலியிடங்கள் ஏற்படும்போது வேலை தரப்படுகிறது.

பணி நீக்கம் செய்யப்பட்டு மீண்டும் பணியில் அமர்த்தப்பட 90 நாட்கள் இடைவெளிக்கு மேல் போகக்கூடாது என்ற விதியினைத் தளர்த்த வேண்டுமென முறையிடப்பட்டது. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையுடன் கலந்து இதனை அரசு பரிவுடன் பரிசீலிக்கும். இதனால், மற்றவர்களைக் காட்டிலும் 10 (ஏ) (1) விதிகளின் கீழ் பணி செய்தவர்கள் நியமனங்களில் முன்னுரிமை பெறுவர்.

10(ஏ) (1) விதிகளின் கீழ் பணியாற்றி வரும் அரசுக் கல்லூரி ஆசிரியர்களிலிருந்து பணி நியமனம் செய்ய, தமிழ்நாடு பொதுப் பணிக்குழு சிறப்பு வேலையமர்த்துந் திட்டம் (ஸ்கீம் ஆப் ஸ்பெசல் ரெக்ரூட்மென்ட்) ஒன்றினை மேற்கொள்வது குறித்து அரசு பரிசீலிக்கும்.

### 3. கல்லூரியில் பணியாற்றும் 'பி' பிரிவு ஆசிரியர்கள் பணியினை முறைப்படுத்தல்.

அரசு 'ஏ' பிரிவு மற்றும் 'பி' பிரிவு ஆசிரியர்களை ஒருங்கிணைப்பது குறித்து விரைவில் முடிவெடுக்க இருக்கிறது. இதனைச் செய்யும்போது கல்லூரிகளில் பணியாற்றும் 'பி' பிரிவு ஆசிரியர்கள் பணி, பள்ளிக் கல்வித் துறையில் 'பி' பிரிவு ஆசிரியர்கள் பணி போன்று முறை செய்யப்பட்டு விடும்.

4. பட்டதாரி பயிற்றுநர் மற்றும் விளக்குநர் பதவி மேல்நிலைப்படுத்தல்.

மாலை நேரக் கல்லூரிகளில் அல்லது அஞ்சல் வழிக் கல்வி முறையில் சேர்ந்து பட்டதாரி பயிற்றுநர் மற்றும் விளக்குநர்கள் தமது தகுதியினை மேம்படுத்திக் கொள்ளலாம். அறிவியல் பாடங்களில் கோடை விடுமுறைக் காலங்களில் செய்முறை வகுப்புகளை நடத்தி பட்டதாரி விளக்குநர்களின் தகுதியினை மேம்படுத்திக் கொள்ள பல்கலைக் கழகங்களோடு கலந்தாலோசித்து வசதிகள் செய்து தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பட்டதாரி பயிற்றுநர், விளக்குநர்கள் பிறிதொரு பாடத்தில் முதுகலைப் பட்டம் பெற்றிருந்தால், அத்தேர்வில் குறைந்தது 'பி' கிரேடு பெருநிலையிலும் அவர்களுககுப் பதவி உயர்வு தருவது குறித்த அவர்களது வேண்டுகோளை அரசு பரிசீலிக்கும்.

பயிற்றுநர், விளக்குநர் (டியூட்டர்ஸ் அண்டு டெமான்ஸ்ட்டிரேட்டர்ஸ்) மேல்நிலைப்படுத்துவதற்கு, அவர்கள் 10 (ஏ) (1) விதியின் கீழ் பணி செய்த காலமும் மற்றும் தனியார் கல்லூரியில் பணி செய்த காலமும் கணக்கில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென கோரப்பட்டது. இக்கோரிக்கை அரசு விதிகளுக்கு முரணாக உள்ளபடியாலும், நிலையான ஆசிரியர்களின் பணி மூப்பு பாதிக்கப்படுமாகையாலும் இதனை ஏற்க இயலாது என்று தெரிவிக்கப்பட்டது.

கல்லூரிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் டி.டி.ஸ்.6303/எஸ்2/78, 13-4-78 தேதியிட்டது 31-3-1977 ஆம் நாள் பணியிலிருந்து அரசு ஆணை எண் 871 (தேதி 12-5-78) படி பணி பாதுகாப்பு பெறும் பட்டதாரி பயிற்றுநர் மற்றும் விளக்குநர்களுக்குப் பொருந்தாது என விளக்கம் தரும் சுற்றறிக்கை அனுப்பப்படும்.

[பிற்பகல் 5-00]

5. நேரடி ஊதியம் வழங்கல்.

தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு ஊதியத்தை நேரடியாக வழங்குவது குறித்து அரசு பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. நேரடி ஊதியம் வழங்கும் திட்டத்தை அமுல்படுத்த, பிராந்திய அலுவலகங்களைத் துவக்க கல்லூரிக் கல்வி இயக்ககம் திட்டங்களைத் தந்துள்ளது. இதன் வழி தனியார் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் நலனைக் கவனித்துப் பாதுகாத்துக் கொள்வதும் இயலும். இது குறித்து விரைவில் அரசு உத்தரவு வெளியாகும்.

6. தனியார் கல்லூரிகளில் பல்கலைக் கழக மானியக் குழு (யூ. ஜி. சி) ஊதியம் வழங்கல்.

தனியார் கல்லூரிகளிலிருந்து பெறப்பட்டுள்ள ஊதிய நிருணயப் பட்டியல்கள் சரிபார்க்கப்பட்டு வருகின்றன. 8000க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் ஊதிய நிருணய விவரங்கள் சரிபார்க்கப்படவேண்டி



யிருக்கிறது. 1973-74 முதல் 1977-78 ஈறாக உள்ள நிதி விவரப் பட்டியல்கள் சரி பார்க்கப்பட வேண்டியுள்ளன. இந்த பணியை மேலும் விரைவுபடுத்தி, 1978 டிசம்பர் இறுதிக்குள் அனைத்து தனியார் கல்லூரி ஆசிரியர்களின் ஊதிய நிருணயத்தை முடித்து விட திட்டமிடப்பட்டுள்ளது,

கல்லூரிக் கல்வித் துறையினைச் சேர்ந்த, மருத்துவக் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் யூ. ஜி. சி. ஊதிய விகிதங்களை அளிக்க அரசு உத்தரவிடும்.

7. உடற்பயிற்சி இயக்குநர் மற்றும் நூலகர்கள்.

மேற்கண்டோரின் ஊதிய விகித மாற்றம் குறித்து, பல்கலைக் கழக மானியக் குழுவினரைக் கலந்தாலோசித்து கவனிக்கப்படும். பல்கலைக் கழக மானியக் குழு விகித மாற்றத்துக்கு ஒப்புதல் தராவிடில் 1-4-1979 முதல் மாநில அரசு தமது நிதியிலிருந்தே இந்த ஊதிய விகித மாற்றத்தைத் தருவது குறித்து ஆலோசிக்கலாம் என முறையிடப்பட்டது. இந்த வேண்டுகோள் கருத்தில் கொள்ளப்பட்டது.

உடற்பயிற்சி இயக்குநர்களும், நூலகர்களும் தமது துறைகளுக்குத் தாமே பொறுப்பாக இருக்க வேண்டும் என்ற முறையீட்டினை அரசு கவனிக்கும்.

8. கல்லூரி ஆசிரியர்களை "பேராசிரியர்கள்" என பதவிப் பெயர் மாற்றம் செய்தல்.

தற்போதுள்ள ஆசிரியர்களுக்கான பதவிப் பெயரை மாற்ற வேண்டியதில்லை என அரசு கருதுகிறது. துறைத் தலைவர்களுக்குச் சிறப்பூதியமாக ரூபாய் 100 வழங்குவது குறித்து அரசு கவனிக்கும்.

9. பன்னிரெண்டாம் வகுப்பினைக் கல்லூரிகளில் வைப்பது,

மேல்நிலை வகுப்புகளைப் பள்ளிகளில் மட்டுமே வைத்திருப்பது என்றும் கல்லூரிகளில் வைத்திருக்கலாகாது என்றும் அரசு உறுதியாக முடிவெடுத்துள்ளது. அந்த முடிவை மாற்றுவதற்கில்லை.

10. குடும்ப நல்லுதவித் திட்டம் (பேமிலி பெனிபிட் ஸ்கீம்).

தனியார் கல்லூரி அலுவலர்களுக்குக் குடும்ப நல்லுதவித் திட்டத்தை அமுல்படுத்துதல் விரைவாக்கப்பட்டு வருகிறது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1978 செப்டம்பர் 14

11. பி. எச். டி. சிறப்பூதியம்.

முன்னரே பி. எச், டி. சிறப்பூதியமாக மாதம் ரூபாய் 100 பெற்று வரும் ஆசிரியர்களுக்குத் தொடர்ந்து இந்த தொகையினை அளிப்பது குறித்து அரசு பரிவுடன் கவனிக்கும்.

12. கல்லூரி முதல்வர்களுக்கு யூ.ஜி.சி. ஊதிய விகிதங்களை மாற்றியமைத்தல்.

இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

13. ஆசிரியர் பணிச்சுமை பல்கலைக் கழகம் நிர்ணயித்தவாறு அமைவது.

கல்லூரிக் கல்வி இயக்ககம், பல்கலைக் கழகங்கள் நிறுவனம் செய்துள்ள பணிச் சுமையினையொட்டியே செயற்பாடு மேற்கொள்ளுகிறது.

14. சங்கச் சார்பாளர்கள் துறைத் தலைவருடன் கால முறைப்படி கலந்துரையாடல்.

அரசு இதனைப் பரிசீலித்து தக்க ஆணைகளைப் பிறப்பிக்கும்.

15. சில தனியார் கல்லூரிகளில் நடப்பு குறித்து விசாரணை செய்ய குழு நியமனம் செய்தல்.

வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை மீண்டும் பணியில் அமர்த்த நடவடிக்கை எடுக்கின்ற நிலையில் இந்த கோரிக்கையின் தேவை எழாது.

16. டிசம்பர் 1977-ல் சிறை சென்ற மதுரை (காமராஜ்) பல்கலைக் கழக ஆசிரியர்களின் கல்லூரிக்குச் செல்ல இயலா காலத்தை ஒழுங்காற்றுவது.

இதைக் கவனித்து விரைவில் உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்.

17. அரசு கல்லூரி ஆசிரியர்கள் சட்ட மேலவைத் தேர்தலுக்கு நிற்க அனுமதி.

அரசு இந்த கோரிக்கையை ஏற்க இயலாது.

18. அரசு கல்லூரி ஆசிரியர் இடமாற்றம்.

இயன்ற வரை அரசு கல்லூரி ஆசிரியர்கள் கோடை விடுமுறையில் மட்டும் இடமாற்றம் செய்யப்படுகின்றனர்.



1978 செப்டம்பர் 12]

19. தனியார் கல்லூரி ஆசிரியர்களின் நிலுவைத் தொகை வழங்கல்.

தணிக்கை முடிவுற்ற பின் நிலுவைத் தொகை உரியவாறு வழங்கப்படும்.

20. சில கல்லூரிகளை அரசு ஏற்று நடத்தல்.

இரு கல்லூரிகளின் மேலாண்மையினர் அரசு ஏற்று நடத்தலை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர். இந்த வேண்டுகோள் கருத்திலிருத்தப்படும்.

21. மேலநீலித நல்லூர் பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர் கல்லூரியிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு.

மேலநீலித நல்லூர், பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர் கல்லூரியிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டு தற்போது வேலையின்றி தவிக்கும் பத்து ஆசிரியர்களின் பரிதாப நிலையினை ஆசிரியர் கூட்டு நடவடிக்கைக் குழு அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தது. மாற்று வேலை தருமாறு கோரி இவர்களில் நால்வர் 9-9-1978 முதல் சென்னையில் கால வரம்பின்றி உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர். 1976ம் ஆண்டு இவர்களில் 6 ஆசிரியர்கள் 10(ஏ)(1) விதியின் கீழ் தற்காலிகமாக அரசு கல்லூரிகளில் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். தமிழ்நாடு பொதுப் பணிக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள் 1978-ல் பணியிலமர்த்தப்பட்டபோது, இந்த அறுவரும் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். இவர்களுடைய பரிதாப நிலையைப் பரிவுடன் கவனிக்குமாறும் கூட்டு நடவடிக்கைக் குழு அரசுக்கு வேண்டுகோள் விடுத்து உள்ளது.

அரசு, இந்த வேண்டுகோளைப் பரிவோடு நோக்கி இந்த ஆசிரியர்களுக்கு அரசு கல்லூரிகளிலோ அல்லது தனியார் கல்லூரிகளிலோ தற்காலிக வேலை தர ஒப்புக் கொண்டுள்ளது. இந்த வேலையிழந்து வாடும் ஆசிரியர்களின் நிலை மிகவும் வருந்தத்தக்கதாயிருப்பதால், இதனை மிக்க மனிதாபிமானத்துடன் அணுகி, தனி பரிவுடன் கவனிக்க அரசு ஒப்பியது.

22. அரசுக் கல்லூரி ஆசிரியர்களை நிலைப்படுத்தல்.

பல்வேறு நலன்களையளிக்க, நிலையான அரசு ஊழியருக்கும், அரசு ஊழியருக்கும் விதிகள் எவ்வித வேறுபாடும் காட்டுவதில்லை. விதிகளின்படி பதவிகளை நிலையாக்க உத்தரவுகள் இடப்பட்டு வருகின்றன.

[1978 செப்டம்பர் 12

**23. கல்லூரி ஆசிரியர்களுக்கு விருதுகள்.**

இந்த வேண்டுகோள் கருத்தில் கொள்ளப்பட்டு தனியாக பரிசீலிக்கப்படும்.

**24. அரசுக் கல்லூரி ஆசிரியர்களை ஆசிரிய மேம்பாட்டுத் திட்டத்துக்குத் தேர்ந்தெடுத்தல்.**

பணி மூப்பின் படியும், பல்வேறு பாடங்கள் கற்பிப்போர் இடம் பெறும் வாய்ப்பு கிடைக்கும் படியும் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்க அனைத்து அரசு கல்லூரிகளையும் ஒருமித்த ஒரு நிறுவனமாகக் கருதி செயல்பட வேண்டியிருக்கிறது.

மேற்கூறிய அரசின் முடிவுகளை முன்னிட்டு கல்லூரி ஆசிரியர்கள் தமது போராட்டத்தைக் கைவிடுவார்களென நம்புகிறேன்.

(திரு. வசந்த பை எழுந்து பேச முயன்றார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அந்தப் பிரச்சினையை நான் பார்த்துக்கொள்கிறேன். அதைப் பற்றிக் கேள்வி ஒன்றும் கேட்கக் கூடாது.

## 6. கவன ஈர்ப்பு.

### (1) பதவி உயர்வு பெற்ற முதனிலைத் தமிழாசிரியர்களுக்கு பதவி உயர்வு பெற்ற தேதியிலிருந்து பணி வரன்முறைப் படுத்தப் படாதது குறித்து.

திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. எம். சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, "இரண்டாம் நிலைத் தமிழாசிரியராக 30 வயதுக்கு முன்னால் நியமிக்கப்பட்டு முதனிலைத் தமிழாசிரியர்களாக பதவி உயர்வு பெற்று, தகுதிகாண் பருவம் முடியப் பெற்றவர்களுக்கு, அவர்கள் எந்தத் தேதியிலிருந்து பதவி உயர்வு பெற்றார்களோ, அந்தத் தேதியிலிருந்து அவர்களது பணிவரன் முறைப்படுத்தப்படாமல் இருப்பதால், மாநில அளவில், குறிப்பாக, திருநெல்வேலி மாவட்டம் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் பணி புரியும் தமிழாசிரியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலை குறித்து" மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு மேலவையின் 42-வது விதியின் கீழ் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே. 1-4-1970-க்குப் பின் 'பி' பிரிவு உயர் நிலைப் பள்ளிகளில் நேரிடையாக இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டனர். பின்னர் இவ்வாசிரியர்கள்



1978 செப்டம்பர் 12] [திரு. செ. அரங்கநாயகம்]

முதனிலைத் தமிழாசிரியர் பணிக்குரிய கல்வித் தகுதிகளைப் பெற்றிருந்தால், முதனிலைத் தமிழாசிரியர் பணிக்கு மாற்றி, பதவி உயர்வு அளிக்கப்பட்டனர். இரண்டாம் நிலை தமிழாசிரியர் பணியிலிருந்து முதனிலைத் தமிழாசிரியர் பணிக்கு மாற்றி, பதவி உயர்வு அளிக்கப்பட்ட முதனிலைத் தமிழாசிரியர்கள், இரண்டாம் நிலை தமிழாசிரியர் பணியில் தகுதிகாண் பருவம் முடிக்கத் தேவையில்லை என்றும், இரண்டாம் நிலை தமிழாசிரியர் பணியிலிருந்து மாற்றி, முதனிலைத் தமிழாசிரியர் பணியில் பதவி உயர்வு அளிக்கப்பட்ட தேதியிலிருந்து (முதனிலைத் தமிழாசிரியர் பணி) வரன் முறை படுத்தலாமென்று அரசு குறிப்பாணை எண் 5471/பி2/76-9 கல்வி நாள் 17-8-76-ல் ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி அவர்களது பணி வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. 1-4-1970-க்கு பின் செய்யப்படும் எல்லா நியமனங்களும், தமிழ்நாடு கல்வி சார்புப் பணி விதிகளின் படிதான் செய்யப்படவேண்டும். அதற்குமாறாக சில முதன்மைக் கல்வி அலுவலர்கள் மாவட்ட கழக விதிகளின்படி எல்லா நியமனங்களையும் செய்து வந்தனர். மாவட்ட கழக விதி முறைப்படி பணியில் சேர்வதற்கு வயது வரம்பு இல்லை. அதன்படி 1-4-1970-க்கு பின்பும் 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில், ஒரு சிலர் 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் இரண்டாம் நிலை தமிழாசிரியர் பணியில் நியமனம்செய்யப்பட்டனர். எனவே 1-4-1970க்குப் பிறகு மாவட்ட கழக விதிகளின்படி நியமனம் செய்யப்பட்டவர்களின் விஷயத்தில் கல்வித் தகுதி, மற்றும் வயது வரம்பு சம்பந்தப்பட்ட விதிகளைத் தளர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனவே பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரைக்கேற்ப அரசாணை (நிலை) எண் 765, கல்வி, நாள் 16-5-74ல் அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில், 1-4-70க்குப்பிறகு நியமனம் செய்யப்பட்டு 21-3-74ல் ஒரு வருட பணிக்காலம் நிரம்பப் பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் மற்றும், தனித் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் அனைவரின் சார்பாக தமிழ்நாடு கல்வி சார்புப் பணி விதிகள் 6, 7ஐ (வயது வரம்பு மற்றும் கல்வி தகுதி பற்றியது) தளர்த்தி, இவர்களின் பணியை, 21-3-1974 முதல் வரன்முறைப் படுத்த ஆணையிடப்பட்டது. ஆகவே இரண்டாம் நிலை தமிழாசிரியர் பணியில் நியமனம் செய்யப்பட்டபோது, 30 வயதுக்கு மேற்பட்டு இருந்து, பின்னர் முதனிலைத் தமிழாசிரியர் பணியில் பதவி உயர்வு அளிக்கப்பட்டவர்களுக்கு, 21-3-1974 முதற் கொண்டுதான் அவர்களது பணியை வரனமுறைப்படுத்த வேண்டுமென்று அரசு குறிப்பாணை, எண் 89091/பி2/77-2 கல்வி நாள் 27-9-77ல் ஆணையிடப்பட்டது. எனவே, 1-4-70க்குப் பின் 30 வயதுக்கு மேற்பட்டும், அரசுப் பணியில் 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் சேர்க்கப்பட்ட இரண்டாம் நிலை தமிழாசிரியர்களுக்கு தமிழ்நாடு கல்வி சார்புபணி விதிகளின்படி கல்வித் தகுதி, மற்றும் வயது வரம்பினைத் தளர்த்தி ஆணையிடவேண்டிய அவசியம் ஏற்பட்டதால் அவர்கள் முதனிலைத் தமிழ் ஆசிரியர்களாக பதவி உயர்வு கொடுத்த அதே நாளிலிருந்து அவர்களது பணியை வரன்

முறைப் படுத்தும் நிலை ஏற்படவில்லை. இந்நிலை எல்லா மாவட்டங்களுக்கும் பொருந்தும் என்ற இந்த அறிவிப்போடு இந்த அறிக்கையோடு நேற்றைய தினம் நான் இது தொடர்பாக தந்த உறுதியின்படி இதைப் பரிசீலிக்கிறேன் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

(2) சேலம் மாவட்டம், மேட்டூர் ஆர். சி. பிளாண்ட் ரசாயனக் கழிவு நீரால் தோட்டக் காடுகள் மற்றும் பயிர்கள் பாதிக்கப்படுவதோடு வீரக்கல்புதூர் ஊராட்சிப் பகுதிகளில் விவசாயக் கிணறுகளும் பாதிக்கப்படுவது குறித்து.

(பிற்பகல் 5-10)

திரு. ஆ. நல்லசிவம் : தலைவர் அவர்களே, கீழ்க்காணும் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"சேலம் மாவட்டம், மேட்டூர் ஆர். சி பிளாண்ட், ரசாயனக் கழிவு நீரால் ஊற்றுநீர் கெட்டுத் தோட்டக்காடுகளில் உள்ள மரங்கள் பட்டுப் போவதோடு, பயிர்கள் முளைக்காத சதுப்பு நிலமாக மாறியதால் வீரக்கல்புதூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் விவசாயக் கிணறுகள் பாதிக்கப்பட்டதோடு, அப்பகுதி சதுப்பு நிலமாக மாறி வருவது குறித்து"

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சேலம் மாவட்டத்தில் உள்ள கெம்பிளாஸ்ட் கம்பெனி மற்றும் மேட்டூர் கெமிகல் கம்பெனிகளின் இரசாயனக் கழிவு நீரால் பி. என். பட்டி, வீரக்கல்புதூர் ஆகிய ஊர்களிலுள்ள கிணறுகளின் நீர் பாதிக்கப்பட்டுள்ளது. அவ்வூர் மக்களின் வேண்டுகோள்களின் அடிப்படையில் மேற்சொன்ன கிணறுகள் ஆய்வு செய்யப்பட்டன என்று பொதுசுகாதாரம், தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் தெரிவித்துள்ளார். ஆய்வு செய்யப்பட்ட 294 கிணறுகளில் 187 மண்ணிட்டு மூடப்பட்டுவிட்டன. இப்போது பயன்படுத்தப்பட்டு வரும் 107 கிணறுகளுள் பாசனக் கிணறுகள் 27 பருகு நீர்க் கிணறுகள் 80 ஆகும். பாசனக் கிணறுகள் 27-ல் 5 கிணறுகள் பயன்படுத்தத் தக்கனவாகவும், 2 கிணறுகள் பொறுத்துக் கொள்ளத் தக்கனவாகவும் உள்ளன. மீதம் 20 கிணறுகள் பயன்படுத்தத் தகுதியற்றன. பருகுநீர்க் கிணறுகள் 80ல் 16 கிணறுகள் பயன்படுத்தத் தக்கனவாகவும் 6 பொறுத்துக் கொள்ளத் தக்கனவாகவும் உள்ளன. மீதம் 58 கிணறுகள் பயன்படுத்தத் தகுதியற்றன. தண்ணீரின் தரத்தைச் சாதாரண நிலைக்குக் கொண்டு வருவதற்காக, பயன்படுத்தத் தகுதியற்ற



கிணற்று நீரை முழுவதுமாக வெளியே இறைத்து விடுதல், இறைக்கப்பட்ட நீர் கிணறுகளின் அருகில் தேங்காமல் தவிர்த்தல் முதலான தீர்வு நடவடிக்கைகள் கடைப்பிடிக்கும்படி இயக்குநர் எடுத்துக் கூறியுள்ளார்.

கெம்பிளாஸ்ட் கம்பெனி மற்றும், மேட்டூர் கெமிக்கல் கம்பெனி ஆகியவை தமது செலவில் காவேரியிலிருந்து இக்கிராமங்களுக்கு, வீட்டுக் குழாய்கள், பொதுக்குழாய்கள் வழியாக நாளொன்றுக்கு 5 மணி நேரம், மருந்திட்டு சுத்தம் செய்யப்பட்ட 10,000 காலன் தண்ணீர் வழங்குகின்றன.

கெம்பிளாஸ்ட் கம்பெனி சுற்றுப்புறத்தில் காற்றுத் தூய்மை கெடுதல் பற்றிய ஆய்வும் மேற்கொள்ளப்பட்டு, புகைக்கூம்பு குறைந்தது 50அடி உயரத்துக்கு அமைக்குமாறு கம்பெனிக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. கழிவு நீரை முடிவு செய்யவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி கம்பெனி கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது. கழிவு நீரை முடிவு செய்யுமிடங்களுக்கு அப்புறப் படுத்துவதற்கு மூடிய குழாய்களைப் பயன்படுத்துமாறும் சேலம் மாவட்ட நல்வாழ்வு அலுவலர் தொழிற்சாலைக்கு அறிவுறுத்தியுள்ளார். தடுப்பு நடவடிக்கைகளை விரைவில் முடிப்பதற்காகத் தொழிற்சாலையை வலியுறுத்துவதற்கான நடவடிக்கையும் எடுக்கப் பட்டுள்ளது.

தடுப்பு நடவடிக்கைகளின் திறனைச் சரி பார்க்கத் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என இயக்குநர் கூறியுள்ளார்.

தமிழ்நாடு நீர் வழங்கு மற்றும் வடிகால் வாரியம் இக்கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட நீர் வழங்குவதற்கான திட்டத்தை 25 லட்ச ரூபாய் செலவில் நிறைவேற்றி வருகிறது.

திரு. ஆ. நல்லசிவம் : குடிதண்ணீரைப் பொறுத்தவரை, அதற்குப் பாதுகாப்பு கொடுத்திருந்தாலும்கூட ரசாயனக் கழிவு, நீர் வெளியே வருவதால், நிலங்கள் சதுப்பு நிலங்களாக மாறுவதை நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளேன். இரசாயனக் கழிவு நீரை சுத்தப்படுத்தி அனுப்பும் இயந்திரங்களை வைத்து. அவ்வாறு சுத்தம் செய்யப்பட்ட நீரை வெளியே விடுகிற நிலைமையை நெல்லிக்குப்பம் ஈ.ஐ.டி. பாரி கம்பெனியும், விக்ரமசிங்கபுரம், மதுரை கோட்ஸ் கம்பெனியும் உருவாக்கியிருக்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட முறையை மேட்டூர் கெம்பிளாஸ்ட் கம்பெனியும் மேற்கொள்ள வேண்டும், இரசாயனக் கழிவுநீரைச் சுத்தப்படுத்தி வெளியேற்ற வேண்டுமென்று அரசாங்கம் அந்தக் கம்பெனியை நிர்ப்பந்தப்படுத்துமா? அவர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கும் போதே இதை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

[1978 செப்டம்பர் 12

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : கழிவுநீரைச் சுத்தப்படுத்தும் வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நிறுவனம் கேட்டுக்கொள்ளப்படும்.

திரு. ஆ. நல்லசிவம் : அங்கே உள்ள நிலங்கள் சதுப்பு நிலங் களாக மாறிக்கொண்டு வருகிற காரணத்தால், அந்த நிலங்களின் சொந்தக்காரர்களுக்கு நஷ்ட ஈடு தருவதற்கு ஏற்பாடு செய்யப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். சௌந்தரராஜன் : சதுப்பு நிலங்களை மீண்டும் பயிர் செய்ய ஏற்ற நிலங்களாக மாற்ற ஏதாவது வழி வகை இருக்கின்றதா என்று ஆராயப்படும்.

## 7. அரசின் தீர்மானங்கள்.

### (1) மத்திய கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்த மட்டில் நடுத்தர கால மாற்று வசதிக் கடனுக்கான உத்தரவாத வரையறையை உயர்த்துதல் குறித்து.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

" தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961), 73-டி பிரிவின்கீழ் சொல்லியுள்ள வாறு, மாநில சட்டமன்றத்தின் ஒப்புதலுடன், மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி பெறும் குறுகிய கால கடன், நடுத்தரக்காலக் கடன், நடுத்தரக் கால மாற்றுவசதிக் கடன்களுக்கு அரசின் உத்தரவாத உயரளவு வரையறையை முறையே ரூ. 250 இலட்சம், ரூ. 1,490 இலட்சம், ரூ. 7,400 இலட்ச அளவிற்கு கூட்டுறவுத் துறையின் 1978 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் ஒன்பதாம் நாளிட்ட 82 ஆம் எண் அரசாணையில் தமிழ்நாடு அரசு உயர்த்தியுள்ள தாலும்,

மத்திய கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தமட்டில் நடுத்தர கால மாற்று வசதி கடனுக்கான உயரளவு உத்தரவாத வரையறையை ரூ. 10.900 இலட்சத்திற்கு உயர்த்துவது அவசியம் ஏற்பட்டுள்ளதாலும்,

தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961) 73-டி பிரிவின் கீழ் சொல்லியுள்ள வாறு மத்திய கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தமட்டில் நடுத்தர கால மாற்று வசதிக் கடனுக்கான உத்தரவாத வரையறையை





ரூ.10,900 இலட்சத்திற்கும், மொத்த வரையறையை ரூ.12,640 இலட்சத்திற்கும் உயர்த்த தமிழ்நாடு சட்டமன்ற மேலவை தீர்மானிக்கிறது"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

ாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"" தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961), 73-டி பிரிவின்கீழ் சொல்லியுள்ளவாறு, மாநில சட்டமன்றத்தின் ஒப்புதலுடன், மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி பெறும் குறுகிய கால கடன் நடுத்தரக் காலக்கடன், நடுத்தரக் கால மாற்றுவசதிக் கடன்களுக்கு அரசின் உத்தரவாத உயரளவு வரையறையை முறையே ரூ.250 இலட்சம், ரூ.1490 இலட்சம், ரூ,7400 இலட்ச அளவிற்கு கூட்டுறவுத் துறையின் 1978 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் ஒன்பதாம் நாளிட்ட 82 ஆம் எண் அரசாணையில் தமிழ்நாடு அரசு உயர்த்தியுள்ளதாலும்

மத்திய கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்த மட்டில் நடுத்தரர கால மாற்று வசதி கடனுக்கான உயரளவு உத்தரவாத வகையுறையை ரூ.10,900 இலட்சத்திற்கு உயர்த்துவது அவசியம் ஏற்பட்டுள்ளதாலும்,

தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961) 73-டி பிரிவின்கீழ் சொல்லியுள்ள வாறு மத்திய கூட்டுறவு.வங்கிகளைப் பொறுத்த மட்டில் நடுத்தர கால மாற்று வசதிக் கடனுக்கான உத்தரவாத வரையறையை ரூ.10,900 இலட்சத்திற்கும், மொத்த வரையறையை ரூ.12,640 இலட்சத்திற்கும் உயர்த்த தமிழ்நாடு சட்டமன்ற மேலவை தீர்மானிக்கிறது."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

### (2) தமிழ்நாடு பருத்திப் போக்குவரத்து விதிகளின் வரைவுத் திருத்தத்திற்கு ஏற்பளித்தல்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

" தமிழ்நாடு பருத்திப் போக்குவரத்து விதிகளின் 7,8-ஆவது விதிகளைத் திருத்தி, 1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்து சட்டத்தின் (மத்திய சட்டம் 3/1923) 7-வது பிரிவின்கீழ் அரசால் வெளியிடப்படவிருக்கும் கீழ்க்கண்ட வரைவு அறிவிப்பு, மேற்சொன்ன சட்டத்தின் 8-வது பிரிவில் சொல்லியுள்ளவாறு ஏற்பளிக்கப்படுவதாக.

## வரைவு அறிவிப்பு.

1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 3/1923) 7-வது பிரிவின்கீழ் வழங்கப்பெற்றுள்ள அதிகாரங்களைக் கொண்டு. தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் முன்னாள் உணவு-வேளாண்மைத்துறையில் 7-12-1950 அன்று பிறப்பித்து 26-12-1950 நாளிட்ட அரசிதழின் பாகம் 1-ன் விதிகள் இணைப்பின் 575-583 பக்கங்களில் வெளியிடப்பட்ட (இது பின்னர் திருத்தப்பட்டுள்ளது) 51-ஆம் எண் அறிவிப்புடன் வெளியிடப்பட்ட விதிகளின் கீழ்க்கண்ட திருத்தங்களை இதனால் செய்கிறார். மேற்சொன்ன சட்டத்தின் 8-வது பிரிவில் சொல்லியுள்ளவாறு தமிழ்நாட்டுச் சட்டமன்றத்தின் இரு அவைகளினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மூலம் இவற்றிற்கு ஏற்பளிக்கப் பட்டுள்ளது.

## திருத்தம்.

மேற்சொன்ன விதிகளில் 7-வது, 8-வது விதிகளில் 'தலைமைக் காவலர்' என்னும் சொற்கள் எங்கெல்லாம் வருகின்றனவோ அங்கெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக ''காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர்'' என்னும் சொற்கள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்,''

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

''தமிழ்நாடு பருத்திப் போக்குவரத்து விதிகளின் 7-வது 8-வது விதிகளைத் திருத்தி, 1923-ம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 3/1923) 7-வது பிரிவின்கீழ் அரசால் வெளியிடப்படவிருக்கும் கீழ்க்கண்ட வரைவு அறிவிப்பு மேற்சொன்ன சட்டத்தின் 8-வது பிரிவில் சொல்லியுள்ளவாறு ஏற்பளிக்கப்படுவதாக.

## வரைவு அறிவிப்பு.

1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 3/1923) 7-வது பிரிவின்கீழ் வழங்கப் பெற்றுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், முன்னாள் உணவு-வேளாண்மைத் துறையில் 7-12-1950 அன்று பிறப்பித்து 26—12—1950 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம் 1-ன் விதிகள் இணைப்பின் 575--583 பக்கங்களில் வெளியிடப்பட்ட (இது பின்னர் திருத்தப்பட்டுள்ளது) 51-ஆம் எண் அறிவிப்புடன் வெளியிடப்பட்ட விதிகளின் கீழ்க்கண்ட திருத்தங்களை இதனால் செய்கிறார். மேற்சொன்ன சட்டத்தின் 8-வது பிரிவில் சொல்லியுள்ளவாறு தமிழ்நாட்டு சட்ட மன்றத்தின் இரு அவைகளினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மூலம் இவற்றிற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது.





## திருத்தம்.

மேற்சொன்ன விதிகளில், 7-வது, 8-வது விதிகளில் 'தலைமைக் காவலர்' என்னும் சொற்கள் எங்கெல்லாம் வருகின்றனவோ அங்கெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக 'காவல்துறை சப் இன்ஸ்பெக்டர்' என்னும் சொற்கள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.''

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

## 8. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, வேளாண்மை விளை பொருள் விற்பனை (திருத்தம், தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1978).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

''சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, வேளாண்மை விளைபொருள் விற்பனை (திருத்தம், தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்''

என்று முன்மொழிகிறேன்.

அதே நேரத்தில் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களையும் தங்களுடைய மேலான யோசனைகளையும் எல்லாம் சொல்ல இருக்கிறார்கள். அதற்கு முன்பாக ஒரு சில கருத்துக்களை மட்டும் நான் இங்கே சொல்வதன் மூலமாக அவர்களுக்கு உதவி செய்ய முடியும் என்கிற எண்ணத்தோடு சிலவற்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விற்பனைக் குழுவின் முன்னாள் தலைவர்களும், உறுப்பினர்களும் வேளாண்மை விளைபொருள் விற்பனையில் விவசாயிகளின் தன்மைக்காகப் போதிய ஆர்வம் காட்டவில்லை.

(பிற்பகல் 5-20)

இந்த வேளாண்மை விளைபொருள் விற்பனைக் குழுவின் முன்னாள் தலைவரும், உறுப்பினர்களும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மைபுரிய போதிய ஆர்வம் காட்டவில்லை. விவசாய காரியங்களுக்கும், விவசாயிகளுக்கும் அவர்கள் ஊக்கம் அளிக்கவில்லை. கால

* 268-271 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பட்டுள்ளது.

கெடு முடிந்துவிட்ட பின்பும் அவர்கள் தொடர்ந்து பதவியில் இருந்து வந்தார்கள். கெடு முடிந்த பின்பும் அவர்கள் குழுவில் தொடர்ந்து பதவி வகிப்பது உகந்ததல்ல என்று அரசு கருதியது. எனவே சென்ற ஜுன் மாதம் ஆளுநர் அவர்கள் 1978 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் விற்பனை (திருத்தம், தனி விதித் துறைகள்) என்ற அவசரச் சட்டத்தை வெளியிட்டார்கள். அதன்படி 6—6—1978 முதல் விற்பனைக் குழு பதவியிலிருந்து அவர்கள் விலக்கப்பட்டார்கள். ஆயினும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மை செய்யவேண்டும். விவசாயக் காரியங்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு, ஆளுநர் அவர்களால் வெளியிடப்பட்ட அவசரச் சட்டத்திற்குப் பதிலாக இப்போது இந்தச் சட்டம் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர்கள் தங்களுடைய மேலான யோசனைகளைத் தெரிவித்தால், அவைகளுக்கு நான் தக்க பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன் மொழியப்பட்ட தீர்மானம்:

''சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, வேளாண்மை விளைபொருள் விற்பனை (திருத்தம், தனி விதித் துறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/1978) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.''

* திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இங்கே அவையின் முன்னால் வைக்கப்பட்டிருக்கின்ற வேளாண்மை விளைபொருள் விற்பனை சம்பந்தமான சட்ட முன்வடிவு தமிழகத்து விவசாயிகளைப் பொறுத்த வரையில், மிகமிக அவசியமான ஒன்று. இந்தச் சட்ட முன்வடிவு சட்டமாக்கப்பட்ட பிறகு செயல் படுகின்ற துறையின் மூலமாக தமிழக விவசாயிகள் பெரும் அளவில் லாபம் பெற முடியும். ஆதாயம் பெற முடியும், பாதுகாப்பு பெற முடியும். ஆனால் செயல்படுத்தப் படுகின்ற முறையிலே கோளாறுகள் வருமானால், அதனுடைய விளைவுகள் மிக அதிகமாக விவசாயிகளைத்தான் பாதிக்கும் என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை அவசரச் சட்டமாகக் கொண்டு வந்ததற்கான காரணத்தைச் சொன்னார்கள். அதற்குப் பிறகு இன்றைக்கு சட்ட முன் வடிவாக ஏன் வந்திருக்கிறது என்றும் தெரிவித்தார்கள். கடந்த சில ஆண்டுகளில் என்று கருதுகிறேன் அமைச்சர் அவர்கள் ஒட்டு மொத்தமாக கடந்த காலம் அனைத்தையும் சேர்த்துச் சொல்ல மாட்டார்கள் என்று கருதுகிறேன்—கடந்த 3, 4 அல்லது 5 ஆண்டுகளிலேதான்



அவர்கள் குறிப்பிட்டது போல ஒரு சூழ்நிலை நிலவியது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இதற்கு முன்பு இதனைப் பல இடங்களிலே எடுத்துச் சொல்கின்ற வாய்ப்பினைப் பெற்றிருந்தோம். இன்னும் சொல்லப்போனால், நெருக்கடி நிலையின்போதுகூட ஆளுநர் அவர்களிடம் இந்த ஒழுங்குபடுத்தப்பட்ட விற்பனைக் கூடங்கள் விவசாயிகளுக்கு நன்மைகளை, பாதுகாப்புகளை நல்ல முறையிலே செய்யவில்லை. பல இடங்களிலே தவறுகள் நடந்திருப்பதால் விவசாயிகள் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னோம், இது இயங்காமல் போனதற்குக் காரணம், இதிலே ஈடுபட்டிருந்தவர்கள் ஆர்வம் காட்டாமல் போனதற்குக் காரணம், இதிலே பல்வேறு சிக்கல்கள் அன்றைக்கு ஏற்பட்டிருந்ததுதான்.

இந்தஅமைப்பினுடைய பொறுப்பை ஏற்றிருந்தவர்கள் பதவிக் காலம் முடிந்தவுடனே தேர்தல் நடக்கவில்லை. இரண்டாவது சூழ்நிலை தேர்தலை நடத்த வேண்டும் என்பதுதான். அதை ஒட்டி வழக்குகள் வந்ததன் காரணமாக, அத்தனை தேர்தல்களும் நின்றுவிட்டன. அதன் விளைவாக யார் யார் உறுப்பினர்கள், உறுப்பினர்களுடைய மரியாதை என்ன, அவர்களுடைய பொறுப்பு என்ன என்று அறியாத நிலைமைகள் இருந்தன. விற்பனைக் கூடங்களினுடைய நிர்வாகப் பொறுப்பை அரசு அதிகாரிகள் ஏற்றுக் கொண்டபின், அந்தக் குழுக்கள் மரியாதையை இழந்துவிட்டன. இது மட்டுமல்லாமல், சில நிர்வாக, பொருளாதார சம்பந்தமான குறைபாடுகள் குறுக்கீடுகள் அல்லது ஊழல்கள்கூட வந்து சேர்ந்தன. அதன் காரணமாகத்தான் இந்த விற்பனைக் கூடங்களுடைய செயல் முறைகள் ஸ்தம்பித்துப் போகின்ற நிலைமைகள் ஏற்பட்டன. இவைகள் எல்லாம் கடந்த 3, 4 ஆண்டுகளிலே ஏற்பட்டவைதான். ஒழுங்குபடுத்தப்பட்ட கூடங்கள் இன்று வளர்ந்திருக்கின்றன; விவசாயிகள் அளவிலே எப்படி படிப்படியாக வளர்க்கப்பட்டன என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த ஒழுங்குபடுத்தப்பட்ட விற்பனைக் கூடங்கள் மணிலா விற்பனைக் கூடங்களாக இருந்தன. சில சமயங்களில் பணப் பயிர்கள் விற்பனை ஆயின. விவசாயிகளுக்கெல்லாம் பாதுகாப்புத் தருகின்ற வாய்ப்பினை அளிக்கின்ற அளவில்தான், அவைகள் அமைந்திருந்தன. ஒரு கால கட்டத்திலே விவசாயிகள் இடைத் தரகர்களாலே ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான விலை கூட அல்ல, ஒரு சாதாரண விலைகூட கிடைக்காத நிலைமையில் அவற்றைக் குறைந்த விலைக்கு விற்கவேண்டிய நிலைக்கு ஆளானார்கள். விவசாயிகள் இடைத்தரகர்களால் ஏமாற்றப்பட்டார்கள். அதற்குப் பிறகு இந்த விற்பனைக்கூடங்களுக்கு அரசாங்க அதிகாரிகள் மார்க்கெட்டிங் கமிட்டி செயலாளர்களாகப் பொறுப்பேற்றார்கள். அவர்கள் பொறுப்பிலே இருந்து செயலாற்றப் பட்டது. அதற்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், வியாபாரிகளின் பிரதி

[திரு. க. இராமமூர்த்தி] [1978 செப்டம்பர் 12

நிதிகள் அரசாங்கத்தினுடைய பிரதிநிதிகள் எல்லாம் சேர்ந்து ஒரு குழுவாக அமைந்தபோது, சில நேரத்தில் வியாபாரிகளே அதன் தலைவராக வரும் நிலை ஏற்பட்டது. அதன் விளைவாக நல்ல விலை தரும் நிலைமைகளை ஏற்படுத்தவேண்டுமென்பதற்காக வந்த விற்பனைக் கூடங்கள், மார்க்கெட்டிங் கமிட்டிகள், வெளியா ருடைய, வியாபாரிகளுடைய கைக்குள்ளேயே அடக்கிக் கொண்டிருக்கிற அளவுக்கு அமைந்திருந்தன. இந்த விற்பனைக் கூடங்கள் மூலமாக வியாபாரிகள் உற்பத்திப் பொருள்களின் விலையைக் குறைத்தார்கள். பல நேரங்களில் அந்தப் பொருள் களின் விலைக்கான பணத்தை வீட்டிற்கு எடுத்துப்போக முடியாத நிலைமைகள் ஏற்பட்டன. இந்த விற்பனைக் கூடங்களலே பல நேரங்களில் வாங்கி வைத்துவிட்டு ஒரு வாரம், பத்து நாட்கள் கழித்து அதற்கான பணத்தைக் கொடுத்தார்கள். விவசாயிகளிட மிருந்து வாங்கிய பொருளுக்கான பணத்தை 10 நாட்கள், 15 நாட் களுக்குப் பிறகுதான் கொடுத்தார்கள். இந்த மாதிரியான நிலைமைகள் எல்லாம் இருந்தன. இதற்குப் பிறகு விவசாயிகள் தான் இந்தச் சங்கத்தின் தலைவராக வர வேண்டுமென்ற நிலை ஏற்பட்டு, பிறகு பெருமளவுக்கு வளர்ந்து வந்திருக்கிறது. அதன் காரணமாக அதிகாரிகளும் அதிலே ஆர்வத்தோடு ஒத்துழைக்கும் நிலை ஏற்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைப் பொறுத்த வரையிலே, கருத்துக்கள் மாறுபடவில்லை. இந்த மார்க்கெட்டிங் சொசைட்டியில் மணிலா, மஞ்சள் போன்ற பொருள்கள் உற்பத்தி செய்பவர்கள் மட்டுமே விவசாயப் பிரதிநிதிகளாக இருக்க முடிந்தது. வியாபாரிகளைப் பொறுத்த வரையில், இந்த விற்பனைக் கூடங்களில் லைசென்ஸ் பெற்ற வியாபாரிகளின் பெயர்கள் மட்டுமே அதற்கான வாக்காளர் பட்டியலிலே இடம் பெற முடிந்தது. ஒழுங்கு படுத்தப்பட்ட மார்க்கெட்டிங் சொசைட்டி என்ற பெயராலே இன்று எல்லா விளைபொருள் களையும் மார்க்கெட்டிலே கொண்டுவந்துவிட்ட காரணத்தினாலே, விவசாயிகள் அத்தனை பேரும் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றாக வேண்டும். ஏறத்தாழ ஒரு பொதுத் தேர்தலில் நடத்துகின்ற அளவுக்கு வாக்காளர் பட்டியல் நீண்டுள்ளது. தேர்தல் மூலமாக பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் நிலைமை நிச்சயமாக உருவாகியிருக்கிறது. அந்தச் சங்கடத்தை மனதிலே கொண்டு சிந்திக்க வேண்டும். இன்னொரு சங்கடத்தையும் நாம் கண்டாக வேண்டும். இந்த விற்பனைக்கூடங்கள் முறையாகச் செயல்படவில்லை என்றால், விவசாயிகளுக்கு அவர்களுடைய நிலங் களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று மிகச் சுலபமாகத் தெரிந்து கொள்ளக்கூடியது. இந்தத் தீர்மானங்கள் விவசாயிகளுக்கு எதிரான முறையில் மாறுபடும். அதிகாரிகளைப் பொறுத்த வரையில், எனக்கு அவர்கள் மீது கோபம் கிடையாது. அவர்களைப் பொறுத்த வரையிலே, சில முறைகளிலேதான் அவர்கள் செயல்பட முடியும். அந்த அளவுக்குத்தான் செயல் முறையிலே இயங்குவார் கள். அப்படித்தான் கடந்த காலத்திலே இருந்து வந்துள்ளது.



1978 செப்டம்பர் 12] [திரு. க. இராமமூர்த்தி]

(பிற்பகல் 5-30)

அவர்களுக்குத் திட்டவட்டமாக இதுதான் என்று சொல்லி விட்டால், அதிலிருந்து கொஞ்சங்கூட பிறழாமல் இருக்க வேண்டு மென்று நினைப்பார்களே தவிர, அதிலிருந்து இப்படி, அப்படி கொஞ்சம் அசைந்து, அதன் மூலம் விவசாயிகளுக்கு நன்மை தரலாமா என்று நினைக்கமாட்டார்கள். ஆனால் அப்படி அதிகாரச் சார்பு இல்லாத விவசாயப் பிரதிநிதியால் செய்யமுடியுமே தவிர அலுவல் பொறுப்பில் இருக்கிற அதிகாரியால் இதைச் செய்ய முடியாதென்ற நிலையை உணர்ந்தாக வேண்டும். அதோடு மட்டு மல்ல. இன்னொரு நிலையை, இந்தச் சட்ட முன்வடிவு நிறை வேறுவதற்கு முன் சொல்வதாக நினைக்க வேண்டாம். இருக்கின்ற நிலையைச் சொல்கிறேன். எல்லா விற்பனைக் கூடங்களிலும் புழங்கு கின்ற வியாபாரிகளைப் பொறுத்தவரையிலும், பல லட்சக் கணக் கான ரூபாய்களைப் புரட்டும் வாய்ப்பு உள்ளவர்கள். ஒரே நாளில் பல லட்ச ரூபாய்கள் கணக்கில் வாங்கும் சக்தியுடையவர்கள். அப்படிப்பட்ட பல விற்பனைக் கூடங்கள் ஒரே மாவட்டத்தில் இருக்கின்றன. அப்படி அவர்கள் பல மாவட்டங்களிலும் இணைந்து செயல்படுவார்கள். அந்த முறையில் பணத்தின் ஆதிக்கம் இந்த விற்பனைக் கூடங்களில் வரும்போது, அது அதிகாரிகளை ஆட்டிப் படைக்கும். இல்லையென்றால், அவர்களின் கீழே வேலை செய்யும் அலுவலர்களை ஆட்டிப் படைக்கும். அதனால் இதனுடைய விளைவுகள் பயங்கரமானவையாக இருக்கும்.

இந்த மசோதாவிற்குப் புறம்பானதென எடுத்துக்கொள்ள முடியாதென்பதால், ஒன்றொன்றைக் கோடிட்டுக் காட்ட விரும்பு கிறேன். விழுப்புரத்தில் நடந்த மிகப் பெரிய கலவரத்திற்கு இந்த விற்பனைக் கூடம் ஒரு காரணம் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். பல காலமாக விழுப்புரத்தைச் சுற்றியுள்ள, அதாவது 20, 25 மைல் தொலைவிலுள்ள விவசாயிகள் தங்களுடைய விளை பொருட்களை விற்பனைக் கூடத்திற்குக் கொண்டு வருகிறார்கள். மிகச் சுலபமாகக் கொண்டு வருகிறார்கள். அவர் களுக்குப் பாதுகாப்பற்ற நிலை வெளியே இருந்து உள்ளே வந்த பிறகுதான் ஏற்படுகிறது. பத்து மூட்டைகளைக் கொண்டுவரும் விவசாயி, மூட்டைகளை இறக்கி களத்திலே கொண்டு போய் வைக்க வேண்டுமென்று எண்ணுகிறார். அந்த 10 மூட்டைகளை வைத்துக் கொண்டிருக்கும் விவசாயி வண்டியில் உட்கார்ந்துகொண்டிருக்க அதைத் தூக்கிச் செல்கிற தொழிலாளி, அந்த மூட்டைகளைக் கொண்டுபோய் களத்திலே வைத்துவிட்டு, அதற்கான கூலியைப் பெற்றுக்கொண்டு செல்ல, விவசாயி தன்னுடைய மூட்டைகள் எத்தனை இருக்கின்றன என்று எண்ணிப் பார்க்கும்போது, 10 மூட்டைகளென்பது 8 ஆக இருக்கும் அல்லது 7 ஆக இருக்கும். ஏன் இப்படி இருக்கிறது என்று கேட்டால், அவர் உதை வாங்கிக் கொண்டுதான் செல்வார். இது நிரந்தரமாகப் பல ஆண்டு

களாக விழுப்புரத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அது மட்டுமல்ல. எடையிலே வியாபாரிகளுக்குச் சாதகமாக எடை போடுகிறார்கள். எப்படி என்றால், கீழே காலால் தடுத்து நிறுத்துவது, அல்லது கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துச் செல்வது என்ற முறையில் செய்கிறார்கள். இப்படி விற்பனைக் கூடங்களில் பல மூட்டைகள் சேரும். பெருக்கி, வாருவதில்கூடச் சேரும். பல விற்பனைக் கூடங்களில் இப்படித் திருடுவதால் 20 மூட்டைகள், 30 மூட்டைகள், 40 மூட்டைகள்கூடச் சேரும். விழுப்புரத்தில் 50 மூட்டைகள்கூட களவு போவதுண்டு. இந்தக் களவுகளை அங்கே நடத்துவது என்பது மட்டுமல்ல, விவசாயிகளைக் கொள்ளை அடிக்கும் இடமாக விற்பனைக் கூடங்களைப் பயன்படுத்தும் நிலை இருக்கிறது. தென் ஆற்காடு மாவட்டத்தில் எனக்கு ஏற்பட்ட அனுபவம் இது. மற்ற மாவட்டங்களிலும் இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. அமைச்சரவர்களுடைய சொந்த மாவட்டத்திலே கூட என்று கருதுகிறேன், கோவையிலே, ஈரோட்டைப் பொறுத்த வரையில், மஞ்சள் மார்க்கெட் பற்றி அதுமாதிரி பெரிய புகார் கூறுகிறார்கள். எங்களுடைய தலைவர் திரு. ஈ. வி. கே. சம்பத் அவர்கள் நெருக்கடி காலத்தில் புகார் கொடுத்தார். பழைய குறிப்புகளைப் பார்த்தால், தெரியுமென்று கருதுகிறேன். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்த விற்பனைக் கூடங்கள் சரிவர ஒழுங்காக விவசாயிகளுக்கு ஆதரவாக இருக்க வேண்டுமென்ற உணர்வோடு கண்காணிக்கவில்லை என்றால், நடைமுறைப் படுத்தப்படவில்லை என்றால், நிர்வகிக்கப்படவில்லை என்றால் விவசாயிகளுக்கு எதிரான ஒன்றாக மிகச் சுலபமாகத் திரும்பிவிடும். இந்த அமைப்பு விவசாயிகளைக் காப்பாற்றத்தான் இருக்கிறது. வியாபாரிகளைக் காப்பாற்றத் தேவையில்லை. வியாபாரிகளிடமிருந்து கொள்ளை அடிக்க முடியாது. வியாபாரிகளிடமிருந்து யாரும் அளவைக் கூட்டி வாங்க முடியாது. ஆனால் விவசாயிகளைப் பொறுத்தவரையில், 20 மைல்கள் கடந்து தங்கள் விளை பொருள்களைக் கொண்டு வந்த பிறகு, கிடைக்கின்ற விலைக்கு விற்றுவிட்டுப் போக வேண்டுமென்ற நிலை ஏற்படும். சிறிய விவசாயிகள், 2 மூட்டை, 3 மூட்டை, 5 மூட்டை எள், பருத்தி, வெல்லம், மணிலா கொண்டு வருகிறவர்கள், விலை எவ்வளவு குறைவாக இருந்தாலும், விற்கவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள், அந்த நேரம் வியாபாரிகளுக்குத் தெரியும். அப்படி அவர்கள் நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்படுகிற நேரம் அதிகாரிகளுக்குத் தெரியும். அந்த சீசன் எப்போது வருமென்று வியாபாரிகளுக்குத் தெரியும். அந்த சீசனில் வியாபாரிகள் ஒற்றுமையோடு விலையைக் குறைத்து, விவசாயிகளின் விளை பொருள்களை வாங்கும் நிலை நெடுங்காலமாக இருக்கிறது. குறிப்பிட்டு இப்போதுதான் நடைபெறுகிறதென்று நான் சொல்லவில்லை. அவற்றிலிருந்து விவசாயிகள் மீளுவதற்கான வாய்ப்பு இப்போதுதான் ஏற்பட்டிருக்கிறது. சில காலத்திற்கு முன்பிருந்தது



விவசாயிகளுடைய கரங்கள் அங்கே ஓங்கியபிறகு, நல்ல நிலைமை ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளுடைய நலனை மனதில் கொண்டவர்கள் அங்கே இடம் பெற்ற பிறகுதான், நல்ல நிலைமை சீர்பட்டது. விவசாயிகளாக இருக்கிறவர்கள்தான் தலைமையை ஏற்க வேண்டுமென்ற பிறகுதான் அந்த நிலை ஏற்பட்டது. கடந்த காலத்தில், சட்ட அமைப்பானது எத்தனை பேர்கள் இருந்தாலும் விவசாயிகளின் பிரதிநிதிகள்தான் தலைவராக வர முடியுமென்ற முறையில், விவசாயிகளுடைய நலனைக் கருதி செய்யப்பட்டது. இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையிலும், இந்த நிலைகளை மனத்திலே இறுத்திக்கொண்டுதான் கொண்டு வரப்பட்டிருக்கிறதென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதற்காக நன்றி சொல்கிறேன். இந்த நிலைமைகளை உணர்ந்திருக்கிறார்களென்பதற்காக மட்டுமல்ல, அதை மாற்றவும் ஆர்வம் கொண்டிருக்கிறார்களென்பதற்காக நன்றி சொல்கிறேன். இப்போது வந்திருக்கும் அமைப்பு தாற்காலிகமானதென்று நம்புகிறேன். இதை மாற்ற இன்னொரு சட்டம் வருமென்று நம்புகிறேன்.

இது குறித்து ஒன்றை மட்டும் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தச் சட்ட முன்வடிவிலே 5-வது செக்‌ஷனிலே, 4-வது பிரிவில்

"Where a Special Officer is appointed under sub-section (1), the Government may appoint an Advisory Board to advise the Special Officer in such matters as may be specified by the Government and the Advisory Board shall consist of the following Members"

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அட்வைசரி போர்ட் என்பது பலன்தராத போர்டாக இருக்கிறது. 'அட்வைசரி' என்று சொல்லும்போது, அவர்கள் சொல்வதை அதிகாரிகள் ஏற்க வேண்டியதில்லை என்ற முறையில் அணுகுகிறார்கள். சொல்பவர்களுக்கும் சொல்லவேண்டிய அளவுக்குச் சொல்கிறார்களே தவிர வேறு ஒன்றுமில்லை. சொல்லுகின்ற ஆலோசனைகளுக்கு உரிய இடமிருக்கிறதென்று அவர்கள் நினைக்கவில்லை. அதோடு மட்டுமல்ல. இந்த அட்வைசரி போர்டில் யார் யார் எல்லாம் இருக்கிறார்களென்பதைப் பார்க்க வேண்டும்.

Three persons from among the producers of the notified agricultural produce in the notified area

விவசாய உற்பத்தி செய்கிறவர்கள் சார்பிலே 3 பிரதிநிதிகள்.

Three persons licensed under sub-section (1) of section 6 of the Principal Act in the notified area in respect of the notified agricultural produce

இது வியாபாரிகள் என்று கருதுகிறேன். வியாபாரிகளின் பிரதிநிதிகள் மூவர், விவசாயிகளின் பிரதிநிதிகள் மூவர் என்று ஆரம்பத்திலேயே இந்தச் சட்ட முன்வடிவில் விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் சரிசமமான நோக்கோடு அணுகுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 5-40)

விவசாய விற்பனைக் கூடங்களைப் பொறுத்த வரையில், திரும்பத் திரும்பச் சொல்லுகிறேன், அது விவசாயிகளின் பாதுகாப்பிற்காக அமைந்த ஒன்றுதான். விவசாயிகளை, வியாபாரிகள் ஏமாற்றுமல் தடுப்பதற்காக அமைந்த ஒன்றுதான். அதே நேரத்திலே வியாபாரிகளின் நலன்களைப் பாதுகாத்தால்தான் விவசாய விளைபொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கும். ஆகவே அங்கே இரு சாராரும் ஒரே அளவிலே இருக்கவேண்டும் என்பதல்ல. காரணம் விவசாய விளை பொருட்களை விற்பனை செய்கிற இடம் விவசாயிகளுக்கான இடம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அதோடு மட்டுமல்லாமல், டிஸ்ட்ரிக்ட் அக்ரிகல்சுரல் ஆபீசர்கள் அதிலே இடம் பெறுகிறார்கள். மேலும், " too other Officers of the Government as may be nominated by the Government "

இந்த இரண்டுக்கும் மேல் அரசாங்கம் தனது தரப்பாக ஒருவரையும் நிறுத்துகிற நிலையும் வருகிறது. இந்த 9 பேர்கள் கூடுகிற போது, இந்தக் குழுவிற்குத் தலைவராக விவசாயப் பிரதிநிதியும், அதனுடைய செயலாளராக ஸ்பெஷல் ஆபிசரும் பணியாற்றுவார் என்று இந்த சட்ட முன் வடிவிலே இருந்திருந்தால், மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்ற ஒன்றாக அமைந்திருக்கும். ஆனாலும் இன்றைக்கு இப்படி சட்ட முன்வடிவு வந்துவிட்ட பிறகு, இதற்கு ஒரு திருத்தம் கொடுத்து அதை மீண்டும் சட்டமன்றப் பேரவைக்கு அனுப்ப வேண்டும் என்று சொல்ல விரும்பவில்லை. ஆகவே மீண்டும் ஒரு முழுமையான சட்டத்தை உருவாக்குகிறபோது, அமைச்சர் அவர்கள் இதைக் கருத்திலே கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், நமக்குள்ள பெருமை, இந்தியாவிலேயே இந்த விற்பனைக் கூடங்கள் மிகவும் திறமையோடும், மிகச் செம்மையோடும் செயல்படுகின்றன என்பதுதான். வெளிநாடுகளிலிருந்து, விற்பனைக் கூடங்கள் எப்படி நடைபெறுகின்றன என்று பார்வையிட வருகிறவர்களையெல்லாம் மத்திய அரசிலிருந்து இங்கேயிருக்கிற விற்பனைக் கூடங்களுக்குத்தான் அனுப்புகிறார்கள். அந்த அளவுக்கு, நம்மைப் பொறுத்த வரையில், இதிலே வளர்ந்து வந்திருக்கிறோம். ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை நடத்துவதிலே நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். ஆனால் இடையிலே ஏற்பட்ட தொய்வின் காரணமாக, சங்கடத்தின் காரணமாக, சூழல்களின் காரணமாக, அதனுடைய பலன்கள் வெளியே தெரியாமல் போயிற்று. இப்படி எதிர்மறையான நிலையை அடைந்ததற்காக, அவற்றை ஒதுக்கிவிட வேண்டாம். இது வரை கிடைத்து வந்த நன்மைகளை விட்டுவிடவேண்டாம். அப்படி விட்டுவிட்டால், இப்போது அடங்கி ஒடுங்கி இருக்கிற இடைத்தரகர்கள் மீண்டும் தலையிட்டு விவசாயிகளைக் கடனாளியாக, நிரந்தரக் கடன் அடிமைகளாக மாற்றும் நிலைமை வந்துவிடும். அந்த அளவுக்கு இல்லாத வகையில், இந்தச் சட்டத்தை நிறைவேற்றிய பிறகு, மீண்டும் ஒரு சட்டத்தை அவசர அவசரமாக அமைச்சர் அவர்கள் இந்த அவையின் முன் வைக்க வேண்டுமென்று என்னுடைய வேண்டுகோளை விடுத்து உரையை முடிக்கிறேன். வணக்கம்.



* THIRU A. R. DAMODARAN : Mr. Chairman, Sir, in introducing this Amending Bill in respect of the Tamil Nadu Agricultural Produce Markets Act of 1959, the Hon. Minister mentioned that in view of various irregularities that had occurred in various Market Committees in our State, it was found necessary to introduce this Bill to supersede all the Market Committees in our State, to appoint Special Officers for a period which may perhaps extend to two years and to appoint Advisory Boards to help these Special Officers in their duties. Sir, generally in introducing a drastic legislation of this kind where all market committees in the entire State are to be dissolved, one would have expected the Hon. Minister to give us some concrete reasons and perhaps the basis for Government formulating this idea that all Market Committees in our State have become dens of corruption and commission of irregularities. He has not placed before us such incidents and I hope in his reply he will do so. We all regret that such things should happen in such Committees which have been formed, as my hon. Friend Thiru Ramamoorthy mentioned, exclusively for the benefit of the agriculturists in our State. Ever since the Act was introduced in 1959, we in South Arcot particularly are aware of the great help and assistance that these Market Committees have rendered to agriculturists especially in the cultivation and marketing of groundnut crop which is the famous crop in South Arcot district. Other crops have been benefited in other districts and the movement was growing well. As I said, I do not wish to offer any defence to these persons who have committed irregularities and perhaps looted these Committees also. But my point is that the Government seem to have more than adequate powers even under the old Act of 1959. In section 24 it is clearly stated that if, in the opinion of the Government, a Market Committee is not competent to perform or persistently makes default in performing the duties

imposed on it by or under the Act or abuses its powers, the Government may by notification supersede such Market Committee for a period not exceeding one year in the first instance and may by order extend it for a period not exceeding one year at a time and the total period of supersession in the case of any Market Committee shall not exceed four years. The Government have extraordinary powers. If they had taken action even at an early stage to supersede such Market Committees where irregularities, fraud, corruption, etc., were being practised, it would have had a deterrent effect on the Chairman and Members of other Market Committees. By the dissolution of all Market Committees, these people will now escape. Who is to hold them responsible for the irregularities that they had committed? In fact, it has now become a political issue in the sense that claims and counter-claims will be made by my hon. Friends in the AIADMK as well as DMK parties that this is a political move to supersede Market Committees and those of us who are entirely unconnected with both these Parties have no opportunity of knowing who has played this mischief in these Market Committees. Corruption, if it is to be exposed, must be exposed in specific instances. The public are now not convinced, unfortunately, because allegations have been made but have not been proved. Why have not Government taken action against these persons who are responsible for such frauds? I ask this entirely as non-Partyman interested in the working of this Act and in the working of these Market Committees. If you are prepared to make allegations, you must be prepared to prove them also. Only by proving them will you be able to convince the public that these people should not seek re-election again. Supposing you have election one year later, the very same fraudulent people are going to stand for election and their claim will be that political allegations have been made against them but have not been proved. We might find that some of them may even stand for election to our civic bodies for which elections have been promised by the Hon. Minister within six or nine months. We will get back the same corrupt elements in our civic life and in our Market Committees as it is alleged we have had in the past. I would like to know this from the Hon. Minister. Why was not action taken under section 24 of the Act? Are there legal difficulties or Constitutional difficulties in taking such action? Secondly, by dissolving all these Market Committees, how are you going to expose the frauds that are being committed? Did the Committee appointed during President's Rule which was referred to by my hon. Friend Thiru Ramamoorthi go into the matter deeply? I think that at least in fairness to the Members of this House, the



Hon. Minister should place a note either in this Session or in the next Session, giving the reasons which impelled the Government to bring forth an amendment to this Bill in this very drastic fashion.

[பிற்பகல் 5-50]

The other point, which my hon. Friend Thiru Ramamoorthi mentioned was about the formation of the Advisory Committees. An irrevocable step of appointing Special Officers has been taken and they will be in charge, I do not know for how long and the intention of the Government has not been mentioned in this Bill. It is stated that their term will be up to 2 years and we can assume that the Special Officers will continue for two years. Sir, there is a feeling that there is some amount of distrust in representative institutions in so far as this Government are concerned. I do not know if I am fair in this assumption but judging from the fact that Market Committees, co-operative societies, local bodies like Municipalities and Panchayats are all in a process of suspended animation there is such a feeling and perhaps our belief in the representative character of these institutions has been shaken. I do not know if anybody can afford to take this view, especially in view of the deep commitment of all the political parties to democracy and election. Even in the appointment of these Advisory Committees, I would like the Government not only to observe the ratio that was observed in the past of electing members from the agriculturists or from the producers and from the businessmen according to the old Act—when the persons were elected, nine were elected from among the farmers, four were elected from among the businessmen, four were nominated by the Government and there were about 17 members—but to see that true representation is given to the farmers—agriculturists, because these Committees are primarily intended to benefit the farmers in these areas. Not only that. The Advisory Committees may be given larger powers also. There is no harm in providing in the Act larger powers for these nominated committees. We have to accept it as a necessary evil, following the appointment of Special Officers. I would suggest that in view of the fact that it might take one or two years for holding elections to these bodies, the powers of these Advisory Committees may be enlarged because there will be only nominated members and the Chairman elected by the Committees will only by a man of integrity and honesty and they will also represent the respective classes. Why should not such members have larger powers for the reason that the elected representatives have misused their powers? Since the Government are going to have nominated members

in the Advisory Committees, my suggestion is that some of the powers or a major portion of the powers that the Government gave under the old Act, of 1959 may be given to the members of the Advisory Committees so that they may act as a supevisory check on Special Officers who may be appointed in those places. There are difficulties in the Special Officers functioning with a degree of flexibility in administration to help the farmers in those areas and, therefore, I would plead with the Government to enlarge the powers of these Advisory Committees. The Government have appointed Advisory Committees for Municipalities, for Corporation, etc. As far as my knowledge and experience go, the advisory committees are unable to fulfil the functions of the elected people because we cannot make our representations and complaints to such committees as we are able to do when there are elected representatives. Therefore, I wish that these Advisory Committees should not remain mere Advisory Committees but larger powers may be entrusted to them, because the Government are nominating all the members and surely the Government can trust the nominated people to do the job for which the Government are putting them in. I, therefore, request that these two aspects may be borne in mind and the Hon. Minister may also acquaint the members of this House so that the public may be aware of what has been happening in these committees. We must expose people who have committed fraud, and who have been corrupt. Whether it is legally possible to establish the offences committed is a matter which the Hon. Minister can judge for himself. Nonetheless in a democratic society, if allegations are made, we should be made fully aware of such allegations and I hope the Hon. Minister will take us into confidence. Thank you.

திரு. ஆ. நல்லசிவம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, அவசரச் சட்டத்திற்குப் பின்னாலும் இந்த மசோதாவிற்குப் பின்னாலும் ஒரு விதமான அணுகுமுறையைத்தான் இதிலிருந்து நாம் காண முடிகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் கூறியதுபோல, மாநிலத்திலுள்ள எல்லா மார்க்கெட் கமிட்டிகளும் கலைக்கப்படுகின்றன. எல்லா மார்க்கெட் கமிட்டிகளிலும் ஸ்பெஷல் ஆபிசரை—தனி அதிகாரியை போட்டிருக்கிறார்கள். அதற்கு என்ன அவசியம் இப்பொழுது ஏற்பட்டு விட்டது என்பதற்கான காரணம் அடங்கிய விபரம் கூட இந்த சபையில் வைக்கப்படவில்லை. இங்கே கொடுக்கப்பட்டுள்ள ''ஸ்டேட்மென்ட் ஆப் அப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்'' ல் கூட "There are also some instances of misuse of power" என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். சில அதிகார துஷ்பிரயோகங்கள் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச்



சொல்கிறபோது, செக்ஷன் 12 பிரகாரம் புது கமிட்டி அமைக்கப்படுகிற வரை, பழைய உறுப்பினர்கள் தொடர்ந்து இருக்கலாம் என்று இருக்கும்போது, காலா காலத்தில், அரசு பொறுப்பேற்ற உடனேயே இதைச் செய்திருக்கலாம். ஒரே நாளில் கலைக்கிறோம் என்று சொல்லும்போது, அரசியல் தலையீடு ஒன்றும் அதில் இல்லையென்று அரசு சொன்னாலும் கூட; குறை கூறுகிறவர்கள் சொல்வதில் உண்மையிருக்கிறதோ என்று சந்தேகிக்கும்படியாக இருக்கிறது. அந்தக் கமிட்டிகளைக் கலைக்கிற அதே நேரத்தில், இப்பொழுது அதில் யார் இடம் பெறப் போகிறார்கள் என்று பார்க்கிறபோது, அநேகமாக எல்லாருமே அதிகாரிகளாகத்தான் இருப்பார்கள். அரசியல்வாதிகள் இருந்தால்தான் ஊழல் இருக்கும். ஆனால் அதிகாரிகள் இருந்தால் ஊழலே இருக்காது என்ற உத்தரவாதத்தை அரசு கொடுக்க முடியுமா? அப்படிப் பார்க்கும்போது அட்வைசரி போர்டு அமைப்பதில் கூட 5-வது செக்ஷன் 4-வது பிரிவில் '' may appcint '' என்று போட்டிருப்பதை "shall" என்று போடக்கூடாதா? "shall cens st" என் று இருக்கும் போது "shall app.int" என்றுதான் இருந்திருக்க வேண்டும். மாவட்ட அளவில் இயங்கிக் கொண்டிருக்கிற வேளாண்மை ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் அனைத்தையும் கலைத்துவிட்டு தனி அலுவலர் மூலம் செயல்படுகின்ற ஒரு முறையினை அமைப்பதற்குரிய அணுகுமுறைதான் இதில் இருக்கிறது. அடுத்தபடியாக, 6-வது செக்ஷனில் கமிட்டிகளைத் திருத்தியமைக்கும் வரைதான் ஸ்பெசல் ஆபிஸர்ஸ் இருப்பார்கள் என்று போட்டிருக்கிறார்கள். அதேமாதிரி செக்ஷன் 5, பிரிவு 1-ல் 2 வருடம் என்று ஏன் போடவேண்டும்? மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் கூறியது போல தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மீது அரசு சந்தேகம் கொள்வதும் அதிகாரிகள் மீது நம்பிக்கை வைத்துக்கொள்வதும் நல்லது தானா? 9 பேர் கொண்ட அட்வைசரி கமிட்டி போடும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் கூறியது போல, பழைய மார்க்கெட்டிங் கமிட்டியில் இருந்தது போல, விவசாயிகளுக்கு அதிக பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும். சிறு விவசாயிகள் என்றால் 2½ ஏக்கர் முதல் 5 ஏக்கர் வரை நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்கள் என்று கதை சொல்கிறார்களே அவர்கள் தான். அவர்களுக்கு அதிகமான பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும். பெரிய பெரிய நிலப் பிரபுக்களுக்குப் பாதுகாப்புத் தேவையில்லை. காரணம் அவர்களுக்கு என்று சந்தை இருக்கிறது, அதிக விலை கிடைக்கும்போது அவர்கள் விற்க முடியும். ஏழை விவசாயிகள் அப்படி சந்தையில் நல்ல விலை கிடைக்கும் வரை காத்துக்கொண்டிருக்க முடியாது. அவர்கள் விளைவிப்பதை உடனே விற்க வேண்டிய அவசியம் இருக்கிறது. சிறிய விவசாயிகளுக்கு ஏழையெளிய விவசாயிகளுக்கு இந்தக் கமிட்டியில் அதிக பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்கின்ற என் கருத்தை வலியுறுத்திப் பேசி அமர்கிறேன்.

***திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இந்த அவையில் முதல் முறையாக இந்த மசோதாவின் மீது கருத்துக்களைச் சொல்லுகின்ற வாய்ப்பினை அளித்த தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். சட்டமன்றத்திலே 3 முறை தொடர்ந்து பணியாற்றியிருந்தாலும், இந்த அவைக்கு நான் புதியவன் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நான் உங்களுடைய தலைமையின் கீழே பணியாற்றுகின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்கு எங்களுடைய கழகத்தின் தலைவருக்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாவட்ட அளவில் இயங்கிக் கொண்டிருந்த வேளாண்மை ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் அனைத்தையும் கலைத்து விட்டு தனி அலுவலர் மூலமாகச் செயல்படுகின்ற ஒரு முறையினை இன்றைக்கு ஆட்சியாளர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

[பிற்பகல் 6-00]

இதில் ஆட்சியாளர்கள் எந்தக் காரணத்தைச் சொன்னாலும் அதிலே உள்ள உள்நோக்கம், இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ஏற்கனவே பொறுப்பேற்று இருப்பவர்கள் ஆளும் கட்சிக்குச் சாதகமாக இல்லாதவர்கள் என்பதை மனதில் கொண்டு தான் கலைத்தார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களையெல்லாம் கலைத்துவிட்டு இன்றையதினம் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களை இனி நுழைக்க வேண்டும் என்ற உள்நோக்கத்துடன்தான் எல்லா ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களையும் கலைத்து, தனி அலுவலர்களை நியமித்திருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவையில் இருப்பவர்களும் அறிவார்கள், இந்த மேலவையில் இருக்கிற உறுப்பினர்களும் அறிவார்கள்.

மேலெழுந்தவாரியாகச் சொல்லும்போது, பல புகார்கள் இருக்கின்ற காரணத்தால்தான் இவைகளைக் கலைத்துவிட்டு நாங்கள் இதைச் சீரமைக்க இருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கம் தந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் ஒன்றைத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். மாவட்ட அளவில் இயங்கிக்கொண்டிருந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் எந்த விற்பனைச் சங்கம் ஒழுங்காகச் செயல் படவில்லையோ அதை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, அப்படி ஒழுங்காகச் செயல்படாத நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்கவோ, அந்தச் சங்கத்தைக் கலைத்துவிட்டு தனி அலுவலாளர் ஒருவரை நியமிக்கவோ ஏற்கெனவே உள்ள 1959 ஆம் ஆண்டுச் சட்டத்திலே இடமிருந்தும், அந்த முறையைக் கையாளாமல், ஒட்டுமொத்தமாக இப்படி எல்லா விற்பனைக்கூடங்களையும்



கலைப்பது மக்கள் மீது நம்பிக்கை இல்லாதவர்கள் செய்யக் கூடிய காரியமாகத்தான் அமையும் என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மேலும் இந்த அமைப்பில் உற்பத்தியாளர்களிலிருந்து மூன்று பேரைப் புதிதாக நியமிக்கக்கூடிய கமிட்டியில் இடம் பெறச் செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 'நோட்டிபிகேஷன்' செய்யப்பட்டுள்ள 'ஏரியா'விலிருந்து உற்பத்தியாளர்கள் 3 பேர் நியமிக்கப்பட வேண்டும் என்று சொல்லுவதைவிட, ஏற்கனவே ஒழுங்குமுறை விற்பனைச் சங்கத்தில் அங்கத்தினராக இருப்பவர்களிலிருந்து 3 பேரை நியமிப்பதுதான் அனுபவம் வாய்ந்தவர்களை அந்தக் கமிட்டியில் இடம் பெறச் செய்வதற்கு வாய்ப்பாக அமையுமே தவிர, அதைவிட்டுவிட்டு உற்பத்தியாளர்களிலிருந்து 3 பேர்களை நியமிப்பது என்று சொன்னால் ஆளும் கட்சியைச் சேர்ந்த யாரோ ஒரு மூன்று பேரை இதில் போடுவதற்காகத்தான் 'உற்பத்தியாளர்கள்' என்ற வார்த்தையை இந்த மசோதாவில் கொண்டு வந்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போலவே தனி அலுவலர்கள் புதிதாக விற்பனைக் கமிட்டி உறுப்பினர்களை நியமிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தத் தனி அலுவலருடைய பதவிக்காலம் 2 ஆண்டுகள் அல்லது இடையிலே முடிந்துவிட்டால் உடனே அந்தப் புதிய கமிட்டிப் பொறுப்புக்கு வரக்கூடிய வகையில் அந்தக் கமிட்டி அமைக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதில் என்ன நியாயம் இருக்க முடியும்? நேர்மையாக, ஒழுங்காக இந்த விற்பனைச் சங்கங்களை செயல்படுத்த வேண்டும் என்று ஆட்சியாளர்கள் நினைப்பார்களானால், அவர்கள் தனி அலுவலரின் காலத்திலேயே, அந்த இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே தேர்தல் நடக்க வேண்டும் என்று விதியில் சேர்த்திருக்க வேண்டும் அல்லது தனி அலுவலர் பதவிக் காலம் முடிந்த உடனே, புதிய கமிட்டி உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும் என்று விதியில் சேர்த்திருப்பார்களானால், அது முறையாக இருக்குமே தவிர, ஆளும் கட்சியினர் அந்தப் புதிய கமிட்டியில் இடம் பெற்று, தனி அலுவலர் பதவிக்காலம் முடிந்தவுடனேயே அந்தப் புதிய கமிட்டியே மீண்டும் பொறுப்புகளை ஏற்கின்றது என்றால், அப்பட்டமாக ஆளும் கட்சியினைச் சேர்ந்தவர்களுக்குப் பொறுப்பு அளிக்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில்தான் இந்த விற்பனைக் கூடங்கள் அனைத்தையும் கலைத்தார்கள் என்று குற்றம் சுமத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இதில் தேர்தலைப்பற்றிச் சொல்லவில்லை. ஏற்கெனவே இருக்கிற சட்டத்தின் அடிப்படையிலேயே தேர்தலை நடத்தலாம் என்ற விதி இருக்கிறது. அந்த முறையில் செயல்படும் என்று சொல்லியிருந்தால் கூட, புதிய மசோதா வருகிறபோது, தனி அலுவலர்

காலத்தில் தேர்தல் நடத்த வேண்டும் என்று சொல்லியிருக்க வேண்டும். அல்லது 2 ஆண்டுக் காலப் பதவி முடிந்தவுடன் அந்தப் புதிய கமிட்டி பொறுப்பேற்று 6 மாதத்திற்குள் தேர்தல் நடத்த வேண்டும் என்று சொல்லியிருக்க வேண்டும். அல்லது 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை அல்லது 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை உற்பத்தியாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு தேர்தல் நடத்த வேண்டும் என்ற நிலைமையை இந்த மசோதாவில் சொல்லியிருக்க வேண்டும். அதைச் சொல்லாமல் ஏதோ கார் உள்ளளவும் கடல் நீர் உள்ளளவும் இவர்களே ஆட்சியில் இருப்பதைப் போலவும் இவர்கள் தங்களுடைய கட்சிக்காரர்களையே பொறுப்பில் வைத்துக்கொள்ளலாம் என்ற அடிப்படையில் செய்வது அவ்வளவு முறைதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஏனென்றால் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கூட இங்கே குறிப்பிட்டார்கள், இடைக் காலத்திலேதான் இந்த விற்பனைச் சங்கங்கள் ஒழுங்காகச் செயல்படவில்லை என்று. அடிக்கடி ஒன்றை அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆளுநர் ஆட்சிக் காலத்தில் பலமுறை எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் ஆளுநர் அவர்களிடத்திலே இதை எடுத்துச் சொன்னோம் என்று சொன்னார்கள். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். இதைப்பற்றிக் கூட்டுறவு மசோதா வருகிறபோது, விரிவாகப் பேசலாம் என்று நான் கருதியிருக்கிறேன். மத்திய கூட்டுறவு வங்கிகளானாலும் சரி, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களானாலும் சரி, நிலவள வங்கிகளானாலும் சரி, ஏதோ திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் மிகப் பெரிய தவறுகள் எல்லாம் நடந்துவிட்டதாகக் கற்பனையை உருவாக்கி ஆளுநர் ஆட்சிக் காலத்தில் எல்லா மத்திய வங்கிகளும் கலைக்கப்பட்டன. அதைப் போலவே நிலவள வங்கிகளைச் சேர்ந்த குழுக்கள் கலைக்கப் பட்டன. அதைப் போலவே இந்த ஆட்சிக் காலத்தில் மிச்சமிருந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும் கலைக்கப்பட்டு விட்டன. கலைக்கப்பட்ட பிறகு, இன்றைக்கு இந்த அமைப்புகள் எல்லாம் எந்த அளவுக்குச் செயல்படுகின்றன என்பதை நான் விவாதிக்கக்கூடத் தயாராக இருக்கிறேன். கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர் பெருமக்களும் ஒப்புக் கொள்வர்களானால், நிதிநிலை அறிக்கை வருகிறபோது, அந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேச வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்தால் இப்போது அதைப்பற்றிக் குறிப்பிட விரும்பவில்லை.

இன்றைக்கு மிகமோசமான நிலையில் கூட்டுறவுத் துறை செயல்பட்டுக்கொண்டு வருகிறது. மக்கள் பிரதிநிதிகள் இடம் பெற்றிருந்த காலத்தில் நல்லமுறையில் நடைபெற்றுக்கொண்டிருந்த அமைப்புகள் இன்றையதினம் மோசமாகச் செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தவறுகள் நடந்திருக்கலாம். தவறுகளை ஆராய்ந்து நடவடிக்கை



எடுக்கத்தான் அமைச்சர்கள் இருக்கிறார்கள், அதிகாரிகள் இருக்கிறார்கள். தவறுகள் எங்கே நடைபெறுகின்றனவோ அவைகளைக் கண்டுபிடித்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டியது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி செய்ய வேண்டிய கடமையாகும். அதைச் செய்யாமல், ஒட்டு மொத்தமாக இன்றைக்கு எல்லா விற்பனைச் சங்கங்களையும் கலைத்திருக்கிறார்கள். அப்படிக் கலைத்துவிட்டு இந்த மசோதாவைக் கொண்டு வருவதில் பல தவறுகள் இருக்கின்றன.

தேர்தல் நடத்தப்படுவதுபற்றி சுட்டிக்காட்டப்படவில்லை. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களை உள்ளே இடம் பெறச் செய்வதற்குத்தான் வாய்ப்பு இருக்கிறது. ஊழல், ஊழல் என்ற ஒரு வார்த்தையை இதிலேயும் சொல்லி, இதில் தவறுகள் நடந்துவிட்டதாகச் சொல்லி எல்லாச் சங்கங்களையும் கலைத்திருக்கிறார்கள். ஆட்சியாளர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்வேன். நீங்கள் சாக்கடை ஓரத்திலே நின்றுகொண்டு நாற்றம் அடிக்கிறது, நாற்றம் அடிக்கிறது என்று சொல்லுவதால் பயனில்லை. நல்ல இடத்திலே நின்றுகொண்டு ஆட்சி செய்ய முற்படுங்கள். இல்லாவிட்டால், உங்களுடைய ஆட்சியின் காலம் மிக விரைவாக இறுதியை நெருங்கிக்கொண்டிருக்கிறது என்பதை மனதில் கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்து இந்த மசோதா ஒரு திருப்திகரமான மசோதா அல்ல, இதை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u> : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை அழகாகப் படம்பிடித்துக் காட்டியிருக்கிறார்கள். வேளாண்மை விளைபொருள் விற்பனைச் சட்டத் திருத்த மசோதாவின் மீது ஒரு சில கருத்துக்களை மட்டும் இந்த நேரத்தில் அவையில் அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே குறிப்பாக ஒரு சில கருத்துக்களைச் சுட்டிக்காட்டிப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இந்தச் சட்டத் திருத்தம் அவசியமானது என்பதையும் எடுத்துச் சொன்னார்கள். அதற்காக நான் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 6-10)

மேலும் இந்த வேளாண்மை விளைபொருள்கள் விற்பனைச் சட்டம் கடந்த 1935-ல் வணிகப் பொருள்களுக்குண்டான சட்டமாக முதலில் போடப்பட்டு, அதற்குப் பின் 1955-ல் வேளாண்மை விளைபொருள் சட்டமாகத் திருத்தப்பட்டு, அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இன்று 1959 ஆம் வருடச் சட்டத்திலே சில திருத்தங்களைக் கொண்டுவந்திருக்

கிறேம் என்றால், அதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. அந்தக் காரணங்களை ஒட்டுமொத்தமாகச் சொல்ல வேண்டுமென்றால், இந்த அவையில் நேரம் வீணாகும் நிலையாகிவிடும். ஏனென்றால் அவ்வளவு தூரம் ஒழுங்கீனங்கள் விற்பனைக் கூடங்களிலே ஏற்பட்டிருக்கின்றன. தலைவர்களாக இருந்தவர்கள் எப்படிப்பட்ட காரியங்கள் செய்திருக்கிறார்கள் என்பதற்கான குறிப்புகள் இப்போது என்னிடத்திலேயே இருக்கின்றன. இருக்கக்கூடிய அத்தனை விற்பனைக் கூடங்களிலே பல விற்பனைக் கூடங்களிலே இருந்த தலைவர்கள் பல்வேறு ஒழுங்கீனங்கள செய்திருக்கிறார்கள் என்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. மேலும் அவர்கள் பதவிக் காலம் முடிந்து பல ஆண்டுகளுக்குப் பின்னரும் அவர்கள் தொடர்ந்து இருந்த காரணத்தினாலேதான், அந்தக் கமிட்டிகளை நாம் இன்று கலைக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

வேளாண்மை விளைபொருட்களை வாங்குவதையும், விற்பதையும் மேலும் சிறந்த முறையிலே முறைப்படுத்துவதற்கு, வேளாண்மை விளைபொருட்கள் விற்பனைச் சட்டத்தை 1959 ஆம் ஆண்டு அரசு இயற்றியது.

இந்தச் சட்டத்தின் கீழ் பல்வேறு மாவட்டங்களில் விற்பனைக் குழுக்களை அரசு அமைத்துள்ளது. தரகர்களின் குறுக்கீடு இல்லாமல் உற்பத்தியாளர்கள் தங்களுடைய பொருட்களை நல்ல விலையில் விற்பதற்கும், விற்பனைக்காக உபயோகப்படுத்தப்படும் எடைக்கற்கள், தராசு போன்றவைகளால், விவசாயிகள் ஏமாற்றப்படாமலிருப்பதற்கும், பொருள்களை விற்றவுடன் உடனடியாக விவசாயிகள் பணம் பெறுவதற்கும் தேவையான வசதிகளை விவசாயிகளுக்கு அளிப்பதே விற்பனைக் குழுக்களின் நோக்கங்களாகும். இதற்காக ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களை அமைப்பது விற்பனைக் குழுக்களின் கடமையாகும். வேளாண்மை விளைபொருள் விற்பனைச் சட்டம் பல ஆண்டுகளாக அமுலில் இருந்தபோதிலும், இதுநாள் வரை 170 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களே அமைக்கப்பட்டுள்ளன. விற்பனைக் குழுக்களின் தலைவர்களாகவும் உறுப்பினர்களாகவும் பணியாற்றி வந்தவர்கள் புதிய விற்பனைக்கூடங்களை, மேலும் அதிக அளவில், அமைப்பதற்கு திட்டம் எதுவும் தீட்டவில்லை. அவர்கள் விற்பனைக் குழுக்களின் முன்னேற்றத்திற்கான வளர்ச்சித் திட்டங்களில் போதிய கவனம் செலுத்தவில்லை.

மாவட்ட ஆட்சியாளர்களின் முன் அனுமதி பெற்று விற்பனைக் கூடங்களுக்கு தேவையான நிலங்களையும், கட்டிடங்களையும் வாங்குவதற்கு விதித்துறைகளில் வகை செய்யப்பட்டிருந்தும் விற்பனைக் குழுக்களின் முன்னாள் தலைவர்களும் உறுப்பினர்களும், விற்பனைக்



கூடங்களின் வளர்ச்சியில் போதிய அளவிற்கு ஆர்வம் காட்டவில்லை, 1975ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் விற்பனைக் குழு அமைக்கப்பட்டது. ஆனால் இது நாள் வரை அந்த மாவட்டத்தில் ஒரு விற்பனைக் கூடத்தையும் அமைப்பதற்கு சேலம் விற்பனைக் குழு எந்தவிதமான முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை. மற்ற மாவட்டங்களிலும் குறிப்பாக செங்கற்பட்டு, வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தருமபுரி, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்ட ஒழுங்கு முறை விற்பனைக்கூடங்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவாகவே இருக்கிறது.

ஏற்கனவே அமைக்கப்பெற்றுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் போதிய வசதிகள் செய்யப்படவில்லை. விவசாயிகளின் நன்மைக்காக கிடங்குகளை அமைப்பது, அவர்கள் தங்குவதற்கு வசதி செய்து கொடுப்பது, அவர்கள் கொண்டுவரும் பொருள்களுக்கும், அவர்கள் பெறும் பணத்திற்கும் போதிய பாதுகாப்பு அளிப்பது, அவர்களுக்கு சிற்றுண்டிச் சாலைகளை அமைத்துக் கொடுப்பது, அவர்களுடன் வரும் கால்நடைகளுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுப்பது போன்றவற்றில் விற்பனைக் குழுக்களின் முன்னாள் தலைவர்களும் உறுப்பினர்களும் எந்த விதமான கவனமும் செலுத்தவில்லை. விவசாயிகளுக்கும், விற்பனையாளர்களுக்கும் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தால் தான், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அதிக அளவில் வேளாண்மை விளைபொருள்கள் விற்பனைக்குக் கொண்டு வரப்படும் என்ற அடிப்படை உண்மையை விற்பனைக் குழுக்களின் தலைவர்களாகவும் உறுப்பினர்களாகவும் பணியாற்றி வந்தவர்கள் உணரவில்லை. அவர்கள் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் இருக்கும் வசதிகளைப் பெருக்குவதற்கு ஓர் ஒருங்கிணைந்த திட்டத்தைத் திட்டவில்லை.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மூலமாகப் பொது வசதிகளைப் பெருக்குவதற்குப் பதிலாக அவர்கள் தங்களுடைய வசதிகளைப் பெருக்கிக் கொண்டார்கள். விற்பனைக் குழுக்களின் தலைவர்கள் தங்களுடைய சுயநலத்திற்காகச் செயல்பட்டு, சொத்துச் சேர்த்துக்கொண்டார்கள் என்ற புகார்கள் வந்திருக்கின்றன.

விற்பனைக் குழுவிற்கு உரியமுறையில் உரிமையாக்கிக் கொடுக்கப்படாத நிலத்தின் பேரில் எந்த வேலையும் தொடங்கலாகாது என்று தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் விற்பனை விதித் துறைகள் கூறுகின்றன. ஆனால் வட ஆற்காடு விற்பனைக் குழு, செங்கம் விற்பனைக்கூடத்திற்காக வாடகைக்கு எடுத்த நிலத்தில் ரூ. 48,000 மதிப்புள்ள கட்டிடங்கள் கட்டியுள்ளது. அந்தக் குழுவின் செயல்

[திரு. ப. குழந்தைவேலு] [1978 செப்டம்பர் 12

தவறானது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதுபோல விற்பனை குழுவினது தலைவர்களின் மீதான பலவித குற்றச்சாட்டுகள்பற்றி அரசுக்குப் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக பயணப்படி வாங்குவதிலும், விற்பனைக் குழுவிற்குச் சொந்தமான மோட்டார் வண்டிகள் மற்றும் தொலைபேசிகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதிலும் அக்குழுக்களுக்கு ஊழியர்களை நியமிப்பதிலும் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. வட ஆற்காடு மற்றும் தஞ்சாவூர் விற்பனைக் குழுக்களின் முன்னாள் தலைவர்களின் மீது வந்துள்ள குற்றச் சாட்டுகளை விசாரணை செய்து ஓர் அறிக்கை அரசுக்கு அனுப்ப வேண்டுமென்று காவல் துறையினர் கேட்டுக்கொள்ளப்பட்டனர். வட ஆற்காடு விற்பனைக் குழு சம்பந்தமாகக் காவல் துறையிடமிருந்து இன்னும் அரசுக்கு அறிக்கை வரவில்லை. தஞ்சாவூர் விற்பனைக் குழுவின் தலைவராக இருந்தவரைக் குறித்து காவல் துறையிடமிருந்து அரசுக்கு சில குறிப்புகள் கிடைத்துள்ளன. அவர் விற்பனைக் குழுவிற்குச் சொந்தமான மோட்டார் வண்டியையும் தொலைபேசியையும் தவறாகப் பயன்படுத்தினார் என்றும், விற்பனைக் குழுவின் அலுவலகத்தில் இருந்த சமயத்தில் மது அருந்துவார் என்றும் காவல் துறையின் குறிப்புகள் கூறுகின்றன. வட ஆற்காடு விற்பனைக் குழுவின் முன்னாள் தலைவர் அவர்கள் தன்னுடைய மகளின் திருமணத்தை 1974 ஆம் ஆண்டு மே மாதம் நடத்தினார் என்றும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. விற்பனைக்கூட அலுவலகத்தில் நடத்தினார் என்றும், அதற்கு ஏற்பட்ட மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்தவரையிலும், விற்பனைக் குழுவின் தலைவராக இருந்தபோது கட்டவில்லை, அந்தக் குழு மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்ட பிறகும் இன்னும் கால தாமதம் செய்து வருகிறார் என்றும் தெரிகிறது. அவர்கள் கட்ட வேண்டிய தொகை ரூ.3,989.25.

வேளாண்மை விளைபொருள்கள் விற்பனைத் துறையில் விவசாயி களின் நன்மைக்காக போதிய வசதிகள் அளிக்க, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருட்கள் விற்பனைச் சட்டத்தை விரிவாகத் திருத்துவது குறித்து அரசு விரிவாகப் பரிசீலித்து வருகிறது. இதற்குத் தனி அடங்கல் சட்டம் ஒன்றை 'காம்ப்ரஹென்சிவ் லெஜிஸ்லேஷன்' கொண்டு வர உத்தேசிக்கப் பட்டிருக்கிறது.

மேலும் இங்கே பல கருத்துக்களை எல்லாம் எடுத்துச்சொன் னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசினார்கள். பின்னர் திரு. தாமோதரன் அவர்கள் பேசினார்கள். பின்னர் திரு. நல்லசிவம் அவர்கள் பேசினார்கள். அவர்களுக்குப் பின்னர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் பேசினார்கள். அவர்கள் எல்லோரும் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.



1978 செப்டம்பர் 12] [திரு. ப. குழந்தைவேலு]

குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு ஏ. ஆர் தாமோதரன் அவர்கள் சொல்லுகின்ற நேரத்தில், 24-வது செக்ஷன் இதற்கு வழிவகை செய்கிறது என்று சொன்னார்கள். ஒரு மார்கெட்டிங் கமிட்டியைக் கலைக்க வேண்டுமென்றால், Supersede தான் பண்ண வேண்டுமென்று சொன்னார்கள். இந்த 24-வது செக்ஷனை வைத்துக்கொண்டு செய்திருக்கலாமே, ஏன் இந்தச் சட்டத் திருத்தம் வேண்டுமென்று சொன்னார்கள். அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். 24—வது செக்ஷன்படி அவர்களுக்கு show cause notice கொடுத்து, அவர்கள் கோர்ட்டுக்குச் சென்று அங்கே ஸ்டே வாங்குவதன் மூலம் அவர்கள் தலைவராக இருக்கும் நிலைமைதான் ஏற்படுகிறது. இவர்கள் மீது குற்றச்சாட்டு வந்தும், அவர்கள் கால கெடு முடிந்து போனாலும், வீணாக காரண மில்லாமல் அவர்களாகவே தலைவராக இருப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டு விடுகிறது. ஆகவே ஆளுநர் மூலமாக இந்த ஆர்டினன்ஸ் கொண்டுவரப்பட்டு இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். இருந்தாலும் இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு தாமோதரன் அவர்கள் பேசுகிறபோது, அந்தத் தலைவர்கள் என்னென்ன குற்றங்கள் செய்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் இந்த அவையினர் தெரிந்துகொள்ளவேண்டிய சூழ்நிலைகள் இருக்கின்றன என்றார்கள். பொதுமக்கள் தெரிந்துகொள்வார்கள், ஆகவே அதையெல்லாம் வெளிப்படுத்தலாம் என்றார்கள். உண்மையில் வரிசையாகச் சொல்லவேண்டுமென்றால், எத்தனையோ ஒழுங் கீனங்கள் நடந்திருக்கின்றன. இந்த ஒழுங்கீனங்களைப்பற்றி வரிசையாகச் சொல்ல முடியும். நான் வட ஆற்காடு மாவட்டத்தில் நடந்ததுபற்றிச் சொன்னேன், அங்கு ரூ. 3,089.30—க்கு தவறு நடந்திருக்கிறது.

<u>திரு ஆற்காடு நா. வீராசாமி</u> : தலைவர் அவர்களே, ஒழுங்கீனங்கள் என்று அரசு அதிகாரிகளால் எழுதி வைக்கப் பட்டிருக்கிறது. அந்தத் தலைவர் மீது இந்த அரசாங்கம் வழக்குப்போட்டு, திரும்ப அந்தத் தொகையை வசூலிக்க வேண்டும். அதைத்தான் மாண்புமிகு அங்கத்தினர் திரு ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டுப் பேசினார்கள். வழக்குகள் போடுகின்றீர்கள், ஆனால் அந்த வழக்குகள் நீதி மன் றத்திலே நிற்பதில்லை. இந்த அளவில் இந்தக் குற்றச்சாட்டை இந்த அவையிலே இல்லாத உறுப்பினர்கள் மீது சொல்வது, இந்தச் சட்ட முன்வடிவு விவாதத்தில் குறிப்பிட்டுச் சொல்வது மரபும் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீதிமன்றத்தில் வழக்குப் போட்டு குற்ற வாளிகளைத் தண்டிக்க வேண்டும். அதற்குப் பதிலாக இங்கு ஒரு பட்டியலைப்படிப்பது முறைதானா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் சொல்வது ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்ற ஒன்றுதான். மேலும் இந்தத் தொகையை அந்தத் தலைவர் அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ரூ. 3,089-30 செலவாயிருக்கிறது. அவருடைய மகளுடைய திருமணத்தை விற்பனைக் கூட அலுவலகத்தில் நடத்தியபோது விளக்குகள் எரித்ததற்காக ஆன செலவுதான் அந்தத் தொகை ரூ. 3,089-30.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே ஒப்புக்கொண்டிருப்பது என்று சொல்கின்றார்கள். அந்தத் தொகையை வசூலிக்க அரசாங்கம் வழி செய்ய வேண்டும். அதற்காக குழுவையே கலைத்துவிடுவது நியாயமல்ல. ஏற்கனவே அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கின்றார்கள் என்று சொல்லும்போது அந்தத் தொகையை வசூலிக்க என்னென்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறீர்கள்? அதை ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லி, குறிப்பாக அந்த மார்கெட்டிங் கமிட்டியையே கலைப்பது நல்லதல்ல என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 6-20)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மன்னிக்க வேண்டும். நான் அந்தத் தொகையை வைத்து மட்டுமே அந்த விற்பனைக் குழுவைக் கலைத்துவிட்டோமென்று சொல்லவில்லை. வரிசையாகப் பல காரணங்கள் இருக்கின்றன. அவைகளைச் சொன்னால், மாண்புமிகு உறுப்பினரவர்களே யோசிப்பார்கள், இவ்வளவு குற்றச்சாட்டுகளா என்று. ஆனாலும் வரிசையாகச் சொல்கிறேன். தஞ்சை மாவட்டக் குழுவினுடைய தலைவர், அந்தக் குழுவிற்குச் சொந்தமான காரை தன்னுடைய சொந்த உபயோகத்திற்காக, தன்னுடைய இல்லத்திலேயே—திருக்காட்டுப்பள்ளியிலே வைத்திருந்தார். அந்தக் காரை வெளியில் எடுத்துச் சென்றபோது, பயணப்படி வாங்கியிருக்கிறார். இப்படி வரிசையாக குற்றச்சாட்டுகளை எடுத்துக்காட்ட முடியும். அதற்குண்டான ஆதாரங்கள் வைத்திருக்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தச் சங்கத்தினுடைய தலைவர் பயன்படுத்திய காரைப்பற்றிச் சொல்கிறார்கள். பொதுவாக சங்கத்தினுடைய தலைவர்கள், இப்படிப்பட்ட சங்கங்களிலுள்ள கார்களை, அவர்கள் அலுவலகப் பணியின் காரணமாகப் பயன்படுத்துவது முறையாக இருந்து வருகிறது. அப்படித்தான் இவரும் பயன்படுத்தி வந்திருப்பாரென்று நினைக்கிறேன். பாரதி கமிஷன் என்று ஒன்று போட்டார்கள். அந்த கமிஷனிலே, என்மீதுகூட ஒரு குற்றச்சாட்டு. மத்திய வங்கியில் நான் இருந்ததால், சொல்லப்பட்டது.



1971லிருந்து 1976 வரை மொத்தம் ஒரு காரைப் பயன்படுத்தினேன் என்றால், அந்த வருடங்களில் ஏற்பட்ட பெட்ரோல் செலவு, கார் மெயின்டனன்ஸ் செலவு அத்தனையும் சேர்த்து, ஆட்சேபணை தெரிவித்தார்கள். அதை வைத்துக்கொண்டு சர்-சார்ஜ் போட்டிருக்கிறார்கள். இடைக் காலத்தில், 1971 லிருந்து 1976 வரை......

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. சோ. ஆறுமுகம் : அதுபோல அவர் காரைப் பயன்படுத்தியது அலுவலகப் பணிக்கா, இல்லையா என்பது தீரப் பரிசிலிக்கப்பட்டதா என்று அமைச்சரவர்கள் தெரிவிக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அவைகளையெல்லாம் பரிசீலனை செய்துதான் சொல்கிறேன். பயணப்படி பெற்றது, தன்னுடைய அலுவலகத்திலேயிருந்து தலைவராக சென்றதற்கல்ல. வெளியே சொந்த வேலைகளுக்காகச் சென்றபோது, பயணப்படி பெற்றிருக்கிறார் என்பதைத்தான் குற்றச்சாட்டாக வைக்கிறேன். அது மட்டுமல்ல. இன்னொரு குற்றச்சாட்டையும் சொல்ல விரும்புகிறேன். அங்கே ஒரு சுருக்கெழுத்தாளரை நியமித்திருக்கிறார். அவருடைய பெயர் செல்வி கிரிஜா. செல்வி கிரிஜா என்பவரைச் சுருக்கெழுத்தாளராக நியமித்ததோடு மட்டுமல்ல. அவருக்குக் குறைந்த படிப்புத் தகுதியில்லை. அப்படிப்பட்ட ஒருவரை சுருக்கெழுத்தாளராக நியமித்திருக்கிறார். இது விதிமுறைக்கு முரணானது. அடுத்து, ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தின் தலைவராக வருபவர் சட்டப்படி விவசாயியாக இருக்க வேண்டும், ப்ரொட்யூசராக இருக்க வேண்டுமென்று சட்டத்திலே போடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தத் தலைவர், வட ஆற்காடு ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தின் தலைவர், அந்தக் கமிட்டியின் உறுப்பினராகச் சேரும்போது விவசாயி இல்லை. விவசாயி அல்லாத ஒருவர் அந்தக் கமிட்டியிலே மெம்பராகி, அதற்குப் பின்னிட்டு அதன் தலைவராகியிருக்கிறார். தலைவரான பின்னாலே நிலங்கள் வாங்கப்பட்டிருக்கின்றன. நிலங்கள் வாங்கியதோடு மட்டுமல்ல, அதற்குப் பிறகு கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. கட்டிடங்கள் கட்டியதோடு மட்டுமல்ல. தனக்கென்று சொத்து சேர்த்திருக்கிறார் என்ற விவரங்களெல்லாம் இருக்கின்றன. லட்சக் கணக்கில் சொத்துக்கள் சேர்த்துக்கொண்டிருக்கிறாரென்ற விவரங்கள் என்னிடம் இருக்கின்றன. வேண்டுமென்றே எதிர்க்கட்சிக்காரர்கள் என்பதால் நாங்கள் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகச் சொல்லுகிறோமென்று கருத வேண்டாம்.

(திரு. ஆற்காடு நா. வீராசாமி எழுந்தார்.)

[1978 செப்டம்பர் 12

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறுக்கிடுவதற்கு எத்தனை முறை அனுமதிப்பது? இப்படி அடிக்கடி கேட்டால் எப்படி?

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அவையிலே எத்தனையோ சட்ட முன்வடிவுகள் விவாதிக்கப்பட்டதைப் பார்த்திருக்கிறோம். இப்படி ஒரு அமைச்சர், சட்ட முன் வடிவின்மீதான விவாதத்தின் போது குற்றச்சாட்டுக்களைச் சொன்னதாக நினைவில்லை. அந்த அவையிலேகூட நான் 10 ஆண்டுகாலம் இருந்திருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் கேட்டார்கள். அதற்குத்தான் அமைச்சரவர்கள் பதில் சொல்கிறார். அவையிலே கேட்ட பிறகு, அமைச்சர் சொல்வதை எப்படித் தடுக்க முடியும்?

திரு. ஆற்காடு நா. வீராசாமி : ஒரு சிறு விளக்கம் கேட்க விரும்புகிறேன். வட ஆற்காடு மாவட்ட சங்கத் தலைவர், நிலமில்லாமலேயே, அந்தச் சங்கத்தின் தலைவராயிருக்கின்றாரென்று அமைச்சவரவர்கள் சொன்னார்கள். நான் கேட்பது, அந்த உறுப்பினர் அப்படிச் செய்தாலும், அவரைத் தலைவராக்கக்கூடிய அளவிற்கு அன்றைய தினம் அரசாங்க அதிகாரிகளும் ஒப்புக்கொண்டு, உத்தரவுகள் போட்டிருக்கிறார்கள் அல்லவா? இப்போது 'நான்-அபிஷியல்' மீது நடவடிக்கை எடுக்கிறீர்கள். அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கின்றீர்களா என்று அறிய விரும்புகிறேன். அப்படி அவர் நியமிக்கப்பட்டதை அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறது. அதற்கு அதிகாரிகள் ஒப்பம் இட்டிருக்கிறார்கள் என்று பொருள். எனவே சட்டத்தை மீறி, அதிகாரிகள் தவறு செய்யும்போது, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அதிலே யார் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்களோ அவர்கள் மீதெல்லாம் நடவடிக்கை எடுக்கிறோம். அதுமட்டுமல்ல. தஞ்சை விற்பனைக் குழுத் தலைவராக இருந்தவர் 1975-76 ஆம் வருடத்தில் விற்பனைக் குழு வரவு - செலவுத் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகையைவிட 61,361-08 ரூபாய் அதிகமாகச் செலவிட்டிருக்கிறார். அது மட்டுமல்ல. அந்த விற்பனைக் குழுவைச் சேர்ந்த ஜீப்பை தானாக ஓட்டிச் சென்று, விபத்திற்கு உள்ளாக்கியிருக்கிறார். அந்த விற்பனைக் குழுவின் காரை, அவருடைய மகன் ஓட்டிச் சென்று விபத்துக்கு உள்ளாக்கியிருக்கிறார். இப்படிப்பட்ட ஒழுங்கீனங்கள் அங்கே நடந்திருக்கின்றன. அதுமட்டுமல்ல. மதுரை விற்பனைக் குழு என்று சொன்னாலும், செங்கற்பட்டு விற்பனைக் குழு என்று சொன்னாலும், மற்றுமுள்ள



1978 செப்டம்பர் 12] [திரு. ப. குழந்தைவேலு]

திருச்சி விற்பனைக் குழு என்று சொன்னாலும், அத்தனை விற்பனைக் குழுக்களிலும் ஒழுங்கீனங்கள் இருக்கின்றன. இப்படிப்பட்ட ஒழுங்கீனங்களோடு ஒழுங்கு முறை விற்பனைக் கூடமாகச் செயல்பட்டு வந்தவைகளையெல்லாம் மாற்றி, அவைகளை 'சூப்பர்சீட்' செய்து, அதற்குப் பின்னிட்டு இந்த நல்ல சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அதனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள சொன்னதுபோல் 'கார் உள்ளளவும், நீர் உள்ளளவும், நிலம் உள்ளளவும்' ஆளுங்கட்சியினரே இருக்க வேண்டுமென்று எண்ணவில்லை. அவர்களுக்குப் பணிவன்போடு சொல்லிக்கொள்கிறேன். 'கார் உள்ளளவும்' என்று சொல்லும்போது எனக்கு ஏற்பட்ட எண்ணமெல்லாம் வட ஆற்காடு மாவட்டக் குழுத் தலைவர் வைத்திருந்த கார்தான்; 'கார் உள்ளளவும்' என்று சொல்லும் போது. தஞ்சை மாவட்டத் தலைவரின் மகன் ஏற்படுத்திய கார் விபத்துதான் என் நினைவிற்கு வந்தது. தயவு செய்து தாங்கள் நி ரைப்பதுபோல் ஆளுங்கட்சியில் உள்ளவர்கள் 'கார் உள்ளளவும், நீர் உள்ளளவும், நிலம் உள்ளளவும்' இருக்க வேண்டுமென்று இந்தத் திருத்தத்தைக் கொண்டு வரவில்லை என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் திரு. நல்லசிவம் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. சோ. ராமலிங்கம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சவரவர்கள் தஞ்சை மாவட்டத்தைப்பற்றித்தான் சொன்னார்கள். மற்ற மாவட்டங்களைப்பற்றிச் சொன்னால், தெரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவம் அவர்கள் சிறு விவசாயிகளுக்கு அதிகமான பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை அரசு பரிசீலிக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் நல்ல யோசனைகளையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஊறு விளைவிக்கும் இடைத் தரகர்களின் போக்கை ஒழிக்க இந்தச் சட்டத் திருத்த மசோதா கொண்டுவரப் பட்டிருக்கிறது. எனவே இதை மேலவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1978 ஆம் ஆண்டு, வேளாண்மை விளைபொருள் விற்பனை (திருத்தம், தனி விதித் துறைகள்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

[1978 செப்டம்பர் 12

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை, அவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

''சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப் பட்ட தமிழ் நாடு, 1978 ஆம் ஆண்டு, வேளாண்மை விளை பொருள் விற்பனை (திருத்தம், தனி விதித் துறைகள்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1978) நிறைவேற்றப்பட வேண்டும்''
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

''சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1978 ஆம் ஆண்டு, வேளாண்மை விளைபொருள் விற்பனை (திருத்தம், தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1978) நிறைவேற்றப் பட வேண்டும்''

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(பிற்பகல் 6-30)

(2) 1978 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 28/1978).

மாண்புமிக திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு தலைவர் அவர்களே,

''சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1978 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்''
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்.

---

272-273..ஆம் பக்கங்களில் இணைப்பு IIஆக அச்சிடப்பட்டுள்ளது.



1978 செப்டம்பர் 12] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

''சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1978 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.''

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

திரு. வே. தங்கப்பாண்டியன் ; மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சரால் இன்றைய தினம் கொண்டு வரப்படும், மதுரை மாநகராட்சி, மற்றும் சென்னை மாநகராட்சி பற்றிய இரண்டு சட்டமுன் வடிவுகளையும் ஒன்றாக இணைத்து என்னுடைய கருத்தைச் சொல்ல வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுகொள்கிறேன்.

மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், மதுரை மாநகராட்சி திருத்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து, அதன் தொடர்பாக சென்னை மாநகராட்சி சட்ட முன்வடிவையும் முன்மொழிய இருக்கிறார்கள். மதுரை மாநகராட்சித் தேர்தல் நடைபெற்று, ஆளும் கட்சியாக இருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதில் வெற்றியும் பெற்றிருக்கிறது. அதை ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்திருக்கிற அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில் மதிக்கிறோம். அதைப் போலவே ஜனநாயக வாய்ப்புகளும் வசதிகளும் வேறு பல உள்ளாட்சி களுக்கும் வரவேண்டுமென்ற நல்லெண்ணத்தை இந்த மசோதா வின் மீது பேசுகிறபோது தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்தப் பதவிக்கு வந்தவுடனே மனப்பூர்வமாகப் பாராட்டியவர்களில் நானும் ஒருவன். ஆனால் என்க்குள்ள ஆதங்கமெல்லாம், ஒன்றே ஒன்று, கண்ணே கண்ணு என்று மதுரை மாநகராட்சிக்கு மட்டும் தேர்தலை நடத்திவிட்டு, அதற்கு ஒருவரை மேயராக்கிவிட்டு, தமிழ் நாட்டில் ஜனநாயகத்திற்கு ஒரு படிக்கட்டாக நாங்கள் வந்திருக்கிறோம் என்ற பெருமையை ஆளும் கட்சி சொல்லிக் கொண்டிருக்கிறது.

ஆனால் மதுரை, சென்னை ஆகிய இரண்டு மாநகராட்சி களுக்கும் இங்கே சட்ட முன்வடிவு வந்திருக்கிறது. மதுரை மேயருடைய பதவிக்காலம் இரண்டு ஆண்டுகளாக நீட்டிக்கப் பட்டிருக்கிறது. சென்னை மாநகராட்சிக்குத் தேர்தல் நடந்து, அந்தத் தேர்தல் நடந்த பின்பு, மேயர் தேர்தல் நடைபெற்று, அவருடைய பதவிக் காலம் இரண்டாண்டுகளுக்கு வர வேண்டும் என்று முன் யோசனையாக இப்போதே அரசாங்கம் முறைப்படி சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறது. மொத்தப்

பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன், மதுரை தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்பு, அதற்குரிய அறிவிப்புகளும் கெஜட்டில் வந்த பிறகு, மேதகு ஆளுநரின் மூலமாக அவசர அவசரமாக ஒரு அவசரச் சட்டத்தை ஏன் பிறப்பித்தார்கள் என்று. இதிலே எத்திக்ஸ் இருக்கிறதா என்று கேட்கிறேன். தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பின்பு, அதுவும் முறைப்படி கெஜட்டில் அறிவிப்பு வந்த பின்பு. அதன் தொடர்பாக, தேர்தலைப் பாதிக்கிற வகையில், வேறு ஒரு அறிவிப்பு வருவது என்பதை நடைமுறையிலே இதுவரை யாரும் பின்பற்றியதாகத் தெரியவில்லை. உள்ளாட்சித் துறை சார்பாக, மேதகு ஆளுநர் அவர்கள் சில சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்தார்கள். ஒன்று மதுரை மாநகராட்சிக்குச் சென்றிருக்கிற [வீக்கர் செக்ஷன்ஸ்] பெண்களின் எண்ணிக்கை 3 பேர் என்பதை 5 பேராகவும். அரிசனங்கள் அல்லது ஷெட்யூல்ட் கேஸ்ட், ஷெட்யூல்ட் டிரைப்ஸ் ஆகியவர்களின் எண்ணிக்கை 3 பேராக இருந்ததை 5 பேர் என்றும் ஆக்கினார்கள். அரிசனங்களுக்கும், பெண்களுக்கும் அதிக வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. அதிலே இரண்டுபட்ட கருத்து யாருக்கும் இல்லை. அரிசனங்களுக்கும், பெண்களுக்கும், அதிக வாய்ப்புக்களைக் கொடுப்பது நல்லதுதான், வரவேற்கத்தக்கது. ஆனால் இந்தச் சாதாரணமானவைகளைக் கூட அவசர சட்டத்தின் மூலமாகத் தான் நம்முடைய அரசாங்கம் கொண்டுவர வேண்டுமா? தேர்தல் நடப்பதற்கு முன்பே கொண்டு வந்திருக்கலாம்.

சென்னை மாநாராட்சித் தேர்தலைப்பற்றிக் கேட்டபோதெல்லாம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், "சட்டநாதன் குழுவைப் போட்டிருக்கிறோம். அது ஒரு நிபுணர் குழு. அதனுடைய பரிந்துரைகள் அரசுக்கு வந்திருக்கின்றன. அந்தப் பரிந்துரைகளைப் படித்து ஆராய்ந்து தெளிந்த பிறகு, ஒரு முடிவுக்கு வந்து, அந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் சட்டத் திருத்தங்களை இயற்றவிருக்கிறோம்" என்று சொன்னார்கள். இந்த நேரத்திலே அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லுவதெல்லாம், அப்படி சட்டநாதன் குழுவைப் போட்டுவிட்டு அந்தக் குழு தன்னுடைய பரிந்துரைகளைச் செய்வதற்கு முன்னால் வேறு விதமாக அவசரச் சட்டம் போட்டது ஏன் என்று. "சட்டநாதன் குழு, சென்னை மாநகராட்சியின் நிர்வாகம் எப்படி நடைபெற வேண்டும் என்று பரிந்துரை சொல்ல வேண்டும். அதுவரையில் தேர்தலைத் தள்ளிப் போடுகிறோம்" என்று சொல்லப்பட்டது.

இப்போது சட்டநாதன் குழுவினர் 8 மாத காலமாக ஆராய்ந்து, பம்பாய் மாநகராட்சி, பெங்களூர் மாநகராட்சி ஆகியவைகளையெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு, இப்போது ளக்கமாக ஒரு அறிக்கை தந்திருக்கிறார்கள். அதிலே



அவர்கள் கூறியிருக்கிறார்கள், "எங்களுக்கு ஏற்பட்டிருக்கிற சிரமங்கள், குறைபாடுகள், நிர்பந்தங்கள் ஆகியவைகளுக்குப் பின்னாலும் கூட நாங்கள் எங்களுடைய சிபார்சுகளைத் தயார் செய்திருக்கிறோம். ஆனால் அரசாங்கம் எத்தனையோ குழுக்களைப் போட்டு, அந்தக் குழுக்களினுடைய பரிந்துரைகளைக் கவனிப்பாரற்று தூக்கி எறிந்துவிட்டதைப் போல் இதையும் கவனிக்காமல் விட்டுவிட்டால், எங்களுடைய முயற்சி, உழைப்பு ஆகியவைகள் வீணாகும். ஆகவே எங்களுடைய பரிந்துரைகள் நியாயமான பரிந்துரைகள். அந்தப் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள்.

நம்முடைய அமைச்சர் அவர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தல் நடைபெறாமல் இருப்பதற்குக் காரணம் கேட்டபோது "சட்டநாதன் குழுவின் பரிந்துரைகளை அறிந்த பின்பு 'காம்பிரெஹன்சிவ் லா' கொண்டு வரப்படும்" என்று சொன்னார்கள். நாங்கள் கேட்பதெல்லாம், மதுரைக்கும், சென்னைக்கும் சேர்த்துத் தான் சட்டநாதன் குழு தன்னுடைய பரிந்துரைகளைக் கொடுத்திருக்கிறது. "அந்தப் பரிந்துரைகள் மதுரைக்குப் பொருந்தி வராதா? மதுரைக்கும் பொருந்தும் அளவுக்கு ஒட்டுமொத்தமாகக் கொண்டு வந்திருக்கக்கூடாதா?" என்பதுதான்,

அரிசனங்களுக்கு அதிக இடங்கள் கொடுக்கிறோம், பெண்களுக்கு அதிக இடம் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். அதோடு அதனுடைய காலத்தையும் 6 ஆண்டுக்காலம் என்று நீட்டியிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் 5 ஆண்டுகள்தான். பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிக் காலமும் 5 ஆண்டுகள்தான். ஆனால் மதுரை மாநகராட்சிக்கு மட்டும் 6 ஆண்டுக்காலம் என்று இப்போது புதிய சட்டத்திலே கொண்டு வந்திருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்கள் ஆகியவைகளுக்கு 3 ஆண்டுக் காலம் என்றிருந்ததை 5 ஆண்டுக் காலம் என்று மாற்றி ஒட்டு மொத்தமாக எல்லாவற்றுக்கும் 5 ஆண்டுகள் என்று இருக்க வேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்ட தத்துவத்தை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இல்லாத சிறப்பு, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இல்லாத சிறப்பு இங்கே மதுரை மாநகராட்சிக்கு மட்டும் ஏன் என்று கேட்கிறேன்.

திரு. க. அறிவழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியனுக்கு இருக்கிற உரிமை, மாநகராட்சி உறுப்பிர்களுக்கும் கிடைத்திருக்கிறது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : கவுன்சிலின் எலெக்ஷனை இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை வைத்திருப்பதால், 6 ஆண்டுகள் என்று வைத்திருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக சட்டத்தைக்

கொண்டு வந்து செயல்பட வேண்டும் என்ற உணர்வு அரசுக்கு இருந்திருந்தால், இப்படிச் செய்திருக்காது. மதுரை மாநகராட்சிக்கு 65 இடங்கள் என்றால் அதில் 5 இடங்களை ரிசர்வ் தொகுதி என்றும், 5 இடங்கள் பெண்களுக்கென்றும் ஒதுக்கியிருக்க வேண்டும். அப்படியில்லாமல், தேர்தலை அறிவித்துவிட்ட பின்னாலே, பெண்களுக்காகவும், அரிசனங்களுக்காகவும் என்று இடத்தை அதிகப்படுத்தியது ஏன் என்று கேட்க விரும்புகிறேன். இந்த 'கோ-ஆப்ஷன்' ஐப் பற்றி சட்டநாதன் குழுவிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், ''அரசாங்கம் தனக்குச் சாதகமாக தன்னுடைய கருத்துக்களை வழங்கவும், அரசியல் கட்சிகள், குறிப்பாக ஆளும் கட்சி, ஆட்சி மன்றத்திலே அதிக வாக்குகளைப் பெறவும், சலுகைகளைப் பெறவும் இது வழிவகுக்கிறது. ஆகவே கோ-ஆப்ஷன் முறை நல்ல முறையல்ல. தவறான முறையில் பயன்படுத்த இது உதவுகிறது'' என்று தெளிவாக்கியிருக்கிறது.

(பிற்பகல் 6-40)

தேர்தலை அறிவித்துவிட்ட பிறகு, மதுரையிலே ஆளும் கட்சிக்கு ஒரு பயம் வந்தது. எங்கே மார்ஜினல் மெஜாரிட்டியில் வந்துவிட்டு, பிறகு மேயர் தேர்தலை முடித்து விட்ட பின்னாலே, தொந்தரவு வந்து விடுமோ என்று அஞ்சினார்கள். இத்தகைய அச்சத்தின், பயத்தின் காரணமாகத்தான் இதன் எண்ணிக்கையை அவசர அவசரமாக அதிகமாக்கினார்கள். இந்த ஆளும் கட்சிக்காரர்கள் இப்படியெல்லாம் செய்வார்கள்—இந்த அமைச்சர் கூட அப்படிச் செய்வார் என்று கருதித்தான் அவர் சொல்கிறார், ''குறைவான பெரும்பான்மையுடன் தேர்தலில் நின்ற கட்சி இந்த நியமன முறையிலே கோவாப்ஷன் முறையைப் பயன்படுத்தி, தனது கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்லது அபிமானிகளை அந்த நியமன இடங்களிலே அமர்த்தி, மன்றத்திலே தனது பெரும்பான்மைத் தன்மையைக் காட்டிக்கொள்ள வசதியாக இருக்கிறது. இப்படி இருக்கிற நியமன முறை பெரும்பான்மை கட்சிக்கு எப்போதுமே வலுவூட்டக்கூடிய வகையிலே, தன்மையிலே அமைகிறது தவறு—எதிர்க் கட்சிகளுக்கு அதிலே சற்று கூட பயனில்லை'' என்று அவர் சொல்கிறார். அவர் சொல்லியுள்ள இந்த நல்ல யோசனையைப் பரிசீலனை செய்ய வேண்டும். இந்த அரசு வேகம் காட்டக்கூடாததில் வேகத்தையும் வேகம் காட்டக்கூடியதில் வேகத்தைக்காட்டாமலும் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கோவாப்ஷன் செய்யும் அவசரச் சட்டத்தின் மூலம் ஐந்தை 10 ஆக்கியிருக்கிறார்கள். இன்னும் பல்வேறு நல்ல விஷயங்கள் சட்டநாதன் குழு அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றன. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இன்று இல்லாவிட்டாலும் எதிர்காலத்தில் இப்படி ஒன்றைக் கொண்டுவருவார் என்று சட்டநாதன் தெரிந்துதான் அதை எழுதி வைத்திருக்கிறார். அடுத்தபடியாக, மேயர் பதவிக்காலத்தை 2 ஆண்டு ஆக்கியிருக்கிறார்கள். யாருக்காக அப்படி ஆக்கினார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். யார் பதவிக்கு வந்தாலும், நாங்கள் பதவியையும் ஆளையும் பார்ப்பதில்லை. மதுரை மேயருக்கும் சென்னை மேயருக்கும் அதிகாரத்தில் வித்தியாசம் இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். உங்களுக்கு எல்லாம் தெரியும் வரி அப்பீல் கமிட்டி சேர்மேன் இருப்பது. டைரக்ட் அப்பீல், வரி அப்பீல் பண்ணினால் விசாரிப்பதற்கு சென்னை மாநகராட்சியில் சேர்மேன் ஜுடிசியல் ஆபீசராக இருக்கிறார். ஆனால் மதுரையில் அவ்வாறு இல்லை. மதுரை மாநகராட்சி மேயரிடம் தான் அந்த அதிகாரம் இருக்கிறது. ஜுடிசியல் அதிகாரியிடம் அந்த அதிகாரம் கொடுக்கப்படவில்லை.



மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மதுரையிலும் இப்பொழுது ஜுடிசியல் அதிகாரிக்குத்தான் அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : அப்படிப்பட்ட நிலைமைகள் வந்தால் மிக்க மகிழ்ச்சியடைவேன். அதைச் சட்டப்பூர்வமாக ஆக்கி இரண்டுக்குமே அதிகாரம் ஒரேவிதமாக இருக்க வேண்டும். சென்னை மாநகராட்சியும் மதுரை மாநகராட்சியும் ஒரே விதமாக இயங்க வேண்டும். வித்தியாசம் இருக்கக் கூடாது. அதேபோல சென்னை மாநகராட்சியில் மேயர் பதவியைப் பொறுத்தவரை கம்யூனல் ரொட்டேஷன் முறை இருக்கிறது. அது மதுரையிலே இல்லை. ஆகவே கார்ப்பரேஷன்கள் என்று ஏற்படுத்தி விட்டால், மாநிலத்திலே இருக்கக்கூடிய எல்லா மாநகராட்சிகளுக்கும் ஒரே விதமான சட்டம் தான் இருக்க வேண்டும். இதனை நடைமுறையில் கொண்டுவருவதற்கு அரசாங்கம் துரிதமான வழிமுறைகளைச் செய்ய வேண்டும். மேயர் பதவிக் காலம் இரண்டு ஆண்டு என்று இருப்பதுபற்றி எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபனையில்லை. இந்த நேரத்தில் 1953ஆம் ஆண்டில் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலே ஒரு மாநாடு கூட்டி அந்த நேரத்தில் காலஞ்சென்ற கலைவாணர் அவர்களுக்கு வரவேற்பு கொடுக்கப்பட்டதும், அதைத் தொடர்ந்து அவர் பேசிய வார்த்தைகளும் அப்படியே எனக்கு ஞாபகத்தில் இருக்கின்றன. ஓராண்டு பதவி என்பது வரப் போக 3 மாத காலம், விருந்துக்கு வரப் போக 3 மாத காலம், இப்படியே ஓராண்டு காலம் விரைவில் போய் விடும் என்று அவர் அன்றையதினம் சொன்னார். மேயருடைய பதவிக் காலத்தை ஓராண்டிலிருந்து இரண்டாண்டாகக் கூட்டியிருக்கிறீர்கள். இரண்டு ஆண்டுகள் அந்தக் தனிப்பட்ட நபருக்கு, மேயருக்குக் கிடைக்கிற மாதிரி வாய்ப்புகளையும் மரியாதைகளையும் நகராட்சிகளுக்கும் கட்டாயம் ஏற்படுத்தித் தர வேண்டும். இப்போது இருப்பது மாதிரி இல்லாமல், உள்ளாட்சி நிறுவனங்கள் முழுவதும் தேர்தல் நடைபெற்று அதற்குத்தான் நீங்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருக்க வேண்டும், வெறும் தனி அதிகாரிகளுக்கு நீங்கள் அமைச்சராக இருக்கக் கூடாது.

அந்தத் துறைக்கு அதாவது நம்முடைய உள்ளாட்சித் துறைக்கு இன்னும் சொல்லப்போனால் ஒரு ஜீவனை ஏற்படுத்தித் தந்ததே திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். எல்லா நகர மன்றங்களுடைய, எல்லா ஊராட்சி ஒன்றியங்களுடைய உறுப்பினர்களுடைய பதவிக்காலம் நீடிக்கப்பட இருந்தது. சென்னை மாநகராட்சியும் மதுரை மாநகராட்சியும் நீங்கள் சொல்கிற பல்வேறு காரணங்களுக்காகத் தான் கலைக்கப்பட்டதே தவிர, வேறு ஒன்றும் காரணமில்லை. 1975 ஆம் ஆண்டிலிருந்து 1978 ஆம் ஆண்டு வரை கிட்டத்தட்ட 3 வருடங்களாக உள்ளாட்சி மன்றங்களிலே பங்கு இல்லாமல் இருக்கிறது. ஆகவே இது தொடர்பாக திட்டவட்டமாக சென்னை மாநகராட்சிக்கு எப்போது தேர்தலைக் கொண்டுவரப் போகிறீர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தத் தேர்தலைக் கொண்டு வருவதற்கு முன்பாக, சட்டநாதன் குழுவினுடைய பரிந்துரைகளை எப்படிச் செயல்படுத்தப் போகிறீர்கள்? அதற்கு ஒரு புதுத் திட்டத்தைக் கொண்டுவரப் போகிறீர்களா என்பதைப் பற்றி விளக்க வேண்டும். மதுரைக்கு ஒருமுறை என்றும் சென்னைக்கு ஒருமுறை என்றும் இருக்கக் கூடாது. அரட்டி உருட்டி மிரட்டி அதன் மூலம் காரியத்தைச் செய்யும் முறைகளையெல்லாம் இப்போதைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் செய்ய மாட்டார்கள் என்று எனக்குத் தெரியும். காரணம் ஒன்றை நான் இந்த நேரத்தில் ஞாபகப்படுத்துவது தவறு இல்லையென்று நினைக்கிறேன். இதே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அமைச்சராக அல்ல, சாதாரண சட்டமன்ற உறுப்பினராக இருந்த நேரத்தில், மதுரையில் பேசுகிறபோது, அந்தக் கூட்டத்திலே தாக்கப்பட்டு, கண்பறிக்கப்பட்டால் மகிழ்ச்சியடைவேன் என்று சொன்னவர் எல்லாம் இன்றைக்கு அணைக்கும் கரங்களால் ஆதரிக்கப்பட்டு செங்கோல் கொடுக்கப்பட்டு இருக்கின்ற நிலையைப் பார்க்கிறோம். அரசியலிலே இதுமாதிரி வருவதெல்லாம் சகஜம். ஆனால் அரசியலிலே நியாயங்கள் என்றுமே செத்துவிடக் கூடாது. நிர்பந்தங்களால் நியாயங்கள் செத்துவிடக் கூடாது. யாருக்கும் அந்த நிலைமை ஒன்றும் ஏற்படாதவாறு மதுரை மாநகராட்சித் தேர்தல் நடைபெற்று முடிந்திருக்கிறது. அந்தத் தேர்தல் நடைபெற்றபோது, அதில் நடைபெற்ற அரசாங்கத்தினுடைய ஈடுபாடுகள்பற்றியெல்லாம் நான் சொல்லிக்கொள்ளத் தயாராக இல்லை. ஓரளவுக்கு அந்தத் தேர்தலை நடத்திகாட்டியதன் மூலம் ஜனநாயகத்தைக் கொடுத்திருக்கிறீர்கள், அவ்வளவுதான். ஆனால் மதுரையில் கொடுத்த ஜனநாயகத்தை சென்னையிலே கொடுக்கத் தயங்குகிறீர்கள். ஏன்? உங்களுக்கு பயம் வந்திருக்கிறது. சென்னையைப் பார்த்தாலேயே ஆளும் கட்சிக்கு ஒரு அலர்ஜி போல் இருக்கிறது. மதுரை மாநகராட்சி, சென்னை மாநகராட்சி கலைக்கப்பட்டதற்குப் பிறகு கலைக்கப்பட்டது. ஆனால் மதுரை மாநகராட்சிக்கு முன்னால் தேர்தல் நடத்தி விட்டீர்கள். ஆனால் முன்னால் கலைக்கப்பட்ட





சென்னை மாநகராட்சிக்கு இன்னும் தேர்தல் நடைபெறவில்லை. இதற்கு ஒரு முடிவு காண வேண்டும். அடுத்தபடியாக, சட்டநாதன் குழு என்று சொல்கிறீர்கள். அமைச்சர் வேறு ஒன்றைப் பற்றியும் சொன்னார். வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிப்போம் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். வாக்கு சேகரிப்பு என்றாலே, வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிப்பது என்று தான் பொருள் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியா முழுவதும் தேர்தல் நடத்தி விட்டார்கள். ஒவ்வொரு மாநிலத்திற்கும் தேர்தல் நடைபெற்றாகிவிட்டது. சென்னைமாநகராட்சிக்குமட்டும் இன்னும் தேர்தல்நடைபெறவில்லை. சென்னை மாநகராட்சித் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும். நடைபெற்ற இந்தத் திருத்தங்கள் எல்லாம் சேர்ந்து ஒட்டு மொத்தமாக வர வேண்டும். சட்டநாதன் குழு பரிந்துரைகளில் இன்னும் ஏராளமாக நல்ல காரியங்கள் இருக்கின்றன. பம்பாய் போல, டில்லி போல எல்லாக் கமிட்டிகளுக்கும் சில அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், மேயருக்கு எல்லா அதிகாரங்களையும் கொடுத்து விட்டால், அப்புறம் இந்தக் கமிட்டிகளோ இயங்காமல் போய்விடுகின்றன. கமிட்டிகளுக்கு இன்னின்ன அதிகாரங்களை வழங்க வேண்டுமென்பது பற்றியெல்லாம் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். ஆகவே உங்களுடைய கருத்தோட்டம், கண்ணோட்டம் இந்தக் காரியத்தில் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. கே. எஸ். அப்துல் வகாப் தலைமை)

திரு. ஆ. நல்லசிவம்: மாற்றுத் தலைவரவர்களே, இரண்டு மசோதாக்கள் இங்கே பரிசிலனையில் இருக்கின்றன. மதுரை பெருநகருக்கு 5 அரிசனங்கள், 5 பெண்கள் உறுப்பினர்களாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் இருக்கின்ற கருத்தினை நான் வரவேற்கிறேன். ஆனால் இந்த 5 பேரும் நியமன உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்பதை அரசு மாற்றுவதற்கு யோசனை செய்ய வேண்டும். பார்லிமெண்டுக்கும் சட்டசபைக்கும் நடைபெறும் தேர்தலில் எல்லாம் தனித்தொகுதி இருக்கிறபோது, ஏன் இந்தப்பெரு நகராட்சிக்கும் தனித்தொகுதி இருக்கக்கூடாது? இதைப்பற்றி அரசு யோசிக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் பெண்களுக்கு என்று ஜில்லா போர்டு தேர்தலிலே இருந்ததுபோல், ஒரு ஆணும் ஒரு பெண்ணும் கூட்டாக இரட்டை மெம்பர் தொகுதி அபேட்சகர்களாக போட்டியிட ஏற்பாடு செய்யலாம். நான் கூட 1953 ஆம் ஆண்டிலே ஜில்லா போர்டு தொகுதியிலே அப்படித் தேர்

தெடுக்கப்பட்டவன்தான். அதன் மூலம் அந்தப் பெண்களுக்கான ஸ்தானங்களையும் உறுதிப்படுத்த முடியும். 5 பெண்கள் தொகுதிகள் என்ற முறையில் ஏற்படுத்திக் கொடுக்கலாம். அதே மாதிரி 5 ஷெட்யூல்ட் வகுப்பினருக்கு தனித்தொகுதிகள் என்று ஏற்படுத்திக் கொடுக்கலாம். அப்படிச் செய்தால், ஆளும் கட்சிக்கு சாதகமாக நாமினேட் செய்து கொள்கிறுர்கள் என்று அரசாங்கத்தைச் சொல்லிக் காட்டும் சந்தர்ப்பம் இருக்காது. ஆகவே தான் நான் சொல்வதெல்லாம் அரசாங்கம் 5 தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான ஸ்தானங்களையும், 5 பெண்களுக்கான ஸ்தானங்களையும் தேர்தல் மூலம் ஏற்படுத்தி இப்போது நாமினேஷன் கொடுக்கும் நோக்கத்தை பின்னல் பூர்த்தி செய்ய வேண்டும். அதைத் தேர்தல் முறையில் கொண்டு வருவதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, கார்ப்பரேஷன் உறுப்பினர்களுடைய பதவிக் காலம் 6 வருஷம் என்பது வேண்டாமென்று தான் நானும் சொல்ல விரும்புகிறேன். காரணம், 6 வருடமாக்கி விட்டால், இரண்டு வருடத்துக்கு ஒருவர் வீதம் மூன்று பேர் மேயராக வருவதற்கு வாய்ப்பு உண்டு. மேயர் தனியாக எந்தக் காரியத்தையும் எண்ணிச் செய்து விட முடியும் என்று நான் கருதவில்லை. மாநகராட்சி என்றுல், அதற்கு என்று தனியாக ஸ்டான்டிங் கமிட்டி இருக்கிறது. தனி நபரை கும்பிட்டுக்கொண்டிருக்கிறதாலும், அவர்களை தெய்வம்போல் ஆக்கி தனி நபர் வழிபாடு செய்வதாலும் நாட்டுக்கு இன்றைய தினம் சீரழிவு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஜனங்களுடைய சக்தியை ஒட்டுமொத்தமாகத் திரட்டி அவர்களை ஊக்கப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தனி நபர்களை நம்பித்தான் எதுவும் நடைபெற வேண்டுமென்ற அவசியம் என்ன இருக்கிறது? மக்கள் தங்கள் சொந்தக் காலில் நின்றுல் போதாதா? நான் சொல்கிறேன், மேயர் மாநகராட்சிக் கூட்டங்களில் தலைமை வகிக்கிற பொறுப்போடு மட்டும் இருக்கட்டும். மாநகராட்சியில் இத்தனை செக்ஷன்கள், அமைப்புகள், கமிட்டிகள் இருக்கின்றன. ஒவ்வொரு இலாகாவுக்கும் ஸ்டான்டிங் கமிட்டிகள் இருக்கின்றன. ஸ்டான்டிங் கமிட்டியிலே அந்தந்த சப்ஜெக்ட் ஸ்பெஷலிஸ்டுகள் தான் டிஸ்கஸ் பண்ணுகிறுர்கள். மேயர் பதவியை முன்பு இருந்தது போல் ஒரு வருடத்திற்கு என்று, சென்னையிலே இருந்தது போல், வைத்திருக்கலாம் என்பது என்னுடைய கருத்து. உறுப்பினர்களுடைய பதவிக் காலத்தை 6 வருஷம் ஆக்க வேண்டிய அவசியமில்லை. 5 வருஷம் என்று இருந்தால் கூட, ஆரம்பத்தில் 2½ வருஷம், நடுவில் 2½ வருஷம் என்று ஆக்கிக்கொண்டு போகலாம். 6 வருஷம் ஆக்கவேண்டாம். பார்லிமெண்ட் உறுப்பினர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் 5 வருடம் என்று இருக்கும்போது, எமர்ஜென்சி



காலத்தில் கெட்ட நோக்கத்துக்காக, ஏற்படுத்தப்பட்ட இந்த 6 வருஷம் நமக்கு வேண்டாம். சட்டமன்ற உறுப்பினருக்கு உள்ளதுபோல் 5 வருஷம் அடிப்படையிலேயே, வைத்துக் கொள்ளலாம். அதாவது 2½, 2½ வருஷம் என்ற அடிப்படையில் மேயரைத் தேர்ந்தெடுக்கக்கூடிய வகையில் சிறப்புத் தன்மையோடு கூடிய முத்திரை பதிக்கக்கூடிய வகையிலே இதை நீங்கள் வற்புறுத்திஞல் கூட அவ்வாறு வைத்துக்கொள்ளலாம். ஆக 6 வருடம் என்று ஆக்க வேண்டாமென்று கேட்டுக்கொண்டு, இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-50)

* THIRU A. R. DAMODARAN: Mr. Vice-Chairman, Sir, I will be very brief because this Bill does not introduce many amendments. I want to make one or two general observations only. The first point is that I agree with the hon. Members who have expressed the view that the term of the Councillors could be restricted to five years. Till a few years ago, the Municipalities had only three years' existence and it was extended later to five years. I do not see any reason why we should keep on extending the term and make it six years for the Corporation and Municipalities. Even the Members of the Legislative Assembly are having only a term of five years. My hon. Friend referred to the term of the Members of this Council. So far as the Council is concerned, it has a different type of election once in two years. That is why the Rajya Sabha Members and Legislative Council Members function for six years. The problem could have been solved even without extending the term to six years. You cannot divide five years exactly by three. On the other hand, you can have two periods of 2-1/2 years each and it would not matter if another six months' period is given to the Mayor or the Chairman. My feeling is that somehow during the last three or four years, an impression has been created that if we did not have elected representatives in the Municipalities and Corporations, the administration would be much better. I would like to ask a question honestly—and many citizens have also asked—Is the administration any better today than what it was three years ago? I am not referring to the big corruption case that we are having in Madras; it was a loot on a very grand scale. The case is being tried and I hope that the guilty people will receive proper punishment at the end of the case. But somehow the Corporation, even today is suffering because the whole system of local administration has become degenerated to such an extent that even if we have competent young officers as Commissioners, they are unable to control the system of administration in the present state of affairs. I am sorry I have to make the charge

that even in places like Salem, Tiruchirappalli and Coimbatore which are equal to Corporations because of the very large urban agglomerations, the administraion is in an absolutely run-down condition. Their batteries are totally discharged. If you visit any other City like Bangalore City, the encroachments are removed overnight. Here we have temples built on pavements for all sorts of Gods to be installed. People must have their own places for worship and pavements should not be encroached. Unless we have a crack service which moves in and removes encroachments within 24 hours, we will never be able to remove the encroachments. The Hon. Minister for Housing is aware how before fixing doors for the tenements and before water supply and other amenities are provided for the tenements, some people broke into the tenements and occupied the same.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இப்போது சட்டத்திலே ஒரு மாற்றம் செய்திருக்கிறோம். குடிசை மாற்று வாரியம் வீடு கட்ட ஆரம்பித்த உடனேயே அந்த வீடுகள் இன்னின்னாருக்கு என்று 'அலாட்' செய்து விடுகிறோம்.

THIRU A. R. DAMODARAN : Sir, he is referring to the occupation in Royapuram. It was some 500 or 600 and it was of considerable embarrassment to the Hon. Minister. I am not saying that he has not taken steps. But he cannot prevent all these things unless he is supported by a crack service. Especially in the bigger cities where the population is 2-1|2 million or 3 million, it is a tremendous problem to the administration. When the Sattanathan Committee Report is placed before the House in the next session, I hope we will have opportunities of discussing the problems of local administration.

THIRU K. ARIVAZHAGAN : It has already been placed.

THIRU A. R. DAMODARAN : It has not been placed before the House for discussion. It has been placed on the table for information. When it is placed in the next Session, we will discuss it. I have full sympathy with the Hon. the Minister for Local Administration because the whole system has deteriorated to such an extent that it will require Herculean efforts to clean the Augean stables of our Municipalities and Corporations.

Sir, the Elections to Madurai Corporation are over and we hope that the elections to the Madras Corporation and the other Municipalities will also be over because life in the districts today is very dull without our elected representatives. Whatever wrongs they may



commit, life is still very dull. After all, if we accept the thesis that local self-government is the basis for leadership leading to higher levels, we must train people at the lower levels in the Panchayats and other local bodies. They have to commit mistakes and some of them may have to be weeded out. But the better class of administrators will have to come up to our Governments and our Parliaments and rule us in the future. The civic administration is an important training ground and if we lose sight of this fact, we will be creating a very big gap in our administration and in our training of legislators which is not good for the well being of our own State. Therefore, I hope elections will be held speedily.

The only other point that I wanted to mention was about the power of nomination. There are two views on this. For example, in cities like Madras, Coimbatore, Salem and Tiruchirappalli besides the directly elected representatives there could be other interests also. These are highly industrialised and commercialised centres where a great deal of such representation is required. If you take Madras City, you have the industrial belt of Avadi, Ambattur, etc., and a lot of interests are un-represented because they cannot get elected to these Councils. I am not speaking of the old Alderman system because it will lead to a lot of corruption and money would play a big part in election. The power of nomination and giving nominated Councillors full powers with elected Councillors will also lead to abuse at some stage or other. You may have very good intentions but it will still lead to abuse. Basically, the theme that nominated people should have equal powers with elected Councillors—I am not speaking of Members of this House and I am speaking only of the local bodies—may not be a very desirable step in so far as democratic practices are concerned. But, at the same time, I would like the Government to examine when they come up with a comprehensive legislation whether a system of nomination of several interests may not be considered. I am not speaking only of industrial interests; we have small scale industries and we have Chambers of Commerce who were formerly represented. They are all important tax-payers, and pay a major portion of the Corporation revenue and they could be made to focus attention on the problems that arise in the Corporation. The Muster Roll scandal, the leakage of revenue, the systematic looting of the property tax revenue and all these things could have been pinpointed if we had a few nominated people. I do not want them to have powers to elect Mayors, etc. and they can function purely in an advisory capacity. If we have 150 Councillors in Madras, it may certainly be considered whether it is possible to have

10 or 12 people to represent special interests, whether it is the backward Harijan community, women, small-scale industries or Chambers of Commerce. They have something to contribute to our civic life and I hope this aspect will also be considered.

திரு. சி. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, நான் இந்த மசோதாவை வரவேற்று அமைகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, அவையில் அளிக்கப்பட்டுள்ள மதுரை மாநகராட்சி மன்றம் மற்றும் சென்னை மாநகராட்சி மன்றம் ஆகியவைகளைப் பொறுத்த சட்ட முன்வடிவுகளை ஒட்டி சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மதுரை மாநகராட்சி மன்றத்தைப் பொறுத்தவரையில், மாநகராட்சி மன்ற உறுப்பினர்களாக போதுமான அளவு பெண்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றால் அல்லது 5-க்கும் குறைவாக அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் ஐந்தாக அந்த எண்ணிக்கை நிறைவு செய்யப்படும் என்ற வகையில் புதிய மசோதாவில் வகை செய்யப்பட்டிருக்கிறது. அதைப் போலவே ஹரிஜனங்களைப் பொறுத்தவரையில், குறைந்தபட்சம் 5 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டாக வேண்டும். அந்த அளவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இல்லையென்றால், நியமனம் மூலமாக ஐந்தாக அது நிறைவு செய்யப்பட வேண்டும் என்றும் வழிவகை செய்திருக்கிறார்கள். இதிலே நம்முடைய அனுபவம் எப்படி இருக்கிறது என்றால், இந்த இருசாராரும் இல்லாமலேயே மாநகராட்சி மன்றம் அமையும் என்கிற அளவில் இப்போது அமைந்திருக்கிறது. இப்போது இப்படி ஒரு வகைப்படுத்துவதன் மூலம் அந்தப் பெண்களுக்கோ ஹரிஜனங்களுக்கோ நாம் நன்மை செய்யவில்லை என்பது மட்டுமல்ல, அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள முடியாதவர்களாக ஆக்கிவிடுகிறோம்.

மாற்றுத்தலைவர் (திரு. கே. எஸ். அப்துல் வகாப்): விவாதம் முடியும் வரை மேலவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 7-00)

திரு. க. இராமமூர்த்தி: இதுபோன்று உள்ளாட்சி மன்றங்களுக்கு மக்களுடைய பிரதிநிதிகளாக வருகின்றவர்கள் முழுமையாக சுயேச்சையாக யாருடைய விருப்பு வெறுப்புகளுக்கும் ஆளாகாமல் இயங்கியாக வேண்டும். ஆனால் இங்கே நியமனம் மூலமாக இடம் பெற முடியும் என்ற நிலை வருகின்றபோது, அரசியல் கட்சியிலே சில இடங்களையே ஒதுக்கிவிடும் வாய்ப்பு ஏற்பட்டுவிடும். அங்குள்ள அரிஜனங்களுக்கு நிச்சயமாக வெற்றி பெறுகின்ற வாய்ப்பு இருந்தும், அந்தக் கட்சியிலே வலிமையாக இருக்கின்ற ஒருவர் நான் நின்றுதான் ஆகவேண்டுமென்று



கேட்பாரானால், உன்னை எப்படியாவது நாமினேஷனில் கொண்டு வந்து விடுகிறோம் என்று சொல்ல முடியும். அதற்கு இது சுலபமாக வழிசெய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நிலைமைகள் அரிஜனங்களைப் பாதுகாப்பற்றவர்களாக ஆக்கிவிடும். சில காரணங்களால் நியமன முறையில் வரமுடியவில்லை என்றால், அவருடைய நிலைமை என்ன என்பதைப்பற்றி நாம் யோசித்துப்பார்க்க வேண்டும். குறிப்பாக சில தொகுதிகளை ஒதுக்கலாம் என்று சொல்கிறார்கள். அவசியமென்றால் அரசியல் கட்சிகள் ஒரு உடன்பாட்டுக்கு வரும் நிலை ஏற்படும். சுயேச்சையாக இருந்து வெற்றி பெறுவது என்பது மிகமிகக் குறைவு என்பதை என் அனுபவம் காட்டியிருக்கிறது. அரசியல் கட்சிகள் குறைந்தபட்சம் இத்தனை வேட்பாளர்களை நியமித்துக் கொள்ள வேண்டும் என்று அதற்கு வழி காணுகின்ற அளவிலே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சட்டம் அமைத்திருந்தால், நன்றாக இருக்கும். சட்டப் பாதுகாப்பு கொடுக்கின்ற முறையாகத் தெரிந்தாலும்கூட, இது பாதுகாப்பு கொடுக்கின்ற மாதிரி இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அரிசனங்களுக்கு அவர்களுடைய இனத்திற்காக, அவர்களுடைய தொகுதிக்காகச் சுயேச்சையாகச் செயல்படுகின்ற நிலைமைகள் இருக்காது. அவர்கள் அப்படி இயங்க முடியாது. பெண்களைப் பொறுத்த வரையில், அது மிகவும் சுலபம் என்றுதான் சொல்ல வேண்டும். நான் எத்தனை பேர்கள் நியமனம் மூலமாக இடம் பெறுவார்கள் என்று சொல்ல விரும்பவில்லை. ஆனால் நாம் எதிர்பார்ப்பது போல் நல்ல முறையில் இயங்க வேண்டுமானால் அதிலே இடம் பெறுபவர்கள் ஐயத்திற்கு உரியவராக இல்லாமல் இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். பத்து பேர்கள் தேர்ந்தெடுக்கின்ற நிலைமையில் பெண்கள் 5 பேர்கள், ஆண்கள் 5 பேர்கள் என்று முழு அதிகாரத்தோடு தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் இடம் பெறுகிறார்கள். இந்த 10 பேரில் சில நேரங்களில் அனைவருமே தேர்ந்தெடுக்கப்படாதவர்களும் இடம் பெறுகிறார்கள், இந்த நிலைமைகளால் நகரத்தினுடைய தலைவிதியை நிர்ணயிக்கும் நேரத்தில் வேறு மாதிரியாக முடிவு அமைந்துவிடுகிறது. தேர்ந்தெடுக்கப் படாத பிரதிநிதிகள் இதில் இடம் பெற்றுவிடுகிறார்கள். இந்த ஆட்சி ஜனநாயகத்திலே நம்பிக்கை உள்ள ஆட்சி என்கிறார்கள். ஆனால் இந்தத் தீர்மானம் ஒரு நல்ல ஜனநாயக மரபை அமைக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையிலும், அது ஜனநாயக முறைகளைக் காக்கவேண்டும் என்றுதான் சொல்கிறது. அந்த மரபுகளுக்காகத்தான் இந்த அளவு ஈடுபட்டிருக்கிறார்களா? பல விவாதங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட தெரிவித்திருக்கிறார்கள். இந்த அவையில் நான் கேட்ட முதல் பேச்சிலேகூட அவர் சொல்லியிருக்கிறார். கட்சி அடிப்படையிலே தேர்தலில் நின்றாலும்கூட, தேர்ந்தெடுக்கப்பட்ட எல்லாக்

கட்சிகளையும் சேர்ந்த அத்தனை மெம்பர்களும் கூடி இருந்து முதலமைச்சரைத் தேர்ந்தெடுத்தால் என்ன என்று சொல்லியிருக்கிறார்கள். அது விவாதத்திற்குரிய கருத்து. மற்றவர்களுடைய பரிசீலனைக்குரிய ஒரு கருத்தாக இருக்கிறது. தமது ஜனநாயக உணர்வுகளை அடையாளம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த முறை அப்படிப்பட்ட ஜனநாயக முறைகள் அமையப் பயன்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் உள்ளாட்சித் துறை நல்ல முறையில் இயங்க முடியாத நிலைமைகள் உருவாகிவிடும் என்று சொல்லிக் கொள்கிறேன். இந்த நியமன உறுப்பினர்களுக்குப் பூரண அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். வோட்டிங் ரைட் (Voting Right) கொடுத்திருக்கிறார்கள். இது எந்த அளவுக்கு நல்லது என்பதைப்பற்றி எண்ணிப்பார்க்க வேண்டும். காரணம், மாநகராட்சிகளிலே பல குழுக்கள் தனித்தனியாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு குழுவும் தனித்தனியாக அதிகாரம் கொண்ட குழுவாக இயங்கிக்கொண்டிருக்கின்றது. அப்படிப்பட்ட குழுக்களிலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளோடு முழு அதிகாரத்தோடு தேர்ந்தெடுக்கப்படாதவர்களும் இருப்பார்கள். தேர்தலில் நின்று தேர்ந்தெடுக்கப்படாமலேயே இந்தக் குழுவில் நுழைய இருப்பவர்கள் எப்படியாவது உள்ளே வரவேண்டுமென்று முயற்சிப்பார்கள். அதற்காக அவர்கள் சுற்றிக்கொண்டிருக்கும் நிலைமைகள் கூட ஏற்படும். அந்த அளவில் ஜனநாயக முறையில் செயல்படாத நிலைமை ஏற்படுகிறது. எனவே அவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்படவேண்டியது அவசியம்தானா என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த மசோதாவில் 40 (ஏ) பிரிவில்

"District Collector to perform functions of Mayor:

Notwithstanding anything contained in this Act, when the office of Mayor is vacant or he has been continuously absent from the City for more than fifteen days or is incapacitated and the office of the Deputy Mayor is also vacant or if the Deputy Mayor is also absent as aforesaid or incapacitated, the District Collector shall exercise the powers and perform the functions of the Mayor until a new Mayor is elected or the Mayor returns to the City or recovers from his incapacity as the case may be."

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய நேரடி நிர்வாகத்திலே இந்த உள்ளாட்சித் துறை மன்றங்கள் இருந்தவரையில், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் இருந்தது. இன்றைக்குத் தனியாக ஒரு கமிஷனர் நிரந்தரமாக அமைந்துவிடுகிறார்கள். கடந்த காலத்தில் இருந்ததைவிட கமிஷனருக்குப் பொறுப்புக்கள்,



அதிகாரங்கள் வருகின்றன. இந்தக் கமிஷனர் நிரந்தரமாக இந்த அலுவல்களை நடத்திக் கொண்டிருக்கக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. மீண்டும் 'அவைகளை கலெக்டருக்குக்' கொடுக்க வேண்டிய அவசியம் என்ன என்பதைப்பற்றி எண்ணிப்பார்க்க வேண்டும். அதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய மற்ற நண்பர்கள் அதிகமாகப் பேசி விட்ட காரணத்தினாலே, நான் மேலும் பேச விரும்பவில்லை. மாநகராட்சி உறுப்பினர்களுடைய, மேயர்களுடைய பதவிக்கால வரையறைபற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். சட்டநாதன் கமிட்டி அறிக்கையைப் பொறுத்த வரையிலே, சட்டநாதனுடைய கமிட்டி அமைந்தபோது, அதற்கான காரணங்களை அன்றைக்கு அரசு அறிவித்தது மிகத் தெளிவாகச் சொல்லியிருந்தார்கள். சில சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும். அவைகளைச் செய்ய அரசு முனைப்பாக இருக்கிறது. ஆகவேதான் இதற்கு கட்சி சார்பற்ற ஒருவரை நியமித்து, அதற்கான அறிக்கையைத் தரும்படி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, அந்தக் கருத்துக்களை தேவையானால் பயன் படுத்திக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். இதற்காகத்தான் இந்தக்கமிட்டி நியமிக்கப்பட்டது. இதன் மூலமாக வருகின்ற அறிக்கையின் அடிப்படையிலே சில சீர்திருத்தங்களைச் செய்யப்போகின்றோம் என்று தெளிவாகச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு அதிலிருந்து ஏதோ ஒன்றிரண்டைத்தான் எடுத்துக்கொள்வார்களோ என்ற அச்சத்தைத்தான் இந்த மசோதா உண்டாக்கியிருக்கிறது. காரணம் சட்டநாதன் அறிக்கையின் அடிப்படையையே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது மட்டுமல்ல, அதைப்பற்றி ஒன்றுமில்லை. அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், இவற்றை எல்லாம் நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்று ஒருமுகப்படுத்தி ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மசோதாவிலே என்னென்ன மாற்றங்கள் செய்யலாம், சட்டநாதன் அறிக்கையிலே எதை எதை விடுவதற்கு வழிவகை செய்யலாம் என்பதற்கான கருத்துக்களை இந்த மாமன்றத்திலே பேசலாம்.

(பிற்பகல் 7-10)

ஆனால் அதையெல்லாம் விட்டுவிட்டு, ஏதோ திடீரென்று தங்களுக்குத் தேவையானது, அவசியமானது என்று படுகின்ற ஒன்றை மட்டும் எடுத்துக்கொண்டு, அதை இன்றைக்கு இந்த மசோதா மூலம் கொண்டு வந்திருப்பதைப் பார்க்கும்போது, மீதமிருப்பது காலப்போக்கில் விடுபட்டுப் போகுமா என்ற அச்சம் உருவாகிறது. அப்படியே மீதமிருப்பதை எடுத்துக் கொண்டாலும், அதை எவ்வளவு காலத்திற்குத் தள்ளிக் கொண்டு போவார்களோ என்ற சந்தேகம் உருவாகியிருக்கிறது.

[திரு. க. இராமமூர்த்தி] [1978 செப்டம்பர் 12

மசோதாக்கள், அவசரச் சட்டங்கள் எல்லாம் இருக்கிற சங்கடங்களை, சந்தேகங்களைத் தீர்ப்பதற்காக வர வேண்டுமே தவிர, புதிதாக சங்கடங்களை உருவாக்கும் நிலையில் இருக்கக்கூடாது. துர்பாக்கிய வசமாக இந்த இரண்டு மசோதாக்களும் அந்த நிலையை உருவாக்குகின்றன. உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களைப் பொறுத்தவரையில், நான் என் சொந்தக் கருத்தைச் சொல்வதானால், அவர் மனத் திருப்தியோடு இதைக் கொண்டு வந்திருப்பார்களா என்பது சந்தேகம். ஆனாலும்கூட கூட்டுப் பொறுப்பில் இதைக் கொண்டு வந்திருப்பாரென்று நான் கருதுகிறேன். இருந்தாலும்கூட, இந்த மசோதாக்கள் உள்ளாட்சித் துறைக்கு, அங்கேயுள்ள ஜனநாயக மரபுகளுக்குப் பாதகம் விளைவிக்கும் என்பதைச் சொல்லி, இந்த மசோதாவை இன்றைக்கு நாங்கள் திருப்பி அனுப்பி விடலாமென்றாலும், அது நடைமுறைக்கு நல்லதல்ல என்று சொல்லி, இதோடு நிறுத்தி, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, கொண்டு வரப்பட்டிருக்கிற இரண்டு சட்ட முன் வடிவுகளின் மேலும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணங்களிலே இருக்கிற அழுத்தத்தை மிக இனிமையாக இங்கே எடுத்து உரைத்ததற்காக நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே அவர்கள் மிக அழுத்தமாகக் கோடிட்டுக் காட்டியது ஒன்று. சென்னை, மதுரை இரண்டு மாநகராட்சிகளிலும் உள்ள உறுப்பினர்களுடைய பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளிலிருந்து ஆறு ஆண்டுகளாக மாறுகிறது என்றும், மேயருடைய பதவிக்காலம் ஓராண்டு என்றிருப்பது இரண்டு ஆண்டு என்று மாறுகிறது என்றும் அவர்கள் சுட்டிக் காட்டி இது ஜனநாயக மரபிற்கு ஏற்பு உடையதுதானா என்ற ஐயத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இங்கே மிகப்பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புவது எல்லாம், உள்ளாட்சிஅமைப்புகள் என்பவை சட்டமன்றத்தைப் போல், நாடாளுமன்றத்தைப் போல் கொள்கைப் பிரச்சினையை எடுத்து விவாதிக்கின்ற அரங்குகளோ, அல்லது சட்டத்தை உருவாக்கித் தருகின்ற மன்றங்களோ அல்ல என்பதையும் அவைகள் மக்களுக்கான அன்றாடத் தேவைகளை, பணிகளை நிறைவேற்றுவதற்காக இயங்கிக் கொண்டு இருக்கின்ற மாமன்றங்கள் என்பதையும், நாம் விரும்பியோ, விரும்பாமலோ அந்த அமைப்புகள் அரசியல் கட்சிகளின் பேரில் வேலை பார்க்கும் அமைப்புகளாக மாறியிருக்கின்றன என்பதனையும் நாம் மிகத்தெளிவாக அறிவோம். ஆகவே அந்தப் பொறுப்புகளை அந்த மாமன்றங்கள் செம்மையாக நிறைவேற்றும் வகையில் நல்ல சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என்ற உணர்வுகளின் அடிப்படையிலே இந்த இரண்டு சட்டத்திருத்தங்களும் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்பதனை நானு குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



1978 செப்டம்பர் 12] [திரு. கா. காளிமுத்து]

சட்டநாதன் அவர்கள் தந்திருக்கின்ற பரிந்துரைகள் அவ்வளவையும் நிறைவேற்றுவீர்களா என்று அண்ணன் தங்கப்பாண்டியன் அவர்கள் கேட்டார்கள். அவ்வாறே அருமை சகோதரர் திரு. இராமமூர்த்தி அவர்களும் கேட்டார்கள். பரிந்துரைகள் அவ்வளவையும் அப்படியே எழுத்துக்கு எழுத்து, அப்படியே அட்சரம் பிசகாமல் நிறைவேற்றுவது என்பது இயலாத ஒன்று. சட்டநாதன்அவர்களே கூட பிற்பட்டோர் நலன்களுக்காக ஓர் அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். அந்த அறிக்கை எந்த அளவிற்கு முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதனையும் நாம் எடை போட்டு வருகிறோம். அரசு ஏற்புடையது என்று கருதக்கூடிய பரிந்துரைகளை அல்லது நிதித் துறை தொடர்பில்லாது நிறைவேற்ற முடியும் என்ற பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு எந்த விதமான தயக்கமும், மருட்சியும் நிச்சயமாக இந்த அரசுக்கு ஏற்படாது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பரிந்துரைகளை முழுமையாக நிறைவேற்ற இயலாது என்ற நிலைமை இருக்கும்போது, அதே நேரத்தில் மிகத்திறமையோடு, ஆற்றலோடு மாநகராட்சி மன்றங்களின் பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி நுணுக்கமாகத் தந்திருக்கிற அந்தப் பரிந்துரைகள், பட்டுத் துணி போர்த்தி வைத்திருக்கிற பூஜாமாடப் புத்தகமாக மாறாது என்பதையும், அதை எந்த அளவிற்கு நிறைவேற்ற முடியுமோ அதற்கான நல்ல முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்பதையும் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இதற்கு அவசரச் சட்டம் தேவையா? மதுரை மாநகராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கிற நேரத்தில் இப்படிப்பட்ட அவசரச்சட்டத்தை பிறப்பிக்கலாமா என்று கேட்டார்கள். மதுரை மாநகராட்சியினுடைய சட்ட திட்டங்கள் முழுமையாக வகுத்து அளிக்கப்படாத சூழ்நிலையில் சில விதிமுறைகளைத் தெரிவிக்க அவசரமான சூழ்நிலை ஏற்பட்டதால், அப்போது சட்டப்பேரவை, மேலவை கூடாத நேரத்தில் அது பிறப்பிக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒன்றைச் சுட்டிக் காட்டினார்கள். மேயர், துணைமேயர் தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன்னால் அந்தத் தேர்தலை நடத்தி வைப்பது யார் என்பதற்காக முழுமையான, முறையான விதி மதுரை மாநகராட்சிச்சட்டத்திலே வகுக்கவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அந்தப் பொறுப்பை ஏற்று நிறைவேற்ற வேண்டும் என்ற வகையிலே, அந்த அவசரச் சட்டம் அன்றைக்கு அதை வழி செய்கிற வகையிலே பிறப்பிக்கப்பட்டது என்பதனைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். பெண்களுக்கான பிரதிநிதித்துவம், ஹரிஜனங்களுக்கான பிரதிநிதித்துவம் அரசியல் கட்சிகள் சார்பாக எந்த அளவுக்குக் கொடுக்கலாமோ, அந்த அளவுக்குக் கொடுத்து, அவர்கள் வெற்றிபெற்று வர முடியாத நிலை ஏற்பட்டால், நியமனம் மூலமாக 3 பேர் என்றிருப்பதை 5 பேராகக் கொண்டு வர வேண்டுமென்று மதுரை மாநகராட்சிச்

சட்டத் திருத்தம் வகை செய்கிறது. பலவீனமான மக்களைக் கைதூக்கிவிடும் பொறுப்பு அரசின் கையில் இருக்கிறதென்ற அடிப்படையிலே, அது கொண்டுவரப்பட்டிருக்கிறது. இல்லை, இல்லை, அவர்களுடைய உரிமைகளைப் பாதிக்குமென்ற அளவுக்கு உறுப்பினர்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். நிச்சயமாக அவர்களுக்குள்ள வாய்ப்புகள் பறிபோய்விடக் கூடாது. அல்லது திரு. நல்லசிவம் அவர்கள் சுட்டிக் காட்டியது போல், எத்தனை ரிசர்வ் தொகுதிகளை ஒதுக்குவது என்பதைப் பற்றிப் பரிசீலித்து, முடிவு செய்யும் வரையில், அவர்களுக்கென்ற பிரதிநிதித்துவம் அந்த மன்றத்தில் இருக்க வேண்டுமென்ற உணர்வுகளின் அடிப்படையிலே அந்தத் திருத்தம் ஏற்படுத்தப்பட்டதென்பதை நான் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரை மாநகராட்சித் தேர்தலை வைத்துவிட்டு, சென்னை மாநகராட்சிக்கு இன்னும் தேர்தலை நடத்தவில்லை, ஒரு கண்ணிலே வெண்ணெய், ஒரு கண்ணிலே சுண்ணாம்பு இருக்கலாமா என்று திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். எனக்குள்ள பெரிய சங்கடமெல்லாம் எந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்தாலும், எந்த மசோதாவை முன்மொழிந்தாலும், எந்தக் கொள்கைக் குறிப்பை அவை முன் வைத்தாலும், எனக்கு முன் உள்ள பெரிய கேள்விக்குறி, எப்போது தேர்தல்! எப்போது ஊராட்சித் தேர்தல்? எப்போது ஒன்றியத் தேர்தல்? என்பது தான். அதைப்பற்றியெல்லாம் ஆளுநர் உரையிலே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. மதுரைத் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது, விரைவில் சென்னை மாநகராட்சி, நகராட்சி, நகரசனபகள் மற்றும் ஊராட்சித் தேர்தல்கள் நடைபெறுமென்று ஆளுநர் உரையில் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறதென்பத இந்த நேரத்தில் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன், அவர்கள் தெரிவித்தார்கள், சென்னை மாநகராட்சித் தேர்தல்பற்றி நீங்கள் பயப்படுகிறீர்கள், அதனால்தான் தயங்குகிறீர்கள் என்று. சட்டநாதன் குழு பரிந்துரை மட்டுமல்ல, நான் ஏற்கனவே தெரிவித்தது போல, சென்னை மாநகராட்சியோடு இணைந்துள்ள 12 பேரூராட்சிகளை இணைத்து, 150 டிவிஷன்களாக மாற்றும் வேலை முற்றுப்பெறும் நிலையில் இருக்கிறது. அதற்குப் பிறகு தேர்தலை நடத்த எந்தவிதத் தயக்கமும் இல்லை. சென்னையைப் பார்த்து பயப்படுகிறீர்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஒருவேளை சென்னையைக் குறிப்பிட்டு பயந்தாலும், எதிர்காலத்தில் இந்த பயம் அனாவசியமானதென்று எடுத்துக்காட்டும் நிலை ஏற்படலாம். அதைப் பற்றி இப்போது அதிகமாகக் குறிப்பிட விரும்பவில்லை.

திரு. ஏ. ஆர் தாமோதரன் அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாதபோது, வாழ்க்கையே உயிரோட்டம் இல்லாமல் நடக்கிறதென்று சொன்னார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தேவை எனபதால், மதுரை மாநகராட்சித் தேர்தல், தொடக்கமாக



நடந்து முடிந்தது. தொடர்ந்து மற்ற தேர்தல்கள் நடைபெறும், உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மெய்யாகவே பயப்பட வேண்டும். அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பணியாற்ற வேண்டுமென்று அந்தச் சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. மேயர் பதவி ஓராண்டு என்பது வரவேற்பு விழாக்கள், பாராட்டு விழாக்கள், பிரிவுபசார விழாக்கள் நடத்தவே சரியாகி விடுகிறது. மற்ற வேலைகளுக்கு மேயர் பதவி பயன்படாமல், ஓர் அலங்காரப் பதவியாக மாறக்கூடாது. பொது மக்களுக்குப் பணியாற்றக் கூடிய நல்ல பதவியாக இருக்க வேண்டும். இன்னார் மேயராக இருந்தபோது, இந்த அளவுக்கு நகரம் பயன் அடைந்ததென்று சுட்டிக் காட்டும் அளவுக்கு மேயரின் பதவிக்காலம் இருக்க வேண்டுமென்ற அளவிருந்தான், 2 ஆண்டுகளாக அதை மாற்றி அமைத்திருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 7-20)

இந்த இரண்டு சட்ட முன்வடிவுகளை நாங்கள் நினைத்தால் திருப்பியனுப்புவோம் என்றாலும், இதை ஏற்றுக்கொள்கிறோம் என்ற அளவுக்குச் சொன்னார்கள். அவர்கள் நிச்சயமாக ஏற்றுக் கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. அவர்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். அமைச்சர் அவர்களைப்பற்றி எனக்குத்தெரியும், சொந்த முறையில் இதை விரும்பி ஏற்றிருப்பாரா என்று தெரியவில்லை'' என்று சொன்னார்கள். அவர் நீண்ட காலமாக மிகவும் பக்குவமான அரசியலைக் கற்றவர்கள் என்பதை நானும் உணர்வேன். ஆகவே இந்த மசோதாக்களை இந்த மேலவை நிறைவேற்றித் தர வேண்டும் என்று பணிவன்போடு கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

''சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1978-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.''

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

1978 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1978).

[1978 செப்டம்பர் 12

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1978-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு எண் 28/1978) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1978-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்ட முன் வடிவு சட்டமன்றப் பேரவை (சட்ட முன்வடிவு எண் 28/1978) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(3) 1978 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1978).

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1978-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1978-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 29/1978) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது. சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 13 வரை, அவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டன.

*273 276 ஆம்பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1978 செப்டம்பர் 12]

பிரிவு 1, சட்டமியற்றும் முறை நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கா காளிமுத்து: மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1978-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1978) நிறைவேற்றப்பட வேண்டும்."

என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1978-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1978) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 10-30 மணிக்குக்கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

[பிற்பகல் 7–25]

இணைப்பு 1

[221-ஆம் பக்கத்தில் இனம் 8 (1) க்கான அடிக் குறிப்பைக் காண்க]

## L. A. BILL No. 27 OF 1978.

[As passed by the Assembly]

*A Bill further to amend the Tamil Nadu Agricultural Produce Officers for exercising the powers and performing the functions of Markets Act*, 1959 *and to provide for the appointment of Special Market Committees in the State of Tamil Nadu.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-ninth Year of tht Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Agricultural Produce Markets (Amendment and Special Provisions) Act, 1978.

(2) It shall be deemed to have come into force on the 6th day of June 1978.

2. *Definitions.*—In this Act, unless the context otherwise requires,—

(*a*) "Director" means the Director of Agricultural Marketing ;

(*b*) "Government" means the State Government ;

(*c*) Words and expressions used and not defined in this Act, but defined in the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959) (hereinafter referred to as the principal Act), shall have the meanings respectively assigned to them in that Act.

3. *Omission of section* 12, *Tamil Nadu Act* 23 *of* 1959.—Section 12 of the principal Act shall be omitted.

4. *Members of market committees to cease to hold office.*—Notwithstanding anything contained in the principal Act or in any other law for the time being in force, every member of every market committee established under section 5 of the principal Act (including its chairman and vice-chairman and *ex-officio* member, if any) and of every sub-committee and special committee of such market committee, holding office as such immediately before



the date of commencement of this Act shall cease to hold offic and be deemed to have vacated his office on and from the date of commencement of this Act.

5. *Appointment of Special Officers for market committees.*—(1) (*a*) Notwithstanding anything contained in the principal Act or in any other law for the time being in force on the date of commencement of this Act, the Government shall, by order, appoint Special Officers, to exercise the powers and perform the functions of the market committees and of the sub-committees or special committees of such market committees under the principal Act.

(*b*) A Special Officer may be appointed under clause (*a*) for one or more market committees as the Government may, by order, specify.

(2) Each Special Officer shall hold office for such period or periods not exceeding two years in the aggregate as may be specified by the Government from time to time :

Provided that if any vacancy arises in the post of Special Officer, the vacancy shall be filled up by the Government and the person appointed in the vacancy shall hold office for the remainder of the said period.

(2) The Special Officer appointed under sub-section (1) shall, subject to the control of the Director and to such directions as the Director may, from time to time, give, have power to exercise all or any of the powers and perform all or any of the functions of the market committee or of the sub-committees or special committees of such market committee and to take such action as may be required in the interest of the market committee.

(4) Where a Special Officer is appointed under sub-section (1), the Government may appoint an advisory board to advise the Special Officer in such matters as may be specified by the Government and the advisory board shall consist of the following members, namely :—

(*a*) three persons from among the producers of the notified agricultural produce in the notified area :

(*b*) three persons licensed under sub-section (1) of section 6 of the principal Act in the notified area in respect of the notified agricultural produce ;

(*c*) the District Agricultural Officer having jurisdiction over the notified area ;

(*d*) two other officers of the Government as may be nominated by the Government.

(5) The Government may fix the remuneration payable to the Special Officers appointed under sub-section (1) and the amount of remuneration so fixed, and such other expenditure incidental to the management of the market committee, during the period of appointment of the Special Officer as may be approved by the Government, shall be payable from the Market Committee Fund.

(6) The Special Officer appointed under sub-section (1) shall arrange for the constitution of a new market committee in accordance with the provisions of the principal Act and the rules made thereunder, so that the new market committte may be constituted and the members thereof come into office at the expiry of the period of appointment of the Special Officer.

6. *Delivery of possession of records and properties of market committee.*—(1) Where a Special Officer is appointed under sub-section (1) of section 5, and such Special Officer is resisted in, or prevented from, obtaining possession of the books, accounts, documents, securities, cash and other properties, whether movable or immovable, of the market committte (hereafter in this section referred to as the records and properties of the market committee) by any person who is not entitled to be in possession of the records and properties of the market committee, any metropolitan magistrate or any judicial magistrate of the first-class in whose jurisdiction the office of the market committee or the records and properties of that market committee is or are situate shall, on application by the Special Officer and on the production of the order of appointment, and of a certificate by the Director in the prescribed form setting forth that the records and properties mentioned therein belong to the market committee, direct delivery to the Special Officer of the possession of the records and properties of the market committee.

(2) No certificate shall be issued by the Director under sub-section (1) without making such inquiry as he deems necessary.

(3) For the purpose of the proceedings under sub-section (1) the certificate aforesaid shall be conclusive evidence that the records and properties to which it relates belong to the market committee.



(4) The metropolitan magistrate or the judicial magistrate of the first-class referred to in sub-section (1) may, pending disposal of an application for directing delivery to the Special Officer of the possession of the records and properties of the market committee mentioned in the certificate by the Director, appoint a Receiver to take possession of such records and properties or such portion thereof as may be necessary. The remuneration, if any, paid to the Receiver and other expenses incurred by him shall be payable from the Market Committee Fund.

7. *Delegation of powers of Government.*—(1) The Government may, by notification, authorise the Director or any other officer to exercise any of the powers vested in them under section 5, in respect of any market committee.

(2) The exercise of any power delegated under sub-section (1) shall be subject to such restrictions and conditions as may be specified in the notification and subject also to control and revision by the Government.

8. *Protection of action taken in good faith.*—(1) No suit, prosecution or other legal proceedings shall lie against any person for anything which is in good faith done or intended to be done in pursuance of this Act.

(2) No suit or other legal proceedings shall lie against the Government for any damage caused or likely to be caused by anything which is in good faith done or intended to be done in pursuance of this Act.

9. *Repeal.*—(1) The Tamil Nadu Agricultural Produce Markets (Amendment and Special Provisions) Ordinance, 1978 (Tamil Nadu Ordinance 4 of 1978), is hereby repealed.

(2) Notwithstanding such repeal anything done or any action taken under the said Ordinance shall be deemed to have been done or taken under this Act as if this Act had come into force on the 6th day of June 1978.

## இணைப்பு II

[72 ஆம் பக்கத்தில் இனம் 8 (2) க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### L.A. Bill No. 28 of 1978.

(As passed by the Assembly)

*A Bill further to amend the Madurai City Municipal Corporation Act,* 1971.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-ninth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Madurai City Municipal Corporation (Third Amendment) Act, 1978.

(2) It shall be deemed to have come into force on the 22nd day of July 1978.

2. *Amendment of section* 5, *Tamil Nadu Act* 15 *of* 1971.—In sub-section (3) of section 5 of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971) (hereinafter referred to as the principal Act),—

(i) in clause (*a*) for the words "three persons", the words "five persons" (not being women) shall be substituted.

(ii) in clause (*b*), for the words "three persons", the words "five persons" shall be substituted ;

(iii) after the second proviso, the following proviso shall be inserted, namely :—

"Provided also that the councillors so co-opted shall have all the rights and privileges of elected councillor.".

3. *Insertion of new section* 30-*A in Tamil Nadu Act* 15 *of* 1971.—After section 30 of the principal Act, the following section shall be inserted, namely :—

"30-*A. District Collector to be Mayor till a new Mayor is elected.*—Notwithstanding anything contained in this Act, after each ordinary election to the Council, and until such time as a Mayor is elected, the District Collector shall on and from such date as may be specified by the Government be the *ex-officio* member and Mayor of the Council.".



4. *Insertion of new section* 40-*A in Tamil Nadu Act* 15 *of* 1971.—After section 40 of the principal Act, the following heading and section shall be inserted, namely :—

"*District Collector as Mayor.*

40-*A. District Collector to perform functions of a Mayor.*—Notwithstanding anything contained in this Act, when the office of Mayor is vacant or he has been continuously absent from the City for more than fifteen days or is incapacitated and the office of the Deputy Mayor is also vacant or if the Deputy Mayor is also absent as aforesaid or is incapacitated, the District Collector shall exercise the powers and perform the functions of the Mayor, until a new Mayor is elected or the Mayor returns to the City or recovers from his incapacity, as the case may be.".

5. *Repeal.*—(1) The Madurai City Municipal Corporation (Third Amendment) Ordinance, 1978 (Tamil Nadu Ordinance 8 of 1978), is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act, as if this Act had come into force on the 22nd day of July 1978.

## இணைப்பு III

[92 ஆம் பக்கத்தில் இனம் 8 (3) க்கான அடிக் குறிப்பைக் காண்க.]

### L.A. Bill No. 29 of 1978.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Madras City Municipal Corporation Act,* 1919 *and the Madurai City Municipal Corporation Act,* 1971.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-ninth Year of the Republic of India as follows :—

### PART I.

### PRELIMINARY.

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Madras City Municipal Corporation and the Madurai City Municipal Corporation (Amendment) Act, 1978.

(2) It shall be deemed to have come into force on the 26th July 1978.

## PART II.

## AMENDMENTS OF THE MADRAS CITY MUNICIPAL CORPORATION ACT, 1919.

2. *Amendment of section 6-B, Tamil Nadu Act IV of* 1919.—In sub-section (1) of section 6-B of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919) (hereinafter referred to as the 1919 Act), for the words "at its first meeting after the election of the Mayor and the Deputy Mayor", the words "on such date as may be notified by the State Government in this behalf" shall be substituted.

3. *Amendment of section* 28, *Tamil Nadu Act IV of* 1919.—In section 28 of the 1919 Act, for sub-section (1), the following sub-section shall be substituted, namely :—

"(1) The Council shall, at its first meeting after each ordinary election to the Council and at its first meeting after the expiry of two years thereafter—

(i) elect one of its members to be the Mayor ; and

(ii) elect one of its members other than the Mayor to be the Deputy Mayor.".

4. *Amendment of section* 29, *Tamil Nadu Act IV of* 1919.—In section 29 of the 1919 Act, for the first paragraph, the following shall be substituted, namely :—

"The Mayor or Deputy Mayor shall be entitled to hold office for a period of two years from the date of his election and the Mayor or Deputy Mayor shall continue as such Mayor or Deputy Mayor until the election of his successor, provided that in the meantime he does not cease to be a Councillor.".

5. *Amendment of section 44-A, Tamil Nadu Act IV of* 1919.—In sub-section (7-A) of section 44-A of the 1919 Act, for the words "five years" occurring in the first paragraph, the words "six years" shall be substituted.

6. *Amendment of section* 55, *Tamil Nadu Act IV of* 1919.—In section 55 of the 1919 Act, for the words "five years" occurring in the first paragraph, the words "six years" shall be substituted.



## PART III.

## AMENDMENTS OF THE MADURAI CITY MUNICIPAL CORPORATION ACT, 1971.

7. *Amendment of section* 7, *Tamil Nadu Act* 15 *of* 1971.—In sub-section (1) of section 7 of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971) (hereinafter referred to as the 1971 Act), for the words "at its first meeting after the election of the Mayor and the Deputy Mayor", the words "on such date as may be notified by the Government in this behalf" shall be substituted.

8. *Amendment of section* 29, *Tamil Nadu Act* 15 *of* 1971.—In section 29 of the 1971 Act, for sub-section (1), the following sub-section shall be substituted namely :—

"(1) The Council shall, at its first meeting after each ordinary election to the Council and at its first meeting after the expiry of two years thereafter—

(i) elect one of its members to be the Mayor; and

(ii) elect one of its members other than the Mayor to be the Deputy Mayor.".

9. *Amendment of section 29-A, Tamil Nadu Act* 15 *of* 1971.—In section 29-A of the 1971 Act in the opening portion, the words "in each year" shall be omitted.

10. *Amendment of section* 30, *Tamil Nadu Act* 15 *of* 1971.—In section 30 of the 1971 Act in sub-section (1),—

(i) for the words "one year", the words "two years" shall be substituted; and

(ii) in the proviso, for the words "one year", the words "two years" shall be substituted.

11. *Amendment of section* 48, *Tamil Nadu Act* 15 *of* 1971.—In sub-section (8) of section 48 of the 1971 Act, for the words "five years" occurring in the first paragraph, the words "six years" years shall be substituted.

12. *Amendment of section* 61, *Tamil Nadu Act* 15 *of* 1971.—In section 61 of the 1971 Act, far the words " five years ", occurring in the first paragraph the words " six years " shall be substituted.

13. *Repeal.*—(1) The Madras City Municipal Corporation and the Madurai City Municipal Corporation (Amendment) Ordinance, 1978 (Tamil Nadu Ordinance 9 of 1978), is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the 1919 Act and the 1971 Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the 1919 Act and the 1971 Act as amended by this Act, as if this Act had come into force on the 26th July 1978.

### தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

---

புதன்கிழமை, 1978 செப்டம்பர் 13.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Tamil Pandits*

* 81 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that many Grade I Tamil Pandits promoted after 1st April 1970 serving in 'B' wing, Government High Schools in Madurai and Ramanathapuram districts, have been reverted to the posts occupied by them prior to that date; and

(*b*) if so, the reasons therefor?

### தமிழ் ஆசிரியர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் அரசு 'பி' பிரிவு உயர் நிலைப் பள்ளிகளில் 1—4—1970-க்குப் பிறகு பதவி உயர்வு பெற்ற முதல் நிலைத் தமிழ் ஆசிரியர்கள் பலர், அந்த நாட்களுக்கு முன்னர் இருந்து வந்த பதவிகளுக்கு, பதவி இறக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

[1978 செப்டம்பர் 13

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும்தான் அவ்வாறு நேர்ந்துள்ளது.

(இ) அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள பதவிகளில் 1—4—70-ல் உள்ள பதவிகள் நிரந்த பதவிகளாகக் கருதப்படும் என்றும் 1—4—70-க்குப் பின் ஏற்படும் அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் ஏற்படும் பதவிகளுக்கு 'பி' பிரிவு ஆசிரியர்களைக் கொண்டே அப்பதவி இடங்களை நிரப்பாமல் மற்ற பணியாளர்களுக்குண்டான விதிமுறைப்படி அரசு தேர்வாணைக் குழுவின் மூலமே தேர்ந்தெடுத்து பதவி இடங்களை பூர்த்தி செய்ய வேண்டுமென அரசாணை நிலை எண். 761, கல்வி, 16—5—70-ல் அரசு ஆணையிட்டது. ஆனால் மேற்கண்ட அரசின் ஆணையை இராமநாதபுரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பின்பற்றாமல் அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் 1—4—70-க்குப் பின் ஏற்படுத்தப்பட்ட பதவிகளுக்கு (அதாவது 1970-73 வரை) 'பி' பிரிவு ஆசிரியர்களைக் கொண்டே அக் காலியிடங்களுக்குத் தக்க ஆசிரியர்களை நியமித்து விட்டார். இராமநாதபுர மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் முறைகேடான நியமனம் பின்னளில் அரசால் கண்டு பிடிக்கப்பட்டது. முதன்மைக் கல்வி அலுவலர் தன் முறைகேடான நியமனங்களை திருத்தியமைக்க வேண்டுமென அரசு முதன்மைக் கல்வி அலுவலரைக் கேட்டுக் கொண்டது.

அதற்கேற்ப இராமநாதபுரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர், அவ்வாறு தவறுதலாக பதவி உயர்வுக்கு ஆளான 15 தமிழ் ஆசிரியர்களையும் பதவி குறைப்பு செய்து அவ்வாசிரியர்கள் அதற்கு முன்பு எந்தப் பதவியிலிருந்தார்களோ அந் நிலையிலேயே மீண்டும் பணியாற்ற ஆணையிட்டார். பதவி இறக்கத்திற்குள்ளான தமிழ் ஆசிரியர்கள் தங்களை மீண்டும் முதனிலைத் தமிழாசிரியர்களாக நியமிக்க வேண்டுமென அரசுக்கு விடுத்த வேண்டுகோளுக்கிசைந்து, அப்பதின்மூன்று தமிழ் ஆசிரியர்களையும் 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் காலியிடங்கள் ஏற்படும் வரை அத் தமிழாசிரியர்கள் 'ஏ' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றலாமென விதியைத் தளர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் தமிழ் ஆசிரியர்கள் இரண்டு மூன்று ஊதிய உயர்வு பெற்றவர்கள். இன்னும் ஒரு சிலர் அதை விரைவில் பெறவிருந்தார்கள். அத்தகைய நிலை இருக்குமானால், 1—4—1970-க்கு முன் நியமிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்களை எப்படியேனும் புதிதாக வரக்கூடிய பணி வாய்ப்புகளில், காலியிடங்களில் ஈர்த்துக்கொள்வது பற்றி மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் ஆராய்வார்களா ?



1978 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 1—4—1970-க்குப் பிறகு வருகிற பதவிகள் எல்லாம் தேர்வாணைக் குழுவின் மூலம் நிரப்பப்படுவதாகக் குறிப்பிட்டார்கள். 1—4—1970-க்குப் பிறகு பட்டதாரி ஆசிரியர்களைத்தான் தேர்வாணைக் குழு மூலம் நியமிக்க வேண்டும். தமிழ் ஆசிரியர்களைப் பொறுத்தவரை, இப்பொழுதும் அவர்களை முதன்மைக் கல்வி அதிகாரி தான் நியமிக்கிறார். ஆகவே அந்த வினா எழவில்லை என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? எப்போதுமே முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்களை நியமிக்கின்ற அதிகாரம் முதன்மைக் கல்வி அதிகாரிக்குத் தான் வழங்கப்பட்டிருக்கிறது. அதன்படி அவர்கள் தான் நியமிக்கிறார்கள், தேர்வாணைக் குழு அல்ல. ஆகவே அமைச்சருடைய விடை பொருத்தமானதல்ல என்பதை அமைச்சர் அறிவாரா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : புதிய பணியிடங்கள் 'ஏ' வில் பள்ளிகளில் வருகின்றன என்றால், அதற்கு 'பி' யின் ஆசிரியர்களை நியமிக்கக் கூடாது என்பது உத்தரவு. அதற்கு மாறாக அந்த இராமநாதபுர மாவட்ட சி. ஏ. ஓ. செயல்பட்டார் என்பது கண்டுபிடிக்கப்பட்டு, பிறகு அவர் அதைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று மறுபடியும் ஆணையிடப்பட்டது. ஆனால் அந்த ஆசிரியர்கள் இங்கே வந்து கேட்டுக்கொண்டதற்கிணங்க, அதைத் தளர்த்தியிருக்கிறோம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : 1—4—1970க்குப் பிறகு நியமிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்கள், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல, தேர்வாணைக் குழு நடத்துகின்ற தேர்வில் தேர்ச்சி பெற வேண்டுமென்று விதித்திருப்பது நடைமுறையில் பொருத்தமற்றது. அவர்கள் பதவி புரமோஷன் கேடர் அல்ல. அப்படி இருக்கும்போது அவர்கள் ஏன் தேர்வாணைக் குழுத் தேர்வுக்குச் செல்ல வேண்டும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தேர்வாணைக் குழு நடத்துகின்ற தேர்வுக்குச் செல்ல வேண்டுமென்று நான் சொல்லவில்லை. புதிய 'ஏ' யின் இடங்களுக்கு 'பி' யின் ஆசிரியர்களை நாம் நியமிக்கக் கூடாது என்பது தான் அரசின் உத்தரவு. அந்த உத்தரவை மீறி, இராமநாதபுர மாவட்டத் தலைமைக் கல்வி அலுவலர் மட்டும் நியமித்து விட்டார். அதனால் அதைத் திருத்த வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொண்டதற்கு ஏற்ப, அவர் நடவடிக்கை எடுத்தபோது, 13 ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டார்கள்; அவர்கள் அந்தக் கோரிக்கையை வைத்த பிறகு, அந்த விதியைத் தளர்த்தியிருக்கிறோம்.

[1978 செப்டம்பர் 13

திரு. க. அறிவழகன் : அந்தத் தமிழ் ஆசிரியர்கள் வேலையிழந்த நிலையில் அரசு மறுபடியும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்ததற்காக நான் அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அதே நோத்தில் 'பி' விங் பள்ளிக்கூடத்திலே இருக்கிற 'ஏ' விங் பணிகள் என்று சொல்வது ஒரு பொருத்தமற்ற நடைமுறையாகும். இது எந்த வாதத்திற்கும் ஒத்துவராதது ஆகும். ஆகவே, அப்படி 'பி' விங் பள்ளிகளில் இருக்கின்ற அத்தனை பணிகளையும் 'ஏ' விங் பணிகள் என்று மாற்றுவதில் அரசுக்கு சிரமம் ஒன்றுமில்லை. இப்போது ஹையர் செக்கண்டரி பள்ளிக்கூடங்களில் 'ஏ' விங், 'பி' விங் ஆசிரியர்கள் என்று பிரிவுகள் இல்லை. எல்லோரும் கூட்டாக நியமிக்கப்படுகிறார்கள். ஆகவே 'பி' விங் பள்ளிகளிலே இருக்கிற பணி இடங்களை 'பி' விங் பணி இடங்கள் என்று ஆக்க வேண்டும்; அதே போல 'ஏ' விங் பள்ளிகளில் 'ஏ' விங் பணியிடங்களே இருக்கட்டும் என்ற முறையில் மாற்றம் செய்வதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: 'ஏ' விங், 'பி' விங் என்ற இரண்டு பிரிவுகளையும் ஒழிக்கின்ற முடிவு இந்த அரசால் மேற்கொள்ளப்பட்டதற்குப் பிறகு இந்தப் பிரச்சினை எழவில்லை.

திரு. பி. ஆர். தாமஸ் : 'பி' பிரிவு பள்ளிகளிலே தோன்றக்கூடிய தமிழ் ஆசிரியர் காலியிடங்களுக்கு இந்த பாதிக்கப்பட்ட ஆசிரியர்களை நியமிக்கலாம். மேலும் முதலிலே இவர்களுக்கெல்லாம் பணி கொடுத்த பிறகு, 'ஏ' பிரிவு ஆசிரியர்களை எடுத்துக்கொள்ளலாம் அல்லவா? இதுபற்றி மாண்புமிரு கல்வி அமைச்சர் அவர்கள் ஆராய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போதே அவர்கள் அங்கு தொடர்ந்து இருக்குமாறு நாம் விதியைத் தளர்த்தியிருக்கிறோம். 'ஏ' விங், 'பி' விங் என்ற இரண்டு பிரிவையும் அகற்றி, ஒரே விங்காக ஒரே முறையில் நாம் இவர்களையெல்லாம் பணியில் வைத்துக்கொள்ள வேண்டுமென்ற முடிவினை எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, வேறு பிரச்சினைகள் எழத் தேவையில்லை.

திரு. எம். சங்கரலிங்கம் : 'பி' விங் என்ற ஒரு பிரிவை அரசு ஏற்படுத்தி உத்தரவு வெளியிட்டது இந்தப் பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்தவரை தான். 'ஏ' விங், 'பி' விங் ஆகிய இரண்டு பிரிவுகளையும் அரசு கழகப் பள்ளிகளில் ஏற்றுக்கொண்டதிலிருந்து அரசுப் பணிகள் என்றுதான் சொல்ல வேண்டுமென்று இருக்கிறது. தமிழ் ஆசிரியர்களைப் பொறுத்தவரை, முதன்மைக் கல்வி அதிகாரி அவர்களை நியமித்ததில் தவறு ஒன்றுமில்லை.



1978 செப்டம்பர் 13]

மாநிலப் பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திலிருந்து ஒரு தவறான உத்தரவு போய் அவர்கள் தற்காலிகமாக நியமித்தார்கள். பிறகு அவர்கள் பதவி இறக்கம் செய்யப்பட்டு இன்றைக்கு அரசு ஆணையின்படி மீண்டும் அதே வேலையில், அதே நிலையில், பணியில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பதவி இறக்கப்பட்ட காலத்திலிருந்து அந்த முதல் நிலைத் தமிழாசிரியர்கள் வேலை பார்த்ததாகக் கணக்கிட்டு, உரிய ஊதிய உயர்வு கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இயக்குநர் அலுவலகத்திலிருந்து சென்ற உத்தரவு எல்லா மாவட்டங்களிலும் உள்ள தலைமைக் கல்வி அலுவலர்களால் பின்பற்றப்பட்டது. ஆனால், இராமநாதபுர மாவட்ட தலைமைக் கல்வி அதிகாரி மட்டும் அதை மீறியுள்ளார். இப்பொழுது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, இயக்குநர் அலுவலகத்திலிருந்து போன உத்தரவே சரியில்லை என்று சொல்கிறார்கள். இது பரிசீலிக்க வேண்டிய ஒன்று என்பதை மட்டும் தான் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அரசாங்கத்திலிருந்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவு இராமநாதபுர மாவட்ட தலைமைக் கல்வி அதிகாரி அவர்களால் மட்டும் மீறப்பட்டிருக்கிறது என்றும், சரியாகப் புரிந்துகொள்ளாமல் செயல்பட்டிருக்கிறார்கள் என்றும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எல்லா ம்ாவட்டங்களிலும் அந்த உத்தரவு சரியாகப் பின்பற்றப்பட்டிருக்கிறது. ஆனால், இராமநாதபுர மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி மட்டும் இதில் முறைகேடாக நடந்திருக்கிறார். இதன் விளைவாக பல ஆசிரியர்கள் பாதிப்புக்கு உள்ளாகி, அதற்குப் பின் அரசு மிகப் பெரிய அளவில் நடவடிக்கையெல்லாம் எடுத்து, இவ்வளவு பெரிய பிரச்சினையைத் தோற்றுவித்திருக்கிறது முதன்மைக் கல்வி அதிகாரியின் நடவடிக்கை. அரசாங்கம் பிறகு செம்மைப்படுத்தியிருக்கிறது. இதற்காக அரசை மனதாரப் பாராட்டுகிறேன், நன்றி செலுத்துகின்றேன். முறைகேடான உத்தரவு பிறப்பித்த தலைமைக் கல்வி அதிகாரி மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் இப்படிப்பட்ட குற்றங்களுக்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அதை கல்வித் துறை எடுக்கும்.

(முற்பகல் 10-40)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : அமைச்சர் அவர்கள் தந்த பதிலிலிருந்து இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் மூலகாரணம் 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு இணைப்பு முடியாததுதான். இந்த இணைப்பு முடிந்துவிட்டது என்று பாவ

லாக வெளியே பேசப்படுகிறது. அறிவிப்புதான் இன்னும் வரவில்லை என்று பேசப்படுகிறது. எனவே, அதை இந்த மாதம் 30 ஆம் தேதிக்குள்ளாக அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அறிவிக்கிற ஒரு நிலைமைக்குத் தான் நாங்கள் தயாராகிக் கொண்டிருக்கிறோம். இன்றைக்குகூட முடிந்தால், அதை உங்களிடத்தில் சொல்லிக்கொள்வதில் நான் பெருமகிழ்ச்சியடையக் கூடியவன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

## *Hostel facilities in Madurai Law College*

* 82 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that due to lack of accommodation, hostel facilities could not be extended to many students of the Madurai Law College, who applied for it; and

(*b*) if so, whether there is any proposal with the Government in this regard?

### மதுரை சட்டக் கல்லூரியில் விடுதி வசதிகள்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) போதிய இடவசதி இல்லாத காரணத்தினால், விடுதி வசதிகள் வேண்டும் என விண்ணப்பித்துக் கொண்ட மதுரை சட்டக் கல்லூரியைச் சேர்ந்த பல மாணவர்களுக்கு அந்த வசதிகள் அளிக்க இயலவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இது குறித்து செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) நிதிப் பற்றுக்குறையினால் மதுரை சட்டக் கல்லூரியில் மாண வர்கள் தங்கும் விடுதி கட்டும் பிரேரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. ஆர். தாமஸ் : மதுரை சட்டக் கல்லூரியில் பயிலும் மாணவர் களுக்கு அங்கே தங்கிப் படிக்கக்கூடிய வசதி இல்லாத காரணத்தால், அரசினால் வழங்கப்படும் உதவித் தொகையைக் கூட பெறமுடியாத நிலை இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். மாணவர்கள் தாங்கள் விரும்புகிற



இடங்களில் தங்கிப் படித்தால், அவர்களுக்குரிய உதவித் தொகை அளிக்கப் படுமா ? பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கும், ஹரிஜன மாணவர்களுக்கும் இந்த வகையில் அரசு உதவித் தொகை வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மதுரை சட்டக் கல்லூரியில் 900 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். இதில் 100 மாணவர்கள் கல்லூரியினால் வாடகைக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள தனியார் விடுதி ஒன்றிலும், தொழிற் பயிற்சி நிலையத்தின் விடுதியிலும் தங்கியுள்ளனர். மதுரை சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு என்று தனியாக விடுதிக் கட்டிடம் கட்ட 1978-79 பட்ஜெட்டில் ரூ. 33.56 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று சட்டக் கல்லூரி இயக்குநர் அவர்கள் பரிந்துரைத்துள்ளார். ஆனாலும், நிதிப் பற்றுக் குறையின் காரணமாக இந்தத் திட்டத்தைத் தள்ளிப் போடலாம் என்ற முடிவு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி விடுதிகளில் தங்கியுள்ள மாணவர் கள் குறிப்பிட்ட விதிகளுக்கு உட்பட்டு இருந்தால், அரசின் நிதி உதவிச் சலுகைகள் அளிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : சட்டக் கல்லூரி மாணவர்கள் தங்களின் பெரும் பகுதியான நேரத்தை விடுதிகளில்தான் கழிக்க வேண்டியிருக்கிறது. காரணம், அவர்களது படிப்பு பகுதி நேரப் படிப்பாகும். ஆகவே, அவர்கள் கவனம் வேறு திசையில் திரும்பாத அளவுக்கு விடுதியிலே நிலைநிறுத்தமாறு செய்ய வேண்டும். எனவே, புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு நாள் ஆகும் என்றாலும், வாடகைக்காவது ஒரு கட்டிடத்தை எடுத்து மாணவர்களுக்கு விடுதி வசதி யைச் செய்து கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசு அதைப் பரிசீலிக்கும்.

THIRU A. R. DAMODARAN: Sir, it is understood that the U.G.C. gives 85 per cent loan for construction of Students' Hostels. May I know whether this scheme is applicable to Government Hostels also in respect of Madurai Law College?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்து விவரம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால், பதில் அளிக்கலாம்.

திரு. எம். சங்கரலிங்கம் : மதுரையிலே உள்ள சட்டக் கல்லூரிக்கென்று சொந்தமாக இடமில்லாமல் அது இயங்கி வருகிறது. மதுரைப் பல்கலைக் கழகத்திலேயிருந்து தற்காலிகமாக இடத்தை வாங்கி மதுரைச் சட்டக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. மதுரைப் பல்கலைக் கழக நிலத்தை பிரிவு

படித்த அந்த இடத்திலேயிருந்து சட்டக் கல்லூரியை விடுவிக்க வேண்டும் என்று தொடர்ந்து கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது. எனவே, சட்டக் கல்லூரிக்கென்று நிரந்தரமான ஒரு இடத்தை அமைத்து, அதை யொட்டியே விடுதியையும் அமைத்தால், நலமாக இருக்கும். அதற்காக இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்றாலும், ஒரு துணை மதிப்பீட்டின் மூலமாவது நிதியைக் கோரி இதை அமுல்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** கல்வித் துறை அந்த முயற்சியை மேற்கொள்ளும்.

## *Private Secondary Schools*

*83 *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it has been brought to the notice of the Government, that some private Secondary Schools have not appointed Physical Instructors, Drawing Masters and Tamil teachers though there is provision to appoint such teachers for the students studying in 6th, 7th and 8th Standards in High Schools;

(*b*) whether the Government have received any representation that those who possess special certificates in the above subjects, should be given age exemption above 30 years; and

(*c*) if so, the action taken thereon?

**தனியார் இடைநிலைப் பள்ளிகள்.**

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் 6, 7, 8 வகுப்புகளில் படிக்கும் மாணவர் களுக்கு உடற்பயிற்சி, ஓவிய, தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதற்கு வழி வகை இருந்தும், சில தனியார் இடைநிலைப் பள்ளிகளில் அந்த நியமனம் நடைபெறவில்லை என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா ?

(இ) மேற்கூறிய பாடங்களில் சிறப்புச் சான்றிதழ் பெற்றோருக்கு 30 வயதுக்கு மேல் விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று முறையீடு எதும் அரசுக்கு வந்ததுண்டா ?

(உ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) இல்லை.

(இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. எம். சங்கரலிங்கம் :** நடுநிலைப் பள்ளிகளில் பயில்கிற மாணவர்கள் உடற் பயிற்சி பெற வேண்டியது மிகவும் இன்றியமையாதது. உடற் பயிற்சி செய்கிற பழக்கம் சிறு பருவத்திலேயே ஏற்பட்டால்தான், அதன் தொடர் பான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் ஏற்படும். இப்போது அகில இந்திய விளையாட்டுப் போட்டி யானாலும், அகில உலக விளையாட்டுப் போட்டியானாலும், நம் நாட்டு மாணவர்கள் பின்தங்கியே இருக்கிறார்கள். அகில இந்திய விளையாட்டில் தமிழ்நாடு பின்தங்கியிருக்கிறது. எனவே இதைக் கருத்திலே கொண்டு கல்விக்கூடங்களில், குறிப்பாக நடுநிலைப் பள்ளிகளில் உடற் பயிற்சி ஆசிரியர் களை நியமிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அத்தகைய கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

## *Half-a-Million Job Scheme.*

*84 *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) wheher it is a fact that the services of the teachers who worked under the Half-a-Million Job Scheme have not been regularised;

(*b*) if so, the reason therefor; and

(*c*) the steps taken to regularise their services?

**ஐந்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு திட்டம்.**

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஐந்து இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் கீழ், பணிபுரிந்த ஆசிரியர்களது பணி வரன்முறை செய்யப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

(உ) அவர்களது பணிகள் வரன்முறை செய்ய எடுக்கப்பட்ட நட வடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : (அ) ஆம். "ஐந்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு" திட்டத்தின் கீழ் அரசுப் பள்ளிகளில் நியமித்த பட்டதாரி ஆசிரியர்கள் முதனிலைத் தமிழாசிரியர்கள் ஆகியோரது பணி மட்டும் இன்னும் வரன்முறைப் படுத்தப்படவில்லை.

(இ) & (உ) அப்பதவிகள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின் வரம்பில் உள்ளன. எனவே, அக்குழு தேர்ந்தெடுக்கும் நபர்களையே அப்பதவிகளுக்கு முறையாக நியமிக்க இயலும். அரசுப் பள்ளிகளில் தற்காலிகப் பணியிலுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் அதற்கிணையான ஆசிரியர்களுக்கென ஒரு சிறப்புத் தேர்வு நடத்த தேர்வாணைக்குழு அண்மையில் இசைவு தந்து, அதற்கான தேர்வினை நடத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்தகைய ஆசிரியர்களுள் 31—3—1977 அன்று குறைந்தது ஓராண்டு தற்காலிகப் பணி (தொடர்ந்து அல்லது விட்டு விட்டு) முடித்திருந்து அந்நாளில் பணியிலிருந்தவர்களும், அந்நாளில் பணியில் இல்லாமலிருந்தவர்களில் அவ்வாறு ஓராண்டு பணி முடித்து விட்டு, 1—4—74 அன்று அல்லது அதற்குப் பின்னர் பணி நீக்கம் செய்யப்பட்டவர்களும் அத்தேர்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

**திரு. எம். சங்கரலிங்கம்** : ஐந்து இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது என்பது மத்திய அரசாங்கம் வழங்கிய திட்டம். அதன் மூலம் வேலையளிக்கப்பட்டவர்களுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் வேலை இழப்பு வரக்கூடாது என்பதுதான் அதன் குறிக்கோள். இந்தத் திட்டத்தின் கீழ் 1974-ல் வேலையில் சேர்ந்தவர்களுக்குக் கூட இது வரை பணி வரன்முறை செய்யாமலிருப்பது, தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்ற காரணத்தால் தான். எனவே சிறப்புத் தேர்வாணைக் குழுத் தேர்விற்கு இவர்களை அனுப்பி, இவர்கள் வேலையில் சேர்ந்த நாள் முதல் இவர்களது பணியை வரன்முறை செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்** : இப்படிப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்பதற்காகத் தான் சிறப்புத் தேர்வுக்குத் தற்போது தேர்வாணைக் குழுவிலிருந்து அனுமதி பெற்றுத் தந்திருக்கிறோம். எனவே அவர்கள் தேர்வு முடிந்து, வேலையில் சேர்ந்த பிறகு, மற்ற பிரச்சினைகளைக் கவனிக்கலாம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்** : ஐந்து இலட்சம் பேருக்கு வேலை அளிக்கும் இத்திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், அவர்களது பணி இன்னும் நிரந்தரப்படுத்தப்படவில்லை என்ற



ஒரே காரணத்திற்காக கேஷ்யுவல் லீவ் (casual leave) என்று சொல்லப்படுகிற விடுப்பு வசதியைத் தவிர மற்ற மருத்துவ விடுப்பு வசதி போன்றவைகள் தரப்படுவதில்லை. ஆனால் Fundamental Rules ல் இரண்டாண்டு பணிபுரிந்தவர் நிரந்தரமல்லாத ஊழியர்களுக்கும் கூட முழு ஊதியத்துடன் மருத்துவ விடுப்பு அளிக்கலாம் என்று இருக்கிறது. "A Non-permanent Government servant is eligible for medical leave provided he has completed 2 years of service" என்று இருக்கிறது. ஆனால் அதிகாரிகளோ இந்த மருத்துவ விடுப்பு வசதியை அளிக்க மறுக்கிறார்கள். ஆசிரியர்களுடைய பணியை நிரந்தரப்படுத்துவதைத் தாமதப் படுத்துவதன் காரணமாக, அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய முதலாண்டு ஊதிய உயர்வு மற்றும் அவர்கள் பெறத் தகுதியுடைய மருத்துவ விடுப்பு போன்ற வசதிகள் விதிமுறைகளுக்குட்பட்டு உடனடியாகக் கொடுக்க மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகளுக்கு ஆணையிடுவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்** : விதிகளிலே தரப்பட்டிருக்கிற உரிமைகளை அனுபவிக்க அந்த ஆசிரியர்களுக்கு வாய்ப்பு உண்டு. ஆனால் இது மறுக்கப்படுகிறது என்று இங்கே சொல்லப்படுகிறது. அதைக் குறித்து அரசு பரிசீலிக்கும்.

**திரு. க. அறிவழகன்** : ஐந்து இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பது மத்திய அரசாங்கத்தின் திட்டம். அதன் அடிப்படையில் மாநில அரசாங்கம் ஆசிரியர்களை நியமித்தது. இந்தத் திட்டத்திலே இரண்டு அரசுகளும் சம்பந்தப்பட்டிருக்கின்றன. அதற்குப் பிறகு, அந்த ஆசிரியர்கள் பணி இழந்த நிலையில் தேர்வாணைக் குழுவின் தேர்வுக்குச் செல்லுவதற்கு யோக்கியதை இருக்கிறது என்ற முறையிலே கருத்து நிலவுகிறது. நான் இங்கே குறிப்பிட விரும்புவது, இந்த நிலையில் பார்த்தால், தேர்வாணைக் குழு என்பது வேலையை இழக்கச் செய்யும் குழு அல்லது வேலையில் இருப்பவர்களை வேலையில் இல்லாமல் செய்யும் குழு என்று சொல்லலாம் போல் இருக்கிறது. அரசே ஒரு இலட்சியமாக எடுத்துக் கொண்ட முடிவுகளை, அதாவது ஐந்து இலட்சம் பேருக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று எடுத்த முடிவையொட்டி, அதிலே வேலை பெற்ற அத்தனை ஆசிரியர்களுடைய சர்விசை வரன்முறைப்படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : தேர்வாணைக் குழு என்பது எல்லோரும் யோசித்து அரசியல் சட்டப்படி அமைக்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிற ஒரு அமைப்பு. அவர்கள் சொல்லுகிற யோசனைகளை

அரசாங்கம் ஏற்று நடத்துகிறது. ஒரு கட்சி ஆட்சிக்கு வருகிற நேரத்தில் வரம்பு மீறி செய்கிற நிலைமைகளைக் கட்டுப்படுத்தத்தான், அந்தத் தேர்வாணைக் குழு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் பேசுவதைப் பார்த்தால், நோயைவிட மருந்து ஆபத்தாக இருக்கும்போல் இருக்கிறது.

**திரு. பி. ஆர். தாமஸ் :** ஐந்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட பிற்பட்ட நலத்துறையின் கீழ் வரும் மதுரை மாவட்ட கள்ளர் ரெக்லமேஷன் துறையில் 45 பட்டதாரி ஆசிரியர்கள், 42 இடைநிலை ஆசிரியர்கள், 3 தமிழ் ஆசிரியர்கள் ஆகியோர் 1973-ஆம் ஆண்டிலேயே நியமிக்கப்பட்டவர்கள். இவர்களில் யாரும் தேர்வாணைக் குழுவின் கீழ் வருகிறவர்கள் அல்ல. எனவே இந்த ஆசிரியர்களைப் பொறுத்த வரையிலாவது அவர்களது பணியை வரன்முறைப்படுத்தவும், நிரந்தரப்படுத்தவும் அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதை அரசு பரிசீலிக்கும்.

**திரு. செ. முத்துசாமி :** தற்காலிக ஆசிரியர்களைப் பொறுத்தும் அரசாங்க ஊழியர்களைப் பொறுத்தும் தமிழ் நாட்டு முதலமைச்சர் அவர்கள் ஏற்காட்டிலே நடந்த கூட்டம் ஒன்றிலே ஒரு கருத்தை மிகத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதாவது ஐந்தாண்டுக் காலம், ஆறாண்டுக்காலம் இந்த நிர்வாகத்தை நம்பி வேலை செய்தவர்கள், சர்விஸ் கமிஷனிலே தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் என்று சொல்லி, அவர்களை வேலையிலிருந்து வெளியே அனுப்பிவிடச் சொல்லுவது தர்மம்தானா? அப்படி ஒரு சட்டம் இருந்தால் நீதியா என்று கேட்டிருக்கிறார்கள். அவருடைய அமைச்சரவையிலே இருக்கிற கல்வியமைச்சர் அவர்கள் சொல்லுவதைப் பார்த்தால், "நோயைவிட மருந்து ஆபத்தானது" என்று குறிப்பிடுவதைப் பார்த்தால், முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்து பரிசீலிக்கப்படுமா, பரிசீலிக்கப் படமாட்டாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மாறாக நடக்கிற அமைச்சராக நண்பர் திரு. முத்துசாமி அவர்களுக்கு நான் தென்படுவதாகத் தெரிகிறது. அது மிகவும் தவறான பார்வையாகும். நேற்றையதினம் நான் படித்த கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்த அறிக்கையிலே கூட, அத்தகைய உணர்வுகள்தான் பெருமளவுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் ஒன்றை மறந்துவிடக்கூடாது. தமிழகத்திலே அனைத்து மக்களுக்கும் ஒரு





சமூக நீதியைத் தர வேண்டுமென்ற இயக்கத்தை நடத்தி, அதன் அடிப்படையிலே ஆட்சிக்கு வந்திருக்கிற நாங்கள், பிற்பட்ட மக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் கிடைக்க வேண்டிய வாய்ப்புகளை மறுக்கிற முறைகளுக்கு இத்தகைய ஆதரவு தரவேண்டுமென்று கேட்பதை நாங்கள் விரும்பவில்லை.

(முற்பகல் 10-50)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் நோய் என்று ஒன்றையும், அதற்கு மருந்து என்று தேர்வாணைக் குழுவையும் ஒப்பிட்டுக் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இங்கே ஏற்பட்டிருக்கக்கூடிய நோய் வேலையில்லாத் திண்டாட்டம். இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கக்கூடிய நோக்காகத்தான் 5 லட்சம் பேர் வேலைத் திட்டம் வந்தது. அது அந்த நோயைத் தீர்க்கின்ற மருந்தாக இல்லை. தேர்வாணைக் குழு மேலும் பலரை வேலையிழக்கச் செய்திருப்பதால், அதற்கு வாய்ப்பாக அது இருந்திருப்பதால்தான் திரு. அறிவழகன் அவர்கள் அப்படிக் கேட்டார்கள். அது எப்படி மருந்தாக முடியும் என்று கேட்டுக்கொள்கிறேன். தக்க மருந்து அது இல்லை என்றால், அதற்கு மாற்று மருந்தாக வேறு எந்த வழி முறையை அரசு கடைபிடிக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன். வேலையிழப்பு ஏற்படாத அளவிலே, அந்த நோயைத் தீர்க்க வேறு வகை காண அரசு முயலுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஒரு 10 பேர்களுக்கு வேலை கொடுப்பது என்று பார்ப்போமானால், இப்படி வந்த 10 பேர்கள் என்பது அல்ல. வேறு சிலருக்கு, வேறு 10 பேர்களுக்கு இந்தத் தேர்வாணைக் குழு வேலை தேடித்தருகிறது. அந்த முறையில் அது செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே வேலையில்லாத் திண்டாட்ட நிவாரணத் திட்டத்தின் கீழ் வேலை தேடித்தரும் ஸ்தாபனம் மருந்தாகத்தான் இருக்க முடியும். வேறு எதுவாகவும் இருக்க முடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** இந்த 5 லட்சம் பேர் வேலைத் திட்டத்தின் கீழ் நியமனம் செய்யப்பட்டிருக்கும் ஆசிரியப் பெருமக்கள் 1—4—73-லிருந்து பணி வரன்முறை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால் மே மாத ஊதியம் பல ஆசிரியர்களுக்குச் சில நிறுவனங்களிலே நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆதலால் ஏற்கெனவே 1—3—1973 முதல் அவர்கள் பணி வரன்முறைபடுத்தப்பட்டு ரெகுலர் போஸ்ட்டிலே அவர்கள் வைக்கப்பட்டிருப்பதால், அவர்களுக்கு மே மாத ஊதியம் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : வினா எண் 85 ஒத்திவைக்கப்படுகிறது. கடைசியாக எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## *Specialist Doctors.*

*86 *Q.*—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Health be pleased to state the details of the Doctors in Government Service who cannot but work only in Madras City, because of their specialisation in specific fields and the availability of the scientific equipments for the same?

## சிறப்பு மருத்துவர்கள்.

**திரு. க. இராமமூர்த்தி** : மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சிறப்புத் துறைகளில் நிபுணத்துவம் பெற்றிருப்பதனாலும், இவற்றிற்கான விஞ்ஞான சாதனங்கள் கிடைப்பதனாலும், சென்னை மாநகரத்தில்தான் இருந்து பணிபுரிய வேண்டியுள்ள அரசுப் பணிகளில் உள்ள மருத்துவர்களின் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்** : வெளியூர்களில் தரம் உயர்த்தப் பட்ட பட்டமேற்படிப்புக் கல்வி நிறுவனங்கள் ஏதும் இல்லாததால், சென்னை மாநகரில் உள்ள பட்டமேற்படிப்புக்கல்வி-ஆராய்ச்சி நிறுவனங்களில் பல்வேறு சிறப்புத்துறைகளில் கீழ்க்கண்ட ஏழு இயக்குநர்கள் பதவிகள் மாநகரிலேயே இருக்க வேண்டியுள்ளன—

(அ) குழந்தை நோய்த் துறை இயக்குநர்.

(ஆ) மகப்பேறு மகளிர் நோய்த்துறை இயக்குநர்.

(இ) எக்ஸ்-கதிர்வீச்சுத் துறை இயக்குநர்.

(ஈ) காது, மூக்கு, தொண்டை நோய்த் துறை இயக்குநர்.

(உ) மேக நோய்த் துறை இயக்குநர்.

(ஊ) நுண்ணுயிரியல் துறை இயக்குநர்.

(எ) உடலமைப்பியல் துறை இயக்குநர்.



மேலும் நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்களை முழு அளவில் பயன்படுத்திக் கொள்வதற்குத் தேவையான சிறப்பு வாய்ந்த, நவீன, விலை உயர்ந்த சாதன வசதிகள் வெளியூர்களிலுள்ள மருத்துவக் கல்வி நிறுவனங்களில் தற்போது இல்லையாதலால், இதய நோய் சிகிச்சையியல் ( Cardiology ) சிறுநீரகயியல் ( Nephrology ) உள்சுரப்பி இயல் ( Endocrinology ) மார்புப்பகுதி அறுவை மருத்துவம் (Thoracic Surgery) குழாய் நாளஞ்சார்ந்த அறுவை மருத்துவம் ( Vascular Surgery ) நரம்பு இயல் ( Neurology ) முதலியவை போன்ற அதிகச் சிறப்பு வாய்ந்த சில வகை மருத்துவத்துறைகளில் இயலாததாகும்; எனவே, இத்தகைய, சிறப்புத் துறைகளை நடத்துவதற்காக, பொது நலன் கருதி மாநகரத்திலேயே நிபுணர்கள் வைத்துக் கொள்ளப்படுகின்றனர். எனினும், வெளியூர் மருத்துவக் கல்வி நிறுவனங்களிலும், இத்தகைய சிறப்பு வசதிகளை வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. க. இராமமூர்த்தி** : நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏறத்தாழ, 6, 7 மாதங்களுக்கு முன்னதாகவே இந்த நிபுணர்களுடைய உதவி, துணை, கிராமப்புறத்திலே இருக்கின்ற மக்களுக்குக் கிடைக்கின்ற வகையிலே இவர்கள் எல்லாம் மாற்றப்படுவார்கள் என்ற உறுதியைக் கொடுத்தார்கள். இவர்கள் மாற்றப்படுவதன் மூலமாக நகரத்திற்கு வரமுடியாதவர்களுக்கு மருத்துவ வசதிகள் சீராகக் கிடைக்க வாய்ப்பு ஏற்படும் என்று சொன்னார்கள். ஆனால் அமைச்சர் அவர்களிடமிருந்து வந்த பதிலிலிருந்து, இனிமேல்தான் இதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நிலைமைகள் இருப்பதால், இப்படிப்பட்ட நிபுணர்களை சென்னை நகரம் தவிர மற்ற இடங்களுக்கு மாற்ற இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆகும் என்று அரசு அறிவிக்குமா அல்லது எத்தனை ஆண்டுகளில் மாற்றப்படுவார்கள் என்று வரையறுத்து இந்த அரசு அறிவிக்குமா?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்** : இத்தகைய நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் உள்ள பிரிவை எல்லா மருத்துவ மனைகளிலும் நிறுவ வேண்டும் என்றும், கிராமப்புற மக்கள் அந்த வசதிகளைப் பெறவேண்டும் என்றும்தான் இந்த அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அவைகளை எடுக்கிறது. ஆனால் அந்த மருத்துவத்தில் நிபுணத்துவம் பெற்றவர்களை மருத்துவ மனைகளுக்கு அனுப்பாமலிருப்பதற்குக் காரணம் அவர்கள் அங்கு கலந்து ஆய்வு செய்வதற்கான கருவிகள் இன்னும் அங்கு அமைக்கப்படவில்லை என்பது. அந்த மாதிரியான கருவிகள் அதிக விலையாக இருக்கின்றன. அந்தக் கருவிகளை எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக அந்த

இடங்களில் அமைத்து விரிவுபடுத்த இந்த அரசு நடவடிக்கைகளை எடுக்கும். அதை எவ்வளவு விரைவில் செய்ய இயலுமோ அவ்வளவு விரைவில் செய்ய அரசு விரைவான முயற்சிகளை எடுத்துக்கொள்ளும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

THIRU G. VASANTHA PAI: Sir, when the Specialist Doctors are retained here in Madras City, if their wives are also doctors, but not Specialists, are they being transferred outside the City?

THE HON. THIRU R. SOUNDARARAJAN: No, Sir.

THIRU G. VASANTHA PAI: I have got some two or three cases where this has been done. May I bring it to the notice of the Hon. Minister?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்:** அப்படிப்பட்டவைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, most of the Specialities are located in the three Hospitals in Madras City. A few Specilities are located in Madurai and two or three Specialities in Thanjavur. In view of the fact that many of these Specialities can be established in the Medical College Hospitals in Madurai, Thanjavur, Tirunelveli and Chingleput, may I know whether there would be any conscious attempt on the part of the Government to establish these new Specialities in these District Hospitals so that the rural doctors may also have a chance of specialising in these Specialities in the rural areas?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** தலைவர் அவர்களே, தக்க நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து அதற்கான கோப்புகள் இன்று நடைமுறையிலே இருந்துகொண்டிருக்கின்றன. வெகு விரைவில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** இது போன்ற முடிவுகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை என்ற காரணத்தினாலே, கொள்கை அளவிலே இதை ஆரம்பிப்பதாக அறிவிக்காமல், இதற்கான நடவடிக்கைகளை எடுத்த பின்பு அறிவிக்க அரசு முன்வருமா? அரசு முன்னதாகவே கொள்கை அளவிலான அறிவிப்புகளை அறிவித்து அடுத்து நடவடிக்கைகளை எடுக்காத நிலைகள் காரணமாக, மக்கள் இதை எதிர்பார்த்து ஏமாந்துவிடுகின்றனர். இந்த அரசாங்கம் அறிவிப்பு மட்டுமே செய்யும் அரசாங்கம் என்றும், நடவடிக்கை எடுக்காத அரசாங்கம் என்றும் மக்களிடையே தவறான எண்ணம் உருவாகாமலிருக்க இதுபோன்ற அறிவிப்புகளை முறையாகப் பரிசீலனை செய்துவிட்டு பிறகு அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்:** கொள்கை அளவில் அறிவித்துவிட்டு, அதைச் செயல்படுத்தாமல் இருப்பதாக அங்கத்தினர் அவர்கள் சொல்கின்றார்கள். அறிவித்துவிட்ட பின்னர் அதை எவ்வளவு வேகமாகச் செயல்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு நடவடிக்கைகள் எடுக்கிறோம். இன்றையதினம் அதை வேகமாகச் செயல்படுத்த வேண்டுமென்று மாவட்ட மருத்துவமனை சிறப்பு இயல் துறை ஒன்றைத் தொடங்கியிருக்கிறோம் என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைச் செய்யாமல் விடப்போவதில்லை என்ற அளவில் சொன்னார்கள். குறிப்பாக சென்னையிலே 20 ஆண்டுகள், 25 ஆண்டுகள் சர்வீஸ் ஆனவர்களை ஸ்பெஷலிஸ்டுகளை எல்லாம் கிராமப்புறத்திற்குப் போகவேண்டும் என்று சொன்னார்கள். நான் தெரிந்துகொண்டிருப்பது, சென்னையிலேயே 20, 25 ஆண்டுகள் ஆன நியூராலஜி, ஈ.என்.டி. ஸ்பெஷலிஸ்டுகளை கிராமப்புறங்களுக்கு எப்போது மாற்றப்போகிறார்கள்? அந்த கிராமப்புறங்களிலே, நியூராலஜி, ஈ.என்.டி. ஸ்பெஷலிஸ்டுகள் வேலை செய்வதற்கான வசதிகள் இருக்கின்றனவா? எந்தக் கால கட்டத்தில் அந்த நிலைமைகளை நாம் அடையப்போகிறோம் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** கொஞ்சம் கொஞ்சமாகத்தான் ஒரு திட்டத்தை விரிவுபடுத்த முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன். அவசரக்கோலத்தில் அள்ளித் தெளித்திடக்கூடாது. விரைவில் அந்த மருத்துவ வசதிகளை கிராமப்புற மக்கள் பெறுவதற்கு வேண்டிய வழிவகைகளை அரசு காணும் என்று சொல்லிக்கொள்கிறேன். இதற்கு உதாரணமாகச் சொல்வதென்றால், சிறுநீரக இயல் பிரிவு ஒன்றை மதுரை மருத்துவ மனையில் உருவாக்கியிருக்கிறோம். அதுபோல கோவையிலும் உருவாக்கியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவைகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1978 செப்டம்பர் 13

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மதுரை ஒரு கிராமம் அல்ல. அதுவும் ஒரு மாநகராட்சியாகும். கோயம்புத்தூர் ஒரு கிராமம் அல்ல. அதுவும் ஒரு பெரிய நகராட்சியாகும். கிராமப்புறங்களுக்கு இந்த வசதி செய்து தரப்படும் என்று சொல்லப்பட்டது. அது எப்போது செய்து தரப்படும் என்பதுதான் என் கேள்வி.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : மதுரையிலேயும் கோவையிலேயும் சிறுநீரக இயல் பிரிவை உருவாக்கியிருப்பதாகச் சொன்னேன். இதற்கு முன் அந்த மாவட்டங்களைச் சுற்றியுள்ள கிராமப்புற மக்கள் இதுவரையில் அதற்காகச் சென்னைக்கு வரவேண்டியிருந்தது. இப்போது அந்த கிராமப்புற மக்கள் அந்தந்த மாவட்டத்திலுள்ள மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறும் அளவுக்கு வாய்ப்புகளை இந்த அரசு இன்றைக்கு உருவாக்கித் தந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

திரு. சி. இராமலிங்கம் : சிறப்பு மருத்துவர்களை மாற்றவில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதற்குத் தகுந்த கருவிகள் இல்லையென்று சொன்னார்கள். ஆனால் உள் பாகத்திலுள்ள, அதாவது கிராமங்களிலே இருக்கக்கூடிய விவசாயிகள், தொழிலாளர்கள், இப்படிப்பட்ட சிறப்பு மருத்துவர்கள் இல்லாததால், நோய்த் தன்மை முற்றி, அகால மரணம் அடைந்து விடுகிறார்கள். எனவே படிப்படியாகச் செய்யப்படுமென்று சொன்னது எப்போது செய்யப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : இப்போதே அதற்கான நடைமுறைகள் எடுக்கப்பட்டு, விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன. நான் அதை முன்பே குறிப்பிட்டுக் காட்டினேன். மதுரையிலும், கோவையிலும் அது இன்றைக்கு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. தற்சமயம் திருச்சியில், இருதய நோய் பிரிவில் நவீன கருவிகளை வைத்திருக்கிறோம்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : சிறப்புத் துறை மருத்துவர்களுடைய வயது வரம்பு மற்றவர்களைக் காட்டிலும் அதிகமானதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : ஆசிரியர்களாக மருத்துவத் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு 58 வயது என்றிருக்கிறது, மற்ற ஆசிரியர்களைப் போல. மற்ற துறைகளிலே இருக்கிறவர்களுக்கு 55 வயது என்ற முறை இருக்கிறது.



1978 செப்டம்பர் 13]

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு அமைச்சரவர்கள், சிறப்பு முறையிலே பயிற்சி பெற்றவர்களையெல்லாம் கிராமங்களுக்கு அனுப்ப அரசு முயற்சிக்கிறதென்று சொன்னார்கள். அதை வரவேற்கிறோம். மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளிலே இப்போது சில வியாதிகளை டையக்நாஸ் (diagnose) பண்ண முடியாத காட்சியைப் பார்க்கிறோம். என்ன நோய் என்று கண்டு பிடிப்பதற்கு மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளுக்கு, இங்கே இருக்கக்கூடிய ஸ்பெஷலிஸ்டுகள் மாதம் ஒரு முறை சென்று வருவார்களா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : ஒரு உதாரணத்தை இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன். இதய நோய் சிகிச்சை இயலில் இதயத் துடிப்பைப் படமெடுத்துக் காட்டும் கருவி உயரளவு, 500 அல்லது 1000 மெகாஆம்ஸ் எக்ஸ் கதிர் கருவியுடன் கூடிய உருப்பெருக்காடி, இதயத் துடிப்பைப் படமெடுத்துக் காட்டும் திரைப்படக் கருவி ஆகிய கருவிகள் வாலாயப் பணிக்குத் தேவையானவையாகும். சிறுநீரக இயலில், குருதியை இடைச்சவ்வூடாகப் பரவச் செய்து பொருள்களைப் பிரிக்கும் முறையில் சோதனை செய்தல் அல்லது சிறுநீரகம் செயலற்றுப் போகும்போது, இரத்தத்திலுள்ள யூரியாவைக் குறைப்பதற்காக அடிவயிற்று உட்பகுதி வழியாக திரவப் பொருட்களைச் செலுத்தும் நடைமுறை ஆகியவற்றிற்கு ஒளிச் செறிவு ...ளி 'பிளச்' மீட்டர் மின் பகுப்புக்கு உதவும் நீர்மப் பொருள்கள் மதிப்பீடு ...தனங்கள்—இப்படி பல்வேறு தேவைகள் நமக்கு அத்தியாவசியமாக ...ருக்கின்றன. அவைகள் விலை உயர்ந்தவையாக இருப்பதால், தற்சமயம் ...வட்டங்களிலே இருக்கக்கூடிய சில மருத்துவ மனைகளில் நிறுவப் ...ட்டிருக்கின்றன. கொஞ்சம் கொஞ்சமாக அவை அனைத்து மாவட்டங்களிலும் ...றுவப்படும். அப்படிப்பட்ட சூழ்நிலை வரும்போது, எல்லோருக்கும் அந்த ...சதிகள் கிடைக்கும்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : நிபுணர்கள், மாவட்டத் தலைமை மருத்துவ ...னைகளுக்குச் சென்று, இன்ன நோய் என்று டையக்னஸ் செய்ய முடியாத ...நாய்களை டையக்னஸ் செய்ய ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு ஆர். சௌந்தரராஜன் : நிபுணர்கள் மட்டும் போனால் ...தாது. நோயைக் கண்டறிய கருவிகளும் தேவை.

திரு எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : முதலிலே சொன்னது, வசதி ...ல்லாமல் யார் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்களோ அல்லது நோய்களை ...ர்த்துக்கொள்ள முடியாமல் செத்துப் போகிறார்களோ அப்பேர்ப்பட்டவர் ...ளுக்குள்ள கஷ்டத்தை நிவர்த்தி பண்ணப் போகிறோமென்று, இப்போது

நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் படிப்படியாக ஏற்பாடுகள் செய்கிறோமென்று சொல்கிறார்கள். அவர்கள் கோவை, திருச்சி, மதுரையில் வைக்கப் போகிறோமென்று சொன்னார்கள். இந்தக் கருவிகளை எல்லா ஜில்லாத் தலைநகரங்களிலும் ஏன் வைக்க முடியவில்லை? எடுத்துக்கொண்டு போக முடியாத நிலைமை இருக்கிறதா? என்ன காரணமாக இந்த மூன்று இடங்களில் மாத்திரம் வைக்கிறார்கள்? இவைகள் எல்லா வசதிகளும் உள்ள இடங்கள். மற்ற கிராமங்களில் வசதிகள் இல்லை என்பதால்தான் முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். அங்கே முதலில் வசதிகளைச் செய்துவிட்டு, பின்னர் இங்கே ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா?

*மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்:* முதலில் சென்னை மாநகரத்தில் மட்டும் இதுபோன்ற வசதிகள் இருந்தன. தற்போது ஒவ்வொரு மாவட்டத் தலைநகராக விஸ்தரித்துக்கொண்டு வருகிறோம். மாவட்டத் தலைநகர்களில் விஸ்தரித்த பிறகு, தாலூக்காக்களில் விஸ்தரிக்கப்படும். அதற்குப் பிறகு கிராமங்களுக்கு விஸ்தரிக்கப்படும்.

THIRUMATHI MANDAKINI KRISHNAMOORTHI: Hon. Chairman, Sir, the Hon. the Health Minister has been giving us very useful replies. I am asking this question on behalf of the young doctors who work in the dispensaries in the villages. Some of them are very talented and are prescribing good medicines. Some of them want to be Surgeons. Will the Government provide necessary facilities by which these people could visit the District Hospitals at least once or twice a week and during that time, the other doctors can take up the work of the dispensary so that we will not lose the services of the young doctors who can also become Specialists and who can be useful in the District Hospitals?

*மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்:* உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

*திரு. செ. முத்துசாமி:* இங்கே நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் கூறும்போது, சிறப்பான பயிற்சி பெற்றவர்களும் இருக்க வேண்டும், கருவிகளும் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். பொதுவாக அவர் பொறுப்பேற்ற பிறகு, இந்தத் துறை விறுவிறுப்பாக செயல்படுகிறதென்பதில் சந்தேகமில்லை. திருப்பூரிலே தலைமை மருத்துவ மனை ஒன்று இருக்கிறது. அங்கே எக்ஸ்ரே எடுக்கக் கருவிகள் இருக்கின்றன. ஆனால் முதல் நாள் இரவு அட்மிட்டான ஆசிரியரை அடுத்த நாள் காலை வரை வைத்திருந்து, எக்ஸ்ரே



கருவியை இயக்க ஆபரேடர்கள் இல்லை என்று சொல்லி, அவரை டிஸ்சார்ஜ் செய்யும் நடைமுறை இருக்கிறது. கருவிகள் மட்டும் இருந்தால் போதாது. அந்தக் கருவிகளைப் பயன்படுத்தத் தவறியவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

*மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்:* தற்சமயம் இதுபோன்ற கருவிகளை இயக்க தேவையானவர்கள் இருக்க வேண்டுமென்று நடவடிக்கை எடுத்து வருகிறோம். குறிப்பிட்ட தவறுகள் எங்கேயாவது இருந்து, அதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் சுட்டிக் காட்டினால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

*திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்:* பொதுவாக ராயப்பேட்டை மருத்துவ மனை, ஜெனரல் ஆஸ்பத்திரி போன்ற இடங்களில் பார்வையாளர்கள் கூட்டத்தைக் குறைக்க, காலையில் ஒரு மணி, மாலையில் இரண்டு மணி நேரம் என்று மட்டும் அனுமதிக்கப்படுவது சரி. ராயப்பேட்டை மருத்துவ மனையில் உள்ள இன்டென்சிங் கேர் யூனிட்டில் அவசரமான, அபாயகரமான நோயாளிகளைப் பார்க்கவும்கூட மேலே சொன்ன மாதிரியே நேரம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதனால் அந்த நோயாளிகளின் நிலை என்ன என்று அறிந்துகொள்ள முடியாமல் அவர்கள் குடும்பத்தினர் சங்கடப்படுகிறார்கள். அவர்களுக்கு மட்டும் விதி விலக்கு அளிக்கப்படுமா?

*மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்:* உறுப்பினர் அவர்களே அபாயகரமான நோயாளிகள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அபாயகரமான நோயாளிகளுக்குத் தீவிரமான சிகிச்சை அளிக்க வேண்டியிருக்கும். எனவே அதிகமான கூட்டமிருந்தால், அவர்களுக்குத் தீவிரமான சிகிச்சை அளிக்கத் தடையாக இருக்கும். இப்போது அபாயகரமான நோயாளிகளுடன் ஒருவர் இருக்க அனுமதி அளிக்கப்படுகிறது.

*திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்:* டாக்டர்களைப் பார்த்தாவது தகவல் அறிந்துகொள்ள ஆவன செய்யப்படுமா?

*மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்:* இப்போதே அப்படிச் செய்கிறார்கள். அதற்கு எந்தவிதமான தடையுமில்லை.

*திரு. செ. முத்துசாமி:* மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறியதற்கு இணங்கக் கூறுகிறேன். திருப்பூர் தலைமை மருத்துவ மனையில் 11 ஆம் தேதி இரவு திரு. கே. சோமசுந்தரம், மாவட்ட ஆசிரியர் கூட்டணித் தலைவர் அவர்கள் . .

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : எந்த மாதம் ?

திரு. செ. முத்துசாமி : செப்டம்பர் மாதம்தான். இரவு லாரியில் அடிபட்டு, கை ஒடிந்து, ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்திருக்கிறார்கள். இரவு சிகிச்சை அளிக்கப்படவில்லை. 30, 40 ஆசிரியர்கள் இருந்திருக்கிறார்கள். காலையில், எக்ஸ்ரே எடுக்காமல் ஒன்றும் செய்ய முடியாது, இங்கே எக்ஸ்ரே எடுக்க வழியில்லை, ஆகவே நீங்கள் எடுத்துச் செல்லுங்கள் என்று 11 மணிக்குப் பிறகு டிஸ்சார்ஜ் செய்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லி, தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : உறுப்பினர் அவர்கள் கூறியது பரிசீலிக்கப்பட்டு, உடனே நடவடிக்கை எடுக்கப்படும்.

## *Reimbursement of Medical Expenses to Retired Government Officials.*

* 87 *Q.*—THIRU E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Health be pleased to state whether there is any proposal with the Government to remove the present ceiling of Rs. 200 for retired Government Officials and to reimburse the whole medical expenses, as in the case of Government Officials in service?

### ஓய்வுபெற்ற அரசு அலுவலர்களுக்கு மருந்து செலவு ஈடு செய்தல்

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கு இப்போதுள்ள ரூ. 200 உச்சவரம்பை ரத்து செய்து, பணிபுரியும் அலுவலர்களுக்குக் கொடுப்பது போல், மருந்து வாங்க செலவு செய்கின்ற பூராத் தொகையையும் ஈடு செய்யும் Re mburse —செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : இல்லை

(முற்பகல் 11-10)

திரு. ஈ. எஸ். வெக்கடேசன்: மருந்து வாங்கும் தொகையை ஈடு செய்ய எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் ஓய்வு பெற்றவர்களுக்கு கஷ்டமா யிருப்பதால் அவர்களுடைய மருந்து வசதிக்காக மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : அரசாணை எண் 1629, தேதி 22—6—1971-ல் ஓய்வு பெற்ற அரசு அலுவலர்கள், தாங்கள் ஓய்வு பெற்ற காலத்திலிருந்து தங்களுடைய மருந்துச் செலவுகளை ஈடு செய்ய ஒரு வருடத்திற்கு ஒரு மாத ஓய்வூதியமோ அல்லது 200 ரூபாயோ அதில் எது குறைந்ததோ அதைப் பெறலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. ஈ. எஸ். . வெங்கடேசன் : மாதா மாதம் ரீ-இம்பர்ஸ்மென்ட் தொகையை பென்ஷனோடு சேர்த்துக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்: இந்த யோசனை ஏற்று பரிசீலிக்கப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : ஓய்வு பெற்றவர்கள், ஓய்வு பெறாதவர்கள் அனைவருக்குமே மருத்துவப் படியை மாதந்தோறும் அளிக்க வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் விருப்பத்தைத் தெரிவித்திருந்தார்கள். எங்களுடைய போதாத காலம், அவர்கள் மறைந்துவிட்டார்கள், அந்த ஒரு எண்ணத்தை இங்கே செயல்படுத்துகிற வகையிலே நம்முடைய மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், அனைத்து ஊழியர்களுக்கும் மாதந் தோறும் மருத்துவப் படியை அளிக்கும் திட்டத்தைப் பரிந்துரை செய் வார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : இந்தத் திட்டத்தைப் பரிந் துரை செய்ய ஆவன நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இந்த ரீ-இம்பர்ஸ்மென்ட் Re mburs me)( tn ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை அளவில்தான் கிடைக்கிறதே தவிர, விண்ணப்பிக்கிற எல்லா அலுவலர்களுக்கும், ஆசிரியர் களுக்கும் கிடைக்கவில்லை என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : குறிப்பாக அப்படிப்பட்ட குறை பாடுகள் இருப்பின், எடுத்துச்சொன்னால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி : இப்போது உள்ளாட்சித் துறையிலே பணியாற்றக் கூடிய ஆசிரியர்கள் மருந்துச் செலவுக்காக வருடத்திற்கு 300 ரூபாய் வரையில் பெறலாம் என்றிருந்த வரம்பை நீக்கி, ஆர்.டி.எல்.ஏ., டிப்பார்ட்மென்ட் ...த்துவத் துறையோடு கலந்து ஒரு உத்தரவு போட்டது. ஆனால் அந்த திரு... உள்ளாட்சித் துறையில் போடப்பட்டதே தவிர, மருத்துவத் துறை அனைவ...வரவில்லை என்பதற்காக, அந்த உத்தரவு போட்டு ஓராண்டுக் காலம் அவ்வப்...

ஆகியும், உள்ளாட்சித் துறையில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு இந்த மருத்துவச் சலுகையை அளிக்காமல் இருக்கிறார்கள். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து அந்த உத்தரவை அமுல்படுத்த உடனடியாக மருத்துவத் துறையிலேயிருந்து உத்தரவிடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்:** மூலக் கேள்வி ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கு மருத்துவ வசதியை அளிப்பது பற்றி. இது குறித்து தனிக் கேள்வியைப் போட்டால், விரிவான பதிலைச் சொல்லுகிறேன்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** இந்தச் சலுகையானது தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் வழங்கப்படுகிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** அரசுத் துறையிலே பணியாற்றியவர்களுக்கு வழங்கப்படுகிறது.

## Examination of Out-Patients.

* 88 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether any target has been fixed for a Doctor; as regards the number of out-patients to be examined and prescribed medicines; and

(*b*) if so, the details thereof?

## புற நோயாளிகளை பரிசோதனை செய்தல்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) புற நோயாளிகளை பரிசோதனை செய்து மருந்து கொடுப்பதில் ஒரு டாக்டர் எத்தனை நோயாளிகளைப் பார்த்து மருந்து எழுதிக் கொடுக்கவேண்டுமென்று குறியீடு ஏதும் இருக்கிறதா ?

(இ) ஆமெனில், அது யாது ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கிடமில்லை.

**திரு எம். சங்கரலிங்கம் :** அரசு மருத்துவ மனைகளில் புற நோயாளி ஆயிரக்கணக்கில் வந்து சேர்கிறபோது, அங்கே இரண்டு, மூன்று டாக்டர்கள் இருந்து அங்கே வருகிறவர்களைத் திரும்பிக் கூடப் பார்க்காமல்,



என்ன சொல்கிறார்கள் என்பதைக் கூடக் கேட்காமல் மருந்துகளை எழுதிக் கொடுக்கிற சூழ்நிலை ஏற்படுகிறது. இது மருத்துவர்களுடைய குறையல்ல. மருத்துவர்களுக்கு இருக்கிற வேலைப் பளுவின் காரணமாகத்தான் அவர்கள் அப்படிச் செய்கிறார்கள். சில மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளில் கூட அங்குள்ள டாக்டரால் புற நோயாளிகளைப் பார்க்க முடியாத நிலை இருக்கிறது. எனவே புற நோயாளிகளைத் திருப்தி செய்ய, ஒரு மருத்துவர் இவ்வளவு பேரைப் பார்க்க வேண்டும் என்று, ஒரு நூறோ அல்லது நூற்றைம்பதோ என்ற குறியீட்டை வைத்து அதற்குத்தக்க மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா ? அந்தக் குறியீட்டைச் செய்கிற முறையிலே இல்லையென்றால், அங்கே நடப்பதைப்பற்றிக் கவலையில்லை என்பதுதானே பொருள் ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** ஒரு டாக்டர் இத்தனை நோயாளிகளைக் கவனித்து, மருந்துகளை எழுதிக் கொடுக்க வேண்டும் என்ற குறியீடு இதுவரையில் இல்லை. தற்போதும் அப்படிக் குறியீடுகளைக் கடைப்பிடிக்க நம்முடைய நிதி நிலைமை இடமளிக்கவில்லை. அனைத்து நோயாளிகளையும் டாக்டர்கள் கவனிக்கிறார்கள். ஒரு டாக்டர் சுமார் 150 நோயாளிகளை, குறைந்தபட்சம் சரிவர கவனிக்கலாம் என்று கருதப்படுவதால், இந்த அடிப்படையிலே தற்போது ஆய்வு நடத்தச்சொல்லி அப்படி எந்தெந்த மருத்துவ மனைகளில் வருகிற புற நோயாளிகளைக் கவனிக்க டாக்டர்கள் இல்லை என்பதைச் சரிபார்த்து ஓரளவுக்குச் செம்மைப்படுத்துவதற்கான திட்டத்தை இந்த அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, in many of these Hospitals, the Duty Assistant Surgeons are put on duty at 7 A.M. in the morning and they have to work for 24 hours—full 24 hours shift. This is against all conventions of utilising labour. May I know whether the Hon. the Health Minister who has made very many surprise inspections—and we welcome these—will consider the possibility of allotting more doctors to attend on those admission days to relieve the strain on the existing doctors.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** இது பற்றிய குறிப்பு என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** புற நோயாளிகள், அக நோயாளிகள் ஆகிய அனைவருமே, மருத்துவமனையில் உள்ள ஊழியர்களுக்கும், மருத்துவர்களுக்கும் அவ்வப்போது கையூட்டு தந்தால்தான், மருத்துவம் செய்கிறார்கள் என்பதை

[1978 செப்டம்பர் 13

அரசு உணருமா? மருத்துவ மனையில் திடீர் சோதனை நடத்துகிற அமைச்சர் அவர்கள், ஒரு நல்ல நடிகர் என்றும் கேள்விப்படுகிறேன், எனவே அவ்வப் போது அவர் நோயாளியாகவும் வேடம் போட்டு சோதனை செய்து இந்தக் குறைபாடுகளை நீக்க முயற்சிப்பாரா?

**மாண்புமிகு திரு. ஆர். செளந்தரராஜன் :** இது போன்ற குறைபாடுகள் இருக்கின்றன என்று கேள்விப்பட்ட மருத்துவ மனைகளுக்கெல்லாம் நான் உடனடியாகச் சென்று தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கிறது. எங்கேயாவது இப்படி நடைபெற்றது என்று குறிப்பிட்டுச் சொன்னால் அங்கேயும் நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக வேடம் அணிந்து போகத் தேவையில்லை.

**திரு. ஆ. நல்லசிவம் :** தாலுக்கா மருத்துவ மனைகளிலும் பெரும் கூட்டம் இருக்கிறது. எனவே சராசரி புற நோயாளிகள் எவ்வளவு பேர் வரு கிறார்கள் என்பதைக் கணக்கிட்டு அதற்கேற்ப டாக்டர்களை நியமிக்கும் முயற்சியை அரசு செய்யுமா? இது வரையில் அப்படி இல்லாவிட்டாலும் இதை முக்கியமானதாகக் கருதி இனியாவது செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆர். செளந்தரராஜன் :** முதலிலேயே இந்த வினாவுக்கு பதிலைத் தந்திருக்கிறேன். அதற்கான ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் :** சென்ற மாதத்தில் என்னுடைய சொந்த அத்தான், தங்கவேல் என்பவர்—பட்டாபிராமில் வசித்தவர்—எக்ஸ், சர்வீஸ்மேன்—74 வயது அடைந்தவர்—சென்னைக்கு ஒரு வேலையாக வந்திருந்தபோது, திடீரென்று நெஞ்சு வலி ஏற்பட்டதால், உடனே இராயப் பேட்டை மருத்துவமனையில் அட்மிஷன் ஆகியிருக்கிறார். காலை 9 மணிக்கு அட்மிஷன் ஆனவர் 11 மணிக்கு அங்கே இறந்திருக்கிறார். சாவதற்கு முன்னால் பட்டாபிராம் வீட்டு விலாசத்தையும் கொடுத்திருக்கிறார். ஆனாலும், இறந்த பிறகு அவருடைய பிணத்தை ஐஸ் ரூமில் வைத்து விட்டார்கள். அவர் வீட்டுக்குத் தகவலைக் கொடுக்கவில்லை. இதனால் 7ஆம் தேதி இறந்த வரை 10 ஆம் தேதி நாங்கள் தேடியலைந்து கண்டுபிடித்து பிணத்தை எடுத் துக்கொண்டு போனோம். ஆஸ்பத்திரியிலிருந்து இராயப்பேட்டை போலீஸ் நிலையத்திற்கு மட்டும் தகவலைக் கொடுத்திருக்கிறார்கள், ஆனால் வீட்டுக்குத் தகவலைக் கொடுக்கவில்லை. இராயப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனில் கேட்டால் நாங்கள் பட்டாபிராம் தண்டரை ஸ்டேஷனுக்கு தகவல் கொடுத்துவிட்டோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் பட்டாபிராம் தண்டரை போலீஸ் ஸ்டேஷனில், எங்களுக்குத் தகவல் ஏதும் வரவில்லை என்று சொன்னார்கள். இதனால் நான்கு நாட்கள் தாமதம் ஏற்பட்டது. இதைப்பற்றி முதலமைச்சர்



1978 செப்டம்பர் 13]

அவர்களுக்கும், ஐ.ஜி. அவர்களுக்கும் புகார் எழுதியிருக்கிறேன். அதற்கும் இதுவரை பதில் ஒன்றும் வரவில்லை. இனியாவது இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு நேரடியாகத் தகவல் தரும் பொறுப்பு ஆஸ்பத்திரியிடமே கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். செளந்தரராஜன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிற பிரச்சினை மிகவும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இதைக் கருத்திலே கொண்டு இதற்கான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதோடு, எதிர்காலத்தில் இது மாதிரித் தாமதங்கள் ஏற்படாமலிருக்க ஆவண செய்யப்படும் என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** புற நோயாளிகளைப் பரிசோதனை செய்கிற மருத்துவர்களுடைய வேலைப் பளுவைக் குறைக்கிற முயற்சிகளில் ஈடுபடுகிற நேரத்தில், பல மருத்துவ மனைகளில் புற நோயாளிகளின் எண்ணிக்கை அதிக மாகி நீண்ட க்யூவில் நிற்பதையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் அந்த க்யூவில் நிற்கக் கூட இடம் இல்லாமல், வெய்யிலிலும் மழையிலும் நிற்க வேண்டிய நிலை இருக்கிறது. திண்டிவனம் போன்ற மருத்துவ மனையில், புறநோயாளிகள் நிற்க இடமில்லாமல், மழைக் காலத்தில் மழையிலும், வெய்யில் காலத்தில் வெய்யிலிலும் நிற்க வேண்டிய நிலை இருக்கிறது. பல மருத்துவ மனைகளில் கட்டிட அமைப்பு அப்படி இருக்கிறது. இன்றைக்குப் புற நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிற நிலையில், அவர்கள் தங்க வசதி செய்து தர அரசு உடனடியாக முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். செளந்தரராஜன் :** புறநோயாளிகள் அதிகப்படியாக வருகிற இடங்களில் எல்லாம் கணக்கை எடுக்கச்சொல்லி அவர்கள் செளகரிய மாகச் சிகிச்சையைப் பெற கட்டிடங்களை விஸ்தரிப்பதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. ஆர். பாலசுப்ரமணியம்:** இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர் ஒருவர் அடிப்பட்டு, முகம் எல்லாம் ரத்தக் காயத்துடன் சென்னை பெரிய மருத்துவ மனையில் சிகிச்சைக்குச் சென்ற போது, தான் இன்னார் என்று சொல்லியும் கூட, 3 மணி நேரம் சிகிச்சை அளிக்கப்படவில்லை என்ற குறிப்பு ஏதும் மாண்புமிகு சுகாதாரம் மற்றும் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர் களின் கவனத்திற்கு வந்ததா?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அடிப்பட்டு சிகிச்சைக்குச் சென்ற உறுப் பினர் யார் என்று குறிப்பிட்டுச் சொன்னால் தானே தெரியும்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. கே. வில்வம் அவர்கள் டாக்ஸியில் சென்றபோது அடிபட்டு, முகம் எல்லாம் ரத்தக் காயத்துடன் அரசினர் பொது மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காகச் சென்று, தான் இன்னார் என்று சொல்லியும், 3 மணி நேரம் சிகிச்சை கொடுக்கப்படாமல் இருந்த தகவல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : இப்படி ஒரு பிரச்சினை இதுவரை என் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

## *Compensation for Damage Caused by Cyclone.*

*85 Q.—THIRU A. BALASUBRAMANIAM: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) whether any compensation was given to the peasants for the damage cause to their sugar-cane, plantain and paddy by Cyclone in November 1977 in Salem District; and

(*b*) if so, the amount and the number of people to whom it was given?

## புயல் சேதத்துக்கு நஷ்டஈடு.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு வேளாண்மை நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சேலம் மாவட்டத்தில் 1977 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வீசிய புயலால் சேதமுற்ற கரும்பு, வாழை, நெல் முதலியவைகளைப் பயிரிட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், எத்தனை பேருக்கு எவ்வளவு தொகை கொடுக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) சேலம் மாவட்டத்தில் குறிப் பிடத்தக்க சேதம் ஏதும் இல்லை. எனவே, அந்த மாவட்டத்தில் நெல், கரும்பு, வாழை பயிரிட்டிருந்த விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு ஏதும் கொடுக்கப் படவில்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.





(முற்பகல் 11-20)

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : இந்தப் புயலால் சேதமுற்ற அந்தப் பகுதி யில் விவசாய இலாகாவினர், ரெவின்யூ இலாகாவினர் வந்து எவ்வளவு நிலம் சேதமுற்றது, எவ்வளவு சேதம் போன்ற குறிப்பெடுத்துச் சென்றார்கள். அவர்களுக்கு இதுவரை நஷ்ட ஈடு வழங்கப்படவில்லை. அதே நேரத்தில் வெள்ளம், புயல் வந்த நேரத்தில் அரசாங்கத்திலிருந்து நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்தார்கள். ஏக்கருக்கு 100 ரூபாய் வீதம் நஷ்ட ஈடு கொடுக்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால் இவர்களுக்கு இன்னும் கொடுக்காமலிருப்பதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : புயலால், வெள்ளத்தால், பாதிக்கப் பட்ட, சேதமுற்ற மாவட்டங்கள் என்ற வகையில் தஞ்சாவூர், திருச்சி, புதுக் கோட்டை, தென்னாற்காடு போன்ற மாவட்டங்களைத்தான் சேர்த்திருக் கிறார்கள். சேலம் மாவட்டத்தில் அதிகமாகச் சேதம் இல்லை. அதனால் ஒரு வேளை சேர்க்கப்படாமல் இருக்கலாம். சேதமுற்றவர்கள் அவர்களாகவே அரசுக்குத் தெரிவிக்காததால், எந்தவித நஷ்ட ஈடும் கொடுக்கப்படவில்லை. ஆகவே சேலம் மாவட்டத்தில் எவ்வளவு நிலங்கள் சேதமுற்றன என்ற கணக்கு வரவில்லை, அதனால் நஷ்ட ஈடு கொடுக்கப்படவில்லை.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : சேலம் மாவட்டம் மழையாலே, புயலாலே முழுதும் பாதிக்கப்பட்ட மாவட்டம் என்று அரசு அறிக்கையிலேயே குறிப் பிடப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக நாமக்கல் தாலுக்காவிலே எருமைப்பட்டி யூனியன், சேந்தமங்கலம் யூனியன், மோகனூர் யூனியன் போன்ற யூனியன்கள் புயலால் பாதிக்கப்பட்டன என்று கெஸட் நோட்டிபிக்கேஷன் கூட ' வந்திருக்கிறது. அதனால்தான் விவசாய, ரெவின்யூ இலாகாக்களைச் சேர்ந்த அதிகாரிகள் வந்து புள்ளிவிவரம் எடுத் தார்கள். அரசுக்குத் தகவல் வரவில்லை என்று மாண்புமிகு விவசாய அமைச்சரவர்கள் சொல்லுகிறார்கள். விவசாய இலாகாவும் ரெவின்யூ இலாகாவும் அரசுக்கு உட்பட்ட இலாகாக்கள் தானே. அவர்கள் நேரில் வந்து எவ்வளவு சேதம் என்ற விவரத்தை எடுத்துப் போனார்கள். அப்படி இருந்தும் ஏன் அவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படவில்லை ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : வாழை, கரும்பு போன்றவை சேத மடைந்தால், ஏக்கருக்கு 100 ரூபாய் வீதம் நஷ்ட ஈடு கொடுத்தோம். மொத்தம் 250 ஏக்கர் 4 சென்ட் அந்த வகையில் நாமக்கல்லில் சேதமுற்ற தாகத் தகவல் வந்தது. அதுவும் குளம் உடைபட்ட காரணத்தால், மண் மேடிட்டு, அப்படி ஏற்பட்டது. விவசாயப் பெருங்குடி மக்களுக்காக அரசுத் துறையின் மூலம் அதைச் செம்மைப்படுத்த ஏற்பாடு செய்துகொண்டி

ருக்கிறோம். வாழை, கரும்பு போன்றவைகளுக்கு மற்றபடி எந்த பாதிப்பும் இல்லாததால் எந்த விவசாயிக்கும் நஷ்ட ஈடு கொடுக்கப்படவில்லை. அதனால் தான் அப்படிச் சொன்னேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** அரசுக்கு எந்தத் தகவலும் வரவில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அந்த அதிகாரிகளுக்கு விவசாயிகள் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களே நேரில் வந்து புள்ளிவிவரத்தைச் சேகரித்துச் சென்றார்கள். விவசாய இலாகாவினர், ரெவின்யூ இலாகாவினர் குறிப்பு எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அப்படி இருந்தும் ஏன் அரசுக்கு அந்தக் குறிப்பு வரவில்லை ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தற்போது அதுபற்றிய தகவல் இல்லை. தகவல் சேகரித்துத் தருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

**திரு. ஆ. திராவிடமணி :** புயலால், வெள்ளத்தால், வாழை, கரும்பு, நெல் போன்றவை சேதமுற்றால் நஷ்ட ஈடு விவசாயிகளுக்கு வழங்குவது போல் வெற்றிலைக் கொடி பயிரிடும் விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்று நான் ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சரிடத்தில் கோரிக்கை கொடுத்திருந்தேன். வெற்றிலைக் கொடி பயிரிடும் விவசாயிகளுக்கும் அந்தத் தொகை வழங்கப் படுமா ? அரசாங்கம் அப்படி வழங்கும் திட்டம் ஏதாவது வைத்திருக்கிறதா ? பாதிக்கப்பட்ட அந்த வெற்றிலைக் கொடி விவசாயிகளுக்கு இதுவரை அரசாங்கம் செய்த உதவிகள் என்னென்ன என்ற விவரத்தை நான் மாண்புமிகு விவசாய அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு உறுப்பினரின் ஒரு கேள்விக்கு நான் தகுந்த பதிலை ஏற்கெனவே கொடுத்திருக்கிறேன். மீண்டும் கேட்கின்றார்கள் என்பதால் சொல்கிறேன். தமிழ் நாட்டிலே வெள்ளத் தாலும் புயலாலும் பாதிக்கப்பட்ட வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகளுக்கு 5,455 பேர்களுக்கு ரூபாய் 10,23,000 மானியத் தொகையாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. பல பகுதிகளிலிருந்து இது போன்ற புகார்கள் காலக் கெடுவுக்குள் வந்தவற்றுக்கெல்லாம் மானியம் கொடுக்கப்பட்டுள்ளது. காலக் கெடு முடிந்த பிறகு வந்ததால், கவனிக்கப்படவில்லை என்று உறுப்பினர் சொல்லுகிறார். அது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி ( * ) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]





## 2. அறிவிப்பு.

### (1) காமராஜ் பல்கலைக் கழகப் பொதுக் குழுவிற்குத் தேர்தல்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** காமராஜ் பல்கலைக் கழகப் பொதுக் குழுவில் 28-10-78 அன்று முதல் ஏற்படவிருக்கும் வெற்றிடங்களுக்கு திரு. வே. தங்கப்பாண்டியன், திரு. ஈ. எஸ். வெங்கடேசன் ஆகிய இருவரிடமிருந்து மட்டுமே அதற்கான வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளதால், அவ்விருவரும் உரியவாறு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கிறேன்.

## 3. மேலவை விதி 82-ன் கீழ் விவர அறிக்கை.

### இராமநாதபுரம் மாவட்டத்தில் பேருந்துகள் மீண்டும் ஓடுவது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மேலவை விதி 82-ன் கீழ் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த காரியப்பட்டி கிராமத்தில் 13-8-1978 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நகரியக்கப் பேருந்துகளை அருப்புக் கோட்டையிலிருந்து மீனாட்சிபுரத்திற்கும், மீனாட்சிபுரத்திலிருந்து மதுரைக்கும் தேவையென முதலமைச்சருக்கும் போக்குவரத்து அதிகாரிகளுக்கும் விண்ணப்பிப்பது என தீர்மானிக்கப்பட்டது. இதையொட்டி 10 நபர் நடவடிக்கைக் குழு ஒன்று காரியப்பட்டியில் அமைக்கப்பட்டது. 26-8-1978 அன்று இந்த நடவடிக்கைக் குழுவானது 4-9-1978 அன்று பேருந்து மறியல் போராட்டத்தை அறிவித்து அச்சடித்த கோரிக்கைப் பிரதிகளை விநியோகித்து கோரிக்கைகளை வலியுறுத்தினர். மேற்கண்ட கோரிக்கைப் பிரதி கிடைக்கப் பெற்றவுடன் 27-8-1978 அன்று இராமநாதபுரம் மாவட்ட போக்குவரத்து அதிகாரி, அருப்புக்கோட்டை தாசில்தாருடனும், காவல்துறை அதிகாரியுடனும், பொதுமக்களையும் ஏனைய மனுதாரர்களையும் சந்தித்தனர். அன்று அவர்களிடம் அருப்புக்கோட்டையிலிருந்து மீனாட்சிபுரத்திற்கு இடைப்பட்ட தூரமானது 25 கி.மீ.க்கு மேல் இருப்பதால் நகரப் பேருந்து இயக்க இயலாது என்று அருப்புக்கோட்டையிலிருந்து வினோபா நகருக்கு ஒரு நகரப் பேருந்து பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தினரால் இயக்கப்படும் என்றும் கூறப் பட்டது. அதன்படி அந்தப் பேருந்துகளை பாண்டியன் போக்குவரத்துக் கழகம் இயக்கி வருகின்றது. மதுரையிலிருந்து மீனாட்சிபுரத்திற்கு பேருந்து விடுவதைப் பொறுத்தவரையிலும், மோட்டார் வாகனப் பிரிவுச் சட்டம் 87(2)

(திரு. சி. பொன்னையன்) [1978 செப்டம்பர் 13

விதியின்படி மேற்பட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. எல்லாக் கோரிக்கைகளுக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்ட பின்னரும் 4-9-1978 அன்று சுமார் 200 பேர்கள் காரிப்பட்டி பேருந்து நிலையத்தில் கூடி பஸ் மறியல் போராட்டத்தை நடத்த தலைப்பட்டனர். விரும்பக் கூடாத நிகழ்ச்சிகளைத் தடுக்கும்பொருட்டு மதுரை—அருப்புக்கோட்டை பேருந்துகள் காரியப்பட்டி வழியாகச் செல்லாமல் விருதுநகர் வழியாகத் திருப்பிவிடப்பட்டது. இதன் காரணமாக பஸ் மறியல் செய்ய ஏது இல்லாமல் போகவே தொடர் உண்ணா விரதத்தை 5-9-1978 முதல் தொடர்ந்தார்கள். போராட்டக்காரர்கள் சாலைகளின் நடுவே தடைகளையும் வைத்தனர். போராட்டம் நடத்தினால் கோரிக்கைகள் நிறைவேறும் என்ற எண்ணத்தில் பேருந்சகளைத் தடுத்து நிறுத்தியதனால் காரியப்பட்டி. மற்ற அருகாமையில் உள்ள கிராம பொது மக்கள் இன்னலுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். நெடுஞ்சாலை கோட்டப் பொறியாளர் காவல்துறையாளரின் உதவியால் 9-9-1978 அன்று சாலைகளில் தடைகளை அகற்றினர். தடைகளை அகற்றுவதற்கு உள்ளூர் மக்களில் சிலர் தடுத்தபோது 122 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். பொதுமக்கள் மறுபடியும் மறியல் செய்ததால் பேருந்துகள் ஓட இயலவில்லை. கோட்டாட்சியாளர் காரியப்பட்டிற்குச் சென்று சமரச முயற்சிகளை நடத்த ஏற்பாடுகளைச் செய்தார். சமரச முயற்சிகள் நீடித்து அதன் பலனுக இன்று காலை போராட்டம் நிறுத்தப்பட்டு பேருந்துகள் எப்போதும் போல ஓடிக்கொண்டிருக்கின்றன.

4. கவன ஈர்ப்பு.

(1) தமிழ்நாடு தனியார் பள்ளி ஆசிரியர் வேலைப் பாதுகாப்புப் போராட்டக் குழு தனியார் நிர்வாகத்தால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நிவாரணம் வேண்டி சென்னை, குறளகம் முன்பு சாகும்வரை உண்ணா விரதம் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திருவாளர்கள் க. மீனாட்சிசுந்தரம், செ. முத்துசாமி, சி. ஆர். லட்சுமிகாந்தன், பி. ஆர். தாமஸ், ம. சங்கர
செ. முத்துசாமி, சி. ஆர். லெட்சுமிகாந்தன், பி. ஆர். தாமஸ், ம. சங்கர முன் மொழிந்தால் போதுமானது. உறுப்பினர்கள் விரும்பினால் ஒருவர் ஒருவராகக் கேள்விகள் கேட்டு மேலும் விளக்கம் பெறலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவரவர்களே, "தமிழ்நாடு தனியார் பள்ளி ஆசிரியர் வேலைப் பாதுகாப்புப் போராட்டக் குழு சென்னை நகரில் குறளகம் முன்பு தனியார் நிர்வாகத்தால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்



1978 செப்டம்பர் 13] (திரு. க. மீனாட்சிசுந்தரம்)

களுக்கு நிவாரணம் வேண்டி 28 ஆகஸ்ட் 1978 முதல் வரை உண்ணா விரதம் என அறிவித்தது குறித்து" மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு மேலவை விதி 42-ன் கீழ் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தமிழ்நாடு தனியார் பள்ளி ஆசிரியர் வேலைப் பாதுகாப்பு போராட்டக் குழு என்கின்ற அமைப்பு முதலில் எட்டு கோரிக்கைகளை முன் வைத்து 28 ஆகஸ்ட் 1978-ம் நாள் காலை முதல் சென்னையில் ஆசிரியர்கள் காலவரையறையற்ற உண்ணாவிரதம் தொடங்கப் போவதாக அறிவித்தது. பின் மீண்டும் இரு கோரிக்கைகளைச் சேர்த்து மொத்தம் பத்து கோரிக்கைகளை துண்டு அறிக்கை மூலம் வெளியிட்டு உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளது.

2. தனியார் பள்ளி ஆசிரியர்களின் பொதுவான கோரிக்கை அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்பதும், மேல் முறையீட்டு அலுவலர்களினால் வழங்கும் ஆணைகளை நிறைவேற்றாத பள்ளி மேலாண்மைகளின் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதே.

3. 1974-ம் ஆண்டின் தமிழ் நாடு அரசினரால் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட 'தமிழ் நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப் படுத்துதல்) சட்டம்'. மற்றும் விதிகளில் ஆசிரியர்களின் பணிப் பாதுகாப்புக்கும் மேல் முறையீடு செய்வதற்கும் பள்ளி மேலாண்மைகள் மீது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் வழிவகைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

4. மேற் குறித்த சட்டப் பிரிவு மற்றும் விதிகளின் படி பாதிக்கப்பட்ட ஆசிரியர்களிடமிருந்து பெறப்படும் மேல் முறையீடுகளை உரிய மேல் முறையீட்டு அலுவலர்கள் ஆய்வு செய்து விதி முறைகளைக் கையாண்டு ஆணைகளை வழங்குகின்றனர். அவ்வாணைகள் ஆசிரியருக்கோ அல்லது பள்ளி மேலாண்மைக்கோ சாதகமாக அமையாவிடின் அவர்கள் இரண்டாவது மேல் முறையீட்டை தீர்ப்பாயங்களுக்கு (Tribunals) அனுப்புகின்றனர். சில மேலாண்மைகள் தீர்ப்பாயத்தின் ஆணைகளை எதிர்த்து சென்னை உயர் நீதி மன்றத்தில் நீதிப் பேராணை மனு (Writ Petition) . தொடுக்

இன்றனர். இவ்வித செயல்களினால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு உடன் நிவாரணம் கிடைக்காததன்றி மேல் முறையீட்டு அலுவலரின். ஆணைகளை அமுல் படுத்தாத நிலை ஏற்படுகின்றது.

5. அவர்களது முக்கிய குறை கல்வி இலாகாவினால் போடப்பட்ட ஆணைகளை அமுல் செய்யாது, தனியார் துறை நிர்வாகிகள் நீதிமன்றம் சென்று தடையுத்தரவு போன்றவை பெறுவதால் கல்வி இலாகா ஆணை அப்படியே செயலற்றுப்போய், ஆசிரியர்கட்கு அவலநிலை ஏற்படுகிறது என்பதாகும். இது நீதி மன்ற அதிகார வரம்பிற்குட்பட்டதொன்றாகும்.

6. பெரும்பான்மையான, சிறுபான்மை வகுப்பினர் நடத்தும் கல்வி நிறுவனங்கள், தமிழ் நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (வரன்முறைப்படுத்தும்) சட்டம் 1973, மற்றும் விதிகள், 1974-ஐ எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்த நீதிப் பேராணை வழக்கில் உயர்நீதி மன்றம் தமிழ் நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (வரன்முறைப்படுத்தும்) சட்டம், மற்றும் விதிகளில் முக்கிய பிரிவு மற்றும் விதிகள் சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களுக்குப் பொருந்தாது என்று 17-12-1975-ம் நாள் தீர்ப்பு வழங்கியுள்ளது. இத்தீர்ப்பு தமிழ் நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (வரன்முறைப்படுத்தும்) சட்டம், 1973 மற்றும் விதிகளை ஒருங்கிணையச் செயல்படுத்துவதற்கு பெரிதும் தடையாக உள்ளது. இந்தத் தடையைத் தற்காலிகமாகத் தவிர்ப்பதற்கென்றே தமிழ் நாடு சிறுபான்மையினர் பள்ளிகள் (அங்கீகாரம் மற்றும் மானியம் வழங்குதல்) விதிகள், 1977-ஐ இந்த அரசு இயற்றியுள்ளது. எனினும் இத்தடைக்கு நிரந்தரப் பரிகாரம் காண, உயர்நீதி மன்றத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் முறையீடு செய்வதற்கான நடவடிக்கையில் இவ்வரசு இறங்கியுள்ளது. அதற்கான அனுமதியை இன்னும் சென்னை உயர்நீதி மன்றம் வழங்கவில்லை. அனுமதி கிடைத்தவுடன் இவ்வரசு உச்சநீதி மன்றத்தில் உரிய முறையீடு செய்யும்.

7. மாநில அரசின் கல்விக் கொள்கைக்கேற்ப தனியார் கல்வி நிறுவனங்களை ஒருமுனைப்படுத்தவும் குறிப்பாக பணிச்சீரமைப்புச் செய்யவும் தமிழ் நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (வரன்முறைப்படுத்தும்) சட்டம் 1973 மற்றும் விதிகள் 1974 கடந்த கால அனுபவங்களைக் கொண்டு இயற்றப்



பட்டது. அரசியலமைப்புச் சட்டம் விதிமுறை 30 (1)-ன் கீழ் சிறுபான்மை வகுப்பினருக்கு வழங்கப்பட்ட உரிமைகளை அச்சட்டம் பறித்து விடவில்லை. தனியார் பள்ளி நிறுவனங்கள் சிறுபான்மை வகுப்பினரால் மட்டுமே நடத்தப்படவில்லை. சிறுபான்மை வகுப்பினர் அல்லாதவர்கள் நடத்தும் பள்ளிகளும் இச்சட்டத்தின் ஆளுகைக்குட்பட்டவையாகும். எனவே தனியார் பள்ளிகள், நிறுவனங்கள் அனைத்தையும் வரன் முறைப்படுத்த, பணிச்சீரமைப்புச் செய்ய வேண்டிய கட்டாயச் சூழ்நிலைகளும் காரணங்களும் தவிர்க்க முடியாதவை மட்டுமல்ல; நின்று நிலை பெறுபவையாகும். எனவே தான் சென்னை உயர்நீதி மன்றம், தமிழ் நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (வரன்முறைப்படுத்தும்) சட்டம் மற்றும் விதிகளின் முக்கிய ஏற்பாடுகள் சிறுபான்மைப் பள்ளிகளுக்குப் பொருந்தாது என்று தீர்ப்பு வழங்கியதை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்ய இவ்வரசு நடவடிக்கை மேற் கொண்டுள்ளது. அந்த முறையீட்டில் உச்ச நீதி மன்றம் வழங்கும் தீர்ப்பிற்குப் பின்னர் அரசியல் சட்டத்தைத் திருத்தம் செய்ய வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால், அதற்கான முயற்சிகளில் ஈடுபடுமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தும்.

8. தனியார் பள்ளிகளிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை மறுபடி வேலைக்கு அமர்த்திக் கொள்ளுமாறு சட்டரீதியாக கல்வித் துறை போடும் உத்தரவை அமுல்படுத்த முன் வராத தனியார் பள்ளி நிர்வாகங்களை வற்புறுத்தும் வகையிலும், அந்த ஆசிரியர்களை பணியில் அமர்த்தும் பொருட்டும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களை அவர்களது பதவி நிலைகளுடன் தேவையான பள்ளிகளுக்கு மாற்ற கல்வித்துறை அதிகாரிகளுக்கு உரிய அதிகாரம் வழங்கி இவ்வரசு 4-9-1978 நாளன்று ஆணை பிறப்பித்துள்ளது. அத்துடன் கல்வித்துறையினரின் உத்தரவை அமுல்படுத்தாதிருக்கும் தனியார் பள்ளியின் இதர ஆசிரியர்களுக்கு சம்பளத்தை பள்ளி நிர்வாகம் மூலம் வழங்குவதற்குப் பதில் நேரடியாக வழங்கவும் இந்த அரசாணை அதிகாரம் அளிக்கிறது. இந்த அரசாணை தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குப் போதிய பணிப் பாதுகாப்பு அளிக்கும்.

(முற்பகல் 11-30)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இந்த விவர அறிக்கையில் ஆசிரியர்களுக்கு நேரடி ஊதியம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நேரடி ஊதியம் வழங்குவது என்னும்போது, அதைத் தலைமை ஆசிரியர் வழி வழங்கினாலும் சரி, நிர்வாக வழி வழங்கினாலும் சரி, இரண்டும் ஒன்றுதான். எனவே அரசு இதைக் கருத்தில் கொண்டு நேரடியாக ஊதியம் ஒவ்வொரு ஆசிரியருக்கும் கிடைக்கச் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு. பி. ஆர். தாமஸ் : வேலை நீக்கம் செய்யப்பட்ட பின்பு, இடையில் சில மாதங்கள் கழிந்து அல்லது ஓராண்டு இரண்டாண்டுகள் கழிந்து இந்த ஆணையின்படி மீண்டும் ஒரு ஆசிரியருக்குப் பணி வாய்ப்பு வழங்கும்போது, இடைப்பட்ட காலத்திற்கு எந்த வகையில் ஊதியத்தை வழங்க அரசு முன் வரும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. செ. முத்துசாமி : ஒரு ஆசிரியர் தனியார் நிருவாகத்திலிருந்து வெளியேற்றப்பட்ட பின்பு வேலை நீக்கம் செய்யப்பட்ட பின்பு, முதல் முறையீடு அரசாங்கத்திடம் செய்யப்படுகிறது. அதாவது இன்றைக்கிருக்கிற ஒழுங்குமுறை சட்டப்படி முதல் அப்பீல் என்பது அரசுத் தரப்பில் இருக்கிற அதிகாரிகளிடம் செய்யப்படுகிறது. அவர்கள் விசாரணைக்குப் பிறகு தீர்ப்பளிக்கிறார்கள். அப்படித் தீர்ப்பளித்த பின்னர், அந்தத் தீர்ப்பை அமுல் படுத்தாமல் அந்தத் தனியார் நிருவாகிகள் வழக்கு மன்றத்திற்கு, டிரிபூனலுக்குச் செல்கிறார்கள். டிரிபூனலுக்குச் செல்ல வேண்டுமென்றால், இப்போதிருக்கிற சட்டப்படி ஆசிரியருக்குச் சேரவேண்டிய பாக்கித் தொகை, அரியர்ஸ் தொகை முழுவதையும் கோர்ட்டில் கட்டிவிட்டுத்தான் மேல்முறை யீட்டுக்குச் செல்ல வேண்டும் என்று இருக்கிறது. ஆனாலும் இந்தப் பணத்தைக் கட்டாமலேயே வழக்கு மன்றங்களில் இன்றைய தினம் 'ஸ்டே' வழங்கப்படுகிறது. இதை இங்கே உள்ள மாண்புமிகு சட்ட அமைச்சர்





அவர்களும் தயவு செய்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தயவுசெய்து ஒரு சமுதாயக் கண்ணோட்டத்தோடு இதைக் கவனிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அப்படித் தடை விதிக்கப்பட்ட ஆசிரியர்கள் வாழ்வதற்கு வழியே இல்லை. அவர்கள் சம்பளம் முழுவதும் கோர்ட்டில்தான் கட்டப்பட வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. ஆகையால் அந்த ஆசிரியர்களுக்கு, முதல் அப்பீல்மீது டிப்பார்ட்மெண்ட் உத்தரவு போட்ட தேதியிலிருந்து கோர்ட்டு தீர்ப்பு வரும் வரை, வாழ்வுகாலப்படி அளிக்க அரசாங்கம் வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நிர்வாகம் அரசு ஆணையை மதிக்க மறுக்கிற நேரத்தில், அவர்களையும் அவர்களுடைய பதவியையும், அவர்களுக்குரிய நிலைகளோடு, வேறு பள்ளிகளுக்கு மாற்றப்படும் என்று இப்போது எடுக்கப்பட்டிருக்கிற முடிவு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் என்று நம்புகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தனியார் பள்ளி ஆசிரியர்களின் பிரச்சினைக்கு மூலகாரணமே 1974 ஆம் ஆண்டில் தமிழ் நாடு அரசினரால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் வரன் முறைப்படுத்தும் சட்டத்திலுள்ள பல குறைபாடுகள்தான். இது பல்வேறு ஆசிரியர் சங்கங்களால் அரசுக்கு உணர்த்தப்பட்டிருக்கிறது. அண்மையில் வெளியிடப்பட்டுள்ள ஆணையேகூட ஒரு தாற்காலிகமான பரிகாரமே தவிர, நிரந்தரமான பரிகாரமில்லை. எனவே அரசு இதைக் கருத்தில் கொண்டு, தமிழ் நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (வரன்முறைப் படுத்தும்) சட்டத்தை மாற்றியமைக்கும் வகையில் உரிய சட்டத் திருத்தங் களைக் கொண்டுவருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதை அரசு பரிசீலிக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அரசு ஒரு ஆணையிட்டும் அந்த ஆணையை ஏற்காமல், ஆசிரியர்களைப் பணியில் சேர்த்துக் கொள்ளாத நிர்வாகத்தைச் சேர்ந்த வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை வேறு பள்ளிகளில் அவர் களுடைய பதவி நிலைகளோடு மாற்றி கல்வித்துறை ஆணை பிறப்பித்தாலும்,

### (2) திருநெல்வேலி மாவட்டம் ஆறுமுகநேரியிலுள்ள பிளாஸ்டிக் ரெசின் கம்பெனியில் லே-ஆஃப் குறித்து.

வேறு பள்ளிகளில் அத்தகைய ஆசிரியர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள மறுக்கிறார்களே, அதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** வேறு பள்ளிகள் என்றாலே, தனியார் பள்ளிகள்தான் என்று பொருளல்ல. வேறு பள்ளிகள் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், அரசுப் பள்ளிகள் ஆகியவை இருக்கின்றன. ஆகவே அவற்றில் ஏதாவது ஒரு பள்ளிக்கு அவர்களை மாற்ற அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது.

**திரு. ச. முத்துசாமி :** தனியார் பள்ளிகளில் இப்படிப்பட்ட ஒரு ஆணை பிறப்பிக்கப்படும் ஏற்றுக்கொள்ளப்படாத ஆசிரியர்கள் வேறு அரசுப் பள்ளிகள் போன்றவற்றில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்று கூறினார்கள். முதலில் ஆசிரியரை வேலைக்குத் திரும்ப எடுத்துக் கொள்ள வேண்டும் என்று முதல் அப்பீலில் தீர்ப்பு அளித்த பின்னர், இடைக்காலத்திற்கான சம்பளத்தை நிருவாகம் வழங்க வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. ஆனால் அப்படி மாற்றப்படும்போது, வேறு மேனேஜ்மெண்ட்க்குச் சென்றுவிடுவதால், அங்கே அவர்கள் அந்த ஊதியத்தை 'க்ளெய்ம்' செய்ய உரிமை இல்லாமல் போகிறது. ஆகவே அவர்கள்மீது சரியான நடவடிக்கை எடுக்க இப்போது போட்டிருக்கிற விதியில் உரிய இடமிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்போது அரசு எடுத்துக் கொண்டிருக்கிற பிரச்சினையே வேலை இழந்து பட்டினி கிடக்கிற ஆசிரியர்களுக்கு எப்படி உதவுவது என்பதாகும். அதற்கான நடவடிக்கையைத்தான் நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். மற்ற தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படும்போது, அரசாங்கம் அதைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவம் :** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன் :—

"திருநெல்வேலி மாவட்டம், ஆறுமுகநேரியிலுள்ள பிளாஸ்டிக் ரெசின்ஸ் கம்பெனி கடந்த ஆறு மாத காலமாக லே-ஆஃப் விட்டு, நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருப்பதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து."



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, ஆறுமுக நேரியிலுள்ள பிளாஸ்டிக் ரெசின்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிட். என்னும் தொழிற்சாலையில் 287 தொழிலாளர்கள் உள்ளனர். இத்தொழிற்சாலையில் "Poly Vinyl Chloride" என்னும் பொருள் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்நிறுவனத்தில் கீழ்க்கண்ட தொழிற்சங்கங்கள் இயங்கி வருகின்றன:—

1. பிளாஸ்டிக் ரெசின்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் ஸ்டாப் அண்டு ஓர்க்கர்ஸ் யூனியன்.

2. பிளாஸ்டிக் ரெசின்ஸ் அண்டு கெமிகல்ஸ் நேஷனல் எம்ப்ளாயீஸ் யூனியன்.

உற்பத்தி விலை அதிகரித்துள்ளதாலும், நிறுவனத்தின் சீரடையாத பொருளாதார நிலைமையினாலும் நிர்வாகத்தினர் 15-2-1978 முதல் தொழிலாளர்களை லே-ஆஃப் செய்தனர். நிர்வாகம் மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் நிதி உதவி கேட்டு முக்கியமாக மின்சாரக் கட்டணச் சலுகைகளுக்காக விண்ணப்பித்துள்ளது. இந்நிறுவனத்தை மீண்டும் திறப்பதற்கான ஒரு செயற்குறிப்பு மத்திய அரசின் நிலுவையில் உள்ளது. ஆகையால் கட்டண சலுகைகளுக்காக விண்ணப்பித்துள்ள நிர்வாகத்தின் கோரிக்கை மேல் பொதுப்பணித் துறையில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. தொழிலாளர்கள் தரப்பில் அவர்களின் லே-ஆஃப் சம்பந்தமாக தொழிற் தகராறு ஏதும் எழுப்பப்படவில்லை. இருப்பினும், இப்பிரச்சினை பற்றி கவனிக்குமாறு மதுரை தொழிலாளர் துறை துணை ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

**திரு. ஆ. நல்லசிவம் :** லே-ஆப் சம்பந்தமாகத் தொழில் தகராறு எதுவும் எழுப்பப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். லே-ஆப் சம்பளம் கிடைத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் முழுச் சம்பளம் கிடைக்க வேண்டும், வேலை கிடைக்க வேண்டும் என்று தொழிற் சங்கம் அரசாங்கத்திற்கும், தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளுக்கும் முன்னால் பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக தொழிலாளர் நல இலாக்கா என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** லே-ஆப் காம்பன்சேஷன் ஜூலை 1978 முதல் கொடுக்கப்பட்டு வருகிறது. 'பெட்டிஷன்' கொடுப்பது என்பது ஒன்று, தொழில் தகராறு எழுப்புவது என்பது மற்றொன்று. பெட்டிஷன் கொடுத்தால் This may be examined என்று எழுதி அனுப்பி

[1978 செப்டம்பர் 13

விடுவார்கள். அதுதான் முறை. தொழிற் தகராறு எழுப்புவது என்பது தொழிற் சங்கத்தின் போனவலியைக் கூட்டி இந்தப் பிரச்சினையை எழுப்பி, நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முடியாத காரணத்தால், தொழிற் தகராறு எழுப்பத் தீர்மானிக்கப்பட்டது என்று தீர்மானம் நிறைவேற்றி, அதற்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள தொழிற் சங்கத் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது என்று முடிவு செய்த பிறகு அதை லேபர் ஆபிசருக்கு அனுப்பி, அதனுடன் அதற்கான "statement" அனுப்பி வைத்தார் லேபர் ஆபீசர் அதை ஒரு இண்டஸ்ட்டிரியல் டிஸ்பியூட் என்ற முறையில் சமரசப் பேச்சுவார்த்தைக்கு எடுத்துக்கொள்வார். அப்படிப்பட்ட ஏற்பாடு செய்யப்படவில்லை என்றுதான் சொன்னேன்.

திரு. ஆ. நல்லசிவம் : அமைச்சர் அவர்கள் கூறியபடிதான், அந்த ஆலை திறக்கப்பட வேண்டும் என்பதற்காகவும், ஆலை மூடப்பட்டிருப்பதே தவறு என்றும் லேபர் ஆபீசர் முன்பாக இண்டஸ்டிரியல் டிஸ்பியூட் கிளப்பப்பட்டிருக்கிறது. ஆக தொழில் தகராறு கிளப்பப்பட்டிருக்கிறது. எனவே அது சம்பந்தமாகத் தொழிலாளர் நல இலாகா என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : லே-ஆப் சம்பந்தமாக தொழில் தகராறு எழுப்பப்படவில்லை என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்பற்றி கவனிக்குமாறு மதுரையில் உள்ள தொழிலாளர் துறை ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவம் : இந்த ஆலை மூடியிருப்பதற்கான காரணம் இதன் உற்பத்திச் செலவு அதிகரித்து உள்ளதாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. உற்பத்திச் செலவு அதிகரித்ததற்குக் காரணம் கம்பெனிக்குத் தேவைப்படும் மூலப் பொருளின் விலை மிக அதிகமாக உள்ளது என்று கூறப்படுகிறது. பிளாஸ்டிக் உற்பத்தி செய்யும் வேறு கம்பெனிகளைவிட அதிகமான விலைக்கு மூலப்பொருள் வாங்கப்படுகின்றது. ஆகவே அவர்களோடு இவர்கள் போட்டியிட முடியவில்லை. மலிவான விலையில் உற்பத்திக்கான மூலப் பொருள் வாங்க கம்பெனி முயற்சிக்கிறது. ஆகவே அது சம்பந்தமாக அரசு அந்தக் கோரிக்கைக்கு ஆதரவு தருமா என்று அறிய விரும்புகிறேன்.



1978 செப்டம்பர் 13] (திரு. க. இராசா முகமது)

THE HON. THIRU S. RAGHAVANANDAM: The important requests are: (1) reduction of sales tax, (2) reduction of power tariff, (3) reduction of naptha price, (4) reduction of interest charges. Nos. 3 and 4 are to be considered by the Central Government. If the Central Government takes a favourable decision, the State Government will not be lagging behind in taking immediate and appropriate action.

They have already approached the Central Government and it is under the consideration of the Central Government, especially the reduction of Naptha price and the reduction of interest charges.

### 5. அரசின் தீர்மானங்கள்

(1) பொதுக் கணக்குக் குழு, மதிப்பீட்டுக் குழு ஆகியவற்றில் பணியாற்றும் மேலவை உறுப்பினர்களின் பதவிக்கால நீட்டிப்பும், அக்குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்தலும்.

மாண்புமிகு திரு. க. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் அமைக்கப்பெற்ற பொதுக் கணக்குக் குழு, மதிப்பீட்டுக் குழு ஆகிய குழுக்கள் எடுத்துக் கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை. ஆதலால் மேற்படி குழுக்களின் பதவிக்காலத்தை பேரவையில் நீட்டித்திருப்பதால் ஒவ்வொரு நிதி ஆண்டின் இறுதியில் மேற்படி குழுக்களின் பதவிக்காலம் முடிவடையும் என்னும் மேலவை விதிகள் முறையே 182, 183 ஆகியவற்றை தளர்த்தி அக்குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற மேலவை உறுப்பினர்களே தொடர்ந்து 31 மார்ச் 1979 முடிய பணியாற்ற வேண்டும்.

மேலும், பொதுக்கணக்குக் குழுவில் ஏற்பட்டுள்ள மூன்று வெற்றிடங்களில் கீழ்க்கண்ட உறுப்பினர்களும், மதிப்பீட்டுக் குழுவில் ஏற்பட்டுள்ள இரண்டு வெற்றிடங்களில் கீழ்க்கண்ட மேலவை உறுப்பினர்கள். உறுப்பினர்களாகப் பணியாற்ற வேண்டும்.

பொதுக் கணக்குக் குழு, மதிப்பீட்டுக் குழு ஆகியவற்றில் பணியாற்றும் மேலவை உறுப்பினர்களின் பதவிக்கால நீட்டிப்பும், அக்குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்தலும்



பொதுக்கணக்குக் குழு

திரு. க. இராமமூர்த்தி,

திரு. ஏ. ஆர். தாமோதரன்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்.

மதிப்பீட்டுக் குழு

புலவர் புலமைப்பித்தன்,

திரு. டி. வி. டி. மாண்டே.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் அமைக்கப்பெற்ற பொதுக் கணக்குக் குழு, மதிப்பீட்டுக் குழு ஆகிய குழுக்கள் எடுத்துக்கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை. ஆதலால் மேற்படி குழுக்களின் பதவிக்காலத்தை பேரவையில் நீட்டித்திருப்பதால் ஒவ்வொரு நிதி ஆண்டின் இறுதியில் மேற்படி குழுக்களின் பதவிக்காலம் முடிவடையும் என்னும் மேலவை விதிகள் முறையே 182, 183 ஆகியவற்றை தளர்த்தி அக்குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற மேலவை உறுப்பினர்களே தொடர்ந்து 31 மார்ச் 1979 முடிய பணியாற்றவேண்டும்.

மேலும், பொதுக்கணக்குக் குழுவில் ஏற்பட்டுள்ள மூன்று வெற்றிடங்களில் கீழ்க்கண்ட உறுப்பினர்களும், மதிப்பீட்டுக் குழுவில் ஏற்பட்டுள்ள இரண்டு வெற்றிடங்களில் கீழ்க்கண்ட மேலவை உறுப்பினர்கள், உறுப்பினர்களாகப் பணியாற்றவேண்டும்.

பொதுக்கணக்குக் குழு

திரு. க. இராமமூர்த்தி,

திரு. ஏ. ஆர். தாமோதரன்,

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்.

மதிப்பீட்டுக் குழு

புலவர் புலமைப்பித்தன்,

திரு. டி. வி. டி. மாண்டே."

**தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.**



**(2) பொது நிறுவனங்கள் குழுவில் பணியாற்றும் மேலவை உறுப்பினர்களின் பதவிக் கால நீட்டிப்பும், அக்குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்தலும்.**

**மாண்புமிகு திரு. க. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் அமைக்கப்பெற்ற பொது நிறுவனங்கள் குழு எடுத்துக்கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப்பெற வில்லை. ஆதலால் மேற்படி குழுவின் பதவிக்காலத்தை பேரவையில் நீட்டித் திருப்பதால், அக்குழுவில் தற்போது பணியாற்றுகின்ற மேலவை உறுப் பினர்களே தொடர்ந்து 31-3-1979 முடிய பணியாற்ற வேண்டும்.

மேலும் அக்குழுவில் ஏற்பட்டுள்ள மூன்று வெற்றியிடங்களில் கீழ்க்கண்ட மேலவை உறுப்பினர்கள், உறுப்பினர்களாக பணியாற்றவேண்டும் :—

திரு. எச். வி. ஹாண்டே,

திரு. ஆ. நல்லசிவம்,

திரு. பி. ஆர். தாமஸ்."

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை —

"1977ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் அமைக்கப்பெற்ற பொது நிறுவனங்கள் குழு எடுத்துக்கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப்பெற வில்லை. ஆதலால் மேற்படி குழுவின் பதவிக்காலத்தை பேரவையில் நீட்டித் திருப்பதால், அக்குழுவில் தற்போது பணியாற்றுகின்ற மேலவை உறுப் பினர்களே தொடர்ந்து 31-3-1979 முடிய பணியாற்ற வேண்டும்.

மேலும் அக்குழுவில் ஏற்பட்டுள்ள மூன்று வெற்றிடங்களில் கீழ்க்கண்ட மேலவை உறுப்பினர்கள், உறுப்பினர்களாக பணியாற்றவேண்டும்.

திரு. எச். வி. ஹாண்டே,

திரு. ஆ. நல்லசிவம்,

திரு. பி. ஆர். தாமஸ்."

**தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.**

(3) சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு திரு. க. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :—

"சென்ற கூட்டத் தொடரில், 31-3-1979 வரை ஓராண்டு காலத்திற்கு நீட்டிக்கப்பட்ட சட்ட விதிகள் ஆய்வுக்குழுவில் ஏற்பட்டுள்ள இரண்டு வெற்றிடங்களில் கீழ்க்கண்ட மேலவை உறுப்பினர்கள், உறுப்பினர்களாக பணியாற்ற வேண்டும்.

திரு. டி. சந்தோஷம்,

திரு. ஜே. எம். மியாகான்."

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை —

"சென்ற கூட்டத் தொடரில், 31-3-1979 வரை ஓராண்டு காலத்திற்கு நீட்டிக்கப்பட்ட சட்ட விதிகள் ஆய்வுக்குழுவில் ஏற்பட்டுள்ள இரண்டு வெற்றிடங்களில் கீழ்க்கண்ட மேலவை உறுப்பினர்கள், உறுப்பினர்களாக பணியாற்றவேண்டும்.

திரு. டி. சந்தோஷம்,

திரு. ஜே. எம். மியாகான்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

6. ஆளுநர் உரையின் மீது விவாதம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதில் உரை பேரவையில் நேற்று முடியாததாலும், இன்று அங்கு தொடர்வதாலும் இது நாளை மாலைக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நாளை மாலை பேசுவார்கள்

மேலவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிகின்றன. அவை மீண்டும் இன்று மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.



(நண்பகல் 11-45)

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(2) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்கு தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(3) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்புச் சட்டப்படி பணச் சட்ட முன்வடிவு என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம் மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு, தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1978) மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

1. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர் நியமனம்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1978).

2. 1978 ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக் கழக (திருத்த சிறப்பு விதித் துறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1978).

## 7. அரசின் சட்ட முன்வடிவுகள்.

**(1) தமிழ்நாடு, 1978ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1978).**

**மாண்புமிகு திரு. இ. மனோகரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1976 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1978) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை —

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1978) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பரிந்துரை எதுமில்லை.

**மாண்புமிகு திரு. இ. மனோகரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1978) திருப்பி அனுப்பப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1978) திருப்பி அனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

@ 382-384 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சடிக்கப்பட்டுள்ளது.



**(2) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1978).**

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

என்று முன் மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

*திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மசோதா தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை இரண்டு ஆண்டுகளிலிருந்து மூன்று ஆண்டுகளாக உயர்த்த வேண்டிய அவசியத்தின் அடிப்படையிலே அரசால் கொண்டுவரப்பட்டிருக்கிறது. தனி அதிகாரிகள் செயல்படுகிற விதத்தைக் குறித்துச் சொல்லத் தேவையில்லை. இன்றைக்கு அதைப்பற்றிய பிரச்சினையில்லை. ஒரு தவிர்க்க முடியாத சூழ்நிலையிலே கூட்டுறவுக் குழுக்களையெல்லாம் கலைத்துவிட்டு, தனி அதிகாரிகளை வைத்து நிர்வாகத்தை நடத்துகின்ற நிலைமை ஏற்பட்டது. ஆனால், விரைவாகத் தனி அதிகாரிகளின் நிர்வாகத்திலேயிருந்து அவற்றை விடுபடச் செய்து, கூட்டுறவுத் துறையிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் மூலமாக அமையும் போர்டின் மூலம் நிர்வாகம் நடந்தாக வேண்டுமென்ற அடிப்படை எண்ணத்திலே, இங்கேயுள்ள அமைச்சரவர்களுக்கோ, ஆளும் கட்சியிலே உள்ளவர்களுக்கோ வேறுபாடு இருக்க முடியாது. நான் அமைச்சரவர்களின் மீது குறைபாடு சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன். காரணம், அவர்கள் இந்தப் பொறுப்பை

@ 385-ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சடிக்கப்பட்டுள்ளது.

(திரு. க. இராமமூர்த்தி) [1978 செப்டம்பர் 13

ஏற்று சில மாதங்கள் தான் ஆகின்றன. ஆனால், ஆட்சியைப் பொறுத்த வரையிலும், ஏறத்தாழ 1½ ஆண்டுக்காலம் நடந்திருக்கிறது. இதற்குள்ளாக அதற்கு வழி வகையை மிகச் சுலபமாகச் செய்திருக்க முடியும். ஆனால், எந்தக் காரணத்தாலோ, இந்த அடிப்படையான தேவையை இதுவரையில் பூர்த்தி செய்யாமல் இருக்கிறார்கள். எனக்கு இருக்கின்ற குறை, அது உள்ளாட்சித் துறையானாலும், நம்முடைய கூட்டுறவுத் துறையானாலும், வேறு எந்தத் துறையானாலும், மிக அதிகமான அளவிலே இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறவர்கள் ஜனநாயக முறைகளுக்காக வாதிட்டுக் கொண்டிருந்தாலும், செயல்வடிவம் கொடுக்க வருகிறபோது, அதாவது, செயல்வடிவம் கொடுக்கின்ற நிலை ஏற்படும்போது, அதிலேயிருந்து மாறுபட்டு நியமன முறையை நீடித்துச் செல்லும் நிலைதான் உருவாகியிருக்கிறது. ஆகவே, நான் மெத்தப் பணிவோடு தெரிவித்துக்கொள்வது, கூடிய விரைவிலே தனி அதிகாரிகளுடைய நிர்வாகத்தை முடித்து, புதிதாகக் குழுக்கள் அமைத்து, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்க வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இல்லையென்று, இன்றைக்கு அட்வைசரி போர்ட் என்றிருக்கிறது. தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ள காரணத்தாலே, அட்வைசரி போர்டுகள் அமைக்கப்படுமென்று சொன்னார்கள். சில இடங்களிலே அப்படி அமைத்திருக்கிறது. சில இடங்களில் இல்லை. இன்றைக்கு பெருமளவுக்கு விவசாயிகள், கிராமப்புறக் கடன் சங்கங்கள், விற்பனைக் கூடங்கள், மற்றவைகளின் மூலம் உதவிகளைப் பெறுகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில், அந்தச் சங்கங்கள் அதிகாரிகள் மூலமாகவோ, நியமனம் செய்யப்படுபவர்கள் மூலமாகவோ நடக்கின்றபோது, அவசியமான சில பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்கு, எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு இல்லாமல் போகிறது. அப்படியே இருந்தாலும், அதை நிறைவேற்றுகிற கட்டாயம் இல்லாமல் போகிறது. இதை மனதிலே கொண்டு, விரைவாக கூட்டுறவுத் துறைக்கான சட்ட முன்வடிவை அமைச்சரவர்கள் கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்திலே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மசோதாவில் உள்ளடங்கியது இல்லையென்றாலும், ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் இருக்கிற சங்கடங்களைப் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். கூட்டுறவுத் துறையின் மூலமாக வந்த உத்தரவின்படி, கிராமங்களிலே உள்ள



1978 செப்டம்பர் 13] (திரு. க. இராமமூர்த்தி)

(பிற்பகல் 4-10)

கூட்டுறவுச் சங்கங்களிலே ஒருவருக்கு ஒருவர் ஜாமீன் கொடுத்து கடன் வாங்கும் நிலை கடந்த காலத்தில் இருந்தது. ஒருவருக்கொருவர் ஒப்புக் கொண்டால்தான், ஜாமீன் போடும் நிலை இருந்தது. ஒருவர் டிபால்டர் ஆகிவிட்டால், இன்னொருவர், கடன் வாங்க முடியாது. எனவே, இதற்கு விதி விலக்குத் தந்து, யார் வேண்டுமானாலும், யாருக்கு வேண்டுமானாலும் ஷ்யூரிட்டி இருக்கலாம், இரண்டு பேரிலே ஒருவர் டிபால்டர் ஆனாலும், இன்னொருவர் தன்னுடைய கடனைச் செலுத்திவிட்டால், புதிய கடன் வாங்கலாமென்று இருந்தது. இந்த ஜாமீன் போட்டவர், கடனை வாங்கியவர் ஆகிய இரண்டு பேரும் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தினால்தான், அவர்கள் இரண்டு பேரும் கடனை வாங்க முடியும் என்ற நிலை சமீபத்தில் போட்ட உத்தரவினால் ஏற்பட்டுள்ளது. இடையிலே இது தளர்த்தப்பட்டு, யார் ஜாமீன் போடுகிறார்கள் என்று கடன் வாங்கியவர்களுக்கே தெரியாத நிலை ஏற்பட்டது. இதற்குக் காரணம், அங்கே இருக்கிற சூப்பர்வைசர்கள், மற்றவர்களை அழைத்து மிக வேகமாக ஜாமீன் போடுகிற தகுதி இருந்தாலே போதும் என்ற நிலையில் கடன்களைக் கொடுக்கும் நிலை ஏற்பட்டதுதான். இன்றைக்கு இரண்டு பேருமே கடனைத் திருப்பிச் செலுத்தியிருந்தால்தான், ஒருவருக்கொருவர் ஜாமீன் கொடுத்து கடனை வாங்க முடியும் என்ற நிலை வந்ததன் காரணமாக, பல பேர் கடன் வாங்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. இதெல்லாம் மக்களுடைய பிரதிநிதிகள் கூட்டுறவுத் துறையில் இல்லாததன் விளைவுதான் என்று கருதுகிறேன். இந்தச் சட்டத்தின் மூலமாக தனி அதிகாரிகளுடைய காலம் நீட்டிக்கப்பட்டாலும், இந்தக் குறைபாடுகளை நீக்குகிற, தவிர்க்கிற அளவுக்கு அந்தத் தனி அதிகாரிகளை, கூட்டுறவுத் துறையை இயக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன். இச்சட்டத்தின் மூலம் 3 ஆண்டுக்காலம் பதவிகள் நீட்டிக்கப்பட்டாலும், ஓராண்டுக் காலத்திற்குத்தான் நீட்டிக்கப் படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லுவதால், தயவுசெய்து இந்த ஓராண்டுக் காலத்தோடு இதை முடித்துக் கொள்ள வேண்டுமென்று அமைச்சர் அவர்களை வேண்டி, என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ஆ. நல்லசிவம் : தலைவர் அவர்களே, தற்போது இருக்கிற சட்டத்திலே சப்-செக்ஷன் 4-ன் படி, நியமிக்கப்படுகிற ஸ்பெஷல் ஆபீசர்கள் புதிய கமிட்டியை அமைப்பதற்கு ஏற்பாடு செய்வார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்

கிறது. 1976 ஆம் ஆண்டிலே கொண்டு வரப்பட்ட இந்த ஸ்பெஷல் ஆபீசர் நியமனச் சட்டம், இந்தப் புதிய அரசு வந்ததற்குப் பிறகு சென்ற ஆண்டிலும் மீண்டுமொரு ஆண்டு நீட்டிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஓராண்டுக் காலத்திலே அந்த ஸ்பெஷல் ஆபீசர்கள் புதிய கமிட்டியை அமைப்பதிலே என்ன சங்கடம் ஏற்பட்டது என்று தெரியவில்லை. மீண்டும் ஓராண்டுக் காலத்திற்கு நீட்டிக்கப்படுகிறது என்று சொன்னால், அந்த ஸ்பெஷல் ஆபீசர்கள் புதிய கமிட்டியை அமைப்பதிலே என்ன சிரமங்கள் ஏற்பட்டன என்பதைச் சொல்லியிருந்தால், நமக்குப் புரிந்திருக்கும். ஆனால், அது சொல்லப்படவில்லை.

இரண்டாவது "காம்பரஹென்சிவ் லெஜிஸ்லேஷன்" என்று ஒட்டுமொத்தமாகத் திருத்தங்கள் கொண்டு வரப்படும் என்ற பெயரால், தேர்தலின் குறுக்கே நிற்க வேண்டியதில்லை. வழக்கம்போல தேர்தலை நடத்திக்கொண்டு, சட்டங்களையும் கொண்டுவரலாம். "காம்ப்ரஹென்சிவ் லெஜிஸ்லேஷன்" என்ற பெயரால், ஸ்பெஷல் ஆபீசர் ஆட்சியை நீட்டிப்பது சரியல்ல. இன்னும் ஓராண்டுக்கு நீட்டிப்புக் கொடுத்தாலும், இன்னும் ஓராண்டு இருக்கிறதே என்று இல்லாமல் மூன்று மாதங்களுக்குள் அந்தக் கமிட்டியைப் போடுவதன் மூலமாக கூட்டுறவுத் துறையில் ஜனநாயகத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. பி. மாணிக்கம்: தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தின் மூலமாக தனி அதிகாரிகளின் பதவிக் காலம் 3 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படுகிறது. என்றாலும், ஏற்கெனவே உள்ள இரண்டாண்டை 3 ஆண்டுகளாக நீட்டிக்கிறது. என்றும், மொத்தத்தில் ஒரு ஆண்டுக்குத்தான் நீட்டிக்கப்படுகிறது என்றும் எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவம் அவர்கள் குறிப்பிட்டார்கள். கூட்டுறவுத் துறையிலே ஏற்பட்டிருக்கக் கூடிய சில, கடந்த கால அனுபவங்கள்—கடந்த காலம் என்றால், சமீப கடந்த காலத்தில் - கசப்பாக இருக்கின்றன. அவைகளையெல்லாம் நீக்குவதற்கு விரிவான சட்டத் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும் என்று சென்ற ஆண்டே வரவு-செலவுத் திட்ட விவாதங்களின் போது குறிப்பிட்டேன். இதற்கிடையில் இவ்வளவு கால அவகாசம் இருந்தபோதும் அத்தகைய முறையில் திருத்தங்களைக் கொண்டு வராமல், இப்போது தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிக்கிற முறையில்தான் திருத்தச் சட்ட முன்வடிவு வந்திருக்கிறது. வந்திருக்கிற சட்ட முன்வடிவைப் பார்த்தால், நிர்வாக அதிகாரிகளுடைய



ளையைப் பலப்படுத்தி அவர்களுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பதன் மூலம், நிர்வாகக் காரியங்களை அதிகாரிகளைக் கொண்டே திறமையாகவும், செம்மையாகவும் நடத்த முடியும் என்ற பொதுவான ஒரு கொள்கை, எண்ணம், இந்த அரசுக்கு வந்துவிட்டதோ என்ற அச்சம் எழுகிறது. அனுபவ அடிப்படையிலே பார்த்தால், வெறும் நிர்வாகத்தில் உள்ளவர்கள் மட்டுமே காரியங்களைச் செம்மையாகச் செய்ய முடியாது என்று தெரிகிறது. செம்மையாகக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்றால், மக்களுடைய ஒத்துழைப்பு முக்கியமானது. ஆகவே கூட்டுறவுத் துறை சம்பந்தமான சட்டத்தில், மக்களுடைய ஈடுபாட்டை அதிகப்படுத்தக் கூடிய முறையிலே விரிவான திருத்தங்களைக் கொண்டு வந்தால் உதவிகரமாக இருக்கும். ஓராண்டுக் காலத்திற்கு நீட்டிப்பதன் மூலம் இந்தக் குறைபாடுகளைக் களைய முடியாது. சட்டத் திருத்தங்களைக் கொண்டு வர அவகாசம் வேண்டுமென்றால், அவகாசம் எடுத்துக் கொண்டு அந்தத் திருத்தங்களைக் கொண்டு வரலாம். ஆனால் மேலும் காலதாமதமில்லாமல் விரிவான திருத்தங்களைக் கொண்டு வர அரசு முன்வர வேண்டும். இந்தத் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு முன்னதாக, சென்ற ஆண்டு கூட்டுறவுத் துறைக் கொள்கை விளக்க விவாதத்தின்போது குறிப்பிடப்பட்ட பாசுதி கமிஷன் கூறியுள்ள கருத்துக்களையும், மற்ற கட்சிகளுடைய கருத்துக்களையும், அநேகமாக இந்த மன்றத்திலுள்ள எல்லா கட்சிகளுடைய ஆலோசனைகளையும் கேட்டறிந்து சில பிரச்சினைகளில் Principle of Consensus முறையைப் பின்பற்றுவது மிக அவசியம். இதை வலியுறுத்தி, ஓராண்டு நீட்டிப்பு அவசியம் என்று கருதுவதால், அனுமதித்தாலும், இந்தக் கண்ணோட்டத்தோடு அரசு ஜனநாயக அம்சங்கள் வலுப்படக் கூடிய முறையிலே விரைவாக, மிகத் துரித காலத்திலே காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

(பிற்பகல் 4-20)

* THIRU A. R. DAMODARAN: Sir, the Bill seeks to extend the appointment of Special Officers who have already been there for two years for a further period of one year. The co-operative movement has not only been under attack in the recent past but has been attacked every time there has been a change in the political administration in our State. I remember that since 1967 when the D.M.K. Government assumed office, there was a sustained attack on the co-operative movement. Even in his very first speech, the Hon. the Chief Minister of that time mentioned

(Thiru A.. R. Damodaran) [1978 செப்டம்பர் 13

that the co-operative movement was being controlled by a closed body of persons who would not allow others to enter the co-operative field. In my very first speech even at that time, I requested the Government that as far as possible, the co-operative movement should be free from political interference and control and I said: "Let us not commit the same mistakes which the Congress Party was alleged to have committed in the past by thrusting Party people into the co-operative movement and bringing it into disrepute." Over ten years—if the Hon. the Minister for Co-operation would take care to study the amendments that have been made to the Co-operative Societies Act of 1961—far-reaching, sweeping and revolutionary changes have been made in the Act. The powers of nomination have been increased and the membership of the Central Banks and other institutions was increased beyond comprehension because it was felt that new Members could not be admitted into those organisations. My honourable and venerable Friend Thiru Krishnaswamy Naidu, a veteran co-operator who is no longer with us today—but those Members who were in this House for 7 or 8 years when he was also a Member would bear testimony to the fact—would literally shed tears every time an amendment to the Co-operative Societies Act was brought which sought to destroy the character of the co-operative movement.

Sir, I will not go so far as to say that the appointment of Special Officers for certain reasons will necessarily destroy the character of the co-operative movement. But I think that we are doing violence to the co-operative movement in Tamil Nadu when we seek to supersede so many bodies and appoint Special Officers. In fact, we are bureaucratising the co-operative movement which is not the intention of the co-operative movement. I am not an expert in Co-operation, but from what little I know the co-operative movement must depend largely upon the co-operation of the members of these societies. If you want to run them with Special Officers, you might as well run them as Civil Supplies shops and Fair Price shops on a non-co-operative method and there is no need for us to invite co-operation



1978 செப்டம்பர் 13] (Thiru A. R. Damodaran)

from the public at all. Therefore, what my Hon. Friend Thiru Manickam mentioned is a thoroughly valid point. I request the Government to renew the faith of the people in the co-operative movement. Otherwise, good people will not come anywhere near this movement. In fact, some of us are very scared of even venturing anywhere near a co-operative society. I have abstained from membership of any co-operative society not because I do not believe in that movement but because the rules are such that any day anybody can charge us with some petty offence and I do not want to get involved. I am only a member of one co-operative society and even there I am trying to get out of it as quickly as possible, requesting successors to take over. I have been there for ten years, in a house-building society, and I would very voluntarily relinquish my membership of that society. I only wish to mention that the Government should see to it that the people have sustained faith in the co-operative movement and the movement grows. Even the other day, the Hon. Minister came forth seeking the permission of the House to enhance the guarantee to the co-operative sector to Rs. 120 crores from the existing limit of Rs. 80 or 90 crores. I think all of us are anxious about this movement because this is possibly the only movement that can really help the weaker sections of our society. We will fully support the Government in any measures that it brings forth to control malpractices or evils that might have crept into the societies. My only plea on this occasion is that the extension of time for these Special Officers should not be made a matter of routine and ordinary administration. Extension for one year may be granted by this Bill, but I would request the Hon. Minister kindly to see to it, that as quickly as possible and as far as it is feasible, many of these societies are resuscitated, new Members admitted according to their rights and new committees formed so that the people may play their part in what is essentially a people's movement for the betterment of the weaker sections of society. I hope this Government will have full faith and confidence in the co-operative movement, as they are bound to have. They are committed to the principles of democracy. As for the temporary aberrations of the past, as I have pointed out even

yesterday while speaking on certain Bills, the evil—doers must be exposed for the public to judge them and their activities, and general allegations cannot take the place of definite legal proof. Wherever it is possible, we should expose wrong-doers because the entire co-operative movement is getting a bad name. There was a time when Maharashtra and Tamil Nadu where the two leading States in the field of co-operation. The fact that over the past two or three years we have superseded so many bodies has brought a very bad reputation to the co-operative movement in Tamil Nadu. In all-India circles, we are unable to lift our head and speak with pride about this movement. I hope that the Government will do everything possible to resuscitate the confidence of the people and their belief in this praiseworthy movement.

Thank you.

(திரு. பி. ஆர். தாமஸ் அவர்களை பேசுமாறு மாண்புமிகு தலைவர் அழைத்தார்.)

**திரு. பி. ஆர். தாமஸ்:** தலைவரவர்களே, நான் பல்கலைக் கழக மசோதா மீது பேசுவதாக இருக்கிறேன்.

* **திரு. எம். சங்கரலிங்கம்:** மாண்புமிகு தலைவரவர்களே, கூட்டுறவு அமைச்சர் அவர்கள் முன் மொழிந்துள்ள கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத் திருத்த மசோதாவை நான் வன்மையாக எதிர்க்கின்றேன். இந்த மசோதாவிலே தனி அலுவலர்கள் பதவிக் காலத்தை இன்னும் ஒரு ஆண்டுக்கு நீட்டித்துத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். 1976 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளைக் கலைத்து விட்டு தனி அலுவலர்களை நியமிக்கிற அந்தச் சட்டத்தில் கூட மிகத் தெளிவாக 2 ஆண்டுகளுக்கு மேல் போகக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்குள் ஏதாவது குறைகள் இருக்குமானாலும் கூட, திருத்தம் கொண்டு வந்திருக்க வேண்டுமேயொழிய, இன்னும் அதற்கு மேல் 2 ஆண்டுகள் நீட்டித்திருக்கக் கூடாது. அப்படியே நீட்டிப்பதாயிருந்தால், கூட்டுறவுச் சங்கங்கள் என்ற பெயரை மாற்றி விட்டு, 'தனி அலுவலர்' அல்லது 'அரசு அலுவலர் சங்கம்' என்று பெயர் வைத்து, அதை இன்னும் ஓர் ஆண்டோ, இரண்டு ஆண்டுகளோ நீட்டிப்பதுபற்றி எந்தவித ஆட்சேபணையும் எங்களுக்கு



இல்லை. கூட்டுறவுச் சங்கம் என்றால், அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் அங்கத்தினர்களாகச் சேர்ந்து அவர்களுடைய நிதியைத் திரட்டி, அரசு அதை ஊக்குவிக்கின்ற நிலையில், அரசும் பங்கு சேர்ந்து, கடன் கொடுத்து அவர்களுடைய நடவடிக்கையான வாணிபத்திலோ, மற்ற தொழில்களிலோ ஈடுபடுவது தான் நடைமுறை. ஐக்கியக் கட்சித் தலைவர் திரு. தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டது போல, திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் இங்கு இருக்கும் போது, கூட்டுறவுச் சங்கச் சட்டத்திற்குத் திருத்த மசோதா வரும் நேரத்தில் எல்லாம், குறிப்பாக அன்றைய கூட்டுறவு அமைச்சர் மாண்புமிகு திரு. ஆதித்தனார் கொண்டு வருகிறபோது, அதை பலமாக எதிர்த்தார். அப்படி அவர்கள் எதிர்ப்பதற்கு "நிர்வாக போர்டு விஸ்தரிப்பே கூடாது" என்று காரணம் சொல்லுவார்கள். அதன் அமைப்பு, போர்டு தேர்ந்தெடுக்கப்பட்டதாக இருக்கும். அரசு நியமிப்பதற்கென்று அதிலே ஒரு இடம் இருக்கும். அவ்வாறு நியமிப்பதற்கு ஒரு திருத்த மசோதா கொண்டுவருவார்கள். இந்த அரசு அப்படிக் கொண்டு வர விரும்பவில்லையென்றால், சும்மா கூட இருந்திருக்கலாம். அதற்கான காரணங்களை அவர்கள் சொல்லலாம். திராவிட முன்னேற்றக் கழக அரசு கூட்டுறவுச் சங்க நிர்வாக போர்டில் நியமன உறுப்பினர்களைச் சேர்க்க வாய்ப்புகளையும் வசதிகளையும் ஏற்படுத்தி வேண்டியவர்களைச் சேர்த்து விட்டார்கள், ஆகவே அதை மாற்றுவதற்கு நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம் என்று நீங்கள் சொல்லலாம். ஆனால் அப்படிப் பண்ணியது நல்ல காரியத்துக்காகத் தான். நீங்களும் விரும்பினால், 2 அரிஜன்களுக்கு அந்த வாய்ப்பைக் கொடுத்து அவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றால் கூட சேர்த்துக்கொள்ளலாம். அந்த அடிப்படையில் தான் அன்றையதினம் மாண்புமிகு திரு. ஆதித்தனார் அவர்கள் இந்த முறையைக் கொண்டு வந்தார்கள். குடியரசுத் தலைவர் ஆட்சியில் அதை ரத்து செய்து விட்டார்கள். இந்த அரசு அதை விரும்பவில்லையென்றால், முன்பு இருந்த நிலையிலேயே, தேர்தல் முறையிலேயே நிர்வாகக் குழுக்களை அமைத்திருக்கலாம். அப்படி அமைத்தால், ஒருவேளை நீங்கள் விரும்புகிற அங்கத்தினர்களை நியமிக்கவும் வேண்டாதவர்களாக இருந்தால் நியமிக்காமலும் இருக்க வழி வகை இருந்திருக்கும். இன்னும் ஒரு ஆண்டுக்கு ஜனநாயகத்தைக் கொலை செய்வானேன்? 2 ஆண்டுகளுக்கு இது கொலை செய்யப்பட்டிருக்கிறது. அது தவறு என்று நாங்கள் சொல்கிறோம். இப்பொழுது உங்களுக்கு இருக்கிற சக்தியைப் பயன்படுத்தி அந்தக் கூட்டுறவுச் சங்கங்களை ஜனநாயக முறையிலே நீங்கள் இயக்க முடியும். அப்படி இல்லாமல் 'தனி அலுவலர்களை' வைத்தே கூட்டுறவுச் சங்கங்களை நடத்துவதை

(திரு. எம். சங்காலிங்கம்) [1978 செப்டம்பர் 13

நான் மிக வன்மையாகக் கண்டிக்கிறேன். நியமன உறுப்பினர்களாக இருந்தால், அதிகமாகத் தவறு செய்ய முன் வர மாட்டார்கள். அப்படி அவர்கள் தவறு செய்தால், ஊருக்குள் வர முடியாது, மக்கள் முகத்தில் விழிக்க முடியாது. அவர்கள் எந்த உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, ஊரிலுள்ள 10 பேர் கண்டிப்பார்கள். அரசு அலுவலர்களை யார் கண்டிக்க முடியும்? திருச்சியிலுள்ள அரசு அலுவலர் நாகப்பட்டிணத்தைச் சேர்ந்தவராக இருப்பார். அரசு ஊழியர்கள் என்ற முறையில் அவர்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறது. பல தவறுகளைச் செய்து கூட்டுறவுச் சங்கங்களை இயங்காமல் அவர்கள் செய்து விட முடியும். கூட்டுறவுச் சங்கங்களில் தவறுகள் ஏற்படுவதற்கெல்லாம் காரணம் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கக் கூடிய அதிகாரிகள், செயலாளர்கள்தான். இதை யாரும் மறுக்க முடியாது. அவர்களுடைய உதவியின்றி எந்த நிர்வாகக் குழுவும் தவறு செய்து விட முடியாது. நிர்வாகக் குழுவும் அரசு ஊழியர்களும் சேர்ந்து கையெழுத்துப் போட்டால்தான், அது முடியும். நானும் ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் 6 மாத காலம் தலைவராக இருந்தவன் தான். அந்த முறையில் இதை நான் சொல்ல ஆசைப்படுகின்றேன். இப்பொழுது இல்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நல்ல வேளை தப்பித்தீர்கள்.

திரு. எம். சங்காலிங்கம் : ஆமாம். நானும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவன் தான். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஒரு மத்திய கூட்டுறவுச் சங்க டைரக்டர் போர்டு தேர்தலுக்கு நின்றேன். 7 அல்லது 8 பேர் போட்டியிட்டார்கள். நான் அதிக ஓட்டு வாங்கி உள்ளே சென்றேன். உள்ளே உள்ள நிலைமைகளைப் பார்த்தபிறகு வேண்டாமென்று வந்து விட்டேன். அதேபோல நில்வள வங்கித் தலைவராகப் போட்டார்கள். 3½ மாதத்தில் அதை விட்டு ஓடி வந்து விட்டேன்.

திரு. பி. மாணிக்கம் : உள்ளே போய்ப் பார்த்து விட்டு வெளியே வந்து விட்டேன் என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொல்லுகிறார்கள். (உறுப்பினர்கள் சிரிப்பு). அதற்கு விளக்கம் தேவை.

திரு. எம். சங்காலிங்கம் : அங்கு இருக்கக் கூடிய ஆதிக்கத்தையும், அவர்கள் நினைத்த உடனே செய்கின்ற காரியங்களையும், தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் அங்கே கைப் பாவையாக ஆடிக்கொண்டிருப்பதையும் பார்த்துத் தான் நான் வெளியே வந்து விட்டேன்.



1978 செப்டம்பர் 13]

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களும், திரு. தாமோதரன் அவர்களும் அங்கிருந்து ஓடிப் போகப் பார்க்கும் இதே நேரத்தில் அங்கே யாரையாவது மாட்டிவிடப் பார்க்கிறார்களா? (உறுப்பினர்கள் சிரிப்பு).

திரு. எம். சங்காலிங்கம் : அங்கே போய் ஏழையெளியவர்கள் மாட்டிக் கொண்டு விடக் கூடாது என்பதுதான் எங்களுடைய எண்ணம். இங்கே சொல்வதையெல்லாம் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். சீர்திருத்தங்கள் எல்லாம் தேவைப்படுகிறதா இல்லையா, இதற்கு என்று ஒரு தனி சட்டத் திருத்தம் வேண்டுமா என்ற கேள்வியை அவர்கள் கேட்கத்தான் போகிறார்கள்.

(பிற்பகல் 4-30)

நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு 13 மாதங்கள் ஆகின்றன. இதற்குள் இந்தச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். அப்படி நடைமுறைக்குக் கொண்டு வாராமல், இன்னும் ஓராண்டு காலம் கேட்பது என்பதை எந்தக் காரணத்தைக் கொண்டும் ஏற்றுக் கொள்வதற்கில்லை. வேண்டுமானால் ஒரு மூன்றுமாத காலம் கேட்கலாம். இப்போதுதான் இந்தச் சட்டத்தை இங்கே முன்மொழிந்திருக்கிறார்கள் என்ற காரணத்தால், 3 மாதம் கொடுக்கலாம் என்று ஒரு திருத்தத்தையே கொடுக்கலாமா என்றுகூடக் கேட்டேன். இந்தச் சட்டம் காலையில்தான் பேரவையில் நிறைவேறியிருக்கிறது. எனவேதான் நான் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களிடமே கேட்டுக்கொள்ள விரும்புவது - தற்போது கேட்கப்படும் ஒரு வருஷ கால வரையறையைக் குறைத்து ஒரு 6 மாதம் என்று வைத்துக் கொண்டால் நன்றாக இருக்கும். குறைந்தது 6 மாத காலத்திற்குள் தேர்தல்களை நடத்தி கூட்டுறவுச் சங்கங்களை நல்ல முறையில் செயல்படுத்தும் வகையில் சட்டத் திருத்தம் வேண்டும். அதை விட்டுவிட்டு தனி அலுவலரின் ஆதிக்கத்துக்குள் அதை நீண்டநாள் விடக்கூடாது, விடுவதாலே கூட்டுறவு இயக்கத்தினுடைய நோக்கமே கெட்டுப்போய்விடுகிறது என்பதை மட்டும் இங்கே கூறி அமைகிறேன். வணக்கம்.

* மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழ் நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவின்மீது பல்வேறு அரசியல்

(திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி) [1978 செப்டம்பர் 13

கட்சித் தலைவர்களும், இந்த மாமன்றத்தில் நீண்ட நாட்களாகப் பணிபுரிந்து கொண்டு வருகிற மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் போன்ற பெருமக்களும் நல்ல பல அரிய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். குறிப்பாக இங்கே கருத்துக்களை வழங்கிய நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களோடு மற்ற 5 உறுப்பினர்களும் மிகச் சுருக்கமாகப் பேசினாலும், அவர்கள் பேசிய பேச்சின் உள்ளடக்கம், மையப் பொருள் "ஏற்கெனவே இரண்டு ஆண்டுகளாக இருந்த இந்தச் சட்டத்தை மேலும் ஒரு ஆண்டு நீடிக்க வேண்டுமா? அதுவும் தனி அலுவலரை நம்பி, ஜனநாயகத்தை மையமாகக் கொண்டிருக்கிற கூட்டுறவு அமைப்பை அவர்களிடத்தில் கொடுப்பது அதன் வளர்ச்சிக்கு உகந்ததா, உசிதமானதா?" என்பதாகும். இந்தக் கருத்துக்களின் மூலம் அவர்களின் மேலான நல்லுணர்வுகளை இந்த மாமன்றத்தின் சிந்தனைக்கு வைத்தார்கள்.

தமிழக அரசினுடைய எண்ணமும் அதுதான். நீண்ட நெடுநாட்களுக்குத் தனி அலுவலர்களின் பொறுப்பில் இப்படிப்பட்ட கூட்டுறவு அமைப்புகளை எல்லாம் அனுமதிக்கக்கூடாது, எவ்வளவு விரைவாக வேண்டிய மாறுதலை உருவாக்க வேண்டுமோ அந்த அளவுக்கு விரைந்து செயல்பட வேண்டும் என்ற ஆர்வமும் நம்பிக்கையும் உங்களைப் போலவே அரசுக்கும் இருக்கிறது என்பதை முதற்கண் பணிவன்பாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது, ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். இதறும் 6 மாத காலத்திற்குள்ளாக விரைந்து தேர்தலை நடத்தி, அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்புகள் பொறுப்பு ஏற்பதுதான் உகந்ததாக இருக்கும் என்று குறிப்பிட்டார்கள். இன்றைய நிலைமை இந்தச் சட்டத்தின்படியே பார்த்தால் கூட, அதுதான் நிலைமை. 1976-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10-ம் தேதி இந்தச் சட்டத்தை அன்றைய தினம் அவசர கால நிலையின்போது கொண்டு வந்தார்கள். 1978ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10-ஆம் தேதியோடு 2 ஆண்டுகள் காலாவதியாகி, பிறகு இது ஒரு அவசரச் சட்டமாக மேதகு ஆளுநர் அவர்களால் பிறப்பிக்கப்பட்டு, இன்றைக்கு 4 மாதங்கள் கடந்துவிட்டன. இந்தச் சட்டத்தினுடைய ஆயுள்கூட இன்னும் 8 மாதங்களுக்குதான் இருக்கிறது. அதாவது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும் எங்களுக்கும் இடையே



1978 செப்டம்பர் 13] (திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி)

இருப்பது 2 மாதங்கள்தான். அவர்கள் விரும்புவது ஒரு ஆறு மாதங்கள் தான். இன்றைக்கு இந்த மாமன்றத்தின் ஒப்புதலுக்காக வந்திருக்கும் இந்தச் சட்ட முன்வடிவில் இந்தச் சட்டம் இன்னும் எத்தனை மாதத்திற்கு இருக்க வேண்டும் என்று உங்கள் அனுமதியைக் கேட்கிறோம் என்றால், இன்னும் ஒரு 8 மாதத்திற்குத்தான். ஒரு வருஷத்திலே 4 மாதங்கள் கடந்துவிட்டன. எனவே விரைவில் அவர்கள் சொன்ன கருத்துக்களை, உணர்வுகளை மையமாக வைத்துச் செயல்படுவோம் என்று இந்த மாமன்றத்தின் மூலமாக திருமிகு. சங்கரலிங்கம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவருக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் 1967 ஆவது ஆண்டு எங்களையெல்லாம் உருவாக்கிய அறிஞர் பெருந்தகை, பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறிய கூற்றை நினைவு படுத்தினார்கள். கூட்டுறவு இயக்கம் என்பது ஒரு மக்கள் இயக்கமாக, ஒரு ஜனநாயக இயக்கமாக இருக்க வேண்டும், அது அரசியல்வாதிகளின் கையடக்கமாக மாறிவிடக்கூடாது என்று அன்றைக்கே அண்ணா அவர்கள் சொன்னார்களே என்று அந்த நல்ல உணர்வுகளை இந்த நேரத்திலே நினைவுகூர்ந்தார்கள். எனவே அதையும் மையமாக வைத்துக்கொண்டு எதிர்காலத்தில் சில அடங்கல் திருத்தங்கள், காம்ப்ரெஹென்சிவ் அமெண்ட்மெண்ட்ஸ் என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்களே, அவைகளைக் கொண்டுவர முயன்று கொண்டிருக்கிறோம். ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கு மேலாக, கூட்டுறவு இயக்கத்தின் தந்தையான மறைந்த திருமிகு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களின் பேச்சுக்களைக் கூர்ந்து படித்துக் கொண்டு வந்திருக்கிறேன். அவர்கள் பல நேரங்களில் தம்முடைய கருத்துக்களை, உணர்வுகளை கண்ணியம்மிக்க இந்த அவையிலே வெளிப்படுத்தியிருக்கிறார்கள். குறிப்பாக 1961 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்களின் சட்டத்திற்கு பல நேரங்களில் பல திருத்தங்களைக் கொண்டுவந்திருப்பதைப் பார்க்கும் போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் ஆங்கிலத்தில் மிக அழகாக ஒரு சொற்றொடரைக் குறிப்பிட்டதைப் போல், அபரேஷன்—பல சிதைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. திருத்தங்கள் என்ற பெயரால் கூட்டுறவுச் சங்கச் சட்டத்திற்குப் பலவகையான சிதைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆங்காங்கே பலகீனங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆங்காங்கே தொய்வுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தத் திருத்தங்கள் எல்லாம் உயர்ந்த நோக்கங்களோடு கொண்டுவரப்பட்டிருந்தாலும், அப்படிப்பட்ட நோக்கங்கள் நல்ல முறையில் நிறைவேற முடியாத

அளவுக்கு அரசியல் நிர்ப்பந்தங்கள் இருக்கின்றன என்பதைத்தான் நம் அனுபவம் எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்றது. இப்போது அவைகளைப் பற்றியெல்லாம் விவாதித்துக் கொண்டிராமல் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல், எதிர்காலத்தில் எப்படிப்பட்ட திருத்தங்களைக் கொண்டுவந்தால், இந்தக் கூட்டுறவு இயக்கம் ஒரு ஜனநாயக இயக்கமாக இருக்க முடியுமோ அப்படிப்பட்ட முறையில் தமிழக அரசு இன்றையதினம் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது. பேறிஞர் அண்ணா அவர்கள் இருந்த நேரத்தில், கூட்டுறவு இயக்கத்திற்கு—மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல்—1967 ஆம் ஆண்டில் சொன்னதைச் செயல்படுத்துவதற்காக எல்றே இன்று நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற பொருளாதார மேதை திரு சந்தானம் அவர்களுடைய சீரிய தலைமையிலே ஒரு குழுவை அமைத்தார்கள். 1968 ஆம் ஆண்டு, மறைந்த மாமேதை அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, ஒரு குழுவை அமைத்து 70, 80 ஆண்டுகளாக இயங்கி வரும் இந்தக் கூட்டுறவுத் துறைக்குத் தேவையான மாற்றங்களையும் ஆலோசனைகளையும் கூறும்படி பணித்தார்கள்.

கூட்டுறவு இயக்கம் நீண்டநெடு நாட்களாக இயங்கி வருகிறது. இதை ஒரு கட்சிப் பிரச்சினையாக ஆக்க விரும்பவில்லை. கூட்டுறவு இயக்கம் என்பது ஒரு ஜனநாயக இயக்கம், மக்கள் இயக்கம். இதில் குறிப்பிட்ட கட்சிக்காரர்கள்தான் தவறு செய்திருக்கிறார்கள் என்பதல்ல. எல்லா கட்சிக்காரர்களின் ஆட்சியின் போதும் தவறுகளும குறைபாடுகளும் காணப்பட்டிருக்கின்றன.

தனி அலுவலர்கள் 1976 ஆம் ஆண்டுதான் போடப்பட்டது என்பதும் சரியல்ல. அதற்கு முன்பு பல ஆண்டுகளாகவே பல சங்கங்கள் தனி அலுவலரின்கீழ் செயல்பட்டுக் கொண்டு வந்திருக்கின்றன. 1956 ஆவது ஆண்டிலிருந்து தனி அலுவலரின் கீழ் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற சங்கங்கள் எல்லாம் இருக்கின்றன. வடஆற்காடு மாவட்டத்தில் இருக்கிற ஒரு சங்கத்தை எடுத்துக் கொண்டால், ஏறத்தாழ 10, 12 ஆண்டுகளாகத் தனி அலுவலரின் கீழ் செயல்பட்டுக் கொண்டு வந்திருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த சங்கம் ஒன்று பல ஆண்டுகளாகத் தனி அலுவலரின்

(பிற்பகல் 4-40)

கீழ் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில கூட்டுறவுச் சங்கம் பல ஆண்டுகளாக தனி அலுவலரிடத்திலே இருக்கிறது. இதிலே கட்சிப் பிரச்சினை எதுவும் கிடையாது. அவர்கள்





சொன்னது போல, சிதைவுகள் ஏற்பட்டு வந்திருக்கின்றன. அது காரணமாக கடந்த 13, 14 மாதங்களாக தமிழக அரசு இயன்ற அளவுக்கு பல முயற்சிகளை எடுத்து வந்திருக்கிறது. திரு. சந்தானம் அவர்கள் தலைமையில், அறிஞர் அண்ணா அவர்கள் இருக்கிறபோது ஒரு குழுவை அமைத்தார்கள். அந்தக் குழு ஒரு அறிக்கையை சமர்பித்தது. அதிலே நல்ல பல கருத்துக்கள் காணப்படுகின்றன. 1974ஆம் ஆண்டு ரிப்போர்ட் ஆன் கோவாப்பரேஷன் என்று அட்மினிஸ்ட்ரேடிவ் ரிபார்ம்ஸ் குழு ஒன்று திரு. வர்கீஸ் அவர்களுடைய விழுமிய தலைமையிலே இருந்தது. அது தமிழகத்திலே கூட்டுறவுத் துறையிலே எப்படி எப்படி சீர்திருத்தம் செய்யலாம் என்று யோசனைகள் சொல்லியிருக்கின்றது. அதுபோலவே வேறு சில மாநிலங்களுடைய சட்டங்களையும் நாம் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறோம். கூட்டுறவுத் துறையில் முன்னோடி மாநிலமாக இருக்கும் குஜராத் மாநிலத்தின் சட்டங்களை எல்லாம் நாம் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். மத்திய அரசு சில கைட் லைன்ஸ் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அவைகளையும் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறோம். சதர்ன் ஸ்டேட்ஸ் ஆகிய கேரளாவிலே, கர்நாடகத்திலே, ஆந்திராவிலே இருக்கின்ற சட்டங்களில் நாம் விரும்பக்கூடியவற்றை, நமக்குத் தேவைப்பட்ட சில அம்சங்களைக்கூட நாம் பயன்படுத்தலாம். நாம் சந்தானம் குழுவிலே இருந்து, வர்கீஸ் குழுவிலே இருந்து மத்திய அரசாங்கத்தின் வழிமுறைகளிலிருந்து நல்ல கருத்துக்களைப் பயன்படுத்தலாம். பிற மாநிலங்களின் அனுபவங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு, ஒரு காம்பிரஹென்சிவ் அமென்மெண்டாக, அடங்கல் சட்டமாக இவைகளையெல்லாம் கொண்டு வரவேண்டும் என்பதற்காகத்தான் இந்த மசோதா இப்போது கொண்டுவரப்படுகிறது. இதை இன்றைக்கு இந்த மேலான சபைக்குக் கொண்டுவருவதற்குக் காரணம் இதுதான். தனி அலுவலர்கள் கையிலே கொடுத்துவிட்டு ஜனநாயகத்திற்குச் சாவு மணி அடிக்க வேண்டுமென்று நாங்கள் நினைக்கவில்லை. அது தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்டதே தவிர, நிரந்தரமான ஏற்பாடு அல்ல. இது நிரந்தரமான ஏற்பாடாக நீடிக்க உறுதுணையாக இருக்க மாட்டோம். எதைச் செய்தாலும் முழுமையாக, நியாயமான முறையிலே செய்ய வேண்டும், ஏற்கெனவே ஏற்பட்டுள்ள தடங்கல்களை எல்லாம் நீக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு இந்தக் கால அளவை நீடிக்கிறோமே தவிர, ஜனநாயக அமைப்பு வரக்கூடாது என்பதற்காக அல்ல. நம்முடைய நண்பர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநிலச் செயலாளர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே எல்லோரையும் கலந்துதான் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட வேண்டும் என்று, பிரின்சிபல் ஆஃப் கன்சென்சஸ் என்ற அளவில் செயல்பட

வேண்டும் என்று சொன்னார்கள். அது அருமையான கருத்து. அப்படி முழுமையாகச் சட்டம் கொண்டு வருகின்ற நேரத்திலே, அனைத்துக் கட்சி களையும் சேர்த்துக்கொண்டு பேசுவது என்பது எங்களுக்கு ஒரு உடன் பாடான கருத்து. இதற்கும் அப்படியே செய்வோம். இன்றைக்கும் செய் வோம். எதிர்காலத்திலும் செய்வோம். இப்படி எல்லோருடைய அனுபவங் களைப்பற்றி அறிவதற்கு தமிழக அரசு எப்போதும் தயாராக இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசுகின்ற போது, கூட்டுறவுத் தத்துவத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை வரவேண்டும், இந்த நம்பிக்கைக்கு தொய்வு ஏற்பட்டிருக்கிறது, அதற்குக் காரணம் இப்படிப் பட்ட குறைபாடுகள் என்று சொன்னார்கள். இவைகளையெல்லாம் மனதிலே வைத்துக்கொள்கிறோம். ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேச்சினிலே, சொன்னவைகளை விரை விலே கொண்டுவர வேண்டும் என்று சொன்னார்கள். அந்த நோக்கத்தோடு ஓராண்டு என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே நான்கு மாதங்கள் கடந்து விட்டன. இனி எட்டு மாதங்கள் இருக்கின்றன. இந்த எட்டு மாதக் காலத்தில் ஒரு போர் காலச் சூழ்நிலையாகக் கொண்டு விரைந்து முனைந்து, இதற்காக என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டுமோ, அந்தந்தக் காரியங்களைச் செய்து, அது ஒரு கட்சியினுடைய தனி இயக்கம் அல்ல, கூட்டுறவு ஒரு ஜாதிக்காரர்களின் இயக்கம் அல்ல, அது பணக்காரர் களுக்காக மட்டும், மேட்டுக்குடியினருக்காக மட்டும் ஏற்பட்ட இயக்கம் அல்ல, கூட்டுறவு மக்கள் இயக்கம், மக்களுக்காக ஆக்கபூர்வமான காரியங்களைச் செய்வது என்ற அளவில் இந்தத் தீர்மானத்தை முன் மொழிந்திருக்கிறேன். இந்தத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.



பிரிவுகள் 2 முதல் வரை, அட்டவணை ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1978) நிறைவேற்றப்படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1978) நிறைவேற்றப்படவேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தமிழ் நாடு 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/1978) சட்ட மன்றப் பேரவையில் இன்னும் நிறை வேற்றப்படவில்லை. பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

(3) 1978 ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக் கழக (திருத்த-சிறப்பு விதித் துறைகள்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1978).

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1978 ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக் கழக (திருத்த-சிறப்பு விதித் துறைகள்) சட்ட முன் வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

@ 386-387 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சடிக்கப்பட்டுள்ளது.

15—7—1978 அன்று, தலைசிறந்த தேசியத் தலைவரான காமராசரின் நினைவைப் போற்றி என்றென்றும் நிலைத்திருக்கச் செய்வதற்காக மதுரைப் பல்கலைக் கழகத்தை, காமராசர் பல்கலைக் கழகம் என மாற்ற அரசு முடிவு செய்தது. இதற்கென ஓர் அவசரச் சட்டமும் சூலைத் திங்கள் 22 ஆம் நாள் பிறப்பிக்கப்பட்டது.

அந்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாக முறையான சட்டம் ஒன்றை இயற்றுவதற்காக சட்ட மன்றப் பேரவையில் சட்ட முன்வடிவம் ஒன்று 7—9—1978 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அம்முன் வடிவத்தில் அவசரச் சட்டத்தில் இருந்தது போன்றே "காமராசர் பல்கலைக் கழகம்" என்ற பெயர் இடம் பெற்றிருந்தது. பின்னர் சட்ட மன்றப் பேரவையில் சில தரப்புகளிலிருந்து வலியுறுத்தப்பட்ட கருத்திற்கேற்ப மதுரை என்ற பெயரும் அப்பல்கலைக் கழகத்தின் பெயரில் இருக்க வேண்டுமென அரசு இசைந்து, அதற்கான திருத்தம் பேரவையில் கொண்டுவரப்பட்டு "மதுரை-காமராசர் பல்கலைக் கழகம்" என்ற பெயரை பேரவை ஏற்று அந்த சட்ட முன்வடிவு பேரவையில் 13—9—1978 அன்று நிறைவேறி உள்ளது.

தவிரவும் மூலச்சட்டத்தின்கீழ் இயற்றப்பட்ட ஆணைகளிலும், மற்றும் நடைமுறையில் இருக்கும் வழக்குகள் ஏதேனும் இருந்தால் அவற்றிலும் உரிய இடங்களில் எல்லாம் "மதுரை-காமராசர் பல்கலைக் கழகம்" என பெயர் மாற்றம் செய்யவும் வகை செய்யப்பட்டுள்ளது. தவிரவும் இதற்கென 22—7—1978 அன்று வெளியிடப்பட்ட அவசரச் சட்டத்தை ரத்து செய்வதற்கும் இந்தச் சட்ட முன்வடிவு வகை செய்கின்றது. பேரவையில் நிறைவேறிய வண்ணம் இந்தச் சட்ட முன்வடிவினை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு இதனை நிறைவேற்றித் தருமாறு சட்ட மன்ற மேலவைக்குப் பரிந்துரைக்கின்றேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1978 ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக் கழக (திருத்த-சிறப்பு விதித் துறைகள்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மதுரை சர்வகலாசாலை என்று இருந்த பெயருடன் காமராஜ் என்ற பெயரைக் கூட்டி இணைத்து மதுரை காமராஜ் சர்வகலாசாலை என்று





மாற்றுவதற்காக இந்தத் திருத்தம் வந்திருக்கிறது. கொள்கை அளவிலே மதுரை காமராஜ் பல்கலைக் கழகம், அதாவது மதுரைப் பல்கலைக் கழகம் என்று இருப்பதில், காமராஜ் என்ற பெயரைச் சேர்க்கிறார்கள். இது ஒன்று தான் திருத்தம். கொள்கை அளவிலே நான் இந்தத் திருத்தத்தை வரவேற்றாலும், சில கருத்துக்களை நான் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். முதன் முதலிலே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காமராஜ் பிறந்த தின விழா அன்று மதுரைப் பல்கலைக் கழகம் காமராஜ் பல்கலைக் கழகம் என்று பெயர் மாற்றப்படும் என்று அறிவித்தார்கள். உண்மையிலேயே நான் வரவேற்கிறேன், மகிழ்ந்தேன். ஏனென்றால் காமராஜர் அத்தகைய பெரும் தியாகி, பெரும் தலைவர். அவருக்குரிய மரியாதையைச் செய்கின்ற அளவுக்கு இது இருக்கிறது. நான் அதற்காக உண்மையிலேயே

(பிற்பகல் 4-50)

மகிழ்ந்தேன், பூரிப்பு அடைந்தேன், வரவேற்றேன். ஆனால் நான் எதிர்பார்த்த மாதிரி நடைமுறை நடக்கவில்லை. எல்லோரும் என்னைப் போலவே அதை வரவேற்பார்கள், ஆதரிப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். மாறாக சிலர், மதுரைப் பகுதிகளிலே வாழக்கூடிய மக்கள் எதிர்ப்பிலே கிளம்பியதைப் பார்த்து நான் உண்மையிலேயே வேதனைப்பட்டேன். நான் எதிர்பார்க்காதது; இருந்தாலும் அது கிளம்பியிருக்கிறது. எதிர்ப்பு நாளொரு மேனியாக வளர்ந்து, இன்று எதிர்ப்பு நிற்காத அளவிலே இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் மதுரைப் பகுதிக்குச் சென்றபோது, அவருக்குக் கறுப்புக் கொடி காட்டி, ஆர்ப்பாட்டங்கள் செய்யும் அளவுக்கு, எதிர்ப்பு வளர்ந்திருக்கிறது. இது வேதனைக்குரிய விஷயம், எனக்கு ஒன்று தோன்றியது. ஒரு பெரும் தலைவருக்கு மரியாதை செய்யும் முகத்தான் ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்து, அவர் பெயரை மதுரைப் பல்கலைக் கழகம் என்ற பெயரோடு இணைத்தால், இதற்கு இவ்வளவு எதிர்ப்பா? இவ்வளவு எதிர்ப்புக்கிடையே, அதைமீறி, நாம் வலுக்கட்டாயமாகத் திணிப்பது முறையா? இதை நினைத்தபோது எனக்கு மாரத்வாடா நினைவிற்கு வந்தது. மஹாராஷ்டிரத்தில் மாரத்வாடா பகுதியில் மாரத்வாடா சர்வகலாசாலை இருக்கிறது. அதற்கு அரசாங்கம் அம்பேத்கார் சர்வகலாசாலை என்று பெயர் மாற்றியது. அந்தப் பகுதி மக்கள் அம்பேத்கார் சர்வகலாசாலை என்று பெயர் கூடாது, பழைய பெயரே இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அரசு கேட்கவில்லை. அரசு அந்தப் பெயரைத் திணிக்க முயற்சித்து, பொதுமக்கள் அதை எதிர்த்துப் போராடி, பெரும் கலவரங்கள் மூண்டு, பல உயிர்கள் சேதமடைந்த நிலையைப் பார்த்து, அரசு தான் திணிக்க

(திரு. கே. எஸ். அப்துல் வகாப்) [1978 செப்டம்பர் 13

விரும்பிய பெயரை வாபஸ் வாங்கியதாகப் பிரகடனம் செய்தது. பிறகுதான் கலவரம் அடங்கியது. இது அம்பேத்கார் அவர்களுக்குச் செய்த மரியாதையா அல்லது அவருடைய தகுதிக்குப் பங்கமா என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது.

அதுபோன்று எல்லோரும் ஏகோபித்த ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு நல்ல அபிப்பிராயம், ஒரு நல்ல பிரபோசல் இது. இதற்கு இவ்வளவு எதிர்ப்பு இருக்கிறது. இந்த எதிர்ப்புக்கு இடையே அதை வலியுறுத்தி, வலுக்கட்டாயமாகத் திணித்து, மக்களுடைய எதிர்ப்புகளும் வளர்ந்து, அதை மறுபடியும் வாபஸ் வாங்கக்கூடிய அளவுக்குக் கலவரங்கள் மூண்டால், அது நம்முடைய பெரும் தலைவர், தியாகச் செம்மல் காமராஜர் அவர்களுக்கு மரியாதை செய்ததைவிட, மரியாதையைக் குறைப்பதாக அமையும். பொதுவாக ஒரு சர்வகலாசாலை ஆகட்டும், அல்லது எந்த நிறுவனமும் ஆகட்டும், அதற்குள்ள பெயரை மாற்றுவதற்குத் தடை, எதிர்ப்பு வந்தால், அதை மாற்றுவது விரும்பத்தக்கதல்ல. புதிதாகத் துவக்கக்கூடிய சர்வகலாசாலைகளுக்கு அந்தப் பெயர்களைப் பொருத்தினால், யாரும் எதிர்ப்பு சொல்ல மாட்டார்கள். அந்த நிலையிலே நான் அரசுக்குச் சொல்ல விரும்பும் ஒரு யோசனை என்னவென்றால், மதுரை சர்வகலாசாலை பழமையானது. அதனால் அங்கே வலுக்கட்டாயமாகத் திணிப்பது விரும்பத்தக்கதல்ல. அந்தப் பெயர் மாற்றத்தை நான் வரவேற்றாலும், எதிர்ப்பு காரணமாகத் திணிப்பதென்பது வரவேற்கத்தக்கதல்ல என்பதால், அந்தப் பெரியவருக்கு, அந்த உத்தமருக்கு மரியாதை அளிப்பதற்காக நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். புதிதாக இரண்டு சர்வகலாசாலைகள் துவங்க இருக்கின்றன. திருச்சியிலே ஒன்று, கோவையிலே ஒன்று. கோவை சர்வகலாசாலை, திருச்சி சர்வகலாசாலை என்று சொல்லியிருப்பதாக நினைக்கிறேன். கோவையிலே உள்ள சர்வகலாசாலைக்கு தந்தை பெரியாருடைய பெயர் வைக்கப்போவதாக அரசு முடிவு செய்திருப்பதாக எனக்கு ஊர்ஜிதமான தகவல் வந்திருக்கிறது. திருச்சி சர்வகலாசாலைக்கு யாருடைய பெயர் வைக்கப் போகிறார்களென்பது தெரியாது. காமராஜருடைய பெயரைத் திருச்சி சர்வகலாசாலைக்கு வைத்துவிட்டால், மிகப் பொருத்தமாக இருக்கும். எல்லோரும் வரவேற்பார்கள், எந்த எதிர்ப்பும் இல்லாது, தெளிவான மரியாதை செய்வதாக அது இருக்குமென்று சொல்லி, என் பேச்சை முடிக்கிறேன்.

**திரு. பி. ஆர். தாமஸ்:** மாண்புமிகு தலைவரவர்களே, மதுரைப் பல்கலைக் கழகம் என்று அழைக்கப்படும் பெயரினை, மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் என்று மாற்ற வேண்டுமென்று கொண்டுவரப்பட்டுள்ள மசோதாவின்மீது



1978 செப்டம்பர் 13] (திரு. பி. ஆர். தாமஸ்)

என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக அரசியல் கண்ணோட்டத்தோடு பார்த்தால், ஆளும் கட்சி அந்தக் கட்சியைச் சேர்ந்த பெரும் தலைவர்கள், அமரர் ஆனவர்களுடைய பெயரையே எங்கும் சூட்ட விரும்புவார்களென்ற நிலை இருந்த போதிலும், இந்த அரசு நாட்டினுடைய தேசியத் தலைவர்களுள், ஒரு தலைவருடைய பெயரை எடுத்து, அந்தப் பெயரை மதுரைப் பல்கலைக் கழகத்திற்குச் சூட்டியிருக்கிறது என்றால், அந்தக் கட்சியினுடைய உயர்ந்த உள்ளத்தையும், நாட்டுக்குத் தொண்டாற்றிய சிறந்த தலைவர்களை, குறிப்பாக, சிறப்பாக தமிழகத்திலே தோன்றிய ஒரு தலைவர், அகில இந்திய அடிப்படையிலே உயர்ந்து திகழ்ந்தவர் என்பதை ஒப்புக்கொண்டு, அவருக்குக் காட்டக்கூடிய மரியாதையைப் பெருமையாகவே கருதுகிறேன். இந்த மசோதா கொண்டுவரப்பட்டதன் நோக்கம் என்று கொடுக்கப்பட்டதிலே, காமராஜருடைய பெயரைச் சூட்டுவதன் நோக்கம் அவரைப் பெருமைப்படுத்தவும், அவருக்கு மரியாதை செலுத்தவும் மட்டுமல்ல, வருங்காலச் சந்ததியினர் தொடர்ந்து அவருடைய பெயரை நினைக்க வேண்டும், நினைத்து அவர் வாழ்ந்த வாழ்க்கையின் வரலாறுகளை அந்தப் பல்கலைக் கழகத்திலே படிக்கும்போது, அவருடைய வாழ்க்கை முறைகளைக் கற்றுக்கொள்வதோடு, அதனால் உந்தப்பட்டு அரசியல் தொண்டு, சமுதாயத் தொண்டு செய்ய வேண்டும்; அவர் தமிழகத்திற்குத் தேடித் தந்த பெருமைகளையெல்லாம் சிறப்பாக எண்ணக்கூடிய வாய்ப்பு இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக, இந்தச் சட்ட முன்வடிவை நான் மனமாரப் பாராட்டி, வரவேற்கிறேன்.

அவருடைய வாழ்க்கை வரலாறுகளை நான் எடுத்துக் கூற வேண்டியதில்லை. ஆனால் சிறப்பாக, குறிப்பாக சில பகுதிகளைக் கூற விரும்புகிறேன். விடுதலை அடைவதற்கு முன்னதாக அவர் நாட்டுக்கு ஆற்றிய தொண்டு, தமிழக மக்களைத் தட்டி எழுப்பி, சுதந்திர வேகத்தை உண்டாக்கி, அனைத்து மக்களுடைய நல்லெண்ணத்தைப் பெற்றார். சத்தியாக்கிரஹப் போராட்டத்தில் முன் நின்று நடத்தி, பல இன்னல்களையும், தொல்லைகளையும் தாங்கி, அனைவராலும் தலைவர் என்று ஒப்புக்கொள்ளத்தக்க அளவில், தமிழகத்தில் உயர்ந்தார். அதோடு அகில இந்திய அடிப்படையிலே, அவர் சார்ந்திருந்த இயக்கத்தினுடைய பிற மாநிலத் தலைவர்களோடு நெருங்கிப் பழகி, அவர்களுடைய நல்லெண்ணங்களையும் பெற்று விளங்கினார். சுதந்திரம் பெறுவதற்கு முன்னாலேயே, அகில இந்திய அடிப்படையிலே மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, இன்னும் பெரும் பெரும் தலைவர்களோடு நெருங்கி உறவாடி, சிறந்த பண்புகளோடு நம் நாட்டிற்குத் தொண்டாற்றினார் என்று நினைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். சுதந்திரம் அடைந்த பிறகு, இந்த

மாநில முதலமைச்சராகப் பதவியேற்று, நேர்மையாக நிர்வாகத்தை நடத்தி, மாநிலத்தை மறுமலர்ச்சியடையச் செய்தார். மக்களுக்கு எவ்வாறு நிர்வாகம் அமைய வேண்டுமென்பதைப்பற்றியெல்லாம் அவர் எடுத்துக் காட்டியதை நான் நினைவிற்கு வருவிப்பதோடு, கல்விக் கண்ணைத் திறந்த பெரியார், பெரும் தலைவர் காமராஜர் அவர்கள் என்று சொன்னால், அது மிகையாகாது.

இந்த அரசு 1977 ஆம் ஆண்டிலே கல்லூரி ஆசிரியர்களுக்கும், தனியார் துறையிலுள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் ஊதியத்தைத் தானே வழங்க முடிவு செய்தது. அதே பாணியிலே, ஏறத்தாழ 13 ஆண்டுகளுக்கு முன்னதாகவே, 1964 ஆம் ஆண்டில், பள்ளிகளிலே ஆசிரியர்கள் அனைவரும் ஊதியத்தைப் பெற முடியாத நிலை இருந்தது. மூன்றிலே ஒரு பகுதி நிர்வாகமும், மூன்றிலே இரண்டு பகுதி அரசும் வழங்குகின்ற காலத்திலே, அந்த முறையை அகற்றிவிட்டு, முழுக்க முழுக்க அரசே அதை வழங்குவதை 1964 ஆம் ஆண்டிலே நடைமுறைப்படுத்தினார்கள். அத்துடன் இணைந்த மற்ற பிரச்சினை என்னவென்றால், அன்று பள்ளிகளில், மாணவர்கள் கட்டணம்

(பிற்பகல் 5-00)

கட்ட வேண்டிய நிலை இருந்தது. ஏழை மக்கள், பத்து மாதங்களுக்குத் தொடர்ந்து கட்டணம் கட்ட வேண்டிய நிலையில் இடையிடையே பள்ளிப் படிப்பை விட்டுவிட்டு வெளியே செல்லக்கூடிய நிலையைக் கண்டு அவர்களுக்கு படிப்பை உதவித் தொகைக்கான சலுகையைக் கொடுத்தும், அதனால் ஒரு சிறிய பகுதியினரே சலுகை பெற முடிந்தது என்பதாலும், பல பேருடைய விண்ணப்பங்கள் தள்ளப்பட்டு நிர்வாகங்கள் சரியாகக் கொடுக்காததால் அதை மாற்றி ஒருமித்த கருத்து எடுத்து பள்ளிப் படிப்பு முழுவதையும் இலவசமாக ஆக்கிய பெருமை பெருந்தலைவர் காமராஜ் அவர்களையே சாரும்.

அதோடு மட்டுமல்லாமல், அவர்கள் நம்முடைய மாநிலத்தில் நண்பகல் உணவுத் திட்டத்தைத் துவக்கிய பெரியவர் ஆவார்கள். பள்ளியிலே படிக்கும் மாணவர்களில், ஏழைக் குழந்தைகளுக்கு இலவசப் புத்தகங்களும், சிலேட்டுகளும் வழங்க முதலாவதாக ஆரம்பித்து வைத்தவரும் அவரே. அத்தனை பெருமைக்குரிய அவர் பெயரைச் சூட்டி காமராஜ் பல்கலைக் கழகம் என்று அழைக்கிறோம் என்றால், நம்முடைய நன்றியுணர்வைக் காட்டுகிறோம் என்றும், நம்முடைய மாநிலத்திற்குப் பெருமையைத் தேடித் தந்த பெருந்தலைவருக்கு கௌரவம் அளிக்கிறோம் என்றும் பொருளாகும். தமிழகத்திலே தோன்றக் கூடிய மற்ற தலைவர்கள் அந்தத் தலைவர் அகில இந்திய அடிப்படை-



யிலே அரசியலில் அடைந்த உன்னத நிலையை அடைய முடியுமா என்ற கேள்வி என்றென்றும் நம் உள்ளத்திலே இருக்கிறது. பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு அடுத்து வந்த சாஸ்திரி அவர்களும், இந்திரா காந்தி அவர்களும், அடைந்த பிரதமர் பொறுப்பு எல்லாம் தலைவர் காமராஜ் சொல்லில் இருந்து ஆணையாக மாறியதுதான். அப்படிப்பட்ட பெருந் தலைவரின் நினைவாக இந்தப் பெயரை வைத்திருப்பதற்காகப் பாராட்டுகிறேன், நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுரைப் பல்கலைக் கழகத்தை, காமராஜ் பல்கலைக் கழகம் என்று மாற்ற வேண்டுமென்று அரசு இங்கே சட்ட முன்வடிவைக் கொண்டுவந்திருக்கிறது. அதிலே கருத்துக் கூறக்கூடிய நிலையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. வகாப் அவர்கள் ஒரு பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறார்கள். அது என்னவென்று கேட்டால், அங்கே யாரோ சிலர் எதிர்ப்பு தெரிவித்த காரணத்தாலே, அந்த நிலையை யோசிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். பொதுவாக நான் தெரிவித்துக் கொள்ளுவது என்னவென்றால், காங்கிரஸ்காரர்கள் தங்களுடைய ஆட்சிக் காலத்திலே அவருடைய பெயரை வைக்க வேண்டும் என்று விருப்பம், ஆசை கொண்டிருப்பார்களேயானால், எவ்வளவோ பெயர்களைச் சூட்டியிருக்கலாம். ஆனால் அப்படி ஒரு எண்ணமோ, ஆசையோ இல்லாத நிலையில் காங்கிரஸ் ஆட்சி நடந்தது. அதிலும் குறிப்பாக தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்து, அந்த ஆட்சிக்கு உறுதுணையாக இருந்த கட்சியின் தலைவராக இருந்த திரு. காமராஜ் அவர்கள் பெயர் சூட்டுகிற விழாவையெல்லாம் ஏற்றுக்கொண்டவர் அல்ல. கடந்த காலத்திலே காங்கிரஸ் கட்சியினுடைய பெருந்தலைவராக, பொதுத் தலைவராக இருக்கக் கூடிய மகாத்மா காந்தியினுடைய பெயர்தான் பொதுமக்கள் இஷ்டத்திற்கு இடப்பட்டதே தவிர, மற்றவர்களுடைய பெயர்களை வைக்க ஆசைப்படவில்லை. இருந்தபோதிலும் இந்த அரசு இந்தத் தீர்மானத்தின் மூலம் அந்தப் பெயரை வைக்க வேண்டுமென்று சொல்லியிருப்பதைப் பார்த்தால், மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் கூறிய கருத்தை இன்று எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். தமிழகத்திலே காங்கிரஸ் மட்டுமல்ல, அனைத்துக் கட்சிகளும் ஒத்துக்கொள்ளக்கூடிய இரண்டு நிலைகள் உண்டு. ஒன்று காமராஜ் அவர்களைப் பெருந்தலைவராக ஏற்றுக்கொண்டு அவரை மதித்தது. அடுத்து, இந்த நாட்டுக்கு கல்விக் கண்ணைக் கொடுத்தவர் காமராஜ் என்ற நிலை எல்லாக் கட்சிக்காரர்களும் ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயமாக இருக்கிறது. இப்படிப்பட்ட பெருந்தலைவரின் பெயரை, இந்த நாட்டினுடைய விடுதலைக்காக பெரும் போராட்டத்தை நடத்தியவரின் பெயரை, அரசியல்

வாழ்க்கையில் பிறர் பற்றக் கூடிய அளவுக்கு நன்னெறிகளைக் கொண்டிருந்த ஒருவருடைய பெயரை நாங்கள் வற்புறுத்தி வைக்க வேண்டுமென்று கூற வில்லை. அரசாங்கப் பொறுப்பை ஏற்றிருக்கிற முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய பிறந்தநாள் விழாவில் அதை அறிவித்தார்கள். அதை இந்த நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை முக்கியமானதாக இருக்கிறது.

மராட்டிய மாநிலத்தில் அப்பேத்கருக்கு எதிர்ப்பு ஏற்பட்டது. அது பிறகு வாபஸ் பெறப்பட்டது. அதைக் குறிப்பிட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. வகாப் அவர்கள் வருத்தமாகச் சொன்னார்கள். அந்த வருத்தப்படக் கூடிய் நிலை ஏற்படக்கூடும் என்ற எண்ணம் இங்கே யாருக்கும் கிடையாது. இதை யாரோ ஒரு சிலர் தூண்டுகிறார்கள். அதைச் சிலபேர் செய்கிறார்கள். அந்த வகுப்பு வாத எண்ணத்திற்கு அரசாங்கம் ஊக்கம் கொடுக்கக் கூடாது. அந்தக் குறுகிய நோக்கத்தைச் சமாளிக்க வேண்டும். ஒரு ஐம்பது, நூறு பேர்கள் செய்கிறார்கள் என்ற காரணத்திற்காக, ஒரு உன்னதமான காரியத்தை இழக்க வேண்டுமா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். இந்தச் சபையில் அப்படிப்பட்ட எண்ணங்களுக்கு ஒரு இடம் தரக்கூடாது என்ற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் திரு. வகாப் அவர்களுக்கு நான் மிகப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளுவது என்னவென்றால், காமராஜ் பெயரை வைக்க வேண்டுமென்று கேட்க வேண்டிய அவசியம் காங்கிரஸ்காரர்களுக்கு இல்லை. ஆனால் அவர்களுடைய கடமை, இந்த நாட்டுக்கு அவர் செய்த தியாகம், அவர் ஆற்றிய தொண்டு ஆகியவைகளைக் கருதி இன்றையதினம் அவருடைய பெயரை வைத்திருக்கிறார்கள். அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். இதை வலியுறுத்திக் கூறிச் செய்ய வேண்டும் என்று நாங்கள் கேட்கவில்லை.

அம்பேத்கர் நிலை வேறு, காமராஜரின் நிலை வேறு. விடுதலைப் போராட்டத்திலே அம்பேத்கருடைய பங்கிற்கும், பெருந்தலைவர் காமராஜருடைய பங்கிற்கும் மிகுந்த மாறுபாடுகள் இருக்கின்றன. விடுதலைப் போராட்டத்தில் அம்பேத்கருடைய பெயரே இல்லை. அம்பேத்கர் ஒரு பெரிய அறிஞராக இருந்தார். அவர் அரிசன வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தார். படிக்காத ஜாதியைச் சேர்ந்த ஒருவர் அறிஞராக இருக்கிறார் என்ற காரணத்திற்காக அவருக்குப் பெரிய முக்கியத்துவம் கொடுத்து, இந்த நாட்டினுடைய அரசியல் நிர்ணய சபையில் அவருடைய ஆலோசனை பெறப்பட்டதே தவிர, வேறு காரணங்கள் இல்லை.



மதுரையிலே காமராஜ் பல்கலைக் கழகம் என்று பெயர் வைத்த நிலை வேறாக இருக்கிறது. அதையும், இதையும் சேர்த்து எண்ணக்கூடிய அவசியமில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, இந்தச் சபையில் வந்திருக்கக்கூடிய சட்டத் திருத்தத்திற்கு அதைக் குறிப்பிட்டுப் பேசுவது பொருத்தமாக இருக்காது. 'பெருந் தலைவர்' என்பதை அரசு ஏற்றுக்கொண்டால் இன்னும் சிறப்பாக இருக்கும். இது அரசினுடைய ஆலோசனைக்குரிய விஷயம். இதை முழு மனதோடு ஆதரித்து நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவருடைய பெயரை வைக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்ளவில்லை. காமராஜ் அவர்களுடைய பிறந்த தின விழாவில் நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவித்தது பொருத்தமானது என்ற அளவிலே அதை நாங்கள் ஏற்றுக்கொண்டோம். நண்பர் வகாப் அவர்கள் கூறிய அந்தச் சொல் எனக்கு மிகவும் வேதனையை அளிக்கிறது. அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்பதைச் சொல்லி, யாராவது எதிர்ப்புத் தெரிவித்தால், அது குறுகிய மனப்பான்மையோடு, ஜாதி எண்ணத்தோடு தெரிவிப்பது என்று கருதி, அதை ஒதுக்கித் தள்ள வேண்டும் என்று கேட்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Hon. Chairman, Sir, I find myself in a very delicate situation and I would like to make it clear to the Members of this House that in offering these remarks, I wish to state that I have always had the highest regard for the late Thiru Kamaraj who from the age of 14–15 onwards devoted himself to national struggles, to politics, to people's welfare, who was undoubtedly a great leader in Tamil Nadu and in India and whose services to our State and to the country are recognised today by all political parties not only in this State but also in our country. To honour his name, by naming the Madurai University after him, is a very well intentioned move, I do however wish to state that generally speaking Universities which have been established should not be named after persons or national leaders but we should establish new institutions in memory of these gentlemen. We have honoured several great national leaders in our country. Pandit Nehru has had many deemed Universities named after him. Certainly it is most appropriate that the late Thiru Kamaraj should also be honoured in that fashion. But we have a number of other Universities coming up in Tamil Nadu—new Universities and if I may state

without being misunderstood by the hon. Members and the Government, I would earnestly wish that henceforth we should name Universities only after the towns in which they are situated.

(பிற்பகல் 5-10)

Histrically speaking, Universities all over the world, to establish their reputation and to establish their names, take over 20, 30, 40 or even 50 years. We have the University of Oxford, we have the University of Cambridge, we have the Massachusets Institute of Technology, we have the University of California and many hundreds of Universities and a catalogue of Universities in the U.K. before us. If we see the names of the Universities, 99 per cent of them are named after the towns. The colleges, the constituent colleges in these Universities, may be named after great men who have devoted their time to science, University affairs and national affairs. Sir Isaac Newton was one of the greatest mathematicians and physicists in the U.K. They did not change the name of Oxford or Cambridge after Newton. There have been more than 200 Nobel Prize winners. Einstein of Princeton University was the great exponent of the Theory of Relativity but the Princeton University was not named after Einstein. I wish that we would remember that Universities should be named only after the towns in which they are situated. You can have an Institute of Rural Welfare and Education just as we have in Gandhigram an Institute of Rural Education named after Mahatma Gandhi. You can have an Institute of Political Science named after Perarignar Anna. You can have an Institute of International Studies named after the great Rajaji. You can have Institutes of Social Sciences and Behavioural Sciences named after leaders who have taken a great deal of interest in these affairs. But when you seek to change the names of established Universities—I am not speaking of Madurai University now because it is of recent origin formed in the year 1965 and, therefore, it may be quite appropriate to name it after Thiru Kamaraj—I feel that the voice must be heard. If we are going to change the names of Universities like Madras and other Universities which may be established hereafter, it is better to



hold on to the principle that the names of Universities should not be changed. I mentioned even in the beginning that this had been a highly sensitive, emotional issue and I did not wish to be misunderstood. In fact, in our State we have got into the habit of indulging in these emotional themes. Emotion is good but there are other things which are equally important. The AIADMK Party and the DMK Party belong to the rationalist group and are followers of the great social reformer, Periyar Ramaswami. Sir, rationalism means that we should devote better attention to science, truth and reason. In the districts of Tamil Nadu there is not one single museum of science and technology devoted to scientific objects. Our children in the rural areas and in the non-urban areas have no opportunity of knowing anything about science and technology.

I am sure the hon. Members who have visited the Field's Muesum of Chicago, the Science and Technology Museum of London and other places will testify to the fact that millions of young children visit such institutions. My plea is that for honouring Kamaraj and Periyar Ramaswami, it would be more appropriate to have either a Science and Technology Museum in Madras City or ten different Museums of Science and Technology in all the districts of our State. I mention this because renaming streets, renaming buildings, stripping buildings of their old names—all these produce a highly de-stabilising effect on the minds of our people and introduce controversies where controversies are absolutely needless. In respect of these national leaders, there can be no doubt that we are honouring our Universities—some of the recent ones—by renaming them but the principle has to be stated. I, therefore, wish that I should not be misunderstood when I make this particular point in regard to the naming of Universities because all over the world it is not the practice to change names, the Government can name new institutions and I would only like the Government to bear this in mind in the future.

Thank you.

* திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு தலைவரவர்களே, மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு "காமராஜ் பல்கலைக் கழகம்" என்று பெயரிடுகின்ற இந்த மசோதாவை நான் முழு மனதுடன் ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பெரும் தலைவர் காமராசர் அவர்களை நினைக்கின்ற போது, அரசு ஊழியர்கள்—ஆசிரியர்களாகிய நாங்களெல்லாம்—பல முறை, பல சந்தர்ப்பங்களில் அவருடைய பேருதவியால் எங்களுடைய சமுதாயத்திற்கு அவர் செய்த பல நல்ல காரியங்கள் எல்லாம் நினைவுக்கு வரும். ஒரு முறை பெரும் தலைவர் காமராசர் அவர்களை—1960 ஆம் ஆண்டில் ஒரு தூதுக் குழுவாக பார்ப்பதற்கு வந்தோம். அந்த நேரத்தில் ஆசிரிய மாணவர் விகிதாசாரத்தை உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்திருந்தது. அப்படி ஆணை பிறப்பித்த நேரத்தில், அதனால் 15,000 பேர்—இந்த நாட்டிலே இருக்கக்கூடிய ஆசிரியப் பெருமக்கள் வேலையிழக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதை அவரிடத்தில் எடுத்துச்சொல்லி பரிகாரம் காண வேண்டி வந்தோம். அவர் தமிழ் நாட்டின் முதல்வராக இருந்த அந்த நேரத்தில் வாசலில் பெரிய பெரிய பிரமுகர்கள், வி.ஐ.பிஸ், அரசியல் தலைவர்கள், முன்னாள் அமைச்சர்கள் எல்லாம் காத்திருந்தார்கள். எங்களுடைய விசிட்டிங் சீட்டை உள்ளே கொடுத்தனுப்பினோம். அவர் அதைப் பார்த்ததும் சொல்லிய முதல் வார்த்தை 'அந்த வாத்தியார்களைக் கூப்பிடுங்கள்' என்பதாகும். நாங்கள் உடனே உள்ளே போனோம். உள்ளே போனதும் பேசுவதற்கு முன்னதாக "முதலாவதாக நீங்கள் உட்காருங்கள்" என்று அவர் வற்புறுத்தினார். நாங்கள் பய பக்தியோடு நின்றுகொண்டிருந்தோம். உட்கார்ந்தால்தான் பேசுவேன் என்று கண்டிப்பாகச் சொன்னார். உட்கார்ந்த உடன் என்ன விஷயமாக வந்திருக்கிறீர்கள் என்று மிக ஆவலாகக் கேட்டார். ஆசிரிய மாணவர் விகிதாசாரம் பற்றி என்று சொன்னோம். அப்படிச் சொன்னதும் ஆசிரியர் மாணவர் விகிதாசாரம் பற்றி அவருக்குப் புரியவில்லை. அவர் உடனே "எனக்குப் புரியவில்லை" என்று சொன்னார். தனக்குப் புரியவில்லை என்பதை வெளியில் சொல்லுவதற்கே அச்சப்படுகிற காலம் இது. வருகிறவர்களைச் சரியாக வரவேற்கக்கூட மாட்டார்கள் என்ற நிலைமைகூட சில பகுதியிலே இருக்கிறது. இருக்கை கூட இருக்காது. ஆனால் எங்களை அந்த நல்ல உள்ளம் படைத்த பெரும் தலைவர் காமராசர் அவர்கள் வரவேற்றார், இருக்கை அளித்ததோடுகூட அந்த விகிதாசாரம் விளங்கவில்லை என்றும் சொன்னார். 'எனக்கு விளங்க வையுங்கள்' என்று அழுத்தந்திருத்தமாகக் கேட்டார். ஆசிரியர் மாணவர் விகிதம் என்றால் என்ன என்பதைப்பற்றியும், அரசு ஆணையின் விளைவாக எப்படி 15 ஆயிரம் பேர் வேலை இழக்கக்கூடிய நிலை ஏற்பட்டதென்றும் சொன்னோம். 'நாட்டிலே வேலையில்லாமலிருப்பவர்களுக்கெல்லாம் வேலை அளிக்க





வேண்டுமென்று நான் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறேன். வேலையில் இருக்கிறவர்களை வெளியே அனுப்புகின்ற முட்டாள் தனமான ஆணையை வெளியிட்டது யார்?" என்று கேட்டார். நாங்கள் உடனே கல்வி அமைச்சர்தான் வெளியிட்டார் என்று சொன்னோம். கல்விச் செயலாளரை அழைத்து வரச் சொல்லி அன்றே அந்த இடத்திலேயே 35 மாணவருக்கு மேல் ஒரு வகுப்பில் இருக்கக் கூடாது என்றும், 36 மாணவர்கள் இருந்தால் அதை இரண்டாகப் பிரித்து ஒரு ஆசிரியர் கூடுதலாகப் போட்டு, அதாவது 18 மாணவர்கட்கு ஒரு ஆசிரியர் என்ற அளவிலே திட்டமிட்டு, அந்த இடத்திலேயே நிறைவேற்றி உத்தரவு போடு என்று சொல்லி உத்தரவையும் போட்டார். அந்த நிமிடத்திலேயே ஆணை பிறப்பிக்கப்பட்டு எங்களுடைய கையில் 600 எண்ணுடைய கல்வித் துறை அரசாணையை கொடுத்தனுப்பினார். அதை ஆசிரியர் சமுதாயம் என்றும் மறக்காது, மறக்கவும் கூடாது. அவர் காட்சிக்கு எளியவர். அடித்தளத்திலிருப்பவர்களுக்கெல்லாம் தன்னால் ஆன உதவிகளைச் செய்தவர். ஏழை எளிய மாணவர்களுக்கு மதிய உணவுத் திட்டத்தைத் துணிந்து செயல்படுத்தியவர். ஏழை மாணவர்கள் என்றும் பணக்கார மாணவர்கள் என்றும் வித்தியாசம் இருக்கக்கூடாது என்ற நல்ல எண்ணத்தில் சீருடைத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தவர். பள்ளி சீரமைப்புத் திட்டத்தைக் கொண்டு வந்தவர். கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழைய மொழி. பள்ளியில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது காமராசரின் புதிய மொழி! இந்த நேரத்தில் பாரதியார் பாடல் ஒன்றை நான் நினைவு கூர்வது மிகப் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

> "வீடுதோறும் கலையின் விளக்கம்
> வீதிதோறும் இரண்டொரு பள்ளி
> நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
> நகர்களெங்கும் பலப்பல பள்ளி"

என்று பாரதியார் கூறியிருக்கிறார். அதே போல வீதிகள் தோறும் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் பள்ளிக்கூடம் அமைக்காவிட்டாலும்கூட, முதன் முதலாக பள்ளிக்கூடங்கள் இல்லாமலிருந்த இடங்களிலெல்லாம் பள்ளிக் கூடங்களைத் தோற்றுவித்தவர். அந்த மாபெரும் தலைவர் பெயரிலே இந்த மதுரைப் பல்கலைக் கழகம் அமைய இருப்பது ஆசிரிய சமுதாயத்துக்கு மெத்த மகிழ்ச்சியளிக்கக்கூடிய ஒன்று. மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய பிறந்த நாளையொட்டி இந்தத் தகவலை அறிவித்த அன்றைக்கே ஆசிரியர் சமுதாயத்தின், ஆசிரியர் மன்றத்தின் சார்பில் அதை வரவேற்றதோடு, ஒரு அறிக்கை கூட கொடுத்திருந்தேன்.

அதில் நான் 'இந்த பல்கலைக் கழகத்திற்கு பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் பெயரை வைப்பது குறித்து, எங்கள் ஆசிரியர் மன்றம் பெருமகிழ்ச்சியடைகிறது. அவர் கல்லூரிக்குச் செல்லாதவராக இருந்தாலும், அவர் செய்த தியாகங்களை எல்லாம் நினைத்துப் பார்த்து, அப்பல்கலைக் கழகத்திற்கு அவர் பெயரிடுவது குறித்து மகிழ்ச்சியடைகிறோம், என்று சொல்லி அதே சமயத்தில் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு 'அறிஞர் அண்ணா பல்கலைக் கழகம்' என்று பெயரிட வேண்டுமென்ற ஒரு வேண்டுகோளையும் அதில் விடுத்திருந்தேன்.

(பிற்பகல் 5-20)

அதற்குப் பின்னாலே இங்கே தோற்றுவிக்கப்பட்டிருக்கிற தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்திற்குப் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரை வைத்திருக்கிறார்கள். அதற்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் என்றாலும், இங்கே சென்னையிலே வந்திறங்கியதும், அனைவர் கண்ணிலே தென்படுகிற சென்னை பல்கலைக் கழகத்திற்கும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரை வைக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். காமராஜ் பல்கலைக் கழகம் என்று பெயரிடுவது தமிழ் நாடும், தமிழர்களும், தமிழ் மொழியிலே ஆர்வம் உடையவர்களும் வரவேற்க வேண்டிய ஒன்றாகும். ஆனாலும் ஒன்றை மட்டும் நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன். காமராஜ் பல்கலைக் கழகம் என்பதற்குப் பதிலாக 'காமராசர் பல்கலைக் கழகம்' என்று இறுதியிலே 'ச' 'ர்' சேர்த்து தமிழிலே காமராசர் என்று வழங்கிட வழிவகை செய்தால், நன்றாக இருக்கும் என்ற எண்ணத்தை வெளியிட்டு, மதுரைப் பல்கலைக் கழகத்திற்குப் பெருந் தலைவர் காமராசர் பெயரை வைத்ததை வரவேற்று வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

*திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுரைப் பல்கலைக் கழகத்தின் பெயரை மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் என்று திருத்தம் செய்வதற்கான சட்டமுன்வடிவை யொட்டி இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சில கருத்துக்களை வெளியிட்டார்கள். அதிலும் குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வகாப் அவர்கள் வெளியிட்ட கருத்தை யொட்டி சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். இப்படி தலைவர் பெயரை வைப்பதற்கு ஏதோ ஒரு முகாமிலிருந்து எதிர்ப்பு வருகிறது, ஆகவே இதை அரசு மறுபரிசிலனை செய்ய வேண்டாமா என்று கேட்டுக்கொண்டார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த



நாட்டிற்காக தன் உயிரையே கொடுத்த அண்ணல் மகாத்மா காந்தியடிகளைக் கூட அவர் சுடப்படுவதற்கு முன்பு ஒரு வாரத்திற்கு முன்பாக கூட "ஒழிக" என்ற கோஷம் போட்ட மக்களையுடைய நாடு இந்த நாடு. இதனால் மகாத்மா காந்தி மக்களுடைய அதிருப்தியைச் சம்பாதித்துக் கொண்டவர் என்று பொருள் ஆகிவிடாது. அந்த அடிப்படையிலே இங்கே தமிழகமே இந்தியாவே இப் பெயர் மாற்றத்தை எதிர்க்கிறது என்ற ஒரு பொருளை உருவாக்க முனைவது தவறான ஒன்றாகும் என்பதை மிகப் பணிவாக இந்த அவையிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அந்தந்த இடத்தையொட்டித்தான் இப்படிப்பட்ட நிலையங்களுக்குப் பெயர் வைக்க வேண்டுமென்றார்கள். இந்தியாவிலும், தமிழ் நாட்டிலும் பல தலைவர்கள் மிகுந்த மரியாதைக்கும், அன்பிற்கும் உரியவர்களாக மக்களிடையே விளங்கி வருகிறார்கள். இது இன்றையதினம் சாதாரண காட்சியாக மாறியிருக்கிறது. ஆங்கிலத்திலே இதை "ஹீரோ ஒர்ஷிப்" (hero worship) என்று சொல்லுவார்கள். நமது நாட்டிலே பெருந் தலைவர் காமராஜரைப் போன்றவர்கள் மக்களிடையே இத்தகைய இடத்தைப் பெற்றுக்கொண்டிருப்பது இயற்கைக்குப் புறம்பானதல்ல. எனவே அவர் பெயராலே பல்கலைக் கழகத்தை நடத்துவதும், முரணான ஒன்றல்ல. முற்போக்கு நாடான ரஷ்யாவிலேகூட லுமும்பா யூனிவர்சிட்டி என்று தனி மனிதர் பெயராலே ஒரு பல்கலைக் கழகமே வைத்திருக்கிறார்கள். அமெரிக்காவிலேகூட முன்னாள் ஜனாதிபதி கென்னடி இறந்த பிறகு, அங்கேயுள்ள இன்டர்நேஷனல் ஏர்போர்ட்டுக்கு, கேப் கென்னடி ஏர்போர்ட் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் பெயர் "ஹீரோ ஒர்ஷிப்" அல்ல. மிகப் பெரிய தியாகம் செய்தவர்களுக்கு மரியாதை அளிக்கிற வகையிலே, மதிப்பளிக்கிற வகையிலே இதை நாம் செய்கிறோம். அந்த வகையிலே இன்றைய தினம் காமராஜர் அவர்களுடைய பெயராலே இந்தப் பல்கலைக் கழகம் விளங்கப் போகிறது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், இலவசக் கல்வியை தலைவர் காமராஜர் அவர்கள் அளித்ததை நாடே அறியும். தலைவர் காமராஜர் அவர்கள் செய்த நல்ல பணிகளிலேயே மிக அதிகமாக என்னைக் கவர்ந்தது, தமிழகத்து நிர்வாகத்திலே 'ரெட்-டேப்பிசம்' (red-tapism) என்று சொல்லப்படுகிற 'சிகப்பு நாடா' முறையை அகற்ற அரசு கால்கோள் நாட்டியதுதான். இதிலே யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. 'ரெட்-டேபிசம்' ஒழிவதற்கு முன்னோடியாக இருந்து செயல்பட்டவர் திரு. காமராஜர் அவர்கள். அந்தப் பணியில் அவரைவிட அதிகமாக் அதைச் செயல்படுத்த வேண்டும் என்று அவருக்குப் பிறகு வந்த ஆட்சியாளர்களும்

தற்போதைய ஆட்சியினரும் போட்டியிடுகிறார்கள். அந்த வகையிலே அவர் தமிழக நிர்வாகத்திற்கு ஒரு வழிகாட்டியாக அமைந்திருக்கிறார். அப்படிப் பட்ட உயர்ந்த தலைவருடைய பெயரை, அவருடைய புகழை நிலைநாட்டுகிற வகையிலே மதுரைப் பல்கலைக் கழகத்தை, "மதுரை-காமராஜ் பல்கலைக் கழகம்" என்று மாற்றுகிற வகையிலே இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன்.

இந்த நேரத்தில் இன்னொரு கருத்தையும் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். மதுரை என்கிற பிராந்திய உணர்ச்சியின் காரணமாக மதுரை என்ற சொல்லையும் சேர்க்க வேண்டிய நிலைக்கு அரசு ஆளாக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். தமிழகத்தின் உள்ளேயே பிராந்திய உணர்ச்சி வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதற்கு இது எடுத்துக்காட்டு. ஆங்காங்குள்ள மக்கள், தங்கள் ஊரை மறக்க விரும்புவதில்லை. என்றாலும் இது நல்ல ஆரோக்கிய மான மனப்பான்மை இல்லை. எப்படியோ இந்த உணர்வு இருக்கிறது என்பது தான் உண்மை. இந்த உணர்வை தமிழகத்திலே வளர்ப்போமேயானால், நல்லதில் போய் முடியாது. நான் ஒரு முறை பாடம் சொல்லிக் கொண் டிருக்கும்போது, மாணவர்கள் வகுப்பிலே கேட்டார்கள் "ஏன் சார், நாம் சோழ நாட்டில்தானே. இருக்கிறோம், நாம் ஏன் தனியாகப் பிரிந்து போய் விடக்கூடாது?" என்று கேட்டார்கள். அப்போது தெலிங்கானா போராட்டம் நடந்துகொண்டிருந்த நேரம். விளையாட்டாகச் சொன்னார்களோ, வினையாகச் சொன்னார்களோ, எனக்குத் தெரியாது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதற்கு நீங்கள் என்ன சொன்னீர்கள்?

திரு. சி. சா. லெட்சுமிகாந்தன் : உடனே அதற்கு மறுத்து பதில் தெரி வித்து விட்டேன். எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், தமிழகத்திற்குள் ளேயே இப்படிப் பிராந்திய, உணர்வுகள் வளரக்கூடாது, உணர்வுகளை வளர்க்க வும் கூடாது என்று இந்த அரசையும், பல்வேறு அரசியல் கட்சிகளையும் இந்தச் சமயத்திலே கேட்டுக்கொண்டு, மதுரைப் பல்கலைக் கழகம், காமராஜர் பல்கலைக் கழகம்-என்று மாறுவதற்கான சட்ட முன்வடிவை ஆசிரியர்கள்-பட்டதாரிகள் முற்போக்கு முன்னணியின் சார்பாக மனதார உளமார வரவேற்றுப் பாராட்டு கிறேன். இந்த வாய்ப்புக் கிடைத்ததற்காக நன்றி தெரிவித்து, விடைபெறு கிறேன்.

புலவர் புலமைப்பித்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, வள்ளுவப் பெருந்தகை மிக அழகாகச் சொன்னார்,

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்".



மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு மதிப்பிற்குரிய தலைவர் காமராஜர் அவர் களுடைய பெயரை புரட்சித் தலைவருடைய தலைமையிலே இருக்கிற அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு வைப்பதற்கு முன் வந்திருக்கிறது என்பது "தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்" என்று சொன்னதைப் போல் எல்லோரையும் போற்றிப் பாராட்டு கிற பண்பாட்டைக் கற்றுத் தந்த பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு, அவருடைய பண்பாட்டுக்கு இவர்கள் சொந்தக்காரர்களாக இருந்து கொண் டிருக்கிறார்கள் என்று எடுத்துக்காட்டுவதற்குரிய சரியான சான்றாகும் என்று சொல்லிக்கொள்வதிலே மகிழ்ச்சியடைகிறேன்.

யாரையும் காய்தல், உவத்தல் இல்லாமல் கட்சி மாச்சரியங்களைக் கடந்து அரசியல் மதில் சுவர்களைத் தாண்டிக்கூட மதிக்க வேண்டியவர்களை மதிக்க வேண்டும் என்கிற ஒரு அருமையான நாகரீகத்தை இந்த நாட்டுக்குக் கற்றுத் தந்தவர் பெரும் போராசானாகிய பேரறிஞர் அண்ணா அவர்கள். அந்த அண்ணா வினுடைய வழியில் அடி ஒற்றி நடக்கிறவர்கள் பெருந்தலைவர் காமராஜர் பெயரால் மதுரையிலே உள்ள பல்கலைக் கழகத்தை உருவாக்குவது என்பது அந்தப் பண்பாட்டை நாங்கள் மறந்துவிடவில்லை—அந்தப் பாட்டையை நாங்கள் மறந்துவிடவில்லை—என்பதை எடுத்துக்காட்ட இது ஒரு மாபெரும் ஆதாரமாகும்.

எனக்கே கூட காமராஜருடைய பெயரை அந்தப் பல்கலைக் கழகத்திற்குத் திடீரென்று வைத்தபோது, உள்ளுக்குள்ளேயே சங்கடம் இருந்தது. அந்தச் சங்கடத்திற்குக் காரணம், காமராஜருடைய பெயரை வைத்து விட்டார்களே என்பதல்ல. கன்னித் தமிழுக்கு நற்றாயாக பொதிகை இருந்தது. செவிலித் தாயாக மதுரை இருந்தது. "மதுரை மூதூர் அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே" என்ற வாசகங்கள் விளையாடிக் கொண்டிருந்த மதுரை என்னும் அழகு தமிழ்ப் பெயர் எங்கே மறைந்துவிடுமோ என்கின்ற ஆதங்கம் எனக்குக் காமராஜரைக் காட்டிலும் காமத்தாலும், காதலாலும் தமிழ் மீது எனக்கு இருந்த காரணத்தால் ஏற்பட்டதாகும். எனவேதான் மதுரை என்கின்ற மூதூர் பெயர் போய்விடுமோ என்ற ஆதங்கம் எனக்கு இருந்தது.

சின்னத் தீமைகள் உருவாவதே கூட பல நன்மைகளுக்குக் கால்கோள் விழா நடத்துகின்றன என்பதற்கு இது ஒரு உதாரணம். ஒரு எதிர்ப்பின் காரணமாக பழைய மதுரையின் பெயரும் இருக்கிறது, காமராஜரின் பெயரும் இணைகிறது. "கம்புக் காட்டுக்கு களையெடுக்க போனதுமாயிற்று, தம்பிக்குப் பெண் பார்க்க போனதும் ஆயிற்று" என்பதைப் போல் மதுரையும் பிழைத்தது, காமராஜரின் பெயரும் நிலைத்தது. ஆண் பிறக்குமா, பெண்

பிறக்குமா என்று போட்டா போட்டி கொண்டிருக்கிற நேரத்தில், ஆண்தான் பிறக்கும் என்று ஒரு பிரிவும், பெண்தான் பிறக்கும் என்று இன்னொரு பிரிவும் சொல்லிக் கொண்டிருக்க, ஒரு இரட்டைக் குழந்தை பிறந்து அதில் ஒன்று ஆணும், மற்றொன்று பெண்ணாகவும் இருந்தால் எப்படி மகிழ்ச்சியை உருவாக்குமோ அது போல் ஆயிற்று. அதைப் போல என்னுடைய ஆதங்கம், மதுரை என்ற பெயர் போய்விடுகிறதே என்ற ஆதங்கமும் மாறியது, அண்ணாவின் பண்பாட்டை நிலைநாட்டி பெருந்தலைவர் காமராஜரின் பெயரை வைக்க வேண்டுமென்ற ஆதங்கமும் நிறைவேறியது. ஆகவே இந்த இரட்டைக் குழந்தைகள் பிறந்திருக்கிற நேரத்தில் இந்தக் குழந்தைகளை இரட்டை இலையிலே வைத்து அதையும் ஒரு தொட்டிலிலே வைத்துப் பாராட்டி, சீராட்ட வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோளாகும். (சிரிப்பு)

அருமைத் தலைவர் காமராஜரைப்பற்றி நான் அதிகமாகப் பேசியதில்லை. இப்போது பேச வாய்ப்புக் கிடைத்தது என்ற காரணத்தால் பேசுகிறேன். காரணம், அண்ணாவின் விழாவிலே மற்றவர்களைப் பேச அழைக்கிறோம். ஆனால் என்ன காரணத்தாலோ தலைவர் காமராஜர் அவர்களுடைய விழாவிலே எங்களையெல்லாம் அழைப்பதில்லை. அதற்குரிய வாய்ப்பை இன்றையதினம் மேலவைத் தலைவர் அவர்கள் தந்திருக்கிறார்கள். இந்த வகையிலே அவர் ஒரு பாலமாக இருக்கிறார்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** தடையாக இருக்கிறேனா? பாலமாக இருக்கிறேனா?

**புலவர் புலமைப்பித்தன்:** பாலமாகத் திகழ்கிறீர்கள் என்றுதான் குறிப்பிட்டேன். அப்படிப்பட்ட காமராஜரைப்பற்றிப் பேசுகிறபோது நான் என்ன நினைத்துப் பார்க்கிறேன் என்றால், "கடல் மட்டத்திற்கு கீழே இருந்து வானம் வரை ஒருவன் உயர முடியும்" என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகத் தலைவர் காமராஜர் அவர்கள் விளங்கினார்கள் என்பதுதான். ஒரு நடுத்தரக் குடும்பத்திலே இருந்து வந்து, படித்த பட்டதாரிகளினுடைய பாரம்பரையிலே இருந்து, நாட்டினுடைய ஆளப்பிறந்தவர்களை உருவாக்கியவராக மாறுவது என்பது மிக எளிமையான காரியம் அல்ல. மலைமேலே இருந்து யானையைப் பார்க்கலாம், ஆனால் தூரத்திலேயிருந்து பார்ப்பது எவ்வளவு அருமையோ அது போல, தொய்வான குடும்பத்திலே, பொருளாதாரத்திலே தொய்வான குடும்பத்தில் பிறந்து, வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள் என்று சொல்லிக்கொள்ள முடியாத குடும்பத்திலே பிறந்து இந்த





அளவுக்கு உயர்ந்திருக்கிறார். அவரைக் கல்லாதவர் என்று சொல்லியிருந்தாலும், கல்லாதவரும் தனி நல்லவர், என்ற அளவுக்கு பாராட்டு பெறுகின்ற வண்ணமாக அவர் வாழ்ந்தார். நாட்டினுடைய முடி சூடா மன்னனாக இருந்து, தலைமை தாங்குபவர்களை எல்லாம் உருவாக்கித் தருகின்ற பொறுப்புக்கு உயர்த்திக் கொள்ள முடிந்திருக்கின்றது என்றால், அதற்குக் காரணம் அவர்களிடம் உள்ள முயற்சியும் தளரா உழைப்பும்தான் என்று சொல்லிக்கொள்வேன். திருக்குறளில என்ன ஆள்வினை உடைமை என்ற அதிகாரத்திற்குப் என்னைப் பொருள் எழுதச் சொன்னால், அதற்குப் பெயர் அதிகாரத்திற்கு என்னை பொருள் எழுதச் சொன்னால், அதற்குப் பெயர் காமராஜ் அவர்கள் என்றுதான் எழுதுவேன். அப்படிப்பட்ட முயற்சியும் உழைப்பும் கொண்டு இந்த நாட்டிலே உன்னத பதவியில் பலரை உயர்த்துகின்ற அளவிலே ஆற்றல் பெற்றவராக அவர் இருந்தார் என்று சொன்னால், அதைப் பற்றித் தமிழகம் பெருமையடைய வேண்டும். அதைத் தமிழ் மக்கள் பெற்ற பெருமை என்று நான் கருதுகிறேன். நாட்டிலே ஓடுகின்ற நதிகள், பாடி வந்துகொண்டிருக்கிற காற்று, உயர்ந்து விளங்குகின்ற மலைகள் இவைகள் எல்லாம் எப்படி நாட்டிற்குப் பொது உடைமைச் சொத்தாக இருக்கின்றதோ, அதே போல தந்தை பெரியாரும், பெருந்தலைவர் காமராஜர் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் மற்றும் என்னாலே சொல்ல விடுபட்டவர்களும் இந்த நாட்டிற்காகப் பாடுபட்டவர்கள் அத்தனை பேரும் தென்றலைப் போல, மலைகளைப் போல, நதிகளைப் போல இந்த நாட்டிற்குச் சொந்தமானவர்கள். அவர்களுக்கு எங்கே வேண்டுமானாலும் பெயர் இருக்கலாம். இந்த நாடு ஒருமைப்பாட்டிற்கு நிலையான உயிரோட்டம் தருகின்ற ஒரு நாடாக இருக்கிறது என்பது உண்மையாக இருக்குமானால், டெல்லியிலே இருக்கின்ற பல்கலைக் கழகத்திற்கு காமராஜருடைய பெயரை வைக்க வேண்டும். இங்கே அருமை நண்பர் மாண்புமிகு அங்கத்தினர் திரு. வ. ஆர். தாமோதரன் அவர்கள், புரியுமே தவிர, ஆங்கிலம் தெரியாது. அப்படி இருந்தாலும் ஓரளவுக்குப் புரிந்துகொள்வேன், ஒரு பகுத்தறிவு வாதி உணர்ச்சிவசப்படக்கூடிய நிலைமையில் இருக்கக்கூடாது என்ற கருத்தைச் சொன்னார்கள். பெயர்களை மாற்றுவது என்பது தேவையா என்று கேட்டார்கள். நான் பெரும்பாலும் அவருக்குப் பதில் சொல்வதுகூட ஒரு அதிகப்பிரசங்கித் தனமாக இருக்குமோ என்ன் கருதுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் மொழியில் சொல்வதென்றால், அவர் கட்டி முடிக்கப்பட்ட கோபுரம், நான் கொட்டிக் கிடக்கின்ற செங்கற்குவியல் என்றுதான் சொல்ல வேண்டும். அந்த அளவுக்கு உயராது இருப்பவன் என்பதை நான் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். நான் அவர்களுக்கு ஒன்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். சுயமரியாதை

(புலவர் புலமைபித்தன்) [1978 செப்டம்பர் 13

இந்த பகுத்தறிவுக்குப் புறம்பானது அல்ல. ஐந்தாயிரம் மைலுக்கு அப்பால் இருந்து வந்து ஆள வந்தவர்களுடைய பெயர்கள் இந்த நாட்டிலே இருக்க வேண்டும் என்று நினைப்பது தேவையில்லாத ஒன்று என்று நான் கருதுகிறேன். அது என்னுடைய மனதிலே முற்றுகைப்போர் நடத்துவதாக இருக்கும் என்று நான் கருதுவதினாலே சொல்லுகிறேன். இடையிலே வந்து புகுந்துவிட்ட காரணத்தால், பெயர்கள் பழமையான பெயர்களாக மாறியிருக்கின்றன. அதனால் பெயர்களை மாற்றுவது என்பது மிகத் தேவையானது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே என்று சொல்லி, அந்தப் பெயரை இடவேண்டும் என்று கேட்ட சங்கரலிங்கனார் அவர்கள் மாண்டுபோனார்கள். அவர்கள் எல்லாம் பெயரை மாற்றக்கூடாது என்று நினைத்தார்களா? பேரறிஞர் அண்ணா அவர்கள் வந்த பின்னாலே, அவருடைய அந்திம காலத்திலே அவர் சொன்னார்கள். தமிழ் மக்கள் வாழும் நாட்டிற்குத் தமிழ்நாடு என்று பெயரிட இந்த உடல்நிலை இடையூறாக இருக்கும் என்று சொன்னால், என்னுடைய இந்த உடல் இருந்தும் பயன் இல்லை என்று சொன்னார்கள். 'செந்தமிழ் நாடென்னும் போதினிலே, இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்கின்ற மன உணர்ச்சியோடு பேரறிஞர் அண்ணா அவர்கள் பாடுபட்டதைப் பார்க்கின்றபோது, பெயர் மாற்றங்கள் தேவை என்றுதான் தெரிகிறது. அது மட்டுமல்ல, செயல் மாற்றங்களும் தேவை என்று கருதுகின்ற காரணத்தினாலே, அந்தப் பெயர் மாற்றம் தேவை என்று நான் கருதுகிறேன். மதுரை என்ற பெயர் போகாமல், அந்த சங்கம் வைத்த, தமிழ் வளர்த்த மதுரை மன்னனுடைய பெயர் போகாமல் மதுரையும் நிலைத்து, நம்முடைய காமராஜர் அவர்கள் பெயரும் நிலைத்து இருக்குமளவுக்கு இரண்டு பெயரையும் இணைத்திருக்கின்றது என்பது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. மாண்புமிகு அங்கத்தினர் திரு. மீனாட்சிசுந்தரம் சொன்னது போல, காமராஜ் என்று இல்லாமல், அது காமராஜர் என்றே இருக்ுமானால், அது மகிழ்ச்சி ஊட்டுவதாக இருக்கும். போயும் போயும் தமிழ் வளர்த்த மதுரையிலே உள்ள பல்கலைக்கழகத்திற்கு ஏன் காமராஜர் பெயர் வைக்க வேண்டும் என்று எண்ணாமல், அவர் பெயரை வைத்திருப்பதற்கு நமது தமிழக அமைச்சர்கள் சார்பில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த உணர்ச்சியைக்கூட, 'மாற்றான் தோட்டத்து மல்லிகையானாலும் மணம் உண்டு' என்று கருதுகிறேன். இது நமது பேரறிஞர் அண்ணா அவர்களின் வாய்மொழி. அவர்களின் காலடியில் என்னுடைய நன்றியையும் காணிக்கையாக வைத்து, என்னுடைய உரையை முடித்துக் கொண்டு அமைகிறேன், வணக்கம்.



1978 செப்டம்பர் 13]

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை நான் மிக்க மன மகிழ்ச்சியோடு ஆதரித்துப் பேச முன் வருகின்றேன். காமராஜர் அவர்கள் நாட்டிலே சாதாரணமான மனிதனாகப் பிறந்து, பெரிய பொறுப்புக்களை வகித்து, தன்னுடைய வாழ்நாளில் ஒரு பெரிய பல்கலைக்கழகத்திலே படித்தவர் போன்ற அனுபவத்தையெல்லாம் வாழ்நாளிலே கற்று ஒரு பெரிய மேதையாகத் திகழ்ந்தார்கள். அப்படிப் பட்டவர்களுடைய பெயரை இந்தப் பல்கலைக் கழகத்திற்கு வைக்கவேண்டு மென்பதிலே கருத்து வேறுபாடு இருக்க முடியாது. மதுரை, தமிழ் சங்கத்தை வளர்த்த நகரம். மதுரை இல்லாமல் அவர் பெயரைச் சேர்ப்பது தமிழக அரசுக்குச் சிறப்பாக அமையாது என்றும், தமிழுக்கும் மதுரைக்கும் அவர் சம்பந்தப்பட்டவர் என்பதாலும், மதுரையினுடைய பெயரையும் சேர்த்திருக் கிறார்கள். இந்தப் பெயர் வைக்கின்ற பிரச்சினை பொதுக்கூட்டங்களிலே வந்தது. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் திருப்பூர் வந்தபோதுகூட ஒரு விண்ணப்பத்தைத் தந்தார்கள். மதுரைக்கும் தமிழுக்கும் சொந்தம் உண்டு. அவர் பெயரைச் சேர்ப்பதால், மதுரை நகருக்கும் பெருமைதானே என்று கேள்வி எழுப்பாமல் இருக்கிறோம். அப்படி நாங்கள் கேள்வி எழுப்பாமல் இருந்ததால், மதுரையையும், தென்பாண்டி மாநிலத்திலே பிறந்த தலைவர் காமராஜர் அவர்கள் பெயரையும் இணைத்து வைத்திருக்கிறார்கள்.

காமராஜ் அவர்களின் ஆற்றலைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். பெரிய பெரிய அறிஞர்கள் எல்லாம், பட்டம் பெற்றவர்களெல்லாம், நுணுக்கம் பெற்றவர்களெல்லாம் தடுமாறும் ஒரு பிரச்சினைக்கு அவர்கள் தீர்வு கண்டார்கள். பாய்லர் தொழிற்சாலை திருவெறும்பூரிலே வருவதற்கு அவர்தான் காரணம். வெளிநாட்டிலே இருந்து வந்த நிபுணர்கள் எல்லாம் வந்து பார்த்துவிட்டு, எந்த இடமும் சரியாக இல்லை என்று சொல்லிவிட்டார்கள். திருவனந்தபுரம் வரை சென்றார்கள். நாடு பூராவும் சுற்றிப்பார்த்துவிட்டு கடைசியாக பாய்லர் தொழிற்சாலை அமைக்க இடம் அமையவில்லை என்று பேசிக்கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் தலைவர் காமராஜ் அவர்களும் திரு. வெங்கட்டராமன் அவர்களும் அந்தப் பேச்சு வார்த்தைகளிலே கலந்து கொண்டிருந்தார்கள். தலைவர் காமராஜ் அவர்கள், அவர்கள் என்ன பேசிக் கொள்கின்றார்கள் என்று கேட்டார்கள். பாய்லர் தொழிற்சாலையை எங்கே நிர்மாணம் செய்வது என்ற பிரச்சினையைப்பற்றிப் பேச்சு வார்த்தைகள் நடக்கின்றன என்று சொன்னார்கள். அப்போது அவர், தமிழ் நாட்டிற்குச் சென்றார்களா என்று கேட்டார்கள். எங்கெங்கே சென்றார்கள் என்று கேட்டார்கள். அப்போது அவர்கள் மகாபலிபுரம், காஞ்சிபுரம், மதுரை ஆகிய

இடங்களுக்கெல்லாம் சென்றதாகச் சொல்லியிருக்கிறார்கள். ராமேஸ்வரம்கூட சென்றதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த இந்த இடங்களுக்கெல்லாம் நாங்கள் சென்றோம், இடம் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். அதற்கு காமராஜ் அவர்கள் உங்களுக்கு எந்த மாதிரி இடம் வேண்டும் என்று கேட்டார்கள். ஆயிரம் ஏக்கர் பரப்புள்ள இடம், சமமான நிலமுள்ள பிரதேசமாகத் தேவைப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்போது கூட இருந்த திரு. வெங்கட்டராமன் அவர்களைத் திரும்பிப் பார்த்திருக்கிறார்கள். அவர் அப்போது தடுமாற்றம் அடைந்திருக்கிறார்கள். அரசு இயந்திரத்திலே இருப்பவர்கள் அப்படி ஒரு இடம் இருப்பதாக யாரும் சொல்லவில்லை. அப்படி ஒரு இடம் இருப்பதை பூகோளம் கற்றவர்கள்கூட சொல்லவில்லை. ஆனால் தலைவர் காமராஜர் அவர்கள் எவ்வளவு சரியாகத் தமிழ்நாட்டை அளந்து வைத்திருந்தார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். தமிழ்நாடு அரசு அந்த நிலத்தைத் தரும் என்று சொன்னார்கள். திரு. வெங்கட்டராமன் அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவர் திருச்சி பாதையில் தஞ்சை இருக்கக்கூடிய நிலத்தை அளந்து எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். எவ்வளவு துல்லியமாக காமராஜ் அவர்கள் அந்தப் பகுதியைப் பற்றி நிச்சயமாகச் சொன்னார்கள் என்பதைப்பற்றி நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்களுக்குக்கூட சந்தேகமாக இருந்தது. ஆனால், அந்தத் தொழிற்சாலை அங்கே நிறுவப்பட்டது. அது இன்றைக்கு ஆசியாவிலேயே உற்பத்தித் துறையிலே, லாபம் கொடுக்கக் கூடியதாக இருக்கின்றது. திருவனந்தபுரத்திலே ஏற்படுத்த ஒரு புரொபோசல் இருந்தது. கேரளத்துக்காரர்கள் எல்லாம் இவரிடத்திலே வேகமாக விவகாரம் ஆக்க வேண்டும் என்று வந்தார்கள். அவர்களிடத்திலே இவர் கேட்டார்.

(பிற்பகல் 5-40)

உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டார்கள். அவர்கள் 500 அல்லது ஆயிரம் பேருக்கு வேலை வேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு சம்மதிக்கிறேன் என்று சொல்லி, அவ்வளவு பெரியதொழிற்சாலையை சாதாரண மனிதர் தமது மாநிலத்தில் உருவாக்கினார். அனுபவம் ஒரு பல்கலைக் கழகப் படிப்பைத் தந்திருக்கிறது. அவ்வளவு ஆற்றல் மிக்கவர். அறிஞர் அண்ணா அவர்களின் பெயரை வைப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. திருப்பதியில் வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகம் என்றிருக்கிறது. அது கடவுளின் பெயர். அதைப்பற்றி விமர்சிக்க முடியாது. அதிலும் ஆச்சரியமில்லை. பெரும்பெரும் படிப்பாளிகளின் பெயர்களை—சர். சி. வி. ராமன் போன்றவர்களின் பெயர்களை வைப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால், சாதாரண



மானவர், கல்லூரிக்குக் காலடி எடுத்து வைக்காதவர், தமிழ் நாட்டுத் தலைவராக, இந்தியாவிலேயே சிறப்புபெற்ற தலைவராக விளங்கினார். காமராஜர் என்ற வார்த்தை உலகத்திலே உள்ள ஆங்கில அகராதியில் சேர்க்கப் பட்டிருக்கிறது. காமராஜர் என்றால் பெரிய அரசு பதவியில் இருந்து, தன் கட்சிப் பணிக்காகத் தன்னைத் தயார்படுத்திக்கொள்ளக்கூடிய செயல் என்று அகராதியில் சேர்க்கப்பட்டிருப்பதாக சகோதரர் ஒருவர் சொன்னார்.

**திரு. க. அறிவழகன் :** யார் அந்தச் சகோதரர் ?

**திரு. செ. முத்துசாமி :** ஒரு முறை பேசிக் கொண்டிருந்தபோது சொன்னார். தவறிருந்தால் திருத்திக்கொள்கிறேன். காமராஜ் பிளான் வந்ததைப்பற்றித்தான் சொன்னார்கள். அதிலே ஏதாவது தவறிருந்தால் திருத்திக்கொள்கிறேன். காமராஜ் பிளான் கொண்டு வந்து, எந்தப் பெரிய பதவியில் இருந்தாலும் பதவிவிலகத் தயாராக இருக்க வேண்டும், கட்சியை உயர்த்த எவ்வளவு பெரிய பொறுப்பில் இருந்தாலும் தயாராக இருக்க வேண்டும், மக்களுக்குச் சேவை செய்ய எப்போதும் தயாராக இருக்க வேண்டுமென்று அவர் வாழ்நாளில் செய்து காட்டினார். முதன் முதலில் சோஷலிச நாடுகளால் இந்தியாவிலிருந்து அழைக்கப்பட்டவர் காமராஜர் அவர்கள். அந்தச் சமயத்தில் தமிழ்நாட்டு உடையிலேயே—வேஷ்டியுடனும், அரைக்கை சட்டையுடனும் உலக நாடுகள் பூராவும் சுற்றி வந்த பெருமை அவரைச் சாரும். அவர் பெயரால் இன்றைக்கு ஒரு பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்பட இருக்கிறது. தலைவர்களின் பெயராலே பல்கலைக் கழகங்களை ஏற்படுத்திக் கொண்டிருப்பதைத் தவிர, இந்த அரசு என்ன சாதனை செய்ததென்று சொல்ல லாம். சாதனைகளை ஒரு பக்கம் செய்தாலும், பெயர் மாற்றங்களையும் மக்களின் அபிப்பிராயங்களுக்கு ஏற்றாற்போல் செய்ய வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது. ஒரு பக்கத்திலே நாம் பெயரை வைத்தாலும், இன்னொரு தலைவரின் பெயரை வைக்கக்கூடாதென்று பிரச்சினைகள் நாட்டிலே வருகின்றன. சமீபத்தில் பம்பாயில் அந்தப் பிரச்சினை வந்திருக்கிறது. இங்கே தலைவர் காமராஜர் அவர்கள் பெயராலே வந்துள்ள மாற்றத்தை விரும்பி, வரவேற்று, இந்த மசோதாவைப் பாராட்டி, அமைகிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு தலைவரவர்களே, மதுரைப் பல்கலைக் கழகத்தை, மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் என்று பெயர் மாற்றுகிற மசோதாவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் வரவேற்கிறேன். நமது நாட்டில் பொதுத் தொண்டிலே ஈடுபடுகிறவர்கள், ஏதேனும் ஓர் அரசியல் கட்சி வழியாகத்தான் இன்றைய நிலையில் ஈடுபட

முடியும். காமராஜர் அவர்கள் வாழ்கிறபோது, நாடு முழுவதும் ஒரே தேசிய இயக்கம் இருந்தது. எங்கும் அன்னியரை அகற்றும் பெரும் போராட்டம். நமது நாட்டில் சுதந்திர ஒளி வெளிப்படுவதற்கு முன்னால் அனைவரும் ஒரே இயக்கமாகத்தான் இருந்தார்கள். சுதந்திரம் என்பது உறுதியானதற்குப் பிறகு, அவர்களிடையே பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையிலே, யூத் விங், சோஷலிஸ்ட் விங், கம்யூனிஸ்ட் விங் என்று அதற்குள்ளேயே தோன்றி, பிறகு சுதந்திரத்தை அடைகிறபோது, ஓரளவிற்கு அவரவர்கள் தனித் தனி இயக்கங்களாக அமைத்து, அவைகள் பின்னர் பல்வேறு அரசியல் கட்சிகளாகத் தோன்றின. இது வரலாற்று உண்மை. ஆனால், இன்றைய நிலையில், தனிப்பட்ட ஒருவன் பொதுத் தொண்டில் ஈடுபடுகிறபோது, ஓர் அரசியல் கட்சியிலிருந்து செயல்பட்டாலும்கூட, அவனுடைய பொதுத் தொண்டு முற்றுப்பெறுகிறபோது, தன்னலமற்ற தொண்டாக அது இருந்தால், எந்தக் கட்சியாக இருந்தாலும், நாட்டினுடைய ஒரு பொதுச் சொத்தாக அவரை ஏற்றுக்கொள்கிற மரபு வளர வேண்டும். நாம் ஜனநாயக மரபை ஏற்ற பிறகு, அதன்படி ஓர் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் ஆட்சி புரிய முடியுமென்ற நிலை இருக்கிறது. அரசியல் ஆட்சி முறையிலே பல்வேறு ஆட்சி முறைகளை இந்த உலகம் பரிசீலனை செய்து வருகிறது. மன்னர் ஆட்சியிலிருந்து தொடங்கி, பிரபுக்கள் ஆட்சி தொடர்ந்து, இன்றைக்கு மக்களாட்சி முறைக்கு வந்திருக்கிறோம். இது முடிந்து, சிறந்த, தேர்ந்த ஆட்சி முறையா என்று கேட்டால், ஆட்சித் துறையை ஆராயும் வல்லுநர்கள் இதிலும் வேறு பல மாற்றங்களைக் கொண்டு வரலாமென்று கருத்துக்கள் தெரிவிப்பதை நாடு அறியும். ஜனநாயக ஆட்சி முறை என்று சொல்லும் போது, ஒரு கட்சி ஆட்சி முறை இருக்கிறது. அதை ஏற்றுக்கொண்டாலும், கட்சி முறையில் செயல்படுகிற நிலையில், பொது நலன்களில் ஈடுபடுகிறபோது, ஒரு கட்சியில் இருந்தாலும், நாட்டு நலனை முன் நிறுத்தி ஈடுபடும் முறை, இந்த நாட்டில் உருவானதுதான் சிறந்த பாரம்பரியம். அந்தப் பாரம்பரியத்தில் வந்த நமது பெரும் தலைவர் காமராஜர் அவர்கள், பிற கட்சிகளை எல்லாம் அணைத்துக்கொண்டு போகிற நல்ல பண்பைப் பெற்றிருந்தார்கள். அவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் சேர்ந்து, காங்கிரஸ் கட்சியிலே இருந்தாலும்கூட, மற்ற கட்சிகளை அணைத்துக்கொண்டு செல்லும் நல்ல ஜனநாயக மரபைப் பெற்றிருந்தார்கள். அதனால் சென்னை மாநகரத்தில், சென்னை மாநகராட்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொறுப்பில் இருந்தபோது, பெரும் தலைவர் காமராஜர் அவர்களுக்குச் சிலை அமைத்து, அந்த மரபை திராவிட முன்னேற்றக் கழகமும் சிறப்பாகச் செய்தது. அதைப்போல இந்த ஆட்சியும் அவருடைய தொண்டு என்றென்றும் தெரிகிற அளவுக்கு,



அவருடைய பெயர் இந்த நாட்டினுடைய வரலாற்றில் நிலைத்திருக்கிற அளவுக்கு, இளைஞர்கள்கூட பயில்கிற அந்தப் பகுதியில் உணர்கிற நிலையை வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

குறிப்பாக, எனக்கு முன்னால் பேசிய கவிஞர் புலமைப்பித்தன் அவர்கள் மதுரை என்ற பெயர் அழிந்தால், சங்க வரலாறு—மதுரையோடு இணைந்து சொல்லிக்கொண்டிருக்கக்கூடிய தமிழ் வரலாறு, மறைந்து விடுமேயென்று அஞ்சினேன் என்று சொன்னார்கள். அதுவும் மறையாமல்—தமிழகத்தினுடைய சிறப்புக்களையெல்லாம் எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கக்கூடிய மதுரையும், உழைப்பின் சிறப்பையெல்லாம் எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கக்கூடிய, தியாகத்தின் சிறப்பையெல்லாம் எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கக்கூடிய, சுதந்திரத்தின் சின்னத்தை எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கக்கூடிய காமராஜர் அவர்களின் பெயரையும் இணைத்து, இந்தப் பல்கலைக் கழகத்திற்குப் பெயர் அமைத்திருப்பதை நான் என்னுடைய கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன்.

இந்தக் கருத்தை வெளியிடுகிறபோது, நமது மாண்புமிகு உறுப்பினர், ஐக்கிய கட்சித் தலைவர், திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் மேலை நாட்டுப் பல்கலைக் கழகங்களுக்குப் பெயர் அமைக்கும் ஒரு முறையைச் சுட்டிக்காட்டினார்கள். அதைத் தவறு என்று சொல்லவில்லை. அவர்களெல்லாம் ஒரு மரபாக, நகரங்களின் பெயர்களைச் சொல்லி, பல்கலைக் கழகங்களைத் தோற்றுவித்தார்கள். நாமெல்லாம் அவர்களைவிட ஒரு படி மேலே இருக்கிறோமென்று கருதுகிறேன். அவர்களுக்கு, ஒரு கட்சியில் இருக்கிறவர்களை, ஒரு நூற்றாண்டிலே வாழ்கிறவர்களை, அந்த நாட்டுப் பொதுச் சொத்தாக ஏற்றுக் கொள்கிற பண்பு நம்மைப்போல வளரவில்லை என்று கருதுகிறேன். எந்த விதமான மாறுபட்ட உணர்வும் மண்ணில் இல்லை. சகாரா பாலைவனத்தில் பிறந்த ஒருவனுக்கு தன்னுடைய பொன்னாடுதான். நாம் வேண்டுமானால் பாலைவனம் என்று சொல்லலாம். ஆனால் அந்த இயல்பான உணர்வு, தான் பிறந்த நாடு, பிறந்த நகரம், பிறந்த ஊர் என்று பெருமைப்படும் உணர்வு என்பது ஒரு சாதாரண மரபு.

(பிற்பகல் 5-50)

அதற்கப்பால் தன்னோடு வாழ்ந்த, தன் நூற்றாண்டில் வாழ்ந்த மாறுபட்ட கருத்துக்களையுடைய தலைவர்களை அவர்களுடைய காலத்திற்குப் பிறகு அவர்கள் ஆற்றிய பொதுத் தொண்டை ஏற்றுக் கொள்ளுகிற மரபு, உயர்ந்த மரபு என்று கருதுகிறேன். மனிதனுடைய வாழ்விலே பல பகுதிகள்

இருக்கின்றன. அதிலே பண்பாட்டுப் பகுதியிலே, இத்தகைய தலைவருடைய கட்சி சார்பை மறந்து, அவர் வாழ்ந்த காலத்திலே கொண்டிருந்த கருத்தை மறந்து, அவர் ஆற்றிய பொதுத் தொண்டை ஏற்று, அவரை நாட்டின் பொதுச் சொத்தாக ஏற்றுக்கொள்ளுகிற முறை பகுத்தறிவு மரபுக்கு ஏற்ற முறை. மறைந்த பெரியவர்களை இப்படி மதிக்கிற கொள்கையை, பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டு, இன்னொரு கோணத்திலிருந்து பார்த்தாலும், இது ஒரு உயர்ந்த சீரிய பண்பு என்றே கருதுகிறேன். எனவே தமிழகத்தினுடைய வரலாற்றில் சீரிய இடமும், சிறப்பிடமும் பெற வேண்டிய பேரறிஞர். . .

திரு. க. அறிவழகன் : மேலை நாடுகளில் இப்படிப்பட்ட பண்பு ஏன் இல்லையென்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிறார்கள்? மேலை நாட்டில் அறிஞர் அண்ணாவும் இல்லை, பெருந்தலைவர் காமராஜ் அவர்களும் இல்லை, நாமும் இல்லை.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேலை நாடுகளுக்குப் போய் வந்தவர். ஆனாலும் இதையெல்லாம் அவர்கள் அங்கே ஆராய்ந்திருக்கமாட்டார்கள். அங்கே போய் இருந்த போது வேறு பல விஷயங்கள் அவரை ஈர்த்திருக்கும். (சிரிப்பு) நாங்கள் எல்லாம் இருக்கக்கூடிய இடத்திலிருந்தே வரலாறுகளைப் படித்து அறிந்து கொண்டிருப்பதால்தான் சொல்லுகிறோம்.

புலவர் புலமைப்பித்தன் : தலைவர் அவர்களே, பல விஷயங்கள் அவரை ஈர்த்திருக்கும் என்று சொல்கிறார்கள். அவற்றில் சிலவற்றைச் சொன்னால், நாங்களும் தெரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும். (சிரிப்பு)

திரு. எம். சங்கரலிங்கம் : அதைச் சொன்னால், என்னுடைய நண்பர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் இப்போது இருக்கக்கூடிய ஆட்சியைப் பயன்படுத்தி என்னைச் சீக்கிரமாக இங்கிலாந்து அனுப்ப வேண்டும் என்று அமைச்சர்களிடத்தில் சொல்லிவிடுவார்களோ ! என்று அஞ்சுவதால்தான் நான் அத்தோடு நிறுத்திக்கொள்ளுகிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: அந்த அனுபவங்கள், புலவர் புலமைப்பித்தனுக்குக் கருப்பொருளாக அமையும் என்பதற்காகக் கேட்டிருக்கலாம்.

திரு. க. அறிவழகன் : தலைவர் அவர்களே, என்னிடத்திலே கேட்க வேண்டிய கேள்வியைக் குறித்து அவர்கள் இரண்டு பேரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.



திரு. எம். சங்கரலிங்கம் : "வெளிநாடுகளில் அண்ணாவும் இல்லை, காமராஜும் இல்லை, நாமும் இல்லை" என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அங்கே அத்தகைய மேதைகள் வாழவில்லை என்று நான் கருதவில்லை. மேதைகளை மதிக்கிற பண்பு இந்த நாட்டுக்கே சொந்தம் என்று சொல்லுகிறேன். தமிழ்நாடு, பண்பின் பிறப்பிடமாகத் திகழும் இடம். அத்தகைய பண்புகள் வளர்வதைப் பாராட்டுகிறேன். அந்தப் பண்பினுடைய சின்னமாக இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்கிறோம்.

தம்முடைய நாட்டின் வரலாற்றை ஒரு பாடமாக வைத்திருந்தாலும், வருங்காலச் சந்ததியினர் அதை மறந்துவிடுகிற சூழ்நிலை உருவாகிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இப்படிப் பெயர் வைப்பதெல்லாம் வரலாற்றுச் சின்னங்கள். காமராஜ் என்றால், சுதந்திரப் போராட்ட வரலாறு; அதைப் போல அண்ணா என்றால், சமுதாய வளர்ச்சி, தமிழ் உணர்ச்சி, தமிழ் மறுமலர்ச்சி என்ற வரலாற்றை நம்மால் காண முடிகிறது. இவ்வரலாற்றிலிருந்து அவர்களுடைய பெயரை நீக்கிவிட்டுப் பார்க்க முடியாது. இந்தக் கால கட்டத்தை வரலாற்றில் அமைக்கக்கூடிய அளவுக்கு இந்தப் பெயர் அமைகிறது. அதிலேயும் கல்லூரிக்குள்ளே செல்லாமல், பல்கலைக் கழகத்திற்குள்ளே காலடி எடுத்து வைக்காமல் இருந்த அவருடைய பெயர் பல்கலைக் கழகத்திற்குச் சூட்டப்படுகிற சிறப்பை அவர் பெற்றிருக்கிறார் என்றால், இந்த நாட்டு மக்கள் படித்தவர்களை மாத்திரம் மதித்து, பட்டம் பெற்றவர்களை மாத்திரம் மதித்து வரும் பண்பைப் பின்பற்றவில்லை, பண்பையும் தியாகத் தொண்டையும், உயர்ந்த இலட்சியங்களையும் கொண்டவர்களையும் உயர்த்தும் பண்பைப் பெற்றிருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக, சின்னமாக இருக்கிறது என்று நினைக்கிறேன்.

நிர்வாகத்திலே அவர் எவ்வளவு திறமையாக இருந்தார் என்பதை அருமை நண்பர் எல்லாம், மிக அழகாக எடுத்துச் சொன்னார்கள். அதற்குக் காரணம் அவர் கல்லூரிக்குச் சென்று அதிகம் படிக்காததுதான். அதிகம் படிக்காதவர்கள் நிர்வாகத்தைத் திறமையாக நடத்த முடியும் என்பது நிரூபித்துக்கொண்டு வரப்படுகிறது என்பது என்னுடைய கருத்து. காமராஜ் அவர்கள் அதற்கு வழிவகை செய்தார்கள். படிப்புத் தேவையில்லை, பண்பும், திறமையும், பொதுநலத் தொண்டு உணர்வும் தேவையென்பதை எடுத்துக்காட்டி அவர் வழிகாட்டியிருக்கிறார்கள்.

திரு. க. அறிவழகன் : இந்த நேரத்திலாவது, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களைப் பார்த்துப் பேசினால் பொருத்தமாக இருக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ரொம்ப நன்றி.

திரு. எம். சங்கரலிங்கம்: அந்த வரிசையில் அவரை நான் தலைவராக ஏற்றவன் என்பது மாண்புமிகு உறுப்பினருக்கும் தெரியும். தமிழ்த் தொண்டிலேயும், கன்னியாகுமரி மாவட்டத்தைத் தாய்த் தமிழகத்தோடு இணைக்கிற பணியிலேயும் அவர்களுடைய தலைமையை ஏற்றுப் பணிபுரிந்தவன் நான் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அன்று படித்தவர்கள் எல்லாம் எங்கே போனார்கள் என்றே தெரியவில்லை. போராட்டத்திலே இலக்கணத்தைச் சொல்லி . . .

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இப்படிப் பட்ட வாதங்கள், படிக்காமல் இருப்பதற்குச் சாதகமாக அமைந்து விடக் கூடாதே என்ற அச்சம் எனக்கு இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: கல்வி அமைச்சராக இருப்பதால், அவருக்குக் கவலை.

திரு. எம். சங்கரலிங்கம்: இந்த ஏட்டுப் படிப்பு மட்டும் போதாது, ஏட்டுப் படிப்போடு வேறு பல துறையைப்பற்றித் தெரிந்து கொள்ளும் கல்வியைப்பற்றி அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கு வருகிற ஒரு உணர்வைச் சொல்லாமல் இருப்பது தவறு. இந்தப் பெயர் மாற்றத்தை, இந்தச் சட்ட மன்றத்திலே மசோதாவாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை வரவேற்கிறோம். அதை அவர்கள் முன்பே கொண்டு வந்திருக்கலாம். ஆனால் நமது அரசு அப்படிச் செய்யாமல், மதுரைத் தேர்தல் காலத்திலே இந்த மாற்றத்தை அறிவித்து, அதை மேதகு ஆளுநர் அவர்களின் மூலமாக, அவசரச் சட்டத்தின் வழியாகச் செய்ததால், நாம் ஒவ்வொருவரும் மறைந்த தலைவர்களுடைய பெயர்களையெல்லாம், அரசியல் அமைப்புக்கு, அரசியல் வெற்றிக்கு அல்லது அரசியல் இலாபத்திற்குப் பயன்படுத்திக் கொள்கிறோமோ என்ற ஐயம் தோன்றாமல் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இனிமேலாவது இந்த மாதிரி காரியங்களைச் செய்கிற சூழ்நிலைகள் வருகிறபோது, இப்படிச் செய்யாமல் சட்டமன்றத்திலே கொண்டு வந்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேதகு ஆளுநர் அவர்களைக் கொண்டு அவசரச் சட்டங்களைப் பிரகடனப்படுத்து வதற்குக் காரணம், ஏற்கெனவே இருக்கிற சட்டங்கள் காலாவதியாகிற



போது இடையிலே 'கேப்' உருவாகாமல் இருப்பதற்காகத்தான் என்று சொல்லப்படுகிறது. ஆனால் இது அப்படியல்ல. இந்த அரசாங்கம் முன்னதாகவே ஒரு மசோதாவாகக் கொண்டு வந்து இந்தப் பெயர் மாற்றத்தைக் கொண்டு வந்திருந்தால் முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. வகாப் அவர்கள் சொன்னது போல, குழப்பத் திற்கு ஒரு சந்தர்ப்பமே ஏற்பட்டிருக்காது. மதுரையிலே ஏற்பட்ட கிளர்ச்சிகள்கூட அங்குள்ளவர்கள் தவறான கருத்திலே அதை எடுத்துக் கொண்டதன் விளைவாக இருக்கலாம். ஆகவே முறையாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட இரு மன்றங்களிலும் இந்தப் பெயர் மாற்றங்களுக்கான சட்டங்களைக் கொண்டுவந்து செய்திருந்தால், இந்த வகுப்பு வாதங்கள் வந்திருக்காது. ஆளும் கட்சியினர், பெருந் தலைவர் அவர்களுக்குச் செய்கிற சிறப்பை யெல்லாம், தங்கள் கட்சி இலாபத்திற்குச் செய்து கொள்ளுகிற மன நலம் பெற்றிருக்கக் கூடாது. எந்த வகையிலும் பிறர் சந்தேகிக்காத வகையில் செயல்பட வேண்டும் என்று சொல்லி, இந்த மசோதாவை ஆதரித்து, அமைகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மேலவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த மாமன்றத்தின் முன்னாலே இருக்கிற இந்தச் சட்டமுன் வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த பல்வேறு கருத்துக்கள் அரசினுடைய கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இந்தச் சட்ட முன்வடிவை மனப்பூர்வமாக ஆதரித்துத் தங்களுடைய உளமார்ந்த நல்லாதரவைத் தெரிவித்த அத்தனை உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மதுரையிலே இருக்கிற பல்கலைக் கழகத்திற்கு, காமராஜ் அவர்களுடைய பெயரை வைக்க வேண்டுமென்ற அறிவிப்பு காமராஜ் அவர்களுடைய பிறந்த நாள் விழாவிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் செய்யப்பட்டதை யடுத்து அவசரச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. இன்றையதினம் அந்த அவசரச் சட்டத்தை நீக்கிவிட்டு ஒரு சட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அங்கே அதற்கு எதிர்ப்பு காணப்பட்டது என்பது உண்மை. ஆனால் அந்த எதிர்ப்பு சிறிய அளவிலே இருக்கிறது என்பதும் உண்மை. அந்த எதிர்ப்பைச் சில பேர் பாராட்டுகிறார்கள் என்றாலும், நாங்கள் அதன் அடிப்படையை மாற்றிக்கொள்ளுகிற நிலைமை யில் இல்லை என்ற முறையில் இந்தச் சட்டமுன்வடிவை, சட்டமாக்கிக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வகாப் அவர்கள் இங்கே இல்லையென்றாலும், நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால், அவர் சொல்லுகின்ற யோசனையை ஏற்றுக்கொண்டு, இன்றைக்கு இந்தக் கருத்திலே மாறுபடுவோமானால், அதற்குக் கிளம்புகிற எதிர்ப்பை, போராட்டத்தை நாம் அனைவரும் சேர்ந்தாலும் தாங்க முடியாது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 6-00)

ஆகவே அரசு இன்றையதினம் அந்தப் போராட்டத்தை அலட்சியப் படுத்தவில்லை என்பதையும் அந்தப் போராட்டத்திலே தொடர்பு கொண்டிருந்த சிலர் சொன்ன யோசனைகளை ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல இங்கேயே சொன்ன யோசனையின் அடிப்படையிலும் மதுரைப் பல்கலைக் கழகத்துக்கு "மதுரை காமராஜ் பல்கலைக் கழகம்" என்று பெயர் வைத்திருக்கிறோம். ஆக, எல்லோருடைய உணர்வுகளும் இந்த அரசால் மதிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட உணர்வுகளைச் சொல்வதன் மூலம் நாங்கள் எல்லோருடைய உணர்வுகளையும் மதிக்கிறோம், அலட்சியப்படுத்தவில்லை என்பதை நான் திட்டவட்டமாகக் கூறிக்கொள்கிறேன். பலருடைய உணர்வுகள் பொருத்தமுடையதாகவும் அதே சமயத்தில் மதிப்பளிக்கக் கூடியதாகவும் இருந்துகொண்டிருக்கின்றன.

காமராஜ் அவர்களைப் பற்றி பல்வேறு உறுப்பினர்கள் நல்ல பல கருத்துக்களைச் சொன்னார்கள். காமராஜ் அவர்கள் 'கல்லூரிக்குள் காலடி எடுத்து வைக்கவில்லை' என்று சொன்னார்கள். அதே நேரத்தில் அவருடைய பெயரை ஒரு பல்கலைக் கழகத்திற்கு வைத்துப் பெருமைப்படுகிறோம் என்ற கருத்தினையும் சொன்னார்கள். மதுரைப் பல்கலைக் கழகத்தில் 'ஓப்பன் யூனிவர்சிடி' பாட முறை இன்றைக்கு இருக்கின்றதால், ஒருவேளை அந்தப் பொருத்தம்கூட இருக்கலாமென்று நான் கருதுகிறேன். மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு காமராஜ் அவர்களின் பெயரை வைக்கின்ற அதே நேரத்தில் அவரைப் போற்றிப் பாராட்டிப் புகழ்ந்து, அவர் செய்துள்ள தியாகங்களைப்பற்றியெல்லாம் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய உணர்வுகளை மிக நன்றாகச் சொன்னார்கள். இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் வேளையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரை ஒரு பல்கலைக் கழகத்திற்கு வைக்கும் நேரத்தில், யாரும் அதுபற்றி ஆச்சரியப்பட்டிருக்க





மாட்டார்கள். காமராஜ் அவர்களின் பெயரை பல்கலைக் கழகத்திற்கு வைக்கிறபோது ஆச்சரியப்படத் தேவையில்லை என்றாலும்கூட, இந்த ஆட்சியினுடைய பெருந்தன்மை, நல்ல உணர்வுகள் இவைகளையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் உயிரோடு இருந்தபோது மாநகராட்சி சார்பாக ஒரு சிலை வைக்கப்பட்டது. அதேபோல கலைஞர் முதல்வராக இருந்தபோது, காமராஜ் அவர்களுக்கு ஒரு மண்டபம் எழுப்பப்பட்டது. இன்றைக்கு நாங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்ற வேளையில் ஒரு பல்கலைக் கழகத்திற்கு நாங்கள் காமராஜ் அவர்களின் பெயரை வைக்கிறோம் என்பதால், நாங்கள் அவரை மதிக்கிறோம், வேறு கட்சியாக இருந்தாலும் அவரைப் பாராட்டுகிறோம் என்கிற நல்ல உணர்வை இந்த நாடும் நாட்டு மக்களும் புரிந்து கொள்வார்கள். அவர் வேறு கட்சித் தலைவராக இருந்தாலும் கூட, நாங்கள் அதைப்பற்றியெல்லாம் பார்க்காமல், அவருடைய தொண்டையும் தியாகத்தையும் மதிக்கிறோம். நாங்கள் அவரை எதிர்த்துத்தான் இந்த நாட்டிலே ஒரு அரசியல் கட்சியாக வளர்ந்து கொண்டிருந்தோம் என்பதையும், நல்ல உணர்வின் காரணமாகத்தான் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறோம் என்பதையும் எல்லோரும் புரிந்து கொள்ள வாய்ப்பு இருக்கிறது. காமராஜ் அவர்களுடைய ஆற்றலைப்பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். ஜவஹர்லால் நேரு இறந்ததற்குப் பிறகு, அகில இந்தியாவிலும் அவர் எவ்வளவு பெரிய ஆற்றல் மிக்க சக்தியாக இருந்தார் என்பதைப்பற்றி இந்த நாடு அறிந்து கொண்டிருக்கிறது. தமிழ்நாடு, தமிழ்ச் சமுதாயம் அதுபற்றி மிகவும் பெருமைப்படுகிறது என்பதை நான் இங்கே சொல்லத் தேவையில்லை. இளைஞர்கள் பல்கலைக் கழகத்திற்கு வருகிறார்கள்—படிக்கிறார்கள். அப்படிப்பட்ட பல்கலைக் கழகத்திற்கு காமராஜ் அவர்கள் பெயரை வைப்பது மிகவும் நல்லதுதான் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். உண்மையில் அங்கு படிக்க வருகின்ற தம்முடைய இளைஞர்கள் அந்த அடிப்படையில் அத்தகைய பெரும் தலைவருடைய வாழ்க்கையை உணர்ந்து அதன்படி நடக்க வேண்டுமென்ற நல்ல உணர்வோடுதான் இதை நாங்கள் செய்கிறோம். இங்கு படிக்கின்ற இளைஞர்கள் தாங்கள் பெறுகின்ற தனி சக்தியை, சிறப்பு வாய்ந்த சக்தியை அவர்களுக்கு மட்டுமல்லாமல் இந்த சமுதாயத்திற்கும், மற்றவர்களுக்கும், உலகத்திற்கும் பயன்படுத்த வேண்டுமென்ற நல்ல எண்ணம் இந்தத் தலைவரின் பெயரைப் படிக்கின்ற நேரத்தில் எல்லாம் ஏற்பட வேண்டுமென்ற நோக்கம் எங்களுக்கு இருக்கிறது. காமராஜ் அவர்களின் பெயரில் உள்ள பல்கலைக் கழகத்திலும், அறிஞர்

(திரு. செ. அரங்கநாயகம்) [1978 செப்டம்பர் 13

அண்ணா அவர்களின் பெயரில் உள்ள பல்கலைக் கழகத்திலும் படிக்கின்ற மாணவர்களுக்கு அங்கு அவர்கள் தருகின்ற, பெறுகின்ற இந்தப் புதிய ஆற்றலை வைத்துக்கொண்டு, தங்களுக்காக என்று அல்லாமல், மற்றவர்களுக்காகப் பாடுபடும் ஆற்றல் ஏற்பட வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இருக்கிறது—நம்முடைய அந்த நோக்கம் நிறைவேறுகின்ற அளவில் புதிய பெயர் மாற்றம் நமக்குப் பயன்பட வேண்டும். இன்றைக்கு இந்தப் பெயர் மாற்ற முன்வடிவிற்கு ஆதரவு தந்து, பல்வேறு வகையிலும் பல நல்ல கருத்துக்களை வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதோடு, இதை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை.

" சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக் கழக (திருத்த—சிறப்பு விதித் துறைகள்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவு 2

திரு. க. இராமமூர்த்தி: என்னுடைய கீழ்க்கண்ட திருத்தத்தை முன் மொழிகின்றேன்:—

" In clause 2, for the words ' the Madurai Kamaraj University ' substitute the words ' the Madurai Perunthalaivar Kamaraj University.'

திரு. என். சுந்தரேசத் தேவர்: நான் அதை வழி மொழிகின்றேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திருத்தம் கொடுத்திருப்பதற்கு அரசின் பதில் என்ன? உறுப்பினர் பேசலாம்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த அவை இன்றைக்கு தங்களுடைய தலைமையிலே மிகுந்த பெருமைக்கும் மகிழ்ச்சிக்கும் உரிய மிகப் பெரிய காரியத்தைச் செய்து முடித்திருக்கின்றது.



978 செப்டம்பர் 13] (திரு. க. இராமமூர்த்தி)

பெருந் தலைவர் காமராஜ் அவர்களுடைய பெயராலே ஒரு பல்கலைக் கழகம் அமைத்ததற்கான சட்ட முன்வடிவு இன்றைக்கு தங்களுடைய தலைமையிலே முழுமை பெறுகின்றது. எனக்கு இன்றையதினம் பெருத்த பெருமை ஏற்படுகின்றது. இது முழுமை பெறுகின்ற நாளில் தாங்கள் தலைமை பேற்று அதைச் செய்து தருகின்றீர்கள் என்ற பெருமையை நான் எண்ணிப் பார்க்கின்றேன். எனக்கு உள்ளூர ஒரு ஆதங்கம். தலைவரவர்களே, நான் தங்களைப் புகழ்வதாக நினைத்து என்னைத் தவறாகக் கருதக்கூடாது. தாங்கள் இங்கே இருந்து இந்தச் சட்டமுன்வடிவு மீது பேசுகின்ற வாய்ப்பினைப் பெற்றிருந்து, அதை நாங்கள் கேட்கின்ற வாய்ப்பினைப் பெறாமல் போய் விட்டோமே என்கின்ற ஒரு ஆதங்கம் எனக்கு ஏற்படுகின்ற அதே நேரத்தில், தங்கள் தலைமையில் இந்தச் சட்டமுன்வடிவு முழுமை பெறுகின்றதை எண்ணிப் பார்க்கின்றபோது, உள்ளபடியே இது ஈடு செய்கின்ற அளவில் அமைந்திருக்கிறது என்று எண்ணிப் பெருமைப்படுகிறேன். பெருந்தலைவர் காமராஜ் அவர்களைப் பொறுத்தவரையிலும், இங்கே இருக்கிற தலைவர்கள் எல்லாம் பல கருத்துக்களை எடுத்துக் காட்டினார்கள். ஆளும் கட்சியிலுள்ள புலவர் புலமைப்பித்தன் பேசும்போது, உணர்ச்சி வசப்பட்டு மிகுந்த உரிமையோடு பெருந் தலைவர் காமராஜ் அவர்களுடைய பல்வேறு நிலைகளை, பெருமைகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். குறிப்பிடும்போது, பெரும் தலைவர் காமராஜர் என்று குறிப்பிட்டார். காரணம் பெரும் தலைவர் அவர்களைப் பொறுத்தவரை, 'காமராஜ்' என்ற அவருடைய பெயரைத் தமிழ்நாட்டு மக்கள் யாரும் பயன்படுத்துவது இல்லை. நாளாவட்டத்தில் அவரைப் பார்க்கும்போது, 'பெருந் தலைவர் காமராஜர்' என்ற எண்ணத்தில் தான் அந்த நிறைவோடுதான் அவரைக் கண்டார்கள். அவரை எதிர்த்தவர்களானாலும் சரி அல்லது கருத்து மாறுபாடுகள் கொண்டவர்களானாலும் சரி, அவரைக் கண்ட மாத்திரத்திலேயே அவர்களுடைய உணர்வுகளுக்கு 'பெருந் தலைவர்' என்ற பெயரே நினைவில் நின்றது. ஆகவே என்னுடைய திருத்தமும் அதை மனதிலே வைத்துத்தான் அமைந்திருக்கிறது.

இன்னொன்றையும் நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். பெருந் தலைவர் காமராஜர் அவர்களுடைய பெயரால் அமைகின்ற இந்த பல்கலைக் கழகத்திற்கு நியாயங்கள் பலவற்றை எடுத்துச் சொன்னார்கள். நான் இன்றைக்கு ஆளும் கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு—தமிழக முதல்வருக்கு உண்மையிலேயே மெத்த பெருமிதத்தோடு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். நாங்கள் கேட்டு வந்ததா இல்லையா என்பதல்ல பிரச்சினை. பெருமைக்குரிய அந்தந்

தலைவருக்கு, தமிழகத்தின் பெருமையை பாரெல்லாம் உயர்த்தியவருக்கு மிகப் பொருத்தமான நேரத்தில், மிகப் பொருத்தமான அளவில் மரியாதை செய்திருக்கின்றார்கள் என்பதாலே அவர்கள் பாராட்டுக்குரியவர்கள். பாராட்டுதற்குரிய செயலைச் செய்திருப்பதால் நான் பாராட்டுவதிலே கொஞ்சம்கூட தயக்கம் காட்டாது மட்டற்ற மெத்த பெரு மகிழ்ச்சியடைகிறேன். அவருடைய பிறந்த நாள் அன்று இந்த அறிவிப்பை முதல்வர் அவர்கள் அறிவித்தது இன்னும் பொருத்தமுடையதாக இருந்தது. அது பல் வேறு சூழ்நிலைகளில் எப்போது வேண்டுமானாலும் வரலாம் என்றாலும்கூட, உரிய நேரத்தில் உரிய மரியாதை கொடுத்ததற்காக உண்மையிலேயே பெருமையடைகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அறிவிப்பு எந்தச் சூழ்நிலையில் வந்தது என்பதைப்பற்றியெல்லாம் தெளிவாகச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வகாப் அவர்கள் கூட அவருடைய கருத்தைச் சொன்னார். அவருக்கே உரிய முறையில் இந்த அவையிலே அது போன்ற ஒரு பிரச்சினை எழுவதற்கு இடமில்லை என்றாலும் கூட, அது எங்கே நடவடிக்கைக் குறிப்பில் பதிவு ஆகாமல் போய் விடுமோ என்ற உணர்வில் ஒரு உருவம் தந்து பதிவு செய்து காட்டினார்களோ என்னவோ எனக்குத் தெரியாது.

(பிற்பகல் 6-10)

அதைப் பற்றி ஒன்றை நான் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அதற்கான பதிலை இந்த அவையிலே தந்திருக்கிறார்கள். அதை விட சிறப்பான வகையில் பொருத்தமான பதிலை வேறு யாரும் தந்துவிட முடியாது. ஏதோ நீண்ட நெடுநாட்களாக மதுரைப் பல்கலைக் கழகம் என்று இருந்துவிட்டதைப் போலவும், அதைமாற்றி இப்போது காமராஜர் பல்கலைக் கழகம் என்று பெயரை வைத்து, அவசரமாக எதையோ செய்துவிட்டதைப் போலவும் தொனிக்கின்ற வகையில் ஒரு வாதம் எழுப்பப்பட்டது. ஆனால் 1965 ஆம் ஆண்டில்தான் மதுரைப் பல்கலைக் கழகம் உருப்பெற்றது என்பதை இந்த அவை மிக நன்றாக அறியும். எனவே பெயர் மாற்றம் என்பது, ஒருவேளை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், தேர்தல் காலத்தில் வந்தது என்ற காரணத்தால், இதுபோன்ற பிரச்சினைகள் உருவாக்கப்பட்டிருக்கலாம். ஆனாலும் அதற்கு இவ்வளவு பெரிய முக்கியத்துவம் தரவேண்டிய அவசியம் இல்லை என்பதை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



அடுத்து, பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய பெயரை தற்போது மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு வைத்ததுபற்றிச் சொல்லவில்லை என்றாலும், தலைவர்களுடைய பெயரால் பல்கலைக் கழகங்கள் வேண்டுமா என்ற பொதுவான ஒரு கருத்தை அரசாங்கம் ஏன் பரிசீலிக்கக்கூடாது என்பதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இந்தியாவைப் பொறுத்தவரையில், நாம் எப்படிப்பட்ட சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம், நம்முடைய எண்ணங்கள் எப்படிப்பட்ட பாதையை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைய தினம் தமிழகம் ஒரு புரட்சிப் பாதையை நோக்கி, ஒரு மறுமலர்ச்சியை நோக்கி, நடைபோட்டுக்கொண்டிருக்கிறது என்பதை நாம் அனைவரும் உணர்ந்தாக வேண்டும். இந்தியாவில் பல இடங்களில் இருந்த பழமையான அடிமைச் சின்னங்கள் எல்லாம் உடைத்தெறியப்பட்டுவிட்டன. ஆனால் இங்கே தமிழகத்தில் மட்டும்தான் இன்னும் மன்னர்களுடைய சிலைகள் கோலோச்சிக் கொண்டிருக்கின்ற காட்சியைக் காண்கிறோம். அதிலேதான் நமக்குப் பெருமை இருப்பதாக நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம். நாம் எத்தனை பேருக்கு அடிமைகளாக இருந்தோம், எங்களை யார் யார் ஆண்டார்கள் என்பதையெல்லாம் அடையாளம் காட்டும் சின்னங்களாக அவைகளை நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். சரித்திரத்திலே இருந்தாலாவது மறந்துவிடுவோம். அவைகளையெல்லாம் உருவச் சிலைகளாக வைத்துக் காப்பாற்றுவோம் என்றுதான் வைத்துக் கொண்டிருக்கிறோம். இதுதான் இன்றைய நிலை. நான் வீட்டிலிருந்து இந்த அவைக்கு வரும் வழியெல்லாம் இந்தச் சிலைகளைப் பார்த்துக் கொண்டே வருகிறேன். 'சீமாட்டி வெலிங்டன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி'. யார் இந்த சீமாட்டி வெலிங்டன்? அடுத்தது 'ராணி மேரிக் கல்லூரி' ராணி என்றால் எந்த ராணி—குயின் மேரீஸ் கல்லூரி? நாமெல்லாம் யாருக்கு அடிமையாக இருந்தோமோ அந்த ராணி. அந்த அளவுக்கு பழமையைப் பாதுகாப்பதில் நாம் ஈடுபாடு கொண்டிருக்கிறோம். இவைகளெல்லாம் நாம் அடிமைத் தனத்திற்கு ஆட்பட்டிருந்ததைச் சுட்டிக் காட்டிக் கொண்டிருப்பதைப் பற்றிக்கூட கவலைப்படுவதில்லை. யார் நம்மை நசுக்கினார்களோ அவர்களுடைய உருவச் சிலையைக் காப்பாற்றுவதிலே நமக்கு அக்கறை இருக்கிறது. ஆனால் யார் நம்மையெல்லாம் விடுதலைப் போராட்டத்திற்கு அழைத்துச் சென்றார்களோ யார் நம்மையெல்லாம் ஒரு மறு மலர்ச்சியை நோக்கி, புதிய பாதையை நோக்கி அழைத்துச் சென்றார்களோ அவர்

களுடைய பெயரை வைக்கிற போது, இப்படிப்பட்ட எதிர்ப்புகள் நம்மை நோக்கி வருகின்றன என்றால், நாம் இதையெல்லாம் நன்றாக உணர்ந்ததாக வேண்டும்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களைப் பொறுத்தவரை, ஒன்றை நான் பெருமிதத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர் எப்போதுமே பிரச்சினைக்குரியவராக, நிரந்தரமாகவே பிரச்சினைக்குரியவராகவே இருந்திருக்கிறார். என்றாலும்கூட அவரோடு கொள்கை அடிப்படையில். கருத்து வேற்றுமை கொண்டவர்கள், அரசியல் ரீதியாக மாறுபாடு கொண்டவர்கள் எல்லாம்கூட, தலைவர் காமராஜர் அவர்கள், அவருடைய கட்சிக்குள்ளாக வளமாக இருக்க வேண்டும், வலிவோடு இருக்க வேண்டும், வல்லமையோடு இருக்க வேண்டும் என்பதிலே மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்கள்.

தந்தை பெரியார் அவர்களானாலும் சரி, பேரறிஞர் அண்ணா அவர்களானாலும் சரி, காங்கிரஸ் கட்சிக்குள்ளே பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் வலிமை மிகுந்தவராக இருக்க வேண்டும் என்பதிலே மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்கள். அப்படி இருப்பதன் மூலம்தான் தமிழினம் உயர்வு பெற முடியும் என்பதைச் சரியாக உணர்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் காங்கிரஸ் கட்சியிலிருந்து கொண்டு துணை நின்றார்களா இல்லையா என்பதல்ல பிரச்சினை. அல்லது காங்கிரசுக்கு வெளியே அரசியல் ரீதியாக அவர்கள் காங்கிரஸ் கட்சியை எதிர்க்காமல் இருந்தார்களா இல்லையா என்பதல்ல பிரச்சினை. காங்கிரசை ஆட்சியிலிருந்து அகற்ற வேண்டும் என்ற நிலையில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் இருந்தாலும், காங்கிரஸ் கட்சிக்குள் காமராஜர் அவர்கள் வலிமையாக இருந்ததால்தான், தமிழகத்திலே உள்ள பின்தங்கியவர்களுக்கும், தமிழகத்தில் இருக்கிற தாழ்த்தப்பட்டவர்களுக்கும், கல்வி வசதி அற்றவர்களுக்கும், இன்னும் சொல்லப்போனால் பிராமணர் அல்லாதவர்களுக்கும் நல்லது என்ற எண்ணம் இருந்தது. இதுதான் அன்றைக்கிருந்த நிலைமை. இந்த வார்த்தைகளை மறைப்பதில் பயனில்லை. எனவே அதுபோன்ற நிலைமைகளுக்குப் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காங்கிரசுக்குள் வலிமையாக இருக்க வேண்டும், இருந்தாக வேண்டும் என்ற எண்ணம் அப்போது ஏற்பட்டது தவறல்ல. காங்கிரஸ் கட்சியிலே அவர் நன்றாக வளருவதற்காக எந்த அளவுக்கு அவர்கள் ஆவல் கொண்டிருந்தார்கள் என்பதை என்றாலே இன்றைக்கும் எண்ணிப் பார்க்க முடிகிறது.



இந்த வகையில் தந்தை பெரியார் அவர்கள் இன்னும் ஒருபடி மேலே சென்று 'வேண்டுமானால் நான் திராவிடர் கழகத்தையே கூட கலைத்து விடுவேன், பெருந்தலைவர் காமராஜருக்கு ஆதரவு தருவேன்' என்று ஒரு முறை குறிப்பிட்டார். காரணம், தந்தை பெரியார் அவர்கள் எடுத்த காரியங்களை நிறைவுபடுத்தும் மனிதராக பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் திகழ்ந்தார்.

இன்றைக்கு அந்த மூன்று பேருமே நம்மிடையே இல்லை என்றாலும் அவர்கள் இல்லாத நிலையில் அவர்களுடைய நினைவாக இந்தக் காரியம் நடைபெறுகிறது என்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஆற்றிய அரும் பெரும் காரியங்களைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஆனாலும் நான் ஒன்றைப்பற்றி மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

எதிரே இருக்கிற துறைமுகம் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய காலத்திலேதான் நமக்குக் கிடைத்தது என்பதை மறந்துவிடக் கூடாது. சென்னைக்குத் துறைமுக விரிவாக்கம் வரக்கூடாது என்பதற்காக எவ்வளவு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமோ அவ்வளவும் அந்தக் காலத்தில் வேறு சிலரால் மேற்கொள்ளப்பட்டது. துறைமுகத்தை இந்தப் பக்கத்திலே கொண்டுவருவதன் மூலமாக சென்னை மக்களுக்கு மிகத் தேவையான கடற்காற்றும், கடற்கரையும் இல்லாமல் போய்விடுகிறது என்ற குரல் அன்றைக்குக் கடுமையாக எழுந்தது. ஆனாலும் அந்த நேரத்தில் இதற்கு ஆதரவாக ஒரு முடிவு எடுக்கவில்லை என்றால், துறைமுக விஸ்தரிப்பு என்ற பேச்சுக்கே இடமிருக்காது என்ற நிலையில் "சோறு வேண்டுமா, காற்று வேண்டுமா" என்கிற வினாவை எழுப்பி, சோறுதான் முதலில் வேண்டும் என்று துணிந்து ஒரு முடிவை எடுத்தார்கள். அந்த முடிவு இன்றைக்குப் பொருளாதார ரீதியாக நமது மாநிலத்திற்கு எந்த அளவுக்கு உதவியாக இருந்துகொண்டிருக்கிறது என்பதை என்னால் பெருமிதத்தோடு எண்ணிப் பார்க்க முடிகிறது.

அதைப் போலவே இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி என்கிற கல்வி நிலையத்தைப் பொறுத்தவரையில், தென் மாநிலங்களில் ஒரு மாநிலத்தில் அமைய வேண்டும் என்று மத்திய அரசாங்கம் முடிவு செய்த போது, அதைத் தம் மாநிலத்திற்குப் பெற வேண்டும் என்று பெருந்தலைவரிடம் நண்பர்களாக இருந்த மற்ற முதலமைச்சர்களே கடுமையாகப் போட்டி போட்டுக்கொண்டு முயற்சி செய்து கொண்டிருந்தபோது, அன்றைக்

(திரு. க. இராமமூர்த்தி) [1978 செப்டம்பர் 13

இருந்த கல்வி அமைச்சர் கூட கைவிரித்துவிட்ட நிலையிலும்கூட 'தஞ்சை-திருச்சிக்கு இடையே இருக்கிற இடத்தைத் தருவதாகச் சொன்னார்கள் என்று சொன்னார்களே அதைப் போன்று அப்போது பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தலையிட்டு கிண்டியில் இடம் இருக்கிறது கொடுக்கிறேன் என்று சொன்னார்கள். அன்றைக்கு அவர் செய்த முடிவு இன்றைக்கு எவ்வளவு பெரிய பயனைத் தந்துகொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இவைகளையெல்லாம் செய்தது படிக்காத காமராஜர் என்று சொல்லுகிறார்கள். ஆனால் நான் அவரைப் படிக்காத காமராஜர் என்று என்றைக்கும் ஏற்றுக் கொள்வதில்லை, மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்களைப் போலவே அவரும் தமிழிலே மிகுந்த புலமை பெற்றவர்கள். ஒருவேளை இலக்கிய நயத்தோடு பேசுகிற ஆற்றல் இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனாலும் இந்த மண்ணின் வாசனைக்கு ஏற்ப மற்றவர்களைவிட மிக அதிகமான அளவுக்கு மக்களைக் கவருகிற பேச்சுத்திறம் கொண்டவராக அவர் விளங்கினார். இலக்கியப் புலமையைப் பொறுத்தவரையிலும்கூட, பெரிய அளவில் கம்ப ராமாயணம் போன்றவற்றை மற்றவர்களோடு விவாதிக்கிற வல்லமையைப் பார்த்திருக்கிறேன். வெளி வருகிற புத்தகங்கள் எதுவானாலும் வந்த உடனே அவற்றைப் படித்து முடிக்கிற பழக்கத்தை அவர் கொண்டிருந்தார். அது ஆங்கிலமானாலும் சரி, தமிழானாலும் சரி, படித்துமுடித்துவிட்டு மற்றவர்களோடு அதை விவாதம் செய்கிற தன்மையை நான் பார்த்திருக்கிறேன். இவைகள் எல்லாம்தான் அவரை மிகச் சிறந்த நிர்வாகியாக, திறம் படைத்த நிர்வாகியாக ஆக்கியது. இதன் காரணமாகத்தான் அவர் இந்தியாவிலேயே ஒரு ஈடு இணையற்ற ராஜ தந்திரியாக விளங்க முடிந்தது.

(பிற்பகல் 6-20)

வெறும் காங்கிரசினுடைய கொடி எடுத்த தொண்டனாக ஆரம்பித்து, நாட்டினுடைய தலைவிதியை நிர்ணயிக்கும் மாமனிதனாக உயர்ந்தவர் அவர் இந்த மாநிலத்திற்கு, தமிழகத்திற்குப் பெருமை தேடித் தந்திருக்கின்ற மற்றவர்களை அவரைப் பொறுத்த அளவிலே எப்படி மதித்தார் என்று நாம் அறிவோம். யாரையும் விரோதிகளாக அவர் எண்ணியது கிடையாது. பேரறிஞர் அண்ணா அவர்களிடம் அவருக்கிருந்த ஈடுபாடு எனக்குத் தெரியும். அவர் கடைசியாக நோய்வாய்ப்பட்டிருந்தபோது, மருத்துவமனையிலே சென்று பார்த்தார், முதன் முறையாக கடுமையான நோய் வந்திருந்தது. மருத்துவர்கள் பயத்தின் காரணமாக இதை எப்படி வெளியிடுவது என்று பயந்து கொண்டு மருத்துவம் செய்யாமல் அல்லது எப்படி மருத்துவம் செய்வது என்று பயப்பட்டார்கள். முதலமைச்சர் என்ற முறையில் எவ்வளவு சிறந்த



1978 செப்டம்பர் 13] (திரு. க. இராமமூர்த்தி)

மருந்துகள் தந்தாலும் எப்படி இருக்குமோ என்று மருத்துவர்கள் அச்சத்தோடு இருந்தார்கள். அவர் மருத்துவர்களிடம் கோபித்துக் கொண்டு அதற்காக ஒரு மருத்துவர்கள் பேனலைப் போட்டு, மருத்துவர்கள் அண்ணா அவர்களைப் பரிசோதனை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலே ஒரு 'பேனல் ஆப் டாக்டர்ஸ்' நியமிக்கப்பட்டார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, அந்நியச் செலவாணித் தடங்கல்கள் ஏற்பட்டன. காலதாமதம் ஏற்படுமே என்று மிகக் கடுமையாக மத்திய அரசுடன் போராடி, உடனடியாக அந்நியச் செலவாணி பெறச் செய்தார். அதை இப்போது நான் நினைத்துப் பார்க்கிறேன். அதுமட்டுமல்ல, பல நேரத்திலே அண்ணா முதலமைச்சராக இருந்தபோது, எதிர்க்கட்சியிலே இருந்த நாங்கள், அவரிடம் எப்படியெல்லாம் சட்டமன்றத்திலே எதிர்த்துப் பேசினோம் என்பதைப் பற்றியெல்லாம் பேசிக்கொண்டிருப்போம். அப்போது பத்திரிகைகளிலே எழுதுகிறபோது வயதின் காரணமாக, கோபதாபங்கள் காரணமாக, கொஞ்சம் முறை தவறி வார்த்தைகளைப் பயன்படுத்தினால், எவ்வளவு கடுமையாக எங்களை எச்சரித்து அனுப்புவார் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். இந்த நாட்டிற்காக, பாடுபட்ட மனிதர்களை அவ்வளவு சுலபமாக அலட்சியப் படுத்திவிடக் கூடாது என்பதில் கண்டிப்பாக இருப்பார். தந்தை பெரியார் அவர்களுக்கும் இவருக்கும் இருந்த ஈடுபாட்டைப் பற்றி நான் சொல்லத் தேவையில்லை. பெருந்தலைவர் காமராஜரைக் கதராடை அணிந்த பெரியார் என்றுதான் குறிப்பிட்டார்கள். அந்த அளவுக்கு அவர்களிடத்திலே இருந்த நெருக்கத்தை, நேரடியாக அவர்கள் அளவளாவிக் கொண்டிருந்ததை என்னால் எண்ணிப் பார்க்க முடிகிறது. அப்படிப்பட்ட தலைவர், என்னுடைய உற்ற தலைவர், தமிழகத்தின் விடுதலைத் தலைவர், விடுதலை அடைந்த இந்தியாவில் தமிழகத்தை வளமிக்க நாடாக வளர்த்த தலைவர், இந்தியாவினுடைய தலைவிதியை முறையாக நிர்ணயித்து, நல்வாழ்வை ஏற்படுத்துவதற்கு வழிவகுத்துத்தந்த தலைவர் பெயராலே இன்றைக்கு பல்கலைக் கழகம் அமைகிறது என்று பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகிறேன். அதிலே பெருந்தலைவர் என்கிற வார்த்தையை சேர்ப்பதினாலே மேலும் பெருமை அடைய முடியும். அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், ஒரு சங்கடம் இருக்கலாம். சட்டமன்றப் பேரவையிலே நிறைவேறி வந்திருக்கிறது. மீண்டும் இதற்குத் திருத்தம் என்றால் பேரவைக்குச் செல்ல வேண்டுமே என்று இருக்கலாம். இன்னும் ஒரு நாள் இருக்கிறது; செய்ய முடியும். பெருந்தலைவர் என்ற பெயர் அந்த வார்த்தை இருந்தால் தான் மரியாதையா என்பதல்ல. பொன் குடத்திற்குப் பொட்டிட்டுப்பார்க்க வேண்டுமா என்று

சொல்லுவார்கள். பெருந்தலைவர் காமராஜரைப் பொறுத்தவரையில், காமராஜ் என்றால் தானாகவே பெருந்தலைவர் என்று எண்ணத் தோன்றும். வர இருக்கின்ற தலைமுறையினர் எந்தச் சூழ்நிலையில் பெருந்தலைவர் என்ற பெயர் வந்தது என்பதையும் எண்ணிப்பார்க்கின்ற வாய்ப்பு ஏற்படும். அத்தோடு மட்டுமல்ல, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தந்தை பெரியார் பல்கலைக் கழகம், பேரறிஞர் அண்ணா பல்கலைக் கழகம் என்று சொல்லும்போது, இதுமட்டும் காமராஜ் பல்கலைக் கழகம் தானா என்று நினைத்துவிடக்கூடாது என்ற நல்ல நோக்கத்தோடு அதிலே கூட சங்கடம் ஏற்படக்கூடாது என்பதை எண்ணி, பெருந்தலைவர் காமராஜ் பல்கலைக் கழகம் என்று பெயர் சூட்ட வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். நிச்சயமாக அமைச்சர் அவர்கள் இதை ஏற்பார்கள் என்று கருதுகிறேன். மதுரை என்று இருப்பதிலே மாறுபட்ட கருத்து எனக்கில்லை. அது நல்லது என்றுதான் நானும் கருதுகிறேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் சொன்னார்கள். பெருந்தலைவர் காமராஜ் பொது வாழ்க்கையினுடைய அடித்தளமாக மதுரை இருப்பதாலே, அதிலே தவறில்லை. பெருந்தலைவர் என்ற வார்த்தையை சேர்ப்பதில் அவசியம் சங்கட்டம் வாராது. அது மேலும் பெருமையைச் சேர்க்கும் என்று கூறி, அமைச்சர் அவர்கள் இந்தத் திருத்தத்தை ஏற்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 'காமராஜர்' என்ற அந்தப் பெயர் உலகம் அறிந்த பெயராக இருக்கின்ற காரணத்தினாலே, அப்படியே அந்தப் பல்கலைக் கழகத்திற்கு வைத்திருக்கிறோம். வேறு வார்த்தைகளைச் சேர்த்துக் கொள்வது உலகம் தெரிந்த அந்தப் பெயருக்குப் பொருத்தமாக இருக்காது என்ற காரணத்தினாலே, அப்படி வைக்கப்பட்டிருக்கிறது. எனவே அருமை நண்பர் திருத்தத்தை வலியுறுத்த மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பிரிவுகள் 3, 4, 5, 6 ஆகியவைகளுக்கும் உறுப்பினர் அவர்கள் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். எல்லாத் திருத்தங்களும் ஒரே மாதிரியாக இருப்பதால் அவைகளை வற்புறுத்தமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

திரு. செ. முத்துசாமி: மற்ற திருத்தங்களை முன்மொழிய விரும்பவில்லை.





பிரிவுகள் 3 முதல் 7 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1978 ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக் கழக (திருத்த சிறப்பு விதித்துறைகள்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு/எண் 32-1978) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1978 ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக் கழக (திருத்த சிறப்பு விதித்துறைகள்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1978) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் என்னுடைய குரலைக் கேட்க முடியவில்லை என்று வருந்தினார்கள். இந்த மசோதாவின் மீது பேச விரும்பியவர்களை எல்லாம் பேச விட்டேன். மணியின் மீது கை வைப்பதில்லை என்ற விரதத்தோடு பேசவிட்டேன். அவர்கள் பேசி முடிக்கும் வரையில் பேசவிட்டேன். தலைவராக வந்த பிறகு, இன்றுதான் மணி அடிக்கின்ற வேலை வேண்டாம் என்று விட்டுவிட்டு, எல்லோரையும் பேசவிட்டேன். அது என்னுடைய மகிழ்ச்சிக்கு அடையாளம். பட்டம் பெறாத ஒருவருடைய, பெயரை, பட்டதாரிகளை உற்பத்தி பண்ணுவதற்கென்றே தோன்றியிருக்கின்ற பல்கலைக்கழத்திற்கு வைத்தது உலகத்திலேயே நம் தமிழ் நாட்டில் தான் ; தலைவர் காமராஜ் அவர்கள் பெயர்தான். இதுதான் முதன்முதலாகத் தோன்றிய ஒன்று. இந்த ஆட்சி செய்திருக்கும் புரட்சிக்கு, புரட்சிகரமான காரியத்திற்கு அமைச்சர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும், அந்தத் தீர்மானத்திற்கு ஒரு மனதாக ஆதரவளித்திருக்கும் அங்கத்தினர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுடன் நானும் பலமுறை சிறையில் சேர்ந்திருந்தவன். அப்போது வயது முதிர்ந்த நண்பராக நான்தான் இருந்துகொண்டிருந்தேன். இந்தத் தீர்மானத்தை நான் மனமகிழ்ச்சியோடு ஆதரிக்கிறேன். இந்த மசோதாவுக்கு வாழ்த்துக் கூறிக்கொள்கிறேன்.

2. அறிவிப்பு—தொடர்ச்சி

(4) 1978-79 ஆம் நிதியாண்டிற்குரிய அவைக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவைக்கு ஓர் அறிவிப்பு.

1978-79 ஆம் நிதியாண்டிற்குரிய அவைக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஆறு உறுப்பினர் பதவிகளுக்கு, கீழ்க்கண்ட உறுப்பினர்கள் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் :—

1. திருமதி சி. தமிழரசி.
2. திரு. பி. ஆர். தாமஸ்.
3. திரு. ஜெ. எம். மியாக்கான்.
4. திரு. செ. முத்துசாமி.
5. புலவர் புலமைப்பித்தன்.
6. திரு. எல். இராமகிருஷ்ணத் தேவர்.

நியமனம் செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையானது, அதாவது, ஆறு, நிரப்பப்பட வேண்டிய காலியிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், இந்த ஆறு உறுப்பினர்களும், அவைக் குழுவிற்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அத்துடன் மேலவை விதி 173(1)ன் படி கீழ்க்கண்ட உறுப்பினர்களை நான் நியமிக்கிறேன்.

1. திரு. க. மீனாட்சிசுந்தரம்.
2. திரு. ஆ. நல்லசிவம்.

மேலவைத் துணைத் தலைவர், அலுவல் முறையில், குழுவின் தலைவராவார்.

மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று மீண்டும் நாளை மாலை 3 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1.30)



8. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

Nil.

B. *Reports, Notifications and Other Papers.*

† 25. The Tamil Nadu Agricultural Produce Markets (Amendment and Special Provisions) Bill, 1978 (L.A. Bill No. 27 of 1978), as passed by the Assembly.

† 26. The Madurai City Municipal Corporation (Third Amendment) Bill, 1978 (L.A. Bill No. 28 of 1978), as passed by the Assembly.

† 27. The Madras City Municipal Corporation and the Madurai City Municipal Corporation (Amendment) Bill, 1978 (L.A. Bill No. 29 of 1978), as passed by the Assembly.

---

† Laid on the Table of the House on 12th September 1978.

## இணைப்பு I.

## L.A. BILL No. 35 OF 1978.
(As passed by the Assembly.)

[322 ஆம் பக்கத்தில் இனம் 7(1)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

*A Bill to provide for the appropriation of certain further moneys out of the Consolidated Fund of the State for the service of the financial year which commenced on the 1st April* 1978.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-ninth Year of the Republic of India as follows:—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Appropriation (No. 5) Act, 1978.

2. *Supplementary appropriation out of the Consolidated Fund for the financial year which commenced on the 1st April* 1978.—The State Government may appropriate out of the Consolidated Fund of the State for the financial year which commenced on the 1st April 1978, a further sum not exceeding 22 crores, fifty-two lakhs and fifty-one thousand rupees being moneys required to meet—

(*a*) the supplementary grants made by the Tamil Nadu Legislative Assembly for that period, as set forth in column (3) of the Schedule; and

(*b*) the supplementary expenditure charged on the Consolidated Fund of the State for that period, as set forth in column (4) of the Schedule.

### THE SCHEDULE.
(*See* section 2)



| *Demand number.* | *Services and purposes.* | *Sums not exceeding.* *Voted by the Legislative Assembly.* | *Charged on the Consolidated Fund of the State.* | *Total.* |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | Rs. | Rs. | Rs. |
| 1 | Land Revenue Department. | .. | 8,000 | 8,000 |
| 3 | Motor Vehicles Acts—Administration. | 50,00,000 | .. | 50,00,000 |
| 9 | Head of State, Ministers and Headquarters Staff. | 2,09,000 | .. | 2,09,000 |
| 11 | District Administration .. | 39,60,000 | .. | 39,60,000 |
| 13 | Administration of Justice .. | .. | 1,36,000 | 1,36,000 |
| 14 | Jails .. .. .. | 15,00,000 | .. | 15,00,000 |
| 16 | Fire Services .. .. | .. | 34,000 | 34,000 |
| 17 | Education .. .. .. | 25,58,000 | .. | 25,58,000 |
| 18 | Medical .. .. .. | 3,99,000 | .. | 3,99,000 |
| 19 | Public Health .. .. | 71,91,000 | .. | 71,91,000 |
| 20 | Agriculture .. .. .. | 6,01,000 | .. | 6,01,000 |
| 21 | Fisheries .. .. .. | 21,39,000 | .. | 21,39,000 |
| 23 | Co-operation .. .. | 21,98,000 | .. | 21,98,000 |
| 24 | Industries .. .. .. | 66,88,000 | .. | 66,88,000 |
| 25 | Cinchona .. .. .. | 2,50,000 | .. | 2,50,000 |
| 27 | Khadi .. .. .. | 2,53,000 | .. | 2,53,000 |
| 30 | Social Welfare .. .. | 18,25,000 | .. | 18,25,000 |
| 31 | Welfare of the Scheduled Tribes and Castes, etc. | 4,90,000 | .. | 4,90,000 |
| 32 | Welfare of the Backward Classes, etc. | 3,91,000 | .. | 3,91,000 |
| 34 | Urban Development .. | 3,25,00,000 | .. | 3,25,00,000 |
| 35 | Civil Supplies .. .. | 70,72,000 | .. | 70,72,000 |
| 36 | Irrigation .. .. .. | 4,50,00,000 | .. | 4,50,00,000 |
| 37 | Public Works-Buildings .. | 5,86,000 | .. | 5,86,000 |
| 39 | Roads and Bridges .. | 3,00,00,000 | .. | 3,00,00,000 |
| 40 | Road Transport Services and Shipping. | 25,00,000 | .. | 25,00,000 |
| 43 | Miscellaneous .. .. | 41,03,000 | .. | 41,03,000 |
| 45 | Forest Department .. | 6,71,000 | .. | 6,71,000 |
| 47 | Information, Tourism and Film Technology. | 6,42,000 | .. | 6,42,000 |

| Demand number. | Services and purposes. | Sums not exceeding. Voted by the Legislative Assembly. | Charged on the Consolidated Fund of the State. | Total. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (6) |
| | | Rs. | Rs. | Rs. |
| 50 | Capital Outlay on Agriculture. | 5,31,000 | .. | 5,31,000 |
| 51 | Capital Outlay on Industrial Development. | 1,90,45,000 | .. | 1,90,45,000 |
| 52 | Capital Outlay on Irrigation. | .. | 1,000 | 1,000 |
| 53 | Capital Outlay on Public Works—Buildings. | 21,26,000 | .. | 21,26,000 |
| 54 | Capital Outlay on Roads and Bridges. | 28,61,000 | .. | 28,61,000 |
| 56 | Capital Outlay on Forests. | 23,10,000 | .. | 23,10,000 |
| 57 | Miscellaneous Capital Outlay. | 2,73,72,000 | .. | 2,73,72,000 |
| 58 | Loans and Advances by the State Government. | 1,21,01,000 | .. | 1,21,01,000 |
| | Grand Total .. | 22,50,72,000 | 1,79,000 | 22,52,51,000 |

I certify that this is a Money Bill.

Fort St. George,
Madras,
Date: 13-9-1978.

MUNU ADHI,
*Speaker,*
*Tamil Nadu Legislative Assembly.*



[ 323 ஆம் பக்கத்தில் இனம் 7(2) க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. Bill No. 33 of 1978.

(As passed by the Assembly.)

*A Bill to amend the Tamil Nadu Co-operative Societies (Appointments of Special Officers) Act, 1976.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-ninth Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officers) Amendment Act, 1978.

(2) It shall be deemed to have come into force on the 6th day of June 1978.

2. *Amendment of President's Act 25 of 1976.*—In the Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officers Act, 1976 (President's Act 25 of 1976), in section 4, in sub-section (1), for the words " two years " the words " three years " shall be substituted.

3. *Repeal.*—(1) The Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officers) Amendment Ordinance, 1978 (Tamil Nadu Ordinance 3 of 1978), is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the said Ordinance shall be deemed to have been done or taken under this Act as if this Act had come into force on the 6th day of June 1978.

## இணைப்பு III

[339 ஆம் பக்கத்தில் இனம் 7(3)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. Bill No. 32 of 1978.
(As passed by the Assembly.)

*A Bill further to amend the Madurai University Act,* 1965.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-ninth Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Madurai University (Amendment and Special Provisions) Act, 1978.

(2) It shall be deemed to have come into force on the 22nd July 1978.

2. *Amendment of section* 1, *Tamil Nadu Act* 33 *of* 1965.—In sub-section (1) of section 1 of the Madurai University Act, 1965 (Tamil Nadu Act 33 of 1965) (hereinafter referred to as the principal Act), for the expression "the Madurai University Act", the expression "the Madurai Kamaraj University Act" shall be substituted.

3. *Amendment of section* 3, *Tamil Nadu Act* 33 *of* 1965.—In section 3 of the principal Act, in sub-section (1), for the expression "by the name 'the Madurai University' ", the expression "by the name 'the Madurai Kamaraj University' ", shall be substituted.

4. *Substitution of the expression "Madurai Kamaraj University" for the expression "Madurai University" in Tamil Nadu Act* 33 *of* 1965.—Throughout the principal Act, except in section 1 and sub-section (1) of section 3, for the expression "Madurai University" wherever it occurs, the expression "Madurai Kamaraj University" shall be substituted.

5. *Construction of references to "Madurai University" and "Madurai University Act".*—References to "Madurai University" and "Madurai University Act" in any Act or in any rule, notification, proceeding, order, regulation, by-law or other instrument made or issued under such Act or "statutes", "ordinances" and "regulations" made or continued in force under the principal Act shall be construed as references to "Madurai Kamaraj University" and "Madurai Kamaraj University Act" respectively.



6. *Legal proceedings.*—Where immediately before the commencement of this Act any legal proceedings are pending to which the "Madurai University" is a party, the "Madurai Kamaraj University" shall be deemed to be substituted for the "Madurai University" in those proceedings.

7. *Repeal.*—(1) The Madurai University (Amendment and Special Provisions) Ordinance, 1978 (Tamil Nadu Ordinance 7 of 1978), is hereby repealed.

(2) Notwithstanding such repeal anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act, as if this Act had come into force on the 22nd July 1978.

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

## வியாழக் கிழமை, 1978 செப்டம்பர் 14.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 3 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிடாத வினாக்கள்

### கரும்பு சாகுபடிக்கு கடன்

8. கே.—திரு. கோ. சி. மணி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம், . பாபநாசம், சீர்காழி, மாயவரம், நன்னிலம், நாகப்பட்டினம், திருத்துறைப் பூண்டி ஆகிய வட்டங்களில், கரும்பு சாகுபடிக்கென்று 1977 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி முதல் ஜூலை 31 ஆம் தேதி முடிய கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்கள் மூலம் கும்ப கோணம் மத்திய கூட்டுறவு வங்கி, எத்தனை ஏக்கர் நன்செய், புன்செய் நிலங்களுக்காக கடன் வழங்கியுள்ளது ?

(இ) வழங்கப்பட்ட தொகை (1) மொத்தம், (2) வட்ட வாரியாக எவ்வளவு ?

பதில்.—(அ) & (இ) அவையில் ஓர் அறிக்கை @ வைக்கப் பட்டுள்ளது.

### அரிசனங்கள் நடத்தும் உப்பு உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள்.

9. கே.—திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழகத்தில் முழுக்க முழுக்க அரிசனங்களே அமைத்து நடத்து கின்ற உப்பு உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள் எங்கெங்கு உள்ளன ?

9. 890. ப—

| சங்கங்களின் பெயர். | சங்கம் இருக்கும் மாவட்டம் |
|---|---|
| 1. மொரக்காணம் உப்பு தொழிலாளர் கூட்டுறவு & விற்பனை சங்கம். .. | தென் ஆற்காடு |

@499ஆம் பக்கத்தில் இணைப்பு 1 ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1978 செப்டம்பர் 14

| | |
|---|---|
| 2. செய்யூர் அரிசன கூட்டுறவு உப்பு உற்பத்தி விற்பனை சங்கம். | .. செங்கற்பட்டு |
| 3. தய்யூர் அரிசன கூட்டுறவு உப்பு உற்பத்தி விற்பனை சங்கம். | .. செங்கற்பட்டு |
| 4. உற்பத்தி & விற்பனை சங்கம்... | செங்கற்பட்டு |
| 5. துலுக்கன்குளம் அரிசன உப்பு தொழிலாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம். | .. திருநெல்லேலி |
| 6. வினோபாஜி அரிசன உப்பு தொழிலாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம்... | திருநெல்வேலி |

Provident Fund Accounts of Aided School Teachers.

10. Q.— THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a). whether it is a fact that a sum of Rs. 10/- per month deducted from the salary of Aided School teachers at Mannargudi, Thanjavur District, from 1-2-1974 to 1-2-1975, has not been credited to the Provident Fund accounts of such teachers;

(b) if so, the reason for the omission; and

(c) the action proposed to be taken in the matter?

ப.— (அ) ஆம்.

(இ) தனியார் பள்ளி நிர்வாகத்தினர்களிடமிருந்தும், பள்ளித் துணை ஆய்வாளரிடமிருந்தும் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் கூடுதல் கொடுப்பு நிதி (Excess subscription) பற்றிய விவரங்கள் கிடைக்காததால் வருங்கரல சேமநலநிதிக் கணக்குகளில் சேர்க்கப்படவில்லை.

(உ) நாகப்பட்டின மாவட்டக் கல்வி அலுவலர், ஆசிரியர்களிடமிருந்து குடும்ப நலத் திட்டத்தின் கீழ் கூடுதலாக பிடிக்கப்பட்ட தொகைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, வங்கி டிராப்டுகளை (Bank Drafts) 16-5-1978 அன்று, தனியார் பள்ளி நிர்வாகத்தினர்களுக்கு ஆசிரியர்களின் வருங்கால சேம நிதியில் சேர்ப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளது;



1978 செப்டம்பர் 14]

*Mahatma Gandhi Memorial Tuberculosis Sanatorium, Segipatti*

11Q.— Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether the Government are aware of the serious allegations made regarding the maladministration in Mahatma Gandhi Memorial Tuberculosis Sanatorium, Sengipatti; and

(b) if so, whether there is any proposal to appoint an Enquiry Committee to go into the matter?

A.— (a) Certain complaints have been received against the administration of Mahatma Gandhi Memorial T. B. Sanatorium which is under private management.

(b) They were examined by Government and they were found to be baseless.

(அ) செங்கிப்பட்டியில் தனியார் பராமரிப்பிலுள்ள மகாத்மா காந்தி நினைவு காசநோய் நிலையத்தின் நிர்வாகத்தில் தவறுகள் பற்றி சில புகார்கள் அரசிற்கு வந்துள்ளது.

(இ) அவைகளை அரசு ஆய்வு செய்தது. ஆதாரமற்றவை எனக் கருதுகிறது.

2. அரசின் தீர்மானம்.

வினா நேரம் கைவிடப்படுதல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவைக்கு ஒரு தகவல். இன்று ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில், எதிர்கட்சித் தலைவர் அவர்களுடைய உரையும், முதல்வருடைய பதிலுரையும் இருப்பதால் வினா நேரத்தை ரத்து செய்து மற்ற நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். அவையின் அபிப்பிராயத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசா முகமது: தலைவர் அவர்களே,

"சட்ட மன்ற மேலவையின் விதி 22-ன் கீழ் கேள்வி நேரம் கைவிடப்படலாம்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு அவையின் முன்னவர் அவர்களுடைய வேண்டுகோளை எல்லாக் கட்சித் தலைவர்களும் ஏற்றுக்கொண்டால் நாங்களும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்;

[1978 செப்டம்பர் 14

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

''சட்ட மன்ற மேலவையின் விதி 22-ன் கீழ் கேள்வி நேரம் கைவிடலாம்''.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

### 3. உரிமைப் பிரச்சினை

(1) உறுப்பினர்கள் திருவாளர்கள் அப்துல் வகாப், வசந்த பை ஆகியோர் எழுப்பிய உரிமைப் பிரச்சினைகளின் மீது தீர்ப்பு.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அப்துல் வகாப், திரு. வசந்த பை ஆகியவர்கள் எழுப்பிய உரிமைப் பிரச்சினையின் மீது எனது தீர்ப்பை இன்று அறிவிக்கிறேன் என்று அறிவித்தேன். ஆனால் இது நன்கு பரிசீலிக்க வேண்டியுள்ளது. மாண்புமிகு உறுப்பினர்கள் சட்டப் பிரச்சினைகளை எழுப்பியுள்ளார்கள். நீதி மன்றத்தில் 'அஃபிடவிட்' சம்பந்தமாக உள்ளவைகளையெல்லாம் பரிசீலிக்க வேண்டும். நீதி மன்றமும் இழுக்கப்பட்டிருப்பதால்' இது குறித்துத் தீர பரிசீலித்து தீர்ப்பை வழங்குவது எனது கடமையாகும். ஆகவே எனது தீர்ப்பை அடுத்த கூட்டத்திலே அறிவிக்கிறேன்.

### (2) மேலவை முன்னவர் வக்ஃப் போர்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை குறித்து, உறுப்பினரின் கூற்றுப்படி கொடுத்த தவறான தகவல் குறித்து

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அடுத்து, இரண்டாவது உரிமைப் பிரச்சினை. திரு. அப்துல் வகாப் அவர்கள் மேலவை முன்னவர் அவர்கள் மீது ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்ப முன்னறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். உரிமைப் பிரச்சினை என்பது, அண்மைக் காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியாக இருக்க வேண்டும். பிப்ரவரி மாதத்தில் நடந்த நிகழ்ச்சியைக் குறித்து, இப்போது எழுப்புவதானது, உரிமைப் பிரச்சினையின்கீழ் வராது என்று விதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இருப்பினும் இது குறித்து அவையின் முன்னவர் என்ன சொல்லுகிறார் என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. க. இராசா முகமது : தலைவர் அவர்களே' மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வகாப் அவர்கள் என் மீது ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த அவைக்கு நான் ஒரு தவறான தகவலைத் தந்திருக்கிறேன் என்று அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அது காலம் கடந்தது என்றாலும்



கூட, அவைக்கும், சமூதாயத்திற்கும், இந்த நாட்டு மக்களுக்கும், நிலைமையை மேலும் தெளிவுபடுத்த ஒரு வாய்ப்புக் கிடைக்க இருப்பதால், தயவு செய்து, அதை அனுமதித்து அவரை விளக்கச் சொல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்குப் பிறகு என்னுடைய பதிலைச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதி 157-ன் கீழ் கீழ்க்கண்ட உரிமைப் பிரச்சினைக்கு முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறேன்.

24.2.1978 அன்று பட்ஜெட் விவாதத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். எம். பக்கர் அவர்கள், ''வக்ஃப் வாரியத்திற்காக 3 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இது நல்ல முயற்சி. இது ஆண்டு தோறும் ஒதுக்கப்பட்டு வரும் தொகை என்று நினைக்கிறேன். வக்ஃப் போர்ட் இன்னும் நன்கு சீராக இயங்க சில உதவிகளை இந்த அரசிடத்திலிருந்து எதிர்பார்க்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்'' என்று கூறியிருக்கிறார்.

இதைக் குறிப்பிட்டு, மாண்புமிகு அமைச்சர் திரு. இராசா முகமது அவர்கள் பேசியது உண்மைக்குப் புறம்பான கருத்து. அவர்கள் பேசியதாவது :

''தொடர்ந்து ஆண்டுதோறும் 3 இலட்சம் ரூபாய் கொடுத்து வருகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அவர் இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்த்திருந்தால் ஒன்று தெரிந்திருக்கும். மேலும் வக்ஃப் சொத்துக்களைப் பராமரித்து பெருக்குவதற்கென்று, சொத்துக்களில், நிலங்களில், கட்டிடங்களைக் கட்டி அனுபவரீதியாக வாடகை வருவாயைப் பெற வேண்டும் என்கிறார்கள். ரூபாய் 3 இலட்சம் கொடுப்பதற்கு இந்த ஆண்டு இந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப் பட்டிருக்கிறது. இந்தப் பணத்தைக் கொண்டே கர்நாடகா மாநிலத்தில் செய்வதைப் போன்று நம் வக்ஃப் வாரியமும், இந்தப் பணத்தில் ஈடுபடுத்திச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.'' இப்படி அமைச்சர் சொல்லியிருப்பது உண்மைக்குப் புறம்பான தகவல். கடனாகக் கொடுக்கப்பட்ட தொகையை கடன் என்று குறிப்பிடாமல் மானியம் என்று பொருள் பட பேசியிருக்கிறார்கள். சபைக்கு இப்படி தவறான தகவல் கொடுத்தது, சபையின் உரிமையை மீறிய செயலாகும். ஆகவே இந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பி நியாயம் வழங்க கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசா முகமது : மாண்புமிகு தலைவர் அவர்களே, 24-2-1978 அன்று நிதிநிலை அறிக்கையின் மீது, மறைந்த முன்னாள் மேலவை உறுப்பினர் திரு. எம். எம். பக்கர் அவர்கள், தன்னுடைய கருத்துக்களைத் தெரிவித்தபோது, வக்ஃப்

வாரியம் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்றும், பாதுகாப்பு இல்லாமல் இருக்கிற வக்ஃப் சொத்துக்களை முறையாகப் பராமரிக்க வேண்டும் என்றும், அதற்கு அரசு தக்க நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும் பேசிக்கொண்டு வந்தார்கள். அப்போது அவர்கள் குறிப்பிட்டுப் பேசுகிறபோது, சாதாரணமாக 3 இலட்சம் ரூபாய், ''ரிப்பேர் அண்டு ரெனவேஷன்'' என்ற வகையிலே ஒதுக்கப்பட்டு வருகிறது ; அதுபோல் அல்லாமல் கர்நாடகா மாநிலத்திலே ஒதுக்கப்பட்டதைப்போல, ''வக்ஃப்டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன்'' என்ற ஒரு அமைப்பை அமைத்து வக்ஃப் சொத்துக்களின் மீது கட்டிடங்களைக் கட்டியோ, அல்லது வேறு வகையான முறையிலோ வருவாயைப் பெருக்குகிற வகையில் அந்தப் பணத்தைச் செலவிடுவதற்கு..

<u>திரு. க. இராமமூர்த்தி :</u> பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, இந்த உரிமைப் பிரச்சினையைப் பொறுத்த வரையிலே, விதிகள் மிகத் தெளிவாக இருக்கின்றன.

the alleged breach of privilege must refer to a matter of recent occurrence.

இது எப்போதோ நடந்த ஒன்று. இந்த அவையில் இருக்கிற பல பேருக்குத் தெரியாது. இந்த அவை கூட்டிய பிறகு ஏறத்தாழ பத்துப் பதினைந்து நாட்கள் நடந்து முடிகிற நிலையில் கொண்டு வருவது சரியல்ல. மேலும் இது அண்மையில் நடந்த நிகழ்ச்சியுமல்ல. இதிலே சம்பந்தப்பட்ட உறுப்பினர் இங்கே இல்லை. இந்த நிலையிலே இது எப்படி உரிமைப் பிரச்சினையாகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர் :</u> மாண்புமிகு உறுப்பினர் நான் சொல்லும்போது அவையில் இல்லை. தொடக்கத்திலேயே நான் சொல்லிவிட்டேன். சமீபத்தில் நடந்த நிகழ்ச்சியா இல்லையா என்ற முடிவுக்கு நான் வரவில்லை. தாங்கள் சொன்னதையும் கவனத்தில் வைத்து முடிவு செய்கிறேன்.

<u>திரு. க. இராமமூர்த்தி :</u> இதை அனுமதிப்பது என்பதே இல்லை. இந்தப் பிரச்சினையை எழுப்புவதற்கே நியாயம் கிடையாது. இப்படியொரு தவறான நிலை வந்துவிடுமானால், அதன் அடிப்படையிலே பின்னால் இது போல் மேலும் வரலாம்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர் :</u> ஏற்கெனவே உள்ள மரபுகளும், சட்டங்களும், மாற்றப்படக்கூடாதுதான். இன்னும் இது பற்றி நான் தீர்ப்புச் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை எழுப்ப வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு முன்னவர் அவர்களும் விளக்கம் தர வேண்டும் என்று



சொன்னார்கள். சம்பந்தப்பட்ட இரண்டு பேரும் சம்மதம் தெரிவிக்கும்போது, அதைக் கண்டிப்பாகச் செய்யக் கூடாது என்று சொல்வது எப்படி ?

<u>திரு. க. இராமமூர்த்தி:</u> எழுப்பப்பட்ட விவாதத்திலே அமைச்சர் அவர்கள் தன்னுடைய தன்மையைத் தெளிவாக்க வேண்டிய கட்டாய நிலைக்கு வந்திருக்கிறார்கள். எழுப்புவதற்கே நியாயம் இல்லாமல் விதிகளுக்குப் புறம்பான முறையிலே எழுப்பப்பட்டிருக்கிறது. தயவுசெய்து, தலைவர் அவர்களே, இதை நீங்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர் :</u> உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொல்லுவதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். காலம் கழித்து இங்கே அனுமதிப்பது என்பது தவறானதுதான். இது ஒரு புதிய மரபாக ஆகிறது. இருந்தாலும் முன்னவர் என்ன சொல்லுகிறார் என்று பார்க்கலாம்.

<u>மாண்புமிகு திரு. க. இராசா முகமது :</u> தலைவர் அவர்களே, இது அண்மையிலே நடைபெறவில்லை என்றாலும் கூட, ஏதோ ஒரு வகையான நிர்பந்தத்தின் காரணமாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவருடைய விருப்பத்திற்கேற்ப நல்ல விளக்கம் தரலாம் என்ற நல்லெண்ணத்தில் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நிலைமை தெளிவாக இருக்கிறது. ஆகவே நீங்களே முடிவு செய்யுங்கள்.

(பிற்பகல் 3-10)

<u>திரு. க. இராமமூர்த்தி :</u> ஒரு வேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதற்கு முன்னாலேயே நான் இதை எழுப்பியிருக்க வேண்டும். இதை உரிமை மீறலாக எடுத்துக்கொள்ளாமல், வேண்டுமானால், ஒரு விளக்கமாக முன்னவர் தந்தால், நன்றாக இருக்கும். தயவுசெய்து உரிமை மீறல் விதியின்கீழ் இதை எடுக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>*மாண்புமிகு திரு. க. இராசா முகமது :</u> மாண்புமிகு முன்னாள் உறுப்பினர் திரு. பக்கர் அவர்கள் இந்த அவையில் பேசும்போது ''கர்நாடக அரசு வக்ஃப் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் என்ற ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதற்கு அரசு ஓரளவு கடன் கொடுத்து வருகிறது'' என்று சொன்னார்கள். 'கடன்' கொடுத்து வருகிறது என்று அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன உடனே நான் தமிழக வக்ஃப் வாரியம், வக்ஃப் சொத்துக்களை எல்லாம் சரியாகப் பராமரித்து கட்டிடங்கள் கட்டி நல்ல வருமானம் கிடைக்க ஏற்பாடு செய்கிறார்கள் என்று சொன்னேன். அவர்கள் நிதிநிலை அறிக்கையைப் பார்த்திருக்க வேண்டும். மேலும்

அதிலிருந்தது வாடகையாக வருவாய் வருகிறது என்கிறார்கள். ரூபாய் 3 இலட்சம் கூடுதலாக இந்த நிதிநிலை அறிக்கையில ஒதுக்கப்பட்டிருக்கிறது. கர்நாடக வக்ஃப் போர்ட் செய்வது போன்று நம் வக்ஃப் போர்டும் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன் என்று குறிப்பிட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டபோது இது மானியமா அல்லது கடனா என்று சொல்லாமல் இருக்கிறீர்களே, அப்படியென்றால் அது மானியம் என்றுதானே அர்த்தம் தொனிக்கும்படி சொல்லியிருக்கிறீர்கள் என்று சொன்னார்கள். ஆகவேதான் விளக்கம் என்ற முறையில் இப்பொழுது நான் இதைச் சொல்கிறேன். உரிமைப் பிரச்சினை என்ற முறையில் சொல்லும்போது, மார்ச்சுக்கு முன்னால் ஒரு அர்த்தம், அதே மாதிரி ஜனவரி மாதத்திற்கு முன்னால் ஒரு அர்த்தம் என்ற நிலையில் உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தால், உண்மையான அர்த்தம் வெவ்வேறு நேரத்தில் மாறுபடும் என்று மாண்புமிகு உறுப்பினர் நினைக்கிறாரா என்று தெரியவில்லை. இதை நான் தகவலுக்காக ஒரு நல்ல எண்ணத்தின் அடிப்படையில் தான் சொல்கிறேன். கர்நாடக அரசு கடன் கொடுத்து வருகிறது என்று அவர்கள் சொன்னார்கள். அதே அடிப்படையில் மூன்று இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னேன். இது குறித்து நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையின் நகல் என்னிடத்தில் இருக்கிறது. அதில்,

" a provision of Rs. 3 lakhs has been made for wakf institutions " என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இது எப்போதுமே உள்ள நடைமுறைதான்.

" In addition, a provision of Rs. 3 lakhs each has been made by way of loans for the development of income-yielding assets in Hindu Religious and Charitable Endowments and in Wakf institutions."

ஒவ்வொரு இன்ஸ்ட்டிட்யூஸனுக்கும் மூன்று இலட்சம் ரூபாய் கூடுதலாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படித்துப்பார்க்க வேண்டும். இது உரிமை மீறல் விதியின்கீழ் வரவில்லை. சட்டமன்ற மேலவை விதியின்படி உரிமை மீறல் விதியின்கீழ் வரவில்லை என்றாலும், விளக்கம் என்ற முறையில் இதை உறுப்பினருடைய தகவலுக்காக அளித்திருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உரிமை மீறல் சட்ட விதிகளின்கீழ் இதை அனுமதிக்க முடியாது. சட்ட விதிப்படி என் அறையிலேயே நான் இதை நிராகரிக்கலாம். நிராகரித்திருப்பேன். அப்படி நிராகரித்திருந்தால், இதை அவையில் எழுப்பவும் கூடாது. இதற்கு மேல் இதைப்பற்றி விவாதம் கிடையாது. விதிப்படி இது அமையாததால், இதை நான் அனுமதிக்கவில்லை.





திரு. பி. மாணிக்கம் : மேலவை விதி 43-ன்கீழ் நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அது இன்று எடுக்கப்படுமா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்று கூட்டத் தொடரின் கடைசி நாள், அநேக ஒத்திவைப்புத் தீர்மானங்கள் அது மாதிரி வந்திருக்கின்றன. சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் பார்த்து அதன் பிறகு தான் முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது. இப்பொழுது நான் முடிந்தவரை வரிசைக் கிரமப்படி எடுக்கிறேன்.

THIRU G. VASANTHA PAI: On a matter of information, Sir. I have also g·ven a Call-attention notice under Rule 42. If it is not going to be taken up in this Session, this call-attention notice may be taken up in the next Session. so that the answer may be got.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதை நேற்று தான் கொடுத்திருக்கிறீர்கள்.

THIRU G. VASANTHA PAI: I am only asking that it may be taken up in the next session without asking for further notice.

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்

### (1) மருத்துவக் கல்லூரிக்கு மாணவர் தேர்வு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : "மெடிக்கல் காலேஜ் அட்மிஷன்" பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை திரு. க. இராமமூர்த்தி அவர்கள் கொடுத்துள்ளார். அது எந்த வகையில் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குட்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் சுருக்கமாக விளக்கக் கோருகிறேன்.

*திரு. க. இராமமூர்த்தி : என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானம் :

I seek the permission of this House under Rule 44 of the Tamil Nadu Legislativt Council Rules for adjourning the Business of this House to d.scuss a matter of urgent public importance, viz., the situation arising out of a number of claimants having gone to the Court of Justice on their non-selection to the Medical course of the current year, the resultant insecurity of the students selected and admitted for the current college year in the Medical Colleges and their difficulty in pursuing coaching in Medical Colleges.

இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில் தேர்வு நடத்தியதைப் பொறுத்தவரை பெரிய அளவிற்குக் காலதாமதம் ஆயிற்று. காலதாமதமானதற்குப்

பின்னால் நீதிமன்றத்திற்கு இரண்டொரு மாணவர்கள் சென்ற காரணத்தினால், அவர்களைத் திரும்பவும் கல்லூரியில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று தீர்ப்பு வழங்கப்பட்டதினால், மேலும் 2 பேரைக் கல்லூரியில் சேர்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அப்படி நிலைமை ஏற்பட்டபோது, ஏற்கெனவே இருந்தவர்களுடைய இடத்தில் இவர்கள் வருவார்களா அல்லது அதிகமாக இடங்களை ஏற்படுத்தி சேர்த்துக்கொள்ளப்படுவார்களா என்ற பிரச்சினைகள் இருந்து வந்தன. நேற்றும் அதற்கு முன் தினமும் வந்திருக்கிற தகவல்படி மேலும் 20 தேர்ந்தெடுக்கப்படாத மாணவர்கள் தங்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தகுதி, நியாயம் எல்லாம் இருக்கிறது என்ற காரணத்தைச் சொல்லி நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். நீதிபதி அதை ஒரு பெஞ்சுக்கு அனுப்பியிருக்கிறார். இந்த நிலையிலே அந்த 20 வழக்குகளையும் ஒன்றுக்கு மேற்பட்ட நீதிபதிகள் விசாரித்து அவர்கள் தகுதியுள்ளவர்கள் என்று தீர்மானிக்கின்ற நிலை ஏற்படுமானால், அந்த 20 பேரை மீண்டும் வைத்தியக் கல்லூரியில் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற நிலை ஏற்படும்போது, அங்கே ஏற்கெனவே இருக்கின்ற 20 மாணவர்களை வெளியே அனுப்புகின்ற நிலை ஏற்படும். இப்பொழுது அங்கே பயின்றுகொண்டிருக்கின்ற 20 மாணவர்களும் வேறு வைத்தியக் கல்லூரிகளுக்குச் செல்ல முடியாத நிலை. அப்படியே மற்ற கலைக் கல்லூரிகளில் காலம் கடந்து செல்லுகின்ற நிலை. இப்பேர்ப்பட்ட சிக்கல்களை எல்லாம் தளர்த்தி அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுத்தாலும்கூட, பாடங்களைப் படிக்க முடியாத நிலைமை. ஏற்கெனவே சேர்த்துக்கொள்ளப்பட்ட 20 மாணவர்களின் இடங்களில் வேறு மாணவர்கள் 20 பேர் வருகின்றார்கள் என்ற நிலையில் மேற்கொண்டு அங்கே படிக்கின்ற மாணவர்கள் கல்வியைத் தொடர விடாமல் நிறுத்தி வைத்தல் போன்ற நிலைமை. அப்படியே 20 மாணவர்கள் தீர்ப்பப்படி வந்தால், அவர்களை நிறுத்தி வைப்பதா அல்லது சேர்ப்பதா என்ற நிலை. இப்படி பலதரப்பட்ட நிலைமைகள் மலிந்திருக்கின்றன. இந்த ஆண்டு தமிழ் நாட்டிலுள்ள வைத்தியக் கல்லூரிகளில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையைப் பொறுத்தவரை, மிகக் குழப்பமான நிலை ஏற்பட்டிருப்பதால், தரமே குறைந்து விடுமோ என்ற அச்சம் வேறு. மாணவர்களுக்கு இதன் காரணமாகக் குழப்பமான நிலை. ஏற்கெனவே சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் தொடர்ந்து படிக்க முடியுமா என்ற சந்தேகம். ஒருவேளை தாங்கள் வெளியே அனுப்பட்டு விட்டால், வேறு எந்தக் கல்லூரியிலாவது சேர்ந்து முழுக் கல்வியையும் பெற முடியுமா என்ற நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் மனதிலே கொண்டு புதிய அளவில் தீர்மானங்கள் செய்ய வேண்டும். தேர்வு முறையிலே திருத்தம் கொண்டு வருவது ஒரு பக்கம் இருந்தாலும் கல்வி முறையிலே திருத்தம் கொண்டு வந்தாக வேண்டும். அவர்கள் பாதிப்புக்கு உள்ளாவது ஓராண்டு என்றாலும் கூட, ஓராண்டிலே படிக்கின்ற அத்தனை மாணவர்களும் 5 ஆண்டுகளுக்குப் பிறகு மருத்துவர்களாக வருகின்றபோது, குறைப் படிப்பு படித்து விட்டு வந்தவர்களாகத்தான் இருப்பார்கள்.



இவ்வாறு குறைப் படிப்பு படித்து விட்டு மருத்துவர்களாக வந்தால், அது சமுதாயத்தைப் பாதிக்கும் என்பதால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விட்டு வைத்தியக் கல்லூரிக்கு மாணவர் தேர்வு பற்றி விவாதிக்க தலைவரவர்கள் அனுமதிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்:</u> 1978-79 ஆம் ஆண்டுக்கான முதல் வருட எம்.பி.பி.எஸ். படிப்புக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுத்ததில் 20 மாணவர்க்ள் அவர்களைத் தேர்வில் சரியாக தேர்வு செய்யவில்லை என்றும் மற்றும் காரணங்களைச் சொல்லி உயர் நீதிமன்றத்தில் ரிட் தாக்கல் செய்துள்ளார்கள். அது டிவிஷன் பெஞ்ச் முன்னால் வைக்கப்பட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. முதல் ஆண்டு எம்.பி.பி.எஸ்.க்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு படித்துக் கொண்டிருப்பவர்களுக்குத் தொடர்ந்து பாதுகாப்பு கிடைக்கும். யாருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படாது. நீதிமன்றத்தின் தீர்ப்பு தெரிந்ததும், அதற்கேற்ப அரசு நடவடிக்கை எடுக்கும். இது குறித்து ஒன்றுக்கு மேற்பட்ட நீதிபதிகள் விசாரிக்கும் நிலையில் இருப்பதால், மேற்கொண்டு விரிவான விளக்கம் தேவையில்லை.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்:</u> மாண்புமிகு அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு உறுப்பினர் எழுப்பியுள்ள ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு என் அனுமதியை மறுக்கிறேன்.

<u>(2) 13-9-1978 அன்று குறளகத்திலிருந்து மறியல் செய்ய வந்த மாணவர்கள் மீது ரிசர்வ் வங்கி அருகே காவல் துறையினர் தாக்குதல் குறித்து.</u>

அடுத்தபடியாக மாண்புமிகு உறுப்பினர் மாணிக்கம் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். அதே போல மாண்புமிகு உறுப்பினர்கள் ஆறுமுகம், தங்கப்பாண்டியன் மற்றும் இராமமூர்த்தி ஆகியோரும் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். கடைசி மூன்றும் மாண்புமிகு முதலமைச்சர் சம்பந்தப்பட்டவை. முதலமைச்சர் அவையில் இல்லை. அவை முன்னவரின் கருத்து என்ன?

*<u>மாண்புமிகு திரு. க. இராசா முகமது:</u> மாண்புமிகு உறுப்பினர்கள் நேற்றைய தினம் நடைபெற்ற சில சம்பவங்கள் குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான தகவல்கள் நமக்கு இப்பொழுது வரவில்லை என்ற காரணத்தால் அதை ஒரு சம்பிரதாயமாகக் கருதாமல் உறுப்பிர்கள் தங்களுடைய கருத்துக்களை அது பற்றிச் சொல்வதற்கு அனுமதித்து அதைப் பதிவேட்டிலும் இடம் பெறுமாறு சேர்க்கலாம்.

பிறகு உறுப்பினர்களின் கருத்துக்களை, எண்ணங்களை சம்பந்தப்பட்ட அமைச்சர் ஏற்றுக்கொண்டு அதற்கான பரிகாரம் செய்ய முடியும் என்ற அடிப்படையில் இதைப்பற்றிக் கருத்துக்களைச் சொல்ல அனுமதிக்கலாம். பேரவையிலேகூட இதுபோன்ற பிரச்சினை வந்தது. எல்லாகட்சித் தலைவர்களும் கொடுத்திருந்தார்கள். அவர்கள் சார்பில் ஒருவர் தான் பேசினார். மற்றவர்கள் அதனை ஏற்றுக்கொண்டார்கள். நாமும் அந்த முறையைப் பின்பற்றலாம்.

*திரு. பி. மாணிக்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாணவர்கள்-இளைஞர்கள் ஒரு அமைதியான அறவழி மறியலுக்கு குறளகத்திலிருந்து துவங்கி ஊர்வலமாக வந்து, 'பாரி முனையை' தாண்டி ரிசர்வு பேங்க் அருகாமையில் உள்ள துவக்கத்தில் வந்து சேர்ந்த போது ஊர்வலத்தின் பகுதியினர் பின்னால் தள்ளி நிற்க மறியலுக்குச் செல்லும் தொண்டர்கள் மாத்திரம் அவர்கள் கையிலிருந்த கொடிகள் எடுக்கப்பட்ட நிலையில் அமைதியான மறியலுக்குச் செல்ல வேண்டும் என்ற அடிப்படையில் தனியாகப் போக அனுமதிக்கப்பட்டார்கள். அந்த நேரத்தில் அங்கே முன்னெச்சரிக்கையாக இருந்த காவல் துறையினர் அவர்களைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். தடை இருக்கிறது என்று அந்த இளைஞர்களிடம் கூறியிருக்கிறார்கள். மாணவர்களும் தாங்கள் கைதாவதற்குத்தான் வந்திருக்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள். அப்படி ஆரம்பத்தில் பேச்சு துவங்கிய போதே, பின்னால் இருந்தும் முன்னால் இருந்தும் அந்த மாணவ இளைஞர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அதுவும் மிகவும் கொடூரமான முறையில் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அறவழிப் போருக்குச் சென்ற இளைஞர்கள் இத்தகைய தாக்குதல் நடைபெறும் என்று எதிர்பார்க்காத நிலையில் மிகுந்த அதிர்ச்சிக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஏனென்றால் இரு புறமும், கொடூரமான முறையில் அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் பலருடைய மண்டை பிளக்கப்பட்டிருக்கிறது. 4 பேர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் இருவர் மிகவும் அபாயமான நிலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி அறவழிப் போருக்குச் சென்ற சாதாரணத் தொண்டர்கள், முன்னாலேயே அறிவிப்பு தந்துவிட்டுச் சென்றார்கள். இவர்கள் யாரும் தற்செயலாகச் சென்றவர்கள் அல்ல. அனைத்து இந்திய அளவில் நடைபெறக்கூடிய அறவழிப் போராட்டம் அது. அதனடிப்படையில் தமிழகத்தில் மட்டும் இதுவரை 9,000 தொண்டர்கள் மறியலுக்குச் சென்றிருக்கிறார்கள். இவர்கள் காலையில் கைது செய்யப்பட்டு மாலையிலேயே விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். சென்னையிலேகூட 5,000 பேர்கள் ஏற்கெனவே மறியலுக்குச் சென்றவர்கள் கைது செய்யப்பட்டு உடனே விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் நேற்று வியாசர்பாடி பகுதியில் மறியலுக்குத் தொண்டர்கள் சென்ற போது, அவர்கள்



கைது செய்யப்பட்டு மாலையிலே விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த ஒரு இடத்தில் மட்டும் தகாத முறையில் காவல் துறையினர் நடந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம்? அங்கே உள்ள பொறுப்புள்ள காவலதுறை அதிகாரிகள் நிலைமைகளை சாதாரணமாக, எளிமையாகச சமாளிப்பதற்குப் பதிலாக ஆத்திரமூட்டி மாணவர்களை வேண்டுமென்றே தாக்கியிருக்கிறார்கள். இதன் காரணம் எனக்குப் புரியவில்லை. இப்படி மாணவர்கள்—இளைஞர்களைக் கண்டால் காவல் துறையினர் ஒரு பகுதியைச் சார்ந்த காவல் துறையினர் தங்கள் இஷ்டம் போல் நடந்து கொள்ளலாம். தங்களுக்கு எந்த விதமான கட்டுப்பாடும் இல்லை, சட்டமும் இல்லை என்று நினைத்துச் செயல்படுகிறார்கள். எந்தச் சட்டமும் அவர்களைக் கட்டுப்படுத்தாது என்று நினைக்கிறார்கள், சட்டங்கள் என்பது பொது மக்களுக்கும் காவல் துறையினருக்கும் கண்டிப்பாகப் பொருந்தும். ஆனால் இங்கே வேலியே பயிரை மேய்வது போல் காவல் துறையினர் வேண்டுமென்றே இளைஞர்களைக் கடுமையாகத் தாக்கியிருக்கிறார்கள். சமீபத்தில் இப்படிப்பட்ட கடுமையான நிகழ்ச்சியைப் பற்றிக் கேட்டதுமில்லை, பார்த்ததும் இல்லை. காவல் துறையினர் எந்தக் கட்டுப்பாடுக்கும் அடங்காமல், அரசையே மீறிச் செல்கிறதோ என்ற நிலைதான் ஏற்படுகிறது. எனவே இந்த விஷயம் பற்றி முழுமையாக விவாதிக்க இந்த அவையின் நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள சொல்லிய கருத்துக்களோடு நான் இன்னொன்றையும் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நேற்று உருவான அந்தப் பிரச்சினையோடு நமக்கு இன்னொரு பயமும் இங்கே ஏற்பட்டிருக்கிறது.

சட்டமன்றம் கூடுவதற்கு முன்பாக தமிழகத்திலே பல இடங்களிலே சட்டம் ஒழுங்கு சீர்குலைவு ஏற்பட்டது. அதற்குப் பிறகு 10, 15 நாட்களாக ஓரளவு அடங்கியிருக்கிறது என்ற நிம்மதி இருந்தது. ஆனால் இன்றைக்கு மீண்டும் சட்டமன்றங்கள் முடிவடையும் தறுவாயில் நேற்றும் இன்றும் இவைகள் மீண்டும் துவங்கியிருக்கின்ற நிலைமைகளைப் பார்த்தால், மீண்டும் காவல் துறையினர் உறுதியான நடவடிக்கைகளை எடுக்காமல், முன் எச்சரிக்கையான நடவடிக்கைகளை எடுக்காமல் போனதன் காரணமாக இது போன்ற சாதாரண சம்பவங்கள் கூட மிகப் பெரிய கலவரங்களாக, தடியடிப் பிரயோகம் செய்ய வேண்டிய சூழ்நிலையாக, கண்ணீர் பிரயோகம் செய்யக் கூடிய சூழ்நிலையாக உருவாகிறதோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. இவைகளெல்லாம் இன்றைய தினம் தவிர்க்க முடியாத அளவுக்குச் சென்று கொண்டிருக்கின்றனவோ என்ற அச்ச உணர்வு தமிழகம் முழுவதும் உருவாகிக்கொண்டிருக்கிறது. இதன் விளைவாக பாது

காப்பற்ற தன்மையும் மிக வேகமாகப் பரவுகிறது. மிகச் சுலபமாகச் சமாளிக்க வேண்டிய பிரச்சினைகள் எல்லாம் பெரிய உருவம் கொள்ளுகிற அளவுக்கு விடப்படுகிறதோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. இரண்டு நாட்களாக பச்சையப்பன் கல்லூரிக்கருகே வன்முறைச்சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நேற்று மிகப் பெரிய அளவில் வளர்ந்திருக்கிறது என்று அறிகிறேன்.

சென்னையிலே கம்யூனிஸ்ட்கள் ஊர்வலம் வருகிறார்கள். அவர்கள் அரசாங்கத்திற்கும் காவல் துறைக்கும் முன்னதாகவே அறிவிப்பு கொடுத்து விட்டு வருகிறார்கள். அவர்கள் காவல் துறையினர் வைத்த எல்லையைத் தாண்டுகிறார்கள் என்றால், அது சமாளிக்கப் பட வேண்டிய முறை வேறு. ஆனால் அவர்கள் வருவதற்கு முன்னதாகவே தகவல் கொடுத்து விட்டு வருகிறார்கள். ஒரு இடத்திலே காவல் துறையினர் அவர்களைத் தடுத்து நிறுத்துகிறார்கள் என்றால், அதையும் தாண்டி அவர்கள் வந்தால், அவர்களையும் தடுத்து நிறுத்தி சமாளிக்கவேண்டியது காவல் துறையின் பொறுப்பு. இதை காவல் துறையினர் எதிர்பார்த்திருக்க முடியாது என்று சொல்ல முடியாது. அவர்கள் எதிர் பார்த்திருக்க வேண்டும். இதிலே காவல் துறையினர் மிகுந்த எச்சரிக்கையோடு செயல் பட்டிருக்க வேண்டும். அப்படிச் செயல்பட்டிருந்தால், அந்தத் தடியடிப் பிரயோகத்தைத் தவிர்த்திருக்கலாம். ஆனால் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போது, காவல் துறையினரின் போக்கு சரியில்லாத காரணத்தாலோ, அரசாங்கத்தின் கொள்கை சரியில்லாத காரணத்தாலோ இப்படி மிகச் சாதாரண சம்பவங்கள் எல்லாம் தடியடிப் பிரயோகங்களாக, கலவரமாக உருவாக விடப்பட்டிருக்கின்றன. பொதுமக்களும், மாணவர்களும் ரத்த காயம் அடைந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் உருவாவது நல்லதல்ல. கடந்த கால நிகழ்ச்சிகளோடு இவைகளைப் பார்க்கும் பொழுது, மீண்டும் சட்ட மன்றம் கூடுவதற்கு முன்பாக இன்னும் எவ்வளவு கலவரங்கள் ஏற்படுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. எனவே இவ்வளவு முக்கியமான பொருள்பற்றி விவாதிப்பதற்காக அவையின் அலுவலை ஒத்தி வைத்து நடைபெற்ற சம்பவங்களைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மாணிக்கம் அவர்களும் திரு. இராமமூர்த்தி அவர்களும் கூறிய கருத்துக்களை வலியுறுத்துவதோடு நேற்றைய தினம் சென்னை நகரத்தில் மிகப் பிரதானமான சாலையில் பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் காவல் துறையினரால் மிகக் கொடுமையாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். இப்படிப்பட்ட சம்பவங்கள்



அன்றாடம் நடக்கிற சாதாரண சம்பவங்கள் என்று நாம் எண்ணி விடக்கூடாது. அரசாங்கத்தினுடைய அணுகுமுறையில் இருக்கின்ற தவறுகள் காரணமாக மாணவர்கள் காவல் துறையினரால் சென்னையிலே தாக்கப்படுகிற அளவுக்கு நிலைமைகள் வளர்ந்திருக்கின்றன என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். கல்லூரி மாணவர்கள் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டார்கள். அதனால் பொது மக்கள் அவர்களைத் திருப்பித் தாக்கினார்கள் என்ற செய்தியைப் பரவவிட்டிருக்கிறார்கள். நான் கேட்க விரும்புவதெல்லாம் பொது மக்கள் மாணவர்களைத் தாக்கினார்கள் என்றால், அது எப்படி முடியும்? காவல் துறையினர் அங்கே மிகவும் எச்சரிக்கையோடு இருக்கிறார்கள் என்றால், காவல் துறையினரையும் மீறி பொது மக்கள் மாணவர்களை எவ்வாறு தாக்க முடியும் என்பதுதான் என்னுடைய கேள்வியாகும். மாணவர்கள் நேற்றைய தினம் கண்டபடி தாக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படியென்றால், காவல் துறையினருக்கும் மாணவர்களுக்கும் இடையில் பொது மக்கள் எவ்வாறு வர முடிந்தது? எனவே தான் சொல்லுகிறேன், அரசாங்கத்தின் அணுகு முறையில் தவறு இருக்கிறது. அரசாங்கத்தினுடைய கைகள் கட்டப்பட்டு வேறு விதமான நிலையில் காரியங்கள் நடைபெறுகின்றனவோ என்ற எண்ணம்தான் ஏற்படுகிறது.

கம்யூனிஸ்ட் கட்சியில் ஆர்வம் உள்ள இளைஞர்கள் அரசாங்கத்திற்கு முன் அறிவிப்பு கொடுத்து விட்டு, கோரிக்கைகளைக் கொடுப்பதற்காக என்று கோட்டைக்கு வருகிறார்கள். இது ஒரு சாதாரணமான நிகழ்ச்சி. நாள்தோறும் சென்னையிலே சட்டசபை நடக்கிறபோது நடக்கிற நிகழ்ச்சி. அப்படிக் கோட்டைக்கு வருகின்றவர்களைத் தாக்கியிருக்கிறார்கள் மத்திய போலீஸ் துறையைச் சார்ந்தவர்கள். அமைதியான அந்த ஊர்வலத்தை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர்தான் துவக்கி வைத்திருக்கிறார்கள். மிகப் பெரிய கட்சியின் தலைவர் அவர். அப்படி இருந்தும் ஒரு 40, 50 பேரை எந்தவித முன் அறிவிப்பும் இன்றி—இந்த மாநிலத்தைச் சேர்ந்த போலீஸ்காரர்கள் கூட அல்ல மத்திய ரிசர்வு போலீஸ்காரர்கள் என்று பத்திரிகையிலே போடப்பட்டிருக்கிறது—தாக்கி காயப்படுத்தியிருக்கிறார்கள். இது சாதாரண சம்பவம் அல்ல. முன் கூட்டியே இதில் காவல் துறையினர் கவனம் செலுத்தியிருக்க வேண்டும். முன்னெச்சரிக்கையோடு செயல்பட்டிருந்தால், அந்த இளைஞர்களுக்குக் காயம் ஏற்பட்டிருக்காது. கண்ணீர் புகைப் பிரயோகத்திற்கும் அவசியம் ஏற்பட்டிருக்காது. இதற்கெல்லாம் ஒரு நீதி விசாரணை வைக்க வேண்டும் என்றுதான் கேட்க வேண்டும். ஆனாலும் நாங்கள் இப்போது அதைக் கேட்கவில்லை. உண்மையை அறிவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படவேண்டும். போலீஸ் துறையின் அணுகுமுறை எப்படி இருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். அவர்கள் எப்படிப்பட்ட அணுகுமுறையைக் கைக்கொள்ள வேண்டும் என்

வதைப் பற்றித் திட்டவட்டமாக அரசாங்கம் அறிவிக்கவேண்டும். அரசாங்கத்திற்கு இந்த வகையில் தெளிவான கொள்கை இருக்க வேண்டும். இவைகளையெல்லாம் ஒட்டு மொத்தமாகப் பேசுவதற்காக இந்த அவையின் அலுவலை ஒத்தி வைத்துவிட்டு, நடைபெற்ற சம்பவங்களைப்பற்றியும், இனி காவல் துறையின் அணுகுமுறை எவ்வாறு இருக்க வேண்டும் என்று நிர்ணயிப்பதற்கும் விரிவாக விவாதிக்க வாய்ப்பளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்</u> : ஏற்கெனவே அவையின் முன்னவர் இது பற்றி விளக்கம் தந்திருப்பதால், இதற்காக அவையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் ஏதுமில்லை என்று அறிவிக்கிறேன்.

(பிற்பகல் 3—30)

## (3) சேலம் இரும்பாலையில் வேலை நிறுத்தம் குறித்து.

<u>திரு. சோ. ஆறுமுகம்</u> : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, என் பெயரால் மேலவை விதி 43-ன் படி கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து விவாதிக்க ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தை நான் கொடுத்திருக்கிறேன்.

"சேலம் இரும்பாலையில் 4-9-78 ஆம் தேதி முதல் சுமார் 2,500 தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைக்காக வேலை நிறுத்தம் செய்து போராடி வருகின்றனர். இரும்பாலைக்கு நிலம் எடுத்துக் கொண்ட பகுதியில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படும் என்று மாநில அரசும், இரும்பாலைத் திட்ட அதிகாரிகளும் கொள்கை அளவில் ஒத்துக் கொண்டிருந்தும், "இரும்பாலை கட்டுமான பணி" "சேலம் உருக்காலைத் திட்ட பணிகளில்" இது வரை பாதிக்கப்பட்ட மக்களில் தகுதியுள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்காமல் வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி வருவதாலும், தொடர்ந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்காமல் புறக்கணித்து வருவதைக் கண்டித்துப் போராடி வரும் சங்கத்தையும், தொழிலாளர்களையும் நசுக்கக் கூடிய வகையில் இரும்பாலைத் திட்ட அதிகாரிகள் நடந்து கொள்வதாலும், கொண்டலாம்பட்டி காவல் துறை ஆய்வாளர் ரத்தினவேல் என்பவர் 11-8-1978 ஆம் தேதி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு இருந்த தொழிலாளர்களை தகாத வார்த்தைகளால் திட்டியும், உதைத்



தும் அவமானப்படுத்தியதாலும் தொழிலாளர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டிருப்பதன் மூலம் ஒரு பதட்டமான நிலை உருவாகியிருக்கிறது.

18 கோரிக்கைகளை சேலம் இரும்பாலை தொழிலாளர் சங்கம் முன் வைத்து 4-9-78 ஆம் தேதி முதல் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டு வருகிறார்கள். சுமார் 2,500 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். அவர்களின் பிரதிநிதிகள் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களுடன் 2-9-78 லே பேச்சு வார்த்தைகள் நடத்தினார்கள். ஆனால் அது முடிவு பெறவில்லை. அதைத் தொடர்ந்து 8-ம் தேதியன்று தொழிலாளர் நலத் துறை அலுவலர் அவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே பேச்சு வார்த்தை நடத்திய நேரத்திலேயும் பேச்சு வார்த்தை முடிவு பெறவில்லை. பேச்சு வார்த்தைகள் முடிவு பெறாததன் காரணமாகத்தான் அவர்கள் கோரிக்கைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். தொழிலாளர்கள் போராடிக் கொண்டிருக்கக்கூடிய இடத்திலே, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் நின்று கொண்டிருக்கின்ற நேரத்திலே ஒரு போலீஸ் அதிகாரி, அவர்களைத் தகாத வார்த்தைகளால் திட்டியும், உதைத்தும் அவமானப் படுத்தியிருப்பதால், தொழிலாளர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டிருப்பதன் மூலம் பதட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தப் பிரச்சினை பற்றி விவாதிப்பதற்கு இம்மன்றத்தின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டும் என்று முன்மொழிகிறேன்,

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்</u> : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, பேச்சுவார்த்தைகளை சம்பந்தபட்டவர்களோடு நடத்திக்கொண்டிருக்கிறது. மற்ற பிரச்சினைகள் 'லா அண்ட் ஆர்டர் பிராப்ளம்' சம்பந்தப்பட்டவையாக இருக்கின்றன, முன் அறிவிப்பு இல்லாத காரணத்தினால், முழுத் தகவல்கள் கொடுக்க இயலவில்லை. தேவைப்பட்டால், சென்னை நகரத்திற்கே அழைத்து வந்து பேச்சு வார்த்தைகள் நடத்தலாம்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்</u> : பொறுப்புகளை என்னிடத்திலேயே விட்டு விடுகிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் பதிலுக்குப் பிறகு ஒத்திவைப்பை மறுக்கிறேன்.

<u>திரு. சோ. ஆறுமுகம்</u> : விளக்கம் வேண்டும். நான் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை இன்று காலையிலேயே கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தலைவர் தீர்ப்புக்குப் பிறகு தொடர்ந்து பேச வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் எழுந்தார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அதையேதான் சொல்ல விரும்புகிறேன்.

## 5. அறிவிப்பு

### (1) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்பு சட்டப்படி பணச் சட்ட முன்வடிவு என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம் மேலவையில் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பொது விற்பனைவரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 30/1978) சட்ட முன்வடிவு மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

(1) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1978)

(2) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 38/1978)

(3) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களைத் திருத்தியமைத்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/1978)

(4) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1978)

(5) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 36/1978)

(6) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாயவாரம் செலுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 37/1978)



## 6. கவன ஈர்ப்பு.

### (1) கன்னியாகுமரி மாவட்ட ஆலய ஊழியர்கள் நாகர்கோவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்னால் செய்ய இருக்கும் சத்தியாகிரகம் குறித்து.

திரு. ஆ. நல்லசிவம் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :—

''கன்னியாகுமரி மாவட்ட ஆலய ஊழியர்கள் தங்களுடைய வேலைப் பாதுகாப்பு மற்றும் சம்பள உயர்வு ஆகிய காரணங்களுக்காக கடந்த 3 மாத காலமாகப் போராடி, நாகர்கோவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்னால் சத்தியாகிரகம் செய்ய இருப்பதாக அறிவித்திருப்பதால், அப்பகுதி மக்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து,''

* மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமான விவரமான அறிக்கை @ ஒன்று அவையின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து வேறு ஏதாவது குறிப்புகள் தேவையானால், இப்போது கேட்டால் தெரிவிக்கின்றேன்.

திரு. ஆ. நல்லசிவம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை இப்போது தான் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது, அதைப் படித்துப் பார்க்கவே நேரமில்லை, அதைப் படித்து விட்டிருந்தால் கேட்கலாம். இதுவரையில் படிக்கவே முடியவில்லை. கேள்வி எப்படி அதில் கேட்பது ? வேறு அது சம்பந்தமாகக் கேட்கலாமா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வேறு ஏதாவது கேட்பதாக இருந்தாலும் கேட்கலாம். கேளுங்கள்.

திரு. ஆ. நல்லசிவம் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கின்ற ஆலயங்களிலே எல்லாம் சுமார் ஆயிரம் கன்டின்ஜெண்ட் ஊழியர்கள் ரூ. 35 லிருந்து ரூ. 80 வரை சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். கேரள மாநிலத்திலே உள்ள ஆலயங்களில் உள்ள ஊழியர்கள் கிட்டத்தட்ட ரூ. 200 முதல் ரூ. 350 வரை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த அளவுக்குக் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, ரூ. 80 வரையில் சம்பளம் கொடுப்பதாகச் சொன்னார்கள். இப்போது ரூ. 115 வரையில் சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. இப்படி சம்பளம் பட்டுவாடா செய்யப்படுகின்றபோதே, கிட்டத்

@ 500—502 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சடிக்கப்பட்டுள்ளது.

தட்ட 9,36,056 ரூபாய் செலவாகிறது. அவர்கள் விரும்புகின்றபடி நாம் கொடுக்க வேண்டுமானால், மீண்டும் சுமார் 7 லட்சம் ரூபாய்க்கு மேல் தேவைப்படும். இந்த ஆலயங்களின் ஆண்டு வருமானம் சராசரி ரூ. 25 லட்சம். இதிலே 65¼ சதவிகிதம் சம்பளம் கொடுப்பதற்காகச் செலவிடப்படுகிறது. தற்போதுள்ள இந்தச் சூழ்நிலையில், தமிழகத்திலுள்ள அறநிலையத் துறையின் பொருளாதார நிலையில், இந்தப் பிரச்சினையை உடனடியாகக் கவனிக்க முடியாது. ஆனால் இந்த விஷயம் அரசினுடைய கவனத்திலே தீவிரமாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. விரைவிலே இதில் மாற்று வழி கண்டுபிடிக்க முயலும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் கொடுத்த கோரிக்கைகளில் 3வது, 4வது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு விட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. ஆ. நல்லசிவம் :</u> ஆலய ஊழியர்களை அறநிலையத்துறை ஊழியர்களாக, அரசு கடைநிலை ஊழியர்களாகக் கருதவேண்டும் என்று கேட்கப்பட்டது. அதற்கு அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த 30 வருடங்களாக எந்தவிதமான அதிகமான தொகையும் தரவில்லை. திருவாங்கூர் சமஸ்தானத்தில் இருக்கும்போது, கிடைத்தது போல்தான் இருக்கிறது. கடந்த 30 ஆண்டுக்காலமாக எந்தவிதமான உயர்வும் கிடைக்கவில்லை. அந்தத் தொழிலிலேயே இருந்து கொண்டிருப்பதால்' அவர்களால் வேறு தொழிலையே ஈடுபட்டு செய்ய முடியாது. அந்தத் தொழிலையே நம்பிக் கொண்டிருப்பவர்கள். அவர்கள் எப்படிச் சாப்பிடுவார்கள்? ரூ. 25 லட்சம் வருமானம் வருகிறது. நடமாடும் தெய்வங்களாக இருக்கின்ற அவர்களுக்கு மேலும் உயர்த்திக் கொடுக்காவிட்டால், என்ன பிரயோசனம் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் ரூ. 7 லட்சம் செலவாகும் என்று எண்ணாமல், அவர்களுக்கு இன்னும் கொஞ்சம் கூட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 3-40)

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :</u> மாண்புமிகு தலைவரவர்களே, 30 வருடங்களாக உயர்த்தவே இல்லையென்று சொன்னார்கள். கடந்த 1-7-1977 முதல் நபர் ஒன்றுக்கு 5 ரூபாய் உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்போது 1-7-1978 முதல் சில பிரிவினருக்கு 5 ரூபாயும், சில பிரிவினருக்குப் பத்து ரூபாயும் உயர்த்தி அளிக்கப்பட்டிருக்கிறது. அடுத்து, இன்னும் 7 லட்சத்தைக் கொடுத்து, அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கலாமே என்று உறுப்பினரவர்கள் சொன்னார்கள். அந்த ஊழியர்களோடு மாத்திரம் அது நிற்கவில்லை. அதுமாதிரி 60,000 ஊழியர்கள் கோவில்களுக்குள்ளே இருக்கிறார்கள். அது மிகப் பெரிய பிரச்சினை.



ஆலயங்களுக்கு பாக்கித் தொகை 18 கோடி ரூபாய் அளவிற்கு மக்களிடமிருந்து வர வேண்டியிருக்கிறது. ஆகவே இவைகளையும் கணக்கில் எடுத்து, சில 100 அல்லது 1000 தொழிலாளர்களுக்காக வாதிடும்போது' இப்படித் தர வேண்டியவர்களிடமிருந்து அவைகள் வருவதற்கும் வழி வகையை இந்த மன்றத்தின் மூலமாகக் கண்டுபிடித்துச் சொன்னால், இரண்டையும் சமன்படுத்தி, தமிழகத்தில் நல்ல நிலைமைகளை ஏற்படுத்த உதவியாக இருக்கும்.

<u>(திரு. ஆ. நல்லசிவம் எழுந்தார்)</u>

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர் :</u> கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் பேரில் 2 வினாக்களுக்கு மேலே அனுமதிக்க முடியாது. தயவு செய்து உட்காருங்கள்.

(2) திருச்சி மாவட்டம் கரூரை அடுத்த வெங்கமேட்டில் 11-8-1978 அன்று பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடம் இடிந்து விழுந்து மாணவிகள் இறந்ததும் காயமடைந்ததும் குறித்து.

<u>திரு. க. மீனாட்சிசுந்தரம் :</u> மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

<u>"திருச்சி மாவட்டம் கரூரை அடுத்த வெங்கமேட்டில் 11-8-78 அன்று பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடம் இடிந்து விழுந்து மூன்று மாணவிகள் இறந்ததும், 29 பேர் காயமடைந்ததும் குறித்து"</u>

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :</u> மாண்புமிகு தலைவரவர்களே, இது பற்றிய அறிக்கை (a) கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் படித்தார்கள், அதை நான் கவனித்துக் கொண்டிருந்தேன், அதைப்பற்றி ஏதாவது விளக்கங்கள் கேட்கவேண்டுமென்றால் கேட்கலாம்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர் :</u> இரண்டு வினாக்களுக்கு அதிகமாகாமல் கேட்க வேண்டும். ஒன்றிலேயே முடித்துக்கொண்டால் நேரம் மிச்சமாகும்.

<u>திரு. க. மீனாட்சிசுந்தரம் :</u> தலைவரவர்களே, நான் கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையை இப்போதுதான் பார்த்தேன். இருந்தாலும் படித்ததாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இடையிலே அவர் அப்படிச் சொல்லக் கூடுமென்பதால் முன்கூட்டியே ஒட்ட

---

(a) 502-504 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாகப் பார்த்தேன். அதிலே, வெங்கமேட்டிலே சூறாவளிக் காற்று அடித்ததாக—அதாவது அதிகாரிகள் தந்த அறிக்கையிலே—சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே பொது மக்களுக்குத் தெரியாமல், அரசியல் கட்சிகளுக்குத் தெரியாமல், ஆசிரியர்களுக்குத் தெரியாமல் மாணவ கண்மணிகளுக்குக்கூடத் தெரியாமல் சூறாவளிக் காற்று அடித்திருக்கிறதென்பது இந்த அறிக்கையின் மூலம் தெரிகிறது. அங்கே எல்லாத் தரப்பினரும், மழை பெய்ததாகக்கூடச் சொல்லவில்லை. சூறாவளிக் காற்று அடிக்கவில்லை என்று சொன்னார்கள். நான் அந்தப் பகுதிக்குச் சென்று பார்த்தேன். 3 மாதங்களுக்கு முன்னே கட்டப்பட்ட கட்டிடம் அது. 3,000 ரூபாய் செலவிலே கட்டப்பட்டதாக தொகை காட்டும். ஆனால் 3,000 ரூபாய் செலவிலே அது கட்டப்படவில்லை என்று விசாரித்த வகையிலே எங்களுக்குத் தெரிய வருகிறது. அதிகாரிகள் இப்படிப்பட்ட அறிக்கைகளைத் தந்து, இந்த ஆட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்துவார்களென்பதை அமைச்சரவர்கள் கவனித்து, இது குறித்து நீதி விசாரணை ஒன்றை ஏற்படுத்தி, அதற்குரிய நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா? அங்கே மாணவர்களுக்கு ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து 2,000 ரூபாய்....

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர் :</u> விளக்கம் வேண்டுமென்றால் வினாவாகத்தான் கேட்க வேண்டும். சொற்பொழிவு நிகழ்த்தக் கூடாது.

<u>திரு. க. மீனாட்சிசுந்தரம் :</u> இரண்டாயிரம் ரூபாய் தரப்பட்டதென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கே எண்ணூரில் நடந்த படகு விபத்தில் இறந்துவிட்ட குழந்தைகளுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 5,000 ரூபாய் அளிக்கப்பட்டதாக அறிகிறேன். எனவே அவர்களுக்கும் 5,000 ரூபாய் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். மேலும் காயம் பட்டவர்களுக்கும் உடனடியாக ஏதாவது சிறு தொகை அளிக்கப்படுமா?

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :</u> தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சூறாவளிக் காற்று அங்கே வீசவில்லை என்று குறிப்பிட்டார்கள். சூறாவளி திடீரென்று ஏற்பட்டு, திடீரென்று மறைந்து விடும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் போய்ப் பார்க்கும்போது, அங்கே சூறாவளிக் காற்று இருக்க நியாயமில்லை. மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் அங்கே நேரடியாகச் சென்று, இடத்தைப் பார்த்து அந்த விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்துவிட்டு வந்திருக்கிறார்கள். அந்தக் கட்டிடம் 3,000 ரூபாய் மதிப்பீட்டிலே கட்டப்படாமல், அதிலே தவறு நடந்திருக்குமானால், நெடுஞ்சாலை ஆராய்ச்சித் துறை அந்தக் கட்டிடத்தின் வலிவுத் தன்மையைக் கண்டறிந்து, 15 நாட்களுக்குள் அரசுக்கு அறிக்கை தரவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும்





நடைபெற்று வருகிறது. அதைப்போல இறந்து போன குழந்தைகளின் குடும்பங்களுக்கும், காயம்பட்டவர்களின் குடும்பங்களுக்கும் எந்த அளவுக்கு நிதி உதவி அளிக்க முடியுமோ, அது அளிப்பது குறித்த கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

<u>திரு. க. மீனாட்சிசுந்தரம் :</u> சூறாவளிக் காற்று அங்கே வீசியதால், வேறு எந்தப் பகுதியிலாவது சிறு சேதமாவது ஏற்பட்டிருக்கிறதா ?

<u>திரு. ஆ. நல்லசிவம் :</u> நானும் அது குறித்து கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறேன். அந்தப் பள்ளிக்கூடம் குழந்தைகள் தங்குவதற்கு ஏற்றதுதானா என்பதற்கு ஏதாவது சர்டிபிகேட் பெறப்பட்டிருக்கிறதா ? அதை அரசு கவனித்ததா ?

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :</u> அது பற்றிய விவரம் என்னிடம் இல்லை.

<u>திரு. ஆ. பாலசுப்ரமணியம் :</u> தலைவரவர்களே, 8ஆம் தேதியன்று....

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர் :</u> கொஞ்சம் இருங்கள். அடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானம். திரு. நல்லசிவம் அவர்கள்

## (3) <u>சென்னை அம்பத்தூரிலுள்ள சதர்ன் ஸ்விட்ச்கீர் நிறுவனம் மூடப்பட்டுள்ளது குறித்து.</u>

<u>திரு. ஆ. நல்லசிவம் :</u> மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

> "சென்னை அம்பத்தூரிலுள்ள சதர்ன் ஸ்விட்ச்கீர் நிறுவனத்தில் உள்ள இயக்குநர்களின் உட்பூசலால் அந்தத் தொழிற்சாலை கடந்த 8 மாத காலமாக மூடப்பட்டு, அதில் பணிபுரியும் சுமார் 500-க்கு மேற்பட்ட தொழிலாளர்களும் அவர்களின் குடும்பங்களும் பட்டினியால் அவதியுறும் பரிதாப நிலை குறித்து"

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> மாண்புமிகு தலைவரவர்களே, "தி சதர்ன் ஸ்விட்ச் கியர் லிமிடெட்" என்பது சென்னைக்கருகிலுள்ள அம்பத்தூர் தொழிற்பேட்டையில் அமைந்துள்ள ஒரு பொறியியல் தொழில் நிறுவனம்.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1978 செப்டம்பர் 14

மேற்சொன்ன நிறுவனத்தின் தொழிலாளர்கள் 1977 நவம்பர் மாதத்தில் பல கோரிக்கைகள் அடங்கிய பட்டியல்மீது தொழில் தகராறு ஒன்று எழுப்பினர். சென்னையிலுள்ள செங்கல்பட்டு தொழிலாளர்துறை அலுவலர் அந்தக் கோரிக்கைகள்மீது பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தபோது, நிர்வாகத்தினர் தங்களின் நெருக்கடியான நிதி நிலைமையை அனுசரித்து தொழிலாளர்களின் கோரிக்கைகள் நிறைவேற 6 மாத காலம் பொறுத்திருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். நிர்வாகத்தினரின் போக்கு தொழிலாளர்களுக்குத் திருப்தியளிக்கவில்லையாதலால், அவர்கள் 1-3-78 முதல் வேலைநிறுத்தம் மேற்கொண்டனர்.

சென்னை இரண்டாவது தொழிலாளர் துறை துணை ஆணையர் மேற்படி தொழில் தகராறை விசாரணைக்கு எடுத்துக் கொண்டார். ஆயினும் உடன்பாடு ஏற்படவில்லை. தொழிற்சாலையில் வேலை துவங்குவதற்கு உடனடியாக ரூ. 5 லட்சம் அளவுக்கு நிதி உதவி தேவைப்படுமென்று நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

போதுமான நிதியுதவி ஸ்டேட் பாங்கியிலிருந்து கிடைக்காமையால் இத்தொழிற்சாலை மீண்டும் திறக்கப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பாங்கிற்கு எடுத்துக்கூறப்பட்டுள்ளது. இதன் விளைவாக கூடிய விரைவில் நிவாரணம் ஒன்று காணப்படும் என்றும் நம்பப்படுகிறது.

திரு. ஆ. நல்லசிவம் : தலைவரவர்களே, 6 மாத காலமாக அந்த ஆலை மூடப்பட்டுக் கிடப்பதாலும், அந்த ஆலைக்கு பாங்க் கடன் கொடுக்கிற வாய்ப்பு இல்லாததாலும், அரசே அந்த ஆலையை எடுத்து நடத்த முன்வருமா? அதற்கிடையிலே வேலையில்லாமல் தத்தளிக்கும் தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தாற்காலிக நிவாரணம் அளிக்கப்படுமா?

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, on a point of order....

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அமைச்சர் பதில் சொன்ன பிறகு சொல்லலாம்.

திரு. வே. தங்கபாண்டியன் : அமைச்சரைப்பற்றிதான்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நான் பதில் சொன்ன பிறகு சொல்லுங்கள். The matter has been taken up with the Bank and it is hoped that an early solution will be found.



1978 செப்டம்பர் 14]

(பிற்பகல் 3-50)

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டர். நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் பட்டாடை மாறியிருப்பதால், அவர் பதட்டம் ஏற்பட்டு பதிலை பாதியிலேயே நிறுத்தியிருக்கிறார்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது பாயின்ட் ஆஃப் ஆர்டரா ?

(4) மோகனூர் சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மூடப்பட்டுள்ளது குறித்து.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : தலைவர் அவர்களே, மோகனூரில், சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை நிர்வாகத்திற்கும் அதன் தொழிலாளர்களுக்கும் தகராறுகள்......

மாண்புமிகு மேலவைத் தலைவர் : விஷயத்திற்குள் போக வேண்டாம்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : தகராறு ஏற்பட்டு அந்த ஆலை மூடப்பட்டிருக்கிறது. அதனால் கரும்புப்பயிர் செய்பவர்கள் அறுவடை செய்ய முடியாமல் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். இது குறித்து நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதைப் பற்றி பதில் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முடிந்த வரைக்கும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். கடைசி நாள் ஆகையால், அமைச்சரிடத்திலேயிருந்து விளக்கம் பெற முடியவில்லை. அந்தத் தகவல்கள் சேகரித்து உங்களுக்கு அனுப்பப்படும்.

7. தகவல் கோரல்

பாராளுமன்றச் செயலாளர்கள் குறித்து.

திரு. செ. முத்துசாமி : இந்த அவையிலே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், பாராளுமன்றச் செயலாளர்கள் பற்றிய பிரச்சினை வந்தபோது, அவர்கள் என்ன முறையிலே நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற அதிகார பூர்வமான அறிவிப்பை ஒரு வார காலத்திற்குள்ளாக அறிவிப்பதாகக் கூறினார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் தான் எழுப்ப முடியும். இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல.

திரு. செ. முத்துசாமி : பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷனாவது:

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதற்கு இது நேரம் அல்ல. முன்பே கேட்டிருக்க வேண்டும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கடைசி நாளாக இருப்பதால் உறுப்பினர்கள் ரொம்பவும் சுறுசுறுப்பாக இருக்கிறார்கள்.

## (2) சட்ட முன்வடிவுப் பிரதிகள் உறுப்பினர்களுக்கு முன் கூட்டியே அளித்தல்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவர் அவர்களே, இன்று பல சட்டமுன்வடிவுகளைப் பற்றிப் பேசவிருக்கிறோம். இந்தச் சட்டமுன்வடிவுகளினுடைய நகல்கள் முன்கூட்டியே அனுப்பப்படுவது வழக்கம். பல சட்ட முன்வடிவுகளின் நகல்கள் உறுப்பினர்களுக்கு முன்கூட்டியே அனுப்பப்படவில்லை. அந்தச் சட்டமுன்வடிவுகள் நிறைவேற்றப்படவில்லை என்று சொல்லக் கூடும் என்பது தெரியும். நிறைவேற்றுவதற்கு முன்பே, Bill introduced in the Legislative Assembly of the State என்று முதலில் வரும். பிறகு As passed by the Legislative Assembly என்று இரண்டாவது காப்பி வரும். Bill introduced in the Assembly என்ற காப்பி எங்களுக்கு வரவேயில்லை. இந்த சபையிலே As passed by the Assembly என்ற காப்பிதான் வந்திருக்கிறது. இங்கே படித்துவிட்டு எப்படிப் பேசுவது ? இனிமேலாவது இப்படிப்பட்ட குறைகளை நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அறிமுகப்படுத்தப்பட்ட மசோதாக்களின் நகல்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இன்று காலையில் பேரவையில் நிறைவேற்றப்பட்ட சில மசோதாக்களின் நகல்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவதைப் போல, அவகாசம் இல்லாததன் காரணமாக, அனுப்பப்படவில்லை என்று கருதுகிறேன். மற்றவைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. உங்களுக்குக் கிடைப்பதிலே தவறியிருக்கிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : பில் எண். 39, 40 வரவில்லை. இனிமேலாவது இந்தக் குறைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு உள்ள குறை எனக்கும் இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : எல்லாவற்றுக்கும் சேர்த்துத் தான் முதலிலே சொன்னேன். தயவுசெய்து நேரத்தை வீணாக்க வேண்டாம்.



திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : அவர்களுக்குக் கிடைத்த வாக்குறுதி எனக்கும் கிடைக்குமா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : எல்லோருக்கும்தான்.

## 8. உறுதி மொழிக் குழுவின் அறிக்கை.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, அரசு உறுதி மொழிக் குழுவின் முப்பதாவது அறிக்கையை இந்த அவைக்குச் சமர்ப்பிக்கிறேன்.

## 9. அலுவல் வரிசையில் மாறுதல்.

மாண்புமிகு திரு. கே. இராசாமுகமது : தலைவர் அவர்களே, "சட்டமன்ற மேலவை விதி 21 (3)-ன்படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் உள்ள ஐந்தாவது இனமாகிய 'ஆளுநர் உரையின் மீது விவாதம்' என்பதை அரசின் சட்ட முன்வடிவுகளை எடுத்துக் கொள்ளுவதற்கு முன் எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்ற மேலவை விதி 21 (3)-ன்படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் உள்ள ஐந்தாவது இனமாகிய 'ஆளுநர் உரையின் மீது விவாதம்' என்பதை அரசின் சட்ட முன்வடிவுகளை எடுத்துக் கொள்ளுவதற்கு முன் எடுத்துக்கொள்ள வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 10. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

*திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது நடைபெறுகிற இந்த விவாதத்திலே எனது கருத்துக்களை எடுத்து வைப்பதற்கு முன், அவைத் தலைவராகிய தங்களுக்கு எங்களுடைய மனக் குறைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது ஜனநாயக அமைப்பு முறையிலே இந்த இரு மன்றங்களும் தங்களுடைய நடவடிக்கைகளை நடத்துவதிலே இதுவரையில் பேணிக் காப்பாற்றி வந்த மரபுகள் காக்கப்பட வேண்டும் என்பது இந்த அவையிலுள்ள எல்லோருடைய கருத்து. அது காப்பாற்றப்படவில்லை என்பது என்னுடைய குறை. காரணம் 8ஆம் தேதி ஆளுநருடைய உரையின் மீதான விவாதம் முடிந்து மற்ற நடவடிக்கைகளைக் கவனிக்க வேண்டிய நிலையில் இருக்க

வேண்டிய அவை, அவை முடிகிற 14ஆம் நாள் இந்த விவாதத்தைத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கிறது. நாம் அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவெடுத்து அந்த முடிவுப்படி, தவிர்க்க முடியாத காரணம் ஏற்பட்டாலொழிய, நடத்தாமல் போனால், இந்த அவையின் நடவடிக்கைகளும், அதன் மூலம் நாட்டுக்கு ஏற்பட வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிற நன்மையும் தடைப் பட்டுவிடும் என்ற அச்சத்தைக் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய நிகழ்ச்சி நிரலைப் பார்த்தால் தெரியும் ஆளுநர் உரையின் மீது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசி முதலமைச்சர் அவர்களின் பதிலுரையும் முடிந்த பிறகு, மீதியிருக்கக்கூடிய நேரத்தில் எஞ்சிய 10 மசோதாக்களை நிறைவேற்ற வேண்டிய நிலையில் இருக்கிறோம். நிறைவேற்றப்படுகிற திட்டங்களால் நாட்டு மக்களுக்குக் கிடைப்பது நன்மையானாலும், தீமையானாலும், அதற்கு முன்னால் பல்வேறு கோணங்களிலிருந்து அதை ஆராய்ந்து எடுத்துச் சொல்லுகிற வாய்ப்பு இந்த அவைக்கு இல்லாமல் போய்விடுகிறது என்ற அச்சம் எங்களுக்கு ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்து, இந்த முறையை நாங்கள் இதற்கு முன்னாலே தமிழகத்திலே பாராளுமன்ற முறையிலே பார்த்ததில்லை. இதுவரை பாராளுமன்ற முறையிலே கடைபிடிக்கப்பட்டு வந்த மரபுகளையும், ஒழுங்குகளையும் எந்தக் காரணத்தைக் கொண்டும் தொய்வு இல்லாமல் கடைபிடிக்க வழி வகுத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அவை இப்போது 11ஆவது நாளாகக் கூடி முடியப் போகிறது. மேதகு ஆளுநர் அவர்கள் வந்து உரையாற்றியது போக 11ஆவது நாளாக இந்த அவை நடக்கிறது. பல வினாக்களை நாங்கள் கொடுத்திருக்கிறோம். எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் வினாக்கள் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்து விடை சொல்ல வேண்டிய வினாக்கள் நிறைய இருக்கின்றன. நூற்றுக்கணக்கான வினாக்கள் இருக்கின்றன. இந்தக் கூட்டத் தொடரிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நாள் அரை மணி நேரம் இங்கே வந்திருந்தார். இன்று நான்கு மணியளவிலே வர இருக்கிறார்கள் என்று அறிகிறோம். இந்த அவையிலே நாங்கள் எழுப்புகிற வினாக்களுக்கு விடையளிக்கிற நேரத்தில், நாட்டு மக்கள் என்னென்ன எதிர்பார்க்கிறார்களோ, என்னென்ன தகவல்களை எதிர்பார்க்கிறார்களோ, என்னென்ன உறுதிமொழியை எதிர்பார்க்கிறார்களோ அதையெல்லாம் முதலமைச்சரின் வாயிலாக நாங்கள் எதிர்பார்ப்பது எங்களுடைய உரிமை. அதை நிறைவேற்றுவது உங்களுடைய கடமையுமாகும். அதை நிறைவேற்றித் தர வேண்டும் என்று என்னுடைய வேண்டுகோளாக உங்களைப் பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்.





இந்த அரசு ஜனநாயக மரபுகளுக்கு அதிக மதிப்புக் கொடுப்பதாக நாங்கள் கருதவில்லை. இந்த அரசு ஜனநாயகத்திற்கு அதிக மதிப்பைக் கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டை பல ஆதாரங்களோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இது என்னுடைய தனிப்பட்ட கருத்து மாத்திரமல்ல. இது இங்குள்ள எல்லா உறுப்பினர்களுடைய ஏகோபித்த கருத்து. ஆளும் கட்சியிலே இருக்கிறவர்களுடைய கருத்தும் அது தான். ஆனால் அவர்கள் அப்படிச் சொல்லுகிற இடத்திலே இல்லை. நான் சொல்லுகிற இடத்திலே இருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே வந்திருந்து இந்த அவையிலே ஒவ்வொரு உறுப்பினரும், ஒவ்வொரு பகுதியிலே நடைபெறுகிற குறைபாடுகள் என்னென்ன என்று சொல்லுகிறார்கள் என்பதை அறிந்து, அதற்குரிய பதில்களைச் சொன்னால்தான், உண்மையிலேயே தொண்டாற்றியதாக மக்கள் கருதுவார்கள். பரந்த நாடு இது. பல்வேறு பகுதியிலிருந்து மக்களுடைய பிரதிநிதிகள் வந்திருக்கிறார்கள். பல்வேறு வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். ஆகவே அந்தப் பிரதிநிதிகள் கேட்ட கேள்வியின்போது, அமைச்சர் இருந்தார்கள், முதலமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் அளித்தார், அதைக் கேட்டுச் சிரித்தார், தலையை அசைத்தார் என்று கேள்விப்பட்டால், அவர்கள் திருப்தி அடைவார்கள். இது எல்லாக் கட்சியினருக்கும் பொதுவானது. ஆகவே அவர் வராமலிருப்பது இந்த அவையின் மரபையும், ஜனநாயக மரபையும் புறக்கணிப்பதாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டைச் சுமத்துகிறேன். அலுவல் ஆய்வுக் குழுவில் முன்கூட்டியே சபையினுடைய அலுவல்களைக் குறிப்பிட்டு விடுகிறோம். அதற்கேற்ப வருகிற மற்ற வேலைகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, குறிப்பிட்ட நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கு இருக்க வேண்டுமென்று இந்த அவை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்களே ஒரு முறை சொன்னார்கள், "ஜனநாயக மரபுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் போனால் நாட்டினுடைய ஆட்சி சிறப்பாகச் செயல்பட முடியாது" என்று. மேலும் பேரவையிலே அவர் அறிவித்ததாக பத்திரிகையிலே படித்தேன், "11 ஆயிரம் பைல்கள் பார்த்திருக்கிறேன். இன்னும் கொஞ்சம் இருக்கிறது" என்று. ஆகவே ஆட்சியிலே தேக்கம் ஏற்படுவது தவறு.

இந்த மாநிலத்தினுடைய பரப்பு 1,30,069 சதுர கிலோ மீட்டர். இங்கே வாழ்கிற மக்கள் தொகையின் எண்ணிக்கை 4 கோடியே 69 இலட்சம். நான் ஒரு கல்லூரியிலே முதல்வர், என்னுடைய கல்லூரியினுடைய பரப்பு 30 ஏக்கர்; வேண்டுமானால் கொஞ்சம் குறைவாக இருக்கும். அதிலே இருக்கிற

ஆசிரியர்கள், மற்ற ஊழியர்கள், படிக்கிற மாணவர்கள் ஆகியோர் ஆயிரம் பேர்கள் இருப்பார்கள். நானே ஒரு நாளைக்கு 30 பைல்களைப் பார்க்கிறேன்.

(பிற்பகல் 4-00.)

மாவட்ட அளவிலே இருக்கக் கூடிய மத்திய வங்கியினுடைய தலைவர் ஒருவர் 35 பைல் முதல் 50 பைல் வரை பார்க்கிறார். நமது முதலமைச்சர் அவர்கள் 11 ஆயிரம் பைல் பார்த்திருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவு காலமாக இந்த 11 ஆயிரம் பைல் பார்த்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். 13 மாதத்தில் 11 ஆயிரம் பைல் பார்த்திருக்கிறார். சராசரி பார்த்தால் ஒரு நாளைக்கு 28 பைல் ஆகிறது. 30 ஏக்கர் பரப்பளவில் அதாவது $1\frac{1}{2}$ மைல் சுற்றளவுக்குள் இருக்கிற ஒருவருக்கு தினசரி 20 பைல் வருகிறது. இவ்வளவு பெரிய மாநிலத்தினுடைய அமைப்பு முறைகளில், அதுவும் இன்றைய அமைப்பு முறைகளில் பல முக்கியமான பைல்கள் முதலமைச்சர் அவர்கள் பார்த்து அவருடைய கன்கரன்ஸ் பெற்றுத்தான் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்ற நிலையில், அப்படி அவர் சொல்லியிருப்பதால், நிச்சயம் இன்று அரசு இயந்திரம் தேங்கி நிற்கிறது என்பதை என்னால் திட்டவட்டமாகச் சொல்ல முடியும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : புது வியாக்கியானம் கேட்பதால், விளக்கம் தரலாம் என்று நினைக்கிறேன். சதுர மைல், ஏக்கர் என்றெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிறார்கள். இரண்டுக்கும் பொருத்தம் இருக்கிறதா ? நிறைய பைல்கள் முதலமைச்சருக்கு வர வேண்டுமென்று நினைத்து, அதிகாரத்தையெல்லாம் முதலமைச்சரிடத்தில் குவிப்பது நல்லது என்று எதிர்க்கட்சித் தலைவர் கருதுகிறாரா ? அவர்களுடைய மாநில சுயாட்சிக் கொள்கைக்கு அது சற்றுக்கூட பொருத்தமற்ற ஒன்று ஆயிற்றே.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு அமைச்சரவர்கள் நல்ல விளக்கத்தைக் கொடுத்தார்கள். அதற்கு நன்றி. அவர் சொன்ன கருத்துக்களை ஒரு கொள்கையாக, ஒரு அறிவிப்பாக எல்லா இலாகாக்களுக்கும் அனுப்பி, இப்படி இப்படி உள்ள பைல்களை முதலமைச்சருக்கு அனுப்ப வேண்டுமென்ற நிலையை உருவாக்கியிருக்கிறோம், மாற்றியமைத்திருக்கிறோம் என்று அறிவிப்பார்களா ? அப்படிச் செய்தால் மகிழ்ச்சியடைவேன். அப்படி அறிவிக்க முன்வருவார்களா ? அடுத்தபடியாக, நான் சொல்லப் போகும் ஒரு விஷயம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரிந்த விஷயம்தான். இதற்கு முன்னால் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, ஒரு நாளைக்கு அவருக்கு 100 முதல் 150 பைல் வரை வரும். எல்லாவற்றையும் பார்த்தார். அது எனக்குத் தெரியும்.





மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : முன்னாள் முதலமைச்சர் நிதித் துறையையும் தன்னிடம் வைத்திருந்தார். முதலமைச்சரும் அவர்தான், நிதியமைச்சரும் அவர்தான். பெரும்பாலான கோப்புகள் நிதியமைச்சருக்குப் போக வேண்டியது. முதலமைச்சர் என்ற முறையில் அவருக்கு வரும். நிதியமைச்சர் தனியாக இல்லாமல் இருந்ததால், நிதியமைச்சர் மற்றும் முதலமைச்சர் என்ற முறையில் அவருக்கு நிறைய கோப்புகள் வரலாம். இப்போது நிதியமைச்சர் தனியாக இருப்பதால், முதலமைச்சருக்கு அவ்வளவு கோப்புகள் வர வேண்டிய அவசியமில்லை. முதலமைச்சர் அவர்களுக்குப் போக வேண்டிய பைல்கள் போகின்றன. அதோடு அந்த பைல்-ம் முதலமைச்சருக்கு சென்று ஒரு வாரம் அல்லது 10 நாளைக்குள் கையெழுத்தாகி வருகிறது.

திரு. எம். சங்கரலிங்கம் : எனக்கு இருக்கிற விருப்பம் எல்லாம் வேகமாக, சடுதியாக அரசு செயல்பட வேண்டும் என்பது தான், வேகமாக அரசு இயந்திரம் செயல்படுகிறது என்று அமைச்சரவர்கள் இப்பொழுது சொல்கிறார்கள். மகிழ்ச்சி, எங்களுடைய ஐயமெல்லாம் அரசாங்க இயந்திரம் வேகமாகச் செயல்படவில்லை என்பது தான். செயல்படுகிறது என்று சொல்வது சொல்லால் அல்ல, செயலில் இருக்க வேண்டும் என்பது எங்கள் ஆசை. அப்படி நாங்கள் எதிர்பார்க்கிறோம். நமது மாநிலத்தில் பல்வேறு கட்சியைச் சேர்ந்த தலைவர்களும், எடுத்துப் பேசியது போல, ஜனநாயக முறைக்கு நாம் முக்கியத்துவம் கொடுத்து, சிறப்பாக இந்த ஆட்சி இயந்திரம் நடக்க வேண்டுமென்று விரும்புகிறோம். என்னைப் பொறுத்தவரை, நான் எனக்குள்ள ஒரு சந்தேகத்தை இங்கே சுமத்தி வைக்கிறேன். ஏன் ஜனநாயக முறையிலே ஆட்சியின் எல்லா அமைப்புகளும் செயல்பட வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம் என்றால், ஜனநாயக முறையில் தான் மக்களுடைய குறைகளைத் தெரிந்துகொள்ள முடியும் என்பது என்னுடைய கருத்து. மக்களுடைய குறை நீங்கி, மக்கள் நல்வாழ்வு வாழ ஒரு நிலைத்த ஆட்சி நடக்க வேண்டும், இயங்க வேண்டும் என்பது தான் எல்லா மக்களுடைய கருத்தும், என் கருத்துமாகும். ஆங்காங்கு ஊராட்சியிலிருந்து இந்த சட்டமன்றம் வரை இருக்கிற அமைப்புகளும்; பிரதிநிதிகளும் ஒரு ஆட்சி போடுகிற தனிச் சட்டங்களை, ரூல்ஸை அமுல்படுத்துகிற நிலையில் மக்கள் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும் அந்தந்தத் துறையிலே இருக்கக்கூடிய குறைகளையும் எடுத்துச் சொல்லி அதை நிவர்த்திப்பதற்கு வழிமுறை காண்கிறார்கள். அந்த முறையில் நம்முடைய நாட்டிலே பஞ்சாயத்து யூனியன்கள் எல்லாம் கலைக்கப்பட்டு எவ்வளவு நாளாகி விட்டது என்பது நமக்குத் தெரியும், குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்திலே பஞ்சாயத்துக்கள் எல்லாம் கலைக்கப்பட்டு, பஞ்சாயத்துத் தலைவர்களுடைய பதவியெல்லாம் பறிக்கப்பட்டு, அங்கு இருக்கக்கூடிய கமிஷனர்களிடம் அவர்கள் கையில் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. நம்முடைய ஆட்சி முறை அதிகாரத்தைப் பரவலாக ஊராட்சி வரை கொண்டு சென்று பிறகு,

மாவட்டத்திலே இருக்கக்கூடிய அபிவிருத்திக் கவுன்சில்கள், அதற்கு அடுத்தபடி பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் அதற்குப் பிறகு பஞ்சாயத்துக் கவுன்சில்கள் என்று வைத்துக் கொள்ளலாம். மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்றால், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் வரவேண்டும். மாவட்டங்களிலிருந்து வந்திருக்கின்ற சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் அல்லது . சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பொதுவான கருத்துக்களைத் தான் சொல்ல முடியும். ஊர் வளர்ச்சி போன்றவற்றிலுள்ள குறைகளை எடுத்துச் சொல்வதும், தேவையான அமைப்பு முறைகளை நடத்துவதும் வழி காட்டுவதும் ஊராட்சி ஒன்றியத் தலைவரால் தான் செம்மையாகச் செய்ய முடியும். நான் கடந்த பல ஆண்டுகளாக சட்டமன்ற உறுப்பினராக வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே கலந்துகொண்டாலும் பொதுவான கருத்துக்களைத் தான் எடுத்துச் சொல்ல முடிகிறது. பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் தான் அங்கு நடைபெற வேண்டிய வளர்ச்சித் திட்டங்களை, செயல் முறைகளை எடுத்துச் சொல்கிறார்கள். குடியரசு ஆட்சித் தலைவர் காலத்தில் கலைக்கப் பட்ட பஞ்சாயத்து யூனியன்கள் இதுவரை சீரமைக்கப்படாமல் இருக்கின்றன என்பதை யாரும் மறந்துவிட முடியாது. மாவட்ட கலெக்டர் அல்லது அவருடைய பிரதிநிதி தலைமை தாங்கி நடத்துகிற ஒரு அதிகார ஆட்சி முறை தான் மாவட்டங்களில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதுபோலவே கூட்டுறவு இயக்கங்கள். நாடு வேகமாக முன்னேற, ஏழையெளிய மக்கள் கடன் பெறவும், விவசாயம் சிறப்பாக நடைபெறவும், தொழில் சிறப்பாக நடைபெறவும், பல்வேறு வளர்ச்சிப் பணிகள் வேகமாக நடைபெறவும் நாம் கூட்டுறவுச் சங்கங்களை வைத்துக் கொண்டிருக்கிறோம். அவையும் கலைக்கப்பட்டு புதிய தேர்தல் இன்னும் நடைபெறவில்லை. தனி அலுவலர்கள் இன்னும் ஓராண்டு காலம் ஆட்சி செய்வார்கள். அதிகாரம் மீண்டும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. நகர மன்றங்கள் ஒரு ஆண்டுக்கு மேலாக இயங்கவில்லை. மிக முக்கியமாக கீழ் மட்டத்திலே ஜனநாயக அமைப்பு ஊக்கப்படுத்தப்பட வேண்டும் ஆனால் அந்த முறை இப்பொழுது இல்லாமல் இருக்கிறது. குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் அது கலைக்கப்பட்டாலும் கூட, இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்று 13 மாதங்கள் ஆகியும் இன்னும் அவற்றை நிலை பெறச் செய்ய எந்த முயற்சியையும் எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டை நான் இந்த நேரத்தில் கூறிடக் கடமைப் பட்டிருக்கிறேன். முதலமைச்சர் சொல்லலாம், நாங்கள் மதுரையிலே தேர்தலுக்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்து தேர்தலை நடத்தியிருக்கிறோம், ஜனநாயகத்தை நிலை நாட்டி யிருக்கிறோம் என்றெல்லாம் சொல்லலாம். இந்த நாட்டிலே மதுரையில் மட்டுமல்ல, எல்லாப் பகுதிகளிலும் ஒரே நாளில் அந்தத் தேர்தலை நடத்தியிருக்கலாம் என்பது என் கருத்து. வாக்காளர் பட்டியல் இல்லை என்ற பிரச்சினையும் இல்லை. அது ஏற்கெனவே தயாராக இருக்கிறது. அவர்கள் தேர்தலை மாவட்ட அளவிலே முதலிலே நடத்தியிருக்க வேண்டும். அதைச் செய்ய



வில்லை. எது செயல்பட வேண்டுமோ, அது செயல் படவில்லை. ஆங்கிலத்தில் சொல்லுவார்கள் ''apoplexy at the centre and paralysis at the end'' என்று எப் போதுமே அதிகாரக் குவியல் பரவலாக இல்லாமலிருந்தால், ஆட்சி இயந்திரம் நன்றாகச் செய்யப்படுவதில்லை. பரவலாக அதிகாரத்தை வைத்துக்கொள்ளாமல் மத்தியிலே அதிகாரம் குவிந் திருந்தால், அந்த முறையை ரத்த ஓட்டம் உடலில் பரவலாக இல்லாத நிலையுடன் ஒப்பிடலாம். ஆங்கிலத்தில் ''கோமா ஸ்டேஜ்'' என்று குறிப்பிடுவார்கள். அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டால், கை கால் செயல்பட முடியாதவாறு சக்தியற்ற தன்மை ஏற்படுகிறது. தலையில் ரத்த ஓட்டம் அதிகமாகப் போனால் ''அப்போபிளக்ஸி'' வரும். மற்ற இடங்களில் ரத்த ஓட்டம் அதிகமாகப் போனால் ''கோமா ஸ்டேஜ்'' ஏற்படக் கூடிய நிலைமை ஏற்படும். ஒரு ஆட்சி செயல்படுகிறது என்றால், அது இங்கு இருக்கிற சட்டமன்றங்களையும் துறைத் தலைமை அலுவலகங்களையும் வைத்துக் கணக்கிடுவதன் மூலம் அல்ல. ஊராட்சி மன்றங்கள் நன்றாக நாட்டில் செயல்பட வேண்டும். அவைதான் கைகளும் கால்களும். இங்கு இருக்கக் கூடிய தலைமை அலுவலகங்கள் எல்லாம் மூச்சு மாதிரி மூச்சு விட்டுக் கொண்டேயிருக்கலாம், அவ்வளவு தான், கை அசையவில்லை, கால் அசையவில்லை, காது கேட்கவில்லை, கண் தெரியவில்லை என்ற ஒரு துர்பாக்கியமான நிலை ஜனநாயகத்தில் நாடு முழுவதும் பரவலாக இருக்கிறது.

குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் அப்படி ஆக்கப்பட் டிருந்தாலும்கூட, இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடன் ஏன் அவற்றைச் செம்மைப் படுத்தவில்லை? ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ள இந்த ஆட்சியினர் ஏன் செய்ய வில்லை? அவைகள் காலா காலங்களில் செய்திருக்க வேண்டிய ஒன்று. அதுவும் ஒரு வருடத்திற்குத் தனி அலுவலர்களை நியமிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இது மட்டுமல்லாமல், ஆட்சிக்கு அப்பாற்பட்ட சமுதாய கலாச்சார அமைப்புகள் எல்லாம் இன்றைக்குச் செம்மைப்படுத்தப்படவில்லை. கோயில்களில் கூட இன்னும் டிரஸ்டிகள் நியமிக்கப்படவில்லை. இதற்கு முன்பிருந்த ஆட்சியாளர்கள் தங்களுக்கு வேண்டிய டிரஸ்டிகளைப் போட்டு விட்டார்கள் என்று நீங்கள் சொல்லுவீர் களேயானால். நீங்களும் உங்களுக்கு வேண்டியவர்களைப் போடுங்கள். ஏன் இதுவரை போடவில்லை? அப்படிப் போடாததால் அங்குள்ள அலுவலர்கள் என்னென்ன தவறு செய்ய வேண்டுமோ அப்படி நிறைய தவறுகள் செய்துகொண்டிருக்கிறார்கள் என்ற புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. குடியரசுத் தலைவருடைய ஆட்சிக் காலத்தில் எல்லா கிராமங்களிலேயும் இருக்கக்கூடிய கோயில் அமைப்பு முறைகள் எல்லாவற்றையும் வில்லேஜ் ஆபீசர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்று சொன்னார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை நான் இங்கு சொல்ல விரும்புகிறேன். அது மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் என்பதால், மாண்புமிகு

தலைவரவர்களே, உங்கள் மூலம் அந்த சம்பவத்தை இந்த அவையினர் கவனத்திற்கும் மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்கும் கொண்டு வருகிறேன்.

(பிற்பகல் 4-10)

தமிழகத்தில் ஏனைய பகுதிகளில் இருக்கிற கோயில்களுக்கு அரசாங்கம் நியமிக்கிற டிரஸ்ட் போர்டுகள் உண்டு. கன்னியாகுமரி மாவட்டத்தில் அப்படி அல்ல. அந்த மாவட்டத்தில் இருக்கிற எல்லாக் கோயில்களுக்குமாகச் சேர்ந்து ஒரு 'தேவஸ்வம் போர்டு' உண்டு. திருவாங்கூர்—கொச்சின் தேவஸ்வம் சட்டப்படி நியமிக்கப் பட்டு அந்தக் கோயில்கள் எல்லாம் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அது ஒரு 'அடானமஸ் பாடி'யாக இயங்கக்கூட அதிகாரம் கொடுக்கப் பட்டது. திருவாங்கூர் மன்னர் ஆண்டுதோறும் ரூ. 13½ லட்சம் இவைகளுக்காகத் தந்து கொண்டிருக்கிறார். இவைகளெல்லாம் அரசாங்கத்தின்கீழ் பராமரிக்கப்படுகின்றன. இவைகள் எல்லாம் அரசாங்கத்தின் கண்காணிப்பில் இருக்கின்ற தேவஸ்வங்கள். ஆனால் இவைகளைத் தவிர ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள சிறு கோயில் களுக்கு ஜனநாயக முறையில் டிரஸ்டிகள் தேர்ந்தெடுக்கப்படு கிறார்கள். அவர்கள்தான் கோயில்களைப் பராமரிக்கிறார்கள். என்னுடைய ஊரில் 45 குடும்பங்கள் இருக்கின்றன. இப்படி ஒவ்வொரு ஊரிலும் உள்ள மக்கள் தங்களுக்குள்ளாகவே கோயில் களைப் பார்த்துக்கொள்வதற்கு என்று டிரஸ்டிகளைத் தேர்ந்தெடுக் கிறார்கள். ஒவ்வொரு ஊரிலும் ஊர்க்காரர்கள் பட்டியல் வைத்திருக்கிறார்கள். அந்த ஊர்க்காரர்கள்தான் வாக்காளர்கள். ஊரில் ஒருவர் வந்து குடியேறினால், 5, 6 ஆண்டுகளுக்குப் பிறகுதான் அவர்கள் மெம்பர்களாகச் சேர்க்கப்படுவார்கள். 3 வருஷத்திற்கு ஒருமுறை கோயில்களுக்குத் தேர்தல் நடத்தப்படும். ஒவ்வொரு ஊரிலும் அவர்களுக்குள்ளாகவே ஒரு கான்ஸ்டிடியூஷன் வைத்துக் கொள்வார்கள். சில ஊர்களில் தகராறு வந்தால், கோர்ட்டுக்குப் போய் ஒரு 'ஸ்கீம்' தயார் செய்து அதை அமுல் செய்கிறார்கள். இன்னும் சில இடங்களில் நிருவாகத்தில் தகராறு வரும்போது தான் அறநிலையத் துறை தலையிட வேண்டுமென்று பெட்டிஷன் போட்டு அறநிலையத் துறையிடம் ஒப்படைக்கிறார்கள். அப்போது தான் அங்கே இருக்கிற துணைக் கமிஷனர் வந்து அதை ஏற்றுக் கொள்வார். அதற்குப் பிறகு டிரஸ்ட் போர்டு நியமிக்கப்படும். இப்படி எந்தவிதமான தகராறும் இல்லாமல் செயல்பட்டுக் கொண்டு வந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமக் கோயில்கள் அனைத்தும்—ஊர்க்காரர்களே டிரஸ்ட் போர்டு அமைத்து அவர் களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நிருவகித்து வந்த திருக் கோயில்கள்— குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது, ஒரே நாளில் ஒரு உத்தரவு போட்டு அந்த அந்த ஊரில் உள்ள வில்லேஜ் ஆபீசரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று சொல்லி ஒப்படைக்கச் செய்தார்கள். கோயில்கள் இந்துக்களின் கோயில் கள். ஒரு ஊரில் வில்லேஜ் ஆபீசர் கிருஸ்தவராக இருக்கலாம், அல்லது முஸ்லீமாக இருக்கலாம். அவர்கள் இந்தக் கோவில்களை



யெல்லாம் மேற்கொண்டார்கள் என்றால், அதன் நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும். இதுபற்றி நானே ஒரு வினாவை எழுப்பியிருக் கிறேன். வினா தரப்பட்டு 3 மாதமாகிறது. இன்னும் அந்த வினா அனு மதிக்கப்படவில்லை. என்ன காரணம் என்று தெரியவில்லை. எதற்குச் சொல்லுகிறேன் என்றால், இப்படி ஜனநாயக முறையில் செயல் பட்டுக்கொண்டிருந்த கோயில்களில் எல்லாம் இந்த நிலைமை உருவாக்கப்பட்டது. எங்கெல்லாம் இந்த ஆட்சியினுடைய கை படாமலே சிறப்பாகச் செயல்கள் நடைபெற்றுக்கொண்டிருந் தனவோ அவைகளில்கூட குடியரசுத் தலைவர் ஆட்சியில் கை வைக்கப்பட்டது. ஆனால் என்ன காரணத்தாலோ இந்த அரசு மீண்டும் பழைய நிலைமையை அமுல் படுத்துவதற்கு எந்தவிதமான முயற்சியையும் மேற்கொள்ளவில்லை என்பதை இங்கே தெளிவு படுத்த விரும்புகிறேன்.

அடுத்து, என்னுடைய குற்றச்சாட்டெல்லாம் இந்த ஆட்சி நிருவாகத்தில் தலையிடாமல் நல்லாட்சியை நடத்துவதாக, அல்லது நடத்த முயல்வதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி வருவதில் உண்மையிலேயே நான் மகிழ்ச்சியடைகிறேன். அத்தகைய நல்ல அமைப்பு வந்தால்தான், நாட்டிலுள்ள குறைபாடுகள் நீங்கி ஏழை எளியவர்கள், நல்லவர்கள் வாழத்தக்க நிலை ஏற்படும். ஆனால் அந்த நிலை இன்றையதினம் தமிழ் நாட்டில் நடை பெறுகிறதா என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்க விழைகிறேன். ஏனென்றால் அவ்வாறு நடைபெறுகிறதா இல்லையா என்று அவர்கள் அறிவதைவிட கிராமப்புறங்களில் இருக்கிற நாங்கள்தான் நன்கு அறிந்துகொள்ள முடியும். எனவே நாங்கள் தான் சொல்ல வேண்டும், நாங்கள் சொல்வது சரிதானா என்று பார்த்துவிட்டு, செயல்படுவதற்கு அவர்கள் முனைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆட்சியில் ஆளும் கட்சியினருடைய தலையீடு அதிகமாக இருக்கிறது என்பது என்னுடைய குற்றச்சாட்டாகும். இதற்குப் பல உதாரணங்களைச் சொல்ல முடியும் என்றாலும், எங்கள் மாவட்ட அளவில் ஒன்றிரண்டை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன், இந்த ஆட்சி மிகவும் தயங்கி நடக்கிறது, அதனால் பல காரியங்கள் தேங்கி நிற்கின்றன என்று குறிப்பிட்டேன். அது போலவே பல இலாக்காக்களில் அதிகாரிகள் நியமிக்கப்படாமலேயே இருக்கிறார்கள்.

நாகர்கோயிலில் கடந்த 5 மாதங்களாக சீ. ஈ. ஓ., நியமிக்கப்படாமல் அங்கே இருக்கும் டி. ஈ. ஓ.——மாவட்டக் கல்வி அதிகாரியே அந்தப் பொறுப்பையும் கவனித்து வருகிறார். அவரும் பிறகு மாற்றப்பட்டு, அவருக்கு பதில் ஒருவர் வந்திருக்கிறார். அவரும் லீவில் சென்றபோது, ஒரு டெபுடி இன்ஸ்பெக்டரே அதைப் பார்த்து வந்திருக்கிறார். கீழ்மட்டத்திலே இருப்பவர்கள் உயர் மட்டப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டு செயல்படுவதில் இந்த ஆட்சிக்கு ஒருவேளை மகிழ்ச்சி இருக்கலாம். ஆனால் மாவட்ட அளவிலான அதிகாரிகள் நியமிக்கப்படாமலிருந்தால் அதன் காரணமாக இந்த ஆட்சி எப்படிச் செயல்பட முடியும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். நாகர்கோயில் முதன்மைக் கல்வி அதிகாரி நியமிக்கப்படவில்லை. மாவட்டக் கல்வி அதிகாரியே அந்தப் பொறுப்பையும் மேற்கொண்டிருக்கிறார். அங்கே இலக்குமிபுரம் கல்லூரி ஒன்று இருக்கிறது. லட்சுமிபுரம் காலேஜ் என்று சொல்லப்படுகிற . கல்லூரியில் பல தவறுகள் நடைபெற்று அதனால் அரசே அந்தக் கல்லூரியை மேற்கொண்டது. அதற்குப் பிறகு அதனுடைய நிருவாகத்தை சீ. ஈ. ஓ. விடம் ஒப்படைத்திருக்கிறார்கள். இவ்வாறு ஒப்படைப்பதற்கு அரசாங்கம் தனியாக ஒரு ஆணையைப் பிறப்பித்திருக்கிறது. அதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், இந்தக் கல்லூரியில் வரக்கூடிய காலியிடங்களில், அதற்குரிய ஆசிரியர்களை நியமனம் செய்ய சி. ஈ. ஓ. மாவட்ட ஆட்சித் தலைவரைக் கலந்து முடிவு செய்து நியமிக்க வேண்டும் என்று இருக்கிறது. பிறகு அந்தக் கல்லூரியின் முதல்வர் பதவி காலியாகிவிட்டது. காரணம் கல்லூரி முதல்வர் இறந்துவிட்டார். எனவே அடுத்து யாரை முதல்வராகப் போட வேண்டும் என்ற பிரச்சினை வந்தபோது, சீ. ஈ. ஓ. தனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் ஒருவரை நியமித்தார். ஆனால் இன்னொருவர் நான்தான் கல்லூரி முதல்வர் என்று அவராகவே தன்னை அறிவித்துக் கொண்டார். கல்லூரியில் ஒரு பெரிய குழப்பம் ஏற்பட்டது. மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியிலே போராட்டமே நடைபெற்றது. இதனால் சீ. ஈ. ஓ. மாவட்ட ஆட்சித் தலைவரைக் கூப்பிட்டு வைத்துக் கொண்டு, மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களை கூப்பிட்டு வைத்துக்கொண்டு, அந்த அரசாணையில் சொல்லப்பட்டிருக்கிற விதத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரையும் கலந்து ஆலோசித்து ஒருவரைக் கல்லூரி முதல்வராக நியமித்தார். ஆனால் அங்கே உள்ள அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பிரமுகர்கள்



அதே கல்லூரியில் பணிபுரிகிற வேறு ஒருவரை கல்லூரி முதல்வராகப் போட வேண்டும் என்றார்கள். அதற்கு சீ. ஈ. ஓ. "அரசு உத்தரவுப் பிரகாரம், மாவட்ட ஆட்சித் தலைவரையும் கலந்து, சட்ட மன்ற உறுப்பினர்களையும் கலந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலேயே முடிவெடுத்திருக்கிறேன். ஆகவே அதை மாற்ற முடியாது" என்று கூறிவிட்டார். அப்போது ஆளும் கட்சிப் பிரமுகர்கள் என்ன சொன்னார்கள் என்றால், "நாங்கள் சொல்வதைக் கேட்காமல் போனால், நீங்கள் இங்கே சீ. ஈ. ஓ. ஆக இருக்க முடியுமா?" என்றார்கள். மறுநாள் அந்த அதிகாரி திருச்சியில் கல்வி அதிகாரி பொறுப்பில்லாமல் புள்ளிவிவர அதிகாரியாகப் பொறுப்பேற்றிருக்கிறார் என்று சொல்லப்படுகிறது. அரசாங்க ஆணைப்படி செயல்பட்ட ஒரு அதிகாரிக்கு ஏற்பட்ட நிலை இது. கல்லூரிக் கல்வி இயக்குநரிடமிருந்து ஒரு உத்தரவு அவருக்கு வருகிறது. இலட்சுமிபுரம் கல்லூரியில் முதல்வர் நியமனத்தில் ஏற்பட்ட தவறுகள் காரணமாக மாற்றப்பட்டிருக்கிறார். இப்படிக் காரணத்தைச் சொல்லியே ஒரு உத்தரவு போயிருக்கிறது. அவர் நியமித்தது சட்டப்படியாகும். எனவே இப்படி ஆளும் கட்சிக்காரர்கள் எல்லா இடங்களிலும் தலையிடுகிறார்கள் என்ற நிலை ஏற்பட்டால், ஆட்சி சிறப்பாக நடைபெறுமா என்று சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை அவர்கள் ஒரு கருத்தை மிக அழகாகச் சொன்னார்கள். 'அம்மையார் ஒருவர், அதுவும் ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவருடைய மனைவியார் எல்லோருக்கும் மாலை போட்டுக் கொண்டிருக்கிறார். ஏரோடிரோமில் மாலை போடுகிறார். யாராவது பதவி ஏற்றால் மாலை போடுகிறார். அப்படி அனுமதித்தால், அது அரசியல் தவறு ஏற்படவும், ஆட்சியில் தவறு ஏற்படவும் மற்றும் ஊழல் நடக்கவும் காரணமாக அமையும்" என்று சொன்னார்கள். பதவிக்கு வருகிறவர்களைப் பார்த்து, ஒருவர் மாலை போடுகிறார் என்றால், எதையோ எதிர்பார்த்துத்தான் அவர் செய்கிறார் என்று அர்த்தம் என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆட்சிப் பீடத்தில் இருப்பவர்களைப் பயன்படுத்திக்கொண்டு, தன்னைச் சேர்ந்தவர்கள் ஆட்சிக்குக் களங்கம் கற்பிக்காமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டியது ஆட்சியாளரின் பொறுப்பாகும். அப்படிப்பட்டவர்களிடமிருந்து எந்த வகையான தலையீடும் இல்லாமல பார்த்துக் கொள்ள வேண்டியதும் ஆட்சியாளர்களின் பொறுப்பாகும். குறிப்பாகச் சொல்லப் போனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பொறுப்பாகும். அந்த நிலையிலிருந்து பார்க்கிறபோது, எனக்குத் தோன்றுவது எல்லாம் "மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கட்சியின் செயலாளர் என்ற பொறுப்பில் இருந்தாலும், என்று அவர்கள் இந்த நாட்டின் முதலமைச்சராக ஆனார்களோ அன்று முதல் தமிழகத்தின் ஆட்சிச் சக்கரத்தின் தலைவராக விளங்குகிறார். எல்லா மக்களும் அவரை இந்த நாட்டு முதல்வராக ஏற்றிருக்கிறார்கள். எனவே தன்னுடைய கட்சித் தொடர்பைப் பயன்படுத்திக்கொண்டு, தனக்கு இருக்கக்

கூடிய பதவியை தவறாகப் பயன்படுத்த யாருக்கும் அவர்கள் வாய்ப்பு அளிக்கக்கூடாது, இடம் கொடுக்கக்கூடாது''. இதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஆனால் இன்றையதினம் அவ்வாறு நடக்கவில்லையே என்றுதான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

என்னைப் பொறுத்த அளவில், ஒரு சட்டப்பேரவை உறுப்பினர் அவர்களின் வீட்டில் நடைபெற்ற திருமண விழாவை ஒட்டி அச்சிடப்பட்ட திருமண அழைப்பிதழைப் பார்த்தேன். அதில் யார் தலைமையில் யார் யாரெல்லாம் பேசுவார்கள், வாழ்த்துரை வழங்குவார்கள் என்றெல்லாம் போடப்பட்டிருக்கிறது. அந்தத் திருமணத்திற்கு ஹரிஜன நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமை தாங்குகிறார்.

(பிற்பகல் 4-20)

முன்னிலை யார் என்று சொன்னால் ஜே. பி. ஆர். அவர்கள் முதலமைச்சர் அவர்களின் சிறப்புப் பிரதிநிதி என்று போட்டிருக்கின்றார்கள். நாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கட்சியினுடைய பொதுச் செயலாளராக இருக்கின்றபோது, ஜே. பி. ஆர். அவர்கள் வேண்டுமானால் துணையாக இருந்திருக்கலாம். இப்போதுகூட, அவர்களுடைய கட்சியிலே பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கலாம். கட்சியிலே ஒரு பதவியை, பொறுப்பைக் கொடுத்திருக்கலாம். ஒருவேளை முதலமைச்சர் அவர்கள் பதவியில் இருக்கும்போது, ஜே. பி. ஆர். அவர்கள் முதலமைச்சரின் பிரதிநிதி என்று குறிப்பிட்டுக்கொள்வதன் மூலம் அதிகாரிகளையும் ஆட்சியையும் வசப்படுத்துவதற்குச் செய்திருக்கக் கூடிய தவறான செயலாகும். இது முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்ததோ இல்லையோ, தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதைக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுபோன்று இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது நியமிக்கப்பட்டிருக்கின்ற பார்லிமெண்டரி செக்ரட்டரி அவர்கள் ஒரு தேர்தலில் நிற்கின்றார்கள், பச்சையப்பா டிரஸ்ட்டுக்குத் தேர்தலில் நிற்கிறார்கள். அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு வந்தால் மகிழ்ச்சிதான். இந்தத் தேர்தலுக்கு ஒரு விளம்பரம் போடப்பட்டிருக்கிறது. இப்போதைய முதல் அமைச்சர் அவர்களின் படம், கல்வி அமைச்சர் அவர்களின் படம், அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுடைய படம் எல்லாம் போடப் பட்டிருக்கிறது. அவர்களுடைய ஆதரவோடு வெற்றி பெற வேண்டுமென்பது சரி. ஆனால் இந்தக் கடிதம் அரசாங்க அச்சகத்திலே அச்சடிக்கப்பட்டிருக்கிறது. இதில் அச்சகத்தின் பெயரே போடவில்லை. தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சிடப் பட்டிருக்கிறது. அச்சகங்களில் எந்த நோட்டீஸ் அடித்தாலும் சரி ஒரு கல்யாண அழைப்பு அச்சடித்தாலும் அந்த அச்சகத்தினுடைய





பெயரைப் போடுவார்கள். அவ்வாறு பெயர் இல்லாமல் இருப்பதையும் இந்தப் படங்களையும் வைத்துப்பார்க்கும்போது, இது அரசாங்க அச்சகத்தில் அவர்களுடைய அதிகாரத்தையும், அவர்கள் முதலமைச்சர் அவர்களிடத்திலே அவர்களுக்கு இருக்கக் கூடிய செல்வாக்கையும், தொடர்பையும் பயன்படுத்தி, இந்த மாதிரி செய்தது என்று சொன்னால் தவறில்லை. நான் அதை தலைவர் அவர்களின் அனுமதியோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே ஒப்படைக்கிறேன்.

'' நம் முதலமைச்சர் அவர்கள் எதையெதைச் சொல்கிறார்களோ அதை செயல்படுத்துவதற்கு அவர்களைச் சுற்றியிருப்பவர்கள் துணை நிற்க வேண்டுமென்பதற்குத்தான் இதைச் சொல்கிறேன். அவர்களுக்குத் தெரியாமலேயே அவர்களைச் சேர்ந்தவர்கள் இத்தகைய செயல்களைச் செய்து அவருக்கு இடையூறு விளைவிக்கின்றார்கள். இவைகள் எல்லாம் அவர்களுடைய கருத்திலே கொண்டு வரப்பட வில்லையோ என்ற எண்ணத்தில் தான் நான் இதை அவர்களுக்குத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

இப்போது எனக்கு இன்னொன்று நினைவுக்கு வருகிறது. நாங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். 1956க்கு முன்னால் நாங்கள் திருவிதாங்கூர் சமஸ்தானத்திலே இருந்தோம். இங்கே வந்து 22 வருடங்கள் ஆகின்றன. அப்போது அங்கே மன்னர் ஆட்சி நடைபெற்றது என்பது உங்களுக்குத் தெரியும். நாங்கள் சுதந்திரம் பெறுகிறபோது, சித்திரைத் திருநாள் என்பவர் மன்னராக இருந்தார். அதற்கு முன்பு ஸ்ரீ மூலன் தர்மராஜ் என்பவர் மன்னராக இருந்தார். இந்தியாவிலேயே அவரைப் போல கருணை உள்ளம் படைத்தவர் இருக்க முடியாது. அவருடைய உடம்பில் ஒரு தொவர்த்து தான் போட்டுக் கொண்டிருப்பார் வீட்டில். சட்டைகூட போட்டுக்கொள்ள மாட்டார். அவரை எல்லோரும் எப்பொழுதும் பார்க்கலாம். அவ்வளவு மக்களின் மதிப்பையும் மரியாதையையும் பெற்றவர் அவர்கள். எனக்கு 5 வயதுப் பருவத்திலேயே என்னுடைய தந்தையாருடன் அவரைப் பார்க்கச் சென்றிருக்கிறேன். எங்களுடைய ஊருக்குப் பக்கத்திலே திருப்பதி சாரம் என்று ஒரு ஊர் இருக்கிறது. இந்த மன்னர் ஊர் ஊராகச் சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டிருப்பார். அதைத் திருமேனி எழுந்தருளுதல் என்று சொல்வார்கள். இந்த மன்னர் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும்போது, அவர்களோடு சிறுவனாக இருந்தபோது அவருடன் படித்து, விளையாடியவர், அவருக்கு நண்பராக இருந்தவர் ஒருவர் அவரிடம் வந்தார். கொஞ்ச காலத்திற்குப் பிறகு அவர் மகாராஜா ஆகிவிட்டார். அவர் மகாராஜாவாக இருக்கின்றபோது, அந்த நண்பர் இவரிடத்தும் வந்தார். அவரிடம் வேலை கேட்டாராம். அப்போது அந்த மகாராஜா, நான் எல்லோருக்கும் மகாராஜாதான், இருந்தாலும் ஆட்சி இயந்திரம் என்று இருக்கிறது, பொதுமக்கள் பிரதிநிதிகள், கலெக்டர் இவர்கள் எல்லாம் இருக்கின்றார்கள். அவர்கள்தான்

எல்லாவற்றையும் பார்த்துக்கொள்கிறார்கள். நான் உங்களுக்கு வேண்டுமானால் கொஞ்சம் பணம் தரலாம். ஆனால் வேலை தர முடியாது'' என்று சொன்னார். உடனே அந்த நண்பர் மகாராஜாவிடம், ''நீங்கள் வேலை தரவேண்டாம், உங்களுடைய சங்கு முத்திரையைத் தந்தால் போதும்'' என்று சொன்னார். மகாராஜாவும் ''இந்த சங்கு முத்திரை தந்தால் போதும் என்கிறார். நம்கூட 10, 15 வயதிலே கூடவே பழகியவர், விளையாடியவர், ஒரு சங்குமுத்திரையைத் தான் கேட்கிறார்'' என்று அந்த சங்கு முத்திரையைக் கொடுத்து விட்டாராம். பிறகு கொஞ்ச காலம் கழித்து அவரைக் காணவேயில்லை. அந்த மகாராஜா அமைச்சரைக் கூப்பிட்டு, என் நண்பன் சங்கு முத்திரையை வாங்கிக்கொண்டு போனான், அவன் அதை வைத்துக் கொண்டு என்ன செய்கிறான் என்று பார்த்து வாருங்கள் என்று சொல்லி அனுப்பினார். அவர்கள் சி. ஐ. டி. இலாகாவைச் சேர்ந்தவர்களுக்குச் சொல்லியனுப்பினார்கள். அவனை வீட்டிலே போய் பார்த்துவிட்டு வந்தார்கள். அவர்கள் மகாராஜாவிடம் சொன்னார்கள். ''ரூ. 30,000 மதிப்புள்ள வீடு வாங்கியிருக்கிறான். ஜட்கா வண்டி வாங்கியிருக்கிறான், இரண்டு சாரட்டு குதிரை வண்டியிலே வந்துகொண்டிருக்கிறான்'' என்று சொன்னார்கள். ''அது என்ன, அதற்கு முன் ரொம்பக் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தான், வேலை கேட்டான். இந்த சங்கு முத்திரையை கொண்டுபோய் இப்படியெல்லாம் வளர்ந்திருக்கிறான். அவ்வளவு பணம் எப்படி வந்தது என்று விசாரிக்க வேண்டும்'' என்று அவனை அழைத்து வரச் சொன்னார். அப்படி அவர் கூப்பிட்டுக் கேட்டபோது அந்த நண்பர் சொன்னார், ''அதை வைத்து நான் ஒன்றும் செய்யவில்லை, மகாராஜா அதை நான் வைத்துக்கொண்டு கடற்கரையிலே இருப்பேன். யார் வந்தாலும் என்னிடம் சங்கு முத்திரை இருக்கிறது, ஒரு ரூபாய் கொடுக்க வேண்டும் என்று கேட்பேன், அவர்களும் கொடுப்பார்கள்'' என்று சொன்னான். அதைக் கேட்ட மகாராஜா அவனிடமிருந்து அந்த சங்குமுத்திரையைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, ''இனி நீ இங்கேயே இரு, உனக்கு சாப்பாடு, உடை இங்கேயே கிடைக்கும்'' என்று அரண்மனையிலேயே வைத்துக்கொண்டார். நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், நாட்டினுடைய முதலமைச்சருக்கு பிரதிநிதிகள் அரசாங்க ரீதியாக நியமிக்கப்பட்டு, வரன்முறை செய்யப்பட்டு, சட்ட நியதிப்படி அமைப்பதைத் தவிர வேறு எதையும் நாம் அனுமதிக்கக்கூடாது. அப்படி அனுமதிப்பது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்ததாக இருக்கும் என்பது தான் பொருள்.

பாராளுமன்ற செக்ரட்டரிகள் என்று கொஞ்சப் பேர்களைப் போட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. அண்மையில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 4 பேர்கள் வந்துவிட்டார்கள். மாண்புமிகு அமைச்சர்கள் வந்தபோதுகூட அவ்வளவு ஆரவாரம் இல்லை. ஆனால் அப்போது என்ன ஆரவாரம் எல்லாம் நடந்தது என்று



சொன்னால், மாவட்டம் பூராவும் ஒரே அலங்கார தோரணங்கள், வரவேற்பு வளைவுகள், மாவட்ட அலுவலகங்களில் உள்ள கார்கள் அத்தனையும் அங்கு டி. பி. யில் குவிக்கப்பட்டிருந்தன. அங்கிருந்த அதிகாரிகள் எல்லாம் ஸ்தம்பித்து நிற்கும் நிலைமைகள் ஏற்பட்டன. இப்படியெல்லாம் அரசு இயந்திரத்தைக் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு பல தவறுகளை இழைப்பார்கள் என்றால், அதனால் வருகிற கேடு அமைச்சரவையைப் பாதிப்பதைவிட நாட்டையே பாதித்து, பெறும் இழப்புக்கு வழிவகுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் இந்த நாட்டில் ஒவ்வொரு நிர்வாகத்திலும் ஒரு தேக்கநிலை ஏற்பட்டிருக்கின்றது என்பதைப் பற்றி நான் முதலிலேயே எடுத்துச் சொன்னேன். எங்கேயும் ஒரு தேக்கநிலை ஏற்பட்டிருக்கின்றது. அந்த நிலைமைகள் ஏன் ஏற்பட்டிருக்கின்றன என்று நீங்கள் பார்த்தீர்களானால், எல்லாப் பதவிகளும், பெரிய ஆபீஸர்கள் பதவிகள் நிரப்பப்படாமல் எல்லா இலாக்காக்களிலும் அப்படியே இருக்கின்றன. நாகர்கோவிலில் மாவட்டக் கல்வி அலுவலர் நியமிக்கப்படவில்லை. டைரக்டர் ஆஃப் மெடிக்கல் சர்வீசஸ் பதவி இன்னும் நிரப்பப்படவில்லை. பள்ளிகள் திறந்து இப்போது செப்டம்பர் மாதம் ஆகிவிட்டது. எக்சாமினேஷன் வர இருக்கிறது. பள்ளிகளில் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் யாரும் நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள். நாகர்கோவிலில் இருக்கக் கூடிய தலைமை மருத்துவ மனையில் 25 இடங்களில் 8 இடங்கள் காலியாகவே இருக்கின்றன. அங்கு பல மருத்துவர்கள் போட்டும் வரவில்லை என்று சொல்கின்றார்கள். போகாதவர்களை ஏன் அங்கு போடவேண்டும். அதையெல்லாம் பார்த்துப் போடவேண்டும். வேலையில்லை என்று எத்தனை பேர்கள் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் போடவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:</u> தலைவர் அவர்களே, நாகர்கோவிலில் ஒரு சி.ஈ.ஓ. போடப்பட்டு அவர் லீவிலே போயிருக்கிறார். ஆகவே வேறு ஒரு சி. ஈ. ஓ. வைப் போடுவது பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. எம் சங்கரலிங்கம்:</u> டி. ஈ. ஓ. போன்ற மாவட்ட அளவில் உள்ள தலைமை அதிகாரிகளை நியமிக்கின்றபோது, பேனலிலே அடுத்து இருப்பவர்களைப் பார்த்து, அவர்கள் அங்கு போட்டால், போவார்களா போகமாட்டார்களா என்பதைப் பற்றித் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு கேட்டு, போக விருப்பமில்லை என்றால், வேறு ஒருவரைப் போடலாம். அந்தப் பதவிக்கு வர மனமில்லாதவரைப் போட்டு, அவர் 'ஜாயினிங் டைம்' எடுத்துக்கொண்டு, 'ஜாயின்' ஆகிவிட்டு பின்பு லீவு போட்டுவிட்டுச் செல்லும் நிலைமை இருந்தால், அரசு

இயந்திரம் எப்படிச் செயல்படும் என்பதைப் பார்க்க வேண்டும். 8 நாள் கழித்து வரவில்லை என்றுதான் ரிப்போர்ட் வருகிறது. அவர் வரவில்லை என்று வேறு ஒருவரைப் போட்டு அவரும் வராமல் திருப்பித் திருப்பி இதே நிலைமைகள் வந்தால், அந்த ஆட்சி இயந்திரம் எங்கு போய் நிற்கும்? நான் உறுதுணையாக அரசுக்கு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதை எடுத்துச் சொல்கிறேன். இதையெல்லாம் நான் குற்றம் சாட்ட வேண்டும் என்ற உணர்வோடு சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 4-30]

இதையெல்லாம் நீங்கள் கவனித்தால்தான், ஆட்சி இயந்திரம் செவ்வனே இருக்கும். ஞாயிற்றுக்கிழமை நான் விருத்தாசலத்திற்குப் போயிருந்தேன். அங்குள்ள மருத்துவ மனையிலே பெண் டாக்டரே கிடையாது. எப்படி அங்கே பெண்கள் வந்து, மருத்துவ உதவி பெற முடியும்? மதுரை டிவிஷனில் உள்ள இ. எஸ். ஐ. மருத்துவ மனைகளில் கிட்டத்தட்ட 3' டாக்டர்களின் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. இப்படி எல்லாத் துறைகளிலும் சுட்டிக் காட்ட முடியும். அப்படிச் செய்தால், அதிக நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்குமென்று, இத்தோடு விட்டுவிடுகிறேன். இதை மாண்புமிகு முதலமைச்சரவர்களும், மற்ற அமைச்சர்களும், அந்தந்த இலாக்காக்களில், பணியிடங்கள் காலியாகி ஒரு வார காலத்திற்குள், நியமித்தால்தான் இலாக்காக்கள் நல்ல முறையில் இயங்க முடியும். ஒருவர் தாமதமாக நியமிக்கப்பட்டால், பைல்கள் சேர்ந்துவிடும். அங்குள்ள தலைமை அதிகாரி யாராவது அவருக்கு அதைப்பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும். அதனால் என்னென்ன மாற்றங்கள் ஏற்படுமோ? அத்தகைய தேக்க நிலை ஆட்சி இயந்திரத்தில் ஒருநாள்கூட இல்லாமல் பார்த்துக்கொள்வது, ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களுடைய கடமையென்று சொல்வது தவறல்ல.

இந்த அவையிலே எல்லா அங்கத்தினர்களும் கட்சி வேறுபாடின்றி சுட்டிக் காட்டிய மிக முக்கியமான ஒன்று; இந்த ஆட்சியிலே சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்படவில்லை என்பதுதான். அமைதியின்மை மட்டுமல்ல. பாதுகாப்பு யார், யாருக்குக் கொடுக்கப்பட வேண்டுமோ, அவர்களுக்குக் கொடுப்பதில்லை. சாதாரண சம்பவங்களெல்லாம் பெரிய சம்பவங்களாக உருவெடுத்து, அது நாட்டினுடைய அமைதியைக் குலைக்கும் அளவிற்கு கொண்டு வந்து, நாட்டின் அமைதி குலைவதோடு மட்டுமல்ல. இதுவரை இந்தியாவிலேயே ஆட்சி அமைப்பிலேயும், சட்டம் ஒழுங்கு பாதுகாப்பதிலும் முதல் தரமாக இருந்த இந்த மாநிலத்திற்கு, பிற மாநிலங்களைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் வந்து பார்க்கும் சூழ்நிலை உருவாகி, நல்ல வேளையாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அவர்களை வர





வேண்டாமென்றும், நாங்களே கவனித்துக்கொள்கிறோமென்றும், சொல்லியிருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். அத்தகைய நிலை வரக்கூடாது என்பதுதான், இந்த நிலையில் இதை நான் எடுத்து வைப்பதற்குக் காரணம். அந்தச் சம்பவங்களில் நான் விரிவாகப் போகவில்லை. பல சம்பவங்கள் விசாரணையில் இருப்பதாகச் சொன்னார்கள். அது நீதிபதி விசாரணையில் இருக்கிறது. அதனால் அந்தச் சம்பவங்களை நான் எடுத்துச் சொல்லவில்லை. இங்கே எடுத்துச் சொன்ன அத்தனை பேர்களும், அந்தச் சம்பவத்தைத் தவிர்த்திருக்க முடியுமென்று சொன்னார்கள். விழுப்புரம் ஒரு கிராமமல்ல. பெரியநகரம். மெயின் ரோட்டில் உள்ள நகரம். சென்னையிலிருந்து 100 மைல்களில் உள்ள நகரம். இந்தச் சம்பவத்தை தடுத்திருக்க முடியும். தடுக்க முடியவில்லை என்றால், ஆட்சி இயங்கவில்லை என்பது தான் பொருள். அதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. ஆட்சி எக்ஸஸ் ஆக இருக்கக்கூடாது என்று முதலமைச்சரவர்கள் அச்சப்பட்டு, ஆட்சியைச் செயல்படாமல் ஆக்கிவிடக்கூடாது என்று அவர்களிடம் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவருக்கு அந்த எண்ணம் இருக்கலாம். எக்ஸஸ் ஆகிவிட்டதென்று பிறர் சொல்ல இடம் கொடுக்காமல் இருக்க வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கிருக்கலாம். அப்படி எண்ணினால் ஆட்சி செயலற்றதாகி, பல இடங்களிலே, பல விபரீத சம்பவங்கள் ஏற்பட்டு, அது சட்ட ஒழுங்குப் பிரச்சினையாகி, 2 கிரிமினல்களை உள்ளே தள்ள வேண்டிய இடங்களில், 8 அல்லது 10 உயிர்கள் கொல்லப்பட்டு, வீடுகள் எரிக்கப்பட்டு, பல கோர சம்பவங்கள் நடைபெற இடம் ஏற்படும். இதன்மூலம் எழும் சமுதாயக் கசப்பு நிலைமைகள் மாற இன்னும் எத்தனை ஆண்டுகள் தேவைப்படுமோ! நீதிபதி அறிக்கை தரலாம். ஆனால் அந்த வட்டாரத்தில் புண் ஆறுவதற்கு, அவர்கள் மனதைவிட்டு அந்தக் கோரச் சம்பவங்கள் அகல இன்னும் எத்தனை வருஷங்களாகுமென்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மலைச் சாதிக் கமிஷனர் திரு. சிசிர்குமார் என்பவர் வந்திருந்தார். திரு. போலபாஸ்வான் என்ற தாழ்ந்தப்பட்ட மலைச் சாதியினர் ஆணைக் குழுவின் தலைவர் வந்திருந்தார். அவர்கள் ''இது சாதாரண விஷயம்; அரசு கவனமின்மையால், தக்க நேரத்தில் தடுத்து நிறுத்தாததால், இந்த நிலை உருவெடுத்தது'' என்று சொன்னார்கள்.

புதுக்கோட்டையில் நடந்த சம்பவத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திருமதி தமிழரசி அன்று விரிவாக எடுத்துச் சொன்னார்கள். ஒரு சாதாரண விஷயம். மாணவர்களுக்கும் போலீசாருக்கும் ஏற்பட்ட விஷயம். அங்கே இருக்கக்கூடிய நிர்வாகம் உடனடியாகப் பேசித் தீர்க்க வேண்டியதற்குப் பதிலாக மூன்று மாணவர்களை உள்ளே அடைத்து வைத்ததையும், மாணவர்களை அடித்ததையும், கண்ணீர்ப் புகை வீசியதையும் கேள்வியுற்றோம்.

பழநி சம்பவத்தைப்பற்றி இங்கே உணர்ச்சியோடு சொன்னார்கள். அதைப்பற்றிச் சொன்னபோதுகூட, அவை முன்னவரவர்களும், மாண்புமிகு தலைவரவர்களும், அது விசாரணையில் இருப்பதால், அதனுள்ளே செல்லக் கூடாதென்று சொன்னார்கள். திரு. வீராசாமி அவர்கள் அதைப்பற்றிச் சொன்னபோது, விளக்கம் சொல்லக் கூடாதென்று சொன்னார்கள். அது எனக்கு மாறுபட்ட கருத்தல்ல. இந்த அவைக்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்வது, அது விசாரணையிலே இல்லை. சப்-கலெக்டர் மூலமாக விசாரணை செய்வதென்பது விசாரணையல்ல. அது எக்சிகியூடிவ் லைன் விசாரணைதான். சப்-கலெக்டர் முதலிலே போலீசார் என்ன அறிக்கை கொடுத்தார்களோ, அதைத்தான் சொல்லியிருக்கிறார். வேறு அறிக்கை கொடுத்தால், வேறு மாதிரி சொல்லுவார். சப்-கலெக்டர், கலெக்டர், ஆர். டி. ஓ. போன்ற அதிகாரிகள் விசாரணை செய்யும் போது, அதைப்பற்றி இந்த அவையிலே பேசக் கூடாதென்று சொல்லுவது தவறு செய்கிற அதிகாரிகளைப் பாதுகாப்பதாகும். அவர்கள் தவறு செய்துவிட்டார்களென்று மேல் மட்டத்தில் இருக்கிறவர்களுக்குத் தெரிந்து விடுகிறது. ஏதோ நடந்துவிட்டது, அதைப் பெரிதாக்காமல் பார்த்துக்கொள்ளுவோம் என்று நினைத்தால், அது மேலும் மேலும் பெருக வாய்ப்பு ஏற்படுகிறது. அவற்றைப்பற்றி இத்தகைய மன்றங்களிலே விளக்கமாகப் பேசினால், அந்த அதிகாரிகள் அச்சப்பட்டு, இனி அத்தகைய நிலைக்கு ஆட்படாமல் இருப்பார்கள். மாண்புமிகு அவை முன்னவரவர்கள் பேசினார்கள். நீங்கள் ஒரு மாதிரியான விளக்கங்களைச் சொல்லி, நாங்கள் மாற்று விளக்கங்களைச் சொல்ல, அதனால், விசாரணைக்குக் குந்தகம் வரக்கூடாதென்று சொன்னார்கள். அது உண்மைதான். நாங்கள் போலீஸ் ஸ்டேஷனில் வைத்து, அடித்துக் கொல்லப்பட்டார் என்று சொன்னோம். வழியில் குற்றுயிராக இருந்தார் என்று அவர்களால் சொல்லப்படுகிறது. எது உண்மையென்று ஆராயும்போது, இந்தக் கருத்துக்களையெல்லாம் சட்டப் பேரவை, மேலவையில் சொல்லிக் கொண்டிருந்தால், விசாரணை செய்யக் கூடிய அதிகாரியை 'இன்புளுயன்ஸ்' பண்ணும் நிலை வரலாமென்று சொன்னார்கள். இது ஒரு மாதத்திற்கு முன்னால் நடந்த சம்பவம். ஒரு மாதத்திற்குப் பிறகு சட்டசபையிலே பேசுகிறோம். அவர் போலீஸ் ஸ்டேஷனில் வைத்துக் கொல்லப்பட்டாரா அல்லது வழியில் குற்றுயிராக இருந்தாரா என்பதை அரசு தெளிவாக விசாரித்து, முடிவு செய்து, அவர் போலீஸ் ஸ்டேஷனில் கொல்லப்படவில்லை என்றால் அதைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். நாங்கள் அதைப்பற்றி விசாரித்தோம் என்று சொல்வதற்கு அரசு முன்வர வேண்டும். அல்லது அவர் குற்றுயிராக வழியில் கிடந்தார் என்பதையாவது சொல்ல வேண்டும். விசாரணையில் இருக்கிறதென்று சொல்வதால், இந்த சட்ட மன்றத்தினுடைய நடவடிக்கைகளை அது பாதிப்பதாகக் கூட நான் கருதவில்லை. தவறு செய்கின்ற அதிகாரிகளுக்கு ஒரு கேடயமாக, பாதுகாப்பாக அது அமைந்துவிடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.





பழநியில் நடந்ததுபோல் ஹைதராபாத்தில் ஒரு சம்பவம் நடந்தது. நல்லகுண்டா பகுதியில் ஓராண்டுக்கு முன்னால் அந்தச் சம்பவம் நடந்தது. ***அவருடைய கணவன் போலீஸ் ஸ்டேஷனில் கொல்லப்பட்டதாகவும் சம்பவங்கள் நடந்து, கே. ஏ. முக்தாதார் என்ற நீதிபதியைப் போட்டு, அதை விசாரித்தார்கள். அவர் கொடுத்த ரிப்போர்ட்டை அரசினர் ஏற்றுக்கொண்டார்கள். இந்த நாட்டுப் பெண்கள் கற்பைக் காத்து நிற்கக்கூடிய, இந்த நாட்டு சுதந்திரத்தைக் காத்து நிற்கக்கூடிய, இந்த நாட்டின் அமைதி, ஒழுங்கைக் காத்து நிற்கக்கூடிய காவல் நிலையத்திலே *** குற்றச்சாட்டு வந்தால், அதை அந்தப் பெண்ணே சொன்னால், நீதிபதி மேஜிஸ்டிரேட் முன்னால் வாக்குமூலம் கொடுத்தால், அதைவிடப் பெரிய தவறு, அநீதி, கொடுமை, ஆட்சியிலே கறைபடுகிற இழுக்கு வேறு இருக்க முடியாது. அது உண்மையா என்பதை நீதிபதி வைத்து விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆர். டி. ஓ., சப்-கலெக்டர், ரெவின்யூ போர்ட் மெம்பர் விசாரணை என்பது எக்சிகியூடிவ் விசாரணைதான். அங்கே, ஹைதராபாத்திலே நீதிபதி போட்டு விசாரித்தார்கள், அவர் கொடுத்த தீர்ப்பை ஏற்றுக்கொண்டார்கள். இங்கே நடந்தது 14-8-1978-ல். இன்று 14-9-1978-ல் பேசிக் கொண்டிருக்கிறோம். இதற்குள்ளாக விசாரணை செய்து, ஒரு 'பிரைமா பாசி' கேஸ் இருக்கிறது, இவர்கள் சொல்வதில் அரை அளவாவது நியாயம் இருக்கிறது என்று கண்டால், நீதிபதி விசாரணை போட்டு, அதை நீதி விசாரணையாக்க வேண்டுமென்று, முதலமைச்சரவர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> பழநி சம்பவத்தைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ பழநியில் *** சம்பவம் நடந்தது போலவும், அதைப் போல மற்ற மாநிலங்களிலே நடந்திருக்கிறதென்றும், அதை எடுத்துக் காட்டுவதற்கு ஒரு நிகழ்ச்சியையும் சொன்னார்கள். பழநியிலே*** சம்பவம் நடந்ததாக இதுவரையில் எந்தத் தகவலும் இல்லை. அப்படி இருக்கும்போது, தவறான கருத்துக்களை அவைக்கு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கொடுத்துக்கொண்டிருக்கிறார்களென்பதை அவருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மேலும் பழநியில் *** சம்பவம் நடந்திருக்கிறதென்ற தவறான எண்ணம் மக்களின் மனத்திலே வந்துவிடக்கூடாதென்பதற்காக, இதை நான் எடுத்துச் சொல்கிறேன். எனவே பழநியில் நடந்த சம்பவம் பற்றி எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பேசிய பேச்சை, நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[1978 செப்டம்பர் 14

[பிற்பகல் 4–40.]

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் என்னுடைய பேச்சிலே விரிவாகப் பேசுவதற்குத் தாங்கள் அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஆனாலும் அதை 'கான்ட்ரவர்சி' ஆக்காமல் சொல்லுவதற்கு அனுமதி கொடுக்க வேண்டும். அங்கு நடந்த சம்பவத்தைப்பற்றிக் குறிப்பிட்ட போது, நான் பெயரையே சொல்லவில்லை. ஆனால் என்ன குற்றச்சாட்டு இருக்கிறதோ அதைப் போல குற்றச்சாட்டு ஹைதராபாத்திலே நடந்தது என்று சொன்னேன். அங்கே நீதி விசாரணையைப் போட்டார்கள் என்று சொன்னேன். இங்கேயும் அதைப் போல நீதி விசாரணையைப் போடுங்கள் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லுவது; பழனியில் நடந்தது, *** அல்ல என்பதுதான். மாண்புமிகு உறுப்பினருடைய வேறு கருத்தில் அவர் குறுக்கிடவில்லை. அங்கே *** நடந்தது நிகழ்ச்சியல்ல என்பதைத்தான் விளக்க விரும்புகிறார்.

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சையும் குறிப்பிலே வைத்து, பிறகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் கூறிய * * * என்ற பேச்சையும் வைத்து, அதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னதையும் வைத்துப் பார்த்தால், அவைக் குறிப்பில் உண்மை நிலை நன்றாக விளங்கும்.

மாண்புமிகு திரு. கே. இராசா முகமது: தலைவர் அவர்களே, ஒரு சம்பவம் நடந்திருந்து, ஏதோ சில உணர்வுகளின் அடிப்படையிலே அதை எடுத்துச் சொன்னால், யாரும் தவறாகக் கருத மாட்டார்கள். *** அரசியல் இலாபத்திற்காகச் சொன்னால் அவர்களுடைய உணர்வு எப்படியிருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அந்தச் சம்பவம் நடந்த பிறகு, உண்மை நிலையைக் கண்டறிய, அரசின் சார்பிலே வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் நானும் அந்த இடத்திற்குச் சென்றிருந்தோம். இதே வருத்தத்தை அவர்களும் சொன்னார்கள். "கணவனை இழந்து கதறிக் கொண்டிருக்கிற நிலையில், நான் *** கதை கட்டுகிறார்களே" என்று அவர்களே வருத்தப்பட்டுச் சொன்னார்கள். ஆகவே நடக்காத ஒன்றை நடந்ததாக இனி பேச வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



1978 செப்டம்பர் 14]

திரு. எம். சங்கரலிங்கம்: என்னுடைய வேண்டுகோளும் அதுதான். இதை விசாரித்துத் தெளிவாகக் கருத்துத் தெரிவிக்க வேண்டும் என்பதுதான்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களை ஒரு விளக்கம் கேட்கிறேன். *** அல்ல என்று அமைச்சர்கள் சொன்னார்கள். அதற்குத் தாங்கள் என்ன பதில் சொல்கிறீர்கள். அங்கே நடந்ததைப் போல் இங்கே நடந்தது என்று சொல்லுகிறீர்கள். ஆகவே *** என்ற வார்த்தையை நீக்கிவிட அங்கீகரிக்கலாம் அல்லவா?

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, என்னுடைய கருத்து அப்படிப்பட்ட வார்த்தை இருக்க வேண்டும் என்பதல்ல. அரசின் சார்பாக அதற்கு மறுப்புத் தெரிவிக்கிறபோது, அது பத்திரிகையின் வாயிலாக வந்து மறுக்கப்பட்டு விடுகிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இந்தச் சமுதாயத்தில் சில விஷயங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, சமீபகாலச் சூழ்நிலையில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தேசபக்தி உணர்வோடு அந்த வார்த்தையை மட்டும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய அனுமதியோடு எடுத்துவிடுகிறேன். குறிப்பிலிருந்து அந்த வார்த்தை நீக்கப்பட வேண்டும்.

திரு. எம். சங்கரலிங்கம்: இதைப் போலவே பேரணாம் பெட்டிலும் கலவரம் நடந்திருக்கிறது. அதற்குள்ளே நான் செல்ல விரும்பவில்லை. இதையெல்லாம் நாம் வராமலே தடுத்திருக்க வேண்டும். ஏனென்றால் ஆட்சி இயந்திரமே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் அத்தகைய நிலைகள் வராமல் தடுத்திருக்க வேண்டும். அதைப் போலவே ராணிப்பேட்டையிலும், இன்னும் மற்ற பல இடங்களிலும் இப்படிப்பட்ட கலவரங்கள் நடந்திருக்கின்றன.

இப்போது ஒரு செய்தி வந்திருக்கிறது. முதுகுளத்தூரில், பாண்டித்தேவர் என்ற முன்னாள் இராணுவ வீரர், இன்ஸ்பெக்டரை துப்பாக்கியால் சுட்டு, அந்த இடத்திலே அவர் இறந்து இருக்கிறார் என்று இன்று மாலைச் செய்திப் பத்திரிக்கைகளில் வந்திருக்கிறது. ஒருவர் சப்-இன்ஸ்பெக்டரைச் சுட்டிருக்கிறார், இவைகள் நாட்டினுடைய சட்டம் ஒழுங்கு தவறியிருக்கிறது என்பதைக் காட்டுகிறது. நான் அந்த விஷயத்திற்குள் செல்ல விரும்பவில்லை. ஆனால் இத்தகைய நிலையில் நம்முடைய நாடு செல்லாமல் பாது

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

காக்கப்பட வேண்டியது நம்முடைய அரசின் கடமை. அவர் குடிபோதையில் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இன்றைக்கு நாட்டிலே இருக்கக் கூடிய குடி போதை நிலையை மாற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகுந்த அக்கறையோடு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதையறிந்து மகிழ்கிறேன். ஆனால் அவர் அதில் வெற்றி கண்டிருக்கிறார்களா என்பது கேள்விக்குறி. ஏன் அதைத் தடுக்க முடியவில்லை என்பது தான் என் வினா. சாராயம் காய்ச்சுகிறவர்களைப்பற்றி வருகிற செய்திகளைப் பார்த்தால், ஏழாயிரம், 12 ஆயிரம் லிட்டர்கள் பிடிக்கப்பட்டது என்று செய்திகள் வருவதைப் பார்த்தால், ஏதோ பாக்டரிகள் நடந்துகொண்டிருப்பது போல் தெரிகிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலே, ஒரு பெரிய மலையிலே போய் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் சாராயக் கோஷ்டியைப் பிடித்தார்கள் என்ற செய்திகள் பத்திரிகையில் வருகிறது. அவர்கள் சாராய ஊறலை உடைத்துவிட்டு ஓடிப் போய் விட்டார்கள். அடுத்து அது பெரிய அருவியாக வந்தது என்று செய்தி வந்தது. காய்ச்சுகிறவர்கள், விற்கிறவர்கள், இத்தகைய நிலையில் பெரும் கூட்டமாக முகாம் அமைத்துத் தொழிற்சாலையை நடத்துகிற அளவுக்கு நடப்பதற்கு நாம் அனுமதிக்கலாமா? அதைத் தடுப்பதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்று பார்த்தால், ஒன்று நம்முடைய காவல் துறையினர் சரியாக ஒத்துழைக்காமல் இருக்க வேண்டும்: அல்லது அவர்களுக்கும் அதிலே பங்கு இருக்க வேண்டும். ஒத்துழைக்காமல் இருந்தால்கூட பரவாயில்லை. ஆனால் அதிலே பங்கு இருந்தால் அது பெரிய தவறு. பங்கு இல்லாமல் இப்படிச் செய்யவே முடியாது. இந்த நாட்டிலே நடக்கிற எல்லா விஷயங்களும் சம்பந்தப்பட்ட அந்தந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுடைய உதவியும், துணையும் இல்லாமல் வெற்றிகரமாக நடத்த முடியாது. அப்படித்தான் நடக்கிறது என்பதைப் பார்க்கிறோம்.

சென்னையிலே கூட, ஓட்டேரியில் நடந்த மோதலைப்பற்றிப் பத்திரிகையிலே வந்ததைப் பார்த்தேன். இந்த சென்னையிலேயே நான்கு நாட்கள் தொடர்ந்து மோதல் நடந்ததாகப் பார்த்தோம். ஆட்சி இயந்திரம் இருக்கக் கூடிய இந்த சென்னையிலேயே நான்கு நாட்கள் இரு கோஷ்டியைச் சேர்ந்தவர்களும் மோதிக்கொண்டே இருந்தார்கள். பிறகு ரிசர்வ் போலீஸ் சென்று அடிக்கிறார்கள் என்று சொன்னால், அப்படி அசைக்க முடியாத அளவுக்கு சாராயம் காய்ச்சுகிறவர்கள் இருக்கிறார்கள் என்று தெரிகிறது. காரைத் தடுத்து நிறுத்தியபோது 500, 800 பாட்டில்கள் எடுக்கப்பட்டன, ஆயிரக்கணக்கான லிட்டர் சாராயம் பிடிக்கப்பட்டது என்று வருகிற செய்திகளைப் பார்த்தால், இதில் இங்கொன்றும், அங்கொன்றுமாக ஏழைகள் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவில்லை, இந்த நாட்டிலே செல்வம் படைத்தவர்கள் இதற்குப் பின்னணியாக இருந்து. இதை ஒரு பெரும் தொழிலாகவே நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இது ஒரு குடிசைத் தொழில் என்று சொல்லுவதற்கில்லை, பெரிய ஆலைத் தொழிலாக நடக்கிறது



என்று நினைக்கிறேன். இதைத் தடுக்க அரசாங்கம் நல்ல முயற்சியை எடுக்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். நல்ல முயற்சியை எடுக்கிறபோது, மதுவோடு தொடர்பு கொண்டவர்களை எந்தக் காரணத்தைக் கொண்டும், விதிவிலக்கு அளித்து இந்த அரசு பதவியிலே நியமிக்கக் கூடாது. இதை மிகத் தெளிவாக ஏற்படுத்திக்கொண்டால், அதுவே மதுவுக்கு ஒரு பெரிய தடையாக இருக்கும். அதனால் அவர்களுக்கு அச்சமும் ஏற்படும். பெரிய பொறுப்புக்கு வரக்கூடியவர்கள், நேற்றைய தினம் வரையில் மது பர்மிட்டை வைத்துக் கொண்டிருந்தவர்கள், இன்றைக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டு பதவிக்கு வருகிறார்கள் என்றால், சாதாரண மக்களுக்குக் கூட புரிகிறது, காணாமல் குடித்தால் பரவாயில்லை என்று. அப்படிப்பட்டவர்களை நியமிக்கும் போது, நாமே அதை ஒப்புக் கொள்ளும் நிலை ஏற்படுகிறது.

பல அரசு நிறுவனங்களில் தலைவர்களை நியமிக்கிறோம். எனக்கு ஒரு செய்தி கிடைத்தது. அந்தச் செய்தி உண்மையாக இருக்குமானால், உண்மையிலேயே அதற்கு வருந்துகிறேன். டி.ஐ.ஐ.சி நிறுவனத்தில், குமாரபாளையம் திரு. எஸ். சுப்பிரமணியம் என்பவரை நியமித்திருப்பதாக நான் அறிகிறேன். அது உண்மையானால், வருந்தத்தக்க ஒன்று. ஏனென்றால் டி.ஐ.ஐ.சி. போன்ற அரசு நிறுவனங்கள் நல்ல முறையில் இயங்க வேண்டுமென்றால் அதனுடைய தலைவர்கள் தொழில் நிறுவனங்களின் அனுபவங்களைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் தொழில் நிறுவனங்களில் தொடர்பு இல்லாதவராகவும் இருக்க வேண்டும். 'டிக்' நிறுவனத்திலிருந்து கடன் வாங்கிய 12 தொழில் நிறுவனங்களில் இயக்குநர் போன்ற பல்வேறு பொறுப்புகளில் இருப்பவர் குமாரபாளையம் திரு. எஸ். சுப்பிரமணியம் அவர்கள்.

(பிற்பகல் 4-50)

அவர்கள் பொறுப்பிலே இருக்கக் கூடிய நிறுவனங்கள் பல கடன் எடுத்திருக்கின்றன. அந்தக் கடன்களை காலம் தாழ்த்தி கட்ட அனுமதி கேட்டிருக்கிறார். நிறுவனம் சிலவற்றுக்கு அனுமதி கொடுத்திருக்கிறது. இப்படி 'டிக்' நிறுவனத்திடமிருந்து கடன் வாங்கி, அதன் மூலம் தொழில் நடத்துகிற ஸ்தாபனங்களிலே தொடர்புடைய ஒருவரை ஸ்தாபனத்தினுடைய தலைவராக நியமிப்பது என்றால், அதில் ஐயப்பாடு இருக்கிறது. இனிமேலாவது முதலமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி இத்தகைய குறைபாடுகள் இல்லாமல் எல்லா அமைப்புகளையும் நேர்மையாக இயங்கச் செய்ய வேண்டும். இன்னொன்றைப்பற்றி டாக்டர் ஹண்டே அவர்கள் மிக அழகாகச் சொன்னார்கள். இந்த அரசு சொல்வதைச் செய்வதில்லை, செய்வதைச் சொல்வதில்லை என்று எங்களுடைய துணைத் தலைவர் சொன்னதை எடுத்துக்கொண்டு, 'ஆம், செய்வதைச் சொல்வதில்லை தான்' என்று சொன்னார்கள்.

"சேத்துப்பட்டிலே ஒரு பாலம் கட்டி முடித்தார்கள். இதற்கு முன்னால் இருந்த முதலமைச்சர் உளுந்தூர்பேட்டையில் ஒரு பாலத்தைக் கட்டி முடித்து, 3 மாதம் வரை திறக்காமல் இருந்து, பிறகு பெரிய விளம்பரம் எல்லாம் செய்யப்பட்டு திறக்கப் பட்டது. ஆனால் எங்களுடைய ஆட்சியில் மிக அமைதியாக பிறருக்குத் தெரியாமல் பாலம் திறக்கப்பட்டிருக்கிறது'' என்று சொன்னார்கள். அதற்காக அவர்களை நான் பாராட்டுகிறேன். அது சென்னைக்கு மட்டும்சொந்தமோ என்ற அச்சம் எனக்கு இருக் கிறது. காரணம் கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறையில் நேசமணி பாலம் என்ற ஒரு பாலம் கட்டி முடிக்கப்பட்டது. முன்னாள் முதலமைச்சர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் கல் நாட்டப்பட்டது. அது கட்டி முடிக்கப்பட்டு 4 மாதம் ஆகிறது. இன்னும் திறக்கப்பட வில்லை. பாலம் கட்டிமுடிக்கப்பட்ட பிறகு ஆட்கள் அதிலே போய்க் கொண்டு இருந்தார்கள், கடந்த 2 மாதம் யாரையும் அந்தப் பாலத்தில் போக வரக்கூட அனுமதிக்கவில்லை என்ன காரணம் என்று தெரியவில்லை. அந்தப் பாலத்தின் மேல்யாரும் போக முடியாதவாறு மண் சுவர் வைத்து கட்டித் தடுத்து விட்டார்கள். நானும் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்களும் மாவட்ட ஆட்சித் தலைவரைப் பார்த்து, ''ஏன் அந்தப் பாலத்தில் மண் சுவர் வைத்துத் தடுத்து மக்களைப் போக விடாமல் தடுக்கிறீர்கள்'' என்று கேட்டோம். அந்த மண்ணால் கட்டப்பட்டுள்ள சுவரை இடித்து விடுங்கள் என்று சொன்னோம். அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், ''அமைச்சரை அழைத்து அந்தப் பாலத்தைத் திறக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம்'' என்று சொன்னார்கள்.

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:</u> அதே மாண்புமிகு உறுப்பினர் ஜனதா கட்சியைச் சேர்ந்த திரு. ஜேம்ஸ் அவர்கள் தான் மத்திய அமைச்சர் திரு. பா. ராமச்சந்திரன் அவர்களை அழைத்து பாலத்தைத் திறந்தால், சிறப்பாக இருக்கும் என்று சொன்னதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர் களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).

<u>திரு. எம். சங்கரலிங்கம்:</u> திரு. பா. ராமச்சந்திரன் அவர்கள் வந்தாலும் தவறு தான், சாதாரண நம் ஊர் ராவ் வந்தாலும் தபபு தான்.

<u>மாண்பமிகு மேலவைத் தலைவர்:</u> அவரும் நம் ஊர் தான்.

<u>திரு. எம். சங்கரலிங்கம்:</u> ஒத்துக்கொள்கிறேன், ஆனால் இப் பொழுது அவர் டில்லியில் அல்லவா இருக்கிறார். இதை ஏன் சொல்கிறேன் என்றால், அவர் வரும்போது திறக்கிறோம்- அதற்காக சுவரை வைத்து அடைத்து பொது மக்கள் போய் வராமலிருக்கத் தடுக்க வேண்டுமா? அவர் வருகிறபோது, அதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம். அதுவரை மக்கள் அதைப் பயன்படுத்த அனுமதிக்கலாம். அவர்வரும்போது, வெள்ளையடித்து



சுத்தம் செய்து, திறப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம். ''பா. ரா'' வந்தாலும் தவறுதான், நம்முடைய ஊரிலே இருக்கக் கூடிய சாதாரண ''ரா'' வந்தாலும் தவறுதான். பிறகு நாங்கள் அந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ''நீங்கள் திறக்கப்போகிறீர் களா இல்லை நானே போய் திறக்கட்டுமா'' என்று கேட்டதற்கு, அவர் 'நான் திறக்கச் சொல்கிறேன்' என்றார். ஆகவே இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், டாக்டர் ஹண்டே அவர்கள் சொன்னது மாதிரி ''செய்வதைச் சொல்வதில்லை'' செயல்கள் எல்லா இடங்களிலும் நடக்கவில்லை. டாக்டர் ஹண்டே அவர்களுக்கு நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், அவர்கள் அவர்களுடைய கட்சியில் சொல்லி, சண்டை போட்டாவது அதைச் செயல்படுத்த வேண்டும் என்பதற் காக அவர் இதைக் கட்சியில் சொல்லி—(கட்சியில் ஏன் சொல்ல வேண்டும் என்ற குரல்) கட்சிக்குத்தான் அவர் சொல்ல முடியும்- ஆட்சியில் உள்ளவர்களிடம் அவரால் சொல்ல முடியாது—இதைச் செயல்படுத்த, அமுல்படுத்த முயற்சி எடுக்க வேண்டும். எந்த மத்திய அமைச்சர்கள் வந்தாலும் சரி அல்லது மாநில அமைச்சர்கள் வந்தாலும் சரி, நாட்டு மக்களுடைய நன்மையைக் கருதி, சிறப்பாகத் திட்டங்களைப் போடுவதற்கு யோசிக்கவேண்டு மென்று சொல்லி ஆளுநர் உரையில் ஆளும் கட்சியினரைச் சார்ந்து நாடு நன்றாக இருக்கிறது என்று தாளம் போடும்போது, நாங்கள் போய் என்ன சொல்ல முடியும் என்பதையும் சொல்லி, ஆட்சி என்ற வட்டத்துக்குள் வந்திருப்பவர்கள் நாங்கள் எதிர்க் கட்சிக் காரர்கள் என்கிற வேறுபாட்டு உணர்ச்சியோடு, பழிவாங்கும் உணச்சியோடு எங்களைப் பார்க்காமல், நாட்டு மக்களின் நல்வாழ் வுக்காக ஒரு நல்லாட்சி ஏற்படுகிற முறையில் செயல்பட வேண்டும் என்பது போன்றவைகள் எல்லாம் அதில் சுட்டிக்காட்டப்படவில்லை என்பதாலும், ஆளுநர் உரையை எங்களால் வரவேற்க முடியாத நிலையில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்து அமர்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:</u> மாண்புமிகு தலைவரவர்களே, இதுவரையில் . றத்தாழ 30 மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கருத்துரை வழங்கியிருப்பதாக எனக்குப் புள்ளிவிவரம் தரப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே நான் மகிழ்ச்சியடைகின்றேன். ஒரு ஆட்சி சிறப்பாக அமைய வேண்டு மென்றால், அந்த ஆட்சிக்கு எதிராக இருக்கின்ற கருத்து வேறு பாடுகளை உண்மையாக மனித உணர்வில் எதிரியாக தங்களை கருதிக் கொள்ளாமல் கொள்கை ரீதியிலே, மாற்றுக் கருத்தினை எதிர் கருத்தினைச் சொல்லுகின்றவர்களாக தங்களை ஆக்கிக் கொண்டு. இங்கே எப்படி பல நல்ல கருத்துக்கள் எடுத்து வைத்திருக்கின்றோமோ அது போல சொல்லக் கூடிய எதிர்க் கட்சிகள் இருந்தால் தான் ஒரு நாட்டிலே நல்லாட்சி அமையும் என்பதில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் ஆட்சிப் பொறுப்

பிலே இருக்கிற எங்களுக்குச் சிறிதும் இல்லை என்பதை முதலில்
நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். ஒட்டுமொத்த
மாக ஆளுநர் உரையின் மீது சில பொதுக் கருத்துக்கள் சொல்
லப்பட்டன. முதலில் தாமதம் என்று சொல்லி அதிலுள்ள குறை
பாடுகள் பற்றியும், அது கவனிக்க வேண்டிய நேரத்தில்
கவனிக்கப்படுவதில்லை காலம் தாழ்த்திவிடுகிறார்கள் என்கிற
குறையையும், சில நேரங்களில் அவசரப் பட்டு அதிகாரிக
ளுடைய விருப்பம் போல் செயல்பட அனுமதித்து
விடுகிறார்கள் என்பதையும், அது போலவே திட்டங்கள் தீட்டப்
படுவதாகச் சொல்லப்படுகிறதே தவிர, திட்டங்கள் தீட்டப்
படுகிறதா என்பதில் ஐயம் இருக்கிறது. அது நிறைவேற்றப்
படுவதில்லை என்கிற ஐயம் இருக்கிறது. அது போலவே அது
நிறைவேற்றப்படுகிறது அல்லது இல்லை என்கிற சூழ்நிலைகளைக்
கணக்கு சொல்லுவதால் அவர்களுடைய திட்டங்களை உண்மை
யாகவே நிறைவேற்ற அவர்கள் முயற்சிக்கின்றார்களா என்பதில்
ஐயம் இருக்கிறது என்பது போன்ற கருத்துக்களையும், காவல்
துறையினர் அத்து மீறி நடக்கின்றார்கள் என்பது போலவும்
சில இடங்களில் காவல் துறையினர் கடமையை ஆற்றவில்லை
என்கிற நிலைமையினையும், அதேபோல ஜாதிப் பிரச்சினைகளிலும்,
பதவி நியமனங்களிலும் எந்த நேரத்தில் எப்படி எப்படி இந்த
ஆட்சி செயல்பட வேண்டுமோ அந்த முறையில் செயல்படவில்லை
என்கிற குறைபாடுகளையும், ஒவ்வொரு மாண்புமிகு உறுப்பினரும்
ஆரவாரமான முறையிலே தங்களுடைய கருத்துக்களை எடுத்து
வைத்ததற்காக நான் இந்த ஆட்சியின் சார்பாக நன்றி கூறிக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். எந்த அளவுக்கு குறை
கூறுவதற்கு ஒரு ஆட்சிக்கு ஆட்கள் அதிகமாகக் கிடைக்கின்றார்
களோ அந்த அளவுக்கு ஆட்சி நன்றாக அமையும். அனுபவமும்
முன் அனுபவமும், சொந்த அனுபவமும், ஆட்சி அனுபவமும்,
பதவி அனுபவமும், வசதி அனுபவமும் சுற்று சார்பிலே
தங்களுக்கு ஏற்படுகின்ற அனுபவமும் கொண்ட அறிவு சார்ந்த,
ஆராய்ச்சியில் ஈடுபாடு கொண்ட மிகப் பெரியவர்கள் என்ற
தகுதியைக் கொண்ட, எப்படிப்பட்ட நிலைமையில் இருப்பவர்
களுக்கும் யோசனை சொல்லக் கூடிய தகுதி பெற்றவர்கள் ஒரு
ஆட்சிக்கு எதிராகக் கருத்துக்களை அதிகமாக எடுத்துச் சொல்லும்
போது, அவர்களுடைய அக்கறை வெளிப்படுகிறது என்பதோடு
மட்டுமல்லாமல், அதே நேரத்தில் எங்களைப் போன்ற புதிதாக
ஆட்சிக்கு வந்திருப்பவர்களுக்கு அது எவ்வளவு பயனுடையதாக
அமைகிறது என்பதை நாங்கள் நன்றாக உணர்கிறோம். ஆகவே
குறைகள் கூறுகிறார்கள் என்பதற்காக எங்களுக்கு வருத்தமும்
இல்லை, ஏமாற்றமும் இல்லை, கோபமும் இல்லை, வேதனையும்
இல்லை என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன். ஒரு கட்சி ஒரு நாட்டில், ஒரு மாநிலத்
தில் பதவியிலே அமரும்போது, அது ஆட்சி அமைக்கின்ற நிலைக்கு
மக்களால் அழைக்கப்படும்போது அந்தப் பதவியிலே அது அமர்





கின்ற நேரத்தில், அந்த மாநிலத்தில் அந்தப் பதவியினுடைய
உண்மையான நிலைமை எப்படி இருந்தது என்பதை நாம்
முதலிலே சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

(பிற்பகல் 5-00)

இங்கே அவையிலே வந்து கருத்துக்களைச் சொல்லும் உறுப்
பினர்கள் உள்ளே வந்து உட்கார விரும்பும்போது அவர்கள்
உட்காருவதற்காக வசதியான ஆசனங்கள் இல்லை, ஒலி பெருக்கி
யில்லை, காற்றுவசதி இல்லை, குளுமை வசதி இல்லையென்றாலும்,
விசிறி மூலம் தரக்கூடிய காற்று வசதிகூட இல்லை என்ற நிலைமை
இருந்தால், முதலில் அந்த வசதிகளையெல்லாம் செய்துவிட்டு,
அதற்குப் பிறகுதான் இந்த மாமன்றத்தைக் கூட்டும் நிலைமை
ஏற்படும் என்பதை நான் சொல்லித்தான் மற்றவர்கள் தெரிந்து
கொள்ள வேண்டும் என்பதில்லை,

ஆட்சிக்கு நாங்கள் வரும்போது, இந்த ஆட்சியின் கொள்கை
களை நிறைவேற்றுவதற்குரிய வாய்ப்பும் வசதியும் இந்த மாநிலத்
தில் எப்படிப்பட்ட நிலைமையில் அமைத்துவிட்டு மற்றவர்கள்
சென்றிருந்தார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.
இந்த ஆட்சியை நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிற நேரத்தில் இந்த
மாநிலத்தில் நிதிப் பற்றாக்குறை இருந்தது என்பதையும், பல்
வேறு திட்டங்களைத் தீட்டுவதற்கு முயன்றாலும், மக்களுடைய
வாக்குகளைப் பெற்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்
ஆட்சிக்கு வரட்டும், அவர்கள் அதை நிறைவேற்றட்டும் என்கிற
எண்ணத்தோடு இடையில் குடியரசுத் தலைவர் ஆட்சி இருந்த
நேரத்தில், ஆளுநர் அவர்கள் எந்தவகையில் முடிவுகளை எழுதி
வைத்துப் போயிருக்கிறார்கள் என்பதையும், அதற்கு முன்பாக
ஆட்சியில் இருந்தவர்கள், ஏறத்தாழ 7 ஆண்டுகள் முதலமைச்
சராக டாக்டர் கலைஞர் அவர்கள் இருந்த நேரத்திலும் அதற்கு
முன்பாக பேரறிஞர் அண்ணா அவர்கள் 2 ஆண்டுகள் முதலமைச்
சராக இருந்த நேரத்திலும், அதற்கு முன்பாக பல ஆண்டுகள்
காங்கிரஸ் கட்சி இந்த மாநிலத்தில் ஆண்டு கொண்
டிருந்த நேரத்திலும் இருந்த நிலைமையையும், நீங்கள் கொஞ்சம்
தயவுசெய்து மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்திக் கொள்வீர்
களானால், நாங்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆட்சியில்
அமர்ந்தோம் என்பதை உங்களைப் போன்றவர்கள் தெரிந்து
கொள்வது, அல்லது நினைவுபடுத்திக் கொள்வது, மிகப் பெரிய
கடினமான வேலையல்ல என்பதை நான் அறிவேன். இதைத்தான்
முதலிலேயே நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.
இங்கு அமர்ந்திருக்கிற நீங்கள் ஒவ்வொருவரும் எப்படிப்பட்டவர்
களுடைய வாக்குகளைப் பெற்று வந்திருக்கிறீர்கள் என்பதையும்
இங்கே எவ்வளவு பொறுப்போடு உங்கள் எண்ணங்களை எடுத்து
வைக்கிறீர்கள் என்பதையும் எண்ணிப்பார்க்கும்போது, நான்
உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம் ''இயலாமையா,

இல்லாமையா'' என்பதையும் ''நாங்கள் புதிதாக வீடு கட்ட வேண்டும் என்ற நிலையில் இருக்கிறோமா அல்லது இடிந்து கிடக்கிற வீட்டைப் பழுது பார்த்து அதற்குப் பிறகு குடியேற வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோமா'' என்பதையும் இங்கே இருக்கிற நல்லவர்கள், நாணயத்துக்குச் சொந்தக்காரர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

எங்கள் கட்சி ஆட்சிக்கு வந்த நேரத்தில் நாங்கள் புதிதாக எந்த அதிகாரிகளையும் கொண்டுவந்து இங்கே பதவியில் அமர்த்தி விடவில்லை. முன்னாலே இருந்த அதிகாரிகள் தான் அவ்வளவு பேர்களும். காவல் துறையில் அடித்தளத்தில் இருந்து உயர்ந்த பதவிக்கு வந்தவர்களாக இருக்கலாம் அல்லது முன்னாலிருந்த அரசியல் கட்சியால், ஆட்சியால் அனுமதிக்கப்பட்ட சில பதவிகளுக்குச் சொந்தக்காரர்களாக அவர்கள் இருக்கலாம். எப்படி இருந்தாலும், நாங்கள் வந்தப்பிறகு, இருப்பவர்களைத் தான் இங்கிருந்து அங்கும், அங்கிருந்து இங்குமாக மாற்ற முடிந்ததே தவிர, புதிதாக எங்கிருந்தாவது அதிகாரிகளைக் கொண்டுவந்து இங்கே உட்கார வைத்து, அவர்களைப் பதவியில் அமர்த்தி, இந்தத் திட்டங்களை எல்லாம் நாங்கள் இப்படி நிறைவேற்ற விரும்புகிறோம், நீங்கள் இதைச் செய்யுங்கள் என்று சொல்லக்கூடிய நிலையில் நாங்கள் இருந்தோமா, என்பதை நீங்கள் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்,

நாங்கள் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டபோது—நான் உண்மையிலேயே இதுவரையிலும் சொல்லாத உண்மையைச் சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு இப்போது ஆளாக்கப்பட்டிருக்கிறேன். எங்களைச் சுற்றிலும் யாருடைய ஒற்றர்களோ இருப்பதைப் போன்ற ஒரு நிலை இருந்தது என்பதையும், எதை நாங்கள் பேசுவது, எதைப் பற்றிச் சிந்திப்பது, எதைப்பற்றிப் பரிசீலிப்பது, எதைப்பற்றி விவாதிப்பது என்பதைக் கூட நாங்கள் மிகுந்த எச்சரிக்கையோடு செய்ய வேண்டிய நிலையில்—ஒரு ஆபத்து நிறைந்த சூழ்நிலையில் ஒரு மனிதன் நிற்கவைக்கப்பட்டால் எப்படியிருப்பானோ அதைப்போல இருந்தோம் என்று உங்கள் மத்தியிலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் முன்னாலே இருந்தவர்கள் அவர்களுக்கு உதவி செய்திருக்கலாம். நல்லதற்காகவும் செய்திருக்கலாம் அல்லது தகுதி பெற்றவர்கள் என்பதற்காகவும் சிலரைப் பதவியிலே உயர்த்தியிருக்கலாம். அல்லது சிலர் கீழேயிருந்து திடீரென்று உயர்பதவிக்கு உட்கார வைக்கப்பட்டவர்களாக இருக்கலாம். தகுதி இருக்கிறவர்கள் என்று அவர்கள் மீது நம்பிக்கை வைத்த காரணத்தால், அதைச் செய்திருக்கலாம். ஆனால் எப்படி இருந்தாலும், எத்தனையோ ஆண்டுகளாக முன்னால் இருந்தவர்களோடு பழகிவிட்ட அல்லது எப்படியோ அந்த மனநிறைவு கொண்ட நல்லுறவு கொண்ட காரணத்தினால் அவர்கள் நினைவு





எங்கே இருந்தது, எப்படி இருந்தது என்பதை நான் சொல்லித் தெரியவேண்டியதில்லை. இன்னும் சொல்லப்போனால், தமிழகத்தின் ஆட்சிப்பொறுப்பை மேற்கொண்ட இப்போதிருக்கிற இந்த அரசு ஏறத்தாழ மூன்று மாத காலமாவது தாக்குப்பிடிக்குமா என்று சந்தேகித்த அதிகாரிகளே கூட இருந்தார்கள் என்பதை சில தலைவர்களே பட்டவர்த்தனமாகப் பேசினார்கள் என்பதை சொல்லிக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். இவைகளையெல்லாம் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது, எந்த நிலையிலே அவர்கள் பதவியில் அமர்ந்தாரோ அதே நிலைமைதான்-அவரைச் சுற்றியிருந்த அதே நிலைமைதான் - எங்களுக்கும் இருந்தது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலையில் நாங்கள் எதைச் செய்யலாம். அதைச் செய்வதற்கு எந்த ஆள் சரி என்பதே கூட எங்களுக்குத் தெரியாத நிலை. யார் அதைச் செய்வார்கள் என்பதுகூட எங்களுக்குத் தெரியாத நிலை. யார் அதை நிறைவேற்றுவார்கள் என்பதைக்கூட எங்களால் உணர்ந்துகொள்ள முடியாத நிலை. நாங்கள் உத்தரவு போடுவது அல்லது அவர்களை அழைத்து இப்படிச் செய்யவேண்டும் என்று சொல்லுவது அல்லது இப்படித் திட்டங்கள் அமைத்துத் தரவேண்டும் என்று சொல்வது என்ற நிலை இருக்குமானால், நிச்சயமாக அதற்கு விரோதமாக அவைகளைச் செய்து எங்கள் மீது பழிசுமத்தப்படுகிற நிலையிலும் கூட சில காரியங்கள் நடந்துவிடுமோ என்ற அச்சச் சூழ்நிலை நாங்கள் பதவிக்கு வந்தபோது எங்களுக்கு இருந்தது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அது மட்டுமல்ல, நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, தமிழ் நாட்டிலே எத்தனை போராட்டங்கள் நடைபெற்றன என்பதை நான் முன்பே சொல்லியிருக்கிறேன். நான் அதை மீண்டும் இங்கே வலியுறுத்தவில்லை என்றாலும், எந்த ஆட்சிக்கும் ஏற்பட முடியாத அத்தனை போராட்டங்கள், அத்தனை எதிர்ப்புகள், அத்தனை சோதனைகள், இயற்கையும், செயற்கையுமாகச் சேர்ந்து ஏற்பட்டன என்பதையும், மனிதர்களாலும், இயற்கைச் சக்திகளாலும் எப்படியெல்லாம் எங்களைத் தாக்க முன்வந்தார்கள் என்பதையும், அவைகளை நாங்கள் எப்படியெல்லாம் சமாளிக்க வேண்டியிருந்தது என்பதையும் இந்த மாமன்றத்தின் உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாங்கள் மக்களுக்குக் கொடுத்த வார்த்தையை, வாக்குறுதியை மறந்துவிடவில்லை. நாங்கள் எந்தக் கோட்பாடுகளை கொள்கைகளாக்கி, அவைகளைச் செயலாக்க வேண்டுமென்கிற ஆசையால் ஏதோ கட்சியைத் தொடங்கி மக்கள் மத்தியிலே அந்தக் கருத்துக்களைச் சொன்னபோது அவர்கள் எங்களையெல்லாம் நம்பி எங்களை இங்கே அனுப்பியபோது, நாங்கள் எந்த ஆசையால்—இன்னும் சொல்லப்போனால் பேராசையால் இங்கே வந்து மிக விரைவில் இங்குள்ள அனுபவமிக்க அதிகாரிகளைக் கொண்டு அவைகளைச் செயல்படுத்திவிட முடியும் என்று வந்தோமோ, அதற்கு

நேர்மாறாக, நேர் எதிரிடையாக என்று சொல்லக்கூடிய அளவுக்கு இங்கே செயல்கள் நடைபெற்றன என்பதை நான் சுட்டிக் காட்டிக்கொள்ள விரும்புகிறேன்.

இவைகள் எல்லாம் உங்களுக்குத் தெரியாததல்ல. என்றாலும், இங்கே உங்களுடைய திறனாய்வு எப்படி அமைந்துவிட்டது என்பதை நினைத்துப் பார்க்கிறபோது, நீங்கள் சொல்லிய அந்த விளக்கங்களுக்கு நாங்கள் எங்களுடைய நிலைமைகளையும் சொல்லி, நாங்கள் எந்த அளவுக்குச் செயல்பட்டிருக்கிறோம் என்பதை எடுத்துக்காட்டத்தான் தொடக்கத்திலேயே இந்த விளக்கத்தைச் சொல்ல முற்படுகிறேன்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தபோது, மாநிலத்திலே நிதிப்பற்றாக் குறை இருந்தது. பருவமழை எந்தக் காலத்திலே பெய்ய வேண்டுமோ அந்தக் காலத்திலே பெய்யாமல் என்னென்ன தொல்லைகள் எங்களுக்கு ஏற்பட்டன என்பது உங்களுக்குத் தெரியாததல்ல. விலைவாசிகள் உயர்ந்துகொண்டே இருந்தன என்பதும், மேலும், மேலும் உயர்ந்துகொண்டிருந்தன என்பதையும் யாரும் மறந்திருக்க முடியாது. விவசாயிகளுக்குப் பாதுகாப்புகள் தரப்படவேண்டும் என்பதை உணர்ந்தோம். அதை நினைத்துப் பார்க்கும்போது, நாங்கள் வெளியே சில கொள்கைகளைச் சொன்னோம். ஆனால் இங்கே கோப்புகளைப் பார்த்த பிறகு, நடைமுறையிலே எதைச் செய்வது என்று புரியாமல் சில நேரங்களில் குழப்பத்திற்கே கூட ஆளாகிவிட்டோம் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 5-10)

நான் மக்கள் மத்தியிலே சொல்லும்போது ஒரு கொள்கையைச் சொல்வது உண்டு. சாதாரணமாக உழைப்பவனுக்கே நிலம் சொந்தம் என்று மக்கள் மத்தியிலே எடுத்துக்காட்டிப் பேசியபோது, அந்த முறை சரிதானா என்றுகூட கேலியாகப் பேசுவது உண்டு. அதை அனுசரித்து இங்கே ஒரு கொள்கையைச் சொன்னால், நீங்கள் தவறாகக் கருதமாட்டீர்கள் என்று கருதி நான் அதனைச்சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் சொன்னது இதுதான். நம் நாட்டிலே சட்டப்படி ஒரு தந்தை ஒரு சொத்தைத் தானாக உழைத்துச் சம்பாதித்து வைத்துவிட்டுப் போனால், அவருடைய மகனுக்கோ, மகளுக்கோ அது சொந்தமாக ஆகிறது. அவருக்குச் சொந்தமாகின்ற சொத்து அவருடைய குழந்தைக்குச் சொந்தம் ஆகின்றது. தானே சம்பாதித்த சொத்துக்களை எழுதி வைக்காமல் போய் விட்டால், அவருடைய குழந்தைக்குச் சொந்தமாகி விடுகிறது. உழைப்பவனுக்கே நிலம் சொந்தம் என்று சொல்கின்றோம். விவசாயிகளுக்கு என்று உழவு நிலத்தை அவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கிறோம். பிரித்துக் கொடுத்த



பிறகு, யார் அந்த விவசாயத் தொழிலைச் செய்து கொண்டிருந்தாரோ, அவர் மறைந்த பிறகு, அது இயற்கையாக சட்டப்படி அவருடைய குழந்தைகளுக்குச் சொந்தமாக ஆகிறது. உழைப்பவர்களுக்குத்தான் நிலம் சொந்தம் என்பதை நான் பன்முறை சொல்லியிருக்கிறேன், இது ஒரு மகத்தான கொள்கை என்பதையும் நம்பிச் சொல்லிக்கொண்டிருக்கிறோம், ஆனால் அந்த நிலத்திற்கு யார் சொந்தக்காரராக இருந்தாரோ அவர் மறைந்த பிறகு, அவருக்கு ஒரே மகன் இருந்தார் என்று வைத்துக்கொள்வோம். ஒரு உதாரணத்திற்குத்தான் சொல்கிறேன். அவர் வழக்கறிஞராகவோ அல்லது தொழில் நிபுணராகவோ, மருத்துவத் துறையில் நிபுணராகவோ வேறு பணியை ஏற்றுக்கொண்டு சென்றுவிட்டாலும், இந்தச் சொத்து அவருக்குத் தான் சொந்தம் ஆகிறது. நம்முடைய கொள்கை நிலத்தை உழுபவனுக்குச் சொந்தமாக்கவேண்டும் என்பது. ஆனால் சட்டம் என்ன சொல்கின்றது? தந்தையினுடைய சொத்து மகளுக்கு அல்லது மகனுக்குச் சொந்தமாகிறது. நம்முடைய கொள்கைக்கும் சட்டத்திற்கும் எவ்வளவு பெரிய முரண்பாடு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் பலமுறை மேடைகளிலும் பேசியிருக்கிறேன். நாம் கொள்கை அளவிலே பேசும்போது ஒன்றுமில்லை. ஆனால் நாம் அதை நிறைவேற்ற வரும் இடத்திலே, இப்பேர்ப்பட்ட பிரச்சினைகள் வருகின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உழைப்பவருக்கு, உழுபவனுக்கு நிலத்தைச் சொந்தமாக்குவது என்பது மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். இதைப்பற்றி நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இது போன்ற நல்ல கொள்கைகளிலே நாம் தீவிரமாக ஈடுபடவேண்டும் என்று இருந்தாலும் கூட, நம் கொள்கைகளைக் காப்பாற்ற வேண்டுமென்று நாம் எண்ணினாலும்கூட அவைகளை நிறைவேற்றுவதற்கான மற்ற சூழ்நிலைகள் ஏற்பட வேண்டும். அமைந்திருக்கின்ற சட்டங்கள் இதற்கு ஆதரவாக இருக்கின்றனவா அல்லது எதிராக இருக்கின்றனவா என்பதைச் சிந்திக்க வேண்டிய அளவில் இருக்கிறது. இதுபோல, மக்களுக்காக நாம் நிறைவேற்ற விரும்பும் திட்டங்களை நிறைவேற்றுவதில் இடையூறுகள் எவ்வளவு இருக்கின்றன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும், அதற்குப் பிறகு நாங்கள் கொஞ்சங் கொஞ்சமாகச் சீர்திருத்தி, எங்கள் எண்ணத்திற்கு ஏற்ப நிறைவேற்றுவோம். இருக்கின்ற அதிகாரிகளின் திறமைகளையும், அனுபவத்தையும் பயன்படுத்திக்கொண்டு, நாங்கள் ஒருமைப்படுத்தப்பட்ட ஒரு கொள்கைக்கு வருவதற்கு இத்தனை மாதங்கள் ஆயிற்று என்றால், அது விசித்திரமாகத் தெரியாது என்று நினைக்கிறேன். இன்றும்கூட பல போராட்டங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. அவைகள் எந்தெந்த வகையிலே வந்தன என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இன்னும்கூட போராட்டங்கள் முடியவில்லை.. இன்னமும் கூட போராட்டங்கள் வரும் என்ற அறிவிப்புகள் வந்து கொண்டிருக்கின்றன.

திரு. ஆ. நல்லசிவம் : தலைவர் அவர்களே, உழுபவனுக்கு நிலத்தைச் சொந்தமாக்க முடியாததற்குக் காரணம் என்ன? அவர்களுக்கு நிலத்தைச் சொந்தமாக்காததற்குக் காரணம் உழுபவனுடைய பிள்ளைகள் வேறு வேறு தொழில்களுக்குப் போய்விட்டால் என்ன செய்வது என்பதுபற்றி முடிவு செய்ய முடியாததா அல்லது நிலப் பிரபுக்களிடமிருந்து நிலங்களை எடுக்க முடியாமல் இருப்பதா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இன்னும் கொஞ்சம் நேரம் பொறுமையாக இருந்திருந்தால், நானே அந்தப் பிரச்சினைக்கு வந்திருப்பேன் என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசிய பிறகு கேட்பது நல்லது என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இப்படிப்பட்ட நிலைமைகளில் நாங்கள் எங்கள் பணிகளைத் தொடங்குகின்ற நேரத்தில், புயல் வந்ததும், வெள்ளம் வந்ததும் மாண்புமிகு அங்கத்தினர்களுக்கெல்லாம் தெரியும். அந்த 2, 3 நாட்களில்கூட தூண்டிவிட்டுக்கொண்டிருந்தார்கள் என்பது இந்த மாமன்றத்திலே வீற்றிருக்கின்ற மாண்புமிகு அங்கத்தினர்கள் அறியாததல்ல. ஒரு மாபெரும் தலைவர் சொல்லி அனுப்புகின்றார்கள் என்று சேதி வந்தது. அது பொய்யாக இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. அவர் என்ன சொல்லியிருப்பார் என்பதை நான் கூறுகிறேன். ''நீங்கள் போக வேண்டும், அங்கே தடை செய்வார்கள், அவர்களின் தடையை மீறி நீங்கள் போக வேண்டும்'' என்று சொல்லி அனுப்பியிருக்கிறார்கள். அதைப் போலவே நடந்தது. போலீஸ் அதிகாரிகள் அவர்களைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். அப்படித் தடுத்து நிறுத்தியபோது, அதனையும் மீறி, அவர்கள் சட்டசபைக்கு வருவதற்கு முயற்சித்தார்கள். தற்காப்பு அதிகாரிகள் அவர்களைத் தடுக்கிறார்கள். அவர்கள் தாக்கப்படுகிறார்கள். இவர்களும் அவர்களைத் தடுக்கின்றார்கள். இப்படி இரு தரப்பினரும் காயப்பட்டு மருத்துவ மனைக்குப் போகின்ற நிலைமைகளும் ஏற்பட்டன. ஏன் இதை நான் இங்கே சுட்டிக் காட்டுகின்றேன்? போலீஸ் அதிகாரிகள் அதிகமாக எதுவும் செய்துவிடக்கூடாது என்பதுதான் எங்களது நோக்கம். முதலமைச்சர் என்ற பொறுப்பேற்றிருக்கின்ற நான் ஒருவேளை கட்டளைகளை இட்டிருப்பேனோ என்ற ஐயத்தில்தான், பிரதம எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு இந்தக் கருத்து ஏற்பட்டிருக்கின்றது என்பதை அவர்கள் பேசிய பேச்சிலிருந்து நான் அறிந்துகொண்டேன். ஒரு வகையிலே அதை நான் ஏற்றுக்கொள்ள வேண்டும். கூடுமானவரையில், போராட்டம் நடத்துபவர்கள் அவர்கள் முறையில் அவர்கள் தொடங்கினால்கூட, இனிமேல் அவர்களை நம் முறைப்படி தடுத்தாலொழிய, இந்த



மாதிரி நிகழ்ச்சிகளை நாம் நிவர்த்திக்க, நீக்க முடியாது. வேறு வழி இல்லாமல் இருக்கிறது என்ற நிலைமைகள் வரும்போது, தடுக்கவேண்டியிருக்கிறது. ஒரு பயங்கரமான சூழ்நிலை ஏற்பட்டாலொழிய, போராட்டக்காரர்களைத் தடியால் அடிக்கவோ, துப்பாக்கியால் சுடவோ கூடாது, அந்த நிலைமைகள் ஏற்படக் கூடாது என்று ஒவ்வொரு போலீஸ் அதிகாரிக்கும் நான் பல முறைகள் சொல்லியிருக்கிறேன். நாங்கள் வெளியில் இருந்தபோது கடந்த 5 அல்லது 6 ஆண்டுகளாகவும், அதற்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழகத்திலே நாங்கள் இருந்தபோதும், எந்தெந்தத் துன்பங்களை, இடர்ப்பாடுகளை எல்லாம் அனுபவித்திருக்கிறோமோ, அந்த 5, 6 ஆண்டுகளாகப் பட்ட அத்தனைத் துன்பங்களையும் எங்களால் அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மனதிலே அந்த நிகழ்ச்சிகள் என்றென்றும் ஆறாத துயராக இருந்துகொண்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எத்தனை பெண்கள் கற்பழிக்கப் பட்டார்கள் என்பதைச் சொல்லக்கூடத் துணிவில்லாத நிலைமையில் இருக்கின்றோம். எத்தனையோ பேர்கள் சாகடிக்கப் பட்டார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலைகள் எல்லாம் இருந்தன என்பதையும் இங்கே சொல்லிக்கொள்கிறேன்.

இந்த நாட்டில் கொத்தடிமைகளே இல்லை என்று முந்தைய முதலமைச்சர் அவர்கள் சொன்ன பிறகு, கொத்தடிமைகள் இருப்பதைக் காட்ட 20 அம்சத் திட்டத்தை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டத்தின் விளைவாக எத்தனை கொத்தடிமைகள் வெளியே கொண்டுவரப்பட்டார்கள் என்பதையும் நாம் புள்ளிவிவரங்களோடு அறிந்துகொண்டிருக்கிறோம். இவற்றையெல்லாம் சட்ட மன்றத்திலே பதவிலே இருக்கின்ற நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். எங்களுக்குக் கோப்புகளைப் பார்ப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்திற்காக, மாண்புமிகு எதிர்க் கட்சியிலே இருப்பவர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லை என்ற காரணத்திற்காக, கோப்பில் இருப்பவைகளை எல்லாம் படித்துப் பிரச்சாரம் செய்வது என்று சொன்னால், அது நியாயம் அல்ல. இப்போது எங்களுடைய கடமையை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். இங்கு அமைச்சர் பதவியிலே இருப்பவர்கள் மற்றவர்கள் பின்பற்றிய வழியிலேதான் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் இச்சைப்படி செயலாற்றுகின்ற அதிகாரம் அவர்கள் கையிலே இருந்தாலும்கூட, தமிழக மக்களைக் காப்பாற்றுவதற்காகத்தான் அவர்களுக்கு அதிகாரம் தரப்பட்டிருக்கின்றதே தவிர, மக்களுடைய துன்பத்தை அதிகப்படுத்துவதற்கு அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்கு நான் பின்வாங்கவில்லை. அவர்கள் தெளிவாக இருக்கின்றார்கள். பலருக்கு எங்கள் மீது சந்தேகம் இருந்துகொண்டிருக்கிறது. இந்த மன்றத்திலேகூட பேசப்பட்டதாகக் குறிப்பிலே பார்த்தேன்.

(பிற்பகல் 5-20)

ஏதாவது போராட்டம் அல்லது அந்த நிலைமை உருவாக்கப்பட்டதற்குப் பிறகுதான் அதை உன்னிப்பாகக் கவனிக்கிறதென்றும், அதுவரை எதுவுமே செய்யவில்லை என்றும் குற்றச்சாட்டு இருக்கிறது. நான் நன்கு அறிந்திருக்கிறேன். இங்கு மட்டுமல்ல, சட்டப் பேரவையிலேகூட சொல்லியிருக்கிறேன். நான் இங்குள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்கள் உள்ளத்தில் இருக்கும் வேதனையின் நிலையை, நாங்கள் அனுபவித்த துன்பத்தை, ஒரு ஆட்சியிலே உள்ள கட்சி, வேறொரு எண்ணத்தின் அடிப்படையிலே தனக்குச் சொந்தமாக உள்ள கருத்துக்குச் சாதகமாக, அல்லது பழி வாங்கும் நிலைமையிலே, யாரையும் அந்தத் துன்பத்திற்குச் சொந்தக்காரர்களாக்கக் கூடாதெனபதை நாங்கள் ஒவ்வொரு வினாடியும் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். அந்த வகையில் நான் என் கருத்தைச் சொன்னதுண்டு.

மது விலக்குபற்றி நான் சொன்னபோது, சாராயத்தை விற்கிறவர்களைத் தண்டிக்க வேண்டும், அது இருந்தால்தானே குடிப்பார்கள், எனவே குடிப்பவர்களுக்குப் பின்னாலே தண்டனை கொடுக்கலாமென்ற வகையிலே மேடையிலே பேசினேன். சாராயம் இருந்தால்தான் குடிக்க முடியும், சாராயம் இல்லையென்றால், குடிக்க விழைந்தாலும் குடிக்க முடியாதென்ற வகையிலே சொன்னதுண்டு. அதற்குக் காரணம், குடிப்பது பரவாயில்லை, விற்பதுதான் கெட்டதென்ற நிலையில் சொல்கிறேன் என்று யாரும் எடுத்துக்கொள்ள மாட்டார்களென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதையும் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு பேசியவர்கள் உண்டு. ஆனாலும், எங்களைப் போன்றவர்கள் பதவியில் இருக்கும்போது, நாங்கள் அனுபவித்த துன்பங்களை, நாங்கள் கண்ட மக்களின் ஏழ்மை நிலைமைகளை, எப்படி எப்படி மாற்ற வேண்டும், எப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கக் கூடாது, எவைகள் இந்த நாட்டிலே மக்களுக்குச் சொந்தமாக இருக்க வேண்டும் என்று கருதினோமோ அதை நிறைவேற்ற வேண்டுமென்ற ஆசையிலிருந்து நாங்கள் இம்மியளவும் இன்னும் பின் வாங்கவில்லை என்பதை மட்டும் இங்கே உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். வேறு வழியில்லாத நிலைமையில், பொது மக்கள் என்று அழைக்கப்படுகிற பல்வேறு தரப்பிலே இருக்கிற மக்கள்—கோடிக் கணக்கான மக்களுடைய வாழ்க்கைக்கு இடையூறாக அல்லது ஆபத்து விளைவிக்கக்கூடியதான வன்முறைச் செயல்களில் யார் ஈடுபட்டாலும், அவர்கள்மீது நிச்சயமாக அரசு அனுதாபம் காட்டாதென்ற நிலையில் நாங்கள் நடவடிக்கை எடுப்பதென்ற முடிவிற்கு வந்தால், அதில் திடமாக இருக்கிறோமென்பதை இங்கே தெரிவிப்பதிலே, நீங்கள் என்மீது நம்பிக்கை வைப்பீர்களென்று நிச்சயமாக எதிர்பார்க்கிறேன்.





காரணம், அறப் போராட்டம் என்பதோ, உரிமைப் போராட்டம் என்பதோ நடக்கும்போது, இந்த நாட்டிலே வாழ்கிற அனைத்துத் தரப்பு மக்களும், ஒரே நிலையில் அமைதியாக, நிம்மதியாக வாழ வேண்டுமென்ற எண்ணத்திற்கு அனைவரும் சொந்தக்காரர்களாக இருக்கும்போது, எந்தச் சூழ்நிலையில் வன்முறை வந்தாலும் தடுக்கப்படும், அமரர் அண்ணா அவர்கள் ஒரு முறை சொல்லியிருக்கிறார்கள். சிறிய புழு ஒன்றும் செய்ய முடியாவிட்டாலும், நெளிந்தாவது தன்னுடைய வேதனையைக் காட்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த நிலையில், இந்த அரசு நடவடிக்கை எடுக்குமென்று பொது மக்களுக்குச் சொன்ன வாக்குறுதியைக் காப்பாற்ற விரும்புகிறேன்.

சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டதென்ற குற்றச் சாட்டை இங்கே எதிர்க்கட்சித் தலைவரவர்கள் எடுத்து வைத்திருக்கிறார்கள். இதற்கு முன்னால் பலபேர்கள் சொல்லியிருக்கிறார்கள். பல அங்கத்தினர்கள் பல்வேறு வகையிலே கூறியிருக்கிறார்கள். கற்பழிக்கப்படுவது எவ்வளவு பெரிய கொடுமை என்பதைப்பற்றி நாங்கள் பேசியவர்கள் மட்டுமல்ல, அதற்காக நான் முன்பு ஒரு கட்சியில் இருந்தபோது போராடியவன். அதற்குப் பிறகு இன்றைக்கு எனக்கென்று இல்லாமல், கொள்கைக்கென்று இன்னொரு கட்சி உருவாக்கப்பட்டபோது, அந்தக் கட்சியில் பணியாற்றுகிறபோது, எப்படிப் போராடினேன், எப்படிப் பேசினேன் என்பதை மறுபடியும் சொல்லிக்காட்ட விரும்பவில்லை. நான் சட்டப் பேரவையில் கூறினேன். வழக்கு, வழக்கு மன்றத்திற்குப் போக இருக்கிறது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள், அது போன்று மாமன்றத்திலே இருக்கிற தகுதி வாய்ந்த மன்ற உறுப்பினர்கள் திகைத்துப் போகிற அளவிற்கு, எப்படிப்பட்ட கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அப்படிப்பட்ட மாபாதகத்தில் இறங்கினார்கள் என்ற செய்தி வழக்கு மன்றத்திலே வெளியாகும்போது, உண்மையிலே இந்த அரசின்மீது நீங்கள் அனுதாபப்படுவது மட்டுமல்ல, மிகப் பெரிய ஆதரவைத் தருவீர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் குடிக்கிறவன் ஒரு கொலையைச் செய்கிறான் என்றால், அவன் தன்னிலையற்ற நிலையில் செய்கிறான் என்று பொருள். ஆனால் ஒரு கொள்கைக்குச் சொந்தக்காரன், ரயிலில் போகிற பெண்ணைக் கீழே தள்ளி கெடுக்க முயற்சிக்கிறான். அதிலே குறிப்பிட்ட 3, 4 பேர்கள்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 14

இரண்டு, மூன்று அரசியல் கட்சிக்காரர்கள் என்று விவரம் வந்தால், இந்த நாட்டின் நிலைமை என்ன என்பதை அப்போது தான் இந்த நாடு அறியும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். வழக்கு மன்றத்திற்கு அது வர இருப்பதால், அவைகளைப்பற்றி இங்கே நான் குறிப்பிடவில்லை. ஆதாரங்கள் அங்கே வெளி வரும். அப்போது நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். நிச்சயமாக ஆசையின் காரணமாகவோ, வெறித் தனத்தின் காரணமாகவோ, தன் நினைவற்ற நிலையிலோ இந்தச் செய்கையில் ஈடுபடவில்லை. வேண்டுமென்றே நாட்டிலே இப்படிப்பட்ட நிலைமைகள் நடை பெறுகின்றன என்று பழி சொல்லி, அவர்கள் கற்பைக் காப்பாற்ற அல்லது கொடுமையைத் தடுக்க இந்த அரசுக்கு நிச்சயமாகச் சக்தியில்லை என்று மற்றவர்கள் பேச வேண்டுமென்பதற்காக இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறுகின்றன என்பதை நீங்கள் உணரும்போது, நிச்சயமாகச் சொல்கிறேன், மீண்டும் சொல் கிறேன்—இது குறிப்பேட்டிலே இருக்கும், நான் இந்தப் பதவி யிலே இருந்தால் கேட்கலாம், நான் அந்த நிலைமைகளைச் சொல்கிறேன்—அப்போது உணர்வீர்கள். யார், யார், எப்படிப் பட்ட கட்சியைச் சேர்ந்தவர்கள், இந்தப் பாதகத்தில் இறங்கி யிருக்கிறார்கள் என்பதை நாடு உணரும்.

இங்கே விவசாயிகளைப்பற்றிச் சொன்னார்கள். நானே அதைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று விரும்பினேன். விவசாயிகளைத் தூண்டிவிடுவதோ, தொழிலாளர்களைத் தூண்டிவிடுவதோ அல்லது மாணவர்களைத் தூண்டிவிடுவதோ, சாதாரண என்னைப் போன்ற ஒரு மனிதனால் கூடச் செய்துவிட முடியும். ஆனால் வெறி உணர்ச்சியிலே, ஆத்திரத்தோடு வருகிறவர்களை, ஒழுங்குபடுத்து வதென்பது எளிதான காரியமல்ல. பெரிய படை வரும்போது கூட, சாவைப்பற்றி அஞ்சாத மனநிலைதான் இருக்கும். வயதைப் பார்க்க முடியாமல், நேரத்தை, காலத்தைப் பார்க்க முடியாமல், அந்த நெஞ்சிலே இருக்கும் பழியுணர்ச்சி, வெறி உணர்ச்சி அல்லது கொள்கைப் பிடிப்பு—அதற்காக எதையும் தாங்கத் தயாராக இருப்பார்கள் என்பதை உணரும்போது, நான் உங்க ளிடம் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன், தூண்டிவிடுவது எளிது, ஆனால் தடுத்து நிறுத்துவது அவ்வளவு எளிதல்ல. அதாவது நாங்கள் யாருக்கோ விட்டுக் கொடுக்கிறோமென்று



1978 செப்டம்பர் 14] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

தயவு செய்து இந்த மாமன்றத்தில் உள்ள நீங்கள் எண்ணி விடக்கூடாது. அவர்கள் கேள்வி கேட்டார்கள். முதலாளி களுக்கு அப்படியே விட்டுக்கொடுத்து விட்டால், அவர்களே கூட இந்தத் தொழிலில் இறங்கினால் என்ன செய்வதென்ற சந்தேகத்தைக் கிளப்பினார்கள். மீண்டும் சொல்கிறேன். இந்தப் பிரச்சினைகளெல்லாம் நமக்கு நியாயமான கொள்கைகளாகப் படுகின்றன. உழைப்பவனுக்கு நிலம் சொந்தமாக இருக்க வேண்டும். நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். கூலி உயர்வு கேட்கிறோம். இரண்டு தரப்பிலும் பேசியாக வேண்டும். அவர்கள் கூலி உயர்வு கேட்கிறார்கள். எங்களால் கொடுக்க முடியாதென்று நிலத்தின் சொந்தக்காரர்கள் சொல்கிறார்கள். உடனே, வேலை செய்ய மாட்டோமென்று அவர்கள் வேலை செய்யாமல் நின்று விடுகிறார்கள். இதை உறுப்பினர்கள் பத்திரிகைகளில் படித்திருப்பார்கள். அதற்கு மேல் நான் சொல்லக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். விவசாயம் செய்யக்கூடிய நிலத்திற்குச் சொந்தக் காரர்கள், 'நீங்கள் இந்தக் கூலிக்கு வேலைசெய்ய முடியாதென்றால், நாங்களே உழுகிறோம்' என்று உழுதால், அதைத் தடுப்பது நியாயமா? அது எப்படி நியாயம்? இன்னொரு வேலையாளை வைத்தால், 'இந்த வேலையாளுக்குத் துரோகம் செய்கிறீர்களே, இங்கே இருக்கும் ஆட்களுக்கு சம்பளம் கொடுக்காமல் வெளி யிலிருந்து ஆளை கூலிக்குக் கொண்டு வந்து அவர்களுக்கு நீங்கள் சம்பளம் கொடுத்து வேலை செய்ய வைக்கிறீர்களே' என்று கேட்டால் நியாயம். ஆனால் அந்த நிலத்திற்குச் சொந்தக் காரர்கள் அவர்கள். நாம் ஒரு கொள்கையைச் சொல்கிறோம்—உழுபவன் அந்த நிலத்திற்குச் சொந்தக்காரனாகி, நிலத்தில் உழும் போது அதைத் தடுப்பதென்றால் எப்படி நியாயம்? இப்படிப் பட்ட பிரச்சினைகளெல்லாம் ஒரு நாட்டிலே உருவாகும்போது நாம் எவ்வளவு பெரிய பொறுப்போடு, நிலைமைகளை உருவாக்க வேண்டுமென்பதையும், பிறகு நாமே ஒருவேளை இந்த ஆட்சியில் வந்து கேட்கும்போது அதற்குப் பதில் சொல்லப் போகிறோ மென்பதையும் தயாராக வைத்து, இப்படிப்பட்ட எண்ணங்களை மக்கள் மனதிலே பதிய வைக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள் என்று இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். [illegible]

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 14

(பிற்பகல் 5-30)

இதைச் சொல்வதன் மூலமாக கூலி உயர்வு கேட்கிற தொழிலாளர்களுக்கு கூலி உயர்வைக் கொடுக்கக் கூடாது என்பதல்ல என்னுடைய நோக்கம். எங்களுடைய கட்சினுடைய கொள்கை எப்போது நிறைவேறப்போகிறது என்பது தெரியாது. எங்களுக்கு அண்ணா அவர்கள், ''சக்திக்கேற்ற, திறமைக்கேற்ற, உழைப்புக்கேற்ற, தேவைக்கேற்ற ஊதியம் தொழிலாளர்கள் பெற வேண்டும்; அது என்றைக்கு நிறைவேறுகிறதோ அன்றைக்குத்தான் இந்தியா சமத்துவ நாடாகவும், எல்லோருக்கும் நியாயம் வழங்கும் நாடாகவும் இருக்கும்'' என்று சொல்லித் தந்திருக்கிறார்கள். இதிலிருந்து நாங்கள் பின்வாங்கவில்லை. ஆனால் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். வேலை செய்கிற தொழிலாளர்களே வேலை செய்ய முடியாது என்று சொல்லிவிட்டு, ஆனால் எங்களுக்கு அதிகச் சம்பளம் தர வேண்டுமென்று கேட்கும் உரிமையிருக்கிறது என்று சொல்லும்போது, அதற்குப் பதிலாக வெளியே இருந்து ஆளைப் பிடித்துக் கொண்டு வந்து குறைந்த விதத்தில் கூலியைக் கொடுத்து வேலையை வாங்கினால், அதை நாம் ஒத்துக்கொள்ள முடியாது. அது நியாயம் அல்ல. ஏழ்மையைப் பயன்படுத்திக்கொண்டு, தொழிலாளர்களைப் பழி வாங்குகிறோம் என்று பொருளாகும். ஆனால் நிலத்திற்குச் சொந்தக்காரர்களே, அவர்களுடைய நிலத்தில் உழைக்கும்போது, அதைத் தவிர்ப்பது எப்படி நியாயமாகும்? இதற்காகப் போராட்டங்கள் நடத்துவது நியாயம்தானா? இதைத் தடுக்க வேண்டாமா? அதைத் தடுக்க வேண்டிய பொறுப்பு சட்டத்திற்கு மட்டும்தானா? சட்டத்தை வைத்துத் தடுக்க வேண்டுமென்றால், முடிவு எப்படி இருக்கும்? கைகலப்பு நடந்த பிறகுதான், போலீசார் இதிலே குறுக்கிட முடியும். ஆனால் தொழிலாளர்கள் வேலை செய்யாமல், நிலச் சொந்தக்காரர்களே நிலத்தை உழும்போது, அதில் நடவடிக்கை எடுப்பது போலீசாரின் வேலையல்ல. சட்டத்தை மீறிச் செயல்படும்போதுதான், போலீசார் தடை செய்யப் போவார்கள். தொழிலாளர்களுக்கு எந்தத் துன்பமும் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். எப்படி ஒரு தாய், அவளுடைய சொல்லைக் கேட்காமல் பிடிவாதம் செய்கிற தன்னுடைய குழந்தையை தன்னுடைய இரு கைகளிலும் அரவணைக்கிற நிலையிலே தூக்கிக் கொண்டு போவார்களோ அந்த அளவிலேதான் நாங்களும் செய்கிறோம்.

இங்கே ஒரு செய்தியைச் சொன்னார்கள். முதுகுளத்தூரில் என்ன நடந்தது என்பதைப்பற்றிய ஒரு செய்தியைச் சொன்னார்கள்.

திரு. ஆ. நல்லசிவம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியபோது, கிராமப்புறத்திலே சொந்த நிலத்தில் நிலச் சுவான்தாரர்களே வேலை செய்கிறபோது, இப்படிப் போராடுகிறார்களே என்று......



1978 செப்டம்பர் 14]

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினருக்கு நான் ஏற்கனவே சொல்லி அவர்களும் ஒப்புக்கொண்டு உட்கார்ந்து விட்டார்கள். ஒவ்வொரு உறுப்பினரும் தங்களுக்கு உரிமையிருக்கிறது என்று கேள்வி கேட்க ஆரம்பித்தால், பிறகு பேச்சு முடியாது. ஆகவே கொஞ்சம் இருங்கள். அவர் பேசி முடிக்கட்டும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஒரு விபரீதச் சம்பவம் நடந்துவிட்டது என்ற செய்தி அங்கேயிருந்து போலீஸ் அதிகாரிக்குக் கிடைத்திருக்கிறது. அங்குள்ள ஒரு போலீஸ்காரரை அனுப்பியிருக்கிறார்கள். கொஞ்ச நேரம் அதிகமாகியும் அவர்கள் திரும்பி வரவில்லை. என்ன ஆகிவிட்டது என்று பார்க்க மற்றொருவர் சென்றதாகவும், சென்றபோது யார் சுட்டதாகச் சொல்லப்படுகிறதோ, அவர் குடிபோதையில் இருந்ததாகவும் அவரிடத்தில் ரிவால்வர் இருந்ததாகவும், அவர் போலீஸ் அதிகாரியைச் சுட்டுவிட்டதாகவும் தகவல் வந்திருக்கிறது. தீர விசாரித்துச் சொல்லுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். இது முடிவான செய்தியல்ல. இப்போது கிடைத்திருக்கிற செய்திதான். அதை தீர விசாரிக்கச் சொல்லியிருக்கிறேன். நான் எச்சரிக்கையோடு பேசுகிறேன்.

அதே நேரத்தில் இன்னொரு ஊரில் காவலில் இருந்து தப்பி ஓடிய ஒருவன் எதிரேயிருந்த பாதையிலுள்ள கம்பத்திலே மோதி கீழே விழுந்தவுடன், அவரைத் தூக்கிச் செல்வதற்குள் அவர் செத்துவிட்டார் என்று செய்தி வருகிறது. இரண்டையும் நினைத்துப் பார்க்க வேண்டும். போலீஸ் அதிகாரி சுடப்பட்ட செய்தியும் வருகிறது. போலீஸ் காவலிலிருந்து தப்பி ஓடியவன் இறந்துவிட்டான் என்ற செய்தியும் வருகிறது. அதுவும் உண்மையா என்பதை நாங்கள் விசாரித்துத்தான் ஆக வேண்டும். இந்தமாதிரியான செய்திகள் பத்திரிகையிலே வெளிவந்தவுடனே அதுதான் இறுதியான தகவல் என்று அரசியல்வாதிகள் நினைத்துக்கொண்டு, அதைப் பயன்படுத்தி எப்படி இந்த அரசுக்கு ஒரு பெரும் பிரச்சினையை உருவாக்குவது என்ற எண்ணத்தில் செயல்பட நினைத்தால், நாங்கள் விசாரணை செய்தாலும், நியாயப்படி வழக்கு மன்றத்திலே வைத்தாலும், எப்படி நியாயம் கிடைக்கும் என்பதை தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1967ஆம் ஆண்டில் நான் சுடப்பட்டது உலகம் அறிந்த உண்மை. ஆனால் எப்படியோ நான் அந்தப் பத்திரிகைகளைப் பார்க்க முடியாமல் மயக்கமாக இருந்தேன். இரண்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு அது கோர்ட்டுக்கு வந்தபோது, என்னைக் கூப்பிட்டு அங்கே நிறுத்திக் கேள்வி கேட்டபோது, மிகத் திறமையாக அலசிப் பார்த்து விவாதிக்கக்கூடிய ஒரு வழக்கறிஞர், ''உங்கள் எதிராளி உங்களைச் சுடும்போது நீங்கள் தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்தீர்கள் அல்லவா?'' என்று

கேட்டார். "நான் பேசிக்கொண்டிருக்கவில்லை, நாற்காலியில் அல்லவா உட்கார்ந்திருந்தேன்" என்று சொன்னபோது, அவர் ஒரு பத்திரிகையைக் காட்டினார். அது 'மாலைமுரசு' பத்திரிகை. அதிலே நான் தொலைபேசியில் பேசிக் கொண்டிருப்பதைப் போல ஒரு படம் வெளியாகியிருந்தது. அதிலே சுட்டப்பட்டது 'இதே இடம்' என்று அம்புக் குறி போடப்பட்டிருந்தது. அதைப் பார்த்த பிறகுதான் நான் உணர்ந்தேன், ஒரு வழக்கறிஞரைக் கூட நம்ப வைக்கும் அளவுக்கு முதலிலே தரக்கூடிய செய்தி இருக்கிறது என்று. இப்படிப்பட்ட செய்திகள் வரும்போது, யார் ஆட்சியில் இருந்தாலும், மேலவை உறுப்பினர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள், இது குறித்து விசாரணை செய்யக் கட்டளையிட வேண்டும் என்று சொல்ல அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அதை நிறைவேற்றுவது எங்களுடைய கடமையும் கூட. அதைத் தட்டிக் கழிக்க விரும்பவில்லை. நீங்கள் சொல்வதை நாங்கள் ஏன் கேட்க வேண்டுமென்ற நிலைமையில் நாங்கள் இல்லை. ஏனென்றால், நாங்கள் நிறைய கற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. வசந்தபை அவர்களை நான் இப்போதுதான் உறுப்பினர் என்ற முறையில் சந்திக்கிறேன் என்று கருதுகிறேன். அவர் இங்கே பேசியதாகக் கேள்விப்பட்டேன். எம். ஜி. ஆர். அவர்களை நான் பார்த்ததேயில்லை என்று குறிப்பிட்டதாகவும், முதலமைச்சராக வருவதற்கு முன் அம்மையார் ஒருவர் மாலை அணிவித்ததாகவும் கூறியதாகக் கேள்விப்பட்டேன். நான் சொல்வது, மாலை போடுவதற்காக பதவியைக் கொடுக்கக் கூடிய நிலையில் இருந்தால், நாங்கள் இந்த நிலைக்கு வந்திருக்க முடியாது என்பதை தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மாலை போட்ட அம்மையார் இளம் வயது உடையவர் அல்ல. சாதாரண அம்மையார் அல்ல. நல்ல தமிழுக்குச் சொந்தக்காரர், தமிழிலே கவிதையை இயற்றக்கூடிய தகுதியைப் பெற்றவர். எனக்கு நம்பிக்கை இருக்கிறதோ, இங்குள்ள உறுப்பினர்களுக்கு நம்பிக்கை இருக்கிறதோ, மற்றவர்களுக்கு நம்பிக்கை இருக்கிறதோ, இல்லையோ; ஆனால் கடவுள் பக்தியிலே நம்பிக்கை கொண்டிருப்பவர் அவர். முருகன் கோயிலைக் கட்டி அதற்காக உழைத்துக் கொண்டிருப்பவர். அது மட்டுமல்ல, பதவியிலிருந்து 4 பேரைக் காப்பாற்றக்கூடிய தகுதியுள்ளவருக்கு வாழ்க்கைத் துணைவியாக இருக்கிறார்கள். குடும்பத்தில் செல்வாக்கோடும், செழிப்போடும் இருப்பவர்கள். என்னைப் போன்றவர்களுடைய தயவில் அவர்கள் இருக்கிறார்கள் என்பது நிச்சயமாக இல்லை என்பதைப் பணிவோடு சொல்லிக் கொள்கிறேன். ஒருவேளை எனக்குப் பதவி கிடைக்காமல், அவர்கள் இங்கே பதவியில் இருந்திருந்தால், அவர்களிடம் போய் என் வழக்கிற்கு உதவக்கூடிய நிலையைக் கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். எங்களை அணுக வேண்டிய நிலை



அவருக்கோ, அவருடைய குடும்பத்திற்கோ இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே ஒரு பட்டியலைப் படித்தார்கள். எத்தனை பேருக்கு என்னென்ன வேலைகள், எந்தெந்த ஜாதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் படித்துக் காட்டினார்கள். மீண்டும் சொல்கிறேன். எங்களுக்கு ஜாதியிலே நம்பிக்கையே கிடையாது; ஜாதி என்ற பெயரே இருக்கக் கூடாது என்பதுதான் எங்களுடைய எண்ணம்.

(பிற்பகல் 5–40)

இப்போது கூட பேசிவிட்டுத்தான் வந்தேன். ஒரு வாரத்திற்கு முன்பாக கலப்பு மணம் நடைபெற்ற நிகழ்ச்சியிலே 'கலப்பு' என்ற வார்த்தையைச் சொன்ன உடனேயே, ''கலப்பு என்ற வார்த்தையேகூடாது, ஏனென்றால் அதில் 2 ஜாதிகள் இருக்கின்றன என்று தானே பொருள், ஆகவே 'கலப்பு மணம்' என்ற வார்த்தைக்கு பதில் 'நல்ல மணங்கள்,' என்று சொல்லுங்கள்'' என்று சொன்னேன். அப்படிப்பட்ட எண்ணம் எங்களுக்கு இல்லை. ஜாதிப் பெயரைச் சொல்லி நாங்கள் யாரையும் ஏமாற்றுபவர்களும் அல்ல, அதேபோல அவர்களும் ஜாதியின் பெயரைச் சொல்லி எங்களை அண்டிப் பிழைப்பவர்களும் அல்ல என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

THIRU G. VASANTHA PAI: Sir, I only brought to the notice of the Hon. the Chief Minister that persons should not be allowed to have access to persons in power and should not be allowed to recommend or think that they could recommend for positions for which they are not qualified. I was bringing it to his notice only for that reason and I gave the list showing the number of persons who have been appointed, not during the present regime, but during the earlier regime and during the time of Emergency; and these details and lists came to be circulated in the Supreme Court Bar Association and other Bar Associations.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மறுபடியும் அவருக்கு அதையே நான் சொல்லவேண்டியிருக்கின்றது, எங்களைப் பொறுத்தவரையில் யாருக்கும் நாங்கள் தயவு தாட்சண்யம் காட்டத் தயாராக இல்லை. அதே சமயத்தில் யாருக்கும் எதிராக செயல்படவும் தயாராக இல்லை, யாருக்கும் சலுகை காட்டவும் தயாராக இல்லை. உதாரணத்திற்கு நான் ஒன்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். நேற்றைய தினம் சட்ட மன்றப் பேரவையில் நடைபெற்ற விவாதத்தின் போது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எங்கள் கட்சியைச்

சேர்ந்த ஒரு எம்.எல்.ஏ.எப்படி நடந்திருக்கிறார் என்பதைப் பற்றி குறை சொன்னார். நான் உடனே தீர விசாரித்து நிச்சயமாக அவர் தவறு செய்திருந்தால், நடவடிக்கை எடுப்பேன் என்று அவர்களுக்குக் கூறியதை நினைவுபடுத்துகிறேன். தவறு செய்பவர்களை அவர்கள் யாராக இருந்தாலும் சரி, இந்த அரசு எந்தவகையிலும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. பதவியை மட்டும் நாங்கள் நம்பி இங்கே இல்லை. நாங்கள் கொள்கையை நம்பித்தான் இருக்கிறோம். இதே கொள்கையை வேறு யாராவது பின்பற்றினால், நாங்கள் மாறிடத் தயார். ஒன்றை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் எனக்கு மாலை போட்ட உடனே என்னை ஏமாற்றத்தான் அவ்வாறு செய்கிறார் என்றோ, நான் அவர்களை ஏமாற்றத்தான் அந்த மாலையை ஏற்றுக் கொள்கிறேன் என்றோ யாராவது கருதுவார் களேயானால், அந்த நினைப்பு தவறு என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மாலை போட்டதுபற்றி எனக்கு நினைவில்லை. மாலைகள் போட்டாலும் அல்லது வாழ்த்துப் பத்திரங்கள் வாசித்துக் கொடுத்தாலும், இரு வேறு கொள்கை களில் இருப்பவர்கள் ஒரே கொள்கைக்குச் சொந்தக்காரர்களாக ஆகி விட்டார்கள் என்று கருதும் நிலை இன்றைய தினம் நிச்சய மாக வரக் கூடாது. இது என்னுடைய தாழ்மையான வேண்டு கோள். எல்லாக் கட்சிக்காரர்களும், எதிர்க்கட்சிக்காரர்களும், மற்றும் பலரும் நான் முதலமைச்சர் என்ற முறையில் என்னைச் சந்திக்கிறார்கள், மனுக்கள் கொடுக்கிறார்கள், முடிந்ததைச் செய் கிறேன், முடியாதவற்றைச் செய்ய முடியாது என்று சொல்லு கின்றேன். இந்த மாமன்றத்திலே உள்ளவர்கள், அந்த மன்றத்திலே உள்ளவர்கள், வேறு வெளியே இருப்பவர்கள், தகுதிவாய்ந்தவர்கள் எல்லாம் சந்திக்கிறார்கள். தகுதி வாய்ந்தவர்களுக்கு சட்டப்படி என்ன நடக்குமோ அது நடக்கும் என்று நான் சொல்வேனே தவிர, தகுதி கிடையாதவர் களுக்கு, செய்யக்கூடாதவற்றையெல்லாம் செய்வேன் என்று கூறி என்னை நானே ஒரு கருவியாக ஆக்கி, இப்படிச் செய்வேன், அப்படிச் செய்வேன் என்று சொல்லுகின்ற பிரச்சினைகளுக்கு நான் செல்ல விரும்புவதில்லை. ஒரு மாநில நிர்வாகம் நல்ல பெயர் வாங்கக்கூடிய முயற்சியில் நடவடிக்கை எடுத்து வருகிறேன். ஒன்றை மட்டும் இந்த நேரத்தில் நான் சொல்வது என்னுடைய நீங்காத கடமை என்று கருதுகிறேன். எம். பி. பி. எஸ். போன்ற எந்தஒரு காரியமாக இருந்தாலும்சரி, தாட்சண்யத்துக்கு இடமில்லை. குமாரபாளையம் திரு. எஸ். சுப்பிரமணியம் அவர்கள் செய்த காரியங்களையெல்லாம் பார்த்து, அவர்கள் தகுதி உள்ளவர்கள் என்று தகவல் தரப்பட்டு, அதன் பிறகு தான் நியமிக்கப்பட்டார்கள். இதில் தப்பு ஒன்றுமில்லை. திரு. சங்கரலிங்கம் அவர்கள் எடுத்துச் சொல்லியது போல், அப்படிப் பட்ட நிலைமைகள் ஏதாவது இருந்தால், அவர்களைப்





பதவியிலிருந்து ராஜிநாமா செய்ய நானே கேட்டுக்கொள்வேன் என்று உறுதிகூறுகிறேன். அந்த வகையில் இந்த அமைச்சரவை நிச்சயமாக யாருக்கும் எந்த வகையிலும் ஏதோ சுயநலத்திற்காகத் தவறாகக்கடமையாற்றாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. வீராசாமி எழுந்தார்—தலைவர் மணியடித்தார்.)

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவரவர்களே, ஒரு 'கிளாரிபிக்கேஷன்'.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திரு. வசந்த பை அவர்களைப்பற்றி முதலமைச்சர் குறிப்பிட்டுச் சொன்னதால் தான் அவர் எழுந்ததும் விளக்கம் சொல்ல அனுமதித்தேன். திரு. நல்ல சிவம் கூட எழுந்தார். நான் அவரை அனுமதிக்கவில்லை. நீங்கள் உட்காருங்கள். முதலமைச்சர் பேசட்டும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மதிப்பிற்குரிய திரு. இராமமூர்த்தி போன்றவர்கள் பல்வேறு கருத்துக்களை யெல்லாம் எடுத்து வைத்திருக்கின்றார்கள். இன்னும் பலர் ஆய்ந்து பார்த்து தகுதியுடைய பல்வேறு கருத்துக்களைச் சொல்லி யிருக்கிறார்கள். தனித் தனியாக அவைகளுக்கு பதில் சொல்வதை விட ஒட்டுமொத்தமாகப் பதில் சொல்கிறேன். இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொல்லி யிருக்கிறார் ''எனக்கு ஒரு நாளைக்கு 30 கோப்புகள் வருகின்றன'' என்று. அவர் கொடுத்து வைத்தவர். ஆகவே அவ்வளவு கோப்புகள் அவர் பார்க்கிறார். நான் கொடுத்து வைக்கவில்லை. ஆகவே எனக்கு இவ்வளவுதான் அனுப்பப்படுகிறது. (சிரிப்பு) அப்படி எனக்குக் கோப்புகள் குறைவாக வருகின்றன என்றால் அது என் குற்றமும் இல்லை, இலாகாவின் குற்றமும் அல்ல. நான் குறிப்புகள் வைத்திருக்கிறேன். அந்தக் குறிப்புகளைப் படித்து நேரத்தை நான் வீணாக்கிக் கொள்ள விரும்பவில்லை. எவை உடனடியாகச் செய்யப்பட வேண்டுமோ, அவைகளை இரவு பகலாக செய்வதற்கான சக்தியை என் தாய் எனக்குத் தந்திருக் கிறார்கள். அது இருக்கிற வரை சிறப்பாக ஆட்சி செய்வேன், குற்றச்சாட்டுக்கு ஆளாகாத வகையில் காரியங்களை நல்ல முறையில் செய்வேன்.

இன்னொன்றைச் சொல்லியிருக்கிறார்கள். பஞ்சாயத்துயூனி யன்கள் கலைக்கப்பட்டு கமிஷனர்கள் கையில் அதிகாரம் உள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். திரும்பத் திரும்ப நான் எங்கோ போகிறேன் என்று எந்த மாமன்ற உறுப்பினரும் தயவுசெய்து தவறாக நினைத்து விடக்கூடாது. உண்மையிலே என்ன நிகழ்ந்தது என்பதைப் பற்றி நினைத்துப் பார்க்க வேண்டும். கூட்டுறவு என்றாலே, சிரிப்பதற்குரிய முறையில் கூட்டுறவு அமைப்புகள் எல்லாம் ஆக்கப்பட்டன என்பதும், அதில் எவ்வளவு தவறுகள் ஏற்பட்டன என்பதும் இங்குள்ள உறுப்பினர்கள் எல்லோருக்கும்

தெரியும். அது பேசப்படாத செய்தி ஒன்றுமல்ல. மீண்டும் அதே தவறுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அவசர கோலத்தில் செய்து விட்டு, மீண்டும் தவறு செய்பவர்கள் வரக் கூடாது என்ற முறையில் சட்டத்தை ஒழுங்கு படுத்த விரும்புகிறோம். கலைஞர் கூறினார் ''காலதாமதமும் அவசரமும் கூடாது—விரைவு தேவை'' என்று சொன்னார்கள். நான் விரைவிலே செய்வேன். அவசரப்பட மாட்டேன். விரைவிலே அவர்களுடைய உணர்வுகளையெல்லாம் மதித்து—இந்த—அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நான் மத்திய அரசிலே இருக்கின்றவர்களோடு பல்வேறு சந்தர்ப்பங்களில் பேச வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது, சில கமிட்டிகளிலே உட்கார்ந்து பேசியிருக்கிறேன். திடீரென்று பஞ்சாயத்து ராஜ் பற்றி ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. அதில் என்னை ஒரு உறுப்பினராகப் போட்டிருந்தார்கள். இரண்டொரு கூட்டங்களில் நான் கலந்துகொள்ள முடியவில்லை. எங்கள் கருத்துக்களையெல்லாம் அந்த சந்தர்ப்பங்களில் உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் சென்று சொன்னார். அவர்கள் ஒரு யோசனை சொல்லியிருந்தார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் தான் ஆட்சியின் எல்லா இடங்களிலும் இருக்க வேண்டுமென்றால், அது எங்கோ கொண்டு போய்விடும் என்பதற்கு இது எல்லாம் ஒரு எடுத்துக்காட்டு என்பதற்காகத்தான் இதை நான் சொல்ல விரும்புகிறேன். முன்சிப் என்று சொல்கிறார்களே இதெல்லாம் வேண்டாம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நீதிபதிகளை நியமிக்கலாம் என்ற ஒரு யோசனையைச் சொன்னார்கள். நான் உடனே ''அரசியல் கட்சிகளை வளர்க்கப் போகிறோமா அல்லது ஜாதியை வளர்க்கப் போகிறோமா அல்லது நீதிபதிக்கு யார் ஓட்டுப் போடுகிறாரோ அவருக்குச் சாதகமாக நீதி சொல்லுகின்ற அல்லது எந்த நீதிபதி தனக்குச் சாதகமாக நீதி சொன்னாரோ அந்த நீதிபதிக்கு ஓட்டுப் போடுகின்ற ஒரு முறையை வளர்க்கப் போகிறோமா? அப்படி இருந்தால் நீதி நிலைக்குமா? என்று கேட்டேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக அவர்கள் இருந்தால், நல்லது தானே என்று அவர்கள் சொன்னதற்கு, நான் ''அப்படியானால் சென்னையிலே ஒருவரைத் தேர்ந்தெடுத்தால் அவரைக் கன்னியாகுமரிக்குக் கொண்டு போய் விடுங்கள்'' என்று சொன்னேன். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், நம்முடைய ஆசை மக்களாட்சி நடைபெற வேண்டும், ஜனநாயகம் தழைக்க வேண்டும் என்பது தான். ஆனால் அது எங்கெங்கு கொண்டு போய்விடும் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டு என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். நீதிபதியைத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கும் முறையை மக்களிடம் ஒப்படைத்தால், எப்படி இருக்கும்? இதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். இப்படி இதை நான் வேண்டாமென்று சொன்னதற்கு நாங்கள் தேர்தலே





வேண்டாமென்று நினைப்பதாக யாரும் தப்பர்த்தம் கொள்ள வேண்டாம். ஒருவேளை தேர்தல் நடந்தால், தேர்தலில் நாங்கள் தோல்வி அடைவோம் என்ற அச்சமும் எங்களுக்கு இல்லை. அந்த வகையிலும் நாங்கள் அப்படிச் சொல்லவில்லை.

(பிற்பகல் 5-50.)

வெற்றி ஒருவருக்குச் சொந்தமல்ல. அதைப் போலவே தோல்வியும் ஒருவருக்கு நிரந்தரமாகச் சொந்தமில்லை. பதவியும் புகழும் நிரந்தரமல்ல, பணம் எப்படியோ அப்படித்தான். ஆனால் அறிவு மட்டும் தான் நல்லவர்களோடு சேரச் சேர அதிகமாகும்.

சென்னையிலே தற்போது 120 டிவிஷன்கள் இருக்கின்றன. அவைகள் 150 ஆக ஆக்கப்படவிருக்கின்றன. இதற்காக இருக்கின்ற இடங்களைப் பிரித்தாக வேண்டும். திரு. சட்டநாதன் அவர்கள் கூட மாநகராட்சியைப்பற்றி ஒரு அறிக்கை தந்திருக்கிறார்கள். அதைப்பற்றி அடுத்த தொடர் கூட்டத்திலே விவாதிப்போம். மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தமிழிலே அச்சடித்துத் தர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதைப் பற்றிக் குறிப்பிடும்போது தமிழ் நாட்டிலே வாக்காளர்கள் சேர்க்கப்படுவதும் வாக்குகள் சேகரிக்கப்படுகின்ற நிலைமை பற்றியும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். வாக்காளர்கள் யார் யார் என்று தெரிந்து கொள்கிற நிலைமையைப் பொறுத்த வரை அதிகாரிகள் இன்னும் எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டியிருக்கிறது. இந்த நிலைமையில் அனைத்துக் கட்சியினரும் ஒன்றாகச் சேர்ந்து செயல்பட வேண்டியிருக்கிறது. எந்தக் கட்சியினரும் தனியாகப் போய் வாக்காளர்களைச் சேர்ப்பது என்ற நிலை மாறி ஊரிலுள்ள அனைத்துக் கட்சிக்காரர்களும் ஒன்றாகச் சேர்ந்து அத்தனை பேருமே வாக்காளர்களைச் சேர்ப்பது அல்லது விட்டு விடுவது போன்ற பணியினை கவனித்தே செய்ய வேண்டும். அவ்வாறு சேர்க்கப்படுகின்ற வாக்காளர்கள் யாருக்கு வேண்டுமானாலும் வாக்களித்துவிட்டுப் போகட்டும், ஆனால் ஒரு கட்சியினர் மட்டும் 5000 பேரைச் சேர்த்தார்கள், இன்னொரு கட்சியினர் 10 ஆயிரம் பேரை வாக்காளர்களாகச் சேர்த்து விட்டார்கள் என்ற நிலை வரும்போது தான் சந்தேகம் ஏற்படுகிறது. தொடக்கத்திலே சந்தேகம் வந்துவிட்டால் முடிவு வரை சந்தேகம் தொடர்ந்தே இருக்கும். எனவே தான் ஆரம்பத்திலேயே எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த ஒரு குழுவினை அமைத்து, அந்த ஊரிலே உள்ள அனைத்து வாக்காளரின் பட்டியலையும் சரிபார்த்து பொய்யான வாக்குகளை யாரும் சேகரிக்க இடம் தராத வகையிலே ஒழுங்குபடுத்துவதுதான் ஜனநாயக அடிப்படையிலே மிகத் தேவையான ஒன்று என்று நம்புகிறேன். இந்த அரசைப் பொறுத்தவரை, பலமுறை நான் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறேன். ஆட்சிப் பொறுப்பை மேற்கொள்வதற்கு இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே கூட நான் அந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறேன். அதாவது பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கைப்படி ஊராட்சி மன்றம்

களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும், கட்சிகளின் பேராலே போட்டியிடாமல் கொள்கைகளின் பெயராலே போட்டியிடுவது என்பதுதான் சிறந்ததாக இருக்கும்; அதைத்தான் மக்களும் விரும்புகிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படுவது தான் நாட்டுக்கு நல்லது. இதுதான் ஆட்சியிலே இருக்கிற எங்களுடைய கொள்கையாகும். ஆனால் மற்றவர்கள் கட்சியினுடைய பெயராலே போட்டியிடுகிறபோது, நாங்கள் அதே முறையில்தான் போட்டியிட வேண்டியிருக்கிறது. இன்று மேலவையிலே உங்கள் எல்லோர் முன்பும் ஒன்றை அறிவிக்க விரும்புகிறேன். கட்சிகளின் அடிப்படையில் இப்படி உள்ளாட்சி மன்றங்களுக்கு போட்டியிடுவதில்லை என்று மற்றக்கட்சிக்காரர்கள் ஒப்புக்கொண்டால் எங்கள் கட்சியின் சார்பில் நாங்களும் அதற்குத் தயார் என்று இன்றே கையெழுத்துப் போட்டு எங்கள் கட்சியின் சார்பிலே தருவதற்கு தயாராக இருக்கிறேன். ஏனென்றால், சட்ட மன்றங்களிலே தான் நாம் கொள்கைகளை உருவாக்குகிறோம். ஆனால் உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்தவரை, அங்கே அவைகளை செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். செயல்படுத்துவதிலே கட்சி வித்தியாசம் தேவையில்லை, கருத்து மாறுபாடு தேவையில்லை. செயல்படுத்துவதிலே யாராவது தவறு செய்வார்களேயானால், அதைக் கண்காணித்து ஒழுங்குபடுத்தி ஒத்துழைப்புத் தருவதுதான் தேவை. அதைத்தான் நல்ல உணர்வுள்ளவர்கள், அறிவுள்ளவர்கள், தியாக உணர்வுள்ளவர்கள் விரும்புகிறார்கள். எனவே, உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்தவரை, கொள்கைப் போராட்டங்களுக்கு அங்கே இடமில்லை. அது தேவையும் இல்லை. ஆனால் இன்றையதினம் ஒரு பெரிய போர்க்களத்தைப்போல அவைகளை ஆக்கி, கட்சிகளை முன்னிறுத்தி, பெண்களிலே இருந்து வயது முதிர்ந்தவர்கள் வரை அச்சப்படுகிற சூழ்நிலையைத் தான் நம் நாட்டிலே உருவாக்கியிருக்கிறோம். இப்படிப்பட்ட நிலைமைகள் இனியாவது இல்லாமல் செய்யப்படுமானால், அது தான் மிகப் பலனுள்ளதாக இருக்கும் என்பது இந்த அரசினுடைய ஆசை.

கோப்புகளைப் பார்ப்பதைப்பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதேபோல யாரையோ தவறாக நியமித்துவிட்டதாகவும் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு நான் சட்டப் பேரவையிலே நேற்று குறிப்பிட்டதையே குறிப்பிட விரும்புகிறேன். சென்ற ஆட்சியிலே 6 வருடங்கள் கழிந்தும் கூட, எந்த உத்தரவும் போடப்படாத பல கோப்புகளைப்பற்றி, ஆதாரத்தோடு சொல்லியிருக்கிறேன். 1970–ம் ஆண்டிலே இருந்து 1976-ம் ஆண்டு வரை அப்படியே அந்தக் கோப்புகள் கிடப்பிலே போடப்பட்டுக் கிடந்தன என்பதையும் நான் இங்கே படித்துக் காட்டினேன். அந்தக் கோப்புகள் எல்லாம்



இங்கே இருக்கின்றன. அவைகள் நான் புதிதாகத் தயாரித்தவை அல்ல. அப்போது ஆட்சியிலே இருந்தவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்ற விவரத்தை ஆதார பூர்வமாக என்னாலே சொல்ல முடியும்.

சென்னை மாநகராட்சியிலே மஸ்டர் ரோல் தயாரித்தது பற்றிய வழக்கில் சம்பந்தப்பட்ட கவுன்சிலர்கள், அதிகாரிகள் ஆகியோர்களுடைய சொத்தைக் கைப்பற்ற வேண்டுமென்று லஞ்சத் தடுப்புத் துறை அனுப்பிய கோப்பு ஒன்று 1-4-1974 அன்று முன்னாள் முதலமைச்சருக்கு வந்து சேர்ந்து 27-12–1975 வரை அதாவது 13 மாதங்களாக அதை அப்படியே வைத்திருந்து விட்டு பிறகு அது திருப்பப்பட்டு விட்டது, மீண்டும் லஞ்ச ஒழிப்புத் துறையிலே இருந்து 3-1-1976 அன்று திருப்பி அனுப்பி வைத்தார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைக்கப்பட்ட பிறகு, எந்தவிதமான உத்தரவும் போடப்படாமலேயே அந்தக் கோப்பு துறைக்கே திரும்பி வந்து விட்டது. வழக்கிலே சம்பந்தப்பட்ட கவுன்சிலர்கள், அதிகாரிகளுடைய சொத்துக்களை விற்கவோ, வேறு பெயர்களுக்கு மாற்றவோ அனுமதிக்கக்கூடாது என்று கோரப்பட்ட கோப்பின் மீது 13 மாதங்களாக அன்றைய முதலமைச்சர் எந்த உத்தரவும் போடாமல் கையெழுத்தும் போடாமல் வைத்திருக்கிறார். அது இங்கே இருக்கிறது, நான் இங்கு ஆட்சிக்கு வந்தே 13 மாதங்கள் தான் ஆகின்றன. நான் 13 ஆயிரம் கோப்புகளிலே 12 ஆயிரம் கோப்புகளைப் பார்த்தது போதாது என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், ஆனால் 7 ஆண்டு காலம் பதவியிலே இருந்த முதலமைச்சர் 13 மாத காலமாக மஸ்டர் ரோல் வழக்கிலே சம்பந்தப்பட்டவர்களுடைய சொத்துக்களை மீட்கவோ மாற்றவோ அனுமதிக்கக்கூடாது, அதற்குத் தடைபோட வேண்டும் என்று கோரிய கோப்பின் மீது எந்த உத்தரவுமே போடவில்லை. கையெழுத்துமே போடவில்லை. 1976-லே அது அந்தத் துறைக்கே திரும்பி வந்து விட்டது. எனவே என்னைக் குற்றம் சாட்டுகிறவர்கள் இது சரிதானா என்று தீர்ப்பளிக்கட்டும் என்று விட்டுவிடுகிறேன். இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன்.

3-7-1974 முதல் 31-1-1976 வரை இதைப்போலவே இன்னொரு கோப்பு அவர்களிடத்திலே இருந்திருக்கிறது. வீராணம் திட்டத்திற்காக நியமிக்கப்பட்ட தனித் தலைமைப் பொறியாளர் திரு. ஹெக்டே என்பவர் மீது விசாரணை நடத்த வேண்டும் என்று லஞ்ச ஒழிப்புத் துறையினர் ஒரு கோப்பை அனுப்பியிருந்தார்கள். அது அப்போது நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. அன்பழகன் மூலமாக முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டது. 27-6-1974 அன்று மாண்புமிகு திரு. அன்பழகனுக்கு இந்தக் கோப்பு அனுப்பப்பட்டு அது 3-7-1974 அன்று முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்களிடம் போய்ச் சேர்ந்தது.

அன்று போய்ச் சேர்ந்த ஃபைல் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மந்திரி சபை கலைக்கப்படும் வரை முதலமைச்சர் அவர்களிடமே இருந்தது. 19 மாதங்களாக அவரிடமிருந்து கோப்பும் வரவில்லை, உத்தரவும் வரவில்லை. இந்தக் கொடுமையை இன்னும் நாங்கள் செய்யவில்லை. நாங்கள் வந்தே 13 மாதங்கள் தான் ஆகின்றன. ஒரு கோப்பின் மீது உத்தரவு போடுவதற்கு 19 மாதங்கள் எதற்காகத் தேவை? இந்தக் கோப்புகளை எல்லாம் நீ எப்போது படித்தாய் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கேட்க மாட்டார்கள். ஆனால் ஒன்றை மட்டும் நான் இங்கே சொல்லிக் கொள்வேன். இப்படிப்பட்ட நிலைமைகள் எனக்குத் தெரிந்து நடக்க நான் அனுமதிக்கமாட்டேன். அடுத்து, இங்கே ஏதோ சலுகை காட்டுவதைப் போலவும் எங்களுக்கு வேண்டியவர்களுக்கு ஒரு நிலைமை, வேண்டாதவர்களுக்கு ஒரு நிலைமை என்று வித்தியாசம் காட்டுவதைப் போலவும் சில கருத்துக்கள் சொல்லப்பட்டதனால், அது உங்கள் மனதிலே பதிந்திருக்குமானால், அதற்கும் பதிலளிக்க விரும்புகிறேன். இதுவரை யாரும் அப்படி இங்கே பேசவில்லை என்று நம்புகிறேன். பேசியிருந்தால் அது அவர்களுடைய கடமை என்ற அடிப்படையிலேயும், அதைத் தெளிவு படுத்தவேண்டியது என்னுடைய பொறுப்பு என்ற முறையிலே இதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கந்தசாமி கவுண்டர் என்பவர் இப்போது சட்டப்பேரவை உறுப்பினர். ஆளும் கட்சியைச் சார்ந்தவர். அவர் காவல் நிலையத்துக்குச் சென்று அங்கே இருந்த காவல் துறை அதிகாரிகளை மீறி லாக்கப்பில் இருந்த நபரைக் கொண்டு சென்று விட்டார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப் பட்டது. இதையொட்டி அவர் மீது நாங்கள் வழக்குப் போட்டிருக்கிறோம். இதைப்பற்றி பத்திரிகைகளிலே பலவாறாகப் பேசப்பட்டு எழுதப்பட்ட பிறகு, நாங்கள் மிகுந்த எச்சரிக்கையோடு செயல்பட வேண்டியிருந்தது. அவர்மீது இன்றையதினம் வழக்குப் பதிவு செய்யப்பட்டு அது நிலுவையில் இருக்கிறது. ஆனால் இதற்கு முன்னாலே இருந்த ஆட்சியின் போது நடைபெற்ற ஒரு சம்பவத்தையும் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. லட்சுமணன் என்பவர் மீது ஒரு குற்றம் சாட்டப்பட்டது. செங்கற்பட்டு மாவட்டம் பழந்தண்டலத்தை அடுத்த ஓரிடத்திலே காவல் துறையினரால் மதுவிலக்கு சோதனை மேற்கொள்ளப்பட்டது. 30-1-1975 அன்று நடைபெற்ற அந்த மதுவிலக்கு சோதனையின் போது, பெருமளவிலே கள்ளச்சாராயம் காய்ச்சப்படுவது கண்டு பிடிக்கப்பட்டது, காவல் துறையினர் அவர்களைப் பிடிக்கச் சென்ற போது, அவர்களில் பெரும்பாலோர் தப்பி ஓட முயன்றார்கள். இப்போது பெருமளவிலே தப்பியோடுகிறார்கள் என்று சொல்கிறார்களே, இதைப் போலத்தான் அப்போதும் இருந்தது. எனவே, இப்படிப்பட்ட நிலைமை அப்போதும் இருந்திருக்கிறது, அதுதான் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டும் இருக்கிறது, இதுதான் உண்மையே





தவிர, ஏதோ நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான், இந்த நிலைமை என்பதல்ல. வேண்டுமானால் எங்களால் தடுக்க முடியாததால் இது அதிகமாகி இருக்கலாம், ஆனால் இது வழி வழியாக வந்த ஒன்று. ஆக, அன்றைக்கே இது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. பெருமளவிலே கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் தப்பித்து ஓட முயன்றிருக்கிறார்கள், அப்படி ஓடியவர்களிலே 3 பேரைப் போலீஸ் துறையினர் துரத்திப்பிடித்து போலீஸ் வேனிலே ஏற்றியிருக்கிறார்கள், பழந்தண்டலம் கிராமத்திற்கு அருகிலே இருக்கிற திருமுடிவாக்கம் என்ற ஊரைச் சேர்ந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. லட்சுமணன் என்பவர் அப்போது அங்கே வந்து காவல் துறையினரைக் கண்டபடி ஏசி, அவர்களை ஏன் பிடித்தீர்கள் என்று கேட்டு, போலீஸ் வேனுடைய கதவைத் திறந்து, கைதானவர்களை விடுவித்துக் கொண்டு போய்விட்டார், இதுபற்றி போலீஸ் துறைத் தலைவருக்குத் தகவல் தரப்பட்டு 31-1-1975 அன்று ஐ. ஜி. அவர்கள் இந்த சம்பவத்தைக் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள், இந்த நிகழ்ச்சியைக் குறித்து முன்னாள் தலைமைச் செயலாளர் கீழ்க்கண்டவாறு இந்தக் கோப்பிலே எழுதியிருக்கிறார்.

(பிற்பகல் 6-00)

"காவல்துறை தன் கடமையைச் செய்திருக்க வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினரைக் கைது செய்துவிட்டு, அந்தத் தகவலை நாடாளுமன்ற சபாநாயகருக்கும் தெரிவித்திருக்க வேண்டும். சட்டத்தை நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டமன்ற உறுப்பினரும் மதித்திருக்க வேண்டும். அவரே மீறக் கூடாது. சட்டத்தை மீறிய அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்." கடைசியாக ஐ.ஜி.-க்கு உத்தரவிட்டு 20-2-1975-ல் தலைமைச் செயலாளர் எழுதி அனுப்பியுள்ளார். அமைச்சரவை கலைக்கப்படும் வரை, ஓராண்டு வரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. திட்டமிட்டு கோப்பை வைத்துக் கொள்வதன் காரணமாக காவல் துறையினர் கைகளைக் கட்டிப் போடலாம் என்பது முன்னாள் முதலமைச்சர் அவர்களுடைய திட்டம். இப்போதும் தெளிவாக இருக்கிறது. நாங்கள் எங்கள் கட்சிக்காரர்மீது இப்போது வழக்குப் போட்டிருக்கிறோம். மாமன்ற உறுப்பினர்களுக்கு நேரம் ஆகின்றது என்பதற்காக வருத்தப்படுகிறேன்.

நாமக்கல் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. எம். பழனிவேலு பற்றிய வழக்கு வந்திருக்கிறது. மன்னை நாராயணசாமி மூலம், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு, தமிழக அரசு கலைக்கப்பட்ட நாள் வரை அவர் மீதுள்ள கையாடல் குற்றம் சம்பந்தமான வழக்குப் போட முடியவில்லை. அந்தச் சட்டமன்ற உறுப்பினர்மீது வழக்குப் போடவில்லை. இத்தகைய வழக்குகள் அரசாங்கத்தின் ஆய்வுக்குத் தேவையில்லை. அதைப்

பற்றித் தெரிவித்தால் மட்டும் போதும் என்று இருந்தும் கூட, கூட்டுறவுத் துறை அனுமதி பெறுவதற்காக அரசுக்கு அனுப்பிக் கேட்டுள்ளது. இதில் ஏதோ தவறுகளும், தடைகளும் இருக்கின்றன, முறைகேடுகளும் இருக்கின்றன என்று அனுப்பியிருக்கிறார்கள். அதன்மீது நடவடிக்கை இல்லை. அப்படிச் செய்யாதது ஏன்? ஏன் செய்யவில்லை? குற்றம் செய்தவர் மீது இப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுங்கள் என்று ஏன் அரசு உத்தரவு போடவில்லை? அமைச்சரவை டிஸ்மிஸ் செய்யப்பட்ட பிறகுதான், இந்தக் கோப்பு அதிகாரிகளுக்கும் திரும்பி வந்தது. முன்னாள் அமைச்சர் மாண்புமிகு திரு. தர்மலிங்கம் அவர்களின் உதவியாளர் திரு. ரங்காராம் மீது ஊழல் குற்றச்சாட்டு வந்தது. அதைப் பற்றி விசாரித்து பொதுத் துறை 24-7-1975 அன்று பரிந்துரை செய்தது. பரிந்துரை செய்து முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பியது. அதில் எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப் படாமல், ஆறு மாதத்திற்கும் மேலாகக் கட்டி வைக்கப்பட்டது. தமிழக அரசு கலைக்கப்பட்ட பின்னாலே கோப்பு திரும்பி வந்தது.

இவைகளையெல்லாம் எந்தக் கருத்தில் வைத்துக்கொள்வது என்பதை நான் அவரவரது மனச்சாட்சிக்கு விட்டுவிடுகிறேன். அவர்களுக்கு மீண்டும், மீண்டும் வெந்த புண்ணில் ஊசியைக் குத்துவது போல, வருத்தம் தர விரும்பவில்லை. இப்படிப்பட்ட நிலைகள் எல்லாம் இருந்திருக்கின்றன. இந்தக் கோப்புகளையெல்லாம் படித்து இங்கே நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. அதையெல்லாம் படித்துக்காட்ட வேண்டும் என்ற எண்ணமிருந்தாலும், நமக்கு நேரமிருக்காது. உங்களுடைய நேரத்தை வீணாக்குவது தவறு என்பது எனக்குத் தெரியும். ஆனால் எல்லோருக்கும் பொதுவான ஒரு கருத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த அரசு எல்லோரையும் அலட்சியம் செய்துவிட்டு, எங்களுக்குத்தான் எல்லாம் தெரியும், நாங்கள்தான் எதையும் செய்யக்கூடியவர்கள், எங்களுக்குத்தான் முழுமையாக மக்களுடைய பேராதரவு இருக்கிறது என்ற கர்வத்திலே மற்றவர்களை மதிக்காத நிலையில் நாங்கள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களைப் போன்றவர்களுடைய, திறமைகளை, நல்லறிவைப் பயன்படுத்திக் கொள்ளாமல் அதைப்பற்றி எண்ணிப்பார்க்காமல், ஏதோ எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் சொல்கிறார்கள் என்று விட்டுவிட நினைக்க மாட்டோம் என்று இந்த அமைச்சரவையின் சார்பாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர்கள் என்னென்ன இங்கு குறிப்பிட்டிருக்கின்றார்களோ அவைகளையெல்லாம் நிச்சயமாக கவனத்தில் கொண்டு சீர்தூக்கிப் பார்த்து, அடுத்த முறை சந்திக்கும்போது, அவர்கள் குறிப்பிட்ட கருத்துக்கள் மீது என்னென்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம், எதை எதைச் செய்திருக்கிறோம், எதை எதைச் செய்யாமல் விட்டிருக்கின்றோம்





என்பதையெல்லாம் தெளிவாகச் சொல்கிறோம். உங்களுக்குத் தகுந்த விளக்கத்தைத் தருகின்ற அளவில் இருப்போம் என்பதை உங்களுக்குக் கூறி நான் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். என்னுடைய உத்தரவாதத்தை நம்பி ஆளுநர் அவர்களின் உரையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மேலவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய ஆணைக்கு இணங்கி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, குறுக்கிடாமல் இருந்தேன், இப்பொழுது ஒரு கிளாரிபிகேஷன் கேட்க விரும்புகிறேன். நம் முதலமைச்சர் அவர்கள் இதற்கு முன்பு தவறுகள் நடந்ததற்குக் காரணம் காலதாமதம் ஆகியதுதான் என்று சுட்டிக் காட்டினார்கள்;

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பேச்சுக்கு பதில் சொல்வது முறையல்ல, வேண்டுமானால் நீங்கள் கேட்க விரும்பியதை விட்டுவிட்டிருந்தால், அதைப் பற்றிக் கேட்கலாம். தன்னிலை விளக்கம் கேட்கலாம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, அன்றைய முதலமைச்சர் அவர்களின் ஆட்சியின் மீது புகார் சொல்லப்பட்டு அந்த ஆட்சி கலைந்தாகிவிட்டது. ஆனால் நான் பேசும்போது சொன்னேன், மிகத் தெளிவாகச் சொன்னேன். இந்த ஆட்சியிலேயும் நிர்வாகத்தில் தலையீடுகள் இருக்கின்றன என்று சொன்னேன் ஊழல்கள் நடைபெறுகின்றன, லஞ்சம் வாங்குகிறார்கள் என்று குற்றச்சாட்டுக்களைச் சொன்னேன். அதிலும் குறிப்பாக மருத்துவத் துறையில் எப்படி எப்படி நடந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ஒரு சொற்பொழிவே நடத்துகிறார்கள். அதை அவை கூட விரும்பாது. நீங்கள் என்ன குறிப்பிட்டுக் கேட்க விரும்புகிறீர்களோ அதை மட்டும் குறிப்பாகக் கேட்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, என்னுடைய குற்றச்சாட்டு, இந்த ஆட்சியிலே லஞ்சம் வாங்குகின்றார்கள் என்பதுதான். முதலமைச்சர் அவர்களுடைய பெயரைச் சொல்லியே வாங்குகின்றார்கள். இப்படிப்பட்ட ஊழல்கள் நடைபெறுகின்றன. அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் ஒரு பெரிய பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களுடைய பெயரைப் பயன்படுத்தி லஞ்சம் வாங்குகின்றார்கள் என்று சொல்வதிலிருந்து அவருக்குச் சரியான ஆதாரங்கள் இருக்கின்றன என்பது உறுதிப்

படுகிறது. அப்படி அவர் சொல்வது நிரூபணம் ஆகிவிட்டால், குறிப்பிட்டவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கலாம். நிரூபணம் ஆகாவிட்டால், அதற்கு அங்கத்தினர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்வார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எந்த விசாரணை வைத்தாலும் நிரூபிக்கிறேன். நான் அதற்குப் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. ஆ. நல்லசிவம்: தலைவர் அவர்களே, நான் இரண்டொரு விளக்கம் தான் கேட்க விரும்புகிறேன். நிலச்சுவான்தார்கள், நிலத்தில் வேலை செய்யும்போது, அவர்களை விவசாயக் கூலிகள் தடுக்கலாமா என்றார்கள். தடுக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டிலேயுள்ள விவசாயக் கூலிகளுக்கு கூலி நிர்ணயம் செய்யவேண்டும் என்று கேட்கிறோம். அதற்கு அரசின் பதில் இதுதானா? நிலச்சுவான்தார்களே நேரடியாக விவசாயத்தில் இறங்கிவிட்டால், எல்லோரும் விவசாயக் கூலியாக மாறிவிட்டால் தமிழகத்தின் பொருளாதாரமே மாறிவிடாதா? அதுவா இப்போது உள்ள பிரச்சினை? இது ஒரு கேள்வி. அடுத்தது, இப்படி நிலத்தில் வேலை செய்ய விவசாயக் கூலிகள் முன்வராவிட்டால் மற்ற கூலிகளை வைத்து வேலை செய்யக்கூடாது என்பதை முதலமைச்சர் ஒத்துக்கொண்டார்கள். ஆனால் பல்லவன் டிரான்ஸ்போர்ட்டில் போராட்டம் நடந்தபோது, அதில் வேலைசெய்கின்ற தொழிலாளர்களுக்குப் பதில் வேறு தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டார்களே. எனவே பல்லவன் டிரான்ஸ்போர்ட்டுக்கு ஒரு கொள்கை; இதற்கு என்று ஒரு கொள்கையா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 6-10)

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நான் மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். யாராக இருந்தாலும், தொழிலாளர்களை வெளியே அனுப்ப முடியாதென்ற வகையிலே சட்டத்தைக் கொண்டுவர நாங்கள் முயன்று, ஏற்பாடு செய்துவிட்டோம். நிச்சயமாக அது நடக்க முடியாது. ஒருவருக்கு நிலம் சொந்தமாக இருக்கிறது. அவரே உழ வேண்டுமென்று சொல்லும்போது, அதைத் தடுக்க யாருக்கும் உரிமை கிடையாது என்பதை அவரே ஒப்புக்கொண்டு, எல்லோரும் இப்படி ஆகிவிட்டால் பொருளாதாரம் வேறுமாதிரி ஆகிவிடுமென்று சொன்னார்கள். அந்த மாற்றத்தைத்தான் நாம் விரும்புகிறோம். உழுபவன் வாழ வேண்டுமென்று சொல்லும்போது, நிலத்தின் சொந்தக்காரன் உழும்போது அதைத் தடுப்பது எப்படி நியாயமென்பதை என்னால் புரிந்துகொள்ளமுடியவில்லை. அப்படி இருக்கக் கூடாதென்பதுதான் அமரர் அண்ணா சொன்னது. உழுது வாழ்க்கை நடத்துபவனாக இருந்தாலும் சரி, அலுவலகம் செல்பவர்களாக இருந்தாலும் சரி, மிகப் பெரிய நிர்வாகத்திற்குச் சொந்தக்காரர்களாக இருந்து நடத்துபவர்களாக





இருந்தாலும் சரி, நிர்வாகத் தலைவராக இருந்தாலும் சரி அல்லது சாதாரணத் தொழிலாளியாக இருந்தாலும் சரி அவரவர்கள் மூளை, அறிவு, ஆற்றல், உடல் ஆகியவற்றால் உழைத்தாக வேண்டும். இந்த நாட்டிற்கு அவர்களுடைய உழைப்பு தேவை என்பதுதான் நம்முடைய கொள்கை. அவர்களை வரவேற்க வேண்டுமே தவிர, நீங்கள் உழைக்கக்கூடாதென்று சொல்வதில் நியாயம் இருப்பதாகத் தெரியவில்லை. உழைக்கிறவன் பாதுகாக்கப்படவேண்டும், அவனுக்குக் கூலி உயர்வு வேண்டுமென்பது பற்றி முடிவு எடுத்திருக்கிறோம். நேரமில்லாததால் நிற்கிறது. இந்த கூட்டத் தொடர் முடிந்த பிறகு, எப்படியும் சட்டமாக வெளி வருமென்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாங்கள் எந்த நட வடிக்கையும் எடுக்கவில்லை என்று நினைக்க வேண்டாம். எங்களுக்கு அக்கறை அதிகம் உண்டு,

திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே / முதலமைச்சரவர்கள் பேசுகின்றபோது, பலவற்றை அறிவிப்பு செய்த பிறகு, பொறுப்பினைப் ஏற்ற பிறகு, ஏற்பட்ட அனுபவத்தின் காரணமாக, நிலைமைகளை அறிந்ததன் வாயிலாக, பல அறிவிப்புகளை நிறைவேற்ற முடியாத நிலைமை ஏற்பட்டதைத் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி இராமச்சந்திரன்: நான் அந்த வார்த்தையைப் பயன்படுத்தவில்லை. எப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தது என்பதை அறிய மூன்று மாதங்கள் ஆயின. எப்படி நிறைவேற்றுவது, எந்த வழிகளைக் கையாள்வது என்பதில் கொஞ்சம் தாமதம் ஏற்பட்டது என்று சொன்னேனே தவிர, எங்களால் செய்யாமல் போய்விட்டதென்பதல்ல. மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துக்கொண்டால், எந்தெந்த வகையில் — கல்வித்துறையில், நல்வாழ்வுத் துறையில், மதுவிலக்கு சம்பந்தமாக — ஒவ்வொன்றையும் படித்துக் காண்பிக்கத் தயாராக இருக்கிறேன். இன்னின்ன பணி செய்திருக்கிறோமென்ற புள்ளி விவரத்தை வைத்திருக்கிறேன். எதையும் செய்யவில்லை என்று சொன்னால், அது நமக்கே நியாயமாக இராதென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு.க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, முதலமைச்சர் சிலவற்றைச் செய்வதற்கு தாமதமாயிருப்பதாலே, காரணத்தைச் சொன்னார்கள். குதிரைப் பந்தயத்தை அரசாங்கமே ஏற்று நடத்துமென்ற அறிவிப்பை, ஆட்சிப் பொறுப்பை ஏற்று, இருக்கின்ற நிலைமைகளை உணர்ந்த பிறகுதான், அறிவித்தார்கள், குதிரைப் பந்தயங்கள் வருகின்ற அக்டோபர் மாதத்தில் துவங்க இருக்கின்றன. அதுபற்றி அறிவிப்பை எந்த வகையில் ஏற்பது? அதுபற்றி ஆளுநர் உரையிலே எதுவும் காணவில்லை. இன்னொன்றை சொல்ல விரும்புகிறேன்' சட்டம், ஒழுங்கு சீரழிவைப் பொறுத்த வரையில், போலீசாருடைய அணுகு முறைபற்றி முதல்வரவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு இருக்கும் கடந்த கால அனுபவம் உணர்வாகி — சைகலாஜிகல்— அதன் அடிப்படையிலே கொஞ்சம் நிதானத்துடன் செயல்பட் வேண்டிய

கட்டாய சூழ்நிலையில் இருக்கிறார்களென்று சொன்னார்கள். ஆட்சிப் பொறுப்பிலே வருகின்றபோது, சிலவற்றை நாம் மறந்தாக வேண்டும். கட்டாயத்தின் காரணமாக, மக்களின் நன்மை கருதியாவது மறந்தாக வேண்டும், முதல்வரின் இப்போதைய போக்கு, மனிதாபி மானம், மனிதத் தன்மையோடு ஒட்டியதென்றாலும், மக்களுக்கு அது ஊறு விளைவிப்பதாக இருக்கிறது. எனவே நடந்ததை மறந்துவிட்டு, வேகமான, விறுவிறுப்பான நடவடிக்கைகளை எடுக்க முதலமைச்சரவர்கள் முன் வருவார்களா?

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:</u> குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டுமென்ற கருத்திலே நான் யாருக்கும் பின் வாங்கியவனல்ல. அதனால் தமிழகத்திற்கு வரக்கூடிய வருமானம் அண்டையில் இருக்கும் மாநிலத்திற்குப் போய்விடுமென்பதால், அரசே அதை எடுத்து நடத்துவது நல்லதென்று கருதி, அதுபற்றி சட்ட நுணுக்கத் திறமைகளோடு கலந்து பேசுகிறோம். எப்படிப்பட்ட நிலையில் எடுத்துக்கொள்ளமுடியுமோ, அப்பொழுது நிச்சயமாகச் செய்வோமென்பதைச் சொல்லிக் கொள்கிறேன். குதிரைப் பந்தயம் ஒரு சூதாட்டமாக இல்லாமல், பொழுது போக்கிடவும், அதேநேரத்தில் லாபகரமாக இருக்க வேண்டுமென்பதும் என்னுடைய விருப்பம். அந்த வகையில் அதைப் பயன்படுத்த நிச்சயமாகத் தவற மாட்டோம்.

காவல் துறையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் எனக்கு ஒரு நல்ல யோசனை சொல்லியிருக்கிறார்கள். இது இந்த மாமன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய யோசனை என்பதில் சந்தேகமில்லை. இனிமேல் சட்டப்படியாக நடக்கும்போது, திரு.இராமமூர்த்தியோடு, எல்லோரும் பாதுகாப்பு தருவார்களென்ற நம்பிக்கையோடு, நாங்கள் அதைப் பயன்படுத்துவோம், அதற்காகப் பழி வாங்க மாட்டோம் என்று சொல்லி, மீண்டும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன், ஆளுநர் உரையை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்:</u> இன்னும் 7 மசோதாக்கள் நிறைவேற வேண்டியிருக்கிறது. இப்போதே மணி 6½ ஆகி விட்டது! மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முத்துசாமி திருத்தம் கொடுத்திருக்கிறார். ஒன்று கட்சித் தலைவராக இருக்கவேண்டும். அல்லது திருத்தம் கொடுத்தவராக இருக்க வேண்டும். அவர்களைத் தான் பேசுவதற்கு அனுமதிக்க முடியும். ஒவ்வொருவரும் பேச ஆரம்பித்தால் எப்படி அனுமதிக்க முடியும்?

<u>திரு. செ. முத்துசாமி:</u> தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வரவர்கள் மிகச் சிறப்பாக இங்கே பதிலுரை ஆற்றினார்கள். சில இடங்களில் நெஞ்சைத் தொடக்கூடிய அளவிற்கு விஷயங்களைச் சொன்னார்கள். தொழிலாளர்கள் பிரச்சினையைப் பற்றிச் சொன்னார்கள், விவசாயிகள் பிரச்சினையைப்பற்றிச் சொன்னார்கள். நாட்டிலே இருக்கக்கூடிய பல்வேறு பிரச்சினைகளை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் இன்றைக்கு எதிர்பார்த்துக் கொண்டிருப்பது என்ன





என்பது அரசுக்குத் தெரியும். நாளை பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் வருகிறது. மூன்றாவது பே கமிஷன் அறிக்கை முதலமைச்சர் அவர்களிடம் வந்திருக்கிறது. நாளை அண்ணா பிறந்த நாள், அண்ணா வழி அரசு இது. அண்ணாவின் கொள்கைகளை முதன்மையாக வைத்து நடக்கிற அரசு இது. சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற ஊதியம் என்று அண்ணா சொன்னார்கள். அது உயர்ந்த கொள்கை. அது கார்ல் மார்க்ஸ் கொள்கையாக இருந்தாலும், அதைச் செய்வது எந்நாளோ என்று சொன்னார்கள், அதைப் பாராட்டுகிறேன். அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் எதிர் பார்த்துக்கொண்டிருப்பது, நாளை பே கமிஷன் அறிக்கை வருமா என்பதுதான். மேலும் அப்படி வரும் போது, கொடுக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரொக்கமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று எதிர்பார்க்கிறார்கள். அதை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முதல்வரவர்கள் தமிழ்ச் சங்கம் வளர்ந்த மதுரையிலே, தமிழாசிரியர்கள் மாநாட்டிலே கலந்துகொண்டு, அவர்கள் துயரத்தைக் களையக்கூடிய வகையிலே உறுதிமொழி கொடுத்தார்கள். அவர்களது உரிமை — தலைமையாசிரியர்களாகக் கூடிய உரிமை தடைபட்டிருப்பதை நிறைவேற்றுவோமென்று சொன்னார்கள். எனவே தமிழாசிரியப் பெருமக்கள் இந்த அவைக் கூட்டத்திலேயே ஏதாவது உத்தரவு பிறப்பிக்கப்படுமா என்று ஆவலோடு இருக்கிறார்கள். அது குறித்தும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் எழுந்தார்)

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:</u> மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களுக்குக் கொஞ்சம் வேகம் வருகிறது. அதைக் குறைத்துக்கொள்ள வேண்டும். அவர் சொன்னதிலே ஒரு வார்த்தை பிசகாகிவிட்டது. அது அவர்களுடைய உரிமை. எப்படியாவது நம்மை அந்த நிலைக்கு உள்ளாக்கி, பதில் கிடைக்காதா என்று எதிர்பார்க்கிறார்கள். நான் கொடுத்த வாக்குறுதி, எந்த அளவிற்கு தமிழாசிரியர்களுக்குச் செய்வோம் என்பது தான். அண்ணா பிறந்த நாளில் பே கமிஷன் அறிக்கையை வெளியிடுவீர்களா என்று கேட்டார்கள். ஆபத்து வரும்போது கடவுளை நினைக்கிறவன், எப்போதாவது ஆபத்து வரும்போது மட்டும்தான் நினைப்பான். ஆனால் கடவுளையே நினைத்துக் கொண்டிருப்பவன், எப்பொழுதும் கடவுளை நினைக்கிறான். அண்ணாவை எப்போதும் நினைக்கிறவர்கள் நாங்கள். அண்ணாவை அண்ணா பிறந்த நாளில் மட்டும் நினைக்கிறவர்களல்ல. எனவே அன்றுதான் சொல்ல வேண்டுமென்பதல்ல. எப்பொழுது சொல்ல

முடியுமோ அப்போது சொல்லப்படும். நிதியமைச்சரவர்கள் அந்த அவையிலே சொல்லியிருக்கிறார். வெகு சீக்கிரத்தில்—ஒருவாரத்திற்குள்ளாகக்கூட என்று வைத்துக்கொள்ளலாம்—— அதற்குள் சொல்லப்படும்,

திரு. கே. எஸ், அப்துல் வகாப்: தலைவரவர்களே, பேரணாம்பட்டில் சுமார் ஒரு கோடி ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டதாகச் சொல்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் அங்கே நேரில் சென்று பார்த்து, ஏதாவது உதவிகள் செய்ய முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: சட்டப் பேரவையிலே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் கேட்ட போது சொன்னேன்; மற்ற நண்பர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும்கூடச் சொன்னார்கள். இதற்கு முதலமைச்சரவர்கள் நேரடியாகப் பொறுப்பேற்றுச் செயல்பட வேண்டுமென்று. நான், அப்படிப்பட்ட பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன்.

(பிற்பகல் 6-20)

ஆனால் நமக்கிருக்கிற பலவீனமெல்லாம். 'சொல்லப்படுகிறது' 'பேசப்படுகிறது', 'நினைக்கப்படுகிறது', என்பதையெல்லாம் நாம் 'நம்பப்படுகிறது' என்று எடுத்துக்கொள்வதுதான். பேசுவதெல்லாம் உண்மையாகிவிடாது. உண்மையிலே பேசவும் முடியாது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் தயவுசெய்து ஒரு கோடி என்ற கணக்குப் போட வேண்டியதில்லை. எந்தக் கோடியிலிருந்து வந்த செய்தி என்றாலும், அதைத் தெருக்கோடிக்கு அனுப்பிவிட்டு, தயவுசெய்து என்னோடு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னோடு வந்து நான் தரும் பணிகளில் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் தம்முடைய திருத்தங்களை வலியுறுத்துகிறாரா?

(திரு.க. மீனாட்சிசுந்தரம் இருக்கையிலிருந்து எழுந்தார்)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உட்காருங்கள். திருத்தத்தை யார் கொடுத்திருக்கிறார்களோ அவர்கள்தான் பேச வேண்டும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: நானும் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உங்களுடைய திருத்தங்கள் வரும்போது நீங்கள் பேசுங்கள்.

திரு.செ. முத்துசாமி: நான் இங்கே கொடுத்திருக்கக்கூடிய பத்து திருத்தங்களிலும் உள்ள விஷயங்கள் எல்லாம் ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருக்க வேண்டுமென்று எதிர்பார்த்தோம். நான் எதிர்பார்க்கவில்லையென்றாலும், ஆசிரியர் சமுதாயம் எதிர்பார்த்தது. ஆசிரியர்கள் சமுதாயம் எதிர்பார்ப்பது என்ன என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவது பிரதிநிதியின் கடமை. அந்தக் கடமையைச் செய்ய வேண்டும் என்பதால்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் இருக்கும்போது பேசக்கூடிய சந்தர்ப்பம் இல்லாமல் போனாலும். அவர்கள் பதிலுரைக்கும்போது இந்தப் பத்துத் திருத்தங்களைப்பற்றிக் குறிப்பிடுவார்கள் என்று பார்த்தேன். ஆனால் அவர் வாயில் ஆசிரியருடைய பெயரே வரவில்லை என்பதால்தான், சில விளக்கங்களை நான் கேட்க வேண்டியவனாகி இருக்கிறேன். அதிலே முக்கியமாக, இந்த நாட்டிலே ஐந்தாறு ஆண்டுக்காலம் பணியாற்றிய ஆசிரியர்கள், மீண்டும் ஸ்பெஷல் சர்வீஸ் கமிஷனுக்குச் செல்வதாக இருந்தால், அவர்களுடைய குடும்பங்கள் பாதிக்கப்படும் என்பதால் அது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிவோடும் விரைவாகவும் பரிசீலித்து, விரைவாக என்று சொன்னால் நாட்கணக்கில் -ஆணையிட வேண்டும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். ஆசிரியர்கள் பற்றிப் பல்வேறு பிரச்சினைகள் இருப்பதால், அதிலே சிலவற்றைத் திருத்தங்களின் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதை முதலமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு, அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்று அவர்களுடைய உள்ளம் இருக்குமானால் நான் அந்தத் திருத்தங்களை வலியுறுத்தத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு.செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்ட இந்த ஆசிரியர்களை அப்படியே நிரந்தரமாக்குவது குறித்து, இதே அவையில் ஒவ்வொரு நாளும் பதில் சொல்லியிருக்கிறேன் என்று நினைக்கிறேன். ஆனால் ஒன்றை மட்டும் மாண்புமிகு மேலவை உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். தற்காலிகமாகச் சேர்க்கப்பட்டவர்கள் எந்த அடிப்படையிலே சேர்க்கப்படுகிறார்கள்; தேர்வாணைக் குழுவால் நியமிக்கப்படுபவர்கள் எந்த அடிப்படையிலே சேர்க்கப்படுகிறார்கள், என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த நாட்டிலே இருக்கிற பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்குரிய பிரதிநிதித்துவத்தைத் தர வேண்டிய பொறுப்பு தேர்வாணைக் குழுவிற்கு இருக்கிறது. அத்தகைய உரிமைகளை அந்த மக்களுக்குத் தர மறுக்கக்கூடிய வாய்ப்புகளை இந்த அரசு விரும்பவில்லை என்பதை நேற்றே நான் மிகவும் அழுத்தமாகச் சொல்லியிருக்கிறேன். ஆகவே இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, இந்த நாட்டிலே சர்வீஸ் கமிஷனில் மட்டும்தான் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், வீதம் இருக்கிறதா? இது ஏற்கனவே உள்ள

கம்யூனல் ஜீ. ஓ. படி ஒவ்வொரு உத்தியோகத்தையும் நிரப்பும் போது, பஞ்சாயத்து நிர்வாகம் முதல் அரசு நிர்வாகம் வரையிலும் 'கம்யூனல் ரொடேஷன்' முறையைக் கடைப்பிடிக்க வேண்டு மென்று நிரந்தரமான உத்தரவு இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திருத்தத்தின் சார்பிலே ஒன்றிரண்டு கேள்விகள் கேட்டு விளக்கம் பெறலாம். இப்படி தொடர்ந்து பேசினால் என்ன பிரயோஜனம்?

மாண்புமிகு திரு.செ. அரங்கநாயகம்: தேர்வாணைக் குழு என்று வருகிறபோது, இந்த விகிதாசார அடிப்படையிலே வாய்ப்புக்கள் கிடைக்கின்றன என்பது மட்டுமல்ல, வேண்டியவர்களுக்குத் தரப் படுகிற ஊழலும் ஒழிக்கப்படுகிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திரு முத்துசாமி அவர்கள் திருத்தங்களை வலியுறுத்தவில்லையே?

திரு செ. முத்துசாமி: நான் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்.

திரு முத்துசாமி அவர்களின் திருத்தங்கள், அவையின் அனுமதியோடு, திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திருத்தங்கள் வரும்போது யாரும் பேசக்கூடாது. திருத்தங்களை வலியுறுத்துகிறாரா? அல்லது திரும்பப் பெறுகிறாரா என்பதுதான் பிரச்சினை. விளக்கம் கேட்க லாம், ஆனால் சொற்பொழிவுகளுக்கு இடம் கிடையாது.

திரு க. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, திருத்தங்களை இறுதியிலே திரும்பப் பெற்றுக் கொள்ளுவதுதான் முறைஎன்றாலும், ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றி மட்டும் முதல்வர் அவர் களிடமிருந்து தெரிந்துகொள்ள விழைகிறேன். போராட்டங்களைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். போராட்டங்களை** சந்திப்பதாகச் சொன்னார்கள். அவர்களுடைய கருத்தை ஏற்றுக் கொள்கிறேன். அவருடைய நல்ல மனத்தைப் பாராட்டுகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர் களே, ** என்ற வார்த்தையை புதிதாக இப்போதுதான் நான் கேட்கிறேன். நான் அப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்ல வில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் புரிந்து கொண்ட வகையிலே சொன்னேன். இங்கே நான் பேசுகிறபோது**

** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





மாண்புமிகு திரு. க. இராசா முகமது: தலைவர் அவர்களே *** என்ற வார்த்தையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப் பிடவில்லை. குறிப்பிட்டதாக புதிதாகச் சேர்த்திருக்கிறார்கள். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, முதல்வரே 7-1-1978 அன்று ஒரு உறுதிமொழியை அளித்தார்கள். ஆசிரி யர்கள் போராட்டம் நடத்தியபோது, நான்கு அமைச்சர்கள் முன்னிலையிலே, அதை ஏற்றுக்கொண்டு அறிவிப்பதாகச் சொன் னார்கள். ஆனால் அந்த உறுதிமொழி பின்னாலே நிறைவேற்றப் படவில்லை என்பதை என்னுடைய திருத்தத்தில் குறிப்பிட்டிருந் தேன். அது சம்பந்தமாக முதல்வர் அவர்கள் விளக்கம் அளிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன். அடுத்து கல்லூரிக் கல்வி இயக்குநர் பற்றியும் குறிப்பிட்டிருந்தேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திரும்பவும் சொல்லுகிறேன். திருத்தங்களை மாண்புமிகு உறுப்பினர் திரும்பப் பெறுகிறாரா, இல்லையா என்பதுதான் பிரச்சினை. திரும்பத் திரும்பப் பேசினால் என்ன பொருள்? இன்று கடைசி நாள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : உறுப்பினர் பொறுப்பேற்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட் டார்கள். போராட்டம் நடைபெற்றபோது, கல்லூரிக் கல்வி இயக்குநர் வெளிநாடு பயணம் செய்தார்கள். அவர்கள் செல்லு கிறபோது, திருப்பத்தூர் தனியார் பள்ளி நிர்வாகம் அந்தப் பள்ளியிலே 4 பேரை வெளியேற்றிய நேரத்திலே கூட....

மாண்புமிகு மேலவைத் தலைவர் ; உறுப்பினருக்குச் சொல்லு கிறேன், முறையாகப் பேசுங்கள். திருத்தத்தை திரும்பப் பெறுகிறீர்களா இல்லையா? இப்படி சொற்பொழிவை நடத்தினால் எப்படி?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் பேசிய போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்னதைத்தான் சொன்னேன். இவர் புதிய பிரச்சினையைச் சொல்லுகிறார்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : 7-1-78 அன்று நாங்கள் பெற்ற உறுதிமொழி நிறைவேற்றப்படாத நிலையில் போராட்டம் வலுப் பெறுகிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக் கிறேன். அந்தத் திருத்தங்களில் உள்ளவைகளை நிறைவேற்றி வைப்பார்கள் என்று கருதி, திருத்தங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்.

*** தலைவரின் ஆணைப்படி 'நீக்கப்பட்டது.

திரு. க. மீனுட்சிசுந்தரம் அவர்களின் திருத்தங்கள், மேலவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டன.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, என்னுடைய கட்சி உறுப்பினர் திரு. பாலசுப்ரமணியம் அவர்கள், முதலமைச்சருடைய குறுக்கீட்டின் காரணமாக, ஒரு குற்றச்சாட்டுக்குப் பொறுப்பு ஏற்றுக்கொண்டார்கள். அதுபற்றி முதலமைச்சர் அவர்கள் எதுவும் தெரிவிக்கவில்லை. இரண்டாவது, என்னுடைய பகுதியிலே சில கான்ட்ராக்ட் சம்பந்தமாகச் சொன்னேன். அமைச்சர் அவர்கள் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதுபற்றி முதலமைச்சர் அவர்கள் தம்முடைய கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[பிற்பகல் 6—30]

மாண்புமிகு மேலவைத் தலைவர் : (முதலமைச்சர் அவர்களைப் பார்த்து) உறுப்பினர் ஏதோ கேட்கிறார்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே. நான் அதனுடைய உண்மையான நிலை என்ன, என்ன நடந்தது என்பதைப்பற்றி விசாரித்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் இரண்டொரு நாட்களில் அறிக்கை வந்துவிடும். பிறகு தெரிவிக்கிறேன்.

திரு. க இராமமூர்த்தி : என்னுடைய திருத்தங்களை வலியுறுத்தவில்லை.

திரு. இராமமூர்த்தி கொடுத்த திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

திரு. ஆ. நல்லசிவம் : நான் எந்த நோக்கத்துக்காக இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்தேனோ அந்த நோக்கம் நிறைவேறியுள்ளதால், நான் கொடுத்துள்ள திருத்தத்தை வலியுறுத்தவில்லை.

திரு. நல்லசிவம் கொடுத்த திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை

''1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 30 ஆம் நாள் ஆளுநர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, உரை நிகழ்த்தியதற்காக, தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்''.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.



## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (2) 1978-79 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்கள் நியமனம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 1978-79 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஒன்பது உறுப்பினர் பதவிகளுக்கு, கீழ்க்கண்ட உறுப்பினர்கள் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

1. திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்
2. ,, கே. எஸ். அப்துல் வகாப்
3. ,, பி. மாணிக்கம்
4. ,, ஆ. நல்லசிவம்
5. ,, ஆ. பாலசுப்ரமணியம்
6. ,, ஜி. வசந்த பை
7. ,, ஏ. ஆர். தாமோதரன்
8. ,, ஈ. எஸ். வெங்கடேசன்
9. ,, சி. ஆர். லெட்சுமிகாந்தன்

நியமனம் செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையானது அதாவது ஒன்பது, நிரப்பப்பட வேண்டிய காலியிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், இந்த ஒன்பது உறுப்பினர்களும், உரிமைக் குழுவிற்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கிறேன்.

மேலவை விதி 156 (1)-ன் படி மாண்புமிகு மேலவை முன்னவர், அவைத் துணைத் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர், இந்தக் குழுவின் உறுப்பினர்களாவர்.

சட்டமன்ற விதிகளின் 156 (4) விதியின் கீழ் மேலவைத் துணைத் தலைவர் அவர்களை இக்குழுவின் தலைவராயிருக்கும்படி நான் நியமித்துள்ளேன்.

## 11. அரசின் சட்ட முன்வடிவு

### தமிழ்நாடு, 1978-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1978);

THIRU A. R. DAMODARAN: Mr. Chairman, Sir, may I know whether it is the intention of the Government that 11 Bills should be finished within half an hour, or are we going to come to some agreement that we will sit till 7 p.m. and then adjourn the meeting to tomorrow? I do not think it is humanly possible to finish 11 Bills in half an hour.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன்னவர் என்ன சொல்ல விரும்புகிறார்? உறுப்பினர் ஒத்துழைப்பதாக இருந்தால் எவ்வளவு நேரமானாலும் முடித்துவிடலாம். இதற்காகத் திரும்ப நாளைக்கு அவையைக் கூட்ட வேண்டியிருக்காது.

திரு. ஏ. ஆர். தாமோதரன் : நாங்கள் சொல்ல விரும்புகின்ற கருத்துக்களை அவசியம் சொல்ல வாய்ப்பு வேண்டும். ''ஒத்துழைப்பது'' என்பது அல்ல பிரச்சினை. அப்படி ''ஒத்துழைப்பது'' என்றால், எங்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போய் விடும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மொத்தம் 7 சட்ட முன் வடிவுகள் இருக்கின்றன. இனி இருப்பது ½ மணி நேரம் தான். அதனால்தான் உறுப்பினர்களின் கருத்தைக் கேட்டேன்.

திரு. க. இராமமூர்த்தி : ஏழு சட்ட முன்வடிவுகளும் மிக முக்கியமானவைகள். இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட முன் வடிவு, மின் சக்தி வழங்கல் குறித்த கட்டண விதங்களைத் திருத்தியமைத்தல் சட்ட முன்வடிவு, கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு இப்படி எல்லாமே மிக முக்கியமான சட்ட முன் வடிவுகள் தான். எவ்வளவுதான் சுருக்கமாக உறுப்பினர்கள் பேசினாலும், நேரம் ஆகத்தான் செய்யும். அவர்களுடைய கருத்துக்களைச் சொல்லித்தான் ஆகவேண்டும். மாண்புமிகு தலைவரவர்கள் நினைக்கின்ற நேரத்தில் முடிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : எனக்கு ஒரு நினைப்பும் கிடையாது.

திரு. டி. சந்தோஷம் : "உறுப்பினர்கள் ஒத்துழைப்பதாக இருந்தால்" என்றால் எல்லோரும்* * * என்றுதான் அர்த்தம்



மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் தலைவரை அசிங்கப்படுத்துகிறார். அதுமாதிரி எண்ணத்தில் நான் சொல்லவில்லை. அப்படிச் சொன்னதாகச் சொல்வது சரியல்ல.

திரு. டி. சந்தோஷம் : நான் கூட தவறான எண்ணத்தில் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. க. இராசா முகமது : மாண்புமிகு உறுப்பினர்களுடைய உணர்வுகளையெல்லாம் ஏற்றுக்கொண்டு நாளை காலை 9·30 மணி அளவிலே அவைக் கூட்டத்தை வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இப்பொழுது முடிந்த வரை சட்ட முன் வடிவுகளை நிறைவேற்றுவோம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே,

''சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்'' என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்

''சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.''

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் தலைவரைப் பற்றி எழுப்பிய சொற்கள் நடவடிக்கைக் குறிப்பில் இருந்தால், அது தலைவர் பெயரிலே ஒரு நோக்கம் கற்பிப்பதாக இருக்கும். இந்தமாதிரி வார்த்தைகள் சபைக் குறிப்பிலே இடம் பெறுவது நல்ல முன்மாதிரியாக இருக்காது. ஆகவே சபைக் குறிப்பிருந்து நீக்குவதற்கு ஆணையிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

---

* * அவைத் தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.
@ 504–513 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப் பட்டுள்ளது.

திரு. டி. சந்தோஷம்: அந்தமாதிரி அர்த்தத்தில் நான் தலைவரவர்களைச் சொல்லவில்லை. ஒரே மாதிரி அவசரப்பட்டுப் போக வேண்டிய நிலை ஏற்படும், மனதில் இருப்பதைப்பற்றி பேச முடியாது போய்விடும் என்றஎண்ணத்தில்தான் சொன்னேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு உறுப்பினர் அந்த எண்ணத்தில் சொல்லாவிட்டாலும்கூட, அந்த அர்த்தம் தான் வருகிறது.

மாண்புமிகு திரு. க. இராசா முகமது: தலைவரவர்களே, நாளை காலை மேலவை கூடும்போது கேள்வி நேரத்திற்கு நேரம் ஒதுக்க வேண்டாம் என்று முன்மொழிகின்றேன். அவையின் முடிவுக்கு இதை விட்டு தீர்மானமாக ஆக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: *** என்று திரு. சந்தோஷம் அவர்கள் சொன்ன வார்த்தையை சபைக் குறிப்பிலிருந்து எடுத்து விடலாம். எனக்காக அல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி சொன்னதற்கிணங்க இதைச் சொல்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு தலைவரவர்களே, முன் வைக்கப்பட்டுள்ள மசோதாக்களைப் பொறுத்தவரை, நான் முக்கியமான மசோதாக்கள் என்று குறிப்பிட்டதில் இது ஒன்று. சொன்ன காரணமோ என்னவோ முதல் மசோதாவாக இது வந்திருக்கிறது. இந்த மசோதா பல்வேறு புதிய அதிகாரங்களை வழங்குகின்ற அளவிலே, டெபுடி கமிஷனருக்குப் புதிய அதிகாரம் தருகின்ற, அளிக்கின்ற வகையிலே வந்திருக்கிறது. இன்னொன்றையும் நான் இந்த நேரத்தில் குறிப்பிடுவது பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன். அடிப்படையாக ஏற்கெனவே இருந்த சட்டத்திலே பல மாற்றங்கள் இடையிலே அதாவது திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியின்போது, செய்யப்பட்டது. அதற்கு முன்னர் ஏரியா கமிட்டிகள் என்கின்ற அளவிலே அநேகமாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு ஏரியா கமிட்டி அமைந்திருந்தது. அந்த ஏரியா கமிட்டியின் மூலமாக ஆலயங்களுக்கான காவலர்களை, அறங்காவலர்களைத் தேர்ந்தெடுக்கின்ற, நியமிக்கின்ற முறை அன்றைக்கு இருந்தது. இடையிலே அந்த முறை ரத்து செய்யப்பட்டு, சட்டபூர்வமாக வேறொரு முறையின் அடிப்படையிலே அது இயங்குகின்றது. இன்றைக்கு எந்தக் காரணத்தினாலோ இருக்கின்ற முறை மீண்டும் இப்போது ரத்து செய்யப்படுகின்றது. இதைப் புதிய முறை என்று நான் சொல்ல மாட்டேன் ஏற்கெனவே இருந்த முறை புகுத்தப்படுகிறது, அவ்வளவு தான் என்பது என் கருத்து. புதிய முறை புகுத்தப்



படுவதாலே இன்றைக்கு மிகப்பெரிய சங்கடம் கடந்த காலத்திலிருந்த நிலைமைகள் வேறு, இப்பொழுது இருக்கின்ற நிலைமைகள் வேறு. இன்றைக்கு 10 அல்லது 12 ஆண்டுகளிலே நம்முடைய அணுகுகின்ற முறை வெகுவாக மாறியிருக்கிறது. நம்முடைய ஆலயங்களைப் பொறுத்தவரை, சொத்துக்களைப் பொறுத்தவரை, அறநிலையங்களைப் பொறுத்தவரை, ஆட்சி புரிகின்ற முறையைப் பொறுத்தவரை, அதனுடைய நிதியை, சொத்தைப் பயன்படுத்துகின்ற முறையைப் பொறுத்தவரை இன்றைக்கு பல அளவிலே அவை மாறுபட்ட வகையிலே வளர்ந்து வந்திருக்கின்றன. பழைய நிலையிலிருந்து ரொம்பவும் மாறுபட்டிருக்கிறது. மாறுகின்ற சமுதாயத்திற்கு மாறி வருகின்ற சமுதாயத்திற்கு அது மிக மிகத் தேவை என்ற அளவிலே அதை ஏற்றுக்கொள்ளுகின்றோம். ஆனால் இந்த அறநிலையக் காவலர்களை நியமிக்கின்ற முறையைப் பொறுத்தவரை, ஏரியா கமிட்டிகளை அமைத்து மாவட்ட அளவிலே இவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான ஒரு திட்டத்தை வகுப்பதன் மூலம் ஏற்கெனவே இருந்த அதிகாரம் அசிஸ்டென்ட் கமிஷனர்களிடமிருந்து பறிக்கப்படுகின்றது என்று நான் நினைக்கின்றேன். அவர்களிடம் அந்த அதிகாரம் இருந்தாலும் கூட, இந்த ஏரியா கமிட்டி சிபாரிசு செய்கின்ற அதிகாரத்தைப் பெறுகின்றது.

(பிற்பகல் 6—40)

அசிஸ்டென்ட் கமிஷனர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. அறங்காவலர் பதவி வேண்டி மனுக்களை யார் போடுகிறார்களோ அவர்களைப்பற்றிய குறிப்புகளை அதிகாரபூர்வமாக ரெவின்யூ துறையிடமிருந்து நேரடியாக அவர்கள் பெற முடிகிறது.

பல நேரங்களில் அறங்காவலர்களாக இருப்பதனால், சமுதாயத்திலே மரியாதை ஏற்படும் என்பதற்காக இதற்குப் பலரும் போட்டியிடும் நிலை இருக்கிறது. இந்தப் பதவியின் காரணமாக பல கிராமங்களிலே அறங்காவலர்களாக இருப்பவர்கள் மிதமிஞ்சிய செல்வாக்கை வகிக்க முடிவதைப் பார்த்திருக்கிறோம். ஆலயங்களுக்கு இருக்கிற சொத்து மதிப்புகளின் காரணமாக அவைகளை நிர்வாகம் செய்கிற பொறுப்பு ஏற்பட்டால், இன்னும் கூடுதலான மரியாதை வரும் என்ற காரணத்துக்காக இன்றும் பலர் அதிகமாகப் போட்டியிடுகின்ற நிலைமையைப் பார்க்கிறோம். இந்தப் பதவிகளுக்கு பொதுச் சொத்தை நம்முடைய சொத்து அல்ல என்று அணுகும்எண்ணம் படைத்தவர்கள்தான் நியமிக்கப்பட வேண்டும். ஆனால் இன்றைய தினம் பொதுச் சொத்தைக் [illegible] நம்முடைய சொத்து என்றே நினைக்கக்கூடியவர்கள் எப்படி

யோசிபார்சு பிடித்துப் பதவிக்கு வருவதையும் பார்க்கிறோம். அசிஸ்டெண்ட் கமிஷனர் மூலமாக அல்லாது ஏரியா கமிட்டிகள் மூலமாக அறங்காவலர்கள் நியமிக்கப்படும்போது கட்சித் தலையீடு என்பது தவிர்க்க முடியாததாகிவிடுகின்றது. ஒருவேளை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அப்படிப்பட்ட கட்சித் தலையீடுகளைத் தவிர்க்குமோ என்னவோ தெரியாது. ஆனால் கட்சியோடு இணைந்து போகிறவர்களை நியமிக்கிற நிலைதான் கடந்த காலத்திலே இருந்திருக்கிறது. எங்களைப் பொறுத்தவரை அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லாமல் பார்த்துக்கொள்வோம் என்று சொல்லலாம் என்றாலும், கட்சிக்காரர்களைப் பொறுத்தவரையில், இதை இன்னொரு பதவியாக எண்ணுவதற்கு நிச்சயயாக இடமிருக்கிறது. அதைச் செய்துவிடுகிற இடமாக இது அமைந்துவிடக் கூடாது. நான் இதை அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு மட்டும் சொல்லவில்லை, எந்தக் கட்சி ஆட்சிப் பொறுப்புக்கு வந்தாலும் இந்த சூழ்நிலை நிச்சயமாக ஏற்படும். ஆகவே, அதைத் தவிர்ப்பதற்காகவாவது அசிஸ்டெண்ட் கமிஷனர்களால் நியமிக்கப்படுகிற முறையை மாற்றுவது அவசியம்தானா, ஏரியா கமிட்டி என்பது அவசியம் தானா என்பதையெல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

ஏரியா கமிட்டிகளைப் பொறுத்தவரை, அவர்கள் சிபாரிசு செய்கிற தகுதி படைத்தவர்கள் என்பதால், பல நேரங்களில் அவர்களுடைய சிபாரிசுகளைத் தவிர்க்க முடியாத சூழ்நிலை அந்தக் கமிட்டி உறுப்பினர்கள் வகிக்கிற மற்ற பொறுப்புகளின் காரணமாக ஏற்படுகிறது. ஏரியா கமிட்டித் தலைவரோ, கமிட்டி உறுப்பினர்களோ சிபாரிசு செய்பவர்களை ஒரு அசிஸ்டெண்ட் கமிஷனர் நியமிக்கவில்லை என்றால், அதன் விளைவாக அந்த அசிஸ்டெண்ட் கமிஷனரையே மாற்றுகிற நிலைமையோ நிர்ப்பந்தமோ ஏற்படுமே தவிர, முறையான வகையிலே அறங்காவலர் நியமனம் என்பது நடக்காது. ஆளுநர் உரையிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இன்றைக்கு பல்வேறு இடங்களிலே பல்வேறு கோயில்களிலே பல்வேறு தவறுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் எங்கு எது இருந்தது, எந்த நிலையில் இருந்தது என்று தெரிந்து கொள்ள முடியாத அளவுக்கு ஏற்கெனவே இருந்தவர்களையெல்லாம் ஒதுக்கிவிட்டு, புதிய சூழ்நிலையிலே புதிய அறங்காவலர்களை அமைக்கிறார்கள் என்றால், கோயில்களின் சொத்துக்களுக்கு உத்தரவாதம் வேண்டும். அதுபற்றி இந்த மசோதாவிலே எதுவும் இல்லை.

கடந்த காலங்களில் ஏற்பட்ட இன்னொரு நிலைமையையும் நான் மிகுந்த வருத்தத்தோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.



மிகுந்தவேதனையோடு என்றுகூட நான்சொல்லலாம். கடந்தகாலங்களில் பல்வேறு ஆலயங்களிலிருந்து நிதி பல பொதுக் காரியங்களுக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. மதச் சார்புள்ள பல பொதுக் காரியங்களுக்காகக்கூட அவைகள் எடுக்கப்பட்டன என்று ஏற்றுக் கொள்ளலாம், அல்லது சமுதாயத் தேவை கருதிகூட ஆலயங்களின் நிதியை எடுத்திருக்கலாம். ஆனால் அவ்வாறு எடுக்கப்பட்ட நிதியிலிருந்து தொடங்கப்பட்ட காரியங்களைப் பொறுத்தவரை, "இந்த ஆலயத்தின் நிதியிலிருந்து அல்லது இந்தக் அறக்கட்டளையிலிருந்து இந்தக் கைங்கரியம் அல்லது காரியம் அல்லது பொதுத்தொண்டு நடத்தப்படுகிறது" என்ற ஒரு அறிவிப்போ ஒரு தகவலோ அதைப் பார்க்கிற பொதுமக்கள் தெரிந்து கொள்கிறவகையிலே செய்யப்படாமல் விடப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்கும்போது, ஏதோ ஆலயச் சொத்துக்கும் இந்தக் காரியங்களுக்கும் எந்தச் சம்பந்தமுமே இல்லாமல் நடைபெற்றுக் கொண்டிருப்பது போன்ற ஒரு தோற்றத்தை உண்டாக்குகின்றன. நிச்சயமாக வேறு எந்த மதத்தைச் சேர்ந்த அறநிலையங்களின் சொத்தையும் இதுபோன்று பெயர் தெரியாமல் எந்தக் காரியத்துக்கும் உபயோகப்படுத்துகிற நிலைமை இருக்க முடியாது. இருக்க மற்றவர்கள் விடவும் மாட்டார்கள். ஆனால் இங்கே நம்மைப் பொறுத்தவரையில், இந்து கோயில்களிலிருந்து கோயில் நிதியை எடுத்து பொதுக் காரியங்களுக்காகப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம். பல நேரங்களிலே அவைகள் நல்ல நோக்கத்தோடு எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் நான் விரும்புவது எல்லாம் அவ்வாறு எடுக்கப்படுகிற நிதி அல்லது பணம் உபயோகப்படுகிற இடத்திலே இந்தக் கோயிலிலே இருந்து அல்லது இந்த அறநிலைய கட்டளைச்சார்பிலிருந்து எடுக்கப்பட்ட பணத்தைக்கொண்டு இந்தக் காரியம் நடைபெறுகிறது என்ற அறிவிப்பு இல்லாமல் இருக்கும் நிலை இனியாவது இருக்கக் கூடாது.

இந்து அறநிலைய அசிஸ்டெண்ட் கமிஷனர்களோ அல்லது மேலாளர்களோ அல்லது ஆலயங்களை நிர்வகிக்கும் அதிகாரிகளோ, யாரானாலும் இந்து மதத்தில் நம்பிக்கை உள்ளவர்களாக கோயில்களில் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்க வேண்டும். இதை நான் கோரிக்கையாகவே இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆட்சியிலே இருப்பவர்களைப்பொறுத்தவரை, அவர்களுக்குக் கடவுள் நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பதல்ல பிரச்சினை, அவர்களுக்கு மத நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பதல்ல பிரச்சினை. ஆனால் ஆலயங்களையும் அறக்கட்டளைகளையும் பொறுத்தவரையில், அவைகளை மதிக்கிறவர்கள் அல்லது நம்புகிறவர்கள் எந்த அளவுக்கு அவைகளைப் புனிதமாகப் போற்றுகிறார்களோ, காக்க வேண்டும் என்று விரும்புகிறார்களோ அந்த எண்ணத்துக்குத் துளியும் குறைவில்லாத வகையில் அதிகாரிகள்

செயல்பட வேண்டும். அந்த அளவுக்குப் பெரிய பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்ற கடமையுணர்வோடு செயல்படக் கூடியவர்களைத்தான் அசிஸ்டென்ட் கமிஷனர்களாகவோ, ஆலய நிர்வாகப் பொறுப்பை ஏற்பவர்களாகவோ, நியமிக்க வேண்டும். இன்றையதினம் பல்வேறு ஆலயங்களைப் பார்க்கிறபோது, அந்த நிலை இல்லை என்பதை மிகுந்த வேதனையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதை நான் சொல்லும்போது, இவர் வருகிறபோது, இவருக்கு மரியாதை செய்யவில்லை, அல்லது இவரை மதிக்கவில்லை என்ற அடிப்படையில் ஏதோ சொல்வதாகக் கருதிவிடக்கூடாது. ஆலயங்களுக்காக நியமிக்கப்படும் அதிகாரிகளுடைய பணி எந்த வகையில் இருக்க வேண்டும் என்றால், அவர்கள் செயல்படுகின்ற திறமையின் காரணமாக புனிதமான இந்து ஆலயங்களுக்கு அல்லது புனிதமான இந்து அறக்கட்டளைகளுக்கு மக்கள் அங்கே செல்கிறபோது மேலும் மேலும் அங்கே அவர்கள் ஈர்க்கப்படுகிற நிலைமையும், மேலும் மேலும் அவர்கள் மற்றவர்களை ஈர்க்கக்கூடிய நிலைமையை உருவாக்குகிற வகையிலும் இருக்க வேண்டும். ஏதோ நான் அசிஸ்டென்ட் கமிஷனர்களைப்பற்றி மட்டும் நான் இங்கே குறிப்பிடுவதாக எண்ணிவிடக் கூடாது. பொதுவாக ஆலயங்களிலும் அறக்கட்டளைகளிலும் பணியாற்றுகின்ற அதிகாரிகள் இந்த எண்ணத்தின் அடிப்படையில் பணியாற்ற வேண்டும். ஆனால் இன்றையதினம் அவர்களுக்கு இருக்கிற சுதந்திரம் காரணமாக, அவர்களுக்கு இருக்கிற வாய்ப்பு காரணமாக, முறையாகச் செயல்படாத நிலையில் இருக்கிறார்கள். இந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்னதை மீண்டும சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு ஆலய நிர்வாகத்தினுடைய பொறுப்பை ஏற்றவரே, உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொல்லிக் காட்டியதைப்போல, சில காரியங்களைச் செய்ய முடிந்ததென்றால், அவர்களுடைய ஆளுகைக்கு உட்பட்டிருந்த அந்த ஆலயத்தினுடைய புனிதத் தன்மை எந்த அளவுக்குச் சீர்குலைந்திருக்கும் என்பதை என்னாலே எண்ணிப் பார்க்க முடிகிறது. எனவே இப்படிப்பட்ட நிலைமைகள் இனி எதிர்காலத்திலே நடைபெறாத வகையிலே ஆலயங்களுக்கு அலுவலர்களை, அறங்காவலர்களை நியமிக்கின்றபோது, அரசு முன்னெச்சரிக்கையோடு செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதிலே இந்த ஏரியா கமிட்டி பயன்படுமா? தவறுகள் நடைபெற விடாமல் தடுக்குமா? என்றெல்லாம் பார்க்கிறபோது, ஏரியா கமிட்டிகள் மேலும் இந்தச் சிக்கல்களை அதிகமாக்கிவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. அந்த அச்சம் இந்த மசோதாவின் மூலம் தீர்க்கப்படவில்லை என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: எதிர்காலத்தில் தவறுகள் நிகழ்ந்துவிடக் கூடாது என்றுதான் இந்த மசோதாவையே கொண்டுவந்திருக்கிறோம்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே தவறுகள் நடைபெறாத வண்ணம் பார்த்துக்கொள்ளப்படும் என்று உறுதியாகக் கூறுகிறார்கள். ஏற்பட்டுவிட்ட தவறுகளைச் சரியாக்குவதற்குத்தான் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் என்னைப் பொறுத்த வரை, இந்த முறையால் அதைச் சாதிக்க முடியுமா என்ற சந்தேகம் இருக்கிறது. காரணம் ஏரியா கமிட்டி அமைப்பு முறையிலே பல சங்கடங்கள் இருக்கின்றன. எனவேதான், இந்த மசோதாவை நான் எதிர்க்கிறேன். இந்த நேரத்திலே இது தேவையில்லை என்று கருதுகிறேன். எனவே இரண்டு மூன்று மாதங்களுக்குள் இதை மீண்டும் மறுபரிசீலனை செய்து மாற்றுகிற வாய்ப்பை முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவார்கள் என்று நம்புகிறேன். மூன்று மாதத்துக்குள் எதுவும் அதிகமாக நடந்துவிடாது. அதற்குப் பிறகு, ஒரு சரியான மசோதாவை இந்த அவை விவாதிக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்தித்தர வேண்டும் என்று மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-50)

திரு. ஆ. நல்லசிவம்: தலைவர் அவர்களே, இந்த அறக் கட்டளை சீர்திருத்தத்திலே அற நிலையங்களிலே கடவுள் பக்தியுள்ளவர்கள் நியமிக்கப்படுவது என்பது, என்னைப் பொறுத்த வரையிலே, நியாயம் என்று கருதுகிறேன், ஒன்று செய்வதை கடவுளுக்குப் பயந்து செய்ய வேண்டும், தப்பு செய்யாமல் இருக்க வேண்டும் அல்லது சமுதாய நல பொதுக் கருத்துக்களுக்கு பயந்தாவது தப்பு செய்யாமல் இருக்க வேண்டும். நீங்கள் நியமிக்கின்ற தர்மகர்த்தாக்களைக் கட்சியின் அடிப்படையில் எடுக்காமல், சொல்லப்பட்ட இந்த அடிப்படையிலேயே தர்மகர்த்தாக்களை நியமிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அந்த தர்மகர்த்தாக்களுக்கு அங்கு என்னென்ன வேலைகள் என்பதையும் நிர்ணயிக்க வேண்டும். கோயிலுக்கு வருகின்ற பணத்திலிருந்து கல்வி நிறுவனங்களுக்கும் வைத்திய சாலைகளுக்கும் அதிகமான நிதி ஒதுக்குவது அவசியம் என்று சொல்லிக் கொள்கிறேன். கோயிலில் நைவேத்தியம் என்று செலவு செய்வதைக் கொஞ்சம் குறைத்துக் கொள்ளலாம். நைவேத்தியம், சர்க்கரைப் பொங்கல், தயிர் சாதம் என்றெல்லாம் செலவுகள் செய்து கொண்டிருக்கின்றோம். நமக்கு வருகின்ற பணத்தில் அந்தச்

செலவைக் குறைத்து பணத்தை, மீதப்படுத்தி, கல்வி நிறுவனங்கள், வைத்திய நிறுவனங்கள் இவைகளுக்கு நடமாடும் தெய்வங்களாக இருக்கின்ற ஏழையெளிய மக்களுக்கு, தமிழ் நாட்டு மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்திலுள்ள சிறிய பெரிய கோயில்களில் ஆகிக் கொண்டிருக்கின்ற இந்த மாதிரியான செலவுகளைக் குறைக்க வேண்டும். அந்தத் தொகையைக் கல்வி நிறுவனங்களுக்கும், வைத்திய நிறுவனங்களுக்கும் ஒதுக்க வேண்டும். அடுத்து, மக்கள் மறு வாழ்வு இல்லங்கள் நடத்தப்படுகின்றன, அவைகளுக்கும் இந்தப் பணத்திலிருந்து நிதி ஒதுக்கலாம். மறுவாழ்வு இல்லங்களைத் தொழிலோடு கூடிய இல்லங்களாக மாற்றுங்கள். கோயிலுக்கு நல்ல காரியங்களுக்கு என்று கொடுக்கக்கூடிய பணத்தைக் கொடுத்தவர்கள் மனம் திருப்தியடையும் அளவுக்கு ஒரு அவசரச் சட்டம் மூலமாகக் கூட இந்த மாதிரியான காரியங்களுக்கு கோயில் வருமானத்தைச் செலவு செய்ய வழிவகைகள் செய்து கொடுக்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் அவர்கள் கூட பேசும்போது கடுமையாகப் பேசியிருக்கிறார்கள். கோயிலுக்கு என்று ஒதுக்கப்பட்ட நிலம் கோயிலுக்கே இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அதை யாரும் விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுத்துவிட முடியாது என்று சொல்கிறார்கள். அப்படி இருந்தால், அந்தக் கருத்தை நான் கடுமையாக எதிர்த்துப் பேச விரும்புகிறேன். உதாரணமாக தமிழகத்தில் உள்ள சிறு விவசாயிகளுக்கு நீங்கள் அவைகளை அசைன்மெண்ட் பண்ணிக் கொடுத்து விடுங்கள், தமிழ் நாட்டில் உள்ள கோயில்களுக்கு 50 ஏக்கர், 100 ஏக்கர் என்று கூட நிலம் இருக்கிறது. அதை மொத்தமாகக் குத்தகை எடுத்துக் கொள்கின்றவர்கள்—ஆஸ்திகர்கள்—மேற்கொண்டு ஆட்களைத்தான் வைத்துப் பயிர் செய்கின்றார்கள், அந்த நிலத்தை நீங்கள் சிறு சிறு விவசாயிகளுக்கு 2 ஏக்கர் அளவில் பிரித்துக் கொடுங்கள். விவசாயக் கூலி என்று இருப்பதை விட 'டெனன்ட்ஸ் ரைட்ஸ்' என்று போட்டுக் கொடுத்து விடுங்கள். பெரும் குத்தகைக்காரர்கள் 50 ஏக்கர், 100 ஏக்கர் என்று மொத்தமாகக் குத்தகைக்கு எடுப்பவர்கள் என்ன செய்கின்றார்கள்? அவர்களும் ஆட்களை வைத்துத் தான் வேலை வாங்குகிறார்கள். அவர்களுக்கு ரு, 1, ரூ. 1½ என்று உத்தரவாதமற்ற கூலியைக் கொடுத்து வேலை வாங்குகின்றார்கள். அவர்கள் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு நடத்தும் போது, வேலையாட்களுக்கு வேலைப் பாதுகாப்பு கூட கிடையாது. 'டெனன்ட்ஸ் ரைட்ஸ் புரொட்டக்ஷன் ஆக்ட்'—பிரகாரம் கிராமப்புறத்திலே இருக்கக் கூடிய ஏழையெளிய மக்களுக்கு டெனன்ட்ஸ் ரைட்ஸ் என்ற முறையில் அடங்கல் ஒன்றை அவர்கள் பெயரில் ஏற்றி அவர்களுக்கு நிலங்களை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்னால் நிறைவேற்றுவதற்காக வைத்திருக்கின்ற இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு பற்றி நம்முடைய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசினார்கள். கொஞ்சம் அச்சத்தையும், அடிப்படையிலே சில சந்தேகங்களையும், சில பிரச்சினைகளையும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் இந்த அரசின் சார்பிலே சொல்லிக் கொள்கிறேன். இன்னும் குறிப்பாகச் சொல்வதென்றால், ஓராண்டுக் காலமாக இந்த அறநிலையத் துறையை வேறு யாரிடத்திலும் கொடுக்காமல் தன்னிடத்திலேயே வைத்திருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பிலேயும், இன்றைக்கு அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்ற என்னுடைய பொறுப்பிலேயும் நான் அவர்களுக்கும், இந்த மன்றத்தில் உள்ளவர்களுக்கும் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்து சமய அறநிலையத் துறையைச் சார்ந்த நிறுவனங்களானாலும் சரி, இந்து அறக்கட்டளைகளைச் சார்ந்த நிறுவனங்களானாலும் சரி, இதுவரை இருந்து வந்ததாகக் கருதப்படுகின்ற அல்லது இருந்து வந்த எந்தக் குறைபாடுகளும் இல்லாமல், அவை மிகச் சிறந்த புண்ணிய வழிபாட்டுக்குரியவையாக, நம்முடைய தமிழ்ப் பண்புக்குரியவையாக, அதில் நம்பிக்கை உடையவர்களுக்கு எந்த வித ஊனமும் ஏற்படாமல், அவர்களின் கருத்துக்களுக்கு எந்தவிதமான குந்தகமும் ஏற்படாமல், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அல்லது சில ஆண்டுகளுக்கு முன்னால் பெரியவர்கள் தாங்கள் உழைத்துச் சம்பாதித்ததை இந்த நாட்டிலே உள்ள கோயில்களுக்கு எந்த நல்ல காரியங்களுக்காக விட்டுச் சென்றார்களோ, அந்த உணர்வுகளைக் காப்பாற்றுகின்ற நோக்கத்தோடு செயல்படுவோம் என்று சொல்லிக் கொள்கிறேன். 2 நாட்களுக்கு முன்னாலே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இந்த நாட்டிலே கோயில்கள் மூலமாகத் தான் கலைகளையும், சிற்பங்களையும் வளர்க்கின்ற உணர்வுகள் இருந்தன. அப்படிப்பட்ட உணர்வுகளை எல்லாம் வளர்க்க வேண்டும் என்று சொன்னார்கள். அந்த அடிப்படை உணர்வோடுதான் இந்த அரசும் இருக்கிறது என்பதை நான் முதலிலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது உங்கள் முன்னாலே வைத்திருக்கின்ற திருத்தம், நடைமுறைக்கு ஏற்றதாக இல்லாதது என்று கருதப்பட்ட நடைமுறைகளை மாற்றுவதற்குத்தான் என்பதை நான் இங்கே தெளிவாகவும், திட்டவட்டமாகவும் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 2 ஆண்டுகளாக அதிகாரிகளிடத்திலேதான் இந்த ஆலயங்களினுடைய நிர்வாகப் பொறுப்பு இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையைக் கடுமையாகச் சட்ட மன்றப் பேரவையிலேயும், மேலவையிலேயும் விமர்சித்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த

மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் அன்றைக்கு சபையில் இல்லை. ஆளுநர் உரையின்மீது பேசும் போது காங்கிரஸ் கட்சித் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் கூட எப்போது தான் அறங்காவலர்களைப் போடப் போகிறார்கள் என்று கேட்டதாக பின்னர் வந்த விவரத்திலேயிருந்து தெரிந்து கொண்டேன். அறங் காவலர்கள் விரைவிலே நியமிக்கப்பட வேண்டும் என்றுதான் இருக்கிறோம். கடந்த 2 ஆண்டு காலமாக அந்த அளவிலே ஆலயங்களின் நிர்வாகம் அப்படி இருந்ததனாலே எழுந்திருக்கிறது. ஏன் இந்த நிலைமை ஏற்பட்டது என்று பார்த்தால், அது முன்னாலே இருந்தவர்கள் செய்த காரியங்களால் ஏற்பட்டது. அது கொஞ்சம் பழைய கதை. அந்தக் கதையைத் தொடங்கினால், அது பல உணர்வுகளைக் கிளப்பி விடும். இதற்கு முன் மக்கள் பிரதிநிதிகள் தான் இருந்தார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும், நியமிக்கப்பட்டவர்களும் தான் அறங்காவலர்களாக இருந்தார்கள். அவர்களிடமிருந்துதான் எடுத்துக் கொள்ளப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இந்தச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்படும் வரை அவையின் நிகழ்ச்சிகள் நீடிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, அந்தத் தவறுகளை எடுத்துக் காட்டிய பிறகுதான் இந்த விளைவுகள் வந்தன. அந்த அறங்காவலர்கள் எல்லாம் நீக்கப்பட்டு, மக்களுடைய பிரதிநிதிகள் நீக்கப்பட்டு, அதிகாரிகள் வசம் இந்த நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது. எலியூருக்குப் பயந்து புலியூரில் நுழைந்த மாதிரி என்று ஒரு கதை இருக்கின்றது. அது போல இரண்டு ஆண்டுகளாக அதிகாரிகளிடத்திலே விட்டு வைத்திருக்கிறோம். இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள், மற்ற அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள், ஆஸ்திகப் பெருமக்கள் மனம் திறந்து விரைவு படுத்தி அறங்காவலர்களை நியமியுங்கள் என்று கேட்கின்ற அளவுக்கு நிலைமைகள் வந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 7-00)

அப்படி வந்தபோது, அறங்காவலர்களை நியமிப்பதற்காக முன்னாலே இருந்த சட்டப்படி ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டு, மனுக்கள் பெறப்பட்டன. முன்னாலே இருந்த சட்டம் என்றால், 1976 ஆம் ஆண்டிலே கொண்டு வந்த சட்டம். அதற்கு முன்னாலே வேறு சட்டம் இருந்தது. அதில் நான் நுழையவில்லை. 1976 ஆம் ஆண்டுச் சட்டத்தில் ஆண்டு வருமானம் 10 ஆயிரம் ரூபாய்க்குக் கீழேயுள்ள கோவில்களுக்கு பரம்பரை சார்பற்ற



அறங்காவலர்களை அசிஸ்டண்ட் கமிஷனர் நியமிக்கலாமென்றும், ஆண்டு வருமானம் 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 20 ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாக உள்ள கோவில்களுக்குக் கமிஷனர் நியமிக்கலாமென்றும், ஆண்டு வருமானம் 20 ஆயிரம் ரூபாயும் அதற்கு மேலும்உள்ள கோவில்களுக்கு அரசு நியமிக்கலாமென்று இருந்ததை இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம் மாற்றுகிறோம். 10 ஆயிரம் ரூபாய்க்கு உட்பட்ட வருமானம் உள்ள கோவில்களுக்கு அசிஸ்டண்ட் கமிஷனர் நியமிக்கலாமென்றும், 10 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் உள்ள கோவில்களுக்கு டெபுடி கமிஷனர் நியமிக்கலாமென்றும், 50 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு லட்சம் ரூபாய்வரை வருமானமுள்ள கோவில்களுக்கு கமிஷனர் நியமிக்கலாமென்றும், ஒரு லட்சத்திற்கு மேற்பட்டு வருமானம் வரும் கோவில்களுக்கு அரசு நியமிக்க வேண்டுமென்றும், நான்கு தரமாகப் பிரித்து, இந்தத் திருத்தத்திலே சொல்லியிருக்கிறோம்.

ஏன் இந்தக் குழுக்களைப் போடுகிறோமென்பது குறித்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சந்தேகம் தொனிக்கின்ற வகையிலே பேசினார்கள், அதிலே எந்தவிதமான சந்தேகமும் வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அறங்காவலர்களுடைய விண்ணப்பங்களைப் பெற்று, அதைப் பரிசீலிக்கின்ற உரிமையும் ஆணையர்களிடம் இப்போது இருக்கிறது. அறங்காவலர்களை நியமிக்கும் உரிமையும் ஆணையர்களிடம் இருக்கிறது. இது எப்படி சரியாகும்? இங்கேதான் அடிக்கடி சொல்கிறார்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொல்கிறார்கள், சட்டப் பேரவையிலே காலையிலேகூடச் சொன்னார்கள், நீங்கள் அதிகாரிகளை நம்பிக் கொண்டிருக்கிறீர்களென்று. அப்படி அதிகாரிகளை நம்பிக் கொண்டிருக்கக்கூடாதென்பதற்காகத்தான் குழுக்களைப் போடுகிறோம். அந்த அதிகாரிகளுக்கு உதவி செய்வதற்காக குழுக்கள் அமைக்கப்படுகின்றன. வருகின்ற மனுக்களைப் பரிசீலனை செய்து இவர்களெல்லாம் தகுதியானவர்கள், இவர்கள் பெயரிலே இன்னின்ன குறைகள் இருக்கின்றன என்று சொல்லுகின்ற அளவுக்குத் தெரிந்தவர்களாக மூன்று பேர்களுக்குக் குறையாமலும் ஐந்து பேர்களுக்கு மேற்படாமலும் உள்ள குழுக்களை அமைத்து, அந்தக் குழுக்கள் தரும் பட்டியலிலிருந்து, உதவி ஆணையரோ, துணை ஆணையரோ, அல்லது ஆணையரோ நியமிக்கலாமென்று இந்தச் சட்டத் திருத்தம் சொல்கிறது. தயவு செய்து நீங்கள் இதை நம்பலாம், நம்ப வேண்டும். அந்த நம்பிக்கைக்கு விரோதமாக எதுவும் நடந்து விடாது. நல்லவர்களை அறங்காவலர்களாகக் கொண்டுவர வேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் திருத்தத்தின் மூலம் குழுக்கள் நியமிக்கப்படுகின்றன. மேலும் நம்முடைய திரு. இராமமூர்த்தி அவர்கள்

சொன்னதுபோல். முன்னாலே இருந்த 'ஏரியா கமிட்டி' மிகவும் சக்தி வாய்ந்தது. அது டிஸ்டிரிக்ட்-வைஸ்-ஆக இருந்தது. இந்தக் குழுக்கள் அந்தந்த அசிஸ்டென்ட் கமிஷனர் அதிகாரத்திற்குள்ளாக அமைக்கப்படும். ஒவ்வொரு குழுவிற்கு மூன்று பேர்களுக்குக் குறையாமலும், ஐந்து பேர்களுக்கு மேற்படாமலும் போடுகிறோம். அவர்கள் 'ஸ்பெசிபிக் பெர்பார்மன்ஸ்' செய்வதற்காக நியமிக்கப்படுகிறார்கள். அறங்காவலர்களுக்கான விண்ணப்பங்களைத் தேர்ந்தெடுத்து, பரிசீலித்து, பரிந்துரை செய்கிற உரிமை மாத்திரம் அவர்களுக்கு உண்டு. வேறு எந்தவித அதிகாரமும் இல்லை. அறங்காவலர்களை நியமித்த பிறகு, அவர்கள் தான் சர்வ சக்தி வாய்ந்தவர்கள், சர்வ வல்லமை வாய்ந்தவர்கள். அவர்களுக்கு அவ்வளவு அதிகாரம் தரப்பட்டிருக்கிறது. அதனால் கடந்த காலத்தில் கட்டுப்பாடு இல்லாமல் நடந்திருக்கிறது. ஆனால், அவர்களைக் கட்டுப்படுத்த விதிகள் இருக்கின்றன. ஆனால், அவைகளெல்லாம் தீவிரமாக அமல்படுத்தப்படவில்லை. இனிமேல் அறங்காவலர்கள் ஒருவேளை தவறு செய்தால், அவர்கள் கண்காணிக்கப்படுவார்கள். அறங்காவலர்களாக இருந்தாலும் சரி, நிர்வாக அதிகாரிகளாக இருந்தாலும் சரி, கண்டிப்பாகக் கண்காணிக்கப்படுவார்கள். அதிலே யாருக்கும் ஐயப்பாடு வேண்டாம். இந்தக் குழுக்கள் அறங்காவலர்களுடைய விண்ணப்பங்களைப் பரிசீலித்து, இவர்கள் தகுதியானவர்கள் என்று பரிந்துரை செய்கின்ற பொறுப்பை மாத்திரம் ஏற்றுக் கொள்ளும். அதற்குப் பிறகு அறங்காவலர்கள்தான் உரிமை பெற்றவர்களென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்னாலே ஏற்பட்ட சம்பவங்களையெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஒரு மானியக் கோரிக்கைபோல், இதை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டு, பல்வேறு கோரிக்கைகள் வைக்கப்பட்டன. குறிப்பிட்ட ஒரு சட்டத்திருத்தத்தைத்தான் அரசு கொண்டு வந்திருக்கிறது. நேரமும், காலமும் அனுமதித்தால், மிக விவரமான புள்ளி விவரங்கள் தந்து இது எப்படி நடந்தது, எப்படி நடக்க வேண்டுமென்று அரசு எண்ணுகிறது என்பதைச் சொல்லலாம். கோவில் நிதியிலிருந்து மற்ற காரியங்களுக்கு பணத்தை 'டைவர்ட்' செய்யும்போது, இந்துச் சமயக் கோவில்களிலிருந்துதான் இப்படி கேள்வி கேட்பாரற்ற முறையிலே பணத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள், அதைக்கூட கோவில் நிதியிலிருந்து பயன்படுத்துகிறோமென்று சொல்லி பயன்படுத்தவில்லை என்று யாரை மனதிலே வைத்துக்கொண்டு சொன்னார்களோ தெரியவில்லை. அதை அவர்கள்தான் விளக்க வேண்டும். அப்படி ஒருவேளை நடந்திருந்தாலும், அப்படிப்பட்ட தவறுகள் இனிமேல் நடக்காது. ஏனென்றால் இந்த அரசு, அரசுப் பொறுப்பிலே இருக்கிற மாண்புமிகு முதலமைச்சரவர்கள், மாண்புமிகு அமைச்சர்கள், இன்றைக்கு இந்த



இலாக்கா பொறுப்பை ஏற்றுக்கொண்ட நான், அனைவரும், இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவம் அவர்கள் சொன்னதுபோல, நீங்களும் எடுத்துக் காட்டியது போல, எந்தக் கருத்துக்குச் சொந்தக்காரர்கள், எந்தக் கொள்கையை நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோமென்பது மட்டுமல்ல, அரசியல் சட்டப்படி பிரமாணம் எடுத்துக்கொண்டு இந்த நாட்டு மக்களின் நம்பிக்கைக்குப் பாதகமில்லாமல், அவர்களுடைய நம்பிக்கையைக் காப்பாற்றுகிற விதத்திலே பணியாற்ற வந்திருக்கிறோம். ஆகவே எடுத்துக்கொண்டிருக்கிற பணியை நிறைவேற்றுவதில், இம்மியளவுகூட மனச்சாட்சிக்கு விரோதமாக, சட்டத்திற்கு விரோதமாக, எங்களுடைய சொந்தக் கொள்கை எப்படியிருந்தாலும், நாங்கள் நடக்கமாட்டோம் என்பதைக் கடந்த ஓராண்டுக்கால அனுபவம் எடுத்துக்காட்டுகிறதென்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நியமிக்கப்படுகிற இந்தக் குழுவினர் ஒருவேளை ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பார்களோ என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சந்தேகம் தெரிவித்தார்கள். அப்படிப்பட்ட சந்தேகமே உங்களுக்கு வேண்டாம். நியமிக்கப்படுகிற உறுப்பினர்கள் ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், தெய்வ நம்பிக்கை உள்ளவர்களாக; ஒரு காசு கூட அந்த தெய்வத்திற்குச் சொந்தமான சொத்திலிருந்து எடுக்க விரும்பாதவர்களாக; அந்தக் கோவிலுக்கு தினசரி போக வேண்டுமென்ற எண்ணமுடையவர்களாக; கோவில் சொத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற நம்பிக்கை உடையவர்களாக இருப்பார்களே தவிர, வேறு எந்தக் கொள்கைக்கும் சொந்தக்காரர்களாக நிச்சயமாக இருக்க மாட்டார்களென்பதை நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போலவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் திருத்தணி கோவில்பற்றிச் சொன்னார்கள். அது விவாதத்திற்குரியது. அங்கே முன்னாலே இருந்த அறக்காவலர் ஒருவர், அங்கே பணியாற்றிய நிர்வாக அதிகாரி மீது கொடுத்த புகாரை, இந்த மன்றத்திலே வைத்திருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் பல உரிமைகள் வழங்கப்பட்டுள்ளதாலே, அந்த உரிமைகளின் அடிப்படையிலே, பல குற்றச் சாட்டுகளை வைக்க முடிகிறது. அந்தக் குற்றச் சாட்டு விசாரணையில் இருக்கிறது. நாளை அவர் நிரபராதி என்று வந்து விடலாம். அவர்மீது சட்டப்படி குற்றம் சாட்ட முடியவில்லை. புகார் எழுதிக் கொடுத்திருக்கிறவரே, பொறுப்பு எடுத்துக் கொண்டு, அங்கேயே புகார் செய்திருந்தால், வழக்கு மன்றத்திற்குப் போக உதவியாக இருக்கும். இன்ன கோவிலிலிருந்து

இன்னார் திருடியிருக்கிறார் என்று உடனடியாகக் குற்றம் சாட்டியிருந்தால், அவர் குற்றவாளி என்று சொல்ல உதவியாக இருக்கும். அவர் மாண்புமிகு உறுப்பினரவர்களிடம் கொடுத்து....

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவரவர்களே, குறுக்கீடல்ல. ஒரு விளக்கம் கொடுக்க விரும்புகிறேன். அமைச்சரவர்கள் குறிப்பிட்டுக் காட்டுகின்ற காரணத்தாலே சொல்லுகிறேன். அவர் என்னிடம் சொன்ன காரணத்தாலே நான் பேசவில்லை, அவர் முதலமைச்சரவர்களை நேரடியாகச் சந்தித்துக் கொடுத்திருக்கிறார். அதனுடைய நகல்தான் என்னிடம் கொடுத்தது. அந்தப் புகாரை யாரிடத்தில் கொடுக்க வேண்டுமோ அவரிடம் நேரடியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம் வீரப்பன்: அதைத்தான் அன்றைக்கே குறுக்கிட்டுச் சொன்னேன். முதலமைச்சரவர்களிடம் கொடுத்த குற்றச்சாட்டின்மீது விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. இதற்கிடையிலே மாண்புமிகு உறுப்பினரவர்களைப் பயன்படுத்தி, இந்த மன்றத்தின் முன்னாலே அந்தக் குற்றச்சாட்டு வைக்கப்பட்டிருக்கிறது. அது பெரிய பரபரப்பு அடையுமளவுக்கு காலையில் சட்டமன்றப் பேரவையிலே கேள்வியை எழுப்பினார்கள். வேல் காணமல் போய்விட்டது, என்ன விவகாரம், அமைச்சரவர்கள் பதில் சொல்லவேண்டுமென்று கேட்டார்கள்.

(பிற்பகல் 7—10)

ஆகவே இப்படிப்பட்ட பொதுமக்கள் தொடர்புள்ள முக்கியமான குற்றச்சாட்டுக்களை முதலமைச்சர் அவர்களிடத்திலே தந்தவுடனே அது பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுவிட்டது. விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அவர் பொறுப்பு வாய்ந்த அசிஸ்டன்ட் கமிஷனராக இருப்பவர். நீண்ட காலம் பணியாற்றியவர். அவரைப் பற்றிய குறிப்பு என்ன இருக்கிறதென்றால், அவர் வருவதற்கு முன்னாலே திருத்தணி கோயிலில் கடன் இருந்ததாகவும், அவர் வந்ததற்குப் பின்னாலே கடன் அடைக்கப்பட்டதாகவும் இருக்கிறது. அப்படிப்பட்ட அதிகாரியின் மீது இவ்வளவு பெரிய குற்றச்சாட்டு வருகிறது.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, அந்த அதிகாரி மீது குற்றச்சாட்டு இருக்கிறதா, இல்லையா என்பது பற்றிக் கவலையில்லை. ஆலயத்தில் புனிதமாக இருக்கிற வேல் அங்கே இல்லை என்ற குற்றச்சாட்டு மறுக்கப்படவில்லை. அந்தப் பதக்கமும் உடைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குற்றச்சாட்டிலே அந்த அதிகாரி சம்பந்தப்பட்டிருக்கிறாரா, வேறு யாராவது



சம்பந்தப்பட்டிருக்கிறார்களா, யாருமே சம்பந்தம் இல்லாமல் நடந்திருக்கிறதா என்பதல்ல கேள்வி. அந்த ஆலயத்தின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறவர் இதைக் காப்பாற்றவில்லை என்பதுதான் குற்றச்சாட்டு.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : குற்றச்சாட்டை மறுத்தும் பேசவில்லை, மறைத்தும் பேசவில்லை. இது விசாரணையில் இருக்கிறது. தெளிவான அறிக்கை கிடைத்ததற்குப் பிறகு, இந்த மன்றத்திற்குத் தரப்படும். தங்கம் வேண்டும் என்பதற்காக முறையாக உருக்கியிருக்கிறார்கள். அனுமதி பெற்றுத்தான் உருக்கப்பட்டிருக்கிறது என்ற தகவலைத் தந்திருக்கிறார்கள். மேலும் இது விசாரணைக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

(திரு. ஆற்காடு வீராசாமி இருக்கையிலிருந்து எழுந்தார்)

தயவுசெய்து நான் குறுக்கீட்டை விரும்பவில்லை. இது விசாரணையில் இருப்பதால், இதை மேலும் வளர்த்துக்கொண்டு போகக் கூடாது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவர் பேசி முடிக்கட்டும், பிறகு உறுப்பினர் அவர்கள் பேசலாம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : வழக்கு மன்றத்தைப் போல் வாதித்துக்கொண்டிருந்தால், ஒருவேளை, இந்த வாதம் எல்லாம், குற்றவாளிகள் தப்பித்துக்கொள்ளுவதற்கு வசதியாக இருக்குமோ என்று எண்ணுகிறேன். ஆகவே இந்த அரசு அந்தக் குற்றச்சாட்டின் மீது நடவடிக்கையை மேற்கொண்டு மேலும் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. அதற்கு சம்பந்தப்பட்டவர்களிடத்திலே உண்மையான விவரங்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. அந்த உண்மைகள் தெரிந்த பின்னாலே அவைகளை இந்த மன்றத்தின் முன் வைக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி இதை நிச்சயமாக நம்பலாம். இந்த மன்றத்திலே இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டதாலே, இதற்கு இவ்வளவு நேரம் எடுத்துக் கொண்டேன். கோயில்களில் எதிர்காலங்களிலாவது அறங்காவலர்கள் என்ற பெயரால் நியமிக்கப்படுகிறவர்கள் உண்மையிலேயே அறத்தைக் காப்பவர்களாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவம் அவர்கள், ''நம்பிக்கையுள்ளவர்களாகப் போடுங்கள், நல்லவர்களாகப் போடுங்கள், பணத்தை நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்துங்கள்'' என்று சொல்லியிருக்கிறார்கள். நல்ல காரியத்திற்கு,

மக்களுக்குப் பயன்படுகிற காரியத்திற்குப் பயன்படுத்த வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய இலட்சியம், இதை எந்தக் கட்சியும் ஏற்றுக்கொள்ளும். இந்து சமய அறநிலையத்தைச் சேர்ந்த அறக்கட்டளையிலிருந்து செலவு செய்கிற பணத்திலிருந்து நடைபெறுகிற காரியங்கள் என்று சொன்னால், இந்த நாட்டு மக்களுக்கு நம்பிக்கை அதிகமாக இருக்கும். ஆகவே அதிலிருந்து, படிப்பு வசதி, மருத்துவ வசதி, தொழில் வளர்ச்சி இன்னும் பல்வேறு வசதிகள் செய்யப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். கோயில்களின் நிர்வாகத்தைப் பற்றியும் சொன்னார்கள். அது நீண்ட விவாதத்திற்குரிய ஒன்று. அதற்குள்ளே நான் நுழையவில்லை. அது ஒரு பெரிய கொள்கைப் பிரச்சினை. ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டிய பிரச்சினை. உழைக்கிற விவசாயிகளுக்கு நிலம் சொந்தமாக வேண்டும். ஏர் பிடித்து உழுகிறவனுக்கு நிலம் சொந்தமாக வேண்டும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் வலியுறுத்தினார்கள். அப்படிச் செய்வதற்கு சட்டம் எந்த அளவுக்கு அனுமதிக்கிறது என்று பார்க்க வேண்டும். அந்தக் காலத்தில் கோயில் நிலங்களை விட்டுவிட்டோம். கோயில் நிலங்களைக் கொடுத்துவிட்டு அதற்குரிய பணம் இவ்வளவு என்று நிர்ணயிக்கப்பட்ட காரணத்தால்தான் இன்று சில கோயில்களில் சம்பளம் தர முடியாமல் திண்டாடுகிறார்கள். 15 ஆண்டுகளுக்கு முன்னாலேயே விலை நிர்ணயம் செய்துவிட்டால், செலவுகள் வளருகிறபோது, நிதியாதாரம் இல்லாமல் கஷ்டப்பட வேண்டி வருகிறது. நிலமாக இருந்திருந்தால், நெல் விலை முன்பு 100 ரூபாயாக இருந்தது. இன்று 110 ஆக இருக்கிறது. அடுத்த ஆண்டு ரூ.115 அல்லது 120 ஆகலாம்— அதிலுள்ள நெல்லைக் கொண்டு வருமானத்தைப் பெருக்கலாம். இந்த அடிப்படையிலேதான் கோயில்கள் சொத்தாக நிலங்களை வைத்திருக்கிறார்கள். இந்த அடிப்படை உணர்வுகளைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு, உண்மையிலே பாடுபட்டு உழைக்கிற ஏழை விவசாயிகளுக்கு அது பயன்படுத்தப்படும்.

இன்றைக்கு பினாமி பெயரிலே ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் - ஐந்து ஏக்கருக்கு மேல் குத்தகை வைத்துக்கொள்ளக் கூடாது என்று சட்டம் இருந்தாலும், மாறி மாறிப் பெயர்களை வைத்துக்கொண்டு 20 ஏக்கர், 30 ஏக்கர் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள், கடந்த காலத்திலே, கணக்குப்பிள்ளை தன் கையில் இருக்கிறார் என்ற காரணத்தாலே, இந்த ஆண்டு முனியன் என்ற பெயரை வைத்துக்கொள், அடுத்த ஆண்டு சுப்பையன் என்ற பெயரை வைத்துக்கொள், அதற்கடுத்த ஆண்டு பழனியப்பன் என்று மாற்றிக்கொள் என்ற ரீதியிலே பெயரை மாற்றிக் கொண்டு, எங்கே தவறு நடை பெற்றிருக்கிறது என்று கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு நிலைமைகள் சிக்கலாக இருக்கின்றன. அரசு இதைத் தீவிரமாகப் பரிசீலனை செய்து



கொண்டிருக்கிறது. எப்படியும், ஏழைகள். விவசாயிகள் ஆகியவர்களுக்குப் பயன்படுகிற முறையிலே இந்த அரசு முடிவை எடுக்கும், இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்ததின் அடிப்படை நோக்கத்தை எடுத்து விளக்கியிருப்பதன் மூலம் இந்த அரசும், மாண்புமிகு முதலமைச்சரும்— மாண்புமிகு உறுப்பினர்கள் எந்த அளவுக்கு அறநிலையத் துறையைக் காப்பாற்ற வேண்டுமென்று கருதுகிறார்களோ, அந்த அளவுக்கு அக்கறையோடு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கூறி இங்கே இருக்கிற எல்லா உறுப்பினர்களும் இதை ஏற்று நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்,

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது, திருத்தணி முருகன் கோயிலுக்குத் தங்கம் தேவைப்பட்டது, ஆகவே உருக்கியிருக்கிறார்கள் என்று குறிப்பு வந்திருப்பதாகச் சொன்னார்கள். நான் பேசும்போதும் அதைத்தான் சொன்னேன், உருக்கும்போது 16 கிலோ என்பது 14½ கிலோவாக ஆகிவிட்டது. சோழிங்கபுரம் பற்றிய பிரச்சினை நீதிமன்றத்தில் தீர்ப்பில் இருக்கிறது, அறநிலையத் துறையின் அறக்கட்டளையின் விதிகளில் தெளிவாக இருக்கிறது. ஆணையாளரின் அனுமதி இல்லாமல் நகைகளை உருக்கவோ, அடகு வைக்கவோ, விற்கவோ கூடாது என்று விதி இருந்தும் கூட, அந்த அதிகாரி அப்படிச் செய்திருக்கிறார் என்ற குற்றச்சாட்டைச் சொன்னேன் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. க. அறிவழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது, ''ஆஸ்திகர்களையே அறங்காவலர்களாக நியமிப்போம்'' என்று சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். அப்படிச் செய்யும் போது 'நாஸ்திகர்கள் என்பவர்கன் நல்லவர்கள் இல்லை' என்ற முறையிலே ஒரு எண்ணத்தை ஏற்படுத்திவிடக்கூடாது. அதுவும் பெரியாரின் நூற்றாண்டு விழாவின் ஆரம்பத்திலா இப்படிச் சொல்வது? ஆகவே அதை அமைச்சர் அவர்கள் மனதிலே கொள்ள வேண்டும். ஆஸ்திகர்கள் அறநிலையத் துறை அமைச்சராக வர வேண்டும் என்ற நிலைமை வரக்கூடாது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு அறிவழகன் அவர்கள் தன்னைத்தானே சந்தேகப்படுகிறார் என்று கருதுகிறேன். அவர் கூறியது தன்னிலை விளக்கம் போல் இருக்கிறதே தவிர, இங்கு இருக்கும் மசோதாவிற்கு யோசனை சொல்வதாக இல்லை. மனதிலே ஒன்றை வைத்துக்கொண்டு, வெளியே ஒன்றைச் சொல்ல வேண்டியதில்லை. அண்ணா அவர்கள், ''ஒன்றே குலம்; ஒருவனே

தேவன்" என்று சொல்லியிருக்கிறார்கள். அதை மனதிலே கொண்டு இந்த அரசு நடைபெறும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு இந்துசமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 31/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது. சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 20 வரை, அவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, "சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1978) நிறைவேற்றப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவைமுன் உள்ள பிரச்சினை: "சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1978) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்தன. ஏற்கெனவே உள்ள மசோதாக்களை பரிசீலிக்கும் பொறுப்பு உள்ளதால் நாளை காலை 10 மணிக்கு அவை மீண்டும் கூடும்.

**பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.**

**(பிற்பகல் 7.20 மணி)**



## 12. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

89. Notification issued with G.O. Ms. No. 1080, Housing and Urban Development, dated the 13th July 1978 in regard to appointment of Thiru S. H. Mahadevan, Retired Chief Engineer, as a non-official member of the Tamil Nadu Slum Clearance Board in the place of Thiru D. Ambrose for a period of one year. [Laid on the table of the House under section 72 (2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971).]

90. Notification issued with G.O. Ms. No. 912, Revenue, dated the 19th April 1978 in regard to an amendment to the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Rules, 1962. [Laid on the table of the House under section 112 (2) of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961).]

91. Notification issued with G.O .Ms. No. 971, Public (Establishment-I), dated the 26th May 1978 in regard to an amendment to the Tamil Nadu Ministers' Travelling Allowance Rules, 1951. [Laid on the Table of the House under section 14 (3) of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 (Tamil Nadu Act XX of 1951).]

92. Notification issued with G.O. Ms. No. 1109, Education, dated the 17th June 1978 declaring the ancient monuments specified in the Schedule as protected monuments. [Laid on the Table of the House under section 39 (3) of the Tamil Nadu Ancient and Historical Monuments and Archaeological Sites and Remains Act, 1966 (Tamil Nadu Act 25 of 1966).]

93. Fifth Annual Report of the Pallavan Transport Corporation Limited, Madras-2 for the year 1976-77. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

94. Report of the Comptroller and Auditor-General of India for the year 1976-77 (Commercial). [Laid on the table of the House under Article 151 (2) of the Constitution of India).]

95. Report of the Comptroller and Auditor-General of India for the year 1976-77 (Revenue Receipts). [Laid on the table of the House under Article 151 (2) of the Constitution of India.]

96. Report of the Comptroller and Auditor-General of India for the year 1976-77 (Civil). [Laid on the table of the House under Article 151 (2) of the Constitution of India.]

97. Appropriation Accounts of the Government of Tamil Nadu for the year 1976-77. [Laid on the table of the House under Article 151 (2) of the Constitution of India.]

98. Finance Accounts of the Government of Tamil Nadu for the year 1976-77. [Laid on the table of the House under Article 151 (2) of the Constitution of India.]

99. Notification issued with Government Memorandum No. 42009/II(2)/77-10, Commercial Taxes and Religious Endowments dated the 26th July 1978 in regard to exemption in respect of the tax payable by any dealer on the sales of jaggery and gur (other than palm jaggery and palm candy) including jaggery powder and nattu-sakkarai, if they have already suffered purchase tax prior to the 25th July 1977, under item 68 of the First Schedule to the Tamil Nadu General Sales Tax Act. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

100. Notification issued with G.O. Ms. No. 790, Rural Development and Local Administration, dated the 29th May 1978 declaring that the areas comprised within the village and town panchayats specified in the schedule shall be included within the Madras City limit and shall form part of the City of Madras with effect on and from the 1st June 1978. [Laid on the table of the House under section 348 (d) of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919).]

101. Notifications issued with G.O. Ms. No. 606, Commercial Taxes and Religious Endowments, dated the 12th May 1978 constituting the Subordinate Judge, Sivaganga to be the Tribunal for the purpose of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, and the Tamil Nadu Inams (Supplementary) Act, with jurisdiction over the entire Ramanathapuram district. [Laid on the table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963), under section



48 (5) of the Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 30 of 1963) and under section 13 (4) of the Tamil Nadu Inams (Supplementary) Act, 1963 (Tamil Nadu Act 31 of 1963)].

102. Audit Report on the Annual Accounts of the Tamil Nadu Electricity Board for the year 1976-77. [Laid on the table of the House under section 69 (5) (a) of the Electricity (Supply) Act, 1948 (Central Act 54 of 1948).]

*B. Reports, notifications and other papers.*

28. Third Report of the Committee on Delegated Legislation. (English).

29. Fourth Report of the Committee on Public Accounts on the Accounts of the Government of Tamil Nadu for the year 1972-73 and the Report (Civil) of the Comptroller and Auditor-General of India for the year 1972-73. (Tamil).

30. Thirtieth Report of the Committee on Government Assurances.

31. Enquiry Reports of Justice Somasundaram and Kader Commission. (Tamil).

32. Answers to Unstarred Questions Nos. 8 to 11.

* 33. The Madurai University (Amendment and Special Provisions) Bill, 1978 (L.A. Bill No. 32 of 1978), as passed by the Legislative Assembly.

* 34. The Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officers) Amendment Bill, 1978 (L.A. Bill No. 33 of 1978), as passed by the Legislative Assembly.

* 35. The Tamil Nadu Appropriation (No. 5) Bill, 1978 (L.A. Bill No. 35 of 1978), as passed by the Legislative Assembly.

$ 36. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1978 (L.A. Bill No. 31 of 1978), as passed by the Legislative Assembly.

37. The Tamil Nadu Cultivating Tenants (Protection from Eviction) Second Amendment Bill, 1978 (L.A. Bill No. 33 of 1978), as passed by the Legislative Assembly.

38. The Tamil Nadu Revision of Tariff Rates on Supply of Electrical Energy for Non-Agricultural Purposes Bill, 1978 (L.A. Bill No. 39 of 1978), as passed by the Legislative Assembly.

39. The Tamil Nadu Debt Relief Bill, 1978 (L.A. Bill No. 41 of 1978), as passed by the Legislative Assembly.

40. The Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1978 (L.A. Bill No. 36 of 1978), as passed by the Legislative Assembly.

41. The Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent) Amendment Bill, 1978 (L.A. Bill No. 37 of 1978), as passed by the Legislative Assembly.

42. The Tami Nadu General Sales Tax (Second Amendment) Bill, 1978 (L.A. Bill No. 30 of 1978), as passed by the Legislative Assembly.

43. The Tamil Nadu Preservation of Private Forests (Amendment) Bill, 1978 (L.A. Bill No. 25 of 1978), as passed by the Legislative Assembly.

44. The Tamil Nadu Dramatic Performances (Amendment) Bill, 1978 (L.A. Bill No. 26 of 1978), as passed by the Legislative Assembly.

45. The Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1978 (L.A. Bill No. 34 of 1978), as passed by the Legislative Assembly.

46. The Tamil Nadu Catering Establishments (Amendment) Bill, 1978 (L.A. Bill No. 40 of 1978), as passed by the Legislative Assembly.

47. Return of Assets of Thiru R. Margabandu, M.L.A., Thiru P. Eswaramoorthy alias Soranam, M.L.A., Thiru R. E. Chandran Jeyapal, M.L.A., and Thiru C. Govindarajan, M.L.A., as on 31st March 1978, placed on the Table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislative Assembly on the 27th August 1969.

48. Fifth Report of the Committee on Estimates on the action taken by the Government on its recommendations contained in its Report on Registration. (Tamil)

49. Sixth Report of the Committee on Estimates on Irrigation Department. (Tamil)

---

* Laid on the table of the house on 13-9-1978.

† Circulated to all M. L.Cs. on 13-9-1978.



இணைப்பு I

[389..ஆம் பக்கத்தில் 8 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிடாத வினாவின் விடையைக் காண்க ]

கரும்பு சாகுபடிக்கென்று 1977 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி முதல் ஜூலை 31 ஆம் தேதி முடிய கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி வட்ட வாரியாக வழங்கியுள்ள கடன் விவரங்கள்.

| வரிசை எண் | தாலுக்கா பெயர்கள். | நன்செய் நிலங்கள். ஏக்கருக்கு பணம் கொடுத்தது. | நன்செய் நிலங்கள். தொகை (ரூ. லட்சத்தில்). | நீர்பாசனமுள்ள புன்செய் நிலங்கள். ஏக்கருக்கு பணம் கொடுத்தது. | நீர்பாசனமுள்ள புன்செய் நிலங்கள். தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1. | சீர்காழி | 28.97 | 0.34 | 6.03 | 0.04 |
| 2. | மாயூரம் | 956.00 | 10.45 | .. | .. |
| 3. | நன்னிலம் | 937.00 | 10,31 | .. | .. |
| 4. | திருவாரூர் | 707.00 | 6.02 | .. | .. |
| 5. | நாகப்பட்டினம் | 768.00 | 6.90 | .. | .. |
| 6. | திருத்துறைப்பூண்டி | .. | .. | .. | .. |
| 7. | பாபநாசம் | 4,910.78 | 33.06 | 299.22 | 2.24 |
| 8. | கும்பகோணம் | 4,770.33 | 33.92 | 366.15 | 2.60 |
| | மொத்தம் | 11,603·08 | 101.00 | 671.40 | 4.88 |

## இணைப்பு II

[407 ஆம் பக்கத்தில் இனம் 6 [1]-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்போதுள்ள இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள் மொழிவாரி மாநிலப் பிரிவுக்கு முன்னர் (அதாவது 1956—க்கு முன்னர்) திருவிதாங்கூர் தேவஸ்தான வாரியத்தின் (Devaswoms Board) கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்தன. இத்திருக்கோயில்கள் நிர்வாகத்திற்காக 1956-க்குப் பின்னர் கன்னியாகுமரி தேவஸ்வ வாரியம் என்ற அமைப்பு நிறுவப்பட்டது. இந்த வாரியம் இந்து அறக்கட்டளைகள் துறை ஆணையாளரின் நேரடி மேற்பார்வையில் செயல்பட்டு வந்தது. 1975-ம் ஆண்டு ஜனவரி 1 ஆம் நாளிலிருந்து 1959-ம் ஆண்டு இந்து அறக் கட்டளைகள் சட்டம், மேற்கூறிய திருக்கோயில்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. தற்போது கன்னியாகுமரி மற்றும் செங்கோட்டை தாலுக்காவிலுள்ள எல்லாக் கோயில்களும் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத தேவஸ்வங்கள் என்ற ஒரே தொகுதியாக (Group) கருதப்படுகின்றன.

மேற்கூறிய தேவஸ்வங்களில் பணிபுரியும் உள்துறை ஊழியர்கள் சங்கம் கீழ்க்கண்ட, கோரிக்கைகளை அரசுக்கு ஜூன் மாதம் அனுப்பியுள்ளது.

1. ஆலய ஊழியர்களை அரசு கடை நிலை ஊழியர்களாக மாற்ற வேண்டும்.
2. அரசு கடைநிலை ஊழியர்களுக்குள்ள அனைத்து சலுகைகளும் ஆலய ஊழியர்களுக்கு வழங்க வேண்டும்.
3. ஆலய ஊழியர்களின் மீது எடுக்கப்பட்டுள்ள பழிவாங்கும் நடவடிக்கைகள் அனைத்தும் ரத்து செய்ய வேண்டும்.
4. ஆலய ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய எல்லா "ஸ்பெஷல்" டியூட்டி அலவன்ஸ்களும் உடனடியாக வழங்க வேண்டும்.

ஆலயங்களில் பணிபுரியும் உள்துறை சிப்பந்திகள் யாவரும் "கண்டின்ஜன்ட்" ஊழியர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இச்சிப்பந்திகள், 'கன்னியாகுமரி மாவட்ட ஆலய ஊழியர்கள் சங்கம்' என்ற ஒன்றை ஏற்படுத்தியிருக்கின்றனர். இந்த ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 1,046 ஆகும். இவர்கள் மேல் சாந்தி, நாதஸ்வரம், காணியாட்சி, பாகவதர், தேவாரம், ருத்திரஜபம், பலவேலை கட்டியம் போன்ற 37 வித பதவிகளில் பணியாற்றி வருகின்றனர். இவர்களது வேலையின் தன்மையும், வேலையின் நேரமும் அவரவரது பணிக்கு ஏற்ப மாறுபடுகின்றன. கன்டின்ஜன்ட் ஊழியர்களின் ஊதியம் ஆலயத்





திற்கு ஆலயம் மாறுபட்டு உள்ளது. பணிபுரியும் நாட்களுக்கு மட்டுமே இவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் விடுப்பிற்கும், விடுப்பு ஊதியத்திற்கும் இவர்களுக்குத் தற்போது எவ்வித ஊதியமும் வழங்கப்படுவது இல்லை. இவர்களில் சில பிரிவினருக்கு குறைந்தபட்ச மாத ஊதியம் ரூ. 10. 72, அதிகபட்ச ஊதியம் மாதம் ஒன்றுக்கு ரூ. 115 ஆகும்.

மேற்கு வங்கத்திலே உள்ள அமைச்சர்கள், மத்திய அரசின் கொள்கையை ஏற்காவிட்டால், பொது மக்கள் மத்தியிலே, "நாங்கள் ஏற்கவில்லை, மத்திய அரசினுடைய அரசியல் சட்டம் வற்புறுத்துகிறது. ஆகவே நிறைவேற்ற வேண்டியிருக்கிறது, ஆனால் நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை" என்று அவர்கள் பிரச்சாரம் செய்கிறார்கள். இப்படி இருக்கும்போது, இந்த வரி தேவையில்லையென்று மாநில அரசு கருதுமானால், தமிழ் நாட்டு மக்களிடத்திலே, எப்படித் தேவையில்லை என்பதை ஏன் பிரச்சாரம் செய்யக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படித் தடுக்க முடியவில்லையென்றால், "நாங்கள் போடுகிற வரியை எங்களுடைய மின்சார இலாகாவிற்கே பயன்படுத்துகிறோம்" என்று ஏன் கேட்கக்கூடாது? அதற்கும் முடியவில்லையென்றால், போடுகிற வரியை தமிழ் நாட்டில் பயன்படுத்த அனுமதிக்க வேண்டுமென்று கேட்டிருக்கவேண்டாமா? இப்படிச் செய்யாமல், வேறு வழியுமில்லை என்றால் இந்த வரியை யார்மீது போடுவது?

விவசாயிகள் தலையில் போட்டால், கிளர்ச்சி வருகிறது. முதலில் 16 பைசாவாக இருந்தது 14 பைசாவாக மாறி பிறகு இன்றைக்கு 12 பைசாவாக ஆக்கி விவசாயிகளுக்குச் சலுகையைத் தனியாகத் தந்திருக்கிறார்கள். இன்டஸ்ரியல் கனெக்ஷனுக்குப் போடலாம். அப்படிப் போடக்கூடாது என்று நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னார்கள், அப்படிப் போட்டால் அவர்கள் ஹை டென்ஷன் உபயோகப்படுத்துவதையே விட்டு விடுவார்கள் என்று சொன்னார்கள். ஹை டென்ஷனையும் விட்டு விட வேண்டியது நிலப்பிரபுக்களையும் விட்டுவிட வேண்டியது என்றால், யார் மீது போடுவது? வரியைப் போட வேண்டுமென்று ஒத்துக் கொள்கிறார்கள். ஆனால் யார் மீது போடுவது? இதில் சரியான நிலையை ஏற்றுக்கொள்ளவில்லையானால், இந்தப் பிரச்சினையில் நியாயமாக இருக்கமுடியாது. கடைசியில் ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்பதைப் போல், யார் இந்த அரசின் மீது அதிக நிர்ப்பந்தம் கொடுக்காமல் இருக்கிறார்களோ அவர்களுடைய தலையில்தான் இந்த வரியைத் தூக்கி வைக்க விரும்புகிறார்கள் என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இப்படியெல்லாம் மத்திய அரசினுடைய கொள்கையை எதிர்த்துப் பேசத் தயாராக இல்லாத அரசிலுள்ள இதே அமைச்சர்கள் மின்சாரத் தொழிலாளர்கள் சம்பளம் வேண்டும், போனஸ் வேண்டும் என்று கேட்டால் மட்டும், அவர்கள் சம்பளம், போனஸ் கேட்கிறார்கள், ஆகவே டாரிஃபை உயர்த்த வேண்டியிருக்கிறது, அதனால் பொது மக்கள் அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது என்று பிரச்சாரம் செய்கிறார்கள். தொழிலாளர்கள் கேட்கும்போது மட்டும், அதற்குரிய வரியைத் தாருங்கள் என்று கடுமையான முறையில் அமல்படுத்துகிறார்கள். தொழிலாளர்கள் பிரச்சினை வரும்போது மட்டும் இவ்வளவு கடுமையாக இருக்கும் இந்த அரசு மத்திய அரசு கொண்டு வரும் இது போன்ற சட்டத்தை எதிர்க்க வேண்டாமா? அப்படிச் செய்யாமல், இப்படிப்பட்ட சென்டர்—ஸ்டேட் ரிலேஷன்ஸ் பிரச்சினையில், மத்திய அரசு மாநில அரசுகள் மீது வைக்கிற சுமையை, தமிழ் நாட்டிலுள்ள அப்பாவி மக்கள் மீது சுமத்துவது சரிதானா என்பது என் கேள்வி.

நான் கூறுவது, அக்ரிகல்சுரல் துறை மீது வரி போடாமல் விட்டுவிட்டது சரியல்ல. திரு. தாமோதரன் அவர்களின் கருத்திலிருந்து நான் மாறுபடுகிறேன். டொமெஸ்டிக் ஹவுஸ் கனெக்ஷன் பெற்றிருப்பவர்கள் இப்போது 77½ பைசாவைக் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது என்று சொல்கிறார்கள். உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் காஸ்ட் பிரைஸ் 19 பைசாதான். அப்படியிருக்கும்போது பெட்டிக் கடையில் இருப்பவர்களுக்கு 77½



பைசா போடுகிறார்களே, இது என்ன நியாயம்? யார் அதிகமாகக் குரலை எழுப்பமாட்டார்களோ அவர்கள் மீது போடுகிறார்கள். இந்த வரியைத் தமிழ் நாட்டு சாதாரண மக்களாலும் கொடுக்க முடியாமல் போகிறது. மத்திய அரசைக் கேட்டால், அவர்களும் மாற்ற முடியாது என்கிறார்கள் என்பதை ஒத்துக் கொள்ளுகிறேன். நாங்கள் கேட்பது, தமிழ் நாட்டிலே பசை உள்ளவர்கள்மீது கை வைக்க வேண்டும் என்பது. பசையுள்ள பெரும் நிலப்பிரபுக்கள் ஏழை விவசாயிகளை வைத்து ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள், கிளர்ச்சிகளை நடத்துகிறார்கள் என்பதற்காக அவர்களுக்குப் பயந்து நிலப்பிரபுக்களுக்கு வரியைப் போடாமலிருப்பது சரியல்ல. அங்கேயும் அதிகமான மின்சாரத்தை உபயோகப்படுத்துகிறவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மீது இந்த வரியைப் போட வேண்டும். அவர்கள் கொடுக்கக்கூடிய சக்தி உள்ளவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள், ஹைடென்ஷனை உபயோகப்படுத்துகிறவர்களுக்கு இந்த வரியைப் போட்டால், அதனால் அவர்கள் உற்பத்தி செய்கிற பொருள்களின் விலை கூடும் என்று சொன்னார்கள். அதற்காக ஹவுஸ் கனெக்ஷன் உள்ளவர்களுக்குப் போட வேண்டியதில்லை. அப்படி பொருள்களின் விலை ஏறினாலும், அந்த விலையேற்றத்தை எல்லோருமாகச் சேர்ந்து எதிர்க்கலாம். ஆகவே இன்டஸ்டிரியல் மற்றும் அக்ரிகல்சுரல் துறையைச் சேர்ந்த வசதிக்காரர்களுக்கு இந்த வரியைப் போட வேண்டும் என்ற கருத்தைக்கூறி, முடிக்கிறேன்.

[முற்பகல் 10-40]

*திரு சி. இராமலிங்கம்: தலைவரவர்களே, மின்சார வரி உயர்வு பற்றி தமிழ் நாடு அரசு கொண்டு வந்துள்ள இந்த வரி விதிப்புத் திருத்தத்தைப் பற்றி ஒரு சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். இன்றைக்கு பேரூராட்சிகள், நகராட்சிகள் போன்றவைகள் எல்லாம் வரி வசூல் சரியாக ஆகாமல் நிர்வாகத்தை நல்ல முறையிலே நடத்த முடியாமல் இருந்துகொண்டிருக்கின்றன. இந்த நேரத்தில் 27 பைசா என்று நகராட்சிகளுக்கு, பேரூராட்சிகளுக்கு, பொது வினியோகங்களுக்கு என்று வரி விதிக்கப்பட்டு இந்த வரியில் 3 பைசா மத்திய அரசுக்குப் போகிறது என்று சேர்க்கப்பட்டுள்ளதால், முனிசிபாலிட்டிகள் எல்லாம் சரியான முறையில் இந்த வரியைக் கட்ட முடியாத நிலையில் இருக்கின்றன. இன்றைக்கு அனகாபுத்தூர் பேரூராட்சியின் தலைவராக நான் 10 ஆண்டுகளாக இருக்கின்றேன். இரண்டு ஆண்டுகள் நீங்கலாக. நானே செலுத்த வேண்டிய பணத்தை மின்சார அலுவலகத்துக்குக் கட்ட முடியாத நிலையில் இருக்கிறேன். 46 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டியிருக்கிறது. அதேபோல நகராட்சிகளும் பல லட்சக்கணக்கான ரூபாய் கட்ட வேண்டியிருக்கிறது. இதை ஏன் எங்களால் கட்ட முடியவில்லை என்பதைப் பார்க்க வேண்டும். கிராமப் பஞ்சாயத்துக்கள் ஊராட்சிகள் ஒன்றியம் மூலமாகக் கட்டி விடுகின்றன. பேரு

ராட்சிகள், நகராட்சிகள் எல்லாம் நாங்களே நேரடியாகக் கட்ட வேண்டுமென்ற ஒரு சூழ்நிலை வந்ததிலிருந்து அந்தப் பணத்தை நிர்வாக அதிகாரிகள் கட்டுவதேயில்லை. அதற்கு முன்னால் பஞ்சாயத்து பேரூராட்சியாக இருந்தாலும் பணத்தைக் கட்டவில்லையென்றால், 'பியூஸ்'-ஐப் பிடுங்கிக்கொண்டு போய் விடுவார்கள். அப்படிச் செய்கின்ற நேரத்தில் தெரு விளக்குகள் எரியாது. ஊர் மக்கள் இதைப்பற்றிக் கேட்கிறபோது, அவர்கள் ஓடோடி வந்து எப்படியாவது பணத்தைக் கட்டி விடுவார்கள். கடந்த ஆட்சியில் இந்த முறை ஊராட்சிகள் நிர்பந்தப்படுத்தி வசூல் செய்யக் கூடாது என்று ஆணை வந்ததினால், அவர்கள் இன்றைக்குக் கட்ட முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். பேரூராட்சிகளும், நகராட்சிகளும் கட்ட வேண்டியதை ரத்து செய்து விட்டு இனி கணக்கைப் புதிதாக வைத்துக்கொண்டு எந்த நகராட்சிகள் அல்லது பேரூராட்சிகள் கட்டவில்லையோ அந்தப் பேரூராட்சி அல்லது ஊராட்சியைச் சேர்ந்த தெரு விளக்குகளை 'பியூஸ்' பிடுங்குவது என்கின்ற பழைய முறையை அமுலுக்குக் கொண்டு வந்து செயல்படுத்த மாண்புமிகு அமைச்சரவர்கள் யோசனை செய்ய வேண்டும். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால் 10 ஆண்டுகளாக என்னுடைய நிர்வாகத்திலே உள்ள பஞ்சாயத்தில் 120 தெரு விளக்குகள்தான் இருக்கின்றன. இன்றைக்கு 10 ஆண்டுகளுக்குப் பிறகு பஞ்சாயத்து 5 மைல் விஸ்தீரணத்துக்கு வளர்ந்திருக்கிறது. மேற்கொண்டு லைட்கள் அதிகம் வேண்டுமென்று தீர்மானம் போட்டு, அதை ஆர்.டி.ஓ. பரிந்துரை செய்து அனுப்பினால் கூட வரி பாக்கி இருக்கிறது என்பதைக் காரணம் காட்டி அனுமதிக்க மாட்டோம் என்று மின்சார வாரியத்தினர் சொல்லுகிறார்கள். எதனால் இந்த பாக்கி வந்தது என்பதை ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். உள்ளாட்சித் துறை நிர்வாக அதிகாரிகளாக இருக்கின்றவர்கள் மின்சார வரியைக் கட்ட முன் வருவதில்லை. உறுப்பினராக கட்டினால்தான் கட்ட முடிகிறது. ஆகவே பழைய முறையை அமுலுக்குக் கொண்டு வர வேண்டும். மத்திய அரசினுடைய வரியைச் சேர்த்து, எங்களுடைய பஞ்சாயத்தைப் பொறுத்தவரை, 7 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டியிருக்கிறது என்றால் 3 சதவிகிதம் இன்னும் வரி கூடி விடுகிறது. இந்த 3 சதவிகிதம் வரியை பஞ்சாயத்துக்கள் மீது போடக் கூடாது என்று இந்த சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன். நெசவாளர்கள் குடியிருக்கின்ற வீடுகளுக்கு மின்சாரக் கட்டணம் 1(ஏ) என்ற முறையிலே 35 பைசா வசூல் செய்யப்படுகிறது. நெசவாளர்களுடைய வீடுகளில் 4 அல்லது 5 தறி இருந்தால், 75 பைசா வசூல் செய்கிறார்கள். சாதாரண வீடுகளுக்கு எப்படி இருக்கிறதோ அதேபோல அல்லது வேண்டுமானால் ஒரு 10 தறிகளுக்கு மேல் இருந்தால் 75 பைசா என்றும் 10 தறிகளுக்குக் கீழ் இருந்தால், 35 பைசா என்றும் இதை விதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மின்சார வரிச் சலுகையை பஞ்சாயத்துக்களுக்கு வழங்கி குடிசைத் தொழிலுக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டு விடை பெறுகிறேன்.



*திரு. க. இராமமூர்த்தி: மேலவைத் தலைவரவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்தவரையிலும், இதனுடைய பல்வேறு பிரிவுகள் சிறு தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்களுக்கு பாதகம் விளைவிப்பதாக இருக்கும் என்று அஞ்சுகிறேன். காரணம் சிறிய தொழில் நடத்துபவர்களுக்கு அரசாங்கம் பல துறைகளிலே சலுகைகள் வழங்கியிருந்தாலும் இந்த மின் விதிப்பைப் பொறுத்த வரையிலும், புதிதாகத் துவங்குகின்ற தொழிற்சாலைகளுக்குச் சலுகை காட்டியிருக்கிறார்களே தவிர, சிறு தொழிற்சாலைகளுக்கான தனிச் சலுகை என்ற முறையில் எந்தவிதச் சலுகையும் இல்லை என்பதை வேதனையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். புதிதாகத் துவங்குகின்ற தொழிற்சாலை என்று சொல்லுகின்றபோது, சிறிய அல்லது பெரிய தொழிற்சாலைகள் அந்தப் பலனை பெறுகின்றன. சிறு தொழிற்சாலை பெரிய தொழிற்சாலைக்கு ஈடு கொடுக்க முடியாது. பெரிய தொழிற்சாலைகள் அனுபவிக்கின்ற அதே சலுகைகள் தான் சிறிய தொழிற்சாலைகளுக்கும் என்றால், சிறிய தொழிற்சாலைகளை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் துணை செய்யவில்லையோ அல்லது மின்சார வாரியம் துணை செய்யவில்லையோ என்கின்ற சந்தேகம் எனக்கு எழுகிறது. அந்த அளவிலே இந்த வரி விதிப்பை, கட்டண விதிப்பைத் திருத்தியமைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இரவிலே இயங்குகின்ற தொழிற்சாலைகளுக்கு இந்த மின் விதிப்பிலேயிருந்து சில சலுகைகள் வழங்கியிருக்கிறார்கள். சிறிய தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை, இரவிலே இயங்க முடியாத சிறிய தொழிற்சாலைகள் ஏராளம் உண்டு. அவை செய்கின்ற தொழிலின் காரணமாக இரவிலே இயங்க முடியாது. அப்படிப்பட்ட இரவிலே இயங்க முடியாத நிலையிலிருக்கின்ற சிறிய தொழிற்சாலைகளுக்கு இந்தச் சலுகைகள் கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகின்றது உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், அரிசி ஆலைகளைப் பொறுத்த வரை, மிகப் பெரிய அளவிலே நாள் ஒன்றுக்கு 200, 300 அல்லது ஆயிரம் மூட்டைகள் அரவை செய்கின்றஅரிசி ஆலைகள்—பெரிய அரிசி ஆலைகள் பகல் என்றும் இரவு என்றும் பாராமல் இயங்கி இந்தப் பலனை அனுபவிக்க முடியும், ஆனால், கிராமப்புறத்திலே இருக்கின்ற சாதாரண அரிசி ஆலைகள் பகலிலேதான் ஓட முடியும். காரணம் கிராமப்புறத்திலேயிருந்து வருகிறவர்கள், விவசாயிகள், ஒரு மூட்டை, இரண்டு மூட்டை நெல்லை மில்களுக்குப் பகலிலே தான் கொண்டு வருவார்கள். இரவிலே இதை அரைத்துக் கொடு என்று எந்த அரிசி ஆலைக்கும் அவர்கள் தர மாட்டார்கள். சலுகைகள் தருகின்றபோது, அதைப் பற்றியெல்லாம் நினைப்பதற்கில்லை என்றாலும்கூட, பெரிய பெரிய வியாபாரிகளுக்கும் வசதி படைத்தவர்களுக்கும் தான் இப்படிப்பட்ட சலுகைகள் செல்கின்றன. கிராமப்புறங்களில்

உள்ள சாதாரண மக்களுக்கு, சிறிய சிறிய தொழிற்சாலைகளுக்கு அந்தப் பலன்கள் கிடைக்காமல் போகின்ற நிலை இருக்கிறது. இதைப் பற்றியும் மீண்டும் மின். வாரியம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான் ஒரு தகவலை குற்றச்சாட்டாகச் சொல்லுவதால் தவறு இல்லையென்று கருதுகிறேன். தொழிற்சாலைகளுக்கான சலுகைகள் (கன்செஷன்) அறிவித்திருக்கின்றார்கள். விவசாயத்திற்கு மின்சாரம் தருவது போன்று வேறு சில தொழிற்சாலைகளுக்கு என்று வருகின்றபோது, அதிலே ''பிலிம் புரடெக்ஷன்'' ஐச் சேர்த்திருக்கிறார்கள். இது எந்த விதத்தில் நியாயம்? அந்தத் தொழிற்சாலை மீது எனக்கு எந்த விதக் கோபமும் இல்லை. அதில் ஈடுபட்டிருப்பவர்கள் மீதும் எனக்குக் கோபமில்லை. அந்தத் தொழிலைப் பொறுத்தவரை, பெரிய பெரிய முதலீடுகள் புழங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் நன்றாக அறிவோம். லாபம் வருகிறதா இல்லையா என்பதல்ல பிரச்சினை. முதலீடு அதிகமாக வைத்துச் செய்கின்ற ஒரு பெரிய தொழில் அது. அதில் இருப்பவர்கள் மிகப் பெரிய வருவாயை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு பெரிய சுகபோகத்தை அனுபவிக்கின்ற ஒரு தொழிலுக்கு வரிச் சலுகை காட்ட வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? இது அவசியம் தானா என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இப்படிப்பட்ட சலுகைகள் ஒரு புறம் காட்டப்படுவதன் மூலம் இன்னொரு பிரிவினர்மீது பளுவாக சுமத்தப்படுகின்றது. அது போலவே 'டீ' எஸ்டேட் களுக்கு இந்த வரிச் சலுகை தரப்பட்டிருகின்றது. 'டீ' எஸ்டேட்களுக்கு உச்ச வரம்பே கிடையாது. அந்நியச் செலாவணியைப் பொறுத்தவரையிலே, அதை ஈட்டித்தரும் 'டீ' எந்த அளவுக்கு லாபகரமான தொழிலாக இருக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். அந்தத் தொழிலுக்கு மின்சாரத் துறையிலே சலுகை தந்திருக்கிறார்கள். அவர்கள் பயன்படுத்துகிற மின்சாரத்துக்குச் சலுகை தருவது எந்த வகையிலே நியாயம் என்பது எனக்குத் தெரியவில்லை.

[முற்பகல் 10-50]

அதைப் போலவே, ''டிமான்ட் சார்ஜஸ்'' என்ற ஒரு வழிமுறையை வகுத்திருக்கிறார்கள். இதைச் செய்யும்போது, சிறிய தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற சிறு அளவிலே மின்சாரத்தைப் பயன்படுத்துகின்ற தொழில்களின் நலன்களையும் மனதிலே வைத்து இதைச் செய்ய வேண்டும். அப்படியில்லாமல், பெரிய தொழில்கள், சிறிய தொழில்கள் என்று எல்லாவற்றையும் ஒரு முறையாக வைத்து அணுகுவது சரி அல்ல. பெரிய தொழில் நடத்துகிறவர்களுக்குக் கிடைக்கிற லாபம் சிறிய தொழில்களை வைத்து நடத்து



கிறவர்களுக்குக் கிடைப்பதில்லை என்பது மட்டுல்ல, இப்படி அவர்கள் மீது சார்ஜஸ் விதிக்கும்போது, நிறைய லாபம் சம்பாதிக்காத சிறிய தொழில்கள் நசித்துப்போகிற நிலைதான் ஏற்படுகிறது. எனவே, அதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்கள், ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள் ஆகியவைகளைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் இருக்கிற எல்லா சங்கடங்களைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். அதோடு குறிப்பாக இன்னொரு சங்கடத்தையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்த உள்ளாட்சி மன்றங்கள் எல்லாம் தாங்களே மின்சார விளக்குகளைப் பொருத்திக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்று வாதாடி சண்டை போட்டவன் நான். அவர்களிடம் அது ஒப்படைக்கப்பட்டால், தெருக்களிலே விளக்குகள் எரியவில்லை என்று சொல்கிற குறைபாடுகள் நிச்சயமாக நிவர்த்திக்கப்படும் என்று நம்பினேன். ஆனால் இன்றையதினம் இருக்கிற நிலைமையைப் பார்த்தால், அது மிக மோசமாக இருக்கிறது. ஊராட்சி மன்றங்களானாலும், நகராட்சி மன்றங்களானாலும் அவைகளுக்கும் மின்சார வாரியத்துக்கும் இடையே ஒரு சரியான ஒருங்கிணைப்பு இல்லாத காரணத்தால், யார், யார் சொல்லைக் கேட்பது, யார் சொல்லி யார் பணியாற்றுவது என்பது புரியாத காரணத்தால், தெரு மின்விளக்குகளைப் பொறுத்தவரை, நிலைமை மிகவும் மோசமாகியிருக்கிறது. முன்பெல்லாம் ஒரு சில கிராமங்களில் தான் அங்கொன்றும் இங்கொன்றுமாக விளக்குகள் எரியாமல் இருந்தன. ஆனால், இன்றைக்கு தமிழகம் முழுவதுமே தெரு மின்விளக்குகள் பொதுவாக எரிவதில்லை. நகராட்சி மன்றங்களிலே தெரு மின் விளக்குகள் எரியவில்லை என்று யார் போய்ச் சொன்னாலும், அதைக் கேட்டுக்கொள்கிறார்களே தவிர, மின் விளக்குகளை எரியவைப்பதற்கு யாரை வேலை செய்யச்சொல்வது என்று புரியாமல் ஒருவருக்கொருவர் சண்டையிலேயே முடிந்துவிடுகிறது. மேலும், மின் விளக்குகளை வாங்குவதற்கு உள்ளாட்சி அமைப்புகளிலேயிருந்து எப்படிப் பணத்தை எடுப்பது, எப்படி வாங்குவது, எப்படி இவைகளுக்கு சர்ட்டிபிகேட்கள் தருவது என்பதுபோன்ற பல்வேறு சங்கடங்கள் வந்து, இன்றையதினம் தமிழகமே ஓரளவுக்கு இருளிலே மூழ்கத் துவங்கிவிட்டது. மாண்புமிகு அமைச்சரவர்கள் கண்டிப்பாக தமிழகத்தை இருளிலே மூழ்கிவிட விட்டுவிட மாட்டார்கள் என்று நம்புகிறேன். இதற்கும் சரியான ஒரு நிவாரணத்தைத் தந்தாக வேண்டுமென்று அவர்களிடத்திலே கூறிக்கொள்கிறேன்.

அடுத்து ''மீட்டர் ரென்ட்'' என்று சொல்லி ரூ.2½ என்றும் ரூ. 8 என்றும் இரண்டு நிலைகளிலே வாடகை வசூல் செய்கிறார்கள். இதைக் குறித்து ஒரு கருத்தை பணிவன்போடு தெரிவித்துக்

கொள்ள விரும்புகிறேன். இன்னும் எத்தனை காலத்துக்கு இந்த மீட்டர் ரென்டை நீங்கள் வசூலிக்கப்போகிறீர்கள்? மீட்டர்களுக்கான விலையை முழுவதுமாக 'ரென்ட்' என்ற பெயரிலே வசூலித்துவிட்டு அதற்குப் பின்னாலே வட்டியையும் சேர்த்து வசூலித்துவிட்டு இன்னமும் மீட்டர் ரென்ட் என்று ஒரு தொகையை வசூலிப்பது எந்த வகையிலே நியாயம் என்று தான் கேட்க விரும்புகிறேன். மீட்டர் ரென்ட் என்பது நிரந்தரமாகவே இருக்க வேண்டுமா? காலாகாலத்துக்கும் மீட்டர் ரென்ட் என்று வசூலிப்பது எப்படி நியாயமாக இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே இதையும் அமைச்சரவர்கள் கைவிட முன்வருவார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து, ''லேவிஷ் இல்லுமினேஷன்'' அலங்கார விளக்குகள் பற்றி அமைச்சரவர்கள் ஒரு கருத்தை ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். அரசியல் கட்சிகளைப் பொறுத்தமட்டிலுமாவது, இதற்கு விதிவிலக்கு அளிக்கலாம் என்று நினைக்கிறேன். மற்றவர்கள் நிலை வேறு. அரசியல் கட்சிகள் நிலை வேறு. 100, 200 விளக்குகள் போட்டு அலங்காரம் செய்ய விரும்புகிறோம். இதற்கு மற்றவர்களிடம் கெஞ்சிக் கேட்டு நிதி வசூல் செய்துதான் செய்ய வேண்டியிருக்கிறது. தொண்டர்களுடைய ஆர்வம் காரணமாக தலைவர்களுக்காக இதையெல்லாம் செய்ய வேண்டும் என்று செய்கிறார்கள்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:</u> தலைவர் அவர்களே அதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன. நான் அனுபவ பூர்வமாக அதைப் பார்த்திருக்கிறேன். தந்தை பெரியார் அவர்களுடைய சிலையைத் திறந்து வைக்கின்றபோது, நிறைய விளக்குகளைப் போடச்சொன்னோம். கட்டணத்தைப்பற்றிக் கேட்டபோது, 20 மடங்கு என்று சொன்னார்கள். எத்தனை ஆயிரம் ரூபாய் கொடுத்திருப்போம் என்று நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். சலுகைக் கட்டணத்தில் தருவதால் கட்சிகளிடையே போட்டாபோட்டி, மனப்பான்மைதான் உருவாகும் என்பதால், இவ்வாறு உயர்த்தப் படுவது கூட தேவை என்றுதான் என்னைப் பொறுத்தவரையில், நான் கருதுகிறேன்.

<u>திரு. க. இராமமூர்த்தி:</u> அமைச்சரவர்கள் தமது சொந்த அனுபவத்தைக் குறிப்பிட்டார்கள். தந்தை பெரியார் அவர்களின் சிலைத் திறப்பு விழாவின்போது, எவ்வளவு சங்கடப்பட்டார்கள், எவ்வளவு கஷ்டப்பட்டார்கள், எவ்வளவு கோபப்பட்டார்கள் என்பது எனக்குத் தெரியும், உண்மை நிலையும் அதுதான். அவ்வளவு கோபம் வந்ததற்குக் காரணம் 20 மடங்கு மின்சாரக் கட்டணத்தை வசூல் செய்கிறார்கள். இந்த அளவுக்கு அரசியல் கட்சிகளாலே கட்ட முடியாது. அரசாங்க விழாவாக இருந்தால்,



இப்படிப்பட்ட சங்கடங்கள் எல்லாம் இருக்காது. கட்சி விழா என்று செய்கிறபோது, இந்த நிலைமைகள் தான் ஏற்படும். ஆனால் அப்போது நடந்த அந்த விழாவைப்போன்று நாம் அடிக்கடி விழாக்கள் நடத்துவது இல்லை. தந்தை பெரியார் அவர்களுடைய சிலைத் திறப்பு விழாவைப்போல, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டதற்குப் பிறகு அந்த அளவுக்கு அலங்கார விளக்குகள் அமைத்து வேறு ஏதேனும் ஒரு விழா நடத்தியிருக்கிறதா என்றால், இல்லை என்றுதான் நான் கருதுகிறேன். எனவே, அரசியல் கட்சிகளுக்குச் சலுகை தருவதிலே சிக்கல் இருக்காது என்றுதான் நான் நம்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் தமது கருத்தை மாற்றிக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். எனவே, அதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அதிலே சட்டச் சிக்கல் இருந்தாலும் கூட, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் துணையோடு அதை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIYAR: I want to make one clarification, Sir. The Court is bound to strike it out on the ground of hostile discrimination. It is not a class and there is no object to be achieved. My opinion is that *prima facie* this cannot stand the test of Art 14 of the Constitution.

<u>திரு. க. இராமமூர்த்தி:</u> தலைவர் அவர்களே, சட்டச் சிக்கலைப் பற்றி மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். சட்டச் சிக்கல் இருந்தாலும், அதை நிவர்த்தி செய்வதற்காகத்தான் நாம் இந்தச் சட்டமன்றங்களையே வைத்திருக்கிறோம். சட்ட நிபுணத்துவம் வாய்ந்தவர்களையும் வைத்திருக்கிறோம். எனவே, அதை அமைச்சர் அவர்களுடைய சிந்தனைக்கே விட்டுவிடுகிறேன்.

இறுதியாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் குறிப்பிட்ட கருத்தைப்பற்றி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மேட்டூரைச் சுற்றியிருக்கிற பகுதிகளுக்குத் தனியான சில சலுகைகளைக் கேட்டிருக்கிறார்கள். இதைப்போல தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, மிகப் பெரிய அளவிலே மின்சாரம் உற்பத்தி செய்யும் நெய்வேலி நமக்கு மின்சார சங்கடம் ஏற்படுகின்றபோதெல்லாம், சிறந்த அளவுக்குக் கைகொடுத்து உதவுகிறது என்பது தெரியும். ஆனால் அந்தத் தென்னாற்காடு மாவட்டத்திலே நாங்கள் எந்தச் சலுகையும் அனுபவிப்பதில்லை. இன்னும் சொல்லப்போனால், நெய்வேலி தொழிற்சாலையிலே தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பே மிகக் குறைவு என்பதுதான் உண்மை, எனவே, அமைச்சரவர்கள் தமது சொந்த மாவட்டத்

[திரு. க. இராமமூர்த்தி] [1978 செப்டம்பர் 15

துக்குச் சலுகை காட்டியதாக எண்ணாமல், முதலமைச்சர் அவர்களையும் மற்ற அமைச்சர்களையும் கலந்து எங்களுக்குச் சலுகை தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் அவர்களுடைய மாவட்டத்திலே இருப்பதால், எங்களை அமைச்சர் அவர்கள் புறக்கணித்து விட வேண்டாம், தண்டித்துவிட வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களைத் திருத்தி அமைத்தல் சம்பந்தமான சட்ட முன் வடிவின்மீது எனது கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களே இப்படிப்பட்ட ஒரு சட்டமுன்வடிவினை அறிமுகப்படுத்துவதற்கு நிச்சயமாக வருத்தப்பட்டிருப்பார்கள். ஏனென்றால் சட்டமன்றப் பேரவையில் அவர் பேசிய பேச்சுக்களைப் பத்திரிகையிலே பார்க்கிறபோது, எப்படி எதிர்க் கட்சி உறுப்பினர்கள் மனவருத்தத்தையும் வேதனையையும் தெரிவித்தார்களோ அதைப் போலவே அமைச்சர் பொறுப்பிலே இருந்தும் அவர் பிரதிபலித்திருக்கிறார். ஆளுங் கட்சியே கூட இப்படிப்பட்ட ஒரு சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்துவதையே விரும்பவில்லை. ஆனாலும் மத்திய அரசாங்கத்தினுடைய கட்டாயத்தின் அடிப்படையிலே அவர்கள் எடுத்த முடிவின் அடிப்படையிலே இப்படிப்பட்ட சட்டமுன்வடிவை இந்த மன்றத்துக்குத் தந்திருக்கிறார்கள் என்பதை நாங்கள் உணராமலில்லை. மாநில அரசாங்கங்கள் தங்களுக்கு இருக்கிற ஏதோ சின்னச்சின்ன நிதி ஆதாரங்களை வைத்துக்கொண்டு மாநிலங்களை வளர்ச்சியடையச் செய்யவேண்டும், அங்கே தொழில்களை வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் போது, நாட்டு மக்களுக்குப் பல்வேறு வசதிகளைச் செய்துதர வேண்டும் என்ற முயற்சி எடுக்கும்போது, நாகரீகமான ஒரு சமுதாய அமைப்பை உருவாக்கவே மின்சாரம் தான் அடிப்படையான தேவை என்கிற சூழ்நிலையில் மின்சாரத்தை அதிகமாக உற்பத்தி செய்ய மாநில அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்போது, இதற்கெல்லாம் ஒரு முட்டுக்கட்டை போடுவது போல இன்றைய தினம் மத்திய சர்க்காருடைய நடவடிக்கை அமைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த வகையில் மத்திய அரசினுடைய ஆயத்தீர்வையை இந்த அரசே கூட வரவேற்கவில்லை என்பதை முதலமைச்சர் அவர்களே தெளிவு படுத்தியிருக்கிறார்கள். இந்தத் தீர்வையை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று அவர்கள் மத்திய அரசுக்குத் தந்தியடித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, டெல்லியிலே நடைபெற்ற வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலேகூட தம்முடைய எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார்கள்.



1978 செப்டம்பர் 15] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

(முற்பகல் 11–00)

இந்தியாவில் இருக்கின்ற இன்னும் சில அமைச்சர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? அவர்கள் எல்லாம் கூட இதை எதிர்க்க வேண்டும் என்று சொல்வது உள்ளபடியே எதிர்க் கட்சிக்காரர்களைத் திருப்தி செய்வதற்கு என்றுதான் சொல்ல வேண்டும். ஏதாவது ஒரு வகையிலே நாம் ஒரு நல்ல முன்மாதிரியாக இருந்தால் கூட நல்லது, தமிழகம் இந்தியாவுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். உள்ளபடியே மாநில அரசுகள் எல்லாம் இதை எதிர்த்து ஏன் தீர்மானம் போடக்கூடாது என்று என்றால் புரிந்து கொள்ள முடியவில்லை. அரசுக்கும் இந்த ஆட்சியாளருக்கும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய சட்ட மன்றத்திலே மின்துறை அமைச்சர் அவர்கள் பதில் சொன்னது பத்திரிகையிலேகூட வந்திருக்கிறது. உறுப்பினர்களாக இருக்கின்ற நாங்கள் ஒத்துழைக்க மாட்டோம் என்று நினைக்கக்கூடாது. இங்கு பேசியபோது, இந்த மசோதாவை, தீர்மானத்தை மாற்றம் செய்கின்ற அளவுக்கு அதிகாரங்கள் இருக்கின்றன என்றுகூட சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். இதைச் சொல்வதன் மூலம், ஒரு மாதிரியான சூழ்நிலை உருவாகுமானால், திராவிட முன்னேற்றக் கழகம், இந்த அரசாங்கத்தோடு, இன்றைய ஆளுங்கட்சியோடு சேர்ந்து போராடுவோம் என்றும் நாங்கள் உங்களைக் கைவிட மாட்டோம் என்றும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த மசோதா வருவதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றி மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசுகிறபோது, மிக விரிவாக எடுத்துச் சொன்னார்கள். இந்த அளவுக்கு இந்த மின் கட்டணம் உயர்வதனால், இந்தத் தீர்வையினால் நம்முடைய நாடு பாதிக்கப்படவிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் அந்த இலாகாவில் பணியாற்றியவர் என்ற காரணத்தினாலேயும், மக்களுடைய உணர்வுகளையும், நிலைமைகளையும் புரிந்து கொண்டு இருப்பவர் என்ற காரணத்தினாலேயும், அத்துடன் மின்சார வாரியத்தினுடைய நிலைமைகளையும் தெரிந்து கொண்டிருப்பவர் என்ற காரணத்தினாலேயும் இதைப்பற்றி நன்கு பேசியிருக்கின்றார்கள், அவர்கள் அவருடைய முழு ஆற்றலையும், அறிவையும் பயன்படுத்தி இருக்கின்றார்கள். இந்தத் தீர்மானத்திலே அவருடைய கவனத்தைச் செலுத்தியிருக்கிறார்கள் என்பதை இந்தச் சட்ட முன்வடிவிலே, புரிந்துகொள்ள முடிந்தது. நமக்கு இருக்கின்ற கவலையெல்லாம், இன்றைய தினம் மாநில அரசும், இந்தத் தீர்வையை விதிக்கின்ற மின்துறையும் இதில் ஆண்டுக்காண்டு நஷ்டத்தைத்தான் காட்டிக்கொண்டிருக்கிறது. அந்த வாரியத்தில் கிட்டத்தட்ட ஒரு லட்சம் தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருக்கின்றனர். மேலும் மின்வாரியமும் உள்ளபடியே நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்

நிலையில் மின் வாரியம் எந்த அளவுக்குக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றது என்பதைப் பொறுப்புள்ள உறுப்பினனான நானும் உணராமல் இல்லை. இப்படிப்பட்ட தீர்வைகளை விதிப்பதன் காரணமாக, இந்த மின் வாரியம் மட்டுமல்ல, மாநில மக்களும் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற சட்ட முன் வடிவைப் பார்க்கிறபோது தெரிகிறது. இதைப் பார்க்கின்றபோது, நம்முடைய மனவேதனையை நம்மால் தெரிவிக்காமல் இருக்கமுடியவில்லை. இந்தச் சட்ட முன் வடிவில் ஹைடென்சன் பவர் சப்ளையைப் பொறுத்தவரையில் உள்ள கட்டணம் பற்றிக் குறிப்பிட்டு 1,ஏ பிரிவில் சொல்லியிருக்கிறார்கள். கொடுக்கப்பட்டுள்ள சலுகைகளைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். "In the case of new industries, the following concessional tariffs shall be charged for the first five years after the commencement of production," என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது முதல் இரு ஆண்டுகளுக்கு 25 சதம், 4 ஆண்டுகளுக்கு 80 சதம் என்றெல்லாம் சலுகைகள் காட்டியிருக்கிறார்கள். இதன் காரணமாக 5 ஆண்டுகளுக்கு புதிதாக ஏற்படக்கூடிய தொழில் நிறுவனங்களுக்கு ஒரு பாதுகாப்பு கிடைக்கிறது. நம்முடைய நோக்கம் எல்லாம், இந்த நாட்டிலே படித்தவர்களுக்கு வேலைவாய்ப்புகள் உண்டாக்க வேண்டும், தொழில்கள் வளர வேண்டும், தொழிலாளர்கள் வளம் பெற வேண்டும் என்பதுதான், ஆகவேதான். இப்படிப்பட்ட சலுகைகளையெல்லாம் தர முடியும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி இன்னும் விளக்கமாகத் தெரிவித்தால், நான் நன்றியுள்ளவனாக இருப்பேன். கருநாடக மாநிலத்தைப் பொறுத்தவரையில், அம்மாநிலத்தில் தொழில் வளர வேண்டும் என்பதற்காக மின்சாரத் தீர்வையை மத்திய அரசு போட்டிருக்கிறது என்றாலும், மாநில அரசே அதற்கு சப்சிடி கொடுத்து, தொழில்களுக்கு வளர்ச்சியூட்டிக் கொண்டிருக்கின்றது. அவர்கள் தொழில்களுக்கு சப்சிடி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள், சிறு தொழிற்சாலைகள்; ஸ்மால் இண்டஸ்ட்ரீசுக்குக்கூட அவர்கள் சலுகைகள் கொடுக்கிறார்கள், இப்படிப்பட்ட தீர்வைகளை மத்திய அரசு விதித்த பின்னாலேயும்கூட, தென்னகத்திலே பொதுவாக தொழில்கள் வளர்வதற்கு வேண்டிய வாய்ப்புகள் இருந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் திரு. தேவராஜ் அர்ஸ் அரசுகூட இப்படிப்பட்ட சலுகைகளை வழங்கிக் கொண்டிருக்கிறது, நம் தமிழகத்தில் அதுபோல வழங்க முடியுமா என்பதைப் பற்றிப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், இப்போதே இந்த மாநிலத்தில் இருப்பவர்கள் அங்கே போய் தொழில் ஆரம்பித்தால் என்ன என்று சிந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்த மாநிலத்தில் இருக்கின்ற தொழிலதிபர்கள் அந்த மாநிலங்களுக்குச் சென்று தொழில் ஆரம்பிக்காத வகையில், இங்கேயே தொழில்கள் ஏற்படுத்துவதற்கு, வளர்வதற்கு ஏதாவது சலுகைகள் கொடுக்க முடியுமா என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தீர்மானத்திலே சொல்லியிருக்கிறார்கள். முதல் ஐந்து வருடங்களுக்குச் சலுகை என்று சொல்லியிருக்கிறார்கள். அதை மேலும் அதிகமாக்க, 10 ஆண்டுகளுக்கு என்று உயர்த்த முடியுமா என்பதைப்பற்றிப் பரிசீலித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொல்வதுபோல, மாநில அரசு நினைத்தால், அந்தக் கட்டணங்களை எல்லாம் ஒரு நோட்டிபிகேஷன் மூலம் மாற்றிக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். அந்த அதிகாரத்தை நாம் நிச்சயமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லாவற்றையும் பரிசீலித்துக்கொண்டிருக்கின்றோம் என்று சொன்னார்கள். அதிகாரிகள் சில நேரத்தில் சொல்கின்ற யோசனைகள் நமக்குக்கூட நியாயம் என்று தோன்றுகின்ற காரணத்தினாலே, இப்படியும் செய்துவிடலாமே என்ற சந்தேகம் வருகிறது. பிராஞ்ச் ஆலைகள் நிறுவுவது பற்றி ஒரு பிரிவு இருக்கின்றது. நோட் 2 என்ற பிரிவில் "If a consumer starts a branch mill for the manufacture of the same products, the branch mill is not eligible for the concession". என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவர் ஒரு பிராஞ்சு ஆலை ஆரம்பிக்க வேண்டும் என்பதற்காக சலுகை கேட்டிருக்கிறார்கள். ஆரம்பத்தில் கொடுத்த சலுகை இதற்குக் கிடையாது என்று சொல்லிவிட்டிருக்கிறார்கள். இது அவர்கள் தொழில்களைப் பொறுத்தவரையில், பிராஞ்சுகள் ஆரம்பிக்கக்கூடாது என்று சொல்வது போல் இருக்கிறது. அந்த நோட்டை, இன்ஸ்ட்ரக்ஷனைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்ல. நம் நாட்டில் தொழில் வளர்வதற்கு ஊக்கமளிக்க வேண்டும். நம் மாநிலம் நல்ல முன் மாதிரியாக இருக்க வேண்டும். நமது மாநில மின் வாரியம் மின் உற்பத்தியில் ஒரு நல்ல முன்மாதிரியாக இருக்கின்றது. அந்த அளவுக்கு அதை உயர்த்தியிருக்கின்றார்கள். ஆயினும் உற்பத்தியாகின்ற மின்சாரம் இன்னமும் பற்றாக் குறையாகத்தான் இருக்கின்றது.

குறிப்பாக ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையிலே, ஆறு மாதங்களுக்கு இரவு நேரத்திலே தேங்கிக் கிடக்கின்ற நேரத்திலே மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்கு 40 சதவிகிதம் சலுகை அளிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். தொழில்கள் ஆரம்பிக்கப் படுவதற்கு 40 சதவிகிதம் சலுகைகள் கொடுப்பது வரவேற்கத் தக்கது. அதை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் 'டே சிப்ட், நைட் சிப்ட்', ஆக இரண்டு சிப்டுகள் இருந்தால், 25 சதவிகிதம் சலுகை என்றும், 3 சிப்டுகள் என்று வைத்துக்கொண்டிருந்தால் சலுகை கிடையாது என்ற நிலைமையும் இருக்கின்றது. உற்

பத்தி பெருகவேண்டும், வேலை வாய்ப்புகள் அதிகமாக வேண்டும். ஆகையால் தேங்கிக் கிடக்கின்ற மின்சாரத்தை இரவு நேரத்திலே பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ' இரவு நேரம் என்றால் 40 சத விகிதம், இரவு பகல் என்று இரண்டு சிப்டுகள் இருந்தால் 25 சத விகிதம் என்று இருப்பதுபோல், 3 சிப்ட் என்று இருந்தால் 15 சத விகிதம் அல்லது 20 சதவிகிதம் கன்செசன் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிச் சலுகைகள் கொடுத்தால், தொழில்கள் வளரும் என்று குறிப்பிட விரும்புகிறேன். இப்படிச் சலுகைகள் கொடுக்கப்பட்டிருந்தாலும், இதிலே இரண்டொரு விஷயங்களைப் பற்றிச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயத் தொழிலைப்பற்றி மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். கமர்சியல் டாரிப்பாக இருந்தால், யூனிட்டுக்கு 45 பைசா என்பதுகூட அதிகம் தான் என்று சொல்கிறார்கள். பெரிய கடைக்காரர்கள், பத்திரிகைக் கடைச் சொந்தக்காரர்கள், சிறிய கடைக்காரர்கள் எல்லாம் இந்த கமர்சியல் டாரிப்லேதான் வருகின்றார்கள்.

(முற்பகல் 11-10)

அவர்கள் எல்லாம் இதிலே பாதிக்கப்படாமல் இருக்க செய்ய முடியுமா என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

அதைப் போலவே நம்முடைய ஆளும் கட்சி உறுப்பினராக இருக்கக் கூடிய அனகாபுத்தூர் ராமலிங்கமும், திரு. இராமமூர்த்தி அவர்களும், தெருவிளக்கைப் பற்றிச் சொன்னார்கள். இன்றைய தினம் தமிழகத்திலே கிராமப் பகுதிகள் மின்னொளி மயமாக இருக்க வேண்டும். நகரங்களில் இரவு நேரங்களில் பிரகாசமாக இருக்க வேண்டும் என்ற கொள்கையை அத்தனை பேரும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். 1977 ஆம் ஆண்டேகூட, பஞ்சாயத்துகளில் பல புகார்கள் வருகின்றன என்பதால், நம்முடைய அமைச்சர் அவர்கள், மீட்டரை அந்தப் பஞ்சாயத்துக்களே வைத்துக் கொள்ளலாம் என்று இங்கு அறிவித்தார்கள். மீடடர்களை அவர்களே வைத்துக்கொண்டால், தெரு விளக்குகளுக்கு 27 பைசா கட்டணம் என்று அறிவித்தார்கள். அதேநேரத்தில் சொந்த மீட்டர்களை வைத்துக் கொண்டு, சாதாரண ஃபிலமென்ட் பல்புகளைப் போட்டிருந்தால், அது 25 வாட்டாக இருந்தால் ரூ. 1.75 வாடகை வசூலிக்கப்படும் என்றும். 100வாட்டாக இருந்தால் ரூ. 5 வசூலிக்கப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். ஒரு வகையிலே இந்தக் கட்டணங்களை நியாயம் என்று ஒத்துக் கொண்டாலும்கூட, இன்றையதினம் ஃபிலமென்ட் போடுகிற நேரத்தில், அது 100 வாட்டாக இருந்தாலும் வெளிச்சம் கண்ணுக்கே தெரிவதில்லை. வெளிச்சம் போதுமானதாக இல்லை. ஆனால் பலநகரங்களில் மெர்குரி லாம்பும், டியூப் லைட்டுகளும்



போடப்படுகின்றன. அப்படிப்பட்ட விளக்குகளை முனிசிபாலிட்டி களும் பஞ்சாயத்துக்களும் போடுமாறு உற்சாகப்படுத்துவதற்குப் பதிலாக நீங்கள் எந்த லைட்டை வேண்டுமானாலும் போடுங்கள். அது வெளிச்சம் வருகிறதோ இல்லையோ என்று சொல்வதைப் போல, இந்தக் கட்டண வீதங்கள் இருக்கின்றன. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், இந்தச் சட்டத் திருத்தத்திலே மெர்க்குரி லாம்புக்கு எந்த அளவுக்குக் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். மெர்க்குரி லேம்ப் 100 வாட் பல்பாக இருந்தால், அதற்கு மாதத்திற்குக் கட்டணம் 14 ரூபாய் என்றும் அதே நேரத்தில் 100 வாட் லாம்ப் சாதாரண ஃபிலமென்ட்டாக இருந்தால் 5 ரூபாய் கட்டணம் என்றும் போட்டிருக்கிறார்கள். பஞ்சாயத்தில் என்ன செய்வார்கள்? 14 ரூபாய் கொடுத்து எங்கே போடுவது, வெளிச்சம் இருக்கிறதோ இல்லையோ, மக்களைத் திருப்திப்படுத்துவதற்காக சாதாரண விளக்கு இருந்தாலே போதுமென்று சொல்லுவார்கள். ஆகவே அவர்கள் நவீன வசதிகளைச் செய்து தர இப்படிப்பட்ட நிலைமைகள் சங்கடமாக இருக்கும் என்பதால், அதை மாற்றி யமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதைப் போலவே ஃப்ளோரசன்ட் ட்யூப் லைட்டைப் போடுவதாக இருந்தால், இன்னும் அதிகமாகக் கட்டணம் இருக்கிறது. இன்றைய தினம் இது சட்டமாக ஆகிவிட்டாலும், எதிர் காலத்திலே அவற்றையெல்லாம் மாற்ற வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்தாலே, இந்தக் குறைபாடுகளை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள், மீட்டர் ரென்ட் உயர்த்தப்பட்டி ருக்கிறது என்று. நானும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் அங்கே பணியாற்றும்போது, மீட்டர் ரென்ட் மாதம் ஒன்றுக்கு 8 அணாவாகத்தான் இருந்தது. அது காலப்போக்கிலே உயர்ந்து இன்று $2\frac{1}{2}$ ரூபாயாக ஆகியிருக்கிறது. நான் யோசனையாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு இந்தியா மீட்டர்ஸ் நிறுவனம் வேலை செய்கிறது. அங்கே ஒரு மீட்டர் 50, 60 ரூபாய்க்குக் கிடைக்கிறது. 60 ரூபாயைக் கொடுத்து வாங்கி 'கன்ஸ்யூமருக்குப்' போட்டுவிட்டு மாதா மாதம் $2\frac{1}{2}$ ரூபாய் சார்ஜ் செய்கிறோம் என்றால், மார்வாடி வட்டியே தேவலை என்ற நிலை இருக்கிறது. சிங்கிள் ஃபேஸ் மீட்டராக இருந்தால், இரண்டரை ரூபாய் என்றும் மல்டி ஃபேஸ் மீட்டராக இருந்தால் எட்டு ரூபாய் என்றும் இருக்கிறது. இது உள்ளபடியே அதிகம். ஆகவே மறுபரிசீலனை செய்து அதைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி இல்லாவிட்டால், மீட்டர்களை

மின்சார வாரியத்தில் டெஸ்ட் செய்து சொந்தமாகப் போட்டுக் கொண்டால், அதை அனுமதிக்கிற வழிமுறையை உண்டாக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இன்னும் ஐந்து மசோதாக்கள் இருக்கின்றன. அந்த மசோதாக்களில் ஆளுக்கு 5 நிமிடங்கள் என்றாலும் ஒன்றரை மணியாகும். 15 பேர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, எனக்கும் தெரியும். முக்கியமாகப் பேச வேண்டியிருக்கிறது. மின்சார வாரியத்தைப்பற்றிப் பேச ஆரம்பித்தால், நிறையப் பேச வேண்டியிருக்கிறது.

அலங்கார விளக்குகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். அதிலே நான் கருத்து வேறுபாடு கொண்டவன். அவர் சொன்ன கருத்திலே எனக்கு வேறுபாடு இருக்கிறது. அலங்கார விளக்குகளைப் பயன்படுத்துகிறவர்கள் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். மின்சாரத்தைப் பயனுள்ள வகையிலே பயன்படுத்த வேண்டும். தொழில்கள், விவசாய உற்பத்தி ஆகியவற்றைப் பெருக்க பயன்படுத்த வேண்டுமே தவிர மேடைகளிலே, திருமணங்களிலே, விழாக்களிலே வெளிச்சம் போட்டுவிட்டு. நாட்டினுடைய உற்பத்திக்கு உபயோகப்படுத்தக் கூடிய மின்சாரத்தை வீணாக்கக் கூடாது. என்னுடைய கருத்து 20 யூனிட் செலவு செய்துவிட்டால், ஒரு யூனிட்டுக்கு 2 ரூபாயும் அதற்கு மேலே போனால் 5 ரூபாயும் வசூலிப்பது என்பது அதிகம். அதை வேண்டுமானால் முதல் 20 யூனிட்டுக்கு என்பதை முதல் 50 யூனிட்டுக்கு என்று வைக்கலாம். திருமணங்கள் செய்தால்கூட 50, 100 யூனிட்டுகள் செலவு செய்கிறார்கள். அப்படிப்பட்ட நேரங்களில் அதிகமான அளவில் வசூலிக்கிறார்கள் என்ற எண்ணம் வராமலிருப்பதற்காக 20 யூனிட் என்பதை 50 யூனிட்டாக உயர்த்தி, அது வரையில் 2 ரூபாயையும், 50 யூனிட்டுக்கு மேலே போனால் வேண்டுமானால் 5 ரூபாயை வசூலிக்கிற முறையையும் பின்பற்றலாம் என்று என்னுடைய வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

இன்றையதினம், பொருளாதாரச் சிக்கல் என்னும் சூறாவளியில் தவித்துக்கொண்டிருக்கும் மின்சார வாரியத்திற்கு உதவி செய்ய வேண்டும். அதே நேரத்திலே மத்திய அரசு கொண்டு வந்திருக்கிற தீர்வையினால் மாநில அரசு போட்டுத் தீர வேண்டுமென்ற சூழ்நிலையில் இந்தச் சட்டமுன்வடிவு இங்கே நிறைவேற்றப்படவிருக்கிறது. இதனாலே 15 கோடி ரூபாய் மத்திய அரசாங்கத்திற்குச் செல்கிறது, அதைத் திரும்பத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். கேட்கட்டும். ஆனால்



மத்திய அரசாங்கம் நம்முடைய உணர்வுகளைப் புரிந்துகொள்ளாவிட்டால், இந்த அரசு எத்தகைய முடிவை எடுத்தாலும், போராட்டம் என்று சொன்னாலும், கண்டனம் என்று சொன்னாலும் எந்த நடவடிக்கையை எடுத்தாலும், எதிர்க்கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம், இந்த விஷயத்தில் ஆளும் கட்சியோடு சேர்ந்து போராடும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்தச் சட்டமுன்வடிவை ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

*திரு. பி. மாணிக்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்று நான் மூன்று அம்சங்களைப்பற்றிக் கருத்துக் கூற வேண்டியிருக்கிறது. முதலிலே இந்தச் சட்டமுன்வடிவு வந்ததே, மத்திய அரசினுடைய வரிக் கொள்கையின் காரணமாகத்தான். ஏற்கெனவே நமக்கு மதுவிலக்கில் ஏற்பட்டிருக்கக் கூடிய இழப்பை மத்திய அரசு சரிக்கட்டவில்லை. அதில் பாதியை ஏற்றுக் கொள்கிறோம் என்று சொன்னதாகப் பத்திரிகையில் செய்தி வந்தது. எனவே வெறும் வாக்குறுதிகள் பொருளாதாரத்தைக் கட்டிக் காத்துவிட முடியாது. இந்தச் சூழ்நிலையில் மேலும் இந்த சர்சார்ஜைப் போடுவது சாதாரண மக்களையும் பாதிக்கிறது. எனவே "இப்படிப்பட்ட கொள்கைக்கு மாநிலத்தில் எதிர்ப்பு இருக்கிறது. மேலவை இப்படிப்பட்ட கொள்கையை அங்கீகரிக்கவில்லை" என்ற கருத்தை மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டியது மிகமிக அவசியம். எனவே நமக்குக் கிடைக்க வேண்டியது கிடைக்கவில்லை, அதற்கு மாறாக நாம் வசூலித்து அவர்களுக்குத் தர வேண்டியிருக்கிறது. இந்த நிலை சரியானதல்ல. நம்முடைய நாட்டில் தொழில் வளர்ச்சியைப் பெருக்க வேண்டியது எல்லா மாநிலங்களுக்கும் மிக அத்தியாவசியமானது. தொழில் வளர்ச்சிக்கு மின்சாரம் அத்தியாவசியமானது. ஆகவே இந்த சர்சார்ஜை மாநிலங்களின் மீது விதிக்காமலிருக்க மத்திய அரசு முயன்றிருக்க வேண்டும். இது ஒரு மறைமுகமான வரிதான். நம்முடைய நாட்டில் மறைமுகமான வரியை அதிகரித்துச் செல்லும் கொள்கையை மத்திய அரசு மீண்டும் மீண்டும் செய்கிறது என்ற காரணத்தாலே அந்தக் கருத்தை நாம் எதிர்க்கிறோம் என்ற முறையிலே அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

இந்தச் சட்ட முன்வடிவிலே, சிறு தொழில்களுக்கான சலுகை தரப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அதிலே அப்படிப்பட்ட சலுகை இல்லை. ஏனென்றால் தமிழ் நாட்டில் சிறுதொழில்கள் ஒரு கணிசமான அளவுக்கு இருக்கின்றன. இந்த சிறுதொழில்களைக் காப்பாற்றுவதற்காகவே இப்படிப்பட்ட சில சலுகைகளைக் கொடுக்க வேண்டியது அவசியம். சலுகை என்பது மிகத் தாராளமாக இருக்க வேண்டும் என்பதில்லை. இந்த வரி உயர்வைச் சிறிது குறைக்கலாம். குறைக்காவிட்டால், சிறு தொழில்களை நடத்துவது என்பது கஷ்டம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல, சிறிய கடைகள், கமர்ஷியல் ஃபெர்ம்ஸ் ஆகியவைகள் எல்லாம் இப்படிப்பட்ட உயர்வான விகிதாசாரத்திற்கு ஆளாவதால், பாதிக்கப்படும்.

மூன்றாவது அம்சம், இந்த வீடுகளுக்கு 3 பைசா என்று போடப்பட்டிருக்கிறது. அதை இரண்டு பைசாவாக ஆக்க அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், மிகக் கணிசமான அளவுக்கு மின்சாரம், தமிழகத்திலே கிராம அளவிலே கூட, குடிசைகளிலே கூட வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கெல்லாம் 3 பைசா என்று ஆக்குவதால் நஷ்டம் ஏற்படும். சாதாரண மக்களுடைய வாழ்க்கையில் மாதந் தோறும் மின்சாரக் கட்டணம் 6½ ரூபாய் ஆகிறதென்றாலும் அதை 5½ ரூபாயாக ஆக்கினால், அது அவர்களுக்கு ஒரு நிவாரணம்தான். ஆகவே அந்தச் சலுகையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

(முற்பகல் 11-20)

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பெரு மதிப்பிற்குரிய மேலவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசுகிறபோது, ''இந்தக் கூட்டத் தொடரில் மின்சார வாரியத்தினுடைய நிதி நிலை அறிக்கை சம்பந்தமாக விவாதம் வரும், அதிலே பேசுவதற்கான வாய்ப்பு கிடைக்குமென்று எதிர்பார்த்தோம் ஆனால் வாய்ப்புக் கிடைக்காமல் போய்விட்டதே'' என்று சொன்னார்கள்—வருத்தப்பட்டார்கள். ஆனால் இப்பொழுது அவர்கள் மன நிறைவோடு இருப்பார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். ஏனென்றால் மின் வாரிய நிதி நிலை அறிக்கை வந்தால், எந்த அளவு மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்துகொண்டு உரையாற்றுவார்களோ அந்த அளவு இந்தச் சட்டமுன்வடிவின்மீது தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைக் காண்கின்றபோது, நிச்சயமாக அவருக்குத் திருப்தி ஏற்பட்டிருக்கும் என்று கருதுகிறேன். மின் வாரிய நிதி நிலை அறிக்கை பற்றி இந்தக் கூட்டத்தொடரிலேயே விவாதிக்க வேண்டுமென்று நானும் முயற்சி எடுத்தேன். ஆனால் ஆடிட்டர்களிடமிருந்து அந்தக் குறிப்புகள் எல்லாம் வந்து சேர்வதற்கு செப்டம்பர் மாதம் 30 தேதி வரை அவர்களுக்குக் கால அவகாசம் இருக்கிறது. அந்தப் பணி முடிந்து கணக்குகள் நமக்குக் கிடைப்பதற்குப் போதிய நேரம் இல்லாத காரணத்தால், இந்தக் கூட்டத் தொடரில் மின் வாரிய நிதி நிலை அறிக்கையை வைக்க முடியவில்லை. ஆனாலும் அந்தக் கணக்கு அறிக்கையை நேற்றையதினம் அவையின் முன் வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அடுத்து வருகின்றக் கூட்டத்தொடரில் நிச்சயம் மின் வாரிய நிதி நிலை அறிக்கை வைக்கப்படும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்



கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை இந்த அவையில் எடுத்துச் சொல்கிறபோதும், இந்தச் சட்ட முன்வடிவை முன் மொழிந்து பேசும்போதும் நானும் கொஞ்சம் பேசியிருக்கலாமே என்று ஆசைப்பட்டது உண்டு. காரணம் இந்தச் சட்ட முன்வடிவில் ஒரே ஒரு பிரிவு தான் இன்றைக்கு மேலவையினுடைய அனுமதிக்காக வந்திருக்கிறது. சட்ட முன் வடிவிலே இருக்கின்ற அத்தனை காரியங்களும் ஏற்கெனவே நடைமுறையில் இருக்கின்றன. தமிழ்நாடு 1949 ஆம் ஆண்டு இன்றியமையா பொருள்கள் கட்டுப்பாடு 7 பிரிவிலும், தற்காலிக அதிகாரங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1949) 3 வது பிரிவின் கீழும் அவ்வப்போது கட்டண உயர்வு குறித்து அரசு ஆணைகள் பிறப்பித்திருக்கின்றது. அந்த அரசு ஆணைகள் எல்லாம் தொகுக்கப் பெற்று, முதன் முதலாக இந்தச் சட்ட முன்வடிவு ஒரே தொகுப்பாக, ஒரே அட்டவணையாக வழங்கப்பட்டிருக்கிறது. அத்தனை காரியங்களும் ஏற்கெனவே நடைமுறையில் இருக்கின்றன. சட்டத்தின்கீழ் இருக்கிறது. ஒரு பிரிவின் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஒரு அரசு ஆணையே தவிர புதிதல்ல. அவைகள் இப்பொழுது சட்டமன்ற மேலவையின் அங்கீகாரத்துக்காக வந்திருக்கின்றன. ஆக, இவை புதிய பிரிவுகள் அல்ல. மாண்புமிகு உறுப்பினர்கள் சிலரும் குறிப்பாக திரு. தாமோதரன் அவர்களும் ஒரு கருத்தை எடுத்துச்சொன்னார்கள். இந்தச் சட்ட முன்வடிவினுடைய 4வது பிரிவில் கட்டணத்தை உயர்த்துவதற்கான அதிகாரத்தை அரசு எடுத்துக்கொள்கிறதே, இது சட்டமன்றத்துக்குத் தெரியாமல் போய்விடும் என்று குறைப்பட்டுக்கொண்டார்கள். இதுவரையில் இந்த அதிகாரம் அரசிடம்தான் இருந்து வருகிறது. சட்டமன்றத்திற்கு இது வருவதில்லை. By an executive order என்ற முறையில். அரசாங்கமே அதை நிர்ணயிக்கின்ற அதிகாரம் பெற்றிருக்கிறது. இப்பொழுது தான் முதன் முறையாக இந்தத் தடவை சட்ட மன்றத்தின் முன் சட்ட முன்வடிவாக வந்திருக்கிறது. ஏற்கெனவே இருந்த அதிகாரம் அந்தப் பிரிவிலே போடப்பட்டிருக்கிறது. புதிய அதிகாரம் அதன் மூலம் அரசாங்கத்திற்கோ அரசுத் துறைக்கோ வழங்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையினால் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் அட்டவணையிலே கண்டுள்ள கட்டண விகிதங்களிலேயுள்ள குறைபாடுகளைப் பற்றிச் சொல்லிய கருத்துக்கள், மீண்டும் அரசாங்கம் எந்தெந்த வகையில் உயர்த்தலமென்று கருதுகிறபோது, நிச்சயமாகக் கருத்தில் கொள்ளப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் பேசும்போது, சிறு தொழிற்சாலைகளுக்கெல்லாம் கட்டணத்தை உயர்த்தலாமா என்று கேட்டார். அவர் அப்படிக் கேட்கிறபோது, மற்ற தொழிற்சாலைகளுக்கு உயர்த்தியதை ஆட்சேபிக்கவில்லை என்பதைப் புரிந்துகொண்டேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன்

பேசும்போது பெரிய தொழிற்சாலைகளுக்கு எல்லாம் கட்டணத்தை உயர்த்தலாமா என்று கேட்டார். அவர் அப்படிப் பேசுகிறபோது, மற்ற தொழிற்சாலைகளுக்கு உயர்த்தியதை நிச்சயமாக அவர் எதிர்க்கவில்லை என்ற கருத்தை நான் புரிந்துகொண்டேன். இப்படி ஒவ்வொரு உறுப்பினரும் ஒவ்வொரு வகையிலே கருத்தினைச் சொல்கிறபோது ஏற்படுகின்ற ஒரு பொதுவான, எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவிலே வந்த ஒத்த கருத்தால் இக்கட்டண அமைப்பு உருவான ஒன்றே தவிர, வேறு அல்ல. ஆனால் இப்பொழுது விதிகளில் ஏற்கெனவே நடைமுறையில் இருக்கின்ற சில பிரிவுகளிலுள்ள சில கருத்துகளை எடுத்துச் சொன்னார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சினிமாத் துறைக்கு இந்த மத்திய ஆயத் தீர்வையை விதிக்கவில்லையே என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் அக்கறையோடு சுட்டிக்காட்டினார். அவர் அடிக்கடி சினிமாவுக்குப் போகிறாரோ என்னவோ எனக்குத் தெரியாது. அவருக்கு அக்கறை இருக்கிறது என்பதை மட்டும் அவர் சுட்டிக்காட்டிய உடனே புரிந்துகொண்டேன். ஆனால் கூர்ந்து பார்ப்பீர்களானால், சினிமாத் துறைக்கு பார்ட் 1 (ஏ) அல்லது (பி) என்கிற கட்டணத்தில் விதிக்கப்பட்டு அதற்கு மேலே 25 சதவிகிதம் கூடுதலாக விதிக்கப்பட்டிருக்கிறது.

"There is no 50 per cent surcharge or additional surcharge of 1 paisa per unit in respect of domestic services"

1 (ஏ) (பி) என்கிற அட்டவணையை அவர்கள் பார்த்தார்களானால், மத்திய ஆயத் தீர்வை 3 பைசா கூட்டப்பட்டிருக்கிறது. அப்படிக் கூட்டப்பட்டதிலேயிருந்து 25 சதவிகிதம் கூடுதலாகிறது என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசும்போது, வீட்டுக்கான கட்டணம் இதனால் உயரும் என்றார்கள். நிச்சயமாக அது உயராது. ஏற்கெனவே வீடுகளுக்கு விதிக்கப்பட்டிருக்கிற கட்டணத்தோடு 3 பைசாதான் கூடும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அவர்களுக்கு சர்சார்ஜ் கூட கிடையாது. ஆகையினால் இப்பொழுது இருக்கின்ற கட்டணத்தோடு 3 பைசா மட்டும்தான் அவர்களுக்குக் கூடும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொன்றையும் அவர்கள் இங்கே எடுத்துப் பேசினார்கள். "3 பைசா கூட்டியிருக்கிறீர்கள்; ஏற்கெனவே விதிக்கப்பட்டிருக்கிற கட்டணத்திற்கு 50 சதவிகிதம் சர்சார்ஜ் உண்டா? ஆகவே அந்த சர்சார்ஜையும் சேர்ந்து அதிலே 3 பைசாவும்



சேர்ந்து சர்சார்ஜ் வருமா" என்று விளக்கம் கேட்டார்கள். வராது. தனியாகத்தான் 3 பைசா ஆயத்தீர்வை வரும். அந்த 3 பைசாவிற்கும் இன்னும் 50 சதவிகிதம் அதாவது 1½ பைசா கூடுதலாகப் போடப்படவில்லை என்பதை நான் மாண்புமிகு உறுப்பினருக்கு விளக்கம் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் அவர்கள் பேசுகிறபோது, "மின் கட்டணம் கூடுகிறது, அப்படி மின் கட்டணம் கூடுதல் ஆகிறபோது செக்யூரிட்டி டெப்பாசிட் கூடுதல் ஆகாதா?" என்று கேட்டார்கள். ஆண்டுதோறும் மின் கட்டணம் பயன்படுத்துவதைப் பார்த்து அவர்கள் எவ்வளவு பயன்படுத்துகிறார்கள் என்கிற விகிதாசாரத்திற்கேற்பதான் அந்த செக்யூரிட்டி டெப்பாசிட் நிர்ணயம் செய்யப்படுகிறது. 3 மாதத்திற்கு பயன்படக்கூடிய அளவைக் கொண்டு இந்த செக்யூரிட்டி டெப்பாசிட் நிர்ணயிக்கப்படுகிறது. மின் கட்டணம் சிறிது மாறுவதால், ஓரளவுக்கு டெப்பாசிட் கூடுவதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதை நான் சொல்லித்தான் ஆக வேண்டும். அடுத்த ஆண்டு பரிசீலிக்கிறபோது, கன்சம்ஷன் அதிகம் ஆகிறபோது, கியாரண்டி என்ற முறையில் கொஞ்சம் கூடுதல் ஆகும். என்னைப் பொறுத்தவரை, ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சிக்கலாம் என்று சொல்ல விரும்புகிறேன். மூன்று மாதத்திற்கு மீட்டர் ரீடிங் கணக்கெடுத்து உடனே அவர்களுக்கு பில்கள் வழங்கி அந்த பில்களுக்கு உடனேயே அவர்கள் கட்டணம் கட்டுவதற்குரிய வாய்ப்பினை ஏற்படுத்தினால், அது ஒரு நல்ல ஏற்பாடாக இருக்கும். மூன்று மாதம் வரை பில் வருவதற்குக் காத்திருக்க வேண்டியதில்லை. இதனால் ஏற்கெனவே அவர்களுக்கு உள்ள கால அவகாசம் குறைய வேண்டுமென்று நான் சொல்லவில்லை. மீட்டர் ரீடிங் கணக்கெடுத்து, பில் போட்டு, அனுபவரீதியாக அதை துரிதப்படுத்திக் கொள்ளும்படியான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆக அவைகளைப்பற்றிப் படிப்படியாக அரசாங்கம் ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களும் திரு. லட்சுமிகாந்தன் அவர்களும் அடிக்கடி தென்னாற்காடு மாவட்டத்தைப்பற்றி நினைவுபடுத்தினார்கள். தென்னாற்காடு மாவட்டத்தில் நெய்வேலி நகருக்குள் இருப்பவர்களுக்கு மட்டும் மின் கட்டணம் குறைவு. அதே கட்டணத்தை தென்னாற்காடு மாவட்டம் முழுவதும் அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டார்கள். அதே போல சலுகையாகக் கொடுத்தால், மற்ற மாவட்டங்களில் உற்பத்தியாகும் பொருளுக்கு மட்டும் விலை குறைவாகவும், அதே நேரத்தில் மற்ற மாவட்டங்களில் விலை அதிகமாகவும் இருக்கும் நிலை வந்துவிடும். ஆகவே இந்த மாவட்ட சுயாட்சி வேண்டாம்

அப்படிச் செய்தால், எந்த மாவட்டத்திற்கும் நன்மை கிடைக்காது அப்படிச் செய்யப்போனால், ஒரு ஒருங்கிணைந்த தன்மை வராது. எல்லா மாவட்டங்களும் சேர்ந்தால் தான், ஒரு ஒருங்கிணைப்பு ஏற்படும். ஒருமைப்பாடு ஏற்படும் என்ற அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும் என் கருத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

(முற்பகல் 11-30)

கல்வி நிலையங்களைப் பொறுத்தவரை, மின்கட்டணத்தில் சலுகை அளிக்கக்கூடாதா என்ற ஆசிரியர்களின் பிரதிநிதியாகிய திரு. லெட்சுமி காந்தன் அவர்கள் கேட்டார்கள். மின்சாரக் கட்டணத்தைப்பற்றி நாம் மீண்டும் பரிசீலிக்கிற நிலைமை வரும் போது, அவருடைய கருத்து கவனத்தில் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் புதிய தொழில்களுக்குத் தரப்படவேண்டிய மின்சலுகைகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். கருநாடக மாநிலத்தில் அப்படித் தந்திருப்பதாகவும் இங்கே எடுத்துக்கூறினார்கள். மத்திய ஆயத்தீர்வை விதிக்கப்பட்டவுடனே, கருநாடக மாநிலத்திலே உள்ள மின் வாரியம் மின்சாரக் கட்டணத்தை மாற்ற பரிசீலனை செய்து கட்டணத்தினை உயர்த்தி அறிவித்தார்கள். அந்தக் கட்டண உயர்விலேயே இதையும் கொஞ்சம் சேர்த்து கருநாடக மாநிலத்திலே செய்திருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் சில தொழில்களுக்கு என்னென்ன பாதுகாப்பு அளித்திருக்கிறார்கள் என்ற விவரம் என்னிடம் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. டிமாண்டி அவர்கள் பேசுகிற போது தற்போதைய மின் கட்டண உயர்வு சிறு தொழில்களுக்கு பாதகத்தை விளைவிக்கும் என்றும், சிறு தொழில்களைப் பொறுத்தவரை, அதனுடைய சவப்பெட்டியின் மீது அடிக்கப்பட்ட ஆணி என்றும் இதனைக் குறிப்பிட்டார்கள். எனக்கு அதிலே கூட மகிழ்ச்சி. சவப் பெட்டியிலே அடிக்கப்பட்ட கடைசி ஆணி என்று அவர்கள் சொல்லவில்லை. "It is a nail dr ven on the coffin" என்றுதான் சொன்னார்களே, தவிர "It is the last nail driven on the coffin" என்று சொல்லவில்லை. இன்னும் சொல்லப்போனால், அந்த ஆணியை அடித்ததேகூட நாங்கள் அல்ல. இதை நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். இந்த ஆணியை அடித்ததே அவர்கள் சார்ந்திருக்கின்ற மத்திய அரசாங்கத்திலே இருக்கிறவர்கள்தான் என்பதும் நாங்கள் எவ்வளவோ கெஞ்சிக் கெஞ்சி கேட்டும், "தயவுசெய்து இந்த ஆணியை அடிக்காதீர்கள்" என்று மன்றாடியும் அவர்கள் அடித்துவிட்டார்கள்



திரு. பி. மாணிக்கம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அந்தக் கட்சியைச் சேர்ந்திருந்தாலும் இந்தக் கொள்கையைப் பொறுத்தவரை, எதிர்க்கலாம் அல்லவா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அத்தகைய புரட்சியை மாண்புமிகு உறுப்பினர் நிச்சயமாகச் செய்யலாம், எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு வீராசாமியும் மற்றவர்களும் எடுத்துச் சொன்னதுபோல, மின்வாரியத்தின் நிதிநிலை அவ்வளவு சரியாக இல்லை என்பதை நாம் அனைவருமே நன்றாக அறிவோம். நேற்றைய தினம்தான் ஆடிட் ரிப்போர்ட் கூட மேலவையிலே வைக்கப் பட்டிருக்கிறது. 1974-75-ம் ஆண்டுக்கு அரசாங்கத்திலேயிருந்து மின் வாரியத்துக்கு 19.2 கோடி ரூபாய் உதவித் தொகை அளிக்கப் பட்டது. 1975-76-ம் ஆண்டுக்கு 5.3 கோடி ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது. 1976–77 ஆம் ஆண்டுக்கு ரூ. 31.4 கோடி ரூபாய் உதவியாக வழங்கப்பட்டிருக்கிறது. 1977-78-லே அநேகமாக 20 கோடி ரூபாய் அளவுக்கு மின்வாரியத் துறையிலே இழப்பு ஏற்படும் என்று கருதுகிறேன். இன்னும் இந்த நிலைமையில் மின் வாரிய நிலையை சீர் செய்ய கட்டண உயர்வு தேவை என்று கருதினோம். உண்மையில் 1974-75-லே தான் ஒரு கட்டண உயர்வு இருந்தது. அதைத் தொடர்ந்து மின் வாரியத்தில் இன்னும் இழப்பு ஏற்பட்டுக் கொண்டே வருகிறது. எனவே, அடுத்த ரிவிஷன் செய்தால்தான், மின்சார வாரியத்தின் நிதிநிலையைச் சீர்படுத்த முடியும் என்று நினைத்துக் கொண்டிருக்கிற நேரத்திலே மத்திய சர்க்கார் இந்த ஆயத் தீர்வையை விதித்திருக்கிறார்கள். அதனுடைய விளைவு 12 கோடி ரூபாய் மின் வாரியத்துக்கு மேலும் இழப்பு ஏற்படும் நிலை ஏற்படுகிறது. இதை நாம் கூர்ந்து கவனிப்போமானால், முதன் முறையாக மத்திய சர்க்கார் இதன் மூலம் மாநில அரசின் மீது வரியைப் போட முனைந்திருக்கிறது. இதுவரை மத்திய சர்க்கார் தனிப்பட்டவர்கள் மீது வரி விதித்து வாங்குவது என்பதுதான் வழக்கம். ஆனால் முதன் முறையாக மாநில சர்க்கார் மீதே விதித்து இந்த வரியை வாங்குகிறார்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டும். ஆக, மக்களிடமிருந்து வரியாக நிதி திரட்டுவதை விட்டு மாநிலங்களுடைய சொந்தப் பணத்திலேயிருந்து இந்த வரியை மத்திய அரசாங்கம் விதித்திருக்கிறது. "இதை ஏன் கட்ட வேண்டும்? எதிர்க்கக்கூடாதா? தீர்மானம் போடக்கூடாதா?" என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் கேட்டார்கள். சட்டமன்றப் பேரவையிலேகூட அப்படித்தான் கேட்டார்கள். நாம் எதிர்க்காமல் இல்லை. இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால், இந்த ஆயத்தீர்வை விதிக்கப்பட்டவுடனேயே முதல் குரல் எழுப்பியதே தமிழ்நாடுதான். நமது முதலமைச்சர் அவர்கள் தான் இந்திய பிரதம அமைச்சர் அவர்களுக்கும், நிதியமைச்சர்

அவர்களுக்கும் மற்ற மாநில முதலமைச்சரவர்களுக்கும் இதைப் பற்றி எழுதினார்கள். மாநிலங்களிலேயிருந்து வருவாய் போகிறது என்பது மட்டுமல்ல, மாநிலங்கள் தங்கள் வருவாயைத் திரட்டக் கூடிய வாய்ப்பையும் இது குறைத்துவிடுகிறது. அதுமட்டுமல்ல, அதிகமாக மின் உற்பத்தி வேண்டும் என்கின்றபோது, மின் உற்பத்திக்காக ஒரு யூனிட்டுக்கு எவ்வளவு என்று வரிபோட்டு, மத்திய அரசாங்கம் நம்மிடத்திலே வசூலிக்க முன்வந்திருக்கிறது. மின் உற்பத்தி வேண்டாமா? மின் உற்பத்தி நிலையங்களை மூட வேண்டுமா? அப்படி மூடப்பட வேண்டும் என்று நீங்கள் விரும்பு கிறீர்களா என்று மத்திய அரசை நோக்கி நம்முடைய முதல் குரல் எழுந்தபோது, அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், நாங்கள் ''இப்போது சூப்பர் தெர்மல் ஸ்டேஷன் நாடெங்கும் கொண்டு வருவதற்கு விரும்புகிறோம். அந்த நிலையங்களுக்குப் பெரும் முதலீடு செய்யவேண்டியிருக்கிறது, அதற்குப் பணம் நிறைய தேவைப் படுகிறது, ஆகவே, நீங்கள் எங்களுக்கு ஒத்துழைப்பு தாருங்கள், அதுமட்டுமல்ல மாநிலங்களுக்கு இருக்கிற அதிகாரத்தை நாங்கள் எந்தவகையிலும் எடுக்கவில்லை. ஆகவே நீங்கள் கட்டணத்தை உயர்த்திக்கொள்ளலாம், உங்களுக்கு அந்த அதிகாரம் இருக்கிறது'' என்று சொன்னார்கள். அதற்கு நாம் திரும்பச் சொன்ன பதில் இது தான். ''மின்சார நிலையங்கள் நாட்டிலே அதிகமாக உருவாக வேண்டுமென்றால் மின்சார போர்டுகள் மூலம் வரி போட்டு, அந்தப் பணத்தை எடுத்துதான் அந்த மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்கவேண்டும் என்பதில்லை. மத்திய அரசுக்கு பல்வேறு வகைகளிலே வருவாய் வருகிறது. இந்த வருவாயை வைத்துத்தான் திட்டமிடுகிறார்கள். இந்த வருவாயிலிருந்துதான் இரும்பாலை வைக்கிறார்கள். இந்த வருவாயிலிருந்துதான் பல்வேறு தொழில் களைத் தொடங்குகிறார்கள். அப்படி இருக்கும்போது, மின்சார உற்பத்தி நிலையங்களையும் அதிலே சேர்த்துத்தான் திட்டமிட வேண்டுமே தவிர, நாங்கள் மின்சார உற்பத்தித் திட்டங்களை நிறைவேற்றவேண்டும், ஆகவே, மின்சார வாரியங்கள் மூலமாக வரிபோடுவோம் என்றால், அது எங்கே போய் முடியும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டோம்.

இன்றைய தினம் யூனிட்டுக்கு இரண்டு பைசா என்று உற்பத்திக் கான வரி இருக்கலாம். நாளையதினம் தமிழ் நாட்டிலே மின் உற்பத்தி அதிகமாகும்போது, அதன் காரணமாக நாம் செலுத்த வேண்டிய தொகை அதிகமாகலாம். இன்றையதினம் 15 கோடி ரூபா யாக இருக்கிற இந்தத் தொகை நாளையதினம் ரூ. 50 கோடியாகக் கூட ஆகலாம். இன்றையதினம் 2 பைசா என்ற வீதத்திலே விதிக்கப் படுவது நாளையதினம் 4 பைசா என்று விதிக்கப்பட்டால், அது 200 கோடி ரூபாயாக மாறும். ஆகவே, மாநிலத்தில்தான் நிதிவாயில் களை நெருக்குகிற வகையிலே இந்த முறை அமைந்துவிடும். எனவே தான் இதை ''It is a reversible flow'' என்று குறிப்பிட்டோம்.



மாநிலங்களைப் பொறுத்தவரை, பெரும்பாலான நிதியாதாரங்களைத் தந்து வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்று ஒரு பக்கம் சொல்லிவிட்டு இன்னொரு பக்கத்திலே மாநிலங்களுடைய நிதியாதாரங்களை எடுத்துக்கொள்ள வழிமுறைகளை உருவாக்கியிருக் கிறார்கள் ஆகவே, அதைக் கொள்கை ரீதியாகவே ஏற்றுக்கொள்ள முடியாது, எனவே மத்திய சர்க்கார் கைவிட வேண்டும் என்று திரும்பத் திரும்ப வலியுறுத்தி வந்திருக்கிறோம். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1978 மார்ச் திங்களில் நடந்த முதல்வர்கள் மாநாட்டிலும் தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலும் இந்தக் கருத்தைத் திட்டவட்டமாக எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அடுத்து, ஆகஸ்ட் மாதத்திலே நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலேயும் நிதி ஆதாரங்களைப்பற்றி விரிவாக ஆராய ஒரு குழுவைக் கூட்டியிருக்கிறார்கள். அதிலேயும் இதை எடுத்துச்சொல்லி வந்திருக்கிறார்கள். "you are opening a new channel for the reversible flow''. ஆக, இது சரியல்ல என்கிற கருத்தை வற்புறுத்தி வந்திருக் கிறோம். இப்போதும் கூட குடிமுழுகிப் போய்விடவில்லை. மத்திய சர்க்கார் நினைத்தால், இந்த ஆண்டு வசூலித்ததை மாநிலங்களுக்கே மீண்டும் திருப்பித் தந்துவிடலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், மின்சார வாரியத்தில் வருவாய்க் கணக்கில் வருகிற பற்றாக்குறையை ஈடு செய்கிற அளவுக்கு இதைத் திருப்பித் தருகிறோம் என்று அவர்கள் அறிவிக்கலாம். அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலே நிச்சயமாக இதை எடுத்துவிடுவார்கள். இத்தகைய லெவி இருக்காது என்று நம்புகிறோம். அந்த வகையில் மத்திய சர்க்காரிலே ஆளுகிற கட்சியினர் மாநிலங்களுடைய நிதி ஆதாரங்கள் வலுவாக இருக்க வேண்டும் என்று விரும்புகிற காரணத்தால், இந்த லெவியை வருகிற பட்ஜெட்டில் எடுப்பார்கள் என்று நம்ப வேண்டும். அப்படி எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தவும் நாம் கடமைப்பட்டிருக் கிறோம்.

நீங்கள் இந்தப் பணத்தைக் கொடுக்காமல் மறுப்பதன் மூலம் உங்களை மத்திய சர்க்கார் டிஸ்மிஸ் செய்தாலும் பரவாயில்லை, அதற்கு உங்களோடு நாங்கள் கைகொடுக்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். கை கொடுக்கிற நிலையில் அவர்கள் இல்லை என்பதும் அவர்களுக்குக் கைகொடுக்க வேண்டிய நிலையிலே தான் மற்றவர்கள் இருக்கிறார் கள் என்பதும் நான் சொல்லித்தான் தெரிந்துகொள்ளவேண்டிய அவசியமில்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, நான் சொல்லியது மத்திய அரசாங்கம் இந்தக் காரணத்தைக் காட்டி இந்த ஆட்சியை டிஸ்மிஸ் செய்தால் திராவிட முன்னேற்றக் கழகம் அவர்கள் பக்கம் இருக்கும் என்றுதான் சொன்னேன். கைகொடுப்

பதைப்பற்றி எங்களுக்கும் தான் தெரியும். மாண்புமிகு அமைச்சர் அவர்களைப்பற்றியும் எங்களுக்குத் தெரியும். அவரது கட்சியைப் பற்றியும் எங்களுக்குத் தெரியும். காலப்போக்கில் யாருடைய கை தேவைப்படப் போகிறது என்பதை நாட்டு மக்களும் நன்ருக அறிந்துதான் வைத்திருக்கிருர்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கைகொடுக்க வந்தால், நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை, நிச்சயமாக அவர்கள் கைகொடுக்க வேண்டும். ஆனல் மக்கள் கைகொடுப்பார்களா என்பதுதான் முக்கியம். போயும், போயும் 15 கோடி ரூபாய் கட்ட முடியாமல் தானு இங்கே திரும்பி வந்து நிற்கிறீர்கள், இதற்காகவா வந்தீர்கள் என்று மக்கள் எங்களைப் பார்த்துக் கேட்கக் கூடாது என்ற அச்சமே தவிர, வேறல்ல.

(முற்பகல் 11-40)

சட்ட மன்றத்திலே மாண்புமிகு அங்கத்தினர் திரு. ரகுமான் கான் அவர்கள் சட்டத்திலே விதி இருக்கின்றது என்று எடுத்துச் சொன்னுர்கள். அதிலே டிஸ்மிஸ் பண்ணுகிறது என்பது இல்லை. எதைச் செய்யலாம்? மின் உற்பத்திக் கட்டண ஆயத் தீர்வை கட்டவில்லை என்ருல், அவர்கள் மின் உற்பத்தியைத் துண்டிக்க லாம். ஏனென்ருல் எக்ஸைஸ் விதிகளிலே அந்தப் பொருள்களைத் தடை செய்வதற்கு அவர்களுக்கு ஏற்கெனவே அதிகாரம் இருக்கிறது. மின்சார உற்பத்தியைத் தடைசெய்வது என்பது, அரசை டிஸ்மிஸ் செய்வதைவிட ரொம்பக் கடுமையானது. அரசாங்கமானது ஒரு சட்டத்தை மீறுகின்றதன்மை என்பது மிக மிக முக்கியமான நேரத்திலே, முக்கியமான பிரச்சினைகள், முக்கிய மான சூழ்நிலைகள் வரும்போது ஏற்படவேண்டுமே தவிர, வேறு அல்ல. தமிழ்நாடு மட்டுமல்ல, மற்ற எல்லா மாநிலங்களும் இந்தத் தீமையை அனுபவித்துக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ப. இராமச்சந்திரன் அவர்கள் தென்னக மின்சாரத்துறை அமைச்சர்களின் மகாநாட்டைக் கூட்டினர்கள். அதிலேகூட நாங்கள் வற்புறுத்திப் பேசினேம். அவர்களிடம் நமது நிலைமைகளை எடுத்துச் சொல்லி, இதைத் தடுத்துவிட முடியாதா என்று மாண்புமிகு அங்கத்தினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் கேட்டார்கள். அவரிடம் எடுத்துச் சொல்லலாம். நாங்கள் எல்லாம் உங்கள் பக்கம் இருக்கிறேம் என்று சொல்லலாம். ஆனல் இதில் அவர் சம்பந்தப்படவில்லை. நிதித் துறை அமைச்சர் அவர்கள்தான் இதைப் பார்த்துச் சரிக்கட்ட வேண்டும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இதைப்பற்றி நாங்கள் திட்டவட்டமாகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கின்றேம். இது மாநிலத்திற்கு நஷ்டம் என்பது மட்டுமல்ல, ஏற்கெனவே இருக்கின்ற உரிமையைப் 



பறிப்பது மட்டுமல்ல, நமது ஆட்சியைப் பறிப்பது மட்டுமல்ல, மேலும் மேலும் வாத உணர்வை மாநிலங்களுக்கும் மத்திய சர்க்காருக்கும் இடையே எழுப்புகின்ற நடவடிக்கை என்பதை நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறேம். ஆக இப்போது போடப் பட்டிருப்பது 3 பைசா தான். வேளாண்மைக்குப் பயன்படுத்துவது தவிர மற்ற தேவைகளுக்கு மின்சாரம் பயன்படுத்துபவர்களுக்கு 3 பைசா போடப்பட்டிருக்கிறது. இது மத்திய ஆயத் தீர்வை என்ற அடிப்படையில் போடப்பட்டிருக்கிறதே தவிர, இது சிறு தொழில் கள் செய்பவர்களுக்கா அல்லது பெரிய விவசாயிகளுக்கா என்ற பிரச்சினைகள் எல்லாம் நிச்சயமாக இடம்பெறவில்லை என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். மின்சாரக் கட்டண உயர்வுபற்றிப் பரிசிலனை செய்யலாம். யார் யார் தாங்கக்கூடியவர்கள், யார் யார் தாங்க முடியாதவர்கள் என்பதைப் பற்றி நாம் பரிசீலிக்க லாம்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசுகின்றபோது மேலும் ஒரு சில கருத்துக்களைச் சொன்னுர்கள். மின்சாரம் அதிகமாகப் பயன்படுத்துகின்ற தொழில்கள் பாதிக்கப்படுகின்றன என்று சொன்னுர்கள். மின் கட்டணத்தை உயர்த்தியிருப்பது அவைகளுக்கு பாதிப்பாக இருக்கும் என்று சொன்னர். எந்த அளவுக்கு மின் கட்டணத்தை உயர்த்த வாய்ப்பு இருக்கிறது என்பதைப்பற்றி நன்கு ஆலோசித்து அதற்கு ஏற்றவாறுதான் அரசு செய்யும். தொழில்கள் பாதிக்காத வண்ணம் மின் கட்டணத்தை உயர்த்தலாம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண விதங்களைத் திருத்தியமைத்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1978) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, அட்டவணை ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன;

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

''சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு, மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண விதங்களைத் திருத்தியமைத்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1978) நிறைவேற்றப்படவேண்டும்'' என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

''சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண விதங்களைத் திருத்தியமைத்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/1978) நிறைவேற்றப் படவேண்டும்'''.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு அங்கத்தினர்கள் ஏற்கெனவே 13 பேர்கள் பேசுவதற்கு பெயர் கொடுத்திருக்கின்றார்கள். ஒவ்வொரு அங்கத்தினரும் 5 நிமிடங்கள் என்று எடுத்துக் கொண்டாலும், பதில் சொல்வதற்கு மாண்புமிகு அமைச்சர்கள் 5 அல்லது பத்து நிமிடங்கள் எடுத்துக்கொண்டாலும்கூட கிட்டத் தட்ட மணி 1.30-க்கு மேல் ஆகிவிடும். ஆகவே அங்கத்தினர்கள் எல்லாம் 5 நிமிடங்களுக்கு மேல் எடுத்துக்கொள்ளவேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## (2) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 41/1978).

The Hon. Thiru K. NARAYANASWAMI MUDALIYAR: Mr. Chairman, I move—

"That the Tamil Nadu Debt Relief Bill, 1978 @ (L. A. Bill No. 41 of *1978)* as passed by the Assembly, be taken into consideration".

@619-629-ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.





மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

''சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1978-ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.''

திரு ஆ. நல்லசிவன்: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே ஆளுநர் அவர்கள் உரையின் மீது பேசும்போது குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். ஒரே ஒரு திருத்தத்தை மட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 6 மாதத்திற்கு ரூ. 1,200 வருமானம் உள்ளவர்களுக்கு இந்த நிவாரணம் என்றிருக்கிறது. இதை 6 மாதத்திற்கு ரூ. 2,500 அல்லது ஒரு வருடத்திற்கு ரூ. 5 ஆயிரம் வருமானம் உள்ளவர்களுக்கு நிவாரணம் உண்டு என்று மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் இன்று நம் நாட்டிலே முனிசிபாலிட்டியிலே வேலை செய்கின்ற ஸ்காவன்ஜர்களுக்குக் கூட மாதம் ரூ. 200க்கு மேல் சம்பளம் கிடைக்கிறது. அவர்கள்கூட ரொம்ப கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கஷ்டம் நம் எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது. ஆகவே 6 மாதத்திற்கு ரூ. 2,500 அல்லது வருடத்திற்கு ரூ. 5.000 என்ற அளவுக்கு மாற்றவேண்டும். 6 மாதத்திற்கு ரூ. 1,500 வருமானம் உள்ளவர்களுக்கு என்றால், அர்ப்பன் ஏரியாக்களிலே உள்ள யாருக்குமே இந்த நிவாரணம் கிடைக்காது என்று சொல்லிக்கொள்கிறேன். 6 மாதத்திற்கு 2,500 ரூபாய், ஒரு வருடத்திற்கு 5,000 ரூபாய் என்று மாற்றினால், அவர்களுக்கு ஓரளவுக்கு நிவாரணம் கிடைக்க வாய்ப்பு ஏற்படும் என்பதால் இந்தத் திருத்தத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*THIRU A. R. DAMODARAN. Sir, I welcome this bill. The moratorium has been in existence for three years and as we have been pleading for a Bill to replace the moratorium, I am glad that the Hon. Minister has been able to fulfil his assurance in this regard. My only regret is that although I opposed the extension of the moratorium, I think in this case he should have extended the moratorium because the present Bill has been brought only to replace the Ordinance already promulgated. Therefore, there is no room for us to suggest any amendments which can be incorporated in this Bill today. The only thing I would like to mention is whether we could not consider in Tamil Nadu the introduction of registration of debts, which was being adopted in French administration. They have a public notary system whereby all people who lend money have to register the loans

at the Public Notary's office. The French system has prevented certain abuses which have crept into the system of money lending where exorbitant rates of interest have been charged. I realise there will be some difficulty in asking everybody to register the debts and, therefore, I would like the Hon. Minister to consider whether we could not prescribe a limit of Rs. 1.000 and prescribe compulsory registration of loans over and above the limit so that the abuses of the present system in which exorbitant interest is collected could be in future. The Government may consider this suggestion.

My second suggestion is: In the fixation of revised rate of interest, we must also bear in mind the current bank rate which is charged by the banks on the borrowings from banks. At present the bank rate for the ordinary people ranges between 14 and 16 per cent. The fixing of artificial rate of interest would only lead to further abuses in our system. I would request that the question of revision of interest rates may also be considered by the Government when they bring in suitable legislation in this regard.

Regarding the Debt Relief Bill itself, I welcome the scaling down of debt as mentioned in section 7 since at last there is some finality to the moratorium that has been in existence for three years. Nobody will be foolish enough to imagine that we will not have in future moratorium or debt relief. One hopes that it will not be necessary and that finality will be there in the future to the same extent. From 1938 we have been having a series of debt relief measures.

(முற்பகல் 11-50)

Whether this is an indication that Tamil Nadu is growing deeper and deeper in debt and whether poverty is increasing is a matter that has to be examined. One hopes that these measures will not become permanent measures in the future also.

Sir, in regard to section 7, every debt of Rs. 500, Rs. 5,000 or Rs. 10,000 which has been mentioned, has been scaled down. The object of this Bill is to help debtors belonging to the weaker sections. But according to section 7, if we take clause (1), it is said that every debt up to Rs. 500, every single debt whether it is ten debts of Rs. 500 or 20 debts of Rs. 500, has to be scaled down. In the case of Rs. 500 and below, I accept it as it will benefit the weaker sections. In the case of debts between Rs. 500 and Rs. 5,000, 50 per cent of interest





has been written off and I agree to that. Interest may be written off because it is a measure of debt relief and it is very welcome. But in the case of the principal amount, one-half of the principal amount can also be written off. In other words, if a person has contracted ten Rs. 4,000 debts, it means that he can write off Rs. 2,000 in each debt, or out of Rs. 40,000, Rs. 20,000 can be written off. The object of this legislation is to place a limit on the extent of relief that can be given for indebtedness and which has been prescribed under a particular clause to which I shall refer later. Regarding the benefit extended in the case of widows, it has been defined that widows with a property of Rs. 10,000 inclusive of the debt will be exempt from the provisions of the Act. When you have been able to prescribe a limit for widows with a wealth of Rs. 10,000, why do you want to give relief to persons who may have contracted ten or fifteen individual debts of Rs. 4,000? Why do you want to scale down the debts in such cases? I think that this is something that gives extraordinary relief to a class of persons who do not require it. I wish that the Government had considered this aspect. As I said, it is extremely late for us to consider now. I do not mind interest being wiped out. But, certainly, in so far as the principal is concerned, the wiping off of 50 per cent of each and every debt is an exceptional relief which is not warranted under the circumstances.

Sir, the provision regarding the mortgages is an extremely complicated provision which requires a very keen legal mind to understand all the implications. That is why I wish that we could have considered the implications of section 8 and the various reliefs given to mortgagees in a Select Committee. But obviously it is not possible at this stage. The only thing that I would like to mention is that section 5A gives a similar relief to mortgagees who have been in possession for ten years or more and the entire principal amount is written off. This again is a relief that is exceptional which need not have been granted to that extent. I believe that this class of people do not require that amount of relief. They certainly do not belong to that section of the community which requires this relief. Section 5A by which the mortgage debt is to be wholly discharged in the case of those who have been in possession for over ten years, is an exceptional relief that need not have been granted. These and some other provisions would require revision and I hope the Government will consider these.

Thank you.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறோம்'' என்று சொன்ன புனிதமான தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த இந்த நன்னாளில் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய வகையில் இன்று இந்த சட்டமுன்வடிவை இங்கே நிறைவேற்றுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டது குறித்து மேலவை பெருமைப்பட வேண்டும். நானும் அதிலே சேர்ந்து பெருமைப் படுகிறேன்.

ஆனால் இந்த நிவாரணம் அளிக்கப்படுவது, ஏழைகளுக்கு உண்மையிலேயே நன்மையை அளிக்கும் என்று மிகத் தெளிவாகச் சொல்லப்படும் அதே நேரத்தில், இந்த மாதிரிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட பிறகு, இனிமேல் இவ்வாறு கடன் கொடுப்பவர்கள் ஏழைகளுக்குக் கடன் கொடுக்க மறுக்கிறார்கள் என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசு கவனத்தில் கொள்ளவேண்டும், ஆதலால் இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றுகிற இந்தச் சூழ்நிலையில் இதன் தொடர்பாக, சாதாரண மக்களுக்குத் தாராளமாகக் கடன் உதவியை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு அரசு உடனடியாகப் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடன் நிவாரணம் அளிப்பதன் மூலம், கடன் கொடுத்துத்தான் ஆகவேண்டும் என்று அரசு யாரையும் நிர்ப்பந்தப்படுத்த முடியாத நிலை இருப்பதால், அதைக் கருத்தில் கொண்டு இப்போது ஒரு ஆலோசனையை மட்டும் இங்கே சொல்லி விடை பெற விரும்புகிறேன்.

தமிழகத்திலே இருக்கிற வங்கிகள் எல்லாம் மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதால், அவர்கள் சில விதிமுறைகளை வைத்துக்கொண்டு, கட்டுப்பாடுகளை வைத்துக்கொண்டு கடன்களை வழங்குகிறார்கள். சாதாரண, பாமர மக்களுக்கு, ''கன்ஸ்யூமர் லோன்ஸ்'', 'எம்ப்ளாயீஸ் லோன்' ஆகியவைகள் இப்போது கிடைப்பதில்லை. தமிழக அரசின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிற கூட்டுறவு வங்கிகளும், அதனுடைய கட்டுப்பாட்டிற்குள் இருக்கிற கூட்டுறவுச் சங்கங்களும் இவ்வாறு 'கன்ஸ்யூமர் லோன்ஸ்' (Consumer's loans) மற்றும் ''எம்ப்ளாயீஸ் லோன்'' (Employees loan) ஆகியவைகளைக்கொடுப்பதில்லை. அங்கே விவசாயிகளுக்கு மட்டுமே கடன் கொடுக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். இப்போது ஒரு புதிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால், இந்தக் கூட்டுறவு வங்கிகளும், கூட்டுறவுச் சங்கங்களும், இப்படிப்பட்ட சாதாரண மக்களுக்கும், உழைக்கும் அடித்தளத்திலுள்ள மக்களுக்கும் கடன் வழங்கும் வகையில் ஆக்கபூர்வமான முறையில் கூட்டுறவு வங்கி சட்டத்தில் தகுந்த திருத்தங்களை ஏற்படுத்தி, சாதாரண ஏழை மக்களுக்கும் கடன்களை வழங்க அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன்.



அதே சமயத்தில் தமிழகத்திலே பல ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன்கள் (Finance Corporation) இருக்கின்றன. அவற்றையெல்லாம் அரசின் முழுக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து வங்கிகளுக்குள்ள விதிமுறைகளில் உள்ள நல்ல அம்சங்களை அதில் அமல்படுத்தி அவைகளும் குறைந்த வட்டியில் சாதாரண மக்களுக்குக் கடன்களை வழங்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, நம்முடைய புனிதமான தலைவர் பிறந்த நன்னாளில் இந்தச் சட்டமுன்வடிவை மேலவையில் நிறைவேற்றுவதை பட்டதாரிகள்—ஆசிரியர்கள் முற்போக்கு முன்னணியின் சார்பாக வரவேற்று, இந்த அரசாங்கத்தைப் பாராட்டி விடைபெறுகிறேன். வணக்கம்

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, 1978ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டமுன்வடிவை, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கொண்டு வந்ததை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல, இப்படி ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டிருப்பதை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் மனதார ஆதரிக்கிறேன்.

இந்தச் சட்டத்தினுடைய மூன்றாவது பிரிவில் (எஃப் 2) செக்ஷனில்

''Certain debts and liabilities not be affected ..........

i A debt due to the Central Goverment or any State Goverment.

ii Any local autority.''

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றையதினம் 500 ரூபாய்க்குக் கீழே கடன் வாங்கியவர்களுக்கெல்லாம் நிவாரணம் கிடைக்கிறது என்று மகிழ்ச்சியடைகிற நேரத்தில், முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிற காரணத்தால் ஒரு கருத்தை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகள் இன்றைய தினம் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பல கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவைகளைப் பற்றியெல்லாம் இந்த நேரத்திலே குறிப்பிடுவது நன்றாக இருக்காது. அதிலே ஒன்று, ''அரசாங்கக் கடன்களையும், கூட்டுறவு வங்கிகளில் அவர்கள் வாங்கிய கடன்களையும் ரத்து செய்ய வேண்டும்'' என்ற ஒரு கோரிக்கையையும் வைத்திருக்கிறார்கள். இந்தச் சட்டப்படி தனியாரிடத்திலே கடன் வாங்கியவர்களுக்கு நிவாரணம் கொடுக்கிறோம். ஆனால் அரசாங்கம் கொடுத்த கடனுக்கு மட்டும் ஒரு பாதுகாப்பைக் கொடுக்கிறோம். அப்படி பாதுகாப்புக் கொடுக்கக்கூடாது என்று சொல்ல மாட்டேன். அரசாங்கம் கொடுத்த கடனைத் திருப்பிக் கட்டத் தேவையில்லை என்று சொல்லிவிட்டால், அரசாங்கம் நடத்த முடியாது. மத்திய கூட்டுறவு வங்கிகளைப் பற்றி அறிந்தவன் என்ற முறையில் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். 500 ரூபாயைக்

கடன் வாங்கிய விவசாயி ஐந்தாண்டுக் காலத்திற்கு மேலாகியும் கட்ட முடியாத சூழ்நிலையில் இருக்கிறார் என்றால், அப்படிப்பட்டவர்களுக்கு இப்படிப்பட்ட கடன் நிவாரணச் சட்டத்திலே வழி வகை செய்ய முடியுமா என்பதை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும். ஏனென்றால், நம்முடைய மாநிலத்தில் இருக்கக்கூடிய நிலவள வங்கியானாலும், கூட்டுறவு வங்கியானாலும் இதிலே 500 ரூபாய், 500 ரூபாய்க்குக்கீழே வாங்கி, ஐந்தாண்டுகள் ஆகியும் கொடுக்காமல் இருப்பவர்களின் எண்ணிக்கை ஆயிரம் இரண்டாயிரம்தான் இருக்கும். அரசாங்கம் பெரிய சாதனையை விவசாயிகளுக்குச் செய்கிறது என்ற வகையிலே, பெரிய கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டு வருகிற இந்த நேரத்திலே, கூட்டுறவு வங்கியில் 500 ரூபாயை வாங்கி ஐந்தாண்டுகளாகக் கட்டமுடியாமல் இருந்தால், விவசாயிகள் கட்ட வேண்டும் என்று சொல்லாமலிருப்பதற்கான ஒரு பிரிவை, இந்த மூன்றாவது பிரிவிலே சேர்த்திருப்பார்களேயானால், இன்னும் தாராளமாக இந்த அரசாங்கத்தைப் பாராட்டும் நல்ல உள்ளம் பெற்றவனாக இருப்பேன் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(நண்பகல் 12-00)

அதைப் போலவே உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். 500 ரூபாயிலிருந்து 5,000 ரூபாய் வரை கடன் வாங்கியவர்களுக்கு வட்டி கட்டுவதிலே ஒரு விதிவிலக்கு, ஒரு சலுகை காட்டுகிறோம் என்று சொன்னார்கள். அதிலே பிரின்சிபலை ஏன் 50 பெர்சென்ட் கொடுக்கவேண்டும்?

திரு. ஏ. ஆர். தாமோதரன்: அதிலே தள்ளுபடி செய்யலாம் என்றுதான் சொன்னேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தள்ளுபடி செய்யலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். ஒருவன் கடன் வாங்கி, அசலை விட அதிகமாக வட்டி கட்டியிருப்பானானால். முழுக்கடனையும் ரூபாய் 500லிருந்து ரூபாய் 5,000 வரை இன்றையதினம் சட்டத்திலே சேர்க்காவிட்டாலும், எதிர்காலத்திலாவது அப்படிப்பட்ட திட்டத்தைச் சேர்த்து—ரத்து செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். கிராமப் புறங்களிலே இருக்கக்கூடிய விவசாயிகள் அசலை விட 3, 4 மடங்கு வட்டி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சட்டமன்றத்தின் கவனத்திற்கு ஒரு தகவலைத் தரவிரும்புகிறேன். 5வது பக்கத்திலே

Any debt or debts due on the 14th day of July 1978 by a widow or a minor child both of whose parents are dead or a minor child whose father is dead ........





Provided the value of the property owned by such widow or minor child on the date including the principal amount of the debt or debts so due do not exceed Rs. 10,000 என்று சொல்லியிருக்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். தஞ்சையில் ஒரு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் வரை கிடைக்கும். சில மாவட்டங்களில் அபிவிருத்தி ஒன்றும் இல்லாததால், சிறிய தொகை தான் கிடைக்கும். இவர்களுக்கு மட்டும்தான் 'Exemption' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அடுத்தபடியாக, "Minor Child" என்று இருக்கிறது. சில குடும்பங்களில் 4, 5 பேர் இருப்பார்கள். அதை "Minor Children" என்று மாற்றிக்கொண்டால், நன்றாக இருக்கும். அடுத்தபடியாக 10 ஆயிரம் ரூபாய் என்று இருப்பதை 20 ஆயிரம் அல்லது 30 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்துவதுபற்றி எதிர்காலத்தில் பரிசீலிக்க வேண்டும். கடனில் இருக்கும் ஒரு குடிமகனுக்கு பாதுகாப்பு அளிக்கின்ற இந்தச் சட்டத்தை நான் வரவேற்று அமர்கிறேன்.

*திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, கடன் நிவாரண மசோதாவைப் பொறுத்தவரை, நான் உண்மையிலேயே இந்த ஆட்சி இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதற்காகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்திய விவசாயி நிரந்தர கடனாளி என்கிற நிலையிலிருந்து இன்னும் மீளவில்லை. அப்படிப்பட்ட விவசாயிகளுக்குப் பெருமளவு உதவியிருக்கின்றது. அனைத்துப் பிரிவினருக்கும் உதவி என்றாலும் கூட குறிப்பாக விவசாயிகளுக்குத் தான் பெருமளவு உதவி ஓரளவு தன்னுடைய கடன்களிலேயிருந்து விடுதலை பெறவும் தன்னுடைய வாழ்க்கையிலே ஒரு நிம்மதியாக பெருமூச்சு விடுவதற்கும் வாய்ப்பளித்திருக்கிறது இந்த மசோதா. இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். 500 ரூபாய் வரையான கடன்கள் முழுக்க தள்ளுபடி என்றாலும் கூட, சட்டரீதியாக அல்லது வாதத்தின் அடிப்படையிலே இந்த அளவிற்கு ஒருவர் பல்வேறு கடன்களை வாங்கியிருந்தால், அவரும் இந்த லாபத்தைப் பெறும் நிலை வருகிறது. 500 ரூபாய் வரை இருக்கிற கடனைப் பொறுத்தவரையில், நான் ஒன்றை அனுபவ ரீதியாகச் சொல்ல முடியும். கிராமப்புறங்களில் பெரும்பாலும் 500 ரூபாய் அளவுக்குக் கடன் வாங்குகிற நிலையில் இருப்பவர்கள் எல்லாம் திரும்பத் திரும்ப ஒருவரிடமிருந்து கடன் வாங்குகின்ற கட்டாயம் மிகக் குறைந்த அளவில் தான் இருக்கிறது. பெரும்பாலும் முதலீடு எதுவுமில்லாமல் வியாபாரம் செய்கின்ற சிறிய வியாபாரிகளுக்குத் தான் இப்படிப்பட்ட நிலை ஏற்படுகிறது. இது என்னுடைய சொந்த அனுபவம். நெல், அரிசி போன்ற தானிய வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு இப்படி ஏற்படுகிறது. அவர்கள் பெரும்பாலும் யாரிடமிருந்தாவது கடன் வாங்கி வியாபாரம் செய்து 10 ரூபாய், 15 ரூபாய் என்று அன்றாடம் லாபம் வருவதைக் கொண்டு திருப்பி அடைக்கிறார்கள். 500 ரூபாய்

என்று வரையறுத்து இருப்பது சரியான முறைதான். சில பேர் லாபமும் பெறலாம். தகுதி இல்லாதவர்கள் இதனுடைய அனுகூலத்தைப் பெறலாம். பல லட்சக்கணக்கானவர்கள் லாபம் பெறுகின்ற போது, நாம் விரும்பாதவர்கள் கூட இந்த லாபத்தைப் பெற வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதை நாம் ஒன்றும் செய்ய முடியாது. இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையிலும் முடிவிலே நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தொழில் வரி கட்டுகின்றவர்களுக்கு (Profession Tax) விதிவிலக்கு இல்லையென்று இருக்கிறது. இதிலே சங்கடம் என்னவென்றால், அரசாங்க அலுவலகத்திலே இருக்கின்றவர்கள் அல்லது வேறு துறையில் இருக்கின்றவர்கள் மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் வாங்கினால் கூட, தொழில் வரியைக் கட்டுகின்ற நிலைமைக்கு வந்து விடுகின்றார்கள். அவர்கள் இந்தச் சட்டத்தின்படி நலன்கள், சலுகைகள் போன்றவற்றை அனுபவிக்க முடியாத நிலை இருக்கிறது. அதே நேரத்திலே 15 ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டுள்ள ஒரு விவசாயியின் வருமானம் அரசாங்க அலுவலகத்திலே வேலை பார்க்கின்றவர்களுடைய வருமானத்தை விட அதிகமாக இருந்த போதிலும் கூட, தொழில் வரியைக் கட்டாமல் இந்த முழுமையான பலனை அனுபவிக்க முடிகிறது. ஆதலால் அலுவலகத்தில் பணியாற்றுகின்ற ஒரு அரசாங்க ஊழியர் அல்லது மற்றவர் இந்தச் சலுகையைப்பெற முடியாத நிலை இருக்கிறது. இதை நான் ஆட்சியினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதை அரசாங்கம் கருத்திலே கொள்ள வேண்டும். அவர்களுக்கும் இந்தச் சலுகை கிடைக்க வழிவகை செய்வார்கள் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலும் 23வது செக்ஷன்படி அப்பீல் செய்வதற்கான ஒரு முறையை வைத்திருக்கிறார்கள். 'அண்டர் செக்ஷன் 47' சி. டி. சி. யின்படி என்று வைத்திருக்கிறார்கள். ஆனால் திருத்தத்திற்குப் பிறகு அந்தச் சட்டம் போய்விடுகிறது. இப்பொழுது அப்பீல் செய்வதாக இருந்தால், ஹைகோர்ட்டுக்குத்தான் வரவேண்டும். இது பற்றி மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும்.

இன்னொன்று செக்ஷன் 2 (38). அதிலே நியாய வாரம் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நியாய வாரத்தைப் பொறுத்த வரையிலும், கரும்பு, புகையிலை, மஞ்சள் போன்ற பயிர்களுக்கெல்லாம் நியாய வாரம் என்று எதுவும் கிடையாது. அதுபற்றிக் குறிப்பிடவும் இல்லை. வழிவகை வகுக்கப்படவும் இல்லை. ஆகவே அந்தப் பயிர்களுடைய நிலை என்ன, அதைப் பயிரிடுகின்றவர்களுக்குக் கடன்களை எப்படி விதிவிலக்கு அளிக்கின்றோம், எந்த விகிதாசாரத்தில் கணக்கிடுகின்றோம் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். நடவடிக்கை எடுப்பதைப் பொறுத்த வரையில் செக்ஷன் 16க்கும் 19க்கும் இடையே இருக்கின்ற வேறுபாடுகளிலே 'லிமிட்டேஷன் ஆக்ட் செக்ஷன் 5-ஆம் பரிசீலனை



செய்யப்பட்டதா என்று தெரியவில்லை. அப்படிச் செய்தால். சங்கடங்கள் வருமோ என்று அஞ்சுகிறேன். சட்டத்துறை அது பற்றியும் பரிசீலனை செய்ய வேண்டும்.

ஒன்றை மட்டும் சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன். கடன்களைப் பொறுத்தவரை, அவசரச் சட்டங்கள் என்கின்ற நிலை வந்து அதைத் தாண்டி சட்ட பூர்வமாக சட்ட உருவம் கொடுக்கின்ற முயற்சியிலே இப்பொழுது இருக்கின்றோம். இன்றைக்கும் பெரும்பாலும் கிராமங்களிலாகட்டும், நகரங்களில் ஆகட்டும், அதிலும் குறிப்பாக தென்னாற்காடு மாவட்டத்திலே அதைப்போல இன்னும் இரண்டொரு மாவட்டங்களிலே கடன் கொடுக்கின்றவர்கள் 200 ரூபாய் கடன் கொடுத்தால், 500 ரூபாய்க்கு புரோ-நோட் எழுதி வாங்கிக்கொள்கிறார்கள். இன்றைக்கும் கூட அப்படிப்பட்ட நிலை இருக்கிறது என்பதை வேதனையுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். சங்கடத்தின், நிர்ப்பந்தத்தின் காரணமாக அப்படி எழுதிக் கொடுக்கிறார்கள். அதையே தொழிலாக வைத்துக்கொண்டு, உரிமம் பெற்றவர்களும் பெறாதவர்களும், ஏழையெளிய மக்களை வாங்குகின்றவர்களை நசுக்குகிற ஆயுதமாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்கு இந்தச் சந்தர்ப்பத்தில் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை

(பிற்பகல் 12-10)

முறையீடு செய்கிற இடம் தாலூகா ஆபீசிலே உள்ள தாசில்தாரிடம் என்று இருக்கிறது. இது போன்ற உரிமங்கள் பெற்றவர்கள் இந்தத் தொழிலிலே ஒரு சங்கம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தச் சங்கம் மிகுந்த வலிமை வாய்ந்த சங்கமாக இருக்கிறது. சில நிமிஷங்களிலே ஆயிரக்கணக்கான ரூபாயை இந்தச் சங்கத்தாலே புரட்ட முடிகிறது. எனவே இவர்கள் வைத்திருக்கின்ற பணபலம் காரணமாகவும் வேறு நிலைமைகள் காரணமாகவும் அதிகாரியிடத்திலே இவர்கள் அதிகாரம் செய்ய முடிகிறது. நெருக்கடி நேரத்திலேயே இதை நாம் பார்த்தோம். இப்போதும்கூட பார்த்துக்கொண்டிருக்கிறோம். பலபேர் தாசில்தாரிடத்திலே முறையிட்டுக்கொண்டார்களே தவிர, நிவாரணம் கிடைத்ததா என்றால், அநேகமாக இல்லை. எனக்கே கூட சொந்த அனுபவம் உண்டு. கடன் கொடுத்தவர்களுக்கு எதிராக சாதாரண விவசாயிகள் போய் தாசில்தாரிடம் முறையிட்ட போது இரண்டு மூன்று முறை வாய்தா போட்டு விட்டு பிறகு தீர்க்காமலேயே விட்டுவிட்டார்கள். அல்லது தீர்ப்பளித்த போதும், அது கடன் வாங்கியவர்களுக்கு எதிராகவே முடிந்தது. இப்படி விவசாயத் தொழிலாளர்கள், மிகக் குறைவாக நிலம் வைத்திருப்பவர்கள் மிகச் சிறிய தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்கள் ஆகியவர்கள் எல்லாம் அவதிக்குள்ளாகிற நிலை இன்னும் இருக்கிறது. எனவே இதைத் தீர்க்கிற வகையிலே அதுவும் நிரந்தரமாகத் தீர்க்கிற வகையிலே, ஒரு முறையைக் காண்பது

நல்லது என்று கருதுகிறேன். தற்போது தாசில்தாரிடத்திலே முறையிட்டுக்கொள்ளுவது என்பதை எடுத்துவிட்டால்கூட அது நல்லது என்று கருதுகிறேன். இந்தக் கடன் கொடுக்கிறவர்களுடைய அதிகாரமும் பணமும் யாரை எட்ட முடியாதோ அவரிடத்திலே முறையீடு செய்ய வேண்டுமென்று அவர்களை நியமிக்க வேண்டுமென்று கருதுகிறேன். ஏனென்றால், தற்போது கடனிலேயிருந்து மீளமுடியாதவர்கள் பண முடை காரணமாக குறைந்த பணத்தை வாங்கிக்கொண்டு அதிகமான தொகைக்கு கடன் பத்திரம் எழுதிக் கொடுக்கக்கூடிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். சிறிய விவசாயிகள் சிறிய பொன்நகைகளையெல்லாம் அடகு வைக்கிறார்கள். அவற்றையெல்லாம் இன்றைக்கு இருக்கிற அமைப்பின் மூலமாக, சங்கங்களின் மூலமாக யார் வட்டிக்குப் பணம் கொடுக்கிறார்களோ, அவர்களே ஏலத்தில் எடுத்துக்கொள்ளுகிற முறையைக் கையாண்டு கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக, ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்கள் அந்த பொன் நகைகளைத் திருப்பிக் கேட்கிறபோது அந்த நகை இல்லை, காலாவதி ஆகிவிட்டது, ஏலம் போடப்பட்டுவிட்டது, என்றெல்லாம் சொல்லி அவர்களை ஏமாற்றுகிறார்கள். எனவே இவற்றையெல்லாம் அரசாங்கம் முறையாகத் தீர்க்க வேண்டுமானால், தாசில்தார் அளவிலே இதைத் தீர்க்க முடியாது. கடந்த கால அனுபவம் இதைத்தான் காட்டியிருக்கிறது என்ற காரணத்தால், வேறு ஒரு வகையிலான நிர்வாக அமைப்பை ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை நிறைவு செய்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIYAR: Mr. Chairman, Sir, I must straightway express my grateful thanks to all the hon. Members who have participated in this debate, expressing their support, almost universal support to the measure that has been brought before this House, as passed by the Legislative Assembly. This measure now is solely intended to replace the Ordinance and its scope, as the hon. Member Thiru Damodaran has already stated, is rather limited in the sense that it is not possible to bring in amendments in view of the fact that the present Bill is only intended to supplant the Ordinance.

I am really grateful to some of the hon. Members who have made very useful suggestions. Particularly, the hon. Member Thiru Nallasivam and others have pleaded for the expansion of the scope of the profession tax from Rs. 1.200 to Rs. 2,500. But the antecedent legislative measures and the predecessors of the present Bill were solely confined to the relief within the limits of Rs. 1.200, so far as profession tax is concerned. But the suggestion will be duly considered in course of time by the Government.



The hon. Member Thiru Damodaran was pleased to suggest the institution of a Public Notary system modelled on the basis of the French system. As the hon. Member Thiru Ramamoorthi has put it, the agricultural labourer who is steeped in perpetual rural indebtedness is compelled to borrow a certain amount and execute a bond for a higher amount. If that is the actual state of affairs, even before the Public Notary system, the borrower can go and say "I have borrowed Rs. 400 or Rs. 500" although he borrowed in actuality Rs. 200 or Rs. 300. I do not know how far that system would be feasible in this country, for in the light of the Negotiable Instruments Act, if the instrument discloses Rs. 500, the presumption in law is that the borrower has borrowed Rs. 500 and nothing less than that unless the debtor proves to the satisfaction of the Court that the presumption is misplaced and that he borrowed only an amount far lower than the amount indicated in the negotiable instrument. It is a very onerous task for any debtor to prove that. As the hon. Member Thiru Ramamoorthi has given a few cases, I would like to say that so far as my experience goes, very rarely can a debtor succeed in proving his claim that he borrowed a far lesser amount than what has been indicated on the face of the instrument *ex facie*.

The hon. Member Thiru Damodaran has also pleaded for the revision of the rates of interest in the light of the income rates. All that I can submit to this House is that, that will all be considered in due course of time when the amendments are coming up, thought of or contemplated, resulting from the practical working of this Act.

The Government are also beholden to the various suggestions made by the hon. Members Thiru Lakshmikanthan and Thiru Veerasami. The hon. Member Thiru Veerasami, while extending his support, has pleaded for total exemption of a debt contracted by a debtor, even towards public bodies, local authorities or any bank or co-operative bank, if he is unable to pay for five years. That suggestion will be certainly considered in view of the fact that the burden appears to be too onerous for him to discharge even after a period of five years. The hon. Member Thiru Veerasami also pleaded for the total discharge of a debt where the interest and principal have been paid twice the amount. In fact, I would very much like to draw the attention of the hon. Member Thiru Veerasami to section 7 (2) (i) and (ii) and the proviso which will meet the argument advanced by him. So far as widows and minors are concerned, we have carefully thought about the limit so that they may not be put to any further abuse or anything and if really the practical working of this Act does occasion

[Thiru K. Narayanaswami Mudaliyar] [1978 செப்டம்பர் 15

the need for such an amendment, the Government will bear it in mind and duly consider the weightiness of the argument of the hon. Member Thiru Veerasami in respect of widows and minors.

[பிற்பகல் 12-20]

Thiru Ramamoorthi has also pleaded, joining with Thiru Nallasivam, for raising the half-yearly professional tax limit from Rs. 1,200 to a larger amount so that the class of debtors who stand to benefit by this legislation may be enlarged and may become more numerous. This will also be considered after watching the actual working of the Act and if it does not result in the giving of relief to those who do not need such relief, this will be borne in mind.

Thiru Ramamoorthi made mention of certain difficulties in the working of sections 16 and 19. I wish he gave some more details with particulars. But anyway in the course of the working of the Act, if the Government come across any actual difficulty, the Government will be very much happy to examine it in detail and remedy the situation.

In the end I would like once again to thank all the hon. Members for having extended their universal support to the present Bill, as passed by the Assembly, which replaces the moratorium laws and gives substantial relief to the debtors in the State.

THIRU A. R. DAMODARAN: Sir, one statement made by the Hon. Minister requires some detailed clarification. In view of the fact that he has given a statement here that the Government would consider the waiving of debts due to public institutions, co-operative institutions, banks, etc., as suggested by Thiru Veerasami, I am asking for clarification because this statement may be misinterpreted.

THE HON THIRU K. NARAYANASWAMI MUDALIYAR: Sir. I had restricted and narrowed my assurance. It may be remembered that Thiru Veerasami drew the attention of this House to the debts due to the Central Government, the State Government and the local authorities. So far as the Central Government are concerned, we have no authority. So far as the State Government and the local authorities are concerned, if a debtor is not able to pay for a prolonged period of 5 years and thereby proves his total incapacity to pay the debt in future, perhaps, all that I said was that the Government might consider that suggestion. Beyond that, the Government have not committed themselves at all.



1978 செப்டம்பர் 15]

திரு. க. இராமமூர்த்தி : மேலவைத் தலைவர் அவர்களே, இந்த நியாய வாரத்தைப் பொறுத்தவரையில், சில பொருள்களுக்கு எவ்வளவு தொகை என்பதுபற்றிக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்று தெரிவித்தேன். அதாவது செக்ஷன் 2 (3) (3)—1 Sugar-cane, Tapioca, Turmeric and other things. பற்றியது அதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். ஒன்றுமே அதைப் பற்றிச் சொல்லவில்லை. அவர்கள் இப்போது சொல்வார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIYAR: Sir, at present we are in a position to give the definition of 'rent' in clause (8) of section 2. I do not see any reason for definition of 'fair rent' because fair rent is being fixed under the respective legislations mentioned in the clause.

THIRU K. RAMAMOORTHI: So far as tapioca, sugar-cane and turmeric are concerned, no fair rent has been fixed.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIYAR: The Government will consider those points in course of time when the need comes, within the scope of clause (8).

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவைமுன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 30 வரை, அவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIYAR: Mr Chairman, Sir, I move—

"That the Tamil Nadu Debt Relief Bill, 1978 (L.A. Bill No. 41 of 1978), as passed by the Assembly, be passed".

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர் :</u> அவைமுன் உள்ள பிரச்சினை :

''சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு 41/1978) நிறைவேற்றப்பட வேண்டும்.''

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

<u>(3) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1978)</u>

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: Mr. Chairman, I move—

"That the Tamil Tadu Prohibition (Amendment) Bill, 1978 @ (L.A, Bill No. 36 of 1978), as passed by the Assembly, be taken into consideration."

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர் :</u> முன் மொழியப்பட்ட தீர்மானம் :

''சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1978) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்''.

* THIRU D. V. D'MONTE: Mr. Chairman, Sir, the objects and reasons advanced for this Bill are that licensees have been misusing quotas of denatured spirit and that, therefore, to prevent such misuse and enforce prohibition in a more effective way the Bill proposes to entrust the manufacture and sale of spirit-based commodities to the public sector undertakings and also to entrust the wholesale and retail sale of denatured spirit and varnish to public sector undertakings and co-operative societies.

Sir, I consider this step as a negative one in the working of the Prohibition Act. In my opinion, nothing is going to change for the better and the end result will be the same. If, on the one hand, we are trying to prevent misuse, on the other hand, we are letting ourselves in for a great deal of bureaucratic delay in the handling of that essential commodity particularly where hospitals and other places

@ 630ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



are concerned. I do hope that the Government will bear this in mind and ensure that so far as spirit and other items which are required in hospitals are concerned, the supplies are made freely available without let or hindrance.

Sir, if spirit and varnish are not available for misuse, this is certainly not going to stop the manufacture of alcohol at any time and at any place as anything can be converted into alcohol—from rice, jaggery, fruits and nuts—and the Government certainly cannot put a Policeman in every house. I am sorry to say that wholesale mockery of Prohibition is taking place in the State and large amounts of alcohol and illicit arrack are being made available in every nook and corner of Madras and I dare say in every part of the State as well. Sir, no amount of personal fads or imposing of the dry law is going to succeed in our State. The more it is done the greater are the loopholes to the smugglers and the illicit distillers will carry on their business. I am sorry to point out that this issue appears to be a political one and the Government are not prepared to face the realities. Nothing but a great sociological change can bring about a change in the thinking so far as drink-evil is concerned. I cannot help feeling that some sort of a hypocrisy is taking place here. If the Government feel that no permit should be issued to drink-addicts, let the Government openly say so. Why ask persons to go to Collector's office and other places, appear before Medical Boards and then wait for months together for the issue of permits? Apparently, the officers have had their instructions verbally. Nothing short of ...

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIYAR: Sir, this seems to be more of a diatribe against the Prohibition Act rather than the subject-matter of the present Bill to amend the Prohibition Act.

THIRU D. V. D'MONTE: Sir, I speak within the framework of the Bill and I would like to bring some other points to the notice of the Hon. Minister in passing. Certainly, it requires a great deal of courage and guts for persons to declare themselves to be addicts. Eventually, they have got to face up to the fact that no permit would be made available to them.

I would like to make one more point in regard to the effect of these rules so far as the alcohol industry is concerned. These industries involve huge investment and they are not able to market their products outside the State because of the oppressive Excise duty of

[Thiru D. V. D'Monte] [1978 செப்டம்பர் 15

50 to 80 paise per bulk-litre and the prohibitive cost per metric tonne of molasses apart from the increase in sales tax on raw materials. These factors have contributed much to the prohibitive price of alcohol. Some of the units are not able to participate in global tenders and secure business like their counterparts in other parts.

[பிற்பகல் 12-30]

Sir, I wish to make it clear that I hold no brief for those who offend the Prohibition Law in the State. I earnestly feel that Prohibition is necessary and that alcoholic drink is not good for the people But I feel that prohibition can never succeed by the mere enforcement of the law by the Government. The way in which it is implemented, is nothing short of what I feel hypocrisy. I think that we are dealing with Prohibition as a political measure rather than as a welfare measure for the benefit of the people. Thank you.

<u>திரு. க. இராமமூர்த்தி</u>: தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு மிகமிகத் தேவை என்கிற காரணத்தாலே, நான் இதை வரவேற்கிறேன். காரணம், கள்ளச்சாராயம் பல ரூடங்களில் செய்ய முடியும் என்றாலும்கூட, கள்ளச் சாராயத்தொழில் ஆரம்பமாக உதவியாக இருந்தது இந்த ஸ்பிரிட், வார்னிஷ் லைசென்ஸ்தான். இதை வைத்துக்கொண்டிருந்த தனியார் எல்லாம் இன்று பெரும் பணக்காரர்களாக, கோடீஸ்வரர்களாக, ஆகி சமுதாயத்தின் இரத்தத்தை உறிஞ்சி அழித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். சுலபமாகக் கள்ளச் சாராயம் எப்படிக் காய்ச்சுவது என்பதற்கு வழிவகை வகுத்தவர்கள் இந்த லைசென்சைப் பெற்றவர்கள்தான். இன்னும் சொல்லப் போனால், பெரிய அளவிலே மற்ற மாநிலங்களுக்கு, அந்திரா போன்ற மாநிலங்களுக்கு. ஸ்பிரிட்டை கள்ளக் கடத்தலில் கொண்டு போனவர்களும், மற்ற மாநிலங்களிலிருந்து நம் மாநிலத்திற்குக் கொண்டு வந்தவர்களும் இந்த லைசென்சைப் பெற்றவர்கள்தான். ஆகவே இந்த அரசாங்கம், இந்த லைசென்சுகளைக் கட்டுப்படுத்துகிற கடுமையான சட்டத்தைக் கொண்டு வருவதிலே என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன் அதை வரவேற்கிறேன்.

இந்தச் சமயத்திலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். வார்னிஷ் சம்பந்தமான, ஸ்பிரிட் சம்பந்தமானவற்றைக் கருப்பொருளாக வைத்துச் செய்கிற தொழிற்சாலைகளை அமைத்திருப்பவர்களுக்கு இந்த லைசென்ஸ் கொடுக்கப்படுகிறது என்று தெரிவித்தார்கள். பொரளவிலே அப்படியொரு போர்டை போட்டுக் கொண்டு, அந்தத் தொழிலைச் செய்வதில்லை. அவர்களுக்கு இருக்கின்ற சக்தியின் விளைவாக இந்த லைசென்சுகளை எப்படியோ பெற்றுவிடுகிறார்கள். அந்த நிலை இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.



1978 செப்டம்பர் 15] [திரு. க. இராமமூர்த்தி]

செக்ஷன் 2, கிளாஸ் (1)-ல் கடைசியாகச் சொல்லியிருக்கிறார்கள்.

"and to manufactuters of spirit based products who are registered with the Director General of Technical Development, Government of India or the Director of Industries and Commerce, Madras"

பல பேர் அதை வாங்கிவிடுகிறார்கள். வாங்கிவிட்டு அந்தத் தொழிலைச் செய்யாமல், அதன் மூலமாக தொழிலைச் செய்ய என்று ஸ்பிரிட்டை பத்து மடங்கு, ஆயிரம் மடங்கு அதிகமாக வைத்துக்கொண்டு கள்ளச் சாராயத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். நடவடிக்கை எடுக்கிறபோது, இலாக்காவினுடைய உரிமம் கிடைத்திருக்கிறது என்ற அளவிலே, அந்த உரிமத்தை "கான்சல்" செய்கிற நிலை குறுக்கே வருகிறது. ஆகவே நம்முடைய மாநில அரசு, இயந்திரங்கள் அமைக்கப்பட்டு, தொழில்கள் நடக்கும் என்று உறுதியாகத் தெரிந்த பிறகுதான், இந்த லைசென்சுகளைக் கொடுக்க வேண்டும். பிறகு ஒரு வேளை அவர்கள் அவற்றைத் தவறாகப் பயன்படுத்துகிறபோது, அந்த உரிமத்தை வாங்கித் தந்த அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அளவிலே கருத்தைத் தெரிவித்து என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

<u>திரு. ஆற்காடு நா. வீராசாமி</u>: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெயராலே கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மதுவிலக்குச் சட்டமுன்வடிவை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

<u>மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி</u>: அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல, மதுவிலக்கைத் தீவிரமாக அமுல்படுத்த வேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் சொல்லிக்கொண்டிருக்கிற நேரத்தில், இந்தக் குற்றங்களைச் செய்வதற்கு அடிப்படையாக இருக்கிற தொழில் இப்படிப்பட்ட ஸ்பிரிட் தொழில் என்பதை நானும் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தனிப்பட்டவர்கள் இப்படிப்பட்ட உரிமங்களைப் பெற்றுக்கொண்டு, அதைத் தவறான முறையிலே பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்கு, வார்னிஷ் அல்லது டீ-நேட்சர்ட் ஸ்பிரிட்டை மூலப் பொருளாகக் கொண்டு உற்பத்தி செய்கிற கூட்டுறவு நிறுவனங்களுக்கும், அரசு நிறுவனங்களுக்கும் கிடைக்கும் நிலையை உருவாக்குவதன் மூலம் தனியார் தங்களுடைய விருப்பம்போல் டீ-நேட்சர்ட் ஸ்பிரிட் லைசென்சை வைத்துக்கொண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்கும், விற்பதற்கும் உள்ள ஒரு வாய்ப்பைத் தடுப்பதற்கு இது ஒரு நல்ல சட்டமாக அமைந்திருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வருகிறபோது, கூட்டுறவு நிறுவனங்களாக இருந்தாலும் சரி, அரசு நிறுவனங்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு அந்த அதிகாரங்களைக் கொடுக்கிறபோது நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏதோ இந்த அரசாங்கத்தின்

மீது குற்றம் சுமத்த வேண்டுமென்ற நோக்கத்திற்காக நான் இதைச் சொல்லவில்லை. மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரமாக அமுல்படுத்தக் கூடிய புதிய அதிகாரத்தைக் கொடுக்கிற நேரத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் இந்தக் கருத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கிறவர்கள் ஸ்பெஷல் ஆபீசராக இருந்தாலும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருந்தாலும், அவர்கள் தங்களுக்குக் கொடுத்த அதிகாரங்களைத் தவருகப் பயன்படுத்திக்கொண்டிருக்கிருர்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்லுகிற நேரத்தில், இப்படிப்பட்ட ஸ்பிரிட்டையெல்லாம் விற்கக்கூடிய அதிகாரம் அவர்களிடம் கொடுக்கப்படுமானல், பின்னலே கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுக்குத் தொண்டு செய்வது என்பது மாறி, அது வேறு எங்கேயோ கொண்டுபோய் விட்டுவிடுமோ என்ற அச்சம் உருவாகியிருக்கிறது. இதை அரசாங்கம் மிக எச்சரிக்கையோடு மனதிலே கொள்ள வேண்டுமென்று குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்கள் பரவலாக எல்லா இடங்களிலும் இருக்கின்றன. எல்லாச் சங்கங்களுக்கும் கொடுப்பதைவிட, ஒரு மாவட்டம் என்று சொன்னல், அதிலே ஒரு ரெவின்யூ டிவிஷனுக்கு ஒன்ருக, மூன்று நான்கு இடங்களில், இந்த மூலப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு யார் தொழிலைச் செய்தாலும், அந்தத் தொழில் அதிபர்களுக்கு, இப்படிப்பட்ட லைசென்சுகளை வழங்கக்கூடிய வாய்ப்பை உண்டாக்க வேண்டுமே தவிர, பரவலாக எல்லாச் சங்கங்களுக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுத்து விட்டால், கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுடைய கடமையை மறந்து வேறுவிதத் தொழில்களில் ஈடுபட வாய்ப்பு ஏற்படும். அதிலே அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். மத்திய அரசாங்க நிறுவனங்களுக்கும், மாநில அரசு தொழில், வணிகத்துறை இயக்கத்தில் பதிவுசெய்து கொண்டுள்ளவர்களுக்கும் இப்படிப்பட்ட உரிமங்களைக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சட்டமுன்வடிவிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், வேறு சில மாநிலங்களிலிருந்து தமிழகத்திலே வந்து இந்த ஸ்பிரிட்டை, டீ-நேட்சர்ட் ஸ்பிரிட்டை வாங்கிப்போக அனுமதிக்கிருேம். நம்முடைய நாட்டிலே இந்த ஸ்பிரிட் உற்பத்தியாகிறது. மற்ற மாநிலங்களிலிருந்து உரிமம் பெற்று இங்கே வந்து கொண்டு போகக் கூடிய தவறு செய்கிருர்கள். இதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானல், ஐதராபாத்திலுள்ள ஒரு தனிப்பட்டவர், அந்த அரசாங்கத்தினுடைய அனுமதியை வாங்கிக்கொண்டு. தமிழ் நாட்டிலிருந்து ஸ்பிரிட்டை வாங்கி ஐதராபாத்துக்குக் கொண்டு





செல்ல விட்டுவிடுகிருர்கள். ஆந்திரா, கருநாடகா அரசாங்கங்கள் அப்படிச் சிபார்சு செய்யும்பொழுது, நம்முடைய அரசாங்கம் அந்த அரசாங்கங்களுக்கு நேரிடையாகத் தரலாமே தவிர, தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு இவைகளையெல்லாம் உள்ளடக்கி நல்ல முறையிலே பயன்படுத்த வேண்டுமென்று சொல்லி என்னுடைய கருத்தை இந்த அளவிலே முடித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மதுவிலக்கு சம்பந்தமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டத் திருத்தத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்களை நாங்கள் உண்மையிலேயே மரியாதையோடும், மதிப்போடும் கவனிப்போம் என்று சொல்லுகிற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் இங்கே குறிப்பிட்டதை இந்த அரசு மனதிலே வைத்துக் கொள்ளும் என்பதையும், எந்தக் காரணத்தைக் கொண்டும் அப்படிப்பட்ட நிலை ஏற்படாமல் தடுப்பதற்கு நிச்சயமாக இந்த அரசு ஏற்பாட்டைச் செய்யும் என்பதையும் இங்கே கூற விரும்புகிறேன்.

அத்தோடு, "பிரின்டிங்" தொழிலைச் செய்பவர்கள் வார்னிஷைப் பயன்படுத்துவதால், அந்த வார்னிஷில் எவ்வளவு விஷம் வேண்டுமானலும் கலந்துகொடுங்கள், நாங்கள் பயன்படுத்துகிருேம் என்று என்னிடத்தில் நேரில் முறையிட்டார்கள். வார்னிஷ் குடித்து எத்தனை பேர்கள் செத்தார்கள் என்பது தெரியும். விஷம் கலப்பது என்பதுகொல்ல உதவி செய்யும். வேறு வகையில் உதவி செய்யாது என்ற காரணத்தால், நாங்கள் அதற்கு ஒரு எல்லைக்கோட்டை வைத்துக் கொண்டிருக்கிருேம்.

(பிற்பகல் 12-40)

இந்தச் சட்டம் எப்படிப் பயன்படுகிறது என்பதைக் கண்டு, எந்தெந்த வகையில் இதைச் சரிசெய்ய வேண்டும், கட்டாயம் ஏற்பட்டால் இதைத் திருத்தவும் அல்லது குறைக்க வேண்டுமென்ருல் குறைக்கவும் வேண்டி அதற்குரிய கருத்தையும் இங்கே கேட்கவும் இந்த அரசு முயலும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIYAR: Sir, I am really greateful to the Hon. the Chief Minister for having made the stand of the Government very clear. On the various suggestions made by the hon. Member Thiru N. Veerasami and also Thiru K. Ramamoorthi, I am really beholden to both the hon. Members for the unanimous support given to the contemplated Bill which is on the anvil of this House now. The hon. Member Thiru D'Monte

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 15

made use of the expression 'drink evil'. I am glad that he was so much in support of the socio-economic measure, experiment which has been placed before the country by Mahatma Gandhi, Thiru Rajaji and Amarar Anna. This prohibition experiment is enthusiastically enforced in this State. I am beholden to the hon. Member Thiru D'Monte who, in the course of his speech, used the expression "drink evil".

THIRU D. V. D'MONTE: Sir, I had stated very clearly that we supported the Government so far as the policy of prohibition was concerned. I was only trying to indicate the misuse and abuses.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIYAR: Sir, I am doubly grateful to the re-inforcement of the statement of the hon. Member that drink is an unmitigated evil. So far as the working of the Act and misuses are concerned, we shall certainly bear in mind how best to rectify them and how best we can seek the support of the House for implementation of the Act. Thank you.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர் :</u> அவைமுன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1978), ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.'

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு, ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIYAR: Mr. Chairman, I move—

"That the Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1978 (L. A. Bill No. 36 of 1978), as passed by the Assembly, be passed".



1978 செப்டம்பர் 15]

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர் :</u> அவைமுன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1978), நிறைவேற்றப் பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(4) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, பயிரிடும் குத்தகை தாரர்கள் (வெளியேற்றப் படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1978),

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப் படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகின்றேன்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர் :</u> முன் மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப் படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1978) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

THIRU D. V. D'MONTE: Hon. Chairman, I wish to make only one point on this Bill which extends the moratorium for tenants up to 16th January 1979.

<u>திரு. க. இராமமூர்த்தி</u> : பயிரிடும் குத்தகைதாரர்கள் நியாய வாரம் செலுத்துதல் மற்றும் வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல் ஆகிய இரண்டு சட்ட முன்வடிவுகள் வந்திருக்கின்றன, இரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்தவைதான். ஆகவே பொதுவான விவாதமாக வைத்துக்கொள்ளலாம் என்கின்ற என் கருத்தினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

---

* 631-ம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இரண்டுக்கும் பொதுவாக விவாதம் வைத்துக்கொள்வதில் எனக்கு ஆட்சேபணையில்லை. பேசுவதைப் பொதுவாக வைத்துக்கொள்ளலாம. நிறைவேற்றும் போது தனித்தனியாக நிறைவேற்றலாம்.

THIRU D. V. D'MONTE: There has been moratorium for tenants for the last five years from Fasli 1382 to Fasli 1386. Whether there is justification for this in the absence of any continuous adverse condition is anybody's guess. But this Act, I feel, has helped the litigant tenant to get relief. The tenant has taken away the landholders' share of earning without payment and the tenant does not discharge his obligation anticipating extension of moratorium time and again. So, I feel that tenants should pay the dues for the year during which there has been no adverse condition. After all, who are landowners? They are only small people, widows, retired persons who had invested their small earnings in the land. What is the protection for this class of people whose plight is pitiable, who have no means of redress to secure their income? The point I make is that it is only the litigant tenant who is benefited by this Act.

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, இந்த இரண்டு மசோதாக்களைப் பொறுத்தவரையிலும், ஒரே ஒரு கருத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நியாய வாரம் செலுத்துதல் ஆனாலும் சரி அல்லது வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல் ஆனாலும் சரி, பூரணமாக யார் நேரிடையாக விவசாயம் செய்கிறார்களோ, யார் அந்த நிலத்திலே நேரிடையாகப் பயிர் செய்கிறார்களோ, அவர்களுக்கு நிலத்தைச் சொந்தமாக்குகின்ற முறைகளை நாம் காலம் கடத்திக்கொண்டே வருவதால் ஏற்படுகின்ற விளைவுகள்தான் இந்தச் சட்ட முன்வடிவுகள். இது போன்ற சட்ட முன்வடிவுகள் மூலம் காலத்தை நீட்டித்துக் கொண்டு போவதை விட மிக சீக்கிரமாக நேரடியாக விவசாயம் செய்கின்றவர்களுக்குத்தான் நிலம் சொந்தம் என்கின்ற வகையில் ஒரு சட்டம் நிச்சயம் இடம் பெற வேண்டும். விதவைகள், கணவனை இழந்தவர்கள், அங்கஹீனர்கள், இராணுவத்தைச்சேர்ந்தவர்கள் போன்றோருக்குச் சொந்தமான நிலங்களைப் பொறுத்து, அவற்றை எப்படி அரசாங்கம் எடுத்துக் கொள்வது அல்லது அவற்றுக்கு எப்படி எக்ஸம்சன் கொடுப்பது அல்லது மாற்று ஏற்பாடுகளைச் செய்வது போன்றவற்றுக்கு முதலில் ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரை, வேகமாக, உழுபவர்களுக்கு அல்லது நிலத்தில் நேரடியாகப் பயிரிடுபவர்களுக்குத்தான் நிலம் சொந்தம் என்கிற வழிவகை உடனே செய்ய வேண்டும். இந்தச் சட்டத்தைக் காலம் கடத்திக் கொண்டே போகிற போக்கை உடனே கைவிட்டுவிட்டு, மாண்புமிகு





அமைச்சர் அவர்கள் உடனடியாக கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கொள்கையளவில் ஏற்றுக்கொண்ட ஒன்றைக் காலக் கிரமத்தில் கடத்திக் கொண்டே போகிறபோக்கு இன்றையதினம் இருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொண்டு, இதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடியாகப் பரிகாரம் காண முயற்சிக்க வேண்டுமென்று கூறி, என் உரையை முடிக்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர் அவாகளால் இங்கே அறிமுகப் படுத்தப்பட்டிருக்கின்ற சட்ட முன்வடிவுகள் மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். குத்தகைதாரர்கள் நியாய வாரம் செலுத்துதல் சட்டமாக இருந்தாலும் சரி அல்லது குத்தகைதாரர்கள் வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல் சட்டமானாலும் சரி, ஒன்றை மட்டும் உணர முடிகிறது. குறிப்பாக நமது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சார்ந்திருக்கின்ற தஞ்சை மாவட்டத்தில் தான் இப்படிப்பட்ட பிரச்சினைகள் அதிகம், குத்தகைதாரர்கள் தங்களுடைய கோரிக்கையை நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றார்கள். நிலச்சுவாந்தார்கள் தங்களுடைய உரிமை பறி போகக் கூடாது என்பதற்காக வாதாடுகிறார்கள். திரும்பத் திரும்ப நீதிமன்றத்திற்குச் செல்வதோடு நிலச்சொந்தக்காரர்களுக்கும் பயிரிடுகின்றவர்களுக்கும் மத்தியில் இது ஒரு தொடர் கதையாக இருக்கிற காரணத்தால்தான், நாம் இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வருவதன் மூலம் பிரச்சினைகளை ஒத்திப்போட்டுக் கொண்டே போகிறோம். இதற்கொரு நிரந்தரப்பரிகாரம் காண முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி மிக அழகாகச் சுட்டிக் காட்டினார். தமிழகத்தைப் பொறுத்த வரை, உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகி விட்டது. இந்தக் கொள்கையில் ஆளும் கட்சிக்கு எந்தவிதக் கருத்து வேறுபாடும் இல்லை என்று நான் நினைக்கின்றேன். இந்தக் குத்தகைதாரர்கள் 5 ஆண்டு அல்லது 10 ஆண்டுக் காலம் உழுகிறார்கள். நடைமுறையில் பார்க்கின்ற போது கிராமங்களிலே இருக்கும் பதிவேடுகளில் நிலச்சொந்தக்காரர்கள் இவர்கள் தான் என்று எழுதி வைத்துக் கொள்வதில்லை. குத்தகைதாரர்களை ஏமாற்றுகிறார்கள். குத்தகைகாரர்கள் அடிமைகளைப்போல் இருந்துகொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12.50)

பெரிய நிலச்சுவாந்தார்களை எதிர்த்துப் போராடக் கூடிய சக்தி இந்தக் குத்தகைதாரர்களுக்குக் கிடையாது. எனவே இப்படிப் பட்ட சூழ்நிலையில் இந்தப் பிரச்சினைகளையெல்லாம் ஒத்திப்

போட்டுக் கொண்டிருப்பதைவிட, நீதிமன்றங்களுக்கு அவர்கள் சென்று வாதாடிக் கொண்டிருப்பதைவிட, அரசாங்கம் தெளிவாக உழைப்பவனுக்கு நிலம் சொந்தம் என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டு, அவர்கள் குத்தகைதாரர்களாக இருந்தால் இத்தனை ஆண்டுக் காலத்திற்குப் பிறகு இந்த நிலத்தை அவர்களுக்குச் சொந்தமாக்கி விடுகிறோம் என்று அறிவிக்க முன் வர வேண்டும். ஏற்கெனவே நிலத்தினுடைய கிரயம் இவ்வளவு என்று ஒப்புக்கொண்டு தொடர்ந்து உழுது பயிரிடுபவர்களுக்கு அந்த நிலத்தை உரிமையாக்குகிற வகையிலே சட்டம் இயற்றப் பட்டிருக்கிறது. இப்போது நான் கேட்பதெல்லாம் அவர்களுக்கு ஒரு பத்தாண்டுக் காலம், ஐந்தாண்டுக் காலம் அவகாசம் கொடுத்து, அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். இப்போதே நிலச் சொந்தக்காரர்களுக்கும், குத்கைதாரர்களுக்கும் ஒரு 'மியூட்சுவல் அண்டர்ஸ்டாண்டிங்' இருந்து வருகிறது. எனவே குத்தகைதாரர்களை மேலும் துன்புறுத்தாத வகையில் இந்த நிலைமைக்குப் பரிகாரம் காணும் முறையில் உழைப்பவனுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும் என்ற கொள்கை தீவிரமாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்று கூறிக்கொண்டு, இந்தச் சட்டத்தை முழுமனதோடு ஆதரிக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிற சட்ட முன்வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வீராசாமி அவர்களும், திரு. டி'மாண்டி அவர்களும், திரு. இராமமூர்த்தி அவர்களும், தங்கள் கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள், உறுப்பினர்கள் மூவரும் இதை வரவேற்றிருக்கிறார்கள் என்பதற்காக நான் என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்தச் சட்டத்தை நுணுக்கமாகப் பார்த்தால், ஒன்று தெரியும். குத்தகை என்பது வேறு, நிலத்தைச் சொந்தமாக்குவது என்பது வேறு. நிலத்தைச் சொந்தமாக்குவது பற்றி இந்தச் சட்டத்திலே எதுவும் சொல்லப்படவில்லை என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். குத்தகைதாரர்கள், குத்தகை கட்டுவதை தள்ளிப் போட்டுக் கொண்டே வந்திருக்கிறார்கள். இப்படி உழுது பயிரிடுகிற ஏழை எளியவர்கள் எல்லாம் இவ்வாறு தள்ளிப் போட்டுக் கொண்டு வந்திருக்கிற குத்தகை அனைத்தையும் ஒரே நேரத்தில் கொடுக்க வேண்டுமென்றால் முடியாதவர்களாக இருக்கிறார்கள். இதற்கு ஒரு வழி கண்டாக வேண்டும், அன்றைக்கு இந்தச் சட்டத்தை நீடிக்காவிட்டால் என்ன நிலை ஏற்படும் என்பது எல்லோருக்கும் தெரியும். இதை நாம் ஒரு அவசரச் சட்டத்தின் மூலமாக நீட்டித்திருக்கிறோம் அவ்வாறு அவசரச் சட்டத்தின் மூலம் நீட்டிக்கவில்லை என்றால், இதற்குள்



ஆயிரக்கணக்கான வழக்குகள் நீதி மன்றத்திற்குப் போயிருக்கும். அது மட்டுமல்ல, நிலச்சொந்தக்காரர்கள் உழுது பயிரிடும் குத்தகைதாரர்களை நிலத்தை விட்டு வெளியேற்றுவதற்கான முயற்சியை மேற்கொண்டிருப்பார்கள். இந்த வகையில் நீதி மன்றத்திற்கு மட்டுமல்லாமல், காவல் துறைக்கும் பல பேர் சென்றிருப்பார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளிலிருந்து குத்தகைதாரர்களைப் பாதுகாப்பதற்கு இந்த முயற்சியை நாம் மேற்கொண்டிருக்கிறோம். இது மட்டுமல்ல-உழுது பயிரிடுகிற ஏழை எளிய விவசாயிகளுக்குப் பாதுகாப்புத் தரவும் வாழ்க்கையிலே முன்னேற்றம் காணவும் குத்தகை எவ்வளவு நிர்ணயிப்பட்டது என்பது பற்றியும் அரசு தற்போது தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உழுது பயிர் செய்பவர்களுக்கு நியாயமான குத்தகை இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இந்த அமைச்சரவையும் அதைத் தான் யோசித்துக் கொண்டிருக்கிறது. முடிவாக இதைப்பற்றி முடிவெடுத்து ஒரு சட்டமுன்வடிவாக குடியரசுத் தலைவரிடம் ஒப்புதல் வாங்கி, அது சட்டமாக இங்கே நிறைவேறுவதற்கு மிகுந்த காலம் தேவைப்படுகிறது என்ற காரணத்தால் தான் 15-1-1979 வரையிலும் இந்த அவசரச் சட்டத்தை நீட்டிக்கின்ற வகையிலே இதைச் சட்டமுன்வடிவாக இங்கே கொண்டு வந்திருக்கிறோம் என்று கூறி, இந்தச் சட்டமுன்வடிவை சட்டமாக்கித் தர வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன்.

திரு, ஆற்காடு நா. வீராசாமி: அதைத்தான் நாங்களும் கூறுகிறோம். குத்தகை பாக்கி, குத்தகை பாக்கி என்று சொல்லிக்கொண்டு இதைத் தள்ளிப் போட்டுக் கொண்டே போவதால், எந்தப் பிரயோஜனமும் இல்லை. இன்னும் இரண்டாண்டுக் காலம் கழிந்தாலும், விவசாயிகள் இந்தக் குத்தகை பாக்கியைக் கட்டப் போவதில்லை. நான் சொல்லுவதெல்லாம் இப்படித் தள்ளிப் போட்டுக் கொண்டே போவதை விட, நிலங்களின் விலையை மதிப்பீடு செய்து அந்த நிலங்களையெல்லாம் குத்தகைதாரர்களுக்கே சொந்தமாக்கி விட்டால், பிறகு வாடகை, குத்தகை பாக்கி என்றெல்லாம் எந்தப் பிரச்சினையும் எழாது. அப்படி ஒரு நடவடிக்கையை எடுத்திருந்தால், இப்போது இந்தச் சட்ட நீட்டிப்புக்கு அவசியமே ஏற்பட்டிருக்காது என்பதைத்தான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இதைத்தான் நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். இதிலே இரண்டு விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. ஒன்று உழுபவர்களையே நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக்குவது. அதை எப்படிச் செய்வது என்று

இப்பொழுது தீவிரமாக ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. மற்றொன்று, குத்தகை வராவிட்டால், அதற்கு என்ன வழி செய்வது? தற்போது 60:40 என்கிற நிலையில் குத்தகையைத் தள்ளி வைத்துக்கொண்டே இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். முன்னாலே இருந்த அரசும் குத்தகையைச் தள்ளி வைத்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். அதற்குப் பிறகும்கூட குத்தகை பாக்கியை வசூல் செய்ய முடியவில்லை. அப்படி பாக்கியிருக்கிறதொகை பல்லாயிரக்கணக்கிலேஇருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், கோடிக் கணக்கிலே இருக்கிறது. இதை எண்ணிப்பார்க்கிற போது, எந்த வகையிலே இனி குத்தகையை நிர்ணயிப்பது என்று யோசித்து வருகிறோம். அதைப்பற்றிக் கூட இங்கே சிலர் குறிப்பிடுகிறபோது, அரசாங்கம் அதில் கவனமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். காரணம், நிலம் வைத்திருப்பவர்களில் சில பேர் ஊனமுற்றவர்களாக இருக்கிறார்கள். விதவைகள் இருக்கிறார்கள். 3 ஏக்கர், 4 ஏக்கர், 5 ஏக்கர் என்று குறைந்த அளவிலே நிலம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் சொந்தமாகப் பயிர் செய்ய முடியாத காரணத்தால், தங்கள் நிலங்களைக் குத்தகைக்கு விட்டு விடுகிறார்கள். குத்தகை சரிவரக் கிடைக்காதகாரணத்தால், அவர்கள் எல்லாம் கஷ்டப்படுகிறார்கள் அவர்களுக்குப் பெண்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் கல்யாணம் செய்ய முடியவில்லை. இப்படி பலவகையில சங்கடப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று பல பேரிடத்திலேயிருந்து மனுக்கள் அரசாங்கத்திற்கு வருகின்றன. அரசாங்கத்திலே இதையெல்லாம் யோசித்துக் கொண்டிருக்கிறோம். இப்போது இந்தச் சட்டமுன்வடிவையே கொண்டுவருவதற்குக் காரணம் உறுப்பினர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதைக் கேட்டறிவதற்காகத் தான். பேரவையிலே இருக்கிற உறுப்பினர்களும் இங்கு மேலவையிலே இருக்கிற உறுப்பினர்களும் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிற கருத்துக்களையெல்லாம் பரிசீலனை செய்வதற்கு இது ஒரு வழியாக இருக்க வேண்டும் என்று இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இதைப்பற்றி நான் முதலிலே சொல்லவில்லை என்றாலும், எதிர்காலத்திலே இவைகளையெல்லாம் வைத்துக் கொண்டு அரசாங்கம் ஒரு நல்ல முடிவை எடுக்க இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்</u>: அவை முன் உள்ள பிரச்சினை:

''சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப் படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.''

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.



சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

<u>மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்</u>: மாண்புமிகு தலைவர் அவர்களே,

''சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப் படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1978) நிறைவேற்றப்படவேண்டும்.'

என்று முன்மொழிகிறேன்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்</u>: அவை முன் உள்ள பிரச்சினை:

''சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப் படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/1978) நிறைவேற்றப்படவேண்டும்.''

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(5) தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய-வாரம் செலுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1978).

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்</u>: மாண்புமிகு தலைவர் அவர்களே,

''சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்த சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1978) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.''

என்று முன்மொழிகிறேன்.

---

@ 631-632ஆம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1978 செப்டம்பர் 15

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்த சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது. சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாயவாரம் செலுத்துதல்) திருத்த சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1978) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாயவாரம் செலுத்துதல்) திருத்த சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1978) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(6) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1978).

மாண்புமிகு திரு எஸ்.டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே'

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு † (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1978) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."
என்று முன்மொழிகிறேன்.

---

† 632-633 ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1978 செப்டம்பர் 15]

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன் மொழியப்பட்ட தீர்மானம். ;—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1978) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

(பிற்பகல் 1-00)

திரு. ஆ. நல்லசிவன் : தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தை நான் ஆதரிக்கிறேன். காரணம் இந்த விதிகளிலே வசதி படைத்தவர்கள் உபயோகிக்கின்ற பொருள்களுக்குத்தான் அதிக வரி போடப்படுகின்றது என்ற நோக்கத்தை ஆரம்பத்திலேயே கூறியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே 9 சதம் என்பதை 15 சதம் என்று உயர்த்தியிருப்பதை வரவேற்கிறேன் 3வது உப பிரிவிலே சாதாரண மக்கள் உபயோகிக்கக்கூடிய சோடா கலர் போன்ற பானங்கள் மீது, அதைத் தயாரிக்கின்ற சிறு உற்பத்தியாளர்களுக்கு 4 சதம் பல முனை வரியைத் தொடர்ந்து நீடிக்கிறார்கள் என்று இருக்கிறது. அது இந்த மசோதாவின் அடிப்படை நோக்கத்திற்கு மாறுபட்டிருக்கிறது. ரூ. 5,000 முதல் ரூ. 10,000 வரை முதல் முடக்கி தொழில் செய்யும் சிறு உற்பத்தியாளர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும். சாதாரண மக்கள் உபயோகிக்கக்கூடிய கலர்போன்ற பானங்களைத் தயார் செய்யும் சிறு உற்பத்தியாளர்களுக்குப் போடப்பட்டுள்ள 4 சதம் பல கட்ட வரியை ரத்து செய்ய வேண்டும். அவர்களுக்கு 50 சதவிகிதம் குறைத்து சலுகை கொடுத்து, அதை 2 சதவிகிதம் ஒரு முனை வரியாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் திருத்தத்தை ஆதரித்து அமைகிறேன். வணக்கம்.

THIRU G. VASANTHA PAI: Hon. Chairman, while considering L.A. Bill No. 30 of 1978, it is with regret that I have to speak in this House on the constant amendments that are taking place in the General Sales Tax Act, 1959. Sir, according to item No. 4, as sought to be amended by this Bill, air coolers, room coolers including cooling appliances, etc., are included along with Refrigerators. It is mentioned in the Statement of Objects and Reasons that these sophisticated goods are maintained only by affluent persons. I may tell you one thing. The air conditioner costs somewhere up to Rs. 11,000 today. Air cooler will cost only Rs. 500 and after the

recent increase, it may cost up to Rs. 900 or Rs. 1,000. If the Government start taxing it in the same way as an air conditioner, these air coolers will not be available for the use of the poor persons in Tamil Nadu, which is having a climate termed as hot, hotter and hottest.

Many persons can afford to pay Rs. 1,000 and have an air-cooler fixed in their small shops, tenements, houses or the LIG, MIG and HIG flats allotted by the Housing Board. In all such places an air cooler can be usefully fixed, whereas an air conditioner with its present heavy cost of Rs. 8,000 for an one-tonne air conditioner and Rs. 11,000 for a 1½ tonne air conditioner will probably be only within the reach of the affluent section of the society. So far as these air coolers are concerned, they are meant to cater to a comparatively poorer section of the society and the middle class. Generally, in Tamil Nadu, the climate is such that the temperature goes up to 103 or 109 degrees in some months of the year and I think it went even up to 111 degrees this year. When it is so, I should think that this tax would prevent the middle class people from enjoying the facility of having an air cooler in their houses. I would request that this item should not be taxed as an air conditioner.

Then, I come to the aerated waters and bottled soft drinks which I presume are drinks like Coco-Cola, Spencer's drinks and things like that. They come under Act 43 of 1958, the Trade and Merchandise Marks Act and they are charged only 5 per cent single point tax while the poor trader has to pay a multi-point tax. I do not see how this is helpful because a multi-point tax is always condemned and this Government have always said that they are going to resort to a single point system. Now, why should a poor trader or a person who buys a drink pay a multi-point tax on this? I would like the Hon. Minister to consider this and see that the assurances given by him to the Chamber of Commerce and other organisations that he would place the question of multi-point versus single-point and also the integration of additional tax and surcharge before the Kaiwar Committee are also implemented. The terms of reference to the Kaivar Committee are also very narrow. Some Members of the House who are here may not probably speak on this because they are members of the Kaiwar Committee. But I would like to say that the points referred to that Committee are very much narrow. For a Committee of that order presided over by an experienced I.C.S. Officer whose ability is beyond question, I think the terms should be widened. For example, the



terms of reference should include the question whether the multi-point tax should be abolished and everything should be centred round a single point tax in the General Sales Tax Act. The question of integration of additional tax and the surcharge should also be referred to the Kaiwar Committee so that they are brought within the scheme of the basic sales tax. By doing that, I think the people would be relieved of the burden of such sales taxes which are modified every time and additional taxes imposed in the middle of the year like this. I think it is very unfair to the consumer as well as to the dealer that a sales tax amendment should be brought in the middle of the year. Why not bring it in the first portion of the year when the Budget is presented so that people may at least know that and live in some peace throughout the year? Why should they be harassed by bringing in such legislation in between? I feel that the period should be fixed as one year and during that period the tax may be the same and there may not be an unnecessary aberration thereof during the course of the year.

Sir, I would now refer to the rectified spirit, absolute alcohol and neutral spirit which are being brought under item 107 and taxed. I think this will affect the medicinal preparations and toilet preparations Absolute alcohol and rectified spirit are used in hospitals. Rectified spirit is the one which you use for cleaning your ear. If you go to a doctor and tell him "I have got some wax in my ear", he will say "If you want to put anything in your ear do not put a needle or anything like that; take a swab, put it in rectified spirit and clean your ear". Rectified spirit is a thing which is used for medicinal preparations and is a prescription which doctors make for so many ailments connected with the ear and other delicate parts of the human body. If these things are to be taxed, it will be virtually taxing health. It may not be congenial for humanity if this should be brought under the scheme of taxation. I would also like to say something about absolute alcohol. This is also used in medicinal preparations and toilet preparations. Of course, if absolute alcohol is taxed, it gains the position of a costly commodity. Then, adulteration will step in and our womenfolk who use toilet preparations would suffer. In the interests of all of them, I would request the Government to reconsider the question of bringing this within the realm of sales tax and I do hope the Hon. Minister will give his earnest consideration.

Thank you for the opportunity given to me.

* திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நான் எதிர்க்க வேண்டிய கட்டாயத்திலே இருக்கிறேன். இந்த மசோதாவில் ஒரு தவறான கண்ணோட்டத்தின் அடிப்படையிலே பொருள் கூறப் பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். ரெபிரஜரேட்டர்களை பணக்காரர்கள் உபயோகிக்கின்ற சாதனம் என்று அறிவித்திருக்கிறார்கள். இது எந்த அடிப்படையிலே ஏற்பட்டது என்று எனக்குத் தெரியவில்லை. இன்றைக்கு இருக்கின்ற நிலைமைகளை, சமுதாய நிலைமைகளை நாம் நன்றாக உணர்ந்தாக வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10).

பல குடும்பங்களில் இன்றைக்கு ரெப்ரிஜிரேட்டர்களைப் பயன்படுத்துகிறார்கள். கிராமங்களில் நூற்றுக்கு ஒருவர் அல்லது ஆயிரத்திற்கு ஒருவர் என்று இருக்கும். பெரும்பாலும் நகரங்களில் எப்படிப்பட்டவர்கள் உபயோகிக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். உபயோகிப்பவர்கள் அத்தனை பேரும் பெரும் பணக்காரர்கள் அல்ல. ஒரு குடும்பத்திலே கணவனும், மனைவியும் வேலைக்குப் போவது என்பது இன்று சாதாரணமாக வந்து விட்ட நிலையாக இருக்கிறது. அப்படி கணவனும் மனைவியுமாக வேலைக்குச் செல்லுகிறவர்கள் இரண்டு பேரும் சேர்ந்து ஆயிரம் ரூபாய் அளவிலே வருமானம் பெற்றால், அவர்கள் வேறு எதுவும் வீண் செலவு செய்யாமல், சிக்கனப்படுத்தியும், குறைவான குழந்தைகளோடும் இருந்தால், அப்படிப்பட்டவர்கள் தேவையின் அடிப்படையிலே இதுபோன்ற பொருள்களை வாங்குகிறார்கள். அநேகமாக நகரத்தில் பல குடும்பங்களில் இது இருக்கிறது. ரெப்ரிஜிரேட்டர்களுக்கு வரி விதிப்பதன் மூலமாக இது பணக்காரர்களைப் பாதிப்பதோடு, பெரும்பாலும் மத்தியதர வகுப்பினரையும் பாதிக்கும் என்ற நிலை உருவாகும். இது ஏதோ பணக்காரர்களுக்குத்தான் சொந்தமானது என்றும், அவர்கள் உபயோகிக்கிற ஆடம்பரப் பொருள் என்றும் நினைத்துக் கொண்டு, நடுத்தர வகுப்பைச் சேர்ந்த மக்கள் இதைப் பயன்படுத்தக் கூடாது என்ற முடிவுக்கு நாமே வரக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு நடுத்தர வகுப்பினருக்கு ஆதரவாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தில் நான் இதைச் சொல்லுகிறேன். நடுத்தர வகுப்பினர் உபயோகப்படுத்தும் பொருள்களுக்கு வரிபோடுவதன் மூலமாக, இவைகள் எல்லாம் பணக்காரர்களுக்கு மட்டுமே சொந்தம் என்கிற அளவுக்குக் கொண்டு வருவது நல்லதல்ல. அது நல்ல அணுகு முறையல்ல இன்றைக்கு கணவனும், மனைவியும் சேர்ந்து ஆயிரம் இரண்டாயிரம் ரூபாயைச் சம்பாதிக்கிறார்கள் என்றால், அவர்களைப் பணக்காரர்கள் என்று குறிப்பிட்டால். யார் தான் ஏழையென்று கருதுகிறார்கள் என்று என்றால் புரிந்து கொள்ள முடியவில்லை.



கடன் நிவாரணம் வழங்கும்போது, 200 ரூபாயை சம்பளமாக வாங்குகிற அரசாங்கக் கடைநிலை ஊழியரைக் கூட அரசு பணக்காரராகக் கருதுகிறது. இந்த மசோதா வருகிறபோது கணவனும் மனைவியும் வேலை செய்து, தங்கள் வாய்க்கும், வயிற்றுக்கும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் இது போன்ற சலுகைகளை அனுபவிக்கக் கூடாது என்று இதையெல்லாம் அரசாங்கமே ஒதுக்கி வைத்து விடுவது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆகவே தயவு செய்து இந்த நேரத்திலே— இப்போதும் காலம் கடந்துவிடவில்லை— ரெப்ரிஜிரேட்டர்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அவரும் டில்லியிலே இருந்தவர். பல நாடாளுமன்ற உறுப்பினர்கள்—அவர்கள் பணக்காரர்கள் என்பதற்காக அல்ல—அவரவர்களுக்குள்ள வருவாய்க்குள் ரெப்ரிஜிரேட்டர்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் பெரும் பணக்காரர்கள் அல்ல. சில தேவைகளைக் கருதி, சில சூழ்நிலையில் அது இன்றியமையாததாக அமைந்து விடுகிறது. நம்முடைய சமுதாய வாழ்க்கையை அப்படி அமைத்துக் கொண்டிருப்பதால், அப்படிப்பட்ட பொருள்களையெல்லாம் பணக்காரர்கள் உபயோகப்படுத்தும் பொருள்கள் என்ற கணக்கிலே எடுப்பது நல்லதல்ல.

அதைப் போலவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏர்-கூலர்களைப் பற்றிச் சொன்னார்கள். நகரங்களில் அது பெரும்பாலும் பயன்படுத்தப் படுகிறது. ஆகவே அந்த அடிப்படையிலே இந்த மின்சாரப் பொருள்களைப் பொறுத்த வரையில், ரெப்ரிஜிரேட்டர்கள், ஏர்—கூலர்கள் ஆகியவற்றுக்கு விதிவிலக்குத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஏகமனதாக இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடிக்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரால் கொண்டு வரப்பட்டிருக்கிற 1978 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது) சட்ட முன் வடிவின் மீது ஒரு சில கருத்துக்களை நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் திருத்தத்தின் இரண்டாவது பிரிவில், உட்பிரிவு (1) இல் ரெப்ரிஜிரேட்டர்கள் மற்றும் ரெப்ரிஜிரேட்டர் அப்ளையன்செஸ், ஏர்-கன்டிஷனிங் ப்ளான்ட் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இவையெல்லாம் உண்மையிலேயே பணக்காரர்கள் உபயோகப்படுத்துவதுதான். இதிலே கருத்து வேறுபாடு இல்லை. இந்த நாட்டிலே ஏழை யார், பணக்காரன் யார் என்று புரிந்துகொண்டால், இந்தப் பிரச்சினையே வராது. ஒரு நாளைக்கு 2 ரூபாய், 3 ரூபாய் கூட சம்பாதிக்க முடியாமல் இருக்கிற

சமுதாயத்தில் 11 ஆயிரம் ரூபாய் செலவு செய்து ஏர்-கண்டிஷனரை வாங்குகிறார்கள் என்றால், ஐந்தாயிரம் கொடுத்து ஒரு ரெப்ரிஜிரேட்டரை வாங்குகிறார்கள் என்று சொன்னால், அவர்கள் பணக்காரர்கள் தான். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் அரசாங்க ஊழியர்கள் கணவனும், மனைவியும் சேர்ந்து உழைத்து வாங்குகிறார்கள், அவர்கள் இரண்டு பேரும் சேர்ந்து மாதத்திற்கு 1,500 ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள் என்று சொன்னாலும் அவர்களை ஏழைகள் என்று கருத வேண்டும், அதற்கு வரி போடக் கூடாது என்று சொன்னார்கள் அதை நான் மறுக்கவில்லை.

திரு. ச. அறிவழகன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய வேலையை மிகவும் குறைக்கக் கூடிய வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பேச்சு மிகவும் பயன் படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, நான் சொல்ல வருவது, வரிகள் போட வேண்டும். சமுதாயத்திற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று நினைக்கும்போது, இப்படிப்பட்ட வரிகளைப் போட வேண்டியது தான். நான் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னதிலே கருத்து வேறுபட்டாலும். எனக்கு மற்றொரு இடத்தில் பயம் வருகிறது. 9 சதவீதமாக இருந்ததை நாம் 15 சதவீதமாக ஆக்கியிருக்கிறோம். பக்கத்திலே உள்ள மாநிலங்களில் குறைந்த வரியைப் போட்டு விட்டு, நாம் 75 சதவீதம் அளவுக்கு அதிகமாக வரியை போட்டால், வசதி படைத்தவர்கள், சீசனுக்கு மற்ற மாநிலங்களுக்குப் போகக் கூடியவர்களுக்கு, இந்த மாதிரியான ரெப்ரிஜிரேட்டர்களை, ஏர்-கண்டிஷனர்களை எதற்காக இங்கே வாங்க வேண்டும், பெங்களூருக்குப் போகும்போது வாங்கிக் கொண்டு வரலாமே என்ற எண்ணத்தை ஏற்படுத்தும். அதன் மூலமாக அந்தப் பொருள்களை நம்முடைய மாநிலத்தில் செய்யும் தொழில் பாதிக்கப்படும். இதன் விற்பனையாளர்கள் பாதிப்புக்குள்ளாவார்கள். 9 சதவீதம் என்பதை பத்து சதவீதம், 12 சதவீதம் என்று உயர்த்தினால், ஒரு சதவீதம், இரண்டு சதவீதம்தானே, பரவாயில்லை, இதற்காக பெங்களூருக்குப் போக வேண்டுமா என்று நினைப்பார்கள். 15 ஆயிரம் ரூபாய் கொடுத்து ஏர்-கண்டிஷனர்களை வாங்கும்போது, இப்படி வரியை உயர்த்தியதன் காரணமாக எவ்வளவு அதிகமாக அவர்கள் கொடுக்க வேண்டி வருகிறது என்றால், 660 ரூபாய் உயர்கிறது. இதனால் நம்முடைய நாட்டு வருமானம் பாதிக்கப்படுமோ என்ற அச்சம் எனக்கு ஏற்படுகிறது. எனவே இந்த சதவீதத்தைக் குறைக்க வேண்டும். ஏனென்றால் போட்டிருக்கக் கூடிய பர்சென்டேஜ் அதிகம். ஆகவே இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தபை அவர்கள் குறிப்பிட்டதைப்போல 'ஆல்கஹால்' என்று சொன்னால், மது விலக்கைப் பற்றி மட்டும் நினைக்கக் கூடாது. எனக்குத் தெரிந்த வரையிலே, டாக்டர்கள் கொடுக்கிற மருந்துகளில் ஏறக்குறைய 'ஸ்பிரிட் கன்டென்ட்' 60% இருக்கிறது. டானிக்காக இருந்தாலும் வேறு சில காஃப் சிறப்பாக இருந்தாலும் அதில் ஆல்கஹால் இருக்கிறது. இது டாக்டர் ஹண்டே அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த நாட்டிலே குழந்தைகளுக்குக் கொடுக்கிறோமே 'க்ரைப் வாட்டர்' என்று....

டாக்டர் ஹெச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, ஒருவிளக்கம் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் 60% ஆல்கஹால் கன்டென்ட் என்று சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன். அது அப்படியல்ல, 5% தான்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, நான் கன்டென்ட் பர்சென்டேஜைச் சொல்லவில்லை. நான் சொல்லுகிற பர்சென்டேஜ், டாக்டர்கள் கொடுக்கிற 'பிரஸ்கிரப்ஷன்களில்' 60% ஆல்கஹால் கன்டென்ட் உள்ளதாகத்தான் இருக்கிறது என்பதுதான். ஏழையாக இருந்தாலும் தாய் தன்னுடைய குழந்தையைக் காப்பாற்ற 'கிரைப் வாட்டர்' போன்ற மருந்துகளை 3 ரூபாய், 4 ரூபாய் கொடுத்து வாங்கிக் கொடுக்கிறார்கள். இப்படி வரி போடுவதன் மூலமாக அந்த மருந்துகளின் விலை உயரும். இதனாலே அந்தத் தொழிலே பாதிக்கப்படும். ஏழைகள் பாதிக்கப்படுவார்கள். எனவே ஆல்கஹாலுக்கு வரியைப் போடட்டும். ஆனால், மருந்துகளைத் தயாரிக்கப் பயன்படுத்தும் ஆல்கஹாலுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும்.

திரு. இரத்தின பாலகுருசாமி: தலைவர் அவர்களே, கிராமங்களில் தாய்மார்கள் ''ஓமத் தீர்த்தம்'' என்ற பெயரில் கொடுக்கிறார்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: கொடுத்தார்கள், ரொம்ப காலத்திற்கு முன்னே. இப்போது வேறு மருந்துகளைக் கொடுக்கிறார்கள். எனவே இன்றைய தினம் அப்படிப்பட்ட மருந்துகளுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 1–20)

அது போலவே குளிர் பானங்கள். அது 77 (டபிள் செவன்) ஆக இருந்தாலும் சரி அல்லது கோல்ட் ஸ்பாட் ஆக இருந்தாலும் சரி, வரி போடும் போது சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ் 6% அல்லது 4% என்று பார்ப்பதற்கு அப்படி இருக்கிறதே தவிர, இது எத்தனை

கட்டங்களில் உயரும் என்பதைப் பார்க்க வேண்டும். குளிர் பானங்களுக்கு எல்லாம் மல்டி பாயிண்ட் டாக்ஸ் வேண்டாம். சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ் போடுங்கள் என்று சொல்லி என்னுடைய இந்தக் கருத்தை ஒரு கட்சியின் கருத்தாக ஏற்றுக்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமருகிறேன்.

THIRU G. VASANTHA PAI: I want to have a clarification about a point mentioned by Thiru N. Veerasami. That is about inter-State trade and business.

*மாண்புமிகு மேலவைத் தலைவர் : (மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரைப் பார்த்து) உறுப்பினர் ஏதோ கேட்கிறார்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவரவர்களே, தாங்கள் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியதையெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். வரி போட வேண்டுமென்று ஒருவரும், போடக்கூடாது என்று ஒருவரும், போடுவது சரிதான் என்று ஒருவரும், போடுவது சரி அல்ல என்று ஒருவரும் தங்கள் தங்கள் கருத்துக்களைச் சொன்னார்கள். ஆக மொத்தமாகப் பார்க்கப்போனால், எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். இதை இடையிலே போடக் கூடாது, முதலிலே போட வேண்டுமென்று சொல்வதை என்னால் முடிந்தவரை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. வரவு செலவுத் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் வருகிறது. அதற்குப் பிறகு ஓராண்டு இருக்கிறது. ஓராண்டு காலத்தில் எவ்வளவோ மாற்றங்கள் வருகின்றன. எவ்வளவோ வியாபாரம் நடக்கிறது. எவ்வளவோ பொருள்களுடைய தேவை ஏற்படுகிறது. ஆனால் போடப்படுகிற வரிக்காக நாம் 6 மாதம் அல்லது 1 வருடம் என்று காத்து இருந்தோமானால், அதனால் கோடிக்கணக்கான பணம் அரசுக்கு நஷ்டம் வருமானால், அந்தப் பணத்தை வசூல் செய்து ஏழையெளிய மக்களுக்கு நன்மை செய்ய முடியாது போவதுடன், பொருளாதார ரீதியில் அப்படிக் கோடிக்கணக்கான ரூபாயை, அரசுக்கு வருவதற்கு பதிலாக தனிப்பட்ட முதலாளிகள் வைத்துக்கொண்டு, இந்த நாட்டை எவ்வளவு தூரம் கொண்டு போய்விட்டு விடுவார்கள் என்பதை நாம் முதலில் நன்றாக யோசித்துப் பார்க்க வேண்டும். என்னைப் பொறுத்தவரை, இந்த அரசைப் பொறுத்தவரை, வரி போடுவது ஒரு மாதம் தான். அந்த ஒரு மாதத்தில் தான் வரவு செலவுத் திட்டம் வருகிறது என்றாலும் கூட, வரி போடுவதற்கு முன்னால் கோடிக்கணக்கான ரூபாய், ஏழையெளியவர்களுக்குக் கஷ்டம் கொடுக்காமல் வரக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டால், அந்த வாய்ப்பை இந்த அரசு தவறவிடாது, பயன்படுத்திக் கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.





மல்டி பாயின்ட் அன்ட் சிங்கிள் பாயின்ட் வரிபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை அவர்கள் சொன்னார்கள். அதைப் பற்றி நான் ஓரிடத்தில் ''எல்லாவற்றையும் ஒருமுக வரியாக ஆக்க வேண்டும் என்பதுதான் அரசுக்கு இருக்கிற ஆசை, ஆனால் அதை நிறைவேற்ற முடியாது'' என்று சொன்னேன். இந்த அரசுக்கு வரும் பணம் இந்த வணிகத் துறையில் மட்டும் சென்ற ஆண்டு 275 கோடி ரூபாய். ஆதலால் ''இனி ஒருமுனை வரிக்கு பதிலாக வரியே விதிக்க வேண்டாம்'' என்று வேண்டுமானால் நீங்கள் சொல்லி விடுங்கள். (சிரிப்பு) இந்த நேரத்தில் உங்கள் தகவலுக்காக ஒரு விஷயத்தைநான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒரு தரம் வரி என்றால், ஒரு தரம் அவர்கள் எங்காவது செலுத்தியதற்கான பில்வைத்து விட்டால், இந்த மாநிலத்தில் எங்கே வேண்டுமானாலும் அவர்கள் பொருள்களைக்கொண்டு போகலாம், கொண்டு வரலாம். அது மாத்திரமல்ல, வேறு எந்த மாநிலங்களுக்கும் கூட கொண்டு போக முடியும். நான் இங்கு உங்களோடு பேசிக்கொண்டிருக்கும் போது, மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டிருக்கிறேன் என்று நீங்கள் எண்ணுவீர்கள். உண்மை நிலை அதுவன்று. இதைப்பற்றி இரவு பகலாக நான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். இன்றைய தினம் கோடிக்கணக்கான வரிப் பணம் ஏய்க்கப்படுகின்றது என்பதை எண்ணிப் பார்த்து, அதை எப்படித் தடுப்பது என்பதைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன். பலமுனை வரி இருக்கும்போதே, எப்படியெப்டி எல்லாம் ஏமாற்றுகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழ் நாட்டைப் பொறுத்தவரை, நிறைய ரோடு வசதி இருக்கின்றது. ஹைவேஸ் ரோடு, பஞ்சாயத்து யூனியன் ரோடு, பஞ்சாயத்து ரோடு இப்படியெல்லாம் இன்றைய தினம் தமிழ்நாட்டிலே ரோடு வசதி அதிகம். லாரியிலே சாமான்களை ஏற்றுகிறார்கள். இங்கே சில ஏஜென்டுகளை வைத்திருக்கிறார்கள். லாரிகளில் சாமான்களை ஏற்றியவுடன் செக்போஸ்ட் வழியாக லாரிகள் செல்வதில்லை. செக்போஸ்டை விட்டு 20 மைல் அப்பால் இருக்கக்கூடிய ரோடு வழி—பை பாஸ்ரோடு வழியாக போகிறார்கள். அதன் காரணமாக இன்றையதினம் இலட்சக்கணக்கான ரூபாய் அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. பலமுனை வரி இருக்கும்போதே, இப்படியெல்லாம் வரி ஏய்ப்பு நடக்கிறது என்றால், ஒரு முனை வரி என்றால் எவ்வளவோ நடக்கும். அரசுக்கு மட்டும் இது நஷ்டமல்ல, துய்ப்பவர்களுக்கும் இது நஷ்டம் தான். எவ்வளவோ பேர் சட்டப்படி அவர்களை பதிவு செய்துகொள்கிறார்கள். இதற்கு முன்னால் கூட பதிவு செய்து கொண்டிருப்பார்கள். ஆனால் முகவரி இருக்காது. ஆள் இருக்காது, ஆனால் வியாபாரி பெயரில் பில்லை வாங்கிக்கொள்வார்கள். லாரிக் காரரிடம் ஒப்படைப்பார்கள். லாரி போகும் இடம் செக்போஸ்ட் வழியாக இருக்காது, பை பாஸ்ரோடு வழியாக இருக்கும். அவர்கள் இருக்கிற இடம் தெரியாது. அதுமாதிரி பில் போடுகிற ஏஜென்ட்ஸ் வேறு மாநிலத்தில் இருப்பார்கள். இங்கு நமது மாநிலத்தில் வரி போடமுடியாது. இப்படிப்பட்ட தில்லுமுல்லுகள் பலமுனை

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1978 செப்டம்பர் 15

வரி இருக்கும்போதே செய்கிறார்கள். இதேமாதிரி போகஸ் பில் போடுகிறார்கள். பில் இருக்காது, செக்போஸ்ட் வழிபோகாமல் வேறு வழியாகச் சென்று விடுவார்கள். லாரிகளில் செப்புத் தகடு, எவர்சில்வர், போன்றவற்றை ஏற்றுகிறார்கள். பை பாஸ் வழியாகத் தப்பித்துப் போய் விடுகிறார்கள். இதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இப்படியெல்லாம் செக்போஸ்ட் இருந்தும், செக்கிங் அதிகாரிகள் இருந்தும், பலமுனை வரி இருந்தும், எப்படியெல்லாம் அவர்கள் அரசாங்கத்தை ஏமாற்றுகிறார்கள் என்பதை நினைத்துப்பார்க்க வேண்டும். உதாரணத்திற்கு நான் ஒன்றை இந்த நேரத்தில் சுட்டிக் காட்டுவது தவறு இல்லையென்று நினைக்கின்றேன். சென்னையிலிருந்து ஒரு லாரி சாமான் ஏற்றிக்கொண்டு திருவனந்தபுரம் போகிறது என்றால், அது குறைந்தபட்சம் 8 அல்லது 10 செக்போஸ்ட்களைக் கடந்து தான் போகவேண்டும். அப்படி இருந்தும் இவர்களையெல்லாம் ஏமாற்றிப் போய்விடுகிறார்கள். இதற்கெல்லாம் அதிகாரிகளின் கவனக் குறைவுதான் காரணமாக இருக்குமா என்றால், அப்படியும் இருக்க முடியாது. சில நேரங்களில் சில இடங்களில் அப்படி இருக்கலாம். நான் அமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்ட போது, இதைப்பற்றி நினைத்துப் பார்த்தேன். இதுமாதிரித் தவறுகள் நடப்பதற்கு முற்றிலும் அதிகாரிகளுடைய கவனக் குறைவுதான் காரணம் என்று எண்ணினேன். அதற்காக அவர்கள் பை பாஸ் செய்யும் இடங்களில் எல்லாம் சில செக் போஸ்ட்களைப் போட்டேன். அப்படியும் போய்க்கொண்டுதான் இருக்கிறார்கள். எந்த வழியாகப் போக வேண்டுமோ அந்த வழியாகப் போவதில்லை. வேறு வழியாகப் போய் விடுகிறார்கள். டெம்பரரி செக்போஸ்ட்களை எல்லாம் எடுங்கள் என்று சொன்னார்கள். ஒரு மாதத்திற்கு முன்னால் நடந்த சம்பவத்தை நான் சொல்ல விரும்புகிறேன். திருச்சியில் உரிய செக் போஸ்ட் வழியாகப் போவதனால் அரசுக்கு 56 ஆயிரம் ரூபாய் வருவதாகச் சொன்னார்கள். அதே சமயத்தில் ஒரு மாதத்திற்கு எந்த வழியாகப் போக வேண்டுமோ அந்த வழியாக லாரிகள் போகாததனால், லாரிகள் பிடிபட்டதனால், 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் வசூல் செய்யப்பட்டது. உங்களுக்கு நன்றாகத் தெரியும், சாமான்கள் வாங்கும்போது 5 ரூபாய்க்குப் பொருள் வாங்குகிறோம் என்றால், 5 பைசாதான் வரி கொடுக்கிறோம். மொத்தத்தில் நமக்கு நஷ்டம் என்னவென்றால், 5 ரூபாய்க்கு 5 பைசா நஷ்டம். ஒரு நாளைக்கு 5 பைசா, மாதத்திற்கு, வருஷத்திற்கு என்று பார்த்தால் பெரிய தொகை வரும். அதேமாதிரி வரி ஏய்ப்பவர்கள் 50 ஆயிரம், இலட்சம் என்று வரி ஏய்ப்பு செய்யும்போது அரசுக்கு கோடிக்கணக்கில் நஷ்டம் வருகிறது. விற்பனை வரி போடாமல் சாமான் வாங்கியிருப்பதனால் நஷ்டம் வருகிறது. இதையெல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும். உங்களுக்கு நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். ஒரு லாரி, அதன்



1978 செப்டம்பர் 15] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

எண் டி. என் ஏ. 1783. ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருள்களை பில் இல்லாமல் ஏற்றிக்கொண்டு போயிருக்கிறது. ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருள்களைப் பிடித்த போது, 15 ஆயிரம் ரூபாய் வசூல் செய்திருக்கிறோம். பிடிக்கிறபோது ஒரு லட்சம் ரூபாய்க்கு 15 ஆயிரம் ரூபாய் என்றால் 20 மடங்கு அல்லது 15 மடங்கு அவர்களுக்கு வரி போடுகின்ற வாய்ப்புகளை இன்றைய தினம் நாங்கள் உருவாக்கியிருக்கின்றோம்.

இன்னொன்றையும் நான் இந்த நேரத்தில் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட முன்வடிவு நிறைவேற்றப்படும் வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: ஆம்னி பஸ் தினசரி சென்னையிலிருந்து பல ஊர்களுக்குச் சென்று கொண்டு இருக்கிறது. அதை நாங்கள் நிறுத்திப் பார்க்கிறபோது, எவர் சில்வர் பிளேட் போகிறது. எப்பொழுதும் மனிதர்களைத்தான் ஆம்னி பஸ்கள் ஏற்றிச் செல்ல வேண்டுமென்றால், எவர் சில்வர் பிளேட்டுகளை ஏற்றிக்கொண்டு போகிறார்கள். பிடித்து 10 ஆயிரம் ரூபாய் வரி போட்டிருக்கிறோம். இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டு சிலவற்றில் மேல்நாட்டு மதுபான சரக்குகளைக் கூட ஏற்றிக்கொண்டு போயிருக்கிறார்கள். எங்களுடைய துறையினர் அவர்களைப் பிடித்துக் காவல் துறையினரிடத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள். இன்னொரு லாரி எண் கே. எல் டி. 9079. அது திருச்சியிலே போய்க் கொண்டிருந்தபோது பிடித்திருக்கிறோம். 550 தாமிரத் தகடுகளை அதில் ஏற்றிச் சென்றார்கள். ஒருமுக, வரி வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகிறார்களே, பலமுனை வரி இருக்கும்போதே இப்படியெல்லாம் செய்கிறார்கள், ஒரு முனை வரி என்றால், எப்படியெல்லாம் செய்வார்கள். நாங்கள் இதைச் சொல்வதற்குக் காரணம், யாரையும் தண்டனைக்கு உள்ளாக்க வேண்டுமென்ற எண்ணத்தில் அல்ல.

[பிற்பகல் 1.30]

இந்த அரசைப் பொறுத்தவரையில், தவறு செய்பவர்களைப் பார்த்து, ''நீங்கள் தவறு செய்கிறீர்கள், தவறு செய்யாதீர்கள்'' என்று எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. எனவேதான் இதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

லாரிகள் மூலமாகப் பல்வேறு பொருள்கள் ஏற்றிச் செல்லப் படுகின்றன. அப்படி ஏற்றிச் செல்லப்படும் பொருள்களுக்குரிய பில்கள் இருப்பதில்லை. அப்படியே பில்கள் இருந்தாலும், லாரியின் அடிப்பாகத்தில் இருக்கும் பொருள் ஒன்றாகவும் மேல் பாகத்தில் வைக்கப்படும் பொருள்கள் வேறாகவும் இருக்கின்றன.

இப்படி எல்லாம் பொருள்களை எடுத்துச் சென்று, வரி ஏய்ப்பு செய்கிறார்கள். அது மட்டுமல்ல. பயணிகளை ஏற்றிச் செல்லும் 'மினி பஸ்'களில் சாமான்களை ஏற்றிச் செல்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும், அமைச்சரவையில் உள்ள மற்ற அமைச்சர்களும் இதைப்பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். இதைப் போல தவறான முறையில், வரி ஏய்ப்புச் செய்யும் வகையில் லாரிகளில் பொருள்களை ஏற்றிச் செல்லும் போது, அப்படி ஏற்றிச் செல்லும் லாரிகளைப் பறிமுதல் செய்யும் அதிகாரம் இன்றையதினம் நமது அரசுக்கு இல்லை. அந்த வகையில் ஒரு சட்டம் கொண்டுவந்தாலும், லாரிச் சொந்தக் காரர்கள் உயர்நீதி மன்றத்திற்கோ அல்லது இந்திய நாட்டு உச்ச நீதி மன்றத்திற்கோ சென்று இந்தச் சட்டம் செல்லுபடியாகாது என்று தீர்ப்பு வாங்கி வந்துவிடுகிறார்கள். எனவேதான் இவைகளையெல்லாம் நன்றாக யோசித்து, சரியான சட்டம் கொண்டுவர இருக்கிறோம். இதைச் சொல்லுவதற்கான காரணம் தவறுகள் செய்யாமல் பார்த்துக் கொள்வதுதான்.

லாரியில் பில் இல்லாமல் சாமான் ஏற்றிச் சென்றால் அல்லது போகஸ் பில் வைத்துக்கொண்டு சாமான் ஏற்றிச் சென்று அதன் மூலம் வரி ஏய்ப்புச் செய்ய முயன்றால், அப்படிப்பட்ட லாரிகளுக்குக் கொடுக்கப்படும் 'பெர்மிட்டுகள்' குறைந்தபட்சம் 'ரிமூவ்' செய்யப்பட வேண்டும், நீக்கப்பட வேண்டும் என்று சட்டம் கொண்டு வருவதைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

அதைப் போலவே 'மினி பஸ்களில்' சாமான்களைக் கொண்டு சென்று வரி ஏய்ப்பு செய்கிறார்கள். மினி பஸ்களைப் பொறுத்த வரையில், அவைகளை நிறுத்தி சோதனையிடும் அதிகாரம் எனது துறையினருக்கு இல்லையென்றாலும், அவர்கள் அதிகார வரம்பை மீறி இன்றையதினம் சோதனை செய்து வருகிறார்கள். இதற்குக் காரணம் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதுதான். இப்படி சோதனை செய்ததன் மூலமாக ஒரு மினி பஸ்ஸில் 550 கிலோ எடையுள்ள தாமிரத்தகடு, வரி செலுத்தாத தகடு ஏற்றப் பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இப்படி லாரிகளிலோ, மினி பஸ்களிலோ வரி ஏய்ப்பு செய்யக் கூடிய வகையில் சாமான்களைக் கொண்டு செல்லும்போது, எங்களுக்கு ஏற்படுகிற கஷ்டம் என்னவென்றால், அவைகளை ஓட்டுகிறவர்களைத்தான் தண்டிக்கிறோம். லாரி சொந்தக்காரர்களைத் தண்டிக்க முடியாது. ஆக இப்படி பில் இல்லாமல் பொருள் கொண்டு செல்லும்போது அல்லது பில் ஒன்றும் சாமான் ஒன்றுமாக இருக்கும்போது, அல்லது போகஸ் பில் வைத்துக் கொண்டு சாமான்களை எடுத்துச் செல்லும்போது, அப்படிப்பட்ட லாரிகளைப் பறிமுதல் செய்ய தற்போது எங்களுக்கு அதிகாரம் இல்லாத காரணத்தால், அவைகளுக்குக் கொடுக்கப்படுகிற பெர்மிட்டுகளையாவது நீக்கிவிட இந்த அரசு யோசித்துக்



கொண்டிருக்கிறது என்பதை முன்னெச்சரிக்கையாக இந்த மாநிலத்தில் இருக்கிற லாரிச் சொந்தக்காரர்களுக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல. அவ்வாறு தவறான காரியத்திற்காக லாரிகளை ஓட்டுகிறவர்களுக்குக் குறைந்தபட்சம் 2 ஆண்டுகளுக்கு லைசென்சை நிறுத்தி வைப்பதுபற்றியும் யோசித்துக் கொண்டிருக்கிறோம். இப்படி லாரி ஓட்டுகிறவர்கள் ஏழை எளியவர்களாக இருக்கிறார்களே, என்ன செய்வது என்று அனுதாபத்தோடு இந்த அரசு இதை எண்ணிக் கொண்டிருக்கிறது. ஆனால் இப்படி அனுதாபத்தோடு எண்ணிக்கொண்டிருந்தால். கோடிக் கணக்கான ரூபாய் இந்த அரசாங்கத்திற்கு வரி நஷ்டம் ஏற்படுகிறது. இது சரியா, நியாயப்படி இந்த லாரி டிரைவர்களைத் தண்டிப்பது சரியா என்று யோசித்துக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம் பல முனை வரி என்பது இல்லா விட்டால், அரசாங்கத்திற்கு வரி மூலம் வருகிற பணம் வராமல் போய்விடும். அதனால் ஏழை எளிய மக்களுக்குச் செய்ய வேண்டிய நன்மைகளைச் செய்ய முடியாமல் போய்விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் பல முனை வரி ஒரு முனை வரி ஆகிய இரண்டையும்பற்றி இந்த அரசு தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கிறது. இந்தவகையில் என்ன செய்ய வேண்டும் என்பதை அரசு தீவிரமாக யோசித்துச் செய்யும் என்பதை மட்டும் இப்போது தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர் திரு. இராமமுர்த்தி அவர்கள் பேசும்போது, ஒரு கருத்தைச் சொன்னார்கள். தற்போது ஏழை எளியவர்கள் எல்லாம் உபயோகிக்கும் 'ரெப்ரிஜிரேட்டர்' ஒன்றுக்கு வரி போட்டுவிட்டார்களே, என்ன நியாயம் என்று கேட்டார்கள். இதில் நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இந்த வரியை நாங்கள் புதிதாகப் போடவில்லை. இதற்கு 15% வரி என்பது 1970 முதல் இருக்கிறது. இதோடு நாங்கள் இப்போது 'ஏர் கூலரை'ச் சேர்த்திருக்கிறோம். புதிதாக வரி போடவில்லை. எனவே குறைபாடுகள் இருந்ததை நீக்கி இருக்கிறோமே தவிர புதிதாக வரி போடவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : அதையும் எடுக்க வேண்டும் என்பது தான் என் கோரிக்கை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : 1970ஆம் ஆண்டிலிருந்தே இருக்கிற வரி அது. நாங்கள் ஒன்றும் புதிதாகப் போடவில்லை. 0% என்பதை 15% ஆக்கிவிட்டோம் என்றும் குறிப்பிட்டார்கள். இந்த வரியைப் போடுவதாலேயே அரசாங்

கத்திற்கு வருவாய் அதிகம் வந்துவிடும் என்று நினைப்பது சரியல்ல. என்ன என்ன இனங்களின்மீது வரி போட்டால், அதிக வருவாய் வரும், எதன்மீது வரி போட்டால் அந்த வியாபாரம் நசித்துவிடும் என்பதை இந்த அரசு நன்றாகச் சீர்தூக்கிப் பார்க்கிறது. தங்க முட்டையிடும் வாத்தை, வெட்டிப் பார்த்து உள்ளே இருக்கிற தங்கத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று பேராசைப்படுகிற அரசு அல்ல இது. கொஞ்சம் கொஞ்சமாகத் தங்க முட்டையைப் பெறுவதிலேதான் இந்த அரசு அக்கறை கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

